லிப்கோ

தமிழ் உரை விளக்கமும் வினாவிடையும்

பள்ளியிறுதித் தேர்வு (எஸ். எஸ். எல். ஸி.) 1956

லிப்கோ

தமிழ் உரை விளக்கமும் வினாவிடையும்

— பொதுப் பகுதி (பகுதி I) —

மாணவர்களுடன் நெடுங்காலத் தொடர்பு கொண்ட
மூவர்
தமிழாசிரியர்களால் இயற்றப்பெற்றது :

வித்துவான் வே. ஐயா நாயக்கர்,
தலைமைத் தமிழாசிரியர்,
போர்டு உயர்நிலைப்பள்ளி, ஆரணி,

வித்துவான் V. P. குழந்தைவேற் சோழகர்,
தமிழாசிரியர், அர்ச். சூசையப்பர் உயர்நிலைப்பள்ளி,
தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி,

முத்தமிழ்க்கவி வித்துவான் கே. ஆர். அரசப்பன்,
தலைமைத் தமிழ்ப் பண்டிதர், நகராண்மை உயர்நிலைப்பள்ளி,
இராமநாதபுரம், கோவை.

பதிப்பகத்தார் :

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி

தியாகராயநகர் : : சென்னை-17

—சென்னையில் லிப்கோ ஏஜெண்டுகள் :—

எம். தாமோதரம் & கம்பெனி,
அப்பா பில்டிங்ஸ், 9/286, எஸ்பிளனேட், சென்னை-1.

 1955 [விலை ரூ. 1-12-

பொருளடக்கம்

இரண்டாந் தாள்

குறிப்பு: 'இமய வெற்றி' என்னும் துணைப்பாட நூலும், 'உழைப்பால் உயர்ந்த ஒருவர்' (புக்கர் தி. வாஷிங்டன்) என்னும் துணைப்பாட நூலும் முதற் குழுவைச் சார்ந்த இரு நூல்கள். 'ஏழை பங்காளன்' என்னும் துணைப்பாட நூலும், 'சங்ககாலப் பாண்டியர்' என்னும் துணைப்பாட நூலும் இரண்டாங் குழுவைச் சார்ந்த இரு நூல்கள். வட ஆர்க்காடு, செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, கிழக்குத் தஞ்சை, மேற்குத் தஞ்சை, கிழக்குத் திருநெல்வேலி, மேற்குத் திருநெல் வேலி, கோயம்புத்தூர், நீலகிரி ஆகிய மாவட்டங்களில் பயிலும் மாணவர்கள் முதற் குழுவைச் சார்ந்த இரு நூல்களையும் படிக்க வேண்டும். சென்னை, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, மதுரை, இராமநாத புரம், சேலம், மலபார் (தெற்கு), பல்லாரி ஆகிய மாவட்டங்களில் பயிலும் மாணவர்கள் இரண்டாங் குழுவைச் சார்ந்த இரு நூல்களையும் படிக்க வேண்டும். தனி மாணவர்கள் (Private Candidates) தாங்கள் உறையும் மாவட்டத்திற்கு உரிய குழுவினைச் சார்ந்த துணை நூல்களையே படிக்க வேண்டும். இம்முறையை மாற்றக் கூடாது.

முன்னுரை

தமிழ்த் தாயின் தண்ணருளால் இந்த லிப்கோ உரை நூல் வருகின்றது. இதனை ஒருமுறை விரைந்து புரட்டிப் பாருங்கள். அவ்வ பார்த்தால், மாணவர்கட்கு வேண்டிய பதவுரை, கருத்துரை, விளக்கவுரை வினா விடைகள், உரைநடைச் சுருக்கம், அருஞ்சொல் விளக்கம், வினா விடை கள், துணைப்பாடக் கட்டுரைகள், மொழிபெயர்ப்புக் குறிப்புக்கள், மாதிரி வினாத்தாள்கள் முதலியவற்றை வழக்கம்போலக் கொண்டிருப்பதுடன், இந்நூல், புதிய முறையில் சில செய்திகளையும் கொண்டுள்ளதென்பதை நீங் கள் உணர்வீர்கள்.

மாணவர்கட்குப் பயன்தரும் புதிய செய்திகளுட் சில வருமாறு :—

1. கல்வியின் முடிவான நோக்கம் ஒழுக்கம் பெறுதலே அன்றோ? எனவே மாணவர்கட்கு நல்லொழுக்கங்களைக்கொளுத்தும் முறையில், பாடப் பகுதிகளுடன் தொடர்புபடுத்தி நல்லொழுக்கப் பயிற்சிப் பகுதிகள் இந் நூலின் கண் சேர்க்கப்பட்டுள்ளன.

2. மனப்பாடஞ் செய்தற்குரிய செய்யுட்கள் யாவும் தொகுத்துத் தரப் பெற்றுள்ளன.

3. இவ்வாண்டு, 'தேர்வுக் காய்ச்சலா' என்னும் பெயருடன் புதிய தொரு பகுதி தரப்பெற்றுள்ளது. தேர்வுக்கு முதல் நாள் இரவும், தேர்வு நாள் அன்று காலையிலும் அவற்றை மட்டும் படித்தால் மாணவர்கள் தேர்வில் பெரு வெற்றி அடைவர் என்பது திண்ணம்.

4. பள்ளியிறுதித் தேர்வில் மாணவர்கள் விடையளிக்கும் முறை யைப்பற்றிய குறிப்புக்கள் தனியே தரப்பெற்றுள்ளன.

5. அரசியலார் வெளியிட்டுள்ள புதிய இலக்கணப் பாடத் திட்டத்தைப் பின்பற்றி, நடைமுறை இலக்கணப் பகுதி ஈண்டுச் சேர்க்கப்பட்டுள்ளது.

முடிவாகக் கூறுங்கால், 1956-ஆம் ஆண்டு, மார்ச்சு மாதத்தில் நடை பெறப்போகின்ற பள்ளியிறுதித் தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்கட்கு உண்மையான வழிகாட்டியாக விளங்க வேண்டும் என்னுங் கருத்துடன் இவ் வுரை நூல் அமைக்கப்பெற்றுள்ளது. எம்முடைய நோக்கம் எந்த அளவில் நிறைவேறியது என்று தீர்ப்புக் கூறுதற்கு உரியவர்கள் தமிழாசிரியர்களும், தமிழ் மாணவர்களும் ஆவர். தமிழாசிரியப் பெருமக்களே! தமிழ் மாண வச் செல்வர்களே! தீர்ப்புக் கூறுங்கள். உங்கள் தீர்ப்பு எங்களுக்கு நல்ல தொரு தூண்டுகோலாக இருக்கும் என்பது திண்ணம்.

— ஆசிரியர்கள்.

மெட்ரிக்குலேஷன் தேர்வு

சென்னை, ஆந்திரா ஆகிய பல்கலைக் கழகத்தார் நடத்தும் மெட்ரிக்குலேஷன் தேர்வுக்கு (March 1956) பொது, சிறப்பு ஆகிய இரு பகுதிகளும் பாடங்களாக உள. எனவே, மாணவர் கள் இரு பகுதிகளையும் சேர்த்துப் படிக்க வேண்டும். இவர் கட்குத் துணைப் பாடங்கள் வேறு.

அறிவுரை அருளிய ஆன்றோர்கள் :

எங்களுடைய உரைநூல் நல்லுருப் பெறுதற்கு அறிவுரை அருளிய கீழ்க்காணும் ஆன்றோர்கட்கு யாங்கள் எழுமையும் கடப்பாடு உடையேம்.

"செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமு மாற்றல் அரிது."

— தி லிட்டில் ப்ளவர் கம்பெனி,
பதிப்பகத்தார்.

சென்னை மாவட்டம்

1. A. K. ஆதித்தன், கிறிஸ்தவ உயர்தரப்பள்ளி, சென்னை.
2. வித்துவான் வை. குஞ்சிதபாதம், நகராண்மை உயர்நிலைப்பள்ளி, நுங்கம்பாக்கம்.
3. வித்துவான் சு. பலராமன் அவர்கள், நுங்கம்பாக்கம்.
4. வித்துவான் சு. கோதண்டராம ஐயர், அர்ச் அந்தோனியார் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, சென்னை.
5. புலவர் S. சங்கரன், H. M. C. உயர்நிலைப்பள்ளி, சூளை.
6. P. S. கோவிந்தராஜன், B.A., பி.எஸ். ஹைஸ்கூல், சென்னை.
7. வித்துவான் வா. கை. கே. சர்மா, லேடி எம். சி.டி. உயர்நிலைப்பள்ளி, சென்னை.
8. வித்துவான் N. சீனிவாசன், இராமகிருஷ்ணர் உயர்நிலைப் பள்ளி, சென்னை.
9. வித்துவான் நா. சீனிவாச முதலியார், சர் தியாகராசர் உயர்நிலைப்பள்ளி, சென்னை.
10. வித்துவான் பு. செல்வராசன், C.A.H. இந்து முஸ்லீம் உயர்நிலைப்பள்ளி, சென்னை.
11. வித்துவான் ஜ. பாலசுப்பிரமணியன், ஹிந்து உயர்நிலைப் பள்ளி, சென்னை.
12. வித்துவான் N. K. ரங்காசாரியார், மூங்கிபாய் கோயங்கா மகளிர் உயர்நிலைப்பள்ளி, சென்னை.
13. வித்துவான் P. S. சண்முகம் பிள்ளை, முத்தைய செட்டியார் உயர்நிலைப்பள்ளி, சென்னை.

செங்கற்பட்டு மாவட்டம்

1. வி. அலமேலு அம்மாள், தமிழாசிரியை, சோமசுந்தரம் செட்டியார் உயர்நிலைப்பள்ளி, கோவூர்.
2. வித்துவான் எஸ். இராசமாணிக்கம், கழக உயர்நிலைப்பள்ளி, அச்சிறுபாக்கம்.
3. வித்துவான் K. இராமமூர்த்தி கௌடி உயர்நிலைப்பள்ளி, திருவள்ளூர்.
4. வித்துவான் சி. கைலாயம், கழக உயர்நிலைப்பள்ளி, செய்யார்.
5. வித்துவான் ப. சேதுராமன், கழக உயர்நிலைப்பள்ளி, திருக்கழுக்குன்றம்.
6. வித்துவான் மா. நடராசன் இராவ்பகதூர் கலவல ணன் செட்டியார் உ[illegible] பள்ளி, திருவள்ளூர்.
7. வித்துவான் ஆ[illegible] முதலியார், [illegible] உயர்நிலைப்ப[illegible] பட்டு.
8. வித்துவான் K[illegible] M.A., அரசிய[illegible] பள்ளி, குன்றத[illegible]
9. வித்துவான் E. ப[illegible] இந்து உயர்நிலைப[illegible] ராந்தகம்.

10. வித்துவான் முரு. முனுசாமி ஆச்சாரி, கழக உயர்நிலைப் பள்ளி, உத்தரமேரூர்.
11. வித்துவான் S. வரததாசன், B.A., B.T., கலவல கண்ணன் செட்டியார் உயர்நிலைப்பள்ளி, திருவள்ளூர்.

வடார்க்காடு மாவட்டம்

1. வித்துவான் பூ. மா. அண்ணமலை, கழக உயர்நிலைப்பள்ளி, பெரணமல்லூர்.
2. புலவர் மா. வை. அ. இராச கோபாலன், கழக உயர்நிலைப் பள்ளி, வேட்டவலம்.
3. வித்துவான் பொ. இராம லிங்கம், டான்பாஸ்கோ உயர் நிலைப்பள்ளி, வேலூர்.
4. வித்துவான் ச. இராமானுசன், கழக உயர்நிலைப்பள்ளி, தேசூர்.
5. வித்துவான் வே. கணபதி, நகர உயர்நிலைப்பள்ளி, வாலாஜா பேட்டை.
6. வித்துவான் ஜி. கதிர்வேல் முதலியார், ஸ்ரீ வேங்கடேசுவரர் உயர்நிலைப்பள்ளி, வேலூர்.
7. வித்துவான் குருநாத முதலியார், கழக உயர்நிலைப்பள்ளி, திமிரி.
8. வித்துவான் C. கோவிந்தசாமி, சர்க்கார் முஸ்லீம் உயர்நிலைப் பள்ளி, வேலப்பாடி.
9. ம. க. ஜெயராம், தமிழாசிரியர், L.F.C., மகளிர் உயர்நிலைப் பள்ளி, இராணிப்பேட்டை.
[illegible] N. சுப்பிரமணிய ஐயர், தமி[illegible]சிரியர், இஸ்லாமியா உயர் [illegible]ள்ளி, மேல்விஷாரம்.
[illegible] வி. சுவர்ணபத்தி [illegible] உயர்நிலைப்பள்ளி,
[illegible]
[illegible]னகேசவலு, தமி[illegible] கழக உயர்நிலைப் [illegible]கரெட்டியூர்.
[illegible]ன் R. தெய்வசிகா[illegible] [illegible]ழக உயர்நிலைப்பள்ளி, [illegible]ர்.

14. வித்துவான் B. T. நாதமுனி இந்து உயர்நிலைப்பள்ளி, வாணியம்பாடி.
15. வித்துவான் M. S. நந்தகோப[illegible] நாயுடு, கழக உயர்நிலைப்பள்[illegible] இராணிப்பேட்டை.
16. வித்துவான் சு. பரமசிவம், உயர்நிலைப்பள்ளி, செங்கம்.
17. வித்துவான் M. D. பழநி மகா தேவன், மஸ்ஹருல் உலூம் உயர்நிலைப்பள்ளி, ஆம்பூர்.
18. வித்துவான் P. M. வெங்கடா சலம், முனிசிபல் உயர்நிலைப் பள்ளி, திருக்காட்டூர்.
19. வித்துவான் பி. க. வேணு கோபாலப் பிள்ளை, கழக உயர் நிலைப்பள்ளி, காட்டுப்பாடி.

சேலம் மாவட்டம்

1. புலவர் P. ஆத்மநாதம் பிள்ளை, கழக உயர்நிலைப்பள்ளி, தர்ம்புரி.
2. பா. இராமகிருட்டிணன், தமிழாசிரியர், நாட்டாண்மைக் கழக உயர்நிலைப்பள்ளி, இடைப்பாடி.
3. இரா. பெ. இராமச்சந்திரன், தமிழாசிரியர், நாட்டாண்மைக் கழக உயர்நிலைப்பள்ளி, அரூர்.
4. புலவர் செ. இராமசாமி, கழக உயர்நிலைப்பள்ளி, தம்மம்பட்டி.
5. வித்துவான் சி. கங்காதரன், நாட்டாண்மைக் கழக உயர் நிலைப்பள்ளி, தொப்பட்டி.
6. வித்துவான் P. V. கோபாலன், கழக உயர்நிலைப்பள்ளி, திருச் செங்கோடு.
7. கோ. சந்திரமவுலீச்சுவரன், M.O.L., B.T. C.S.I. உயர்நிலைப் பள்ளி, சேலம்.
8. வித்துவான் இரா. சுப்பிரமணியன், தூயமரியன்னை மகளிர் உயர்நிலைப்பள்ளி, மேட்டூர்.
9. வித்துவான் கோ. சின்னசாமி, நாட்டாண்மை கழக உயர்நிலைப் பள்ளி, காவேரிப்பட்டணம்.
10. வித்துவான் இராமச்சந்திரன், முனிஸிபல் உயர்நிலைப்பள்ளி, சேலம்.

11. வித்துவான் V. சுந்தரராஜன், The Little Flower High School, சேலம்.

வித்துவான் P. K. நரசிம்ம ஐயங்கார், கோகுலநாத இந்துமா சன உயர்நிலைப்பள்ளி, சேலம்.

13. வித்துவான் S. நாகராஜன், M.A., B.T., தூயமரி உயர்நிலைப் பெண் பள்ளி, சேலம்.

14. வித்துவான் V. பசவய்யா, நாட்டாண்மைக் கழக உயர் நிலைப்பள்ளி, ஜலகண்டபுரம்.

15. வித்துவான் கா. பண்டரிநாதன், நாட்டாண்மைக் கழக உயர் நிலைப்பள்ளி, மல்லசமுத்திரம்.

16. வித்துவான் கி. வெ. மீனுட்சி சுந்தரம், நாட்டாண்மைக் கழக உயர்நிலைப்பள்ளி, பாலக்கோடு.

17. வித்துவான் தே. வீரராகவன், B.O.L., M.A., கழக உயர்நிலைப் பள்ளி, இடைப்பாடி.

கோவை மாவட்டம்

1. பூ. சு. அரங்கசாமி, தமிழாசிரியர், நாட்டாண்மைக் கழக உயர் நிலைப்பள்ளி, சுண்டபாளையம்.
2. வித்துவான் S. K. அனந்தரங்க ராவ், சபர்பன் உயர்நிலைப் பள்ளி, இராம்நகர்.
3. வித்துவான் V. கணபதி, கழக உயர்நிலைப்பள்ளி, நெகமம்.
4. வித்துவான் சிவ. கந்தசாமி, கழகஉயர்நிலைப்பள்ளி, கோவை
5. வித்துவான் மா. கந்தசாமி, நாட்டாண்மைக் கழக உயர் நிலைப்பள்ளி, வேட்டைக்காரன் புதூர்.
6. வித்துவான் கா. காழியப்பனர், நாட்டாண்மைக் கழக உயர் நிலைப்பள்ளி, கோவை.
7. வித்துவான் சோ. ம. சட்ட நாதன், கழக உயர்நிலைப் பள்ளி, புஞ்சை புளியம்பட்டி.
8. நா. துரைசாமி B.O.L., நகராட்சி உயர்நிலைப்பள்ளி, R. S. புரம்.
9. வித்துவான் பா. பாலசுப்பிர மணியம், கழக உயர்நிலைப் பள்ளி, நம்பியூர்.
10. வித்துவான் சோ. புண்ணிய கோடி, மகாசன உயர்நிலைப் பள்ளி, மேட்டுப்பாளையம்.
11. வித்துவான் க. பெரியசாமி, R. K. ரங்கம்மாள் கல்வி நிலையம், கோயம்புத்தூர்.
12. வித்துவான் S. முத்துசிரங்கனர், நாட்டாண்மைக் கழக உயர் நிலைப்பள்ளி, கவுந்தபாடி.
13. கோ. முருகையா, தமிழாசிரியர், நாட்டாண்மைக் கழக உயர் நிலைப்பள்ளி, இருகூர்.
14. வித்துவான் K. S. இராமச் சந்திரராவ், P.O.L., கழக உயர் நிலைப்பள்ளி, சத்திய மங்கலம்.
15. வித்துவான் ந. ஆத்மநாதன், ஜெய்வாபாய் பெண்கள் உயர் நிலைப்பள்ளி, திருப்பூர்.
16. வித்துவான் S. சண்முகசுந்தரம், பிஷப் உபகாரசாமி உயர்நிலைப் பள்ளி, திருப்பூர்.

நீலகிரி மாவட்டம்

1. வித்துவான் V. சீனிவாசன், முனிசிபல் உயர்நிலைப்பள்ளி, கூனூர்.
2. வித்துவான் K. நாராயணன், முனிசிபல் உயர்நிலைப்பள்ளி, உதகமண்டலம்.

திருநெல்வேலி மாவட்டம்

1. வித்துவான் ஆ. அறம்வளர்த்த நாதன், T. D. T. A. R. M. D. Palamadan Chettiar National High School, சாத்தான்குளம்.
2. வித்துவான் ரா. லே. ஆரோக் கியம் பிள்ளை, செயின்ட் சேவியர் உயர்நிலைப் பள்ளி, தூத்துக்குடி.
3. வித்துவான் S. கிருஷ்ணன், இந்து உயர்நிலைப் பள்ளி, வீரநல்லூர்.
4. வித்துவான் R. கோபா[illegible] ணன், கழக [illegible] கடையு[illegible]

5. வித்துவான் கா. சந்திரசேகரன், செயின்ட் ஜோசப் ஹைஸ்கூல், மணப்பாடு.
6. வித்துவான் ப. தளவாய், T. D. T. A. உயர்நிலைப் பள்ளி, கிறித்தியா நகரம்.
7. வித்துவான் சி. நடராஜன், கழக உயர்நிலைப் பள்ளி, கரிவலம்வந்தநல்லூர்.
8. புலவர் கா. ச. நமசிவாயம், தமிழாசிரியர், வீர பாண்டிய கட்டபொம்மன் நாட்டாண்மைக் கழக உயர்நிலைப் பள்ளி, கயத்தாறு.
9. வித்துவான் கோ. வே. பெருமாள், கழக உயர்நிலைப் பள்ளி, பாவூர்ச்சத்திரம்.
10. வித்துவான் வே. மாணிக்க வாசகம் பிள்ளை, சாப்டர் உயர்நிலைப் பள்ளி, திருநெல்வேலி.
11. வித்துவான் T. K. ரகுபதி B.A., சத்திரம் உயர் நிலைப் பள்ளி, கடையம்.
12. வித்துவான் டி. சி. வெங்கடராமன், கழக உயர்நிலைப்பள்ளி, கழுகுமலை.
13. வித்துவான் கு. வேங்கடாச்சாரி, திலகர் வித்தியாலய உயர்நிலைப் பள்ளி, கல்லிடைக்குறிச்சி.
14. கா. சி. வேதமாணிக்கம், தமிழாசிரியர், இஞ்ஞாசிரியர் உயர்நிலைப் பள்ளி, பாளையங்கோட்டை.
15. வித்துவான் ஆ. வேலாயுதம், அரசர் உயர்நிலைப் பள்ளி, எட்டையபுரம்.
16. P. N. ஸ்டீபன் ஆசிர்வாதம், செண்ட் மேரீஸ் மகளிர் உயர்நிலைப் பள்ளி, சாயர்புரம்.
17. வித்துவான் சிரோமணி கா. ரா. புடார்ஜுனன், இராம சேஷையர் உயர்நிலைப் பள்ளி, பத்தமடை, திருநெல்வேலி.

2. வித்துவான் R. P. கிருஷ்ணன், P. A. C. M. உயர்நிலைப் பள்ளி, இராசபாளையம்.
3. வித்துவான் மா. குருசா[illegible] சுவார்டசு உயர்நிலைப் பள்[illegible] இராமநாதபுரம்.
4. வித்துவான் கி. கோதண்டபாணி B. O. L., தே. பிரித்தோ உயர்நிலைப் பள்ளி, தேவகோட்டை.
5. வித்துவான் என். சந்திரசேகரன், ச. இராம உயர்நிலைப் பள்ளி, நாட்டரசன்கோட்டை.
6. S. சுந்தரம், தமிழ்ப் பண்டிதர், முருகப்பா உயர்நிலைப் பள்ளி, கல்லல்.
7. வித்துவான் நா. சுப்பிரமணியம், கழக உயர்நிலைப் பள்ளி, பாகனேரி.
8. வித்துவான் கரு. சுப்பையா, சைவபானு, க்ஷத்திரிய உயர்நிலைப் பள்ளி, கல்லூரணி, (அருப்புக்கோட்டை).
9. பண்டித கவிமணி S. திருமலைசாமி ஐயங்கார், திரு இதயப் பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஸ்ரீவில்லிபுத்தூர்.
10. எஸ். வி. நரஸிம்மாசாரியார், தமிழாசிரியர், இளையான்குடி.
11. வித்துவான் G. நாகராஜன் C. V. C. H. S. மானாமதுரை.
12. வித்துவான் சு. நாராயணசாமி, N. S. M. V. P. S. உயர்நிலைப் பள்ளி, தேவகோட்டை.
13. வித்துவான் V. நாராயணசாமி, கழக உயர்நிலைப் பள்ளி, சிப்பிபரை.
14. வித்துவான் முத்து அம்பலவாணன், A. V. உயர்நிலைப் பள்ளி, சாத்தூர்.
15. வித்துவான் R. வரதராசன், அரசர் உயர்நிலைப் பள்ளி, சிவகங்கை.

இராமனுதபுரம் மாவட்டம்

[illegible]ர் ர. இராமானுஜம், ஸ்ரீ [illegible]ட்சி கலாசாலை, ஆ. [illegible]ர்.

மதுரை மாவட்டம்

1. வித்துவான் S. ஆழ்வாரய்யங்கார், செண்ட் ஜோசப் மகளிர் உயர்நிலைப் பள்ளி, மதுரை.

2. மதுர ஆசிரியர் K. R. இராதா கிருஷ்ணையர், M. A., B. O. L., கழக உயர்நிலைப் பள்ளி, ஆத்தூர்.

வித்துவான் நா. இராமையாப் பிள்ளை, யு. ஸி. உயர்நிலைப் பள்ளி, மதுரை.

4. வித்துவான் வ. கிருஷ்ணமூர்த்தி, B. O. L., சி. எஸ். எம். மகளிர் உயர்நிலைப் பள்ளி, உசிலம் பட்டி.

5. வித்துவான் வீ. குமாரசுவாமி ஐயர், கழக உயர் நிலைப்பள்ளி, மேலூர்.

6. வித்துவான் குருமூர்த்தி ராவ், கழக உயர்நிலைபள்ளி, பொறை யார்.

7. வித்துவான் சிவக்கொழுந்து, V. M. கழக உயர்நிலைப் பள்ளி, பெரியகுளம்.

8. வித்துவான் S. ஞானேஸ்வரன், கழக உயர்நிலைப்பள்ளி, ஆண்டி பாதி.

9. வித்துவான் R. S. மயிலைசாமி நாயுடு P. O. L., முனிசிபல் உயர்நிலைப்பள்ளி, பழனி.

10. நா.லக்ஷ்மி நரசிம்மன், தமிழ்ப் பண்டிதர், பி. கே. என். உயர் நிலைப் பள்ளி, திருமங்கலம்

11. கவிஞர் கதி. சுந்தரம், தமிழ் விரி வுரையாளர், தியாகராசர் கல் லூரி, மதுரை.

திருச்சி மாவட்டம்

1. வித்துவான் ப. அரங்கசாமி, கழக உயர்நிலைப் பள்ளி, லால் குடி.

2. வித்துவான் எஸ். அரங்கசாமி ஐயர் P. O. L., E. R. உயர்நிலைப் பள்ளி, தெப்பக்குளம்,

3. வித்துவான் வே ஆறுமுகம், கழக உயர்நிலைப் பள்ளி, திருக் கோகர்ணம்.

4. வித்துவான் இரா. கண்ணன், தால்மிய உயர்நிலைப்பள்ளி, டால்மியாபுரம்.

5. வித்துவான் ச. கணபதி ரெட்டி யார், சுவாமி விவேகானந்தா வித்தியாலய உயர்நிலைப் பள்ளி' கோட்டாத்தூர், துறையூர் வழி.

6. வித்துவான் சொ. கணபதி, நாட் டாண்மைக் கழக உயர்நிலைப் பள்ளி, சின்னதாராபுரம்.

7. வித்துவான் G. கிருஷ்ணய்யங் கார், கழக உயர்நிலைப் பள்ளி, தாத்தையங்கார்பேட்டை.

8. வித்துவான் ஆ. குருசாமி ஐயர், நகராள் மன்ற உயர் நிலைப் பள்ளி, கரூர்.

9. S. கோபால கிருஷ்ணன், B. A. B. O. L. B. T., வடுகநாதன் உயர் நிலைப் பள்ளி, வலம்புரி.

10. வித்துவான் கோ. சாமிநாதன், பிஷப்ஹீபர் உயர்நிலைப் பள்ளி, சீரங்கம்.

11. வித்துவான் மு. சாமிநாத தேசி கர், ஆடவர் உயர்நிலைப் பள்ளி, சீரங்கம்.

12. வித்துவான் வே. சின்னசாமி, கழக உயர்நிலைப் பள்ளி, இலப் பைக் குடிக்காடு.

13. புலவர் கே. சேதுமாணிக்கம், ஆடவர் உயர்நிலைப் பள்ளி, திருவரங்கம்.

14. புலவர் தில்லைக் கோவிந்தன், சரசுவதி உயர்நிலைப் பள்ளி, கோனபட்டு.

15, வித்துவான் இரா. நடராஜன், நாட்டாண்மைக் கழக உயர் நிலைப்பள்ளி, பொன்பரப்பி.

16. வித்துவான் எஸ். நடராஜன், சி. எஸ்.எம். உயர்நிலைப்பள்ளி, புதுக்கோட்டை.

17. வித்துவான் கோ. நடேசன், கழக மகளிர் உயர்நிலைப் பள்ளி, குளித்தலை.

18. வித்துவான் கு. நாராயணசாமி, நாட்டாண்மைக் கழக உயர் நிலைப்பள்ளி, தா. பழூர்.

19. வித்துவான் அ. மா. பரிமணம், பிஷப்ஹீபர் உயர்நிலைப் பள்ளி, தெப்பக்குளம்.

20. வித்துவான் வீ.பாலகிருஷ்... தென்பகுதி இரயில்வ... நிலைப் பள்ளி...

21. வித்துவான் M. K. பெரியசாமி, கழக உயர்நிலைப்பள்ளி, உடையார்பாளையம்.
22. வித்துவான் க. முருகேச முதலியார், கழக உயர்நிலைப் பள்ளி, அரியலூர்.
23. வித்துவான் S. இராமச்சந்திரன், சேஷ ஐயங்கார் மெமோரியல் உயர்நிலைப்பள்ளி, தெப்பக்குளம்.
24. வித்துவான். ந. இராமானுஜம், அரசியலார் சையத் மூர்த்துசா உயர்நிலைப்பள்ளி, திருவரங்கம்.
25. வித்துவான். பா. வேணுகோபாலன், கழக உயர்நிலைப்பள்ளி, பெரம்பலூர்.
26. வித்துவான் K. இராமமூர்த்தி, E.R. உயர்நிலைப்பள்ளி, திருச்சி.

தஞ்சை மாவட்டம்

1. வித்துவான் மு. இராசகோபாலப் பிள்ளை, கழக உயர்நிலைப்பள்ளி திருவாரூர்.
2. புலவர் R. ஏகாம்பரநாதன், வீரராகவ உயர்நிலைப் பள்ளி, தஞ்சாவூர்.
3. வித்துவான் S. குஞ்சிதபாதம் பிள்ளை, நகராண்மைக் கழக உயர் நிலைப் பள்ளி, மாயூரம்.
4. வித்துவான் வ. குமாரசாமி, சிவசாமிஐயர் உயர்நிலைப்பள்ளி, திருக்காட்டுப்பள்ளி.
5. வித்துவான் K. கோபாலகிருஷ்ண ஐயர், K. G. S. உயர்நிலைப் பள்ளி, ஆடுதுறை.
6. வித்துவான் மு. கோபாலசாமி, நாடார் உயர்நிலைப் பள்ளி, பொறையாறு.
7. வித்துவான் கி. சடையப்பன், பெண்கள் உயர்நிலைப்பள்ளி, பட்டுக்கோட்டை.
8. வித்துவான் வை. மு. சண்முக தேசிகர், தேசிய உயர்நிலைப் பள்ளி, நாகைப்பட்டினம்.
9. [வி]த்துவான் க. சுப்பிரமணியம், [உ]யர்நிலைப்பள்ளி, பட்டுக்[கோட்டை]ர்.
10. வித்துவான் வ. சுப்பையன், கலியாண சுந்தரம் உயர்நிலைப் பள்ளி, தஞ்சாவூர்.
11. வித்துவான் A. சுவாமிநாத[ன்], கழக உயர்நிலைப்பள்ளி, மாயூ[ரம்].
12. வித்துவான் கு. சின்னையன், கலியாண சுந்தரம் உயர்நிலைப் பள்ளி, தஞ்சாவூர்.
13. வித்துவான் ஸ்ரீமதி ஜெயலட்சுமி ராகவன், அரசியலார் மகளிர் உயர்நிலைப்பள்ளி, கும்பகோணம்.
14. புலவர் மீ. தங்கவேலனர், கழக உயர்நிலைப்பள்ளி, உரத்தநாடு.
15. வித்துவான் S. தாமஸ் உடையார், Sacred Heart Girls' High School, தஞ்சை.
16. வித்துவான் பொ. தில்லைக் கோவிந்தப்பிள்ளை, தேசிய உயர் நிலைப்பள்ளி, நாகூர்.
17. கோ. மாணிக்கம், தமிழாசிரியர் நகராட்சி உயர்நிலைப்பள்ளி, கும்பகோணம்.
18. புலவர் து. நடேசன், கழக உயர் நிலைப்பள்ளி, கூத்தாநல்லூர்.
19. S. முத்துகிருட்டிண நாட்டார், தமிழாசிரியர், கழக உயர்நிலைப் பள்ளி, ஐயம்பேட்டை.
20. வித்துவான் S. முத்துக்குமரன், தூய அந்தோனியர் உயர்நிலைப் பள்ளி, தஞ்சாவூர்.
21. வித்துவான் அ. வடிவேலன், கலியாண சுந்தரம் உயர்நிலைப் பள்ளி, தஞ்சாவூர்.
22. புலவர் K. வாஞ்சிலிங்கம், வீரராகவ உயர்நிலைப்பள்ளி, தஞ்சை.
23. புலவர் நா. விசுவநாதம் பிள்ளை, கழக உயர்நிலைப்பள்ளி, திருவாளப்புத்தூர்.
24. வித்துவான் S. வைத்தீஸ்வரன், Native High School, Kumbakonam.

தென்னார்க்காடு மாவட்டம்

1. வித்துவான் R. ஆளவந்தார், B.A., செண்ட் அன்னீஸ் உயர்நிலைப் பள்ளி, திண்டிவனம்.

...வான் ந. ஆறுமுகம், நக...ட்சி உயர்நிலைப்பள்ளி, விழுப்புரம்.

3. வித்துவான் ஜெ. சடகோப ராமானுஜம், கழக உயர்நிலைப் பள்ளி, புவனகிரி.

4. வித்துவான் வெ. ஜகந்நாதய்யர், புனிதவளனார் கல்லூரி, மஞ்சை நகர்.

5. வித்துவான் கோ. சுந்தர ராமானுஜம், கீரப்பாளயம் P.O., புவனகிரி.

6. வித்துவான் மா. சிவப்பிரகாசம் பிள்ளை, கழக உயர்நிலைப்பள்ளி, திட்டக்குடி.

7. K. நாகஸ்வாமி சர்மா, தமிழாசிரியர், கழக உயர்நிலைப்பள்ளி, கள்ளக்குறிச்சி.

8. வித்துவான் செ. வரதராசன், நாட்டாண்மைக் கழக உயர் நிலைப்பள்ளி, உளுந்தூர்ப் பேட்டை.

9. வித்துவான் வேல் முருகன், கழக மகளிர் உயர்நிலை பள்ளி, விழுப்புரம்.

அரிய அறிவுரைகளை அருளிய ஆன்றோர்களே!

நன்றி. தங்களுடைய பெயர்களும், பட்டங்களும், பதவிகளும் பிழையின்றி அச்சிடப்பட்டுள்ளனவா? குற்றங்குறைகள் இருப்பின் பொறுத் தருளுங்கள்; உடனே எமக்கு எடுத்துக்காட்டுங்கள். தங்களுடைய கடிதங்கள் எங்கட்குச் சரியான காலத்தில் வராமல் போயிருத்தல் கூடும். அது பற்றித் தங்கள் திருப்பெயரே அடியோடு விடுபட்டிருக்கலாம். அவ்வாறு நிகழ்ந்திருப்பினும், எமக்கு அறிவித்தருள்க. வருகிற ஆண்டுகளில் குறைகளை நிறைவு செய்வோம்.

சான்றோர்களே! இந்நூலை ஆழ்ந்து படியுங்கள்; சிந்தித்துச் சீர் தூக்கிப் பாருங்கள்; உங்களுடைய நன் முடிவுகளை 31-1-1956-க்குள் எமக்கு எழுதியருளுங்கள். வரும் ஆண்டுகளில் அவற்றையும் தழுவி எம் உரை நூல்களை ஆக்குவோம்.

பெரியோர்களே! நீங்கள் நீடுழி வாழ்க; செல்வத்துடன் செழிக்க; பொன்போற் பொலிக; தங்களுடைய மாணவர்கள் தழைக்க. தங்களுக்கு இறைவன் இன்னருள் சுரக்க.

இங்ஙனம்,
தி லிட்டில் ப்ளவர் கம்பெனி,
பதிப்பகத்தார்.

புலவர்களின் புகழுரைகள்

(பொறுக்கு மணிகள்)

சென்னை மாவட்டம்

1. S.S.L.C. வகுப்புத் தமிழ் உரை நூல் (LIFCO) மாணவர்க்கு எல்லா வகையானும் பேருதவி புரிவதாய் அமைந்துள்ளது என்பது குறித்துப் பெரு மகிழ் வெய்துகிறேன்.—வித்துவான் பு. செல்வராசன், C.A.H. இந்து முஸ்லிம் உயர்நிலைப்பள்ளி, சென்னை.

2. . . . . . இந்நூல் தேர்விற்கு நல்ல வழி காட்டி என்பது எமது ...—வித்துவான் வா. கை. கே. சர்மா, தலைமைத் தமிழாசிரியர், வே... உயர்நிலைப்பள்ளி, சென்னை.

3. தங்கள் லிப்கோ தற்கால மாணவர்கள் தேர்வு பெறுதற்கு உறுதுணையாயமைந்துள்ளது.—வித்துவான் நா. சீனிவாச முத சர். தியாகராயர் உயர்நிலைப்பள்ளி, சென்னை.

4. அறிவிலும் அனுபவத்திலுஞ் சிறந்த முப்பெரும் புலவர்களை கொண்டு இயற்றப் பெற்ற எஸ். எஸ். எல். ஸி. 1955-ம் ஆண்டுத் தேர்வுக்கு உரிய லிப்கோ தமிழ் நூலைப் பார்வையிட்டேன். அது மிகவும் சிறந்த முறையில் அமைந்துள்ளது.—வித்துவான் வை. குஞ்சிதபாதம், தருமை யாதீனத் தமிழ்ப் புலவர், சித்தாந்தப் பெரும்புலவர், நகராண்மை உயர்நிலைப் பள்ளி, நுங்கம்பாக்கம், சென்னை.

செங்கற்பட்டு மாவட்டம்

5. "தண்டமிழ் பயிலும் தாவறு மாணவர்
கண்ட வுடனே களிப்புடன் தாயை
ஏற்கும் சேய்போல் எழிலுடைத் தாகிப்
பார்க்கும் பொருள்கள் பலவுட் கொண்டு
வீறு பெற்று விளங்கும் லிப்கோ
வண்டமி ழுரை நூல் வளர்கநா னிலத்தே."—வித்துவான் ஆ. நமச்சிவாய முதலியார், செயின்ட் ஜோசப் உயர்நிலைப்பள்ளி, செங்கற்பட்டு.

6. தங்கள் உரைநூல் மிகவும் நல்ல முறையில் ஆக்கப்பெற்றுள்ளது. —வித்துவான் S. வரதராசன், B.A., B.T., தலைமைத் தமிழாசிரியர், கலவல கண்ணன் செட்டியார் உயர் நிலைப் பள்ளி, திருவள்ளூர், செங்கற்பட்டு.

7. தங்கள் புத்தகங்கள் எல்லாம் மாணவர்கள் தேர்ச்சிக்கு ஒரு ஊன்றுகோலாகப் பயன்படுகின்றன என்று கூறின் மிகையாகாது என்பதை அறிவிக்க மகிழ்ச்சி.—வித்துவான் சி. கைலாயம், கழக உயர்நிலைப் பள்ளி செய்யூர்.

வடார்க்காடு மாவட்டம்

8. தங்கள் தமிழ் உரைநூல்கள் மாணவருலகிற்குப் புரிந்துவரும் நன்மையைக் கண்டு மிகமிக மகிழ்கின்றேன்.

......விழுமிய செயலை
உளங்கொண் டாற்றும் உயரிய லிப்கோ
கம்பெனி என்றும் நம்பனின் னருளால்
வாழ்க! வாழ்க!! வாழ்க!!!
வையமுள் ளளவும் வான்புகழ் பெற்றே.

—வித்துவான் பி.க. வேணுகோபாலப் பிள்ளை, தலைமைத் தமிழாசிரியர், கழக உயர்நிலைப் பள்ளி, காட்டுப்பாடி.

9. தங்கள் தமிழ் உரைநூலில் சிறப்பாகப் பாராட்டப் படுவனவற்றுள் நல்லொழுக்கப் பயிற்சி தலைசிறந்து நிற்கிறது. வித்துவான் M. D. பழநி மகாதேவன், மஸ்ஹருல் உலூம் உயர்நிலைப்பள்ளி, ஆம்பூர்.

10. தமிழில் S.S.L.C. பாட புத்தகத்தின் உரைப்புத்தகங்களாக வெளியிடப்படும் எல்லாவற்றினும் தாங்கள் வெளியிடும் உரைப் புத் ...மே சாலச் சிறந்ததாகும். ஏனெனில், மாணவர்களுடைய நிலைமைக்கும், ...மொழியில் அவர்களுக்கு ஓரளவு அறிவு பெருகச் செய்தற்கும் ஏற்ற ...ந்திருத்தலே என்பனல்—— ம. க. ஜயராம், தமிழாசிரியர், ...ர்கள் உயர்நிலைப் பள்ளி, இராணிப்பேட்டை.

சேலம் மாவட்டம்

——எல்லாப் பொருளும் நும் உரைநூல்களில் உள.—— வித்து ...கி. வெ. மீனாட்சிசுந்தரம், (I Grade), தமிழாசிரியர், கழக உயர்நிலைப் ...ளி, பாலக்கோடு.

12. தங்கள் பணி மாணவர் உலகிற்குப் பெரும்பயன் அளிக்கின்றது.—புலவர் செ. இராமசாமி, கழக உயர்நிலைப் பள்ளி, தம்மம்பட்டி.

13. நுங்கள் உரைநூல் எத்துறையிலும் போற்றத் தகுந்தது——வித்துவான் சி. கங்காதரன், நாட்டாண்மைக் கழக உயர்நிலைப் பள்ளி, சேடர் பாளையம்.

14. தமிழ் உரைநூல்களுள் "லிப்கோ" உரை நூலே தலை சிறந்தது. —வித்துவான் P. V கோபாலன் (I Grade), கழக உயர்நிலைப் பள்ளி, திருச்செங்கோடு.

15. தங்கள் உரைநூல் பன்னலமும் பெற்று இலங்குகிறது———மாணவர் உள்ளத்தைக் கவர்ந்துள்ளது என்பது வெளிப்படை.—வித்துவான் இரா. சுப்பிரமணியன், தூய மரியன்னை மகளிர் உயர்நிலைப் பளளி, மேட்டூர்.

16. லிப்கோவின் தமிழுரை நூல் பட்டறிவு மிகுந்த தமிழ்ப் பேராசிரியர் பலரால் நற்றமிழில் காலத்திற் கேற்பச் சீர்திருத்தம் பல பெற்று மாணவர் உள்ளங்கவருமாறு வெளியிடப்படுகின்றது.

———மேலும், தமிழ் மொழிக்கு நற்பணி புரிய, இப்பதிப்பகவுரை நூலைத் தமிழ் நாட்டு மாணவர்கள் ஆதரித்துப் போற்றுவார்களாக.—வித்துவான் கோ. சின்னசாமி, தமிழாசிரியர், நாட்டாண்மைக் கழக உயர்நிலைப் பள்ளி, காவேரிப்பட்டணம்.

17. "லிப்கோ" உரைநூலை யான் எஞ்ஞான்றும் 'லைப்கோ' உரை நூல் என்று உடனுசான்களிடம் உரைத்து வருவது வழக்கம்.

அதையொத்துத் தங்கள் "லிப்கோ" உரைநூல் 'லைப்கோ' உரை நூலாக த்திகழ்ந்து மாணவச் செல்வ செல்வியர்கட்கு உயிராற்றலாக உதவுகிறது. தங்கள் தமிழ் உரையேடு வாழ்க வளம்பல பெற்று என வாழ்த்துகின்றேன். —பா. இராமகிருட்டிணன், நாட்டாண்மைக் கழக உயர்நிலைப் பள்ளி, இடைப்பாடி.

கோவை மாவட்டம்

18. ஏனைய விளக்கவுரைகளைவிட தங்கள் விளக்கவுரைகள் மாணவர்க்குப் பெரிதும் பயன்படுகிறது. விளக்கவுரை நூலில் உள்ள வினாக்கள் முக்காற் பங்கு பொதுத் தேர்வுக்கு வருவனவாய் உள்ளன. இதுதான் மாணவர்க்கு வேண்டும் —— வித்துவான் சோ. புண்ணியகோடி, தமிழாசிரியர், மகாசன உயர் நிலைப் பள்ளி, மேட்டுப்பாளையம்.

19. ——தங்கள் உரையில் விளக்கம், தெளிவு, இலக்கணம் தேர்வுக்குரிய வினாக்கள் முதலியன கண்டு பிறர் கைக் கொண்டுள்ளார்———

ஆக்கமே கொண்டுள நின்னூலால் மாணவர்
ஊக்கமே கொண்டுள மாசுநீக்கி— நாக்கினில்
ஓர்ந்துணர்ந்து ஓதவே தெள்ளுரை தேர்வினு
ஆர்ந்தின் புறுவர் உளம்.

—வித்துவான் மா. கந்தசாமி, நாட்டாண்மைக் கழக உயர்நிலைப் வேட்டைக்காரன்புதூர்.

20. உங்கள் சென்ற ஆண்டைய குறிப்பேடு நல்ல இருந்தது.——— வித்துவான் நா. துரைசாமி, B. O. L., நகரா... நிலைப்பள்ளி, ஆர். எஸ். புரம்.

நீலகிரி மாவட்டம்

21. ....மற்றும், நோட்ஸில் ஆங்காங்கே அழகாக நிரப்பி யி... கும் "நல்லொழுக்கப் பயிற்சிகள்" நன்குள......... வித்துவான் K. நாரா... யணன், முனிஸிபல் ஹைஸ்கூல், உதகமண்டலம்.

22. தங்கள் S. S. L. C. தமிழ் உரை நூல்கள் தற்கால மாணவ மாணவிகட்குப் பெரிதும் நலமளிக்கின்றன. இஃதை அண்மையில் நடந்தேறிய தேர்தலில் மாணவ உலகம் மகிழ்வுற்றதை நான் எடுத்யம்புவது மிகையேயாகும்.—வித்துவான் V. சீனிவாசப் பிள்ளை, தமிழ்ப் பண்டிதர் (I Grade), முனிஸிபல் ஹைஸ்கூல், கூனூர் R. S.

நெல்லை மாவட்டம்

23. தெள்ளிய அறிவுடன், தேர்வில் வெற்றியும் தெரிந்து தரும் தேன்றமிழ் உரைநூல் லிப்கோவே.—புலவர் கா. ச. நமசிவாயம், (Dip. in Teach), தமிழாசிரியர், வீர பாண்டிய கட்ட பொம்மன் நாட்டாண்மைக் கழக உயர்நிலைப் பள்ளி, கயத்தாறு.

24. லிப்கோ உரைநூல்கள் எளிய இனிய நடையில், மாணவர்க்குப் பயன்படத்தக்க கருத்துக்கள் யாவும் கொண்டு வெளிவருகின்றன. பாராட்டத்தக்க முயற்சி. வாழ்த்துதல்.—வித்துவான் ரா. லே. ஆரோக்கியம், St. Fr. ஸேவியர் ஹைஸ்கூல், தூத்துக்குடி.

25. இப்பொழுது தாங்கள் (1955-க்கு) உரைநூல் அமைத்துள்ள முறையே பாராட்டுதற்கு உரியது! மொழிபெயர்ப்புப் பயிற்சி மாணவர்கட்குப் பெருந்துணை செய்துள்ளது. இலக்கணப் பகுதியும் அப்படியே—மொத்தத்தில் சென்ற ஆண்டின் லிப்கோ தமிழ் உரைநூல் முறையே சிறந்ததாகத் தெரிகிறது.—வித்துவான் கோ. வே. பெருமாள், கழக உயர்நிலைப் பள்ளி, பாவூர்ச் சத்திரம்.

26. லிப்கோ தமிழ் உரைநூல் மாணவர்களுக்குப் பெரிதும் நல்விருந்தளித்து வருகிறது. சிறப்புப் பகுதியிலுள்ள இலக்கணப் பகுதி மிகவும் மன நிறைவை யுண்டு பண்ணுகிறது .... லிப்கோ புரிந்துவரும் தமிழ்த் தொண்டிற்கு எனது உளங்கனிந்த நன்றி உரித்தாகுக.—வித்துவான் ஆ. வேலாயுதம், அரசர் உயர்நிலைப்பள்ளி, எட்டையபுரம்.

27. ......இந்த ஆண்டு வெளியிட்ட நூல்கள் மிகவும் சிறப்புடையதாக இருந்தன......வித்துவான் சி. நடராசன், கழக உயர்நிலைப்பள்ளி, கரிவலம் வந்த நல்லூர்.

இராமநாதபுரம் மாவட்டம்

28. தங்கள் தமிழ் உரை நூல் எத்தகைய குறைபாடுமின்றி வளம் பல பெற்றுத் தலைசிறந்து மிளிர்கின்றது. இவ்வுரை நூல் தேர்வுக்கு மட்டும் பயன்தரும் முறையிலன்றி உண்மைத் தமிழறிவும் தரவல்லதாய் அமைந்துள்ளது பாராட்டத்தக்கது. இவ்வாக்கப் பணியில் ஈடுபட்டுத் திறம்பெற, நாட்டிற்கு நல்லதோர் தொண்டாற்றிவரும் பதிப்பகத்தார்க்கும் உரையாசிரியர்கட்கும் எம் உள நிறை வாழ்த்து உரியதாகுக.

"வாழியவே லிப்கோ வளமார் தமிழ்உரைநூல்
வாழிதமிழ்த் தொண்டுபுரி வார்."

... நாராயணசாமி, தலைமைத் தமிழாசிரியர், N. S. M. V. P. S. ...ள்ளி, தேவகோட்டை,.

29. . . . தமிழக மாணவரின் தமிழ்த் தேர்ச்சிக்கெனத் தாங்கள் புரிந்து வரும் சேவை போற்றத்தக்கது. மாணவர் பலரும் தாங்கள் வெளியிடும் உரை நூல்கள் அவர் பயிற்சிக்குப் பெருந்துணை புரிவதாகக் கூறு இன்றமை பலமுறை கேட்டிருக்கின்றேன். தங்கள் உரைநூல்கள் பல ...ங்களிலும் நிறைவுபெற்றே திகழ்வதாகக் கருதுகின்றேன்.—வித்துவான் ... P. கிருஷ்ணன், தமிழாசிரியர், P. A. C. M. உயர்நிலைப்பள்ளி, ராஜ பாளையம்.

30. சீரும், செருக்கும்கொண்டு பவனிவரும் தங்கள் தமிழுரை நூல்கள் பெற்றுள்ள பெருமைதனைக் காண்கையில் புதியதோர் ஆலோசனையைக் கூறல் புனைந்துரையாகவே முடியும்.—எஸ். வி. நரசிம்மாச்சாரியார், தலைமைத் தமிழாசிரியர், இளையான்குடி உயர்நிலைப் பள்ளி, இராமநாதபுரம்.

மதுரை மாவட்டம்

31. ......தாங்கள் வெளியிடும் S. S. L. C. தமிழ் உரைநூல் மிக நன் முறையில் அமைந்துள்ளது. தங்கள் வெளியீட்டை மிகமிகப் பாராட்டுகின் றேன்.—வித்துவான் வி. சிவக்கொழுந்து, தமிழாசிரியர், V. M. கழக உயர்நிலைப்பள்ளி, பெரியகுளம்.

32. ‘லிப்கோ’ தமிழ் உரைநூல் என்னும் ஒப்புயர்வற்ற நூலை வெளி யிட்டு மாணவர் உலகில் பெரும்புகழ் திரட்டியுள்ள பெரியீர்! வணக்கம். ...ப்பொழுது உள்ள முறையே சிறந்தது. —கவிஞர் கதி. சுந்தரம், தமிழ் விரிவுரையாளர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

திருச்சி மாவட்டம்

33. தாங்கள் புரியும் பணி தமிழுக்கும், தமிழ் மாணவர்கட்கும் பயன் பெறுவது குறித்து மகிழ்வதோடு, மேலும் தங்கள் தொண்டு வளர விரும்பு கின்றேன். எங்கள் மாணவர்கட்கு நான் கூறுவது இதுதான். “உரை நூல்வாங்க விரும்பும் மாணவர்கள் ‘லிப்கோ’ உரைநூலையே வாங்குங் கள் என்பதுதான்”. இது மிகைப்படக்கூறுதலோ புகழுரையோ அன்று. தங்கள் பணி வளர்க.—வித்துவான் பா. வேணுகோபாலன், கழக உயர்நிலைப்பள்ளி, பெரம்பலூர்.

34. தற்பொழுது அமைந்திருக்கும் நிலை மிகவும் போற்றற்குரியது.

நல்லொழுக்கப் பயிற்சி, பக்கவிறுதியில் கொடுக்கப்படும் பழ மொழி இன்றியமையாதன.........வித்துவான் S இராமச்சந்திரன் ...சேஷ ஐயங்கார் மெமோரியல் உயர்நிலைப்பள்ளி, தெப்பக்குளம், திருச்சி.

35. ......பள்ளி இறுதி வகுப்புக்கு இனிய எளிய தூய தமிழ் நடையில் உரைநூல் தந்து மாணவர்களின் அறிவுக்களஞ்சியத்தைப் பெருக்கும் தங்களின் தமிழ்த் தொண்டைப் பாராட்டுகின்றேன்.

எப்படிப் படிப்பது எனச் சோர்வுறும் மாணவர்கட்குச் சோர்வுறுதே எனப் பசுமரத்தாணிபோல் மனத்தில் பதியச் செய்யும் இலக்கணக் குறிப் ...ம், ஆசிரியர் உதவியின்றியும் அல்லல்படாது அறிவமுதத்தைப் பருக அழகாக உரைப்பகுதியும், தேர்வில் எப்படி வினவருமோ எனத் திகை... மாணவருக்கு, ‘மாதிரி இதுதான், மாணவர்கள்! அஞ்சாதீர்’ என ... பகுதியும் மிக மிக நன்று.—வித்துவான் வே. சின்ன... தமிழாசிரியர், கழக உயர் நிலைப்பள்ளி, இலப்பைக் ...

36. தாங்கள் வெளியிடும் பெரும்பள்ளி இறுதித் தமிழ் உரைநூல் தண்டமிழ் உலகில் தனிச் சிறப்பு வாய்ந்ததே. மாணவர் உலகம் பெரிதும் விரும்பிப் படிப்பதும் தங்கள் உரைநூலையே.....வித்துவான் எஸ். அரங்கசாமி ஐயர், P.O.L., E. R. உயர்நிலைப்பள்ளி, தெப்பக்குளம், திருச்சி.

37. சென்ற ஆண்டு (1955) தாங்கள் வெளியிட்ட S. S L[illegible] குறிப்பு நூல் நன்முறையிலிருந்தது. சிறப்புப் பகுதியில் ஒவ்வொரு பாடத்திறமும் நல்லொழுக்கப் பயிற்சியும், பழமொழிகளும், இலக்கணப் பகுதியும் சேர்ந்திருந்தது மிகவும்பயன்படுவதாயிருந்தது.

இம்முறையைத் தொடர்ந்துவரும் ஆண்டுகளிலும் வெளியிட்டால் பெரும்பயன் விளைவிப்பதாகும்......—வித்துவான் ப. அரங்கசாமி, கழக உயர்நிலைப்பள்ளி, லால்குடி.

தஞ்சை மாவட்டம்

38. ......தங்கள் கம்பெனித் தமிழ் உரைநூல்கள் (S. S. L. C. நோட்ஸ்) மாணவர்கட்குப் பெரிதும் உதவியாக இருக்கின்றன.

இவ்வாண்டு இறுதித் தேர்வில் தங்கள் உரை நூல்களிலிருந்து பல வினுக்கள், ஆங்கிலம், தமிழ் முதலிய தேர்வு வினுத் தாள்களில் வந்துள்ளமை கண்டு மாணவர்கள் மகிழ்வெனும் கடலுள் மூழ்கித் திளைத்தார்கள்.

......மாணவர்க்கு பெரிதும் பயன்தருவது 'லிப்கோ' தமிழ் உரைநூல் என்ருல் மிகையாகாது. வாழ்க 'லிப்கோ'.—வை. மு. சண்முகதேசிகர், தமிழாசிரியர், N.H. School, நாகப்பட்டினம், தஞ்சை.

39. மற்றைய உரை நூல்களைவிடச் சிறந்த உரையே 'லிப்கோ' வின் நூல்..........குறையோ, திருத்தமோ சொல்லக்கூடிய அளவில் 'லிப்கோ' இல்லை என்பதே எனதெண்ணம்.—வித்துவான் வ. குமாரசாமி, சர் சிவசுவாமி ஐயர் உயர்நிலைப்பள்ளி, திருக்காட்டுப்பள்ளி.

40. ....பிறர்குறை கூற ஏது விராது. உழைத்த தமிழ்ப் பெரு மக்களுக்கு எனது நன்றியும் வாழ்த்தும்—வித்துவான் க. சுப்பிரமணியம், கழக உயர்நிலைப்பள்ளி, பட்டுக்கோட்டை.

41. இதில் குற்றங் குறைகள் இல்லையென்று கூறல் மிகையாகாது. இதனிற்கண்ட வினுக்களில் பெரும்பாலன S. S. L. C. தேர்விலும் வந்துள்ளன. இது போற்றத் தகுந்த தொரு செய்தியாகும்.....—வித்துவான் S. குஞ்சிதபாதம் பிள்ளை, நகராண்மைக் கழக உயர் நிலைப்பள்ளி, கூறைநாடு, மாயூரம்.

தென்னுர்க்காடு மாவட்டம்

42. தங்கள் பள்ளியிறுதி (S. S. L. C.) தமிழ் உரை பொது, சிறப்புப் பகுதி நூல்கள் பாராட்டுக்குரிய முறையில் அமைந்துள்ளன—வித்துவான் க. பா. வேல்முருகன், கழக உயர்நிலைப்பள்ளி, விழுப்புரம்.

43. அனுபவம் மிக்க நல்லறிஞர்கள் பலர் கருத்துக்களையும் அறிந்து அழகுற நல்ல முறையில் வெளியிடுகின்றீர்கள்.........வித்துவான கோ. சுந்தர ராமானுஜம், பண்ணுருட்டி.

பாட அட்டவணை

...யர் : .... வகுப்பு : ....

...ளிக்கூடம் : .... ஊர் : ....

வாரத்தின் வேலை நாட்கள்	1	2	3	4	5	6	7
நேரம் →							
திங்கள்							
செவ்வாய்							
புதன்							
...யாழன்							

(B) நாட் குறிப்பு

நாள்	கிழமை	ஜுலை 1955	பள்ளி, வேலை நாட்கள்
1	வெ.		
2	ச.		
3	ஞா.		
4	தி.		
5	செ.		
6	பு.		
7	வி.		
8	வெ.		
9	ச.		
10	ஞா.		
11	தி.		
12	செ.		
13	பு.		
14	வி.		
15	வெ.		
16	ச.		
17	ஞா.		
18	தி.		
19	செ.		
20	பு.		
21	வி.		
22	வெ.		
23	ச.		
24	ஞா.		
25	தி.		
26	செ.		
27	பு.		
28	வி.		
29	வெ.		
30	ச.		

நாள்	கிழமை	ஆகஸ்ட் 1955	பள்ளி வேலை நாட்கள்
1	தி.		
2	செ.		
3	பு.		
4	வி.		
5	வெ.		
6	ச.		
7	ஞா.		
8	தி.		
9	செ.		
10	பு.		
11	வி.		
12	வெ.		
13	ச.		
14	ஞா.		
15	தி.		
16	செ.		
17	பு.		
18	வி.		
19	வெ.		
20	ச.		
21	ஞா.		
22	தி.		
23	செ.		
24	பு.		
25	வி.		
26	வெ.		
27	ச.		
28	ஞா.		
29	தி.		
30	செ.		
31	பு.		

நாள்	கிழமை	செப்டம்பர் 1955	பள்ளி வேலை நாட்கள்
1	வி.		
2	வெ.		
3	ச.		
4	ஞா.		
5	தி.		
6	செ.		
7	பு.		
8	வி.		
9	வெ.		
10	ச.		
11	ஞா.		
12	தி.		
13	செ.		
14	பு.		
15	வி.		
16	வெ.		
17	ச.		
18	ஞா.		
19	தி.		
20	செ.		
21	பு.		
22	வி.		
23	வெ.		
24	ச.		
25	ஞா.		
26	தி.		
27	செ.		
28	பு.		
29	வி.		
	வெ.		

...றிவுரையில் சுருக்கம் வேண்டும்" ...

நாள்	கிழமை	அக்டோபர் 1955	பள்ளி வேலை நாட்கள்
1	ச.		
2	ஞா.		
3	தி.		
4	செ.		
5	பு.		
6	வி.		
7	வெ.		
8	ச.		
9	ஞா.		
10	தி.		
11	செ.		
12	பு.		
13	வி.		
14	வெ.		
15	ச.	The LIFCO'S Special Service Supplement—Last date for receiving the Entry Forms.	
16	ஞா.		
17	தி.		
18	செ.		
19	பு.		
20	வி.		
21	வெ.		
22	ச.		
23	ஞா.		
24	தி.		
25	செ.	ஆயுத பூஜை	
26	பு.		
27	வி.		
28	வெ.		
29	ச.		
30	ஞா.		
31	தி.		

“ ஏமாற்றமே வலிமை வளர்க்கும் செவிலி. ” — ஸர் புரூ...

நாள்	கிழமை	நவம்பர் 1955	பள்ளி வேலை நாட்கள்
1	செ.		
2	பு.		
3	வி.		
4	வெ.		
5	ச.		
6	ஞா.		
7	தி.		
8	செ.		
9	பு.		
10	வி.		
11	வெ.		
12	ச.		
13	ஞா.		
14	தி.		
15	செ.		
16	பு.		
17	வி.		
18	வெ.		
19	ச.		
20	ஞா.		
21	தி.		
22	செ.		
23	பு.		
24	வி.		
25	வெ.		
26	ச.		
27	ஞா.		
28	தி.		
29	செ.		
30	பு.	The LIFCO Book-Prizes Scheme—Last date for receiving the Entry Forms.	

"...ள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" — வள்ளுவர்

நாள்	கிழமை	டிசம்பர் 1955	பள்ளி வேலை நாட்கள்
1	வி.		
2	வெ.		
3	ச.		
4	ஞா.		
5	தி.		
6	செ.		
7	பு.		
8	வி.		
9	வெ.		
10	ச.		
11	ஞா.		
12	தி.		
13	செ.		
14	பு.		
15	வி.		
16	வெ.		
17	ச.		
18	ஞா.		
19	தி.		
20	செ.		
21	பு.		
22	வி.		
23	வெ.		
24	ச.		
25	ஞா.		
26	தி.		
27	செ.		
28	பு.		
29	வி.		
30	வெ.		
31	ச.		

“ முயற்சி திருவினை ஆக்கும்.” — வள்ளுவ…

நாள்	கிழமை	ஜனவரி 1956	பள்ளி வேலை நாட்கள்
1	ஞா.		
2	தி.		
3	செ.		
4	பு.		
5	வி.		
6	வெ.		
7	ச.		
8	ஞா.		
9	தி.		
10	செ.		
11	பு.		
12	வி.		
13	வெ.		
14	ச.		
15	ஞா.		
16	தி.		
17	செ.		
18	பு.		
19	வி.		
20	வெ.		
21	ச.		
22	ஞா.		
23	தி.		
24	செ.		
25	பு.		
26	வி.		
27	வெ.		
28	ச.		
29	ஞா.		
30	தி.		
31	செ.		

நாள்	கிழமை	பிப்ரவரி 1956	பள்ளி வேலை நாட்கள்
1	பு.		
2	வி.		
3	வெ.		
4	ச.		
5	ஞா.		
6	தி.		
7	செ.		
8	பு.		
9	வி.		
10	வெ.		
11	ச.		
12	ஞா.		
13	தி.		
14	செ.		
15	பு.		
16	வி.		
17	வெ.		
18	ச.		
19	ஞா.		
20	தி.		
21	செ.		
22	பு.		
23	வி.		
24	வெ.		
25	ச.		
26	ஞா.		
27	தி.		
28	செ.		
29	பு.		

"மனிதனிடம் கண்ணியமும் விழிப்பும் வேண்டும்." – இரா...

நாள்	கிழமை	மார்ச் 1956 பள்ளியிறுதித் தேர்வில் வெற்றி	பள்ளி வேலை நாட்கள்
1	வி.		
2	வெ.		
3	ச.		
4	ஞா.		
5	தி.		
6	செ.		
7	பு.		
8	வி.		
9	வெ.		
10	ச.		
11	ஞா.		
12	தி.		
13	செ.		
14	பு.		
15	வி.		
16	வெ.		
17	ச.		
18	ஞா.		
19	தி.		
20	செ.		
21	பு.		
22	வி.		
23	வெ.		
24	ச.		
25	ஞா.		
26	தி.		
27	செ.		
28	பு.		
29	வி.		
30	வெ		
31	ச.		

...ற்சிதன் மெய்வருத்தக் கூலி தரும்." — வள்ளுவர்

S. S. L. C. 1956

THE LIFCO BOOK-PRIZES

FOR PROFICIENCY IN TAMIL

THE SCHEME

INTRODUCTORY

WHEREAS THERE HAS BEEN A TENDENCY ON THE PART OF CERTAIN PUPILS to neglect their study of TAMIL in the beginning of the School Year, and WHEREAS THE LITTLE FLOWER CO. sincerely desire, in a spirit of service to the pupils of S. S. L. C. 1956, to create among the said pupils an enthusiasm *to study earnestly even from the first day of the re-opening* of the School, they propose to award Prizes in the shape of some useful books and Certificates to deserving pupils, subject to certain terms and conditions as set out below.

[*In a similar way, 727 pupils of S. S. L. C. 1955, got the LIFCO BOOK-PRIZES AND CERTIFICATES in all the languages.*

THE LITTLE FLOWER CO. appeal to the teachers and the taught and to the Heads of Institutions to make this PRIZE SCHEME of S. S. L. C. 1956 *also*, however humble it may be, even a greater success than before.]

INSTRUCTIONS, TERMS & CONDITIONS

1. Pupils, studying in recognized High Schools and appearing for the S. S. L. C. Public Examinations of Madras and Andhra States to be held in March 1956 are eligible to participate in the above Scheme.

2. **Private candidates are not eligible to take part in this Scheme.**

3. **PROFICIENCY IN TAMIL:** THE LITTLE FLOWER CO. will judge the pupils by the marks they get in the **TAMIL** paper (all the papers put together if there be more than one paper) in the *very* **FIRST** Examination held in the School Year. Among the participants in this Scheme, the **FIRST 125** pupils — *subject to the students getting a minimum of 50%* — in **TAMIL** (judged by the marks as recorded in the Entry Form) will **EACH** get a Prize in the shape of some useful book or books to the value of **NOT LESS THAN Rs. 4.** The choice of the books is left entirely to the discretion of THE LITTLE FLOWER CO. and the books may be in English and/or in any other language.

NOTE: All the entries of *all* High Schools will be pooled together and judged. Ranks will then be allotted; *e.g.*, supposing the highest among the entries received is 65%; the I Prize will go to that pupil; supposing 3 of them next get each 64%, II to IV Prizes will go to these 3, and in this way a *maximum* of **125** Prizes will be given; note that no pupil who gets less than 50% can get any Prize. The number of Prizes may be increased at the discretion of THE LITTLE FLOWER CO.

In addition to the Prize-Books, each of the Prize Winners will get also a CERTIFICATE, charmingly printed, with the sign and seal of THE LITTLE FLOWER CO.

4. The pupil who desires to participate in this Scheme shall fill in the Entry Form, attached hereto, carefully and correctly, get it **COUNTERSIGNED** by the concerned **TAMIL** Teacher and also by the Head of the School and get it **RUBBERSTAMPED WITH THE SEAL OF THE SCHOOL.** The Entry Form, duly filled in, signed and rubberstamped, should be sent, addressed to "THE LITTLE FLOWER CO., THE S. S. L. C. PRIZE DEPT., MADRAS-17." To avoid unnecessary postal expenses, pupils may join together and send all their Entry Forms in one cover, affixing suitable postage stamps. Entry Forms relating to different languages may also be sent in one cover.

5. The above Form must reach THE LITTLE FLOWER CO., *ON OR AFTER* the first day of October 1955 and *ON OR BEFORE* the 30th day of November 1955. THIS IS VERY IMPORTANT. Entries received *before* 1-10-1955 or *after* 30-11-1955 **will not be taken into consideration.**

6. The entries in the Form will be taken as final for the purpose of the award of Prizes. No plea of error or inaccuracy in making the entries that may be discovered later, on a comparison with the School records, will be admitted by the Publishers.

7. THE LITTLE FLOWER CO. will, soon after 30-11-1955, take up the scrutiny of the Entry Forms, *judge who are all entitled to the Prizes and the Certificates, and will post ordinary cards to the Prize-Winners direct, who must, within about 10 days from the posting of such cards, remit to "THE LITTLE FLOWER CO., Madras-17" Re. 1-8-0* **(for each language)** *by Money Order to cover the incidental charges in connection with the despatch of the Prize-Books and the Certificates.*

Since the amount covers the incidental charges such as scrutiny, printing of the Certificates, packing etc., *under no circumstances, will any concession be shown with regard to the said amount* (even for the City candidates).

The Prize Books and the Certificates, with the Publishers' best wishes, will be despatched by Registered Post individually to the Prize-Winners only on receipt of the above amount in time.

8. A list of Prize-Winners will, *if convenient*, be sent to Heads of Schools for favour of display on the Notice Board.

9. THE LITTLE FLOWER CO. reserve the discretion to alter the terms and conditions of this Scheme, if thereby no Prize-Winner is affected adversely.

10. *No responsibility will be accepted for any articles lost, mislaid or delayed in transit.* **No correspondence can be entered into or interviews granted except at the discretion of THE LITTLE FLOWER CO.** The decision of the Company on all matters relating to this Scheme is absolutely final and legally binding and is AN EXPRESS CONDITION of the entry.

11. The various instructions, terms, conditions etc. set out herein and in the Entry Form constitute a binding contract between the Company and the participant, and the signature of the pupil in the form will be taken as his or her absolute consent to the terms and conditions of the Scheme. The contract shall de deemed to be made [illegible] City of Madras.

S. S. L. C. 1956

THE ENTRY FORM

FOR PARTICIPATING IN

THE LIFCO BOOK-PRIZES SCHEME

FOR PROFICIENCY IN TAMIL

2

CUT HERE

1. (*a*) Name of the School :...

   (*b*) *VI Form ;* Section (if any) :..

   (*c*) Town :......................(*d*) District :................................

2. Name (in BLOCK letters) of the pupil and full house address to which the Prize Books & the Certificate should be sent, in case the pupil becomes entitled to them :

   ....

   ....

   ....

3. Name of the *very* **FIRST** Examination held in the School Year:

   ....

4. Percentage of marks got by the pupil in **TAMIL (GENERAL STUDY ONLY)** in the above Examination (in figures & words) :..

   ....

   NOTE: If there were more than one paper in **TAMIL GENERAL STUDY** in the above Examination, the percentage of marks in all the papers taken together should be given. Pupils who get below 50% cannot take part in this Scheme.

5. State whether the pupil has entered for the LIFCO Prize Scheme of S. S. L. C. 1956 in other languages (English or Samskrit) ; if so, the names of the languages so offered :

   ....

CUT HERE

....

Signature of the pupil.

IMPORTANT : Before filling in the above Entry Form, please go through the 'Instructions, Terms & Conditions' of this Scheme given on Pages (K) and (L).

NOTE : Private candidates cannot take part in this S[illegible]

CERTIFICATE BY THE TAMIL TEACHER AND BY THE HEAD OF THE SCHOOL:

The entries given on the reverse are correct.

....

Signature of the **Tamil** *Teacher and Date.*

....

Signature of the Head of the School and Date.

SEAL OF THE SCHOOL

IMPORTANT: This Form should be fully filled up in INK and in ENGLISH with care and should reach "THE LITTLE FLOWER CO., THE S. S. L. C. PRIZE DEPT., MADRAS-17" **on or after** 1-10-1955 and *on or* **before** 30-11-1955. **This is very important. Entries received after the last** *date*, and entries received without the signatures of the language teacher and the Head of the School **will** *not* **be considered.** Forms with incomplete entries will also be thrown out. Scoring out, alterations or corrections, should be properly attested by the Head of the School. **The seal of the School should also be obtained on this Form.**

NOTE: (1) For **TAMIL**, only this Form should be filled up; entries filled in Forms relating to other languages, or filled in blank papers are not valid.

(2) No other letter (such as ordering for books) or chit should be attached to this Form; no stamps or money order should be sent beforehand. If anything be so sent, that amount will not be taken into consideration.

(3) To avoid unnecessary postal expenses, pupils may join together and send all their Forms in one cover. Forms relating to different languages may also be sent in one cover. COVERS BEARING INSUFFICIENT POSTAGE ON THEM WILL BE REFUSED.

(4) Enquiries regarding the receipt of the Entry Forms and the despatch of the Prize Books *will* **not** *be attended to.* ... Publishers are not responsible for any loss or delay in transit ...ntry Forms or of the Prize Books or any other Papers.

CUT HERE

CUT HERE

S. S. L. C. 1956

THE LIFCO
SPECIAL SERVICE SUPPLEMENT
IN TAMIL

INSTRUCTIONS, TERMS & CONDITIONS

1. The SPECIAL SERVICE SUPPLEMENT may contain the following :—

(*i*) Some additional notes, alternative meanings or special suggestions that may be found useful or necessary, *and/or*

(*ii*) Some probable questions in regard to the forthcoming S. S. L. C. Public Examination.

2. Pupils desirous of getting the above Supplement should send the following to "THE LITTLE FLOWER CO., THE SPECIAL SERVICE DEPARTMENT, MADRAS-17" :

(*i*) The Entry Form given on the next Page fully filled up in ENGLISH and in INK. (The Form should be *entire*. It should not be torn, defaced or otherwise damaged.)

(*ii*) Postage stamp or stamps worth annas FOUR (for each language) to cover the incidental charges of the Publishers.

3. After receipt of the above, the SPECIAL SERVICE SUPPLEMENT will be sent by ordinary Book-Post to the address given on the Entry Form **on or about 1-1-1956.** The Publishers are not responsible for any loss or delay in transit of the Entry Forms or of the Supplement or any other Papers.

4. ENTRY FORMS REACHING THE PUBLISHERS WITHOUT POSTAGE STAMPS TO THE VALUE OF ANNAS FOUR (for each language), OR AFTER 15-10-1955 WILL BE REJECTED. Forms with incomplete entries will also be thrown out.

5. **The Publishers will NOT ENTER INTO ANY CORRESPONDENCE about the above subject other than the posting of the Supplement.** Enquiries regarding the receipt of the Entry Forms and the despatch of the Supplement **will *not* be attended to.**

NOTE: (1) Please note that the entry-fee of annas FOUR (for each language) should be sent only in the shape of postage stamps and should be enclosed with the Entry Form. (2) Some pupils may desire to send SIX annas more and ask us to send the SUPPLEMENT by Registered Post. It will not be possible to so register it. So, nothing more than four (for each language) annas stamps should be sent. (3) For this language, this Entry Form alone should be used; entries filled in Forms relating to other languages, or filled in blank papers are not valid. (4) No other letter (such as ordering for books) or chit should be attached to this Form. (5) To avoid unnecessary postal expenses, pupils may join together and send all their Forms in one cover enclosing the required (4 as. for each Entry Form) stamps. Forms relating to different languages may also be sent in one cover. (6) COVERS BEAR[illegible] INSUFFICIENT POSTAGE ON THEM WILL BE REFUSED[illegible]

NOTE : Private candidates can also send thi[illegible]

CUT HERE

CUT HERE

THE ENTRY FORM

FOR OBTAINING

THE LIFCO'S SPECIAL SERVICE SUPPLEMENT IN TAMIL

B

Before filling in this Entry Form, please go through the 'Instructions, Terms & Conditions' given on the previous Page.

Name of the School ....

VI Form; Section (if any) :..

Town :..

District :..

Entries above need not be filled up by the Private Candidates.

NAME & FULL ADDRESS OF THE CANDIDATE

(To be filled up in English the same way in 1 and 2 below)

1

Name:..

House Address to which the Suppl. should be sent

....

....

....

....*District.*

B

Date:...........................

Enc.: *Stamps*:..

2

Name:..

House Address to which the Suppl. should be sent

....

....

....

....*District.*

B

Forms ...
... Publisher ...
...try Forms

...THE ABOVE IN INK AND IN BLOCK LETTERS.

பெற்ருேர்கட்கு ஒரு வேண்டுகோள்

நல்லொழுக்கப் பயிற்சி

இவ்வுரை நூலின் செய்யுட் பகுதி ஒவ்வொன்றன் ஈற்றிலும், துணைப்பாடப் பகுதி ஒவ்வொன்றன் ஈற்றிலும் **'நல்லொழுக்கப் பயிற்சி'** என்ருெரு பகுதி தரப்பெற்றுள்ளது. **அவை ஏன் தரப் பெற்றுள்ளன ?**

கல்வியின் நோக்கம் அறிவு பெறுதல் ஆகும். அறிவின் பயன் ஒழுக்கமுடைமையாகும். எனவே, ஒழுக்கம் இன்றேல் கல்வி கற்றதனுல் உண்டாகும் பயன் இல்லையாகும். மாணவர்க்கு நல்லொழுக்கங்களில் சிலவற்றைப் புகட்ட வேண்டும் என்னுங் கருத்துடனேயே அத்தகைய பயிற்சிகள், அவ்வப்பாடத்துடன் தொடர்புபடுத்தித் தரப்பெற்றுள்ளன.

மாணவர்கள் தேர்வில் வெற்றிபெற வழிகாட்டுதல் எங்களுடைய துணை நோக்கமாகும். **எங்களுடைய முதல் நோக்கம் மாணவர்க்கு ஒழுக்கங்களை ஓரளவு கற்பிப்பதே ஆகும்.** அத்தகைய எங்கள் முதல் நோக்கம் நிறைவேறுமாறு செய்தல் பெற்ருேர் களேயே சார்ந்தது. ஆகவே, **பெற்ருேர்களே!** ஈண்டுத் தரப்பெற் றுள்ள நல்லொழுக்கப் பயிற்சிகளை உங்களுடைய மக்கள் நடை முறையிற் கைக்கொள்ளுமாறு செய்யுங்கள்; **'சான்ருேன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே'** என்னும தந்தையின் கடமையை நிறைவேற்ற முன்வாருங்கள். அவ்வாறு நிறைவேற்றினுல் உங்களுடைய மக்கள் **'அறிவறிந்த மக்கள்'** ஆவர். அறிவறிநத மக்களைப் பெறு வதினும் சிறந்த பேறு வேறிலலே. அதுபற்றியே வள்ளுவனுர்,

**"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற"**

என்ருர்.

—**தி லிட்டில் ப்ளவர் கம்பெனி,**
பதிப்பகத்தார்.

நடிப்பிற்கு வாய்ப்புக்கள்

நடிப்பு என்பது ஒரு நுண்கலை. நடிப்போர்க்கும், நடிப்பினைக் காண்போர்க்கும், நடிப்பவரின் பேச்சினைக் கேட்போர்க்கும் இன்பம் உண்டாகும் என்பதை நீங்கள் உணர்வீர்கள். மேலும், நடிக்கப்பெறும் நிகழ்ச்சிகள் மனத்தில் உறுதியாக இடம்பெறும். உங்கள் பாடப் பகுதியில் நடித்துப் பார்ப்பதற்கேற்ற பகுதிகள் சில உள. சிலப்பதிகாரப் பகுதி, கம்ப ராமாயணப் பகுதி, மனோன்மணியப் பகுதி, ஆசிய ஜோதிப் பகுதி ஆகியவை நடிப்பதற்குத் தக்கவை. அவற்றை, உங்களுடைய தமிழாசிரியர்களின் துணைகொண்டு, நீங்கள் நடித்துப் பாருங்கள். உங்களுள் சிலர்க்கு, நாடகத்திற்கேற்ற உரையாடல் எழுதும் திறமை இயற்கையிலேயே அமைந்திருக்கும். அத்தகையோர், நவராத்திரி விடுமுறை நாட்களில் நாடக உரையாடலை எழுதலாம். அவ்விடுமுறையிலேயே நடிப்பதற்குப் பயிற்சியையும் நீங்கள் பெறுதல் நன்று.

குறிப்பு : இந்நாடகங்களுக்குக் குரலிசை, கருவியிசை, பின்னணி இசை, திரை, ஆடம்பர உடைகள், முகப்பூச்சு, கோலங்கள் முதலியன வேண்டா.

நடிப்போர்க்குச் சிறு குறிப்புக்கள்
(சிலப்பதிகாரப் பகுதி)

நாடக உறுப்பினர் : கண்ணகி, பாண்டியன் நெடுஞ்செழியன், வாயிற் காவலன்.

கண்ணகி : (வாயிற் காவலனுடன் உரையாடுங்கால்) சினம், வெறுப்பு - (செய்யுள் அடிகளையும் ஏற்றவாறு பயன்படுத்தலாம்) - (பாண்டியனுடன் பேசுங்கால்) தெளிவு, உறுதி, சினம் - சோழ மன்னர்களின் செங்கோன் முறைபற்றிப் பேசுங்கால் பெருமிதம், எடுத்த குரல் - 'கொலைக்களப்பட்ட கோவலன் மனைவி' என்னுங்கால் துயரம், தாழ்ந்த குரல், ஆனால் தெளிவு - சிலம்பினை உடைக்குங்கால், துடுக்குப் பேச்சு - முகத்தில் வீரக்குறி.

வாயிற் காவலன் : கண்ணகியுடன் உரையாடுங்கால் அச்சம் - பாண்டியனுடன் உரையாடுங்கால் பணிவும், நடுக்கமும்.

பாண்டியன் : முதலிற் பெருமிதமும் அருளும் – அரச நீதி பற்றிக் கூறுங்கால் கடமையுணர்ச்சி - சிலம்பு உடைக்கப் பெற்றவுடன் நடுக்கம் - குரலில் தழுதழுப்பு - மயக்கம் - வீழ்தல்.

பாடத் திட்டம்

Abstracts from the latest Departmental Syllabuses—S. S. L. C. Public Examination (Reorganised Course)—Published in The Fort St. George Gazette dated 27-1-1954.

GENERAL

The place of the Regional Language in the curriculum:—

The Regional Language or the mother-tongue shall be the First Language of the curriculum of studies and also the medium of instruction in all subjects of the curriculum. According to the scheme of language studies in secondary schools approved in G. O. No. 2121, Education, dated 27th July 1950, the First Language will be either the Regional Language or the pupils' mother-tongue. It will consist of two parts (Parts I and II) of which the study of Part I will be compulsory and under Part II, students will be allowed to choose a further study of the Regional Language or the mother-tongue studied under Part I or a classical or any other Indian language except Hindi, only a student studying Hindi as his mother-tongue under Part I being permitted to choose it under Part II also. Four periods in a thirty-five period week will be assigned to Part I and three to Part II or its alternative. The essential features of the syllabuses herein given are expected to be followed in respect of the methods of teaching the language in all the forms of the secondary school courses.

Chief features of the syllabuses in the Regional Languages :-

(1) For Parts I and II of the First Language in the Forms IV to VI the syllabuses will be as detailed.

(2) The aim of the course of study under Part I is the attainment of the ability to speak and write the language accurately and grammatically on the topics and experiences within the range of the pupils' study at the high school stage and their conditions of living at this stage and to make use of the language as a vehicle of expression as well as of further independent study for pleasure or instruction The course of study, under Part II, of the same language as under Part I, envisages the further attainment, at the end of the high school course, of standard of knowledge which will be complete in itself for the needs of an intelligent and cultured adult life without any necessity for a further study in the university except for the purpose of specialization in the language or of raising individual's standard of attainment in the language commensurately with other studies of the university course. The latter course also envisages the passing into the Intermediate class a better type of language student than at present.

(3) For the teaching of these syllabuses, a higher standard of general knowledge is expected in the teachers of the languages.

(4) Emphasis should be laid on the training of pupils to write not only accurately and grammatically but also clearly and on the use of text-books at the higher stages to serve the interests of cultural aims and literary appreciation. The language should be simple and direct and suited to the themes. It should at the same time aim at enriching progressively the active vocabulary of the pupils. Special efforts should be made to ensure on the part of the pupils both in speech and writing exactness and precision of expression. Exaggeration and vague expression should be discouraged. The enriching of the vocabulary should be directed towards the study of words and phrases expressing delicately different shades of meaning and to their proper use. For example the same degree of precision should be achieved in th Regional Language as is achieved in English by the use of the words h

suitable, ample, superior, agreeable, proper etc., for all of which it is not unusual to find the word 'good' used in most of the Regional Languages.

*** *** ***

(11) As for the scheme of the S. S. L. C. Public Examination for Parts I and II of language study, it will be as follows :—

(*a*) (*i*) *Part I.—Paper I.*—The paper will be of 2½ hours' duration with the maximum marks as 60. It will contain question on text and textual grammar.

(*ii*) *Part I.—Paper II.*—The paper will be of two hours' duration with the maximum marks as 40. It will contain three questions—two questions on Composition-one from the non-detailed texts and one question on translation from English to the lauguage. Scope may be given for choice in answering the questions from the non-detailed texts; the candidates will, however, be required to answer one question at least from each of the non-detailed books studied by him. The length of the Composition will be not more than two pages. The distribution of marks will be as follows :--

For each Composition 15 marks ...	30 marks.
Translation	10 ,,
	40

Note.--If there is only one non-detailed text-book in a language both the questions will be from the same book.

There will be no question on original or general Composition in this paper.

தேர்வு விளக்கமும் மதிப்பெண்களும்

பொதுப் பிரிவாகிய முதற் பகுதிக்கு உரிய வினாத்தாள்கள் 2.

முதற்றாள் :

மதிப்பெண்கள் : 60

காலம் : 2½ மணி

பாடங்கள் :

செய்யுள், நடைமுறை இலக்கணம், உரைநடை.

மதிப்பெண்களின் பகுப்பு (ஏறத்தாழ) :

செய்யுள்	28
நடைமுறை இலக்கணம்	12
உரைநடை	20
	60

இரண்டாந் தாள் :

மதிப்பெண்கள் : 40

காலம் : 2 மணி

பாடங்கள் :

துணைப்பாடக் கட்டுரைகள் இரண்டு, மொழிபெயர்ப்பு.

மதிப்பெண்களின் பகுப்பு :

இரு பிரிவுகளுள் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒவ்வொரு கட்டுரை	15×2=30
மொழிபெயர்ப்பு	10
	40

மனப்பாடஞ் செய்யவேண்டிய செய்யுட்கள்

குறிப்பு: மாணவர்கள் மனப்பாடம் செய்யவேண்டிய செய்யுட்கள் கீழே தொகுத்துத் தரப்பெற்றுள்ளன. மனப்பாடப் பகுதிக்கென்று தேர்வில் 6 மதிப்பெண்கள் ஒதுக்கப்பெற்றுள்ளன. எனவே, எல்லாச் செய்யுட்களை யும் மாணவர்கள் மனப்பாடஞ் செய்தல் இன்றியமையாததாகும்.

மனப்பாடஞ் செய்யும் முறை: ஒரு பாடலைப் பத்து அல்லது பதினைந்து முறைகள் சொல்லிப் பார்ப்பதும், ஒரே அடியைப் பல முறைகள் சொல்லிப் பார்ப்பதும் மாணவர்கள் பெரும்பாலும் மனப்பாடம் செய்யப் பின்பற்றும் முறையாகும். அதனினும் சிறந்த முறை உள்ளது. நாள் தோறும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மனப்பாடப் பகுதி முழுவதையும் ஒவ்வொரு முறை படித்துப் பார்த்தல் வேண்டும். ஒரு முறை முழுவதையும் படிப்பதற்கு ஏறத்தாழப் பத்து நிமிடங்கள் ஆகலாம். தொடக்கத்தில் ஒரு மாதத்திற்கு எந்தப் பாடலும் மனப்பாடம் ஆகவில்லைபோல் தோன்றும். அதுபற்றி அலுப்பும் சலிப்பும் கொள்ளவேண்டா. நாள்தோறும் தொடர்ச்சியாக ஒவ்வொரு முறை படித்துப் பார்த்து வந்தால், மூன்று மாதங்கட்குள்ளாக எல்லாச் செய்யுட்களும் மனப்பாடம் ஆகிவிடும். இஃது ஓர் உளநூல் முறையாகும்.

பின்பற்ற வேண்டிய விதிகள்

1. ஏதேனும் ஓர் இசையில் அமைத்துப் படித்தல்.
2. சொற்களைப் பிரித்துப் படியாமல் சீர்களுக்கு ஏற்றவாறு பிரித்தல்.
3. ஓர் அடியுடன் மற்றோர் அடியைச் சேர்த்துப் படியாமல் இருத்தல்.
4. இயன்ற வரையில் பொருளினை மனத்திற் கொண்டு படித்தல். (இது தொடக்கத்தில் இயலாது. ஆண்டின் இறுதிப் பகுதியிலேயே இயல்வதாகும்.)
5. பிழையின்றி உச்சரித்தல்.
6. படிக்குங்கால் எதுகையிலும், மோனையிலும் நினைவினைப் பதித்தல்.
7. ஆண்டின் இறுதியில் இயன்றால் சிலமுறைகள் எழுதிப் பார்த்தல்.
8. நிறுத்தக்குறிகளை உளத்தில் அமைத்து, எழுதுங்கால் பின்பற்றுதல்.

வரிகள்

மனப்பாடச் செய்யுட்கள்

தாயுமானவர் பாடல் 8

காயாத மரமீது கல்லேறு செல்லுமோ
கடவுள்நீ யாங்கள்அடியேம்
கர்மபந் தத்தினாற் சன்மபந் தம்பெறக்
கற்பித்த துன்னதருளே

வாயார வுண்டபேர் வாழ்த்துவதும் நொந்தபேர்
வைவதும் எங்களுலக
வாய்பாடு நிற்கநின் வைதிக ஒழுங்குநினை
வாழ்த்திறும் பெறுபேறுதான்
ஓயாது பெறுவரென முறையிட்ட தாற்பின்னர்
உளறுவது கருமமன்றும்
உபயநெறி ஈதென்னின் உசிதநெறி எந்தநெறி
உலகிலே பிழைபொறுக்கும்
தரயான கருணையும் உனக்குண் டெனக்கினிச்
சஞ்சலங் கெடவருள்செய்வாய்
சர்வபரி பூரண அகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே.

திருக்குறள் 40

புகழ்

1. ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல
தூதியம் இல்லை உயிர்க்கு.
2. உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கொன்
றீவார்மேல் நிற்கும் புகழ்.
3. ஒன்றா உலகத் துயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன் றில்.
4. நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு.
5. நத்தம்போற் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது.
6. தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.
7. புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
இகழ்வாரை நோவ தெவன்.
8. வசையென்ப வையத்தார்க் கெல்லாம் இசையென்னும்
எச்சம் பெறாஅ விடின்.
9. வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம்.
10. வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர்.

நாடு

1. தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு.
2. பெரும்பொருளால் பெட்டக்க தாகி அருங்கேட்டால்
ஆற்ற விளைவது நாடு.
3. ...றைவருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்
...நேர்வது நாடு.

4. உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு.
5. பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு.
6. கேடறியாக் கெட்ட இடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டின் தலை.
7. இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற் குறுப்பு.
8. பிணிஇன்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணிஎன்ப நாட்டிற்கிவ் வைந்து.
9. நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரும் நாடு.
10. ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு.

சிலப்பதிகாரம் (வரி 25 முதல் 38 வரை) 14

தேரா மன்னா செப்புவ துடையேன்
எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்
வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி யுகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்
அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகாரென் பதியே அவ்வூர்
ஏசாச் சிறப்பின் இசைவிளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனை யாகி
வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்
சூழ்கழன் மன்னா நின்னகர்ப் புகுந்தீங்
கென்காற் சிலம்புபகர்தல் வேண்டி நின்பாற்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி
கண்ணகி என்பதென் பெயரேஎன.

கம்ப ராமாயணம் (10, 11, 20) 12

கங்கையிரு கரையுடையான் கணக்கிறந்த நாவாயான்
உங்கள்குலத் தனிநாதற் குயிர்த்துணைவன் உயர்தோளான்
வெங்கரியின் ஏறனையான் விற்பிடித்த வேலையினன்
கொங்கலரும் நறுந்தண்டார்க் குகனென்னும் குறியுடையான்.

கற்காணும் திண்மையான் கரைகாணக் காதலான்
அற்காணிற் கண்டனைய அழகமைந்த மேனியான்
மற்காணும் திருநெடுந்தோள் மழைகாணும் மணிநிறத்தாய்
நிற்காணும் உள்ளத்தால் நெறியெதிர்நின் றனனென்றான்.

தாயுரை கொண்டு தாதை உதவிய தரணி தன்னைத்
தீவினை யென்ன நீத்துச் சிந்தனை முகத்திற் றேக்கிப்
போயினை யென்ற போழ்து புகழினோய் தன்மை கண்டால்

திருத்தொண்டர் புராணம் (15, 24, 26) 12

பெருகு வானம் பிறங்க மழைபொழிந்
தருகு நாப்பண் அறிவருங் கங்குல்தான்
கருகு மையிரு ளின்கணம் கட்டுவிட்
டுருகு கின்றது போன்ற துலகெலாம்.

அழுந்திய இடருள் நீங்கி அடியனேன் உய்ய என்பால்
எழுந்தருள் பெரியோய் ஈண்ட அமுதுசெய் தருள்க என்று
தொழும்பனார் உரைத்த போதிற் சோதியா யெழுந்து தோன்றச்
செழுந்திரு மனைவி யாரும் தொண்டரும் திகைத்து நின்றார்.

அன்பனே அன்பர் பூசை அளித்தநீ அணங்கி னோடும்
என்பெரும் உலகம் எய்தி இருநிதிக் கிழவன் தானே
முன்பெரு நிதிய மேந்தி மொழிவழி ஏவல் கேட்ப
இன்பமார்ந் திருக்க என்றே அருள்செய்தான் எவர்க்கு மிக்கான்.

புறநானூறு 6

நாடன் என்கோ ஊரன் என்கோ
பாடிமிழ் பனிக்கடற் சேர்ப்பன் என்கோ
யாங்கன மொழிகோ ஓங்குவாள் கோதையைப்
புனவர் தட்டை புடைப்பின் அயல
திறங்குகதி ரலமரு கழனியும்
பிறங்குநீர்ச் சேர்ப்பினும் புள்ளொருங் கெழுமே.

கலிங்கத்துப் பரணி 8

விருந்தினரும் வறியவரும் நெருங்கி யுண்ண
மேன்மேலும் முகமலரும் மேலோர் போலப்
பருந்தினமும் கழுகினமும் தாமே யுண்ணப்
பதுமமுகம் மலர்ந்தாரைப் பார்மின் ! பார்மின் !!
சாய்ந்துவிழுங் கடகளிற்றி னுடனே சாய்ந்து
தடங்குருதி மிசைப்படியும் கொடிகள் தங்கள்
காந்தருடன் கனலமளி யதன்மேல் வைகும்
கற்புடைமா தரையொத்தல் காண்மின் ! காண்மின் !!

அழகின் சிரிப்பு (2-ம் செய்யுள்) 4

“கூட்டமாய்ப்..

....

....

....போலே.”

(இச்செய்யுளை நீங்களே பார்த்து எழுதிக்கொள்க.)

ஆக வரிகள் — 104



நாட்டு வணக்கப் பாடல்

*பாடலின் முழுப் பகுதி

[நேரம் : 52 நொடி]

ஜன கண மன அதிநாயக ஜெயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராடா
திராவிட உத்கல வங்கா
விந்த்ய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவசுப நாமே ஜாஹே
தவசுப ஆஸிஷ மாஹே
காஹே தவஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே.

— மகாகவி இரவீந்திரநாத தாகூர்.

*பாடலின் குறுகிய பகுதி

[நேரம்: 20 நொடி]

ஜன கண மன அதிநாயக ஜெயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே.

* The "Indian Express" dated 2nd May, 1955.

இப்பாடலின் இன்றியமையாமை

"பாருக்குள்ளே நல்ல நாடு — எங்கள் பாரத நாடு" என்று பாரதியார் பாரத நாட்டைப் பாராட்டிப் பாடியுள்ளார். பாரத நாடு பழம்பெரு நாடு. பாரத நாடே நம் தாய்நாடு. நந்நாடு பொன்னாடு. தீரத்திலும், வீரத்திலும், ஈரத்திலும் சிறந்த மக்களை ஈன்றாள் நம் பாரதத் தாய். அவளைப் பணிந்து போற்றுதல் நம் தலைக்கடமை. பாடலின் வாயிலாகப் பணிதல் தக்கது.

நாம் யாவரும் பாரதத் தாயின் மக்கள். ஒரு தாயின் வயிற்றில் பிறந்த மக்களுள் உயர்வு தாழ்வு இராதன்றோ? நாம் எல்லோரும் ஓர் குலம்; ஓர் இனம். ஆகவே, நமக்குள் உடன் பிறப்புணர்ச்சி வேண்டும். அவ்வுணர்ச்சி நம் இதயத்தில் என்றும் நின்று நிலவ வேண்டும். அவ்வாறு நிலவுதற்கு நாட்டு வணக்கப் பாடல் நற்றுணை செய்யும். இப்பாடலைப் பாடி அருளியவர் நம் பாரத நாட்டுப் புலவர் பெருந்தகையாராகிய இரவீந்திர நாத தாகூர் அவர்கள் ஆவார்.

எப்பொழுது, எவ்விதம் பாடுதல் வேண்டும்?

நாட்டு வணக்கப் பாடலின் முழுப் பகுதியையும், குறுகிய பகுதியையும் பாடலாம் என்று அரசியலார் விதித்துள்ளனர். குறுகிய பகுதிக்கேற்ற பாடத்தையும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். குறிப்பிட்ட சில நிகழ்ச்சிகளின் பொழுதுதான் நாட்டு வணக்கப் பாடலைப் பாடல் வேண்டும் என்று அரசியலார் முன்பு கட்டுப்பாடு அமைத்திருந்தனர். அக்கட்டுப்பாட்டினை அரசியலார் அண்மையில் *(30—4—1955) நெகிழ்த்தி விட்டனர். அதன்படி இனி,

1. ஜனாதிபதி, கவர்னர், அமைச்சர் போன்ற அரசாங்கத் தலைவர்கள் கலந்து கொள்ளும் விழாக்களில் அதைப் பாடுதல் பெரிதும் விரும்பத்தக்கது. அவ்வாறு பாடுமாறு தூண்டுதலும் வேண்டும்.

*** From The "Indian Express" dated 2nd May, 1955 :—**

The Government of India have laid down that these versions should be played only on the following occasions :

FULL VERSION: (i) on all occasions when the President is present in person (including broadcasts by the President on National Days); (ii) on all occasions for Governors and Rajpramukhs when they attend ceremonial parades within their State ; and (iii) at Republic and Independence Day Parades when the National Flag is broken. SHORT VERSION: On all other occasions; (these will mostly be milltary functions.)

In contra-distinction to the occasions on which the two versions should be played as noted above, the Government of India have further decided that the National Anthem could be sung (with or without the accompaniment of the instruments) on occasions which although not ceremonial are nevertheless invested with significance, because of the presence of Governors; Rajpramukhs or Ministers. Government consider that this practice is not only desirable but should actually be encouraged. There would also be no objection to the singing (as distinct from playing of the standard version of the National Anthem by educational institutions during

2. கல்வி நிலையங்களில் நடைபெறும் ஆண்டுவிழா போன்ற நிகழ்ச்சிக் காலங்களில் அதனைப் பாடலாம்.

3. பாடலை அரசியலார் அறுதியிட்டுள்ளவாறே பாட வேண்டும். எழுத்தும் அசையும், சீரும் தளையும் பிறழாமல் அப்பாடலை உள்ளவாறே பாடவேண்டும்.

4. பள்ளி விழாக்களில் பாடலின் முழுப்பகுதியைப் பாடுதல் தக்கது.

5. விழாக்களின் முடிவில்தான் அப்பாடலைப் பாட வேண்டும்.

6. பள்ளி விழாக்களில் வாய்ப்பாட்டாகத்தான் அதனைப் பாடவேண்டும்.

7. இன்னிசைக் கருவிகளுடன் இயைந்தும் அதனைப் பாடலாம்.

8. இன்னிசைக் கருவிகள் இல்லையெனினும் இழுக்கில்லை.

இப்பாடலின் விளக்கம்

மக்களின் மனத்தகத்தே தங்கிடும் தலைவ! பாரதப் பெரு வள்ளலே! நீ வெல்க! பாஞ்சாலம், சிந்து, குஜராதா, மராடா, திராவிடம், உத்கலம், வங்கம் ஆகிய நாடுகளும், விந்தியம், இமயம் முதலிய மலைகளும், யமுனை, கங்கை முதலிய ஆறுகளும், கடலும் நின் புகழைக் கூறி மகிழும். என்றும் வெற்றி நினக்கு மிகும். மக்கட் கூட்டம் மகிழ்ந்துறையும் தாயகம் வெல்க! வெல்க நீ! வெல்க! வெல்க! நினக்கே வெற்றி வெற்றி! வெற்றி வெற்றி !!

பாடுங்கால் நம் கடமை

நாட்டு வாழ்த்துப் பாடலைப் பாடவேண்டிய முறைபற்றியும், பாடுங்கால் ஆண்டுக் குழுமியுள்ள மக்களின் ஒழுகலாறு பற்றியும் உயர்திரு. ஜவஹர்லால் நேரு அவர்கள் பலவிடங்களில் பன்முறை கூறியுள்ளார்.

*25—9—1952 அன்று, செகந்திராபாத் என்னும் இடத்தில் அவர், "நாட்டு வணக்கப் பாடலுக்கு நாம் பெருமதிப்பினைத் தருதல் வேண்டும். பாடலைப் பாடுங்கால் நாம் யாவரும் போர் வீரர்களைப் போல நிற்க வேண்டும்; அசைதல் கூடாது; சட்டைப் பைகளில் கையைத் திணித்துக்கொள்ளுதல் கூடாது" என்று கூறியுள்ளார்.

† 22—2—1955 அன்று, ஹஸாரிபாக் என்னும் இடத்தில் அவர், "நாட்டு வணக்கப் பாடல் பாடப் பெறுங்கால் எழுந்து

* "தினமணி", 26-9-1952.

† The "Indian Express" dated 22nd February, 1955.

நின்று வணக்கம் காட்டுதல் நம் தலைக்கடமையாம். அது முடியும் வரையில் யாவரும் நிமிர்ந்து நிற்றல் வேண்டும்; நகர்தல் கூடாது; நம் நாட்டுப் போர்வீரர்களைப்போல் நிற்க வேண்டும். தலையைச் சொறிதலோ ஒருவருடன் ஒருவர் பேசுதலோ கூடாது. பாரத நாட்டின் குரலே அப்பாடல். அப்பாடலின் கருத்தைப் பின்பற்றி நடப்பேன் என்று ஒவ்வொருவரும் உறுதி கூறிக் கொள்ளுதல் வேண்டும்" என்று கூறியுள்ளார்.

* 9—5—1955 அன்று பெர்ஹம்பூரில் அவர், "தேசிய கீதம் இந்தியாவின் குரல். அந்தப் பாடலைப் பாடும்பொழுது கவனியாமல் இருப்பது நம் நாட்டை அவமதிப்பதாகும்" என்று கூறியுள்ளார். மேலும் அவர், "நாட்டு வணக்கப் பாடலைப் பெருங் குரலில், வானமே அதிரும்படி பாடவேண்டும். யாவரும சேர்ந்து பாடவேண்டும். அப்பொழுது குழுவிசை அமைய வேண்டும். அதனைப் பாடுங்கால் அசைவதோ, கண்ணையும் கருத்தையும் வேறு புறத்தில் செலுத்துவதோ கூடாது. பாடத் தெரியாதவர்களும் பாடப் பழகிக் கொண்டு கூட்டத்துடன் சேர்ந்து பாடுதல் வேண்டும்" என்று அப்பொழுது கூறியுள்ளார்.

செந்தமிழ் நாட்டுச் செல்வச் சிறுவர்களே! நமது நாட்டின் முதலமைச்சர் ஏன் அவ்வாறு அடிக்கடி வற்புறுத்திக் கூறியுள்ளார் என்று சிந்தித்துப் பாருங்கள். நம் நாட்டில் மொழிகள் பல உள்ளன; பலவகைப்பட்ட இனத்தவர் உள்ளனர்; சமயங்கள் பல உள்ளன. இனம் பற்றியும், சமயம் பற்றியும், மொழி பற்றியும் நமக்குள் ஏற்படக் கூடிய பிணக்குகளையும் பூசல்களையும் அகற்றி, நாம் யாவரும் உடன் பிறந்தவர்கள் என்னும் உணர்ச்சியை ஊட்டுவதற்கு அப்பாடல் பெருந்துணை செய்யும். பாடலைப் பாடுங்கால் எழும் குழுவிசை (Chorus) நாம் யாவரும் ஒன்று என்றும், நமக்குள் உயர்வு தாழ்வு இல்லை என்றும் நமக்கு எடுத்துக்காட்டும். நாட்டு வணக்கப் பாடலாகிய தேசியப் பாடலை ஆங்கிலத்தில் 'National Anthem' என்பர். அவ்வாங்கிலச் சொற்றொடர், 'அரசியலார் இசைவு பெற்று அமைந்த தேசியப் பாடல்' என்று பொருள்படும். 'Anthem' என்னும் ஆங்கிலச் சொல், 'தூய்மை வாய்ந்த குறுகிய குழுவிசைப் பாட்டு' என்று பொருள்படும். எனவே, நீங்கள் நாட்டு முதல் அமைச்சர் கூறியுள்ள நல்லுரைகளின்படி நடத்தல் வேண்டும். நாடு தழைக்க, நாட்டில் செல்வங் கொழிக்க, நாட்டுப்பற்று என்றும் நிலவ, மக்கள் இன்பமுடன் வாழ அத்தகைய உணர்ச்சி இன்றியமையாதது.

---

* "The Hindu" dated 10th May. 1955.

செய்யுட் பகுதி

I. வாழ்த்து

1. கடவுள் வாழ்த்து

எடுத்துக்கொண்ட வினை இடையூறு இன்றி இனிது முடிதற் பொருட்டுக் கடவுளை வாழ்த்தி வணங்குவது தமிழர் மரபு. அதுபற்றியே, நூல்களின் தொடக்கத்தில் கடவுள் வாழ்த்துக்கள் காணப்படுகின்றன.

தாயுமானவர் பாடல்

இவர் பாடல்களின் இயல்பு: இவருடைய பாடல்கள் எளிமையும் ஏற்றமும், செறிவும் தெளிவும், பொது நோக்கும் அமைந்தவை.

தாயுமானவரைப் பற்றிய செய்திகள்

தந்தை: கேடிலியப்ப பிள்ளை.
ஊர்: வேதாரணியம் என வழங்கப்படும் திருமறைக்காடு.
மனைவியார்: மட்டுவார் குழலி (சில்லாண்டுகளில் இறந்தார்.)
சமயம்: சைவம் எனினும் பொது நோக்கு உடையவர்.
காலம்: 18-ஆம் நூற்றாண்டு; விசய ரகுநாத சொக்கலிங்க நாயக்கர் அவர்கள் காலம்.

பெயர்க் காரணம்: 'தாயுமானவர்' என்பது திரிசிரபுரம் எனப்படும் திருச்சிராப்பள்ளியில் கோயில் கொண்டருளிய சிவபிரானுக்கு ஒரு பெயர். வணிகன் ஒருவனது மனைவி கருவுயிர்க்கும் பொழுது தனது தாய் அருகில் இன்றித் துன்புற்ற காலையில், சிவபிரானார் தாயின் உருவங்கொண்டு அவளுக்கு உதவினார். அதுபற்றி, அக்கடவுளுக்குத் தாயும் ஆனவர் என்று பெயர் வந்தது. அக்கடவுளின் அருளால் பிறந்தவராதலால் இப்பாடலின் ஆசிரியர் தாயுமானவர் என்னும் பெயரைப் பெற்றார்.

தமது மனச்சஞ்சலம் கெட அருளுமாறு தாயுமானவர் ஈசனை வேண்டுதல்

சர்வ - எங்கும் நிறைந்த
பரிபூரண - முழு உருப்பெற்ற
அகண்ட - பிரிவு இல்லாத
தத்துவமான - உண்மைப் பொருளான
சச்சிதானந்த - சச்சிதானந்த (உண்மையும், அறிவும், இன்பமும் கலந்த) வடிவுள்ள
சிவமே - சிவபிரானே!
காயாத மரம் மீது - காய்ப்பு இல்லாத மரத்தின் மேல்
கல்லேறு செல்லுமோ - கல்லெறி படுதல் உண்டோ?
நீ கடவுள்——,
யாங்கள் அடியேம்——,
கர்ம பந்தத்தினால் - வினைப்பயனின் தொடர்பால்
சன்ம பந்தம் பெற - பிறவியாகிய கட்டினைப் பெறுமாறு
கற்பித்தது - ஆணையிட்டது
உன்னது அருளே - உனது அருளேயாகும்.
வாய் ஆர - வாய் நிரம்ப
உண்ட பேர் - உண்டவர்கள்
வாழ்த்துவதும்——,
நொந்தபேர் - (உணவின்றித்) துன்புற்றவர்
வைவதும்——,

எங்கள் உலக - எங்களுடைய இம் மண்ணுலகத்தில்
வாய்பாடு - வாய்பாடாகும். (வழக்கமாகும்)
நிற்க - அது நிற்க,
நினை வாழ்த்தினல் - உன்னை வாழ்த்தினல்
பெறு பேறு - பெறுகின்ற பேற்றினை
ஓயாது பெறுவர் - இடைவிடாமல் பெறுவர்
என - என்று
நின் வைதிக ஒழுங்கு - உனது வைதிக ஒழுங்கு
முறையிட்டது ——— , (அவ்வாறு இருக்கும் பொழுது)
பின்னர் - பிறகு
உளறுவது - பிழைபடக் கூறுவது
கருமம் அன்று - தக்கசெயல் அன்று.
உபயநெறி - இரண்டாவது வழி
ஈது என்னின் - இது (வைதிக ஒழுங்கு கூறும் நெறி) என்றல்
உசித நெறி - தக்க (முதல்) வழி
எந்த நெறி - எந்த வழி ?
உலகிலே - உலகத்தில்
பிழை பொறுக்கும் - மக்கள் செய்யும் பிழைகளைப் பொறுக்கின்ற
தாயான கருணையும் - தாய்க்கு உள்ள அருளும்
உனக்கு உண்டு ——— , (எனவே)
எனக்கு இனி - எனக்கு இனிமேல்
சஞ்சலம் ——— ,
கெட - நீங்குமாறு
அருள் செய்வாய் - அருள் செய்வாயாக.

கருத்துரை : தாயுமானவர் தமது மனச்சஞ்சலத்தை அகற்றியருளுமாறு கடவுளை வேண்டுகின்றார். கடவுளுக்கும் மக்களுக்கும் உள்ள வேறுபாட்டையும், கடவுளை வாழ்த்தினல் பேறுபெறலாம் என்பதையும், தாய் போன்ற அருளுடையவர் கடவுள் என்பதையும் தாயுமானவர் இப்பாடலின் கண் கூறியுள்ளார்.

விளக்கவுரை : கர்மம் - வினை. சன்மம்-பிறவி. பந்தம் - கட்டு, மாயை. ஆர - நிரம்ப. நொந்த - துன்புற்ற. வைதிகம் - வேதத்துடன் தொடர்புடையது. உபயம் - இரண்டாவது. உசிதம் - தக்கது. சஞ்சலம் - மனப்போராட்டம். சர்வம் - எல்லா இடத்திலும். பரிபூரணம் - முழுவதும் நிறைந்தது. அகண்டம் - பிரிவு இல்லாதது. தத்துவம் - உண்மைப் பொருள். **காயாத மரமீது கல்லேறு செல்லுமோ ?** : "காய்த்த மரத்தில் கல்லடிபடும்" என்பது பழமொழி. காய்கள் நிறைந்துள்ள மரத்தில் கற்கள் எறியப்பெறுதல் இயல்பன்றே ? காயாத மரத்தின்மீது கல்லினை எறிபவர் எவரும் இலர். காயாத மரத்தின்மீது கல்லெறிபடுதல் இல்லைபோல அருளில்லாதவர்களிடத்தில் எவரும் செல்லமாட்டார்கள். கடவுளோ அருட்கடல். அவர் காய்கள் நிறைந்த மரம் போன்றவர். 'காய்கள் நிறைந்த மரத்தில் கல்லெறிபடுதல் போல, அருள் மிக்க கடவுளையே யாவரும் அணுகி, அவருக்குத் தொல்லை கொடுத்துப் பலவற்றை வேண்டுவர்' என்னும் கருத்தினை இவ்வடி வெளிப்படுத்துகின்றது. **கர்மபந்தத்தினல் சன்மபந்தம் பெறக் கற்பித்த துன்னதருளே** : 'கர்மபந்தம்' என்பது வினைப்பயனின் தொடர்பைக் குறிக்கும். 'சன்மபந்தம்' என்பது பிறவியாகிய கட்டினைக்' குறிக்கும். பிறவியிலிருந்து விடுபடுதல் அரிதாதலால் அது 'கட்டு' எனப்பட்டது. பழம் பிறப்பில் செய்த நல்வினை தீவினைகளின் பயனை நுகரும் பொருட்டே பிறவி உண்டாகின்றது. எனவே, வினைப்பயனின் தொடர்பே பிறவியாகும். இவ்வாறு பிறக்குமாறு விதித்தவர் கடவுளே என்பது ஈண்டுக் குறிப்பிடப்பட்டது.

சஞ்சலம் கெட அருள் செய்வாய் : சஞ்சலம் என்பது மனத்தில் நிகழும் போராட்டமாகும். ஒன்றினைச் செய்ய விரும்புங்கால் அது தக்கதா, தகாததா என்ற ஆராய்ச்சி மனத்தில் நிகழும். ஒன்றையும் துணிய மாட்

டாத தடுமாற்ற நிலையே சஞ்சலம் எனப்படும். அத்தகைய சஞ்சலம் கெட அருள் செய்யும்படி தாயுமானவர் கடவுளை வேண்டுகின்றார். சச்சிதானந்த சிவம்:' சிவபிரானது இயல்பு இத்தகையது என்று சொல்ல முடியாது. எனினும், தாயுமானவர் ஒருவாறு கடவுளின் இயல்பை ஈண்டுக் கூறுகின்றார். சத்து + சித்து + ஆனந்தம் = சச்சிதானந்தம். 'சத்து' என்பது உண்மை யாகும்; 'சித்து' என்பது அறிவாகும். 'ஆனந்தம்' என்பது இன்பமாகும். உண்மையும், அறிவும், இன்பமும் நிறைந்த உருவுடையவர் சிவபிரானார் என்பது கருத்து.

இலக்கணக் குறிப்பு: செல்லுமோ: ஓகாரவினா ஈண்டு எதிர் மறைப் பொருளில் வந்துள்ளது. 'பெயர்' என்பது 'பேர்' எனவந்தது மரூஉ. வாழ்த்து: தொழிற்பெயர். சிவமே: விளி.

2. தமிழ்மொழி வாழ்த்து

ஆசிரியரைப்பற்றிய செய்திகள்

பெயர்: தேசியக்கவி சுப்பிரமணிய பாரதியார்.

பிறப்பிடம்: எட்டையபுரம்.

தந்தை: சின்னசாமி ஐயர்.

தாய்: இலக்குமி அம்மாள்.

குலம்: அந்தணர்.

காலம்: 1882-ஆம் ஆண்டில் பிறந்தார். 1921-ஆம் ஆண்டு செப்டம்பர் 11-ம் நாள் இயற்கை எய்தினார்.

பாடல்களின் இயல்பு: பாரதியாருடைய பாடல்கள் எளிமையும், பொருளாழமும் வாய்ந்தவை; பண்டிதரும் பாமரரும் படித்துச் சுவைக்கத் தக்கவை; நாட்டுப்பற்றையும், மொழிப்பற்றையும் தூண்டத்தக்கவை; படிப் போரது உள்ளத்து உணர்ச்சியைத் தட்டி யெழுப்பும் தன்மை உடையவை.

இவர் பெருமை: இவர் தமிழ்ப்பற்றும், நாட்டுப்பற்றும் வாய்ந்தவர். மக்களிடையே, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய உணர்ச்சி களைப் பரவச் செய்தவர் இவரே. கேட்போர் மனத்தைப் பரவசப்படுத்தி, வீராவேசம் ஊட்டும் பாடல்களை இயற்றுவதில் இவர் இணையற்றவர்.

இயற்றிய நூல்கள்: செய்யுள்: பாரதநாடு, செந்தமிழ்நாடு, தமிழ்த் தாய், முருகன் பாட்டு, கண்ணன் பாட்டு, பாப்பாப் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம் முதலியன. **உரைநடை;** ஞானரதம், சந்திரிகையின் கதை, தராசு முதலியன.

நம் பாடப் பகுதி: 'தமிழ் நாடு' என்னும் தலைப்பில் உள்ள பாடல் ஒன்று ஈண்டுப் பாடமாக அமைந்துள்ளது.

தமிழ் மொழி - தமிழ் மொழியானது
வாழ்க நிரந்தரம் - (எப்பொழுதும்) நிலைபெற்று வாழ்க.
வாழ்க ——,
வாழிய வாழியவே ——.
வானம் அளந்தது அனைத்தும் - ஆகாயம் அடக்கிய எல்லாவற்றை யும்
அளந்திடும் - அளந்திட்டு (அடக்கிய)
வண்மொழி - வளப்பம் நிறைந்த மொழியாகிய தமிழ்
வாழியவே ——.
ஏழ் கடல் வைப்பினும் - (தமிழ்) ஏழு கடல்களில் உள்ள தீவுகளிலும்
தன்மணம் வீசி - தன் கருத்தைப் பரப்பி

இசைகொண்டு - புகழ்கொண்டு
வாழியவே ——,
எங்கள் தமிழ்மொழி ——,
எங்கள் தமிழ்மொழி ——,
என்றென்றும் வாழியவே - எக்காலத்திலும் நிலைநின்று வாழிய.
சூழ்கலி - எங்கும் பரவிய பஞ்சம்
நீங்க ——,
தமிழ் மொழி ஓங்க ——,
வையகம் - உலகம்
துலங்குக - விளங்குக.
தொல்லை - பழைய
வினைதரு - தீவினையால் வருகின்ற
தொல்லை அகன்று - தீமைகள் நீங்கி
சுடர்க தமிழ்நாடு - தமிழ்நாடு ஒளி பெறுக.
வாழ்க தமிழ்மொழி ——,
வாழ்க தமிழ்மொழி ——,
வாழ்க தமிழ்மொழியே ——.
வானம் அறிந்தது அனைத்தும் - தேவர் உலகம் அறிந்தவற்றையெல்லாம்
அறிந்து - உணர்ந்து
வளர்மொழி - வளர்கின்ற மொழியாகிய தமிழ்
வாழிய ——.

கருத்துரை : 'தமிழ் மொழி நிலைபெற்று வாழ்க. வளப்பம் நிறைந்த தமிழ்மொழி உலகெங்கும் பரவிப் புகழ் பெறுக. பஞ்சம் நீங்கப்பெற்று உலகம் விளங்குக. தீமைகள் நீங்கித் தமிழ்நாடு வாழ்க. தேவர் உலகம் அறிந்த செய்திகளையும் உணர்ந்து வளர்கின்ற தமிழ்மொழி வாழ்க' என்று பாரதியார் தமிழ்மொழியை ஈண்டு வாழ்த்துகின்றார்.

விளக்கவுரை : நிரந்தரம் - என்றும் நிலைபெற்று. வைப்பு - இடம், தீவு. இசை - புகழ். கலி - பஞ்சம். துலங்குக - விளங்குக. தொல்லை - பழைய, துன்பம். சுடர்க - ஒளி பெறுக. வானம் அறிந்ததனைத்தும் அறிந்த வளர்மொழி : தேவர் உலகம் அறிந்தவற்றையெல்லாம் உணர்ந்த மொழி தமிழ்மொழி. தமிழ் தெய்வத்தன்மை வாய்ந்ததாகக் கருதப்படுகின்றதாதலாலும், புலவர்கள் செந்தமிழ்ப்பாடல்களைப் பாடித் தமிழுக்கு ஆக்கம் தேடித் தந்தனர் ஆதலாலும், என்றும் வளர்ந்துகொண்டேயிருக்கும் மொழியாதலாலும் தமிழ்மொழி இவ்வாறு வாழ்த்தப்பெற்றது.

இலக்கணக் குறிப்பு : வாழ்க, வாழிய, துலங்குக, சுடர்க : வியங்கோள் வினைமுற்றுக்கள். வண்மொழி : பண்புத்தொகை. வளர்மொழி : வினைத்தொகை.

நல்லொழுக்கப் பயிற்சி

எடுத்துக்கொண்ட வினை இடையூறின்றி இனிது முடிதற்பொருட்டுக் கடவுளை வாழ்த்தி வணங்குவது தமிழர் மரபு. கடவுளை வாழ்த்தினால் அவரது அருள் கிடைக்கும் என்பர் பெரியோர். ஏன்? கடவுளினிடத்தில் மனம் நிலைபெற்றால், தீயன நினைத்தல், தீயன செய்தல், தீயன பேசுதல் என்பவை நம்மை விடுத்து அகன்றுவிடும். அப்பொழுது, எடுத்த வினையைத் தொடுத்து முடிக்கவேண்டும் என்னும் எண்ணம் நமக்கு உண்டாகும். அந்நினைவினால் நாம் வினையை முடிக்க ஒருமுகமாக முயல்வோம். அவ்வாறு முயன்றால் எடுத்துக்கொண்ட வினை இடையூறின்றி இனிது முடியும். ஆகவே, வினை செய்யத் தொடங்குங்கால் கடவுளை வாழ்த்தி நினைத்து, மனத்தை ஒருநிலைப்படுத்துதல் இன்றியமையாதது.

II. அறவுரை

மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையா அறவுரைகள் அமைந்த பாடல்ளை இப்பகுதி தன்னகத்தே கொண்டுள்ளது.

1. திருக்குறள்

பெயர்க் காரணம்: திரு + குறள் = திருக்குறள்: "இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்" என்னும் நன்னூற் சூத்திர விதிப்படி ஈண்டுக் ககரம் மிக்கது. 'திரு' என்பது மங்கல அடைமொழி. குறள்: குறள் வெண்பாக்களால் ஆகிய நூல். வெண்பா வகைகளுள் 'குறள் வெண்பா' என்பது ஒன்றாகும். அஃது இரண்டடிகள் கொண்டுவரும். குறுகிய அடிகளான் இயன்ற காரணத்தால் இவ்வகை வெண்பாவிற்குக் குறள் வெண்பா என்னும் பெயர் வந்தது. 'குறள்' என்னும் சொல் ஈண்டுக் குறள் வெண்பாக்களை உணர்த்தாமல், குறள் வெண்பாக்களான் இயன்ற நூலைக் குறித்தது. 'குறள்' என்னுஞ் சொல் கருவியாகு பெயராய் முதற்கண் குறள் வெண்பாக்களை யுணர்த்தி, பிறகு அவ்வெண்பாக்களான் இயன்ற நூலை உணர்த்துகின்றது. ஆகவே அச்சொல் இருமடியாகு பெயர் ஆகும். 'திருக்குறள்' என்பது அடை அடுத்த கருவியாகு பெயர்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று திருக்குறள்: பழந்தமிழர் ஒழுக்கங் கூறும் நூல்கள் பதினெட்டு என்று தொகுத்துள்ளனர். அத்தகைய பதினெட்டு நூல்களுள் ஒன்று திருக்குறள். பதினெண் கீழ்க் கணக்கு நூல்கள்: (1) நாலடியார், (2) நான்மணிக்கடிகை, (3) இனியவை நாற்பது, (4) இன்னா நாற்பது, (5) கார் நாற்பது, (6) களவழி நாற்பது, (7) ஐந்திணை ஐம்பது, (8) ஐந்திணை எழுபது, (9) திணைமொழி ஐம்பது, (10) திணைமாலை நூற்றைம்பது, (11) திருக்குறள், (12) திரிகடுகம், (13) ஆசாரக்கோவை, (14) பழமொழி, (15) சிறுபஞ்ச மூலம், (16) முதுமொழிக் காஞ்சி, (17) ஏலாதி, (18) கைந்நிலை என்பன பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் ஆவன.

நூலின் வேறு பெயர்கள்: முப்பால், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ் மறை, பொதுமறை, திருவள்ளுவப் பயன், தெய்வ நூல், உத்தர வேதம் என்பன திருக்குறளுக்கு அமைந்த வேறு பெயர்கள்.

நூலின் பிரிவு: இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் முப்பிரிவுகளை உடையது. மூன்று பால்களிலும் 133 அதிகாரங்கள் உள்ளன. ஒவ்வொரு அதிகாரத்திலும் பப்பத்துக் குறட்பாக்கள் அமைந்துள்ளன. இந்நூலின்கண் அமைந்துள்ள குறட்பாக்கள் 1330. மூவகைப் பால்களை (பிரிவுகளை) உடைய காரணத்தாலேயே இந்நூலுக்கு 'முப்பால்' என்னும் பெயர் அமைந்தது.

நூலின் பெருமை

(1) இந்நூல் ஏறத்தாழ ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளாக மக்களால் போற்றப்பட்டு வருகின்றது. சாதிசமயப் பிணக்குகட்கும், நிறம், மொழி, நாடு பற்றிய வேறுபாடுகட்கும் அப்பாற்பட்டு விளங்குவதாலேயே இந்நூல் அவ்வாறு போற்றப்பட்டு வருகின்றது.

(2) இந்நூல் உலகப் பொது நூலாகும். அதுபற்றியே இந்நூல் கிரீக், இலத்தீன், ஜெர்மன், ஆங்கிலம், பிரெஞ்சு முதலிய பல மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளது.

" ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்." — வள்ளுவர்.

(3) இந்நூலின் பெருமையை விளக்கவே 'திருவள்ளுவ மாலை' என்னும் நூல் எழுந்தது. சங்கப் புலவர்களால் பாடப்பெற்ற பாடல்களைக் கொண்டது அந்நூல்.

(4) திருக்குறட் கருத்துக்களை எடுத்தாளாத புலவர்கள் இலர் என்னலாம்.

(5) "தமிழுக்குக் கதியாவார் இருவர்" என்பர் ஆன்றோர். 'கதி' என்னுஞ் சொல்லின்கண் உள்ள 'க' என்னும் எழுத்தானது கம்பரையும், 'தி' என்னும் எழுத்தானது திருவள்ளுவரையும் குறிக்கும்.

(6) "ஆலும் வேலும் பல்லுக் குறுதி; நாலும் இரண்டுஞ் சொல்லுக் குறுதி" என்பது ஒரு பழமொழி. இதன்கண் 'நாலும்' என்பது நாலடியாரையும், 'இரண்டும்' என்பது திருக்குறளையும் குறிக்கும்.

(7) "யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர்போல் இளங்கோவைப் போல், பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை" என்றும், "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து, வான்புகழ் கொண்ட தமிழ் நாடு" என்றும் இந்நூலாசிரியராகிய வள்ளுவனாரைப் பாரதியார் பாராட்டியுள்ளார்.

நூலின் உரையாசிரியர்கள் : பரிமேலழகர், மணக்குடவர், பரிதியார், காளிங்கர் முதலிய பத்துப் பெரும் புலவர்கள் இந்நூலுக்கு உரையெழுதியுள்ளனர். கிடைத்த உரைப்பகுதிகளை யெல்லாம் அமைத்து, தருமபுர ஆதீனத்தார் '**திருக்குறள் - உரைவளம்**' என்னும் பெயருடன் மூன்று பால்களுக்கும் மூன்று நூல்களை வெளியிட்டுள்ளனர்.

நூலாசிரியரைப்பற்றிய செய்திகள்

பெயர் : திருவள்ளுவனார்.

தாய் : ஆதி என்பர்.

தந்தை : பகவன் என்பர்.

ஊர் : 'மயிலை' என்னும் மயிலாப்பூர் என்பர்.

காலம் : கடைச்சங்கத்தின் இறுதிக் காலம். அஃதாவது கி. பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டாகும்.

மனைவி : வாசுகியம்மையார் என்பர்.

'வள்ளுவர்' என்ற பெயர்க் காரணம் : 'வள்ளுவர்' என்பது குடிப்பெயர் என்பர் சிலர். தமிழ் நாட்டுப் பழங்குடிகளுள் வள்ளுவர் குடியும் ஒன்று. அக்குடியினரால் வளர்க்கப்பட்ட காரணத்தால் அப்பெயர் அவருக்கு அமைந்தது என்பர் வேறு சிலர். 'வள்ளுவர்' என்னுங் குடியினர், யானைமீது ஏறி அமர்ந்து, பறையறைந்து, அரசனது ஆணையை மக்களுக்குக் கூறும் தொழிலை மேற்கொண்டிருந்தனர். அரசர்க்கு அரசியல் நெறியின் வழி வகைகளைக் கூறுதல் வள்ளுவக் குடியினர்க்கு உரிய அலுவலாகும் என்பர் பின்னுஞ் சிலர்.

ஆசிரியரின் வேறு பெயர்கள் : முதற் பாவலர், பொய்யில் புலவர், செந்நாப்போதார், நாயனார், தேவர், மாதாநுபங்கி, தெய்வப் புலவர், பெருநாவலர், நான்முகனார் முதலியன வள்ளுவனாரைக் குறிக்கும் வேறு பெயர்கள் ஆவன.

ஆசிரியரைப்பற்றி வழங்கும் கதை : "வள்ளுவனார் ஆதியென்னும் புலைச்சிக்கும், பகவன் என்னும் அந்தணர்க்கும் பிறந்தார். அவர் பிறந்த

ஊர் மயிலாப்பூர். மகவைப் பெற்றவளவில் பெற்றோர் அவ்விடத்தை விடுத்து அகன்றனர். பின்னர், வள்ளுவர் குடியைச் சேர்ந்த ஒருவர் அக் குழந்தையை எடுத்து வளர்த்தார். அக்குழந்தை கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியது. அக்குழந்தையே வள்ளுவனார். அவர் பின்பு வாசுகி என்னும் பெண்ணை மணந்து, நெசவுத் தொழிலில் ஈடுபட்டு வாழ்ந்தார். வாசுகியம்மை யார், கணவனாரின் சொற்படியே நடக்கும் இயல்புடையவராக இருந்தார். வள்ளுவர் தாம் இயற்றிய திருக்குறளை மதுரைத் தமிழ்ச்சங்கத்தின்கண் அரங்கேற்றினார். திருக்குறளைப் பாராட்டிச் சங்கப் புலவர்கள் யாவரும் ஒவ்வொரு பாட்டுப் பாடினர். அப்பாடல்களின் தொகுதியே 'திருவள்ளுவ மாலை' ஆகும்" என்பன போன்ற செய்திகள் வள்ளுவனாரைப்பற்றிக் கூறப் படுகின்றன. இவற்றை உண்மையென்று கோடற்குரிய சான்றுகள் முற்றும் கிடைத்தில.

நம் பாடப் பகுதி: ஈண்டுப் பாடமாக வந்துள்ள அதிகாரங்கள் இரண்டு. அவை புகழ், நாடு என்பன. 'புகழ்' என்னும் அதிகாரம் அறத்துப்பாலில், இல்லறவியலின்கண் உள்ளது; திருக்குறளில் 24-ஆம் அதிகாரம். 'நாடு' என்னும் அதிகாரம் பொருட்பாலில், அங்கவியலின்கண் உள்ளது; திருக்குறளில் 74-ஆம் அதிகாரம்.

1. புகழ்

புகழ்: இவ்வதிகாரம் அறத்துப்பாலைச் சேர்ந்த இல்லறவியலின் இறுதி அதிகாரமாக அமைந்துள்ளது. இல்வாழ்க்கை முதல் ஈகை முடியக் கூறப்பெற்றுள்ள இல்லற ஒழுக்கங்களைக் கைக்கொண்டோர் இவ்வுலகில் எய்தும் பயன் புகழேயன்றோ? அவ்வாறு கைக்கொண்டு ஒழுகியவர் இறந்த பிறகும் இறவாது நிற்பது புகழேயன்றோ? இத்தகைய காரணங்கள் பற்றியே இவ்வதிகாரம் இல்லறவியலின் ஈற்றில் அமைக்கப்பட்டுள்ளது. புகழ் பெரும்பாலும் ஈதல்பற்றியே வரும். அதனால்தான் 'ஈதல்' என்னும் அதிகாரத்திற்குப்பின் இவ்வதிகாரம் வைக்கப்பட்டது. "புகழாவது புகழ் பட வாழ்தல்" என்று **மணக்குடவர்** குறிப்பு எழுதியுள்ளார்.

புகழது சிறப்பு (1—3)

1. ஈந்து புகழ் பெறுக

ஈதல் - வறியவர்க்கு ஈக;	**அது அல்லது** - அந்தப் புகழ் அல்லாமல்
இசை பட - (அதனால்) புகழ் உண்டாகுமாறு	**உயிர்க்கு** - மக்கள் உயிர்க்கு
வாழ்தல் - வாழ்க.	**ஊதியம்** - பயன்
	இல்லை - (வேறொன்று) இல்லையாதலால்,

கருத்துரை: வறியவர்க்கு ஈந்து புகழ் உண்டாக வாழ்தலே மக்கள் உயிர்க்குப் பயன் ஆகும்.

விளக்கவுரை: ஈதல் - ஈக, கொடுக்க. இச்சொல் பெரும்பாலும் உண்ணும் பண்டங்கள், உணவு முதலியவற்றையே குறிக்கும். இசை - புகழ். பட - உண்டாக. புகழ் உண்டாக வாழ்தலாவது கொடுத்தல். ஊதியம் - பயன்.

ஈதல் இசைபட வாழ்தல்: இசைபட வாழ்தற்குக் கல்வி, ஆண்மை முதலிய காரணங்களும் உள. எனினும், மக்களின் உடலில் உயிர் நிற்ப

தற்கு உணவு தேவையாதலால் இங்ஙனம் 'ஈதல்' சிறப்பித்துச் சொல்லப்பட்டது. மேலும் புறநானூற்றில்,

"உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்"

என்று கூறப்பட்டுள்ளது. 'உடம்பிற்கு உணவு கொடுத்தவர்கள் உயிரைக் கொடுத்தோர் ஆவர். உணவை முதலாக உடைத்து அவ்வுணவால் உளதாகிய உடம்பு' என்பது அவ்வடிகளின் பொருளாகும். எனவே, பிற வற்றினும் ஈதல் சிறந்தது என்பது வள்ளுவனாரின் கருத்தாகும். உயிர்க்கு : ஈண்டு 'உயிர்க்கு' என்று பொதுப்படக் கூறப்பட்டுள்ளதேனும், 'மக்கள் உயிர்க்கு' என்றே பொருள் கொள்ளவேண்டும். 'விலங்குயிர்கட்கு' என்று கொள்ளுதல் பொருந்தாது.

இலக்கணக் குறிப்பு : ஈதல், வாழ்தல் : ஈண்டு இவ்வ 'ஈக ; வாழ்க' என்று பொருள்படுதலால் உடன்பாட்டு வியங்கோள் வினைமுற்றுக்கள். 'தல்' என்பது இவற்றில் விகுதியாக வந்தது.

2. ஈவாரது புகழையே யாவரும் போற்றுவர்

உரைப்பார் - (உலகத்தில்) ஒன்று சொல்பவர்
உரைப்பவை எல்லாம் - சொல்கின்றன எல்லாம்
இரப்பார்க்கு - (வறுமையால்) யாசிப்பார்க்கு
ஒன்று - (அவர் விரும்பியது) ஒன்றை
ஈவார் மேல் - ஈபவர்களிடம்
நிற்கும் புகழ் - நிற்கும் புகழே யாகும்.

கருத்துரை : வறுமையால் யாசிப்பவர் விரும்பியது ஒன்றை ஈபவரது புகழைத்தான் கற்றோரும் மற்றோரும் பாராட்டுவர்.

விளக்கவுரை : உரைப்பார் - ஒன்றைச் சொல்பவர். ஒன்று - வேண்டியது ஒன்றை. புகழ் : உரை, பாட்டு என்று புகழ் இருவகைப்படும். உரை எல்லோர்க்கும் உரியது : பாட்டோ புலவர்க்கே உரியது. எல்லோர்க்கும் உரிய உரையையே (சொல்லையே) ஈண்டு வள்ளுவனார் குறிப்பிட்டாராயினும், புலவர்க்கே உரிய செய்யுளும் கொள்ளப்படுதல் வேண்டும். எனவே 'பாடுவார் பாடுவன எல்லாம் புகழே யாகும்' என்னும் கருத்தும் ஈண்டுப் பெறப்படும். ஈதற்குக் காரணத்தை வள்ளுவனார் இக்குறளிலும் கூறியுள்ளார்.

மற்றொரு பொருள் : இக்குறளுக்குச் சிலர், 'பிறர் மேலும் புகழ் நிற்கும் என்பார் எல்லாம் சொல்லுக. ஆயின், அஃது ஈவார் மேலேயே நிற்கும்' என்று பொருள் கூறுவர். அப்பொருள், புகழின் சிறப்பைக் குறிப்பிடாது. எனவே அப்பொருள் சரியன்று.

இலக்கணக் குறிப்பு : உரைப்பார் : ஈண்டுத் தெரிநிலை வினையாலணையும் பெயர். உரைப்பவை : ஈண்டு 'உரை' என்பது 'சொல்' என்னும் குணம் உணர்த்தும் உரிச்சொல். இரப்பார்க்கு : ஈண்டு நான்காம் வேற்றுமை கொடைப் பொருளில் வந்தது. மேல் : ஈண்டு ஏழாம் வேற்றுமை உருபு.

3. புகழே உலகில் நிலைத்து நிற்கும்

ஒன்று - இணையில்லையாக
உயர்ந்த - ஓங்கிய
புகழ் அல்லால் - புகழேயல்லாமல்
உலகத்து - இவ்வுலகில்
பொன்றாது - இறவாது
நிற்பது ஒன்று - நிற்கும் பிறிது ஒன்று
இல் - இல்லை.

கருத்துரை: உயர்ந்த புகழே இவ்வுலகில் நிலைத்து நிற்கும். மற்றவை நிலைத்து நில்லா.

விளக்கவுரை: ஒன்று - இணை இல்லையாக. பொன்றாது - இறவாமல் ஒன்று உயர்ந்த புகழ்: இணை இல்லையாக ஓங்கிய புகழ். கொடுப்பதற்கு அரிய உயிர், உறுப்பு, பொருள் முதலியவற்றைக் கொடுத்தோர்க்கே உயர்ந்த புகழ் வரும். அவ்வாறு கொடுத்தமை பற்றி வருதலால்தான், அப்புகழ் இணை இல்லையாக உயர்ந்தது. இத்தகைய உயர்ந்த புகழையே செய்ய வேண்டும் என்பது வள்ளுவனாரின் கருத்து. இனி, 'ஒன்று' என்பதற்கு 'ஒரு வார்த்தையாகச் சொல்லின்' என்றும், 'ஒருதலையாகப் பொன்றாது நிற்பது' என்றும் சிலர் பொருள் கூறுவர். 'ஒன்று' என்பதை 'உலகத்து' என்னும் சொல்லுடன் இயைப்பர் வேறு சிலர்.

புகழுடையார் எய்தும் மேன்மை (4—5)

4. புகழ் செய்தாரைத் தேவர் உலகு போற்றும்

நிலவரை - (ஒருவன்) நில எல்லையில்
நீள் புகழ் - அழியாது நிற்கும் புகழை
ஆற்றின் - செய்வானாயின், (அவனை யல்லாமல்)
புத்தேள் உலகு - தேவர் உலகம்
புலவரை - தன்னை அடைந்து நின்ற ஞானியரை
போற்றாது - பேணாது.

கருத்துரை: இவ்வுலகில் புகழ் பெற்றோரையே தேவர் உலகம் போற்றும்; தன்னை எய்திய ஞானியரைப் போற்றாது.

விளக்கவுரை: வரை - எல்லை. நீள் புகழ் - அழியாது நிலைத்து நிற்கும் புகழ். ஆற்றின் - செய்தால். புத்தேள் - தேவர். உலகு என்பது ஈண்டுத் தேவர் உலகத்தில் உள்ளோரைக் குறித்தது. புலவர் - ஞானியர். இச்சொல்லுக்கு மணக்குடவர் 'தேவர்' என்று பொருள் கொண்டுள்ளார். புலவரைப் போற்றாது: 'தேவர் உலகு தன்னை அடைந்த ஞானியரைப் போற்றாது. ஏன்? அவர்கள் புகழுடம்பால் இவ்வுலகப் பயனையும், தேவர் உடம்பால் அவ்வுலகப் பயனையும் எய்தவில்லையன்றோ?' என்பது பரிமேலழகர் கருத்து. ஆயின், 'தேவர் உலகு தன்னை எய்தி நின்ற கடவுளரைப் போற்றாது' என்னும் பொருளே சிறந்தது. ஞானியர் வீட்டுலகத்துக்கு உரியர் அல்லரோ? அத்தகையோரைத் தேவருலகு போற்றாது என்று கூறுதல் பொருந்தாது. எனவே, பரிமேலழகர் உரை பொருந்துமோ என்பது ஆராய்தற்குரியது.

'நிலவுலகில் அழியாது நிற்கும் புகழைச் செய்தவன் மண்ணுலகத்தாராலும், விண்ணுலகத்தாராலும் போற்றப்படுவான்' என்பது வள்ளுவனாரின் கருத்து. இக்கருத்து,

> "புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
> வலவன் ஏவா வான ஊர்தி
> எய்துப என்பதம் செய்வினை முடித்து"

என்னும் புறநானூற்று அடிகளால் வலியுறும். அவ்வடிகளுக்கு, 'புலவரால்

பாடப்படும் புகழை உடையோர், தாம் செய்யும் நல்வினையை முடித்து, வானத்தில், பாகனுல் செலுத்தப்படாத விமானத்தைப் பொருந்துவர் என்று அறிவுடையோர் கூறுவர்' என்பது பொருளாகும்.

இலக்கணக் குறிப்பு : நீள் புகழ் : 'நீள்' என்னும் சொல் நீண்ட, நீள்கின்ற, நீளும் என்று முக்காலமாக விரிதற்கு உரியதாதலால், இச்சொற்றொடர் வினைத்தொகை. உலகு : 'உலகு' என்னும் இடப் பெயர், உலகில் உள்ளோரைக் குறிக்குங்கால் இடவாகு பெயர்.

5. புகழுடம்பை நாட்டுதல் எளிதன்று

நத்தம் (ஆகும்) கேடும் - புகழ் உடம்பிற்குச் செல்வமாகும் வறுமையும்,
உளது ஆகும் - புகழ் உடம்பு உள்ளதாகும்
சாக்காடும் - இறப்பும்
வித்தகர்க்கு அல்லால் - வல்லவற்கு அல்லது
அரிது - இல்லை.

கருத்துரை : நிலையில்லாதவற்றைக் கொண்டு நிலைபெற்ற புகழுடம்பை நாட்டும் திறம் வித்தகரிடமே இருக்கும்.

விளக்கவுரை : நத்தம் - ஆக்கம், செல்வம். கேடு - வறுமை. சாக்காடு - இறப்பு. வித்தகர் - வல்லவர், சதுரப்பாடு உடையவர். அரிது-இல்லை. 'போல்' என்பதற்கு ஈண்டுப் பொருள் இல்லை. 'ஆகும்' என்பதனை 'நத்தம்' என்பதனுடனும் கூட்டவேண்டும். 'அரிது' என்பதனை இரண்டிற்கும் கூட்டி உரைக்கவேண்டும். **நத்தம் (ஆகும்) கேடு:** செல்வமாகும் கேடு. அஃதாவது ஒருவனுடைய புகழுடம்பு செல்வத்தை அடையப் பூதவுடம்பு வறுமையை அடைதல். மண், நீர், தீ, காற்று, வான் என்னும் ஐம்பெரும் பூதங்களால் ஆனது மனிதர் உடம்பு. அவ்வுடம்பு வறுமையை அடைதல் என்பது கருத்து. **உளதாகும் சாக்காடு:** புகழுடம்பு நிலை நிற்கப் பூதவுடம்பு இறத்தல். பூதவுடம்பு அழியும் தன்மையை உடையது. புகழுடம்போ அழியாதது. இக்காரணம் பற்றியே இவ்வாறு கூறப்பட்டது. **வித்தகர்க்கு அல்லால் அரிது :** 'வித்தகர்' என்னும் சொல் வல்லவர் அல்லது சதுரப்பாடு உடையவர் என்று பொருள்படும். புகழுடம்பு செல்வம் எய்தப் பூதவுடம்பு வறுமை அடையப் பெறுதலும், புகழுடம்பு நிலைநிற்கப் பூதவுடம்பு இறக்கப் பெறுதலும் வித்தகர்க்கே எளியன. ஏனையோர்க்கு அவை அரியன. ஏன்? நிலையாதவற்றைக் கொண்டு, நிலைபெறுவனவற்றை வித்தகர் அடைகின்றார் அன்றோ! இதுபற்றியே பிறர்க்கு அரிது எனப்பட்டது. 'புகழ்பட வாழ்தல் மக்கள் எல்லார்க்கும் அரிது' என்று மணக்குடவர் இக்குறட்பாவிற்குக் கருத்துரை எழுதியுள்ளார்.

இலக்கணக் குறிப்பு : நத்தம் : 'நந்து' என்னும் தொழிற் பெயர் 'நத்து' என்று வந்தது வலித்தல் விகாரம். இது செய்யுள் விகாரம் ஆகும். 'அம்' என்பது பகுதிப் பொருள் விகுதி. அஃதாவது விகுதிக்குத் தனிப் பொருள் இல்லை என்பது கருத்து. போல்: ஈண்டு இஃது உரையசை. இதனையே ஒப்பில்போலி என்றும் கூறுவர். ஒப்புமைப்படுத்த வரும் 'போல்' என்னும் உவம உருபு அன்று என்பது இதன் கருத்து. ஈண்டு வந்துள்ள 'போல்' என்பது அசைநிலை இடைச்சொல் என்று அறிக.

புகழ் இல்லாதாரது தாழ்வு (6—9)

6. புகழுக்கு ஏதுவாகிய குணத்துடன் பிறக்க

தோன்றின் - (மக்களாய்ப்) பிறந்தால்
புகழொடு - புகழுக்கு ஏதுவாகிய குணத்துடன்
தோன்றுக - பிறக்க;
அஃது இலார் - அக்குணம் இல்லாதார்
தோன்றலின் - மக்களாய்ப் பிறத்தலைக் காட்டிலும்
தோன்றாமை-விலங்காய்ப் பிறத்தல்
நன்று - நல்லது.

கருத்துரை: பிறந்தால் புகழுக்குக் காரணமாகிய குணத்துடன் பிறக்க வேண்டும். அக்குணம் இல்லாதவர் விலங்காகப் பிறந்திருத்தல் நன்று.

விளக்கவுரை: தோன்றின் - பிறந்தால். தோன்றலின் - பிறத்தலைக் காட்டிலும். அஃது இலார்: புகழுக்கு ஏதுவாகிய குணம் இல்லாதவர். அஃது என்னும் சுட்டு ஈண்டுப் புகழுக்குக் காரணமான குணத்தைக் குறித்தது. தோன்றாமை: மக்களாய்ப் பிறவாமை. மக்களாய்ப் பிறவாமை என்னும் இடத்தில் அருத்தாபத்தியால் விலங்காய்ப் பிறத்தல் என்பது பெறப்பட்டது. புகழுக்கு ஏதுவாகிய குணம் இல்லாதவர் விலங்காய்ப் பிறந்திருத்தல் நன்று. ஏன்? இகழ்வார் இலர் அன்றோ? மக்களாய்ப் பிறந்து, புகழ்க்குணம் இல்லையேல் யாவரும் இகழ்வர். அதனாலேயே இவ்வாறு கூறப்பட்டது.

இலக்கணக் குறிப்பு: புகழ்: காரிய ஆகுபெயர். புகழொடு: 'ஒடு' என்பது மூன்றாம் வேற்றுமை உருபு. தோன்றுக: வியங்கோள் வினை முற்று. தோன்றலின்: 'இன்' என்பது ஐந்தாம் வேற்றுமை உருபு. 'தோன்றாமை' என்னும் இடத்தில் 'விலங்காய்ப் பிறத்தல்' என்பது அருத்தாபத்தியால் பெறப்பட்டது.

7. புகழ்பட வாழமாட்டாதார் இகழப்படுவர்

புகழ்பட - தமக்குப் புகழ் உண்டாக
வாழாதார் - வாழமாட்டாதார்
தம்நோவார் - (அதுபற்றிப் பிறர் இகழ்ந்தபொழுது) தம்மையே நோவாமல்,
தம்மை இகழ்வார் - தம்மை இகழ்பவரை
நோவது - நோகின்றது
எவன் - என் கருதியோ?

கருத்துரை: புகழ்பட வாழமாட்டாதாரைப் பிறர் இகழ்வர். அவ்வாறு இகழ்பவரை நொந்து பயனில்லை.

விளக்கவுரை: பட - உண்டாக. தம் நோவார்: தம்மையே நோவாமல். புகழ் உண்டாக வாழ மாட்டாதாரைப் பிறர் இகழ்வர். அவ்வாறு இகழப்பட்டவர், அவ்விகழ்ச்சி தமது மாட்டாமையால் வந்தது என்று கருதித் தம்மையே நொந்து கொள்ள வேண்டும். ஏன்! ஒருவன் புகழ்பட வாழ்தலுக்கு வழியிருக்கும் பொழுது, அதனைப் பெருதது அவனது குற்றமே அன்றோ? இகழ்வாரை: எத்தகையவனும் ஏதேனும் ஒருவிதத்தில் புகழ்பட வாழமுடியும். அங்ஙனம் இருக்க, ஒருவன் புகழ்பட வாழாமல் இருப்பது அவனது குற்றமாகும். அக்குற்றம் பற்றி அவனைப் பிறர் இகழ்தல் திண்ணமாகும். அக்காரணத்தினாலேயே வள்ளுவனார் 'இகழ்வாரை' என்று ஐயமின்றிக் கூறினர்.

இலக்கணக் குறிப்பு: வாழாதார், இகழ்வாரை: ஈண்டு வினையாலணையும் பெயர்கள். நோவார்: ஈண்டு முற்றெச்சம். எவன்: அகவினா.

8. மக்கட்குப் புகழ் இன்மை பூமிக்கே பழியாகும்

இசை என்னும் - புகழ் என்னும்
எச்சம் - எஞ்சி நிற்பதை
பெருவிடின் - (பெற முடியும் பொழுது) அது பெருது ஒழிவாராயின்
வையத்தார்க்கு எல்லாம் - பூமியில் உள்ள எல்லோர்க்கும் (அதுவே)
வசை என்ப - பழி என்று கூறுவர் நல்லோர்.

கருத்துரை : மனிதன் இறந்த பிறகும் எஞ்சி நிற்பது புகழ். அப் புகழை எய்தவில்லையேல் அஃது எல்லோர்க்கும் பழி ஆகும்.

விளக்கவுரை : வசை - பழி. என்ப - என்று சொல்லுவர் நல்லோர்: வையத்தார் - பூமியில் உள்ளோர். இசை - புகழ். எச்சம் - எஞ்சி நிற்பது. செல்வம் என்றும் கொள்ளலாம். **எச்சம் :** எஞ்சி நிற்பது. மனிதன் இறந்த பிறகும் எஞ்சி நிற்பது புகழேயாதலால் அப்புகழ் எச்சம் எனப்பட்டது. மேலும், செய்தவன் இறந்த பிறகும், புகழ் இறவாமல் நிற்கும். 'எச்சம்' என்னும் சொல்லுக்குச் செல்வம் என்றும், புத்திரன் என்றும் வேறு சிலர் பொருள் கூறுவர். **வசை என்ப :** பழி என்பர் நல்லோர். புகழ் செய்யாதோர் இகழப்படுதற்கு வேறொரு குற்றம் வேண்டா என்பது கருத்து. புகழ் பெருமையே பெரும்பழியாகும் என்பது வள்ளுவரது நினைவு.

வேறு பொருள் : இசை என்னும் - இல்லறமாகிய மனைவியைச் சேர்ந்து புகழ் என்னும், எச்சம் - மகனை, பெருவிடின் - பெருவிட்டால் (அது), வையத்தார்க்கு எல்லாம் - எல்லா உலகத்தார்க்கும் சொல்லக்கிடந்த, வசை என்ப - பழி என்று சொல்லுவர் அறிந்தோர்.

இலக்கணக் குறிப்பு : பெருஅ: செய்யுளிசை நிறைக்க வந்த அளபெடை. என்ப: தெரிநிலைப் பலர்பால் படர்க்கை வினைமுற்று. 'எச்சம் பெருவிடின் வசை என்ப' என்னும் இடத்தில் தன்மை அணி உள்ளது. 'இசை என்னும் எச்சம்' என்னும் இடத்தில் உருவக அணி உள்ளது.

9. புகழ் இல்லையேல் நிலத்தின் விளைவும் குன்றும்

இசை இலா - புகழ் இல்லாத
யாக்கை - உடம்பை
பொறுத்த நிலம் - சுமந்த நிலத்தில்
வசை இலா - பழிப்பு இல்லாத
வண்பயன் - வளப்பத்தை உடைய விளையுள்
குன்றும் - குறைபடும்.

கருத்துரை : புகழ் இல்லாத உடம்பைச் சுமந்த நிலத்தில் நல்விளைவு குறைபடும்.

விளக்கவுரை : வசை - பழி. வண்பயன் - வளப்பத்தை உடைய விளைவு. குன்றும் - குறைபடும். இசை - புகழ். யாக்கை - உடம்பு. பொறுத்த - சுமந்த. **யாக்கை :** உயிர் இருந்தாலும், அவ்வுயிர் தங்கியுள்ள பொழுதே உடம்பால் பயன் கொள்ளாமையின் அவ்வுடம்பை 'யாக்கை' என்றார். **பொறுத்த :** பயனற்ற சுமையையே பொறை என்பர். புகழ் இல்லாத உடம்பு பூமிக்குச் சுமையாதலால் 'பொறுத்த' என்றார். **வண்பயன் குன்றும் :** வளப்பத்தை உடைய நல்விளைவு குறைபடும். ஏன்? புகழ் இல்லாத பாவ உடம்பை அந்நிலம் சுமக்கின்றதன்றோ? அத்தகைய வெறுப்பினாலேயே நல்விளைவு குறைபடும்.

இலக்கணக் குறிப்பு : இலா : ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

10. புகழ் இல்லாதார் பிணத்தோடு ஒப்பர்

வசை ஒழிய - தம்மிடத்தில் பழி உண்டாகாமல்
வாழ்வாரே - வாழ்பவரே
வாழ்வார் - உயிர் வாழ்வார் ஆவர்.
இசை ஒழிய - புகழ் உண்டாகாமல்
வாழ்வாரே - வாழ்பவரே
வாழாதவர் - இறந்தவர் ஆவர்.

கருத்துரை : பழியின்றி வாழ்வாரே உயிர் வாழ்வார்; புகழ் இன்றி வாழ்வாரே உயிர் வாழாதார்.

விளக்கவுரை : வசை - பழி. **வசை ஒழிய:** பழியின்றி வாழ்தலாவது புகழ் என்னும் எச்சம் பெறுதல் ஆகும். **இசை ஒழிய :** புகழ் இன்றி வாழ்தலாவது பழிபெறுதல் ஆகும். முற்குறளில் கூறிய 'இசையிலா யாக்கை' என்னும் தொடர் ஈண்டு விளக்கப்பட்டது. பழி ஒழிதலால் வரும் குணமும், புகழ் ஒழிதலால் வரும் குற்றமும் இக்குறட்பாவின்கண் கூறப்பட்டன.

இல்லறத்திற்கு இவ்வுலகில் கிடைக்கக்கூடிய பயன் புகழே என்பதும், மறுமைப்பயன் தேவருலகில் இன்பம் பெறுதல் என்பதும் இதுவரையில் கூறியவாற்றல் நன்கு விளங்கும்.

2. நாடு

இவ்வதிகாரம் பொருட்பாலின்கண் உள்ளது. அரசியல், அங்கவியல், ஒழிபியல் என்று பொருட்பால் மூவகைப் பிரிவினை உடையது. அவற்றுள் 'அரசியல்' என்னும் பகுதி அரசனுடைய இயல்புகளைக் கூறுகின்றது. அங்கவியல் என்னும் பகுதி அரசியல் நடத்துதற்குத் துணையான அங்கங்களின் இயல்புகளைக் கூறுகின்றது. ஒழிபியலோ ஏனை இரண்டு இயல்களிலும் அடங்காமல் ஒழிந்தனவற்றைக் கூறுகின்றது. ஈண்டுப் பாடமாக வந்துள்ள 'நாடு' என்னும் அதிகாரம் அங்கவியலின்கண் அமைந்துள்ளது. மணக்குடவர், பரிப்பெருமாள் என்னும் உரையாசிரியர்கள் இவ்வதிகாரத்தைப் பொருளியல் என்னும் இயலின்கண் அமைத்துள்ளனர்.

நாடு : அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என்னும் ஆறும் அரசனுக்கு உரிய அங்கங்கள் எனப்படும், அங்கவியலுள் முதற் பத்து அதிகாரங்களால் அமைச்சனுடைய இயல்புகள் கூறப்பட்டன. அதன்பின் நாட்டின் இயல்பு இவ்வதிகாரத்தால் சொல்லப்படுகின்றது. அரசனும், அமைச்சனும் நடத்தப்படுவது நாடு ஆகும். மேலும் அரண் முதலிய ஏனை அங்கங்களுக்கும் இன்றியமையாது வேண்டப்படுவது நாடே ஆகும். அது பற்றியே இவ்வதிகாரம் ஈண்டு வைக்கப்பட்டது. நல்லதொரு நாட்டின் இயல்பும், இலக்கணமும் இவ்வதிகாரத்தின்கண் கூறப்படுகின்றன.

நாட்டின் இலக்கணம் (1-6)

1. வறுமையும் அழிவும் அற்றது நாடு

தள்ளா - குறைபடாத
விளையுளும் - விளையுளைச் செய்வோரும்,
தக்காரும் - அறவோரும்,
தாழ்வு இலா - கேடு இல்லாத
செல்வரும் - செல்வம் உடையோரும்
சேர்வது - சேர்ந்து ஒன்றுய் வாழ்வதே
நாடு - நாடாகும்.

கருத்துரை : உழவர், அறவோர், கெடுதல் இல்லாத செல்வம் உடையோர் ஆகியவர்கள் ஒருங்கு வாழ்வதே நாடு. அஃதாவது வறுமையும் அழிவும் இன்றிப் பெருஞ் செல்வத்துடன் விளங்குவது நாடு என்பது கருத்து.

விளக்கவுரை : தள்ளா - குறைபடாத, குன்றாத. தக்கார் - தகுதியுடையார், அறவோர். **தள்ளா விளையுள் :** குன்றாத விளைவு. அஃதாவது மழையில்லாத காலத்திலும் சாவி போகாத தன்மை. அத்தகைய குன்றாத விளையுளைச்செய்யும் உழவர்களை இச்சொற்றொடர் குறித்தது. தக்கார், செல்வர் என்னும் உயர்திணைப் பொருள்களோடு இயையும் பொருட்டே, 'விளையுள்' என்பது விளையுளைச் செய்யும் உழவரை ஈண்டுக் குறித்தது. குன்றாமையாவது எல்லா உணவுகளும் நிறைய உளவாதல். இத்தகைய உழவர்கள் இருக்கும் நாட்டில் வாழ்வார்க்கு வறுமையிராது என்பது இதனால் பெறப்படும். **தக்கார் :** அறவோர், தகுதியுடையோர், துறந்தோர், அந்தணர் முதலியோர் அறவோர் எனப்படுவர். இத்தகையோர் வாழும் நாடு அழிவின்றி விளங்கும் என்பது இதனால் பெறப்பட்டது. **தாழ்விலாச் செல்வர் :** கேடு இல்லாத செல்வம் உடையோர். கேடின்மையாவது பிறர்க்குக் கொடுக்கக் கொடுக்கக் குறையாதிருக்கும் தன்மை. செல்வர் என்போர் கலத்தினும் காலினும் சென்று பெரும் பொருள் ஈட்டும் வணிகர். இச்சொற்றொடரால் அரசனுக்கும், நாட்டில் வாழ்வார்க்கும் பொருள் வாய்த்தல் பெறப்பட்டது.

இலக்கணக் குறிப்பு : தள்ளா, இலா : ஈண்டு இவை ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள். விளையுள் : 'விளையுள்' என்னும் தொழிற்பெயர் அதனையுடைய உழவரைக் குறித்தது. எனவே இச் சொல் ஈண்டுத் தொழிலாகு பெயர் ஆகும்.

2. பெருஞ்செல்வமும், பெருவிளைவும் உடையது நாடு

பெரும் பொருளால் - அளவு கடந்த பொருள் உடைமையால்
பெட்டக்கது ஆகி - (மற்றைத் தேசத்தவர்களாலும்) விரும்பத் தக்கதாய்,
அருங்கேட்டால் - கேடு இன்மையோடு கூடி,
ஆற்ற - மிகுதியாக
விளைவது - விளைவினை உடையதே
நாடு - நாடாகும்.

கருத்துரை : அளவு கடந்த பொருளைத் தன்னிடத்தே கொண்டு, அழிவு இன்றி, மிகுதியாக விளைவினைக் கொள்வதே நாடு.

விளக்கவுரை : பெரும் பொருள் - அளவு கடந்த பொருள். பெட்டக்கது - விரும்பத்தக்கது. அருங்கேடு - கேடு இன்மை. ஆற்ற - மிகுதியாக. **பெரும் பொருள் :** அளவு கடந்த பொருள். இச்சொற்றொடர் பலவகைப் பொருள்களையும், அவற்றின் மிகுதியையும் குறித்து நின்றது. **அருங் கேடு :** 'கேடு அரிய' என்று மாற்றிப் பொருள் கொள்ளவேண்டும். கேடாவது பெருமழை, மழையின்மை, எலி, விட்டில், கிளி, அரசண்மை என்பனவற்றால் வருவது. இவற்றை வடநூலார் **'ஈதிவாதை'** என்பர். அரசனுடைய அறத்தாலும், வீரத்தாலும் இத்தகைய கேடுகள் நீங்கும். கேட்டை விளைப்பனவற்றுள் பன்றி, மான், யானை, வேற்றரசு முதலியவற்றையும் சிலர் சேர்ப்பர். இவற்றை,

> **" மிக்கபெய லோடுபெயல் இன்மைஎலி விட்டில்கிளி**
> **அக்கண்அர சண்மையோ(டு) ஆறு."**

> **" விட்டில் கிளிநால்வாய் வேற்றரசு தன்னரசு**
> **நட்டம் பெரும்பெயல்கால் எட்டு."**

என்னும் பழம் பாடல்களாலும் உணரலாம். இத்தகைய கேடுகள் இன்மையால் மிக விளைவு உடைமை பெறப்பட்டது.

இலக்கணக் குறிப்பு: பெள்+தக்கது=பெட்டக்கது. 'பெள்' என்பது முதனிலைத் தொழிற் பெயர். அது 'செய' என்னும் வினையெச்சமாக ஈண்டு நின்றது.

3. பொறுப்புடன், இறையை விரும்பித் தருவது நாடு

பொறை - பிற நாடுகள் பொறுத்த பாரங்கள் எல்லாம்
ஒருங்கு - ஒன்றாக
மேல் வருங்கால் - தன்னிடத்தே வரும்பொழுது
தாங்கி - அவற்றைத் தாங்கி
இறைவற்கு - தன் அரசனுக்கு
இறை - இறைப் பொருள் (வரிகள்)
ஒருங்கு - முழுவதையும்
நேர்வது - உடம்பட்டுக் கொடுப்பதே
நாடு - நாடாகும்.

கருத்துரை: பிற நாடுகளிலிருந்து வந்தோரையும் காத்து, தன் அரசனுக்கு இறைப்பொருளை யெல்லாம் விரும்பிக் கொடுப்பது நாடு.

விளக்கவுரை: பொறை - பாரங்கள். இறைவன் - அரசன். இறை - இறைப்பொருள், வரி, கடமை. நேர்வது - உடம்பட்டுக் கொடுப்பது. **பொறை ஒருங்கு மேல் வருங்கால் தாங்கி:** பிற நாடுகள் பொறுத்த பாரம் எல்லாம் ஒருங்கே தன்னிடம் வருங்கால் அவற்றைத் தாங்கி. மக்கட் கூட்டமும், பசு, எருமை முதலிய விலங்குக் கூட்டமும் ஈண்டுப் பாரம் எனப்பட்டன. பஞ்சத்தாலும், அரசனது கொடுங்கோன்மையாலும், பகையரசரின் படையெடுப்பாலும் பிற நாட்டினர் ஒருங்கு வந்து வேறொரு நாட்டில் தங்குவர். அவ்வாறே பிற நாட்டுப் பொருள்களும் வேறொரு நாட்டில் வந்து தங்கக் கூடும். இவ்விதம் வந்த மக்களையும் பொருள்களையும் தாங்கி, இன்பம் தர வல்லதே நாடாகும் என்பது கருத்து. குடிகளுடைய தேவைகளை யெல்லாம் நிறைக்கும் பொறுப்பு வந்தாலும் தாங்கும் திறமை நாட்டிற்கு வேண்டும். **இறை ஒருங்கு நேர்வது:** பிற நாடுகளிலிருந்து மக்களும், பொருள்களும் வரினும், அரசனுக்குச் செலுத்த வேண்டிய இறையைக் குறைப்படுத்தாது கொடுப்பது நாட்டின் இலக்கணம். அவற்றை விருப்பத்துடன் கொடுக்க வேண்டும் என்பது கருத்து.

4. பசியும் பிணியும் பகையும் இல்லாதது நாடு

உறு பசியும் - மிக்க பசியும்
ஓவா - நீங்காத
பிணியும் - நோயும்
செறு - (வெளியிலிருந்து வந்து) அழிவு செய்யும்
பகையும் ———,
சேராது - இல்லாமல்
இயல்வது - இனிது நடப்பதே
நாடு - நாடாகும்.

கருத்துரை: பசியும், நோயும், பகையும் இல்லாமல் இனிது நடப்பதே நாடாகும்.

விளக்கவுரை: உறு - மிக்க. ஓவா - நீங்காத. செறு - அழிவு செய்யும். இயல்வது - நடப்பது. **மிக்க பசி இன்மை:** உழவர்கள் இருத்தலாலும், மிருதியாக விளைதலாலும் மிக்க பசி ஒழியும். **நீங்காத நோய் இன்மை:** தீக்காற்று, கடுங்குளிர், மிக வெப்பம் முதலியவற்றால் மக்களுக்கும், பிற உயிர்கட்கும் நோய் உண்டாதல் கூடும். மக்களுக்குத் தேவையான பொருள்கள் இன்மையாலும் நோய் உண்டாதல் கூடும். இவை யாவும் இல்லாவிடின்

நோய் வராது. நாட்டிற்கு இயல்பாகவே இத்தன்மை இருக்க வேண்டும் என்பது கருத்து. **செறுபகை இன்மை :** வெளியிலிருந்து வந்து அழிவு செய்யும் பகை இல்லாமை. அரசன் வலிமையும், நிலைப்படையும், அரண்களும் உடையவனாய் இருந்தால் அவனது நாட்டிற்குப் பகைவரால் அழிவு வராது. இத்தகைய அரசனைக் கொண்ட நாடு பகையின்றி இருக்கும் என்பது கருத்து.

இலக்கணக் குறிப்பு : உறுபசி: **உரிச்சொல் தொடர்.** உறு: 'மிகுதி' என்னும் குணத்தை **உணர்த்தும் உரிச்சொல்.** ஓவா . ஈறுகெட்ட **எதிர்மறைப் பெயரெச்சம்.** செறுபகை: **வினைத்தொகை.**

5. உட்பகையும், குறும்பரும் இல்லாதது நாடு

பல்குழுவும் - (மாறுபட்ட கருத்துக்களால் கூடும்) பல கூட்டமும்

பாழ் செய்யும் - (கூட இருந்தே) பாழாகச் செய்யும்

உட்பகையும் ———,

வேந்து அலைக்கும் - (சமயம் வந்தால்) அரசனைத் துன்புறுத்தும்

கொல் குறும்பும் - கொல்வினைக் குறும்பரும்

இல்லது நாடு - இல்லாததே நாடாகும்.

கருத்துரை : மாறுபட்டுக் கூடும் பல கூட்டம், உட்பகை, கொல்வினைக் குறும்பர் முதலியோர் இல்லாததே நாடு.

விளக்கவுரை : குழு - கூட்டம். அலைக்கும் - துன்புறுத்தும். குறும்பு - குறும்பர். **பல்குழு :** சங்கேத வயத்தான் மாறுபட்டுக் கூடும் பல கூட்டம். சாதி பற்றியும், கடவுள் பற்றியும் பலர்க்கு உள்ள ஒருமைப்பாடே சங்கேதம் ஆகும். சாதி பற்றியும், கடவுள் பற்றியும் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டோர் தனித்தனிக் கட்சியினராக வாழ்வரன்றே? அத்தகைய கட்சியினரையே 'பல்குழு' என்னும் சொற்றொடர் குறிக்கின்றது. **பாழ் செய்யும் உட்பகை :** நாட்டைப் பாழ்படுத்தும் உட்பகை. இப்பகை உடன் உறைந்தே நாட்டினைப் பாழ்படுத்துமாகலின் உட்பகை எனப்பட்டது. வழிப்பறி செய்வோர் (ஆறலைப்பார்), கள்வர், கோள் கூறுவார் முதலிய மக்களும், பன்றி, புலி, கரடி முதலிய விலங்குகளும் 'உட்பகை' என்று சுட்டப்படும். **வேந்து அலைக்கும் கொல் குறும்பு :** சமயம் பார்த்திருந்து அரசைக் கவிழ்க்கும் கொல்வினைக் குறும்பர். குறும்பு செய்வோர் குறும்பர் எனப்பட்டனர். பல்குழு, உட்பகை, கொல்குறும்பு ஆகிய மூன்றும் அரசனாலும், வாழ்வாராலும் அகற்றப்பட வேண்டும் என்பது வள்ளுவனாரின் கருத்தாகும்.

இலக்கணக் குறிப்பு : உட்பகை, குறும்பு : **ஆகு பெயர்கள்.** கொல் குறும்பு : **வினைத் தொகை.**

6. கேடின்மையும், வளங் குன்றாமையும் உடையது நாடு

கேடு - (பகைவரால்) கெடுதல்

அறியா - அறியாததாய்

கெட்ட இடத்தும் - (ஒரு வேளை) கேட்டினை அடைந்தாலும் (அப்பொழுது கூட)

வளம் குன்றா - தன் வளம் குறைபடாத

நாடு - நாட்டினை

நாட்டின் தலை - எல்லா நாடுகளினும் தலையானது

என்ப - என்று சொல்லுவர் நூலோர்.

கருத்துரை : பகைவரால் கெடுதல் இன்றி, கேட்டினை அடைந்தாலும் தன் வளங்குறைபடாத நாடே எல்லா நாடுகளிலும் சிறந்தது.

விளக்கவுரை : கேடு - கெடுதல். என்ப - என்று சொல்லுவர். தலை - சிறந்தது, தலையானது. கேடு அறியா : அரசனுடைய வலிமையாலும், கடவுட் பூசையும் அறங்களும் நடைபெறுதலாலும் ஒரு நாடு கேட்டினை அறியாமல் இருக்கும். கெட்ட இடத்தும் : ஒரு வேளை கேட்டினை அடைந்தாலும். அரிதில் கெட்டதாயினும், நாட்டிற்குக் கேடு வருதல் கூடாது என்னும் குறிப்பு ஈண்டு அமைந்துள்ளது. வளங்குன்று : தன் வளம் குறைபடாத. சுரங்கங்களிலிருந்து கிடைக்கும் பொன், வெள்ளி முதலிய உலோகங்களும், வயலிலும் சோலையிலும் விளையும் உணவுப் பொருள்களும் 'வளம்' என்னும் தலைப்பில் அடங்கும். 'குன்று' என்பது, முன்பு குறிப்பிடப்பட்ட பொருள்கள் இயல்பாகவே உள்ளனவாதல் வேண்டும் என்பதையும், முன்னதாகவே அவை சேர்க்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதையும், இவ்விதமாகக் குறைவின்றி இருக்க வேண்டும் என்பதையும் குறிப்பிடும். நாட்டின் தலை : நாடுகளுக்குள் தலையானது. கேடு அறியாததாய், கெட்ட இடத்தும் வளம் குன்றுததாய் உள்ளதாதலால் அந்நாடு தலையானது எனப்பட்டது.

இலக்கணக் குறிப்பு : அறியா : வினையெச்சம் : 'அறியாது' என்னும் வினையெச்சத்தின் விகுதி விகாரப்பட்டு நின்றது. குன்று : ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். என்ப : தெரிநிலைப் பலர்பால் படர்க்கை வினைமுற்று.

7. நாட்டின் உறுப்பு (அவயவம்)

இரு புனலும் - கீழ்நீர், மேல் நீர் எனப்பட்ட நீரும்
வாய்ந்த - வாய்ப்பு உடைத்தாய
மலையும் ———,
வரு புனலும் -(அம்மலையினின்றும்) வருவதாய நீரும்
வல் அரணும் - அழியாத கோட்டையும்
நாட்டிற்கு - ஒரு நாட்டிற்கு
உறுப்பு - அவயவம் ஆம்.

கருத்துரை : கீழ்நீர், மேல் நீர் எனப்பட்ட நீரும், வாய்ப்புடை மலையும், ஆறுகளும், வலிய கோட்டையும் நாட்டிற்கு அவயவம் ஆம்.

விளக்கவுரை : புனல் - நீர். அரண் - கோட்டை, நகரி. உறுப்பு - அவயவம். இருபுனல் : இருவகைப்பட்ட நீர். கீழ்நீர், மேல்நீர் ஆகிய இரண்டும் ஈண்டுச் சுட்டப்பட்டன. கீழ்நீராவது ஊற்றுநீர். மேல்நீராவது குளம், ஏரி முதலியவற்றில் நிற்கும் நீர். வாய்ந்த மலை : வாய்ப்பு உடைத்தாய மலை, பயன்படும் மலை. நாட்டின் ஒரு புறத்தில் இருந்து, பலவகை வளங்களைக் கொண்டு, மாரியில் உண்ட நீரைக் கோடையில் வெளிப்படுத்தும் தன்மையை உடைய மலையே 'வாய்ந்த மலை' என்று ஈண்டுக் குறிப்பிடப்பட்டது. நாட்டின் ஒரு புறத்தே மலை இருத்தல் நன்று. அது பலவகை வளங்களைக் கொண்டிருந்தால், நாட்டு மக்கள் தமக்கு வேண்டியவற்றை எளிதில் பெறுவர். மாரிக்காலத்தில் பெய்த நீர் பனியாக உறைந்திருக்குமன்றோ? அது கோடை காலத்தில் உருகி ஆற்றில் நீர் பெருகும். இத்தகைய பண்புகளைக் கொண்ட மலை என்று குறிப்பிடும் பொருட்டே 'வாய்ந்த மலை' எனப்பட்டது. புனல் : இச்சொல் துரவு, கேணி, ஏரி, குளம், ஆறு முதலியவற்றைக் குறிக்கும். நாட்டிற்கு ஆதாரங்களாக இருப்பவையாதலால் இவை 'அவயவம்' என்று குறிப்பிடப்பட்டன. இவற்றால், மேகம்

" அறிவின் மூத்த குழவி முன்னெச்சரிக்கை." — விக்டர் ஹியூகோ.

மழை பொழிதல் தவறினும், நாட்டில் வளம் நிலைபெறும் என்பது பெறப்பட்டது.

இலக்கணக் குறிப்பு: வருபுனல்: **வினைத்தொகை.** வல்லரண்: **பண்புத்தொகை.** அரண்: **ஆகுபெயர்.**

8. நாட்டிற்கு அழகு தரும் ஐந்து

பிணி இன்மை - நோய் இன்மையும்
செல்வம் - செல்வம் உடைமையும்
விளைவு - விளைவு உடைமையும்
இன்பம் - இன்பம் உடைமையும்
காவல் - காவல் உடைமையும் ஆகிய
இவ்வைந்து - இவ்வைந்தினையும்
நாட்டிற்கு - ஒரு நாட்டிற்கு
அணி என்ப - அழகு என்பர் நூலோர்.

கருத்துரை: நோய் இன்மை, செல்வம், விளைதல், இன்பம், காவல் என்னும் ஐந்தும் நாட்டிற்கு அழகு எனப்படும்.

விளக்கவுரை: ஏமம் - காவல். அணி - அழகு. என்ப - என்று சொல்லுவர். **பிணி இன்மை:** நோயின்மை நிலத்தின் நலத்தால் வருவது. தீக்காற்று, கடுங்குளிர், பெருவெப்பம் முதலியன இல்லாத நிலமே நிலநலம் எனப்பட்டது. **இன்பம்:** திருவிழா, யாகம் முதலியன நடைபெறுதலாலும், சான்றோர் வாழ்வதாலும், நுகரவேண்டியவை இருத்தலாலும், நிலநலத்தாலும், நீர் நலத்தாலும் நாட்டில் வாழ்வார்களின் மனத்தில் நிகழும் உணர்ச்சியே இன்பம் ஆகும். **ஏமம்:** காவல். இச்சொல் அரசன் காவல், வாழ்வோர் காவல், அரண் காவல் ஆகியவற்றையெல்லாம் குறித்தது. பிற தேசத்து மக்களும் விரும்பத்தக்க நாட்டின் அழகினை இக்குறட்பா குறிப்பிடுகின்றது.

நாட்டின் குற்றங்கள் (9, 10)

9. தேடினால் வளம் தரும் நாடு நாடன்று

நாடா - (தம்மிடம் வாழ்வார்) தேடி வருந்தாமல் அவர்களிடம் தானே அடையும்
வளத்தன - செல்வத்தை உடையவற்றை
நாடு என்ப - நாடுகள் என்பர் நூலோர் (ஆதலால்)
நாட - தேடி வருந்த
வளம் தரும் - செல்வத்தை அடைவிக்கும் நாடுகள்
நாடு அல்ல - நாடுகள் ஆகா.

கருத்துரை: மக்கள் வருந்தாமல் தானே வந்து சேரும் செல்வத்தை உடையதே நாடு ஆகும். தேடி வருந்தச் செல்வம் தரும் நாடு, நாடு ஆகாது.

விளக்கவுரை: நாடுதல்: இரண்டு இடங்களிலும் வருத்தத்தைக் குறித்தது. என்ப - என்று சொல்லுவர் நூலோர். **நாடா வளத்தன:** நாடி வருத்தம் உறாது, எளிதின் எய்தும் வளத்தினை உடையன. எதிர்மறைமுகத்தால் நாட்டின் குற்றம் ஈண்டுக் கூறப்பட்டது.

10. நாட்டின் அரசனும் பண்புடையனுதல் வேண்டும்

வேந்து - அரசனேடு
அமைவு இல்லாத - மேவுதல் இல்லாத
நாடு - நாடானது
ஆங்கு அமைவு - மேற்சொல்லிய குணங்கள் எல்லாவற்ருனும்
எய்தியக் கண்ணும் - நிறைந்திருந்தாயினும் (அவற்ருல்)
பயம் இன்றே - பயன் உடைத்தன்று.

கருத்துரை: முன்பு குறிப்பிடப் பெற்ற குணங்கள் யாவும் இருந்தாலும், வேந்தனேடு பொருந்துதல் இல்லாத நாடு பயனுடையதன்று.

விளக்கவுரை: பயம் - பயன். வேந்து - அரசன். அமைவு - மேவுதல், பொருந்துதல். **வேந்தமைவு:** அரசனேடு மேவுதல். அஃதாவது அரசனும், குடிமக்களும் பொருந்தியிருத்தல். குடிகள் அரசனிடத்து அன்புடையர் ஆதலும், அரசன் குடிகளிடத்து அருள் உடையன் ஆதலும் ஈண்டுக் குறிப்பிடப்பட்டன. அரசனது அமைதி என்றும் இத்தொடர் பொருள் தரும். **பயம் இன்றே:** குடிகள் அரசனிடம் அன்பு காட்டலும், அரசன் குடிகளிடம் அருள் காட்டலும் இல்லையேல், நாட்டில் யாரும் வாழ மாட்டார்கள். எனவே, நாட்டிற்குக் கூறப்பட்ட குணங்கள் யாவும் நிறைந்திருந்தாலும் ஒரு பயனும் உண்டாகாது. அதுபற்றியே, 'பயம் இன்றே' எனப்பட்டது. நாட்டிற்கு நல்லரசன் இன்றியமையாதவன் என்பது வள்ளுவனரின் கருத்தாகும்.

இலக்கணக் குறிப்பு: அமைவு: தொழிற்பெயர். பயம்: 'பயன்' என்னும் சொல் 'பயம்' என வந்தது கடைப்போலி.

நல்லொழுக்கப் பயிற்சி

மக்கள் உயிர்க்குப் பயன் புகழ் பெறுதலே என்றும், புகழ் பட வாழாதாரை உலகம் இகழும் என்றும், புகழுடன் வாழ்வாரே உயிர் வாழ்வார் எனப்படுவர் என்றும் படித்தீர்கள். புகழ் பட வாழாதாரைப் பிறர் இகழ்தல் திண்ணம். அவ்வாறு பிறர் இகழும்பொழுது அவர்களை நொந்து பயனில்லை. நாமே நம்மை நொந்து கொள்ள வேண்டும். ஏன்? புகழ் பெறுதற்கு உலகில் வாய்ப்புக்கள் பல உள்ளன. அங்ஙனம் இருக்கும் பொழுது புகழ் பெருதிருத்தல் நம் குற்றமேயன்ரே?

கல்வி, ஆண்மை, ஒழுக்கம், ஈகை முதலியவற்ருல் புகழை உண்டாக்கிக் கொள்ளலாம். தேர்வில் சிறப்பாக வெற்றி பெற்றுப் புகழ் பெறலாம். பெரியோர் விதித்தனவற்றைக் கொண்டு, விலக்கியனவற்றைத் தள்ளி, நல்லொழுக்கத்தைக் கடைப்பிடித்துப் புகழைப் பெறலாம். பூதவுடம்பு நிலையற்றது. புகழுடம்பு தான் நிலைத்து நிற்கும். எனவே, எத்துறையிலாயினும் புகழ் பெறுதலை உங்களுடைய வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொள்ளுங்கள்.

---

2. நாலடியார்

பெயர்க் காரணம் : 'நான்கு அடிகளையுடைய வெண்பாக்களால் ஆகிய நூல்' என்பது 'நாலடியார்' என்பதற்குப் பொருளாகும். நாலடி : பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக் காரணப் பெயர். அது வெண்பாவை உணர்த்தியது. வெண்பா தன்னாலாகிய நூலை ஈண்டு உணர்த்தியது. எனவே அது கருவியாகுபெயர் ஆகும். 'நாலடி' என்பது ஈண்டு, நாலடிகளையுடைய பிற பாடல்களைக் குறியாமல், சிறப்புப் பற்றி வெண்பாவைக் குறித்தது. 'ஆர்' என்பது சிறப்பினை உணர்த்தும் விகுதி.

நூல்வகை : பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று நாலடியார். பதினெட்டு நூல்களும், திருக்குறட் பகுதியின் முன்னுரையில் கூறப்பட்டன.

நூலின் பிரிவுகள் : இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப் பால் என மூன்று பிரிவுகளை உடையது ; நாற்பது அதிகாரங்களைக் கொண்டது. ஒவ்வோர் அதிகாரத்திலும் பப்பத்துப் பாடல்கள் வீதம் அமைந்துள்ளன. இந்நூலில் உள்ள பாடல்கள் நானூறு.

பெருமை :

1. இந்நூல் திருக்குறளுடன் ஒன்றாக வைத்து எண்ணப்படுகின்றது.
2. டாக்டர் ஜி. யூ. போப் என்னும் ஆங்கிலப் பெரியார் இந்நூலை ஆங்கிலத்தில் பெயர்த்துள்ளார்,
3. "நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்னும் பழமொழியில், 'நாலும்' என்பது இந்நூலையே குறிக்கும்.

ஆசிரியர்கள் : சமண முனிவர்கள்.

நூலின் காலம் : இந்நூல் கி. பி. 5-ஆம் நூற்றாண்டில் தோன்றியது என்று ஒரு சாராரும், கி. பி. 9-ஆம் நூற்றாண்டில் தோன்றியது என்று மற்றொரு சாராரும் கூறுவர். இந்நூலின்கண் 'பெருமுத்தரையர்' என்னும் பெயர் பலவிடங்களில் வருகின்றது. பெருமுத்தரையர் என்பார் பாண்டியர்க்கு அடங்கியிருந்த சிற்றரசர் என்றும், பாண்டியரே என்றும் வெவ்வேறு விதமாகக் கூறுவர் ஆராய்ச்சியாளர். பெருமுத்தரையர் காலத்திலோ, அதற்குப் பின்னரோ இந்நூல் தோன்றியிருத்தல் வேண்டும்.

நூலைத் தொகுத்தவர் : இந்நூல் தொகைநூல் ஆகும். சமண முனிவர்கள் பலரால் பாடப்பெற்ற நீதி வெண்பாக்கள் பிற்காலத்தில் தொகுக்கப் பட்டன. அவ்வாறு தொகுத்தவர் 'பதுமனார்' என்பவர் ஆவார்.

இந்நூலைப்பற்றிய வரலாறு : "முன்னொரு காலத்தில் கொடிய பஞ்சம் ஒன்று உண்டாயிற்று. அப்பஞ்சத்தால் வருந்திய சமண முனிவர்கள் எண்ணாயிரவர் பாண்டி நாட்டை அடைந்தனர். பாண்டியன் அவர்களை ஆதரித்து வந்தான். பஞ்சம் நீங்கிய பிறகு அம்முனிவர்கள் அரசனிடம் விடைபெற முயன்றனர். முனிவர்களை விடுத்துப் பிரிய மனமில்லாத அரசன், அவர்கட்கு விடைகொடாமல் இருந்தான். முனிவர்கள் ஒரு நாள் இரவு அரசன் அறியாமல் ஊரை விடுத்துச் சென்றுவிட்டனர். அவ்வாறு சென்றவர்கள், தலைக்கு ஒவ்வொரு பாடல் வீதம் ஓலைகளில் எழுதிவைத்தே சென்றிருந்தனர். அப்பாடல்களை அரசன் படித்துப் பார்த்தான். அவை ஒன்றுக்கொன்று பொருத்தமின்றி அமைந்திருந்தன. ஆகவே, அரசன் அவற்றை வையையாற்றில் எறிந்துவிடுமாறு பணித்தான். அவ்வாறு

"ஈசனைக் காணமுடியாதது அகங்காரத்தினால்." — இராமகிருஷ்ணர்.

வைகையில் எறியப்பெற்ற ஏடுகளுள் நானூறு ஏடுகள் நீரின் போக்கை எதிர்த்து நான்கடி சென்றன. அது கண்ட அரசன் வியப்புற்று, அந்நானூறு ஏடுகளையும் கொணரச் செய்தான்; 'பதுமனார்' என்னும் புலவரைக் கொண்டு அவற்றை வகைப்படுத்தச் செய்தான். நானூறு பாடல்கள் எழுதப் பெற்ற நானூறு ஏடுகளும் நீரின் போக்கை எதிர்த்து 'நாலடி' சென்றனவாதலால், அப்பாடல்களைக் கொண்ட நூல் 'நாலடியார்' என்னும் பெயரைப் பெற்றது" என்பது இந்நூலைப்பற்றிக் கூறப்படும் வரலாறு ஆகும். இவ் வரலாறு உண்மை என்று துணிதற்கேற்ற உறுதியான சான்றுகள் கிடைத்தில.

1. பெரியோருடைய நற்குண நற்செயல்கள்

(இப்பாடல் 'பெரியாரைப் பிழையாமை' என்னும் அதிகாரத்தின்கண் உள்ளது. 'பெரியர் ஆயினாரை அவமதித்து நடவாமை' என்பது இவ்வதிகாரத்தின் பொருள் ஆகும்.)

கல்லாது - (படித்தற்கு உரிய நூல்களைப்) படியாமல்
போகிய - கழிந்த
நாளும் - நாட்களும்,
பெரியவர்கண் - பெரியர் ஆயினாரிடம்
செல்லாது - (கேள்வியறிவின் பொருட்டு) செல்லாமல்
வைகிய - கழிந்த
வைகலும் - நாட்களும்
ஒல்வ - (தாம் கொடுக்க) முடிந்த பொருள்களை
கொடாது - உரியவர்க்குக் கொடாமல்
ஒழிந்த - கழிந்த
பகலும் - நாட்களும்,
உரைப்பின் - சொல்லுமிடத்து,
பண்பு உடையார்கண் - நற்குண நற்செயல்கள் உடைய பெரியோர்களிடம்
படாவாம் - உண்டாகாவாம்.

கருத்துரை : கல்வியறிவு இன்மையும், கேள்வியறிவு இன்மையும், ஈயாமையும் தீக்குணங்கள். எனவே, பெரியோர் கல்வியும், கேள்வியும், ஒப்புரவும் உடையவர்களாக இருப்பர்.

விளக்கவுரை : போகிய - கழிந்த. வைகிய - கழிந்த, நின்ற. வைகல் - நாள். ஒல்வ - இயன்ற பொருள்களை. பகல் - நாள். படா - உண்டாகா. பண்பு - குணம், இயல்பு. **கல்லாது போகிய நாள் :** படியாமல் கழிந்த நாள். நாள்தோறும் படிப்பர் பெரியோர். ஏன்? "என் ஒருவன் சாந் துணையும் கல்லாத வாறு" என்று வள்ளுவனார் கூறியுள்ளாரன்றோ? கல்வி கரையில்லாதது. நம் வாழ்நாட்களோ சில. எனவே, உயிர் உடலில் இருக்கும் வரை கற்றல் வேண்டும் என்பர் அறிஞர். இக்காரணம் பற்றியே கல்லாமல் கழிந்த நாட்கள் பெரியோர்களிடம் உண்டாகமாட்டா எனப்பட்டது. **பெரியவர்கண் செல்லாது வைகிய வைகல் :** அறிவுமிக்க பெரியோர்களிடம் செல்லாமல் கழிந்த நாள். அறிஞர் கூறும் அறிவுரைகளை வாய்ப்புக் கிடைத்த பொழுதெல்லாம் கேட்க வேண்டும். "செவிக்குணவு இல்லாத போழ்து சிறிது, வயிற்றுக்கும் ஈயப் படும்" என்றார் வள்ளுவனார். செவியுணவாவது கேள்வியறிவே யன்றோ? அத்தகைய கேள்வியறிவைப் பெறாத நாள் பயனற்ற நாள் ஆகும். அதுபற்றியே இங்ஙனம் கூறப்பட்டது. **ஒல்வ கொடாது ஒழிந்த பகல் :** தம்மால் கொடுக்கக் கூடிய பொருள்களைக் கொடாமல் நீங்கிய நாள். இயன்ற பொருள்களை உரியவர்கட்குக் கொடுத்தல் வேண்டும் என்பது கருத்து. பாரதப்போர் நடைபெற்ற காலத்தில் கன்

"ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம்." — வள்ளுவர்.

னன் தனது புண்ணியப் பயனைக் கண்ணனுக்கு ஈந்தான் அன்றோ? இல்லை யென்று வந்தோர்க்கு இல்லையென்று உரைத்தல் கூடாது என்னும் இதயம் இருத்தலே போதுமானது. மனம் இருந்தால் வழி தானாக உண்டாகும். எனவே, ஈயாமல் நீங்கிய நாட்கள் பெரியோர்களிடம் உண்டாகா எனப் பட்டது.

இலக்கணக் குறிப்பு: ஒல்வ: வினையாலணையும் பெயர். கொடாஅ, படாஅ: இவை இரண்டும் செய்யுள் இசை நிறைக்க வந்த அளபெடை கள். நாள், வைகல், பகல் என்னும் சொற்கள் ஒரே பொருளைத் தருகின்றன அன்றோ? இவ்வாறு ஒரு பொருளைத் தருகின்ற பல சொற்கள் வந்துள்ளமை யால் இப்பாடலின்கண் **பொருட்பின் வருநிலையணி** அமைந்துள்ளது. 'பண்புடையார்கண் படாவாம்' என்பது இறுதியில் நின்று, ஏனை இடங் களிலும் சென்று இயைதலால் இப்பாடலின்கண் **கடைநிலைத் தீவக அணியும்** அமைந்துள்ளது.

2. ஈயாதவன் தன் செல்வத்திற்கு உரியன் அல்லன்

(இப்பாடல் '**ஈயாமை**' என்னும் அதிகாரத்தின்கண் உள்ளது. ஈயா மையாவது ஈதலைச் செய்யாமை.)

எனது எனது என்று - என்னுடையது என்னுடையது என்று எண்ணி
இருக்கும் - (ஈயாமல்) இருக்கும்
ஏழை - அறிவில்லாதவனது
பொருளை - செல்வத்தை
யானும் - நானும்
எனது எனது - என்னுடையது என்னுடையது
என்று இருப்பன் - என்று கூறி மகிழ்ச்சியுடன் இருப்பேன். (ஏனெனின்)
தனது ஆயின் - அச்செல்வம் (ஈயாத) அவனுடையதாயின்
தானும் - அவனும்
அதனை - அச்செல்வத்தை
வழங்கான் - (பிறர்க்குக்) கொடாமலும்
பயன் - (அச்செல்வத்தின்) இன்பப் பயனை
துவ்வான் - நுகராமலும் இருக்கின்றானே! (ஏன்?)
யானும் - நானும்
அதனை - அப்பொருளை
அது - அது செய்யாமல்தான் இருக்கின்றேன். (எனவே, அச்செல்வம் என்னுடையது என்று யான் நினைத்து ஏன் மகிழ்தல் கூடாது?)

கருத்துரை: பிறர்க்கு ஈயப்பெறாத பொருள், அதனை உடையவனுக் கும் உரிமை உடையதன்று. (ஈயாத ஒருவனது செல்வத்தைக் குறித்துப் பிறன் ஒருவன் இகழ்ந்து நகையாடுவது போல் இச்செய்யுள் அமைந்துள்ளது.)

விளக்கவுரை: ஏழை - அறிவில்லாதவன். வழங்கான் - கொடுக்கமாட் டான். துவ்வான் - நுகரமாட்டான், துய்க்க மாட்டான். **ஏழை:** தான் சேர்த்த பொருளைத் தானம் செய்யாமலும், பயன் படுத்தாமலும், தானும் நுகராமலும் இருப்பவன் இன்புறுதலை அறியாதவன் அல்லனோ! அதுபற்றியே, அத்தகையவன் 'அறிவில்லாதவன்' என்று பொருள் படுமாறு 'ஏழை' எனப்பட்டான். **பயன் துவ்வான்:** செல்வத் தின் பயனை நுகராமல் இருக்கின்றான். செல்வம் நிலையற்றது. எனவே, செல்வம் உள்ளபொழுதே அதனால் அடையக் கூடிய பயனைப் பெறுதல் வேண்டும். செல்வத்தின் பயனை நுகராதவன் அறிவில்லாதவன் ஆவான். **யானும் அதனை அது:** 'அது' என்றது ஈண்டு வழங்குதலையும், துய்த்த லையும் குறித்தது. அறிவில்லாதவன் தன் செல்வத்தைப் பிறர்க்கும் கொடா

மலும், தானும் நுகராமலும் இருக்கின்றான். யானும் அவனது செல்வத்தை எடுத்துப் பிறர்க்கு ஈய முடியாது; எனது இன்பத்தின் பொருட்டும் செலவு செய்ய முடியாது. எனவே, எங்கள் இருவர்க்கும் அச்செல்வத்தைப் பற்றிய அளவில் வேறுபாடு யாதும் இல்லை என்பது கருத்து.

இலக்கணக் குறிப்பு: எனது: ஒன்றன்பால் குறிப்பு வினையாலணையும் பெயர். ஈண்டு 'அ' என்பது சாரியை; 'து' என்பது விகுதி. யானும்: உம்மை ஈண்டு இறந்தது தழுவிய எச்சவும்மை: இழிவு சிறப்பு உம்மையாகவும் கொள்ளலாம். இப்பாடலிற் கூறப்பட்டுள்ள கருத்து நகைப்பை உண்டாக்குகின்ற தன்றோ? எனவே, இப்பாடலின்கண் நகைச் சுவை அமைந்துள்ளது.

3. தக்கார்க்குச் செய்யும் சிறு உதவியும் பெரும்பயன் தரும்

(இப்பாடல் 'அறன் வலியுறுத்தல்' என்னும் அதிகாரத்தின்கண் உள்ளது. அஃதாவது அறம் வலியுடைத்து என்று கூறுதல்.)

உறக்கும் துணையது - சிறிய அளவுள்ளதாகிய
ஓர் - ஒரு
ஆலம் வித்து - ஆலமரத்தின் விதை
ஈண்டி - தழைத்து வளர்ந்து
இறப்ப - மிகுதியாக
நிழல் - நிழலை
பயந்தாங்கு - கொடுத்தாற்போல்
அறப்பயனும் - அறப்பயனைத் தரும் பொருளும்
தான் சிறிது ஆயினும் - தான் அளவில் சிறியதாயினும்
தக்கார் கை - தகுதியுடைய பெரியோர் கையில்
பட்டக்கால் - சேர்ந்தால்
வான் சிறிதா - ஆகாயமும் சிறிது என்னும்படி (அத்துணைப் பெரிய புண்ணியத்தை)
போர்த்துவிடும் - பரப்பிவிடும்.

கருத்துரை: தகுதியுடைய பெரியோர்க்குச் செய்யும் உதவி மிகச் சிறியதாயினும், அது பெரும் பயனைக் கொடுக்கும்.

விளக்கவுரை: உறக்கும் - சிறிதான, கிள்ளியெடுக்கும் அளவுள்ள, சுருங்கிய. துணை - அளவு. ஈண்டி - தழைத்து, வளர்ந்து, அடர்ந்து. இறப்ப - மிகுதியாக. தக்கார் - தகுதியுடைய பெரியார். போர்த்துவிடும் - பரப்பிவிடும், சூழச் செய்துவிடும். **உறக்கும் துணையது:** கையினால் கிள்ளி எடுத்து விடலாம்போல் அத்துணைச் சிறிய அளவுள்ளது. சுருங்கிய அளவினை உடையது என்பதனை விளக்கும்பொருட்டு இங்ஙனம் கூறப்பட்டது. **ஆலம் வித்து ஈண்டி இறப்ப நிழல் பயத்தல்:** சிறிய ஆலம் விதை அடர்ந்து வளர்ந்து பெருநிழல் தரும். இச்செய்தியை,

> "தெள்ளிய ஆலின் சிறுபழத்(து) ஒருவிதை
> தெண்ணீர்க் கயத்துள் சிறுமீன் சினையினும்
> நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை
> அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
> மன்னர்க்(கு) இருக்க நிழலா கும்மே."

என்னும் நறுந்தொகைச் செய்யுள் நன்கு விளக்கும்.

தக்கார் கைப்பட்டக்கால் வான் சிறிதாப் போர்த்து விடும்: ஞானத்தாலும், ஒழுக்கத்தாலும் பெற்ற தகுதியுடையாரே தக்கார் எனப்பட்டார். அறச்செயல்களின் பயனான புண்ணியத்தைத் தரும் பொருள் சிறியதேயா

யினும், தகுதியுடைய பெரியோரிடம் சேர்ந்த காரணத்தால் பெரிய புண்ணியத்தைப் பரப்பிவிடும் என்பது கருத்து.

இப்பாடலில் உள்ள உவமைப் பொருத்தம்: ஆலம் விதை சிறியதாயினும் பெரிய மரமாக வளர்ந்து பெருநிழலைத் தருகின்றது. அதுபோலவே அறச்செயல்களின் பயனை புண்ணியத்தைத் தரும் பொருளும் சிறியதாயினும், தக்காரிடம் சேரும் காரணத்தால் பெரும் புண்ணியத்தைப் பரப்பிவிடும். தக்க நிலத்தில் விதை முளைத்தால் நன்கு வளர்தல் போல, தக்கார் கையில் சேர்ந்த பொருள் பெரிதாக வளரும். ஆலமரம் நிழலைப் பரப்புதல் போல, தக்காரைச் சேர்ந்த பொருளும் பெரும் புண்ணியத்தைச் சூழவைத்து விடும்.

இலக்கணக் குறிப்பு: ஆலம்வித்து: ஈண்டு 'அம்' என்பது சாரியை. ஆங்கு: உவம உருபு. பயந்தாஅங்கு: செய்யுளிசை நிறைக்க வந்த அளபெடை. அறப்பயனும்: உம்மை அசைநிலை. சிறிதாயினும்: உம்மை இழிவுசிறப்பு. இப்பாடலின்கண் உவமையணி அமைந்துள்ளது.

4. குடிப்பிறந்தார் வறுமை வரினும் பிறர்க்கு உதவுவர்

(இப்பாடல் 'குடிப்பிறப்பு' என்னும் அதிகாரத்தின்கண் உள்ளது. உயர்குலத்தில் பிறப்பதன் சிறப்பை இவ்வதிகாரம் கூறுகின்றது.)

ஒரு புடை - (தனது) ஒரு பாகத்தை
பாம்பு - இராகு என்னும் பாம்பு
கொளினும் - பிடித்து மறைத்தாலும்
ஒருபுடை - மற்றொரு பாகத்தால்
அம்கண் - அழகிய இடமகன்ற
மாஞாலம் - பெரிய பூமியை
விளக்குறூஉம் - ஒளி விளங்குமாறு செய்கின்ற
திங்கள் போல் - நிறைமதியைப் போல
செல்லாமை - வறுமையால் (இயலாத நிலை)
செவ்வன் - நன்றாக
நேர் நிற்பினும் - முன்னே நின்றாலும்,
குடிப் பிறந்தார் - உயர்குடிப் பிறந்தார்
ஒப்புரவிற்கு - பிறர்க்கு உதவி செய்வதற்கு
ஒல்கார் - தளரமாட்டார்.

கருத்துரை: வறுமை நிலை வரினும், உயர்குடிப் பிறந்தவர்கள் பிறர்க்கு உதவி செய்யும் வகையில் தளரமாட்டார்கள்.

விளக்கவுரை: புடை - பாகம், பக்கம். **பாம்பு:** இராகு, கேது என்னும் பாம்புகளுள் ஒன்று. இவை நிறைமதியைப் பற்றும் என்றும், அதனாலேயே கிரகணம் உண்டாகிறது என்றும் புராணம் கூறும். அம் - அழகு. கண் - இடம் அகன்ற. மா - பெரிய. ஞாலம் - பூமி. திங்கள் - முழுமதி. செல்லாமை - வறுமை. செவ்வன் - நன்றாக. நேர் - எதிரில், நேர்ந்து. ஒப்புரவு - பிறர்க்கு உதவி செய்யும் வகை. ஒல்கார் - தளரார். **செல்லாமை:** வறுமை உடையவர்களுடைய எண்ணமும், சொல்லும், செயலும் உலகில் செல்லா. அத்தகைய செல்லா நிலைமையை உண்டாக்கும் வறுமை ஈண்டுச் செல்லாமை என்றே சுட்டப்பட்டது. **ஒல்கார் குடிப்பிறந்தார்:** குடிப்பிறந்தார் தளரார். வறுமைவரினும், உயர்குடிப் பிறந்தார் பிறர்க்கு உதவும் வகையில் தளரமாட்டார்கள். **"இடன் இல் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்"** என்னும் திருக்குறள் அடி ஈண்டு நினைக்கத்தக்கது. **இப்பாடலில் உள்ள உவமைப் பொருத்தம்:** ஒரு பாகத்தைப் பாம்புபற்றி மறைத்தாலும், நிறைமதி மற்றொரு பாகத்தால் பூமிக்கு ஒளியைத் தருகின்றது. அதுபோலவே, குடிப்பிறந்தார் தமக்கு

வறுமை வந்தாலும் பிறர்க்கு உதவி செய்யத் தளரார். நிறைமதியைப் பாம்பு பிடித்தல் குடிப்பிறந்தாரை வறுமை பற்றுவதற்கு உவமை. நிறை மதி பூமிக்கு ஒளிதருதல் குடிப்பிறந்தார் உதவி செய்யத் தளராமைக்கு உவமை.

இலக்கணக் குறிப்பு : விளக்குறூஉம் : 'விளக்குறும்' என்று நின்றாலும் செய்யுளோசை குன்றாது. ஆயினும், இன்னிசை நிறைத்தற் பொருட்டுக் குறில் நெடிலாகி அளபெடுத்துள்ளதாதலால் இஃது இன்னிசை அளபெடை. போல் - உவம உருபு. செவ்வன் : பண்புப் பெயர்; ஈண்டு 'அன்' என்பது விகுதி. இப்பாடலின்கண் உவமையணி அமைந் துள்ளது.

5. கல்வியே தேடி வைக்கத்தக்க செல்வம்

(இப்பாடலும், அடுத்த பாடலும் 'கல்வி' என்னும் அதிகாரத்தின்கண் உள்ளன. கற்றற்குரிய நூல்களை ஒருவன் கற்றல் இவ்வதிகாரத்தில் விளக்கிக் கூறப்படுகின்றது.)

(கல்விப் பொருள்கள்)
வைப்புழி - வைக்கப்பெற்ற இடத்திலிருந்து
கோள்படா - பிறரால் கவரப்படமாட்டா ;
வாய்த்து - (தக்க மாணவர்) கிடைத்து
ஈயின் - அவர்க்குக் கற்பித்தால்
கேடு இல்லை - குறைதல் இல்லை ;
மிக்க சிறப்பின் - பெரிய செல்வாக்கினல்
அரசர் செறின் - அரசர்கள் வெகுண்டாலும்
வவ்வார் - (கல்விப் பொருள்களைக்) கவரமாட்டார்கள் (ஆதலால்)
எச்சம் என - ஆக்கம் என்று
ஒருவன் —,
மக்கட்கு - தன் மக்களுக்கு
செய்வன - தேடி வைக்கத்தக்கவை
விச்சை - கல்விப் பொருள்களேயாம்
பிற அல்ல - ஏனைச் செல்வப் பொருள்கள் அல்ல.

கருத்துரை : தந்தை தன் மக்களுக்குத் தேடி வைக்கத்தக்க அழியாத செல்வம் கல்வியேயாகும்.

விளக்கவுரை : உழி - இடம். கோள் - கொள்ளுதல். வாய்த்து - கிடைத்து. கேடு - கெடுதல், குறைதல், அழிதல். செறின் - வெகுண்டால், கோபித்தால். வவ்வார் - கவரமாட்டார். எச்சம் - எஞ்சி நிற்பது, ஆக்கம், வைப்பு. விச்சை - கல்விகள். கோட்படா : கவரப்பட மாட்டா; பிறரால் திருடிக் கொள்ளப்படமாட்டா. கல்வியைத் திருடுதல் இயலாதன்றே? அதுபற்றியே இங்ஙனம் கூறப்பட்டது. வாய்த்து ஈயின் கேடில்லை: தக்க மாணவர் கிடைத்து, அவர்க்குக் கற்பித்தால் குறைதல் இல்லை. தக்க மாணவர் வாய்ப்பது அருமையாதலால் 'வாய்த்து' எனப் பட்டது. தக்க மாணவர்க்குக் கற்பித்தால், கற்பிப்போருடைய கல்வியே வளரும் அன்றே? அதனாலேயே இங்ஙனம் கூறப்பட்டது. அரசர் செறின் வவ்வார் : அரசர், சினங்கொண்டு, ஒருவருடைய கல்வியைக் கவரமுடியாது ; பிற செல்வங்களைக் கவர்ந்துவிடலாம். இதுபற்றியே இவ்வாறு குறிப்பிடப் பட்டது. எச்சம் என ஒருவன் மக்கட்குச் செய்வன விச்சை : ஒருவன் தன் மக்களுக்கு என்று சேர்த்து வைப்பவை கல்விப் பொருள்களேயாம். ஏன்? பொன், மணி முதலியவற்றை மக்கள் செலவு செய்து அழித்து விடுவர். கல்வியை அங்ஙனம்செய்ய இயலாதன்றே? மேலும் கல்விப் பொருளைத் தாயத்தார், கள்வர், வலியர், அரசர் முதலியோர் கவரமுடியா தல்லவா?

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை."

"தந்தை மகற்குஆற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்."

என்னும் குறட்பாக்கள் ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கன.

இலக்கணக் குறிப்பு : கோள் : 'கொள்' என்னும் முதனிலை திரிந்த தொழிற்பெயர். எச்சம் : 'எஞ்சு' என்பது பகுதி; 'அம்' என்பது கருத்தாப்பொருள் விகுதி. 'எஞ்சு' என்பது 'எச்சு' என்று ஆகியது வலித்தல் விகாரம். மற்று : அசை. கல்விப் பொருளுக்கும், செல்வப் பொருளுக்கும் உள்ள வேற்றுமை (வேறுபாடு) கூறப் பெறுதலால் இப்பாடலில் வேற்றுமையணி அமைந்துள்ளது.

6. துறக்க இன்பத்தினும் சிறந்தது கல்வியின்பம்

தவல் அரு - தவறுதல் இல்லாத
தொல்- பழைமையான
கேள்வி - நூற் கேள்வியினது
தன்மை உடையார் - தன்மையை உடையவர்களும்,
இகல் - பகைமைத்தன்மை
இலர் -இல்லாதவர்களும்,
எஃகு உடையார் - கூர்மையான அறிவு உடையவர்களும்
தம்முள் - ஆகிய கற்றவர்கள் கூட்டத்தில்
குழீஇ - கூடியிருந்து அளவளாவி
நகலின் - மகிழ்தலைக் காட்டிலும்
இனிது ஆயின் - இன்பம் தருமே யானல்
அகல் வானத்து - அகன்ற விண்ணின்
உம்பர் - மேலிடத்தில்
உறைவார் - வாழும் தேவர்களது
பதி - நகரமாகிய அமராவதியை
காண்பாம் - காண முயல்வோம்.

கருத்துரை : கற்றறிந்தோர் கூடிய கூட்டத்தில் கலந்து அளவளாவுவதால் பெறும் இன்பமே துறக்க இன்பத்தினும் உயர்ந்தது.

விளக்கவுரை : தவல் - தவறுதல், அழிதல். தொல் - பழைய; தொன்றுதொட்டு வருகின்ற. கேள்வி - நூற் கேள்வி; இகல் - பகை, மாறுபாடு. எஃகு - கூர்மை; ஈண்டு அறிவு நுட்பத்தைக் குறித்தது. குழீஇ - கூடி. நகலின் - மகிழ்தலைக் காட்டிலும். உம்பர் - மேலிடம். **தவலருந் தொல்கேள்வித் தன்மை உடையார் :** தவறுதல் இல்லாமல் தொன்றுதொட்டு வரும் நூற்கேள்விப் பேறு உடையவர். கேள்வியாவது கேட்கப்படும் நூற்பொருள்களைக் கற்றறிந்தார் சொல்லக் கேட்டலாகும். இவ்வாறு பரம்பரையாகக் கேள்வி யறிவு பெற்றோர் என்றும் தவறுதல் இலராவர். **இகல் இலர் :** மாறுபாடும் பகையும் இல்லாதவர்; நூல் வழக்கோடும் உலக வழக்கோடும் மாறுபாடு இல்லாதவர். கல்வி கேள்விகள் உடையராயினும், பகையும் மாறுபாடும் இருப்பின், அவர்களுடைய நுண்ணறிவு வெளிப்படாது. அதுபற்றியே, இகல் இலர் எனப்பட்டது. **எஃகு :** படைக்கலம், கூர்மை. இங்கு இச்சொல் நுண்ணறிவு எனப்படும் அறிவு கூர்மையைப் புலப்படுத்தியது. மக்களுடைய அறியாமையைப் போக்கி, நிலையான அறிவொளியைத் தந்து, இன்பம் பயப்பது கல்வி. கல்வி யறிவுடையோர் கூட்டத்தில் அளவளாவுதல் பேரின்பம் தரும்; முத்திக்கும் வழிகாட்டும். இத்தகைய இன்பம் தேவர் உலகில் இல்லை. இக்காரணம்பற்றியே இப்பாடல் எழுந்தது.

இலக்கணக் குறிப்பு : தவல் : தொழிற்பெயர். கேள்வி : தொழிற்பெயர். குழீஇ : சொல்லிசை யளபெடை. அகல்வானம் : வினைத்தொகை. இப்பாடலில் குறிப்பிடப்பட்ட மகிழ்ச்சி அறிவு பொருளாகத் தோன்றிய மகிழ்ச்சியாகும்.

"எண்ணமிலார் சொல்லே மிகவும் சுடும்." — நீதி வெண்பா.

7. பெரியோர் நட்பும், சிறியோர் நட்பும்

(இப்பாடல் 'தீவினையச்சம்' என்னும் அதிகாரத்தின்கண் உள்ளது. தீச்செயல்களைச் செய்தற்கு அஞ்சி நடத்தல் வேண்டும் என்பதனை இவ்வதிகாரம் கூறுகின்றது.)

பெரியவர் கேண்மை - பெரியோர் நட்பு
பிறைபோல - பிறைச் சந்திரனைப் போல
நாளும் - நாள்தோறும்
வரிசை வரிசையா - முறைமுறையே
நந்தும் - வளரும்.
சிறியார் - கீழோர்களது
தொடர்பு - நட்போ
வான் ஊர் - வானத்தே தவழ்கின்ற
மதியம்போல் - முழுமதியைப்போல
வைகலும் - நாள்தோறும்
வரிசையால் - முறையாக
தானே - தானாகவே
தேயும் - குறைந்து விடும்.

கருத்துரை : பெரியோர் நட்பு வளரும் : சிறியோர் நட்பு வரவரக் குறையும். எனவே சிற்றினத்தாருடன் சேர்தற்கு அஞ்சுக.

விளக்கவுரை : கேண்மை - நட்பு. பிறை - இளஞ் சந்திரன். வரிசை - முறை. நந்தும் - வளரும். வைகலும் - நாள்தோறும். தொடர்பு - நட்பு. **பிறைபோல :** பிறையானது நாள்தோறும் முறைப்படி வளரும். அது போலவே பெரியார் நட்பும் நாள்தோறும் முறைப்படி வளரும். **மதியம் போல் :** முழுமதியானது நாள்தோறும் முறைப்படி தேயும். அதுபோலவே சிறியார் நட்பு நாள்தோறும் தேய்ந்து ஒழியும். இப்பாடலின் பொருளும், உவமையும் திருவள்ளுவனார் கருத்திற்கு ஏற்ப அமைந்துள்ளன. இப்பாடல்,

"நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு."

என்னும் குறட்பாவினை முழுவதும் ஒத்திருத்தல் காண்க. இவ்வாறு பெரியவர் நட்பு வளர்வதற்கும், சிறியவர் நட்பு வரவரத் தேய்தற்கும் காரணம், தமக்குள் ஒருவர் மற்றொருவருடைய குணத்தை முன்பு அறியாமல் இருத்தலும், பின்பு அறிதலும் ஆகும்.

இலக்கணக் குறிப்பு : வரிசை வரிசையா : மகிழ்ச்சி காரணமாக ஈண்டு அடுக்கு வந்தது. ஊர்மதியம் - வினைத்தொகை.

நல்லொழுக்கப் பயிற்சி

இப்பகுதியில் இடம் பெற்றுள்ள இரண்டு பாடல்களிலிருந்து கல்வி கேள்விகளின் உயர்வினை நீங்கள் உணர்ந்தீர்கள். கல்வியே அழிவற்ற செல்வம். பிறரால் அதனைக் கவர இயலாது. பிறர்க்கு வழங்க வழங்க வளர்வது அது. கேள்வியினால் ஒருவனுடைய பொது அறிவும், உலகியல் அறிவும் வளரும். எனவே, கல்வி கேள்விகள் மக்களுக்கு இன்றியமையாதன.

நன்றாகப் படித்துத் தேர்வில் சிறந்த வெற்றி பெற முயல்வது ஒன்றே உங்கள் கடமை என்று எண்ணிவிட வேண்டாம். கற்றறிந்தோர் கூறும் அறிவுரைகளை நீங்கள் கேட்டறிதலும் இன்றியமையாதது. எனவே, உங்களுடைய பள்ளி மாணவர் கழகத்தில் அறிஞர்கள் ஆற்றும் சொற்பொழிவுகளையெல்லாம் நீங்கள் தவறாமல் கேளுங்கள்; குறிப்புகள் எழுதி வைத்துக்கொள்ளுங்கள்; அறிவுரைகளின்படி நடக்க முயலுங்கள்; அருஞ்செய்திகளை அறிந்து, உங்களுடைய பொது அறிவைப் பெருக்கிக் கொள்ளுங்கள்.

3. பழமொழி

பெயர்க் காரணம் : 'பழமொழி' என்பது பழமொழியைக் கொண்டு அமைந்துள்ள செய்யுட்களைத் தன்னகத்தே கொண்ட நூலைக் குறிக்கும். முன்னோர்கள், தம் வாழ்க்கையில் கண்ட உண்மைகளைச் சுருக்கமாகச் சமயம் அறிந்து, இடம் அறிந்து வெளியிட்டனர். அவ்வாறு வெளியிடப்பெற்ற உண்மைகள் நாளாவட்டத்தில் 'பழமொழிகள்' எனப்பட்டன. இந்நூலில் உள்ள ஒவ்வொரு பாடலும், ஒவ்வொரு பழமொழியையும், அதைப்பற்றிய விளக்கங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்கும். இந்நூலின்கண் நானூறு பாடல்கள் உள்ளன. அதுபற்றி இதற்கு, 'பழமொழி நானூறு' என்றும் ஒரு பெயர் உண்டு.

நூலின் பெருமை : பழமொழிகளைத் தொகுத்துணர்த்துவது பெருஞ் செயலாகும். அதற்கு விரிந்த கல்வியறிவு வேண்டும். இந்நிலையில் நானூறு பழமொழிகளை எடுத்து, அவற்றின் சார்பையே முற்றும் கொண்டு, பொருளை விளக்கியமை இந்நூலுக்கே உரிய தனிப் பெருமையாகும். இத்தகைய நூல் இதற்குமுன் இருந்ததாகப் புலப்படவில்லை. இந்நூலிற் கூறப்பட்டுள்ள பழமொழிகளுட் பல இக்காலத்தில் வழக்கொழிந்துவிட்டன என்பது உண்மையே. ஆயின், அவை இந்நூல் இயற்றப்பெற்ற காலத்தே வழக்கில் அமைந்திருக்க வேண்டும். இந்நூற் பழமொழிகள் சிலவற்றை நச்சினார்க்கினியர் முதலான உரையாசிரியர்கள் மேற்கோள்களாகக் காட்டியுள்ளனர். அதிலிருந்தும் இந்நூலின் பெருமையை உணரலாம்.

நூலின் வகை : இந்நூல் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. அந்நூல்கள் முன்பே குறிப்பிடப்பெற்றன.

ஆசிரியரைப் பற்றிய செய்திகள்

பெயர் : முன்றுறை அரையனார். 'முன்றுறை' என்பது இவரது ஊராகும். இவர் அரசர் மரபைச் சேர்ந்தவர். அரையர் - அரசர். ஊர்ப் பெயரும், மரபுப் பெயரும் இணைந்து ஆசிரியர் பெயராக அமைந்தன. ஆசிரியரின் இயற்பெயர் அறிய இயன்றிலது.

ஊர் : 'முன்றுறை' என்னும் ஊர். அவ்வூர் பாண்டி நாட்டில் உள்ளது என்பர்.

சமயம் : சைனம்.

காலம் : இந்நூலாசிரியர் கி. பி. 6 அல்லது 7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்பர் ஆராய்ச்சியாளர்.

1. நாள்தோறும் நல்லறம் செய்க

(இப்பாடல் 'அறஞ்செய்தல்' என்னும் அதிகாரத்தின்கண் உள்ளது)

ஒருவன்தான் - அறம் செய்யும் ஒருவனை

ஈனுலகத்தாயின் - இவ்வுலகின்திறத்தே ஆராய்ந்து பார்ப்போமாயின் (அவன்)

இசை பெறும்-புகழைப் பெறுவான்.

அஃது - இவ்வுலகத்தினின்றும்

இறந்து - நீங்கி

ஏனுலகத்தாயின் - மற்ற உலகத்தின்கண் (மறுமை உலகில்) அவன் சென்றானாயின்

"முன்னெச்சரிக்கை உள்ளவன் தவறு செய்யான்." — கன்பியூஷியஸ்.

இனிது அதூஉம் - அதுவும் இனியது ஆகும். (ஆகவே)
நாள்வாயும் - நாள்தோறும்
நல்லறம் - நன்மை தரும் அறங்களை
செய்வார்க்கு - செய்கின்றவனுக்கு
இரண்டு உலகும் - இவ்வுலகம், மேல் உலகம் ஆகிய இரண்டிலும் பெறும் இன்பம்
கவட்டை நெறி - கவட்டை வழியில்
வாய் - உளவாகிய
வேள் - திருமணங்களைப் போலும்!

கருத்துரை : இவ்வுலக இன்பத்தையும், மேலுலக இன்பத்தையும் அறம் தரும். எனவே, நாள்தோறும் நல்லறத்தைச் செய்க. **பழமொழி :** "வேள்வாய் கவட்டை நெறி."

விளக்கவுரை : ஈனுலகம் - இவ்வுலகம். இறந்து - நீங்கி. ஏனுலகம் - (ஏனை + உலகம்) மற்ற உலகம்; மேல் உலகம். நாள்வாயும் - நாள்தோறும். கவட்டை - இருபிரிவாக உள்ள. நெறி - வழி. வாய் - உள்ள, வாய்த்த. வேள் - திருமணம். **ஈனுலகத்தாயின் இசைபெறும் :** நல்லறம் செய்பவன் இவ்வுலகத்தில் எப்பயனைப் பெறுவான் என்று ஆராய்ந்து பார்த்தால், அவன் புகழையே பெறுவான் என்பது புலப்படும்; நல்லறம் செய்பவன் இவ்வுலகில் அடையும் பயன் புகழேயன்றோ? **ஏனுலகத்தாயின் இனிது அதூஉம் :** மற்ற உலகமாகிய மேல் உலகத்தை நல்லறம் செய்தவன் அடைந்தால், அவன் அடையும் பயன் யாது? அவ்வுலகத்திலும் அவன் இன்பத்தை அடைகின்றான் அன்றே? அதுபற்றியே அதுவும் இனியது எனப்பட்டது.

வேள்வாய் கவட்டை நெறி : இது ஒரு பழமொழி. 'கவட்டை வழியின்கண் உளவாகிய திருமணங்களைப் போலும்' என்பது இதன் பொருள். **இப்பழமொழியின் விளக்கம் :** ஒரு காரியத்தின் பொருட்டு ஒருவன் வேறோர் ஊருக்குச் செல்கின்றான் என்று கொள்வோம். அவ்வூர்க்குச் செல்ல வழிகள் இரண்டு உள்ளன. அவ்விரண்டு வழிகளிலும் அவனுடைய உறவினர்களின் வீடுகள் உள்ளன. அவ்வீடுகளில் திருமணங்கள் நடைபெறுகின்றன. அவ்விரண்டு திருமணங்களுக்கும் அவன் செல்லுதற்கு உரியன். இந்நிலையில் அவன் யாது செய்வான்? அவன் ஒருவழியே சென்று, வழியிடத்தே நடைபெறும் திருமணத்தில் பங்கு கொண்டு இன்புற்று, தான் செல்ல வேண்டிய ஊர்க்குச் செல்வான். ஆங்கு அவன் செய்ய வேண்டிய காரியத்தை முடித்துத் திரும்பும்பொழுது வேறொரு வழியாக வருவான். அவ்வாறு வருங்கால், அவன், வழியிடத்தே நடைபெறும் மற்றொரு திருமணத்தில் பங்குகொண்டு இன்புற்றுத் தன்னிடம் சேர்வான். இவ்வுலகில் நல்லறம் செய்தவனது நிலையும் இத்தகையதேயாகும். அவன் இவ்வுலகிலும், மேல் உலகிலும் இன்பங்களை அடைகின்றான் அன்றே? அறம் செய்தவன் இவ்வுலகிலும், மேல் உலகிலும் இன்பத்தை அடைவான் என்பது இப்பழமொழியினால் பெறப்பட்டது.

இலக்கணக் குறிப்பு : இ + உலகம் = ஈனுலகம். முதல் நீண்டு புணர்ந்தது. 'ன்' என்பது இசை நிறைக்கும் பொருட்டு வந்தது. ஏனை + உலகம் = ஏனுலகம். புணருங்கால் நிலைமொழியாகிய 'ஏனை' என்னும் சொல்லின் ஈற்றில் நின்ற 'ஐ' என்னும் உயிர்கெட்டது. பெறூஉம் : இன்னிசையளபெடை. இனிததூஉம் : சொல்லிசையளபெடை.

2. புன்சொல்லும் இன்சொல்லும்

(இப்பாடல் 'தெரிந்து செய்தல்' என்னும் அதிகாரத்தின்கண் இடம் பெற்றுள்ளது.)

ஒருவனை —,
புன் சொல் - வன் சொல்
இடர்ப்படுப்பது அல்லால் - துன்பத்துள் செலுத்துமே அல்லாமல்
இன்சொல் - இனிய சொல்
இடர்ப்படுப்பது - துன்பத்துள் செலுத்துவது
இல் - இல்லை. (எனவே)
புன் சொல்லும் - வன் சொல்லாலும்
நன் சொல்லும் - இன் சொல்லாலும் வரும் பயனை
பொய் இன்று - குற்றம் இன்றி
உணர்கிற்பார் - அறிய வல்லவர்
வன் சொல் - வன் சொல்லைப் பேசி,
வழியராய் - அதன்வழியே நடப்பவராய்
வாழ்தலும் - உயிர் வாழ்ந்திருத்தலும்
உண்டாமோ - உண்டோ ? (இல்லை)

கருத்துரை : வன்சொல் துன்பம் தரும் ; இன்சொல் துன்பம் தராது. எனவே, ஆராய்ந்து பார்த்து இன்சொற்களையே சொல்லுக. **பழமொழி :** "இன்சொல் இடர்ப்படுப்பது இல்."

விளக்கவுரை : புன் - வன்மையான, கடுமையான, இழிவான. **பொய்** - குற்றம். **உணர்கிற்பார்** - அறியவல்லார். **இடர்** - துன்பம். **படுப்பது** - செலுத்துவது. **புன்சொல் :** கடுஞ்சொல் ஒருவனுக்குத் துன்பத்தை உண்டாக்கும். அஃது ஒருவனுக்கு இழிவையும், துன்பத்தையும் உண்டாக்குதலால் புன்சொல் எனப்பட்டது. இதுவே 'வன்சொல்' என்றும் சுட்டப்பட்டது. **பொய்யின்று உணர்கிற்பார் :** குற்றமின்றி அறியும் திறன் உடையவர். இன்சொல்லால் நன்மை உண்டாகும் என்றும், வன்சொல்லால் தீமை உண்டாகும் என்றும் அறிபவரே பொய்யின்று அறிய வல்லவர் எனப் படுவார்.

> " இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
> வன்சொல் வழங்கு வது."

என்னும் குறட்பாவின் கருத்தும், இப்பாடலின் கருத்தும் ஒத்திருத்தல் காண்க.

"இன்சொல் இடர்ப்படுப்பது இல்" என்னும் பழமொழியின் விளக்கம் : எக்காலத்திலும், எந்நிலையிலும் இன்சொல் தன்னையுடையானைத் துன்பத்துள் செலுத்தாது. இன்சொல் பேசுவோன் துன்பத்தை அடையவே மாட்டான். எந்தச் சூழ்நிலையிலும் அவன் இன்பம் அடைவான்.

இலக்கணக் குறிப்பு : புன்சொல், நன்சொல், வன்சொல், இன்சொல்: **பண்புத்தொகைகள். உண்டாமோ: ஓகாரவினு எதிர்மறைப் பொருளில்** வந்தது.

3. செய்ந்நன்றி அறிதல்

(இப்பாடல் 'இல்வாழ்க்கை' என்னும் அதிகாரத்தின்கண் உள்ளது.)

எறி திரை - வீசுகின்ற அலைகள்
சென்று - பரந்து சென்று
உலாம் - உலவுகின்ற
சேர்ப்ப - கடற்கரைத் (நெய்தல் நிலத்) தலைவனே !
நன்கு - நன்றாக
ஒன்று - ஒரு பொருளின் கூறுபாட்டை
அறிபவர் - அறிகின்றவர்கள்
நாழி - நாழி அளவு உள்ள அரிசியேயாயினும்
கொடுப்பவர்க்கு - உதவுகின்றவர்களுக்கு
என்றும் - எக்காலத்திலும்
உறுதியே - உறுதிதரத் தக்கனவற்றையே
சூழ்க - நினைப்பார்களாக. (ஏனெனின்)

நீர்போய் - கடல் கடந்து சென்று	வாணிகமும் —,
ஒன்று இரண்டாம் - ஒன்றினைக் கொடுத்து இரண்டாகப் பெறும்	அதுபோல - அதைப்போல
	இல் - ஆவதில்லை.

கருத்துரை : சிறிய உதவி செய்தார்க்கும் நன்மை செய்யும் விருப்பத்துடன் இருத்தல் நன்று. அதுபோல் பெரும்பயன் தருவது வேறு இல்லை. **பழமொழி :** "நீர் போயும் ஒன்றிரண்டாம் வாணிகம் இல்."

விளக்கவுரை : நன்கு - நன்றாக. நாழி - நாழியளவுள்ள அரிசி. உறுதி - உறுதி தரத்தக்க செயல்கள். சூழ்க - நினைக்க. எறி - வீசுகின்ற. திரை - அலை. சேர்ப்பன் - நெய்தல் நிலத் தலைவன்; கடற்கரைத் தலைவன். **நாழி கொடுப்பவர்க்கு என்றும் உறுதியே சூழ்க:** சிறிய உதவியைப் பிறர் செய்தாலும் என்று குறிப்பிடும் பொருட்டு 'நாழி கொடுப்பவர்' எனப்பட்டது. 'நாழி' என்பது நாழியளவுள்ள அரிசி. ஒரு முறை கொடுத்தவர் மற்றொரு முறை கொடுக்க மறுத்தாலும், அவர் முன்பு உதவி செய்தமையை நினைவிற் கொண்டு, அவர்க்கு உதவி செய்யவேண்டும் என்னும் கருத்தினால் 'என்றும்' எனப்பட்டது. ஒருவர் சிறிய உதவியைச் செய்திருந்தால் அவர்க்கு எக்காலத்திலும் நல்லனவற்றையே செய்யவேண்டும் என்பது கருத்து.

நீர்போயும் ஒன்றிரண்டாம் வாணிகம் இல் : இப்பாடலின்கண் அமைந்துள்ள பழமொழி இது. இப்பழமொழியின் **விளக்கம் :** கடல் கடந்து சென்று செய்யும் வாணிகத்தில் மிகுதியாக இலாபம் கிடைக்கும் என்பர். அவ்வாறு செய்யும் வாணிகத்திலும் ஒன்றுக்கு இரண்டாகத்தான் இலாபம் கிடைக்கக் கூடும். அதற்கு மேல் இலாபம் கிடைத்தல் அரிது. ஆயின், ஒருவர் ஒரு முறை செய்த நன்றியை நினைவிற் கொண்டு, அவர்க்கு நன்மை செய்வோர் இவ்வுலகில் எதை வேண்டினும் எளிதில் பெறுவர். மேலுலகிலும் அவர்க்கு இன்பம் கிடைக்கும். எனவே, நன்றியறிவு உடையார் அளவற்ற நன்மையைப் பெறுவர் என்னும் கருத்தினை விளக்கும் பொருட்டு ஈண்டுள்ள பழமொழி எடுத்தாளப்பட்டது.

இலக்கணக் குறிப்பு : நாழி : 'நாழி' என்னும் முகத்தல் அளவைப் பெயர் அந்த அளவைக் கொண்ட பொருளுக்கு ஆகி வந்தது. எனவே, ஈண்டு இச்சொல் முகத்தல் அளவை ஆகுபெயர் ஆகும். உறுதியே : ஏகாரம் ஈண்டுத் தேற்றம். சூழ்க : வியங்கோள் வினைமுற்று. எறிதிரை : வினைத்தொகை. சேர்ப்ப : அண்மை விளி.

4. பொறை உடைமை

(இப்பாடல் 'வெகுளாமை' என்னும் அதிகாரத்தின்கண் அமைந்துள்ளது.)

வான் - ஆகாயம்வரை	கறுத்து - சினத்தில்
ஓங்கு - உயர்ந்த	ஆற்றி - மிகுந்து
மால் - பெரிய	தம்மை - தமக்கு
வரை - மலைகளை உடைய	கடிய - தீச்செயல்களை
வெற்ப - குறிஞ்சிநிலத் தலைவனே !	செய்தாரை - செய்தவரை
சால்பு - ஒருவனது பெருங்குணம்	பொறுத்து - (அவர் செய்த தீச்செயல்களைப்) பொறுத்து
தான் நோன்றிட - தான் பொறுக்கும் பொறுமையினால்	ஆற்றி - அவர்க்கு நன்மை செய்து
வரும் - உண்டாவதாகும் (எனவே)	சேறல் - ஒழுகுதல்

புகழால் - புகழாகும் (அவ்வாறின்றி)
ஒறுத்து - தாமும் பதிலுக்குச் சினந்து
ஆற்றின் - (தமக்குத் தீங்கு செய்தோர்க்குத்) தீமை செய்தால்
பயன் இன்று - அதனால் புகழ் உண்டாதல் இல்லை.

கருத்துரை : தீங்கு செய்தவர்க்கும் நாம் நன்மையே செய்தல் வேண்டும். பழமொழி : "தான் நோன்றிட வரும் சால்பு".

விளக்கவுரை : கறுத்து - சினந்து, வெகுண்டு. ஆற்றி - மிகுந்து, செய்து. கடிய - தீச் செயல்கள். சேறல் - நடத்தல், ஒழுகுதல். ஒறுத்தல் - சினத்தல், தண்டித்தல். ஆற்றின் - செய்தால். வான் - வானம், ஆகாயம். மால் - பெரிய. வரை - மலை. வெற்ப - மலைநாட்டுத் தலைவ ! குறிஞ்சிநிலத் தலைவ ! நோன்றிட - பொறுமை கொள்ள. சால்பு - எல்லா வகைப்பட்ட நல்லொழுக்கங்களும் சேர்ந்த பெருங்குணம். **கறுத்து ஆற்றித் தம்மைக் கடிய செய்தாரைப் பொறுத்து ஆற்றிச் சேறல் புகழ் :** ஒருவர் செய்த தீமைகளைப் பொறுத்து, அவர்க்கு நன்மை செய்து ஒழுகுதலே புகழாகும். பிறர் செய்த தீங்குகளைப் பொறுத்தலும் மறத்தலும் போதா. அவர்கட்கு நன்மையும் செய்தல் வேண்டும். அப்பொழுதுதான் புகழ் கிடைக்கும். ஈண்டு,

> **"இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண**
> **நன்னயம் செய்து விடல்."**

> **"இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்**
> **என்ன பயத்ததோ சால்பு."**

என்னும் குறட்பாக்களின் கருத்துக்கள் அமைந்துள்ளன. **ஒறுத்து ஆற்றின் பயன் இன்றே :** தீங்கு செய்தார்க்கு நாமும் தீங்கு செய்தால் பயன் இல்லை. அவ்வாறு செய்தால், பதிலுக்குத் தீங்கு செய்து விட்டோம் என்று அப்பொழுதைக்குச் சிறிது இன்பம் உண்டாதல் கூடும். அது பொய்யின் பமேயாகும். தீங்கு செய்தார்க்கும் நன்மை செய்து, அதனால் கிடைக்கும் புகழே நிலைபெற்ற பேரின்பம் ஆகும். ஈண்டு,

> **"ஒறுத்தார்க்(கு) ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்**
> **பொன்றும் துணையும் புகழ்."**

என்னும் குறட்பா நினைத்தற்குரியது.

தான் நோன்றிட வரும் சால்பு : இப்பாடலின்கண் அமைந்துள்ள பழமொழி இது. **இப்பழமொழியின் விளக்கம் :** 'சால்பு' என்னும் பண்பு எல்லா நற்குண நற்செய்கைகளையும் தன்னிடத்தில் அடக்கிக் கொண்டுள்ளது. பிறர் செய்த தீங்கினைப் பொறுக்கும் பொறுமையினால்தான் ஒருவர்க்குச் சால்பு உண்டாகும். பகைவர்க்கும் நன்மை செய்யும் பான்மையில்லையேல் சால்பு இருந்தும் பயனில்லை. தீங்கு செய்தார்க்கும் நன்மை செய்தல் வேண்டும் என்னும் கருத்தினை விளக்க இப்பழமொழி எடுத்தாளப் பெற்றது.

இலக்கணக் குறிப்பு : தம்மை : 'தமக்கு' என்று ஈண்டுப் பொருள் கொள்கின்றோம். இரண்டாம் வேற்றுமை உருபு நிற்கும் இடத்தில் நான்காம் வேற்றுமைப் பொருளைக் கொள்கின்றோமாதலால் இஃது **உருபு மயக்கம்.** செய்தாரை : தெரிநிலை **வினையாலணையும்பெயர்.** செல் + தல் = சேறல். வரை : வரை என்னும் கணுவின் பெயர் அதனை உடைய மூங்கிலுக்குப் பெயராகி, பின்பு மூங்கில் விளையும் மலைக்கும் பெயராயிற்று. எனவே 'வரை' என்னும் சொல் ஈண்டு **இருமடியாகு பெயர்.** வெற்ப : **அண்மை விளி.**

"வறிஞர்க்(கு) அழகு வறுமையில் செம்மை." — அதிவீரராமர்.

5. அடக்கம் உடைமை

(இப்பாடல் 'கல்வி' என்னும் அதிகாரத்தின்கண் இடம் பெற்றுள்ளது.)

அறை கல் - அறுக்கப் பெற்ற பாறைக் கற்களிலிருந்து இறங்கும்

அருவி - அருவிகளால்

அணி - அழகு செய்யப்படும்

மலை நாட - மலை நாட்டை உடைய (குறிஞ்சிநிலத்) தலைவனே!

நீர் நிறை குடம் - நீர் நிறைந்த குடம்

தளும்பல் - ஒலியுடன் குலுங்குதல்

இல் - இல்லை (அதுபோல)

கற்று - நூல்களை யெல்லாம் கற்று

அறிந்தார் - அறிவு பெற்றவர்கள்

கண்ட - தம் வாழ்வில் கண்டனவே

அடக்கம் - அடக்கத்திற்கு உரிய செயல்கள்.

அறியாதார் - அறிவு இல்லாதவர்களே

பொச்சாந்து - (தாம் கற்றவற்றை) மறந்து

தம்மை - தங்களை

தெற்ற - தெளிவாக

புகழ்ந்து உரைப்பர் - புகழ்ந்து கூறிக் கொள்வர்.

கருத்துரை : கற்றறிந்தவர்கள் தம்மைத் தாமே புகழ்ந்து கூறிக் கொள்ளமாட்டார்கள். **பழமொழி :** "நிறைகுடம் நீர்தளும்பல் இல்."

விளக்கவுரை : கண்ட - கண்டவை. அடக்கம் - அடக்கத்திற்கு உரிய செயல்கள். பொச்சாந்து - மறந்து. தெற்ற - தெளிவாக, வாயார. அறை - அறுக்கப்பட்ட. கல் - பாறைக்கல். அணி - அழகு. **கற்று அறிந்தார் கண்ட அடக்கம் :** கற்கவேண்டிய நூல்களைக் கற்று, அவற்றின் உண்மைகளை அறிந்தவர்கள் தம்முடைய வாழ்வில் அமைத்துக் கண்டவைகளே அடக்கத்திற்கு உரிய செயல்கள். கல்வியும் அறிவும் பெற்றவர்கள் தம் வாழ்வில் கண்டறிந்த உண்மை அடக்கமேயாகும் என்பது இவ்வடியின் கருத்து. **அறியாதார் பொச்சாந்து தம்மைப் புகழ்ந்துரைப்பர் :** கல்விகற்றதோடு அமைந்து, அறிவு பெறாதவர்களே தம்மைப்புகழ்ந்து கூறிக்கொள்வர். சிலர் கல்வி கற்றிருப்பர். ஆயின், அறிவு பெற்றிருக்கமாட்டார்கள்; நூல்களில் கூறப்பெற்றிருந்த உண்மைகளை அறிந்திருக்கமாட்டார்கள். அவர்கள் தாம் படித்தவற்றை மறந்து, தம்மைத் தாமே புகழ்வர் என்பது கருத்து.

நிறைகுடம் நீர்தளும்பல் இல் : இப்பாடலின்கண் அமைந்துள்ள பழமொழி இது. **இதன் விளக்கம் :** நீர் நிறைந்த குடம் தளும்பாது. குறை குடமே தளும்பும். தளும்பலாவது ஆரவாரித்து அலைதல். கல்வியும் அறிவும் பெற்றோர் நிறைகுடம் போன்றவர். அரைகுறைக் கல்வி கற்றோர் குறைகுடம் போன்றவர். நீர் நிறைந்த குடம் தளும்பாது. அதுபோலவே கற்றறிந்தார் தம்மைப் புகழ்ந்து கொள்ளமாட்டார். கற்றறிந்தார் தற்புகழ்ச்சியின்றி அடங்கியிருப்பர் என்பதனை விளக்கும் பொருட்டு இப்பழமொழி எடுத்தாளப்பட்டது.

இலக்கணக்குறிப்பு : அறிந்தார், அறியாதார் : ஈண்டு வினையாலணையும் பெயர்கள். நாட : அண்மை விளி. தளும்பல் : தொழிற்பெயர்.

6. தீவினை அச்சம்

(இப்பாடலும், அடுத்த பாடலும் 'சான்றோர் இயல்பு' என்னும் அதிகாரத்தின்கண் உள்ளன.)

தென்னவனும் - பாண்டியனும்,

எனக்குத் தகவு அன்று என்பது - எனக்குத் தகுதி அன்று என்பதனை

நோக்கி - ஆராய்ந்து அறிந்து

தனக்குக் கரி ஆவான் - தனக்குச் சான்று ஆவான்

தானய் - தானேயாய் நின்று,
தவற்றை - (கதவை யிடித்த) குற்றத்தை
நினைத்து - நினைத்துப் பார்த்து
தன் கை - தனது கையை
குறைத்தான் - வெட்டி வீழ்த்திக் கொண்டான் (ஆதலால்)

காணர் என - பிறர் பார்க்க மாட்டார் என்று எண்ணி
மாண வினை - மாட்சிமையற்ற தீய செயல்களை
செய்யார் - (அறிவுடையார்) செய்ய மாட்டார்.

கருத்துரை : பிறர் பார்த்தல் இலர் என்று கருதி அறிவுடையோர் தீய செயல்களைச் செய்யமாட்டார்கள். **பழமொழி :** "காணர் எனச் செய்யார் மாண வினை."

விளக்கவுரை : தகவு - தகுதி. நோக்கி - ஆராய்ந்து அறிந்து. கரி - சான்று. குறைத்தான் - வெட்டி வீழ்த்தினன். தென்னவன் - பாண்டியன். காணர் - காணுதல் இலர். மாண - மாட்சிமை இல்லாத. வினை - செயல். **எனக்குத் தகவு அன்று :** என்னுடைய அறிவுக்கும், கல்விக்கும் தகுதியுடையதன்று. பிறர் குற்றத்தையும் களையவேண்டுவது சான்றோர் கடமை. அங்ஙனம் இருக்க, பிறர் காணர் என்று தீச்செயல்களைச் செய்தல் தமக்குத் தகுதியன்று என்று சான்றோர் கருதுவர். **தனக்குக் கரியாவான் தான் :** ஒருவன் செய்த செயலுக்குச் சான்று ஆவான் அவனே. பிறர் அங்கு இல்லையென்றாலும், அவனது மனம் அதனை அறியுமன்றோ? அதுபற்றியே இங்ஙனம் கூறப்பட்டது. **"தவற்றை நினைத்துத் தன் கை குறைத்தான் தென்னவன்" என்பதன்கண் உள்ள வரலாறு :** பாண்டி நாட்டில் கீரந்தை என்னும் அந்தணன் ஒருவன் தன் மனைவியுடன் வாழ்ந்துவந்தான். அவன் வறுமையுற்றிருந்தான். ஒருமுறை அவன் யாத்திரை செல்ல நேரிட்டது. அதுபொழுது அவன் தன் மனைவியிடம், 'பெண்ணே! நீ அஞ்சாதே; இந்நகரைக் காக்கும் பாண்டியனுடைய காவல் உள்ளதன்றே?' என்று கூறிச் சென்றான். நகர் சோதனைக்கு வந்திருந்த அரசனுடைய செவிகளில் அந்தணனது உரை விழுந்தது. எனவே, அரசன் அன்று முதல் அந்தத் தெருவில் வாழ்வோர் யாவருக்கும் உணவுப் பொருள்களை அளித்து வரலானன். கீரந்தையின் மனைவிக்கு மட்டும் அளித்தல் பிறர்க்கு ஐயத்தினை உண்டாக்குமன்றே? அதுமுதல் அரசன் நாள்தோறும் நகர் சோதனைக்கு வருங்கால் கீரந்தையின் வீட்டையும் கவனித்துச் செல்லுதலை வழக்கமாகக் கொண்டிருந்தான்.

இங்ஙனம் இருக்கும்பொழுது, கீரந்தை என்னும் அந்தணன் யாத்திரையிலிருந்து திரும்பி வந்துவிட்டான். வந்தவன் அன்றிரவு தன் மனைவியுடன் உரையாடிக்கொண்டிருந்தான். இந்நிலையில் நகர் சோதனைக்கு வழக்கப்படி வந்த அரசன், கீரந்தையின் இல்லத்தில் பேச்சொலி எழுவதைக் கேட்டு ஐயுற்றான். அந்தணன் மீண்ட செய்தியை அறியாதாதலால், அவன் அவ்வீட்டின் கதவைத் தட்டினன். கதவு தட்டும் ஒலியைக் கேட்ட அந்தணன் ஐயங்கொண்டான். அஃதுணர்ந்த அவனது மனைவி அவனை நோக்கி, 'ஐய! அரசனது காவல் உளதாகலின் நீ அஞ்சாதே என்று கூறிச் சென்றீரே! அந்த அரசனின் காவல் என்னைக் காத்திடாதோ?' என்றாள். அவளது உரை கதவினைத் தட்டிய பாண்டியனது செவியிலும் விழுந்தது. அந்தணன் திரும்பி விட்டான் என்பதை அவன் உணர்ந்து கொண்டான். எனினும், காரணம் இன்றி, அந்தணன் தன்மனைவியின்மீது ஐயங்கொள்ளுதற்குத் தான் காரணமாக இருந்ததை எண்ணி அவன் வருந்தினன். உடனே அவன் விரைந்து நடந்து, அந்தத் தெருவில் இருந்த ஏனை வீடுகளின் கதவுகளையும் தட்டிச் சென்றுவிட்டான். அந்தத் தெருவில் வாழ்ந்தோர் யாவரும் மறுநாள் அரச

னிடம் சென்று, 'ஐய! நேற்றிரவு கள்வன் ஒருவன் எங்கள் வீடுகளின் கதவு களையெல்லாம் தட்டிச் சென்றான். அவன் யாவன் என்று கண்டுபிடித்து, தக்க தண்டனையை அவனுக்கு அளிக்கவேண்டும்' என்று கூறினர். அவ்வள வில் அம்மன்னன், கதவினைத் தட்டிய தன் கையையே வாளினால் வெட்டிக்கொண்டு, முன்னாள் இரவு நிகழ்ந்தவற்றை எல்லோர்க்கும் கூறினான். பின்பு அவன் பொற்கை ஒன்றினைச்செய்து வைத்துக்கொண்டான் என்றும், அதனால் அவனுக்குப் பொற்கைப் பாண்டியன் என்னும் பெயர் வந்தது என் றும் சிலர் கூறுவர். ஈண்டுக் கூறப்பெற்ற வரலாறு சிலப்பதிகாரத்தின் கண் சுருக்கமாக அமைந்துள்ளது. பாண்டியன் தவறு செய்திலன் என்பதே இளங்கோவடிகளின் கருத்தாகும். ஆயின், அப்பாண்டியன் தவறுசெய்து விட்டான் என்றும், அத்தவறினைப் பிறர் கண்டிலர் என்றும், பாண்டியன் அறிவுடையவனாதலால், தான் செய்த குற்றத்தின் பொருட்டுத் தானே தன் கையை வெட்டிக்கொண்டான் என்றும் கதை தோன்றுமாறு இப்பழ மொழிப் பாடல் அமைந்துள்ளது.

காணார் எனச் செய்யார் மாணவினை : இஃது இப்பாடலில் உள்ள பழமொழி. **இதன் விளக்கம்:** பிறர் காணுதல் இலர் என்று கருதி அறிவுடை யோர் மாட்சிமைப்படாத செயலைச் செய்யமாட்டார். பிறர் குற்றம் செய்த லைக் கண்டால் இடித்துரைக்கும் பண்பு வாய்ந்த அறிவுடையார், பிறர் காணார் என்று கருதித் தகாதவற்றைச் செய்யமாட்டார். பொற்கைப் பாண்டிய னது வரலாறு இப்பழமொழிக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

இலக்கணக் குறிப்பு : கை குறைத்தான் : இரண்டாம் வேற்றுமைத் தொகை.

7. சான்றாண்மை

நெறி - செறிந்த
மடல் - மடல்களையுடைய
பூந்தாழை - பொலிவுபெற்ற தாழை கள்
நீடு - பொருந்திய
நீர் - நீர் நிறைந்த
சேர்ப்ப-நெய்தல் நிலத் (கடற்கரைத்) தலைவனே!
முல்லைக்கு - முல்லைக் கொடிக்கு
தேரும் - தேரையும்
மயிலுக்கு - மயில் ஒன்றிற்கு
போர்வையும்-தன் போர்வையையும்
தொல்லை - முன்னாளில்
அளித்தாரை - கொடுத்தவர்களாகிய பாரி, பேகன் என்போரைப் பற்றி
கேட்டு அறிதும் - கேள்வி வாயி லாக அறிந்தோம்.
சொல்லின் - ஆராய்ந்து சொல்லு மிடத்து
அறிமடமும் - அறிந்தும் அறியாது போன்று இருத்தலும்
சான்றோர்க்கு - சால்பினையுடைய பெரியோர்க்கு
அணி - அழகேயாம்.

கருத்துரை : அறிந்தும் அறியாது போன்று அடங்கியிருத்தல் பெரியோர்க்கு அழகாகும். **பழமொழி :** "அறிமடமும் சான்றோர்க்கு அணி."

விளக்கவுரை : தொல்லை - முன்னாள், பழங்காலம். அறிதும் - அறிந் தோம். சொல்லின் - சொல்லுமிடத்து. நெறி - செறிந்த, நெருங்கிய. பூ - பொலிவு, அழகு. நீடு - பொருந்திய. சேர்ப்பன் : நெய்தல் நிலத்தலை வன், கடற்கரைத் தலைவன். அறிமடம் - அறிந்தும் அறியாதவன் போல இருத்தல். சான்றோர் - எல்லா நற்குணங்களும் அமைந்த பெரியார். அணி - அழகு.

(பாரி) முல்லைக்குத் தேர் ஈந்த வரலாறு : பறம்பு என்னும் மலைக்குத் தலைவனாகிய பாரி என்பவன் கடையெழு வள்ளல்களுள் ஒருவன். ஒரு நாள்

அவன் காட்டகத்தே தன் தேரில் சென்று, ஓரிடத்தில் தேரை நிறுத்தினன். அப்பொழுது ஆங்குப் படர்ந்திருந்த முல்லைக் கொடி ஒன்று அத்தேரின் சக்கரத்தைச் சற்றே பற்றியது. அது கண்ட பாரி, அம்முல்லைக் கொடி படர்ந் தேறுவதற்குக் கொழுகொம்பு இல்லாததால் வருந்துகிறது என்றும், தன் தேரை அது விரும்புகிறது என்றும், பேசும் திறமை இருந்தால் அது வாய் திறந்து கேட்டிருக்கும் என்றும் கருதி, தன் தேரினை அவ்விடத்திலேயே நிறுத்திச் சென்றான்.

(பேகன்) மயிலுக்குப் போர்வை அளித்த வரலாறு: பேகன் என்பவனும் கடையெழுவள்ளல்களுள் ஒருவன். இவனது ஊர் நல்லூர். வாடைக் காலத்தில் ஒரு நாள் அவன் மலைநாட்டில் உலவிக் கொண்டிருந்தான். அப்பொழுது மயில் ஒன்று அகவியது. அது கேட்ட பேகன், அம்மயில் குளிர் மிகுதியால் கூவியது என்று எண்ணித் தான் போர்த்தியிருந்த போர்வையை எடுத்து அம்மயிலுக்குப் போர்த்திவிட்டுச் சென்றான்.

அறிமடமும் சான்றோர்க்கு அணி: இஃது இப்பாடலின்கண் உள்ள பழமொழியாகும். **இதன் விளக்கம்:** அறிந்தும் அறியாது போன்று இருத்தல் சான்றோர்க்கு அழகாகும். தாம் எவ்வளவு அறிந்திருந்தாலும், தமது சான்றாண்மையால் ஏதும் அறியாதவர்போல் இருத்தல் சான்றோர்க்கு இயல்பு. பாரி, முல்லைக் கொடிக்குத் தேரை அளித்தான். பேகன் மயிலுக்குப் போர்வையை அளித்தான். முல்லைக் கொடியின் இடரையும், மயிலின் இடரையும் அவர்கள் வேறு பொருள்களைக் கொடுத்துத் தீர்க்கும் வகையை அறிவர். எனினும், அறியாதவர்கள் போல, தம்மிடம் இருந்த சிறந்த பொருள்களைக் கொடுத்தார்களல்லவா? இவர்கள் இவ்வாறு கொடுத்தமையே 'அறிமடம்' ஆகும். இங்ஙனம் அறிமடம் இருந்தமையால்தான் இவர்களுடைய புகழ் இன்றும் நிலைத்து நிற்கின்றது. அக்கருத்துப் பற்றியே 'சான்றோர்க்கு அணி' எனப்பட்டது.

இலக்கணக் குறிப்பு: அளித்தார்: வினையாலணையும் பெயர். சேர்ப்ப: அண்மை விளி. அறிமடம்: வினைத்தொகை.

நல்லொழுக்கப் பயிற்சி

பழமொழிகள் சிலவற்றை நீங்கள் இப்பகுதியில் விளங்க உணர்ந்தீர்கள். அவற்றுள், "நிறைகுடம் நீர் தளும்பல் இல்" என்பது ஒரு பழமொழி. இப்பழமொழியை நன்கு ஆராய்ந்து பாருங்கள். மேலும், இப்பழமொழி, 'கல்வி' என்னும் அதிகாரத்தின்கண் இடம் பெற்றுள்ளது. அதற்குரிய காரணத்தையும் ஆராய்ந்து நோக்குங்கள்.

நூல்களைக் கற்று, அவற்றின் உண்மைகளை அறிந்தவர்கள் தம் வாழ்வில் கண்ட உண்மை அடக்கமேயாகும். எனவே, அடக்கம் உயர்ந்தது என்பதை நீங்கள் உணரலாம். தற்புகழ்ச்சி செய்து கொள்ளுதல் கூடாது என்பதனையே 'அடக்கம்' என்னும் சொல் ஈண்டுக் குறிப்பிடுகின்றது. "தோன்றா தோற்றித் துறைபல முடிப்பினும், தான்தற் புகழ்தல் தகுதி யன்றே" என்றார் நன்னூலாசிரியர். தனிப்பெருநூலைச் செய்தவர்களே தம்மைத் தாம் புகழ்தல் கூடாது என்றால், ஏனையோர்க்குச் சொல்லவும் வேண்டுமோ? தற்புகழ்ச்சி செய்து கொள்வோரை அறிவற்றவராகவே உலகம் கருதும். ஆகவே, தற்புகழ்ச்சியை அறவே அகற்றுங்கள்; குறைகுடம் போன்று விளங்காதீர்கள்.

III. கதை

1. சிலப்பதிகாரம்

பெயர்க் காரணம்: சிலம்பு + அதிகாரம் = சிலப்பதிகாரம். "மென்றொடர் மொழியுட் சில வேற்றுமையில், தம்மின வன்றொடர்; ஆகா மன்னே" என்னும் நன்னூற் சூத்திர விதிப்படி, 'சிலம்பு' என்பது 'சிலப்பு' என நின்றது. "உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்" என்னும் நன்னூற் சூத்திர விதிப்படி, குற்றியலுகரம் உயிர் முதன்மொழி வருங்கால் கெட்டு, சிலம்பு + அதிகாரம் = சிலப்பதிகாரம் எனப் புணர்ந்தது. 'சிலப்பதிகாரம்' என்பது சிலம்பினது அதிகரித்தலையுடைய நூலைக் குறித்தது. அஃது ஆறும் வேற்றுமைத் தொகைப் புறத்தும் பிறந்த அன்மொழித் தொகை. இந்நூற் கதை நிகழ்ச்சிக்குச் சிலம்பே இன்றியமையாததாகலின் இவ்வாறு பெயர் வந்தது.

நூலின் வகை: தமிழ்மொழியின்கண் ஐம்பெருங் காப்பியங்கள் உள்ளன. அவை சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்பன. பெருங்காப்பியமாவது கதை யொன்றைத் தழுவி, வருணனைகளையும், அழகுகளையும், சுவைகளையும் கொண்ட செய்யுள் நூலாகும்.

நூலின் பிரிவு: இந்நூல் புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது. இந்நூலின்கண் முப்பது காதைகள் உள்ளன.

நூலின் பெருமை: தமிழ் மொழியின்கண் முதன்முதல் தோன்றிய பெருங்காப்பியம் சிலப்பதிகாரமேயாகும். முத்தமிழும் விரவப் பெற்றுள்ள நூல் இது. இதன்கண் உரைச் செய்யுளும், இசைப் பாட்டும் இடையிடையே கலந்துளளன. தமிழிசைக்கும், நாட்டியத்திற்கும் நல்லுயிர் கொடுத்த நூல் இது. தமிழ் மொழியிற் காப்பியங்கள் பல தோன்றுதற்கு இந்நூலே வழிகாட்டியாக இருந்தது. "நெஞ்சை யள்ளுஞ் சிலப்பதி காரமென் றோர்மணி யாரம் படைத்த தமிழ்நாடு" என்று பாரதியார் இந்நூலைப் பாராட்டியுள்ளார். இந்நூல் குடிமக்கள் காப்பியம் ஆகும்.

ஆசிரியரைப் பற்றிய செய்திகள்

பெயர்: இளங்கோவடிகள்.

மரபு: சேரர் மரபு.

தந்தை: நெடுஞ்சேரலாதன்.

உடன் பிறந்தவன்: சேரன் - செங்குட்டுவன்.

சமயம்: இன்ன சமயத்தவர் என்று துணிந்து கூற இயலாது. சமண சமயத்தவரோ என்று நினைக்க இடம் உள்ளது. ஆயின், ஏனைய மதங்களுக்கு இவர் ஏற்றம் கொடுத்துள்ளார்.

காலம்: கி. பி. இரண்டாம் நூற்றாண்டு.

இதனுடன் தொடர்பு கொண்ட வேறு நூல்: மணிமேகலை. சிலப்பதிகாரமும், மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் எனப்படும்.

உரையாசிரியர்கள்: இந்நூலுக்கு அடியார்க்கு நல்லார் என்பவர் உரையெழுதியுள்ளார். மதுரைக் காண்டத்தின் இறுதி நான்கு காதைகளுக்

"நகரம் மக்களுடையது; கிராமம் கடவுளுடையது." — கூப்பர்.

கும், வஞ்சிக் காண்டத்திற்கும் இவர் எழுதியவுரை அகப்பட்டிலது. அவற்றுக்கு, இவர் இயற்றியவுரை இறந்து பட்டது போலும்! இந்நூலுக்கு அரும்பதவுரை ஒன்று உள்ளது. அந்த அரும்பத உரையாசிரியரைப் பற்றிய செய்தி எதுவும் கிடைத்திலது. அடியார்க்கு நல்லார் உரையெழுதுவதற்கு முன்னதாகவே அரும்பதவுரை தோன்றியிருத்தல் வேண்டும். அண்மைக் காலத்தில் நாவலர் பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் இந்நூலுக்கு உரையெழுதியுள்ளார்.

ஆசிரியரைப் பற்றிய வரலாறு: இளங்கோவடிகளும், அவரது தமையனாகிய செங்குட்டுவனும் ஒருமுறை தமது தந்தையின் அரசவையில் வீற்றிருந்தனர். அதுபொழுது ஆங்கொரு நிமித்திகன் வந்தான். அவன் மைந்தர்கள் இருவரையும் உற்று நோக்கினான்; இளங்கோவடிகளின் முகத்தில் அறிவொளி திகழ்வதைக் கண்டு, பிற்காலத்தில் அவரே அரசுரிமை பெறுதற்குத் தகுதியுடையவர் என்று நெடுஞ்சேரலாதனிடம் கூறினான். அது கேட்ட இளங்கோவடிகள் சீறியெழுந்தார்; தமையன் இருக்கத் தம்பி மணிமுடி சூடுவது தக்கதோ என்று நிமித்திகரை வினவினர். தமையனாகிய செங்குட்டுவனது துன்பத்தையும், ஐயத்தையும் தவிர்த்தற்பொருட்டு இளமையிலேயே துறவு பூண்டார். இளமையில் துறவு பூண்ட காரணத்தாலேயே இவருக்கு இளங்கோவடிகள் என்னும் இப்பெயர் அமைந்தது.

சிலப்பதிகாரக் கதைச் சுருக்கம்: காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்த கோவலன் என்னும் வணிக இளைஞன், தனது மனைவியாகிய கண்ணகியை விடுத்து, நாடக மகளாகிய மாதவி என்பவளுடன் நட்புக் கொண்டிருந்தான். பின்பு ஊழ்வினை வயத்தால் அவன் மாதவியை விடுத்துப் பிரியுமாறு நேர்ந்துவிட்டது. கோவலன் தான் இழந்த பொருளை வணிகத் துறையின் வாயிலாகவே பெற விரும்பி மதுரைக்குக் கிளம்பினான். அவனுடன் கண்ணகியும் சென்றாள்.

மதுரையை அடைந்தபின்பு, கோவலன் தனது மனைவியின் சிலம்பு ஒன்றினை விற்றுவரச் சென்றான். அதுபொழுது கோவலனுக்கு எதிரில் பொற்கொல்லர் தலைவன் ஒருவன் வந்தான். அவனே அரசனது அரண்மனையிலிருந்து கோப்பெருந்தேவியின் சிலம்பு ஒன்றினைத் திருடியவன். தனது திருட்டை மறைப்பதற்குரிய வாய்ப்பினை அவன் எதிர்நோக்கியிருந்தான். அத்தகையானிடம் கோவலன் தனது சிலம்பினைக் காட்டி, அதனை விற்றுத் தருமாறு வேண்டினான். அவ்வளவில் பொற்கொல்லன் கோவலனைத் தனது மனையில் இருத்தி, பாண்டியன் நெடுஞ்செழியனிடம் சென்று, கோவலனே அரசியின் சிலம்பைத் திருடியவன் என்றும், அவனிடம் சிலம்பு உள்ளது என்றும் கூறினான். அரசனும் ஆராயாமல், கோவலனைக் கொன்று சிலம்பினைப் பெற்று வருமாறு ஏவலரை அனுப்பினான். ஏவலருள் ஒருவன் கோவலனைக் கள்வன் என்றே எண்ணிக் கொன்றுவிட்டான். தனது கணவன் கொலையுண்டமையை உணர்ந்த கண்ணகி பாண்டியனிடம் சென்று, வழக்குரைத்து, சிலம்பினை வாங்கியுடைத்துக் காட்டி, தன் கணவன் கள்வனல்லன் என்பதனை எடுத்துக் காட்டினாள். தனது செங்கோல் கோடியதை உணர்ந்த பாண்டியன் அவ்வளவில் இறந்தான். அவனது மனைவியும் இறந்தாள். கண்ணகி தனது சினத்தால் மதுரையை எரித்து, நடந்து சென்று, சேர நாட்டைச் சேர்ந்த திருச்செங்குன்றை அடைந்தாள். பதினான்காவது நாள் தேவர்கள் வானவூர்தியில் கோவலனுடன் வந்து, கண்ணகியை அழைத்துச் சென்றனர்.

இந்நிகழ்ச்சியைக் கண்ட குறவர்கள், அதனைச் செங்குட்டுவனிடம் கூறினர். அப்பொழுது அருகில் இருந்த மதுரைக் கூலவாணிகன் சாத்தனர் கண்ணகியின் வரலாற்றைக் கூறினர். செங்குட்டுவன் பின்பு இமயமலைக்குச் சென்று கல்லெடுத்து, அதனைக் கங்கையில் நீர்ப்படை செய்து, அதன்கண் கண்ணகியின் உருவத்தைப் பொறித்து, கோயிலில் அதனை நாட்டி விழாச் செய்தான்.

இந்நூல் பாடப்பெற்ற வரலாறு: கண்ணகி விண்ணுலகு சென்றமையைக் குறவர் கூறிய பின்பு, சாத்தனர் கண்ணகியின் வரலாற்றைக் கூறினர். அவ்வரலாறு இளங்கோவடிகளின் கருத்தைக் கவர்ந்தது. செங்குட்டுவன் பத்தினிக் கடவுளுக்குச் சிறப்பு செய்தகாலையில் அடிகளும் உடன் இருந்தார். முடிவேந்தர் மூவருக்கும் உரிய வரலாறு ஆதலால் அதனை முற்றத்துறந்த முனிவராகிய இளங்கோவடிகளே பாடுதற்குரியவர் என்று சாத்தனர் கூறினர். கண்ணகியின் வரலாறு கூறுமுகத்தான் உலகத்து மக்களுக்குச் சிறந்த அறிவுரைகளைக் கூறலாம் என்று தோன்றவே, அடிகள் அதனைப் பெருங்காப்பியமாகப் பாடி முடித்தார்.

நூல் கூறும் உறுதிப் பொருள் மூன்று: இந்நூல் சிறப்பாக மூன்று உறுதிப் பொருள்களைக் கூறுகின்றது. **அரசநீதி பிழைத்தோர்க்கு அறக்கடவுளே கூற்றுகும்** என்பதும், **பத்தினிக் கடவுளைத் தேவரும் போற்றுவர்** என்பதும், **ஊழ்வினை தன் பயனை ஊட்டும்** என்பதும் இந்நூல் கூறும் மூன்று உறுதிப் பொருள்கள் ஆவன.

பிற நூல்கட்கும் இதற்கும் உள்ள வேறுபாடு: பிற நூல்களைப் பாடிய ஆசிரியர்கள் அவ்வக்கதை நிகழ்ச்சிகள் நடைபெற்ற காலத்தில் வாழ்ந்திலர். பலர் கற்பனை செய்தே கதைகளைப் பாடல்களில் அமைத்தனர். சிலப்பதிகாரமோ அத்தகையதன்று. இதன் ஆசிரியராகிய இளங்கோவடிகள் சிலப்பதிகாரக் கதை நிகழ்ந்த காலத்தில் வாழ்ந்தவர்; கதையுடன் தொடர்பு கொண்டவர்; கதை நிகழ்ந்த காலத்து மக்களைப்பற்றி நன்கு உணர்ந்தவர். விருப்பு வெறுப்பற்ற நிலையில் நின்று அவ்வடிகளார் இந்நூலைப் பாடியருளினர்.

நம் பாடப் பகுதி: இருபதாவது காதையாகிய வழக்குரை காதையிற் பெரும்பகுதி. அக்காதை மதுரைக் காண்டத்தின்கண் உள்ளது.

வழக்குரை காதை

(கதைச் சுருக்கம்)

(கோவலன் கொலையுண்ட பின்னர், பாண்டியனது மனைவியாகிய கோப்பெருந்தேவி தீக்கனா நிகழ்ச்சிகளைக் கண்டு கலக்கமுற்று, அவற்றைத் தன் கணவனாகிய பாண்டியன் நெடுஞ்செழியனிடம் சொல்லிக் கொண்டிருந்தாள். அதுகாலையில் கையில் ஒற்றைச் சிலம்புடன் கண்ணகி பாண்டியனது அரண்மனை வாயிலை அடைந்தாள்.) அடைந்தவள், தனது வருகையை அரசனிடம் உரைக்குமாறு வாயிற்காவலனிடம் கூறினாள். அவளது தோற்றத்தினையும், சொற்களையும் கேட்ட வாயிற்காவலன் விரைந்து சென்று, அரசனுக்கு அவளது வருகையை அறிவித்தான். அரசனும் அவளை உள்ளே வரவிடுமாறு பணிக்கவே, கண்ணகி அரசன்முன் சென்றாள்; தனது சோழநாட்டரசரின் செங்கோன்மையையும், அருட் பண்பையும் எடுத்துரைத்தாள்; தான் யாவள் என்பதைக் கூறித் தன் கணவன் கள்வனல்லன் என்றாள்; தனது சிலம்பின் உட்பரல் மாணிக்கம் என்றும் குறிப்பிட்டாள். அரசனும் கோவலனிடமிருந்து

இலக்கணக் குறிப்பு: வாழி: 'வாழிய' என்னும் வியங்கோள் வினைமுற்றினுடைய ஈற்றில் நின்ற யகர உயிர் மெய் நீங்கி 'வாழி' என நின்றது. "வாழிய என்பதன் ஈற்றின் உயிர்மெய் ஏகலும் உரித்து" என்பது நன்னூல் சூத்திரத்தின் ஒரு பகுதி. தென்னம் பொருப்பு: 'அம்' என்பது ஈண்டுச் சாரியை. தலைவ, செழிய, தென்னவ, பஞ்சவ: அண்மை விளிகள்.

வாயிற் காவலன் கண்ணகியின் தோற்றத்தினை அரசனுக்கு விளக்குதல் (9—19)

"அடர்த்துஎழு குருதி அடங்காப் பசுந்துணிப்
பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி
வெற்றிவேல் தடக்கைக் கொற்றவை அல்லள்
அறுவர்க்(கு) இளைய நங்கை இறைவனை
ஆடல்கண் டருளிய அணங்கு சூருடைக்
கானகம் உகந்த காளி தாருகன்
பேர்உரம் கிழித்த பெண்ணும் அல்லள்
செற்றனள் போலும் செயிர்த்தனள் போலும்
பொன்தொழில் சிலம்பு ஒன்(று) ஏந்திய கையள்
கணவனை இழந்தாள் கடையகத் தாளே
கணவனை இழந்தாள் கடையகத் தாளே, என"

அடர்த்து - வெட்டு வாயிலிருந்து நிறைந்து
எழு - எழுந்து ஒழுகுகின்ற
குருதி - இரத்தம்
அடங்கா - நீங்காத
பசுந்துணி - பசுமையான துண்டமாகிய
பிடர் - பிடரொடு கூடிய
தலை - மயிடன் என்னும் அசுரனது தலையாகிய
பீடம் - பீடத்தினிடத்தே
ஏறிய - ஏறி நின்ற
மடம் - இளமையான
கொடி - கொடிபோல்பவளும்,
வெற்றிவேல் - வெற்றி தரும் வேலினை
தடக்கை - பெரிய கையில் தாங்கியவளுமாகிய
கொற்றவை அல்லள் - கொற்றவையும் (வெற்றிமகள்) அல்லள்.
அறுவர்க்கு - (கன்னியர் எழுவருள்) ஆறு பேர்கட்கு
இளைய - இளையவள் ஆகிய
நங்கை - பெண்ணாகிய பிடாரியும்,
இறைவனை - சிவபிரானை
ஆடல் கண்டருளிய - திருத்தம் ஆடச் செய்தருளிய
அணங்கு - தெய்வப் பெண்ணாகிய பத்திரகாளியும்,
சூர் உடை - அச்சத்தை உண்டாக்கும்
கானகம் - காட்டினிடத்தை
உகந்த - தனக்கு ஏற்ற இடமாக விரும்பிய
காளி - காளியும்,
தாருகன் - தாருகன் என்னும் அசுரனது
பேர் உரம் - அகன்ற மார்பினை
கிழித்த - பிளந்த
பெண்ணும்-பெண்ணாகிய துர்க்கையும்
அல்லள் - அல்லள் (அவள்).
செற்றனள்போலும் - தன்மனத்தே கறுவு கொண்டவள் போலவும்,
செயிர்த்தனள் போலும் - பெருஞ்சினம் கொண்டவள்போலவும்
தொழில் - தொழில் நுட்பம் அமைந்த
பொன் - பொன்னாலாகிய
சிலம்பு ஒன்று - சிலம்பு ஒன்றனை

ஏந்திய கையள் - தூக்கிப் பிடித்த கையினை உடையவளாய்,

கணவனை இழந்தாள் - தன் கணவனை இழந்தவள் ஒருத்தி

கடையகத்தாளே - நம் அரண்மனை வாயிலின் முன்னிடத்தே உள்ளாள்

கணவனை இழந்தாள் ——,

கடையகத்தாளே ——,

என - என்று கூற,

கருத்துரை : வாயிற் காவலன் பாண்டிய மன்னனைப் பார்த்து, 'நம் அரண்மனைவாயிலில் ஒருத்தி வந்து நிற்கின்றாள். அவள் கொற்றவையும், பிடாரியும், பத்திரகாளியும், காளியும், துர்க்கையும் அல்லள். கறுவும், சினமும் கொண்டவள்போல் அவள் நிற்கின்றாள் ; சிலம்பு ஒன்றினைத் தூக்கிப் பிடித்துள்ளாள். கணவனை இழந்தவள் அவள்' என்று கூறினான்.

விளக்கவுரை : அடர்த்து - நிறைந்து. குருதி - இரத்தம். துணி - துண்டம். தலை : ஈண்டு மயிடன் என்னும் அசுரனுடைய தலை. மடம் - இளமை. தடம் - பெரிய. கொற்றவை : வெற்றிதரும் பெண் தெய்வம் ; துர்க்கை என்றும் கூறுவர் சிலர். நங்கை : ஈண்டுப் பிடாரி. இறைவன் - சிவபிரான். ஆடல் - நிருத்தம், நட்டம், நடனம். அணங்கு - ஈண்டுப் பத்திரகாளி. சூர் - அச்சம். உகந்த - விரும்பிய. தாருகன் : ஓர் அசுரன். உரம் - மார்பு. பெண் : ஈண்டுத் துர்க்கை. செற்றம் - கறுவு. செற்றனள் - கறுவு கொண்டவள். செயிர்ப்பு - சினம். செயிர்த்தனள் - பெருஞ்சினங்கொண்டவள். கடையகம் - மனைவாயிலின் முன்னிடம். **அடர்த்து எழு குருதி அடங்காப் பசுந்துணிப் பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி வெற்றிவேல் தடக்கைக் கொற்றவை :** கொற்றவை வெற்றிக்கு உரிய பெண் தெய்வம். துர்க்காதேவி என்றும் இத்தெய்வத்தைச் சிலர் குறிப்பிடுவர். கொற்றவை மயிடன் என்னும் அசுரனைக்கொன்று, அவனது தலையையே பீடமாகக்கொண்டு ஏறி நின்றவள். மயிடனது தலை வெட்டுண்ட காலையில், அந்த வெட்டுவாயிலிருந்து இரத்தம் பெருகிக்கொண்டிருந்தது. அந்த இரத்தம் நீங்காத துண்டமாகிய தலையை அவள் பீடமாகக் கொண்டாள். இளங்கொடியே எனத் தக்க இயல்புடைய அவள் வெற்றிவேலினைக் கையினிடத்தே கொண்டிருந்தாள். **அறுவர்க்கு இளைய நங்கை :** தெய்வக் கன்னியர் எழுவர் என்று புராணம் கூறும். அக்கன்னியர் எழுவருள் இளையவள் பிடாரி ஆவாள். எனவே, அப்பெண் தெய்வம் அறுவர்க்கு இளைய நங்கை எனப்பட்டது. பிடாரியை ஒழிந்த ஏனைக் கன்னியர் அறுவராதலால் 'அறுவர்' எனப்பட்டனர். **இறைவனை ஆடல் கண்டருளிய அணங்கு :** சிவபிரானை நிருத்தம் ஆடச்செய்த பெண்தெய்வம் பத்திரகாளி. 'அணங்கு' என்னும் சொல் 'அச்சம்' என்றும் பொருள்படும். காண்போர்க்கு அச்சம் தரும் தோற்றத்தை உடைமையால் பத்திரகாளி 'அணங்கு' எனப்பட்டாள். **தாருகன் பேர் உரம் கிழித்த பெண் :** துர்க்கை. தாருகன் என்பவன் ஓர் அசுரன். அவனது அகன்றமார்பைப் பிளந்தவள் துர்க்கையாதலால் இவ்வாறு சுட்டப்பட்டாள். **செற்றனள்போலும் :** கண்ணகி தன் மனத்தில் கறுவு கொண்டவள்போல் தோற்றமளித்தாள். அவள் பழிக்குப் பழி வாங்கும் உணர்ச்சியுடன் ஆண்டு வந்தாளாதலால், வாயிற் காவலன் இவ்வாறு கூறினான். **கணவனை இழந்தாள் கடையகத்தாளே, கணவனை இழந்தாள் கடையகத்தாளே :** தன் கணவனை இழந்தாள் ஒருத்தி வாயிலின் முன்னிடத்தாள் என்று இருமுறை கூறினான் வாயிற் காவலன். ஏன் ? கண்ணகியின் அச்சம் தரும் தோற்றத்தால் அவன் நடுக்கங்கொண்டிருந்தான் அவளது வருகையால் அரசனுக்கு யாது தீங்கு வருமோ என்றும் அவன் கவலைகொண்டிருந்தான். இக்காரணங்களாலேயே அவன் இருமுறை இ

வாறு கூறினன். கண்ணகி முன்பு 'கணவனை இழந்தாள் கடையகத்தாள்' என்று குறிப்பிட்டாள் அன்றே? அச்சொற்களையே வாயிற் காவலன் கொண்டு கூறினன்.

வாயிற்காவலனது ஐயமும், தெளிவும்: கண்ணகியின் கடிய தோற்றம் அவள் கொற்றவையோ, பிடாரியோ, பத்திரகாளியோ, காளியோ, துர்க்கையோ என்றெல்லாம் வாயிற்காவலன் ஐயுறுமாறு செய்தது. அத்தெய்வங்கட்கு உரிய படைக்கலங்கள் இன்றிச் சிலம்பேந்திய கையுடன் கண்ணகி நின்றுளாதலால் அவனது ஐயம் நீங்கியது. அதனால்தான் 'அவர்கள் அல்லர்' என்று அவன் குறிப்பிட்டான்.

இலக்கணக் குறிப்பு: எழு குருதி: வினைத்தொகை. அடங்கா: ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். பசுந்துணி: பண்புத்தொகை. தலைப்பீடம்; இருபெயரொட்டுப் பண்புத் தொகை. தடக்கை: உரிச்சொல் தொடர். செற்றனள், செயிர்த்தனள்: ஈண்டு வினையாலணையும் பெயர்கள். சிலம்பு: காரணப்பெயர். 'கொற்றவை முதலியோர் போல்வாளாயினும் அவர்கள் அல்லர்' என்று கூறப்பெற்றுள்ளமை உண்மை உவமை அணி ஆகும்.

கண்ணகி பாண்டியனைப் பார்த்தல் (20—22)

"வருக மற்றவள் தருக ஈங்கெனன
வாயில் வந்து கோயில் காட்டக்
கோயில் மன்னனைக் குறுகினள் சென்றுழி"

(அத்தகையாள்)
வருக - வருவாளாக
அவள் - அவளை
தருக ஈங்கு - இவ்விடத்திற்கு அழைத்து வருவாய்
என - என்று பாண்டியன் வாயிலோனிடம் கூற
வாயில் - வாயிலோன்
வந்து - (கண்ணகியினிடம்) வந்து
(அவளை அழைத்துச் சென்று)
கோயில் காட்ட - அரண்மனையினிடத்தே மன்னனைக் காட்ட,
கோயில் மன்னனை - அரண்மனையின்கண் பாண்டியனை
குறுகினள் - அணுகியவளாய்
சென்றுழி - (கண்ணகி) சென்று நின்றபொழுது,

கருத்துரை: அத்தகையவளை அழைத்து வருக என்று மன்னன் கட்டளையிட்டான். வாயிலோனும் கண்ணகியை அழைத்துவந்து மன்னனைக் காட்டினன். கண்ணகி அரசனை அணுகி நின்றாள்.

விளக்கவுரை: வருக - வருவாளாக. தருக - அழைத்து வருவாய். வாயில் - வாயிலோன். கோயில் - அரண்மனை; அரசன் என்றும் பொருள் கூறுவர் சிலர். நிகழ்ச்சிகள் விரைந்து நடக்கவேண்டிய பகுதி இதுவாதலால், இளங்கோவடிகள் செறிவும், தெளிவும் மிக்க சொற்களை ஈண்டு அமைத்துள்ள அழகு சுவைத்தற்கு உரியது.

இலக்கணக் குறிப்பு: வருக, தருக: வியங்கோள் வினைமுற்றுக்கள். மற்று: அசைநிலை. வாயில்: இடவாகு பெயர். கோயில்: 'கோவில்' என்னுஞ் சொல் 'கோயில்' என்று வந்தது இலக்கணப் போலி (கோ+இல்=கோவில்). குறுகினள்: ஈண்டு முற்றெச்சம்.

மன்னனது வினு (23, 24)

" நீர்வார் கண்ணை எம்முன் வந்தோய்
யாரை யோநீ மடக்கொடி யோய்என "

நீர் வார் - நீர் ஒழுகும்
கண்ணை - கண்களை உடையவளாய்
எம்முன் - எம் எதிரில்
வந்தோய் - வந்து நின்றவளே!
மடக் கொடியோய் - இளங்கொடி போல்பவளே!
யாரையோ - நீ யார்?
என - என்று (அரசன்) கேட்ப,

கருத்து: தன்னை அணுகிநின்ற கண்ணகியை நோக்கிப் பாண்டியன், 'நீ யார்' என்று வினவினுன்.

விளக்கவுரை: வார் - ஒழுகும். கண்ணை - கண்களை உடையவளாய்; இனி 'கண்களை உடையவளே' என்று விளியாகவும் கொள்ளலாம். மடம் - இளமை. கண்ணகி வந்தமைக்குரிய காரணத்தையும், நீர் ஒழுகும் கண்களுடன் நின்றமைக்குரிய காரணத்தையும் வினவிய பாண்டியன், அவள் யார் என்பதனையும் சேர்த்து வினவினுன். நீர்வார் கண்ணை: கண்ணகி அடங்காத் துயர் கொண்டிருந்தமையைப் பாண்டியன் உணர்ந்துவிட்டான். அன்றியும், கண்ணகியின் நீரொழுகும் கண்கள் அவனுக்குத் தளர்ச்சியை உண்டாக்கி விட்டன. இவை பற்றியே இங்ஙனம் அவன் குறிப்பிட்டான்.

இலக்கணக் குறிப்பு: வார்கண்: வினைத் தொகை. யாரை: 'ஐ' என்பது இடைச் சொல்.

கண்ணகி வழக்குரைத்த திறம் (25—38)

" தேரா மன்ன செப்புவ(து) உடையேன்
எள்அறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்உறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்
வாயில் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்
அரும்பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகார்என் பதியே அவ்வூர்
ஏசாச் சிறப்பின் இசைவிளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனை யாகி
வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்
சூழ்கழல் மன்ன நின்னகர்ப் புகுந்துஈங்கு
என்கால் சிலம்புபகர்தல் வேண்டி நின்பால்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி
கண்ணகி என்பதுஎன் பெயரேஎன "

தேரா - (மன்னர்க்கு உரிய) ஆராய்ச்சி இல்லாத
மன்ன - அரசனே!
செப்புவது - உன்னிடத்தே சொல்லத் தருவது ஒன்று
உடையேன் - யான் உடையேன்
எள் அறு - இகழ்தல் அற்ற
சிறப்பின் - தலைமையையுடைய
இமையவர் - தேவர்களும்
வியப்ப - வியப்பு அடையுமாறு
புள் - புரு ஒன்று உற்ற
உறு - மிக்க
புன்கண் - துன்பத்தினை
தீர்த்தோன் - போக்கியவனும் (சிபியும்),
அன்றியும் - அவன் அன்றியும்,
வாயில்கடை - கடைவாயிலில் கட்டிய

மணி - மணியின்
நடு நா - நடுவில் உள்ள நாவானது
நடுங்க - அசைந்து ஒலிக்க,
ஆவின் - பசு ஒன்றின்
கடைமணி - கண்ணின் கருவிழிக் கடையிலிருந்து
உகுநீர் - ஒழுகும் நீர்
நெஞ்சு - தன்மனத்தை
சுட - வெதுப்புதலால்
தான் - தானே
தன் - தன்னுடைய
அரும்பெறல் - பெறுதற்கு அரிய
புதல்வனை - மகனை
ஆழியின் - தேர்க்காலில் இட்டு
மடித்தோன் - கொன்றவனும் (மனு வேந்தனும் ஆகிய இவ்விருவர்க்கும் உரிய)
பெரும் பெயர் - மிக்க புகழை உடைய
புகார் - காவிரிப்பூம் பட்டினமே
என்பதியே - யான்பிறந்த ஊராகும்.
அவ்வூர் - அவ்வூரினிடத்தே
ஏசா - பழிப்பு இல்லாத
சிறப்பின் - சிறப்பினை உடைய
இசை விளங்கு - புகழ் எங்கும் சென்று விளங்கிய
பெருங்குடி - பெருங்குடியில் தோன்றிய

மாசாத்து வாணிகன் - மாசாத்துவான் என்னும் வணிகனது
மகனை ஆகி - மகனைப் பிறந்து,
வாழ்தல் வேண்டி - பொருள் சேர்த்து வாழ்க்கை நடத்துதலை விரும்பி
ஊழ்வினை துரப்ப - முற்பிறப்பில் செய்த தீவினை செலுத்துதலால்
சூழ் கழல் மன்னா - வீரக்கழல் கட்டிய மன்னனே!
நின் நகர் - நினது மதுரை நகரின் கண்
புகுந்து - புக்கு,
ஈங்கு - இந்நகரில்
என் - எனது
கால் சிலம்பு - காலில் அணிந்த சிலம்பு ஒன்றினை
பகர்தல் வேண்டி - விற்றல் காரணமாக
நின்பால் - உன்னிடம் (வந்து)
கொலைக்களப்பட்ட - கொலையுண்ட
கோவலன் மனைவி - கோவலன் என்பவனுடைய மனைவியாவேன்.
கண்ணகி என்பது—
என் பெயரே - என் பெயராகும்
என - என்று கூற,

கருத்துரை : தன்னை யார் என வினவிய மன்னனை நோக்கிக் கண்ணகி, 'ஆராய்ச்சியில்லாத மன்னா! தேவர்களும் வியக்குமாறு புறா ஒன்றின் உயிரினைக் காத்தான் சிபி மன்னன். அரண்மனை வாயிலிற் கட்டிய மணியின் ஒலியைக்கேட்டு, பசுவின் கண்ணீர் தன் நெஞ்சைச் சுட்டதால், தன் மகனைத் தேர்க்காலில் இட்டுக் கொன்றான் மனுச்சோழன். இத்தகையோர்க்கு உரிய புகார் நகரமே என் ஊர். அவ்வூரில் மாசாத்துவான் என்னும் வணிகனது மகனைப் பிறந்து, வாணிகம் செய்து பொருள் ஈட்டும் பொருட்டு நின்னகரில் புகுந்து, என் காற்சிலம்பை விற்றல் காரணமாக நின்னால் கொலையுண்ட கோவலனது மனைவி யான். என் பெயர் கண்ணகி' என்று கூறி, வழக்குரைத்தாள்.

விளக்கவுரை : தேரா - ஆராய்ச்சி இல்லாத. செப்புவது - சொல்லத் தருவது. எள் - இகழ்தல். இமையவர் - தேவர். புள் - புறா. உறு - மிக்க, உற்ற. புன்கண் - துன்பம். தீர்த்தோன் - போக்கிய சிபி மன்னன். வாயில் கடை - கடைவாயில். நடுங்க - ஒலிக்க. கடைமணி - கண்ணின் கருவிழிக் கடை. உகு - ஒழுகும். அரும்பெறல் - பெறுதற்கு அரிய. ஆழி - தேர்க்கால். மடித்தோன் - கொன்றவனாகிய மனு வேந்தன். பெயர் - புகழ். புகார் - காவிரிப்பூம் பட்டினம். ஏசா - பழிப்பு இல்லாத. பெருங்குடி: மூவகை வணிகர் குடிகளுள் ஒன்று. இப்பர், கவிப்பர், பெருங்குடியர் என

வணிகர் மூவகைப்படுவர். மாசாத்துவான்: கோவலனது தந்தை. ஊழ்வினை - முற்பிறப்பில் செய்த தீவினை. துரப்ப - செலுத்தலால். பகர்தல் - விற்றல். கொலைக்களப் பட்ட - கொலையுண்ட. தேரா மன்ன: ஆராய்ச்சி அற்ற அரசனே, அரசர்க்கு இன்றியமையாதது ஆராய்ச்சி. ஆய்ந்தோய்ந்து பார்த்தே அரசர் செயலில் ஈடுபட வேண்டும். பாண்டியன் நெடுஞ்செழியன் ஆராயாமல் கோவலனைக் கொல்வித்தானாதலால் கண்ணகி இவ்வாறு அவனை விளித்தாள். இதனாலேயே முன்பு கண்ணகி, 'அறிவு அறை போகிய!' என்று அரசனைக் குறிப்பிட்டுள்ளாள். (அறிவு அறைபோகிய - அறிவு கீழற்றுப் போகிய) அறிவு அறை போகியவன் ஆதலால், கண்ணகி 'தேரா மன்ன' என்று விளித்தது பொருத்தமேயாகும். இமையவர் வியப்பப் புள் உறு புன்கண் தீர்த்தோன்: தேவர்களும் வியக்குமாறு புறா ஒன்றுக்கு உற்ற மிக்க துன்பத்தைப் போக்கியவன் சிபிச் சோழன். அவனைப் பற்றிய கதை: சிபி என்பவன் சோழர்மரபைச் சார்ந்த ஒரு மன்னன். (இவன் வடநாட்டு மன்னன் என்றும் சிலர் கூறுவர்) அவன் எல்லா உயிர்களினிடத்தும் பேரருள்காட்டி வந்தான். அவனது அருட்பான்மையைச் சோதிக்க விரும்பினர் இந்திரனும், இயமனும். அதுபற்றி அவ்விருவரும் முறையே பருந்தாகவும், புறாவாகவும் வடிவெடுத்தனர். புறவைப் பருந்து துரத்தியது. புறா நடுநடுங்கிப் பறந்துவந்து சிபி மன்னனிடம் அடைக்கலம் புகுந்தது. மன்னன் அப்புறாவினிடம் அருள் காட்டிப் போற்றினான். புறாவினைத் துரத்திவந்த பருந்து, தனது இரையாகிய புறாவினைத் தன்னிடம் அளிக்குமாறு கேட்டது. சிபியோ மறுத்து, புறாவின் நிறையளவு தன் உடம்பின் தசையைத் தர இசைந்தான். அவ்வளவில் தராசு ஒன்று நிறுத்தப்பட்டது. ஒரு தட்டில் புறா வைக்கப்பட்டது. சிபி மன்னன் தன் உடம்பின் தசையை வாளினால் அரிந்து அரிந்து மற்றொரு தட்டில் வைத்தான். ஆயின், புறா இருந்த தட்டு மேல் நோக்கி எழவே இல்லை. பார்த்தான் மன்னன். அவனே தராசுத்தட்டில் ஏறி நின்றான். அஃதாவது, அப்புறவின் பொருட்டுத் தன் உயிரையே கொடுக்க முன்வந்தான் சிபி. தராசுத் தட்டுகள் சமமாயின. அவ்வளவில் புறாவும், பருந்தும் மறைந்தன. இந்திரனும், இயமனும் அவனுக்குக் காட்சி கொடுத்து, அவனது அருட் பண்பைப் போற்றினர். சிபியும் பழைய தன் நல்லுடலைப் பெற்றான். இக்கதையினை,

"........................கொடுஞ் சிறைக்
கூர்உகிர்ப் பருந்தின் ஏறுகுறித் தொரீஇத்
தன்னகம் புக்க குறுநடைப் புறவின்
தபுதி அஞ்சிச் சீரை புக்க
வரையா ஈகை உரவோன் மருக"

என்னும் புறநானூற்று அடிகளாலும் உணரலாம்.

தான் தன் அரும்பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்: பெறற்கு அரிய தன் மகனைத் தேர்க்காலில் இட்டுக் கொன்றவன் மனுச் சோழன். அவனைப் பற்றிய கதை: திருவாரூரில் இருந்து சோழ நாட்டை ஒரு காலத்தில் மனு நீதி கண்ட சோழன் என்பவன் அரசாண்டு வந்தான். அவனது மகன் வீதி விடங்கன். அம்மகன் ஒருநாள் தேர் ஏறி வீதியில் சென்றான். அதுகாலையில் இளைய பசுங்கன்று ஒன்று துள்ளிவந்து தேர்க் காலில் அகப்பட்டு இறந்தது. கன்றினை இழந்த தாய்ப்பசு, அலறிக் கண்ணீர் சொரிந்தவாறு சென்று, அரசனது அரண்மனை வாயிலிற் கட்டியிருந்த ஆராய்ச்சி மணியினைத் தன் கொம்பால் முட்டி அடித்தது. மணியோசை கேட்ட மன்னன் நடுநடுங்கி, வாயிற்புறத்தே வந்தான்; பசுவின் கண்ணீரைக் கண்டான்; பெருவருத்தம் அடைந்தான்; பசுவுக்கு நேர்ந்த துயரைக் கேட்

டறிந்தான்; தவறு செய்தவன் தன் மகன் என்று நினையாதவனாய்த் தேரை ஊர்ந்து சென்றான்; மகனைக் கீழே கிடத்தினான்; அவன் மீது தேரைச் செலுத்தி அவனைக் கொன்றான். இவ்வாறு நீதி தவறாத மன்னனது மாண்பி னைக் கண்ட சிவபிரான் மகிழ்ந்து, அவனுக்குக் காட்சி கொடுத்து, இறந்த மக னும், பசுங்கன்றும் உயிர் பிழைத்தெழ அருள் செய்தார். இக்கதையினைப் பெரிய புராணம் விளங்கக் கூறுகிறது. பெரியபுராணத்தில் உள்ள,

"ஒருமைந்தன் தன்குலத்துக்(கு) உள்ளான்என் பதும்உணரான்
தருமம்தன் வழிச்செல்கை கடன்என்று தன்மைந்தன்
மருமம்தன் தேராழி உறவூர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி அரிதோமற்(று) எளிதோதான்."

என்னும் பாடல் மனுச்சோழனது செங்கோல் முறையைப் பாராட்டுகின்றது.

இவ்விரு கதைகளையும் கண்ணகி சுட்டிக்காட்டிய காரணம்: புறா ஒன்றின் பொருட்டாகத் தன் உயிரைக்கொடுக்க முற்பட்டான் சிபி மன்னன். பசுங்கன்று இறந்தமைக்காகத் தன் மகனைத் தேர்க்காலில் இட்டுக் கொன் றான் மனுச்சோழன். இத்தகைய அருட் பண்பும், செங்கோன்மையும் வாய்ந்த சோழ மன்னர்கள் அரசாண்ட சோழ நாட்டின் தலைநகரமாகிய காவிரிப்பூம் பட்டினமே தான் பிறந்த ஊர் என்றாள் கண்ணகி. இவ்வாறு ஏன் கூறினாள்? ஆராய்ச்சியின்றிக் கோவலனைக் கொல்வித்தான் பாண்டி யன் நெடுஞ்செழியன். அவன் அருளும், செங்கோன்மையும் அற்றவன் என் பதைக் குறிப்பினாற் புலப்படுத்தும் பொருட்டே கண்ணகி இவ்விரு கதைகளை யும் குறிப்பிட்டாள். ஊழ்வினை துரப்ப: செங்கோல் செலுத்தும் சோழர் ஆண்ட நாட்டை விடுத்துப் பாண்டி நாட்டிற்குக் கோவலனைச் செலுத்தியது அவனது ஊழ்வினையேயன்றோ? பாண்டியன் ஏவலால் அவன் கொலையுண் டமையும் தனது ஊழ்வினையினால் அன்றோ? இக்காரணங்கள் பற்றியே கண்ணகி இவ்வாறு கூறினாள். சூழ்கழல் மன்னா: இஃது இகழ்ச்சிக் குறிப்புடன் அமைந்தது. 'நின்னிடம் கழல் சூழ்வு இருக்கின்றதே அன்றி அறிவுச் சூழ்வு இல்லையே' என்னும் உட்பொருள் இதன்கண் அமைந் துள்ளது. நின்னகர், நின்பால் என்னும் சொற்றொடர்கள் பாண்டியன் முறை தவறியமையை வலியுறுத்தும் பொருட்டு அமைந்தன.

இலக்கணக் குறிப்பு: தேரா-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். வாயில்: இலக்கணப் போலி. உகுநீர்: வினைத் தொகை. தீர்த்தோன், மடித்தோன்: ஈண்டு வினையாலணையும் பெயர்கள். மகனை: 'ஐ' என்பது இடைச்சொல்.

அரசன் தன்மீது தவறு இல்லை எனல் (38—40)

"...........................பெண் அணங்கே!
கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று
வெள்வேல் கொற்றம் காண்என"

பெண் அணங்கே - தெய்வப்பெண் போல்பவளே!
கள்வனைக் கோறல் - கள்வனைக் கொலை செய்தல்
கடுங்கோல் அன்று - கொடுங் கோன்மை ஆகாது;
வெள்வேல் - வெண்மையான வேலி னால் பெறத்தக்க
கொற்றம் - அரச நீதி அதுவேயா கும்
என - என்று கண்ணகியினிடம் கூற,

கருத்துரை : கள்வனைக் கொல்லுதல்தான் அரச நீதியாகும் என்று பாண்டியன் கண்ணகியினிடம் கூறினன்.

விளக்கவுரை : அணங்கு - தெய்வப் பெண். கோறல்-கொலை செய்தல். கொற்றம் - அரச நீதி. **கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று வெள் வேல் கொற்றம் :** செங்கோலரசனவான் குடிமக்களுக்குத் தீங்கு வாராமல் காத்தல் வேண்டும். எனவே, அரசன் தனது நாட்டில் உள்ள கொடியவர் களைக் கொலை செய்வது செங்கோலே ஆகும். கள்வர் முதலியோர் கொடிய வர்கள் ஆவர். அதுபற்றியே பாண்டியன், கள்வனைக் கொல்லுதல் அரச நீதியாகும் என்றான். 'வெள்வேல் கொற்றம்' என்பது அரச நீதியாகும்.

"கொலையின் கொடியாரை வேந்துஒறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்"

என்னும் திருக்குறள் ஈண்டு ஒப்பு நோக்கற்பாலது.

இலக்கணக் குறிப்பு : கொல்+தல்=கோறல் : **தொழிற் பெயர்.** கடுங் கோல், வெள்வேல் : **பண்புத் தொகைகள். காண் :** முன்னிலையசை.

தனது சிலம்பின் உட்பரல் மாணிக்கம் என்று கண்ணகி கூறல் (40-42)

"...............................ஒள்ளிழை
நல்திறம் படராக் கொற்கை வேந்தே
என்கால் பொற்சிலம்பு மணியுடை அரியே என"

ஒள் இழை - ஒளி பொருந்திய ஆபர ணங்களையுடையவளாகிய கண் ணகி (அரசனைப் பார்த்து)
நல்திறம் - அற வழியில்
படரா - செல்லாத
கொற்கை - கொற்கை நகரத்து
வேந்தே - அரசனே !
என் கால் - என் காலுக்கு அணியா கிய
பொன் சிலம்புஉடை - பொன்னு லாகிய சிலம்பினுடைய
அரி - பரல்
மணியே - மாணிக்கமே
என - என்று கூற,

கருத்துரை : தன்னுடைய சிலம்பின் உள்ளே யிடப்பெற்ற பரல் மாணிக்கம் என்று கண்ணகி அரசனிடம் கூறினாள்.

விளக்கவுரை: ஒள் - ஒளி. இழை - ஆபரணம். ஒள்ளிழை : ஈண்டுக் கண்ணகியைக் குறித்தது. நல்திறம் - அறவழி, அறத்தின் கூறுபாடு. படர் தல் - செல்லுதல். படரா - செல்லாத. **கொற்கை :** பாண்டி நாட்டுக் கடற் கரை ஊர்; கடைச் சங்கப் பாண்டியர் காலத்தில் முத்துக் குளிக்கும் தொழி லுக்குப் பெயர்பெற்றிருந்தது. பாண்டிநாட்டு இளவரசர் இவ்விடத்தில் இருந்து தமக்குரிய பகுதியை ஆண்டனர் என்று தெரிகிறது. 'என்கால் பொன் சிலம்புடை அரி மணியே' என இயைத்துப் பொருள் கொள்ளவேண் டும். **நற்றிறம் படரா :** அறநெறியில் செல்லாத. பாண்டியன் ஆராய்ந்து பாராமல் தன் கணவன் மீது களவுக் குற்றம் சுமத்திக் கொன்று விட்டானத லால் கண்ணகி இங்ஙனம் குறிப்பிட்டாள். பாண்டியன், 'கள்வனைக் கொல் வது அரச நீதியே ஆகும்' என்று முன்பு குறிப்பிட்டான் அன்றே? அதற்கு விடையாகக் கண்ணகி, அவன் அறத்தின் கூறுபாடுகளை அறியாதவன் என் றும், ஆராய்ந்து பாராமல் கோவலனைக் கொன்றமையே அதற்குச் சான்று என்றும் குறிப்பில் பொருள்படுமாறு, 'நற்றிறம் படரா' என்னும் அடை மொழிகளை அரசனுக்கு அமைத்தாள். **கொற்கை வேந்தே :** கொற்கை நகர்க்கு உரிய அரசனே ! இளங்கோவடிகளார் ஈண்டுக் கொற்கை நகரைக் குறிப்பிடக் காரணம் யாது? கோவலனை ஆராயாமல் கொன்ற கையினை

உடையவன் அவன் (கொல்+கை=கொற்கை) என்று குறிப்பினால் வெளிப் படுத்த விரும்பியே போலும்! இவ்வடியின் நயம் சுவைத்து இன்புறுதற்கு உரியது.

இலக்கணக் குறிப்பு: ஒள்ளிழை: பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. படரா: ஈறுகெட்ட எதிர்மறைப் பெய ரெச்சம். பொற்சிலம்பு: மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

பாண்டியன் தான் கொண்டசிலம்பை முன்வைக்க, கண்ணகி அதனை உடைத்தல் (43—47)

"தேமொழி உரைத்தது செவ்வை நன்மொழி
யாமுடைச் சிலம்பு முத்துடை அரியே
தருகஎனத் தந்து தான்முன் வைப்பக்
கண்ணகி அணிமணிக் காற்சிலம்(பு) உடைப்ப
மன்னவன் வாய்முதல் தெறித்தது மணியே."

தேமொழி - 'தேன்போலும் இனிய மொழியினை உடைய இக்கண்ணகி
உரைத்தது - சொல்லியது
செவ்வை-(உண்மை உணர்வதற்கு) செவ்விதான
நன் மொழி - நல்ல மொழியே ஆகும்.
யாம் உடைச் சிலம்பு உடை - எம் முடைய சிலம்பினது
முத்து அரி - பரல் முத்தேயாகும்' (என்று தனக்குள் நினைத்து),
தருக என - (கோவலனிடமிருந்து கவர்ந்த சிலம்பினை) கொண்டு வருக என்று (ஏவலர்க்குக் கூறி)
தந்து - (அச்சிலம்பினை) வருவித்து
தான் - தானே
முன்வைப்ப - (அதனைக் கண்ணகி யின்) முன்னே வைத்தனனாக
கண்ணகி ——,
அணி - தான் அணியும்
மணி - அழகிய
சிலம்பு உடைப்ப - அச்சிலம்பினை உடைத்த காலையில்,
மணி -(அதனின்று எழுந்த) மாணிக் கப் பரல்
மன்னவன் - பாண்டியனது
வாய் முதல் - முகத்தினிடத்து
தெறித்தது - தெறித்து வீழ்ந்தது.

கருத்துரை: 'கண்ணகியின் உரை செவ்விதாகும். நமது சிலம்பின் உட்பரல் முத்தேயன்றோ?' என்று கருதிய பாண்டியன், கோவலனிடம் கொண்ட சிலம்பினைத் தருவித்துக் கண்ணகியின் முன் வைத்தான். கண் ணகி அதனை உடைத்தாள். அவ்வளவில் அதனுள்ளிருந்து எழுந்த மாணிக் கப்பரல் பாண்டியனது முகத்தில் தெறித்து வீழ்ந்தது.

விளக்கவுரை: தேமொழி: தேன்போலும் இனிய சொல்லினை உடை யாள்; ஈண்டுக் கண்ணகி. செவ்வை - செவ்விதான, நேரான, உண்மை உணர்வதற்கு உதவும். செவ்வை மொழி - நீதி மொழி. சிலம்புடை அரி முத்து என மாற்றுக. தருக - கொண்டு வருக. அணி - அணியும். வாய் முதல் - முகத்தினிடத்தே. வாய் - முகம். மணி - மாணிக்கப் பரல். தேமொழி: தேன்போலும் இனிய சொல்லினை உடையவளாதலால் கண் ணகி இவ்வாறு சுட்டப்பெற்றாள். சினம் பொங்கிய நிலையிலும், அவளது உரையில் இனிமையைக் கண்டான் பாண்டியன். அவள் கூறிய உரை பொருத்தமாகவும், உண்மையை உணர்வதற்கு உறுதுணையாகவும் இருந் தமைபற்றி அங்ஙனம் குறிப்பிட்டான் என்றும் கொள்ளலாம். இனி, 'தேமொழி' என்பதனைக் கண்ணகியை விளிக்குஞ் சொல்லாகவும் கொள்வர்

சிலர். அஃது அத்துணைப் பொருத்தம் உடையதன்று. செவ்வை நன் மொழி : செவ்விதான நல்ல மொழியே ஆகும். 'செவ்வை மொழி' என்பது நீதி மொழி. அறத்தின் கூறுபாடுகளுக்கு ஏற்றவாறு பொருத்தமாக அவள் கூறினள் அன்றே? மேலும், மெய்யை உணர்தற்கு அவள் உரை உறுதுணை யாக உள்ளது அன்றே? இக்காரணங்கள் பற்றியே பாண்டியன் இங்ஙனம் கூறிக் கொண்டான். தருக என : சிலம்பினைக் கொண்டு வருக என. கோவ லனிடமிருந்து பெற்ற சிலம்பினைக் கொண்டு வருக என்று பாண்டியன் தன் ஏவலரிடம் கூறினன். பாண்டியன் செங்கோலனதலாலும், உண்மை காண் பதில் விருப்பங் கொண்டிருந்தானதலாலும், ஒருவேளை தான் தவறு செய்தி ருத்தல் கூடுமோ என்று தனக்குள் ஐயம் கொண்டானதலாலும் உடனே அவன் அச்சிலம்பினைக் கொண்டுவருமாறு ஏவினன் என்க. மன்னவன்வாய் முதல் தெறித்தது மணியே : அரசனது முகத்தினிடத்தே மாணிக்கப்பரல் தெறித்து வீழ்ந்தது. கண்ணகி தன் முன்னர் வைக்கப்பெற்ற சிலம்பினை எடுத்து உடைத்தாள். அவ்வளவில் அதனின்றும் எழுந்த மாணிக்கப் பரல் தெறித்தது. எவ்விடத்தில் தெறித்தது? மன்னவனது முகத்தினிடத்தில் தெறித்தது. ஏன்? பாண்டியன் உண்மையை உணர வேண்டுமன்றே? தனது சிலம்பின் உட்பரல் முத்தாக இருக்கும்பொழுது, இச்சிலம்பிலிருந்து மாணிக் கப் பரல் தெறிக்கின்றதே என்பதனை அவன் அறிய வேண்டுமன்றே? இனி, உண்மையொன்றை நன்கு எடுத்துக் காட்ட விரும்புகின்றவர்கள், அவ்வுண் மையை விளக்கும் பொருளைக் கண்ணுக்கு எதிரில் கொண்டுவந்து காட்டுவார் களன்றே? இத்தகைய காரணங்களைக் கருத்திற் கொண்டே இளங்கோவடி களார் நயமாக இவ்வடியினை இவ்வாறு அமைத்தார்.

இலக்கணக்குறிப்பு: தேன்+மொழி=தேமொழி. "மென்மை மேவின் இறுதி அழிவும்" என்னும் நன்னூல் விதியால் நிலைமொழி ஈற்று னகரம் கெட்டது. தேமொழி: ஈண்டு உவமத் தொகைப் புறத்துப் பிறந்த அன் மொழித் தொகை. தருக : வியங்கோள் வினைமுற்று. தருக+என= தருகென. நிலை மொழியின் ஈற்று அகரம் தொக்கது தொகுத்தல் விகாரம். தருக : 'தா' என்பது பகுதி. முதல் : ஏழாம் வேற்றுமை உருபு.

உண்மை உணர்ந்த பாண்டியன் தளர்ந்து வீழ்தல் (47—53)

"..............................மணிகண்டு
தாழ்ந்த குடையன் தளர்ந்தசெங் கோலன்
பொன்செய் கொல்லன் தன்சொல் கேட்ட
யானோ அரசன் யானே கள்வன்
மன்பதை காக்கும் தென்புலம் காவல்
என்முதல் பிழைத்தது கெடுகஎன் ஆயுள்என
மன்னவன் மயங்கிவீழ்ந் தனனே."

மணிகண்டு - (தெறித்த) மாணிக்கப் பரலைக் கண்டு
தாழ்ந்த குடையன் -(பெருமையை இழந்து) தாழ்வுற்ற குடையனாய்,
தளர்ந்த செங்கோலன் - சோர் வுற்ற செங்கோலனாய்,
பொன் செய் - 'பொன் தொழில் செய்யும்
கொல்லன் தன் - கொல்லனது
சொல் - பொய்யுரையை
கேட்ட - கேட்டு (உண்மை என்று கருதி) முறை தவறிய
யானோ அரசன் - யான் ஓர் அர சன் ஆவேனோ? (ஆகேன்).
யானே கள்வன் - (கள்வன் என்று யான் துணிந்த அக்கோவலன் கள்வனல்லன்) கள்வன் யானே.
மன்பதை - மக்கட் கூட்டத்தை

காக்கும் - காக்கின்ற
தென்புலம் காவல் - பாண்டி நாட்டின் ஆட்சி
என் முதல் - என்னை முதலாகக் கொண்டு
பிழைத்தது - தவறு அடைந்தது.
என் ஆயுள் - என் வாழ்நாள்
கெடுக - அழிவதாக'
என - என்று கூறி
மன்னவன் - பாண்டிய மன்னன்
மயங்கி வீழ்ந்தனன் - மயக்க முற்று வீழ்ந்தான்.

கருத்துரை: கோவலனிடமிருந்து கொணர்வித்த சிலம்பைக் கண்ணகி உடைத்த அளவில், அதனுள்ளிருந்து மாணிக்கப் பரல் தெறித்ததன்றே? அப்பரலைக் கண்டான் அரசன்; உண்மையை உணர்ந்தான்; பொற்கொல்லன் சொற்கேட்டு, முறை தவறியமையை அறிந்தான்; துன்புற்று மயங்கி வீழ்ந்தான்.

விளக்கவுரை: மணி - மாணிக்கப் பரல். தாழ்ந்த - தாழ்வுற்ற. பொன் செய் - பொன் வேலை செய்யும். மன்பதை - மக்கட் கூட்டம். தென்புலம் - தென்னாடு; பாண்டி நாடு. பிழைத்தது - பிழை உற்றது; தவறு அடைந்தது. ஆயுள் - வாழ்நாள். **மணிகண்டு:** கோவலனிடமிருந்து கொணர்வித்த சிலம்பின் உள்ளே இருந்து தெறித்து வீழ்ந்த மாணிக்கப் பரலைக் கண்டான் பாண்டியன். தனது சிலம்பின் உட்பரல் முத்தாக இருக்க, கண்ணகி உடைத்த சிலம்பிலிருந்து மாணிக்கப் பரல் தெறித்தமை கண்டவுடன் பாண்டியன் தன் பிழையை உணர்ந்தான். 'கண்டு' என்னும் சொல் இக்கருத்தினையும் தன்னகத்தே அடக்கிக் கொண்டுள்ளது. **தாழ்ந்த குடையன்:** அரசன் தன்னிடம் குடையொன்றை வைத்துள்ளான். எதற்கு? வெயிலிலிருந்தும், மழையிலிருந்தும் தன்னைக் காத்துக் கொள்ளும் பொருட்டன்று. தனது நாடுகாத்தல் தொழிலை நினைவூட்டுதற் பொருட்டே அவன் குடையை வைத்துள்ளான். குடையைக் கண்டவுடன், மக்களை வெயிலிலிருந்தும், மழையிலிருந்தும் காக்கும் குடையின் தொழில் அவனது நினைவுக்கு வரும். நாடு காக்கும் அவன் கடமையை அக்குடை அடிக்கடி நினைவூட்டிக் கொண்டிருக்கும். நாடு காக்கும் தொழில் இப்பொழுது கெட்டதன்றோ? கள்வன் அல்லாதவனைக் கள்வன் எனக் கருதி நெடுஞ்செழியன் கொன்று விட்டான் அன்றோ? அக்காரணத்தால் அவனது குடையின் பெருமை தாழ்ந்தது என்னும் கருத்தினாலேயே 'தாழ்ந்த குடையன்' என்று ஈண்டுக் கூறப்பட்டது. **தளர்ந்த செங்கோலன்:** அரசனிடம் நேரிய கோல் ஒன்று இருக்கும். அதற்குச் செங்கோல் என்று பெயர். அதனை மன்னன் கையிற் கொண்டிருக்கக் காரணம் யாது? அக்கோல் நேராக இருத்தல் போல் அரசன் நடுவு நிலைமையுடன் அரசாள வேண்டும் என்பதனை அறிவுறுத்தவே அந்தக்கோல் உள்ளது. அதனைப் பார்க்குந்தோறும், நடுவு நிலைமையாக நடக்க வேண்டிய தன் கடமை அரசனது நினைவுக்கு வரும். நடுவு நிலைமை தவறி ஈண்டு அரசன் நடந்து விட்டான் அல்லவா? அதனைக் கருத்தில் கொண்டே ஆசிரியர் 'தளர்ந்த செங்கோலன்' என்று குறிப்பிட்டார். **யானோ அரசன் யானே கள்வன்:** அரசனாவான் தன்னுடைய அமைச்சர் முதலாயினருடன் ஆராய்ந்த பிறகே ஒரு செயலை ஆற்ற வேண்டும். ஐம்பெருங்குழுவினர் போன்றோர் அரசனுக்கு அறிவுரை கூறுவர். அவற்றையெல்லாம் கேட்டே அரசன் ஒரு செயலில் முடிவுக்கு வருதல் வேண்டும். அத்தகைய தன் கடமை பாண்டியனது நினைவுக்கு வந்தது. பொற்கொல்லன் ஒருவனது சொல்லினைக் கேட்டு, விரைந்து முடிவுக்கு வந்து, கொடுமை செய்துவிட்டானாதலால், அவன் 'யானோ அரசன்' என்று கூறிக் கொண்டான். அரசனாக இருத்தற்கு யான் தகுதியற்றவன் என்பது இதன் கருத்து. இனி, கோவலனுக்கு

உரிய சிலம்பினைப் பாண்டியன் கவர்ந்தானன்றே? ஒருவனுக்கு உரிய ஒரு பொருளை மற்றொருவன் கவர்தல் களவு அன்றோ? எனவே பாண்டியன், 'யானே கள்வன்' என்றான். மாணிக்கப்பரல் தெறித்தமையால் கோவலன் கள்வனல்லன் என்னும் உண்மை புலப்பட்டு விட்டதன்றோ? ஈண்டு 'யானே' என்னும் சொல் 'கோவலன் கள்வனல்லன்' என்பதனையும் குறிப்பால் வெளிப்படுத்தும். **தென்புலம் காவல் என்முதல் பிழைத்தது:** தென்புலம் என்பது தென்னாடாகிய பாண்டி நாடு. தென்னாட்டை ஆண்ட பாண்டிய மன்னர்கள் இவ்வாறு கொடுங்கோல் செய்திலர் என்னும் நினைவு பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு வந்தது. 'பாண்டியன் நெடுஞ்செழியன் காலத்தில் கொடுங்கோல் நிகழ்ந்தது' என்று உலகம் கூறுமே என்பதும் அவனது நினைவுக்கு வந்தது. தான் கோல் தவறிய குற்றம் தன் வழி வருவார்க்கும் எய்துமே என்னும் கருத்து அவனது உள்ளத்தைச் சுட்டது. இவற்றை யெல்லாம் நினைத்தே பாண்டியன் இவ்வாறு கூறிக்கொண்டான். **கெடுக என் ஆயுள் என:** என் வாழ்நாள் அழிவுறுவதாக என்று சொல்லி. பழி வருவனவற்றைச் செய்யாத பாண்டியர் குடிக்குத் தான் பழிச்சொல் ஒன்றை உண்டாக்கி விட்டானாதலால், இனி இவ்வுலகில் வாழ நாணி, நெடுஞ்செழியன் இவ்வாறு கூறினான். 'தீவினை வளைத்த கோலை, நெடுஞ்செழியன் தன் உயிரைக் கொடுத்து நிமிர்த்திச் செங்கோலாக்கினான்' என்று இளங்கோவடிகள் மற்றோரிடத்தில் குறிப்பிடுகின்றார்.

இலக்கணக் குறிப்பு: குடையன், செங்கோலன்: குறிப்பு முற்றெச்சங்கள். செய்கொல்லன்: **வினைத்தொகை.** யானோ: **ஓகாரம் எதிர்மறை.** யானே: **ஏகாரம் தேற்றம்.** கெடுக: **வியங்கோள் வினைமுற்று.**

கோப்பெருந்தேவியின் ஆறிய கற்பு

"..............................தென்னவன்
கோப்பெருந் தேவி குலைந்தனள் நடுங்கிக்
கணவனை இழந்தோர்க்குக் காட்டுவ(து) இல்லென்று
இணை அடி தொழுதுவீழ்ந் தனளே மடமொழி."

(மன்னவன் மயங்கி வீழ்ந்தமை கண்டு)
மடமொழி - அழகு பொருந்திய சொல்லினை உடையவளாகிய,
தென்னவன் - அப்பாண்டியனது
கோப்பெருந் தேவி - மனைவியான கோப்பெருந்தேவி
குலைந்தனள்-மனம் நடுங்கியவளாய்
நடுங்கி - உடல் நடுக்குற்று
கணவனை - கணவனை
இழந்தோர்க்கு - இழந்த மகளிர்க்கு
காட்டுவது - (பிறர்க்கு முறை சொல்லிக் காட்டுவது போல்) காட்டலாவது
இல் என்று - இல்லை என்று கருதி
இணை அடி - (தன் கணவனுடைய) இரண்டு அடிகளையும்
தொழுது - தொட்டு வணங்கி
வீழ்ந்தனள் - நிலத்தில் வீழ்ந்தாள்.

கருத்துரை: தனது கணவன் மயங்கி வீழ்ந்தமையைக் கண்ட கோப்பெருந்தேவி, கண்ணகியைத் தேற்றுதற்குரிய வழியை அறியாமல், தன் கணவனை வணங்கியவாறே கீழே வீழ்ந்தாள்.

விளக்கவுரை: தென்னவன்: பாண்டியன் நெடுஞ்செழியன். கோப்பெருந்தேவி: நெடுஞ்செழியனது மனைவி. குலைந்தனள்-மனம் நடுங்கியவளாய். **காட்டுவது** - முறைசொல்லிக் காட்டத்தக்கது. இணை - இரண்டு. மடமொழி - அழகு அமைந்த சொற்களை உடையவளாகிய கோப்பெருந்தேவி. மடம் - அழகு, இளமை, அறியாமை. **கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது**

இல் : இவ்வுலகில் எத்தகைய துயரம் உற்றோர்க்கும் தேறுதல் உரை கூற லாம். தாயை இழந்த மகனுக்குச் சிற்றன்னையைக் காட்டி, அவளையே தாயாக நினைத்துக் கொள்ளுமாறு முறை கூறி, அவனைத் தேற்றலாம். மனைவியை இழந்த கணவன் மற்றொரு பெண்ணை மணம் முடித்துத் தேறுதல் அடைய லாம். மகனை இழந்த தாய், வேறொரு பிள்ளையை மகன் முறை சொல்லி அழைத்துத் தேறுதல் அடையலாம். ஆயின், கணவனை இழந்த மனைவி எங்ஙனம் தேறுவாள்? உற்றார் உறவினரை இழந்தோர்க்கு முறைசொல்லிப் பிறரைக் காட்டுவதுபோல், கணவனை இழந்த கற்புடை மனைவிக்குப் பிறன் ஒருவனைக் கணவனாக முறைசொல்லிக் காட்டுதலும் கூடுமோ? கணவனை இழந்த கற்புடைக் காரிகையாகிய கண்ணகியைக் கோப்பெருந்தேவி எவ்வுரை கூறித் தேற்றுவாள்? தேற்றும் வழி இல்லையாதலாலேயே, கோப்பெருந் தேவி மயங்கி வீழ்ந்தாள். இவ்வடியின் பொருட்செறிவு அறிந்து இன்புறு தற்குரியது. இணையடி தொழுது வீழ்ந்தனள்: கோப்பெருந்தேவி, தன் கணவனுடைய இரண்டு அடிகளையும் தொட்டு வணங்கி வீழ்ந்தாள். இவ்வாறு விழக் காரணம் யாது? கோப்பெருந்தேவி ஆறிய கற்பு உடையவள்; அறக் கற்பு உடையவள். மயங்கி வீழ்ந்த கணவன் இறந்தான் என்பதனை உணர்ந்தவுடன் இவ்வுலகில் உயிர்வாழ அவள் விரும்பின ளல்லள். எனவே, தன் கணவனுடைய இரண்டு அடிகளையும் தொழுது வீழ்ந்தாள். உடனே அவளது உயிர் நீங்கியது. கோப்பெருந்தேவி ஆறிய கற்பு உடையவள் என்பதனை அறிவுறுத்தும் பொருட்டே ஆசிரியர் இளங் கோவடிகள் இங்ஙனம் கூறினர். (கண்ணகி சீறிய கற்பு அல்லது மறக்கற்பு உடையவள் என்று அறிக).

இலக்கணக் குறிப்பு: குலைந்தனள்: முற்றெச்சம். இணையடி: பண்புத்தொகை. மடமொழி: பண்புத்தொகை. 'அழகிய மொழியினை உடைய கோப்பெருந்தேவி' என்று பொருள் கொண்டால், பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை ஆகும்.

நல்லொழுக்கப் பயிற்சி

தமிழ் மொழியின்கண் தோன்றிய முதல் பெருங்காப்பியம் சிலப்பதிகாரம் ஆகும். அதன்கண் இலக்கியச் சுவை சொட்டு கின்றது. அந்நூல் அறிவிக்கும் அறவுரைகள் பல. அவற்றை நீங்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டும். சிலப்பதிகாரத்தைப் பாடிய இளங்கோவடிகள் சமண சமயத்தைச் சேர்ந்தவர் என்று கருத இடம் உள்ளது. அடிகளாரின் தமையனாகிய செங்குட்டு வனோ சைவ சமயத்தைச் சார்ந்தவன். சிலப்பதி காரத்தைப் பாடுமாறு தூண்டிய மதுரைக் கூல வாணிகன் சாத்தனாரோ பௌத்த சமயத்தைச் சார்ந்தவர். இம்மூவரும் வேறுபட்ட சமயங்களைப் பின்பற்றியவர்களாயினும், தமிழால் ஒன்றுபட்டு வாழ்ந்தனர்; தம் வேற்றுமைகளை மறந்து, தமிழ்த் தொண்டு செய்தனர்; சமயத்துறையில் பொறுமை (Religious tolerence) என்பதற்கு எடுத்துக்காட்டுகளாக விளங்கினர். மொழியின் வளர்ச்சிக்கும், நாட்டின் முன்னேற்றத்திற்கும் அக் காலத்தில் சமயம் முட்டுக்கட்டையாக நிற்கவில்லை. இவ்வுண் மையை நீங்கள் மனத்தில் கொள்ளுங்கள்; சாதி சமய வேறுபாடு களை அகற்றித் தமிழ்த் தொண்டு செய்ய ஒற்றுமையுடன் முற் படுங்கள்; அப்பொழுது தமிழ் வாழும்; தமிழ் நாடு வாழும்; தமிழ் மக்கள் வாழ்வர்.

2. கம்ப ராமாயணம்

பெயர்க் காரணம் : கம்பர்+ராமாயணம்= கம்பராமாயணம். இச் சொற்றொடர், 'கம்பரால் இயற்றப்பெற்ற இராமாயணம்' என்றும், 'கம்பரது இராமாயணம்' என்றும் விரியும். முதல்வகையாக விரித்தால் அது மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை ஆகும். இரண்டாம் வகையாக விரித்தால் அஃது ஆறும் வேற்றுமைத் தொகை ஆகும். ராம+அயனம்=ராமாயணம் : இது வடமொழித் தீர்க்க சந்தி ஆகும். இச்சொற்றொடர்க்கு 'இராமனை அறிவிப்பது' என்பது பொருள். வடமொழியின்கண் 'ராம' என்னுஞ் சொல் 'மகிழ்விப்பவன்' என்று பொருள்படும்.

நூலுக்குரிய வேறு பெயர் : இராமாவதாரம்.

முதல் நூல் : கம்பராமாயணத்திற்கு முதல் நூல் வால்மீகி ராமாயணம் என்பர் சிலர். ஆயின், இந்நூல் முதல் நூலிலிருந்து பலவிடங்களில் வேறுபட்டுள்ளது. வால்மீகி ராமாயணம் வடமொழியின்கண் உள்ளது. கம்பருக்கு வடமொழி யறிவு இருந்ததாகத் தெரிந்திலது. கம்பர் சென்னையைத் தாண்டிச் சென்றவரல்லர். எனவே, கம்ப ராமாயணம் வால்மீகி ராமாயணத்தைத் தழுவி எழுந்த நூல் என்று சொல்லுதல் கூடாது. கம்பர் தமிழ் நாட்டில் பிறந்தார்; தமிழ் நூல்களைக் கற்றார்; தமிழில் காப்பியம் ஒன்று பாட நினைத்தார். தமிழ் நாட்டில் நெடுங்காலமாக மக்களிடையே வழங்கப்பட்டு வந்த இராமாயணக் கதை அவரது கருத்தைக் கவர்ந்தது. வைணவ சமயத்திற்கு ஏற்றம் கொடுக்க வேண்டும் என்பதும் அவரது விருப்பமாகும். ஆகவே இராமாயணத்தைப் பாடினார். எனவே கம்ப ராமாயணத்திற்கு முதல் நூல் வால்மீகி ராமாயணம் என்று கூறுங் கருத்து இன்னும் ஆராய்தற்குரியது.

நூலின் பிரிவு : கம்ப ராமாயணத்தில் பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என்று ஆறு காண்டங்கள் உள்ளன. கம்பர் பாடிய பாடல்களின் தொகை 10,500 ஆகும்.

நூலின் இயல்பு : கம்பர் தமிழ்மொழியின்கண் உள்ள இலக்கிய இலக்கண நூல்களை ஐயந்திரிபறக் கற்றவர்; தமிழ் மக்களின் பழக்க வழக்கங்களையும், ஒழுகலாறுகளையும் நன்கு உணர்ந்தவர். அக்கால அரசர்களுடன் பழகி, அரசியல் நுட்பங்களை அறிந்தவர். தமிழ்மொழியின்கண் உள்ள சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, பெரிய புராணம் முதலிய நூல்கள் அவருக்குக் காப்பியம் பாடுதற்கேற்ற மனநிலையை உண்டாக்கி வழி காட்டின. எனவே கம்பர், வடமொழிக் கதையைத் தமிழ் நாட்டுக் கதை போலவே அமைத்துள்ளார். அவர் இராமனைத் தமிழ் நாட்டு வீரனாகவும், சீதையைத் தமிழ் நாட்டுக் கற்புடைப் பெண்ணாகவும், தசரதனைத் தமிழ் நாட்டுச் செங்கோல் அரசனாகவும் உருவாக்கியுள்ளார். தம் காலத்திற்கு முன்பிருந்த புலவர்கள் எடுத்தாண்ட உவமைகள், உருவகங்கள், வருணனைகள் முதலியவற்றைக் கம்பர், தம் கற்பனைத் திறம் கொண்டு அழகுபட மாற்றியுள்ளார்; புதிய முறையில் கற்பனைச் சொல்லோவியங்களை அமைத்துள்ளார்; தொட்ட தொட்ட இடங்களிலெல்லாம் இனிக்குமாறு பாடல்களைப் பாடியுள்ளார். கம்ப ராமாயணச் செய்யுட்களில் இலக்கியச் சுவை நன்கு அமைந்துள்ளது.

" அறியாமையிலிருந்தே அச்சம் உண்டாகும்." — எமர்ஸன்.

நூலாசிரியரைப்பற்றிய செய்திகள்

பெயர் : கம்பர்.

ஊர் : சோழ நாட்டில் தஞ்சை மாவட்டத்தின்கண் உள்ள திரு வழுந்தூர்.

மரபு : கம்பர் உவச்சர் மரபினர் என்பர் சிலர். அவர் வேளாண் மரபைச் சேர்ந்தவர் என்று கூறுதற்குச் சான்றுகள் பல உள்ளன.

ஆதரவு தந்தவர் : திருவெண்ணெய் நல்லூரைச் சேர்ந்த சடையப்ப வள்ளல்.

சமயம் : வைணவம் என்னலாம். ஆனால், கம்பர் பிற மதங்களைத் தாழ்வுபடுத்தினரல்லர்.

காலம் : கம்பர் 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்று ஒரு சாராரும், 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்று மற்றொரு சாராரும் கூறுவர். பின்னதே வலியுடைத்து.

பெயர்க் காரணம் : கம்பரது இயற்பெயர் 'ஏகம்பர்' என்றும், அப்பெயர் 'கம்பர்' என மருவியது என்றும் சிலர் கூறுவர். "கம்பர்" 'கம்ப நாடுடைய வள்ளல்' என்று குறிப்பிடப்படுகின்றார். எனவே, நாட்டின் பெயர் அவருக்கு அமைந்தது" என்பர் வேறு சிலர். கல்வெட்டுக்களின்கண், 'கம்ப நாடர்' என்னும் பெயரே காணப்படுகின்றது. இப்பெயர் அமைந்ததற்குக் கன்ன பரம்பரைக் கதைகளும் உள்ளன. எனவே, கம்பரின் பெயர்க் காரணத்தை ஆராய்ச்சியாளர் முடிவாகக் கூறினரல்லர்.

கம்பரைப்பற்றிய சிறப்புரைகள் : 'கல்வியிற் பெரியவன் கம்பன்", "கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவி சொல்லும்", "கம்ப நாடன் கவிதையிற்போற் கற்றோர்க் கிதயம் களியாதே", "கம்பனைப் போல் .... பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை", "புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாடு", "விருத்தமென்னும் ஒண்பாவிற்கு உயர் கம்பன்" என்பன கம்பரைச் சிறப்பிக்க எழுந்தன.

நூல் இயற்றக் காரணம் : கம்பர் "ஆசைபற்றி அறையலுற்றேன்" என்கின்றார். தமிழ் மொழிக்கு ஆக்கம் தேடித் தரவேண்டும் என்னும் எண்ணத்துடனும், இராமனது கதையைத் தமிழ் நாட்டிற் பரப்ப வேண்டும் என்னும் நினைவுடனும், வைணவ சமயத்தை உயர்த்த வேண்டும் என்னும் நோக்கத்துடனும் கம்பர் இந்நூலைப் பாடினார் என்று கொள்ளலாம். சடையப்ப வள்ளலின் தூண்டுதலும், குலோத்துங்க சோழனது வேண்டுகோளும் இந்நூல் தோன்றக் காரணமாயின என்பர் சிலர்.

நூல் அரங்கேற்றம் : கம்பர் தம் நூலைத் திருவரங்கத்தில் அரங்கேற்றினார் என்று சொல்லப்படுகின்றது.

கம்பர் இயற்றிய வேறு நூல்கள் : 'சடகோபர் அந்தாதி, சரசுவதி அந்தாதி, சிலையெழுபது, ஏரெழுபது, திருக்கை வழக்கம் என்பன கம்பர் இயற்றியவை' என்பர் சிலர்.

கம்பரின் நன்றியறிதற் பண்பு : கம்பரை ஆதரித்தவர் சடையப்ப வள்ளல் என்பவராவார். அவரைக் கம்பர் தம் இராமாயணத்தில் பத்து இடங்களில் பாராட்டியுள்ளார்.

"இலன் என்று தீயவை செய்யற்க." — வள்ளுவர்.

அயோத்தியா காண்டம்

அயோத்தியா காண்டம் என்பது கம்ப ராமாயணத்தின் இரண்டாம் காண்டம் ஆகும். காண்டம் என்பது பெரும் பிரிவு. அயோத்தியில் நிகழ்ந்த வரலாறுகளைப்பற்றி இக்காண்டம் கூறுகிறது. இக்காண்டத்தில் தசரதன் இராமனுக்கு முடிசூட்டக் கருதுதல், மந்தரை சூழ்ச்சி செய்தல், கைகேயியின் குறுக்கீடு, இராமன் சீதையுடனும், இலக்குவனுடனும் காட்டிற்குச் செல்லுதல், தசரதன் இறத்தல், காட்டினின்றும் இராமனை அழைத்துவரக் கருதிய பரதன் கங்கையை அடைதல், அவன் குகனைக் கண்டு நட்புக்கோடல், இராமனைக் கண்டு அவனுடைய பாதுகைகளைப் பெற்றுப் பரதன் திரும்புதல் முதலிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. அயோத்தியா காண்டம்: **ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.**

குகப் படலம்

அயோத்தியா காண்டத்தின் பதிமூன்றாவது பிரிவாக இஃது உள்ளது. 'படலம்' என்பது நூலின் சிறு பிரிவாகும். இராமன் முதலியோரைக் காட்டிலிருந்து நாட்டுக்கு அழைத்து வரப் புறப்பட்ட பரதன் கங்கைக் கரையில் குகனைக் கண்டு, அவனுடன் நட்புக் கொண்டு, கங்கையைத் தாண்டுஞ் செய்தி இப்படலத்தின்கண் இடம் பெற்றுள்ளது. குகன் என்பவன் அயோத்தியை அடுத்துள்ள சிருங்கிபேரம் என்னும் நாட்டின் தலைவனாகிய வேடன்; கங்கையில் ஓடம் விடும் தொழிலை மேற்கொண்டிருந்தவன். 'குகப் படலம்' என்னும் சொற்றொடர், 'குகனைப்பற்றிய படலம்' என்று விரிந்து பொருள்படுதலால், **இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.**

நம் பாடப் பகுதியின் சுருக்கம்

தாயுரை கொண்டு காடு புகுந்த இராமனைக் காட்டிலிருந்து அழைத்து வர விரும்பினான் பரதன். எனவே அவன், அயோத்தியினின்று நகரப் பெருமக்களும், நாற்படைகளும், மந்திரச் சுற்றமும், தாய்மாரும் புடை சூழக் கங்கையாற்றின் வட கரையை அடைந்தான். அவனது வருகையை உணர்ந்தான் கங்கையின் தென் கரையில் நின்ற குகன். இராமனிடத்தில் அவன் நட்புரிமையும், உடன் பிறப்புரிமையும் பூண்டிருந்தவன். இராமனைக் காட்டுக்கு ஓட்டியவன் பரதனே என்று அவன் எண்ணியிருந்தான்.

இப்பொழுது பரதனது வருகையைக் கண்டவுடன், அவன் இராமனுடன் போர் புரியவே வருகின்றான் என்று எண்ணிவிட்டான் குகன். அவ்வளவில் அவனுக்குச் சினம் பொங்கியது; தன் படையினரைக் கூவி அழைத்தான்; கங்கையாற்றில் யாரும் ஓடம் செலுத்துதல் கூடாது என்று கட்டளையிட்டான். பின்பு அவன் "என் உயிர் நாயகனாகிய இராமனுக்கு அரசுரிமை இல்லாமற் செய்தவன் இப்பரதன். அதனுடன் அமையாது, இராமனுடன் போர் புரியவும் ஈண்டு வந்துள்ளான். இவனையும், இவனுடைய படைகளையும் நாம் அழிப்போம். இவனைக் கண்டு யான் அஞ்சேன். என் உயிரைக் கொடுத்தேனும் இராமனைக் காப்பேன். இப்படையை அழித்து, இவனையும் கொன்று, 'இராமனுக்கு அரசுரிமையை நல்கியவர் வேடர் குடியினர்' என்னும் புகழ்ச் சொல்லை நமக்கு உண்டாக்குதல் நும் கடமை" என்று தன் படையினரை நோக்கிக் கூறினான்; போர் செய்ய அஞ்சாது நின்றான்.

இவ்வாறு நின்ற குகனைச் சேய்மையிலேயே கண்ணுற்றார் சுமந்திரர். அவர் அயோத்தியின் அமைச்சர். சுமந்திரர் குகனைப் பரதனுக்குச் சுட்டிக் காட்டி, அவன் யாவன் என்பதையும், அவனுடைய நல்லியல்புகளையும், இராமனிடம் அவன் கொண்டுள்ள எல்லையற்ற அன்பினையும், விளங்க உரைத்தார். அவற்றைக் கேட்ட பரதன் பெருமகிழ்ச்சி கொண்டு, தானே குகனைக் காணச் சென்றான்.

பரதனது தோற்றத்தைச் சேய்மையிற் கண்டான் குகன். அவனுடைய புழுதி படிந்த உடலும், ஒளியிழந்த முகமும் குகனுடைய ஐயத்தை நீக்கின. இராமனிடம் கொண்ட அன்பினாலேயே பரதன் வந்துள்ளான் என்பதனை அவன் குறிப்பால் உணர்ந்தான்; பரதனையும், சத்துருக்கினனையும் மாறி மாறிப் பார்த்தான்; ஒரு படகில் ஏறி வடகரைக்கு வந்தான். பரதனும் குகனும் ஒருவரை ஒருவர் முதற்கண் வணங்கினர்; பிறகு தழுவிக் கொண்டனர். பரதன் அங்கு வந்த காரணத்தைக் குகன் வினவினான். இராமனை நாட்டிற்கு அழைத்துச் செல்லும் எண்ணத்துடன் தாங்கள் வந்தமையைப் பரதன் கூறினான். பரதனது உள்ளக் கருத்தை உணர்ந்த குகன் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டு, அவனுடைய குணத்தைப் பலபடியாகப் புகழ்ந்தான்.

1. பரதன் சேனையுடன் கங்கைக் கரையை அடைதல்

பூ விரி - பொலிவு மிக்க
பொலன் - பொன்னாலாகிய
கழல் - வீரக்கழலையும்,
பொரு இல் - ஒப்பு இல்லாத
தானையான் - சேனையையும் உடைய பரதன்,
காவிரி நாடு அன்ன - காவிரியாறு பாய்ந்து வளப்படுத்தும் சோழ நாட்டைப் போலும்
கழனி நாடு-வயல்களையுடைய தன் கோசல நாட்டை
ஒரீஇ - விடுத்து நீங்கி,
தாவரம் - நிலையியல் (நகராப்) பொருள்
சங்கமம் - இயங்கியல் (நகரும்) பொருள்
என்னும் - என்னும் இரு பிரிவுள்ள
தன்மைய - தன்மையை உடைய
யாவையும் - எல்லா உயிர்களும்
இரங்கிட - (தனது நிலையைப் பார்த்து) இரக்கம் அடைய
கங்கை - கங்கையாற்றின் வட கரையை
எய்தினான் - அடைந்தான்.

கருத்துரை: வளப்பம் வாய்ந்த தன் கோசல நாட்டை விடுத்துக் கிளம்பிய பரதன் தன் படையுடன் கங்கையின் வடகரையை அடைந்தான்.

விளக்கவுரை: பூ - பொலிவு, அழகு. பொலன் - பொன். பொரு - ஒப்பு. தானை - சேனை. காவிரிநாடு - சோழ நாடு. அன்ன - போலும், ஒத்த. கழனி - வயல். ஒரீஇ - நீங்கி. தாவரம்: நகராப் பொருள், அசரப் பொருள். சங்கமம்: நகரும் பொருள்; சரப்பொருள். **காவிரி நாடு:** காவிரியாறு பாய்ந்து வளப்படுத்தும் சோழ நாடு. 'சோழ வள்நாடு சோறுடைத்து' என்பர் அறிஞர். இத்தகைய வளம் காவிரியாறு பாய்தலால்தான் அந்நாட்டிற்கு உண்டாயிற்று. 'காவிரியாற்றின் நன்கொடை சோழ நாடு' என்று சொல்லப்படுவதுண்டு. மேகம் மழை பொழிதலை மறந்தாலும், நாட்டில் பஞ்சம் நிலவினாலும் காவிரியாற்றில் காலந்தவறாமல் வெள்ளம் பெருகும். இக்காரணம் பற்றிச் சோழநாடு 'புனல் நாடு' என்றும் பெயர்பெற்றுள்ளது. காவிரி என்னும் சொல் 'சோலைகளை விரிப்பது' என்று பொருள்படும். தான் செல்லும் இடங்களிலெல்லாம் சோலைகளை உண்டாக்கும் தன்மையை உடையதாதலாலேயே அஃது அப்பெயர்பெற்றது. **காவிரிநாடு அன்ன**

கழனி நாடு : காவிரி நாட்டை ஒத்த வயல்களை உடைய கோசல நாடு. கம்பர் சோழ நாட்டில் பிறந்தவர்; காவிரியின் தன்மையையும், சோழ நாட்டின் வளத்தையும் நன்கு அறிந்தவர்; நாட்டுப் பற்று மிகுந்தவர். இக்காரணங்களாலேயே அவர் கோசல நாட்டுக்கு உவமையாகச் சோழ நாட்டைக் கூறினர். இவ்வடி கம்பரது நாட்டுப்பற்றுக்கு ஏற்றதொரு சான்றுகும். கம்பர் கோசல நாட்டைக் கண்டவர் அல்லர். கோசல நாடு வளமுடையதாக இருக்க வேண்டும் என்று அவர் கருதினர்; அதற்கு உவமைகாட்ட விரும்பினர்; நாட்டுப்பற்றும், சோழ நாட்டின் வளமும், காவிரியின் தன்மையும் அவருக்கு முன்வந்து நின்றன. எனவே, அவர் இத்தகைய உவமையை அமைத்தார். **கழனி நாடு :** இச்சொற்றெடர் கோசல நாட்டில் பயிர் இல்லாத வெற்றிடமே இல்லை என்பதனைக் காட்டும். **தாவர சங்கமம் :** இவ்வுலகத்துப் பொருள்களை நகரும் பொருள், நகராப் பொருள் என்று இருவகையாகப் பிரிக்கலாம். 'தாவரம்' என்பது நகராப் பொருள். 'சங்கமம்' என்பது நகரும் பொருள். **யாவையும் இரங்கிட :** பரதனைக் கண்ட உயிர்கள் யாவும் இரங்கின. அரச குலத்திற் பிறந்தும், மரவுரி தரித்து, இவ்வாறு துயரத்தில் மூழ்கியிருக்கின்ருனே என்ற கருத்தினுல் யாவையும் இரங்கின.

இலக்கணக் குறிப்பு : பொலன் : 'பொலம்' என்னும் சொல் 'பொலன்' என்று வந்தது **கடைப் போலி.** அன்ன : **உவம உருபு.** ஒரீஇ : சொல்லிசையளபடை. தாவர சங்கமம் : **உம்மைத் தொகை.**

சேனையைக் கண்டு குகன் ஐயுறுதல் (2–4)

2. குகனது சீற்றம்

குகன் என - குகன் என்று
பெயரிய - பெயரை உடைய,
கூற்றின் - இயமன் போலும்
ஆற்றலான் - வலிமையை உடைய வேடர் தலைவன்,
தொகை - தொகுதியாகவுள்ள
முரண் - வலிய
சேனையை - பரதனது சேனையை
துகளின் - (அதனது வருகையால் எழுகின்ற) புழுதியால்
நோக்குவான் - பார்த்துத் தெரிந்தவனாய்
நகைமிக - (சினத்தால்) பெருஞ் சிரிப்புத் தோன்றவும்,
கண்கள் - கண்களிலிருந்து
தீ நாற - தீப்பொறி பறக்கவும்,
நாசியின் - மூக்கினின்று
புகை உற - புகை மிக்கு எழவும்
குனிப்பு உறும் - வளைதலைக் கொண்ட
புருவம் - புருவமாகிய
போர் விலான் - போர் செய்யும் வில்லை உடையவனும்,

கருத்துரை : பரதனது சேனையின் வருகையால் எழுந்த புழுதியைக் கண்டான் குகன். அதிலிருந்து படை மேலெழுந்து வருகிறது என்பதை உணர்ந்த குகன், இராமனுடன் போர்புரியத்தான் படை வருகிறது என்று ஐயுற்றுப் பெருஞ் சினங் கொண்டான்.

விளக்கவுரை : பெயரிய - பெயரை உடைய. கூற்று - இயமன். ஆற்றல் - வலிமை. தொகை - தொகுதி. முரண் - வலிமை. துகள் - புழுதி. நாற - பறக்க. குனிப்பு - வளைவு. **கூற்றின் ஆற்றலான் :** இயமனைப் போன்ற வலிமையை உடையவன் குகன். உடலையும் உயிரையும் வேறுபடுத்துங் காரணத்தால் இயமனுக்குக் கூற்று என்று பெயர் வந்தது. இயமனைப் போலவே வலிமையை உடையவனுதலால் குகன் இவ்வாறு குறிப்பிடப்பெற்ருன். **சேனையைத் துகளின் நோக்குவான் :** புகையைக் கண்ட அளவில்

நெருப்பு உண்டு என்று அறிகின்றோமன்றோ? அதுபோலவே, பெரும் புழுதி யெழுதலைக் கண்டவுடன் சேனையின் வருகையை உணர்ந்தான் குகன். இனி, 'தாக்க வரும் சேனையைத் தூளி போல எளிதாகக் கருதுவான்' என்றும் ஈண்டுப் பொருள் கொள்ளலாம். **குனிப்புறும் புருவப் போர் வில்:** ஈண்டுப் புருவத்திற்கு வில் உவமையாகக் காட்டப்பட்டது. வளைதலைக் கொண்ட புருவமாகிய போர் செய்யும் வில்லையுடையவன் குகன் என்று கொள்ளுதல் வேண்டும். போர்வில்லைப் போன்றது புருவம் என்றதனால், குகன் புருவத்தை நெறித்த அளவிலேயே பகைவர் அஞ்சுவர் என்பது குறிப்பினால் பெறப் படும். இனி, 'குகன் புருவத்தை வளைத்த பொழுதே வில்லையும் வளைத்தான்' என்றும் கொள்ளலாம். சிரிப்பு மிகுதல், கண்களில் தீப்பொறி தோன்று தல், மூக்கில் புகை உண்டாதல், புருவம் வளைதல் ஆகியவை கோபக் குறி கள் என அறிக.

இலக்கணக் குறிப்பு: கூற்றின்: 'இன்' என்னும் ஐந்தாம் வேற் றுமை உருபு ஈண்டு ஒப்புப் பொருளில் வந்தது. துகளின்: 'இன்' என்னும் ஐந்தாம் வேற்றுமை உருபு ஈண்டு ஏதுப் பொருள். நோக்குவான்: முற்றெச்சம். ஈண்டுக் குகனுக்கு எழுந்த நகை பிறரை இகழ்ந்து நகுதலில் அடங்கும்; வீரத்தினால் எழுந்த கோபநகை என்றும் கூறலாம். இப்பாடல் குளகம். "குளகம் பலபாட்டு ஒருவினை கொள்ளும்" என்பது விதி.

3. குகனுடைய போர்க் கோலக் குறிகள்

கட்டிய - (இடையில்) கட்டிய
சுரிகையன் - உடைவாளை உடையவனும்,
கடித்த, ——
வாயினன் - உதட்டை உடையவனும்,
வெட்டிய - வெட்டுவது போலும் கடுமையான
மொழியினன் - சொற்களை உடையவனும்,
விழிக்கண் - விழித்துப் பார்க்கும் கண்களில்
தீயினன் - தீப்பொறி தோன்றப் பெற்றவனும்,
கொட்டிய - அடித்த
துடியினன் - உடுக்கினை உடையவனும்,
குறிக்கும் -(போருக்கு அறிகுறியாக) ஒலிக்கின்ற
கொம்பினன் - ஊது கொம்பை உடையவனும்,
அமர் கிட்டியது என - போர் நெருங்கி விட்டது என்று
கிளர்ந்த - பூரித்து எழுந்த
தோளினன் - தோள்களை உடையவனும்,

கருத்துரை: பரதனது சேனையைச் சேய்மையிற் கண்ட குகன் போர் வந்து விட்டதென்று மகிழ்ந்து போர்க் கோலம் கொள்ளலானான்.

விளக்கவுரை: சுரிகை - உடைவாள். வெட்டிய - வெட்டுவது போல் கடுமையான. விழி - விழித்துப் பார்த்தல். துடி - உடுக்கு; ஒருவகைப்பறை. குறிக்கும் - ஊதிய. கொம்பு: ஊது கொம்பு. போர்க்கு அறிகுறியாக ஊது கொம்பிலிருந்து ஒலியினை எழுப்புதல் வழக்கம். அமர் - போர். கிளர்ந்த - பூரித்து எழுந்த. துடி, கொம்பு முதலியன குறிஞ்சி நிலத்திற்கு உரிய வாத்தி யங்கள். **குகன் போர்க்கோலக் குறிகள்:** குகன் உடைவாளைக் கட்டி னான்; உதட்டைக் கடித்தான்; கடுஞ்சொற்களைப் பேசினான். அவனுடைய விழித்த கண்களிலிருந்து தீ வெளிப்பட்டது. அவன் உடுக்கினை அடித்தான்; கொம்பினை ஊதினான்; போர் வந்துவிட்டது என்று நினைத்த அளவில்

மகிழ்ச்சி கொண்டான். கிட்டிய தமரெனக் கிளர்ந்த தோளினன் : போர் நெருங்கிவிட்டது என்ற மகிழ்ச்சியால் பூரித்த தோள்களையுடையவன் குகன். போர் என்ற அளவில் தோள் வீங்கப் பெறுதல் உண்மை வீரர்க்கு அழகாகும். போர் செய்தற்கு வாய்ப்பு இன்றி, முகத்திலும் மார்பிலும் புண் பெறுமல் வீரர்க்குக் கழிந்த நாட்கள், வீணே கழிந்த நாட்களாகக் கருதப்படும். இனி, 'கிட்டிய - நெருங்கிய, தமர் என - உறவினர் போல' என்றும் பொருள் கூறுவர் சிலர். அப்பொருள் பெருஞ் சிறப்புடையதன்று. இப்பாடலும் குளகச் செய்யுளே ஆகும்.

4. குகன் தன் சேனையைக் கூவி அழைத்தல்

(படையெடுத்து வருகின்ற)
இப்படை எலாம் - 'இச்சேனை முழுவதும்
எலி - எலிகளாம்
அரவம் யான் - (இவற்றை அழித்தற்கு) யான் பாம்பு ஆவேன்'
என - என்று வீரம் பேசி
உலகினில் வாழும் - உலகில் வாழ்கின்ற
வலி உலாம் - வலிமை பொருந்திய
வள் உகிர் - கூரிய நகங்களை உடைய
புலி எலாம் - புலிகள் யாவும்
ஒரு வழி - ஓரிடத்தில்
புகுந்த போல - திரண்டன போல (தன்னிடம் வந்து கூடும்படி)
ஒலி உலாம் - ஒலி மிக்க
சேனையை - தனது சேனையை
உவந்து - மகிழ்ந்து
கூயினன் - கூவி அழைத்தவனுமாய்,

கருத்துரை : பரதனது படையைச் சேய்மையிற் கண்ட குகன் சினங் கொண்டு வீரம் பேசித் தன் படையினைக் கூவி அழைத்தான்.

விளக்கவுரை : அரவம் - பாம்பு. உலாம் - பொருந்திய. உவந்து - மகிழ்ந்து. வள் - கூர்மை. உகிர் - நகம். புகுதல் - திரளுதல். **எலியெலாம் இப்படை அரவம் யான் :** இது குகனது வீரவுரை. இவ்வுரையை அவன் தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டான். 'எதிர்த்துவரும் இப்படை எலி போன்றது; யான் அரவம் போன்றவன்' என்று கூறினன் குகன். வீரமில்லாத பலர் ஒன்று கூடி எதிர்த்தாலும், அவர்களால் வீரம் மிக்க ஒருவனுக்கு எதிரில் நிற்க இயலாது. பாம்பு ஒன்றிற்கு முன் எவ்வாறு கூட்டமான எலிகளால் எதிர்த்து நிற்க முடியாதோ அவ்வாறே திரண்டுவரும் படையினரால் தன்முன் எதிர்த்து நிற்க முடியாது என்று கூறினன் குகன். "எலிப் பகை நாகம் உயிர்ப்பக் கெடும்" என்னும் வள்ளுவர் வாய்மொழி ஈண்டு ஒப்பு நோக்கற்பாலது. **வள்ளுகிர்ப் புலியெலாம் ஒருவழிப் புகுந்த போல :** கூரிய நகங்களையுடைய புலிகள்யாவும் வந்து ஓரிடத்தில் திரண்டன போலத் தன் பக்கத்தில் ஒருங்கு வந்து கூடும்படியாகக் குகன் தன் படை வீரர்களைக் கூவி யழைத்தான். வீரர்கட்குப் புலிகள் உவமை. வீரர்களிடம் உள்ள கூரிய படைகளுக்குப் புலிகளின் கூரிய நகங்கள் உவமை.

இலக்கணக் குறிப்பு : இப்பாடலின்கண் **உவமையணி** அமைந்துள்ளது.

தன் சேனையை நோக்கிக் குகன் கூறியன (5—9)

5. வஞ்சகர்மீது செஞ்சரம் தொடுப்பேன்

என் - என்னுடைய
ஆர் உயிர் - அரிய உயிருக்கு
நாயகன் - தலைவனாகிய
அஞ்சன வண்ணன் - மைபோலும் கருநிறமுடைய இராமன்
ஆளாமே - ஆட்சி புரியாதபடி
வஞ்சனையால் ——,
அரசு எய்திய - அரச பதவியைப் பெற்ற
மன்னரும் - அரசராகிய பரதரும்

வந்தாரே - அருகில் வந்தார் அன்றோ?
தீ உமிழ்கின்றன - தீயினைக் கக்குகின்றனவாகிய (என்னுடைய)
செஞ்சரம் என்பன - செந்நிறமுடைய அம்புகள் எனப்படுபவை
செல்லாவோ - (இவர்கள் மீது) செல்ல மாட்டாவோ?
இவர் - இவர்கள்
உஞ்சு - (என் அம்புகட்குத்) தப்பி
போய் விடின் - பிழைத்துப் போய் விட்டால்
நாய்க்குகன் என்று - நாய் போல் எளிய தன்மையுடைய குகன் இவன் என்று
எனை ஓதாரோ - உலகோர் என்னை (இகழ்ந்து) பேச மாட்டார்களோ?

கருத்துரை: 'இராமனைக் காட்டுக்கு ஓட்டி வஞ்சனையால் அரசினைப் பெற்ற பரதன் இப்பொழுது படையெடுத்து வந்துள்ளான். அவர்கள் யாவரையும் யான் கொல்வேன். கொல்லாது, அவர்கள் தப்பிப்போக விடுவேனாயின் என்னை உலகோர் இகழமாட்டார்களோ?' என்று தன் படையை நோக்கிக் கூறினான் குகன்.

விளக்கவுரை: அஞ்சனம் - மை. நாயகன் - தலைவன். மன்னர்: ஈண்டுப் பரதன். செஞ்சரம் - செந்நிறமுடைய அம்பு. உமிழ்தல் - கக்குதல். உஞ்சு - தப்பி. ஓதாரோ - சொல்ல மாட்டார்களோ? **என் ஆருயிர் நாயகன்:** எனது அரிய உயிர்க்குத் தலைவனாகிய இராமன். குகன் இராமனிடம் பேரன்பு கொண்டிருந்தவனாதலால் இராமனை இங்ஙனம் குறிப்பிட்டான். **வஞ்சனையால் அரசு எய்திய:** வஞ்சனையினால் அரசபதவியைப் பெற்ற. கைகேயி சம்பராசுரப் போரில் தசரதனுக்குத் தேரோட்டினாள். தசரதன் அதன் பொருட்டு இரண்டு வரங்கள் அவளுக்குக் கொடுப்பதாக உறுதி கூறியிருந்தான். அவ்வரங்களுள் ஒன்றினால் அவள் இராமனைக் காட்டிற்கு ஓட்டினாள்; மற்றொன்றினால் பரதனுக்கு அரசபதவியை அளிக்கலானாள். இவ்வாறு தன் தாயாகிய கைகேயி செய்த இவ்வஞ்சனைக்குப் பரதனும் உடன்பட்டவன் என்று கருதியே குகன் 'வஞ்சனையால் அரசு எய்திய' என்றான். மூத்த மகனே பட்டத்திற்கு உரியவன் என்று மனுநீதி அமைக்திருக்கும் பொழுது, கைகேயி இவ்வாறு செய்தாளாதலாலும் இவ்வாறு கூறப்பட்டது. **மன்னரும் வந்தாரே:** இகழ்ச்சிபற்றிக் குகன் இவ்வாறு உயர்வு மிகுதி கொடுத்துக் குறிப்பிட்டான். 'மன்னரும்' என்றமையால், 'வஞ்சனையால் அரசைப் பெற்றவரும் மன்னராதற்குத் தகுதியுடையரோ?' என்னும் இழிவு புலப்படுகின்றது. இனி, சத்துருக்கினனையும் சேர்த்து, 'மன்னர்' என்று பன்மையால் குறிப்பிட்டான் என்றும் கொள்ளலாம். 'வந்தாரே' என்னும் சொல், காட்டிற்கு ஓட்டியது போதாதென்று, அங்கும் துன்பம் செய்தற்கு வந்து விட்டனர் என்னும் கருத்தை வெளிப்படுத்தும். **செஞ்சரம்:** பகைவர்களுடைய உடலிற்பாய்ந்து, இரத்தம் தோய்ந்தமையால் குகனுடைய அம்புகள் செந்நிறமாக இருந்தன என்னும் கருத்துப் பற்றி, 'செஞ்சரம்' எனப்பட்டன. இனி, 'நேர்மையை உடைய அம்புகள்' என்றும் பொருள் கொள்ளலாம்.

இலக்கணக் குறிப்பு: அஞ்சன வண்ணன் - உவமத் தொகை. அருமை + உயிர் = ஆருயிர்: பண்புத் தொகை. உயிர் நாயகன்: உயிர் போன்ற நாயகன் என்று பொருள் கொண்டால் உவமைத் தொகை. ஆள் + ஆ + மே = ஆளாமே, ஆள்: பகுதி. ஆ: எதிர்மறை இடைநிலை. மே: வினையெச்ச விகுதி. ஆளாமே: எதிர்மறை வினையெச்சம். மன்னரும்: உம்மை இழிவு சிறப்பு. செஞ்சரம்: பண்புத் தொகை. சரம்: பால்பகா அஃறிணைப் பெயர். உஞ்சு: 'உய்ந்து' என்னுஞ் சொல் 'உஞ்சு' என்று வந்தது போலி. இது முதல் ஐந்து பாடல்களின் ஓசை நயம் படித்து இன்புறுதற்கு உரியது.

6. இவர்கள் கங்கையைக் கடக்க விடக் கூடாது

இவர் - இவர்கள்
ஆழம் - ஆழத்தையும்
நெடுந்திரை - நீண்ட அலைகளையும் உடைய
ஆறு கடந்து - இக் கங்கை யாற்றைத் தாண்டி
போவாரோ - செல்வாரோ (செல்லார்)
வேழம் - யானைகளை உடைய
நெடும் படை கண்டு - பெருஞ் சேனையைக் கண்டு
விலங்கிடும் - (அஞ்சி) ஒதுங்கிச் செல்லும்
வில் ஆளோ - வில் வீரனே யான்?
தோழமை என்று - (நம் இருவர்க்கும்) நட்புரிமை உளதாகுக என்று
அவர் - அவ்விராமபிரானர்
சொல்லிய சொல்—,
ஒரு சொல் அன்றே - (நன்கு மதிக்கத் தக்க) ஒரு சொல் அல்லவா? (அச்சொல்லை யான் காவாவிடின்)
ஏழமை வேடன் - எளிய இவ்வேடன் (இவ்வாறு சொல் தவறி நடப்பதைக் காட்டிலும்)
இறந்திலன் என்று - இறந்திருக்கலாகாதா என்று
எனை ஏசாரோ - என்னை (உலகோர்) பழிக்கமாட்டார்களோ? (பழிப்பர்)

கருத்துரை: 'பரதன் முதலியோர் இக்கங்கையாற்றைக் கடந்து செல்ல யான் விடேன்; இவர்களது படையைக் கண்டு அஞ்சேன்; நண்பன் என்று இராமன் என்னிடம் கூறிய சொல்லைக் காப்பேன். காவாவிடின் என்னை உலகோர் இகழ்வர்' என்று குகன் தன் வீரர்களை நோக்கிக் கூறினன்.

விளக்கவுரை: திரை - அலை. வேழம் - யானை. விலங்கிடும் - ஒதுங்கும். வில் ஆள் - வில் வீரன். தோழமை - நட்புரிமை; தோழன் என்றும் பொருள் கொள்ளலாம். ஏழமை - எளிமை. ஏசுதல் - பழித்தல், இகழ்தல். வேழம் நெடும்படை: யானைகளையுடைய பெரும் படை. குதிரை, தேர், காலாள் ஆகிய ஏனைப் படைகளினும் சிறந்து, தலைமை பெற்றிருத்தலால் யானைப் படை குறிப்பிடப்பட்டது. எனினும், இத்தொடர் ஏனைப்படைகளையும் குறிக்கும். விலங்கிடும் வில்லாளோ: அஞ்சி ஒதுங்கும் வில் வீரனே யான்? 'பெரும் படையைக் கண்டு யான் அஞ்ச மாட்டேன். என்னை அச்சுறுத்தி இவர்களால் இக்கங்கையைக் கடக்க முடியாது' என்னும் குகனது கருத்தினை இத்தொடர் விளக்கும். தோழமை என்று அவர் சொல்லிய சொல் ஒரு சொல் அன்றே: இராமன் முதலியோர் கங்கையைத் தாண்டுதற்கு முன்பு குகன் உதவினன். பிறகு இராமன் சித்திரகூடத்திற்குச் செல்லும் வழியை வினவவே, குகன் தானும் அவனுடன் செல்ல விரும்பினன். இராமனுடன் சென்று, அவனுக்குத் தொண்டு புரிந்து வாழ வேண்டும் என்பது அவனது விருப்பம். அதுகாலையில் இராமன், 'நீ என் உயிர் போல்பவன். என் தம்பி உன் தம்பி. சீதை உனக்கு உறவு உடையவள்' என்று கூறினன். இவ்வாறு இராமன் கூறிய செய்தியையே குகன் ஈண்டுக் குறிப்பிட்டு, அவ்வுரை போற்றிக்காக்கத் தக்கது என்று கூறியுள்ளான். கங்கைப் படலத்துள் உள்ள,

"அன்னவன் உரைகேளா அமலனும் உரைநேர்வான்
என்னுயிர் அனையாய்நீ இளவல்உன் இளையான்இந்
நன்னுத லவள்நின்கேள் நளிர்கடல் நிலமெல்லாம்
உன்னுடை யதுநான்உன் தொழில்உரி மையின்உள்ளேன்."

என்னும் பாடல் இராமனது உரையை விளக்கும். ஏழமை வேடன் இறந்திலன் என்று எனை ஏசாரோ: எளிய இவ் வேடன் இறந்திலன் என்று உலகோர் இகழாரோ? இராமன் கூறிய சொற்களை மதித்துக்

காவாவிடின் உலகோர் வேடனை இகழ்வர்; 'பரதனோடு போர் செய்து வெல்லும் வலிமை இல்லையேல், இவன் இறந்திருக்கலாமே' என்று கூறிப் பழிப்பர். 'ஏழமை' என்னுஞ் சொல் அறிவின்மையையும் குறிக்கும்.

இலக்கணக் குறிப்பு: நெடும் படை: **பண்புத் தொகை.** தோழமை: 'தோழன்' என்று பொருள் கொள்ளின் **பண்பாகுபெயர்** ஆகும்.

7. என்னையும் இவன் மதித்திலனே?

இவன் - இந்தப் பரதன்
முன்னவன் என்று - (இராமன் தனது) தமையனுவானே என்று
நினைந்திலன் - நினைத்தானல்லன்
மொய்புலி - வலிய புலியினை
அன்னான் - போல்பவனாகிய
ஓர் - ஒப்பற்ற
பின்னவன் - தம்பியாகிய இலக்குவன்
நின்றனன் - உடன் உள்ளான்
என்றிலன் - என்று நினைத்தானும் அல்லன்
அன்னவை - அவற்றைக் குறித்து
பேசானேல் - கருதானாயினும்
என்னை - (நண்பனாகி நடுவில் நின்ற) என்னை
இகழ்ந்தது என் - (ஒரு பொருளாக மதியாமல்) இகழ்ச்சியாக நினைத்தது எக் காரணத்தால்?
இ எல்லை - இந்த என் எல்லையை
கடந்து அன்றோ-கடந்தால் அன்றோ (இவன் வலிமை நிலைநிற்கும்?)
வேடர் விடும் - வேடர் தொடுக்கும்
சரம் - அம்புகள்
மன்னவர் நெஞ்சினில் - அரசர்களுடைய மார்பில்
வாயாவோ - தையாவோ? (தைக்கும்.)

கருத்துரை: 'இந்தப் பரதன் இராமன் தன் தமையன் என்பதைக் கருதிலன்; இலக்குவன் அவனைக் காக்கின்றான் என்பதையும் நினைத்திலன்; யான் ஒருவன் இடையில் உள்ளேன் என்றும் மதித்திலன். இக்கங்கையைக் கடந்தாலன்றோ இவன் தனது வீரத்தைக் காட்டமுடியும்? யாம் விடும் அம்புகள் இவர்களுடைய மார்பில் தையாவோ?' என்று குகன் தன் வீரர்களிடம் கூறினான்.

விளக்கவுரை: முன்னவன் - அண்ணன். மொய் - வலிமை. பின்னவன் - தம்பி; இலக்குவன். என் - என்ன காரணம் பற்றி? சரம் - அம்புகள். நெஞ்சு - மனம். **மொய்புலி அன்னான் ஓர் பின்னவன் நின்றனன்:** வலிய புலிபோன்ற தம்பியாகிய இலக்குவன் காத்து நின்றான். இலக்குவனுக்குப் புலி உவமை. இலக்குவன் இரவும் பகலும் இராமனைக் காத்து நின்றான் என்பது கதை. **என் இவன் என்னை இகழ்ந்தது:** என்னை இப் பரதன் இகழ்ந்தது எக் காரணம் பற்றி? 'இவனுக்கும் இராமனுக்கும் இடையில் யான் ஒருவன் உள்ளேன். வலிமை வாய்ந்த என்னையும் இவன் மதித்திலனே? இவனை யான் கொல்லேனோ?' என்னும் கருத்தினால் குகன் இவ்வாறு கூறினான். **இவ்வெல்லை கடந்தன்றோ?:** கங்கை குகனது எல்லைக்கு உட்பட்டது. அவ்வெல்லையைத் தாண்டிச் சென்றாலன்றோ பரதன் தன் வலிமையை இராமனிடம் காட்டுவான்? பரதன் கங்கையாற்றைக் கடந்து செல்லுதல் இயலாது என்னும் கருத்தினால் குகன் இவ்வாறு கூறினான்.

இலக்கணக் குறிப்பு: நினைந்திலன், என்றிலன்: **எதிர்மறை ஆண்பால் வினைமுற்றுக்கள்.** வாயா: **எதிர்மறைப் பலவின்பால் வினைமுற்று.**

8. பாவமும் பழியும் அரசர் கருதாரோ ?

பாவமும் - பாவச் செயலும்,
நின்ற - நிலைபெற்ற
பெரும் பழியும் - பெரிய பழிச் சொல்லும்
பகை - (இவர்) பகைவர் என்பதும்,
நண்போடும் - (இவர்) நண்பர் என்பதும்,
ஏவமும் - (இவை) பிறர்க்குத் துன்பம் தருவன என்பதும்
என்பவை - என்னும் இவற்றை
மண் உலகு - இந் நிலவுலகை
ஆள்பவர் - ஆளும் அரசர்கள்
எண்ணுரோ - நினைக்க மாட்டார்களோ ?
ஆவதுபோக - ஆகக்கடவது ஆகுக.
என் - எனக்கு
ஆருயிர் - அரிய உயிரை ஒத்த
தோழமை - நட்பை
தந்தான் மேல் - தந்த இராமனின் மீது
போவது - இவர்கள் செல்லுதல்
சேனையும் - (தம்) படையையும்
ஆருயிரும் - அரிய உயிரையும்
கொடு போயன்றே - (எனக்குத் தப்பி) உடன் கொண்டு சென்ற பிறகன்றே முடியும் ?

கருத்துரை : பாவம், பழி, பகை, நட்பு, பிறர் துன்பம் ஆகியவற்றை மன்னவர் நினையார் போலும் என்றும், பரதன் முதலியோர் தம் சேனையையும், உயிரையும் கொண்டு தப்பிச் செல்லமுடியாது என்றும் குகன் தன் படை வீரர்களிடம் கூறினன்.

விளக்கவுரை : பாவம் - தீவினை என்றும் பொருள்படும். ஏவம் - துன்பம். எண்ணுரோ - நினைக்கமாட்டாரோ. ஆவது - ஆகக் கடவது. கொடு - கொண்டு. **பாவமும் நின்ற பெரும் பழியும் பகை நண்போடும் ஏவமும்:** பாவமும், நிலைபெற்ற பழியும், இன்னர் பகைவர் என்பதும், இன்னர் நண்பர் என்பதும், இன்னது பிறர்க்குத் துன்பம் தரும் என்பதும். அண்ணனுக்கு முடி சூட்டாமல், காட்டிற்கு ஓட்டியதுமன்றி, காட்டிலும் போர்செய்யவருதல் பாவமும், பழியும் ஆகும். அறிவுடையோர் பகைவராவாரையும், நண்பராவாரையும், பிறர்க்குவரும் துன்பத்தையும் உணர்வர். இவற்றை யெல்லாம் பரதன் உணராமல் இருத்தல் அவனது அறியாமையே ஆகும். பாவம் முதலியவற்றை நினைத்திருந்தால் பரதன் இவ்வாறு எதிர்த்து வந்திருக்கமாட்டான் என்பது கருத்து. **சேனையும் ஆருயிரும் கொடு போயன்றே ? :** 'பரதன் வலியனுக இருந்தாலும், எனக்குத் தப்பிப் பிழைத்து, கங்கையையும் தாண்டிச் சென்றலன்றே தன் வலிமையை இராமனிடம் காட்ட முடியும் ?' என்னும் நினைவுடன் குகன் இங்ஙனம் கூறினன். பரதன் முதலியோர் குகனுல் இறந்துபடுதல் உறுதி என்னும் கருத்து ஈண்டு வெளிப்படும். **இவ்வடிக்கு மற்றெரு பொருள் :** 'எனது சேனையையும், என் அரிய உயிரையும் கவர்ந்த பின்னன்றே இப்பரதன் மேலே செல்ல முடியும் ?' என்றும் இவ்வடிக்கு மற்றெரு பொருள் கூறலாம். தன்னைப் பரதனுல் கொல்லமுடியாது என்றும், தான் உயிருடன் இருக்கும் வரையில் பரதனுல் இராமனை நெருக்க முடியாதென்றும் கருத்தினைக் கொண்டு, குகன் இவ்வாறு கூறியிருத்தல் கூடும்.

இலக்கணக் குறிப்பு : ஆருயிர் : பண்புத் தொகை. தந்தான் : ஈண்டு வினையாலணையும் பெயர். கொடு : 'கொண்டு' என்னுஞ் சொல் 'கொடு' என வந்தது தொகுத்தல் விகாரம்.

"வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை." — வள்ளுவர்.

9. வேடர் நாடு கொடுத்தார் எனும் புகழ் அடைபீரோ?

ஆடு - அசைகின்ற
கொடி - கொடிகளை உடைய
படை - (பரதனது) படையை
சாடி - அழித்து,
அறத்தவரே - அறத்தின் உருவான இராமனே
ஆள - அரசாளுமாறு
பார் - இந் நிலவுலகை
வேடு - வேடர் கூட்டம்
கொடுத்தது —— ,
எனும் - என்ற
இப்புகழ் - இந்தப் புகழை
மேவீரோ - அடைய மாட்டீர்களோ? (அடைய வேண்டும்.)
நாடு - (தனக்கு உரிய) கோசல நாட்டை
கொடுத்த - (மனமிசைந்து) தந்த
என் நாயகனுக்கு - என் தலைவனாகிய இராமனுக்கு
இவர் - இப் பரதன்
நாம் ஆளும் - நமது ஆட்சிக்கு உட்பட்ட
காடு - காட்டினையும்
கொடுக்கிலர் ஆகி - கொடுக்க இசையாதவராய்
எடுத்தது - படையெடுத்து வந்தமையை
காணீரோ - அறியீரோ? (அறிவீர்கள்.)

கருத்துரை: 'பரதனைக் கொன்று, இராமனுக்கு நாட்டைக் கொடுத்தனர் வேடர் என்னும் புகழை நீங்கள் அடையவேண்டும். இராமன் தனக்குரிய நாட்டைப் பரதனுக்குக் கொடுத்தான். ஆயின், பரதனோ நமக்குரிய காட்டையும் அந்த இராமனுக்குத் தர விரும்பாமல் படையெடுத்து வந்து விட்டானே! இதனை நீங்கள் அறியீரோ?' என்று குகன் தன் படையினரை நோக்கிக் கூறினான்.

விளக்கவுரை: **வேடு கொடுத்தது பார் எனும் இப்புகழ்:** இராமனுக்கு நாட்டைக் கொடுத்தது வேடர் கூட்டம் என்னும் புகழ். 'பரதனைக் கொன்று, இராமனுக்கு நாட்டை வாங்கித்தருதல் வேண்டும். அதனால் வரும் புகழ் வேடர்க்கு நிலைபெற வேண்டும்' என்னும் கருத்துடன் குகன் இவ்வாறு கூறினான். **நாடு கொடுத்த என் நாயகனுக்கு இவர் நாம் ஆளும் காடு கொடுக்கிலர்:** 'இராமன் முழுமனத்துடன் தனக்குரிய நாட்டைப் பரதனுக்குத்தந்தான். ஆயின் பரதன் யாது செய்தான்? அவன் நன்றிமறந்து, இராமனுக்குக் காட்டையும் தர இசைந்திலன். அந்தக்காடும் பரதனுக்கு உரியதன்று. நமக்கன்றோ உரியது? நமக்குரிய காட்டைத் தர மறுத்தற்கு இவனுக்கு என்ன உரிமை உள்ளது? இனி நாம் வாளா இருத்தல் கூடாது?' என்னுங் கருத்தினைக் கொண்டு குகன் இவ்வாறு தன் படை வீரர்களிடம் கூறினான்.

இலக்கணக்குறிப்பு: ஆடு கொடி: வினைத்தொகை. கொடிப்படை: இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை. வேடு: சாதிப்பெயர். காணீர்: முன்னிலைப்பன்மை வினைமுற்று.

சுமந்திரன் பரதனுக்குக் குகனைப்பற்றிக் கூறுதல் (10, 11)

10. குகனுடைய சீரிய பண்புகள்

(கங்கையின் மறுகரையில் நின்ற குகனைச் சுட்டிக்காட்டி)
கங்கை-(அவன்)இக்கங்கையாற்றின்
இருகரை - இருகரைகளையும்
உடையான் - தனக்கு உரிமையாக உடையவன்;
கணக்கு இறந்த - அளவற்ற
நாவாயான் - படகுகளை உடையவன்;
உங்கள் குலம் - உங்களுடைய சூரிய குலத்தில் பிறந்த
தனி - ஒப்பற்ற
நாதற்கு - தலைவனாகிய இராமனுக்கு

உயிர்த்துணைவன் - உயிர் போன்ற நண்பன்;
உயர்தோளான் - உயர்ந்த தோள்களை உடையவன்;
வெம் கரியின் ஏறு - கொடிய ஆண் யானையை
அனையான் - போன்ற வலிமையை உடையவன்;
வில்பிடித்த - வில்லைத் தாங்கிய
வேலையினன் - (படையாகிய) கடலை உடையவன்;
கொங்கு - தேனை
அலரும் - துளிக்கின்ற
நறு - நறுமணம் வீசுகின்ற
தண் - குளிர்ந்த
தார் - மாலையைச் சூடிய
குகன் என்னும்—,
குறி உடையான் - பெயரை உடையவன் ஆவான்.'
(என்று கூறினன் சுமந்திரன்.)

கருத்துரை : 'கங்கைக் கரைக்கு உரிமை உடையவன்; கணக்கற்ற படகுகளை உடையவன்; இராமனுக்கு உயிர் நண்பன்; பெரிய வில் வீரர் படையை உடையவன்; குகன் என்னும் பெயரினன்' என்று கங்கையின் மறுகரையில் நின்ற குகனைப்பற்றிச் சுமந்திரன் பரதனுக்குக் கூறினன்.

விளக்கவுரை : இறந்த - கடந்த. நாவாய் - படகு. நாதன் - தலைவன். வெம்மை - கொடுமை. கரியின் ஏறு - ஆண்யானை. வேலை - கடல். கொங்கு - தேன். அலரும் - துளிக்கும், சொரியும். தண் - குளிர்ச்சி. தார் - மாலை. குறி - பெயர். சுமந்திரன் : தசரதனின் அமைச்சன்; நண்பனுமாவான். இராமன் காட்டிற்குச் சென்ற பொழுது சுமந்திரன் சிறிது தொலைவு சென்று மீண்டுவிட்டான். இத்தகையவன் குகனைப்பற்றியும், அவன் இராமனொடு நட்புக் கொண்டவன் என்பது பற்றியும் எங்ஙனம் உணர்ந்தான்? சுமந்திரன் முக்காலமும் முறைப்பட உணரவல்ல அறிஞன் போலும்!

இலக்கணக் குறிப்பு : வேலை : உவமையாகுபெயர். வெங்கரி, தண்டார் : பண்புத் தொகைகள்.

11. பரதனைக் காணவே நிற்கின்றான் குகன் என்று சுமந்திரன் கூறுதல்

மல் - மற்போரின்
காணும் - எல்லையைக் கண்ட
திரு - அழகிய
நெடுந்தோள் - நீண்ட தோள்களையும்,
மழை - நீலமேகத்தை
காணும் - கண்டால் போன்ற
மணி - அழகிய
நிறத்தோய் - நிறத்தையும் உடையவனே! (பரதனே!)
கல் - (அக்குகன்)' மலையை
காணும் - கண்டால் போன்ற
திண்மையான் - வலிமையை உடையவன்;
கரைகாணா - (இராமனிடம்) எல்லையில்லாத
காதலான் - அன்பினை உடையவன்;
காணில் - (அவன் உருவத்தை) நோக்கின்
அல் - இரவினை
கண்டனைய - கண்டால் போன்ற (மிக்ககரிய)
அழகு அமைந்த - அழகு பொருந்திய
மேனியான்- உடம்பை உடையவன்; (அத்தகைய குகன்)
நின்காணும் - நின்னைக் காண வேண்டும் என்னும்
உள்ளத்தான் - கருத்து உடையவனாய்
நெறி எதிர் - வழி எதிரே
நின்றனன் - நிற்கின்றான்
என்றான் - என்று (சுமந்திரன்) கூறினான்.

கருத்துரை : 'இந்தக் குகன் வலிய தோளினன் ; இராமனிடம் எல்லையற்ற அன்புடையவன் ; கருநிறத்தினன் ; உன்னைக்காணும் விருப்புடன் வழியில் நிற்கின்றான்' என்று சுமந்திரர் குகனைப்பற்றி பரதனிடம் கூறினார்.

விளக்கவுரை : காணும் - கண்டால் போன்ற. திண்மை - வலிமை. காணா - காணமுடியாத. காதல் - அன்பு. அல் - இரவு. கண்டனைய - கண்டால் போன்ற. மேனி - உடம்பு. மல் - மற்போர். மழை - நீலமேகம். மணி - அழகு. நெறி - வழி. **அல்காணில் கண்டனைய அழகு :** இரவினைக் கண்டாற்போன்ற கரிய அழகு. இராமன் கருநிறம் உடையவனாதலால், குகனது கருநிறம் அழகுடையதாகப் பாராட்டப்பட்டது. **மழை காணும் மணி நிறத்தாய் :** நீலமேகம் போன்ற அழகிய நிறத்தினை உடைய பரதனே! பரதன் நீல நிறம் உடையவன். இராமனைப் போலவே பரதனும் கருநிறம் உடையவன் என்று கம்பர் வேறிடங்களில் கூறியுள்ளார். இலக்குவனும், சத்துருக்கினனும் செந்நிறம் உடையவர்கள்.

இலக்கணக் குறிப்பு : காணா : ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். நெடுந்தோள் : பண்புத்தொகை.

12. பரதன் குகனைக் காணத் தானே புறப்படுதல்

தன்முன்னே - தன் எதிரில்
அவன் தன்மை - அந்தக் குகனின் தன்மையை
தந்தை துணை - தன் தந்தையின் நண்பனாகிய சுமந்திரன்
முந்து உரைத்த - முன்பு கூறிய
சொல்முன்னே - சொல்லைக் கேட்டவுடன்
உவக்கின்ற - மகிழ்கின்ற
துரிசு இலா - குற்றம் இல்லாத
திருமனத்தான் - சிறந்த மனத்தை உடைய பரதன்,
மன் - அரசனாகிய இராமனை
முன்னே - முன்னமே
தழீஇக்கொண்ட - நட்புச் செய்து கொண்ட,
மனக்கு இனிய - (அவன்) மனத்துக்கு இனிய
துணைவனேல் - நண்பனானால்
என்முன்னே - என்னை (அக்குகன்) காண்பதற்கு முன்னரே
யானேசென்று - நானே போய்
அவன் காண்பேன்-அவனைப்பார்ப்பேன்
என - என்று சொல்லி
எழுந்தான் - புறப்பட்டான்.

கருத்துரை : இராமனை நட்புச் செய்து கொண்டவன் குகன் என்பதை உணர்ந்தவுடன், அவனைத்தானே சென்று காண்பதற்குப் பரதன் எழுந்தான்.

விளக்கவுரை : முன்னே - எதிரில். தந்தை : ஈண்டுத் தசரதன். துணை - நண்பன் ; ஈண்டுச் சுமந்திரன். முந்து - முன்பு. உவத்தல் - மகிழ்தல். துரிசு - குற்றம். மன் - அரசன் ; ஈண்டு இராமன். தழீஇக்கொண்ட - நட்புச் செய்து கொண்ட. **தந்தை துணை முந்துரைத்த சொல் முன்னே :** பரதனது தந்தையாகிய தசரதனுக்குச் சுமந்திரர் அமைச்சராகவும், நண்பராகவும் இருந்தார். எனவே, சுமந்திரர் 'தந்தை துணை' எனப்பட்டார். அவர் குகனைப்பற்றிச் சொல்லி முடிப்பதற்கு முன்னமேயே அவனைக்காண விரைந்து கிளம்பினான் பரதன். ஏன்? பெருமதிப்பு வாய்ந்த சுமந்திரர் கூறியமையால் மட்டுமன்று. இராமனுக்கு உயிர் நண்பன் குகன் என்பதனைக் கேட்டவுடன், அக்குகனைக் கண்டு உரையாடத் துடித்தான் பரதன். அதுபற்றியே இங்ஙனம் கூறப்பட்டது. **துரிசு இலாத் திருமனத்தான் :** குற்றம் அற்ற சிறந்த மனத்தையுடைய பரதன். குகன் நினைத்ததைப் போன்ற குற்றத்தை உடையவனல்லன் பரதன் என்பதனைப் புலப்படுத்தவே கம்பர்

இவ்வாறு பரதனைக் குறிப்பிட்டார். **மனக்கு இனிய துணைவனேல் என் முன்னே :** இவ்வடிக்கு, 'இராமனது மனத்துக்கினிய நண்பனாயின் குகன் எனது **அண்ணனே** ஆவான்' என்றும் மற்றொரு பொருள் கூறலாம். இராமன் குகனைத் தன் உடன் பிறந்தவனாகக் கருதினானல்லனோ? அம் முறைப்படி, இவ்வாறு பொருள் கொள்ளுதலும் பொருத்தமாகும்.

இலக்கணக் குறிப்பு : மனக்கு : 'மனம்' என்னும் சொல் 'கு' என்னும் உருபை ஏற்கும்பொழுது 'மனத்துக்கு' என்று நிற்கும். அச்சொல் ஈண்டு 'மனக்கு' எனச் சாரியை தொக்கி நின்றது. காண்பன் : தன்மை ஒருமை வினைமுற்று. தழீஇ : சொல்லிசையளபெடை.

பரதன் நிலையைக் கண்ட குகன் திடுக்கிடல் (13, 14)

13. குகன் திடுக்கிடல்

என்று - என்று கூறி
எழுந்து - புறப்பட்டு
தம்பியொடும் - தம்பியாகிய சத்துருக்கினனுடனும்
எழுகின்ற - மேன்மேல் உண்டாகின்ற
காதலொடும் - அன்புடனும்
குன்று - மலை ஒன்று
எழுந்து - பெயர்ந்து
சென்றது என - நடந்ததைப் போல
குளிர் - குளிர்ந்த
கங்கைக் கரை - கங்கையின் கரையை
குறுகி - அடைந்து,
நின்றவனை - நின்ற பரதனை
துன்று - நெருங்கிய
கரு - கரிய
நறு குஞ்சி - நறுமணமுள்ள தலை மயிரை உடைய
எயினர் கோன் - வேடர் தலைவனாகிய குகன்
நோக்கினன் - பார்த்து,
திருமேனி நிலை - (பரதனது) அழகிய உடம்பின் நிலையை
உணர்ந்து - அறிந்து,
துண்ணென்றான் - திடுக்கிட்டான்.

கருத்துரை : பரதன் தனது தம்பியாகிய சத்துருக்கினனுடன் வந்தான். அவனது தோற்றத்தைக் கண்ட குகன் திடுக்கிட்டான்.

விளக்கவுரை : தம்பி : சத்துருக்கினன். காதல் - அன்பு. குன்று - மலை. குறுகி - நெருங்கி, அடைந்து. துன்று - நெருங்கிய. நறு - நறுமணம். குஞ்சி - தலைமயிர். எயினர் - வேடர். கோன் - தலைவன். துண்ணென்றான்- திடுக்கிட்டான். **எயினர் கோன் துண்ணென்றான் :** வேடர் தலைவனாகிய குகன் திடுக்கிட்டான். ஏன்? தான் நினைத்தமைபோலப் பரதன் தீய நினைவுடன் வந்திலன் என்பதனை அவன் உணர்ந்து கொண்டான். பரதனது தவக்கோலமே அவனைத் திடுக்கிடச் செய்தது. பரதனது தவக் கோலம் அடுத்த பாடலில் வர்ணிக்கப்படுகின்றது.

இலக்கணக் குறிப்பு : நின்றவனை : **வினையாலணையும் பெயர்.** நோக்கினன், உணர்ந்தான் : ஈண்டு **முற்றெச்சங்கள்**. குளிர் கங்கை : **வினைத்தொகை.** நறுங்குஞ்சி : **பண்புத் தொகை.** கோன் : 'கோ' என்னும் சொல் **'ன்' என்னும் சாரியை** பெற்றது. "ஆமா கோ னவ் வணையவும் பெறுமே" என்பது நன்னூல் சூத்திரம். சத்துருக்கினன் புறப்படுதலும், பரதன் மனத்தில் அன்பு தோன்றுதலும் உடன் நிகழ்ந்தனவாக இப்பாடலின் **கண்** கூறப்பட்டுள்ளதாதலால், ஈண்டு **உடனவிற்சி அணி** உள்ளது. 'நிலை பெற்றுள்ள குன்று, பெயர்ந்து சென்றது போல் பரதன் சென்றான்' என்று ஈண்டு உவமை கூறப்பட்டுள்ளது. இல்லாத ஒன்று உவமை கூறப்பட்டுள்ளதாதலால் ஈண்டு **இல்பொருள் உவமையணி** உள்ளது.

" மொழி இல்லாதவன் உயிர்ப்பிணம்." — ஷேக்ஸ்பியர்.

14. பரதனது தவக்கோலமும் குகனது நிலையும்

வற்கலையின் - மரவுரியை
உடையானை - ஆடையாக உடுத்தவனும்,
மாசு அடைந்த - புழுதி படிந்த
மெய்யானை - உடலை உடையவனும்
நல்கலை இல் - அழகிய கலைகள் இல்லாத
மதி என்ன - சந்திரனைப் போல
நகை இழந்த - ஒளியிழந்த
முகத்தானை - முகத்தை உடையவனும்
கல் கனிய - கல்லும் குழைந்து உருகுமாறு
கனிகின்ற - மிகுந்த
துயரானை - துன்பம் உடையவனும் ஆகிய பரதனை
கண்ணுற்றான் - (குகன்) பார்த்து,
கையினின்று - கையிலிருந்து
வில் இடைவீழ - வில் நழுவிக் கீழே விழுந்து விட,
விம்முற்று - கலங்கி,
நின்று ஒழிந்தான் - செயலற்று நின்றுவிட்டான்.

கருத்துரை: மரவுரிதரித்து, புழுதி படிந்த உடம்புடன், ஒளி இழந்த முகத்துடன், கல்லும் உருகுமாறு துன்பத்துடன் நின்ற பரதனைக் கண்ட குகன் செயலற்று நின்று விட்டான். அவனது வில்லும் கீழே நழுவி விழுந்து விட்டது.

விளக்கவுரை: வற்கலை - மரவுரி. உடையான் - ஆடையாக உடுத்தவன். மாசு - புழுதி. மெய் - உடம்பு. மதி - சந்திரன். நகை - ஒளி. கனிய - குழைந்து உருக. கனிகின்ற - மிகுந்த. **கலையில் மதி யென்ன நகை இழந்த முகத்தான்:** கலைகள் நிரம்பிய பொழுதுதான் சந்திரன் ஒளியுடன் இருக்கும். கலைகள் இல்லையேல் சந்திரன் இல்லை. கலையற்ற சந்திரன் ஒன்று இருக்குமேல், அஃது எவ்வாறு ஒளியிழந்திருக்குமோ அவ்வாறு ஒளியிழந்த முகத்துடன் இருந்தான் பரதன். புன்னகையின்றி இருந்தான் பரதன் என்றும் கொள்ளலாம். **கல்கனியக் கனிகின்ற துயரான்:** பரதன். பரதனது துன்பத்தைக் கண்டால் கல்லும் குழைந்து உருகும் என்பது கருத்து. கல் குழைதல் இல்லை. அத்தகைய கல்லே குழையும் என்றால், மற்றையோர் எங்ஙனம் குழைவர் என்பதனைச் சொல்ல வேண்டா. "யாவையும் இரங்கிடக் கங்கை எய்தினன்" என்று முதற் பாடலில் கூறப்பட்டிருத்தலை ஈண்டு ஒப்பு நோக்குக.

இலக்கணக் குறிப்பு: கண்ணுற்றான்: இச்சொல்லில் 'கண்ணுறு' என்பது பகுதி. 'ஆன்' என்பது விகுதி. பகுதியின் ஒற்று இரட்டித்து இறந்தகாலம் காட்டியது. இப்பாடலில் 'கலையில்லாத சந்திரன் போல ஒளியிழந்த முகத்தை உடையவன் பரதன்' என்று உவமை காட்டப்பட்டுள்ளது 'கலையில்லாத சந்திரன்' உலகில் இல்லை. எனவே, இஃது இல்பொருள் உவமை அணி ஆகும்.

15. பரத, சத்துருக்கினரின் நிலையைக் குகன் கருதுதல்

நம்பியும் - ஆடவரில் சிறந்த இந்தப் பரதனும்
என் நாயகனை - எனது தலைவனாகிய இராமனை
ஒக்கின்றான் - ஒத்திருக்கின்றான்.
அயல் நின்றான் - பக்கலில் நின்ற சத்துருக்கினன்
தம்பியையும் - இராமனுடன் வந்த தம்பியான இலக்குவனையும்
ஒக்கின்றான் - ஒத்திருக்கின்றான்.
தவவேடம் - (பரதன்) தவக்கோலம்
தலைக்கொண்டான் - மேற்கொண்டுள்ளான்.

துன்பம் - (இவன் அடையும்) துன்பத்திற்கோ
ஒரு முடிவு இல்லை - ஓர் எல்லை இல்லை.
திசை நோக்கி - (இராமன் சென்ற) தென்திசை நோக்கி
தொழுகின்றான் - வணங்குகின்றான்
எம்பெருமான் - எமது தலைவனாகிய இராமபிரானுடைய
பின்பிறந்தார் - தம்பிமார்கள்
பிழைப்பு - தவறானவற்றை
இழைப்பரோ - செய்வரோ? (செய்யார்)
என்றான்-என்று எண்ணினான் குகன்.

கருத்துரை: 'பரதன் இராமனை ஒத்துள்ளான். சத்துருக்கினன் இலக்குவனை ஒத்துள்ளான். தவக்கோலம் தாங்கியுள்ள பரதன், இராமன் இருக்கும் திசைநோக்கித் தொழுகின்றான். பரதனது முகத்தில் துன்பக்குறிகள் உள்ளன. இராமனுடன் பிறந்தவர்கள் தவறு செய்வார்களோ? செய்யார் என்பது திண்ணம்' என்று குகன் தனக்குள் கருதினான்.

விளக்கவுரை: நம்பி - ஆடவருள் சிறந்தவன்; ஈண்டுப் பரதன். நாயகன் - தலைவன்; ஈண்டு இராமன். அயல் நின்றான்: சத்துருக்கினன். தம்பி: ஈண்டு இலக்குவன். தலைக்கொண்டான் - மேற்கொண்டுள்ளான். எம்பெருமான் - எம் தலைவனாகிய இராமன். பின்பிறந்தார் - தம்பியர். பிழைப்பு - தவறு. இழைத்தல் - செய்தல். திசைநோக்கித் தொழுகின்றான்: இராமன் சென்றுள்ள தென்திசை நோக்கித் தொழுகின்றான் பரதன். இவ்வாறு தொழுஞ் செயல் பரதன் இராமனிடம் கொண்டுள்ள பேரன்பிற்கு அறிகுறியாகும். எம்பெருமான் பின்பிறந்தார் இழைப்பரோ பிழைப்பு: 'எமது தலைவனாகிய இராமனுடன் பிறந்த தம்பியர் தவறு செய்வார்களோ? செய்யார்' என்று எண்ணினான் குகன். சேய்மையில் நின்ற பரதனுடைய தவக்கோலமும், பொலிவிழந்த முகமும், தோற்றமும், தென்திசை நோக்கித் தொழுஞ்செயலும் குகனது கருத்தை மாற்றிவிட்டன. அவ்வளவில் குகன், தான் விரைந்து முடிவு செய்தமைக்கு வருந்தினான். இத்தகைய பரதனைப் பற்றித் தான் தவறாக நினைத்தமை அவனுக்கு நாணத்தை உண்டாக்கியது. அவன், 'என்னே என் அறிவின்மை! இராமனுடன் பிறந்தவன் பரதன் என்பதைக் கூட யான் மறந்துவிட்டேனே! இராமனுடைய தம்பிமார்களும் தவறு செய்வார்களோ? இராமனுடைய தம்பியர் என்னும் உண்மையொன்றே பரதனும், சத்துருக்கினனும் எத்தகையோர் என்று அறிவிக்கப் போதுமானதன்றோ? அதனை நினையாமல் யான் சினங்கொண்டது எத்துணைப்பேதைமை!' என்று நினைத்தான்.

இலக்கணக் குறிப்பு: பிழைப்பு: தொழிற்பெயர். நின்றான், பிறந்தார்: ஈண்டு வினையாலணையும் பெயர்கள். இழைப்பரோ: ஓகார இடைச்சொல் எதிர்மறைப் பொருளில் வந்துள்ளது.

16. குகன் பரதனைக் காண வருதல்

உண்டு - 'உளதாகிய
இடுக்கண் ஒன்று - துன்பம் ஒன்றை
உடையான் - உடையவனும்
உலையாத - நீங்காத
அன்பு உடையான் - (இராமனிடம்) அன்பு உடையவனும்,
கொண்ட - (இராமன்) மேற்கொண்ட
தவவேடமே - தவக்கோலத்தையே
கொண்டிருந்தான் - தானும் கொண்டுள்ளவனாகிய இந்தப் பரதனுடைய
குறிப்பு எல்லாம் - மனக்கருத்தையெல்லாம்
கண்டு - (அருகிற் சென்று) கண்டு
உணர்ந்து - நன்கு அறிந்துகொண்டு

பெயர்கின்றேன் - திரும்புகின்றேன்.
நெறி - (அதுவரையில்) வழியை
காமின்கள் - காத்திருங்கள்'
என்னு - என்று (தன் படை வீரரிடம்) சொல்ல,
தண் துறை - குளிர்ந்த கங்கைத் துறையில்
ஓர் நாவாயில் - ஒரு படகில்
ஒரு தனியேதான் - ஒப்பற்ற தான் ஒருவனுகவே
வந்தான் - (பரதன் இருந்த இடத்திற்கு) வந்தான் குகன்.

கருத்துரை : 'பெருந்துன்பம் கொண்டு, இராமனிடம் அன்புகொண்டு, தவக்கோலத்துடன் வந்துள்ள பரதனது உள்ளக்குறிப்பை யான் உணர்ந்து வருகின்றேன். அதுவரையில் இவ்வழியைக் காப்பீராக' என்று தன் படை வீரர்க்குச் சொல்லி, ஒரு படகில் ஏறித் தனியே வந்தான் குகன்.

விளக்கவுரை : இடுக்கண் - துன்பம். உலையாத - நீங்காத. குறிப்பு - உள்ளக்கருத்து. பெயர்தல் - திரும்புதல். என்னு - என்று சொல்லி. நாவாய் - படகு. உலையாத அன்புடையான்: இராமனிடத்தில் நீங்காத அன்புடையவன் பரதன். இனி, 'என்னிடம் நீங்காத அன்புடையவனுகிய இராமன்' என்று பொருள் கொண்டு, 'இராமன் கொண்ட தவவேடமே கொண்டிருந்தான் பரதன்' என்றும் முடிவு செய்யலாம்.

இலக்கணக் குறிப்பு : இடுக்கண் - இடுங்கிய கண். துன்பம் வந்த பொழுது கண்கள் இடுங்கும் அல்லவா? துன்பத்தைக் குறிக்கும்பொருட்டே இவ்வாறு அமைந்தது. எனவே, இது காரணப்பெயர். பெயர்கின்றேன்: ஈண்டு நிகழ்காலம் எதிர்காலத்தை உணர்த்தியது. இது விரைவுபற்றி வந்த கால வழுவமைதி. காமின்: ஏவற்பன்மை வினைமுற்று. காமின்கள்: மின், கள் ஆகிய இரண்டும் விகுதிகள். ஈண்டு விகுதிமேல் விகுதி வந்துள்ளது. என்னு: 'செய்யா' என்ற வாய்பாட்டு வினையெச்சம்.

17. குகனும் பரதனும் சந்தித்தல்

வந்து - (படகில் தனியே குகன்) வந்து,
எதிரே - தனக்கு எதிரில்
தொழுதானை - (தென்திசை நோக்கியவாறு) தொழுது நின்ற பரதனை
வணங்கினுன் - அடிபணிந்தான்.
மலர் இருந்த - தாமரை மலரில் தங்கியிருக்கும்
அந்தணனும் - பிரம தேவனும்
தனை வணங்கும் - தன்னை வணங்குதற்கேற்ற தகுதிவாய்ந்த
அவனும் - அப் பரதனும்
அவன் - அக் குகனது
அடி - அடிகளில்
வீழ்ந்தான் - விழுந்து வணங்கினுன்.
தகவு உடையோர் - உயர்வுபொருந்திய குணங்களை உடையவர்களின்
சிந்தையினும் - மனத்திலும்
சென்னியினும் - தலையின் மீதும்
வீற்றிருக்கும் - மேற்கொண்டு போற்றப்படும்
சீர்த்தியான் - மிகப் புகழுடைய குகன்
தந்தையினும் - மகனிடத்துத் தந்தையொருவன் காட்டும் அன்பைக் காட்டிலும்
களி கூர - மிக்க அன்புடன்
தழுவினுன் - பரதனைத் தழுவிக் கொண்டான்.

கருத்துரை : படகில் ஏறி வட கரைக்கு வந்த குகன், தென் திசை நோக்கித் தொழுது கொண்டிருந்த பரதனை வணங்கினுன். பரதன் அவ்வளவில் குகனுடைய அடிகளில் வணங்கினுன். அதுகண்ட குகன் அப்பரதனைத் தழுவிக் கொண்டான்.

"உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே." — சாத்தனுர்.

விளக்கவுரை : வந்து - **வந்தவன் குகன்.** தொழுதானை - தொழுது நின்ற பரதனை. மலர் - தாமரை மலர். அந்தணன் - பிரமன். அவனும் : அப்பரதனும். அவன் அடி - அக்குகனுடைய அடிகளில். தகவு - தகுதி. சிந்தை - மனம். சென்னி - தலை. சீர்த்தி - மிகுபுகழ். சீர்த்தியான் : குகன். களி - அன்பு. கூர - மிக. தழுவினன் : தழுவியவன் குகன். (இப்பாடலுக்கு வெவ்வேறு விதமாகப் பொருள் கூறப்படுகின்றது. எனவே, ஈண்டுத் தடித்த உருவில் காட்டப் பெற்றுள்ளவற்றை நினைவிற் கொள்க.) **வந்து :** முன் பாடலின் இறுதியில் 'ஒரு தனியேதான் வந்தான்' என்று கூறப்படுதலால் 'குகன் வந்து' என்று பொருள் கொள்வது பொருத்தமாகும். **எதிரே தொழுதானை :** எதிரே தொழுது நின்ற பரதனை. 15-ஆம் பாடலில் 'திசைநோக்கித் தொழுகின்றான்' என்று கூறப்பட்டிருத்தலால், தொழுது நின்றவன் பரதன் என்பதனை ஐயமற உணரலாம். **மலர் இருந்த அந்தணனும் தனை வணங்கும் அவனும் :** தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமனும் தன்னை வணங்கத்தக்க பெருமையை உடையவன் பரதன். பிரமன் வணங்கத்தக்க பெருமையை உடைய திருமாலின் அமிசமாகப் பிறந்தவனாதலால் பரதன் அத்தகைய பெருமையைப் பெற்றான். **தகவுடையோர் சிந்தையினும் சென்னியினும் வீற்றிருக்கும் சீர்த்தியான் :** உயர் குணங்களையுடையவர்களின் மனத்திலும், தலையிலும் வைத்துப் போற்றப்பெறும் மிகு புகழையுடைய குகன். பரதனது பெருமையை முன்பு குறிப்பிட்ட கம்பர், குகனுடைய பெருமையையும் குறிப்பிடுதல் இயற்கையன்றோ? வேட்டுவர் குலத்தில் பிறந்தவனாயினும், உயர்ந்த நட்புக்கு இலக்கியமாக விளங்கினனாதலால், குகன், உயர்ந்தோரால் போற்றப்படும் புகழை உடையவன் என்பதில் ஐயமில்லை. எனவே, இத்தொடர் குகனைக் குறிக்கும் என்று கொள்வதே பொருந்துவதாகும். **தந்தையினும் களிகூரத் தழுவினன் :** தந்தைக்கு மகனிடம் உள்ள அன்பைக் காட்டிலும் மிக்க அன்புடன் பரதனைத் தழுவினன் குகன். அடுத்த செய்யுளில் "தழுவின புளிஞர் வேந்தன்" என்று கம்பர் ஐயத்திற்கு இடமின்றிக் கூறியுள்ளார். எனவே, தந்தையினும் களிகூரத் தழுவியவன் குகனே என்று கொள்வதே பொருந்துவதாகும்.

இப்பாடலுக்கு வெவ்வேறு விதமாகப் பொருள்கள் கூறுவர் அறிஞர்கள். அவற்றிற்கு ஒருவாறு பொருந்தக்கூடிய காரணங்களையும் அவர்கள் காட்டுவர். சிலர், முதனூலாகிய வால்மீகி ராமாயணத்துடன் பொருந்துமாறு தான் பொருள் கூறவேண்டும் என்று கருதி, பலவாறு வலிந்து பொருள் கூறுவர். முதலில் தொழுதவன் யாவன் என்பது பற்றியும், பரதன் வணங்கினனை என்பது பற்றியும், தழுவியவன் யாவன் என்பது பற்றியும் அறிஞர்களிடையே கருத்து வேற்றுமைகள் உள்ளன. அவற்றை விடுத்துப் பொதுவாக நோக்குவோம்: கம்பர் ஒரு பெருங் கவிஞர். அவர் தமிழ் நாட்டிற் பிறந்தார்; தமிழ் நூல்களைக் கற்றார்; தமிழர்களுடன் பழகினர்; தமிழ்ப் பண்பாடுகளை உணர்ந்தார். அத்தகையவர் உணர்ச்சி வயப்பட்டு ஒரு பாற்கோடியோ, உயர்வு தாழ்வுகளைக் கருத்திற்கொண்டோ பாடலைப் பாடமாட்டார் என்பது திண்ணம். வால்மீகி ராமாயணத்துடன் அவர் மாறுபடும் இடங்கள் பல உள்ளன. தமிழ்ப் பண்பாட்டிற்கு ஏற்ப அவர் இராமாயணக் கதையைப் பாடினர் என்பதனை ஆராய்ச்சியாளர் ஒப்புக்கொள்வர். ஆற்றொழுக்காகப் பொருள்படும்படி தான் அவர் பாடல்களைப் பெரும்பாலும் இயற்றியுள்ளார். எனவே, பாடலின் சொற்போக்கிற்கு ஏற்றவாறு ஈண்டுப் பொருள் உரைக்கப்பட்டுள்ளது.

"அன்பும் சிவமும் ஒன்றே." — திருமூலர்.

இலக்கணக் குறிப்பு: தொழுதானை: வினையாலணையும் பெயர். அந்தணனும்: உம்மை உயர்வு சிறப்பு. களி: முதனிலைத் தொழிற் பெயர்.

18. குகனது வினவும், பரதனது விடையும்

தழுவிய - (பரதனை) தழுவிய
புளிஞர் வேந்தன் - வேடர் தலைவனாகிய குகன்,
தாமரை - செந்தாமரை மலர் போலும்
செங்கணானை - சிவந்த கண்களை யுடைய பரதனை (நோக்கி)
எழுவினும் - 'கல்தூணைக்காட்டிலும்
உயர்ந்த - பருத்து உயர்ந்த
தோளாய் - தோள்களை உடைய பரதனே!
எய்தியது - இவ்விடத்திற்கு நீ வந்தது
என்னை - எக்காரணம் பற்றி?
என்ன - என்று கேட்க (அதற்குப் பரதன்)
முழுதுஉலகு - உலகம் முழுவதையும்
அளித்த - காத்து ஆண்ட
தந்தை - எம் தந்தையாகிய தசரதன்,
முந்தையோர் - எங்கள் முன்னோர் பின்பற்றிய
முறையினின்றும் - அரச நீதியினின்றும்
வழுவினன் - தவறிவிட்டான்.
அதனை - அக்குறைபாட்டினை
நீக்க - போக்கும் பொருட்டு
மன்னனை - அரசனாகிய இராமனை
கொணர்வான் - மீட்டு அழைத்துப் போதற்கு (வந்தேன்.)
என்றான் - என்று விடையளித்தான்.

கருத்துரை: 'நீ இவ்விடத்திற்கு வந்த காரணம் யாது?' என்று குகன் பரதனை வினவினான். அதற்குப் பரதன், 'என் தந்தை அரச நீதி தவறிவிட்டார். அக்குறைவினை நிறைவு செய்யும்பொருட்டு இராமனை அழைத்துச் செல்லவே யான் இங்கு வந்தேன்' என்று விடை கூறினான்.

விளக்கவுரை: புளிஞர் - வேடர். எழு - கல்தூண். என்னை - என்ன காரணம். தந்தை: தசரதன். முந்தையோர் - முன்னோர். வழுவினன் - தவறினான். கொணர்வான் - அழைத்துக்கொண்டு செல்லுதற்கு. **தந்தை முந்தையோர் முறையினின்றும் வழுவினன்:** தன் குலத்து முன்னோர் கைக்கொண்ட அரச நீதியிலிருந்து தவறினான் தசரதன். சூரியகுலத்து மன்னர் முதல் மகனுக்கே அரசுரிமையைத் தருவர். தசரதனோ அவ்வாறு செய்திலன்; கைகேயிக்கு அளித்த வரத்தின்படி இளையவனாகிய பரதனுக்கு அரச பதவியை அளித்து விட்டான். எனவே, அவன் அரச நீதி தவறியவன் ஆவான். முதல் மகன் இருக்க, இளைய மகனுக்கு அரசுரிமை அளித்தமையே முறைவழுவியது ஆகும். **அதனை நீக்க மன்னனைக் கொணர்வான்:** தந்தை செய்த பிழையை நீக்க விரும்பினான் பரதன். இராமனை அழைத்துச் சென்று, அரச பதவியை அவனுக்குக் கொடுப்பதே பிழையை நீக்கும் வழியாகும். இக்காரணம் பற்றியே வந்தேன் என்று கூறினான் பரதன். கொணர்வான் - கொண்டு செல்வதற்கு. ஈண்டு 'வந்தேன்' என்னுஞ் சொல் எஞ்சி நிற்கின்றது.

இலக்கணக் குறிப்பு: தாமரை: முதலாகுபெயர். கொணர்வான்: வான் ஈற்று எதிர்கால வினையெச்சம். ஈண்டுப் பகுதி 'கொணு' என்பது.

"ஆற்றுவார் ஆற்றல் பசி ஆற்றல்." — வள்ளுவர்.

19. பரதனது பெருந்தன்மையைக் கண்ட குகன் மீட்டும் வணங்குதல்

கிராதர் வேந்தன் - வேடர் தலைவனாகிய குகன்
கேட்டனன் - (பரதன்) கூறிய சொற்களைக் கேட்டு,
கிளர்ந்து எழும் - மிகுதியாகத் தோன்றுகின்ற
உயிர்ப்பன் ஆகி - பெருமூச்சை உடையவனாகி,
உவகை வீங்க - மகிழ்ச்சி மிக,
விம்மினன் - உடல் பூரித்து,
மீட்டும் - மறுபடியும்
மண் அதனில் - பூமியில்
வீழ்ந்தான் - விழுந்து,
தீட்டு அரு - சித்திரத்தில் எழுதுதற்கும் அரிய
மேனி - உடலை உடைய
மைந்தன் - பரதனது
சேவடி - சிவந்த அடிகளாகிய
கமலப்பூவில் - தாமரை மலர்களில்
பூட்டிய - சேர்த்திய
கையன் - கைகளை உடையவனாய்,
பொய் இல் - வஞ்சனை இல்லாத
உள்ளத்தன் - மனத்தை உடையவனாய்
புகலல் உற்றான்-சொல்வானாயினான்.

கருத்துரை : பரதன் கூறிய சொற்களைக் கேட்ட குகன் பெருமூச்சு விடுத்து, உடல் பூரிக்கப் பெற்று, மீட்டும் பூமியில் விழுந்து பரதனை வணங்கிச் சொல்வானாயினான்.

விளக்கவுரை : கிராதர் - வேடர். கிளர்ந்து - மிகுதியாக. உயிர்ப்பு - பெருமூச்சு. உவகை - மகிழ்ச்சி. தீட்டுதல் - சித்திரத்தில் எழுதுதல். சேவடி- சிவந்த அடிகள். கமலம் - தாமரை. பொய் - வஞ்சனை. புகலல் - சொல்லுதல். **தீட்டரு மேனி மைந்தன் :** சித்திரத்தில் தீட்டுதற்கு அரிய உடலழகினை உடைய பரதன். பரதன் பேரழகு உடையவன். அழகு முழுவதும் விளங்குமாறு சித்திரத்தில் அவனுருவை எழுதுதல் அரிது என்பது கருத்து. **பொய்யில் உள்ளத்தன் :** வஞ்சனையற்ற மனத்தையுடைய குகன். அவன் முதற்கண் பரதனைப் பற்றித் தவறாகக் கருதிவிட்டான். பின்பு அவன் பரதனது கள்ளமற்ற உள்ளத்தை உள்ளவாறு உணர்ந்தான் ; உணர்ந்த அளவில், பரதனிடம் பேரன்பு கொண்டுவிட்டான். இக்காரணம்பற்றியே குகன் இவ்வாறு குறிப்பிடப்பட்டான்.

இலக்கணக் குறிப்பு : கேட்டனன், வீழ்ந்தான், விம்மினன் : இவை ஈண்டு முற்றெச்சங்கள். கமலப்பூ : இருபெயரொட்டுப் பண்புத் தொகை. செம்மை + அடி = சேவடி : பண்புத்தொகை.

குகன் பரதனைப் போற்றுதல் (20, 21)

20. பரதனது பெரும் பண்பு

புகழினோய் - புகழை உடைய பரதனே !
தாய் உரை-தாயாகிய கைகேயியின் சொல்லை
கொண்டு - கேட்டு
தாதை உதவிய - தந்தையாகிய தசரதன் அளித்த
தரணி தன்னை - நிலவுலகை
தீவினை என்ன - கொடுந் தொழிலை விடுதல்போல
நீத்து - விடுத்து நீங்கி,
முகத்தில் - (உன்) முகத்தில்
சிந்தனை - கவலையை
தேக்கி - நிறைத்து
போயினை - (இங்கு) வந்தாய்
என்ற போழ்து - என்னும் காரணத்தால்
நின் தன்மை - உனது தன்மையை
கண்டால் - பார்த்தால்,

தெரியின் - ஆராயுமிடத்து
ஆயிரம் இராமர் - ஆயிரக் கணக்கான இராமர் உளராஜலும்
நின் - உன் ஒருவனுக்கு
கேழ் ஆவரோ - ஒப்பு ஆவார்களோ? (ஆகார்)' (என்று கூறினன் குகன்.)

கருத்துரை: குகன் பரதனைப் பார்த்து, 'புகழை உடையவனே! தந்தை அளித்த அரசபதவியை வெறுத்து நீ இங்கு வந்தாய். எனவே, நீ பெரும் பண்பு வாய்ந்தவன். ஆயிரக் கணக்கான இராமர்கள் உளராயினும், உன் ஒருவனுக்கு ஒப்பாகமாட்டார்கள்' என்று கூறிப் பாராட்டினன்.

விளக்கவுரை : தாய் : கைகேயி. தாதை - தந்தை ; ஈண்டுத் தசரதன். உதவிய - அளித்த. தரணி - பூமி. தீவினை - கொடுந் தொழில். தேக்கி - நிறைத்து. தெரியின் - ஆராயின். கேழ் - ஒப்பு. **தாய் உரை கொண்டு:** கைகேயி சம்பராசுரப் போர் நிகழ்ந்த காலத்தில் தசரதனிடம் இரண்டு வரங்களைப் பெற்ருள். அவற்றுள் ஒன்றினல், பரதனுக்கு நாட்டினை அளிக்குமாறு அவள் தசரதனைக் கேட்டாள். தசரதன் அதற்கு இசையாமல் இருக்க முடியவில்லை. தாயின் உரையைக் கேட்டான் தந்தை. அதுவே ஈண்டுக் குறிப்பிடப்பட்டது. **தாதை உதவிய தரணி:** தந்தை கொடுத்த நாடு. தான் தன் மனைவிக்கு அளித்த வாக்குறுதியின்படி நடக்க முற்பட்டான் தசரதன். பரதனுக்கு அரசபதவி வேண்டுமென்று அவள் ஒரு வரத்தைக் கேட்கவே, மறுக்க வழியின்றி அவன் அரசபதவியைப் பரதனுக்கு அளித்தான். **தீவினை என்ன நீத்து:** உயர்ந்தோர் தீவினைகட்கு அஞ்சி நீங்குவர். பரதனும் உயர்ந்தவனதலால் தீவினைக்கு அஞ்சி நீங்கினன். மூத்தவன் இருக்க இளையவன் அரசுரிமை ஏற்பது தீவினையேயாகும். அதுபற்றியே அச்செயலைத் தீவினை போல எண்ணி அவன் நீக்கினன். "தீயவை தீயினும் அஞ்சப்படும்" என்னும் வள்ளுவர் வாய்மொழி ஈண்டு நினைத்தற்குரியது. **சிந்தனை முகத்தில் தேக்கி :** கவலையை முகத்தில் நிறைத்து வைத்திருந்தான் பரதன். அவனது மனத்தில் குடி கொண்டிருந்த கவலையை அவனது முகம் எடுத்துக் காட்டியது என்பது கருத்து.

> **"அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்**
> **கடுத்தது காட்டும் முகம்."**

என்னும் குறட்பா ஈண்டு ஒப்பு நோக்குதற்குரியது.

ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ : ஆயிரக் கணக்கான இராமர் உளராலும் பரதன் ஒருவனுக்குச் சமமாக மாட்டார்கள். இவ்வாறு கூறுதல் பொருந்துமோ என்று சிலர் ஐயுறுதல் கூடும். பரதனது நற்பண்பினை யாவருக்கும் எடுத்துக்காட்ட விரும்பியே கம்பர் இவ்வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டார். மக்களுக்குள் சிறந்தவனக இராமனைக் காட்டியுள்ளார் கம்பர். அத்தகைய இராமனைக் குறைத்துக்கூறி, பரதனை உயர்த்த வேண்டும் என்னும் கருத்து கம்பருக்கு இல்லை. பரதனிடம் குடி கொண்டுள்ள ஒரு பெரும்பண்பினைப் பாராட்டுவதே அவரது நோக்கமாகும். 'விருப்பின்மை' என்பது அவனிடம் இருந்த ஒரு பெரும்பண்பு. அதனைப் பாராட்டவே கம்பர் இங்ஙனம் கூறினர்.

தந்தை சொல்லைத் தட்டி நடக்கவில்லை இராமன். "தந்தை சொல் மிக்க மந்திரமில்லை" என்னும் நீதியைக் கருத்தில் இருத்தி, அவன் காடு சென்ருன். குடிகளின் வேண்டுகோள்கட்கு அவன் செவி சாய்த்தானல்லன். அந்த முறையில் நோக்கினல், இராமன் அரசர்க்கு உரிய கடமையிலிருந்து தவறியவன் ஆவான். ஆயின், பரதன் யாது செய்தான்? குடிகளின் விருப்பத்தை

நிறைவேற்றுவதே தன் கடமை என்று கொண்டான். குடிகளின் விருப்பம் இராமன் அரசாள வேண்டும் என்பதன்றே? அவ்விருப்பத்தை நிறைவேற்ற அவன் முற்பட்டான். மேலும், மூத்தவன் இருக்க இளையவன் ஆளுதல் அரச நீதியாகாது என்பதை அவன் உணர்ந்தான். பிழை செய்தவன் தந்தையேயாயினும், அப்பிழையை அகற்ற முற்பட்டான். இதிலிருந்து அரசர்க்குரிய அறத்தினை நிலை நாட்டுவதில் அவனுக்கு இருந்த ஆர்வம் நன்கு புலப்படும். தனக்கு அரசபதவி இல்லையென்றும், காடு செல்ல வேண்டும் என்றும் தந்தை கூறினன் என்றவுடன் இராமன் வேறு வழியின்றிக் காட்டை அடைந்தான். தந்தை அளித்திருந்தால் ஏற்றுக் கொண்டிருப்பானன்றே? ஆனல் பரதன் என்ன செய்தான்? தனக்குக் கிடைத்த அரதபதவியை வேண்டாம் என்று வெறுத்து விட்டான். பரதனுடைய விருப்பின்மையும், பற்றற்ற நிலையும் ஒரு விதத்தில் இராமனிடம் அமைந்தில என்று கூடக் கூறலாம். ஒன்று கிடைக்கவில்லை என்று தெரிந்த பொழுது அதனை வெறுப்பதைக் காட்டிலும், கிடைத்த பொழுது வெறுப்பது பெரும்பண்பு அன்றே? அத்தகைய பெரும்பண்பு பரதனிடம் குடி கொண்டிருந்தது. அதனைப் பாராட்டும் பொருட்டே குகன் இவ்வாறு கூறினன் என்று கம்பர் பாடியுள்ளார்.

இலக்கணக் குறிப்பு : போயினை : முன்னிலை ஒருமை வினைமுற்று' போழ்து : 'பொழுது' என்பதன் மரூஉ. அம்மா : வியப்பிடைச் சொல்.

21. பரதனது புகழின் பெருமை

உயர்குணத்து - உயர்ந்த குணங்களையும்
உரவு - வலிய
தோளாய் - தோள்களையும் உடைய பரதனே!
ஏழை - அறிவில்லாத
எயினனேன் - வேடனாகிய யான்
என் புகழ்கின்றது - உன்னைப் புகழ்வது எங்ஙனம்?
இரவி என்பான் - சூரியன் என்பவன்
தன் - தன்னுடைய
புகழ்க்கற்றை - கதிர்களின் தொகுதியால்
மற்றை - ஏனை
ஒளிகளை - (சந்திரன் முதலிய) ஒளிகளை
தவிர்க்குமா போல் - அடக்கும் விதத்தைப் போல,
மன் - அரசர்கள்
புகழ் - புகழ்கின்ற
பெருமை - பெருமையைக் கொண்ட
நுங்கள் - உங்கள்
மரபினோர் - குலத்தோருடைய
புகழ்கள் எல்லாம் - புகழ்களையெல்லாம்
உன் புகழ் - உனது புகழ்க்குள்
ஆக்கிக் கொண்டாய் - அடங்குமாறு செய்து கொண்டாய்.'
(என்று கூறினன் குகன்.)

கருத்துரை : குகன் பரதனைப் பார்த்து, 'உன்னைப் புகழ என்னல் முடியாது. ஏனை ஒளிகளைச் சூரியன் அடக்கிவிடுவது போல, நீயும் உன் குலத்தோர் புகழையெல்லாம் உன் புகழாக்கிக் கொண்டு விட்டாய்' என்று கூறினன்.

விளக்கவுரை : ஏழை - அறிவில்லாதவன். எயினனேன் - வேடனாகிய யான். இரவி - சூரியன். கற்றை - திரள். மன் - அரசர்கள். மரபினோர் - குலத்தோர். உரவு - வலிமை. **இரவி என்பான் தன் புகழ்க் கற்றை மற்றை ஒளிகளைத் தவிர்க்குமா போல் :** சூரியன் தன் கதிர்த்திரளால்

சந்திரன் முதலிய ஏனை ஒளிகளை அடக்கி விடுகின்றான். சூரியன் பிற ஒளிகளை வென்று அவற்றைத் தன் ஒளிக்குள் அடக்கிக் கொள்ளுதல் போலவே பரதன், தன் முன்னோர் புகழையெல்லாம் தன் புகழ்க்குள் அடக்கிக்கொண்டு விட்டான். 'சூரியன் உள்ளபொழுது ஏனையோர் ஒளிகள் மங்கியிருத்தல் போல, பரதன் உள்ளபொழுது ஏனையோர் ஒளிகள் மங்கியிருந்தன' என்றும் உவமைப் பொருத்தம் கொள்ளலாம். இனிமேல யாவரும் பரதனையே புகழ்வர் என்பது கருத்து.

இலக்கணக் குறிப்பு: புகழ் பெருமை: வினைத்தொகை. இச் செய்யுளின்கண் உவமையணி அமைந்துள்ளது.

நல்லொழுக்கப் பயிற்சி

இராமன் மணிமுடி பூண்ட மன்னனின் மகன். குகன் ஓடம் ஓட்டிய வேடன். ஆயின், இவ்விருவரும் நட்புக் கொண்டிருந்தனர்; உயிர் நண்பர்களாக இருந்தனர். இராமன் குகனைத் தன் உடன் பிறந்தவனாகவே கருதினான். அவ்வாறு அவன் கருதினான் என்பதை உணர்ந்த பரதனும் அந்தக் குகனைத் தன் உடன் பிறந்தவனாக நினைக்கலானான். இவ்வாறு இவர்களைப் பிணித்தது எது? அன்பேயன்றோ? அன்பின் பிணிப்பில் அவர்கள் தங்களுடைய வேறுபாடுகளை மறந்தனர். எனவே, அன்பு எத்தகைய வேறுபாடுகளையும் மாற்றும் தன்மையை உடையது என்பதை நீங்கள் உணரலாம்.

இன்று இவ்வுலகில் நிலவியுள்ள பிணக்குகளையும், பூசல்களையும், மாறுபாடுகளையும் அகற்ற வல்ல தன்மை அன்பிற்கே உண்டு. அத்தகைய அன்பினை நீங்கள் பிறரிடம் காட்டவேண்டும். உங்களுடைய வகுப்பில் உடன்பயிலும் மாணவர்களிடம் அன்பு காட்டுங்கள்; அவர்களுடைய இன்பதுன்பங்களில் பங்கு கொள்ளுங்கள்; அவர்களை உங்களுடைய உடன் பிறந்தவர்களாகக் கருதுங்கள். அவ்வாறு கருதினால், நாட்டில் மாறுபாடு மறையும்; ஒற்றுமை உறையும்; நாடு நலமுறும். நந்நாடு பொன்னாடாகத் திகழும்.

---

3. திருத்தொண்டர் புராணம்

பெயர்க் காரணம்: மேன்மை பொருந்திய சிவனடியார்களுடைய பழைய வரலாறுகளைக் கூறும் நூலாதலின் இஃது இப்பெயர் பெற்றது. பெரிய புராணம் என்றே இந்நூல் பெரும்பாலும் வழங்கப்படுகின்றது. எனினும், திருத்தொண்டர் புராணம் என்பதே நூலாசிரியர் இட்ட பெயராதலின் இங்கு அங்ஙனம் குறிக்கப்பெற்றது: ஆறும் வேற்றுமைத் தொகை.

செயற்கரிய செய்து பெருமை பெற்ற சிவனடியார்களின் வரலாறுகளைக் கூறுவதால் பெரிய புராணம் என இந்நூல் பெயர் பெற்றது.

ஆசிரியரைப் பற்றிய செய்திகள்

பெயர் : சேக்கிழார்.

இயற்பெயர் : அருண்மொழித் தேவர்.

சிறப்புப் பெயர்கள் : உத்தம சோழ பல்லவர், தொண்டர் சீர் பரவுவார்.

ஊர் : தொண்டை நாட்டிலுள்ள குன்றத்தூர். அது செங்கற்பட்டு மாவட்டத்தின்கண் உள்ளது.

மரபு : வேளாளர்.

சமயம் : சைவம்.

காலம் : கி. பி. பதினோராம் நூற்றாண்டு. பன்னிரண்டாம் நூற்றாண்டு என்றும் சிலர் கூறுவர்.

வரலாற்றுச் சுருக்கம் : அருண்மொழித் தேவர் எனப் பெயர் பெற்ற இப்புலவர் சேக்கிழார் குடியில் தோன்றி அக்குடிக்கே சிறப்பைத் தேடித் தந்தமையின் **சேக்கிழார்** என்ற குடிப்பெயராலேயே வழங்கப்பட்டார். இவருடைய அறிவாற்றலை அறிந்த அநபாய சோழ மன்னன் (முதலாம் இராஜேந்திர சோழன் என்றும், இரண்டாம் குலோத்துங்க சோழன் என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர்) இவரைத் தன்னுடைய அமைச்சராக்கிக் கொண்டான். அப்பொழுது **உத்தம சோழ பல்லவராயன்** என்ற சிறப்புப் பெயரை இவருக்கு அவன் வழங்கினான்.

நூலியற்றக் காரணம் : அநபாய சோழ மன்னன் சைவ சமயத்தைச் சார்ந்தவனாயிருந்தும் சிந்தாமணி முதலிய சைன சமயக் காப்பியங்களைக் கற்பதிலும் கேட்பதிலும் காலங்கழித்து வந்தான். சேக்கிழார் அதனை உணர்ந்து, அந்நூல்களைக் கற்பதனால் பயன் இன்று என்று கூறி, இம்மை மறுமை இன்பங்களை அளிக்க வல்ல சிவனடியார்களின் வரலாறுகளை எடுத்துக் கூறினார். இவ்வரலாறுகளைக் கேட்ட அரசன் அவற்றை ஒரு நூலாகப் பாடித் தந்தால் உலகிற்குப் பெருநன்மை செய்ததாகும் என்று வேண்டிக் கொண்டான். அதுகேட்ட சேக்கிழாரும் சிதம்பரத்திற்குச் சென்று நடராசப் பெருமானை வணங்க, அவர் 'உலகெலாம்' என்று அடியெடுத்துக் கொடுக்க, ஓராண்டில் இவர் இந்நூலைப் பாடி முடித்தார். புராணம் முடிந்தமையறிந்த அநபாய மன்னன், தன் பரிவாரங்களுடன் தில்லைக்கு வந்து சேக்கிழாரையும் திருத்தொண்டர் புராணத்தையும் யானை மீதேற்றி, தானே அவருக்குக் குடை பிடித்தும் கவரி வீசியும் நகர் வலம் செய்வித்து, அவர்க்குத் தொண்டர் சீர்பரவுவார் என்ற பட்டப் பெயரளித்துப் பரிசில்கள் பல வழங்கிச் சிறப்புச் செய்தான்.

நூலின் சிறப்பு : இந்நூல் நடராசப்பெருமானால் 'உலகெலாம்' என்று அடியெடுத்துக் கொடுக்கப்பட்ட பெருமையை உடையது; பக்திச் சுவையும் இலக்கியச் சுவையும் கொண்டது; சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் பன்னிரண்டாவதாகச் சேர்க்கப்பட்டது; சிறந்த சைவ சமயக் கருத்துக்கள் நிறைந்தது. "பத்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ" என்று இவரை மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் சேக்கிழார் பிள்ளைத் தமிழின்கண் புகழ்ந்து பாடியுள்ளமையால் இந்நூலின் பக்திப் பெருக்கு நன்கு விளங்கும்.

நூல்வகை : நூல்வகையில் இது வழி நூலாகும். சுந்தரமூர்த்தி நாயனர் பாடிய **திருத்தொண்டத்தொகை**, நம்பியாண்டார் நம்பி பாடிய **திருத்தொண்டர் திருவந்தாதி** ஆகியவை இதற்கு முதல் நூல்களாம். இவையேயன்றித் தேவாரப் பாடல்கள், காரைக்காலம்மையார் பாடல்கள், திருமூலர் திருமந்திரம் முதலியவைகளையும், தாம் செவி வழியாகக் கேட்டுணர்ந்த வரலாறுகளையும் அடிப்படையாகக் கொண்டே சேக்கிழார் இச் சிறந்த நூலை இயற்றினர்.

இளையான் குடிமாற நாயனர் புராணம்

இளையான் குடிமாறனர் என்னும் சிவனடியாரது பழைமையான வரலாற்றைக் கூறும் பகுதி என்பது இதன் பொருளாம். இது, திருத்தொண்டர் புராணத்தில், தில்லைவாழந்தணர் சருக்கம் என்னும் பகுதியில் உள்ளது.

பாடப்பகுதியின் சுருக்கம் : இளையான் குடி என்னும் ஊரில் மாறனர் என்னும் பெரியார் வாழ்ந்து வந்தார். அவர் வேளாண் குலத்தில் தோன்றியவர் ; சிவனடியார் பூசையில் பெரு விருப்பம் கொண்டவர் ; தம்மிடம் வரும் சிவனடியார்களைப் போற்றிப் பேணும் தன்மையைக் கொண்டவர். சிவபிரானருளால் பெருஞ் செல்வம் பெற்று அவர் விளங்கலானர்.

செல்வம் செழித்துள்ள காலத்தில் மட்டுமன்றி, வறுமை வந்துற்ற காலத்திலும் அவர் சிவனடியாரைப் போற்றும் இயல்புடையவர் என்பதனை உலகுக்கு உணர்த்த விரும்பினர் சிவபிரானர். எனவே, அவர் மாறனரது செல்வம் நாளுக்கு நாள் குறையுமாறு செய்தார். செல்வம் சுருங்கிய காலத்தில் நாயனர் மனம் சுருங்கினரல்லர் ; தம் வழக்கத்தை விடுத்தாரல்லர் ; சிவனடியார் திருத்தொண்டினை விடாமல் செய்து வந்தார்.

நாயனரது இயல்பினை உலகம் அறியச் செய்ய வேண்டும் என்பதன்றோ ஈசனரின் திருவுள்ளம்! ஆகவே, அவர் மாரிக்காலத்தில் ஒரு நாள் தவக் கோலம் தாங்கி நாயனரது இல்லத்தை அடைந்தார். அப்பொழுது மழை பொழியும் கள்ளிரவுக் காலமாகும். நாயனரோ அன்று முழுவதும் உணவின்றி இருந்தவர். அத்துணை வறுமையில் அவர் இருந்தார். இத்தகைய நிலையில்தான் சிவபிரான் தவக் கோலத்துடன் அவர் வீட்டை அடைந்து, வாயிற் கதவைத் தட்டினர். நாயனரும் விரைந்து வந்து கதவைத் திறந்தார். சிவனடியார் ஒருவரைக் கண்டவளவில், நாயனர் அவ்வறுமை நிலையிலும் பெரு மகிழ்ச்சி கொண்டார் ; எதிர் கொண்டழைத்துச் சென்றார் ; சிவனடியாருடைய திருமேனியின் ஈரத்தைப் போக்கினர் ; இருக்கச் செய்து அவர்க்கு உணவு கொடுக்க விரும்பி உட்புறத்தே சென்றார்.

உட்புறத்தில் உணவு ஏது? அவரும், அவரது மனைவியாரும் அன்று முழுவதும் பட்டினியாக இருந்தவர்கள். நாயனர் யாது செய்வார்? சிவனடியார்க்கு உணவு கொடாமல் இருக்க முடியுமோ? அத்துணை நாட்களாகக் கொண்டிருந்த வழக்கத்தை விடுதல் இயலுமோ? அவர் தமது மனைவியாரைப் பார்த்தார் ; அடியவர்க்கு அமுது கொடுத்தல் எவ்வாறு என்று வினவினர். அவ்வளவில் அந்த அம்மையார், ‘இந்நேரத்தில் கடன் தருவார் இலர். வயலில் இன்று காலையில் நாம் நெல் விதைகளை விதைத்தோமன்றோ? அவற்றை வாரிக்கொண்டு வந்தால், அடியார்க்கு ஒருவிதமாக உணவு அளிக்க முடியும்’ என்றார். அவ்வுரையைக் கேட்ட நாயனர் வயலுக்கு விரைந்து சென்றார்.

அப்பொழுது இருள் நிரம்பியிருந்தது. மழையோ பொழிந்து கொண்டிருந்தது. அவர் இறை கூடையைத் தலையில் கவிழ்த்தவாறு ஓடிச் சென்று, ஒருவாறு வயலை அடைந்தார்; நீரில் மிதந்து வந்து வரப்பினிடத்தே தங்கியிருந்த நெல்முளைகளைக் கூடையில் ஒருவாறு சேர்த்தார்; விரைந்து வந்து தமது மனைவியாரிடம் அதனைக் கொடுத்தார். அடுப்பெரிக்க விறகும் அப்பொழுது இல்லை. வீட்டுக்கூரையின் ஒரு பகுதியை அறுத்தெடுத்துத் தந்தார் நாயனார். அவரது மனைவியார் உடனே விரைந்து நெல் முளையை வறுத்தார்; அரிசியாக்கினார்; உலையிற் பெய்து சோறாக்கினார்; கொல்லையில் முளைத்திருந்த புன்செய்ப் பயிர்களைக் கொணரச் செய்து கறி வகைகளைச் சமைத்தார்.

ஈண்டு நிகழ்ந்தவற்றை உணர்ந்தும், துயில் கொண்டிருப்பவர் போல் கிடந்தார் தவக் கோலத்துடன் வந்திருந்த ஈசனார். உணவு ஆக்கப் பெற்றவுடன் நாயனார் விரைந்து வந்து, தவக் கோலம் பூண்டிருந்த அடியாரை எழுப்பலானார். அந்நிலையில் அடியார் படுத்திருந்த இடத்தில் பேரொளிப் பிழம்பு ஒன்று தோன்றியது. அவ்வொளியைக் கண்ட நாயனாரும், அவரது மனைவியாரும் திகைத்து நின்றனர். அவ்வளவில் வானிலே சிவபிரான் பார்வதி தேவியாருடன் தோன்றித் தம் அடியவர்க்குக் காட்சி கொடுத்தருளினார். காட்சி கொடுக்குங்கால் ஈசனார் தம் அடியவரை நோக்கி, 'அன்ப! நீ அடியார் பூசையைக் குறைவின்றிச் செய்தாய். ஆகவே, நீ நின் மனைவியோடு எம்மிடம் வந்து, பேரின்பம் பெற்று வாழ்க. செல்வத்திற்கு உரிய கடவுளாகிய குபேரன் உனக்கு ஏவல் கேட்பான்' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

1. இளையான் குடிப்பதி மாறனார்

அம்பொன் - அழகிய பொன்னினால்
நீடிய - வேயப் பெற்று நீண்டு வருகின்ற
அம்பலத்தினில் - தில்லையம்பலத்தில்
ஆடுவார் - நடனம் ஆடுபவராகிய சிவபிரானுடைய
அடி - திருவடிகளை
சூடுவார் - எக்காலத்திலும் சூடுபவரும்,
தம்பிரான் - தலைவனாராகிய சிவபிரானிடத்தே
அடிமைத் திறத்து - அடிமை செய்யும் திறத்தில்
உயர் - உயர்ந்த
சால்பின் மேன்மை - சால்பினால் உள்ள மேன்மையை
தரித்துளார் - தரித்து வாழ்பவரும் ஆகிய,
மாறனார் - மாறன் என்னும் பெயரினை உடைய பெரியார்
இளையான் குடிப்பதி - இளையான் குடி என்னும் ஊரில்,
நம்பு வாய்மையில் - நம்பிக்கைக்கு உரியதாகிய
நீடு - தொன்றுதொட்டு வருகின்ற
சூத்திர நற்குலம் - நல்ல உழவர் குலம்
செய் தவத்தினால் - செய்த தவம் காரணமாக (அவதரித்து)
இம்பர் ஞாலம் - இந்நிலவுலகத்தை
விளக்கினார் - விளக்கம் செய்தார்.

கருத்துரை : சிவபிரானை எப்பொழுதும் நினைத்து, அவர்க்கு அடிமை பூண்ட மாறனார் இளையான்குடி என்னும் ஊரில் உழவர் குலத்தே அவதரித்து, இவ்வுலகுக்கு ஒளியைக் கொடுத்தார்.

விளக்கவுரை : அம் - அழகு. நீடிய - நீண்டு வருகின்ற. அம்பலம் - சபை; சிதம்பரத்தில் உள்ள நடன சபை. தம்பிரான் - சிவபிரான்.

வாய்மை - உண்மை. இம்பர் ஞாலம் - இந்நிலவுலகம். பதி - ஊர். **அம் பொன் நீடிய அம்பலம்:** பொன்னம்பலம். சிதம்பரத்தில் உள்ள பொன்னம்பலம் தேவர்களாலும், அரசர்களாலும் பொன் வேயப் பெற்றது என்று நூல்கள் கூறுகின்றன. அநபாயன் என்னும் சோழமன்னன் தில்லைக் குப் பொன் வேய்ந்தான் என்று வரலாறு கூறுகிறது. இவ்வாறு பலரால் பொன் வேயப் பெற்ற காரணம் பற்றி 'நீடிய' எனப்பட்டது. **தம்பிரான் அடிமைத் திறத்து உயர் சால்பின் மேன்மை தரித்துளார்:** சிவபிரா னிடத்தே அடிமை பூண்டிருந்தார் மாறனார். அதனால் அவர் உயர்ந்து மேம் பட்டார். பலவகைப்பட்ட நற்பண்புகளையும் சேர்த்துக் குறிப்பிடும் பெரும் பண்பே சால்பு எனப்படும். அந்தச் சால்பு, சிவபிரானது அடிமைத் திறத் தைச் சேர்ந்ததனால் உயர்வை அடைந்தது. அவ்வாறு உயர்வடைந்த சால் பின் மேன்மையை மாறனார் தரித்தவர். **நம்பு வாய்மையில் நீடு சூத்திர நற்குலம்:** நம்பிக்கைக்கு உரிய தொன்மையான உழவர் குலம். வாய்மை என்பது உண்மையாகும். நம்புதற்குக் காரணமாக இருப்பது வாய்மை. அந்த வாய்மை யென்னும் அறத்தினைத் தொன்றுதொட்டு மேற் கொண்டிருந் தவர் உழவர். அதுபற்றியே 'நற்குலம்' எனப்பட்டது. 'சூத்திர நற்குலம்' என்பது உழு தொழில் செய்யும் இனத்தவரைக் குறித்தது. **இளையான் குடிப்பதி மாறனார்:** இளையான்குடி என்னும் ஊரில் அவதரித்த மாறனார். இளையான்குடி என்னும் ஊரில் தோன்றிய காரணத்தால் மாறனார் இளையான் குடி மாறனார் என்று பெயர் பெற்றார். மாறனார் என்பது நாயனாரது இயற் பெயர். இளையான்குடி என்பது ஓர் ஊர். **அவ்வூர் உள்ள இடத்தைப் பற்றி மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன. அவை வருமாறு:—** சோழ நாட்டில் திருநள்ளாற்றுக்கு அண்மையில் உள்ள இளையான்குடியே இது என்பர் சிலர். அவ்வூரில் உள்ள நாற்றங்கால் ஒன்று **'முளைவாரிக் குட்டை'** என்று வழங்கப்படுகிறது. இப்பெயர் நாயனாரின் வரலாற்றுடன் தொடர்பு கொண்டிருத்தலால், இவ்வூர் **சோழ நாட்டு இளையான்குடியேயாகும்** என்பர் சிலர். இனி, இவ்வூர் **பாண்டி நாட்டில் உள்ள இளையான் குடியே** என்பர் வேறு சிலர். இராமநாதபுர மாவட்டத்தைச் சேர்ந்த பரமக்குடிக்குப் பக்கத்தில் இப்பெயருடைய ஓரூர் உள்ளது. அவ்வூரில் **'முளைவாரி அமுதளித்த நாற்றங்கால்'** என்ற பெயருடன் சர்வமானிய நிலம் ஒன்று உள்ளது. மேலும், அவ்வூர்ச் சிவன் கோயிலில் **முளைவாரி அமுதளித்த விழா** முன்பு நடந்து வந்தது என்கின்றனர் அவ்வூரார். மாறன் என்ற சொல் பாண்டியர்க்கே உரியது. இக்காரணங்கள் பற்றி, நாயனாரது ஊர் பாண்டி நாட்டு இளையான்குடியே என்று சொல்லப்படுகின்றது. ஆயின், தொண்டைமண்டல சதகமோ, இவ்வூர் தொண்டை மண்டலத்திற்கு உரியது என்று கூறுகின்றது. இந்நூலாசிரியராகிய சேக்கிழார் இவ்வூரின் இருப் பிடத்தைக் கூறிற்றிலர். இந்நிலையில் எம்முடிவுக்கும் வருதல் இயலாத தாகும்.

இலக்கணக் குறிப்பு: ஆடுவார், சூடுவார்: **ஈண்டு வினையாலணை யும் பெயர்கள்.** செய்தவம்: **வினைத் தொகை.**

மாறனாரின் சிவபக்தியும் அடியார் தொண்டும் (2-4)

2. மாறனாருடைய செல்வமும், அடியாரிடத்து அன்பும்

ஏரின் - ஏர்த்தொழிலால்	**வரும்** - வருகின்ற
மல்கு - நிறைந்து பெருகும்	**எல்லை இல்லது** - எல்லை இல்லாத
வளத்தினால் - உழவு வளங்களினால்	தாகிய

"புகழல்லால் பொன்றுது நிற்பது ஒன்று இல்." — **வள்ளுவர்.**

ஓர் - ஒப்பற்ற
செல்வமும் - செல்வமாகிய உண வும், ஏனைப் பொருள்களும்,
நீரின் மல்கிய - கங்கையாறு தங்கிய
வேணியார் - சடையினை உடையவ ராகிய சிவபிரானுடைய
அடியார் திறத்து - அடியவர்கள் திறத்திலே
நிறைந்தது - நிறைந்ததாகிய
ஓர் - ஒப்பற்ற
சீரின் மல்கிய - சிறப்பில் மிக்க
அன்பின் மேன்மை - அன்பினது உயர்வு
திருந்த - திருத்தமாக
மன்னிய - நிலை பெற்ற
சிந்தையும் - மனமும்
பாரின் மல்க - நிலவுலகில் நிலவ
விரும்பி ——,
மற்று அவை பெற்ற - அவைகளைத் தாம் பெற்றதனால் உண்டான
நீடுபயன் - அளவின்றிப் பெரிய தான பயனை
கொள்வார் - அடைவாராய்,

கருத்துரை : உழவுத்தொழில் செய்து கிடைத்த உணவும், அது கொண்டு பெற்ற பிற செல்வங்களும், சிவனடியார்களுக்குச் சிறப்புச் செய்வ தில் நிலைத்த மனமும் வளருமாறு விரும்பி, இவற்றால் பெற்ற பெரும் பயனை அடைந்து வாழ்ந்தார் மாறனார்.

விளக்கவுரை : ஏர் - உழுதொழில். மல்கு - நிறைந்து. எல்லை - அளவு. நீர் - ஈண்டுக் கங்கையாறு. வேணி - சடை. வேணியார் - சடை யினையுடைய சிவபிரான். மன்னிய - நிலைபெற்ற. பார் - பூமி. **ஏரின் மல்கு வளம் :** உழவுத் தொழிலால் கிடைத்த செல்வம். உழவுத் தொழிலால் கிடைக்கும் உணவுப் பொருள்களும், அவை கொண்டு பெற்ற ஏனைப் பொருள்களும் ஈண்டுச் செல்வம் என்று குறிப்பிடப் பட்டன. 'வளம்' என்னும் சொல் 'விளைவு' என்று பொருள்படும். எல்லாச் செல்வங்கட்கும் உழவே காரணமாதலால் இவ்வாறு கூறப்பட்டது. **நீரின் மல்கிய வேணி யார் :** கங்கை தங்கிய சடையினையுடைய சிவபிரானார். அவர் கங்கை யாற்றைத் தலையில் தரித்துள்ளார் என்று புராணம் கூறும். ஏர்த்தொழில் நன்கு நடைபெறுதற்கு நீர் இன்றியமையாதது என்னும் கருத்தினை மனத் தில் கொண்டே சேக்கிழார் ஈண்டுச் சிவபிரானாரை "நீரின் மல்கிய வேணி யார்" என்று குறிப்பிட்டார். **மற்றவை பெற்ற நீடு பயன் :** ஏர்த் தொழி லால் வந்த செல்வமும், அடியார் திறத்துப் பூசனை செய்வதில் சிந்தையும் தாம் பெற்றதனால் உளதாகிய நீண்ட பயன். இத்தகைய பயன் அவருக்கு மட்டுமன்றி அவருடைய பின்னோர்க்கும் பரம்பரையாக வருமாதலின் சேக் கிழார் 'நீடுபயன்' என்று குறிப்பிட்டார். இப்பாடல் குளகம்.

3. மாறனார் சிவனடியாரை வரவேற்கும் திறம்

ஆரம் - ஆத்தியையும்
என்பு - எலும்பையும்
புனைந்த - அணிந்த
ஐயர் தம் - தலைவராகிய சிவபெருமா னுடைய
அன்பர் - அன்பர்கள்
என்பதோர் தன்மையால் - என் னும் ஒரே தன்மையினை மனத்திற் கொண்டு (அது காரணமாக)
நேரவந்தவர் - முன்னே வந்த வர்கள்
யாவராயினும் - எத்தகையோராயி னும்
நித்தமாகிய - உறுதியாக நிலை பெற்ற
பத்தி - பக்தியானது
கூர - மிக
முன்வந்து - அவர்கள் முன்னே வந்து
எதிர் கொண்டு - வரவேற்று
கைகள் குவித்து ——,
நின்று - வணக்கத்துடன் நின்று

" உயர்ந்தவை தாழும், தாழ்ந்தவை உயரும்." — திருத்தக்க தேவர்.

செவிப் புலத்து - அவர்களுடைய காதில் விழுமாறு
ஈரம் - குளிர்ந்த
மெல் - அன்பான
மதுரப் பதம் - இன்சொற்களை
பரிவு எய்த - அவர்கள் அன்பு கொள்ளுமாறு
முன் - முதலில்
உரை செய்தபின் - கூறிய பிறகு.

கருத்துரை : சிவனடியார் என்ற பெயருடன் எத்தகையார் தம் வீட்டிற்கு வந்தாலும் பக்தியுடன் எதிர்கொண்டு கைகுவித்து இன்சொற்கள் கூறுதலை வழக்கமாகக் கொண்டிருந்தார் மாறனார்.

விளக்கவுரை : ஆரம் - ஆத்தி ; 'மாலை' என்றும் பொருள் கொள்ளலாம். என்பு - எலும்பு. ஐயர் - தலைவர் ; ஈண்டுச் சிவபிரான். நேர - நேராக, எதிரில். நித்தம் - மாறுதல் இல்லாத. கூர - மிக. செவிப் புலம் - காதின் இடம். ஈரம் - குளிர்ச்சி. மதுரம் - இனிமை. பதம் - சொல். பரிவு - அன்பு. **ஆரம் என்பு புனைந்த ஐயர் :** ஆத்தி மாலையையும் எலும்பையும் அணிந்த தலைவராகிய சிவபிரான். ஆத்திமாலை சிவபிரானுக்கு உரியது. இனி, ஆரம் என்னும் சொல்லுக்கு மாலை என்று பொருள் கொண்டு, 'எலும்பு மாலையை அணிந்த சிவபிரான்' என்றும் பொருள் கூறலாம். யுக முடிவின் காலத்தில் சிவபிரான் பெருந்தீயினை வெளிப்படுத்தி, உலகை எரித்து மீட்டும் படைப்பார் என்று சைவ புராணங்கள் கூறும். அவ்வாறு எரித்த காலையில் சிவபிரான், பிரமன் முதலிய தேவர்களுடைய எலும்பை மாலையாக அணிந்தார் என்று சொல்லப்படும். **செவிப் புலத்து ஈரமென் மதுரப் பதம் :** அடியவர்கள் கேட்குமாறு சொல்லப்படுகின்ற அன்பு கலந்த இன்சொற்கள். அன்புடன் கலந்து வருவதுதான் இன்சொல் ஆகும். உள்ளன்பு இன்றி வரும் சொல் இன்பம் தருவதுபோல் காணப்படினும் இன்சொல் ஆகாது. வள்ளுவரும் இன்சொல்லுக்கு இவ்வாறே இலக்கணம் கூறியுள்ளார். வரும் விருந்தினரை உபசரிக்கும் திறத்தினைச் சேக்கிழார் ஈண்டு அழகுபடக் கூறியுள்ளார். இப்பாடலும் குளகம்.

இலக்கணக் குறிப்பு : ஆரமென்பு - ஆரமும் என்பும் என்று பொருள் கொண்டால் இச்சொற்றொடர் **உம்மைத் தொகையாகும்.** வந்தவர் : ஈண்டு **வினையாலணையும் பெயர்.** மதுரப் பதம் : **பண்புத்தொகை.**

4. மாறனார் அடியார்க்கு அமுதளிக்கும் பான்மை

கொண்டு வந்து - (சிவனடியார்களை) அழைத்துக் கொண்டு வந்து
மனைப்புகுந்து - வீட்டில் புகுந்து
குலாவு - கொண்டாடப் பெறுகின்ற
பாதம் - திருவடிகளை
விளக்கி - கழுவி
மண்டு காதலின் - மிகுந்த அன்பினால்
ஆதனத்து இடை - ஆசனத்தில்
வைத்து - எழுந்தருளுமாறு செய்து
அருச்சனை செய்தபின் - அருச்சனை முதலிய வழிபாடுகளைச் செய்த பிறகு
நாலு விதத்தில் - நான்கு விதங்களில் அமைந்த
ஆறு சுவைத் திறத்தினில் - அறுவகையான சுவை வேறுபாட்டினைக் கொண்ட
உண்டி - உணவினை
ஒப்பிலா - ஒப்பில்லாத
அண்டர் நாயகர் - தேவர்களுக்குத் தலைவராகிய சிவபெருமானுடைய
தொண்டர் - அடியார்கள் (தம்)
இச்சையில் - விருப்பப்படியே
அமுது செய்ய - உண்ணுமாறு
அளித்து உளார் - கொடுத்து வந்தார் (மாறனார்.)

" ஆற்றுநர்க்கு அளிப்போர் அறவிலை பகர்வோர்." — சாத்தனார்.

கருத்துரை : தம் இல்லத்திற்கு வந்த சிவனடியார்களை அன்புடன் வரவேற்று, அடிகளைக் கழுவி, ஆசனத்து இருத்தி, பல்வகை உணவுகளை மகிழ்ச்சியுடன் அளித்து வந்தார் மாறனார்.

விளக்கவுரை : மனை - வீடு. குலாவு - கொண்டாடப் படுகின்ற. காதல் - அன்பு. உண்டி - உணவு. **நாலுவித உண்டி :** உண்பன, தின்பன, நக்குவன, பருகுவன என்பன நால்வகை உண்டி எனப்படும். **ஆறுசுவை:** கசப்பு, புளிப்பு, இனிப்பு, துவர்ப்பு, கார்ப்பு, உவர்ப்பு என்பன அறுசுவை எனப்படும். **பாதம் விளக்கி :** வீட்டிற்குப் பெரியார் ஒருவர் வந்தால், அவர்களுடைய அடிகளில் நீர் ஊற்றிக் கழுவுதல் வழிபாட்டு வகைகளுள் ஒன்று. இது பாத்தியம் என்று சொல்லப்படும்.

இலக்கணக் குறிப்பு : ஆதனத்திடை : ஈண்டு 'இடை' என்பது ஏழன் உருபு. இலா : ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

செல்வ நிலையும் வறுமையின் வரவும் (5, 6.)

5. மாறனார் குபேரனைப்போல் வாழ்தல்

ஆளும் - எவ்வுயிரையும் அடிமை கொள்ளும்
நாயகர் - தலைவராகிய சிவபெருமானுடைய
அன்பர் ஆனவர் - அன்பர் ஆயினோர்
அளவிலார் - அளவில்லாத பலர்
உளம் மகிழ் - (தம்) மனம் மகிழுமாறு
நாளும் நாளும் - நாள்தோறும்
நிறைந்து வந்து - பெருகிக் கூடி வந்து
நுகர்ந்த தன்மையின் - உண்டு சுவைத்த தன்மையினது
நன்மையால் - (பயனாகிய) நன்மையால்
நீளும் - நீண்ட
மா நிதியின்-பெருஞ் செல்வங்களின்
பரப்பு - பரப்பும்
நெருங்கு - நெருங்கிய
செல்வம் - செல்வங்களும்
நிலாவி - பெருக்கெடுத்து
எண் தோளினார் - எட்டுத் தோள்களையுடைய சிவபிரானார்
அளகைக்கு - அளகாபுரியினை (ஆளும்படியாக)
இருத்திய - அமைத்த
தோழனார் என - தம் தோழராகிய குபேரனைப் போல
வாழும் நாள் - (மாறனார்) வாழும் நாட்களில்,

கருத்துரை : சிவனடியார்கள் நாள்தோறும் மகிழ்ந்து விருந்து உண்டதனால், மாறனாருடைய செல்வங்கள் வளர்ந்தன. செல்வத்துக்கு உரிய தெய்வமாகிய குபேரனைப் போல அவர் வாழ்ந்தார்.

விளக்கவுரை : ஆளும் - அடிமை கொள்ளும். உளம் - மனம். நிதி - செல்வம். நிலாவி - பெருக்கெடுத்து. எண் தோளினார் : எட்டுத் தோள்களையுடைய சிவபிரான். அளகை : அளகாபுரி. தோழனார் : ஈண்டு குபேரன். **நீளும் மா நிதியின் பரப்பு நெருங்கு செல்வம் :** நீண்ட பெருஞ் செல்வங்களின் பரப்பும், நெருங்கிய செல்வங்களும். நிலம், தோட்டம் முதலியவை நீளும் மா நிதி எனப்பட்டன. பொன், மணி முதலியவை நெருங்கு செல்வம் எனப்பட்டன. சிவனடியார்கள் பலர் நாயனாருடைய வீட்டில் மகிழ்ச்சியோடு உணவினை உண்டதன் பயனாக அவருக்கு இவ்வாறு செல்வங்கள் பெருகின என்பது சேக்கிழாரது கருத்து. **எண் தோளினார் அளகைக்கு இருத்திய தோழனார் :** எட்டுத் தோள்களையுடையவர் சிவபிரானார். அவர் குபேரன் என்னும் தேவனை அளகாபுரிக்கு அரசன்

ஆக்கினர். குபேரன் செல்வத்திற்குத் தலைமை பூண்ட தெய்வம். அவன் சிவபிரானுக்கு நண்பன் என்றும் சொல்லப்படும். சிவபிரான் எட்டுத் தோள் களை உடையவர் என்று தேவாரம் கூறுகின்றது.

இலக்கணக் குறிப்பு: உளம்: 'உள்ளம்' என்பது 'உளம்' என்று வந்தது இடைக்குறை விகாரம். மாநிதி: உரிச்சொற்றொடர். நெருங்கு செல்வம்: வினைத்தொகை. என: உவம உருபு.

6. வறுமையின் வருகை

செல்வம் மேவிய - செல்வங்கள் மிகுந்துள்ள
நாளில் - காலத்தில்
இச்செயல் - இத்தகைய செயல்களை
செய்வது அன்றியும் - செய்வது அல்லாமலும்
அல்லல் - துன்பத்தைத் தருகின்ற
நல்குரவு - வறுமை
ஆனபோதிலும் - வந்த காலத்திலும்
மெய்யினல் - உண்மைக் கொள்கையில் நிற்பதில்
வல்லர் - இவர் வல்லவராவார்."
என்று - என்ற உண்மையை
அறிவிக்க - உலகுக்கு அறிவிக்கும் பொருட்டு
மல்லல் நீடிய - வளப்பம் மிக்க
செல்வம் - அவருடைய பல்வகைப் பட்ட செல்வங்கள்
மெல்ல மறைந்து——,
நாள்தொறும் - நாள்தோறும்
மாறிவந்து - மாற்றப்பெற்று வந்து (முடிவில்)
ஒல்லையில் - விரைவில்
வறுமைப்பதம் - செல்வம் சுருங்கும் நிலை
புக - சேருமாறு
தில்லை மன்னினர் - சிதம்பரத்தில் நிலைபெற்ற சிவபிரானர்
உன்னினர் - நினைத்தார்.

கருத்துரை: செல்வக் காலத்தில் மட்டுமன்றி வறுமை வந்துற்ற காலத்திலும் மாறனர் தம் இயல்பிலிருந்து தவறமாட்டார் என்னும் உண்மையினை உலகுக்கு உணர்த்த விரும்பிய சிவபிரானர், மாறனருடைய செல்வங் கள் நாள்தோறும் சுருங்குமாறு செய்தார்.

விளக்கவுரை: மேவிய - பொருந்திய. மெய்யினல் - உண்மை நிலையில் நிற்றல். அல்லல் - துன்பம். நல்குரவு - வறுமை. மல்லல் - வளப்பம், செழுமை. ஒல்லை - விரைவு. பதம் - நிலை. உன்னினர் - நினைத் தார். தில்லை: சிதம்பரம். மன்னினர் - நிலைபெற்றவர்; ஈண்டுச் சிவபிரானர். **மெய்யினல் அல்லல் நல்குரவு ஆன போதிலும் வல்லர்:** வறுமை வந்துற்ற காலத்திலும் மாறனர் தம் நிலையிலிருந்து தவருர். உலகத்தில் நிகழ்வன யாவும், சிவபிரான் அருளினலேயே நிகழ்கின்றன என்னும் கருத் துடையவர் மாறனர். எனவே, செல்வம் வந்த காலையில் மகிழ்தலும், வறுமை வந்த காலையில் வருந்துதலும் இன்றி இருந்தார் அவர். அடியார் பூசையை எந்நிலையிலும் தவருது செய்ய வேண்டும் என்று அவர் உறுதி பூண்டிருந்தார் என்னும் செய்தியை இவ்வடி குறிப்பிடும். நாயனரது வறுமையிற் செம்மையைச் சேக்கிழார் ஈண்டுக் குறித்துள்ளார்.

இலக்கணக் குறிப்பு: மன்னினர்: வினையாலணையும் பெயர். அறிவித்தல் - பிறவினை.

7. திருப்பணிக் கொள்கையில் முதிர்ச்சி

இன்ன ஆறு - இவ்விதமாக
வளம் சுருங்கவும் - (தம்முடைய) செல்வம் சுருங்கிய பொழுதிலும்
எம்பிரான் - எம் தலைவரும்,
இளையான் குடி - இளையான் குடி என்னும் ஊருக்கு

மன்னன் - தலைவரும் ஆகிய
மாறன் - மாறனார்
மனம் சுருங்குதல் இன்றி - மனத்தைச் சுருக்காமல்
உள்ளன - தம்மிடம் உள்ளபொருள்களை
மாறியும் - விற்றுப் பொருள் கொண்டும்,
தன்னைமாறி இறுக்கத் தக்கன உள்ள - தன்னை மாறிக் கொடுக்கத் தக்கனவாக உள்ள
கடன்கள் - கடன்களை
கொண்டு - வாங்கியும்
பின் - பின்னரும்
முன்னை - முன்பு செய்து வந்த
மாறு இல் - ஒப்பு இல்லாத
திருப்பணிக்கண் - அடியார் பூசையாகிய திருத்தொண்டில்
முதிர்ந்த - மேலும் முறுகிய
கொள்கையர் ஆயினர் - நிலையை உடையவர் ஆனர்.

கருத்துரை : செல்வம் சுருங்கிய காலத்தும் மனச் சுருக்கம் இன்றி மாறனார், தம பொருள்களை விற்றும், ஒற்றிவைத்தும், முன்பு செய்து வந்த அடியார் திருப்பணியைத் தவறாமல் செய்து வந்தார்.

விளக்கவுரை : இன்னவாறு - இவ்விதமாக. வளம் - செல்வம். இறுக்க - கொடுக்க. முன்னை - முன்பு செய்து வந்த. மாறு - ஒப்பு. **இளையான்குடி மன்னன் மாறன் ;** (இளையான் குடியைப் பற்றிய செய்தி முதற் பாடலின் விளக்கவுரையில் கூறப்பட்டுள்ளது.) சேக்கிழார் மாறனாரை மன்னன் என்று குறிப்பிடுவதால், அவர் ஒரு சிற்றரசராகவோ, குறுநில மன்னராகவோ விளங்கியிருத்தல் கூடும் என்று சிலர் கருதுவர். மாறனார் உழுதொழில் செய்து வந்தார் என்று சொல்லப்படுதலாலும், பிறவீடுகளில் கடன் வாங்கியாவது அடியார் பணியினைச் செய்து வந்தார் என்று கூறப்படுதலாலும் அவரை அரசர் என்று கூறுவது பொருத்தமுடையதன்று. அவ் வூரில் பெரியவர் என்னும் கருத்துப்பற்றியே சேக்கிழார் இவ்வாறு கூறியிருத்தல் கூடும். **மாறியும் :** அக்காலத்தில் பண்டமாற்று முறை வழக்கத்தில் இருந்தமையை இச்சொல் குறிப்பிடும். ஒரு பொருளைக் கொடுத்து மற்றொரு பொருளை வாங்குவதே பண்டமாற்று முறையாகும். 'மாறி' என்னும் சொல் 'மாற்றி' என்று ஈண்டுப் பொருள்படும். **தன்னை மாறி இறுக்க உள்ள கடன்கள் :** மதிப்புள்ள பொருளின் மீது கடன் வாங்கும் வழக்கம் அக்காலத்தில் இருந்தது என்பதனை இவ்வடி குறிப்பிடும். 'தன்னை மாறிக் கொடுக்கத் தக்கனவாகிய கடன்கள்' என்பது இவ்வடிக்குப் பொருள் ஆகும். நாயனர் தமக்குச் சொந்தமான நிலம், தோட்டம் முதலியவற்றை ஒற்றி வைத்துக் கடன் வாங்கினர் என்னும் செய்தியை இவ்வடியிலிருந்து நாம் உணரலாம். **முதிர்ந்த கொள்கையர் :** முறுகிய நிலையை உடையவர். மக்களுக்கு வறுமை தளர்ச்சியை உண்டாக்கும். ஆயின், நாயனருடைய கொள்கையை அவ்வறுமை உறுதிப்படுத்தியது.

இலக்கணக் குறிப்பு : தன்னைமாறி **:** 'மாறியும்' என்னும் சொல் 'மாறி' என நின்றது. ஈண்டு **எண்ணும்மை தொக்கது.** 'பின்' என்னும் இடத்தில் சிறப்பும்மை தொக்கது.

8. சிவபிரான் தவ வேடத்துடன் வருதல்

மற்று அவர் - மேலும் அந்நாயனருடைய
செயல் - செய்கைகள்
இன்ன தன்மையதாக-இத்தன்மையினவாய் நிற்க,
மால் - திருமாலும்
அயன் - பிரமனும்
ஆன - ஆகிய
அ - அந்த
கொற்றம் - வெற்றியையுடைய

ஏனமும் - பன்றியும்
அன்னமும் - அன்னப் பறவையும்
தெரியாத - அறிந்திராத
கொள்கையர் ஆயினர் - கொள்கையை உடையவராகிய சிவபிரானர்
பெற்றம் - காளை வாகனத்தை
ஊர்வதும் இன்றி - ஊர்வதும் இல்லாமல்,
நீடிய - தம்முடன் என்றும் உள்ள
பேதையாள் - பெண்ணாகிய பார்வதி தேவியார்
உடன் இன்றி - தம்முடன் இல்லாமல்
ஓர் - ஒரு
நல் - நல்ல
தவத்தவர் - தவம் செய்யும் முனிவரது
வேடமே கொடு - கோலத்தைக் கொண்டு
ஞாலம் - இவ்வுலகம்
உய்ந்திட - பிழைக்கும் பொருட்டு
நண்ணினர் - மாறனரது வீட்டை அடைந்தார்.

கருத்துரை : தாம் மேற்கொண்ட அடியார் திருப்பணியில் வழுவாமல் நடந்து வந்த நாயனரது வீட்டிற்குச் சிவபிரான் முனிவர் உருவுடன் வந்தார்.

விளக்கவுரை : இன்ன - இப்படிப்பட்ட. மால் - திருமால். அயன் - பிரமன். கொற்றம் - வெற்றி. ஏனம் - பன்றி. பெற்றம் - காளை. பேதை - பெண். பேதையாள்: பார்வதி தேவியார். ஞாலம் - உலகம். நண்ணினர் - நெருங்கினர், அடைந்தார். **மால் அயன் ஆன அக்கொற்ற ஏனமும் அன்னமும் தெரியாத கொள்கையர் :** இவ்வடி சிவபிரானைக் குறிக்கும். திருமாலும் பிரமனும், பன்றியும் அன்னமுமாக உருவம் கொண்டும் அறிய முடியாத சிவபிரான். திருமால் பன்றியாகவும், பிரமன் அன்னமாகவும் தேடினர் என்று ஈண்டுப் பொருள் கொள்ளுதல் வேண்டும். **இவ்வடிக்கண் அமைந்த வரலாறு :** "ஒரு காலத்தில் தமக்குள் யார் உயர்ந்தவர் என்பது பற்றித் திருமாலுக்கும் பிரமனுக்கும் மாறுபாடு ஒன்று வந்தது. அவர்களுடைய மாறுபாட்டினைத் தீர்க்க விரும்பினர் சிவபிரானர். அவ்வளவில் அவர் பேரொளி உருவம் கொண்டு நின்று, தமது அடியைத் தேடி அடையுமாறு திருமாலுக்கும், முடியைத் தேடிக் காணுமாறு பிரமனுக்கும் கட்டளையிட்டார். சிவபிரானுடைய திருவடிகள் பூமிக்குக் கீழ் அழுந்தியிருந்தன. அவரது முடியோ வானத்துக்குமேல் உயர்ந்திருந்தது. திருமால் பன்றியுருவம் கொண்டு பூமியைத் தோண்டிச் சிவபிரானுடைய அடியினைத் தேடிச் சென்ருர். பிரமன் அன்னப் பறவை உருக்கொண்டு முடியைத் தேடிச் சென்ருர். திருமால் பூமியின் அடியில் நெடுந்தூரம் சென்றும் சிவபிரானுடைய அடிகளைக் காண முடியவில்லை. எனவே, அவர், நாணத்துடன், மீண்டு வந்து சிவபிரானைக் கண்டு, தமது மாட்டாமையைக் கூறி வணங்கினர். பிரமனும் சிவபிரானது முடியைக் கண்டிலன். ஆயின், அவன், 'முடி கண்டேன்' என்று பொய் கூறிச் சிவபிரானது சாபத்திற்கு ஆளாயினன்" என்று கந்தபுராணம் கூறுகிறது. இவ்வரலாற்றை வேறு விதமாக மாற்றியும் கூறுவர் சிலர். '**ஏனம்**' என்னும் சொல்லுக்குக் '**கொற்ற**' என்னும் அடைமொழி அமைந்துள்ளது. 'பன்றி உருவெடுத்த திருமால், தமது மாட்டாமையை அறிந்து சிவபிரானை வழிபட்டுப் பெரும் பேறு பெற்ருர்' என்பதனைக் குறிப்பினல் அறிவுறுத்தக் கருதியே சேக்கிழார் 'கொற்ற' என்னும் அடைமொழியை அமைத்தார் போலும்! **நீடிய பேதையாள் :** சிவபிரான் தமது உடம்பின் இடப் புறத்தைப் பார்வதி தேவிக்கு அளித்துள்ளார் என்று புராணம் கூறும். 'நீடிய' என்னும் சொல் தொன்றுதொட்டு நிகழ்ந்து வருகின்ற இச்செய்தியைக் குறிப்பிடும். அத்தகைய தேவியாரை இப்பொழுது பிரிந்து தனித்து வந்தார்

என்பதனைக் குறிப்பிடவே இவ்வாறு கூறப்பட்டது. 'பேதை' என்னும் சொல் 'பெண்' என்று பொருள்படும்.

இலக்கணக் குறிப்பு : மற்று - ஈண்டு **இவ்விடைச்சொல் வினை மாற்றுப் பொருளில்** வந்தது. அக்கொற்ற ஏனம் : ஈண்டு 'அ' என்பது **பண்டறி சுட்டு.** ஞாலம் - ஈண்டு **இடவாகு பெயர்.** 'கொண்டு' என்னுஞ் சொல் 'கொடு' என வந்தது **இடைக்குறை விகாரம்.** மால் அயன் ஆன அக்கொற்ற ஏனமும் அன்னமும் : மால் ஆன ஏனமும், அயன் ஆன அன்னமும் என்று பொருள் கொள்கின்றோமாதலால் ஈண்டு **முறை நிரல் நிறை அணி** அமைந்துள்ளது.

9. மாறனர் வந்த விருந்தை எதிர்கொள்ளுதல்

மாரிக் காலத்து - மழைக் காலத்தில் (ஒருநாள்)
இரவினில் - இராப் பொழுதில்
வைகி - விழித்திருந்து
ஓர் தாரிப்பு இன்றி - எத்தகையதொரு ஆதரவும் இல்லாமையினால்,
பசி தலைக்கொள்வது பாரித்து - மீதூரும் பசி மேலும் அதிகரிக்கப் பெற்று
இல்லம் - வீட்டின் கதவை
அடைத்த பின் - மூடிய பிறகு
பண்பு உற - பொருந்திய பண்பினால்
வேரி - தேன் தங்கிய
தாரான் - மாலையை அணிந்த மாறனர்
விருந்து - விருந்தாக வந்த சிவபிரானை
எதிர் கொண்டனன் - எதிர்கொண்டு வரவேற்றான்.

கருத்துரை : மழைக் காலத்து இரவினில், பசியுடன் வீட்டுக் கதவினை மூடிக் கொண்டிருந்த நாயனரது வீட்டுக்குச் சிவபிரான் வந்தார். அவ்வாறு வந்தவரை நாயனர் வரவேற்றார்.

விளக்கவுரை : மாரி - மழை. வைகி - விழித்திருந்து. தாரிப்பு - தரிப்பு, ஆதரவு. தலைக்கொள்வது - மீதூர்வது. பாரித்தல் - அதிகரித்தல். வேரி - தேன். தார் - மாலை. **மாரிக் காலத்து இரவு :** மழைக் காலத்து இரவில் இருள் செறிந்திருக்கும். மழையும் இருளும் கூடிய இரவில் யாரும் வெளிச்செல்ல மாட்டார்கள் என்பதைக் குறிப்பிடும் பொருட்டே இவ்வாறு சொல்லப்பட்டது. **வேரித் தாரான் விருந்து எதிர் கொண்டனன் :** தேன் தங்கிய மாலையினைச் சூடிய மாறனர் தவக் கோலத்துடன் விருந்தாக வந்த சிவபிரானை வரவேற்றார். வேளாளர்க்குரியது குவளை மாலை. இராப் பொழுதாக இருந்தாலும், வெளியில் எவரும் செல்லமுடியாத நிலையாக இருந்தாலும், நாள் முழுவதும் பட்டினியாக இருந்தாலும் வீடு தேடிவந்த விருந்தினரை உபசரிக்கும் பண்புடையவர் மாறனர் என்பதை அறிவிக்கும் பொருட்டே இவ்வாறு கூறப்பட்டது.

இலக்கணக் குறிப்பு : தாரிப்பு - 'தரிப்பு' என்னும் சொல் **முதல் நீண்டது.**

மாறனர் தம் மனைவியை நோக்கிக் கூறியவை (10, 11)

10. மாறனர் என்செய்வது என்று மனைவியைக் கேட்டல்

மேனியை - அவரது உடம்பை
ஈரம் நீக்கி - ஈரம் போக்கி
இடம் கொடுத்து - இருக்க இடம் அளித்து (பின்பு)
ஆர - மனம் நிறைவு பெறுமாறு
இன் அமுது - இனிய உணவினை
ஊட்டுதற்கு - உண்ணச் செய்வதற்கு

ஆசையால் - ஆசை கொண்டதனல் (நாயனர்)
தார மாதரை - காதல் தங்கிய மனைவியை
நோக்கி - பார்த்து
தபோதனர் - "இம்முனிவர்
நீரவே பசித்தார் - மிகப் பசிகொண்டுள்ளார்
என் செய்வது ?———,"
என்று - என்று சொல்லி,

கருத்துரை : வந்த விருந்தினருடைய ஈரத்தைப் போக்கி, இருக்க இடம் கொடுத்த நாயனர், அவருக்கு உணவு ஊட்ட விரும்பித் தமது மனைவியைப் பார்த்து "என் செய்வது" என்று வினவினர்.

விளக்கவுரை : மேனி - உடம்பு. ஆர - நிறைவுபெற. ஊட்டுதல் - உண்பித்தல். தாரம் - மனைவி. மாதர் - காதல், பெண். தபோதனர் - தவத்தையே தனமாக (செல்வமாக)க் கொண்டவர். "இன்னமுது ஆர ஊட்டுதற்கு" என்று மாற்றி இயைக்க.

இலக்கணக் குறிப்பு : இன்னமுது - பண்புத் தொகை. பொருள் முடிவு பெறவில்லையாதலால் இப்பாடல் குளகம்.

11. உணவு கொடுப்பதெங்ஙனம் என்று நாயனர் வினவல்

அணங்கே - "பெண்ணே !
முன்பு - முன்னரே
இங்கு - இவ்விடத்தில்
நமக்கு - நாம் உண்பதற்கு
உணவு இலையாயினும் - உணவு இல்லை என்றாலும்
இமம் - இமயமலை ஈன்ற
குலக் கொடி - உயர்ந்த கொடி போல்பவளாகிய பார்வதியினை
பாகர்க்கு - ஒரு பாகத்தில் கொண்டவராகிய சிவபெருமானுடைய
இனியவர் தமக்கு - அடியவர்க்கு
நாம் ———,
இன் அடிசில் - இனிய உணவு
தகவு உற - தக்கவாறு
அமைக்குமாறு - அமைக்கும் விதம்
எங்ஙனே - எவ்வாறு ?"
என - என்று நாயனர் கூற,

கருத்துரை : "நாம் உண்ண உணவு இல்லையாயினும் சிவனடியார்க்குத் தக்கவாறு உணவு அளிக்கவேண்டுமே ! அதற்குச் செய்வது யாது ?" என்று நாயனர் தமது மனைவியாரிடம் கேட்டார்.

விளக்கவுரை : இமம் - பனி; ஈண்டுப் பனிமூடிய இமயமலையைக் குறித்தது. குலம் - மரபு, உயர்வு. கொடி: கொடிபோன்ற பெண்; ஈண்டுப் பார்வதி. பாகர் : ஒரு பாகத்தில் கொண்டவர்; சிவபிரானர். இனியவர் - அடியவர். அடிசில் - உணவு. அணங்கு - தெய்வப் பெண்: இச்சொல் ஈண்டு நாயனரது மனைவியைக் குறித்தது. தெய்வப்பெண் போல்பவர் ஆதலால் அவ்வம்மையார் அவ்வாறு சுட்டப்பெற்ருர். இமக் குலக் கொடி பாகர் : மலையரசனகிய இமவானுக்குப் பார்வதி அம்மையார் மகள் ஆவார் என்றும், அவ்வம்மையாரைச் சிவபிரான் தமது இடப்பாகத்தே கொண்டுள்ளார் என்றும் புராணம் கூறும்.

இலக்கணக் குறிப்பு : கொடி : உவமை ஆகுபெயர். அணங்கே : விளி. 'இல்லை' என்னும் சொல் 'இலை' என வந்தது இடைக் குறைவிகாரம்.

மனைவியார் கூறிய மாற்றம் (12, 13)

12. மனைவியார் கவலுறுதல்

(கணவனர் கூறிய உரை கேட்டு)
மாது - அம்மையார்
கூறுவள் - விடை கூறுவாராய்
மற்ருென்றும் - வேருெரு வழியும்
காண்கிலேன் - அறியேன்
ஏதிலாரும் - அயலவருள்ளும்

"மாரி வறம்கூரின் மன்னுயிர் இல்லை." சாத்தனர்.

இனி தருவார் இல்லை - கொடுப்பவர் இனி இல்லை.
போதும் - காலமும்
வைகிற்று - கழிந்து நடு இரவு ஆயிற்று.
போம் இடம் - செல்லக் கூடிய இடங்களும்
வேறு இலே - ஒன்றும் இல்லை
தீது செய் - தீமை செய்கின்ற
வினையேற்கு - வினையை உடைய எனக்கு
என் செயல் - இனிச் செய்யும் செயல் ஏது?
என்று - என்று சொல்லி,

கருத்துரை : ஒரு வழியும் தெரியவில்லை என்றும், கொடுப்பவர் வேறு இலரென்றும், நள்ளிரவுப் பொழுது ஆகிவிட்டதென்றும் அம்மையார் மாறனரிடம் கூறிச் செய்வகை அறியாது கவலை உற்றார்.

விளக்கவுரை : ஏதிலார் - அயலார். போது - பொழுது. வைகிற்று - கழிந்தது. **தீது செய் வினையேற்கு என் செயல்:** வீடு தேடி வந்த சிவனடியார்க்கு அமுது அளிக்க இயலாமை தமது தீவினைப் பயனால் உண்டாயிற்று என்று அம்மையார் கருதி வருந்தினர் என்பது இவ்வடியின் கருத்தாகும்.

இலக்கணக் குறிப்பு : மற்றொன்று : இடைச்சொற்றொடர். 'போது' 'பொழுது' என்னும் சொல் 'போது' என வந்தது மரூஉ. தருவார் : ஈண்டு வினையாலணையும் பெயர்.

13. நிலத்தில் விதைத்த நெல்லை எடுத்து வருமாறு மனைவியார் கூறல்

செல்லல் - 'துன்பம்
நீங்க - நீங்குமாறு
பகல் - இன்று பகலில்
வித்திய - (வயலில்) விதைத்த
மல்லல் - செழித்த
நீர் - நீரிலே உள்ள
செந்நெல் முளை - முளைச் செந்நெலை
வாரிக்கொடு - (தாங்கள்) வாரி எடுத்துக்கொண்டு
வந்தால் - வருவீர்களானால்
வல்லவாறு - (என்னால்) இயன்ற வரையில்
அமுது ஆக்கலும் - உணவு சமைத்தலும்
ஆகும் - இயலும்.
அல்லது மற்று ஒன்று - அல்லாத மற்றொரு வழியை
அறியேன் - யான் அறியேன்'
என்று - என்று கூறி (அம்மையார்)
அயர்வு உற - தளர்ச்சி அடைந்தாராக,

கருத்துரை : அன்றைய பகற்பொழுதில் வயலில் விதைத்த நெல் முளைகளைக் கொண்டு வந்தால் உணவை ஒருவாறு ஆக்க முடியும் என்று மனைவியார் மாறனரிடம் கூறினர்.

விளக்கவுரை : செல்லல் - துன்பம். வித்திய - விதைத்த. மல்லல்- செழிப்பு, வளப்பம். அயர்வு - தளர்ச்சி, வருத்தம். **பகல் வித்திய செந்நெல் மல்லல் நீர்முளை :** நாயனர் அன்றைய பகல் பொழுதில்தான் வயலில் செந்நெல்லை நாற்றின் பொருட்டுத் தெளித்திருந்தார். நாற்றங்கால் வளப்பமுடையதாக இருக்க வேண்டுமாகலின் 'மல்லல்' எனப்பட்டது. நீரில் நெல் ஊறிப் பருத்து முளைக்கத் தொடங்கி இருக்குமாதலின் முளை எனப்பட்டது. சிவனடியார் பூசைக்குச் சிறப்பாக வேண்டப்படுவது செந்நெல் என்று அறிக.

இலக்கணக் குறிப்பு : செம்மை + நெல் = செந்நெல்: பண்புத்தொகை. 'கொண்டு' என்னும் சொல் 'கொடு' என்று வந்தது இடைக் குறை விகாரம்.

" இசையொழிய வாழ்வாரே வாழாதவர்." — வள்ளுவர்.

14. கேட்ட நாயனர் வயலிடம் நோக்கிச் செல்லல்

மற்று —,
மாற்றம் - அச்சொற்களை
மனைவியார் —,
கூற - சொல்லக் கேட்டவுடன் (நாயனர்)
முன்பெற்ற - முன்பே தேடி வைத்த
செல்வம் என - செல்வத்தைத் திரும்பப் பெற்றவர் போல
பெரிது - மிகுதியாக
உள் மகிழ்ந்து - மனம் மகிழ்ந்து
உற்ற - பொருந்திய
காதலினால் - ஆசையினால்
நீர் சுற்று - நீர் சூழ்ந்த
வயல் செல்ல - தமது வயலுக்குச் செல்ல
ஒருப்பட்டனர் - இசைந்தவராய்
தொடங்குவார் - எழுவாராகி,

கருத்துரை: மனைவியார் கூறிய சொற்களைக் கேட்ட நாயனர் மன மகிழ்ந்து வயலுக்குச் செல்ல எழுந்தார்.

விளக்கவுரை: மாற்றம்-சொல். உள்-மனம். காதல்-ஆசை. ஒருப்பட்டனர் - இசைந்தவராய். **முன் பெற்ற செல்வம் என:** முன்பு தேடி வைத்த செல்வம் பெற்றவர் போல. 'தான் முன்பு பெற்றிருக்த செல்வ நிலையைத் திரும்பப் பெற்றவர் போல' என்றும் பொருள் கூறலாம்.

இலக்கணக் குறிப்பு: ஒருப்பட்டனர்: ஈண்டு முற்றெச்சம். சுற்று நீர்: வினைத்தொகை.

இருளில் மாறனர் செல்லுதல் (15-17)

15. இரவில் இருள்

வானம் - வானத்தில்
பிறங்க - விளங்குமாறு
பெருகு மழை பொழிந்து - பெருகுகின்ற மழை பொழிதலால்
அருகும் - பக்கங்களும்
நாப்பண் - இடைவெளியும்
அறிவு அரும் - அறிவதற்கு அருமையான
கங்குல்தான் - நள்ளிரவானது
கருகு - கருகிய
மை - மை போன்ற
இருளின் கணம் - இருளின் கூட்டம்
கட்டு விட்டு - நெகிழ்ந்து
உலகெலாம் - உலக முழுவதும்
உருகுகின்றது போன்றது - உருகுகின்றதைப் போன்றிருந்தது.

கருத்துரை: நாயனர் வயலுக்குச் சென்ற நேரம் நள்ளிரவாகும் அந்நள்ளிரவில் பேரிருள் எங்கும் நிரம்பி இருந்தது.

விளக்கவுரை: வானம் - ஆகாயம். நாப்பண் - நடு இடம், இடைவெளி. கங்குல் - இருள்; ஈண்டு நள்ளிரவைக் குறித்தது. கணம் - கூட்டம். கட்டுவிடுதல் - நெகிழ்தல். **பெருகு வானம் பிறங்க மழை பொழிந்து:** 'வானம் பிறங்க பெருகு மழை பொழிந்து' என மாற்றி உரைக்க. ஆகாய வெளி முழுவதிலிருந்தும் மழை பொழிந்தது என்பது கருத்து. இனி, 'வானம்' என்னும் சொல்லுக்கு 'மேகம்' என்று பொருள் கொண்டு 'மேகங்கள் மிக மழை சொரிந்து' என்றும் பொருள் கூறலாம். **கருகு மையிரு ளின்கணம் கட்டுவிட் டுருகு கின்றது போன்றதுல கெலாம்:** நள்ளிரவில் இருள் செறிந்திருந்த நிலையைச் சேக்கிழார் இங்கு விளக்குகின்றார். ஓரிடத்தில் கட்டிவைக்கப் பெற்றிருந்த கரிய மை போன்ற இருளின் கூட்டம் அக்கட்டினின்றும் விடுபட்டு நெகிழ்ந்து உருகியதைப் போன்று எங்கும் இருள் செறிந்திருந்தது. பேரிருளினை

'மைக்குழம்பு' என்று கூறுவது கவிஞர் இயல்பு. செறிந்திருந்த பேரிருளைக் குறிப்பிடும் பொருட்டு 'மையிருளின் கணம்' என்றார் சேக்கிழார்.

இலக்கணக் குறிப்பு : பெருகு வானம் : **வினைத்தொகை.** அருகு காப்பண் : **உம்மைத்தொகை.** மையிருள் : **உவமத் தொகை.**

16. யாரும் வெளிச்செல்ல இயலாத இருளின் நிலை

இ உலகத்தவர் - இவ்வுலகத்து மக்களும்
யாவரும் - மற்றையோரும்
எண்ணும் - மனத்தால் நினைத்தாலும்
துண்ணெனும்படி - நடுங்கும்படி
தோன்ற - இரவு தோன்ற,
முன் தோன்றிடில் - எதிரில் தோன்றினால்
வண்ணம் நீடிய - நீண்ட நிறத்தினை உடைய
மைக் குழம்பாம் - மைக் குழம்பே இது
என்று - என்று எண்ணி (யாரும்)
நண்ணல் செய்யா-வெளியே செல்லாத
இருள் - இருள் செறிந்த
நடு யாமத்து - அந் நள்ளிராப் பொழுதில்,

கருத்துரை : மனத்தினால் நினைத்தாலும் நடுங்குமாறு செய்கின்ற இராப்பொழுது அது. அவ்விருளை மைக்குழம்பு என்று எண்ணி யாரும் வெளியே செல்ல மாட்டார்கள்.

விளக்கவுரை : எண் - எண்ணம், நினைவு. **துண்ணெனும்படி** - நடுங்கும்படி. வண்ணம் - நிறம். நண்ணல் - வெளிச் செல்லுதல். **வண்ணம் நீடிய மைக்குழம்பாம் என நண்ணல் செய்யா :** அந்நள்ளிரவில் இருள் எங்கும் செறிந்திருந்தது. அவ்விருள் மைக்குழம்பு போல் தோன்றியது. எனவே, அவ்விருளை மைக்குழம்பின் உருவமே என்று நினைத்து யாரும் வெளியே செல்ல மாட்டார்கள்.

17. நாயனார் ஒருவாறு வயலை அடைதல்

உள்ளம் - தம் மனத்தை
அன்பு - அன்பானது
கொண்டு - தன் வசப்படுத்தி
ஊக்க - செலுத்த
கொள்ள - (முளை நெல்லை) எடுத்து வருதற்குத் தக்க
பேர் இடா - பெரிய இறை கூடையை
முன் கவித்து - தலைமேல் கவிழ்த்துக் கொண்டு
குறியின் வழி கொண்டு - பழக்கத்தினாலான குறிப்பின் வழியே (சென்று)
புள் உறங்கும் - நீர்ப் பறவைகள் தூங்கும்படியான
வயல் - தம் வயலுக்குள்
புக - புகுமாறு
வள்ளலார் - இடைவிடாது அருளைப் பொழிபவராகிய
இளையான் குடிமாறனார் - இளையான் குடிமாற நாயனார்
போயினார் - சென்றார்.

கருத்துரை : நாயனார் இறை கூடையொன்றினைத் தலையில் கவிழ்த்தவாறு இருளில் நடந்து சென்று ஒருவாறு தம் வயலை அடைந்தார்.

விளக்கவுரை : ஊக்க - செலுத்த. இடா - இறை கூடை. கவித்து - கவிழ்த்து, மூடி. புள் - பறவை. வள்ளலார் - இடைவிடாத அருளுடையவர், கொடைப்பண்பு உள்ளவர். **குறியின் வழி :** நாயனார் பலமுறை தம்

"பேனா என்பது மூளையின் நாக்கு." — டான் க்யூஸோட்.

வயலுக்கு நடந்து சென்று பழகியவர் ஆதலால், அக்குறிப்பையே துணையாகக் கொண்டு நடந்தார் என்பது கருத்து. அவ்விராப் பொழுதில் கண்ணினால் வழியறிந்து செல்லுதல் அரிதாதலின், பழகிய குறிப்பைத் துணையாகக் கொண்டு சென்றார் எனப்பட்டது. வள்ளலார்: இடைவிடாத அருளுடன், கொடைப் பண்பினையும் கொண்டு நாயனார் விளங்கினர் ஆதலால் அவரைச் சேக்கிழார் 'வள்ளலார்' எனக் குறிப்பிட்டார். 'ஆர்' என்னும் விகுதியே நாயனாரின் உயர்வை விளக்கும்.

18. நாயனார் நெல் முளையுடன் மீளுதல்

(நாயனார்)

காலினால் - தம் கால்களால்

தடவிச்சென்று - தடவியவாறு வயலிடத்தே சென்று,

நீர்வழி - நீர் வழியே சென்று

சார்ந்தன - ஓரிடத்தில் சேர்ந்தனவாகிய

சாலி - செந்நெல்லின்

வெண்முளை - வெண்மையான முளைகளை

கைகளால் - தம் கைகளால்

கோலி - சேர்த்து

வாரி - வாரி எடுத்து

இடா நிறையக் கொண்டு - இறை கூடை நிறையக்கொண்டு

மேல் எடுத்து - கூடையை மேலே தூக்கி

சுமந்து - சுமந்தவராய்

ஒல்லை - விரைவில்

மீண்டனர் - வீட்டுக்குத் திரும்பினார்.

கருத்துரை: நாயனார் ஒருவாறு வயலை அடைந்து, நீரினால் ஓரிடத்தில் ஒதுக்கப் பெற்றிருந்த நெல்லை இறை கூடை நிறைய் எடுத்துக் கொண்டு, விரைந்து தன் வீட்டுக்குத் திரும்பினார்.

விளக்கவுரை: சார்ந்தன - சேர்ந்தன. கோலி - சேர்த்து. இடா - இறை கூடை. ஒல்லை - விரைவில். **ஒல்லை மீண்டனர்:** நாயனார் விரைந்து தம் வீட்டை அடைந்தார். ஏன்? அடியார் பசித்திருப்பாரன்றே? விரைவில் அவருக்கு உணவூட்ட வேண்டும் என்ற நினைவினால் தான் நாயனார் விரைவாகத் தம் வீட்டை அடைந்தார். நாயனாரது விரைவைக் குறிக்கும் பொருட்டே சேக்கிழார் செய்திகளை விரைந்து கூறினார்.

திருவமுது அமைத்தல் (19-22)

19. அடுப்பெரிக்க விறகில்லையே!

வந்தபின் - (நாயனார்) வந்த பிறகு

மனைவியாரும் - அவரது மனைவியாரும்

வாய்தலின் நின்று - வீட்டின் வாயிற் புறத்தே நின்று

வாங்கி - (அவர் கொணர்ந்த இறை கூடையை) வாங்கிக்கொண்டு,

சிந்தையில் - மனத்தில்

விரும்பி - விருப்பம் உடையவராய்

சேற்றினை - நெல் முளைகளில் படிந்திருந்த சேற்றினை

நீரில் - நீரினால்

அலம்பி ஊற்றி - கழுவி ஊற்றி விட்டு

வெந்தழல் - வெப்பமான தீயினை

அடுப்பில் ——,

மாட்ட - உண்டாக்கி எரிக்க

விறகு இல்லை ——,

என்ன - என்றுகூற,

மேலோர் - மேன்மையை உடையவராகிய நாயனார்

அந்தம் இல் - அழிவு இல்லாத

மனையின் - தமது வீட்டில்

நீடும் - நெடுங்காலமாக இருந்துவந்த

அலக்கினை - கூரையின் பகுதிகளை (விறகின்பொருட்டு)

அறுத்து வீழ்த்தார் - அறுத்துத் தள்ளினார்.

கருத்துரை: நாயனார் கொண்டு வந்த இறை கூடையைக் கையில் வாங்கிய அம்மையார் நெல் முளைகளைக் கழுவி விட்டு, அடுப்பு எரிக்க விறகில்லையே என்றார். அவ்வளவில் நாயனார் தம் வீட்டுக் கூரையை விறகின் பொருட்டாக அறுத்துத் தள்ளினார்.

விளக்கவுரை: வாய்தல் - வீட்டின் வாயில். வெந்தழல் - வெப்பமான தீ. மாட்ட - மூட்ட. அந்தம் - முடிவு, அழிவு. அலக்கு - கூரையினுடைய மூங்கில், சட்டம் முதலிய பகுதிகள். **சிந்தையில் விரும்பி:** அம்மையாரும் நாயனாரைப் போலவே அடியார்க்கு அமுதளிப்பதில் ஆர்வம் கொண்டிருந்தார். நாயனார் எவ்வாறு நெல்முளைகளை இரவில் கொண்டு வருவார் என்று கவலைப் பட்டுக்கொண்டிருந்த அவ்வம்மையார், அவற்றைப் பெற்றவுடன், மனத்தில் மகிழ்ச்சியும் விருப்பமும் கொண்டார். **அந்தம் இல் மனை:** அழிவு இல்லாத வீடு. வீட்டிற்குக் கூரை இன்றியமையாதது. கூரையில்லாத வீடு, குட்டிச்சுவர்களின் தொகுதி என்று சொல்லப்படும். நாயனார் தமது வீட்டின் கூரையை அறுத்தார். எனினும், அவரது வீட்டிற்கு அழிவு வராது என்னும் கருத்தினை உட்கொண்டே இவ்வாறு கூறப்பட்டது.

இலக்கணக் குறிப்பு: சிந்தையில்: ஈண்டு 'இல்' என்பது ஏழன் உருபு. வெந்தழல்: பண்புத்தொகை.

20. சோறு ஆக்கலும் கறிக்குக் கவலையும்

அவை - (அவ்விதம் அறுத்துத் தள்ளிய) கூரைப் பகுதியை
முறித்து - உடைத்து
அடுப்பில் மாட்டி - அடுப்பில் வைத்துத் தீயினை மூட்டி,
முளை வித்து - நெல் முளைகளை
பதம் - பதமாக
முன்கொள்ள - முதலில்
வறுத்தபின் - வறுத்த பிறகு,
அரிசியாக்கி - (அவற்றைக் குற்றி) அரிசியாக்கி,
வாக்கிய - நீர் ஊற்றிவைத்த
உலையில்பெய்து - உலையில் இட்டு
வெறுப்பு இல் - வெறுத்தற்கு இடம் இல்லாத
இன் அடிசில் - இனிய சோற்றினை
ஆக்கி - சமைத்து
மேம்படு - மேலான
கற்பின்மிக்கார் - கற்பில் மிகுந்தவராகிய அவ்வம்மையார்
கறிக்கு - கறிவகைகட்கு
இனி என் செய்கோம் - இனி யாது செய்வோம்
என்று - என்று கூறி,
கணவனாரை - தமது கணவராகிய நாயனாரை
இறைஞ்சினார் - வணங்கினார்.

கருத்துரை: நாயனாரின் மனைவியார், வீட்டுக் கூரையின் உறுப்புக்களை முறித்துவைத்து அடுப்புமூட்டி, முளை நெல்லை வறுத்து அரிசியாக்கி, உலையிற் பெய்து சோறு சமைத்தார். பின்னர் அவர், கறி வகைகட்கு யாது செய்வது என்று தம் கணவனாரைக் கேட்டார்.

விளக்கவுரை: அவை: அந்தக் கூரையின் உறுப்புக்கள். மாட்டி - மூட்டி. முளை வித்து - முளைக்கும் பருவத்தில் உள்ள விதை நெல். வாக்கிய - நீர் ஊற்றிய. அடிசில் - ஈண்டுச் சோறு. இறைஞ்சினார் - வணங்கினார். **மேம்படு கற்பின் மிக்கார்:** நாயனாரின் மனைவியார் மிகச் சிறந்த கற்பில் மேம்பட்டவர். தம் கணவனார் நினைத்தவற்றையே அம்மையாரும் நினைத்தார். இருவருடைய உள்ளங்களும் ஒன்றுபட்டிருந்தன. இவ்வாறு கணவரையே கடவுளாகக் கருதி ஒழுகி, அவரது நினைவுக்கு ஏற்றவாறு

நடந்தாராதலால் அவ்வம்மையார் 'மேம்படு கற்பின் மிக்கார்' என்று குறிப்பிடப் பெற்ருர்.

இலக்கணக் குறிப்பு : இன்னடிசில் : **பண்புத் தொகை.** மிக்கார்: ஈண்டு **வினையாலணையும் பெயர்.**

21. மாறனர் இலைக்கறிப் பயிர்களைப் பறித்தல்

வழிவரும் - 'நடந்து வந்ததனல் உள தான
இளைப்பிளுேடும் - அயர்ச்சியுடன்
வருத்திய - முன்பு தம்மை வருத்தப் படுத்திய
பசியினுல் - பசித்துன்பத்தினுல்
ஐயன் - சிவனடியார்
அழிவுறும் - வருந்துவார்'
என்னும் - என்கின்ற
அன்பினில் பொலிந்து - அன்பில் மிகுந்து
சென்று - கொல்லைப்புறத்தே போய்
குழி - குழிகளினின்றும்
நிரம்பாத - முளைத்துக் கிளம்பும் பருவத்தை அடையாத
புன்செய் - புன்செய் நிலத்தில் பயிரிடப்படுகின்ற
குறும் பயிர் - கீரை முதலியவற்றின் சிறு பயிர்களை
தடவி - கையால் தடவி
பாசம் - தமது ஆணவமாகிய
பழிமுதல் - மலத்தின் வேரினை
பறிப்பார்போல - பறிப்பவர்போல
பறித்து - வேரோடும் பிடுங்கி எடுத்து
அவை - அவற்றை
கறிக்கு நல்க - கறிவகை செய்தற்காக (மனைவியார்) கையில் கொடுக்க,

கருத்துரை : சிவனடியார் களைப்புடனும், பசியுடனும் இருப்பாரே என்று கருதிய நாயனர், கொல்லைப்புறத்தே சென்று, கீரை முதலிய புன்செய்ப் பயிர்களைப் பறித்து வந்து, தமது மனைவியாரிடம் கொடுத்தார்.

விளக்கவுரை : வழிவரும் - வழி நடந்து வந்த. இளைப்பு - அயர்ச்சி, களைப்பு. அழிவுறும் - வருந்துவார். புன்செய்ப் பயிர்: கீரை முதலிய பயிர்கள். பாசம் - ஆணவம், உலகப்பற்று. முதல் - வேர். **குழி நிரம்பாத புன்செய்க் குறும்பயிர் :** புன்செய் நிலத்தில் பயிரிடப்படும் கீரை முதலியவை புன்செய்ப் பயிர்கள் எனப்படும். தோட்டத்தில் பயிர்கள் வளர்தற்குத் தனித்தனியே குழிகள் அமைக்கப்படுதல் வழக்கம். நாயனர் வீட்டின் கொல்லைப் புறத்தே இருந்த கீரை முதலியவை குழிகளின் அளவுக்கு மேலே முளைத்தில. அவை மிக இளமைப்பருவம் உடையன. குறுகிய உயரமே வளர்ந்திருந்தன. **பாசப் பழிமுதல் பறிப்பார் போல :** தமது ஆணவமாகிய மலத்தின் வேரினை அடியோடு பெயர்த்தெடுப்பார் போல. 'நாயனர் தமது வீட்டுக் கொல்லையில் பறித்தவை புன்செய்க் குறும்பயிர்கள் அல்ல. அவர் தமது மலத்தின் வேரினையே அடியோடு பெயர்த்தெடுத்தார்' என்று கூறுகின்ருர் சேக்கிழார். ஆணவம், மாயை, கன்மம் என்று மலங்கள் மூவகைப்படும். 'மலம்' என்னுஞ் சொல் 'கழுவப்பட வேண்டுவது' என்று பொருள்படும். நான் என்னும் செருக்கே ஆணவம் ஆகும். நிலையற்ற உலகப் பொருள்களை நிலைபெற்றனவாக நினைத்து மயங்குதல் மாயையாகும். வறுமை நிலையாயினும், மழைக்காலத்து இரவாயினும், எத்துணைத் துன்பம்வரினும் சிவனடியார்க்கு உணவளித்துப் போற்றுதல்வேண்டும் என்னும் உறுதியைக் கொண்டிருந்தார் நாயனர். இவ்வாறு செய்தமையால் அவர் பிறகு உலகப்பற்றுக்களை அகற்றி, இறைவனிடம்

சேர்ந்து பேரின்பப் பேற்றினை அடைந்தார். நாயனார் புன்செய்ப் பயிர்களைப் பறித்த செயல் அவரது மலம் அழிவதற்குத் துணை செய்தது. அதுபற்றியே சேக்கிழார் 'பாசப் பழிமுதல் பறிப்பார் போல' என்று பாடியுள்ளார். 'பழி' என்னும் சொல் பழியைத் தருகின்ற மலத்தைக் குறித்தது. 'முதல்' என்பது மூலவேரைக் குறிக்கும். 'நாயனார் புன்செய்ப் பயிர்களை ஈண்டு வேருடன் பறித்தார். அச்செயல், அவர் தமது மலத்தினை மூல வேருடன் பறித்தல்போல் இருந்தது' என்பது ஈண்டு அமைந்துள்ள கருத்து.

இலக்கணக் குறிப்பு : இளைப்பினோடும்: 'ஓடு' என்னும் மூன்றும் வேற்றுமை யுருபு உடனிகழ்ச்சிப்பொருளில் வந்தது. வருத்து: பிறவினை. குறும் பயிர்; பண்புத் தொகை.

22. மனைவியாரின் கைத்திறன்

மனைவியார்——,
கொழுநர் - தம் கணவராகிய நாயனார்
மனமகிழ் - மனமகிழ்ச்சியுடன்
தந்த - கொடுத்த
கறிகள் - இலைக் கறிகளை
ஆய்ந்து - (ஆகாத பகுதிகளையும் ஆகும் பகுதிகளையும்) ஆராய்ந்து பிரித்து,
புனலிடை - நீரினிடத்தே
கழுவி - (ஆகும் பகுதிகளை) கழுவி
தக்க - ஏற்ற
புனித பாத்திரத்து - தூய பாத்திரத்தில் இட்டு,
கைம்மை வினையினால் - (பல நாட்களாகச் சமைத்துப் பழகிய) தம் கைப் பழக்கத்தினால்
வேறு வேறு - வெவ்வேறாக
கறியமுது ஆக்கி - பலவகைக் கறியுணவினைச் சமைத்து,
பண்டை நினைவினால் - பழைய நினைவால் உண்டான
குறையை——,
நேர்ந்து - எண்ணி ஒருவாறு மனம் தேறி
திருவமுது - உணவு வகைகளை
அமைத்து - முழுவதும் முடித்து
நின்று - எழுந்து நின்று,

கருத்துரை : தம் கணவனார் கொடுத்த இலைக்கறிகளில், சமைப்பதற்கு உதவும் பகுதிகளை ஆராய்ந்து பிரித்து, நீரில் கழுவிய அம்மையார் அவற்றைப் பலவகைப்பட்ட கறியுணவாகச் சமைத்து முடித்தார்.

விளக்கவுரை : கொழுநர் - கணவர்; நாயனார். ஆய்ந்து - ஆராய்ந்து பிரித்து. புனல் - நீர். புனிதம் - தூய்மை. கைம்மைவினை - கைவேலைத் திறன், பழகிய திறன். பண்டை - பழைய. நேர்ந்து - எண்ணி, ஒருவாறு மனம் தேறி. **கறிகள் ஆய்ந்து :** இலைக்கறிகளில் காம்பு, நரம்பு, வேர் முதலியவை கறிக்கு உதவா. இலை, தண்டு முதலியன கறிக்கு உதவுவன. அம்மையார், இலைக்கறிகளில் கறிக்கு உதவும் பகுதிகளையும், உதவாப் பகுதிகளையும் தனித்தனி பிரித்தார். **கைம்மை வினை :** கைவேலைத் திறமை. அம்மையார் சிவனடியார்கட்குப் பல நாட்களாக விருந்துணவு சமைத்துப் பழகியவர். அதனால் அவர் சமைக்குந் தொழிலில் திறமை பெற்றிருந்தார். அவர் பெற்ற திறமை ஈண்டுக் குறிப்பிடப்பட்டது. **பண்டை நினைவினால் குறையை நேர்ந்து:** செல்வம் நிரம்பியிருந்த காலத்தில் சமையலுக்கு வேண்டிய பொருள்கள் யாவும் நாயனார் இல்லத்தில் குறைவின்றி இருந்தன. அது காலையில் அம்மையார் பல்வேறு வகைப்பட்ட விருந்துணவுகளை எளிதில் சமைத்தார். அந்நினைவு அம்மையாருக்கு வரவே, அவர் தமது பழைய செல்வ நிலையையும், தற்பொழுதைய வறுமை நிலையையும் ஒரு கணம் ஒப்பிட்டுப் பார்த்தார். தற்பொழுதைய குறை அவரது நெஞ்சை

வருத்தியதேனும், உள்ளதைக் கொண்டு ஒருவாறு சமையலை முடித்தோம் என்னும் எண்ணத்தினால் அவர் ஒருவாறு மனநிறைவு பெற்றார்.

இலக்கணக் குறிப்பு: புனலிடை: 'இடை' என்பது ஏழன் உருபு.

23. நாயனார் அடியாரை எழுப்ப முற்படுதல்

கணவனார் தம்மை நோக்கி - (அம்மையார்) தம் கணவரைப் பார்த்து
கறி அமுது ஆன - கறிகள், அமுது முதலியன சமைத்து முடிக்கப் பெற்றமையை
காட்டி ———,
இணை இலாதவரை - ஒப்பு இல்லாதவராகிய அடியாரை
ஈண்ட - இப்பொழுதே விரைந்து
அமுது செய்விப்போம் - உண்ணச் செய்வோம்
என்ன - என்றுகூற,
உணர்வினால் - (மக்கள் தம்) அறிவினால்
உணர ஒண்ணா - அறிய முடியாத
ஒருவரை - ஒப்பற்றவராகிய (அடியார் உருவில் வந்த) சிவபிரானுக்கு
உணர்த்த வேண்டி - (உணவு ஆக்கப்பெற்ற செய்தியை) அறிவித்து அழைக்க வேண்டி
அணைய - அவரிடம் நெருங்க
முன்சென்று நின்று - முன்னே சென்று நின்று
அங்கு - அவ்விடத்தில்
அவர் துயில் - அடியாரைத் தூக்கத்திலிருந்து
அகற்றலுற்றார்- எழுப்புவாராயினர்.

கருத்துரை: சமையல் முடிந்துவிட்டதென்றும், அடியவரை உண்பிக்கலாம் என்றும் அம்மையார் கூறிய அளவில், நாயனார் விரைந்து சென்று அடியாரைத் தூக்கத்திலிருந்து எழுப்புவாராயினர்.

விளக்கவுரை: இணை - ஒப்பு. ஈண்ட - விரைவில். உணர்வு - அறிவு. ஒண்ணா - முடியாத, இயலாத. ஒருவர் - ஒப்பற்றவர். உணர்த்த - அறிவிக்க. துயில் - தூக்கம். துயில் அகற்றல் - தூக்கத்திலிருந்து எழுப்புதல். **இணையிலாதவர்**: ஒப்பு இல்லாதவர். தமது இல்லத்திற்கு வந்த சிவனடியார்களை அம்மையார் சிவபிரானாகவே கருதுவார். அவ்வாறே அவர் இப்பொழுதும் கருதினாராதலின் சிவனடியார் 'ஒப்பில்லாதவர்' என்று சுட்டப் பெற்றார். சிவனடியார்களிடத்தே அம்மையார் வைத்திருந்த மதிப்பினை இது குறிப்பிடும். **உணர்வினால் உணர ஒண்ணா ஒருவர்**: மக்கள் தம் அறிவினால் கடவுளின் தன்மையை அறிய முடியாது. மக்களுடைய அறிவுக்கும், கற்பனைக்கும் அப்பாற்பட்டு நின்றவர் கடவுள். எல்லாவற்றையும் கடந்து நிற்கும் காரணம் பற்றியே 'கடவுள்' என்னும் பெயர் வந்தது. சிவபிரானே ஈண்டு அடியாராக வந்துள்ளாராதலால் சேக்கிழார் இவ்வாறு குறிப்பிட்டார்.

இலக்கணக் குறிப்பு: செய்வி: பிறவினை. 'வி' என்பது பிறவினை விகுதி. ஒண்ணா: ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

24. இறைவனார் சோதியாய்த் தோன்றல்

அடியேன் - "அடியவனாகிய யான்
அழுந்திய - அழுந்தியுள்ள
இடர்உள் - துன்பத்தினின்று
நீங்கி - விடுபட்டு
உய்ய - ஈடேற
என்பால் - என்னிடம்
எழுந்தருள் - எழுந்தருள் செய்த
பெரியோய் - பெரியவரே!
ஈண்ட - இங்கு விரைவில்
அமுது செய்தருள்க-உண்டருள்க"
என்று ———,
தொழும்பனார் - அடித் தொண்டராகிய மாறனார்

உரைத்த போதில் - சொல்லிய அளவில் (அச்சிவனடியார்)
சோதியாய் எழுந்து தோன்ற - ஒளிப்பிழம்பாய் எழுந்து தோன்றவே,
செழு - செழுமையான
திரு - எல்லாச்செல்வங்களும் நிறைந்த
மனைவியாரும் ————,
தொண்டரும் - தொண்டராகிய மாறனாரும்
திகைத்து நின்றார் - திகைத்து நின்றனர்.

கருத்துரை : அமுது செய்ய வந்தருளுமாறு சிவனடியாரை நாயனர் எழுப்பிய அளவில், அவ்வடியார் மறைந்தார். ஆங்கொரு ஒளிப் பிழம்பு தோன்றியது. அதுகண்டு மாறனாரும், அவரது மனைவியாரும் திகைத்து நின்றனர்.

விளக்கவுரை : இடர் - துன்பம். உய்ய - ஈடேற, பிழைக்க. ஈண்ட - விரைய. தொழும்பனார் - ஈசனாரிடம் ஆழ்ந்த அடிமை பூண்ட தொண்டர்; மாறனார். சோதி - ஒளி. திகைத்தல் - இன்னதெனத் துணியாதிருத்தல். **அழுந்திய இடருள் நீங்கி :** பல பிறவிகளில் செய்த வினைகளால் நாயனர் இப்பிறப்பினை அடைந்தார். அத்தகைய பிறவித் துன்பம் நீங்க வேண்டும் என்பது அவரது விருப்பம். மேலும், தம் வீட்டிற்கு வந்த அடியார்க்கு எவ்வாறு அமுது அளிப்பது என்ற நினைவு அவருக்குத் துன்பத்தை அளித்தது. இத்தகைய துன்பங்களெல்லாம் 'அழுந்திய இடர்' எனப்பட்டன.

இலக்கணக் குறிப்பு : பால்: **ஏழன் உருபு.** அருள்க : **வியங்கோள் வினைமுற்று.** ஈண்ட: விரைவுப்பொருளில் வருவதோர் இடைச் சொல்.

இறைவனார் அருள்புரிதல் (25, 26)

25. சிவபிரான் உமாதேவியாருடன் காட்சியளித்தமை

மால் - திருமாலுக்கும்
அயற்கு - பிரமனுக்கும்
அரிய நாதன் - அரியவராகிய சிவபிரானார்
வடிவு - அடியவர் கோலத்துடன் வந்த வடிவம்
ஒரு சோதியாக - ஒரு பேரொளிப் பிழம்பாய்த் தோன்றவே (அக் காட்சியைக் கண்டு)
சாலவே - மிகுதியாக
மயங்குவார்க்கு - மயங்கி நின்ற மாறனார்க்கு (உண்மையை உணர்த்த)
சங்கரன் தான் - சிவபிரானார்
மகிழ்ந்து - மகிழ்ந்தவராய்
ஏலம் - நறுமணம் தங்கிய
வார் - நீண்ட
குழலாள் தன்னோடு - கூந்தலையுடைய உமா தேவியாருடன்
இடப வாகனனாய் - காளை வாகனத்தை ஊர்ந்தவராய்
தோன்றி - காட்சியளித்து
சீலம் ஆர் - நல்லொழுக்கம் நிறைந்த
பூசை செய்த - அடியார் பூசையினைச் செய்த
திருத்தொண்டர் தம்மை - திருத்தொண்டராகிய மாறனாரை
நோக்கி - பார்த்து,

கருத்துரை ; ஒளிப் பிழம்பினைக் கண்டு மயங்கி நின்ற மாறனார் காணுமாறு சிவபிரானார் உமா தேவியாருடன் காட்சியளித்து, அவரைப் பார்த்துக் கூறுவாராயினர்.

விளக்கவுரை : மால் - திருமால். அயன் - பிரமன். நாதன் - தலைவன் ; சிவபிரான். சோதி - பேரொளிப் பிழம்பு. சால - மிகவும். சங்கரன் - சிவபிரான் ; சுகத்தைச் செய்பவன். ஏலம் - நறுமணம். வார் - நீண்ட.

குழல் - கூந்தல். குழலாள் - கூந்தலையுடையவள்; உமை யம்மையார். இடபம் - காளை. சிவபிரானுக்கு உரியது காளை வாகனம். சீலம் - நல்லொழுக்கம். **மால் அயற்கு அரிய நாதன் :** திருமாலும், பிரமனும் அறிவதற்கு அரிய தலைவனாகிய சிவபிரான். (இப்பகுதியின் எட்டாம் பாடலின் விளக்கவுரையின்கண் "மால் அயனை அக்கொற்ற ஏனமும் அன்னமும் தெரியாத கொள்கையர்'' என்னும் அடிக்கு எழுதப் பெற்றுள்ள வரலாற்றை நினைவிற் கொள்க).

இலக்கணக் குறிப்பு : மயங்குவார் : ஈண்டு **வினையாலணையும்** பெயர். சால: உரிச் சொல். வார்குழல் : **வினைத் தொகை.**

26. இறைவனார் மாறனார்க்கு அருள்செய்த பான்மை

அன்பனே——,
அன்பர் பூசை - சிவனடியார் பூசையை
அளித்த நீ - தவறாமல் காத்துச் செய்த நீ
அணங்கினோடும் - தெய்வப் பெண் போன்ற உன் மனைவியோடும்
என் - எமக்குரிய
பெரு உலகம் - பெரிய உலகிலே (சிவலோகத்தில்)
எய்தி - சேர்ந்து,
இருநிதி - பெருஞ் செல்வத்திற்கு
கிழவன் தானே - உரியவனாகிய குபேரனே
முன் - உனக்கு எதிரில்
பெருநிதியம் - பெருஞ் செல்வத்தை
ஏந்தி - சுமந்து
மொழிவழி - உன்னுடைய சொற்களின்படியே
ஏவல் கேட்ப - நீ இட்ட வேலைகளைக் கேட்டுச் செய்ய
இன்பம் - பேரின்பத்தை
ஆர்ந்து - நுகர்ந்து
இருக்க - என்றும் வாழக் கடவாய்''
என்றே ——,
எவர்க்கும் மிக்கான் - எல்லோரினும் உயர்ந்தவனாகிய சிவபிரானார்
அருள் செய்தான் - கூறியருளினார்.

கருத்துரை : சிவபிரானார் மாறனாரை நோக்கி, 'அன்பனே! நீ அடியார் பூசையைக் குறைவறச் செய்தாய். எனவே, நீ உன் மனைவியோடும் எம் உலகுக்கு வருக. குபேரன் உனக்கு ஏவல் கேட்பான். நீ பேரின்பம் பெற்று என்றும் வாழ்க' என்று கூறியருளினார்.

விளக்கவுரை : அணங்கு - தெய்வப் பெண்; ஈண்டு மாறனாரின் மனைவியார். உலகம் : சிவலோகம். இரு - பெரிய. நிதி - செல்வம். கிழவன் - உரியவன். இருநிதிக் கிழவன் : பெருஞ் செல்வத்திற்கு உரிமை பூண்ட குபேரன். ஏவல் - இட்ட வேலை. ஆர்ந்து - நுகர்ந்து. மிக்கான் - உயர்ந்தவன்; சிவபிரான். **அணங்கினோடும் :** தெய்வப் பெண் போன்ற மனைவியாருடன். மாறனாருடைய மனைவியார் தெய்வப் பெண் போன்றவர். அவ்வம்மையார் கற்பும் பொற்பும் எய்தி, கணவர் சொல்லினைக் கடவாமல் நின்று, அடியவர் பூசையில் பெருவிருப்பம் காட்டி வாழ்ந்தாராதலால் அவருடன் தம் உலகுக்கு வருமாறு சிவபிரானார் கூறியருளினார். **பெருநிதியம் :** பெருஞ்செல்வம். தேவர் உலகில், எடுக்க எடுக்கக் குறைபடாத செல்வத்தை நல்கும் சங்கநிதி, பதுமநிதி என்பன உள என்பர். அவற்றையே 'நிதி' என்னுஞ் சொல் ஈண்டுக் குறிப்பிட்டது.

இலக்கணக் குறிப்பு : அன்பனே: சேய்மை விளி. இருக்க: வியங்கோள் வினைமுற்று. மிக்கான் : ஈண்டு **வினையாலணையும் பெயர்.**

நல்லொழுக்கப் பயிற்சி

இளையான்குடி மாற நாயனர் உழுதுண்டு வாழ்ந்தார்; செல்வத்தில் செழித்தார்; அதுகாலையில் அடியார்களை அன்புடன் போற்றினர். பின்பு அவருக்கு வறுமை வந்துற்றது. அந்நிலையிலும் அவர் தாம் கொண்ட கொள்கையிலிருந்து வழுவினரல்லர். சிறந்த ஒழுக்கம் என்று அவர் ஒன்றினைக் கைக்கொண்டார். வாழ்வில் தாழ்வு வந்த காலத்திலும், அவர் அக்கொள்கையிலிருந்து தவறவில்லை.

செல்வம் வந்துற்ற காலத்தில் அடக்கமும், பணிவும் வேண்டும். செல்வம் நிலைத்து நில்லாது. "செல்வம் சகடக்கால் போல வரும்" என்றும், "நிறை செல்வம் நீரில் சுருட்டும் நெடுந் திரைகள்" என்றும் பெரியவர்கள் கூறியுள்ளனர். ஆதல்பற்றி, செல்வம் சுருங்கி வறுமை வந்து வருத்தி வாட்டிய காலத்தில் செம்மை வேண்டும். அப்பொழுது ஒழுக்கத்திலிருந்து வழுவுதல் கூடாது. அத்தகைய பண்பினை உடையவர்களை உலகம் என்றும் போற்றும்.

எனவே, செல்வர்களிடம் பணிவும், அடக்கமும் இன்றியமையாதன : வறியவர்களிடம் செம்மையும், மானமும் இன்றியமையாதன.

4. மனோன்மணீயம்

மனோன்மணீயம் ஒரு நாடக நூல் : நாடகத் தமிழுக்கு நல்லுயிர் கொடுத்த நூல் மனோன்மணீயம் ஆகும். செய்யுள் உருவில் அமைந்த நாடக நூல் இது. இலக்கியமாகக் கருதிப் படித்துச் சுவைப்பதற்கேற்ற வாறு இந்நூல் அமைந்துள்ளது. பாண்டிய அரசன் ஒருவனது பெண் ஒருத்தியின் வரலாறு கூறும் முக்தான் கற்பனைக் களஞ்சியமாக இந்நூல் விளங்குகிறது.

நூலாசிரியரைப்பற்றிய செய்திகள்

பெயர் : ராய்பகதூர் பெ. சுந்தரம் பிள்ளை.

தந்தையார் : பெருமாள் பிள்ளை.

தாய் : மாடத்தி அம்மையார்.

பிறந்த நாள் : 1855-ஆம் ஆண்டு, பங்குனி மாதம், 28-ஆம் நாள்.

பெற்ற பட்டம் : எம். ஏ.

அலுவல் : திருவனந்தபுரம் பேரரசர் கல்லூரியில் அறிவு நூற்புலவர் (Professor of Philosophy).

இயற்றிய வேறு நூல் : நூற்றொகை விளக்கம்.

மறைவு நாள் : 1897-ஆம்ஆண்டு, ஏப்ரல் மாதம், 26-ஆம் நாள்.

" அல்லல் அருள் ஆள்வார்க்கு இல்லை." — வள்ளுவர்.

மனோன்மணீயக் கதை: மதுரையில் ஜீவகன் என்றொரு பாண்டிய மன்னன் ஆட்சி செய்து வந்தான். அவனுக்கு மனோன்மணி என்ற பெயர் கொண்ட அழகு வாய்ந்த மகள் ஒருத்தி இருந்தாள் சீவகனது மந்திரியாக இருந்த குடிலன் என்பவனே வஞ்ச நெஞ்சம் கொண்டவன். அரசனைக் கொன்று பாண்டி நாட்டை ஆள அவன் திட்டமிட்டிருந்தான். அதுகாலையில் மனோன்மணி சேர நாட்டு அரசனாகிய புருடோத்தமன் என்பவனைக் கனவிற் கண்டு, அவனையே மணக்க விரும்பினாள். அதேபோலப் புருடோத்தமனும் மனோன்மணியைக் கனவிற் கண்டு, அவளையே மணக்க விரும்பினான். எனினும், அவள் யாவள் என்பதை அவனால் அறிய முடியவில்லை. மனோன்மணீ கனவிற் கண்ட ஆடவன் புருடோத்தமனே என்பதனைச் சுந்தரமுனிவரின் வாயிலாக உணர்ந்த ஜீவகன், அதற்கு இசைந்து, புருடோத்தமனிடம் மணம் பேசத் தூதாக விடுப்பதற்கேற்றவன் யாவன் என்று ஆராய்ந்தான். அது காலையில் குடிலன் தன் மகனாகிய பலதேவனே அதற்கு ஏற்றவன் என்று கூறி, அதற்கு அரசன் இசையுமாறு செய்தான். திட்டத்தின்படியே பலதேவன் தூது சென்று, மணம் பேசாமல், புருடோத்தமனைப் பாண்டி நாட்டின்மீது படையெடுத்து வருமாறு செய்து விட்டான். பாண்டியனுக்கும் சேரனுக்கும் காரணம் இன்றிப் போர் தொடங்கியது. போர் நடைபெறும் காலத்தில் குடிலன் சுரங்க வழியே தனித்துச் சென்று, புருடோத்தமனைக் கண்டு, அவனுக்குத் தான் உதவி செய்வதாகவும், ஜீவகன் இறந்துபட்டவுடன் பாண்டி நாட்டு அரச பதவியைத் தனக்கு அளிக்குமாறும் கூறினான். உண்மை வீரனாகிய புருடோத்தமன் அதற்கு இசையாமல், அவனுக்கு விலங்கு பூட்டி, அவனுடன் சுரங்க வழியாகவே பாண்டியனது அரண்மனையை அடைந்தான். ஆண்டு மனோன்மணியைக் கண்ட அளவில், புருடோத்தமன், அவளே தன் கனவில் வந்த காரிகை என்பதனை உணர்ந்தான். பிறகு இருவருக்கும் மணம் முடிந்தது. குடிலனது வஞ்சனை வெளிப்படவே, அவனும் ஏற்றவாறு ஒறுக்கப்பட்டான். இதுவே, மனோன்மணீயத்தின் கதைச் சுருக்கம் ஆகும்.

இப்பாடப்பகுதியில் வருவோர் சிலர்

ஜீவகன்: பாண்டி நாட்டு மன்னன்; வெள்ளை உள்ளத்தினன்.

மனோன்மணி: ஜீவகனுக்கு மகள்.

சுந்தர முனிவர்: ஜீவகனது குரு.

குடிலன்: ஜீவகனது அமைச்சன்; கள்ள உள்ளத்தினன்.

பலதேவன்: குடிலனுக்கு மகன்.

புருடோத்தமன்: சேர நாட்டரசன்; மனோன்மணியின் உருவைக் கனவில் கண்டு காதல் கொண்டவன்.

நம் பாடப் பகுதி: மனோன்மணீய நாடகத்தில் முதல் அங்கத்தின் இறுதிக் களமாகிய 5-ம் களம் நமக்குப் பாடமாக வைக்கப்பட்டுள்ளது. ஜீவக வழுதியினது ஒரே மகளாகிய மனோன்மணி சேர நாட்டு மன்னனாகிய புருடோத்தமன் என்பவனைக் கனவிற் கண்டு, அவனையே மணக்க விரும்பினாள். ஆயின், அவன் யாவன் என்பதனை அவள் தெளிவாக உணர்ந்திலள். அத்தகையவனை மணம் செய்துகொள்ள இயலுமோ என்னும் நினைவினால் அவள் ஏக்கமுற்று இருந்தாள். அவளது ஏக்கத்தின் காரணத்தைத் தமது கூரறிவினால் உணர்ந்தார் சுந்தர முனிவர். ஜீவக வழுதிக்கு அறவுரை கூறும் ஆசிரியர் அவர். அந்த முறையில் அம்முனிவர், மனோன்மணியைச் சேர

நாட்டு மன்னனை புருடோத்தமனுக்கே மணம் செய்து கொடுக்குமாறு மன்னனிடம் கூறினர். அதற்கு மன்னனும் இசைந்தான். பின்னர் அவ்விருவரும் ஆராய்ந்து, நடேசன் (நடராசன் என்றும் கூறப்படுகிறது) என்னும் ஒருவனைப் புருடோத்தமனிடம் மணம் பேசும் தூதுவனாக அனுப்புவது என்று முடிவு செய்தனர். அச்செய்தியைத் தனது அமைச்சனாகிய குடிலனிடம் கூறி, மறுபடியும் ஆராயவேண்டும் என்பது ஜீவகனுடைய விருப்பம். இத்தகைய நிலையில் குடிலன் தனது வீட்டில் சிந்தனையில் இருந்து தனக்குத் தானே சொல்லிக் கொள்ளுகின்ற செய்தி இக்களத்தில் அமைந்துள்ளது.

பாடப் பகுதிச் சுருக்கம்

குடிலன் பலவாறு தனக்குள் சிந்திக்கும் செய்திகள் இக்களத்தில் இடம் பெறுகின்றன. அவன் தன்க்குள், "நாம் நினைத்தவை யாவும் நிறைவேறின. மதுரையில் இருந்த மன்னனை, நம் விருப்பப்படி திருநெல்வேலிப் பதியில் சேர்த்தோம்; அவனைக் கொண்டே கோட்டை முதலியன கட்டுவித்தோம். இனி, நாம் சொல்லுகின்றபடியே அரசன் நடப்பான். இந்நிலையில் மன்னன் இறந்தால் இத்தனிக் கோட்டைக்கு அரசர் யார்? (சிந்திக்கிறான்.) அரசனுடைய உறவினர்கள் இங்கு வரவும் அஞ்சுவர். (மறுபடியும் சிந்திக்கிறான்.) மனோன்மணி குறிப்பிட்ட ஒருவனைக் கண்டு காமம் கொண்டிலள். பருவம் வந்ததால் அவளுக்கு இத்தகைய விருப்பம் உண்டாயிற்று. அவளிடம் நமது மகனாகிய பலதேவனைப் பலமுறை அனுப்பினால், அவள் இவன்மீது காதல் கொள்ளுதல் கூடும். (இவ்வமயத்தில், சேவகன் ஒருவன் திருமுகம் ஒன்றைக் கொண்டு வந்து கொடுக்கிறான். மன்னன், மனோன்மணியின் திருமணத்தைப் பற்றி முனிவருடன் யோசித்த செய்தி அத்திருமுகத்தில் இருந்தது.) இத்திருமணம் நெருங்கி விட்டது போலும்! அரசருக்கு ஆயுள் குறைவென்பர் அறிஞர். மகளைப் பிரிந்து மன்னன் நெடுநாள் வாழ மாட்டான். பாண்டியநாடு புருடோத்தமனைச் சேர்ந்தால் சேர நாட்டவர்க்குப் பாண்டி மக்கள் பணிய மாட்டார்கள். எனவே, வேறொரு தந்திரம் நாம் செய்ய வேண்டும். சேரன் இறுமாப்பு உடையவன் என்று நாம் கேள்வியுற்றிருக்கின்றோம். அவனுடைய கர்வத்தைக் கிள்ளினால், அவன் படையெடுத்து வருவான். அவ்வாறு வந்தால் பாண்டியன் யாது செய்வான்? போரில் யார் இறப்பார்களோ? அரச குடியில் பிறந்தவர்களே அரசராக வரவேண்டும் என்ற நியதி இல்லை. சரித்திரம் இதற்குச் சான்று பகரும். மக்கள் தம் அறியாமையால் சூரிய வமிசத்தவர் என்றும், சந்திரவமிசத்தவர் என்றும் அரசர்களைக் குறிப்பிடுவார்கள். மக்களுள் ஒரு சாரார், தாம் வாழும் பொருட்டே இவ்வாறு சிலவற்றைக் கற்பித்துக் கூறியுள்ளனர். சுந்தர முனிவர் எத்தகைய முயற்சி செய்தாலும் பலிக்குமோ? மணச்செய்தி கேட்டு மகிழ்ந்தோம் என்று இப்பொழுது நாம் நடித்தல் நல்லது. (இந்நிலையில், குடிலன், திருமுகம் கொண்டு வந்த சேவகனுக்கு மாலையொன்றைப் பரிசாக அளித்து, மணச்செய்தி கேட்டு மகிழ்ந்ததாகவும், மறுநாள் விடியற்காலையில் அரசவைக்கு வருவதாகவும் அவனிடம் செய்தி சொல்லி அனுப்புகிறான். சேவகனும் குடிலனை வாழ்த்தி விரைந்து செல்லுகிறான்.)

"என்னே இச்சேவகனின் அறியாமை! எனது கள்ள உள்ளத்தினை உணராமல் வாழ்த்திச் செல்லுகின்றான். உலகில் செய்யப்படும் தான தருமம் எல்லாம் இத்தகையனவே. ஒவ்வொருவர் ஒவ்வொரு உட்கருத்தினைக் கொண்டு புண்ணியம் பண்ணுகின்றனர். யாவும் தந்நயம் கருதியே ஆகும். (பின்னும் சிந்திக்கிறான்.) ஒருவேளை வேறு ஏதேனும் தந்திரம் நடக்கின்றதோ? எனி

"ஆசை விடவிட ஆனந்தமாமே." — திருமூலர்.

னும், அரசனைப் போன்ற பேயர் இவ்வுலகில் இலர் என்பது திண்ணம்." என்றெல்லாம் எண்ணினன்.

ஐந்தாங் களம்

இடம் : குடிலன் மனை. **காலம் :** மாலை.

(குடிலன் உலாவல்.)

(உங்கள் ஏட்டில் வரிகளின் எண்களைக் குறித்துக் கொள்க.)

நாம் நினைத்தவை நிறைவேறின

" புத்தியே.......................................வகையே " (1—6)

புத்தியே - அறிவே
சகல சத்தியும் - எல்லா வலிமையும் ஆகும்.
இதுவரை - இதுவரையில்
நினைத்தவை அனைத்தும் - யாம் நினைத்தவை எல்லாம்
நிறைவேறின - நிறைவேறி விட்டன
உட்பகை மூட்டி - உட்பகையை எழுப்பி
பெட்பு உற்றிருந்த - விருப்பம் அடைந்திருந்த
மதுரையாம் - மதுரையாகிய
முதுநகர் - பழைய நகரை
விடுத்து ——;
மன்னனை - அரசனை
புதியதோர் பதிக்கு - புதியதாகிய இவ்வூருக்கு (திருநெல்வேலிக்கு)
கொணர்ந்து - அழைத்து வந்து
நம் இட்டமாம் வகை - நமது கருத்துப்படியே
புரிசையும் கட்டுவித்தோம்-மதிலையும் கட்டுமாறு செய்தோம்
(என்று குடிலன் கூறிக் கொண்டான்.)

கருத்துரை : 'இவ்வுலகில் அறிவே வலிமையாகும். நாம் நினைத்தவை நிறைவேறின. நமது விருப்பப்படியே மன்னனை இங்கு அழைத்து வந்து மதிலைக் கட்டுமாறு செய்தோம்' என்று நினைத்தான் குடிலன்.

விளக்கவுரை : சத்தி - வலிமை. பெட்பு - விருப்பம். முதுநகர் - பழைய நகரம். பதி - ஊர் : ஈண்டுத் திருநெல்வேலி. புரிசை - மதில் இட்டம் - விருப்பம் (இஷ்டம்.) **புத்தியே சகல சத்தியும் :** அறிவே எல்லா வலிமையும். இவ்வுலகில் அறிவுடையவனே வலியவன் ஆவான். அறிவுடையவன், உடல் வலிமை குறைந்தவனாக இருந்தாலும், தனது அறிவுத் திறத்தினால் எல்லாவற்றிலும் வெற்றி பெறுவான். ஆதலால் இவ்வாறு கூறப்பட்டது. **இதுவரை நினைத்தவை அனைத்தும் நிறைவேறின :** ஜீவக வழுதி கள்ள மற்ற உள்ளத்தினன். ஆயின், குடிலனோ வஞ்சனை தங்கிய நெஞ்சுடையவன். அவன் நல்லவன் போல் நடித்து, அரசனைத் தன் மனம் போனவாறு ஆட்டிவைத்தான். அப்பொழுது ஜீவகன் மதுரையைத் தலைநகராகக் கொண்டிருந்தான். மதுரையில் வாழ்ந்த மக்கள் மன்னனிடம் அன்பும் ஆர்வமும் கொண்டிருந்தனர். அத்தகைய குடிமக்கள் வாழும் நகரில், தான் நினைத்தவற்றையெல்லாம் முடிக்க முடியாது என்று எண்ணிய குடிலன், மன்னனிடம் நயமாகப் பேசி, திருநெல்வேலியைத் தலைநகரமாகக் கொள்ளும்படி செய்தான். மன்னனிடம் அன்புடையவர்கள் அங்கு இல்லாமையால், அவ்விடத்தில் மன்னனை எது வேண்டுமானாலும் செய்யலாம் என்பது அவன் நினைவு. குடிலனை நல்லவனாகக் கருதி இருந்தானதலால் மன்னன் அவன் சொன்னவித மெல்லாம் நடந்து வந்தான். அதுபற்றியே, இவ்வாறு தான் நினைத்தவை யாவும் நிறைவேறின என்று கூறிக் கொள்கின்றான் குடிலன். **உட்பகை மூட்டி :** மன்னனது மனத்தில் மதுரையின் மீது வெறுப்பு உண்

டாகும்படி செய்தான் குடிலன். அதனையே, இச்சொற்றொடர் குறிக்கின்றது. **மதுரையாம் முதுநகர் :** பாண்டியர் பன்னெடுங் காலம் வாழ்ந்து, சங்கம் வைத்துத் தமிழை வளர்த்த நகரமாதலால் மதுரை 'முதுநகர்' எனப்பட்டது.

இலக்கணக் குறிப்பு : புத்தியே - ஏகாரம் தேற்றம். உட்பகை : இதனை ஆகுபெயர் என்பர் பரிமேலழகர் முதலியோர். முதுநகர் : பண்புத்தொகை. கட்டுவித்தோம் - பிறவினை : 'வி' என்பது பிறவினை விகுதி. கொணர்ந்து - 'கொணு' என்பது பகுதி.

யார் அரசராவார்?

" நாமே..................................ஆகுவர் ?" (7—12)

நாமே அரசும் - அரசனும் நாமே
நாமே யாவும் - எல்லாம் நாமே
மன்னவன் - அரசனாகிய ஜீவக வழுதி
நமது நிழலில் - நம் ஆதிக்கத்தில்
மறைந்தான் - அடங்கினான்
பிடித்தால் கற்றை - கூட்டமான பல துண்டுகளை இறுக்கிப் பிடித்தால் கற்றை ஆக இருக்கும் ;
விட்டால் - இறுகப் பிடித்ததை நெகிழ்த்து விட்டால்
கூளம் - அக்கற்றையே குவியலாகப் போய்விடும் ;
மதுரையை - மதுரை நகரை
இனிமேல் ——,
நெல்லை - திருநெல்வேலி
வணங்குமோ ——,
இது தனக்கு - இந்தத் திருநெல்வேலிக்கு
இறைவன் - அரசனாகிய ஜீவகன்
இறக்கில் - இறந்தால்
யாரே அரசர் ஆகுவர் - இந்நகருக்கு அரசர் ஆவார் யார்?
(என்று சிந்தித்தான் குடிலன்.)

கருத்துரை : 'அரசன் நம் ஆதிக்கத்திலுள்ளான். இனி, மதுரை வேறு திருநெல்வேலி வேறு. மதுரையைத் திருநெல்வேலி இனி வணங்காது. இந்நிலையில் மன்னன் மடிந்தால் அரசராவார் யார்?' என்று எண்ணினான் குடிலன்.

விளக்கவுரை : கற்றை - கூட்டம், ஒன்று சேர்ந்தது, தொகுதி, ஒரு பிடியளவு. கூளம் - குவியல், குப்பை. நெல்லை : திருநெல்வேலி. **மன்னவன் நமது நிழலில் மறைந்தான் :** மன்னனாகிய ஜீவகன் கள்ளமற்ற மனமுடையவன் ஆதலாலும், குடிலனுடைய விருப்பப்படி நடந்து வந்தான் ஆதலாலும், தன்னிடம் அன்பு கொண்டிருந்த குடிமக்கள் இருந்த மதுரையை விடுத்துத் திருநெல்வேலியைத் தலைநகராகக் கொண்டு வந்து விட்டான் ஆதலாலும், இனி, குடிலன் நினைத்தவாறே யாவும் நிகழும் ஆதலாலும் குடிலன் இவ்வாறு நினைத்தான். குடிலனுடைய ஆதிக்கத்தில் மன்னன் அடங்கினான் என்பது இவ்வடியின் கருத்து. **பிடித்தாற் கற்றை விட்டாற் கூளம் :** இஃது ஒரு பழமொழி. மெல்லிய பொருள்கள் பலவற்றை ஒன்று சேர்த்தால் அவை ஒரு கைப்பிடிக்குள் அடங்கும். அவற்றைக் காற்றில் பறக்குமாறு செய்தால் எங்கும் குப்பையாகிவிடும். தனது ஆதிக்கத்திலிருந்த அரசனை நழுவ விட்டால் அவனது ஆதிக்கம் எங்கும் பரவி விடுமென்றும், மதுரையில் அன்புடைய குடிமக்களுக்கு அஞ்சி, அடங்கி நடந்த முறை மாறி, இனித் தன் விருப்பப்படி நடக்கலாம் என்றும் கருதியே குடிலன் இப்பழமொழியினைச் சொல்லிக் கொண்டான் என்று பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் பாடியுள்ளார். இனி, இவ்வாய்ப்பினைப் பயன்படுத்தி விரைந்து செயலாற்ற வேண்டுமென்றும், இவ்வாய்ப்புத் தவறினால் வேறொரு வாய்ப்புக்

கிடைப்பது அரிது என்றும் கருதி, குடிலன் இப்பழமொழியைக் கூறிக் கொண்டான் என்றும் கொள்ளலாம்.

இலக்கணக் குறிப்பு : நாமே : ஏகாரம் தேற்றம். மதுரை, நெல்லை: இடவாகுபெயர்கள். வணங்குமோ : ஓகாரம் எதிர்மறை.

அரசனைச் சேர்ந்தோர் நம்மைத் தொழுவரோ?

"புரவலன்...............அரியதென்" (13—16)

புரவலன் - அரசனுடைய
கிளைஞர் - உறவினர்
புரிசையை - (திருநெல்வேலிக்) கோட்டையைப் பற்றி
கேட்கினும் - கேட்டாலும்
வெருளுவர் - நடுங்குவர்
வெல்லார் - வெல்ல மாட்டார்கள்
ஆயினும் - என்றாலும்
முழுதும் - (அவர்கள்) அனைவரும்
நம்மையே ——,
தொழும் வகை இலையோ - வணங்கி நடக்குமாறு செய்ய வழியில்லையோ?
கருவியும் - வினை செய்யுங்கால் அதற்கு வேண்டும் கருவிகளையும்
காலமும்-அதற்கேற்ற காலத்தையும்
அறியில் - நாம் நன்கு அறிந்து வினை செய்வோமேயானால்
அரியது என் - அரியது என்று ஒன்று ஏது? (இல்லை)

கருத்துரை : 'இத்திருநெல்வேலிக் கோட்டையைப் பற்றி அரசனைச் சேர்ந்தோர் கேட்டாலும் நடுங்குவர். அவர்களால் இதனை வெல்ல முடியாது. எனினும், அவர்கள் யாவரும் நம்மை வணங்கி நடக்கும்படி செய்ய வழி யாது? தக்க கருவிகளைக் கொண்டு, ஏற்ற காலத்தை உணர்ந்து செயலாற்றினல் அரியதென்பது ஒன்று இல்லை' என்று குடிலன் தனக்குள் சிந்தித்தான்.

விளக்கவுரை : புரவலன் - அரசன்; புரத்தலில் (காத்தலில்) வல்லவன். கிளைஞர் - உறவினர். புரிசை - மதில், கோட்டை. வெருளுவர் - நடுங்குவர். **கருவியும் காலமும் அறியில் அரியதென் :** வினை செய்யுங்கால் அதற்கு வேண்டிய சேனை, பொருள் முதலியன கருவிகள் எனப்படும். வினை செய்யத் தொடங்குவதற்கு ஏற்ற சமயமே காலம் என்று ஈண்டுக் குறிப்பிடப் பெற்றது. கருவியையும் காலத்தையும் தெளிய அறிந்தவனுக்கு அரியது ஒன்றும் இல்லை என்று எண்ணினன் குடிலன்.

"கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்ட தமைச்சு"

என்னும் திருக்குறட்பா ஈண்டு ஒப்பு நோக்குதற்குரியது.

பலதேவன் மனோன்மணியிடம் நெருங்கிப் பழகுமாறு செய்வோம்

"ஆ! ஆ!!...............................கூடா" (17—25)

ஆ! ஆ!——,
அயர்த்தோம் - மறந்தோம்
அயர்த்தோம் ——,
மனோன்மணி ——,
மயக்கம் கொண்டதை ——,
முற்றும் அயர்த்தோம் - முழுவதும் மறந்தோம்
ஆ! ஆ!——,
ஆயிழை - ஆராய்ந்தெடுக்கப் பெற்ற அணிகலன்களை அணிந்த மனோன்மணி
ஒருவனைக் கண்டு - ஆடவன் ஒருவனை நேரில் கண்டு
காமம் கொண்டவள் அல்லள் - காமம் கொள்ளவில்லை.

பருவம் வருதலால் - மணப் பருவம் வந்து விட்டதனால்
பற்றல் - பற்றுதலை (ஆசையை)
விழைந்தனள் - விரும்பினாள்.
அருகு உளது - அருகில் உள்ளது
எட்டியே ஆயினும் - (பயனற்ற) எட்டி மரமேயானாலும்
முல்லை - (மணமிக்க) முல்லையாகிய
படர்கொடி - படர்கின்ற கொடி
படரும் - (அம்மரத்தின் மீது) படர்ந்து சுற்றும்.
பலதேவனை - (நமது) மகனாகிய பலதேவனை
அவளிடம் - அவளிடத்து
பலமுறை ஏவில் - பல முறை அனுப்பினால்
உடன்படல் கூடும் - (இவனை மணக்க அவள்) உடன்படலாம்
கூடில் - நல்வினை வந்து கூடினால்
கூடா என் - கைகூடாதவை எவை? (ஒன்றுமில்லை)

கருத்துரை : 'மனோன்மணி குறிப்பிட்ட ஒருவனைக் கண்டு காமங் கொண்டாள் அல்லள். பருவம் வந்தமையால் அவள் ஒருவனை மணக்க விரும்புகின்றாள். அவளிடம் நமது மகன் பலதேவனைப் பலமுறை அனுப்பினால் அவள் இவன் மீது பற்றுதல் கொள்ளக் கூடும். நல்வினை கூடினால் கைகூடாதது ஒன்றுமில்லை' என்று குடிலன் சொல்லிக் கொண்டான்.

விளக்கவுரை : அயர்த்தல் - மறத்தல். ஆயிழை : ஆராய்ந்து எடுக்கப் பெற்ற அல்லது அழகிய அணிகலன்களை அணிந்த பெண் : ஈண்டு மனோன்மணி. விழைந்தனள் - விரும்பினாள். அருகு - பக்கத்தில். எட்டி : ஒருவகைப் பயனும் அற்ற மரம். பலதேவன் : குடிலனுக்கு மகன். கூடில் - சேர்ந்தால். **அருகுள தெட்டியே யாயினும் முல்லைப் படர்கொடி படரும் :** முல்லைக் கொடி படர்ந்து ஏறுதற்குக் கொழுகொம்பு ஒன்று வேண்டும். கொழுகொம்பு நட்டு வைக்கப்படவில்லையேல், அக்கொடி பக்கத்தில் உள்ள எந்த மரத்தையாவது பற்றிப் படர்ந்து ஏறிவிடும். எட்டி மரத்தை யாரும் விரும்ப மாட்டார். ஆயின், முல்லைக் கொடி அவ்வாறு நினையாது. பக்கத்தில் எந்த மரம் இருந்தாலும் அதைப் பற்றி அக்கொடி படரும். மனோன்மணி தனது மகனாகிய பலதேவனை மணக்க இசைதல் கூடும் என்னும் கருத்துப் பற்றியே குடிலன் இவ்வாறு கூறினான். மனோன்மணி சேரநாட்டு மன்னனாகிய புருடோத்தமனைக் கனவிற் கண்டு காதல் கொண்டாள் என்பதை அவன் உண்மையென்று கொண்டானல்லன். பருவம் வந்துற்ற காரணத்தால் அவள் ஒருவனை மணக்க விரும்புகின்றாள் என்றும், தன்மகனாகிய பலதேவனுடன் அவள் பழகிவந்தால் அவனையே மணத்தல் கூடும் என்றும் குடிலன் கருதியே இவ்வாறு கூறினான். மணமிக்க முல்லைக் கொடி எவ்வாறு எட்டிமரம் என்று பொருட்படுத்தாமல், அஃது அருகில் உள்ள காரணத்தால், அதைப் பற்றிப் படருமோ அதே போல மனோன்மணியும், பக்கத்தில் பழகுபவன் என்னும் காரணத்தால் பலதேவனை மணக்கக் கூடும் என்பதனை இவ்வடிகள் விளக்குகின்றன.

இலக்கணக் குறிப்பு : ஆயிழை: ஈண்டு அன்மொழித் தொகை. படர்கொடி : வினைத் தொகை. அருகுள தெட்டியே யாயினும் முல்லைப் படர்கொடி படரும் : உவமை, பொருள் (உவமேயம்) ஆகிய இரண்டினுள் உவமையை மட்டும் கொண்டு, பொருள் குறிப்பினால் விளங்குமாறு அமைந்திருத்தலால் ஈண்டுப் பிறிதுமொழிதல் அணி உள்ளது.

குடிலனிடம் சேவகன் திருமுகம் கொடுத்தல்

"யாவன் .... நில்லாய்" (26—28)

அஃதோ வரும் - ஆங்கு வருகின்ற
ஒரு சேவகன் —,
யாவன் ——,
(சேவகன் வர)
குடிலேந்திரா - குடிலனாகிய தலைவனே!
ஜய ஜய விஜயீபவ —,
(திருமுகம் கொடுக்க)
நல்லது —,
அப்புறம் நில்லாய் - அப்பால் சென்று நில் (திருமுகத்தைப் பெற்றுக்கொண்ட குடிலன் இவ்வாறு சேவகனிடம் கூறினான்.)

கருத்துரை: சேவகன் ஒருவன் குடிலனை வாழ்த்தியவாறு திருமுகம் ஒன்றினைக் கொடுத்தான். அதனைப் பெற்றுக் கொண்ட குடிலன் அவனை அப்பாற் சென்று நிற்குமாறு கூறினான்.

விளக்கவுரை: குடிலேந்திரன் - குடிலனாகிய தலைவன்: இந்திரன் போலும் தலைமை வாய்ந்த குடிலன் என்பது இதன் பொருள். ஜய - வெற்றி. விஜயீபவ: மிக வெற்றியுடன் நிலைபெற்று வாழ்க. "ஜய ஜய விஜயீ பவ" என்று சேவகர் தம் தலைவரை வாழ்த்துதல் நாடக வழக்கு. **அப்புறம் நில்லாய்:** திருமுகத்தைப் பார்த்து, செய்தியை அறிந்து, விடைகொடுத்தனுப்ப வேண்டியே குடிலன் இவ்வாறு சேவகனிடம் கூறினான்.

இலக்கணக் குறிப்பு: குடிலேந்திரா: சேய்மை விளி. நில்லாய்: ஏவல் ஒருமை வினைமுற்று: நில் - பகுதி; ஆய் - விகுதி.

மனோன்மணி சேரனை மணந்தால் யாது விளையும்?

"ஓ! ஓ! ....சாலவும் ஆகும்" (28—37)

(திருமுகத்தைப் படித்த குடிலன்)
"**ஓ ஓ** ——,
சொல்லியது - (திருமணத்தைப்பற்றிச்) சொல்லியது
ஆர்கொல் - யார்?
சுந்தரனேயாம் - சுந்தர முனிவனேயாவான்
(சேவகன் ஒருபுறம் இருந்து தூங்குகிறான்)
இம்மணம் - இத்திருமணம்
அடுத்தது போலும் - நெருங்கிவிட்டது போலும்!
அவசியம் நடக்கும் - தவறாமல் நடக்கும்
நடக்கின் என் - நடந்தால் என்ன?
நமக்கு அது நன்று - அவளுக்குத் திருமணம் நடைபெறுவது நமக்கு நன்று.
அரசர்க்கு - அரசர்கட்கு
ஆயுள் - வாழ்நாள்
அற்பம் - மிகச் சுருங்கியது
என்று அறைவர் - என்று கூறுவர் அறிஞர்.
பிரியமாம் - விருப்பம் உடைய
தன்மகள் - தன் மகளை
பிரிந்து —,
வெகுநாள் - நெடுநாள்
வாழான் வழுதி - ஜீவக பாண்டியன் உயிர் வாழமாட்டான்.
(பிறகு இவ்வரச பதவி சேரனுக்குக் கிடைக்குமேல்)
வஞ்சி நாட்டார்க்கு - சேர நாட்டார்க்கு
இந்நாட்டுள்ள - இப்பாண்டி நாட்டில் உள்ள
ஜனங்களும் - மக்களும்
தாழார் - பணியார்
அதுவும் நன்று - அதுவும் நமக்கு நன்று.
ஆயினும் - எனினும்
சாலவும் - மிகவும்
கால தாமசம் ஆகும் - காலம் தாழ்க்கும்.

கருத்துரை: குடிலன் திருமுகத்தைப் படித்துப் பார்த்து, திருமணச் செய்தியைச் சொல்லியவர் சுந்தரமுனிவர் என்பதனை உணர்ந்தான். பின்பு அவன் தனக்குள், 'இத்திருமணம் நடத்தலும் நல்லது தான். தனது அருமை மகளைப் பிரிந்து ஜீவகன் நெடுநாள் உயிர்வாழமாட்டான் அன்றோ? அரசர்க்கு வாழ்நாள் சுருங்கியதுதான் என்பர் அறிஞர். அவ்வாறே ஜீவகன் இறந்தால், அதன் பிறகு இப் பாண்டி நாடு சேர நாட்டின் ஆதிக்கத்தின் கீழ் அமையும். ஆயின், பாண்டி நாட்டார் சேர நாட்டார்க்குப் பணிய மறுப்பர். அவ்வாறு நிகழ்வதும் நல்லது தான். எனினும், அவ்வாறு நிகழ நாட்கள் பல ஆகுமே' என்று எண்ணினன்.

விளக்கவுரை: சுந்தரன்: சுந்தரமுனிவர்; ஜீவக வழுதியின் குரு; அவனுக்கு அறவுரை கூறி, நல்வழி காட்டுபவர். அடுத்தது - நெருங்கியது. ஆயுள் - வாழ் நாள். அற்பம் - மிகச் சுருங்கியது. அறைவர் - கூறுவர் பெரியோர் பிரியம் - விருப்பம். மகள்: ஈண்டு மனோன்மணி. வழுதி- பாண்டியன்; ஈண்டு ஜீவகன். வஞ்சி நாடு - சேரநாடு: சேர நாட்டின் தலை நகரம் வஞ்சியே யாதலால் சேர நாட்டிற்கு இப் பெயர் வந்தது. தாழ்தல் - பணிதல். சால - மிகவும். **அரசர்க்கு ஆயுள் அற்பம் என்று அறைவர்:** அரசர்களுக்கு வாழ்நாள் மிகவும் சுருங்கியது என்பர் அறிஞர். ஏன்? ஓர் அரசனுக்குப் பகைவர்களாலும், கீழ் அறுக்கும் அமைச்சர்களாலும், உட் பகையினாலும், பொறுமை கொண்டோராலும் எந்நேரத்திலும் இறப்பு நேரிடுதல் கூடும். அதுபற்றியே அறிஞர்கள் அவ்வாறு கூறியுள்ளனர். **வஞ்சி நாட்டார்க்குத் தாழார் இந்நாட்டுள்ள ஜனங்களும் அதுவும் நன்றே:** 'மனோன்மணிக்குத் திருமணம் நடைபெற்றபின், அவள் தன் கணவனுடன் சேர நாட்டுக்குச் சென்று விடுவாள். தனது ஒரே மகளாகிய மனோன்மணியைப் பிரிந்து பாண்டியனால் நெடுநாள் வாழ முடியாது. பிரிவுத் துயரால் அவன் இறந்து போய் விடுவான். அப்பொழுது பாண்டிய நாடு சேர நாட்டினரின் ஆதிக்கத்தின்கீழ் வரும். அவ்வாறு வந்தால் பாண்டி நாட்டு மக்கள் சேர நாட்டார்க்கு அடங்கி நடக்க மாட்டார்கள். பாண்டி மக்கள் கலகம் செய்வர். அவ்வாறு கலகம் செய்தலும் நல்லதே. ஏன்? கலகத்தின் பயனாக நமக்கு அரச பதவி கிடைக்கக் கூடும் அல்லவா?' என்று எண்ணிக் குடிலன் இவ்வாறு கூறினன்.

இலக்கணக் குறிப்பு: ஆர் கொல்: 'கொல்' என்பது ஈண்டு ஐயப் பொருளில் வந்த இடைச்சொல். போலும்: 'போல்' என்பது ஈண்டு ஒப்பில்போலி. நாட்டார்: ஈண்டு **வினையாலணையும் பெயர்.** சாலவும்: 'சால' என்பது உரிச்சொல்.

குடிலன் வேறொரு தந்திரம் நினைத்தல்

"வேறொரு..........போனது" (38, 39)

வேறொரு தந்திரம் ——,	**மாறன் மாண்டான்** - பாண்டியன் இறந்தான்
வேண்டும் - செய்ய வேண்டும் (யோசித்து)	**மன்றலும்** - திருமணமும்
ஆ! ஆ ——	**போனது** - நின்றது (இவற்றைச் செய்ய நினைத்தான் குடிலன்.)

கருத்துரை: வேறொரு தந்திரம் செய்ய நினைத்தான் குடிலன். அவ்வமயம் அவனுக்கொரு கருத்து தோன்றியது. பாண்டியன் இறக்குமாறும் திருமணம் நிற்குமாறும் ஒரு தந்திரம் செய்யவேண்டும் என்று அவன் நினைத்தான்.

விளக்கவுரை: மாறன் - பாண்டியன். மன்றல் - திருமணம். போனது - நின்றது. **மாறன் மாண்டான் மன்றலும் போனது:** ஒரே கல்லில் இரண்டு மாங்கனிகளை வீழ்த்தப் பார்த்தான் குடிலன். தான் அரசனாக வேண்டும் என்பதும் தன் மகன் பலதேவனுக்கு மனோன்மணியை மணம் முடித்து வைக்கவேண்டும் என்பதும், அவன் விருப்பங்கள். இவ்விரண்டும் நடைபெறுதற்கேற்ற தந்திரம் ஒன்றைச் செய்ய நினைத்தான் குடிலன். ஜீவக வழுதி இறந்துபட்டுத் திருமணமும் நின்று விடுமாறு செய்தால் அவனுடைய விருப்பங்கள் இரண்டும் நிறைவேறிவிடும். எனவே, அவ்விரண்டும் நடைபெறுதற்கேற்ற சூழ்ச்சி ஒன்றினைச் செய்யவேண்டும் என்று குடிலன் நினைத்த முடிவே ஈண்டுக் கூறப்பட்டது.

இலக்கணக் குறிப்பு: மாண்டான், போனது - விரைவு குறித்து வந்த கால வழுவமைதி. 'மாண்டான்' என்பதில் 'மாள்' பகுதி.

சேரனைப் படையெடுத்து வரச் செய்தல் நன்று என்று குடிலன் நினைத்தல்

"சேரன் ....எலாம்" (40—46)

சேரன் - சேர மன்னனாகிய புருடோத்தமன்
இறுமாப்புடைய - கர்வம் கொண்ட
ஓர் வீரன் ஆம் - ஒரு வீரன் ஆவான்
என - என்று
பலரும் அறைவர் - பலரும் கூறுவர்
அதனால் ——,
நாம் அவன் பால் - நாம் அவனிடத்தில்
விடும் தூதுவர் - ஏவுகின்ற தூதுவர்
நலம் போல் - நன்மை செய்பவன் போல் நடித்து
மெள்ள - மெதுவாக
அவன்தன் செருக்கினை - அச்சேரனது கர்வத்தை (சினத்தை)
கிள்ளின் - தூண்டிவிட்டால்
படை கொடு - படையைக் கொண்டு
வருவன் - போருக்கு வருவான்.
திண்ணம் - இஃது உறுதி
அப்போது - அவ்வாறு போர் எழுங்கால்
பாண்டியன் அடைவது - பாண்டியன் எந்நிலையை அடைவான் என்பதனை
யாம் அறிவம் . நாம் அறிவோம்.
போர் வந்திடில் - போர் வருமானால்
எலாம் - எல்லாம்
இவண் - இவ்விடத்தில்
நேர் வந்திடும் - நன்கு நடந்து விடும்.

கருத்துரை: குடிலன், 'புருடோத்தமன் செருக்குடையவன் என்று கூறுவர் பலர். எனவே, திருமணம் பேச அனுப்புதல் போல் ஒரு தூதுவனை நாம் ஏவுவோம்; நயமாகப் பேசச் செய்வோம்; மெல்ல அவனது சினத்தினைத் தூண்டச் செய்வோம். இவ்வாறு செய்தால் புருடோத்தமன் படையெடுத்து வருவான். போர்வரின் அப்பொழுது பாண்டியன் எந்நிலையை அடைவான் என்பதனை நாம் அறிவோம். போர் வந்தால் யாவும் சரியாகி விடும்' என்று ஒரு தந்திரத்தை நினைத்தான்.

விளக்கவுரை: சேரன்: ஈண்டுப் புருடோத்தமன். இறுமாப்பு - செருக்கு, கர்வம். அறைவர் - கூறுவர். நலம் போல் - நன்மை செய்பவர் போல். செருக்கு: ஈண்டுச் சினம். கிள்ளுதல் - தூண்டுதல். திண்ணம் - உறுதி. இவண் - இவ்விடம். **நலம் போல் மெள்ள அவன் தன் செருக்கினைக் கிள்ளில்:** ஏவப் பெறுகின்ற தூதுவன், புருடோத்தமனுக்கு நல்லுரை கூறுபவன் போல் நடித்து அவனது சினத்தினைத் தூண்டுமாறு செய்ய வேண்டும் என்பது குடிலனது நினைவு. அவ்வாறு செய்தால் புரு

டோத்தமன் படை எடுத்து வருவான் என்றும், அவனுடன் பாண்டியன் போர் செய்யும் பொழுது ஏதேனும் ஒரு சூழ்ச்சியால் பாண்டியனைக் கொன்றுவிடலாம் என்றும் குடிலன் கனக் கண்டு கொண்டிருந்தான். குடிலன் செய்ய நினைத்த சூழ்ச்சியினை இவ்வடிகள் ஓரளவு குறிப்பிடுகின்றன. **பாண்டியன் அடைவது அப்போது அறிவம்:** குடிலன் பாண்டியனைக் கொல்வதற்கேற்ற வாய்ப்பினை எதிர் நோக்கி இருந்தான். போர் ஒன்று நிகழ்ந்தால் பாண்டியனை ஏதேனும் ஒரு சூழ்ச்சியினால் கொன்று விடலாம் என்று அவன் நினைத்திருந்தான். இக்கருத்தினை மனத்திற் கொண்டே குடிலன் இவ்வாறு கூறினான். **போர் வந்திடில் இவண் நேர் வந்திடுமெலாம்:** இஃது ஒரு பழமொழி. 'கலகம் பிறந்தால் நேர்மை கிடைக்கும்' என்பது இதன் பொருள்.

அரச வமிச வரிசை ஓர் ஒழுங்கைப் பின்பற்றி இராது

"யார் இற................................. இருக்கும்." (47–50)

(போர் ஒன்று நிகழ்ந்தால்)
யார் இறவார்கள் - யார் இறக்கமாட்டார்கள்?
யார் அறிவார்கள் - என்ன நடக்கும் என்பதனை அறிவார் யார்?
முடி - அரச பதவி
தன் அடி விழில் - தானாகவே தன்னைச் சேர்ந்தால்
யார் எடுத்து அணியார் - ஏற்றுக் கொள்ளாதவன் யாவன்?
அரச வமிசக் கிரமம் - அரச மரபினது வரிசையை
ஓரில் - ஆராய்ந்து பார்த்தால்
இப்படியே - இந்த விதமாகவே
முதல் உற்பவம் - முதல் தோற்றம்
இருக்கும் ——.

கருத்துரை: குடிலன், 'போர் நடந்தால் இறவாதவர் யார்? அரச பதவி தன்னை நாடி வந்தால் வெறுப்பவன் உளனோ? அரச வமிசங்கள் யாவும் இவ்வாறே முதற்கண் தோன்றியுள்ளன' என்று நினைத்தான்.

விளக்கவுரை: கிரமம் - வரிசை. உற்பவம் - தோற்றம். **யார் இறவார்கள்? யார் அறிவார்கள்?** போரில் எத்தகையோரும் இறந்து படுதல் கூடும் என்றும், அதனை ஒருவரும் உணரமாட்டார்கள் என்றும் குடிலன் கூறினான். பாண்டியனைப் போர்க்களத்தில் வஞ்சனையாகக் கொலை புரியவேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டிருந்தான் குடிலன் என்னும் கருத்தினை, இந்நூலாசிரியர் இவ்வடியின் வாயிலாக நுட்பமாய் வெளிப்படுத்தினர். **முடி தன் அடிவிழின் யார் எடுத்து அணியார்?:** 'முடி' என்னும் சொல் அரச பதவியையும், 'அடிவிழில்' என்னும் சொற்றொடர் தானாக வந்து சேர்தலையும், 'அணியார்' என்னும் சொல் அரச பதவியை ஏற்றுக் கொள்ளுதலையும் ஈண்டுக் குறிக்கும். அரச குடும்பங்களில் எதிர்பாராத நிகழ்ச்சிகள் பல உண்டாகும். அரசனுக்கும் ஏனையோருக்கும் உள்ள பிணக்காலும் பகையாலும் போர் நேரிடின், அப்போரின் முடிவு யாதாகும் என்று சொல்ல முடியாது. அரசனைச் சூழ்ந்திருப்போர்களில் எவனேனும் ஒருவனுக்கு எதிர்பாராத விதத்தில் அத்தகைய போரினால் அரச பதவி கிட்டிவிடுவதும் உண்டு. அவ்வாறு அரச பதவி தானாகக் கிட்டினால் அவன் வேண்டாம் என்று சொல்வனோ? இவற்றைக் கருத்திற்கொண்டே குடிலன் இவ்வாறு கூறினான். சூழ்நிலையையும், வாய்ப்பையும் பயன்படுத்திக்கொண்டு அரசனாக ஆகிவிடலாம் என்று குடிலன் கொண்டிருந்த கருத்தினை இவ்வடி குறிப்பிடுகிறது. **அரச வமிசக் கிரமம் ஓரில் இப்படியே முதல் உற்பவம் இருக்கும்:** அரச மரபின் தோற்றத்தினை உறுதியாகக் கூற முடியாது. போர், குழப்பம், கலகம் முதலியவற்றின் விளைவாக எதிர்பாராத விதத்தில் ஒருவனுக்கு அரச

பதவி கிடைத்து விடும். உலகத்தில் தோன்றிய அரச மரபின் வரிசைகள் யாவும் இவ்வாறே அமைந்துள்ளன. இச்செய்தியையே இவ்வடிகள் குறிப்பிடுகின்றன.

இலக்கணக் குறிப்பு : உற்பவம் : வடசொல்.

அரச மரபின் தோற்றத்தினை யாரும் ஆராயமாட்டார்

"சில தலை.........................சுடு ! சுடு !!" (51—55)

சில தலைமுறையா - சில தலை முறைகள் முடிந்து
பல வருடம் செலில் - பல ஆண்டுகள் கழிந்தால்
இந்துவில் - சந்திரனிடத்திலிருந்தும்
இரவியில் - சூரியனிடத்திலிருந்தும்
வந்தோர் என - தோன்றியவர்கள் என்று
மூடவுலகம் மொழியும் - அறியாமை நிலைபெற்ற இவ்வுலகம் கூறும்.
ஆதியை - ஒரு மரபின் தோற்றத்தை
நாடுவர் யார் - யார் ஆராய்வர்?
நன்று நன்று இது - இது மிக நன்று !
தோடம் - (இத்தகைய ஆராய்ச்சியே) குற்றமாகும்.
சுடு ! சுடு !! - அந்நினைவையே கொளுத்து (என்று சிந்தித்தான் குடிலன்).

கருத்துரை : ஒரு அரச வமிசம் சில தலைமுறைகள் ஆண்டு வந்தால் அவ்வமிசத்தவரைச் சந்திர குலத்தவர் எனவும், சூரிய குலத்தவர் எனவும் இம்மூட வுலகம் கூறும் என்றும், அவ்வாறு ஒரு மரபின் தோற்றத்தினை ஆராய்வது தவறு என்றும் குடிலன் நினைத்தான்.

விளக்கவுரை : இந்து - சந்திரன். இரவி - சூரியன். ஆதி - தோற்றம். தோடம் - குற்றம். **விந்துஇல் இரவியில் வந்தோர் எனவே மூடவுலகம் மொழியும் :** சந்திர வமிசத்தவர் என்றும், சூரிய வமிசத்தவர் என்றும் அரசர்களை இவ்வுலகோர் குறிப்பிடுவது அவர்களது அறியாமையையே காட்டும் என்பது குடிலனது கருத்து. பாண்டியர் சந்திர குலத்தவர் என்றும், சோழர் சூரிய குலத்தவரென்றும் குறிப்பிடப்படுதலை நினைவிற்கொண்டே, குடிலன் இவ்வாறு கூறினான் என்று ஆசிரியர் கூறுகின்றார்.

இலக்கணக் குறிப்பு : உலகம் : இடவாகு பெயர். 'தோஷம்' என்னும் வடசொல் 'தோடம்' என்று திரிந்து நின்றுள்ளது.

தீயது நல்லது என்பவை வெறு மொழிகள்

"தீது...எப்படி வரும்?" (56—64)

தீது நன்று என - தீயதென்றும் நல்லதென்றும்
ஓதுவ எல்லாம் - சொல்லப்படுகின்றவை எல்லாம்
அறியார்க்கு - அறிவில்லாதவர்களுக்கு
அறையும் - சொல்லப்படுகின்ற
வெறுமொழி அலவோ? - பயனற்ற சொற்கள் அல்லவோ? (அவை)
பாச்சி பாச்சி, என்று - தாய்ப்பால் வேண்டும் வேண்டும் என்று
அழும் பாலர்க்கு - அழும் குழந்தைக்கு
பூச்சி பூச்சி என்பது போலாம் - பூச்சி பூச்சி என்று சொல்லி அச்சுறுத்துதலைப் போன்றவை.
மன்னரை - அரசரை
உலகம் - உலகத்து மக்கள்

வணங்கவும் - வணங்கும்படி செய்யவும்
பார்ப்பார்க்கு ———,
அன்னம் கிடைக்கவும் - உணவு கிடைப்பதற்காகவும்
அங்ஙனம் அறைந்து - அவ்வாறு சொல்லி
மதி இலாரை - அறிவில்லாதவரை
வஞ்சமாய் மயக்குவர் - வஞ்சனையால் மயக்குவார் பலர்.
அதனால் நமக்கு என்? - அதைப் பற்றி நமக்கு என்ன?
அப்படி நினைக்கில் - அவ்வாறு அரச குலத்தவர் உயர்ந்தோர் என்று நினைத்தால்
இதுவரை - இதுவரையில்
இத்தனை நன்மை - இவ்வளவு நன்மைகள்
எப்படி வரும் - நமக்கு எப்படி வந்திருக்கும்?

கருத்துரை: குடிலன், 'இது தீயது, இது நல்லது என்று கூறுபவை அறிவில்லாதவர்களுக்குக் கூறும் வெறு மொழிகள். தாய்ப்பால் வேண்டுமென்று அழும் குழந்தையைப் பூச்சி காட்டி, அச்சுறுத்துவதைப் போன்றன அவை. அரசர்க்கு உயர்வும், பார்ப்பார்க்கு உணவும் கிடைக்கும் பொருட்டே அவை கூறப்பட்டன. இவற்றை நாம் நினைத்துக் கொண்டிருந்தால் நமக்கு நன்மை வராது' என்று நினைத்தான்.

விளக்கவுரை: அறையும் - சொல்லுகின்ற. வெறுமொழி - பயனற்ற சொற்கள். பாச்சி - தாய்ப்பால். மதியிலார் - அறிவு இல்லாதவர். **பாச்சி பாச்சி என்று அழும் பாலர்க்குப் பூச்சி பூச்சி என்பது போலாம்:** அரசர்க்குத் துன்பம் இழைத்தல் தீயதென்றும், அரசரை வணங்குதல் நல்லதென்றும் உலகோர் கூறுதலை வெறுத்து இவ்வடிகளைக் கூறுகின்றான் குடிலன். தீதென்றும் நன்றென்றும் உலகில் இல்லை என்பது அவன் கருத்து. அக்கருத்தினை விளக்கக் குடிலன் இவ்வுவமையைக் கூறினான் என்று ஆசிரியர் பாடியுள்ளார். தாய்ப்பால் வேண்டும் வேண்டும் என்று அழுகின்ற குழந்தையைப் பூச்சி காட்டி அச்சுறுத்துவது போல் அவை உள்ளன என்று கருதினான் குடிலன். தாய்ப்பால் வேண்டுமென்று அழுகிற குழந்தையை அச்சுறுத்தி ஒருவாறு அதன் அழுகையைத் தணிக்கலாம். ஆனால், அதன் பசியைப் போக்க முடியுமோ? அதுபோலவே, அரசனாக வர வேண்டும் என்னும் தன் ஆர்வத்தினை அச்சம் காட்டி அடக்கிவிட முடியாது என்று குடிலன் தனக்குத் தானே உணர்த்திக் கொள்கின்றான்.

இலக்கணக் குறிப்பு: வெறுமொழி: **பண்புத்தொகை.** பாச்சி பாச்சி, பூச்சி பூச்சி: **அடுக்குத் தொடர்கள்.** இலார்: ஈண்டு **வினையாலணையும் பெயர்.**

குடிலனுடைய உறுதியும் நடிப்பும்

"பார்க்குதும்...............................பண்ணுவோம்" (65–73)

பார்க்குதும் ஒருகை - ஒருகை பார்ப்போம்;
சுந்தரன் - சுந்தர முனிவருடைய
யந்திரம் - யந்திரமானது
காக்கும் வகையும் - ஜீவகனைக் காக்கும் விதத்தையும்
காண்போம் - பார்ப்போம்;
சுவான சக்கரம் - நாய் கடிக்காமல் தடுக்கும் (சுவான சக்கரம்)
குக்கனை - நாயை
தடுத்திடும் வகை - தடுக்கும் வகையில்தான்
யந்திர தந்திரம் இருப்பது - யந்திர தந்திரம் அமைந்துள்ளது
என்று அறியான் - என்று அரசன் அறிய மாட்டான்.
பித்தன் மெத்தவும் - அரசன் பெரிதும் அறிவு கலங்கியவன்.

நமக்கு இனி - நமக்கு இனிமேல்
இதுவே - (தூதனை அனுப்பிச் சேரனைப் படையெடுத்து வருமாறு செய்கின்ற) இதுவே
உத்தம உபாயம் - சிறந்த தந்திரம் ஆகும்.
ஓகோ சேவக - 'ஓகோ! சேவக!
இந்த மண உரை கேட்டு - இந்த மணச் செய்தியைக் கேட்டு
சித்தம் - மனம்
மெத்தக் களித்தோம் - மிக மகிழ்ந்தோம்'
என - என்று சேவகனிடம் கூறி விடுத்து,
மன்னன் துணிய - அரசன் உண்மை என்று நினைக்குமாறு
பாவனை பண்ணுவோம் - நடிப்போம். (என்று முடிவு செய்தான் குடிலன்.)

கருத்துரை: 'ஒருகை பார்ப்போம். சுந்தர முனிவன் அமைத்த இயந்திரம் பாண்டியனைக் காக்குமோ? அவ்வியந்திரம் தனக்குத் துன்பம் வராமல் காத்துவிடும் என்று தன் அறியாமையால் எண்ணிக் கொண்டிருக்கிருன் அரசன். எங்ஙனமாயினும், நாம் தூதுவன் ஒருவனை அனுப்பிச் சேரனைப் படையெடுத்து வருமாறு செய்வது தக்க உபாயமாகும். மணச் செய்தி கேட்டு மகிழ்ந்தோம் என்று சேவகனிடம் செய்தி சொல்லி அனுப்புவதே நல்லது.' என்று முடிவு செய்தான் குடிலன்.

விளக்கவுரை: சுவானம் - நாய். குக்கன் - நாய். பித்தன் - அறிவு கலங்கியவன். சித்தம் - மனம். மெத்த - மிகவும். பாவனை பண்ணுதல் - நடித்தல். **சுந்தரன் யந்திரம் காக்கும் வகையும் காண்போம்:** மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த ஜீவகனது மனத்தினை மாற்றித் திருநெல்வேலிக்கு வருமாறு செய்து, கோட்டையும் கட்டுவித்து, அரசன் தன்னுடைய ஆதிக்கத்திலிருக்குமாறு செய்தான் குடிலன். குடிலனது வஞ்ச நெஞ்சினை உணர்ந்தார் சுந்தர முனிவர். அரசனைக் காக்க வேண்டுமென்று உறுதி பூண்டிருந்த அவர், திருநெல்வேலிக் கோட்டையின் பக்கத்திலேயே தங்கியிருக்க விரும்பினர். எனவே, அரண்மனையிலேயே ஓர் அறையைத் தனக்கென்று தனியே அவர் பெற்று, அரசனது குடும்பமும் கோட்டை முதலியனவும் நன்கு நிலைபெறத் தாம் பூசைகள் செய்யப் போவதாகவும் கூறினர். அரசன் துன்பமின்றி இன்பமாக வாழும் பொருட்டுச் சுந்தர முனிவர் யந்திரம் ஒன்று அமைக்கின்றார் என்று யாவரும் நினைத்திருந்தனர். இதனையே குடிலன் ஈண்டுக் குறிப்பிட்டான். அந்த யந்திரத்தினல் அரசனைக் காக்க முடியாது என்பது குடிலன் கருத்தாகும். யந்திரமென்பது சிறுசிறு கட்டங்கள், வட்டங்கள் முதலியன அமைத்து மந்திரத்தை உச்சரித்துப் பூசை செய்தல். இத்தகைய யந்திர பூசையால் குறிப்பிட்ட ஒரு பொருளினல் குறிப்பிட்ட ஒருவனுக்குத் தீங்கு வராமற் காக்கலாம் என்று கருதுவர் சிலர். **சுவான சக்கரம் குக்கனைத் தடுத்திடும் வகையே யந்திர தந்திரம் இருப்பதென்று அறியான்:** சுந்தர முனிவர் அமைத்த யந்திர சக்கரம் தனக்குத் தீங்கு வராமல் காக்கும் என்று ஜீவகன் நம்பி இருந்தமையைக் குடிலன் ஈண்டுக் குறிப்பிட்டு இகழ்ந்து சிரிக்கின்றான். அவன், 'சுவான சக்கரம் (சுவானம்-நாய்) ஒன்றை அமைத்துப் பூசித்தால் நாய்க் கடியிலிருந்து தப்ப முடியுமோ? முடியாதன்றே? அதுபோலவே சுந்தர முனிவர் அமைத்த சக்கரம் மன்னனுக்குத் தீங்கு வராமல் தடுக்குமோ? சுந்தர முனிவர் யந்திரம் அமைத்துப் பூசிப்பதாக நடிக்கின்றார். அறிவில்லாதவனாகிய ஜீவகன் அதன் உண்மையை உணராமல் இருக்கின்றான்' என்று கருதி இவ்வாறு கூறினான். சுவான சக்கரம் ஒருவனை நாய்க் கடியிலிருந்து காவாதது போல் சுந்தரனது

யந்திரம் ஜீவகனைக் காவாது என்பது ஈண்டுக் காட்டப்பட்டுள்ள உவமையின் பொருத்தமாகும்.

குடிலன் சேவகனுக்கு மாலை ஈதலும் சேவகனது மகிழ்ச்சியும்

"ஏ ஏ சேவக!.............................நொடியில்" (73—81)

ஏ ஏ சேவக '——,

(சேவகன் எழுந்து வரவே)

இன்று நாம் உற்ற - இன்று நாம் அடைந்த

இவ் இன்பம் போல - இந்த இன்பத்தைப் போல

என்றும் பெற்றிலம் - என்றும் பெற்றதில்லை

இணையறு - ஒப்பில்லாத

மாலை - இந்த மணிமாலையை

இந்தா ——,

தந்தோம் - உனக்குப் பரிசாகக் கொடுத்தோம் (பெற்றுக் கொள்)

விடியுமுன் - நாளைப் பொழுது விடிவதற்கு முன்பாக

மன் அவைக்கு - அரச சபைக்கு

வந்தோம் - வந்துவிடுவேன்

என்று ——,

இயம்பாய் - (அரசனிடம்) சொல்வாய்' (என்று குடிலன் கூற)

(பரிசு பெற்ற சேவகன்)

வள்ளால் - வள்ளலே

வாழ்க ——,

நின் உதாரம் போல் - உனது அருட் பண்பைப் போல்

ஏழுலகு எவற்றினும் - ஏழுலகத்திலெல்லாம்

உண்டோ - உள்ளதோ?

எப்போதும் - எப்பொழுதும்

மங்கலம் வர - நன்மைகள் வரப் பெற்று

வாழ்க ——,

(என்று சேவகன் வாழ்த்த, குடிலன்)

நல்லது ——,

நொடியில் - மிக விரைவில்

விரைந்து செல்வாய் - விரைந்து செல்லுவாய். (என்று சொல்ல, சேவகன் போகிறான்.)

கருத்துரை: 'மணச்செய்தி கேட்டு மனமிக மகிழ்ந்தோம். இச் செய்தியைச் சொல்லிய நீ இம்மாலையைப் பரிசாகப் பெற்றுக்கொள். நாளை விடியற்காலையில் அரச சபைக்கு நான் வருவேன் என்று அரசனிடம் சொல்' என்று குடிலன் சேவகனிடம் கூறி, மாலை ஒன்றை அவனுக்குப் பரிசாகக் கொடுத்தான். மாலையைப் பெற்ற சேவகன் பெருமகிழ்ச்சி கொண்டு குடிலனை வாழ்த்திப் போயினான்.

விளக்கவுரை: உற்ற - அடைந்த. இணை - ஒப்பு. இயம்பு - சொல். மன்னவை - அரச சபை. உதாரம் - அருட்பண்பு.

இலக்கணக் குறிப்பு: அறுமாலை: வினைத்தொகை. வந்தோம்: விரைவுபற்றி வந்த காலவழுவமைதி. வாழ்க: வியங்கோள் வினைமுற்று. வள்ளால்: சேய்மை விளி. 'வள்ளல்' என்னும் சொல் ஈற்றயல் நீண்டு விளி ஏற்றது. உதாரம்: வடசொல்.

தான் செய்ய நினைத்த தந்திரத்தைப் பற்றிக் குடிலன் பலபடியாக யோசித்தல்

"மதியிலி...............எங்குமே" (82-99)

மதியிலி - இந்தச் சேவகன் அறிவில்லாதவன்.

மனிதாது மடமை - மக்களுடைய அறியாமை

என்னே - இருந்தவிதம் என் என்பது!

இதுவும் - யான் பரிசளித்ததையும்

உதாரமாய் - எனது அருட்பண்பிற்கு அறிகுறி என்று
எண்ணினன் - இந்தச் சேவகன் நினைத்து விட்டான்.
இங்ஙனம் - இவ்விதமாக
தருமம் தானம் என்று - தருமமும் தானமும் என்று
உலகு அறியும் - உலகம் முழுவதும் அறியும்படியாகச் செய்யப் படுகின்ற
கருமம் அனைத்தும் - காரியங்கள் எல்லாவற்றையும்
செய்பவன் - செய்கின்றவனுடைய
கருத்தைக் காணில் - உட்கருத்தைக் கூர்ந்து நோக்கினால்
நாணமாம் - வெட்கம் கொள்ளும் தகையதே ஆகும்.
அவர் அவர் - ஒவ்வொருவரும்
தமக்கா - தங்களுக்குள்ளாக
எண்ணிய எண்ணம் - நினைத்த நினைவுகள் எல்லாம்
எய்துவான் - அடைவதற்காகவே
புண்ணியம் போல - போலிப் புண்ணியமாக
பலவும் பண்ணுவர் - பலவற்றைச் செய்வர்.
எல்லாம் - அத்தகைய செய்கைகளைச் செய்தல் எல்லாம்
தம் நயம் கருதி அன்றி - தங்களுடைய நன்மையைக் கருதியே அல்லாமல்
தமைப் போல் - தங்களைப் போல
பின் ஒருவனை - மற்றொருவனை
எணி - நினைத்து
பேணுவர் உளரோ - போற்றுவார் உள்ளாரோ ?
புண்ணியம் (என)-புண்ணியம் என்றும்,
சீவ காருண்ணியம் என - உயிர்களிடத்தில் அருள் காட்டுதல் என்றும்
பல - பலவாறு
பிதற்றுதல் முற்றும் - உளறுதல் யாவும்
பித்தே - அறிவுக் கலக்கத்தின் செயலே ஆகும்.
அலதேல் - அல்லாவிடில் (ஒரு வேளை)
யாத்திரை போன - யாத்திரை சென்ற
நூற்றுவர் - நூறு பேர்களும்
சோறு அடு - சோற்றினைச் சமைத்தற்குரிய
பாத்திரம் தன்னில் - பாத்திரத்தில் (உலையில்)
பங்கு பங்காக - தங்கள் தங்கள் பங்குக்காக
ஒருவரை ஒருவர் ஒளித்து - ஒருவர் மற்றொருவருக்குத் தெரியாமல்
பருமணல் - பெருமணலை
இட்ட கதையாய் - சொரிந்த கதையினைப் போல
இருக்குமோ - (ஏனையோர் செயல்களும்) இருக்குமோ ? (ஆயின்)
அவ்வளவு - அந்த அளவுக்கு
உலகின் - இவ்வுலகத்து மக்களின்
கட்டைச் சிறுமதி - உணர்ச்சியற்ற சிற்றறிவு
எட்டுமோ - செல்லுமோ ?
ஆயினும் - என்றாலும்
அரசனைப் போல் - அரசனைப்போல
பேயர் - பேய்க்குணம் உடையோர்
பெரிய ——,
மேதினி எங்கும் - இவ்வுலகு முழுவதிலும்
இலை - இல்லை
(என்று பலபடியாக யோசித்தான் குடிலன்.)

கருத்துரை : 'நல்லவன் போல் நடித்து நான் பரிசு கொடுத்தேன். இந்தச் சேவகனோ, அதை அருட்பண்பு என்று எண்ணிக் கொண்டான். இவ்வுலகில் தான தருமம் செய்வோருடைய உட்கருத்து இவ்விதமாகவே இருக்கும். ஒவ்வொருவரும் ஒவ்வொரு பயனை எதிர்பார்த்துப் போலிப் புண்ணியம் செய்கின்றனர். அவை யாவும் தந்நயம் கருதியேயாகும். தன்னைப் போல் பிறரை நினைப்பவனும் உலகில் உள்ளானோ? புண்ணியம், உயிர்

களிடத்து அருள் என்பன யாவும் பித்தர்களுடைய கூற்றே. என்னைப் போலவே பிறரும் இத்தகைய கெட்ட நினைவுடன் நடந்தால் என் செய்வது ? ஆயின், அவ்வளவு கூரிய அறிவு மக்களுக்கு இல்லை. எப்படியிருப்பினும் அரசனைப் போன்ற பேய்க்குணம் உடையோர் உலகில் இல்லை" என்று குடிலன் பலபடியாகத் தான் செய்யக் கருதிய தந்திரத்தைப்பற்றி யோசித்தான்.

விளக்கவுரை : மதி - அறிவு. இலி - இல்லாதவன். மடமை - அறியாமை. கருமம் - செயல். எய்துவான் - அடைவதற்காக. பேணுவர் - போற்றுபவர். சிவகாருண்ணியம் - உயிர்களிடத்து அருள். அடுதல் - சமைத்தல். கட்டை - ஈண்டு மரக்கட்டை. சிறுமதி - சிற்றறிவு. பேயர் - பேய்க்குணம் உடையவர். மேதினி - உலகம். **எல்லாம் தந்நயம் கருதி அன்றித் தமைப்போல் பின்னொருவரைப் பேணுவர் உளரோ :** 'இவ்வுலகிலே தான தருமம் செய்கின்றவர்களுடைய உட்கருத்து வேறு விதமாக இருக்கும். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் காரியம் முடியும் பொருட்டுப் போலிப் புண்ணியம் செய்கின்றனர். எல்லாம் தந்நயம் கருதியேயல்லாமல், பிறன் ஒருவனைத் தம்மைப்போல் நினைத்துப் போற்றுபவர் இருக்கின்றார்களோ ?' என்று நினைத்தான் குடிலன். தீய நினைவு உடையவனுக்கு, உலகில் காணப்படும் நற்செயல்களும் தீயன போலவே தோன்றும் என்பர் அறிஞர். அதற்கேற்பத் தான் நடிப்பதைப் போலப் பிறரும் நடித்தல் கூடும் என்றும், தன்னைப்போல் பிறரையும் நினைப்பவன் உலகில் இரான் என்றும் கருதியே, குடிலன் இவ்வாறு கூறிக்கொண்டான். **யாத்திரை போன நூற்றுவர் சோறடு பாத்திரந் தன்னிற் பங்கு பங்காக ஒருவரை யொருவர் ஒளித்துப் பருமணல் இட்ட கதையாய் இருக்குமோ ? :** இவ்வடிகள் நம் நாட்டில் வழங்கப்பட்டு வந்த ஒரு கதையைக் குறிப்பிடுகிறது. அக்கதை வருமாறு :—சிலர் ஒன்றுகூடி யாத்திரை சென்றனர். ஓர் ஊரை அடைந்தவுடன் அவர்கள் யாவரும் ஒன்றாகக் கூடிச் சோறு பொங்குதல் சிக்கனமாகும் என்று எண்ணினர். ஒவ்வொருவருடைய பங்குக்கும் உரிய அரிசியை ஒவ்வொருவரும் தனித்தனியே உலையில் போட்டுவிடுதல் வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. மற்றவர்கள் உலையில் அரிசியைப் போட்டிருப்பர் என்றும், தன் பங்குக்கு அரிசியைப் போடுவதுபோல் பாசாங்கு செய்து மணலை இட்டுவிட்டால் அதனை மற்றவர் உணரமாட்டார்கள் என்றும், செலவில்லாமல் சோறு தனக்குக் கிடைக்கும் என்றும் ஒருவன் நினைத்து, உலையில் மணலைப் போட்டுவிட்டான். ஆ! என்னே வியப்பு! அவன் நினைத்தது போலவே பிறரும் நினைத்து, ஒவ்வொருவரும் உலையில் பிறருக்குத் தெரியாமல் மணலைப் பெய்திருந்தனர். அதன் விளைவு யாது? உலையில் மணலே இருந்தது. இக்கதையில் வரும் யாத்திரைக்காரர்கள் நடந்ததைப் போலவே உலகில் யாவரும் நடப்பார்களோ என்றும், தன்னைப் போலவே வஞ்சனை தங்கிய நெஞ்சுடையவர்களாக இருப்பாரோ என்றும் நினைத்து அஞ்சினன் குடிலன். **அவ்வளவு எட்டுமோ? உலகின் கட்டைச் சிறுமதி :** குடிலனுக்குத் தோன்றிய ஐயம், தன்னைப்போலப் பிறரும் வஞ்சனையாக நடப்பார்களோ என்பதாகும். ஆயின், விரைவில் அவ்வையம் தெளிந்தது. உலகில் தானே நுண்ணறிவுடையவன் என்றும், ஏனையோர் மழுங்கிய அறிவுடையவர் என்றும் அவன் நினைத்தான். அதுபற்றியே 'உலகத்து மக்களின் உணர்ச்சியற்ற மரக்கட்டை போன்ற சிற்றறிவுக்கு இத்தகைய நுண்மை எட்டுமோ ?' என்று அவன் பொருள்படுமாறு கூறினன்.

"பாலோ டாயினும் காலம் அறிந்துண்." —ஔவை.

இலக்கணக் குறிப்பு : செய்பவன் : ஈண்டு வினையாலணையும் பெயர். எய்துவான் : 'வான்' ஈற்று எதிர்கால வினையெச்சம். தம் + நயம் = தந்நயம். உளரோ : ஈண்டு ஓகார வினு எதிர்மறை. அடுபாத்திரம் : வினைத்தொகை. பருமணல் : பண்புத்தொகை. இருக்குமோ : ஈண்டு ஓகாரம் ஐயப்பொருளது.

இக்களத்தில் உள்ள அடிகளில் 77 வரிமுடிய உள்ள பகுதி இணைக் குறள் ஆசிரியப்பா ஆகும். 78 வரி முதல் உள்ள பகுதி நேரிசை ஆசிரியப்பா ஆகும்.

ஆசிரியப்பாவின் இலக்கணம் : (நால்வகைப் பாக்களுள் ஒன்று ஆசிரியப்பா.) ஆசிரியப்பா அகவல் ஓசை பெறும்; அளவடி (நாற்சீரடி) பெற்று வரும். இப்பாவில் இயற்சீர் பெரும்பாலும் வரும்; நேரொன்று ஆசிரியத்தளையும், நிரையொன்று ஆசிரியத்தளையும் பெரும்பாலும் வரும். இப்பா நேரிசை ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா, அடிமறிமண்டில ஆசிரியப்பா என்று நால்வகைப்படும்.

இணைக்குறள் ஆசிரியப்பா : இது, முதலடியும் ஈற்றடியும் நாற் சீராய், இடையடிகள் இருசீரானும் முச்சீரானும் வரும்.

நேரிசை ஆசிரியப்பா : இஃது, ஈற்று அயலடி முச்சீராய், ஏனை அடிகள் நாற்சீராய் நிற்கும்.

நல்லொழுக்கப் பயிற்சி

குடிலன் என்னும் சொல்லே வஞ்ச நெஞ்சுடையவன் என்பதைப் புலப்படுத்தும். தனது பெயருக்கு ஏற்பவே அவன் நடந்தான் ; அரசனைக் கொன்று, அரசாட்சியைக் கைப்பற்ற எண்ணினன். அது மட்டுமோ? அவன் தான் ஒருவனே நுண்ணறிவு வாய்ந்தவன் என்றும், உலகில் உள்ளோர் யாவரும் அறிவு இல்லாதவர் என்றும் எண்ணினன் ; தான் எண்ணிய வாறே யாவும் நடக்கும் என்று கனுக் கண்டான். ஆயின் முடிவு யாது ? அவனே கேட்டினை அடைந்தான். ஏன் ? அற வழியை விடுத்து மறவழியை நாடினன் அன்றோ ? நல்லன வற்றை அகற்றி, அல்லனவற்றை நினைத்தான் அன்றோ ? தக்கனவற்றைத் தள்ளித் தகாதனவற்றைச் செய்ய முற்பட் டான் அன்றோ ?

உண்மை என்றும் வெல்லும். அதற்கு அழிவே இல்லை. அறவழியே நேரான வழி. தீய எண்ணங்கள் ஒரு மனிதனை அரித்து அழித்துவிடும். எனவே, நல்லனவற்றையே நினையுங் கள்; பேசுங்கள் ; செய்யுங்கள் ; பிறர் பொருளை விரும்பாதீர்கள். இவ்வாறு செய்தால் சமூகத்தில் நீங்கள் உயர்ந்த நிலையை அடைய முடியும்.

5. ஆசிய ஜோதி

பெயர்க் காரணம் : நாம் வாழும் ஆசியாக் கண்டத்தின் ஒளியாக விளங்கியவர் புத்தர் பிரான். அவருடைய வாழ்க்கை வரலாற்றை இந்நூல் கூறுகின்றது. எட்வின் ஆர்னல்டு என்னும் ஆங்கிலப் புலவர் புத்தர்பிரானது வாழ்க்கையை 'The Light Of Asia' என்னும் நூலில் விளங்க எழுதியுள்ளார். அந்நூலில் உள்ள வரலாற்றைத் தழுவி எழுந்த நூல் இது.

ஆசிரியரைப்பற்றிய செய்திகள்

பெயர் : கவிமணி சி. தேசிக விநாயகம் பிள்ளையவர்கள்.

பிறந்த ஊர் : திருவாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த சுசிந்திரத்தை அடுத்த தேரூர் என்னும் சிற்றூர்.

பிறந்த ஆண்டு : 1876.

தந்தையார் : சிவதாணுப் பிள்ளை.

தாயார் : ஆதிலட்சுமி அம்மாள்.

அலுவல் பார்த்த நிலையங்கள் : கோட்டாறு இடைநிலைப் பள்ளி, நாகர்கோயில் ஆசிரியப் பயிற்சிப் பள்ளி, திருவனந்தபுரம் மகளிர் ஆசிரியைப் பள்ளி, திருவனந்தபுரத்தில் மகளிர்க்குரிய அரசர் கல்லூரி.

பூதவுடல் மறைந்த ஆண்டு : 1954.

இயற்றிய வேறு நூல்கள் : மலரும் மாலையும், நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம்.

ஆசிரியரது கவித்திறம் : இப்புலவர்பிரானர் தம் உள்ளம் கனிந்த பொழுதெல்லாம் உவந்து உவந்து பாடினர். தம் கண்ணுற் கண்டு சுவைத்து மகிழ்ந்த இயற்கை அன்னையின் எழிலுருவங்களை எல்லாம் சொல்லோவியங்களாகத் தீட்டிக் காட்டினர். இவரது செய்யுள் நடை எளிமையும் ஏற்றமும், ஆழமும் அகலமும் உடையன. கற்றோரும் மற்றோரும், முதலாளியும் பாட்டாளியும், செல்வனும் வறிஞனும், முதியரும் இளையரும் விரும்பிக் கற்குமாறு இவருடைய பாடல்கள் அமைந்துள்ளன.

புத்தர் அவதாரம்

அசிதமுனி உரைத்தல்

உலகத்து மக்கள் உய்யுமாறு புத்தர்பிரான் இம்மண்ணுலகில் பிறந்த காலையில் ஆங்கு வந்த அசிதமுனி என்பவர் புத்தர்பிரானுடைய தந்தையாகிய சுத்தோதனரையும், தாயாகிய மாயாதேவியையும் பார்த்து உரைத்தவை நம் பாடப் பகுதியில் அமைந்துள்ளன.

குழந்தையாகக் கிடந்த புத்தர்பிரானை அசிதமுனிவர் போற்றுதல் (1—13)

மாமுனி - பெருமை பொருந்திய அசித முனிவர் **எழுந்து வணங்கி நின்று**———,	**தாயே பொறு பொறு பொறு** - (குழந்தையைத் தூக்கச் சென்ற தாயை) பொறு பொறு என்று தடுத்து (பிறகு குழந்தையைப் பார்த்து)

"அகந் தூய்மை வாய்மையால் காணப்படும்." — வள்ளுவர்.

மதலாய் - 'குழந்தையே!
நின் - உன்னுடைய
அடி மலரிணை - அடிகளாகிய தாமரை மலர்களை
தொழுதேன் ———,
அவனே நீயாம் - அம்முழுமுதற் பொருளே நீயாவாய்
ஐயம் அதற்கு இலை - அதற்கு ஐயம் இல்லை.
பகவன் நீயே - முக்கால உணர்ச்சி யுடையவன் நீயே!
பரமன் நீயே - மேலானவன் நீயே!
புனிதன் நீயே - தூய்மை உடையவன் நீயே!
புராணன் நீயே - பழைமையானவன் நீயே!
தருமன் நீயே - தானே அறமானவன் நீயே!
தலைவன் நீயே - எவ்வகைத்தேவர்க்கும் தலைவனாய் இருப்பவன் நீயே!
ஆதி நீயே - முதல்வன் நீயே!
அறவோன் நீயே - அறம் செய்தலையே தன் தொழிலாக உடையவன் நீயே!
ஆயிரம் ஆரத்து - ஆயிரம் மாலைகளை உடைய
ஆழியான் நீயே - தரும சக்கரத்தை உடையவன் நீயே!
உண்மை ஒளியால் - உண்மையான ஒளியினால்
உள் இருள் - மக்களின் மன இருளை
போக்கி - அகற்றி
நன்மை விளக்கும் - நன்மை தருவனவற்றை விளக்கிக் காட்டுகின்ற
ஞாயிறு நீயே - சூரியன் நீயே!
யானும் - நானும்
இன்று ———,
உன் - உன்னுடைய
இணை அடி - இரண்டு திருவடிகளையும்
பணிந்து - வணங்கி
பாரில் - பூமியில்
பிறந்த பயன் எலாம் - யான் பிறந்ததனால் பெறக்கூடிய பயன் எல்லாவற்றையும்
பெற்றேன் - அடைந்தேன்.

கருத்துரை: அசித முனிவர் எழுந்து நின்று, தாயைச் சற்றுப் பொறுக்குமாறு கூறி, புத்த தேவராகிய அக்குழந்தையைப் பலபடியாகப் போற்றி வணங்கினர்.

விளக்கவுரை: முனி: ஈண்டு அசித முனிவர். மதலை - குழந்தை. பகவன் - முக்கால உணர்ச்சி உடையவன். பரமன் - மேலானவன். புனிதன் - தூய்மையானவன். புராணன் - பழைமையானவன். தருமன் - தானே அறமானவன். அறவோன் - அறம் செய்தலைத் தன் தொழிலாக உடையவன். ஆழி - தரும சச்கரம். ஞாயிறு - சூரியன். இணை - இரண்டு. பார் - பூமி. உண்மை ஒளியால் உள் இருள் போக்கி நன்மை விளக்கும் ஞாயிறு நீயே: சூரியன் உலகில் நிறைந்துள்ள இருளைப் போக்கும். புறவிருளை அகற்றும் தன்மையே அச்சூரியனுக்கு உண்டு. ஆயின், புத்ததேவர் மக்களுடைய அஞ்ஞானமாகிய அகவிருளை அகற்றியவர் ஆதலாலும், மக்களுக்கு நல்லனவற்றை விளக்கிக் காட்டியவர் ஆதலாலும் அவரை அசித முனிவர் இவ்வாறு குறிப்பிட்டு வணங்கினர்.

இலக்கணக் குறிப்பு: மதலாய்: 'மதலை' என்னும் சொல் விளி ஏற்று நின்றது. அடிமலர்: உருவகம். அவனே: ஏகாரம் தேற்றம். ஏனை இடங்களிலும் ஏகாரம் தேற்றம். ஞாயிறு: உவமை ஆகுபெயர்.

முனிவர் மன்னனை நோக்கிக் கூறியவை (14—25)

(பின்பு முனிவர் மன்னனைப்பார்த்து)
மன்னர் மன்னவ - அரசர்க்கரச! (சுத்தோதனரே!)
மாரிடத் தருவில் - மக்கட் கூட்டமாகிய மரத்தில்

ஆயிரம் ஆயிரம் - ஆயிரக்கணக்கான
ஆண்டுகட்கு அப்பால் - ஆண்டுகளுக்குப் பிறகு
ஒரு முறை ——,
மலரும் - பூக்கின்ற
ஒண்மலர் - ஒளி பொருந்திய பூவே
இதுவாம் - இக்குழந்தை ஆகும். (அத்தகைய)
மலர் - மலராகிய
இதன் மணமே - இதனது புகழே
அறிவின் மணமாய் - மக்களுக்கு அறிவைக் கொடுக்கும் திறனாய்
மனத்தின் - (மக்களுடைய) மனத்தில் உள்ள
மாசு அகற்றிடும் - குற்றங்களை நீக்கும்.
ஐயா - ஐயனே!
மலர் இதன் - மலராகிய இதனது
மதுவே - தேனே (இயல்பே)
அருளின் மதுவாய் - அருளைப் பரப்புகின்ற தேனாய்
மன் உயிர்க்கு - உலகத்தில் நிலை பெற்ற உயிர்கட்கெல்லாம்
இன்பம் வளர்த்திடும் - இன்பத்தை வளர்க்கும்
ஐயா - ஐயனே!
இ மா மகனை - பெருமை பொருந்திய இம்மகனை
ஈன்றவர் போல - பெற்றவரைப் போல
மா தவம் செய்தோர் - பெரிய தவத்தைச் செய்தவர்
மா நிலத்து - பெரிய இவ்வுலகில்
உண்டோ - உள்ளாரோ?
ஆயினும் - என்றாலும்
அரசே - மன்னனே!
அரிவாள் போல் - அரிவாளைப் போல
உன் நெஞ்சினை - உனது மனத்தை
அறுக்கும் - அறுத்துக் கொண்டிருக்கின்ற
நெடுந்துயர் - நீடிய ஒரு துயரம்
ஒன்று ——,
இம் மகவால் - இக் குழந்தையால்
உனக்கு வருவது ——,
திண்ணம் - உறுதியாகும்.

கருத்துரை : அசித முனிவர் மன்னனைப் பார்த்து, 'அரசனே, மக்கட் கூட்டமாகிய மரத்தில் ஆயிரக்கணக்கான ஆண்டுகட்குப் பிறகு தோன்றுகின்ற மலர் போன்றது இக்குழந்தை. இது மக்களுடைய அறிவைப் பெருக்கி, அவர்களிடத்தே அருளை வளர்த்து, உலகில் இன்பம் வளரச் செய்யும். இக் குழந்தையைப் பெற்றவர் போல் பெருந்தவம் செய்தவர் உலகில் இல்லை. என்றாலும், இக் குழந்தையினால் உனக்குப் பெருந்துன்பமொன்று வருவது உறுதி' என்று கூறினர்.

விளக்கவுரை : தரு - மரம். மாசு - குற்றம். மது - தேன். மன் - நிலை பெற்ற. மா - பெருமை. அரிவாள் - கதிரை அரிவதற்கு (நறுக்குவதற்கு) பயன்படும் கருவி இது. திண்ணம் - உறுதி. **மானிடத் தரு :** மக்கள் கூட்டம்; ஈண்டு ஒரு மரமாக உருவகம் செய்யப்பட்டுள்ளது. **மானிடத் தருவில் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகட் கப்பால் ஒருமுறை மலரும் ஒண் மலர் இது :** புத்ததேவர் மக்கள் கூட்டமாகிய மரத்தில் ஆயிரக் கணக்கான ஆண்டுகட்குப் பிறகு தோன்றுகின்ற பூவாக உருவகம் செய்யப்படுகின்றார். புத்தர்பிரான் போன்ற பெரியார்கள் ஆயிரக் கணக்கான ஆண்டுகட்கு ஒரு முறைதான் உலகில் தோன்றுவார்களாதலால் இவ்வாறு சொல்லப்பட்டது. **அறிவின் மணமே மனத்தின் மாசு அகற்றிடும் :** மக்களுடைய மனத்தில் ஆணவம் முதலிய மலங்களும் அஞ்ஞானமாகிய இருளும் நிறைந்திருக்கும். அவற்றை எல்லாம் போக்கி உண்மை அறிவினைப் புத்தர் ஊட்டினர் ஆதலால் இவ்வாறு சொல்லப்பட்டார். அருளின் மது

வாய் மன்னுயிர்க்கு இன்பம் வளர்த்திடும்: புத்தராகிய மலரிலிருந்து தோன்றிய அருளாகிய தேன் உலகமெங்கும் பரவி, மக்களுக்குள் இன்பத்தை வளர்க்கும். அஃதாவது புத்ததேவர் காட்டிய அருள்நெறியினால் உலக மக்களுக்கெல்லாம் இன்பம் உண்டாகும் என்பது கருத்து.

இலக்கணக் குறிப்பு: மன்னவ: **அண்மை விளி.** மானிடத்தரு: **உருவகம்.** ஒண்மலர்: **பண்புத்தொகை.** செய்தோர்: ஈண்டு **வினையாலணையும் பெயர்.** அரசே: **சேய்மை விளி.** நெடுந்துயர்: **பண்புத்தொகை.** பல பொருள்கள், தம்முள் இயைபுடையனவாக நிறுவப்பெற்று உருவகம் செய்யப்பட்டுள்ளதால் இவ்வடிகளின்கண் **இயைபுருவகம்** அமைந்துள்ளது.

மாயாதேவி வீட்டுலகத்தை அடைவாள் என்று முனிவர் கூறுதல் (26—32)

மங்கையர்க்கு அரசி - பெண் குலத்திற்குத் தலைவியே!
மாயாதேவி ———,
வாழ்க்கை - இவ்வுலக வாழ்வு
துன்ப மயமாம் - துன்பம் நிறைந்ததாகும்
அதனால் - அதற்கேற்ப
ஏந்திய முத்தினை - தான் சுமந்த முத்தை
ஈன்றபின் - கருவிலிருந்து வெளிப்படுத்திய பிறகு
இப்பி - சிப்பியானது
மாண்டு - இறந்து
மண்ணில் மறைவது போல - மண்ணில் மறைந்து விடுவது போல
இற்றைக்கு ஏழாம் நாளில் - இன்றைக்கு ஏழாவது நாளில்
நீ ———,
இறவா - அழியாத
இன்ப வீடு - பேரின்பம் நுகர்தற்குரிய வீட்டுலகத்தினை
எய்துவது - அடைவது
உண்மையாம் - உண்மையாகும்
என்று உரைத்து - என்று கூறி
ஏகினன் - அசித முனிவர் சென்றார்.

கருத்துரை: அசித முனிவர் மாயாதேவியைப் பார்த்து, 'வாழ்க்கை துன்பம் நிறைந்ததாகும். அதனால் இற்றைக்கு ஏழாம் நாள் இறவாத இன்ப வீட்டினை நீ அடைவாய்' என்று கூறினார்.

விளக்கவுரை: இப்பி - சிப்பி. மாண்டு - இறந்து. இறவா - அழியாத. **ஏந்திய முத்தினை ஈன்றபின் இப்பி மாண்டு மண்ணில் மறைவது போல:** சுமந்த முத்தினை ஈன்ற பிறகு சிப்பி இறந்து மறையும். இந்நிகழ்ச்சி மாயாதேவிக்கு இறப்பு வருதற்கு உவமையாகக் காட்டப்பட்டுள்ளது. **உவமை விளக்கம்:** முத்தினைப் பல நாள் சுமக்கின்றது சிப்பி. அதனை ஈன்ற பிறகு அஃது இறந்துவிடுகிறது. அதுபோலப் புத்ததேவரை ஈன்ற பிறகு அவரது தாயாகிய மாயாதேவி இறப்பாள். இவ்வுவமையினால் மாயாதேவி விரைவில் இறப்பாள் என்பது குறிப்பிடப்பட்டது.

இலக்கணக் குறிப்பு: இறவா: **ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.** இவ்வடிகளில் **உவமையணி** அமைந்துள்ளது.

"சான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு." — வள்ளுவர்.

நல்லொழுக்கப் பயிற்சி

புத்தர் பிரானார் திருவவதாரம் செய்த காலையில் முனிவர் ஒருவர் அவரைப் பலவாறு போற்றித் துதிக்கும் பகுதியை நீங்கள் படித்தீர்கள். புத்தர் பிரானார் அன்பின் உருவம்; அருளுக்கு இருப்பிடம்; அறத்தின் உறைவிடம். அன்பையும், அருளையும் கொண்டு வாழுமாறு அவர் உலக மக்களுக்குப் போதித்தார். திருவள்ளுவனாரும் இவ்விரண்டு பண்புகளையும் வற்புறுத்திக் கூறியுள்ளார். உலகில் உள்ள மதங்கள் யாவுமே இவ்விரண்டு குணங்களையும் வற்புறுத்துகின்றன.

எனவே, அன்பு கொள்ளுங்கள். தொடர்புடைய உயிர்களிடத்து உண்டாவதே அன்பு. அன்பு முற்றினால் அருள் பிறக்கும். தொடர்பில்லாத உயிர்களிடத்து உண்டாவது அருள். உங்கள் வீட்டில் உள்ளவர்களிடம் முதலில் அன்பு காட்டுங்கள்; பிறகு உற்றார் உறவினரிடமும், அண்டை அயலவர்களிடமும், பள்ளிக்கூட மாணவர்களிடமும், நண்பர்களிடமும் அன்பு காட்டுங்கள். அதன் பின் எவ்வுயிரினிடத்தும் அருள் காட்டுங்கள். தற்கால உலகில் நிலவியுள்ள பூசல்களையும் பிணக்குகளையும் அறவே அகற்ற வல்லவை அன்பும் அருளுமே என்பது திண்ணம்.

IV. பல்சுவை

பலவகைப்பட்ட சுவைகளை உடைய பாடல்களைக் கொண்ட பகுதி என்பது இத் தலைப்பின் பொருளாம்.

1. புறநானூறு

பெயர்க் காரணம்: இது புறம்+நானூறு எனப் பிரிக்கப்பட்டு புறத்தைப் பற்றிய நானூறு அகவற் பாக்களைக் கொண்ட நூல் என்று பொருள்படும். இஃது இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கதொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. அறம், போர் முதலிய செய்திகளைக் கூறுவது 'புறம்' எனப்படும். இஃது இடவாகு பெயர்.

நூலின் வகை: சங்க நூல்களாகக் கருதப்படுகின்ற கீழ்க்கணக்கு, மேற்கணக்கு என்னும் இரு பிரிவினவாகிய நூல்களுள், இது மேற்கணக்கைச் சார்ந்தது. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்னும் நூல்கள் மேற்கணக்கு நூல்களாவன. அவற்றில் இந்நூல் எட்டுத்தொகையில் எட்டாவது ஆகும்.

எட்டுத்தொகை நூல்கள்: நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறு நூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பன.

புறநானூற்றிலுள்ள பாடல்களை இயற்றிய புலவர்கள் ஓர் ஊரினரல்லர்; ஒரு காலத்தவரல்லர்; ஒரு மரபினருமல்லர். இந்நூற் பாடல்களைத் தொகுத்தவரும், தொகுக்கும்படி சொல்லியவரும் இன்னார் எனத் தெரியவில்லை.

இது கடவுள் வாழ்த்துச் செய்யுள் முதலாக 400 பாக்களைக் கொண்டது. புறம், புறப்பாட்டு என்பன இதன் வேறு பெயர்கள்.

திணை துறைகள் : இதிலுள்ள ஒவ்வொரு பாடலுக்கும் தனித்தனியே திணை, துறைகள் உள. 'திணை' என்பது மக்கள் ஒழுக்கம். 'துறை' என்பது, 'மக்கள் விலங்கு முதலியன சென்று நீருண்ணும் துறைபோலப் பலவகைப் பட்ட பொருளும் ஒருவகைப்பட்டுச் செல்லுவதற்குரிய வழி' என்று பொருள் படும். அஃதாவது மக்களின் வாழ்க்கைக்கு உரிய வழியாம்.

இந்நூலிற்குப் பழையதோர் உரையுண்டு. அது முற்றிலும் கிடைத் திலது. பல நூலாசிரியர்களும், உரையாசிரியர்களும் இந்நூற் பாடல்களை மேற்கோள்களாக எடுத்தாண்டமையின் இதன் பெருமை வெளியாகும்.

இந்நூலிலிருந்து பண்டைத் தமிழகத்தில் திகழ்ந்த முடிவேந்தர் மூவர், சிற்றரசர், சேனைத்தலைவர், போர்வீரர், புலவர்களைப் பாதுகாத்த 1. பாரி, 2. வல்வில் ஓரி, 3. மலையன், 4. அதியமான், 5. பேகன், 6. ஆய், 7. நள்ளி என்னும் கடையெழு வள்ளல்களின் வரலாறுகள், அக்காலத்துத் தமிழ் மக்களின் நாகரிகப் பண்புகள் முதலியன உணரலாம்.

ஆசிரியரைப்பற்றிய குறிப்புக்கள்

இப்பாடல் புறநானூற்றில் 49-வது பாடலாக உள்ளது.

பாடிய ஆசிரியர் : பொய்கையார்.

ஊர் : மலைநாட்டின்கண் உள்ள தொண்டி.

இவரால் பாடப் பெற்றோன் : சேரமான் கோக்கோதை மார்பன்.

வாழ்க்கையும் அருஞ்செயலும் : சேரமான் கணைக்காலிரும் பொறை என்னும் சேரமன்னனது அவைக்களப் புலவராக இவர் இருந்தார். அம்மன்னன் மூவன் என்பவனை வென்று, அவனது பல்லைப் பெயர்த்துத் தனக்குரிய தொண்டி நகரத்தின் கோட்டை வாயிற் கதவில் பதித்து வைத்தான். அச்செய்தியை இவர் தமது பாடல் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். சேரமான் கணைக்கால் இரும்பொறை, சோழன் செங்கணான் என்பவனால் சிறைவைக்கப்பட்டிருந்தான். அதுகாலையில் இப்புலவர், அச்சோழ மன்னன் மீது களவழி நாற்பது என்னும் ஒரு நூலைப்பாடி, சேரனைச் சிறையி லிருந்து விடுவித்தார்.

பாடல் பெற்றோன் : ஈண்டுள்ள பாடலாற் புகழப்பெற்றவன் சேர மான் கோக்கோதை மார்பன். இவன் சிறந்த கொடைப் பண்பு வாய்ந்த வன். இவனுக்குத்தொண்டி என்னும் நகரம் உரியதாக இருந்தது. பொய்கை யார் மட்டுமன்றி, நக்கீரனாரும் இவனைப் பாடியுள்ளார்.

(இப்பாடலில் பொய்கையார் சேரமான் கோக்கோதை மார்பனைப் புகழ் கின்றார். அவனுக்குரிய நாடு குறிஞ்சி நிலமாகிய சேர நாடேயானாலும், அவனது நாட்டில் முல்லை, மருதம், நெய்தல் முதலிய ஏனை நிலங்களின் வளங் களும் நிறைந்திருந்தன என்று ஈண்டுப் புலவர் புகழ்கின்றார். மன்னனைப் புலவர்புகழ்கின்ற முறையும், அவனது நாட்டின் வளத்தை எடுத்துக் காட்டு கின்ற முறையும் சுவைத்து இன்புறுதற்கு உரியன.)

திணை : பாடாண் திணை. **துறை :** புலவர் ஆற்றுப் படை; இயன் மொழியும் ஆம்.

பாடாண் திணை : ஒருவனுடைய புகழ், வலி, கொடை, அருள் ஆகிய வற்றைத் தெரிந்து சொல்லுதல்.

புலவர் ஆற்றுப்படை : புலவர் ஒருவரை மற்றொரு புலவர் ஆற்றுப் படுத்துதல். ஆறு+படை=ஆற்றுப்படை. ஆறு - வழி; படை - படுத்தல், செலுத்துதல், பொருத்துதல். பரிசில் பெற விரும்பும் ஒருவருக்கு வழி கூறி அவ்வழியிற் செலுத்துதல் என்பது 'ஆற்றுப்படை' என்னும் தொடரின் பொருளாகும். வள்ளல் ஒருவனிடமிருந்து பரிசில் பெற்று வந்த புலவர் ஒருவர், பரிசில் பெறவிரும்பி வரும் புலவர் ஒருவரை வழியில் கண்டு, தான் பரிசில் பெற்று வரும் வள்ளலினிடம் செல்லுமாறு கூறி, வழிகூறி விடுப்பது போல் இத்துறையின் பாடல் பாடப்பெறும்.

இயன்மொழி : இயல்பைக் கூறுதல். தலைவன் ஒருவனுக்கு எதிரில் சென்று, அவனது செய்தியையும், அவனுடைய குலத்தோர் செய்தியையும் அவன்மேல் ஏற்றிப் புகழ்வது.

சேரமான் கோக்கோதை மார்பனது புகழும், நாட்டின் வளமும்

புனவர் - (கோதையினுடைய நாட்டில்) தினைப்புனங் காப்போர்
தட்டை - 'தட்டை' என்னும் பெயர் கொண்ட கிளிகடி கருவியால்
புடைப்பின் - ஒலியை எழுப்பினால்
அயலது - அத்தினைப் புனத்திற்குப் பக்கத்தில் உள்ளதாகிய
இறங்கு - வளைந்த
கதிர் - நெற்கதிர்கள்
அலமரு - சுழல்கின்ற
கழனியும் - வயலின்கண்ணும்,
பிறங்கு நீர் - மிக்க நீரையுடைய
சேர்ப்பினும் - கடற்கரையின்கண்ணும் உளவாகிய
புள் - பறவைகள்
ஒருங்கு எழும் - ஒரு சேர எழுமாதலால்
ஓங்கு - மேம்பட்ட
வாள் - வாளை உடைய
கோதையை - சேரமான் கோக்கோதை மார்பனை
நாடன் என்கோ - (குறிஞ்சி நிலம் உடைமையால்) நாடன் என்று சொல்லுவேனோ?
ஊரன் என்கோ - (மருத நிலம் உடைமையால்) ஊரன் என்று சொல்லுவேனோ?
பாடு இமிழ் - (நெய்தல் நிலம் உடைமையால்) ஒலி முழங்குகின்ற
பனிக்கடல் - குளிர்ந்த கடலையுடைய
சேர்ப்பன் என்கோ - சேர்ப்பன் என்று சொல்லுவேனோ?
யாங்கனம் - எவ்வாறு
மொழிகோ - சொல்லுவேன்?

கருத்துரை : இப்பாடலில், 'சேரமான் கோக்கோதை மார்பனுடைய நாட்டில், தினைப்புனக் காவலர் கிளியை ஓட்டுங் கருவியிலிருந்து எழுப்பும் ஓசையால் பக்கத்தில் உள்ள வயல்களிலும், கடற்கரையிலும் தங்கியிருக்கும் பறவைகள் அஞ்சிப் பறக்கும். இவ்வாறு அவனது நாட்டில் எல்லா நிலத் தன்மைகளும் காணப்படுகின்றன. எனவே, அம்மன்னனை எந்த நிலத்துத் தலைவன் என்று யான் கூறுவேன்?' என்கின்றார் பொய்கையார். சேரனது நாட்டில் நானில வளங்களும் அமைந்துள்ளன என்பது புலவரது கருத்து.

விளக்கவுரை : நாடன் : குறிஞ்சி, முல்லை ஆகிய நிலங்கட்குரிய தலைமகன். என்கோ - என்பேனோ? ஊரன் : மருத நிலத் தலைமகன். பாடு - ஒலி. இமிழ் - முழங்குகின்ற. பனி - குளிர்ச்சி. சேர்ப்பன் : நெய்தல் நிலத் தலைவன். கோதை : சேரமான் கோக்கோதை மார்பன். புனவர் - தினைப்புனங் காப்போர். தட்டை - கிளி கடிகருவி; கிளியை ஓட்டும் கருவி.

"முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்." — ஔவை.

'தட்டையாவது, மூங்கிலைக் கண்ணுக்குக் கண் உள்ளாக நறுக்கிப் பலவாகப் பிளந்து, ஓசையுண்டாக ஒன்றிலே தட்டுவதொரு கருவி' என்று கூறுகின்றார் நச்சினார்க்கினியர். புடைப்பின் - தட்டி ஒலி எழுப்பினால். இறங்கு - வளைந்த. அலமருதல் - சுழலுதல். கழனி - வயல். பிறங்கு - மிக்க. சேர்ப்பு - கடற்கரை. புள் - பறவை. **புனவர் தட்டை புடைப்பின் அயலது இறங்கு கதிர் அலமரு கழனியும் பிறங்குநீர்ச் சேர்ப்பினும் புள் ஒருங்கு எழுமே:** சேரனுக்குரிய நாட்டில் தினைப்புனங்கள் உள்ளன. அவற்றைக் காப்போர் தட்டை என்னும் கருவியைக் கொண்டு கிளிகளை வெருட்டுவர். அவ்வாறு கிளிகளை வெருட்ட ஒலி எழுப்பினால், அவ்வொலியைக் கேட்டு, பக்கத்தில் உள்ள வயலிலும், கடற்கரையிலும் தங்குகின்ற பறவைகள் அஞ்சி எழும். குறிஞ்சி நிலத்திலும், முல்லை நிலத்திலும் தினைப்புனங்கள் இருக்கும். மருத நிலத்தில் நெல் வயல்கள் நிறைந்திருக்கும். நெய்தல் நிலத்திலோ கடற்கரை அமைந்திருக்கும். மலை நாட்டைக் குறிஞ்சி நிலம் என்றும், நெல் வயல் மிக்க இடத்தை மருத நிலம் என்றும், கடற்கரை யமைந்த இடத்தை நெய்தல் நிலம் என்றும் வழங்குவர் பழந்தமிழர். தினைப்புனத்திலிருந்து எழும் ஓசையைக் கேட்டு வயல்களிலும், கடற்கரையிலும் உள்ள பறவைகள் அஞ்சி எழும் என்னும் செய்தி, குறிஞ்சி நிலத்திற்கு மிக அண்மையில் ஏனைய நிலங்களும் உள்ளன என்பதைக் குறிப்பிடும். எனவே, சேரமானது நாடு எல்லா நிலங்களையும் தன்னகத்தே கொண்டது என்பது புலப்படும். **நாடன் என்கோ:** குறிஞ்சி நிலத்திற்கும், முல்லை நிலத்திற்கும் உரியவன் கோதை. குறிஞ்சி நிலத் தலைமகனையும், முல்லை நிலத் தலைமகனையும் நாடன் என்பர் பழந்தமிழர். ஆதல்பற்றி, பொய்கையார், 'கோதையை நாடன் என்று சொல்வேனோ?' என்று கூறுகின்றார். **ஊரன் என்கோ:** வயலும், வயலைச் சார்ந்த இடமும் மருதநிலம் எனப்படும். தினைப்புனத்தில் எழும் ஒலியைக் கேட்டு, வயல்களில் உள்ள பறவைகள் அஞ்சி எழுமாதலால் கோதை மார்பனது நாட்டில் மருத நிலம் அமைந்துள்ளது என்பதனை உணரலாம். மருத நிலத் தலைவனை ஊரன் என்பர் பழந்தமிழர். இக்காரணம் பற்றியே புலவர் பொய்கையார் கோதை மார்பனை 'ஊரன் என்று சொல்லுவேனோ?' என்று கூறுகின்றார். **கடற் சேர்ப்பன் என்கோ:** கடலும், கடல் சார்ந்த இடமும் நெய்தல் நிலம் எனப்படும். தினைப்புனத்தில் எழும் ஒலியைக் கேட்டுக் கடற்கரையில் தங்கும் பறவைகள் அஞ்சி எழுமாதலால், கோதை மார்பனது நாட்டில் நெய்தல் நிலம் அமைந்துள்ளது என்பதனை உணரலாம். நெய்தல் நிலத் தலைவனைச் சேர்ப்பன் என்பர் பழந்தமிழர். இக்காரணம் பற்றியே பொய்கையார் கோதை மார்பனை, 'கடற்சேர்ப்பன் என்று சொல்லுவேனோ?' என்கின்றார். குறிப்பு: பாலை நிலத்தில் ஒன்றும் விளையாது. அதுபற்றியே அந்நிலம் ஈண்டு விடுக்கப்பட்டது. **இப்பாடல் புலவர் ஆற்றுப்படை ஆயினவாறு:** பரிசில் பெற்ற ஒரு புலவர், பரிசில் பெற விருப்பமுடைய மற்றொரு புலவரைப்பார்த்து, 'சேரமான் கோக்கோதை மார்பனைக் குறிப்பிட்ட ஒரு நிலத்துக்கு உரியவன் என்று சொல்ல முடியாது. அவன் நானில வளமும் உடையவன். எனவே, அவன் பெருஞ் செல்வனாவான். தாங்கள் அவனிடம் செல்லுங்கள்' என்று வழி கூறி விடுத்தல் போல் இப்பாடல் அமைந்துள்ளது. ஆகவே, இது புலவராற்றுப்படை என்னும் துறை எனப்பட்டது. **இப்பாடல் இயன் மொழி ஆயினவாறு:** சேரமான் கோக்கோதை மார்பனது இயல்பைக் கூறிப் புலவர் ஈண்டுப் புகழ்கின்றார். எனவே, இப்பாடல் இயன் மொழி என்னும் துறையுமாகும் எனப்பட்டது.

இலக்கணக் குறிப்பு: இமிழ் கடல்: வினைத்தொகை. வாட் கோதை: இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை. இறங்கு கதிர்: வினைத்தொகை. அலமரு; ஈண்டு 'அலமா' என்பது பகுதி. ஒரு திணைக்கு (நிலத்திற்கு) உரிய பொருள் மற்றொரு நிலத்தில் காணப்படுவதாகக் கூறப்பட்டுள்ளமையால், இப்பாடலில் திணை மயக்கம் உள்ளது.

2. கவிங்கத்துப் பரணி

கலிங்கம் என்பது கலிங்க தேசம். பரணி என்பது 96 வகை நூல்களுள் ஒன்று. ஆக, கலிங்கத்துப் பரணி என்றால், கலிங்கத்தைப்பற்றிய நூல் எனப் பொருள்படும்.

பரணி: தலைவன் தன் பகைவர்களையும், அவர்களுடைய யானை, குதிரை, தேர், காலாட்படைகளையும் கொன்று குவித்துப் பேய்களுக்கு விருந்திட்ட சிறப்புடையவனாய் விளங்கினான் என்று கூறும் நூல் பரணி. கடவுள் வாழ்த்து, கடை திறப்பு முதலாகிய உறுப்புக்களைக் கொண்டிருக்கும் இந்நூல்.

(1) போர் முகத்தில் 1,000 யானைகளை வென்ற வீரனைச் சிறப்பித்து, கடவுள் வாழ்த்து முதலான 13 அங்கங்கள் கொண்டு தாழிசையில் பாடுவது பரணி என்பார் பலர்.

(2) பரணி என்னும் நட்சத்திரத்திற்கு உரிய தெய்வம் காளியும், இயமனும். அவர்கள் சிறப்பு இங்கு மிகுதியும் அறிவிக்கப்படுவதால்'பரணி' என்பார் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள்.

செய்யுள் நடை: இந்நூலில் உள்ள செய்யுள் நடை தாழிசை எனப் படும். இந்நூல் 596 தாழிசைகளைக் கொண்டது.

விசயதரன்: பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சோழ மன்னன் விசயதரன். இவன் குலோத்துங்கன், உபய குலோத்தமன், அபயன், சயங்கொண்டான் என்ற பெயர்களும் கொண்டவன். விசயதரன் காஞ்சிபுரத்திலிருந்தபொழுது, கலிங்க தேசத்து அரசனாகிய அநந்த பன்மன் கப்பங் கட்டினானல்லன் என்று கேள்விப்பட்டான். உடனே, அவன் தன் மந்திரியாகிய கருணாகரத் தொண்டைமானைச் சேனையுடன் கலிங்கத்துக்கு அனுப்பினான். தொண்டைமான் சென்று வெற்றி பெற்று மீண்டனன். இவ்வரலாற்றைப் புலவர் பலவகையில் அழகுபடுத்திக் கூறுகின்றார்.

சயங்கொண்டார்: இந்நூல் ஆசிரியரின் பெயர் சயங்கொண்டார். தமிழிலுள்ள பரணிகள் பலவற்றுள்ளும் கலிங்கத்துப் பரணி சிறந்து நிற்பதால் இதன் ஆசிரியர் "பரணிக்கு ஓர் சயங்கொண்டான்" என்று பாராட்டப்படுகின்றார். இந்நூல், "தெய்வப் பரணி" என்று பாராட்டப்பெறும்.

நூலியற்றல்: "தொண்டை நாடு சான்றோருடைத்து" என்பது பற்றி நடந்த சொற்போர் ஒன்றில், சயங்கொண்டார் வெற்றி பெற்று விளங்கி நின்றார். அக்காலத்தே விசயதரன், தனது படை கலிங்கத்தில் வெற்றி பெற்ற செய்தி கேள்விப்பட்டுப் புலவரை நோக்கி, "யானும் சயங் கொண்டேன்" என்று கூறினான். அதைக் கேட்ட புலவர் உடனே மன்னனை நோக்கி, "அவ்வாறாயின் சயங்கொண்டான் சயங்கொண்டானைப் பாடுவான்" என்று கூறிப் போந்து கலிங்கத்துப் பரணி பாடினார். சின்னாள் கழித்து

அரச சபையில் நூலை அரங்கேற்றியபொழுது அரசன் அதனை மெச்சி, ஒவ்வொரு தாழிசைக்கும் ஒவ்வொரு பொற்றேங்காய் பரிசளித்ததாகக் கூறுவர் சிலர்.

கலிங்கத்துப் பரணி: இந்நூல் 1. கடவுள் வாழ்த்து, 2. கடை திறப்பு, 3. காடு பாடியது, 4. கோயில் பாடியது, 5. தேவியைப் பாடியது, 6. பேய்களைப் பாடியது, 7. இந்திர சாலம், 8. இராசபாரம்பரியம், 9. பேய் முறைப்பாடு, 10. அவதாரம், 11. காளிக்குக் கூளி கூறியது, 12. போர் பாடியது, 13. களம் பாடியது என்ற பதின்மூன்று உறுப்புக்களை உடையது.

நம் பாடப்பகுதி: ஈண்டுப் பாடமாக வந்துள்ள பாடல்கள் இரண்டும் 'களம்பாடியது' என்னும் பதின்மூன்றாவது உறுப்பின்கண் இடம்பெற்றுள்ளன. (கலிங்கத்துப் பரணியின் உரையாசிரியராகிய திரு. ஆ. வி. கன்னைய நாயுடு அவர்களது பதிப்பினை நோக்குக.) இப்பகுதியையே 'களங் காட்டியது' என்னும் தலைப்பினுள் குறிப்பிடுவர் சிலர். கருணாகரன் கலிங்கரோடு புரிந்த போர்க்களத்தின் செய்தியைச் சயங்கொண்டார் ஈண்டு வருணித்துக் கூறுகின்றார்.

1. வீரர் முகம் மலர்ந்து கிடந்தமை

விருந்தினரும்—,
வறியவரும் - வறியவர்களும்
நெருங்கி - (தம்மை) நெருங்கிவந்து
உண்ண - (உணவை) உண்ணுதலால்
மேன்மேலும் - (அதுகண்டு) மேலும் மேலும்
முகம் மலரும் - (மகிழ்ச்சியால்) முகம் மலர்ச்சி அடையும்
மேலோர்போல - பெரியவர்களைப் போல
பருந்து இனமும் - பருந்துகளின் கூட்டங்களும்
கழுகு இனமும் - கழுகுகளின் கூட்டங்களும்
உண்ண - (தம்முடைய ஈரல், குடல் முதலிய உறுப்புக்களைத்) தின்ன
பதும முகம் - தாமரை மலர்போலும் (தங்கள்) முகம்
மலர்ந்தாரை - (மகிழ்ச்சியால்) மலர்ச்சிகொண்டுள்ள வீரர்களை
பார்மின் பார்மின் - பாருங்கள்! பாருங்கள் !!

கருத்துரை: போர்க்களத்தில் வீரப் போர் புரிந்த வீரர்கள் முக மலர்ச்சியுடன் இறந்து கிடந்தனர். அவர்களுடைய குடல், ஈரல் முதலிய உறுப்புக்களைப் பருந்துக்கூட்டங்களும், கழுகுக் கூட்டங்களும் தின்று கொண்டிருந்தன.

விளக்கவுரை: மேலோர் - பெரியவர். இனம் - கூட்டம். பதுமம் - தாமரை. பார்மின் - பாருங்கள். **விருந்தினரும் வறியவரும் நெருங்கியுண்ண மேன்மேலும் முகமலரும் மேலோர்:** மேலோர் இயல்பு ஈண்டுக் கூறப்படுகின்றது. விருந்தினரும், ஏழைகளும் தம்மை அடுத்துவந்து தம் இல்லத்தில் விருந்து உண்ணுதலைக் காணும் பெரியவர்கள் முகமலர்ச்சியடைவர். **பதும முகம் மலர்ந்தார்:** தாமரை மலர்போன்ற முகம் மலர்ந்துள்ள வீரர்கள். தாமரை என்பது ஈண்டுச் செந்தாமரை மலரைக் குறிக்கும். போரில் வீரத்துடன் போர்புரிந்து, மார்பில் புண்ணை ஏற்று, முகமலர்ச்சியுடன் இறந்து கிடப்போர் பெருவீரர் என்று போற்றப்படுவர். அவர்களுடைய முகத்தில் இரத்தம் பரவியிருக்கும். அவர்கள் புன்னகை பூத்த முகத்தினராய்க் கிடக்கும் காட்சி, செந்தாமரைப்பூ மலர்ந்திருப்பதுபோல் தோற்றம் அளிக்கின்றது. அதுபற்றியே 'பதும முகம் மலர்ந்தார்' எனப்பட்டது.

உவமைப் பொருத்தம் : களிப்புடன் வீரர்கள் உயிர்துறந்து கிடந்தனர். அவர்களுடைய முகத்தில் புன்னகை பொலிந்தது. பகைவரை விழித்து நோக்கிய கண்கள் விழித்தவாறு இருந்தன. அந்நிலையில் அவர்களுடைய குடல், ஈரல் முதலியவற்றைப் பருந்துகளும், கழுகுகளும் கொத்தித் தின்றன. அக்காட்சி, கழுகுகளும் பருந்துகளும் கொத்துதலைப் பார்த்து அவர்கள் மகிழ்கின்றார்களோ என்று நினைக்குமாறு தோற்றம் அளித்தது. இந்நிலையில் அவர்கள், விருந்தினரும் வறியவரும் நெருங்கி யுண்ணும் பொழுது முகமலரும் மேலோர் போல இருந்தனர். வீரர்கட்குப் பெரியவர்களும், பருந்துகளுக்கும் கழுகுகளுக்கும், விருந்தினரும் வறியவரும், வீரர்களின் உறுப்புகட்கு உணவுப்பொருள்களும் உவமைகள்.

இலக்கணக் குறிப்பு : பதுமமுகம் : உவமத்தொகை. மலர்ந்தார் : ஈண்டு வினையாலணையும் பெயர். பார்மின் : முன்னிலை ஏவற் பன்மை வினைமுற்று. ஈண்டு 'மின்' என்பது முன்னிலைப் பன்மை விகுதி ஆகும். தாம், ஏ : இவ்விரண்டும் அசைகள். இப்பாடலில் உவமை அணி அமைந்துள்ளது.

2. யானைகளுடன் வீழ்ந்துகிடக்கும் கொடிகள்

தட - பெரிய
குருதிமிசை - இரத்த வெள்ளத்தில்
சாய்ந்து விழும் - சாய்ந்து விழுந்து கிடக்கும்
கடம் - மதத்தினையுடைய
களிற்றினுடன் - ஆண் யானைகளுடன்
சாய்ந்து படியும் - சாய்ந்து படிந்து கிடக்கும்
கொடிகள் - கொடிச் சீரைகள்
தங்கள் - தங்களுடைய
காந்தருடன் - கணவருடன்
கனல் அமளி அதன்மேல் - நெருப்பாகிய படுக்கையில்
வைகும் - கிடக்கின்ற
கற்பு உடைய - கற்பினையுடைய
மாதரை - பெண்டிரை
ஒத்தல் - ஒத்திருத்தலை
காண்மின் காண்மின் - பாருங்கள் ! பாருங்கள் !!

கருத்துரை : இரத்த வெள்ளத்தில் யானைகளுடன் கொடிச் சீரைகள் விழுந்து கிடந்தன. அக்காட்சி நெருப்புப் படுக்கையில் கற்புடை மகளிர் தம் கணவருடன் கிடக்கும் காட்சியைப் போல் தோற்றம் அளித்தது.

விளக்கவுரை : கடம் - மதம். களிறு - ஆண் யானை. குருதி - இரத்தம். காந்தர் - கணவர். கனல் - நெருப்பு. அமளி - படுக்கை. வைகும் - தங்கியிருக்கும். **சாய்ந்து விழும் கட களிறு**, பண்டைக் காலத்தே போர்க்களத்தில் யானைகள் வெட்டுண்டு விழுதல் இயல்பு. ஆயிரம் ஆண் யானைகளை வெட்டி வீழ்த்திய வீரனைச் சிறப்பித்துப் பாடும் நூலே பரணி ஆகும் அன்றே ! அதற்கேற்ப யானைகள் சாய்ந்துவிழுங் காட்சி ஈண்டுக் கூறப்பட்டது. **காந்தருடன் கனல் அமளி அதன்மேல் வைகும் கற்புடை மாதர் :** பண்டைக் காலத்தில் கற்புடை மகளிர் சிலர், தன் கணவர் இறந்த காலையில் அவருடன் தீயில் மூழ்கி இறத்தல் வழக்கமாகும். இவ்வாறு கணவருடன் மனைவி தீ மூழ்குதலைப் புறப்பொருள் வெண்பாமாலை யாசிரியர் 'ஆஞ்சிக் காஞ்சி' என்னும் துறையில் அடக்குவர்.

உவமை விளக்கம் : இரத்த வெள்ளத்தில் யானைகளுடன் கொடிச் சீரைகள் வீழ்ந்து கிடந்தன. அவ்வாறு வீழ்ந்து கிடக்கும் காட்சி நெருப்புப் படுக்கையில் தம் கணவருடன் கற்புடை மகளிர் கிடத்தலை ஒத்திருந்தது. மத

யானைகள் கணவருக்கும், கொடிச் சீரைகள் கற்புடைப் பெண்டிருக்கும், இரத்த நீர் நெருப்புப் படுக்கைக்கும் உவமைகளாக அமைந்தன.

போர்க்களத்தில் இரத்தப் பெருக்கெடுத்தது என்றும், யானைகள் வெட்டுண்டு வீழ்ந்து கிடந்தன என்றும், கொடிச் சீரைகளும் யானைகளுடன் விழுந்தன என்றும் இப்பாடலிலிருந்து நாம் உணரலாம்.

இலக்கணக் குறிப்பு: தடங்குருதி: உரிச்சொல் தொடர். கனல் அமளி: உவமைக்கும் பொருளுக்கும் வேறுபாடில்லாமல் கூறப்பட்டிருத்தலால், இஃது உருவகம். காண்மின்: முன்னிலை ஏவற்பன்மை வினைமுற்று. ஈண்டு 'மின்' என்பது முன்னிலைப் பன்மை விகுதி ஆகும். இப்பாடலின்கண் உவமையணி அமைந்துள்ளது.

3. கச்சிக் கலம்பகம்

கலம்பகம்: தமிழில் உள்ள தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்று கலம்பகம் என்னும் நூல். புயவகுப்பு, அம்மானை, மறம், சிந்து, சம்பிரதம் முதலிய பதினெட்டு உறுப்புக்களுடன் இந்நூல் அமையும். பல உறுப்புக்கள் கலந்து பாடப்பெறுதலால் கலம்பகம் என்று பெயர் பெற்றதென்பர் சிலர்.

கச்சிக் கலம்பகம்: கச்சி என்பது காஞ்சிப்பதியைக் குறிக்கும். 'கச்சிக் கலம்பகம்' என்பது கச்சிப்பதியில் எழுந்தருளியிருக்கும் ஏகம்பநாதர் என்னும் திருநாமம் உடைய சிவபிரான்மீது பாடிய கலம்பகம் என விரியும்.

பாடிய ஆசிரியர்: அரங்கநாத முதலியார்.

ஊர்: பூண்டி.

மரபு: சைவ வேளாளர்.

காலம்: பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவும், இந்நூற்றாண்டின் தொடக்கமும்.

சிந்து

சிந்து என்னும் உறுப்பின் இலக்கணம்: 'சிந்து' என்பது கலம்பகத்தின் பதினெட்டு உறுப்புக்களுள் ஒன்று. இரசவாதம் செய்வதில் வல்லவன் தன் திறமையைக் கூறுவது போல் இவ்வுறுப்பு அமையும். இரும்பு, பித்தளை முதலிய உலோகங்களைப் பொன்னாக மாற்றுதல் இரசவாதம் ஆகும்.

குன்றை - (மேரு) மலையை
குனித்த - (வில்லாக) வளைத்த
கோமகனார் - தலைவராகிய சிவபிரானார்
சித்த உருக் கொண்ட நாள் - (மதுரையில்) எல்லாம் வல்ல சித்தராகத் தோன்றிய காலத்தில்
யாம் ———,
என்றைக்கும் - எக்காலத்திலும்
சிறப்பு எய்த - சிறப்பினை அடையுமாறு
இச்சையுடன் - விருப்பத்துடன்
கற்ற வித்தை ———,
இற்று என்றுமோ - இத்தன்மையது என்று சொல்ல முடியுமோ?
மின் தைக்கும் - மின்னல் போன்ற ஒளி தங்கிய (மின்னற் கொடி போன்ற கங்கையாள் தங்கிய)
முடி - சடையினை உடைய
வேந்தர் - தலைவராகிய சிவபிரான்
விரும்ப - விரும்புமாறு
ஒரு தினத்து - ஒரே நாளில்

இரும்புதனை - இரும்பை
பொன் செய்வோம் - பொன்னாகை யாம் செய்வோம்.
இன்றைக்கு ——— ,
பொன் அளித்து - பொன்னைக் கொடுத்து (வியாழக்கிழமை வந்து)
நாளை ——— ,
வெள்ளி இயற்றினும் - வெள்ளியை ஆக்கினாலும் (வெள்ளிக்கிழமை வந்தாலும்)
பின் - பின்பு (மறுநாள்)
சனியதாம் - துன்பமே உண்டாகும். (சனிக்கிழமையே வரும்).

கருத்துரை : இரசவாதி ஒருவன் எல்லாம் வல்ல சித்தராக உருவெடுத்த சிவபிரானிடம் தான் வித்தை கற்றதாகவும், மிகவிரைவில் தன்னால் இரும்பைப் பொன்னாக்கமுடியும் என்றும் கூறி, தன்னுடைய திறமையை நயம்பட எடுத்துக் கூறுகின்றான்.

விளக்கவுரை : குன்று - மலை : ஈண்டு மேரு. குனித்த-வளைத்த. கச்சி-காஞ்சிப்பதி. கோமகன் - தலைவன். இச்சை - விருப்பு. இற்று - இன்ன தன்மைத்து. மின் - ஒளி ; மின்னற்கொடி போன்ற பெண்: கங்கை. வேந்தர் - ஈண்டுச் சிவபிரான். பொன் - வியாழக்கிழமைக்கு மற்றொரு பெயர். "**குன்றைக் குனித்த கச்சிக் கோமகனர்**" **என்பதன்கண் உள்ள வரலாறு :** அசுரர்கள் மூவர் வானத்தே பறக்கும் கோட்டைகளில் இருந்து மண்ணவர்க்கும் விண்ணவர்க்கும் துன்பம் கொடுத்து வந்தனர். அவர்களிடமிருந்து தங்களைக் காக்க வேண்டுமென்று தேவர்கள் சிவபிரானை வேண்டினர். சிவபிரான் படைக்கலங்களுடன் சென்றாராயினும், அவற்றைப் பயன் படுத்தாமல் கோட்டைகளையும் அசுரர்களையும் எரித்துச் சாம்பல் ஆக்கினார். சிவபிரான் படையெடுத்துச் சென்ற காலத்தில் அவருக்கு மேருமலை வில்லாக அமைந்தது. அவர் அப்பொழுது மேருமலையை வில்லாக வளைத்த செய்தி ஈண்டுக் குறிப்பிடப் பெறுகிறது. '**கோமகனர் சித்தவுருக் கொண்ட நாள்' என்பதன்கண் உள்ள வரலாறு :** சிவபிரான் எல்லாம் வல்ல சித்தர் உருக்கொண்டு மதுரைத் தெருவில் செயற்கருஞ் செயல்கள் பலவற்றைச் செய்து காட்டினார். அவர் செய்த அருஞ்செயல்கள் யாவும் திருவிளையாடற் புராணத்தில் 'எல்லாம் வல்ல சித்தர் திருவிளையாடல் படலம்' என்னும் பகுதியில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. **ஒருதினத் திரும்பு தனைப்பொன் செய்வோம் :** ஒரே நாளில் இரும்பைப் பொன்னாகச் செய்யும் திறமை தனக்குண்டு என்று இரசவாதி இவ்வடியினால் கூறிக்கொள்கின்றான். திருவிளையாடற் புராணத்தில் இரசவாதம் செய்த படலம் என்றொரு பகுதி உள்ளது. சிவபிரானார் அடியார் உருவுடன் வந்து, தம்மிடம் பேரன்பு கொண்டிருந்த பொன்னனையாள் என்பவள் பொருட்டுத் தாழ்ந்த உலோகங்களைப் பொன்னாகச் செய்து கொடுத்தார் என்னும் செய்தி அப்படலத்தில் கூறப்பட்டுள்ளது. சிவபிரான் ஈயம், செம்பு, இரும்பு, பித்தளை, வெண்கலம், வெள்ளி ஆகிய உலோகங்களைப் பொன்னாக்கினார். ஆனால், ஈண்டுக் குறிப்பிடப் பெறும் இரசவாதி வெறும் இரும்பையே பொன்னாகச் செய்வேன் என்று தனது திறமையைத் தானே கூறிக் கொள்கிறான். **இன்றைக்குப் பொன்னளித்து நாளைவெள்ளி இயற்றினும்பின் சனியதாமே :** இவ்வடிகளில் இரசவாதம் செய்பவன் இருபொருள்படப் பேசுதலை ஆசிரியர் அமைத்துள்ளார். இயல்பாகவே இருப்பதைத் தாம் ஆக்கியதாகத் தோன்றும்படி சொல்லுதல் சித்தரது இயல்பு. வியாழக்கிழமைக்குப் பிறகு வெள்ளிக்கிழமை வந்து, பிறகு சனிக்கிழமை வருவது இயல்பு. இந்நிகழ்ச்சியைச் சிலேடை நயம்படுமாறு இரசவாதி ஈண்டுக் கூறுகின்றான். பொன், வெள்ளி, சனி என்பவை உலோகங்களின் பெயர் அன்றோ? அப்பொருள்களை மனத்திற்

கொண்டு, இன்றைக்குப் பொன்னைக் கொடுத்து விட்டு, நாளைக்கு வெள்ளியைத் தந்தால் தனக்குத் துன்பமே உண்டாகும் என்னும் தன் உட்கருத்தினைக் குறிப்பினால் வெளிப்படுத்துகிறான்.

இலக்கணக் குறிப்பு: யாம்: உயர்வு குறித்து வந்த தன்மைப் பன்மை. ஓகாரம் எதிர்மறைப் பொருளது. இப்பாடலின் ஈற்றடியில் சிலேடையணி அமைந்துள்ளது.

4. அழகின் சிரிப்பு

கடல், காடு, ஆறு, மலை, சூரியன், சந்திரன், மரம், செடி, கொடி, கிளி, புறா முதலிய இயற்கைப் பொருள்களைப் பற்றிய எளிய இனிய பாடல்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் நூல் அழகின் சிரிப்பு ஆகும். இயற்கையில் காணப்படும் நுட்பமான அழகுகளை எல்லாம் ஆசிரியர் இந்த நூலில் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

இந்நூலின் ஆசிரியரைப் பற்றிய குறிப்புக்கள்

ஆசிரியர்: 'பாரதி தாசன்'

இயற்பெயர்: கனக சுப்புரத்தினம்.

தந்தையார்: கனகசபை முதலியார்.

ஊர்: புதுச்சேரி.

பிறந்த நாள்: 16-4-1891.

அலுவல்கள்: தமிழ்ப் பேராசிரியராகப் புதுவையில் பணியாற்றினார் சீர்திருத்தக் கருத்துக்கள் நிறைந்த புரட்சிப் பாடல்களைப் பாடுவதில் ஈடுபட்டுள்ளார்.

இயற்றிய வேறு நூல்கள்: குடும்ப விளக்கு, இருண்ட வீடு, எதிர்பாராத முத்தம், பாண்டியன் பரிசு, தமிழியக்கம், பாரதிதாசன் கவிதைகள் முதலிய செய்யுள் நூல்களையும், நல்ல தீர்ப்பு, கற்கண்டு முதலிய உரைநடை நூல்களையும் இவர் இயற்றியுள்ளார்.

புறாக்கள்

1. தாயன்பு தந்தையன்பு

தாய் - தாய்ப்புறா
இரை தின்ற பின்பு - (வெளியிடத்தே) இரையைத் தின்ற பிறகு
தன் குஞ்சை - தன்னுடைய குஞ்சை
கூட்டில் கண்டு - கூட்டினிடத்தே கண்டு
வாயினைத் திறக்கும் - (தனது) வாயினைத் திறக்கும் (அவ்வளவில்)
குஞ்சு - குஞ்சானது
தாய் வாய்க்குள் - தனது தாயின் வாய்க்குள்
மூக்கை வைக்கும் —,
தாய் - அத்தாய்ப் புறா
அருந்தியதை - தான் தின்றதை
கக்கி - வாய்க்குக் கொண்டு வந்து
தன் குஞ்சின் - தன்னுடைய குஞ்சின்
குடல் நிரப்பும் - வயிற்றை நிரப்பும்.
ஓய்ந்ததும் - இது முடிந்ததும்
தந்தை ஊட்டும் - தந்தையாகிய புறா ஊட்டும். (இச்செயல்)
அன்புக்கு - (கண்ணினால் காண முடியாத) அன்புக்கு
ஓர் எடுத்துக் காட்டாம் —,

கருத்துரை : வெளியிற் சென்ற தாய்ப்புறா கிடைத்த உணவைத் தின்று விட்டுத் தன் கூட்டிற்கு வந்து, உண்ட இரையை வாய்க்குக் கொணரும். அவ்வளவில் புறாக்குஞ்சு தன் அலகைத் தாயின் வாயில் வைக்கும். தாய்ப்புறா வாய்க்குக் கொண்டுவந்த உணவைக் குஞ்சுக்கு ஊட்டும். இதன்பின் தந்தையாகிய புறா ஊட்டும். இக்காட்சி தாயன்பையும் தந்தையன்பையும் விளக்கும்.

விளக்கவுரை : நமக்குக் கண்கள் இருந்தும் 'அழகிய பொருள்களைக் கண்டு இன்புறுவது இல்லை' என்றார் ஓர் அறிஞர். அவ்வறிஞர் கூற்று உண்மை என்பதனை இப்பாடல் நன்கு வெளிப்படுத்தும். புறாக்களையும், அவை தம் குஞ்சுகளுக்கு இரை ஊட்டுதலையும் மக்களுள் பலர் பார்த்திருந்தாலும், அப்புறாக்களினிடத்தில் அமைந்துள்ள ஆழ்ந்த அன்பினைக் கண்டு இன்புற்றிருக்கமாட்டார்கள். இவ்வாசிரியர் அவ்வன்பினை நமக்கு ஈண்டுச் சுட்டிக் காட்டுகின்றார். பகுத்தறிவில்லாத பறவைகளிடத்தில்கூடக் காணப்படும் அன்புணர்ச்சி மக்களிடத்தில் காணப்படவில்லையே என்னும் கருத்தினை உட்கொண்டு ஆசிரியர் இவ்வாறு பாடியுள்ளார் போலும்!

அடைபடும் புறாக்கள்

சுழற்றிய - சுழற்றப் பெற்ற

கூர்வாள் போலே - கூரிய வாளைப் போல (புறாக்கள்)

கூட்டமாய்ப் பறந்து போகும்—, (பின்பு)

கொத்து அடிமைகள் போலே - (புறாக்கள்) கூட்டமான அடிமைகளைப் போல

கூட்டினில் அடையும் வந்தே - கூட்டினில் வந்து அடையும்

(அதன்பின்)

குழைத்து - குழைத்து வைத்துக் கொண்டு

வண்ணம் தீட்டிய - வர்ணம் தீட்டப்பெற்ற

ஓவியத்தை - சித்திரத்தை

திரை இட்டு மறைத்தல் போலே - திரையால் மறைப்பதைப் போல

வேலன் வந்து ——,

கூட்டினைச் சாத்தினான் - கூண்டின் கதவினை அடைத்தான்.

கருத்துரை : கூட்டிலிருந்து வெளிப்படும் புறாக்கூட்டம் வெளியிற் பறந்து செல்லுதல், பின்பு அவை கூட்டில் அடைபடுதல், கூண்டின் கதவு மூடப்படுதல் முதலியவை உவமைகள் காட்டி ஈண்டு நயம்பெறக் கூறப் பெற்றுள்ளன.

விளக்கவுரை : கொத்தடிமை - கூட்டமான அடிமை, குடும்பத்தோடு அடிமை. வண்ணம் - வர்ணம். தீட்டிய - வரைந்த. ஓவியம் - சித்திரம். **உவமைகள்:** புறாக்கள் கூட்டமாய்ப் பறந்து போதற்குச் சுழற்றிய கூர்வாள் உவமையாகக் காட்டப்பெற்றது. புறாக்கள் கூட்டமாய்க் கூண்டினுள் அடைதலுக்குக் கொத்தடிமைகளின் செயல் உவமையாய்க் காட்டப்பெற்றது. கூண்டின் கதவு மூடப் பெறுதலுக்கு அழகிய சித்திரத்தைத் திரைகொண்டு மூடுதல் உவமையாகக் கூறப்பெற்றது.

இலக்கணக் குறிப்பு : இப்பாடலில் எளிய முறையில் உவமையணி அமைந்துள்ளது.

5. அரசப்பன் அலங்காரம்

அரசப்பன் அலங்காரம்: இஃது அரசப்பனால் பாடப்பட்ட அலங்காரம் என வி[illegible]னவே, மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன்

தொக்க தொகையாம். இது முந்நூறு அலங்காரப் பாடல்களையுடைய ஒரு சிறந்த நூல்.

நூல் அமைப்பு: அறுநூறு அரும்பெருங் கருத்துக்களைக் கொண்ட, நயம்மிக்க முந்நூறு தாழிசைக் கலிப்பாக்களால் இருசொல் அலங்கார அணியுடன் பாடப்பட்டது. செம்மொழிச் சிலேடைச் சொற்களாலும், பிரிமொழிச் சிலேடை சொற்களாலும் இயன்ற முந்நூறு அழகிய சிலேடைச் சொற்களைக் கொண்டு முடிந்துள்ளது இந்நூல்.

அலங்காரம்: இஃது ஒருவகை அழகிய முறையில் இயற்றப்படும் பாடல் தொகுதியாகும். அத்தகைய பாடல்களுள் புகழெழுத்து அலங்காரம், நடுவெழுத்து அலங்காரம், இருசொல் அலங்காரம், முச்சொல் அலங்காரம் என்பன சில. இந்நூலுள் அமைந்துள்ள பாடல்கள் இருசொல் அலங்காரம் அமைந்துள்ள பாடல்களாம்.

இருசொல் அலங்காரம்: இருவேறு கருத்துக்களைக்கொண்ட இரண்டடிகளால் ஆகிய ஒரு பாடலை வினா முறையில் அமைத்து, அதன்கீழ்ச் செம்மொழிச் சிலேடைச் சொல்லையேனும், பிரிமொழிச் சிலேடைச் சொல்லையேனும் அமைத்துப் பாடுவது இருசொல் அலங்காரம் ஆகும். சிலேடைச் சொற்களால் கொள்ளப்படும் இருவேறு வகையான பொருள்களும் பாடலின்கண் அமைந்துள்ள வினாக்களுக்கு விடைகளாக அமையும்.

ஆசிரியரைப்பற்றிய குறிப்புக்கள்

பெயர்: முத்தமிழ்க்கவி வித்துவான் கே. ஆர். அரசப்பனார்.

பிறப்பு: 21-6-1906.

ஊர்: கோவை மாநகரையடுத்த ஒரு சிற்றூராகிய கொண்டையம் பாளையம்.

தந்தை: இராமசுவாமி.

தாய்: அரங்கம்மாள்.

மதம்: சைவம்.

அலுவல்: கோவை நகராண்மைக் கழகத்தைச் சார்ந்த, இராமநாதபுரம் உயர்நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராகத் தொண்டாற்றி வருகிறார்.

இயற்றிய பிற நூல்கள்: 'சந்திரகாந்தன்' என்னும் ஒரு நாடக நூல், 'ரோஜா புஷ்பம்', 'கிருஷ்ண சிங்கம்' என்னும் இரண்டு துப்பறியும் நாவல்கள், 'வெள்ளியங்கிரி மகிமை' என்னும் ஒரு சிறிய ஆராய்ச்சி நூல்.

இளங்கோவால்

சிலம்பு அதிகாரம் - சிலம்பு காரணமாக அதிகரித்த

சீர் ஆக - சிறப்பை (தமிழ் மொழி) எய்துமாறு

காதை - (அது) காப்பிய முறையில்

தோன்றியது ஏன் - தோன்றியது எவ்வாறு?

இளங்கோவால் - இளங்கோவடிகள் என்பவரால்.

தலைப்புறமே - தலையின் புறத்தில்

நரைமுடித்து - நரையை உடைய மயிர்க் கற்றையை (ஒரு கிழவனைப் போல்) சேர்த்துக் கட்டி

தரும் முறை - தக்க முறையிலே (நடு நிலைமை தவறாமல் நீதி வழங்குதலில்)

சொல் - முடிவாகிய சொல்லை

ஊன்றியது ஏன் - (கூறி) நிலை நாட்டியது எவ்வாறு?

இளங்கோவால் - அரசிளங்குமரனாகிய கரிகாற் சோழனால்.

"தன்னைத் தான் காக்கிற் சினம் காக்க." — வள்ளுவர்.

கருத்துரை : சேரர் மரபைச் சேர்ந்தவரும், இளமையில் துறவு பூண்ட இளவரசருமாகிய இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தைப் பாடித் தமிழ்த்தாய் தனியழகு பெறுமாறு செய்தார். சிக்கலான வழக்கில் அரசிளங்குமரனாகிய கரிகாலன் நரை முடித்துச் சென்று தக்க முடிவு கூறி, சோழர்களுடைய நீதி வழுவாநெறியை நிலைநாட்டினன்.

விளக்கவுரை : ஊன்றியது - நிலைநாட்டியது. இளங்கோ - இளங்கோவடிகள், அரசிளங் குமரனான கரிகாலன். **சீராக :** சங்கப் புலவர்கள் பலர் அளவற்ற பாடல்களைப் பாடித் தமிழ்மொழிக்கு ஆக்கம் தேடித் தந்தனர். எனினும், ஒரு காலத்தில் நாடகக் காப்பிய நூல்கள் தோன்றுதல் அரிதாயிற்று. அக்குறையைச் சிலப்பதிகாரம் நிறைவுபடுத்தியதனாலும், தமிழில் பெருங்காப்பியங்கள் தோன்றுவதற்கு வழிகாட்டியாக இருந்ததாலும் 'சீராக' எனப்பட்டது. **'தலைப்புறமே நரைமுடித்துத் தகுமுறை சொல் ஊன்றியது' என்பதன்கண் உள்ள வரலாறு :** சோழன் கரிகாற்பெருவளத்தான் இளமையிலேயே அரசுரிமை பூண்டான். ஒருமுறை சிக்கலான வழக்கொன்றினைத் தீர்த்துக்கொள்ளும்பொருட்டு முதியவர்கள் சிலர் அவனிடம் வந்தனர் என்றும், அவர்கள் அரசனை இளைஞன் என்று இகழ்ந்தனர் என்றும், அதன்பொருட்டுக் கரிகாலன் நரை முடித்து முதியவன் போல் நடித்து அவர்கள் வழக்கைத் தக்கவாறு தீர்த்தான் என்றும் சொல்லப்படுகின்றது. இச்செய்தியை, 'பழமொழி நானூறு' என்னும் நூல் கூறுகிறது.

நல்லொழுக்கப் பயிற்சி

பல சுவைகளைக் கொண்ட பாடல்கள் தமிழ் மொழியின்கண் உள்ளன. புலவர்கள் தம்முடைய கற்பனைத் திறனைக்கொண்டு பலவகைச் சுவைகளை அமைத்துப் பாடல்களைப் பாடியுள்ளனர். கற்பனைகள் யாவும் பொய்போல் சிலர்க்குத் தோன்றலாம். கற்பனைக்கும் பொய்க்கும் வேறுபாடு உண்டு கற்பனையைப் பொய்யாகக் கருதி, அதனை வெறுத்தல் தக்கதன்று. கற்பனைச் சொல்லோவியங்களைச் சுவைக்கும் ஆற்றலை மாணவர்கள் பெறுதல் வேண்டும். அவ்வாறு பெற்றால், தமிழ் மொழி ஆக்கம் பெறும் என்பது திண்ணம்.

செய்யுட் பகுதி

வினாக்களும் விடைகளும்

I. வாழ்த்து

கடவுள் வாழ்த்து

1. தாயுமானவருடைய ஊர், சமயம், பாடல்களின் இயல்பு ஆகியவற்றைப் பற்றிச் சிறு குறிப்புக்கள் வரைக.

விடையைத் தாயுமானவர் பாடலுக்கு அமைந்த முன்னுரையிற் காண்க.

2. "காயாத மரமீது கல்லேறு செல்லுமோ?" - இதனை விளக்கி வரைக.

விடையைத் தாயுமானவர் பாடலின் கீழ் அமைந்த விளக்கவுரையிற் காண்க.

3. "எங்கள் உலக வாய்பாடு" என்று தாயுமானவர் எவற்றைக் குறிப்பிடுகின்றார்?

வாயார உண்டவர்கள் வாழ்த்துதல், உணவு கிடைக்கப்பெறாமல் துன்புற்றவர்கள் பிறரை வைதல் ஆகியவற்றை, 'எங்கள் உலக வாய்பாடு' என்று தாயுமானவர் குறிப்பிடுகின்றார்.

4. தாயுமானவர், கடவுளுக்கு எத்தகைய அருள் உண்டு என்கின்றார்?

தம் மக்கள் செய்யும் பிழைகளைப் பொறுக்கும் இயல்புடைய தாயினது அருட்பண்பு கடவுளிடம் உண்டு என்கின்றார் தாயுமானவர். தாய் போன்ற அருள் உடையவர் கடவுள் என்பது கருத்து.

5. தாயுமானவர் கடவுளிடம் எதனை வேண்டுகின்றார்?

ஒரு நிலையில் நில்லாமல் தடுமாறிக் கலங்குகின்ற மனநிலையை மாற்றி, கலங்காத உள்ளத்தினைத் தந்தருளுமாறு தாயுமானவர் கடவுளை வேண்டுகின்றார்.

6. தாயுமானவர் கூறும் கடவுளின் தன்மையை விளக்கி வரைக.

மக்கள் செய்யும் பிழைகளைப் பொறுத்து அருள்செய்பவர் கடவுள். அவர் முழுமுதற் பொருள் ஆவார்; உண்மைப் பொருளாகவும் உள்ளவர். உண்மை உருவாகவும், அறிவுருவாகவும், இன்ப உருவாகவும், அன்புருவாகவும் இருப்பார் கடவுள்.

தமிழ்மொழி வாழ்த்து

1. பாரதியாருடைய பாடல்களின் இயல்பினை வரைக.

விடையைத் தமிழ்மொழி வாழ்த்தின் முன்னுரையிற் காண்க.

2. தமிழ்மொழி வாழ்த்துப் பாடலிலிருந்து தமிழ்மொழியின் பெருமையைப்பற்றி நீ அறிந்தவை யாவை ?

இவ்வுலகத்திலுள்ள எல்லாப் பகுதிகளிலும் தமிழின் பெருமை பரவியுள்ளது. தமிழ்மொழியின் புகழை உலக மக்கள் யாவரும் உணர்ந்துள்ளனர். என்றும் வளர்ந்து கொண்டிருக்கின்ற மொழி தமிழ்மொழி.

3. பாரதியார் தமிழ்மொழியினை எவ்வாறு வாழ்த்துகிறார் ?

'தமிழ்மொழி நிலைபெற்று வாழ்க. தமிழ்மொழியின் புகழ் கடல் கடந்தும் சென்று பரவுக. எங்கள் தமிழ்மொழி என்றென்றும் வாழிய. துன்பத்தை அகற்றித் தமிழ்மொழியை ஓங்கச் செய்து உலகம் விளங்குக. எந்நாளும் வளர்ந்து கொண்டிருக்கின்ற தமிழ்மொழி வாழ்க' என்று பலபடியாகப் பாரதியார் தமிழ் மொழியினை வாழ்த்துகின்றார்.

II. அறவுரை

1. திருக்குறள்

1. திருக்குறள் என்று பெயர் வரக் காரணம் என்ன ?

'திரு' என்பது மங்கல அடைமொழி ஆகும். 'குறள்' என்னும் சொல் குறள் வெண்பாக்களால் ஆகிய நூலைக் குறிக்கும். வெண்பா வகைகளுள் ஒன்று குறள் வெண்பா. குறுகிய அடிகளால் இயன்ற காரணத்தால் குறள் வெண்பா என்று அந்தப்பா பெயர் பெற்றது. நூலின் உயர்வு கருதி, 'குறள்' என்னும் சொல் ஈண்டுக் குறள் வெண்பாக்களால் இயன்ற நூலைக் குறித்தது.

2. வள்ளுவர் என்று பெயர் வரக் காரணம் யாது ?

திருக்குறட் பகுதியில், நூலாசிரியரைப் பற்றிய செய்திகள் என்னும் தலைப்பின் கீழ் இவ்வினாவிற்குரிய விடையினைக் காண்க.

3. புகழ் என்னும் அதிகாரம் திருக்குறளில் எங்கு அமைந்துள்ளது ? ஏன் ?

புகழ் என்னும் அதிகாரம் அறத்துப்பாலைச் சேர்ந்த இல்லற இயலின் ஈற்றதிகாரமாக உள்ளது. இல்வாழ்வார்க்குரிய பலவகை ஒழுக்கங்களைக் கூறினார் வள்ளுவனார். அத்தகைய ஒழுக்கங்களைக் கைக்கொண்டோர் இவ்வுலகில் எய்தும் பயன் புகழேயாகும். அத்தகைய புகழே என்றும் நிலைத்து நிற்கும். இக்காரணம் பற்றியே வள்ளுவனார் இல்லறவியலின் ஈற்றில் இவ்வதிகாரத்தை அமைத்தார்.

4. "உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்(கு)ஒன்று, ஈவார்மேல் நிற்கும் புகழ்." இக்குறளுக்குக் கூறப்படும் இருவிதமான உரைகளையும் வரைக.

விடையைச் செய்யுட்பகுதியின் 12-ஆம் பக்கத்திற் காண்க.

5. புகழது சிறப்பினைத் தொகுத்து வரைக.

மக்கள் உயிர்க்குப் பயன் புகழே. வறியவர்க்கு ஈந்து பெறும் புகழ் என்றும் நிலைத்து நிற்கும். ஈவாரது புகழையே கற்றோரும், மற்றோரும் பாராட்டுவர். உயர்ந்த புகழைத் தவிர மற்றவை இவ்வுலகில் நிலைத்து நில்லா.

6. 'புலவரைப் போற்றாது புத்தேள் உலகு'—ஏன்?

நிலவுலகில் அழியாது நிற்கும் புகழை நாட்டியவர் மண்ணுலகத்தோராலும் விண்ணுலகத்தோராலும் போற்றப்படுவர். அத்தகையோர் தேவர்

களைக் காட்டிலும் புகழ் வாய்க்தோர். ஞானியரும் புகழாளர்க்கு ஒப்பாக மாட்டார்கள். இவ்வாறு நிலவுலகில் புகழ் பெற்றவனைப் போற்றும் கருத்தினல் தேவருலகு புலவரைப் போற்ருது. புலவர் என்னும் சொல் ஈண்டுத் தேவர்களையும் ஞானியரையும் குறிக்கும்.

7. எத்தகைய திறம் வித்தகரிடம் இருக்கும் ?

தம்புகழுடம்பு செல்வமெய்தப் பூதவுடம்பு வறுமையடையப் பெறும் திறமும், புகழுடம்பு நிலைத்து நிற்கப் பூதவுடம்பு இறக்கப் பெறும் திறமும் வித்தகரிடம் இருக்கும்.

8. புகழ்பட வாழ மாட்டாதார் பிறரை நோதல் கூடாது. ஏன் ?

புகழ்பட வாழ மாட்டாதாரைப் பிறர் இகழ்வர். அவ்வாறு இகழ்பவரை நொந்து பயனில்லை. புகழ்பட வாழ மாட்டாதார் தம்மையே நொந்து கொள்ளுதல் வேண்டும். எத்தகையவரும் ஏதேனும் ஒரு விதத்தில் புகழ்பட வாழ முடியும். அங்ஙனம் இருக்க, ஒருவர் புகழ்பட வாழாமல் இருப்பது அவரது குற்றமே ஆகும். எனவே, பிறரை நொந்து பயனில்லை. அதுபற்றியே வள்ளுவனர் பிறரை நொந்து பயனில்லை என்ருர்.

9. வையத்தார்க்குப் பழி என்று சொல்லப்படுவது யாது?

மனிதன் இறந்த பிறகும் எஞ்சி நிற்பது புகழ். எத்தகையவனும் எத்துறையிலும் புகழ்பெற முடியும். மனிதன் இத்தகைய புகழை எய்தவில்லையேல் அதுவே வையத்தார்க்கு எல்லாம் பழி என்று சொல்லப்படும்.

10. எத்தகைய நிலத்தில் நல்விளைவு குன்றும் ? ஏன் ?

எத்தகைய புகழையும் பெருத மக்களின் பயனற்ற உடம்பைச் சுமந்த நிலத்தில் நல்விளைவு குன்றும். புகழில்லாத பாவ உடம்பை அந்நிலம் சுமக்கின்றதன்ருே ? அத்தகைய வெறுப்பினுலேயே விளைவு குறையும்.

11. வாழ்வாரும் வாழாதவரும் யாவர் ?

தம்மிடத்தில் பழியுண்டாகாமல் வாழ்பவரே உயிர் வாழ்வார் ஆவர். தம்மிடம் புகழ் உண்டாகாமல் வாழ்பவரே வாழாதவர் அல்லது இறந்தவர் ஆவர்.

12. புகழ் இல்லாதாரது தாழ்வினைத் தொகுத்து வரைக.

புகழ் இல்லாதவர்கள் விலங்காகவேனும் பிறந்திருத்தல் நல்லது. புகழ்பட வாழ மாட்டாதாரைப் பிறர் இகழ்வர். அவ்வாறு இகழ்பவரை நொந்து பயனில்லை. மனிதர் இறந்த பிறகும் எஞ்சி நிற்பது புகழ். அப்புகழை எய்தவில்லையேல், அது வையத்தார்க் கெல்லாம் பழியாகும். புகழில்லாத உடம்பைச் சுமந்த நிலத்தில் நல்விளைவு குறைபடும்.

13. கீழ்க்காணும் சொற்ருெடர்களுக்கு விளக்கவுரை தருக.

(அ) 'ஈதல் இசைபட வாழ்தல்'; (ஆ) 'ஒன்ரு உயர்ந்த புகழ்'; (இ) 'புலவரைப் போற்ருது புத்தேள் உலகு'; (ஈ) 'வித்தகர்க்கல்லால் அரிது'; (உ) 'வண்பயன் குன்றும்'.

இவ்வினுவிற்கு உரிய விளக்கவுரைகள் 'புகழ்' என்னும் அதிகாரத்து உரைப்பகுதியில் உள்ளன.

(அ) 1-ஆவது குறளின் விளக்கவுரையிற் காண்க.
(ஆ) 3 ,, ,, ,, ,,
(இ) 4 ,, ,, ,, ,,
(ஈ) 5 ,, ,, ,, ,,
(உ) 9 ,, ,, ,, ,,

14. புகழை எச்சம் என்று கூறுவது ஏன் ?

எஞ்சி நிற்பது 'எச்சம்' எனப்படும். மனிதன் இறந்தபிறகும் எஞ்சி நிற்பது புகழேயாதலால், அஃது எச்சம் எனப்பட்டது.

15. பொருட்பாலிலுள்ள பிரிவுகள் யாவை ?

அரசியல், அங்கவியல், ஒழிபியல் என்று மூன்று பிரிவுகள் பொருட்பாலில் உள்ளன.

16. அரசனுக்குரிய அங்கங்கள் யாவை ?

அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என்னும் ஆறும் அரசனுக்குரிய அங்கங்கள்.

17. எவற்றால் நாட்டிற்குக் கேடு உண்டாதல் கூடும்? அல்லது 'ஈதிவாதை' என்றால் என்ன ? விளக்குக.

பெருமழை, மழையின்மை, எலி, விட்டில், கிளி, அரசண்மை, பன்றி, மான், யானை, வேற்றரசு முதலியவற்றால் ஒரு நாட்டிற்குக் கேடு உண்டாதல் கூடும். இவற்றை வடநூலார் 'ஈதிவாதை' என்பர்.

18. நல்லதொரு நாட்டின் இலக்கணத்தைத் திருக்குறட் கருத்தினையொட்டி 20 வரிகளுக்குள் ஒரு கட்டுரை வரைக.

உழவர், அறவோர், கெடுதலில்லாத செல்வமுடையோர் ஆகியவர்கள் ஒருங்கு வாழுமிடம் நாடு என்று சொல்லத்தகும். அஃதாவது, நல்லதொரு நாடானது வறுமையும் அழிவும் இன்றிப் பெருஞ்செல்வத்துடன் விளங்க வேண்டும் என்பது வள்ளுவரது கருத்து. உழவர்கள் மிக்கிருக்கின்ற நாட்டில் வறுமை இராது என்பது திண்ணம். துறந்தோர், அந்தணர் முதலியோர் வாழும் நாட்டிற்கு அழிவு வராது. கொடுக்கக் கொடுக்கக் குறையாத செல்வத்தை உடையோர் நாட்டில் இருத்தல் வேண்டும். நல்லதொரு நாடு அளவுகடந்த பொருளைத் தன்னகத்தே கொண்டிருக்க வேண்டும். மிகுதியான விளைவினையும் அது கொண்டிருக்க வேண்டும். பெருமழை, மழையின்மை, எலி, விட்டில், கிளி, அரசுஅண்மை, பன்றி, மான், யானை, வேற்றரசு முதலியவற்றால் நாட்டிற்குக் கேடு வருதல் கூடும். அத்தகைய கேடுகள் வாராவண்ணம் தன்னுடைய அறத்தாலும் வீரத்தாலும் நீக்குகின்ற அரசனைக் கொண்டிருப்பது நல்லதொரு நாடாகும்.

பிற நாடுகளிலிருந்து வந்தோரையும் காத்து, தன் அரசனுக்கு இறைப் பொருளையெல்லாம் விரும்பிக் கொடுப்பதும், பசியும் நோயும் பகையும் இல்லாமல் இனிது நடப்பதும் நாடு என்று சொல்லத் தகும். அரசன் வலிமையும், நிலைப்படையும், அரண்களும் உடையவனாக இருந்தால் அவனது நாட்டிற்குப் பகைவரால் அழிவு வராது என்பது திண்ணம்.

மாறுபட்ட கருத்துக்களால் கூடுகின்ற பல கூட்டமும், கூட இருந்தே பாழ் படுத்தும் உட்பகையும், சமயம் வந்தால் அரசனைத் துன்புறுத்தும் கொல்வினைக் குறும்பரும் நல்லதொரு நாட்டில் இருக்க மாட்டார்கள். அத்தகையோரை அகற்றிய அரசனது நாடே நாடாகும். பகைவரால் கெடுதல் இன்றி, ஒருவேளை கேட்டினை அடைந்தாலும் தன் வளம் குறைபடாத நாடே எல்லா நாடுகளிலும் உயர்ந்தது.

19. நாட்டிற்கு உறுப்புக்கள் யாவை ?

கீழ்நீர் மேல்நீர் எனப்பட்ட நீரும், வாய்ப்புடைய மலையும், அம்மலையிலிருந்து வரும் ஆறும், வலிய கோட்டையும் நாட்டிற்கு உறுப்புக்கள் எனப்படும்.

20. நாட்டிற்கு அழகு தரும் ஐந்து யாவை?

நோய் இன்மை, செல்வம் உடைமை, விளைவு உடைமை, இன்பம் உடைமை, காவல் உடைமை ஆகிய ஐந்தும் நாட்டிற்கு அழகு தரும் ஐந்து எனப்படும்.

21. நாட்டின் குற்றங்கள் யாவை?

தன்னிடத்தில் வாழ்வோர் தேடி வருந்தினால் வளம் தருதல், வேந்தனோடு பொருந்துதல் இன்றி இருத்தல் ஆகியவை நாட்டின் குற்றங்கள் எனப்படும்.

22. எது நாடு ஆகும்? எது நாடு ஆகாது?

தன்னிடம் வாழ்வோர் தேடி வருந்தாமல் அவர்களிடம் தானே வந்து அடையும் செல்வத்தை உடைய இடம் நாடாகும். தன்னிடத்தில் வாழ்வோர் தேடி வருந்தினால் செல்வத்தை அடைவிக்கும் நாடு நாடாகாது.

23. கீழ்க் காண்பனவற்றிற்கு விளக்கவுரை எழுதுக.

(அ) 'தள்ளா விளையுள்'; (ஆ) 'தாழ்விலாச் செல்வர்'; (இ) 'அருங் கேட்டால்'; (ஈ) 'பொறை ஒருங்கு மேல் வருங்கால்'; (உ) 'பல்குழு'; (ஊ) 'பாழ் செய்யும் உட்பகை'; (எ) 'வளம் குன்று'; (ஏ) 'வாய்த்த மலை'.

இவ்வினாவிற்குரிய விளக்கவுரைகள் 'நாடு' என்னும் அதிகாரத்தின் உரைப்பகுதியில் உள்ளன.

(அ)	1 - ஆவது	குறளின்	விளக்கவுரையிற்	காண்க.	
(ஆ)	,,	,,	,,	,,	,,
(இ)	2	,,	,,	,,	,,
(ஈ)	3	,,	,,	,,	,,
(உ	5	,,	,,	,,	,,
(ஊ)	,,	,,	,,	,,	,,
(எ)	6	,,	,,	,,	,,
(ஏ)	7	,,	,,	,,	,,

24. 'பொறை ஒருங்கு மேல் வருங்கால்': வருவதற்குக் காரணம் யாது?

பஞ்சத்தாலும், அரசரது கொடுங்கோன்மையாலும், பகை அரசரது படையெடுப்பாலும் ஒரு நாட்டினர் மற்றொரு நாட்டிற்கு வருவர்.

25. ஒரு நாட்டிற்கு நோய் எப்பொழுது வருதல் கூடும்?

தீக்காற்று, கடுங்குளிர், மிகவெப்பம் முதலியவற்றால் ஒரு நாட்டிலுள்ள மக்களுக்கும், பிறவுயிர்களுக்கும் நோய்வருதல் கூடும். மக்களுக்குத் தேவையான பொருள்களின்மையாலும் நோய் உண்டாகலாம்.

26. பல்குழு என்று வள்ளுவனார் எதனைக் குறிப்பிடுகின்றார்?

சங்கேத வயத்தான் மாறுபட்டுக்கூடும் பல கூட்டம் 'பல்குழு' எனப்படும். சாதி பற்றியும், கடவுள் பற்றியும் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டோர் தனித்தனி கட்சியினராக வாழ்வர். அத்தகைய கட்சியினரை வள்ளுவனார் 'பல்குழு' என்று குறிப்பிடுகின்றார்.

27. உட்பகை என்றால் என்ன?

உடனுறைந்தே நாட்டினைப் பாழ்படுத்தும் பகைக்கு 'உட்பகை' என்று பெயர். வழிப்பறி செய்வோர், கள்வர், கோள் கூறுவோர் முதலிய மக்களும், பன்றி, புலி, கரடி முதலிய விலங்குகளும் உட்பகை என்று சுட்டப்படும்.

"அறவினை யாதெனிற் கொல்லாமை." — வள்ளுவர்.

28. ஒரு நாடு எப்பொழுது கேட்டினை அறியாதிருக்கும்?

அரசனுடைய வலிமையாலும், அந்நாட்டில் கடவுட் பூசையும் அறங்களும் நடைபெறுதலாலும் ஒரு நாடு கேட்டினை அறியாதிருக்கும்.

29. 'வளங்குன்றா நாடு' - ஈண்டு 'வளம்' என்று சுட்டப்பெற்றவை யாவை?

சுரங்கங்களிலிருந்து கிடைக்கும் பொன் வெள்ளி முதலிய உலோகங்களும், வயலிலும் சோலையிலும் விளையும் உணவுப் பொருள்களும் 'வளம்' என்னும் சொல்லால் சுட்டப்பெற்றன.

30. இருபுனல் யாவை?

கீழ்நீர், மேல்நீர் ஆகிய இரண்டும் இருபுனல் எனப்படும். கீழ்நீராவது ஊற்றுநீர். மேல்நீராவது குளம், ஏரி முதலியவற்றில் நிற்கும் நீர்.

31. 'வாய்ந்த மலை' என்றால் என்ன? அதனால் நாட்டிற்கு விளையும் நன்மை யாது?

நாட்டிற்குப் பயன்படும் மலை 'வாய்ந்த மலை' ஆகும். நாட்டின் ஒரு புறத்திலிருந்து பலவகை வளங்களைக்கொண்டு, மாரியில் உண்ட நீரைக் கோடையில் வெளிப்படுத்தும் தன்மையை உடைய மலையையே 'வாய்ந்த மலை' என்பர் அறிஞர். நாட்டின் ஒருபுறத்தே மலையிருத்தல் நல்லது. அது பலவகை வளங்களைக் கொண்டிருந்தால், நாட்டு மக்கள் தமக்கு வேண்டியவற்றை எளிதில் பெறுவர். மாரிக்காலத்தில் பெய்த மழைநீர் மலையில் பனியாக உறைந்திருக்கும். அந்தப் பனி கோடையில் உருகுவதால் ஆற்றில் நீர் பெருகும். எனவே, வாய்ந்த மலையினால் நாட்டிற்கு நன்மைகள் பல உண்டாகும் என்பதனை நாம் உணரலாம்.

32. இன்பம் என்றால் என்ன? ஒரு நாட்டில் உள்ள மக்களுக்கு எவ்விதங்களில் இன்பம் உண்டாதல் கூடும்?

மகிழ்ச்சியினால் மனத்தில் நிகழும் உணர்ச்சியே இன்பம் ஆகும். திருவிழா, யாகம் முதலியன நடைபெறுதலாலும், சான்றோர் வாழ்தலாலும், நுகர வேண்டியவை இருத்தலாலும், நிலநலத்தாலும், நீர்நலத்தாலும் ஒரு நாட்டில் வாழும் மக்களுடைய மனத்தில் இன்பம் உண்டாதல் கூடும்.

2. நாலடியார்

1. 'நாலடியார்' ஒரு தொகை நூல்: விளக்குக.

பலரால் பாடப்பெற்ற பாடல்கள் தொகுக்கப்பெற்று அமைந்திருக்கும் நூலே தொகைநூல் ஆகும். சமண முனிவர்கள் பலரால் பாடப்பெற்ற நீதி வெண்பாக்கள் நானூற்றினைப் பிற்காலத்தில் பதுமனார் என்னும் புலவர் தொகுத்து அமைத்தார். அந்நூலே நாலடியார் ஆகும். இவ்வாறு தொகுக்கப்பெற்ற நூலாதலால் இந்நூல் தொகைநூல் ஆயிற்று.

2. நாலடியார் எழுந்த காலத்தினைப் புலப்படுத்துக.

விடையை நாலடியாரின் முன்னுரையில் "நூலின் காலம்" என்னும் தலைப்பில் காண்க.

3. 'படாஅவாம் பண்புடையார்கண்': எவை?

தக்க நூல்களைப் படியாமல் கழிந்த நாட்களும், பெரியாரிடம் கேள்வியறிவின்பொருட்டுச் செல்லாமல் கழிந்த நாட்களும், இயன்ற ஒன்றை உரியவர்க்குக் கொடாமல் கழிந்த நாட்களும் பண்புடையார்கண் படா.

4. 'நாள்தோறும் பெரியவர் படிப்பர்': ஏன்?

கல்வி கரையற்றது. நம் வாழ்நாட்களோ சில. உயிர் உடலில் இருக்கும்வரை கற்றால்தான் ஓரளவு படிக்கவேண்டிய நூல்களைப் படிக்க முடியும். இக்காரணம்பற்றியே பெரியார் நாள்தோறும் படிப்பர்.

5. பொருட்பின்வருநிலையணி என்றால் என்ன? விளக்குக.

ஒரே பொருளைத் தருகின்ற பல சொற்கள் ஒரு பாடலில் வருதல் பொருட்பின்வருநிலையணி ஆகும். நாலடியார்ப் பாடல் ஒன்றில் ஒரே பொருளைத் தருகின்ற நாள், வைகல், பகல் என்னும் சொற்கள் வந்துள்ளன. ஆகவே அப்பாடலில் இவ்வணி உள்ளது.

6. ஈயாத செல்வன் நாலடியாரில் எவ்வாறு எள்ளி நகையாடப்படுகிறான்?

ஈயாத ஒருவனது செல்வத்தைக் குறித்து ஒருவன் இகழ்ந்து கூறுவது போல் அமைந்துள்ள ஒரு பாடல் நாலடியாரில் உள்ளது. ஒருவன், 'அறிவில்லாதவன் செல்வத்தைச் சேர்த்துவைத்து அதனைப் பயன்படுத்தாமல் என்னுடையது என்னுடையது என்று கூறிக்கொண்டிருக்கிறான். அவனது பொருளையே யானும் என்னுடையது என்னுடையது என்று கூறி மகிழ்வேன். ஈயாத அவனது செல்வம் அவனுக்கே உரியதாயின், அவன் அச்செல்வத்தைப் பிறருக்குக் கொடாமலும், செல்வத்தினால் இன்பத்தினை நுகராமலும் இருக்கின்றானே! அஃது ஏன்? யானும் அப்பொருளை அவ்வாறு செய்யாமல்தான் இருக்கின்றேன். எனவே, அச்செல்வம் என்னுடையது என்று யான் ஏன் நினைத்து மகிழ்தல் கூடாது?' என்று கூறுகின்றான். இதிலிருந்து ஈயாதவனது செல்வம் அதனை உடையவனுக்கு உரியதன்று என்பது வெளிப்படும்.

7. சிறிய ஆலம் விதையின் தன்மை யாது?

சிறிய ஆலம்விதை தக்க நிலத்தில் முளைத்தால் தழைத்து வளர்ந்து மிகுதியாக நிழலைக் கொடுக்கும். அரசர் தம்முடைய நாற்பெரும் படையுடன்கூடத் தங்குமாறு நிழலைத் தருகின்ற மரமாக அவ்விதை வளரும்.

8. "ஆலம் வித்து ஈண்டி இறப்ப நிழல் பயந்தாங்கு": உவமையை விளக்கிப் பொருத்திக் காட்டுக. அல்லது "தக்கார் கைப்பட்ட செல்வம் சிறியதாயினும் வான் சிறிதாப் போர்த்து விடும்": இதற்குக் காட்டப்பட்ட உவமையைப் பொருத்திக் காட்டுக.

இவ்விரு வினாக்களுக்கும் உரிய விடை நாலடியாரின் 3-ம் பாடலின்கீழ் அமைந்துள்ள **'இப்பாடலிலுள்ள உவமைப் பொருத்தம்'** என்னும் தலைப்பின்கீழ் அமைந்துள்ளது.

9. நிறைமதியின் தன்மை யாது?

நிறைமதியைக் கிரகணம் பிடிப்பது உண்டு. இராகு என்னும் பாம்பு சந்திரனை விழுங்கி உமிழ்தல் உண்டு என்று புராணம் கூறும். இதனையே நாம் கிரகணம் என்கின்றோம். தனது ஒரு பாகத்தை இராகு என்னும் பாம்பு பிடித்து மறைத்தாலும் நிறைமதியானது தனது மற்றொரு பாகத்தால் பூமியில் ஒளி விளங்குமாறு செய்யும்.

10. குடிப் பிறந்தாருடைய தன்மை யாது?

குடிப்பிறந்தார் வறுமைவரினும் பிறர்க்கு உதவுவர். வறுமை மிகுதியால் ஒன்றும் கொடுக்கமுடியாத நிலையில் இருந்தாலும் பிறர்க்கு உதவி செய்யும் வகையில் அவர்கள் தளரமாட்டார்கள்.

11. கிரகணம் பிடித்த காலத்திலும் நிறைமதி பொருள்களை விளக்குதல் எதற்குவமையாகக் காட்டப்பட்டது? உவமையைப் பொருத்திக் காட்டுக. அல்லது உயர்குடிப் பிறந்தாரின் தன்மைக்குக் காட்டப்பட்ட உவமையை விளக்குக.

இவ்வினாக்களுக்குரிய விடையை நாலடியார்ப் பகுதியில் உள்ள 4-ம் பாடலின்கீழ் அமைந்திருக்கும் 'இப்பாடலிலுள்ள உவமைப் பொருத்தம்' என்னும் தலைப்பின் கீழ்க் காண்க.

12. கல்வியின் பெருமைபற்றி நாலடியார்ப் பாடப் பகுதியிலிருந்து நீவிர் அறிவனவற்றைத் தொகுத்து 20 வரிகளுக்குள் ஒரு கட்டுரை வரைக.

கல்வி கரை இல்லாதது. கற்பவருடைய வாழ்நாட்களோ சில. அந்நாட்களிலும் பிணியும், நோயும், பசியும் ஒருவனை வருத்தும். எனவே, பெரியவர்கள் நாள்தோறும் படித்துக் கொண்டிருப்பார்கள்; அறிவுடையவர்களிடம் நாள்தோறும் சென்று அறிவுரைகளைக் கேட்பர்.

பொருட்செல்வத்தினும் கல்விச் செல்வமே சிறந்தது. ஏன்? வைக்கப்பெற்ற இடத்திலிருந்து கல்வியைப் பிறரால் கவரமுடியாது. தக்க மாணவர்க்குக் கற்பித்தால் அக்கல்வி குறையாது. செல்வாக்கினையுடைய அரசர்கள் கோபித்தாலும் அக்கல்வியினைக் கவர முடியாது. தாயத்தாரும், கள்வரும் ஒருவனிடமிருந்து கல்வியைப் பிரிக்க முடியாது. எனவே, ஒருவன் தன் மக்களுக்கு என்று தேடி வைக்கத்தக்க செல்வம் கல்வியேயாகும். அக்கல்வியே 'எச்சம்' என்று சொல்லப்படும். இக்கருத்துப்பற்றியே வள்ளுவனார், 'மகனை அறிவுடையவர் சபையில் முதல்வனாக இருக்குமாறு செய்வதே ஒரு தந்தை மகனுக்குச் செய்யும் நன்மை' என்று கூறியுள்ளார்.

குற்றமற்ற கல்வியினையும், கேள்வியினையும் உடைய பெரியவர்கள், பகைமை அகற்றி ஒன்று கூடியிருக்குங்கால், அவர்களுடன் உரையாடி அளவளாவுவதால் பெறும் இன்பமே பேரின்பமாகும். அத்தகைய இன்பம் தேவர் உலகிலும் கிடைத்தல் அரிது. ஏன்? மக்களுடைய அறியாமையைப் போக்கி நிலையான அறிவொளியைத் தந்து இன்பம் பயப்பது கல்வி. மேலும், கல்வியறிவு முத்திக்கும் வழிகாட்டும். எனவே, துறக்க இன்பத்தைக் காட்டிலும் உயர்ந்தது கற்றறிந்தோருடன் அளவளாவுவது என்பதனை நாம் உணரலாம்.

13. 'எச்சம் என ஒருவன் மக்கட்குச் செய்வன' யாவை? ஏன்?

எச்சம் என்று ஒருவன் தன் மக்களுக்குத் தேடி வைக்கத்தக்கவை கல்விப் பொருள்களேயாம். பொன், மணி முதலியவற்றை மக்கள் செலவு செய்து அழித்துவிடுதல் கூடும். கல்வியை அங்ஙனம் செய்ய இயலாதன்றே! மேலும், கல்விப் பொருளைத் தாயத்தார், கள்வர், வலியர், அரசர் முதலியோர் கவர முடியாதன்றே? அதுபற்றியே இவ்வாறு கூறப்பட்டது.

14. பெரியவர் நட்பு எத்தகையது?

பெரியவர் நட்பு பிறைச்சந்திரனைப் போல நாள்தோறும் வளரும் தன்மையை உடையது.

15. சிறியோர் நட்பு எத்தகையது?

சிறியோர் நட்பு முழுமதியைப் போல நாள்தோறும் முறையாகத் தானாகவே குறைந்துவிடும் தன்மையை உடையது.

16. பெரியோர் நட்புக்கும் சிறியோர் நட்புக்கும் காட்டப்பட்ட உவமைகள் யாவை ?

பெரியோர் நட்பு நாள்தோறும் வளர்தற்குப் பிறைச்சந்திரன் நாள் தோறும் கலைகள் நிறையப்பெறுதல் உவமையாகக் காட்டப்பெற்றுள்ளது. சிறியோர் நட்பு நாள்தோறும் குறைதற்கு முழுமதி நாள்தோறும் முறை யாகக் குறைதல் உவமையாகக் காட்டப்பட்டது.

17. பெரியோர் நட்பு வளர்தற்கும் சிறியோர் நட்பு தேய்தற்கும் காரணம் என்ன ?

தமக்குள் ஒருவர் மற்றொருவருடைய குணத்தை முன்பு அறியாமல் இருத்தலும், பின்பு அறிதலுமே பெரியோர் நட்பு வளர்தற்கும் சிறியோர் நட்பு தேய்தற்கும் காரணமாகும்.

18. கீழ்க் காண்பனவற்றிற்கு விளக்கவுரை எழுதுக.

(அ) ‘கல்லாது போகிய நாள்’; (ஆ) ‘ ஒல்வ, கெடாது ஒழிந்த பகல்’; (இ) ‘யானும் அதனை அது’; (ஈ) ‘தக்கார்கைப் பட்டக்கால் வான்சிறிதாப் போர்த்துவிடும்’; (உ) ‘இகலிலர்’.

இவ்வினாவிற்குரிய விளக்கங்கள் நாலடியார்க் கமைந்த விளக்கவுரையின் கண் உள்ளன :

(அ) 1 ஆவது பாடலின் விளக்கவுரையைக் காண்க.
(ஆ) ,, ,, ,, ,, ,,
(இ) 2 ,, ,, ,, ,,
(ஈ) 3 ,, ,, ,, ,,
(உ) 6 ,, ,, ,, ,,

3. பழமொழி

1. பழமொழி ஆசிரியருடைய பெயர், ஊர், சமயம், காலம் ஆகிய வற்றைக் குறிப்பிடுக.

விடையைப் பழமொழிப் பகுதியின் முன்னுரையிற் காண்க.

2. ‘நாள்தோறும் நல்லறத்தைச் செய்தல் நன்று’ ஏன் ?

நல்லறத்தைச் செய்வோன் இவ்வுலகத்தில் புகழைப் பெறுவான். மேலு லகத்திலும் அவன் இன்பத்தை அடைவான். இவ்வாறு இரண்டு உலகங் களிலும் இன்பம் கிடைத்தலால் நாள்தோறும் நல்லறம் செய்தல் நன்று.

3. ‘ வன்சொல் வழியராய் வாழ்தலும் உண்டாமோ ?’: யார் ? ஏன் ?

வன்சொல்லாலும் இன்சொல்லாலும் வரும் பயனைக் குற்றமின்றி அறியவல்லவர் வன்சொல் வழியராய் வாழ மாட்டார்கள். வன்சொல் துன் பம் தரும் என்பதையும், இன்சொல் துன்பம் தராது என்பதையும் அவர்கள் நன்கு உணர்வார்களாதலாலேயே இவ்வாறு கூறப்பட்டது.

4. ‘நாழி கொடுப்போர்க்கு என்றும் உறுதியே சூழ்க’ : ஏன் ?

நாழி என்பது ஈண்டுச் சிறிய உதவியைக் குறித்தது. சிறிய உதவி செய்தவர்க்கும் எக்காலத்திலும் உறுதி தரத்தக்கனவற்றையே நினைக்க வேண்டும். அவ்வாறு நடப்பதைப்போல் பெரும்பயன் தருவது வேறு இல்லை யாதலால் இவ்வாறு கூறப்பட்டது.

“ கொலையஞ்சிக் கொல்லாமை சூழ்வான் தலை.” — வள்ளுவர்.

5. ஒருவனுக்குப் புகழ் எப்பொழுது வரும் என்று பழமொழி கூறுகிறது?

சினம் மிகக்கொண்டு ஒருவர் தீச்செயலைச் செய்தபொழுது அச்செயலைப் பொறுத்து அவர்க்கு நன்மை செய்து ஒழுகுவோனுக்குப் புகழ்வரும் என்று பழமொழி கூறுகின்றது.

6. 'தவற்றை நினைத்துத் தன் கை குறைத்தான்' : யார்? அவன் கை குறைத்ததற்குப் பழமொழி ஆசிரியர் கூறும் காரணம் யாது?

தவற்றை நினைத்துத் தன் கை குறைத்தவன் பொற்கைப் பாண்டியன். 'பிறர் காணார் என்று கருதி அறிவுடையவர்கள் தீச்செயலைச் செய்ய மாட்டார்கள். அப்பாண்டியன் தான் செய்த செயல் தனக்குத் தகுதியன்று என்று அறிந்தான். அவனது மனமே அவனுக்குச் சான்ருக இருந்தது. எனவே, அவன் தனது குற்றத்தை நினைத்துப் பார்த்துத் தன் கையை வெட்டிக்கொண்டான்' என்று பழமொழி ஆசிரியர் அதற்குக் காரணம் கூறுகின்ருர்.

7. 'தவற்றை நினைத்துத் தன் கை குறைத்தான் தென்னவன்' : ஈண்டுக் குறிப்பிடப்பெற்றுள்ள வரலாறு யாது?

விடையைப் பழமொழிப் பகுதியின் 6-ஆவது பாடலின் கீழ் அமைந்த விளக்கவுரையில் அதே தலைப்பில் காண்க.

8. முல்லைக்குத் தேர் ஈந்தவன் யாவன்? மயிலுக்குப் போர்வை கொடுத்தவன் யாவன்? அவர்களுடைய கொடையிலிருந்து நீ அறிந்து கொள்வது யாது?

முல்லைக்குத் தேர் கொடுத்தவன் பாரி. மயிலுக்குப் போர்வை கொடுத்தவன் பேகன். முல்லைக்கொடியின் இடரையும், மயிலின் இடரையும் வேறு பொருள்களைக் கொடுத்துத் தீர்க்கும் வகையை அவர்கள் அறிவர். எனினும், அறியாதவர்களைப் போலத் தம்மிடம் இருந்த சிறந்த பொருள்களை அவர்கள் கொடுத்தமையால் அறிமடமும் சான்ருேர்க்கு அழகாகும் என்பதனை நாம் உணரலாம்.

9. பாரி முல்லைக்குத் தேர் ஈந்த வரலாற்றையும், பேகன் மயிலுக்குப் போர்வை அளித்த வரலாற்றையும் சுருக்கி எழுதுக.

விடையைப் பழமொழிப் பகுதியில் 7-ஆம் பாடலுக்கமைந்த விளக்கவுரையிற் காண்க.

10. நும் பழமொழிப் பாடப் பகுதியில் வந்துள்ள பழமொழிகள் யாவை?

எம் பாடப்பகுதியில் 1. 'வேள்வாய் கவட்டை நெறி'; 2. 'இன்சொல் இடர்ப்படுப்பது இல்'; 3. 'நீர் போயும் ஒன்றிரண்டாம் வாணிகம் இல்'; 4. 'தான் நோன்றிட வரும் சால்பு'; 5. 'நிறை குடம் நீர் தளும்பல் இல்'; 6. 'காணர் எனச் செய்யார் மாணவினை'; 7. 'அறிமடமும் சான்ருேர்க்கு அணி' என்னும் பழமொழிகள் வந்துள்ளன.

11. பின்வரும் பழமொழிகளை விளக்குக:

(அ) "வேள்வாய் கவட்டை நெறி"
(ஆ) "இன்சொல் இடர்ப்படுப்பது இல்"
(இ) "நீர் போயும் ஒன்றிரண்டாம் வாணிகம் இல்"
(ஈ) "தான் நோன்றிட வரும் சால்பு"
(உ) "நிறைகுடம் நீர் தளும்பல் இல்"

(ஊ) "காணார் எனச் செய்யார் மாணவினை"
(எ) "அறிமடமும் சான்றோர்க்கு அணி"

விளக்கங்கள் பழமொழிப் பாடல்களின் உரைப்பகுதியில் உள்ளன :

(அ)	1 - ஆவது	பாடலின்	விளக்கவுரையிற்	காண்க.	
(ஆ)	2	,,	,,	,,	,,
(இ)	3	,,	,,	,,	,,
(ஈ)	4	,,	,,	,,	,,
(உ)	5	,,	,,	,,	,,
(ஊ)	6	,,	,,	,,	,,
(எ)	7	,,	,,	,,	,,

12. (அ) 'ஈனுலகத் தாயின் இசைபெறும்' (ஆ) 'நாழி கொடுப் போர்க்கு என்றும் உறுதியே சூழ்க' (இ) 'ஒறுத்தாற்றின் பயன் இன்றே' (ஈ) 'கற்றறிந்தார் கண்ட அடக்கம்'—இவற்றை விளக்குக.

விளக்கங்கள் பழமொழிப் பகுதியில் உள்ளன:

(அ)	1 - ஆவது	பாடலின்	விளக்கவுரையிற்	காண்க.	
(ஆ)	3	,,	,,	,,	,,
(இ)	4	,,	,,	,,	,,
(ஈ)	5	,,	,,	,,	,,

III. கதை

1. சிலப்பதிகாரம்

1. சிலப்பதிகாரம் என்று பெயர் வரக் காரணம் என்ன ?

சிலப்பதிகாரம் என்னும் சொற்றொடர் 'சிலம்பு + அதிகாரம்' என்று விரியும். அச்சொற்றொடர் சிலம்பினது அதிகரித்தலை உடைய நூலைக் குறித்தது. இந்நூற் கதைநிகழ்ச்சிக்குச் சிலம்பே இன்றியமையாததாகலின் இவ்வாறு பெயர் வந்தது.

2. சிலப்பதிகாரம் எந்நூல் வகையைச் சேர்ந்தது? அதனுடன் வைத்து எண்ணப்படும் வேறு நூல்கள் யாவை?

பெருங்காப்பிய வகையைச் சேர்ந்தது சிலப்பதிகாரம். இந்நூலுடன் மணிமேகலை, சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என்னும் நூல்கள் ஒருங்கு வைத்து எண்ணப்படுகின்றன.

3. பெருங்காப்பியம் என்றால் என்ன? தமிழிலுள்ள பெருங்காப்பியங்கள் யாவை?

கதை ஒன்றைத் தழுவி, வருணனைகளையும், அழகுகளையும், சுவைகளையும் கொண்ட செய்யுள் நூல் பெருங்காப்பியம் ஆகும். சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்னும் ஐந்து நூல்களும் ஐம்பெருங்காப்பியங்கள் எனப்படும்.

4. சிலப்பதிகாரத்தின் பெருமையைச் சுருக்கி வரைக.

விடையைச் சிலப்பதிகாரத்தின் முன்னுரையில் 'நூலின் பெருமை' என்னும் தலைப்பில் காண்க.

5. சிலப்பதிகார ஆசிரியரின் பெயர், மரபு, தந்தையின் பெயர், உடன் பிறந்தவன் பெயர், சமயம், காலம் ஆகியவற்றைக் குறிப்பிடுக.

விடையைச் சிலப்பதிகாரத்தின் முன்னுரையில் 'ஆசிரியரைப்பற்றிய செய்திகள்' என்னும் தலைப்பில் காண்க.

6. சிலப்பதிகாரத்துடன் தொடர்பு கொண்ட நூல் எது? ஏன்?

சிலப்பதிகாரத்துடன் தொடர்புகொண்ட நூல் மணிமேகலை. சிலப்பதிகாரக் கதைத் தலைவனாகிய கோவலனுக்கு மாதவியிடம் பிறந்த மகளே மணிமேகலை ஆதலாலும், மணிமேகலை ஆசிரியராகிய சாத்தனாரே சிலப்பதிகாரத்தைப் பாடுமாறு இளங்கோவடிகளை வேண்டிக் கொண்டாராதலாலும் சிலப்பதிகாரத்துடன் தொடர்புகொண்ட நூல் மணிமேகலை என்று நாம் உணரலாம்.

7. இளங்கோவடிகளது வரலாற்றைச் சுருக்கி எழுதுக.

5-வது கேள்வியின் விடையுடன் சிலப்பதிகாரத்தின் முன்னுரைப் பகுதியில் உள்ள 'ஆசிரியரைப் பற்றிய வரலாறு' என்னும் தலைப்பில் உள்ள செய்தியும் சேர்ந்து அமையும் பகுதியே இவ்வினாவிற்கு விடையாகும்.

8. சிலப்பதிகாரம் பாடப் பெற்ற வரலாறு யாது?

சிலப்பதிகாரத்தின் முன்னுரைப் பகுதியில் இத்தலைப்பின் கீழ்க் காண்க.

9. சிலப்பதிகாரம் கூறும் உறுதிப்பொருள்கள் யாவை?

சிலப்பதிகாரத்தின் முன்னுரைப் பகுதியில் இதே தலைப்பில் காண்க.

10. பிறநூல்களுக்கும் சிலப்பதிகாரத்திற்கும் உள்ள வேறுபாட்டினைச் சுருக்கி வரைக.

சிலப்பதிகாரத்தின் முன்னுரைப் பகுதியில் இதே தலைப்பின் கீழ்க் காண்க.

11. கண்ணகி பாண்டியனது அரண்மனை வாயிற்காவலனை விளித்துக் கூறியவை யாவை?

கண்ணகி வாயிற் காவலனை விளித்து, கணவனை இழந்தவள் ஒருத்தி ஒற்றைச் சிலம்பினை ஏந்தியவளாய் அரண்மனை வாயிலினிடத்தே உள்ளாள் என்று அரசனிடத்தில் விரைவில் அறிவிக்குமாறு கூறினாள்.

12. "வாயிலோயே! வாயிலோயே": இவ்வாறு கண்ணகி இருமுறை விளித்ததற்குக் காரணம் என்ன? இங்குள்ள நயத்தினையும் புலப்படுத்துக.

விரைவு பற்றியும், வெகுளிபற்றியும், துன்பம் பற்றியும் ஈண்டு இவ்வாறு அடுக்கு அமைந்தது. 'வாயிலோயே' என்பது வாயிற் காவலன் என்று பொருள்படும். உள்ளுறை பொருள் அமையுமாறு சொற்களை அமைத்தல் பெரும் புலவர்கட்கு இயல்பு. அவ்வியல்பு பற்றி ஆராய்ந்தால், இங்கு இச் சொல், 'பேச வழி இல்லாதவனே' என்றும், 'உண்மை இல்லாதவனே' என்றும் பொருள்படும். 'வாய்' என்னும் சொல்லுக்கு 'வழி' என்றும், 'உண்மை' என்றும் பொருள் உண்டு. அரசன் ஆராயாமல் தவறு செய்துவிட்டான் என்பது உண்மை என்னும் செய்தியை ஈண்டு மறைமுகமாக வலியுறுத்திக் கூறுகின்றார் ஆசிரியர்.

இவ்வாறு பல பொருள்கள் தோன்றுமாறு நயம்பட உரைத்தல் பெரும் புலவர்கட்கே இயலும்.

13. "இணையரிச் சிலம்பு ஒன்று ஏந்திய கையள்" என்று கண்ணகி ஏன் கூறினள்?

சிலப்பதிகாரப் பகுதியில் ஒன்று முதல் நான்கு முடிய உள்ள அடிகளுக்கு அமைந்த விளக்கவுரையில் "இணையரிச் சிலம்பு ஒன்று" என்னும் தலைப்பில் விடைகாண்க.

14. வாயிற் காவலன் பாண்டியனை எவ்வாறு விளித்து வாழ்த்தினன்? ஈண்டு வாழ்த்துக்கள் பல வந்ததற்குக் காரணம் என்ன?

வாயிற் காவலன், 'கொற்கை நகருக்கு அரசனே, வாழ்க. பொதியின் மலையையுடைய தலைவ, வாழ்க. செழிய, வாழ்க. தென்னவனே! வாழ்க. பழிச் செயல் செய்யாத பஞ்சவனே, வாழ்க' என்று அரசனை வாழ்த்தினன்.

அரசனைப் பன்முறை வணங்கினன் வாயிற் காவலன். அவ்வாறு வணங்கும் பொழுதெல்லாம் வாழ்த்தினனாதலின் வாழ்த்துக்கள் பலவாயின.

15. செழியன், பஞ்சவன் - இச்சொற்களை ஆராய்க.

சிலப்பதிகாரப் பகுதியில் 5—8 வரிகளுக்கு அமைந்த விளக்கவுரையில் இத்தலைப்புக்களில் காண்க.

16. பாண்டியனை வாயிற் காவலன், 'பழியொடு படராப் பஞ்சவ' என்று விளிக்கக் காரணம் என்ன?

முன்வினாவிற்கு விடையுள்ள பகுதியில் இதே தலைப்பின்கீழ் விடையைக் காண்க.

17. வாயிற் காவலன் கண்ணகியின் தோற்றத்தைப்பற்றி மன்னனிடம் கூறியவை யாவை?

வாயிற் காவலன் பாண்டியனைப் பலமுறை வணங்கி வாழ்த்தி அவனை நோக்கி, "மன்னவ, வாழ்க. நம் அரண்மனை வாயிலில் ஒரு தி வந்து நிற்கின்றாள். வெற்றிக்குரிய தெய்வமாகிய கொற்றவையும், தெய்வ கன்னியருள் ஒருத்தியாகிய பிடாரியும், சிவபிரானை நிருத்தமாடச் செய்த பத்திரகாளியும், காளியும், தாருகனைப் பிளந்த துர்க்கையும் அல்லள் அவள் கறுவும், சினமும் கொண்டவள்போல் அவள் நிற்கின்றாள்; சிலம்பு ஒன்றினைத் தூக்கிப் பிடித்துள்ளாள்; கணவனை இழந்தவள் அவள்." என்று கூறினன்.

18. "அறுவர்க் கிளைய நங்கை"; "இறைவனை ஆடல்கண் டருளிய அணங்கு"; "தாருகன் பேருரங் கிழித்த பெண்" :—இவ்வடிகளை விளக்கி எழுதுக.

விளக்கங்களைச் செய்யுட் பகுதியில் 47-ம் பக்கத்தில் காண்க.

19. கண்ணகியைக் கண்ட வாயிற் காவலனுக்கு எழுந்த ஐயம் யாது? அவ்வையம் அவனுக்கு எவ்வாறு தெளிந்தது?

விடையை 48-ம் பக்கத்தில் இதே தலைப்பில் காண்க.

20. வாயிற் காவலன் பாண்டியனிடம், "கணவனை இழந்தாள் கடையகத்தாளே" என்று இரு முறைகள் கூறக் காரணமென்ன?

விடையை 47-ம் பக்கத்தில் விளக்கவுரையிற் காண்க.

21. கண்ணகி வழக்குரைத்த திறத்தினைப் பற்றி இருபது வரி அளவில் ஒரு கட்டுரை வரைக: அல்லது கண்ணகி பாண்டியனிடம் தன்னை எவ்வாறு அறிமுகப்படுத்தினாள்? அல்லது "யாரையோ நீ மடக் கொடியோய்!" என்று வினவிய பாண்டியனுக்குக் கண்ணகி கூறிய மாற்றத்தினை இருபது வரி அளவில் வரைக.

நீரொழுகும் கண்களுடன் இளங்கொடிபோல் தன்முன் நின்ற கண்ணகியை நோக்கிப் பாண்டியன், "யாரையோ நீ மடக்கொடியோய்" என்று வினவினான். அவ்வளவில் கண்ணகிக்குச் சீற்றம் பொங்கி எழுந்தது. தனது நாட்டையாண்ட சோழ மன்னர்களுடைய செங்கோல் ஆட்சித் திறம் அவளது நினைவுக்கு வந்தது. சோழர்களுடைய செங்கோன்மையைக் குறிப்பிடுமுகத்தான் அவள் பாண்டியன் கொடுங்கோல் புரிந்தமையைச் சுட்டிக் காட்ட விரும்பினாள்.

எனவே, கண்ணகி பாண்டியனை விளித்து, "ஆராய்ச்சி யற்ற அரசனே! உன்னிடத்தே சொல்லத் தருவது ஒன்று உண்டு. தேவர்களும் வியக்குமாறு புரு ஒன்றினது மிக்க துன்பத்தினைப் போக்கினான் சிபிச் சோழன். அற்பமான புருவின் உயிரைக் காக்கும் பொருட்டுப் பெரு மன்னனான தான் தன் உயிரைத் தருவதோ என்று அவன் கருதினானல்லன்; தன் உயிரையே கொடுக்க முற்பட்டுத் தராசுத் தட்டில் ஏறினான். கடைவாயிலில் கட்டப் பெற்றிருந்த மணியின் ஓசை எழும்ப, பசுவொன்றின் கண்ணீர் தன் மனத்தைச் சுடுதலால், தானே தன்னுடைய பெறற்கரிய மகனைத் தேர்க் காலிலிட்டுக் கொன்றான் மனுநீதிச் சோழன். அற்பமான கன்று ஒன்றின் பொருட்டுத் தனது ஒரே மகனைக் கொல்வதா என்று அவன் நினைத்தானல்லன். முறை செலுத்தலே தன் கடமை என்று அவன் எண்ணினான். இத்தகைய செங்கோலரசர்களாகிய சோழ மன்னர்கட்குரிய காவிரிப்பூம் பட்டினமே யான் பிறந்த ஊராகும். அவ்வூரில் பெருங்குடி வணிகனாகிய மாசாத்துவானது மகனாகிய கோவலன், வாழும்பொருட்டு நின்னகருக்கு வந்தான். வணிகத் தொழிலை வளம்பட நடத்தி வாழ்க்கையைத் தளிர்க்கச் செய்யலாம் என்று அவன் எண்ணினான். இவ்வாறு ஊழ்வினை வயப்பட்டு என் காற் சிலம்பை விற்றல் காரணமாக உன்னிடம் வந்து கொலையுண்ட கோவலனின் மனைவி யான். கண்ணகி என்பது என் பெயர்." என்று கூறினாள்.

22. "இமையவர் வியப்பப் புள்ளுறு புன்கண் தீர்த்தோன்"— யாவன்? அவனது வரலாற்றைச் சுருக்கி வரைக.

விடையினை 51-ஆம் பக்கத்தில் உள்ள விளக்கவுரையில் காண்க.

23. "தான் தன் அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்"— யாவன்? அவனது வரலாற்றினைச் சுருக்கி வரைக.

விடையை 51-ஆம் பக்கத்தில் உள்ள விளக்கவுரையில் காண்க.

24. சிபி மன்னன், மனுச் சோழன் ஆகிய இருவர் வரலாற்றையும் கண்ணகி பாண்டிய் மன்னனிடம் சுட்டிக் காட்டக் காரணம் என்ன?

விடையினை 52-ஆம் பக்கத்தில் 'இவ்விரு கதைகளையும் கண்ணகி சுட்டிக் காட்டிய காரணம்' என்னும் தலைப்பில் காண்க.

"நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டா." — உலகநீதி.

25. கண்ணகி பாண்டிய மன்னனை "சூழ் கழல் மன்ன" என்றும், "கொற்கை வேந்தே" என்றும் விளிக்கக் காரணம் என்ன? இவற்றின்கண் அமைந்துள்ள நயத்தையும் புலப்படுத்துக.

கண்ணகி வழக்குரைக்கும் பொருட்டுப் பாண்டிய மன்னனிடம் வந்த காலையில் பாண்டியன், "யாரையோ நீ மடக்கொடியோய்?" என்றான். ஆராய்ச்சியின்றித் தன் கணவனைக் கொன்றுவிட்டு, நயவுரை கூறுகின்ற அப்பாண்டியனிடம் சினம் கொண்டாள் கண்ணகி; தான் பிறந்த ஊரையும் சோழ மன்னர்களின் செங்கோல் ஆட்சித் திறத்தையும் அவனுக்குக் குறிப்பினால் புலப்படுத்தினாள். அவ்வாறு கூறுங்கால் அவள் "சூழ்கழல் மன்ன" என்று அவனை விளித்தாள். ஏன்? பாண்டியனிடம் கழல் சூழ்வு இருக்கின்றதே ஒழிய அறிவுச் சூழ்வு இல்லையன்றே! இதனைக் குறிப்பினால் அவனுக்குப் புலப்படுத்தவே கண்ணகி அவனை இவ்வாறு விளித்தாள் என்று இளங்கோவடிகள் பாடியுள்ளார்.

இவ்வாறே, "கொற்கை வேந்தே" என்னும் விளியிலும் இளங்கோவடிகளார் நயமான உட்பொருள் ஒன்றினை அமைத்துள்ளார். கொற்கை நகரமும் பாண்டியனுக்குரியதேனும், அந்நகரத்தின் பெயரைப் பாண்டிய மன்னனுக்கு அடைமொழியாக அமைத்ததற்கு வேறொரு காரணம் இருத்தல் வேண்டும். அவன், கோவலனை ஆராயாமல் கொன்ற கையினை உடையவன் (கொல்+கை=கொற்கை) அன்றே? இக்கருத்தினைப் பாண்டியனுக்கு அறிவுறுத்தும் பொருட்டே அடிகளார் நயமாக இவ்வாறு அமைத்தார் என்று கொள்ளுதல் பொருந்தும்.

26. "வெள்வேற் கொற்றம்" என்று பாண்டியன் எதனைக் குறிப்பிட்டான்? விளக்குக.

கள்வனைக் கொல்லுதலே, "வெள்வேற் கொற்றம்" என்று பாண்டியன் குறிப்பிட்டான். "வெள்வேற் கொற்றம்" என்பது அரச நீதியாகும். கள்வர் முதலிய கொடியவர்களைக் கொலை செய்தலே செங்கோல் மன்னருடைய அரசநீதியாகும் என்பதனைக் கருத்திற் கொண்டே, அவன் இவ்வாறு கூறினான். கோவலன் கள்வனே என்று பாண்டியன் ஐயமின்றி நினைத்திருந்தமைக்கு இவ்வடி ஒரு சான்றாகும்.

27. கொற்கை நகரைப் பற்றிச் சிறு குறிப்பு வரைக.

விடையை 53-ஆம் பக்கத்தில் அமைந்த விளக்கவுரையில் 'கொற்கை' என்னும் தலைப்பின்கீழ்க் காண்க.

28. "மன்னவன் வாய்முதல் தெறித்தது மணியே": விளக்குக.

விடையை 55-ஆம் பக்கத்தில் இதே தலைப்பில் காண்க.

29. கண்ணகியால் உடைக்கப்பட்ட சிலம்பிலிருந்து வெளிப்பட்ட மணியினைக் கண்ட மன்னனின் நிலையையும், கூற்றையும் விளக்கி எழுதுக.

பாண்டியன் கோவலனிடமிருந்து கொணர்வித்த சிலம்பினைக் கண்ணகியின் முன்வைத்தான். கண்ணகி அதை எடுத்து உடைத்தாள். அதிலிருந்து மாணிக்கப்பரல் எழுந்து மன்னவனது வாய்முதலில் தெறித்தது. மணியைக் கண்டான் மன்னன்; தன்பிழையினை உணர்ந்தான். அவ்வளவில் அவன் தாழ்வுற்ற குடையனாய், சோர்வுற்ற செங்கோலனாய்த் தளர்ந்தான். பின்பு அவன், 'பொற்கொல்லனது பொய்யுரையைக் கேட்டு, உண்மையென்று கருதி முறை தவறிய யான் ஓர் அரசன் ஆவேனோ? ஆகேன். கோவலன் கள்வனல்லன். யானே கள்வன். மக்கட் கூட்டத்தைக் காக்கின்ற பாண்டி

நாட்டின் ஆட்சி என்னை முதலாகக் கொண்டு தவறு அடைந்தது. என் ஆயுள் கெடுக' என்று சொல்லிக் கொண்டே மயங்கி வீழ்ந்தான்.

30. 'தாழ்ந்தகுடையன்; தளர்ந்த செங்கோலன்': இவற்றை விளக்குக.

விளக்கங்களை 56-ஆம் பக்கத்தில் அவ்வத்தலைப்புகளில் காண்க.

31. "கெடுக என் ஆயுள்" எனப் பாண்டியன் கூறி மயங்கி விழுந்தமைக்குக் காரணம் யாது ?

பழி வருவனவற்றைச் செய்யாத பாண்டியர் குடிக்குத் தான் பழிச்சொல் ஒன்றை உண்டாக்கி விட்டானதலால், இவ்வுலகில் வாழ நாணிய பாண்டியன் 'கெடுக என் ஆயுள்' எனக்கூறி மயங்கி வீழ்ந்தான்.

32. "யானோ அரசன் யானே கள்வன்" என்று பாண்டியன் கூறியமைக்குக் காரணம் யாது ? அல்லது இவ்வடியினை இடஞ் சுட்டி விளக்குக.

விடையை 56-ஆம் பக்கத்தில் இதே அடித்தலைப்பில் காண்க.

33. "தென்புலங்காவல் என்முதல் பிழைத்தது"—இவ்வாறு பாண்டியன் கூறக் காரணம் யாது ? விளக்குக.

விடையை 57-ஆம் பக்கத்தில் இதே அடித்தலைப்பில் காண்க.

34. "கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்."—விளக்குக. அல்லது மன்னவன் மயங்கி வீழ்ந்தமை கண்ட கோப்பெருந்தேவி கண்ணகியைத் தேற்றாமல், தன் கணவனுடைய அடிகளைத் தொழுது விழக் காரணம் யாது ?

விடையை 58-ஆம் பக்கத் தொடக்கத்தில் காண்க.

35. கண்ணகியின் கற்பினையும், கோப்பெருந்தேவியின் கற்பினையும் ஒப்பிட்டு 20 வரி அளவில் ஒரு கட்டுரை வரைக.

கண்ணகியின் கணவனாகிய கோவலன் நேர்மையற்ற முறையில் கொலையுண்டான். அந்நிகழ்ச்சி கற்புடைக் காரிகையாகிய கண்ணகியின் கருத்தைக் கலக்கியது. எனினும், அந்நிலையில் அவளுக்குச் சீற்றம் பொங்கி எழுந்தது. அவள் தன் கணவன் கள்வனல்லன் என்று உலகுக்கு உணர்த்த விரும்பினாள்; பாண்டியனைப் பழிவாங்க எண்ணினாள். பாண்டியனிடம் வழக்குரைத்தாள்; சிலம்பை உடைத்து உண்மையை வெளிப்படுத்தினாள். பாண்டியன் இறந்தபின்னரும் அவள் தன் சினம் தணியப் பெறாமல் மதுரையை எரித்தாள்; சேரநாடு சென்று, தேவர்களுடன் வந்த கோவலனுடன் வானுலகு சென்றாள். கற்புடைக் கண்ணகியின் சினம் சீறியெழுந்தமையால் அவளது கற்பினைச் சீறிய கற்பு அல்லது மறக்கற்பு என்னலாம்.

ஆயின், கோப்பெருந்தேவி யாது செய்தாள்! அவளும் கற்புடையவள். பிழையை உணர்ந்த தன் கணவன் மயங்கி வீழ்ந்தமையைக் கண்டாள் அவள். கணவன் இறந்துபட்டான் என்பதையும் அவள் உணர்ந்தாள். தன் கணவன் இறந்த பிறகு இவ்வுலகில் வாழ அவள் சிறிதும் விருப்பம் கொள்ளவில்லை. கண்ணகியை அவள் தேற்றவும் முயலவில்லை. கணவனை இழந்த கண்ணகியை எவ்வாறு தேற்றுவது? அதை நினைத்தாள் கோப்பெருந்தேவி. இனி இவ்வுலகில் வாழ்தல் கூடாது என்று கணப் பொழுதில் அவள் முடிவுக்கு வந்து, மயங்கி வீழ்ந்த தன் கணவனுடைய இரண்டு அடிகளையும் தொழுது வீழ்ந்தாள். அவளது உயிரும் அகன்றது. அவள் யாருக்கும் எத்தகைய துன்பமும் செய்ய முயலாமல் இறந்தாள். எனவே, அவள் ஆறிய கற்பு அல்லது அறக்கற்பு வாய்ந்தவள்.

கண்ணகி சிறிய கற்புடையவள்; கோப்பெருந்தேவி ஆறிய கற்புடையவள். கண்ணகி மறக்கற்பு வாய்ந்தவள்; கோப்பெருந்தேவி அறக்கற்பு வாய்ந்தவள்.

36. இடஞ்சுட்டி விளக்குக :—

(அ) "வருக மற்றவள் தருக ஈங்கு"
(ஆ) "வாயில் வந்து கோயில் காட்ட"
(இ) "யாரையோ நீ மடக்கொடியோய்"
(ஈ) "கள்வனைக் கோறல் கடுங்கோலன்று"
(உ) "யானோ அரசன் யானே கள்வன்"

(அ) அரண்மனை வாயிலினிடத்தே கண்ணகி ஒற்றைச் சிலம்புடன் வந்து நின்ற செய்தியைப் பாண்டியனிடம் உரைத்தான் வாயிற் காவலன். அவன் கண்ணகியின் தோற்றத்தினைப் பற்றிக் கூறத் தொடங்கி, அவள் கொற்றவையும், பிடாரியும், பத்திரகாளியும், காளியும், துர்க்கையும் அல்லள் என்றும், கணவனை இழந்தவள் என்றும் கூறினன். வாயிற் காவலனது உரையைக் கேட்ட மன்னன் நெடுஞ்செழியன், "வருக மற்றவள் தருக ஈங்கு" என்றான். 'வருவாளாக; அவளை இவ்விடத்திற்கு அழைத்து வருவாய்' என்பது அவ்வடியின் பொருளாகும்.

(ஆ) (முன் வினாவின் விடையுடன் கீழ்க் காண்பனவற்றைச் சேர்க்க)

நெடுஞ்செழியன் அவ்வாறு கூறியவுடன், வாயிற் காவலன் விரைந்து சென்று வாயிலில் நின்ற கண்ணகியினிடம் வந்து, அவளை அழைத்துச் சென்று, அரண்மனையினிடத்தே பாண்டியனைக் காட்டினான்.

(வாயில் - வாயிற்காவலன்; வந்து-(கண்ணகியினிடம்) வந்து. கோயில்-அரண்மனையினிடத்தே. காட்ட - மன்னனைக் காட்ட.)

(இ) கண்ணகியைத் தன்னிடம் அழைத்து வருமாறு வாயிற் காவலனை ஏவினான் பாண்டியன். வாயிற் காவலனும் விரைந்து சென்று, கண்ணகியை அழைத்து வந்து, அரண்மனையினிடத்தே பாண்டியனைக் காட்டினான். கண்ணகி பாண்டியனை அணுகி நின்றாள். அவ்வளவில் பாண்டியன், 'நீர் ஒழுகும் கண்களை உடையவளாய் எம் எதிரில் வந்து நின்றவளே! இளங்கொடி போல்பவளே! நீ யார்?' என்று கண்ணகியை நோக்கிக் கேட்டான்.

(நீ யாரையோ-நீ யார். மடக்கொடியோய் - இளங்கொடி போல்பவளே! கண்ணகியே).

(ஈ) 53-ஆம் பக்கத்தில் விளக்கவுரையின்கண் இதே தலைப்பில் விடையைக் காண்க.

(உ) 56-ஆம் பக்கத்தில் விளக்கவுரையின்கண் இதே தலைப்பில் விடையைக் காண்க.

2. கம்ப ராமாயணம்

1. "இராமாயணம்" : பொருள் எழுதுக.

இராம + அயனம் = இராமாயணம். இச்சொற்றொடர் 'இராமனை அறிவிப்பது' என்று பொருள்படும். 'ராம' என்னும் சொல் வடமொழியின்கண், 'மகிழ்விப்பவன்' என்று பொருள்படும்.

2. கம்பர் தமது இராமாயணத்திற்கு வைத்த பெயர் யாது?

கம்பர் தமது இராமாயணத்திற்கு 'இராமாவதாரம்' என்று பெயர் வைத்தார்.

3. கம்பருடைய ஊர், மரபு, சமயம், காலம் ஆகியவற்றைக் குறிப்பிடுக.

விடையை 60-ஆம் பக்கத்திற் காண்க.

4. கம்பர் நன்றியறிதல் பண்புடையவர் என்பதனை எவ்வாறு அறியலாம்?

கம்பரை ஆதரித்தவர் திருவெண்ணெய் நல்லூரைச் சேர்ந்த சடையப்ப வள்ளல் ஆவார். அவர் தமக்குச் செய்த நன்றியை நினைவு கூர்ந்த கம்பர், தமது இராமாயணத்தில் அவ்வள்ளலைப் பத்து இடங்களில் பாராட்டியுள்ளார்.

5. காவிரி நாடு: விளக்குக.

விளக்கத்தை 62-ஆம் பக்கத்தில், இதே தலைப்பின் கீழ்க் காண்க.

6. கம்பரது தமிழ்நாட்டுப் பற்றினை விளங்க வரைக. அல்லது "காவிரி நாடு அன்ன கழனி நாடு" என்று கம்பர் பாடக் காரணம் யாது?

விடையை 63-ஆம் பக்கத்தின் தொடக்கத்தில் காண்க.

7. "யாவையும் இரங்கிடக் கங்கை எய்தினன்": இடஞ் சுட்டி விளக்குக.

கங்கையை எய்தியவன் பரதன். அவன் தனது தமையனாகிய இராமனைக் காட்டிலிருந்து மீட்டு அழைத்துவர விரும்பி, சத்துருக்கினனுடனும், தாய்மார்களுடனும், பரிசனத்துடனும் கங்கைக் கரையை அடைந்தான். அவன் மரவுரி தரித்து, பெருந்துயரில் மூழ்கியவனாய் இருந்தான். அரசகுலத்தில் பிறந்தும், மரவுரிதரித்து, இவ்வாறு துயரத்தில் மூழ்கியிருக்கின்றானே என்ற கருத்தினால் நிலையியற் பொருள், இயங்கியற் பொருள் ஆகிய யாவும் இரங்கின.

8. "சேனையைத் துகளின் நோக்குவான்" - விளக்குக.

விடையை 63-ஆம் பக்க முடிவில் இதே தலைப்பில் காண்க.

9. "குனிப்புறும் புருவப் போர்விலான்" - விளக்குக.

விடையை 64-ஆம் பக்கத் தொடக்கத்தில் காண்க.

10. பரதனைச் சேய்மையிற் கண்ட குகனுடைய போர்க்கோலக் குறிகளைக் கம்பர் எவ்வாறு அமைத்துள்ளார்?

விடையை 64-ஆம் பக்கமுடிவில் 'குகன் போர்க்கோலக் குறிகள்' என்னும் தலைப்பிற் காண்க.

11. "கிட்டிய தமரெனக் கிளர்ந்த தோளினன்": விளக்குக.

விடையை 65-ஆம் பக்கத் தொடக்கத்தில் காண்க.

12. குகன் தன் படையினைக் கூவி அழைக்குங்கால் தனக்குத்தானே கூறிக் கொண்ட உவமை யாது? அல்லது "எலியெலாம் இப் படை அரவம் யான்" - உவமையை விளக்குக.

விடையை 65-ஆம் பக்கத்தில் "எலியெலாம் இப்படை அரவம் யான்" என்னும் தலைப்பில் உள்ள விளக்கவுரையில் காண்க.

13. பரதன் படையெடுத்து வந்துள்ளான் என்று எண்ணிச் சினங் கொண்ட குகன், தன் படையை நோக்கிக் கூறியவற்றை 20 வரிகளில் ஒரு கட்டுரையாக வரைக.

பரதன் படையெடுத்து வந்துள்ளான் என்று எண்ணிச் சினங்கொண்ட குகன் தன் படையினரைக் கூவி அழைத்தான். அவர்களை நோக்கிக் குகன், 'இராமனைக் காட்டுக்கு ஓட்டிய பரதன் இப்பொழுது படையெடுத்து வந்துள் ளான். அவனையும், அவனுடன் வந்துள்ளோரையும் யான் கொல்வேன். கொல்லாது தப்பிப்போக விடுவேனாயின், என்னை உலகோர் இகழமாட்டார் களோ? அவர்கள் இக்கங்கையாற்றைக் கடந்து செல்ல யான் விடேன்; இவர்களது படையைக்கண்டு அஞ்சேன்; நண்பன் என்று இராமன் என்னிடம் கூறிய சொல்லைக் காப்பேன். அவ்வாறு காவாவிடின் உலகோர் என்னை இகழ்வர் அன்றோ?

'இந்தப் பரதன், இராமன் தன் தமையன் என்பதைக் கருதிலன்; இலக்குவன் அவனைக் காக்கின்றான் என்பதையும் நினைந்திலன்; யான் ஒருவன் இடையில் உள்ளேன் என்றும் மதித்திலன். இக்கங்கையைக் கடந்தாலன்றோ இவன் தனது வீரத்தைக் காட்டமுடியும்? யாம் விடும் அம்புகள் இவர்களுடைய மார்பில் தையாவோ?

'பாவம், பழி, பகை, நட்பு, பிறர் துன்பம் முதலியவற்றை மன்னவர் நினையார் போலும்! எங்ஙனமாயின் என்? பரதன் முதலியோர் தம் சேனையையும், உயிரையும் கொண்டு இவ்விடத்திலிருந்து தப்பிச் செல்ல முடியாது. வீரர்களே! பரதனைக் கொல்வோம்; இராமனுக்கு நாட்டைக் கொடுத்தவர் வேடர் என்னும் புகழை அடைவோம். இராமன் தனக்குரிய நாட்டைப் பரதனுக்குக் கொடுத்தான். ஆயின், பரதனோ நமக்குரிய காட்டை யும் அந்த இராமனுக்குத்தர விரும்பாமல் படையெடுத்து வந்து விட்டானே! இதனை நீங்கள் அறியீரோ?' என்றெல்லாம் கூறினான்.

14. "வஞ்சனையால் அரசெய்திய மன்னரும் வந்தாரே": விளக்குக.

விளக்கத்தை 66-ஆம் பக்கத்தில் இதே தலைப்பில் காண்க.

15. "தோழமை என்று அவர் சொல்லிய சொல் ஒரு சொல்லன்றோ": இடஞ் சுட்டி விளக்குக.

விளக்கத்தை 67-ஆம் பக்கத்தின் விளக்கவுரையில் இதே தலைப்பில் காண்க.

16. "ஏழமை வேடன் இறந்திலன் என்று எனை ஏசாரோ?" விளக்குக.

விளக்கத்தை 67-ஆம் பக்கத்தின் இறுதியில் இதே தலைப்பில் காண்க.

17. "மொய்புலி அன்னான் ஓர் பின்னவன் நின்றனன்": இடஞ்சுட்டி விளக்குக.

இராமன்மீது படையெடுத்து வந்துள்ளான் பரதன் என்று பிழைபடக் கருதிய குகன், சினங் கொண்டு தன்னுடைய படை வீரர்களை நோக்கிக் கூறுங்கால், இலக்குவனைப் பற்றி இவ்வாறு குறிப்பிட்டான். வலிய புலி போல்பவன் இலக்குவன். பின்னவன் என்னுஞ் சொல் 'பின்பிறந்தவன்' என்று பொருள்படும். வலிய புலி போல்பவனாகிய இலக்குவன் காவல் காத் துள்ளானே என்றுகூடப் பரதன் நினைத்திலனே என்று குகன் ஈண்டுக் கூறுகின்றான்.

18. "என் இவன் என்னை இகழ்ந்தது!": இடஞ்சுட்டி விளக்குக.

இராமன்மீது படையெடுத்து வந்துள்ளான் பரதன் என்று பிழைபடக் கருதிய குகன், சினங் கொண்டு தன்னுடைய படைவீரர்களை நோக்கிக் கூறுங்

கால், இவ்வாறு சொல்லுகின்றான்: 'என்னை இப்பரதன் இகழ்ந்தமை எக் காரணம் பற்றி?' என்கின்றான். தனது வலிமையைப் பரதன் மதித்திலனே என்னும் எண்ணம் அவனுக்குச் சினத்தை உண்டாக்கி விட்டது. 'இராம னுக்கும் இவனுக்கும் இடையில் யான் ஒருவன் உள்ளேன். வலிமை வாய்ந்த என்னையும் இவன் மதித்திலனே! இவனை யான் கொல்லேனோ?' என்னுங் கருத்தினால் குகன் இவ்வாறு கூறினான்.

19. "மன்னவர் நெஞ்சினில் வேடர் விடுஞ்சரம் வாயாவோ?": இடஞ் சுட்டி விளக்குக.

இராமன்மீது படையெடுத்து வந்துள்ளான் பரதன் என்று பிழைபடக் கருதிய குகன், சினங்கொண்டு தன்னுடைய படைவீரர்களை நோக்கிக் கூறுங் கால், இவ்வாறு சொல்லுகின்றான். 'வேடர் தொடுக்கும் அம்புகள் அரசர் களுடைய மார்பில் தையாவோ' என்கின்றான் குகன். அச்சமின்றிப் பரதன் படையெடுத்து வந்துள்ளான் என்று கருதிச் சினங்கொண்ட குகன், 'மன்ன வராயின் என்? எம் அம்புகள் அவர்கள் மார்பில் பாயாவோ? தீமை செய்ப வர்கள் யாவராயினும் அவர்களுடைய மார்பில் எம் அம்புகள் பாய்தல் திண்ணம்' என்று கூறினான்.

20. "மண்ணுல காள்பவர் எண்ணுரோ?": எவற்றை? யார் கூற்று இது? எப்பொழுது, ஏன் கூறினான்?

'பாவம், பழி, பகை, நட்பு, பிறர் துன்பம் ஆகியவற்றை மண்ணுலகு ஆள்பவர் எண்ணுரோ?' இவ்வாறு கூறியவன் குகன். இராமனைக் கண்டு வணங்கித் தன்னுடன் அயோத்திக்கு அழைத்துச் செல்லலாம் என்னும் கருத் துடன் பரதன் கங்கைக் கரைக்கு வந்த காலையில், அவனது வருகையைப் பிழைபடக் கருதிய குகன் இவ்வாறு கூறினான். பரதன் இராமனுடன் போர் புரியவே வந்துள்ளான் என்று பிழைபடக் கருதியமையாலேயே குகன் இங்ஙனம் கூறினான்.

21. "சேனையும் ஆருயிரும் கொடு போயன்றோ": இவ்வடிக்கு இரு பொருள் கூறி விளக்குக.

விடையை 69-ஆம் பக்கத்தில், இதே தலைப்பில் காண்க.

22. எத்தகைய புகழை அடையவேண்டும் என்று குகன் தன் படை வீரர்களிடம் கூறினான்? ஏன்?

'பரதனது படையை அழித்து, அறத்தின் உருவான இராமனே அர சாளுமாறு இந்நிலவுலகை வேடர் கூட்டம் கொடுத்தது' என்னும் புகழை அடையுமாறு குகன் தன் படை வீரர்களிடம் கூறினான். பரதனைக் கொன்று, இராமனுக்கு அரச பதவியை வாங்கித்தருதல் வேண்டும் என்னும் கருத்தி னாலேயே குகன் இவ்வாறு கூறினான்.

23. "நாடு கொடுத்த என் நாயகனுக்கு இவர் நாம் ஆளும் காடு கொடுக்கிலர்": விளக்குக.

விளக்கத்தை 70 ஆம் பக்கத்தில் இதே தலைப்பிற் காண்க.

24. குகனுடைய பண்புகளைப் பற்றிச் சுமந்திரன் பரதனிடம் கூறி யவை யாவை?

சுமந்திரன் பரதனைப் பார்த்து, 'இக்குகன் கங்கைக் கரைக்கு உரிமை உடையவன்; கணக்கற்ற படகுகளை உடையவன்; இராமனுக்கு உயிர் நண்பன்; பெரிய வில் வீரர் படையை உடையவன்; வலிய தோளினன்;

இராமனிடம் எல்லையற்ற அன்புடையவன்; கருநிறத்தினன்; உன்னைக் காணும் விருப்பத்துடன் வழியில் நிற்கின்றான்.' என்று குகனுடைய பண்புகளைப் பற்றிக் குறிப்பிட்டான்.

25. "மழைகாணும் மணி நிறத்தாய்": விளக்குக.

72-ஆம் பக்கத்தில் இதே தலைப்பில் காண்க.

26. துரிசிலாத் திருமனத்தான் யாவன்? இவ்வாறு அவன் சுட்டப் பெற்ற காரணம் யாது?

துரிசிலாத் திருமனத்தான் எனப்பெற்றவன் பரதன். குற்றமற்ற மனத்தை உடையவனாதலால் அவன் அவ்வாறு சுட்டப் பெற்றான். இராமனுடன் போர் செய்யவே அவன் வந்துள்ளான் என்று பிழைபடக் கருதிவிட்டான் குகன். அவன் நினைத்தமை போன்ற குற்றத்தை உடையவனல்லன் பரதன் என்பதனைப் புலப்படுத்தவே கம்பர் இவ்வாறு பரதனைக் குறிப்பிட்டார்.

27. "குன்றெழுந்து சென்றதென": விளக்குக. ஈண்டு அமைந்துள்ள அணியையும் புலப்படுத்துக.

குகனுடைய நற்பண்புகளைச் சுமந்திரன் பரதனுக்கு எடுத்துரைத்தான். அவ்வளவில் பரதன் அக்குகனைக் காண விரும்பி எழுந்தான். அவன் எழுந்து சென்றமைக்கு உவமையாகக் கம்பர் இதனைக் கூறியுள்ளார். அவர், மலையொன்று பெயர்ந்து நடந்ததைப் போலப் பரதன் நடந்து சென்றான் என்கின்றார். குன்று அசையாப் பொருள். 'அசையாத அப்பொருள் நடந்து சென்றதுபோல்' என்று ஈண்டு உவமை கூறப்பட்டுள்ளது. இல்லாத ஒன்று உவமை கூறப்பட்டுள்ளதாதலால் ஈண்டு 'இல்பொருள் உவமை அணி' அமைந்துள்ளது.

28. "எயினர்கோன் துண்ணென்றான்": ஏன்? விளக்குக.

விளக்கத்தை 73-ஆம் பக்கத்தில் இதே தலைப்பிற் காண்க.

29. பரதனது தவக்கோலத்தினைக் கம்பர் எவ்வாறு வருணித்துள்ளார்?

'பரதன் மரவுரியை ஆடையாக உடுத்தவன்; புழுதி படிந்த உடலை உடையவன்; அழகிய கலைகள் இல்லாத சந்திரனைப் போல ஒளியிழந்த முகத்தை உடையவன்; கல்லும் குழைந்து உருகுமாறு மிகுந்த துன்பத்தை உடையவன்' என்று பரதனது தவக்கோலத்தைப் பற்றிக் கம்பர் வருணித்துள்ளார்.

30. "கலையில் மதியென்ன நகையிழந்த முகத்தான்": உவமையை விளக்கிக் காட்டுக.

விடையை 74-ஆம் பக்கத்தில், இதே தலைப்பிற் காண்க.

31. "கற்கனியக் கனிகின்ற துயரான்": யாவன்? விளக்குக.

விடையை 74-ஆம் பக்கத்தில் இதே தலைப்பிற் காண்க.

32. பரத, சத்துருக்கினரின் நிலையைக் கண்ட குகன் யாது கருதினான்?

விடையை 75-ஆம் பக்கத்தில், 'கருத்துரை' என்னும் தலைப்பிற் காண்க.

33. "திசை நோக்கித் தொழுகின்றான்": யாவன்? விளக்குக.

விடையை 75 ஆம் பக்கத்தில் இதே தலைப்பிற் காண்க.

34. "எம்பெருமான் பின்பிறந்தார் இழைப்பரோ பிழைப்பு."— இடஞ் சுட்டி விளக்குக.

விடையை 75-ஆம் பக்கத்தில் இதே தலைப்பிற் காண்க.

35. "தவவேடமே கொண்டிருந்தான் குறிப்பெல்லாம் கண்டுணர்ந்து வருகின்றேன்": தவவேடம் கொண்டிருந்தவன் யாவன்? 'வருகின்றேன்' என்று கூறியவன் யாவன்? யாரை நோக்கிக் கூறினன்?

தவவேடம் கொண்டிருந்தவன் பரதன். வருகின்றேன் என்று கூறியவன் குகன். அவன் தன்படையினரை நோக்கி இவ்வாறு கூறினன்.

36. "வந்தெதிரே தொழுதானை": வந்தவன் யாவன்? தொழுதவன் யாவன்?

வந்தவன் குகன். எதிரே தொழுதவன் பரதன்.

37. "மலர் இருந்த அந்தணனும் தனை வணங்கும் அவனும்": விளக்குக.

விளக்கத்தை 77-ஆம் பக்கத்தில், இதே தலைப்பிற் காண்க.

38. "தகவுடையோர் சிந்தையினும் சென்னியினும் வீற்றிருக்கும் சீர்த்தியான்": யாவன்? விளக்குக.

விளக்கத்தை 77-ஆம் பக்கத்தில், இதே தலைப்பிற் காண்க.

39. "தந்தையினும் களிகூரத்தழுவினன்": யாவன்? விளக்குக.

விளக்கத்தை 77-ஆம் பக்கத்தில் இதே தலைப்பிற் காண்க.

40. குகனும் பரதனும் சந்தித்த நிலையை வரைக.

76-ஆம் பக்கத்தில், 17-ஆம் பாடலுக்கு அமைந்த கருத்துரையே இவ்வினாவிற்கு விடையாகும்.

41. குகன் பரதனை வினவிய வினாவும், அதற்குப் பரதன் இறுத்த விடையும் யாவை?

78-ஆம் பக்கத்தில் 'கருத்துரை' என்னும் தலைப்பில் அமைந்துள்ள செய்தியே இவ்வினாவிற்கு விடையாகும்.

42. "தந்தை முந்தையோர் முறையினின்றும் வழுவினன்"; "அதனை நீக்க மன்னனைக் கொணர்வான்": இவ்வடிகளை விளக்குக.

விளக்கங்களை 78-ஆம் பக்கத்தில் அவ்வத்தலைப்புக்களிற் காண்க.

43. பரதனது பெருந்தன்மையைக் கண்ட குகனது நிலை யாது?

79-ஆம் பக்கத்தில் அமைந்துள்ள கருத்துரையே இவ்வினாவிற்கு விடையாகும்.

44. "தீட்டரு மேனிமைந்தன்"; "பொய்யில் உள்ளத்தன்": விளக்குக.

விளக்கங்களை 79-ஆம் பக்கத்தில் அவ்வத் தலைப்புக்களிற் காண்க.

45. "தீவினை என்ன நீத்து": விளக்குக.

விளக்கத்தை 80-ஆம் பக்கத்தில் இதே தலைப்பிற் காண்க.

46. "தாய் உரை கொண்டு"; "தாதை உதவிய தரணி": விளக்குக.

விளக்கங்களை 80-ஆம் பக்கத்தில் அவ்வத் தலைப்புக்களிற் காண்க.

— வள்ளுவர்.

47. "ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ": இடஞ் சுட்டி விளக்குக.

இராமனுடன் போர் புரியவே பரதன் வந்தான் என்று எண்ணினன் குகன். பரதனது தூய உள்ளத்தையும், உயர்ந்த பண்புகளையும் உணர்ந்த அளவில் குகன் அப்பரதனை இவ்வாறு கூறினன். ஆயிரக் கணக்கான இராமர் உளராலும் பரதன் ஒருவனுக்குச் சமமாக மாட்டார்கள் என்று கூறினன் குகன். பரதனது நற்பண்பினை எடுத்துக்காட்டும் பொருட்டே கம்பர் குகன் வாயிலாக இவ்வாறு கூறினர். பரதனிடம் இருந்த உயர் பண்புகள் பலவற்றுள், 'விருப்பின்மை' என்பது தலைசிறந்த பண்பாகும். அதனைப் பாராட்டுவதே கம்பரது கருத்தாகும்.

48. "இரவி என்பான் தன் புகழ்க் கற்றை மற்றை ஒளிகளைத் தவிர்க்குமா போல்": உவமையை விளக்குக.

விடையை 81-ஆம் பக்கத்தில் இதே தலைப்பில் காண்க. விடை 82-ஆம். பக்கத்தில் முடிகின்றது.

49. "உன் புகழ் ஆக்கிக் கொண்டாய்": இடஞ் சுட்டி விளக்குக.

பரதனது உயர்ந்த பண்பினை உணர்ந்த குகன், அவனைப் புகழுங்கால் இவ்வாறு கூறினன். பரதன் தனது குலத்தோர் புகழையெல்லாம் தன் புகழாகச் செய்துகொண்டான் என்று புகழ்ந்தான் குகன். தந்தை கொடுத்த அரச பதவியை வெறுத்து, தவக்கோலம் பூண்டு, இராமனை அழைத்துப்போக வந்தமையிலிருந்து அவனது உயர்ந்த பண்பு வெளிப்படும். எனவே, உலகோர் இனிமேல் பரதனையே புகழ்வர் என்னுங் கருத்தால் குகன் இங்ஙனம் கூறினன்.

50. "பரதனுடைய புகழை 20 வரிகளில் ஒரு கட்டுரையாக வரைக. அல்லது குகன் பரதனைப் புகழ்ந்த பான்மையை 20 வரிகளில் ஒரு கட்டுரையாக வரைக.

இராமனைக் காட்டுக்கு ஓட்டியவன் பரதனே என்றும், அவனுடன் மீண்டும் போர்புரியவே பரதன் வந்துள்ளான் என்றும் குகன் முதற்கண் நினைத்தான். இராமனைத் தன்னுடன் அழைத்துச் சென்று அரச பதவியை அளிக்கவே பரதன் வந்துள்ளான் என்பதையும், பரதன் மரவுரி தரித்துக் கவலையுடன் வந்துள்ளான் என்பதனையும் உணர்ந்த அளவில் குகன் அவனைப் புகழலானன்.

குகன் பரதனைப் பார்த்து,'பரத, தாயின் உரையைக் கேட்டுத் தந்தை நல்கிய நிலவுலகை நீ வெறுத்தாய்; கவலையுடன் ஈண்டு வந்தாய். நின் தன்மையை ஆராய்ந்தால், ஆயிரக்கணக்கான இராமர் உளரேனும் உன் ஒருவனுக்கு ஒப்பாகார் என்பது திண்ணம்' என்றான். தனக்கு அரச பதவி இல்லையென்று தெரிந்த பிறகு இராமன் காட்டிற்கு வந்தான். பரதனே தனக்கு அளிக்கப்பெற்ற அரச பதவியை வெறுத்துக் காட்டிற்கு வந்தான். எனவே, இராமனைக் காட்டிலும் சிறந்தவன் பரதன் என்பது குகனது கருத்து.

மேலும், குகன் பரதனைப் பார்த்து, 'உயர் குணங்களை உடையவனே, அறிவில்லாத வேடனாகிய யான் நின்னை எங்ஙனம் புகழ்வேன்? ஏனை ஒளிகளைச் சூரியன் தன்பால் அடக்கி விடுவது போல, நீயும் உன் குலத்தோர் புகழையெல்லாம் உன் புகழாக்கிக் கொண்டுவிட்டாய்' என்றான். பரதனுடைய உய்ர் குணங்களைக் கண்ட உலகோர் அவனையே புகழ்வர் என்பது திண்ணம். இனி யாவரும், ஏனையோரைப் புகழாமல் பரதனையே புகழ்வர் என்னுங் கருத்தால் குகன் இவ்வாறு கூறினன்.

"ஆலயம் கொாமவது ....."

3. திருத்தொண்டர் புராணம்

1. திருத்தொண்டர் புராணம் :—பெயர்க் காரணம் வரைக.

விடையை 82-ஆம் பக்கத்தில் இதே தலைப்பிற் காண்க.

2. திருத்தொண்டர் புராணத்து ஆசிரியருடைய பெயர், இயற்பெயர், சிறப்புப் பெயர்கள், ஊர், மரபு, சமயம், காலம் ஆகியவற்றைக் குறிப்பிடுக.

விடையை 83-ஆம் பக்கத்திற் காண்க.

3. சேக்கிழார் என்பவர் யார்? அவருக்கு அப்பெயர் வரக் காரணம் என்ன?

சேக்கிழார் என்பவர் திருத்தொண்டர் புராணம் எழுதிய ஆசிரியர் ஆவார். சேக்கிழார் என்பது குடிப் பெயராகும். அக்குடியிற் பிறந்து, சிறந்த புலவராக விளங்கி, அக்குடிக்குச் சிறப்பினைத் தேடித் தந்தமையால் அவருக்கு அக்குடியின் பெயரே பெயராக அமைந்தது.

4. சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் பாடிய காரணம் யாது?

83-ஆம் பக்கத்தில், '**நூலியற்றக் காரணம்**' என்னும் தலைப்பிற் காண்க.

5. திருத்தொண்டர் புராணம் நூல்வகையில் எதனைச் சார்ந்தது? அஃது எந்நூல்களை அடிப்படையாகக் கொண்டு பாடப் பெற்றது?

விடையை 84-ஆம் பக்கத்தில், '**நூல் வகை**' என்னும் தலைப்பிற் காண்க.

6. இளையான் குடி என்னும் ஊரைப் பற்றிச் சிறு குறிப்பு வரைக.

விடையை 86-ஆம் பக்கத்தில், '**அவை வருமாறு**' என்னும் தலைப்பில் காண்க.

7. இளையான்குடி மாறனார் சிவனடியார் பால் கொண்டிருந்த அன்பினைச் சுருக்கி வரைக.

சிவனடியார்களுக்குச் சிறப்புச் செய்வதில் நிலைத்த மனம் உடையவராக விளங்கினார் மாறனார். சிவனடியார் என்னும் பெயருடன் தம் வீட்டிற்கு யார் வரினும், அவரைப் பத்தியுடன் எதிர்கொண்டு, கைகுவித்து, இன்சொற்கள் கூறி வரவேற்றல் அவரது வழக்கமாகும். அவ்வாறு வந்த அடியார்களுடைய அடிகளைக் கழுவி, ஆசனத்து இருத்தி, பலவகை உணவுகளை அவர்க்கு அளித்தல் மாறனாருடைய இயல்பாகும். இவற்றிலிருந்து மாறனார் சிவனடியார்களிடம் கொண்டிருந்த அன்பினை நாம் நன்கு உணரலாம்.

8. "ஆரம் என்பு புனைந்த ஐயர்": விளக்குக.

விளக்கத்தை 88-ஆம் பக்கத்தில் இதே தலைப்பிற் காண்க.

9. "செவிப் புலத்து ஈரமென் மதுரப்பதம்": விளக்குக.

விளக்கத்தை 88-ஆம் பக்கத்தில் இதே தலைப்பில் காண்க.

10. "நீளுமா நிதியின் பரப்பு நெருங்கு செல்வம்"; "எண்தோளினார் அளகைக்கு இருத்திய தோழனார்": விளக்குக.

விளக்கங்களை 89-ஆம் பக்கத்தில் அவ்வத் தலைப்புக்களிற் காண்க.

11. "உன்னினர் தில்லை மன்னினர்": உன்னியவர் யார்? விளக்குக. உன்னியது யாது?

உன்னியவர் (நினைத்தவர்) சிவபிரானர். தில்லை எனப்படும் சிதம்பரத்தில் நிலைபெற்றவர் சிவபிரானேயாவார். 'செல்வம் நிறைந்த காலத்தில் மட்டுமன்றி, வறுமை வந்து வாட்டிய காலத்திலும் இளையான்குடி மாறநாயனர், அடியார்களை உபசரிக்கும் கொள்கையிலிருந்து வழுவார்' என்பதனை உலகுக்கு உணர்த்த நினைத்தார் அவர்.

12. "மெய்யினல் அல்லல் நல்குரவு ஆனபோதிலும் வல்லர்": விளக்குக.

விளக்கத்தை 90-ஆம் பக்கத்தில் இதே தலைப்பிற் காண்க.

13. "உள்ளன மாறியும்"; "தன்னைமாறி இறுக்க உள்ள கடன்கள்": விளக்குக.

விளக்கங்களை 91-ஆம் பக்கத்தில் அவ்வத் தலைப்புக்களிற் காண்க.

14. "கொற்ற ஏனமும் அன்னமும் தெரியாத கொள்கையர் ஆயினர்": ஈண்டு அமைந்த கதையினையும் நயத்தினையும் வரைக.

92-ஆம் பக்கத்தில், '**இவ்வடிக்கண் அமைந்த வரலாறு**' என்னும் கதையினையும், நயத்தினையும் காண்க.

15. சிவபிரானர் எத்தகைய கோலத்துடன் மாறனாது இல்லத்தை அடைந்தார்?

சிவபிரானர் காளைவாகனத்தை ஊராமல், தம்முடன் என்றும் உள்ள பெண்ணாகிய உமாதேவியாரும் இல்லாமல், தவஞ்செய்யும் முனிவர் ஒருவர் வேடத்துடன் மாறனாரது இல்லத்தை அடைந்தார்.

16. "வேரித்தாரான் விருந்து எதிர்கொண்டனன்": இடஞ்சுட்டி விளக்குக.

விடையை 93-ஆம் பக்கத்தில் இதே தலைப்பின் கீழ்க் காண்க.

17. "இமக்குலக் கொடிபாகனர்": யார்? விளக்குக.

இமக்குலக்கொடி பாகனர் என்பவர் சிவபிரானர். மலையரசனாகிய இமவானுக்குப் பார்வதி அம்மையார் மகளாவார். அவ்வம்மையாரைச் சிவபிரானர் மணந்து, தமது இடப்பாகத்தே கொண்டுள்ளார். 'கொடி' என்பது கொடிபோன்ற மென்மை வாய்ந்த பார்வதி தேவியாரைக் குறிக்கும்.

18. "உணவு அமைக்குமாறு எங்ஙனே" என்று வினவிய மாறனர்க்கு அவரது மனைவியார் யாது கூறினர்?

அடியவர்க்கு உணவு அமைக்குமாறு எங்ஙனம் என்று தம் கணவனர் வினவிய காலையில், அம்மையார் முதற்கண் கவலையுற்றார். கடன் கொடுப்பவர் இலர் எனீபதனாலும், நள்ளிரவுப் பொழுதாகி விட்டது என்பதனாலுமே அவருக்குக் கவலை உண்டாயிற்று. அவ்வளவில் அவர்க்கு, அன்றைய பகற்பொழுதில் நிலத்தில் விதைத்த நெல்லின் நினைவு வந்தது. உடனே அவர் தம் கணவனரைப் பார்த்து, 'ஐய! இன்று பகல் நமது வயலின்கண் நெல்லை விதைத்தோமன்றே? அவற்றில் இப்பொழுது முளை கண்டிருக்கும். அவற்றைக் கொண்டுவந்தால் என்னல் உணவை ஒருவாறு ஆக்க இயலும்' என்று கூறினர்.

19. " தீது செய்வினையேற்கு என் செயல் ": விளக்குக.

விளக்கத்தை 95-ஆம் பக்கத்தில் இதே தலைப்பிற் காண்க.

20. " பகல் வித்திய செந்நெல் மல்லல்நீர் முளை ": விளக்குக.

விளக்கத்தை 95-ஆம் பக்கத்தில் இதே தலைப்பிற் காண்க.

21. இரவில் இருளின் நிலையினைச் சேக்கிழார் எவ்வாறு வருணித்துள்ளார் ?

'பெருமழை பொழிந்தமையால் பக்கங்களும், இடைவெளியும் தெரிவதற்கு அருமையாக இருந்தது அவ்விரவு. அத்தகைய இரவில் பேரிருள் எங்கும் நிரம்பியிருந்தது. மை போன்ற இருளின் கூட்டம் நெகிழ்ந்து உலகம் முழுவதும் உருகுகின்றதைப் போன்று இருந்தது. மனத்தினால் நினைத்தாலும் நடுங்கச் செய்கின்ற இராப்பொழுது அது. அப்பொழுது நிரம்பியிருந்த இருளை மைக்குழம்பு என்று எண்ணி யாரும் வெளியே செல்லமாட்டார்கள் என்று இரவில் இருளின் நிலையினைச் சேக்கிழார் வருணித்துள்ளார்.

22. "பெருகுவானம் பிறங்க மழைபொழிந்து" ; " கருகு மை யிருளின் கணம்கட்டு விட்டுருகு கின்றது போன்ற துலகெலாம்" விளக்குக

விளக்கங்களை 96-ஆம் பக்கத்தில் அவ்வத் தலைப்புக்களிற் காண்க.

23. "வண்ணம் நீடிய மைக் குழம்பாம் என நண்ணல் செய்யா" விளக்குக.

விளக்கத்தை 97-ஆம் பக்கத்தில் இதே தலைப்பிற் காண்க.

24. " மேம்படு கற்பின் மிக்கார்" : விளக்குக.

99-ஆம் பக்கத்தின் இறுதியில் இதே தலைப்பிற் காண்க.

25. "குழிநிரம்பாத புன்செய்க் குறும்பயிர் "; " பாசப்பழி முத பறிப்பார் போல "—விளக்குக.

100-ஆம் பக்கத்தில் அவ்வத் தலைப்புக்களிற் காண்க.

26. பண்டை நினைவினால் குறையை நேர்ந்து" : பண்டை நினை என்பது யாது ? விளக்குக.

விளக்கத்தை 101-ஆம் பக்கத்தில் இதே தலைப்பிற் காண்க.

27. நாயனாரும், அவரது மனைவியாரும் சிவனடியார்க்குத் திருவமு அமைத்த திறத்தினை 20 வரிகளில் வரைக.

தமது மனைவியாரின் உரைப்படியே நாயனார் இறைகூடை யொன்றுட வயலை அடைந்து, முளைநெல்லை இறைகூடை நிறைய எடுத்துக்கொண் விரைந்து தம் வீட்டை அடைந்தார். கணவனார் கொண்டுவந்த நெல்மு களை அம்மையார் விரைவில் வாங்கிக் கழுவினார். அந்நிலையில் அடுப்பெரி விறகில்லையே என்னும் நினைவு அவருக்கு உண்டாயிற்று. அதனை அ மெல்லத் தம் கணவனாரிடம் கூறினார். அவ்வளவில் நாயனார் தம் வீட் கூரையை விறகின் பொருட்டாக அறுத்துத் தள்ளினார். உடனே அம் யார் அடுப்பை மூட்டி, முளைநெல்லை வறுத்துக் குற்றி அரிசியாக்கி, உலை பெய்து சோறு சமைத்தார்.

கறிவகைக்கு என் செய்வது? நள்ளிரவில் காய்கறிகள் எங்ஙன கிடைக்கும்! சிவனடியார்க்கு வெறுஞ் சோற்றினை இடுவதோ ? எனே அம்மையார் கறிவகைக்கு என் செய்வது என்று தம் கணவனாரைக் கே டார். உடனே நாயனார் கொல்லைப்புறத்தை அடைந்து, குழிகளினின்று

முளைத்துக் கிளம்பும் பருவத்தை அடையாத புன்செய்ப் பயிராகிய கீரை முதலியவற்றின் சிறு பயிர்களைக் கையால் தடவி, அவற்றை வேரோடும் பெயர்த்து எடுத்து வந்து தம் மனைவியாரிடம் கொடுத்தார்.

தம் கணவனார் கொடுத்த இலைக்கறிகளில், சமைப்பதற்கு உதவும் பகுதிகளை ஆராய்ந்து பிரித்தெடுத்து, நீரில் கழுவி, பலவகைப்பட்ட கறியுணவினைச் சமைத்தார். பல நாட்களாகச் சமைத்துப் பழகியவர் ஆதலால், அவர் பல வகைக் கறியுணவுகளை எளிதில் செய்தார். இவ்விதமாக நாயனாரும், அவரது மனைவியாரும் சிவனடியார் பொருட்டு உணவு அமைத்தனர்.

28. "இணை இலாதவரை ஈண்ட அமுது செய்விப்போம்"; இடஞ் சுட்டி விளக்குக.

இணை இலாதவர் என்று சுட்டப் பட்டவர் சிவனடியார் உருவுடன் மாறனாரது இல்லத்திற்கு வந்த சிவபிரானாரைக் குறிக்கும். ஒப்பில்லாதவராதலால் அவர் அவ்வாறு குறிப்பிடப்பட்டார். 'அவரை விரைவில் உணவு உண்ணுமாறு செய்விப்போம் என்று கணவனாரிடம் நாயனாரின் மனைவியார் கூறினார்.

29. "மனைவியாரும் தொண்டரும் திகைத்து நின்றார்": இடஞ்சுட்டி விளக்குக.

அடியார் உருவுடன் வந்த சிவபிரானாரை அமுது செய்விக்க எண்ணினர் மாறனாரும், அவரது மனைவியாரும். அவர்கள் அவரை எழுப்பச் சென்ற காலையில் அவ்விடத்தில் சிவபிரானார் பேரொளிப் பிழம்பாய் நின்றார். அவ்வொளிப் பிழம்பினைக் கண்ட நாயனாரும், அவரது மனைவியாரும் திகைத்து நின்றனர்.

30. இறைவனார் மாறனார்க்கு அருள் புரிந்த பான்மையை வரைக.

104-ஆம் பக்கத்தில் 'கருத்துரை' என்னும் தலைப்பில் அமைந்த பகுதியே இவ்வினாவிற்கு விடையாகும்.

4. மனோன்மணீயம்

1. மனோன்மணீயத்தின் ஆசிரியருடைய பெயர், பெற்றோர். அநுவல் ஆகியவற்றைக் குறிப்பிடுக.

விடையை 105-ஆம் பக்கத்திற் காண்க.

. "புத்தியே சகல சத்தியும்": இடஞ்சுட்டி விளக்குக.

இவ்வாறு கூறியவன் குடிலன். அவன் கள்ள உள்ளத்தினன்; அரசனைக் கொன்று அரசாட்சியைக் கவர்தற்கு ஏற்ற வாய்ப்பினை எதிர்நோக்கியிருந்தவன். அவன் தனக்குள் பேசிக்கொள்ளுங்கால், 'அறிவே எல்லா வலிமையும் ஆகும். இவ்வுலகில் அறிவுடையவனே வலியவன் ஆவான். அறிவுடையவன், உடல் வலிமை குறைந்தவனாக இருந்தாலும், தனது அறிவுத் திறத்தினால் எல்லாவற்றிலும் வெற்றி பெறுவான். நாம் நமது அறிவு வன்மையால் அரச பதவியைப் பெறுதல் இயலும்' என்னும் கருத்தினால் 'புத்தியே சகல சத்தியும்' என்று கூறினான்.

3. "இதுவரை நினைத்தவை அனைத்தும் நிறைவேறின.": விளக்குக.

விளக்கத்தை 108-ஆம் பக்கத்தில் இதே தலைப்பிற் காண்க.

4. "மன்னவன் நமது நிழலில் மறைந்தான்"; பிடித்தாற் கற்றை விட்டாற் கூளம்': இடங்கள் சுட்டி விளக்கங்கள் தருக.

விளக்கங்களை 109-ஆம் பக்கத்தில் அவ்வத் தலைப்புக்களிற் காண்க.

5. "மதுரையை இனிமேல் நெல்லை வணங்குமோ": இடஞ் சுட்டி விளக்குக.

குடிலன் தனது சூழ்ச்சித் திறமையால், அரசனை வஞ்சித்து மதுரையிலிருந்து பெயர்த்து, திருநெல்வேலியில் கோட்டையைக் கட்டுமாறு செய்தான். அவ்வாறு செய்தபின் குடிலன், "மதுரையை இனிமேல் நெல்லை வணங்குமோ?" என்றான். 'மதுரை வேறு; திருநெல்வேலி வேறு. திருநெல்வேலி நம் ஆதிக்கத்தில் வந்து விடும். எனவே, இனித் திருநெல்வேலி அரசியல், மதுரை அரசியலை வணங்காது' என்னும் கருத்தினைக் கொண்டு குடிலன் இவ்வாறு கூறினான்.

6. "கருவியும் காலமும் அறியில் அரியதென்": இடஞ்சுட்டி விளக்குக.

110-ஆம் பக்கத்தில் 'கருத்துரை' என்னும் தலைப்பில் அமைந்துள்ள செய்தியே இவ்வினாவிற்கு விடை ஆகும்.

7. "அருகுள தெட்டியே யாயினும் முல்லைப் படர்கொடி படரும்": இடஞ்சுட்டி விளக்குக.

111-ஆம் பக்கத்தில் இதே தலைப்பில் விடையைக் காண்க.

8. "நல்லது அப்புறம் நில்லாய்": இடஞ்சுட்டி விளக்குக.

இவ்வாறு கூறியவன் குடிலன். அரசனிடமிருந்து திருமுகம் கொண்டு வந்த சேவகனை நோக்கி இவ்வாறு அவன் கூறினான். திருமுகத்தைப் படித்துச் செய்தியை அறிந்து, விடை கொடுத்தனுப்ப வேண்டும் என்னும் கருத்தினால் அவன் சேவகனை அப்புறம் நிற்குமாறு கூறினான்.

9. திருமுகத்தைப் படித்துப்பார்த்த குடிலன் நினைத்தவை யாவை?

113-ஆம் பக்கத்தின் தொடக்கத்தில் அமைந்துள்ள 'கருத்துரை'யே இவ்வினாவிற்கு விடையாகும்.

10. "அரசர்க்கு ஆயுள் அற்பமென்று அறைவர்"; "வஞ்சிநாட்டார்க்குத் தாழார் இந்நாட்டுள்ள ஜனங்களும். அதுவும் நன்றே": விளக்குக.

விளக்கங்களை 113-ஆம் பக்கத்தில் அவ்வத் தலைப்புக்களின் கீழ்க் காண்க.

11. "மாறன் மாண்டான் மன்றலும் போனது": விளக்குக.

114-ஆம் பக்கத்தில், இதே தலைப்பில் விடையைக் காண்க.

12. "நலம் போல் மெள்ள அவன் தன் செருக்கினைக் கிள்ளில்": விளக்குக.

114-ஆம் பக்கத்தில் இதே தலைப்பில் விடையைக் காண்க.

13. "பாண்டியன் அடைவது அப்போது அறிவம்": இடஞ்சுட்டி விளக்குக.

115-ஆம் பக்கத்தில் இதே தலைப்பில் விடையைக் காண்க.

14. "போர் வந்திடில் இவண் நேர்வந் திடுமெலாம்": இடஞ்சுட்டி விளக்குக.

இவ்வாறு கூறியவன் குடிலன். இஃது ஒரு பழமொழி. தனக்குத் தானே பேசிக்கொண்ட குடிலன், அரசனை எவ்வாறு கொன்று அரச பதவியை அடையலாம் என்று எண்ணுங்கால் இவ்வாறு கூறினன். 'கலகம் பிறந்தால் நேர்மை கிடைக்கும்' என்பது இப்பழமொழியின் பொருளாகும்.

15. குடிலன் செய்ய நினைத்த தந்திரம் யாது?

114-ஆம் பக்கத்தில் 'கருத்துரை' என்னும் தலைப்பில் உள்ள செய்தியே இவ்வினவிற்குரிய விடையாகும்.

16. "யார் இறவார்கள், யார் அறிவார்கள்"; "முடி தன் அடிவிழில் யார் எடுத்து அணியார்"; "அரசவமிசக் கிரமம் ஓரில் இப்படியே முதல் உற்பவம் இருக்கும்": இடங்கள் சுட்டி விளக்கங்கள் தருக.

115-ஆம் பக்கத்தில் அவ்வத் தலைப்புக்களில் விளக்கங்களைக் காண்க.

17. "மூடவுலகம் மொழியும்": இடஞ்சுட்டி விளக்குக.

குடிலன் இவ்வாறு தனக்குள் கூறிக் கொள்கின்றான். சந்திரவமிசத்தவர் என்றும், சூரிய வமிசத்தவர் என்றும் அரசர்களை உலகோர் குறிப்பிடுவது அவர்களது அறியாமையையே காட்டும் என்பது குடிலனது கருத்து. பாண்டியர் சந்திர குலத்தவர் என்றும், சோழர் சூரிய குலத்தவர் என்றும் குறிப்பிடப்படுதலை நினைவிற் கொண்டே குடிலன் இவ்வாறு கூறிக்கொண்டான்.

18. "அறியார்க்கு அறையும் வெறுமொழி": எவை?

தீயதென்றும், நல்லதென்றும் சொல்லப்படுகின்றவை எல்லாம் அறிவில்லாதவர்கட்குச் சொல்லப்படுகின்ற வெறுமொழிகள் ஆகும்.

19. "பாச்சி பாச்சி என்றழும் பாலர்க்குப் பூச்சி பூச்சி என்பது போலாம்": இடஞ் சுட்டி விளக்குக.

117-ஆம் பக்கத்தில் இதே தலைப்பில் விடையினைக் காண்க.

20. தீயது, நல்லது என்பவை பற்றிக் குடிலன் கருதியவை யாவை?

117-ஆம் பக்கத்தில் 'கருத்துரை' என்னும் தலைப்பில் உள்ள செய்தியே இவ்வினவிற்கு விடை ஆகும்.

21. குடிலனுடைய உறுதிபற்றியும், நடிப்புப் பற்றியும் ஆசிரியர் கூறுவன யாவை?

118-ஆம் பக்கத்தில் உள்ள கருத்துரையே இவ்வினவிற்கு விடையாகும்.

22. "சுந்தரன் யந்திரம் காக்கும் வகையும் காண்போம்"; "சுவான சக்கரம் குக்கனைத் தடுத்திடும் வகையே யந்திர தந்திரம் இருப்பதென்று அறியான்": விளக்குக.

விளக்கங்களை 118-ஆம் பக்கத்தில் அவ்வத்தலைப்புக்களிற் காண்க.

23. குடிலன் சேவகனிடம் கூறி விடுத்த செய்தி யாது?

119-ஆம் பக்கத்தில் அமைந்துள்ள கருத்துரையே இவ்வினவிற்கு விடையாகும்.

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே." — ஔவை.

24. தான் செய்ய நினைத்த தந்திரத்தைப் பற்றிக் குடிலன் பல படியாக யோசித்தவை யாவை?

119-ஆம் பக்கத்தில் 'கருத்துரை' என்னும் தலைப்பில் அமைந்த செய்தியே இவ்வினவிற்கு விடையாகும். விடை 120-ஆம் பக்கத்தில் முடிகிறது.

25. "இதுவும் உதாரமாய் எண்ணினன்": இடஞ்சுட்டி விளக்குக.

மனோன்மணியின் மணச்செய்தி கேட்டு மகிழ்ந்தது போல் நடிக்க விரும்பிய குடிலன் ஒரு மணிமாலையைச் சேவகனுக்குப் பரிசாக அளித்தான். அதனைப் பெற்ற அச்சேவகன் மகிழ்ந்து, குடிலனது கொடைப் பண்பைப் புகழ்ந்து சென்றான். அவன் சென்ற பிறகு குடிலன், தனக்குள் சிரித்தவாறே, 'இந்தச் சேவகன் அறிவில்லாதவன்; யான் பரிசளித்தமையை எனது அருட்பண்பின் அறிகுறி என்று நினைத்து விட்டான்!' என்று கூறினான்.

26. "எல்லாம், தந்நயம் கருதி அன்றித் தமைப்போல்
பின்னொருவரைப் பேணுவர் உளரோ?"

"யாத்திரை போன நூற்றுவர் சோறடு
பாத்திரந் தன்னிற் பங்குபங் காக
ஒருவரை ஒருவர் ஒளித்துப் பருமணல்
இட்ட கதையாய் இருக்குமோ?"

"அவ்வளவு, எட்டுமோ உலகின் கட்டைச் சிறுமதி"

இவ்வடிகளை விளக்கி எழுதுக.

விளக்கங்களை 121-ஆம் பக்கத்தில் அவ்வத்தலைப்புக்களிற் காண்க.

27. ஆசிரியப்பாவின் இலக்கணம் யாது?

விடையை 122-ஆம் பக்கத்தில் இதே தலைப்பிற் காண்க.

28. 'குடிலனது வஞ்ச நெஞ்சம்' அல்லது 'குடிலனது இயல்பு' என்னும் பொருள் பற்றி 20 வரிகளில் கட்டுரை ஒன்று வரைக.

'குடிலன்' என்னும் சொல்லே 'வஞ்ச நெஞ்சினன்' என்று பொருள் படும். பெயருக்கேற்றவாறு அவன் கள்ள உள்ளம் படைத்தவனாக இருந்தான். மன்னனாகிய ஜீவகவழுதியைக் கொன்று, பாண்டி நாட்டை ஆளுதற்கேற்ற அற்றம் பார்த்திருந்தான் அவன். அதுபற்றி அவன், ஜீவகன் திருநெல்வேலியிற் கோட்டையை அமைத்து, அவ்விடத்திலேயே தங்குமாறு செய்தான்.

தனது ஆதிக்கத்தில் தங்கிய மன்னனைக் கொல்ல எண்ணினான் குடிலன். ஜீவகனது மகளாகிய மனோன்மணியைத் தன் மகனாகிய பலதேவனுக்கு மணம் முடித்து வைத்து, மன்னனைக் கொன்று அரச பதவியையும் பெறுதல் வேண்டும் என்பது அவனது பேராசை. அதற்கேற்ற தந்திரத்தை அவன் ஆராய்ந்தான். சேர மன்னனாகிய புருடோத்தமனைப் படையெடுத்து வரச் செய்து, போரில் தந்திரமாக அரசனைக் கொன்றுவிடுதலே தக்கது என்று அவன் முடிவு செய்தான். இவற்றிலிருந்து அவனது வஞ்ச நெஞ்சம் நன்கு புலனாகும்.

"அரசர்க்கு ஆயுள் அற்பமென்று அறைவர்" என்றும், "வெகு நாள் வாழான் வழுதி" என்றும், "அப்போது பாண்டியன் அடைவது அறிவம்" என்றும் குடிலன் கூறுகின்ற சொற்களிலிருந்து அவனது கள்ளம் படைத்த உள்ளத்தை நாம் தெற்றென உணரலாம். மேலும், இவ்வுலகத்தை மூடவுலகம் என்று சொல்வதிலிருந்தும், தீயதென்றும் நல்லதென்றும் கூறுபவை

வெறு மொழிகள் என்று சொல்வதிலிருந்தும், புண்ணியம், சீவகாருண்ணியம் என்று சொல்வன யாவும் பித்தே என்று சொல்வதிலிருந்தும் குடிலன் கொடிய நினைவுடைய வஞ்சகன் என்பது நன்கு புலப்படும், அரசனைப் பேயன் என்று கூறுவதிலிருந்து அவனது கயமையையும் நாம் நன்கு உணரலாம்.

5. ஆசிய ஜோதி

1. ஆசியஜோதி என்னும் நூல் எந்நூலைத் தழுவி இயற்றப்பட்டது?

எட்வின் ஆர்னல்டு என்னும் ஆங்கிலப் புலவர், புத்தபிரானது வாழ்க்கை வரலாற்றை "THE LIGHT OF ASIA" என்னும் பெயருடைய நூலில் எழுதியுள்ளார். அந்நூலைத் தழுவி இயற்றப்பட்ட நூலே ஆசிய ஜோதி.

2. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் பிறந்த ஊர், பிறந்த ஆண்டு, அலுவல் பார்த்த நிலையங்கள், இயற்றிய வேறு நூல்கள் முதலியவற்றைக் குறிப்பிடுக.

123-ஆம் பக்கத்தில் விடையினைக் காண்க.

3. கவிமணியவர்களுடைய கவித்திறனைச் சுருக்கி வரைக.

123-ஆம் பக்கத்தில் 'ஆசிரியரது கவித்திறம்' என்னும் தலைப்பில் அமைந்த செய்தியே இவ்வினாவிற்கு விடையாகும்.

4. அசித முனிவர் புத்ததேவராகிய குழந்தையை எங்ஙனம் போற்றினார்?

அசித முனிவர், 'குழந்தாய், உன்னுடைய அடித்தாமரைகளை நான் தொழுகின்றேன். முழுமுதற்பொருள் நீயே. முக்கால உணர்ச்சி உடையவனும், மேலானவனும், தூய்மை உடையவனும், பழைமையானவனும் நீயே. நீ அறத்தின் உருவம்; தேவர்கட்குத் தலைவன். முதல்வனும், அறம் செய்தலையே தொழிலாக உடையவனும், தரும சக்கரத்தை உடையவனும் நீயே. மக்களது மனத்தில் உள்ள இருளையகற்றும் சூரியன் நீ. உன்னை வணங்கி, யான் பிறந்ததன் பயனைப் பெற்றேன்' என்று கூறிப் புத்ததேவராகிய குழந்தையைப் போற்றினார்.

5. அசித முனிவர் சுத்தோதனரைப் பார்த்துக் கூறியவை யாவை?

125-ஆம் பக்கத்தில் அமைந்த கருத்துரையே இவ்வினாவிற்கு விடை ஆகும்.

6. புத்ததேவராகிய குழந்தை ஒரு பூவாக எவ்வாறு உருவகம் செய்யப்பட்டுள்ளது?

மக்கட் கூட்டமாகிய மரத்தில் ஆயிரக் கணக்கான ஆண்டுகட்குப் பிறகு மலரும் பூவே புத்ததேவர். புத்ததேவராகிய பூவிலிருந்து கமழும் மணமே அறிவின் மணமாம். அப்பூவிலிருந்து துளிக்கும் தேனே அருளாகும். அவ்வருள் உலகத்து உயிர்களுக்கெல்லாம் இன்பத்தை வளர்க்கும். ஈண்டு மக்கட் கூட்டம் மரமாகவும், புத்ததேவர் பூவாகவும், அவரது அறிவுத்திறம் பூவின் மணமாகவும், அவர் சொரியும் அன்பு பூவிலிருந்து துளிக்கும் தேனாகவும் உருவகம் செய்யப்பட்டுள்ளன.

7. 'எந்திய முத்தினை ஈன்றபின் இப்பி, மாண்டு மண்ணில் மறைவது போல': இவ்வுவமையை விளக்கிக் காட்டுக.

126-ஆம் பக்கத்தில் இதே தலைப்பில் காணப்படும் செய்தியே இதற்கு விடை ஆகும்.

8. விளக்கியெழுதுக :—

(அ) "உண்மை ஒளியால் உள்ளிருள் போக்கி, நன்மை வளர்க்கும் ஞாயிறு நீயே".

(ஆ) "மானிடத் தருவில், ஆயிர மாயிரம் ஆண்டுகட் கப்பால், ஒருமுறை மலரும் ஒண்மலர் ஈது."

(இ) "அறிவின் மணமே மனத்தின் மாசு அகற்றிடும்."

விளக்கங்கள் ஆசிய ஜோதிப் பகுதியில் உள்ளன.

(அ) 124 ஆம் பக்கத்தில் அமைந்த விளக்கவுரையிற் காண்க.

(ஆ) 125-ஆம் " " " "

(இ) 125-ஆம் " " " "

9. இடஞ்சுட்டி விளக்கம் தருக :—

(அ) "தாயே! பொறு பொறு பொறு."

(ஆ) "இம்மா மகனை ஈன்றவர் போல
மாதவம் செய்தோர் மாநிலத் துண்டோ?"

(இ) "அரிவாள் போல்உன், நெஞ்சினை அறுக்கும்
நெடுந்துயர் ஒன்றுஇம், மகவால் உனக்கு
வருவது திண்ணம்."

(அ) புத்ததேவராகிய குழந்தையை அவரது தாயாகிய மாயாதேவி தூக்கச் சென்ற காலையில் அசித முனிவர் இவ்வாறு கூறினார். பிறகு அவர் அக்குழந்தையைப் போற்றி, பின்பு நிகழ இருக்கின்றவற்றைச் சுத்தோதனருக்கும், மாயாதேவிக்கும் கூறினார்.

(ஆ) இஃது அசித முனிவர் கூற்று. புத்ததேவராகிய குழந்தையைப் பலவாறு போற்றிய அசித முனிவர், சுத்தோதனரையும் மாயாதேவியையும் நோக்கி இவ்வாறு கூறினார். புத்ததேவரால் உலக மக்களுக்கு அஞ்ஞானம் நீங்கி அறிவு தோன்றுதல் உறுதி ஆதலாலும், அப்பிரானது வாழ்க்கையால் உலகில் அன்பும் அருளும் பரவி இன்பம் நிறைதல் திண்ணம் ஆதலாலும் 'இம்மகனை ஈன்றவர் போல் மாதவம் செய்தோர் இலர்' என்று அசித முனிவர் கூறினார்.

(இ) நெற்கதிர்களை யறுக்கும் கருவிக்கு அரிவாள் என்று பெயர். அந்த அரிவாளால் அறுக்கப்படுவது போன்ற துயரம் சுத்தோதனருக்கு வரப் போகின்றது என்று அசித முனிவர் அம்மன்னனிடம் கூறினார். புத்ததேவர் பிறந்த நாளுக்கு ஏழாம் நாள், அவரை ஈன்ற மாயாதேவி இவ்வுலக வாழ்க்கையை நீத்து விடுவார் என்னும் துயரச் செய்தியையே அக்குழந்தையால் வரப் போகின்ற துயரச் செய்தியாக அசித முனிவர் ஈண்டுக் குறிப்பிட்டார்.

IV. பல்சுவை

1. புறநானூறு

1. புறநானூறு—பெயர்க் காரணம் கூறுக.

விடையை 127-ஆம் பக்கத்தில் இதே தலைப்பிற் காண்க.

2. சங்க நூல்களுள் புறநானூறு எவ்வகையைச் சார்ந்தது? அதனோடு உடன் வைத்து எண்ணப்படுகின்ற வேறு நூல்கள் யாவை?

புறநானூறு தொகை நூல்களைச் சார்ந்தது. நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப் பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு ஆகிய ஏழு நூல்களும் இந்நூலோடு உடன் வைத்து எண்ணப்படுகின்றன.

3. திணை, துறை : இவற்றை விளக்குக.

திணை : திணை என்பது ஒழுக்கம் ஆகும். பண்டைத் தமிழ் மக்களுடைய ஒழுகலாறுகள் பல திணைகளாகப் பகுத்துக் கூறப்பட்டுள்ளன.

துறை : மக்களும் விலங்கும் சென்று நீருண்ணும் துறைபோலப் பல வகைப்பட்ட பொருள்களும் செல்வதற்குரிய வழியே துறையாகும். ஒவ்வொரு திணைக்கும் பல்வேறு துறைகள் உள்ளன.

4. பொய்கையாரைப் பற்றி நீவிர் அறிவன யாவை?

128-ஆம் பக்கத்தில் 'ஆசிரியரைப் பற்றிய குறிப்புக்கள்' என்னும் தலைப்பின் கீழ் அமைந்த செய்திகளே இவ்வினாவிற்குரிய விடையாகும்.

5. பாடாண் திணை, புலவராற்றுப்படை, இயன்மொழி: விளக்கி வரைக.

129-ஆம் பக்கத்தில் இப்பெயர்களையுடைய தலைப்புக்களின் கீழ் உள்ள விடையைக் காண்க.

6. நால்வகை நிலங்கள் யாவை? குறிப்புக்கள் எழுதுக.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், என்பன நால்வகை நிலங்கள்.
மலையும், மலை சார்ந்த இடமும் குறிஞ்சி.
காடும், புதரும் நிறைந்த இடம் முல்லை.
வயலும், வயல் சார்ந்த இடமும் மருதம்.
கடலும், கடற்கரை நிலமும் நெய்தல்.

7. பொய்கையார் கோக்கோதை மார்பனை எவ்வாறு புகழ்ந்துள்ளார்?

பொய்கையார், 'கோக்கோதை மார்பனது நாடு நானில வளங்களையும் உடையது. எனவே, அவன் பெருஞ் செல்வனாவான். மேம்பட்ட வாளையுடையவன் அவன்' என்று கோக்கோதை மார்பனைப் புகழ்ந்துள்ளார்.

---

8. பொய்கையார், கோதையை, "நாடன் என்கோ, ஊரன் என்கோ" "கடற்சேர்ப்பன் என்கோ" என்றெல்லாம் கூறுதற்குக் காரணங்கள் யாவை ?

விடைகளை 130-ஆம் பக்கத்தில் அவ்வத்தலைப்புக்களின் கீழ்க் காண்க.

9. பொய்கையார், "யாங்கனம் மொழிகோ ஓங்கு வாட் கோதையை" என்று ஏன் கூறுகின்றார் ?

129-ஆம் பக்கத்தில் அமைந்த கருத்துரையே இவ்வினாவிற்கு விடை ஆகும்.

10. "புனவர் தட்டை புடைப்பின் அயலது
இறங்கு கதிர் அலமரு கழனியும்
பிறங்குநீர்ச் சேர்ப்பினும் புள்ளொருங் கெழுமே" :
இவ்வடிகளில் குறிப்பிடப்பட்ட செய்தியை விளக்கி வரைக.

130-ஆம் பக்கத்தில் இதே தலைப்பில் அமைந்துள்ள விளக்கமே இதற்கு விடை ஆகும்.

11. கோக்கோதை மார்பனது நாட்டின் வளத்தினை விளக்கி வரைக.

முன் வினாவிற்கு உரிய விடையே இவ்வினாவிற்கும் விடை ஆகும்.

12. உங்களுடைய புறநானூற்றுப் பாடல் புலவராற்றுப் படையும், இயன்மொழியும் ஆயினவாறு எங்ஙனம் ?

விடையை 130-ஆம் பக்கத்தின் இறுதியிற் காண்க.

2. கலிங்கத்துப்பரணி

1. பரணியின் இலக்கணம் யாது ?

131-ஆம் பக்கத்தில் 'பரணி' என்னும் தலைப்பின்கீழ் விடையைக் காண்க.

2. கலிங்கத்துப் பரணி: சிறு குறிப்பு வரைக.

கலிங்கமென்பது கலிங்க தேசத்தைக் குறிக்கும். பரணி என்பது தமிழிலுள்ள 96 வகைச் சிறு நூல்களில் ஒன்று. போர்க்களத்தில் ஆயிரம் ஆண்யானைகளை வெட்டி வீழ்த்திய வீரனைப் புகழ்ந்து பாடும் நூல் பரணியாகும். குலோத்துங்க சோழனது படைத்தலைவனாகிய கருணாகரத்தொண்டைமான் கலிங்கப் போரில் வெற்றி பெற்றான். இத்தகைய வெற்றியைப் புகழ்ந்து சயங்கொண்டார் பாடிய நூலே இது.

3. "பதுமமுகம் மலர்ந்தார்": விளக்குக.

விளக்கத்தை 132-ஆம் பக்கத்தின் இறுதியில் இதே தலைப்பின் கீழ்க் காண்க.

4. "விருந்தினரும் வறியவரும் நெருங்கி யுண்ண, மேன்மேலும் முகமலரும் மேலோர் போல" — உவமையை விளக்கிப் பொருத்திக் காட்டுக. அல்லது பதுமமுகம் மலர்ந்தாருக்குக் காட்டப்பட்டுள்ள உவமை யாது ? உவமையைப் பொருத்திக் காட்டுக.

133-ஆம் பக்கத்தின் தொடக்கத்தில் 'உவமைப் பொருத்தம்' என்னும் தலைப்பின் கீழ் விடையைக் காண்க.

5. "காந்தருடன் கனலமளி அதன்மேல் வைகும், கற்புடை மாதரை யொத்தல்" - உவமையை விளக்கிக் காட்டுக. அல்லது யானைகளுடன் இரத்தத்தில் வீழ்ந்து கிடக்கும் கொடிச் சீரைக ளுக்குக் காட்டப்பட்ட உவமை யாது? உவமையை விளக்குக.

உவமை விளக்கத்தை 133-ஆம் பக்கத்தின் இறுதியிற் காண்க. (விடை 134-ஆம் பக்கத்தில் முடிகிறது)

6. கற்புடை மாதரை ஒத்திருந்தவை எவை?

யானைகளுடன் இரத்த வெள்ளத்திலே விழுந்து கிடக்கும் கொடிச் சீரைகள் கற்புடை மாதரை ஒத்திருந்தன.

7. "காந்தருடன் கனலமளி அதன்மேல் வைகும், கற்புடை மாதர்" ஈண்டுக் குறிப்பிடப்பட்ட செய்தி யாது? அஃது எத்துறை யின் பாற்படும்?

விடையை 133-ஆம் பக்கத்தில் இதே தலைப்பின்கீழ்க் காண்க.

3. கச்சிக் கலம்பகம்

1. கலம்பகத்தின் இலக்கணம் யாது?

134-ஆம் பக்கத்தில் கலம்பகம் என்னும் தலைப்பின் கீழ்க் காண்க.

2. 'சித்து' என்னும் உறுப்பின் இலக்கணம் யாது?

134-ஆம் பக்கத்தில் இதே தலைப்பின் கீழ் விடையைக் காண்க.

3. "குன்றைக் குனித்த கச்சிக் கோமகனுர்" : ஈண்டு அமைந்துள்ள கதைக் குறிப்பு யாது?

135-ஆம் பக்கத்தில் இதே தலைப்பின்கீழ் விடையைக் காண்க.

4. "ஒருதினத் திரும்புதனைப் பொன் செய்வோம்"; "இன்றைக்குப் பொன்னளித்து நாளை வெள்ளி இயற்றினும் பின் சனிய தாமே"—விளக்குக.

135-ஆம் பக்கத்தில் அவ்வத் தலைப்புக்களில் விடையைக் காண்க.

5. கச்சிக் கலம்பக ஆசிரியர் 'சித்து' என்னும் உறுப்பின் இலக்க ணத்தை எவ்வாறு அமைத்துப் பாடியுள்ளார்?

இரசவாதியொருவன் தன் திறமையைக் கூறுவதுபோல் பாடுவதே சித்தின் இலக்கணம் ஆகும். அவ்விலக்கணத்தினையமைத்து, கச்சிக் கலம்பக ஆசிரியராகிய அரங்கநாத முதலியார் அவர்கள், "சிவபிரானுர் எல்லாம் வல்ல சித்தராக உருவெடுத்து மதுரைத் தெருவில் வந்தகாலையில் அவரிடம் யான் வித்தைகளைக் கற்றேன். அவ்வாறு கற்ற யான் அவரே விரும்புமாறு ஒரே நாளில் இரும்பைப் பொன்னுகச் செய்து கொடுத்தேன். மிக விரைவில் என்னுல் இரும்பைப் பொன்னுகச் செய்ய முடியும்" என்று கூறியுள்ளார்.

4. அழகின் சிரிப்பு

1. "அழகின் சிரிப்பு" என்னும் நூலின் ஆசிரியருடைய பெயர், இயற்பெயர், தந்தையார், ஊர் ஆகியவற்றைக் குறிப்பிடுக.

விடையை 136-ஆம் பக்கத்தில் அவ்வத்தலைப்புக்களிற் காண்க.

2. “அன்புக்கோர் எடுத்துக் காட்டு” என்று ‘அழகின் சிரிப்பு’ என்னும் நூலின் ஆசிரியர் எதனைக் குறிப்பிடுகின்றார்? அல்லது பெற்றோர் அன்புக்குப் பாரதிதாசனார் அமைத்த எடுத்துக் காட்டினை விளக்கி வரைக.

தாய்ப்புறா தனக்குக் கிடைத்த உணவினை முதற்கண் உண்ணும். பின்பு அது தன் கூட்டை அடைந்து தன் குஞ்சைக் கண்டகாலையில் தன் வாயைத் திறக்கும். அவ்வளவில் அக்குஞ்சு தன் மூக்கைத் தன் தாயின் வாயில் திணிக்கும். தாயோ தான் உண்ட உணவினை வெளிப்படுத்தித் தன் குஞ்சின் வயிற்றை நிரப்பும். அது முடிந்தவுடன் தந்தைப்புறா குஞ்சுக்கு உணவு ஊட்டும். இத்தகைய காட்சியினை ஆசிரியர் பாரதிதாசனார் அன்புக்கொரு எடுத்துக்காட்டாக அமைத்துள்ளார்.

3. அடைபடும் புறாக்களின் நிலையினை ஆசிரியர் பாரதிதாசனார் எவ்வாறு வருணிக்கிறார்?

சுழற்றப்பெற்ற கூரிய வாளைப்போல, புறாக்கள் கூட்டமாய்ப் பறந்து செல்லும். கூட்டமான அடிமைகளைப்போல அவை கூட்டினில் வந்து அடையும். வேலன் கூட்டினை மூடிய திறம், அழகுபெற நிறம் தீட்டப்பெற்ற சித்திரம் திரையிட்டு மறைக்கப் பெற்றமைபோல இருந்தது.

4. “சுழற்றிய கூர்வாள் போலே”; “கொத்தடிமைகள் போலே” “வண்ணம் தீட்டிய ஓவியத்தைத் திரையிட்டு மறைத்தல் போலே”: உவமைகளை விளக்கிக் காட்டுக.

புறாக்கள் கூட்டமாய்ப் பறந்து போகும் காட்சி சுழற்றிய கூர்வாள் போல் தோற்றம் அளிக்கின்றது. புறாக்கள் கூட்டமாய் கூண்டினுள் அடையும் காட்சி கூட்டமான அடிமைகள் ஒன்றுகூடிச் சிறைக்குள் செல்வதைப் போல் தோன்றுகிறது. வேலன் புறாக்களின் கூட்டினை மூடும் காட்சி அழகிய வர்ணம் தீட்டப்பெற்ற சித்திரம் ஒன்றைத் திரையிட்டு மறைத்ததைப் போல் தோன்றுகிறது.

5. அரசப்பன் அலங்காரம்

1. “அரசப்பன் அலங்காரம்”: சிறு குறிப்பு வரைக.

விடையை 137-ஆம் பக்கத்தில், “அரசப்பன் அலங்காரம்”; “நூல் அமைப்பு” என்னும் தலைப்புக்களின் கீழ்க் காண்க.

2. இருசொல் அலங்காரமாவது யாது?

விடையை 138-ஆம் பக்கத்தில் இதே தலைப்பின் கீழ்க் காண்க.

3. “இளங்கோவால் இளங்கோர்வால்”:—விளக்குக.

விளக்கத்தை 139-ஆம் பக்கத்தில் உள்ள கருத்துரையிற் காண்க.

4. “தலைப்புறமே நரைமுடித்துத் தகுமுறைசொல் ஊன்றியது” —ஈண்டு அமைந்துள்ள கதை யாது?

கதையினை 139-ஆம் பக்கத்தில் இதே தலைப்பில் காண்க.

இலக்கணப் பகுதி

பாடத் திட்டம்

அரசியற் கல்வித்துறைத் தலைவரால் 27-1-1954 தேதியிட்ட போர்ட் செயிண்ட் ஜார்ஜ் கெஜட்டில் வெளியிடப்பட்டுள்ள இலக்கணப் பாடத் திட்டம் :

பகுதி I (பொதுப் பிரிவு)

படிவம் 6

I. எழுத்து :

(1) எழுத்தின் இடப் பிறப்பு.
(2) இன எழுத்துக்கள்.
(3) மொழி முதல், இறுதி எழுத்துக்கள்.

II. சொல் :

(1) இயற்சொல், திரிசொல்.
(2) வடசொல், திசைச்சொல்.
(3) பெயர்ச்சொல்.
  (*i*) தான், தாம், எல்லாம் என்னும் பொதுப்பெயர்கள்.
  (*ii*) உருபு மயக்கம்.
(4) வினைச்சொல் :
  (*i*) காலங் காட்டும் முறைகள் — இடைநிலை, பகுதி, விகுதி.
  (*ii*) தெரிநிலை, குறிப்பு வினைகள்.
  (*iii*) சிலவகை வினையெச்சங்களின் வாய்பாடுகள்.

III. பொது :

(1) செய்யுள் விகாரங்கள்.
(2) சொல் முடிபு—பெயரும் வினையும் முடியும் முறை.

IV. புணர்ச்சி :

(1) குற்றுகரப் புணர்ச்சி—(விரிவாக)—சிறப்பு விதிகள்.
(2) தேன், அகம் : இவை புணரும் முறை.
(3) ணகர னகர ஈறு ; லகர ளகர ஈறு.
(4) சாரியைகள் : அ, அத்து, அம், அன், இன், அற்று.
(5) பல, சில : இவை புணரும் முறை.

V. யாப்பு :

(1) எதுகை மோனையின் பொது இலக்கணம்.
(2) அடிவகை.
(3) இசைப்பாட்டு வகை : கண்ணி, கும்மி, கீர்த்தனை.

VI. அணி:

(1) தன்மை நவிற்சி.
(2) உயர்வு நவிற்சி.
(3) தற்குறிப்பேற்றம்.

மொழிப் பயிற்சி

I. வாக்கியம்—பல வகைகள்.
II. வாக்கிய அமைப்பு — எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், எச்சங்கள் நிற்கும் முறை.
III. ஒரே கருத்தைப் பல உருவ வாக்கியங்களில் வெளியிடுதல்.
IV. பத்தியமைப்பு (முன்னிலும் விரிவாக).
V. நடை (விரிவாக).
VI. வழூஉச் சொற்களும் திருத்தமும் — (முன்னிலும் விரிவாக).
VII. விலக்குதற்குரிய இழிவழக்குகள் (slang usage).
VIII. நிறுத்தக் குறிப்புப் பயிற்சிகள்.
IX. மரபு.
X. உவமைகளும், பழமொழிகளும் வைத்தெழுதுதல்.
XI. உவமை உருவக மாற்றம்.
XII. வல்லெழுத்து மிகும் இடங்களும், மிகா இடங்களும் (முன்னிலும் விரிவு).
XIII. இடம் விட்டெழுதுதலும், சேர்த்தெழுதுதலும்.
XIV. சொற்களை இடம்விட்டு எழுதுதலும், சேர்த்து எழுதுதலும்.

மேற்கண்ட பாடத் திட்டத்தை ஒட்டிச் சுருக்கமான குறிப்புக்கள் கீழே தரப் பெற்றுள்ளன. ஈண்டு எழுதப்பெற்றுள்ள இலக்கணக் குறிப்புக்களை மனத்திற் கொண்டால், செய்யுட்களிலும், உரைநடைப் பகுதிகளிலும் மறைமுகமாகக் கேட்கப்படும் இலக்கணக் குறிப்புக்கள் பற்றிய வினாக்களுக்கு விடையெழுதுதல் இயலும்.

I. எழுத்து

(1) எழுத்தின் இடப் பிறப்பு

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்னும் பன்னிரண்டு உயிரெழுத்துக்களும், ய், ர், ல், வ், ழ், ள் என்னும் ஆறு இடையின மெய் யெழுத்துக்களும் கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கும்.

ங், ஞ், ண், ந், ம், ன் என்னும் ஆறு மெல்லின மெய்யெழுத்துக் களும் மூக்கை இடமாகக் கொண்டு பிறக்கும்.

க், ச், ட், த், ப், ற் என்னும் ஆறு வல்லின மெய்யெழுத்துக்களும் மார்பை இடமாகக்கொண்டு பிறக்கும்.

(2) இன எழுத்துக்கள்

பிறப்பிடம்: தொழில், மாத்திரை, பொருள், உருவம் ஆகியவற்றுள் ஒன்றோ பலவோ ஒத்துவரும் எழுத்துக்கள் இனப்படுத்தப்படும்.

அ ஆ; இ ஈ; உ ஊ; எ ஏ; ஐ இ; ஒ ஓ; ஔ உ: இவ்வாறு உயிரெழுத்துக்கள் ஓரினமாகும்.

க் ங்; ச் ஞ்; ட் ண்; த் ந்; ப் ம்; ற் ன்: இவ்வாறு வல்லின எழுத்துக்களுக்கு மெல்லின எழுத்துக்கள் இனமாகும்.

ய், ர், ல், வ், ழ், ள் என்னும் ஆறும் ஓர் இனமாகும்.

(3) மொழி முதல் இறுதி எழுத்துக்கள்

மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்களும், இறுதியில் வரும் எழுத்துக்களும் இன்னஇன்ன என்று இலக்கண நூல்கள் விதித்துள்ளன. அவையன்றி, ஏனைய எழுத்துக்களை முதலிலோ, ஈற்றிலோ கொண்டுவரும் சொற்கள் தமிழ்ச் சொற்கள் அல்ல.

மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள்:

பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் மொழிக்கு முதலில் வரும்.

(உ-ம்.) அன்பு, ஆடு, இலை, ஈகை, உடல், ஊர், எருது, ஏர், ஐயம், ஒன்று, ஓடு, ஔவை.

க், ச், த், ந், ப், ம் என்னும் ஆறு மெய்யெழுத்துக்களும் பன்னிரண்டு உயிர்களுடன் கூடிநின்று மொழிக்கு முதலில் வரும்.

அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ, ஔ என்னும் எட்டு உயிரெழுத்துக்களுடன் கூடிநின்று வகர மெய் மொழிக்கு முதலில் வரும்.

அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ என்னும் ஆறு உயிரெழுத்துக்களுடன் கூடிநின்று யகர மெய் மொழிக்கு முதலில் வரும்.

அ, ஆ, எ, ஒ என்னும் நான்கு உயிர் எழுத்துக்களுடன் கூடிநின்று ஞகரம் மொழிக்கு முதலில் வரும்.

அ, இ, உ என்னும் சுட்டெழுத்துக்களுக்கும், எ, யா என்னும் வினவெழுத்துக்களுக்கும் பின், அகரத்தைச் சேர்ந்தே ஙகரம் மொழிக்கு முதலில் வரும்.

மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்களாவன:

உயிர்	—	12
க், ச், த், ந், ப், ம் என்பன 12 உயிருடன் கூடிவருதலால் 6×12	—	72
வகரம் எட்டு உயிருடன் வருதலால்	—	8
யகரம் ஆறு உயிருடன் வருதலால்	—	6

ஞகரம் நான்கு உயிருடன் வருதலால்	—	4
யகரம் ஒரே உயிருடன் வருதலால்	—	1
ஆக, மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள்	—	103

மொழிக்கு ஈற்றில் வரும் எழுத்துக்கள் :

உயிரெழுத்துக்கள் பன்னிரண்டும், ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் என்னும் மெய்யெழுத்துக்கள் பதினொன்றும், குற்றியலுகரமும் ஆகிய இருபத்து நான்கு எழுத்துக்களும் மொழிக்கு ஈற்றில் வரும்.

(உ-ம்.) பல, பலா, கிளி, தீ, சுடு, பூ, சேஎ, தே, தை, நொ, போ, கௌ : உயிரெழுத்துக்கள் பன்னிரண்டும் மொழிக்கு ஈற்றில் வந்தன.

உரிஞ், கண், வெரிந், மரம், பொன், காய், வேர், தோல், தெவ், வாழ், வாள் : மெய்யெழுத்துக்கள் பதினொன்றும் மொழிக்கு ஈற்றில் வந்தன.

விறகு : குற்றியலுகரம் ஈற்றில் வந்தது.

மொழிக்கு ஈற்றில் வரும் எழுத்துக்களாவன :

உயிர்	—	12
ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் என்னும் மெய்யெழுத்துக்கள்	—	11
குற்றியலுகரம்	—	1
ஆக, மொழிக்கு ஈற்றில் வரும் எழுத்துக்கள்	—	24

மொழிக்கு முதலில் வரும் என்று குறிப்பிடப்பட்டுள்ள 103 எழுத்துக்களும், ஈற்றில் வரும் என்று குறிப்பிடப்பட்டுள்ள 24 எழுத்துக்களும் அல்லாத எழுத்துக்களை முறையே முதலிலோ, ஈற்றிலோ கொண்டுவருஞ் சொற்கள் தமிழ்ச் சொற்கள் அல்ல என்று அறிதல் வேண்டும்.

II. சொல்

(1) இயற்சொல், திரிசொல்

இயற்சொல் : செந்தமிழ் நிலத்து மொழியாகி, கற்றோர்க்கும் மற்றோர்க்கும் ஒப்பத் தம் பொருளை எளிதில் விளக்கும் தன்மையை உடைய உலக வழக்குச்சொல் இயற் சொல்லாகும்.

(உ-ம்) மண், பொன், இருந்தான், உண்டான், அழகு, அன்பு என்பன.

திரிசொல்: ஒரு பொருளைக் கருதிய பல சொற்களாகியும், பல பொருள்களைக் கருதிய ஒரு சொல்லாகியும் அரிதாகக் கற்றோர்கள் மட்டுமே அறியத்தக்க பொருளைக் கொண்டுவருவன **திரிசொற்கள் ஆவன.**

(உ-ம்.) கிள்ளை, சுகம், தத்தை என்பன கிளி என்னும் ஒரு பொருளைக் குறித்த பல பெயர்த் திரிசொற்கள். **'வாரணம்'** என்னும் சொல் யானை, கோழி, சங்கு முதலாகிய பல பொருள்களைக் குறித்த ஒரு பெயர்த் திரிசொல்.

(2) வடசொல், திசைச்சொல்

வடசொல்: ஆரியத்திற்கும், தமிழிற்கும் உரிய பொது எழுத்துக்களாலும், ஆரியத்திற்கே உரிய சிறப்பெழுத்துக்களாலும், அவ்விருவகை எழுத்துக்களாலும் இயைந்து வந்து, செந்தமிழ் நிலத்தே வழங்குஞ் சொற்கள் வட சொற்கள் ஆகும்.

குறிப்பு: வடசொல்=ஆரியம் அல்லது ஸமஸ்கிருதம். வடதிசைக்கண் பல மொழிகள் இருப்பினும் ஆரியமே தொன்றுதொட்டு வடசொல் என வழங்கி வருகிறது.

(உ-ம்) கமலம், காரணம், காரியம்: பொதுவெழுத்தால் இயன்ற வடசொற்கள்.

போகி, சுத்தி: சிறப்பெழுத்தால் இயன்ற வடசொற்கள்.

சலம், அரி: இருவகை எழுத்துக்களாலும் இயன்ற வடசொற்கள்.

(3) பெயர்ச் சொல்

(*i*) தான், தாம், எல்லாம் என்னும் பொதுப் பெயர்கள்.

தான், தாம், எல்லாம் என்னும் பெயர்கள் **உயர்திணை, அஃறிணை** ஆகிய இரு திணைகட்கும் பொதுவாய் வரும்.

(உ-ம்) **அவரெல்லாம்** (உயர்திணை)
அவையெல்லாம் (அஃறிணை)
அவர்தாம் (உயர்திணை)
அவைதாம் (அஃறிணை)
அவன்தான் (உயர்திணை ஆண்பால்)
அவள்தான் (உயர்திணைப் பெண்பால்)
அதுதான் (அஃறிணை ஒன்றன்பால்)

(*ii*) உருபு மயக்கம்

பெயர்ச்சொல் வேற்றுமையுருபை ஏற்று நிற்கும் என்பதை நீங்கள் உணர்வீர்கள். ஒரு பெயர்ச்சொல்லைச் சார்ந்து நின்ற உருபு வேறொரு வேற்றுமைப் பொருளைத் தருவதும் உண்டு. அவ்வாறு தருவது **உருபு மயக்கம்** எனப்படும். இதனையே **வேற்றுமை மயக்கம்** என்றும் கூறுவதுண்டு.

எடுத்துக்காட்டாக, **திருக்குறட் பகுதியில், 'வாய்மை'** என்னும் அதிகாரத்தில் **"உள்ளத்தால் பொய்யா(து) ஒழுகின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்"** என்னுங் குறளைப் பார்ப்போம். ஈண்டு, **'உள்ளத்தால்'** என்பதன்கண் **'ஆல்'** என்னும் மூன்றும் வேற்றுமையுருபு அமைந்துள்ளது. ஆனால், **'உள்ளத்தால்'** என்பதற்கு, **'உள்ளத்**

திற்கு ஏற்ப' என்று நான்காம் வேற்றுமையாக விரித்துப் பொருள் கொள்கின்றோம். ஈண்டு மூன்றும் வேற்றுமையுருபு, நான்காம் வேற்றுமைப் பொருளில் வந்துள்ளது. எனவே, இஃது உருபு மயக்கம் ஆகும்.

(4) வினைச்சொல்

(*i*) காலங் காட்டும் முறைகள்—இடைநிலை, பகுதி விகுதி.

இடைநிலை: த், ட், ற், இன் என்னும் இடைநிலைகள் இறந்த காலத்தைக் காட்டும்.

(உ - ம்) வந்தான்: 'த்' இடைநிலை இறந்த காலம் காட்டியது.
கண்டான்: 'ட்' ,, ,, ,,
சென்றான்: 'ற்' ,, ,, ,,
தூங்கினான்: 'இன்' ,, ,, ,,

ஆநின்று, கின்று, கிறு என்னும் இடைநிலைகள் நிகழ் காலத்தைக் காட்டும்.

(உ - ம்) வாராநின்றான்: 'ஆநின்று' என்னும் இடைநிலை நிகழ்காலம் காட்டியது.
வருகின்றான்: 'கின்று' ,, ,,
வருகிறான்: 'கிறு' ,, ,,

ப், வ் என்னும் இடைநிலைகள் எதிர்காலத்தைக் காட்டும்.

(உ - ம்) உண்பான்: 'ப்' இடைநிலை எதிர்காலம் காட்டியது.
செல்வான்: 'வ்' ,, ,, ,,

பகுதி: சில விடங்களில் பகுதிகளும் காலங்காட்டுதல் உண்டு. கு, டு, று என்னும் மூன்று உயிர்மெய்யீற்றுக் குறிலிணைப் பகுதிகள் ஒற்று இரட்டித்து இறந்த காலம் காட்டும்.

(உ - ம்.) 'நக்கான்' என்னுஞ் சொல்லில், 'நகு' என்னும் பகுதியில் உள்ள ஒற்று இரட்டித்து நின்று, இறந்த காலங் காட்டியது.

'தொட்டான்' என்னுஞ் சொல்லில், 'தொடு' என்னும் பகுதியில் உள்ள ஒற்று இரட்டித்து நின்று இறந்த காலங் காட்டியது.

'பெற்றான்' என்னுஞ் சொல்லில், 'பெறு' என்னும் பகுதியில் உள்ள ஒற்று இரட்டித்து நின்று, இறந்த காலங் காட்டியது.

விகுதி: சில சொற்களில் விகுதிகள் காலம் காட்டும்.

று, றும் என்னும் விகுதிகள் இறந்த காலமும், எதிர்காலமும் காட்டும்.

(உ - ம்.) சென்று, சென்றும் (சென்றேன்), (சென்றோம்) } இறந்த காலம்
சேறு, சேறும் (செல்வேன்), (செல்வோம்) } எதிர்காலம்

து, தும் என்னும் விகுதிகள் இறந்த காலமும், எதிர்காலமும் காட்டும்.

(உ - ம்.) வந்து, வந்தும் (வந்தேன்), (வந்தோம்) } இறந்த காலம்.
வருது, வருதும் (வருவேன்), (வருவோம்) } எதிர்காலம்.

இவ்வாறே விகுதிகள் காலங் காட்டும் முறைகளை ஆராய்ந்தறிக.

(ii) தெரிநிலை, குறிப்பு வினைகள்

ஒன்றன் தொழிலை உணர்த்திக் காலங் காட்டிவரும் சொல் **வினைச்சொல்** எனப்படும் என்பதை நீங்கள் அறிவீர்கள். வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் என வினைச்சொல் மூன்று வகைப்படும்.

தொழிலையும், காலத்தையும் வெளிப்படையாகத் தெரிவிக்கும் **வினைச்சொற்கள் தெரிநிலை வினைச் சொற்கள்** எனப்படும்.

(உ - ம்.) வந்தான், வந்த, வந்து: தொழிலையும், காலத்தையும் வெளிப்படையாகத் தெரிவிக்கின்றன.

தொழிலையும், காலத்தையும் வெளிப்படையாகத் தெரிவியாமல் குறிப்பாகத் தெரிவிக்கும் வினைச் சொற்கள் **குறிப்பு வினைச்சொற்கள்** எனப்படும்.

(உ - ம்.) பொன்னன்: இது 'பொன்னை யுடையான்' என உடைமைத் தொழிலையும், இறந்த காலத்தையும் குறிப்பாகத் தெரிவித்தது காண்க.

(iii) சிலவகை வினையெச்சங்களின் வாய்பாடுகள்

தொழிலையும், காலத்தையும் தெரிவித்துத் திணை, பால் முதலியவற்றைக் காட்டும் விகுதி குறைந்து, வினையைக்கொண்டு முடியும் எச்ச வினையே வினையெச்சமாகும் என்பதை நீங்கள் அறிவீர்கள். வினையெச்சங்கட்கு வாய்பாடுகள் உள. செய்து, செய்பு, செய்யா, செய்யூ, செய்தென, செய, செயின், செய்யிய, செய்யியர் என்னும் வாய்பாடுகள் கொண்டு வினையெச்சங்கள் வரும்.

(உ—ம்.) வந்து : 'செய்து'	என்னும்	வாய்பாடு	(இறந்தகாலம்)
உண்ணுபு : 'செய்பு'	,,	,,	,,
காணா (கண்டு): 'செய்யா'	,,	,,	,,
காணூ : 'செய்யூ'	,,	,,	,,
கண்டென : 'செய்தென'	,,	,,	,,
உண்ண : 'செய'	,,	,,	(நிகழ்காலம்)
வரின் : 'செயின்'	,,	,,	(எதிர்காலம்)
உண்ணிய : 'செய்யிய'	,,	,,	,,
உண்ணியர் : 'செய்யியர்'	,,	,,	,,

III. பொது

(1) செய்யுள் விகாரங்கள்

வலித்தல், மெலித்தல், நீட்டல், குறுக்கல், விரித்தல், தொகுத்தல் ஆகிய விகாரங்கள் செய்யுளின்கண் வரும். மெல்லொற்றை வல்லொற்றாக்குதல் **வலித்தல் விகாரம்**. (உ - ம்.) "குறுத்தாட்பூதம்": ஈண்டு, **குறுந்தாள்** என்பது **'குறுத்தாள்'** என வந்தது வலித்தல் விகாரம்.

வல்லொற்றை மெல்லொற்றாக்குதல் **மெலித்தல் விகாரம்**. (உ - ம்.) "தண்டையின் இனக்கிளி கடிவோள், பண்டையளல்லள்........." ஈண்டு, **'தட்டை'** என்னுஞ் சொல் **'தண்டை'** என நின்றது மெலித்தல் விகாரம்.

குற்றெழுத்தை நெட்டெழுத்தாக்குதல் **நீட்டல் விகாரம்**. (உ-ம்.) "போத்தரூர் புல்லறிவினர்": ஈண்டு, 'பொத்தரூர்' என்பது 'போத்தரூர்' என நீண்டு நின்றது நீட்டல் விகாரம்.

நெட்டெழுத்தைக் குற்றெழுத்தாக்குதல் குறுக்கல் விகாரம். (உ-ம்.) "திருத்தார் நன்றென்றேன் தியேன்": ஈண்டு, 'தீயேன்' என்னுஞ் சொல் 'தியேன்' எனக் குறுகி நின்றது குறுக்கல் விகாரம்.

இல்லாத எழுத்தை வருவித்தல் விரித்தல் விகாரம். (உ-ம்.) "தீஞ்சுளைப் பலவின்பழம் ஊழ்க்கும்மே" ஈண்டு, 'ஊழ்க்குமே' என்பது, 'ஊழ்க்கும்மே' என விரிந்து நின்றது விரித்தல் விகாரம்.

உள்ள எழுத்தை நீக்குதல் தொகுத்தல் விகாரம். (உ-ம்.) 'தருகென': ஈண்டு, 'தருகவென' என நிற்கவேண்டுவது 'தருகென' என நின்றது. இவ்வாறு அகரம் மறைந்தது தொகுத்தல் விகாரமாகும்.

இனி, ஒரு சொல்லின் முதற் பகுதியோ, இடைப் பகுதியோ, கடைப் பகுதியோ குறைந்தும் வருவதுண்டு. அவ்வாறு வருவனவும் செய்யுள் விகாரங்களே.

சொல்லின் முதற் பகுதி குறைந்து வருவது முதற்குறை விகாரம். (உ-ம்.) "மரையிதழ்புரையும்": ஈண்டு, 'தாமரை' என்னுஞ் சொல், 'மரை' என முதற் குறைந்து நின்றது முதற்குறை விகாரம்.

சொல்லின் இடைப் பகுதி குறைந்து வருவது இடைக்குறை விகாரம். (உ-ம்) "ஓதிமுது போத்து": ஈண்டு, 'ஓந்தி' என்னுஞ் சொல் 'ஓதி' என இடை குறைந்து நின்றது இடைக்குறை விகாரம்.

சொல்லின் கடைப் பகுதி குறைந்து வருவது கடைக்குறை விகாரம். (உ-ம்) "நீலுண் துகிலிகை": ஈண்டு, 'நீலம்' என்னுஞ் சொல் 'நீல்' எனக் கடை குறைந்து நின்றது கடைக்குறை விகாரம்.

(2) சொல் முடிபு - பெயரும் வினையும் முடியும் முறை

பெயரும் வினையுமாகிய சொற்கள் திணை, பால், எண், இடங்கட்கு ஏற்றவாறு பொருந்தி முடிதல்வேண்டும். அவற்றுட் சிறிது தவறினும் இலக்கணப் பிழை உண்டாகும்.

(உ-ம்.) அவன் வந்தான்.
அவள் வந்தாள்.
அவர் வந்தார்.
அது வந்தது.
அவை வந்தன.
இராமன் அவன்.
முருகன் யாவன்?
வேலன் யார்?

என்பன போலப் பொருத்தமாகப் பெயர், வினைச் சொற்களை முடித்தல் வேண்டும்.

IV. புணர்ச்சி

(1) குற்றுகரப் புணர்ச்சி

1. வருமொழி முதலில் உயிர் வந்தால், நிலைமொழியின் ஈற்றில் உள்ள குற்றுகரம் கெட்டு, மெய்யெழுத்துமட்டும் நின்று, வருமொழியின் உயிரெழுத்துடன் புணரும்; யகர முதன் மொழி வந்தால் உகரம் இகரமாகும்.

(உ - ம்.) வந்து + உள்ளது = வந்துள்ளது. ஈண்டு, 'வந்து' என்னும் நிலைமொழி ஈற்று மென்றொடர்க் குற்றியலுகரத்திற்குமுன் உயிர் வந்தமையால், அக்குற்றியலுகரம் கெட்டுப் புணர்ந்தது.

சென்று + யான் = சென்றியான்: யகர முதன் மொழிவந்த விடத்துக் குற்றியலுகரம் இகரமாயிற்று.

2. நெடிற்றொடர், உயிர்த் தொடர்க் குற்றுகரங்களுள் அக்குற்றியலுகரங்கள் ஏறி நின்ற டகர றகர வொற்றுக்கள் வேற்றுமைப் புணர்ச்சியில் பெரும்பாலும் இரட்டிக்கும்.

(உ - ம்.) ஆடு + கால் = ஆட்டுக்கால்: 'ஆடு' என்ற நெடிற்றொடர்க் குற்றியலுகரத்தின் ஒற்று இரட்டித்து, 'ஆட்டுக்கால்' என்று ஆயிற்று.

ஞாயிறு + ஐ = ஞாயிற்றை: 'ஞாயிறு' என்ற உயிர்த் தொடர்க் குற்றியலுகரத்தின் றகர ஒற்று இரட்டித்து, 'ஞாயிற்று' என்றாகி ஐயுருபை ஏற்றது.

3. வன்றொடர்க் குற்றியலுகரத்தின் முன் வல்லினத்தை முதலாக உடைய சொல் வரும்பொழுது வல்லினம் மிகும். (உ-ம்.) பார்த்துப் பார்த்துத் தம் கண் களிப்பர் : பகரமும், தகரமும் மிகுந்தன.

4. வேற்றுமைப் புணர்ச்சியில் மென்றொடர்க் குற்றியலுகரம் வன்றொடர்க் குற்றியலுகரமாகத் திரிதல் உண்டு. (உ-ம்.) நஞ்சு + பை = நச்சுப்பை. 'நஞ்சு' என்னும் மென்றொடர்க் குற்றியலுகரம், 'நச்சு' எனத் திரிந்தது. இவ்வாறே, சுரும்பு + நாண் = சுருப்பு நாண்; கரும்பு + வில் = கருப்புவில்; கன்று + ஆ = கற்றா என்பன வந்தன.

5. அல்வழிப் புணர்ச்சியில் மென்றொடர்க் குற்றியலுகரம் வன்றொடராகத் திரிதலும் உண்டு. (உ-ம்.) என்பு + உடம்பு = எற்புடம்பு; அன்பு + தளை = அற்புத்தளை; குரங்கு + மனம் = குரக்குமனம்.

(2) தேன், அகம் : இவை புணரும் முறை

'தேன்' என்னுஞ் சொல் புணரும் முறை :

தேன் + மொழி = தேன்மொழி, தேமொழி.
தேன் + குழம்பு = தேன் குழம்பு, தேக்குழம்பு, தேங்குழம்பு.
தேன் + மலர் = தேன்மலர், தேமலர்.
தேன் + குடம் = தேன்குடம், தேக்குடம், தேங்குடம்.

'அகம்' என்னுஞ் சொல் புணரும் முறை :

அகம் + செவி = அஞ்செவி அகம் + கை = அங்கை	இடையில் உள்ள 'க' என்னும் உயிர் மெய் கெட்டது.
அகம் + செவி = அகஞ்செவி அகம் + கை = அகங்கை	'க' என்னும் உயிர்மெய் இவ்வாறு கெடாமலும் புணர்தல் உண்டு.

(3) ணகர னகர ஈறு, லகர ளகர ஈறு

ணகர னகர ஈறு :

ணகர னகரங்கள், வேற்றுமைப் புணர்ச்சியின்கண் வருமொழி முதலில் வல்லினம் வந்தால் முறையே டகரமாகவும், றகரமாகவும் திரியும்.

(உ-ம்.) மண் + குடம் = மட்குடம்.

தன் + புகழ் = தற்புகழ்.

நிலைமொழி ஈற்றில், 'ண்', 'ன்' என்பன, வருமொழியில் வல்லினம் வர முறையே 'ட்' 'ற்' ஆகத் திரிந்தன.

லகர ளகர ஈறு :

மொழியிறுதியில் உள்ள லகர ளகர மெய்கள், வருமொழி முதலில் வல்லினம் வந்தால் முறையே 'ற்' 'ட்' ஆகத் திரியும்; மெல்லினம் வந்தால் 'ல்' என்பது 'ன்' ஆகவும், 'ள்' என்பது 'ண்' ஆகவும் திரியும்; இடையினம் வரின் இயல்பாகும்.

(உ-ம்.) மணல் + குன்று = **மணற்குன்று.** (நிலைமொழி ஈற்று 'ல்' வருமொழி முதலில் வல்லினம் வர, 'ற்' ஆகத் திரிந்தது.)

மக்கள் + பிறப்பு = **மக்கட்பிறப்பு** (நிலை மொழி ஈற்று 'ள்' வருமொழி முதலில் வல்லினம் வர 'ட்' ஆகத் திரிந்தது)

கல் + மனம் = **கன்மனம்** (லகரம் மெல்லினம் வர, னகரமாகத் திரிந்தது.)

உள் + மகிழ்ந்தான் = **உண்மகிழ்ந்தான்.** (ளகரம் மெல்லினம் வர, ணகரமாகத் திரிந்தது.)

வில் + வீரன் = **வில்வீரன்** ; வாள் + விழி = **வாள்விழி** (லகரமும், ளகரமும் இடையினம் வர, இயல்பாயின.)

(4) சாரியைகள் : அ, அத்து, அம், அன், இன், அற்று

பகுதியோடு விகுதியும், இடைநிலையும் சேரும்பொழுது, அவற்றைச் சார்ந்து இயைந்து வரும் இடைச்சொல் சாரியை ஆகும் என்பதை அறிவீர்கள்.

'அ' என்னும் சாரியை : உண் + ட் + அ + து = உண்டது.

உண் - பகுதி; து - விகுதி; ட் - இடைநிலை; அ - சாரியை. ஈண்டு 'அ' என்னும் சாரியை காண்க.

'அத்து' என்னும் சாரியை : மரம் + ஐ = மரத்தை. '**மரம்**' என்பதன் கண்ணுள்ள 'அம்' கெட்டு 'அத்து' என்னும் சாரியை வந்தது காண்க.

'அம்' என்னும் சாரியை : 'மன்றம்' என்னும் சொல்லின்கண் 'அம்' என்னும் சாரியை வந்தது காண்க.

'அன்' என்னும் சாரியை : ஒன்றன் கூட்டம் : ஈண்டு 'அன்' என்னும் சாரியை வந்தது காண்க.

'இன்' என்னும் சாரியை : வண்டின் கால் : ஈண்டு 'இன்' என்னும் சாரியை வந்தது காண்க.

'அற்று' என்னும் சாரியை : சிலவற்றை : ஈண்டு 'அற்று' என்னும் சாரியை வந்தது காண்க.

(5) பல, சில : இவை புணரும் முறை

பல, சில என்னுஞ் சொற்களுக்கு முன் முறையே பல, சில என்னுஞ் சொற்கள் வந்தால் (1) இயல்பாக வரும்; (2) வருமொழி முதலெழுத்து மிகும்; (3) 'ல' என்பதன்கண் உள்ள 'அ' கெட்டு, லகரம் றகரமாகத் திரியும். வேறு சொற்கள் வரின் விகற்பம் ஆகும்.

பல பல, சில சில : இயல்பாயின.

பலப்பல, சிலச்சில : மிக்கன.

"மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம்." — வள்ளுவர்.

பற்பல, சிற்சில : அகரம் கெட்டு, லகரம் றகரமாயிற்று.

பலகடல், பல்கலே, பஃறுழிசை, பல்படை, பன்மணி, பலவணி, பல்லணி: வேறு சொற்கள் வருங்கால் விகற்பம் ஆகியுள்ளமை காண்க.

V. யாப்பு

(1) எதுகை மோனையின் பொது இலக்கணம்

எதுகை : செய்யுளில் அடிதோறும் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை ஆகும்.

உங்களுடைய கம்ப ராமாயணப் பகுதியின் 3-ஆஞ் செய்யுளை நோக்குக. ஆண்டு,

"கட்டிய சுரிகையன்......
வெட்டிய மொழியினன்......
கொட்டிய துடியினன்......
கிட்டிய தமரென.........

இச்செய்யுளில் அடிதோறும் முதலெழுத்து குறிலாகவே அமைந்து, அளவொத்து நிற்பதையும், இரண்டாம் எழுத்தாகிய டகர ஒற்று ஒன்றி வந்திருத்தலேயும் காண்க. இவ்வாறு வருவதே எதுகை ஆகும்.

மோனை : முதற்சீரின் முதலெழுத்தோடு பின்வருஞ் சீர்களுள் ஒன்றிலேனும், பலவற்றிலேனும் முதலெழுத்து ஒன்றி வருதல் மோனை ஆகும்.

அ, ஆ, ஐ, ஔ ; இ, ஈ, எ, ஏ ; உ, ஊ, ஒ, ஓ ; ஞ, ந ; ம, வ ; த, ச ஆகியவை தமக்குள் ஒன்றற்கு ஒன்று மோனையாக வரும்.

உங்களுடைய பாடப் பகுதியில் உள்ள "பழியொடு படராப் பஞ்சவ வாழி" என்னும் சிலப்பதிகார அடியைப் பாருங்கள். ஆங்கு முதற்சீரின் முதலெழுத்தாகிய 'ப' என்னும் எழுத்தே இரண்டாஞ் சீரினும் மூன்றாஞ் சீரினும் முதற்கண் மோனையாக வந்துள்ளது.

(2) அடிவகை

இரண்டு சீர்களையுடைய அடி **குறளடி.**

மூன்று சீர்களையுடைய அடி **சிந்தடி.**

நான்கு சீர்களையுடைய அடி **அளவடி** அல்லது **நேரடி.**

ஐந்து சீர்களையுடைய அடி **நெடிலடி.**

ஐந்துக்கு மேற்பட்ட சீர்களையுடைய அடி **கழிநெடிலடி.**

உ-ம். தண்பொருநைப் (1) புனல் பாயும் (2)
விண்பெருபுகழ் (1) விறல் வஞ்சி (2)

என்னும் புறநானூற்று அடிகளை உற்று நோக்குக. இவ்வடிகள் ஒவ்வொன்றும் குறளடி ஆகும்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று".

இக்குறட்பாவின் இரண்டாவது அடி சிந்தடி; முதலடி அளவடி அல்லது நேரடி.

"மென்மை ஒரு அறம்." — கோல்ட்ஸ்மித்.

உங்களுடைய கம்ப ராமாயணப் பாடல்களுள் மூன்றினைப் பார்ப்போம்.

1 2 3 4
"பூவிரி பொலன்கழல் பொருவில் தானையான்"

இவ்வடி அளவடி அல்லது நேரடி.

"ஆடுகொ டிப்படை சாடிய றத்தவ ரேயாள"-இவ்வடி நெடிலடி ஆகும்.

"தாயுரை கொண்டு தாதை உதவிய தரணி தன்னை"- இவ்வடி அறுசீர்க்கழி நெடிலடி ஆகும்.

அதற்கு மேல், ஏழுசீர், எட்டுசீர் முதலிய சீர்களாலான கழிநெடிலடிகளை வந்த விடத்துக் காண்க.

(3) இசைப்பாட்டு வகை : கண்ணி, கும்மி, கீர்த்தனை

இசையொடு பொருந்தப்பாடுதற்கு ஏற்றவாறு அமைந்த பாடல் இசைப்பாட்டு ஆகும். அது தாளத்தோடு பொருந்தியும் அமையும்.

"நெஞ்சி லுரமு மின்றி
நேர்மைத் திரமு மின்றி
வஞ்சனை சொல்வா ரடீ!—கிளியே
வாய்ச்சொல்லில் வீர ரடீ!"

பாரதியார் பாடியுள்ள இப்பாடல் 'கண்ணி' என்னும் இசைப்பாட்டு ஆகும்.

"செந்தமிழ் நாடெனும் போதினிலே—யின்பத்
தேன்வந்து பாயுது காதினிலே– எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—யொரு
சக்தி பிறக்குது மூச்சினிலே"

பாரதியார் பாடியுள்ள இப்பாடற்பகுதி, 'கும்மி' என்னும் இசைப்பாட்டு ஆகும். தாளத்திற்கு ஏற்ப இது பாடப்பெறும்.

இராகம், தாளம் ஆகியவற்றிற்கு இயைய அமைந்து, பல்லவி, அநுபல்லவி, சரணம் ஆகிய உறுப்புக்களுடன் வருவது கீர்த்தனை ஆகும்.

தியாகையர், சியாமா சாஸ்திரிகள், முத்துத் தாண்டவர், அருணாசலக் கவிராயர் முதலியவர்கள் கீர்த்தனைகள் பலவற்றைப் பாடியுள்ளனர். இன்னிசை நிகழ்ச்சிகள் நடைபெறும்பொழுது, கீர்த்தனைகளைக் கேட்டுணர்க.

VI. அணி

(1) தன்மை நவிற்சியணி

ஒரு பொருளின் இயல்பான தன்மையை உள்ளவாறே கூறுதல் தன்மை நவிற்சி யாகும்.

"தோயும் வெண்தயிர் மத்தொலி துள்ளவும்
மாய வெள்வளை வாய்விட்ட ரற்றவும்
தேயு நுண்ணிடை சென்றுவ ணங்கவும்
ஆய மங்கையர் அங்கைவ ருந்துவார்"

என்னும் கம்ப ராமாயணப் பாடலைப் பாருங்கள். இடைப்பெண்கள் தயிர் கடையுங்கால் மத்தின் ஒலியும், அவர்களுடைய கை வளைகள் குலுங்கும்

ஒலியும் தோன்றுகின்றன. அவர்களுடைய இடை தள்ளாடுகின்றது. இவ்வாறு ஆய மக்கையர் தயிர் கடையுங் காட்சி உள்ளவாறே கூறப் பெற்றிருத்தலால், ஈண்டுத் தன்மை நவிற்சியணி அமைந்துள்ளது.

(2) உயர்வு நவிற்சியணி

ஒரு பொருளின் தன்மையை மிக உயர்வுபடுத்திக் கூறுதல் உயர்வு நவிற்சியணி ஆகும்.

"நனைவரு கற்பக நாட்டு நன்னகர்
அனைவரும் அணைதர அயிர்க்குஞ் சிந்தையான்
நினையவும் அரியது விசும்பி னீண்டதோர்
புனைமணி மண்டபம் பொலிய எய்தினான்."

இக்கம்ப ராமாயணப் பாடலின் பொருளை நோக்குங்கள். ஈண்டுத் தசரதனுடைய மேம்பாடும், மண்டபத்தின் சிறப்பும் மிக உயர்த்திக் கூறப்பட்டுள்ளன. இவ்வாறு உயர்த்திக் கூறுவது உயர்வு நவிற்சியணி ஆகும்.

(3) தற்குறிப்பேற்ற அணி

இயற்கையாக நிகழும் ஒரு பொருளின் நிகழ்ச்சியில் புலவர் தம் கற்பனைக் கருத்தை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி ஆகும்.

கொடிமதில் பாய்ந்திற்ற கோடும் அரசர்
முடியிடறித் தேய்ந்த நகமும்—பிடிமுன்பு
பொல்லாமை நாணிப் புறங்கடை நின்றதே
கல்லார்தோட் கிள்ளி களிறு.

இச்செய்யுளில் புறங்கடையில் இயல்பாக நிற்கும் களிற்றை, பிடி இகழும் என்று எண்ணி நின்றதாகக் கவி தமது கற்பனைக் கருத்தை ஏற்றிக் கூறியுள்ளார். ஆதலால் இது தற்குறிப் பேற்ற அணி.

மொழிப் பயிற்சி

I. வாக்கியம்—பலவகைகள்

நேற்று மழை பெய்தது.: செய்தி வாக்கியம்.

இவ்வாண்டு மழை பெய்யுமா ?: வினா வாக்கியம்.

பெரியோர் சொற்படி நட.: கட்டளை வாக்கியம்.

இறைவரின் அருள் இருந்தவாறு என்னே !: உணர்ச்சி வாக்கியம்.

விசுவாமித்திரன் தசரதனிடம் வந்தான்.: இது தனி வாக்கியம்.

கியூரி அம்மையார் வறுமையால் வாடினார்; இரவும் பகலும் பாடுபட்டார்; அரிய ஆராய்ச்சி செய்தார்; ரேடியத்தைக் கண்டுபிடித்தார்: இது தொடர் வாக்கியம்.

மலையிடை வாழ்ந்த தமிழ் மக்கள் தங்கட்குக் கண்கூடாகக் காட்சியளித்த இயற்கையை அடிக்கடி கண்ணுற்கண்டு, அதை இடையறாது நினைந்து அதன்கண் படிந்த வாழ்வு நடாத்தினார்கள்: இது கலவை வாக்கியம்.

II. வாக்கிய அமைப்பு—எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் எச்சங்கள் நிற்கும் முறை

வாக்கியங்களில் முதற்கண் எழுவாயும், இறுதியிற் பயனிலையும், இடைக்கண் செயப்படுபொருளும் நிற்றல் இயல்பு. சிறப்பு நோக்கி இம்முறை மாறு

படுதலும் உண்டு. தான் கொண்டுமுடியும் பெயருக்கு முன் பெயரெச்சமும், தான் கொண்டுமுடியும் வினைக்கு முன் வினையெச்சமும் நிற்றல் வேண்டும்.

III. ஒரே கருத்தைப் பல உருவ வாக்கியங்களில் வெளியிடுதல்

நான் இப்புத்தகத்தை எழுதினேன்; இப்புத்தகத்தை நான் எழுதினேன்; இப்புத்தகம் என்னால் எழுதப்பெற்றது; யான் எழுதிய புத்தகம் இது; இப்புத்தகத்தை எழுதியவன் யான்; என்பன ஒரே கருத்தைக் கொண்டுள்ள வாக்கியங்கள். இவ்வாறு ஒரே கருத்தைப் பல உருவ வாக்கியங்களில் வெளிபிடலாம்.

IV. பத்தியமைப்பு

ஒரு கட்டுரையில் பல பத்திகள் அமைந்திருக்கும். ஒவ்வொரு கருத்திற்கும் ஒவ்வொரு பத்தி அமைதல் வேண்டும். பல கருத்துக்களுக்கு ஒரே பத்தி அமைதலும், ஒரே கருத்துக்குப் பல பத்திகள் அமைதலும் கூடா. பத்தியில் உள்ள வாக்கியங்கள் ஒன்றற்கு ஒன்று தொடர்பு கொண்டிருக்க வேண்டும். மாறுபட்ட கருத்துக்களைத் தனிப் பத்திகளில் அமைக்கவேண்டும். சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல் முதலியன அமைந்த பத்தியே நல்ல பத்தியாகும்.

V. நடை

அழகான அமைப்பைக் கொண்ட வாக்கியங்களைக் கொண்டிருப்பதே இங்கு **நடை** ஆகும். எல்லோரும் படித்து எளிதில் பொருளை அறிந்து கொள்ளக்கூடிய முறையில் நடை அமைந்திருக்க வேண்டும். தற்காலத்தில் பத்திரிகையாசிரியர் நடை, சிறுகதை ஆசிரியர் நடை, பேச்சு நடை, செய்யுள் நடை எனப் பலவகைப்பட்ட நடைகளில் தமிழ் உரைநடை அமைந்துள்ளது. செந்தமிழில் பிழையின்றி அமைந்து, அரிய கருத்துக்களை எளிய முறையில் விளக்கவல்ல தன்மையைப் பெற்றிருப்பதே நல்ல நடையாகும். அத்தகைய நடையையே மாணவர்கள் பின்பற்றுதல் வேண்டும்.

VI. வழூஉச் சொற்களும் திருத்தமும்

பிழை	திருத்தம்	பிழை	திருத்தம்
அரிகில்	அருகில்	சம்மந்தம்	சம்பந்தம்
ஆக்ஷி	ஆட்சி	சிகப்பு	சிவப்பு
இடைப்பக்கம்	இடப்பக்கம்	சிலவு	செலவு
இடை	எடை (நிறை)	சுந்திரம்	சுந்தரம்
இலமை	இளமை	சுவற்றில்	சுவரில்
உத்திரவு	உத்தரவு	சேர்வை	சேவை
எண்ணை	எண்ணெய்	தமயன்	தமையன்
எழவு	இழவு	தாப்பாள்	தாழ்ப்பாள்
என்னமோ	என்னவோ	திருவிஷா	திருவிழா
ஒருக்கால்	ஒருகால்	திரேகம்	தேகம்
ஒருவள்	ஒருத்தி	துடங்கு	தொடங்கு
கயறு	கயிறு	நஞ்சை	நன்செய்
கறுமை	கருமை	நாகரீகம்	நாகரிகம்
கார்க்கும்	காக்கும்	நாத்தம்	நாற்றம்

பிழை	திருத்தம்	பிழை	திநத்தம்
காக்ஷி	காட்சி	நாநூறு	நானூறு
கேழ்வி	கேள்வி	நிரைய	நிறைய
கோர்வை	கோவை	நொங்கு	நுங்கு
பனிரெண்டு	பன்னிரண்டு	முன்னூறு	முந்நூறு
பிர	பிற	ரொம்ப	நிரம்ப
புஞ்சை	புன்செய்	விற்க்கும்	விற்கும்
கழுநி	கழுநீர்	வெங்கலம்	வெண்கலம்
மாக்ஷி	மாட்சி	வெண்ணை	வெண்ணெய்
முயற்ச்சி	முயற்சி	வென்னீர்	வெந்நீர்
முழித்தான்	விழித்தான்	தேமேனு	தெய்வமே என்று

VII. விலக்குதற்குரிய இழிவழக்குகள் (Slang Usage)

வெறுமனே, சும்மனுச்சிக்கும், தேமேன்னு, உம்மாச்சி, ஆப்டுக்கிட்டான், வேணுங்கட்டைக்கு, ஈஸ்துகினு, டபாய்க்கிறது, நாமஞ்சாத்தறது என்பன போன்றவை விலக்குதற்குரிய இழிவழக்குகள் ஆகும். இவற்றை மாணவர்கள் தம் உரைநடையில் எழுதுதல் தவறு.

VIII. நிறுத்தக் குறிப்புப் பயிற்சிகள்

காற்புள்ளி, அரைப்புள்ளி, முக்காற்புள்ளி, முற்றுப்புள்ளி, ஒற்றை மேற்கோட்குறி, இரட்டை மேற்கோட்குறி, கேள்விக்குறி, உணர்ச்சிக்குறி, வரலாற்றுக்குறி, கீழ்க்கோடிடுதல் முதலிய நிறுத்தக்குறிகளை ஏற்றவாறு ஏற்ற இடங்களில் அமைத்து மாணவர்கள் எழுதுதல் வேண்டும். உங்களுடைய உரைநடைப்பகுதியைப் படிக்குங்கால் எவ்வெக்குறிகள் எவ்வெவ்விடங்களில் அமைந்துள்ளன என்று ஊன்றி நோக்கி, அத்தகைய முறையையே, எழுதும் பொழுதெல்லாம், பின்பற்றுதல் வேண்டும்.

IX. மரபு

ஒரு பொருளை எச்சொல்லால் எவ்வழியில் அறிவுடையோர்கள் கூறினர்களோ அப்பொருளை அச்சொல்லால் அவ்வழியிலேயே கூறுதல் மரபு ஆகும்.

(உ-ம்.) குதிரைக்குட்டி, யானைக்கன்று, ஆட்டுப்பிழுக்கை என்று கூறுவது மரபாகும். இவ்வாறன்றி, குதிரைக் கன்று, யானைக்குஞ்சு, ஆட்டுச் சாணம் என்று கூறுவது தவறு.

X. உவமைகளும் பழமொழிகளும் வைத்தெழுதுதல்

மாணவர்கள் கட்டுரை எழுதுங்கால் ஏற்ற உவமைகளையும், பழமொழிகளையும் அமைத்து எழுதுதல் வேண்டும்.

(உ-ம்.) ரேடியத்தைக் கண்டவுடன், கியூரி அம்மையாரின் துயரமெல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கியது. (உவமை அமைந்த வாக்கியம்).

“கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்” என்றபடி எத்தகைய நூலாயினும் கற்றல்வேண்டும் (பழமொழி அமைந்த வாக்கியம்).

XI. உவமை உருவக மாற்றம்

ஒன்றைப்போல மற்றொன்று உள்ளதாக உவமித்துக் கூறுதல் உவமை ஆகும். உவமைக்கும் பொருளுக்கும் வேறுபாடில்லாமல் கூறுவது உருவகம் ஆகும்.

தாமரை போன்ற முகம் : உவமை.

முகத்தாமரை : உருவகம்.

உவமை முன்னும், பொருள் பின்னுமாக நிற்கும் முறையை மாற்றி அமைத்தால் உருவகம் ஆகிவிடும்.

XII. வல்லெழுத்து மிகும் இடங்களும், மிகா இடங்களும்

வல்லினம் மிகும் இடங்கள் :

1. அந்த, இந்த என்ற சுட்டுத் திரிபின்முன் க, ச, த, ப க்கள் மிகும். (உ-ம்.) அந்தப் பொருள், இந்தச் செயல்.

2. எந்த என்ற வினாத் திரிபின் முன்னும் அவை மிகும். (உ-ம்.) எந்தச் செய்கை ?

3. அ, இ, உ, என்ற சுட்டெழுத்துக்களுக்கு முன்னும் அவை மிகும். (உ-ம்.) அப்புத்தகம், இக்குடம், உச்சோலை.

4. எ என்னும் வினாவெழுத்துக்கு முன்னும் அவை மிகும். (உ-ம்.) எப்பொருள் ?

5. தனி நெடிலுக்கு முன்னும் அவை மிகும். (உ-ம்.) தீக்குணம்.

6. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்துக்கு முன்னும் அவை மிகும்.(உ-ம்.) தேடாப் பொருள்.

7. இரண்டாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை உருபுகள் விரிந்திருக்குமாயின் அவை மிகும். (உ-ம்.) அவனைக் கண்டான், அவனுக்குக் கொடுத்தான்.

8. அப்படி, இப்படி, எப்படி, அங்கு, இங்கு, எங்கு என்னும் சொற்களுக்கு முன் வல்லினம் மிகும். (உ-ம்.) அப்படிச் செய், இப்படிப் பார், எப்படிப் பாடினார் ? அங்குச் செல், இங்குக் கண்டேன், எங்குத் தேடினான் ?

9. இனி என்னும் இடைச் சொல்லுக்கு முன்னும் வல்லினம் மிகும். (உ-ம்.) இனிக் காண்போம்.

10. இகர விகுதி கொண்டு முடியும் வினையெச்சங்கட்கு முன்னும் வலி மிகும். (உ-ம்.) ஓடிப்போனான், தேடிப் பார்.

11. செய, என்ற வாய்பாட்டு வினையெச்சங்கட்கு முன்னும் வலி மிகும். (உ-ம்.) தரத் தகும்.

12. வன்றொடர்க் குற்றுகரத்துக்கு முன்னும் வலி மிகும். (உ-ம்.) பாட்டுப் பாடினான்.

13. நெடில் தொடர்க் குற்றியலுகரமும், உயிர்த்தொடர்க் குற்றியலுகரமும் வேற்றுமையில் ஒற்று இரட்டித்து வல்லினத்தோடு புணரும்பொழுதும் வல்லினம் மிகும். (உ-ம்.) ஆற்றுப் பாய்ச்சல், நாட்டுப் பற்று, வயிற்றுப் பாடு.

14. மற்று, மற்ற, மற்றை என்னும் இடைச்சொற்களுக்கு முன்னும் வலி மிகும். (உ-ம்.) மற்றுப் பற்று, மற்றக் காரியம், மற்றைச் செயல்.

15. அன்றி, இன்றி என்ற வினையெச்சங்கட்கு முன்னும் வலி மிகும். (உ-ம்.) அவன் அன்றிச் செய்யான், இவன் இன்றிக் கூறுன்.

16. சால, தவ, மிக என்னும் உரிச்சொற்களுக்கு முன்னும் வலி மிகும். (உ-ம்.) சாலப் பேசினன், தவப் பிஞ்சு, மிகச் செய்தான்.

17. இருபெயரொட்டுப் பண்புத்தொகையிலும் வலி மிகும். (உ-ம்.) சாரைப்பாம்பு.

18. இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகைக்கு முன்னும் வலி மிகும். (உ-ம்.) தயிர்க் குடம்.

வல்லினம் மிகா இடங்கள் :

1. அது, இது என்ற சுட்டுப் பெயர்கள், எது, ஏது, யாது என்ற வினைப் பெயர்கள் ஆகியவற்றின்முன் க, ச, த, பக்கள் இயல்பாம். (உ-ம்.) அது செய், இது பார், எது கண்டார்? ஏது தேடினன்? யாது கூறினன்?

2. அத்துணை, இத்துணை, எத்துணை, அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு என்ற சொற்களின் முன் வல்லினம் இயல்பாம். (உ-ம்.) அத்துணை கொடு, இத்துணை செய், எத்துணை படித்தாய்? அவ்வளவு தா, இவ்வளவு கொடு, எவ்வளவு செய்தீர்?

3. பெயரெச்சங்களோடு சேர்ந்து வரும் படி என்பதற்கு முன் வலி மிகா. (உ-ம்.) சொன்னபடி செய்தான்; தரும்படி கேட்டான்.

4. வினைத்தொகை, உம்மைத் தொகைகளுக்கு முன் வலி மிகா (உ-ம்.) உயர் குணம், சேர சோழர்.

5. இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வலி மிகா. (உ-ம்.) புளி தின்றுன்.

6. முதல் வேற்றுமைக்கு முன் வலி மிகா. (உ-ம்.) புலி பாய்ந்தது.

7. மூன்று, ஐந்து, ஆரும் வேற்றுமை விரிகளில் வலி மிகா. (உ-ம்.) பண்ணேடு பாடினன், மரத்திலிருந்து குதித்தான், எனது கை.

8. விளித் தொடரில் வலி மிகா. (உ-ம்.) அண்ணு, கேள்.

9. பெயரெச்சத்துக்கு முன் வலி மிகா. (உ-ம்.) ஓடின குதிரை.

10. செய்யிய, செய்பு என்னும் வாய்பாட்டு வினையெச்சத்துக்கு முன் வலி மிகா. (உ-ம்.) உண்ணிய கொண்டான், உண்ணுபு தந்தான்.

11. இடைச்சொற்களாகிய ஏ, ஓ க்களுக்கு முன்னும் ஆ என்ற ஈற்றை யுடைய வினைப் பெயருக்கு முன்னும் வலி மிகா. (உ-ம்.) அவனே செய்தான், இவனே கொன்றுன்? அவனு பேசினன்?

12. வடசொற்கள் நிலை, வருமொழிகளாயின் வலி மிகா. (உ-ம்.) ஆதி பகவன், தருமசாலை.

XIII. இடம் விட்டெழுதுதலும், சேர்த்தெழுதுதலும்

கட்டுரை எழுதுங்கால் பத்திக்குப் பத்தி இடம் விட வேண்டும்; வாக்கியத்திற்கு வாக்கியமும், சொல்லுக்குச் சொல்லும் இடம் விடுதல் வேண்டும். தலைப்பிற்கும், கட்டுரையின் முதல் வரிக்கும் நடுவில் இடம் விடுதல் வேண்டும். அப்பொழுதுதான் மற்றவர்களால் எளிதிற் படிக்க முடியும்.

XIV. சொற்களை இடம் விட்டெழுதுதலும், சேர்த்தெழுதுதலும்

சொல்லுக்குச் சொல் இடம் விடவேண்டும் என்று முன்பு கூறினோம். ஒரு சொல்லின்கண் உள்ள எழுத்துக்களைச் சேர்த்தே எழுதுதல் வேண்டும். ஒரு சொல்லின் ஒரு பகுதியை, ஒரு வரியின் முடிவில் எழுதி, மற்றொரு பகுதியை அடுத்த வரியின் தொடக்கத்தில் எழுதுவதைத் தவிர்த்தல் வேண்டும். இரண்டு சொற்கள் புணர்ந்து, உடம்படுமெய் தோன்றியோ, வல்லின ஒற்று இரட்டித்தோ நின்றால், அவற்றைச் சேர்த்தே எழுதுதல் வேண்டும். இத்தகைய முறைகளை மாணவர்கள் ஆராய்ந்து பார்த்துப் பின் பற்றுதல் வேண்டும்.

உறுப்பிலக்கணம்

உறுப்பிலக்கணங் கூறுக :

அவன் : அ+அன். அ : பகுதி ; அன் : விகுதி. இடையில் வந்த 'வ்' உடம்படுமெய்.

நன்மை : நல்+மை. நல் : பகுதி ; மை : விகுதி.

உண்டான் : உண்+ட்+ஆன். உண் : பகுதி ; ஆன் : விகுதி ; 'ட்' : இடைநிலை.

நடந்தனன் : நட+த் (ந்) + த்+அன்+அன். நட : பகுதி ; அன் : விகுதி ; த் : இடைநிலை ; அன் : சாரியை ; த் : சந்தி ; 'த்' என்னும் எழுத்து 'ந்' என ஆகியது விகாரம்.

நடப்பான் : நட+ப்+ப்+ஆன். நட : பகுதி : ஆன் : விகுதி ; ப் : இடைநிலை ; ப் : சந்தி.

நடந்தது : நட+த் (ந்) + த்+அ+து. நட : பகுதி ; து : விகுதி ; த் : இடைநிலை ; அ : சாரியை ; த் : சந்தி ; 'த்' என்னும் எழுத்து 'ந்' என ஆகியது விகாரம்.

நடவான் : நட + வ் + ஆ + ஆன். நட : பகுதி ; ஆன் : விகுதி ; இடையே தோன்றிய 'ஆ' என்னும் எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது. 'வ்' என்பது உடம்படுமெய்.

கழிந்தன்று : கழி + த் (ந்) + த் + அன் + று. கழி : பகுதி ; று : விகுதி ; த் : இடைநிலை ; அன் : சாரியை ; த் : சந்தி ; 'த்' என்னும் எழுத்து 'ந்' ஆக மாறியது விகாரம்.

அடித்த : அடி + த் + த் + அ. அடி : பகுதி ; அ : விகுதி ; த் : இடைநிலை ; த் : சந்தி

அடிக்கின்ற : அடி + க் + கின்று + அ. அடி : பகுதி ; அ : விகுதி : கின்று : இடைநிலை ; க் : சந்தி. இடைநிலையின் ஈற்றில் உள்ள உகரம் கெட்டது.

கடிக்கும் : கடி + க் + கு + உம். கடி : பகுதி ; உம் : விகுதி ; கு : சாரியை ; க் : சந்தி. சாரியை ஈற்று உகரம் கெட்டுப் புணர்ந்தது.

சிறிய : சிறுமை + ய் + அ. சிறுமை : பகுதி ; அ : விகுதி ; பகுதியிலுள்ள 'மை' விகுதி புணர்ச்சியிடத்து கெட்டது. உகரம் இகரமாகத் திரிந்தது. பின்பு 'ய்' என்னும் உடம்படுமெய் தோன்றியது.

நின்று : நில் + ற் + உ. நில் : பகுதி ; உ : விகுதி. ற் : இடைநிலை ; 'ல்' என்பது 'ன்' எனத் திரிந்தது.

நிற்க (வினையெச்சம்): நில் + கு + அ. நில்: பகுதி ; அ : விகுதி ; கு : சாரியை. லகரம் றகரமாகத் திரிந்தது. சாரியை ஈற்று உகரம் கெட்டது.

நிற்க (வியங்கோள் வினைமுற்று): நில் + க. நில் : பகுதி ; க: வியங்கோள் விகுதி. 'ல்' என்பது 'ற்' ஆகத் திரிந்தது.

வறந்தக்கால் : வற + த் (ந்) + து + அ + க் + கால். வற: பகுதி; கால் : விகுதி ; து : சாரியை; அ: சாரியை; த் : சந்தி ; 'த்' என்னும் எழுத்து 'ந்' ஆகியது விகாரம். சாரியை ஈற்று உகரம் கெட்டது. க் : சந்தி.

செய்தேன் : செய் + த் + ஏன். செய் : பகுதி ; ஏன் : விகுதி ; த் : இடைநிலை.

கொய்தனன் : கொய் + த் + அன் + அன். கொய் ; பகுதி; அன் : விகுதி. த : இடைநிலை ; அன் : சாரியை.

உழுது : உழு + த் + உ. உழு : பகுதி ; உ: விகுதி; த்: இடைநிலை.

கூனி : கூன் + இ. கூன் : பகுதி ; இ : விகுதி.

உண்டனன் : உண் + ட் + அன் + அன். உண் : பகுதி. அன் : விகுதி. ட் : இடைநிலை ; அன் : சாரியை.

பிடித்தனன் : பிடி + த் + த் + அன் + அன். பிடி : பகுதி ; அன்: விகுதி ; த : இடைநிலை ; அன் : சாரியை ; த் : சந்தி.

ஆடினோம் : ஆடு + இன் + ஓம். ஆடு : பகுதி; ஓம் : விகுதி ; இன் : இடைநிலை. உகரம் கெட்டது.

கூவிற்று : கூவு + இன் + று. கூவு : பகுதி ; று: விகுதி , இன் : இடைநிலை. உகரம் கெட்டது. னகரம் றகரமாகத் திரிந்தது.

ஆடி : ஆடு + இ. ஆடு : பகுதி ; இ: விகுதி; உகரம் கெட்டது.

எண்ணின : எண் + ண் + இன் + அ. எண் : பகுதி ; அ : விகுதி ; இன் : இடைநிலை. 'ண்' இரட்டியது.

எண்ணற்க : எண் + ண் + அல் + க. எண் : பகுதி ; க : வியங்கோள் விகுதி ; அல் : எதிர்மறை இடைநிலை ; 'ண்' இரட்டித்தது. லகரம் றகரமாகத் திரிந்தது.

வந்தான் : வா + த் (ந்) + த் + ஆன். வா : பகுதி ; ஆன் : விகுதி; த் : இடைநிலை ; த் : சந்தி ; த், ந் ஆக மாறியதும், வா என்பது வ எனக் குறுகியதும் விகாரம்.

சென்ற : செல் + ற் + அ. செல் : பகுதி ; அ : விகுதி ; ற் : இடைநிலை ; லகரம் றகரமாகி பின்பு அது னகரமாகத் திரிந்தது விகாரம்.

வென்று : வெல் + ற் + உ. வெல் ; பகுதி ; உ: விகுதி ; ற்: இடைநிலை. லகரம் றகரமாகிப் பின்பு அது னகரமாகத் திரிநதது விகாரம்.

கற்றோம் : கல் + ற் + ஓம். கல் : பகுதி ; ஓம் : விகுதி ; ற்: இடைநிலை ; லகரம் றகரமாகத் திரிந்தது.

" அனுபவத்திலேயே பலவற்றைக் கற்கின்றோம்." — ஸெனிகா.

தோற்றான்: தோல் + ற் + ஆன். தோல்: பகுதி; ஆன்: விகுதி; ற் இடைநிலை. லகரம் றகரமாகத் திரிந்தது.

கற்பாள்: கல் + ப் + ஆள். கல்: பகுதி; ஆள்: விகுதி; ப்: இடைநிலை. லகரம் றகரமாகத் திரிந்தது.

கற்பான் (வினையெச்சம்): கல் + பான். கல்: பகுதி; பான்: விகுதி; லகரம் றகரமாகத் திரிந்தது.

மாண்டன (இறந்தன): மாள் + ட் + அன் + அ. மாள்: பகுதி; அ: விகுதி; ட்: இடைநிலை. அன்: சாரியை, ளகரம் டகரமாகத் திரிந்து பின்பு அது ணகரமாகத் திரிந்தது விகாரம்.

புரண்டு: புரள் + ட் + உ. புரள்: பகுதி; உ: விகுதி; ட்: இடைநிலை. ளகரம் டகரமாகிப் பின்பு அது ணகரமாகத் திரிந்தது விகாரம்.

கொள்ப: கொள் + ப. கொள்: பகுதி; ப: விகுதி.

கண்ட: காண் + ட் + அ. காண்: பகுதி; அ: விகுதி; ட்: இடைநிலை; கா என்பது க எனக் குறுகியது விகாரம்.

காண்க: காண் + க. காண்: பகுதி; க: வியங்கோள் வினைமுற்று விகுதி.

விட்ட: விடு + அ. விடு: பகுதி; அ: விகுதி; உகரம் கெட்டது. பகுதி இரட்டித்து இறந்த காலங்காட்டியது.

புக்கோம்: புகு + ஓம். புகு: பகுதி; ஓம்: விகுதி; பகுதி தன் ஒற்று இரட்டி இறந்தகாலம் காட்டியது; உகரம் கெட்டது.

படிப்பேன்: படி+ப்+ப்+ஏன். படி: பகுதி; ஏன்: விகுதி; ப்: இடைநிலை; ப்: சந்தி.

இருந்தேன்: இரு+த் (ந்)+த்+ஏன். இரு: பகுதி; ஏன்: விகுதி; த்: இடைநிலை; த்: சந்தி; த், ந் ஆனது விகாரம்.

நக்கான்: நகு+ஆன். நகு: பகுதி; ஆன்: விகுதி; உகரம் கெட்டது விகாரம்; பகுதி இரட்டித்து இறந்த காலங்காட்டியது.

செய்திலன்: செய்+த்+இல்+அன். செய்: பகுதி; அன்: விகுதி; த்: இடைநிலை; இல்: எதிர்மறை இடைநிலை.

உண்டல்: உண் + ட் + அல்: உண் - பகுதி; அல் - விகுதி; ட் - எழுத்துப்பேறு.

தருதி: தா+த்+இ: தா - பகுதி; இ - விகுதி; த் - எழுத்துப்பேறு: பகுதி முதல் குறுகியதும், ரு விரிந்ததும் விகாரங்கள்.

மறுக்கிலம்: மறு+க்+கு+இல்+அம்; மறு - பகுதி; க் - சந்தி; கு - சாரியை; இல் - எதிர் மறை இடைநிலை; அம் - விகுதி; சாரியையில் உள்ள உகரம் கெட்டது.

கரந்தார்: கா+த் (ந்)+த்+ஆர்; கர -பகுதி; த் - சந்தி; த் - இடைநிலை; ஆர் - விகுதி; த், ந் ஆனது விகாரம்.

வெருவினர்: வெருவு + இன் + ஆர்; வெருவு - பகுதி; இன் - இடைநிலை; ஆர் - விகுதி.

விண்டார் : விள்+ட்+ஆர்; விள் - பகுதி; ட் - இடைநிலை; ஆர் - விகுதி; ள, ட் ஆகிப்பின் ண் ஆகியது; ள், ட் ஆனது - சந்தி; பின் அது ண் ஆனது விகாரம்.

வெறுக்கை : வெறு+க்+கை; வெறு - பகுதி; க் - சந்தி; கை - விகுதி.

இயற்கை : இயல்+கை; இயல் - பகுதி; கை-விகுதி; ல், ற் ஆயிற்று.

போதருவீர் : போதா+வ்+ஈர்; போதா - பகுதி; வ் - இடைநிலை; ஈர் - விகுதி; போதா என்பது போதரு எனத்திரிந்தது விகாரம்.

நுவலாது : நுவல்+ஆ+த்+உ; நுவல் - பகுதி; ஆ - எதிர்மறை இடைநிலை; த் எழுத்துப்பேறு; உ - விகுதி.

பகுபதவுறுப்புகள்

பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்னும் ஆறும் பகுபதவுறுப்புக்களாகும்.

பகுதி : இது பகுபதத்தின் முதலில் உள்ள உறுப்பு.

(உ-ம்) செய்தான் : இதில் செய் - பகுதி

விகுதி : இது பகுபதத்தின் கடையில் உள்ள உறுப்பு.

(உ-ம்) அறிஞன் : இதில் அன் விகுதி.

இடைநிலை : இது பகுபதத்தின் இடையிலுள்ள உறுப்பு.

(உ-ம்) கண்டான் : இதில் ட் இடைநிலை.

சாரியை : இது பெரும்பாலும் இடைநிலை விகுதிகளுக்கு இடையில் வரும் உறுப்பு.

(உ-ம்) செய்தனன் : இதில் அன் சாரியை

சந்தி : இது பகுபத வுறுப்புக்கள் ஒன்றோடொன்று சேருங்கால் ஏற்படும் தோன்றல், திரிதல், கெடுதல் என்னும் மாறுபாடுகளைக் குறிப்பதாம்.

(உ-ம்) பிடித்தான் - இதில் 'பிடி' என்பதனை அடுத்துள்ள த் சந்தி.

விகாரம் : இது பகுபதவுறுப்புக்கள் அடையும் விகாரங்களாகிய நீட்டல், குறுக்கல், வலித்தல், மெலித்தல், விரித்தல், தொகுத்தல் என்னும் விகாரங்களைக் குறிப்பதாகும்.

(உ-ம்) கண்டான் : இங்கு காண் என்பது கண் எனக் குறுகியது விகாரம்.

உரைநடைப் பகுதி

(பாடச் சுருக்கமும், அருஞ்சொல் விளக்கமும்)

---

1. ஒரு குலத்துக் கொருமைந்தன்

பாடச் சுருக்கம் :

திரு. வி. க. அவர்கள் நவசக்தியின் ஆசிரியர். அவர் தம் மனைவி மக்களை இழந்து வருந்தினர். அதுகாலையில் அவர் தம் தமையனாகிய திரு. வி. உலகநாத முதலியாரது ஒரே மகனாகிய பாலசுப்பிரமணியனைக் கண்டு ஒருவாறு ஆறுதல் அடைவார். திரு. வி. க. அவர்களது குடும்பத்தார் அம்மகனைத் தம் குலத்தின் கொழுந்தாகக் கருதி வந்தனர். ஆயின், அம் மகன் தனது 23-ஆம் ஆண்டிலேயே இயற்கையெய்தினன்.

கல்லூரி இடைநிலை வகுப்புவரையில் அம்மைந்தன் படித்தவன். என் புருக்கி நோய் அவனது கல்வியைத் தடை செய்து விட்டது. கல்வியின்மீது அவன் பெரும்பற்று வைத்திருந்தான். பந்தாட்டத்தில் அவன் வல்லவன். பல்வகையிலும் சிறந்து விளங்கிய அவ்விளைஞன் நெடுங்காலம் இவ்வுலகில் வாழ முடியவில்லை.

திரு. வி. உலகநாத முதலியார் அவர்கள் மண்டல பூசை செய்தார். அப்பூசை நிகழ்ச்சிகளில் அம்மைந்தன் கண்ணையும் கருத்தையும் செலுத்தி யிருந்தான். ஆயின், அந்தோ! அப்பூசை முடிந்த அளவில் அவன் உயிர் உடலை விட்டுப் பிரிந்தது. மகனிறந்த நிகழ்ச்சி பெற்றோர்களை வருத்தியது; திரு. வி. க. அவர்களைப் பெரிதும் வாட்டியது. திரு. வி. க. அவர்களால் ஏனையோர்க்கு எத்தகைய ஆறுதலும் சொல்ல இயலவில்லை. அவர் எங்ஙனம் சொல்லுவார்? ஒரு குலத்துக்கொரு மைந்தன் மறைந்தானன்றே? சுந்தரர் பாடிய பாடலொன்றைப் பாடி இறைவனை அவர் இறைஞ்சினர். அவரால் வேறு என்னதான் செய்ய இயலும்?

அருஞ்சொல் விளக்கம்

பக்கம் 27. **நவசக்தி :** திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் நடத்தி வந்ததொரு பத்திரிகை. **சிலம்பு ஒலியா தொழிந்தது :** சிலம்பு என்பது மகளிர் காலணி ஆகும். நவசக்தி என்னும் பத்திரிகையைத் தாயாகவும், அப்பத்திரிகை வெளியிடப் பெறுதலை அத்தாயின் சிலம்பு ஒலித்தலாகவும் திரு. வி. க. அவர்கள் உருவகப் படுத்தியுள்ளார்கள். பத்திரிகை வெளியிடப் பெறவில்லை என்பது கருத்து. **செங்குறுத்தென :** செம்மையான குருத்து. இளமையும் மென்மையும் அழகும் வாய்ந்தது குருத்து. அக்குருத்து வளர்தலைப்போல் பாலசுப்பிரமணியன் வளர்ந்து வந்தான். **கண்மணி** - கண்ணின் கருவிழி. **போந்து** - வந்து, பிறந்து. **சேய்** - குழந்தை. **திங்கள்** - மாதம்.

பக்கம் 28. **வேட்கை** - விருப்பம். **ஊறு** - துன்பம். **கடிவது** - கோபிப்பது. **பயில்வன்** - பழகுவான். **மண்டல பூசை :** நாற்பது நாட்கள் செய்யப்படுவதொரு பூசை. **திருப்பாக்கள் :** தேவார, திருவாசகங்கள். **உறக்கம்** - தூக்கம். அருமை + உயிர் = ஆருயிர்.

பக்கம் 29. **இத்துணை** - இவ்வளவு. **இடையீடு இன்றி** - இடைவிடாமல். **ஒல்லும் வகை** - இயன்றவரை. **ஆற்ற** - செய்ய. **அவன்**

அன்றி - கடவுளே அன்றி. காதல் - அன்பு. குழவி - குழந்தை. விழைந்து - விரும்பி. கழல் - திருவடி. நாடி - தேடி. "அழுக்குமெய் கொடு" என்று தொடங்கும் பாடலின் பொருள்: திருவொற்றியூரில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானே! இவ்வுலகப் பற்றுக்களையும் மும் மலங்களையும் கொண்டு உனது திருவடியை யான் அடைந்தேன். ஈசனே! பிழுக்கை முதலியவைகளை அகற்றியும், மக்கள் பால் கொள்வர். எனவே, பல தவறுகளை யான் செய்திருந்தாலும் உன் திருவடிகளை மறக்க மாட்டேன். கீழே வழுக்கி விழுந்தாலும் உன் திருப்பெயரைக் கூறுவேனே யன்றி மற்றொரு சொல்லை யான் அறியமாட்டேன். உனது அருளைப் பெறுவதற்கேற்ற தகுதி எனக்கு இருக்குமேயானால் குருடான எனது கண்கள் பார்வையைப் பெறுவதற்கேற்ற மருந்தினைச் சொல்லியருள்வாயாக.

2. ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்

பாடச் சுருக்கம்

ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பங்களூர் சென்றகாலையில் தமிழார்வம் உடைய பலர் அவரிடம் பேசி வந்தனர். அவ்வூரில் சிவஞான முனிவரிடம் தவசிப் பிள்ளையாக இருந்தவர் வாழ்கின்றார் என்று தெரிந்தவுடன் அவரைச் சென்று கண்டார். சிவஞான முனிவரைப் பற்றிய பல செய்திகளை அவரிடமிருந்து அறிந்து கொண்டார். பங்களூரில் பிள்ளையவர்களை ஆதரித்து வந்தவர் வல்லூர் தேவராசப்பிள்ளை யவர்களாவார். அவரது ஆதரவினால் பிள்ளையவர்கள் கவலையின்றி விரைவில் உறையூர்ப் புராணத்தைப் பாடி முடித்தார். தேவராசப்பிள்ளையவர்கள், பிள்ளையவர்களிடம் பேரன்பும் பெருமதிப்பும் வைத்திருந்தவர். அவர் குசேலோபாக்கியானத்தைப் பாடத் தொடங்கினர். ஆயின், அவரால் அதனை முடிக்க முடியவில்லை. பிள்ளையவர்களே அதனை விரைவில் முடித்துக் கொடுத்தார். அந்நூல் அழகிய இனிய நடையில் அமைந்துள்ளது. தேவராசப் பிள்ளை தொடங்கிய சூத சங்கிதையையும் பிள்ளையவர்களே முடித்துக் கொடுத்தார். பிள்ளையவர்கள் திரிசிரபுரத்திற்குத் திரும்பும் காலையில் தேவராசப்பிள்ளை தமது ஆசிரியராகிய பிள்ளையவர்களுக்கு ரூ. 5000 மும் பீதாம்பரம் முதலியவையும் காணிக்கையாக அளித்தார். மகிழ்ச்சியோடு அவற்றைப் பெற்ற பிள்ளையவர்கள், தம்மால் முடிக்கப் பெற்ற குசேலோபாக்கியானத்தையும், சூதசங்கிதையையும் தேவராசப் பிள்ளையவர்களுடைய பெயரிலேயே வெளியிடச் செய்வித்தார். பிள்ளையவர்கள் திரிசிரபுரத்திற்குத் திரும்பிய பிறகும் அவருக்கும் தேவராசப் பிள்ளைக்கும் கடிதத் தொடர்பு இருந்து வந்தது.

அருஞ்சொல் விளக்கம்

பக்கம் 30. **பயில்வோர்** - கற்போர். **சல்லாபம் செய்தல்** - உரையாடி மகிழ்தல். **தவசிப்பிள்ளை:** உணவு சமைத்தல் முதலிய பணிகளைச் செய்பவன். **கையுறை:** பெரியவர்களைப் பார்க்கப் போகுங்கால் கொண்டு செல்லும் மரியாதைப் பொருள். **உவப்பு** - விருப்பம். **ஒருபால்** - ஒருபக்கம். **பஞ்சாட்சரம்:** ஐந்தெழுத்துக்களால் ஆன மந்திரம். (நமசிவாய) **தீக்ஷை:** ஒரு விரதத்தைக் குருவினிடத்திலிருந்து முறையாக உணர்ந்து தொடங்குதல்.

பக்கம் 31. **அனுஷ்டித்தல்** - முறையாகச் செய்தல். **பிராயம்**-வயது. **பாலியம்** - இளமை. **வல்லூர்த் தேவராசப் பிள்ளை:** இவர் குசேலோபாக்கியானத்தின் ஆசிரியர். பிள்ளையவர்களை ஆதரித்து வந்தவர். **யாப்பிலக்**

கணம் : செய்யுள் இயற்றுவதற்குரிய இலக்கணம். **அவா** - விருப்பம். **ஆற்றல்** - வலிமை, திறமை.

பக்கம் 32. கோமான் - தலைவன். **இடையூறு** - துன்பம்.

பக்கம் 33. துவாரபாலகர் - வாயிற்காவலர். **வறிதே** - வீணாக, ஒன்றுமின்றி. **சூத சங்கிதை** : வடமொழியிலுள்ள ஒரு நூல்; கந்தபுராணத்திலுள்ள ஆறு சங்கிதைகளில் ஒன்று. **வலியச்சென்று** - தாமாகச் சென்று. **திரிசிரபுரம்** : திருச்சிராப்பள்ளி.

பக்கம் 34. அணி - அழகு. **திரிபு** : செய்யுளின் ஒவ்வோரடியிலும் முதலெழுத்து வேறுபட்டு நிற்க, இரண்டு முதலிய எழுத்துக்கள் ஒன்றிநின்று பொருள் வேறுபடுமாறு பாடுவது. இஃது ஒருவகைச் சொல்லணியாகும். **சந்தம்** : பாடலுக்கமைந்த ஓசை. **வஞ்சித்துறை** : வஞ்சிப்பாவின் இனத்தைச் சேர்ந்தது இது. இரு சீரடிகள் நான்காய் ஒரு பொருள்மேல் ஒன்றாய் இது வரும். **சோடசாவதானம்** : ஒரே சமயத்தில் பதினாறு செயல்களைப் பிழைபடாது செய்யும் ஆற்றல். **பீதாம்பரம்** : பொன்னுடை. **சாஷ்டாங்கம்** : உடல் முழுவதும் பூமியில் படுமாறு அடி பணிதல். **கைம்மாறு கருதாமல்** - செய்த உதவிக்கு மாறாக மற்றொரு உதவியை எதிர்பாராமல்.

பக்கம் 35. சிறப்புப் பாயிரம் : நூல் ஒன்றினைச் சிறப்பித்துப் பாடலுருவில் அமைக்கப்படும் மதிப்புரை. **குருஸ்துதி** : ஆசிரியரைப் போற்றி வணங்குதல்.

3. நட்பு

பாடச் சுருக்கம்

உணர்ச்சியொத்த உண்மை நண்பர்களால் நன்மைகள் பலவிளையும். மனத்தில் அடைபட்டிருக்கும் இன்பதுன்பங்களை மனத்திலிருந்து வெளிப்படுத்துவதற்கேற்ற ஒரு போக்கு வீடு போன்றவன் உயிர் நண்பன். உள்ளத்தில் உள்ளதை நண்பனிடம் கூறினால் துன்பம் பாதியாகும்; மகிழ்ச்சி இருமடங்காகும். இக்காரணம் பற்றியே பழங்காலத்தில் அரசர்களும், செல்வர்களும உயிர் நண்பர்களைக் கொண்டிருந்தனர்.

ஒரு செயலை நண்பனிடத்தில் சொல்வதால் மந்தமான ஒருவனுடைய அறிவும் தெளிவடையும். சூழ்ச்சி சொல்வதற்குரியவன் உயிர் நண்பனே யாவான். நண்பன் இடித்துரைத்துக் கூறும் நல்லொழுக்கமே ஒருவனிடத்தில் நிலைபெற்றிருக்கும். ஒரு காரியம் முற்றுப் பெறுவதற்கும் நண்பனுடைய சூழ்ச்சி வேண்டும்.

ஒருவனுடைய திறங்களை அவனது நண்பனே பிறர்க்கு எடுத்துக் கூறுதல் தக்கதாகும். ஒருவன் இறந்த பின்னரும் அவன் விரும்பிய செயல்களைச் செய்து முடிக்க வல்லவன் உயிர் நண்பனேயாவான். எக்காலத்திலும் உதவி செய்பவன் நண்பனேயாவான். நட்பிற்கு வீற்றிருக்கை (அரசிருக்கை) எது எனின், அஃது எக்காலத்திலும் மாறுபடுதலின்றி இயலும் வகையில் அறம் பொருள்களிலிருந்து தளராமல் தாங்கி நிற்கும் வலிமையாகும். தன்னலம், உண்மை தவறுதல், பொறாமை முதலியவற்றால் நண்பர்கட்குள் பகையை உண்டாக்கப் பலர் முயல்வர். இவற்றிலிருந்து தம்மைக் காத்துக் கொள்ளுதல் நண்பர்களின் கடமையாகும்.

பக்கம் 36. வேற்றுமை - வேறுபாடு. **"சீரியர்......பயத்ததாம்"** : இதன் பொருள் : உயர்ந்தோரது நட்பு உயர்ந்த சிறப்பினை உடையதாய்

கைம்மாறு கருதாமல் மழை பொழியும் மேகம்போல் பெரும்பயனைத் தரும். **பிணி** - நோய். **ஆயுள் வேதியர்** - ஆயுர்வேதம் என்னும் மருத்துவத் துறையில் வல்லுநர். **பரமௌஷதம்** - மேலான மருந்து. **உவகை** - மகிழ்ச்சி. **அஷ்டசித்தி** - எட்டு வகைப்பட்ட சித்தி. நினைத்தவாறு செய்யவல்ல திறமையே சித்தி. **சூதன்** - தேர்ப்பாகன். **சூதன் மகன்** : தேர்ப்பாகன் மகனுகிய கன்னன். **இன்னோன்ன** - இவை போல்வனவாகிய.

பக்கம் 37. **மலங்கி** - மயங்கி. **உருப்படுவது** - ஓர் உருவத்தையடைவது. **நாழிகை** : 24 நிமிடங்கள். **உத்தமோத்தமம்** - மிகச் சிறந்தது. **பெற்றி** - தன்மை, விதம். **முகமன்** - உபசார வார்த்தை. **அதமம்** - கீழானது. **கழற்றுரை** - இடித்துக் கூறும் சொல்.

பக்கம் 38. **இடர்ப்படுவது** - துன்பப்படுவது. **பிரத்தியட்சம்** : கண்கூடு. **உசாவுதல்** - மெல்லக்கேட்டு உணர்தல். **நிமித்தம்** - பொருட்டு. **இறுதி** - முடிவு. **சிதைத்தல்** - அழித்தல். **கருமம்** - காரியம். **சூழ்தல்** - ஆராய்தல்.

பக்கம் 39. **தம்முன்** - அண்ணன், "நட்பிற்கு......நிலை" : இக்குறளின் பொருள். நட்பிற்கு அரசு இருக்கை எது எனின், அஃது எக்காலத்திலும் மாறுபடுதலின்றி இயலும் வரையில் அறம் பொருள்களிலிருந்து தளராமல் தாங்கி நிற்கும் வலிமையாகும். **பாரித்தல்** - விரித்துக் கூறுதல். **முடிக்ககில்லாதவன்** - முடிக்கமாட்டாதவன். **அகாரியம்** - செய்யத்தகாத காரியம். **மமதை** - கர்வம். **திரவியம்** - செல்வம். **சந்தேகாஸ்பதம்** - ஐயத்திற்கு இடம். **விசுவாசகாதகம்** - நம்பிக்கை மோசம். **புறங்கூறுதல்** : ஒருவரைக் கண்டபொழுது புகழ்ந்து, காணாத பொழுது இகழ்தல்: **மித்திரபேதம்**- நண்பர்க்குள் பகை மூட்டுதல். **ஓம்புதல்** - தடுத்துக் காத்தல்.

4. இசையின்பம்

பாடச் சுருக்கம்

இசை தனித்தும் சாகித்தியத்தோடு கலந்தும் நடைபெறும். தனி இசையினுல் பெறும் இன்பத்தைக் காட்டிலும் சாகித்தியத்துடன் கலந்த இசை மிகுந்த இன்பத்தைத் தரும். தமிழிலுள்ள வரிப்பாடல்கள் பல. அப்பாடல்கள் கேட்போர் மனத்தைத் தன் வசப்படுத்தி இன்புறுத்தும்.

சாகித்தியங்கள் அந்த அந்த நாட்டுமொழியில் இயற்றப்பெற்றனவாக இருத்தல் நன்று. அவ்வாறு இருந்தால்தான், பாடலைக் கேட்போர் அதன் பொருளையும் உணர்ந்து சுவைப்பர். எனவே, நம் தமிழ் நாட்டின் இசையரங்குகளில் பெரும்பாலும் தமிழ்மொழிப் பாடல்கள் மிகுதியாகப் பாடப்படவேண்டும்.

தற்காலத்தில் இசையரங்குகளில் கருநாடக இசைப் பாடல்கள் மிகுதியாகப் பாடப்படுகின்றன. இசைப் புலவர்கள் தமிழ்ப்பாடல்களில் சிலவற்றையே பாடுகின்றார்கள். இம்முறை மாறுதல் வேண்டும். இயல், இசை, நாடகம் என்று தமிழ் மூவகைப்படும். அம்மூவகையினுள் இசையானது இன்றியமையாத கூறாக அமைந்து பெருமை தருகின்றது. ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தமிழிசைக்கு ஆக்கம் தேடித் தந்தார்; வளர்ந்து தமிழ் நாட்டில் பரவப் பெருந்துணை செய்தார். அவரது முயற்சியை யாவரும் பாராட்டுதல் வேண்டும். இனி, பிற்காலத்தில் தமிழிசை வளர்ந்து தமிழர் பெருமை ஓங்கும் என்பது திண்ணம். இடையிடையே

எதிர்ப்புகளும் தடைகளும் இருந்தாலும் தமிழிசை இசை அரங்குகளில் முதலிடம் பெறுமாறு செய்வது தமிழர்களின் கடமையாகும்.

பக்கம் 40. **இம்மை** - இவ்வுலக வாழ்க்கை. **விரவும்** - கலக்கும். **நாதம்** - ஒலி. **மாத்திரை** - அளவு. **பண்டு** - பழங்காலத்தில். **பாகுபடுத்தி** - வகைப்படுத்தி. **பாணர்** - பாடல்பாடி வாழ்க்கை நடாத்திய ஒருவகை இனத்தவர். **விறலியர்** - வெற்றி பொருந்த ஆடும் மகளிர்; பாண்பெண்டிர். **சாகித்யம்** - இசைப் பாடல்கள்.

பக்கம் 41. **ஒன்பான் சுவைகள்** - ஒன்பதுவகைச் சுவைகள்: வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், உருத்திரம், நகை, சாந்தம். **இயையும் பொழுது** - பொருந்தும் பொழுது. **மிடற்றுப் பாடல்** - வாய்ப் பாட்டு. **வேட்கை** - விருப்பம். **கடப்பாடு** - கடமை. **தானம்** - இடம். **வெண்காடு** - திருவெண்காடு என்னும் திருத்தலம். **விகிர்தனர்** - உயர்ந்தவராகிய சிவபிரானர்.

பக்கம் 42. **பரிபாடல்** - எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று; திருமால், முருகன் முதலிய கடவுளைப் பற்றியும், வையை என்னும் ஆற்றைப் பற்றியும் சிறப்பித்துப் பாடப்பெற்ற பாடல்கள் இந்நூலுள் உள்ளன. **திகழும்** - விளங்கும். **அனுபானம்**-துணையுணவு. **திருநாவலூரர்** - சுந்தரர். **ஏதுக்கள்** - காரணங்கள்.

பக்கம் 43. **குழு** - கூட்டம். **அன்னர்** - அத்தகையார்.

பக்கம் 44. **அயர்ந்த** - சோர்ந்த. **விஞ்சி** - மிகுந்து. **சிதைத்து** - அழித்து. **அறவே** - முழுவதும்.

பக்கம் 45. **வழு அற** - குற்றம் இல்லாமல். **நெடிது**-நீண்டநாள். **இடையூறு** - இடையில் வரும் துன்பம். **ஆற்றல்** - வலிமை. **ஏழிசை** - ஸட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் ஆகிய ஏழும் கருநாடக இசையில் ஏழிசை எனப்படும். குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் ஏழும் தமிழிசையில் ஏழிசை எனப்படும். **பரிகரிக்கத் தக்கது** - மாற்றி நிறைவு படுத்தத் தக்கது. **பண்டை** - பழைமை. **ஆக்கம்** - செல்வம்.

5. கம்பரும் நாடகப் பண்பும்

பாடச் சுருக்கம்

கம்ப ராமாயணத்தைச் சிலர் கம்ப நாடகம் என்பர். அதனை அவ்வாறு சுட்டுதல் பொருத்தமேயாகும். ஒரு மனஉணர்ச்சி மற்றொரு மனஉணர்ச்சியைத் தாக்கும்பொழுது எழுகின்ற சொல்லும் செயலுமே நாடகத்தில் சுவைத்தற்குரிய செய்திகள். அவை நன்கு கம்ப ராமாயணத்தில் அமைந்துள்ளன. எனவே, அதனை நாடகம் என்று கூறுதல் தகும்.

கும்பகர்ணனும், இலக்குவனும் போர்செய்யத் தொடங்குங்கால் அவர்களுடைய பேச்சுக்களின் வாயிலாகக் கம்பர் நாடகத்தில் சொல் பிறக்கும் விதத்தை அழகுற அமைத்துள்ளார். இராமன் குறித்த காலத்தில் வரவில்லை என்று பரதன் தீ மூழ்கப் புகுங்கால், அனுமன் விரைந்து வந்து, இராமனது வருகையைக் கூறினன். அப்பொழுது அவனது மகிழ்ச்சிச் செயல்களைக் கம்பர் சுவைபடப் பாடியுள்ளார். சொல் இல்லாமல் உள்ளத்தில் உண்டான

உணர்ச்சி எப்படி வெளிப்படும் என்பதற்கு அஃதொரு சான்ருகும். சொல்லும், மெய்ப்பாடும் தக்கவாறு அமைந்திருத்தலால், கம்ப ராமாயணம் ஒரு நாடகம் என்று குறிப்பிடுவதில் தவறில்லை.

அருஞ்சொல் விளக்கம்

பக்கம் 46. **வியாக்கியானம்** - விளக்கவுரை. **மெய்ப்பாடு** - உடம்பின்கண் தோன்றுகின்ற நுட்பமான உணர்ச்சிச் செயல்கள். **மடிவான்** - இறப்பான்.

பக்கம் 47. **நாசி** - மூக்கு. **கொய்தாய்** - நறுக்கினுய். **“பெய்தவத்தின்......... என்ருன்”** : **இதன் பொருள்:** ‘எங்கள் குலம் செய்த தவத்தினுல் பிறந்த ஒரே பெண்கொடி சூர்ப்பணகை. அவள் எத்தகைய குற்றமும் இல்லாதவள். ஆயின், அவளது மூக்கைக் கொடிய கோபத்தினுல் நறுக்கிய வெற்றியை உடையவனே! அவளது கூந்தலைத் தொட்டு இழுத்த கையைப் பூமியில் வெட்டி வீழ்த்தப் போகின்றேன். உனக்கு வல்லமையிருந்தால் காத்துக் கொள்’ என்ருன் கும்பகர்ணன். **அல்** - இருட்டு.

பக்கம் 48. **மாற்றம்** - மறுமொழி. **“அல்லினுற் .... சொன்னுன்”** : **இதன் பொருள்:** ‘இருளினுல் செய்தாற்போன்ற கருநிறத்தினை உடையவனுகிய கும்பகர்ணன் அவ்வாறு கூறவே, வலிமை என்னும் பண்பினைக் கொண்டு செய்யப்பெற்றனபோல் விளங்குகின்ற தோளினை உடைய இலக்குவன், உங்களிடத்து மறுமொழியை வில்லினுல் சொல்லலாமேயன்றி, வீரத்தன்மைக்கு நாணம் உண்டாகும்படி சொல்லினுல் சொல்வதற்கு யாம் கற்றிலேம்!’ என்று மறுமொழி கூறினுன் இலக்குவன்.

பக்கம் 49. **பிரவேசம்** - புகுதல். **சிலை** - கல்லிற் செதுக்கிய உருவம். **குண்டம்** - குழி. **வேதியர்** - வேதம் ஓதும் அந்தணர். **இழுக்கு** - குற்றம். **வாஞ்சை** - அன்பு.

பக்கம் 50. **“வேதியர்.........தோற்றிற்றே”** : **இதன் பொருள்:** ‘இராமன் வந்து விட்டான்’ என்பதை உணர்ந்த பரதன் மகிழ்ச்சியுடன் அந்தணர்களைத் தொழுவான்; அரசர்களைத் தொழுவான்; வேலைக்காரிகளைத் தொழுவான்; தன்னையே தொழுது கொள்வான். எதனையும் அவன் அறியாதவனுய் இருப்பான்; நிற்பான். (அண்ணனிடம்) அன்பு என்னும் இதுவும் ஒரு கள்ளின் வேலையேயாகும்.’

6. பள்ளரும் பள்ளியரும்

பாடச் சுருக்கம்

பள்ளர் பள்ளியரின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு எழுந்த நூல் பள்ளு. முக்கூடற் பள்ளு என்னும் நூல் முக்கூடலில் வாழ்ந்த பள்ளர் பள்ளியரின் வாழ்க்கையைச் சுவைபடக் கூறுகிறது.

வேளாளர் இன்றேல் உலகம் நடைபெருது. ஏர்த் தொழிலைச் சிறப்பாக நடத்துபவர் பள்ளர்கள் ஆவார். மேற்றிசையிலும் கீழ்த்திசையிலும் மின்னல் மின்னுவதிலிருந்தும், காற்றுச் சுழன்று வீசுவதிலிருந்தும், தவளை கூசுதுவதிலிருந்தும் நண்டு வளை தோண்டுவதிலிருந்தும், வானம்பாடி வட்டமிட்டு ஆடுவதிலிருந்தும், பள்ளர்கள் மழை பெய்யப் போகின்றது என்பதை உணர்வர்.

“செய்த நன்றி ஒருநாளும் மறக்க வேண்டா” — உலகநீதி

ஆற்றில் வெள்ளம் வந்தவுளவில் பள்ளர் மகிழ்ச்சியுடன் உழவுத் தொழிலைத் தொடங்குவர். ஆற்று வெள்ளத்தில் துள்ளும் பலவகை மீன்கள் அவர்கட்குக் களிப்பை உண்டாக்கும். நல்லநாள் பார்த்துப் பள்ளர்கள் முதற்கண் பண்ணை நிலத்தை உழுது பண்படுத்துவர் ; பின்பு விதை தெளிப்பர் ; நெல்முளை கிளம்பியவுடன் நீர் பாய்ச்சி வடித்து, வேலியமைத்து, எருவிடுவர். நாற்று முகத்தைக் கண்டவுடன் பள்ளர் தம் பண்ணையாருக்கு அச்செய்தியைச் சொல்லுவர்.

பின்பு நாற்றுக்கள் நடப்பெறும். பள்ளியர் நாற்று நடுங்கால் திருமாலைப் பலவாறு புகழ்ந்து பாடுவர். பள்ளியர்க்குள் பூசல் தோன்றுவதுண்டு. வைணவசமயத்தைப் பின்பற்றிய மூத்த பள்ளியும், சைவசமயத்தைப் பின்பற்றிய இளைய பள்ளியும் ஒருவரை ஒருவர் ஏசுவர். பள்ளன் தன் மனைவியருடைய பூசலைப் போக்குவான். இவ்வாறு பள்ளர் வாழ்க்கை சுவை மிகுந்ததாகும்.

அருஞ்சொல் விளக்கம்

பக்கம் 51. வேளாண்மை - உழவுத் தொழில் ; வெள்ளத்தைத் தடுத்து ஆளுந்தன்மை; உபகாரத் தொழில். **விழுமிய** - சிறந்த. **அணி** - அழகு. **பார்** - பூமி. **அன்னார்** - அத்தகையார். **"ஆற்றுவெள்ளம்... ... கொள்ளுமே"** : **இதன் பொருள்** : 'ஆற்று வெள்ளம் நாளை வரும் என்பதற்குரிய குறிகள் தோன்றுகின்றன. மேல் திசையிலும், தென்திசையிலும் மின்னல் மின்னுகிறது நேற்றும், இன்றும் மரக்கொம்புகள் சுற்றிச் சுற்றிச் சுழலுமாறு சுழல் காற்று அடிக்கின்றது. கிணற்று நீரில் கிடக்கும் தவளை கத்துகிறது. சேற்றில் வாழும் நண்டு சேற்றில் வளை தோண்டுகிறது. மழையைத் தேடி வானம்பாடிப் பறவை பாடி ஆடுகிறது. (மழை பெய்யுமாதலால்) யாவரும் துதிக்கும் திருமாலாகிய அழகரைச் சிறப்பிக்கும் சேரிப் பள்ளராகிய நாம் ஆடிப்பாடித் துள்ளி மகிழ்வோம்.' **புனல்** - தண்ணீர்.

பக்கம் 52. பொருனை : தாமிரபரணி. **"குற்றாலத்.........பாரும் பள்ளீரே"** : **இதன் பொருள்** : 'திருக்குற்றால மலையில் மேகம் பொழிந்த நீர் ஒன்றுகூடித் தாமிரபரணியைச் சேர்ந்து, முக்கூடல் என்னும் ஊரை வலமாக வந்து, மடுவில் உள்ள பறவை, வரால், வாளை, கோளை, தேளி, மயிந்தி, உழவை, அயிந்தி, கூனி, மணலி, ஆரால், அயிரை, கெண்டை, கெளிறு, வரால் முதலிய மீன்கள் அணையில் பாயுமாறு வயலில் புகும். பள்ளர்களே ! இவ்வாறு ஓடிவரும் சிற்றாறு என்று பெயர் பெற்ற சித்திரா நதி செய்யும் அழகினைப் பாருங்கள்.' **"உழுத......தெளித்தான்"** : **இதன் பொருள்** : 'உழவினைக் கண்டு மகிழ்ந்தான் பள்ளன். அவன் ஏனைப் பள்ளர்களையெல்லாம் அழைத்தான்; பயிர் செழிக்குமாறு கடவுளைத்தொழுது பூசை முதலியன செய்தான் ; அந்தச் சேற்றில் விதைகளையெல்லாம் தெளித்தான். **பணி** வேலை. **பான்மை** - தன்மை. **தொளி** - சேறு, வயல்.

பக்கம் 53. "முளைத்த.........எருவிட்டான்" : **இதன் பொருள்** : 'விதைத்த விதைகளில் முளைகள் தோன்றியிருந்தன. முளைத்த நாற்றுகளுக்குப் பள்ளன் தண்ணீர் பாய்ச்சினான் ; விதை அழுகாதவாறு கொல்லையை மறுநாள் வெட்டிவிட்டான் ; அதற்கு வேலி அமைத்தான் ; நாற்றுக்கள் நன்கு வளரும்பொருட்டு நாள்தோறும் எருவிட்டான்.' **அடைத்தல்** - பாய்ச்சுதல், கட்டுதல். **"வளர்ந்த.........விண்டான்"** : **இதன் பொருள்** : 'வளர்ந்த நாற்றைப் பள்ளன் கண்டான் ; அளவற்ற மகிழ்ச்சி கொண்டான் ;

பக்கம் 58. நடையாடுதல் - திரிதல். ஊதியம் - இலாபம், செல்வம். கண்டசரம் - கழுத்துப்பட்டை.

பக்கம் 59. சின்னம் - அடையாளக் குறி. உறை - தங்கும். பண்டாரம் - பொக்கிஷம். ஆற்றல் - திறமை.

பக்கம் 60. பல்கி - மிகுந்து. மாய்ந்து - இறந்து.

8. பொன் பூக்கும் கடல்

பாடச் சுருக்கம்

பொன்னைப்போல் போற்றத்தக்க பொருளைக் கடலிலிருந்து பிரித்தெடுக்கலாம். அதுதான் மக்னீஷியம். தரையில் உள்ள பொருள்கள் யாவும் கடலில் இருக்கும். கடல் நீரைக் கட்டியாக்கினால் கறியுப்பு, மக்னீஷியம், அலுமினியம், பொன், புரோமின், ஹைட்ரஜன், ஆக்ஸிஜன் ஆகியவை கிடைக்கும். கடலில் உள்ள முக்கியமான அடிப்பொருள் மக்னீஷியம் ஆகும். மக்னீஷியத்தைக் கடல் நீரிலிருந்து மின்வழிப் பிரிமுறை வழியாகப் பிரிக்கலாம். கடலிலிருந்து மக்னீஷியத்தைப் பெரிய அளவில் பிரித்து எடுப்பதில் பல தொல்லைகள் உள்ளன. எனினும், அவற்றையெல்லாம் விலக்கி, டெக்ஸாஸ் என்னும் இடத்தில் உள்ள 'ப்ரீபோர்ட்' என்னும் துறைமுகத்தில் பெரிய அளவில் கடல் நீரிலிருந்து மக்னீஷியம் பிரித்தெடுக்கப்படுகிறது. மக்னீஷியம் அலுமினியத்தைக் காட்டிலும் இலேசானது. எனவே, மக்னீஷியம் ஆகாய விமானங்களைக் கட்டுவதற்குப் பயன்படும்.

அருஞ்சொல் விளக்கம்

பக்கம் 62. செருக்கு - கர்வம். மச்சாவதாரம் - திருமால் மீனாக அவதாரம் செய்தமை. தத்துவார்த்தம் - உண்மைப் பொருள்.

பக்கம் 63. கறி உப்பு - சமையலில் பயன்படுத்தும் உப்பு. கரும்பொன் - இரும்பு.

பக்கம் 64. உப்பளம் - உப்பு எடுக்கும் இடம். மருத்துவர் - வைத்தியர்.

பக்கம் 65. கடைகால் - தொடக்கம். பூத்தல் - தோன்றுதல். மந்தரம்: பாற்கடலைக் கடைய மத்தாக உபயோகப்பட்ட மலை. வாசுகி - பாற்கடலைக் கடையக் கயிறாகப் பயன்பட்ட பாம்பு.

பக்கம் 67. வேதிப் புலவர்: அறிவு நூற்புலவர். இச்சொற்றொடர், தாழ்ந்த உலோகங்களைப் பொன்னாகச் செய்யும் இரசவாதிகளையும் குறிக்கும்.

பக்கம் 68. பொறி - இயந்திரம். உயிரியம் - ஆக்ஸிஜன்.

பக்கம் 69. எஞ்சி - மிச்சமாக.

9. நாடும் நகரமும்

பாடச் சுருக்கம்

தமிழ் நாட்டைப்பற்றிய செய்திகள் பலவற்றைச் சங்க இலக்கியத்திலிருந்து நாம் உணரலாம். காவிரிபுகும் பட்டினம் சோழர்களின் தலைநகரம். அது செல்வம் மிகுந்த நகரம். அந்நகரத்தை ஆண்ட சோழனுக்கு ஐம்பெருங் குழுவினரும், எண்பேராயத்தாரும் அரசியலில் துணைசெய்தனர். சுங்கவரி அக்காலத்தில் வாங்கப்பட்டது. அப்பட்டினத்தில் பல வகைப் பொருள்கள் வேறிடங்களிலிருந்து வந்தன. அந்நகர மக்கள் பகலில் வேலைசெய்து, மாலையிலும், இரவிலும் இன்பமாகப் பொழுதுபோக்குவர். அங்கே பலவகை வியாபாரங்கள் நிகழ்ந்தன; பல தொழிலாளர்கள் வாழ்ந்தனர்.

மதுரை பாண்டியர்க்குத் தலைநகரம் ஆகும். அந்நகர மக்களின் வாழ்க்கையைப்பற்றி மதுரைக் காஞ்சி என்னும் நூல் தெளிவாகக் கூறுகிறது. அந்நகரில் வாழ்ந்த தொழிலாளர்களைப்பற்றிச் சிலப்பதிகாரம் கூறுகிறது.

சேரநாட்டுத் தலைநகரம் வஞ்சி. அது நானிலத் தன்மையும் வாய்ந்தது. அந்நகரில் வேற்று நாட்டு ஒற்றர்கள் வாழ்ந்தனர்.

அக்காலத்தில் உப்பு வாணிகருடைய வாழ்க்கை, குடிசை வாழ்க்கை, இடையர் வாழ்க்கை, அந்தணர் வாழ்க்கை, வேளாளர் வாழ்க்கை முதலியவற்றைச் சங்க நூல்களிலிருந்து நாம் விரிவாக உணரலாம்.

அருஞ்சொல் விளக்கம்

பக்கம் 71. சங்ககால இலக்கியம் - பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, சிலப்பதிகாரம் முதலியவை. **வஞ்சி** - சேரர் தலைநகரம். **காவிரிபுகும் பட்டினம்:** சோழர் தலைநகரம். **மதுரை:** பாண்டியர் தலைநகரம். **தட்பம்** - குளிர்ச்சி. **வேளாண்மை** - உழவுத்தொழில். **தொழுநோய்** - குட்டநோய் (குஷ்டம்). **பெருமகன்:** சோழன். **தலைவைத்த** - முதலாகக் கொண்ட. **ஐம்பெருங்குழு** - அமைச்சர், புரோகிதர்,சேனைபதியர், தூதுவர், சாரணர். இக்குழுவினர் அரசனுக்கு உறுதுணையாக இருந்து உதவியவர்கள். **எண்பேராயத்தார்** - கரணத்தியலவர், கருமகாரர், கனகச்சுற்றம், கடைகாப்பாளர், நகரமாந்தர், படைத்தலைவர், யானை வீரர், குதிரை வீரர்; அரசனுக்குப் பெருந்துணையாக இருந்தவர்கள். **வளவன்** - சோழன். **சுங்கம்:** ஒருவகை வரி. **பணித்தல்** - கட்டளையிடுதல்.

பக்கம் 72. புலி முத்திரை - சோழர்க்குரிய அடையாளப் பொறி. **பட்டினப்பாலை:** பத்துப்பாட்டில் ஒன்று; சோழன் கரிகாற் பெருவளத்தானைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடிய பாடல்: 301 அடிகளை உடையது. **"உல்கு செய.........போர் ஏறி": இதன் பொருள்:** 'சுங்கங் கொள்ளுதலால் குறைபடாமல்.........மனத்தினால் அளந்து அறியப்படாத பல பண்டங்கள்.........சோழனுக்குரிய அடையாளமாகிய புலியைப் பொறித்து, மரக்கலத்திற்குப் போகவிட்டு, மனத்தினால் மதித்தல் நிறைந்த மிகுந்த பண்டங்கள் கட்டிய கட்டுக்கள் அடுக்கிய போரில் ஏறி' **பொதி** - மூட்டை. **ஈழம்** - இலங்கை. **உருத்திரங் கண்ணனார்:** பட்டினப்பாலை பாடிய ஆசிரியர். **படிந்து** - முழுகி. **துய்ப்பர்** - நுகர்வர்.

"மாந்தர்க்கு இனத்தியல்ப தாகும் அறிவு." — வள்ளுவர்.

பக்கம் 73. **நயந்தும்** - விரும்பியும். **ஓர்ந்தும்** - கேட்டும். **அல்லங் காடி** - மாலைவேளைக்கடை. **நாளங்காடி** - பகற்கடை. **ஓவியம்** - சித்திரம்.

பக்கம் 74. **வழுவுதல்** - தவறுதல். **கொடுஞ்சி** - தேர்மொட்டு. **ஓதை** - ஓசை. **பாணி** - தாளம், பாட்டு. **நுளைச்சியர்** : நெய்தல்நில மகளிர். **பரதவர்** : நெய்தல்நில ஆடவர்.

பக்கம் 75. **முடங்கல்** - ஓலை, கடிதம். **பெரும்பாணாற்றுப்படை** : பத்துப்பாட்டில் ஒரு பாட்டு. **காணுமாப்போல** : காண்பதுபோல. **உவரி நீர்** - உப்பு நீர்.

பக்கம் 76. **குழை** - குண்டலம். **இல்** - வீடு. **கோடரி** - இது 'மரக் கொம்புகளை வெட்டுதற்கு உதவும் கருவி' என்று பொருள்படும். **மறையவர்:** வேதம் ஓதும் அந்தணர். **பொலிவு** - விளக்கம்.

பக்கம் 77. **தொலை** - தூரம். **தாமணி** - தாம்பு. **தறி** - கட்டும் தூண். **முகடு** - உச்சி.

10. வயிற்றுக் கவலை

பாடச் சுருக்கம்

பழங்காலத்தில் புலவர்கள் பலர் வறுமையால் வாடினர். அதற்குரிய காரணங்கள் மூன்று. அவை புலவர்கள் பொருள் தேடுவதில் காலம் கழியாமல் புலமையையே தேடி வாழ்ந்தமை ; வள்ளல்கள் கொடுத்த பரிசில்களைப் பலருக்கும் பகிர்ந்து கொடுத்தமை ; தமது வயிற்றுக் கவலையால் பொது மக்கள் புறக்கணித்தமை என்பன.

புலமையின் உயர்வைப் பொது மக்கள் உணர்ந்திலர். புலவர்களோ 'செல்வத்துப் பயனே ஈதல்' என்னும் குறிக்கோளினைக் கொண்டிருந்தனர். பெருஞ்சித்திரனார் குமணனிடம் பெற்ற பரிசிலைப் பலர்க்கும் பகிர்ந்து கொடுத்துவிட்டார். புலவர் அறிவு வாழ்க்கையைப் பின்பற்றியபொழுது பொதுமக்கள் வயிற்று வாழ்க்கையையே நாடலாயினர். அவ்வயிற்றுக் கவலையால் பொதுமக்கள் எல்லாச் செயல்களிலும் வரவு செலவு பார்க்கலாயினர். அறிவுப்பசி அவர்கட்கு உண்டாகவில்லை. எனவே, அவர்கள் புலவர்களைப் புறக்கணித்தனர்.

அருஞ்சொல் விளக்கம்

பக்கம் 78. **புலமை** - அறிவு. **அறுவை** - ஆடை. **ஊறு** - துன்பம். **திங்கள்** - மாதம். **வண்மை** - கொடைத்தன்மை. **நிலவும்** - தங்கும். **உணர்வு** - அறிவு.

பக்கம் 79. **புரவலர்** - புரத்தலில் (காத்தலில்) வல்லோர்; அரசர். **வெய்து** - சுடச்சுட. **அறியேம்** - அறியமாட்டோம். **உறைந்தது** - தங்கியது. **"புரப்போர்......உறவே"** இதன் பொருள் : 'என்னால் காக்கப்படும் உறவினர் துயரம் மிக, இரப்பவர்கட்குக் கொடாத வறுமையை யான் அடைவேனாகை.' **அரும்பிய** - தோன்றிய. **இன்மை** - வறுமை. **"தெண் கடல்.........பலவே."** **இதன் பொருள்** - 'தெளிந்த நீரால் சூழப்பெற்ற உலகம் முழுவதையும் பிற அரசர்கட்குப் பொதுவாதல் இன்றித் தமக்கே உரிமையாகக்கொண்டு, வெண்கொற்றக் குடையால் நிழல்செய்த ஒரு

தன்மையை உடைய பேரரசர்க்கும், இடையாமத்திலும் நடுப்பகலிலும் தூங்காதவனாய், விரைந்த ஓட்டத்தினை உடைய விலங்குகளை வேட்டையாடக் கருதிச் செல்லும் கல்வியில்லாத ஒருவனுக்கும் உண்ணப்படும் பொருள் நாழியரிசியேயாகும்; உடுக்கப்படுபவை இரண்டே. பிறவும் எல்லாம் ஒக்குமாதலால், செல்வத்தால் பெறும்பயன் பிறர்க்குக் கொடுத்தலேயாகும். செல்வத்தை யாமே நுகர்வோம் என்று கருதினால், தவறுவன பல.'

பக்கம் 80. **மலர்ந்த** - தோன்றிய. **பால்** - பக்கம். **ஊண்** - உணவு. **ஒல்லுமோ** - முடியுமோ. **பேணி** - போற்றி. **பேழை** - பெட்டி. **குழூ** - கூட்டம். **துணைவி** - மனைவி.

பக்கம் 81. **"நின்னயந்..............வளனே"**: இதன் பொருள்: 'எனது இல்லத்திற்கு உரிமை பூண்ட பெண்ணே! பலப்பழம் முதலியன தொங்குகின்ற முதிரமலைக்கு உரிமை பூண்டவனாகிய திருந்திய வேலினை உடைய குமணவள்ளல் எனக்குப் பரிசிலாகக் கொடுத்த செல்வத்தை உன்னை விரும்பி வாழும் நின் சார்பான மகளிர்க்கும், நீ அன்பு காட்டி ஒழுகப்பட்ட மகளிர்க்கும், பல குணங்களும் மாட்சிமைப்பட்ட கற்பினை உடைய நின் உறவினருள் மூத்த மகளிர்க்கும், நம் சுற்றத்தினரது மிக்க பசி நீங்க உனக்கு நெடுநாட்படக் குறித்த கடனைத் தந்தோர்க்கும், மற்றும் இன்ன தன்மையோர் என்று கருதாமல், என்னோடு கூடி உசாவாமல், இப்பொருளைக் கொண்டு குடிவாழ்க்கை வாழக்கடவேம் என்று கருதாமல் நீயும் யாவருக்கும் வழங்குவாயாக. யானும் எல்லோர்க்குங் கொடுக்கின்றேன்.' **எத்துணை** - எவ்வளவு.

பகுத்து - பிரித்து. **துணைவி** - மனைவி. **பணை** - மூங்கில். **இருக்கை** - வீடு. **காமுறுதல்** - விரும்புதல்.

பக்கம் 82. **பசி வந்திடப் பத்தும் பறந்தல்** - மானம், குலம், கல்வி, கொடை, அறிவு, தானம், தவம், உயர்ச்சி, முயற்சி, பெண்டிர்மேல் ஆசை ஆகிய பத்தும் பசி வந்திடப் பறந்து போகும். **உழலும்** - துன்புறும், சுழலும். **இவறுதல்** - ஈயாது இறுக்கிப் பிடித்தல், கருமித்தனம்.

பக்கம் 83. **பறை சாற்றுதல்** - பலரும் அறியுமாறு செய்தல். **புறக்கணித்தல்** - போற்றாது விடுத்தல். **நாடுதல்** - தேடுதல். **முந்துற்று** - முன் வந்து. **வறியவர்** - பொருள் இல்லாதவர். **இறை** - வரி. **இறுக்கின்றனர்** - செலுத்துகின்றனர்.

பக்கம் 84. **ஆற்றல்** - திறமை, வலிமை. **இறுமாந்து** - தலை நிமிர்ந்து, பெருமிதங்கொண்டு. **உவந்த** - மகிழ்ந்த.

வினாக்களும் விடைகளும்

[உரை நடைப் பகுதி]

1. ஒரு குலத்துக் கொருமைந்தன்

1. ஒரு குலத்துக் கொருமைந்தன் என்று குறிப்பிடப்பட்டவன் யாவன்?

திரு. வி. க. அவர்களுடைய தமையனராகிய திரு. வி. உலகநாத முதலியார் அவர்களது மகனான பால சுப்பிரமணியன் என்பவனே ஒரு குலத்துக் கொரு மைந்தன் என்று குறிப்பிடப்பட்டவன் ஆவான்.

2. பாலசுப்பிரமணியனுடைய கல்வி எதனால் தடைப்பட்டது?

பால சுப்பிரமணியனை அடிக்கடி நோய் பீடித்து வந்ததாதலால் அவனது படிப்பு தடைப்பட்டது.

3. பாலசுப்பிரமணியன் எப்போது இவ்வுலகிலிருந்து மறைந்தான்?

திரு. வி. உலகநாத முதலியார் அவர்கள் மண்டல பூசை நாற்பது நாட்கள் நடத்தினர். நாற்பதாவது நாள் அன்று காலையில் பூசை பெருஞ்சிறப்புடன் முடிந்தது. அன்று மாலையில் ஏழை மக்கள் பலர் அவரில்லத்தில் உணவு உண்டனர். அவை யாவும் முடிந்தபிறகு இராக்காலத்தில் பால சுப்பிரமணியன் இவ்வுலகிலிருந்து மறைந்தான்.

4. 'இப்பொழுது ஒரு பெரும் சோதனை செய்தனன்': இடஞ்சுட்டி விளக்குக.

திரு. வி. க. அவர்கள் தம் மனைவி மக்களை இழந்து வருந்தினர். அவ்வாறு வருந்திய நிலையில் அவருடைய தமையனரது மைந்தனும், ஒருகுலத்துக்கொரு மைந்தனும் ஆகிய பால சுப்பிரமணியனே அவருக்கு ஆறுதல் அளித்துவந்தான். அம்மகன் என்புருக்கி நோயால் இறந்துபடவே, அவனது பிரிவினால் திரு. வி. க. அவர்கள் பெரிதும் வருந்தினர். அவர் கடவுளின் அருளினாலேயே இவ்வுலகில் யாவும் நிகழ்கின்றன என்னும் கருத்துடையவர். எனவே, தமது அண்ணனது மகன் இறந்தமை பொருது கடவுள் ஒரு பெருஞ் சோதனை செய்தார் என்று கருதி, அவர், 'இபபொழுது ஒரு பெருஞ் சோதனை செய்தனன்' என்று கூறினர்.

5. திரு. வி. உலகநாத முதலியாரைப் பற்றி நீவிர் அறிந்தவற்றைச் சுருக்கி வரைக.

திரு. வி. க. அவர்களின் தமையனராகிய திரு. வி உலகநாத முதலியார் அவர்கள் நவசக்தியின் காரிய நிர்வாகியாக இருந்தவர். தமது ஒரே மைந்தனாகிய பால சுப்பிரமணியனிடம் அவர் பேரன்பு வைத்திருந்தார். நோய்வாய்ப்பட்டிருந்த மகன் அளவுக்கதிகமாகப் படிக்கும்பொழுது அவனை முதலியார் அவர்கள் கோபித்துக்கொள்வதுண்டு. அவர் கடவுட்பற்று மிகுதியாக உடையவர். வழிபடு கடவுட் பூசையை அவர் நடத்துவது வழக்கம். நாற்பது நாட்கள் செய்யப்படுவதாகிய மண்டலபூசையையும் அவர் செய்தார். மகனிறந்த துயரம் அவரைப் பெரிதும் வாட்டியது.

"புறஞ்சொல்லித் திரிவாரோடு இணங்க வேண்டா." — உலகநீதி.

6. 'ஒரு குலத்துக் கொருமைந்த 'னாகிய பால சுப்பிரமணியனது குண நலன்களைப் பற்றி 20 வரிகளில் ஒரு கட்டுரை வரைக.

ஒரு குலத்துக் கொரு மைந்தனாகிய பால சுப்பிரமணியன் 23 ஆண்டுகளே இம்மண்ணுலகில் வாழ்ந்தான். அதற்குள்ளாகவே அவனது நற்பண்புகள் பல நன்கு வெளிப்பட்டன. அடிக்கடி நோயினால் துன்புற்றானும், அவன் ஏதாவதொரு நூலைப் படித்துக்கொண்டிருப்பான். அவன் பந்தாட்டத்தில் வல்லவனாக இருந்தான்; தனது ஓய்வு நேரத்தில் நவசக்தியின் தொழிற்சாலையுள் புகுவான்; தொழிலாளர்களுடன் உரையாடுவான்; தொழில் முறைகளை நுணுகி நோக்குவான்; அரிய பல செய்திகளை உணர்வான். அவனிடம் விருந்தோம்புதல், அமைதி, பொறுமை, அடக்கம், இரக்கம் முதலிய பண்புகள் குடிகொண்டிருந்தன. மரஞ் செடி கொடிகளிடத்தில் அவன் வைத்திருந்த அன்பிற்கோர் அளவில்லை. தாய் தன் சேயினைப் போற்றுதல் போல் அவன் செடிகொடிகளைப் போற்றி வளர்த்து வந்தான்.

பால சுப்பிரமணியன் என்புருக்கி நோயால் ஆறு ஆண்டுகள் துன்புற்றான். அதனால் அவனது பள்ளிப்படிப்பு தடைபட்டுக்கொண்டே இருந்தது. ஆண்டுக் கணக்கில் கூடப் பள்ளிக்குப் போக இயலாதவனாக அவன் இருந்தான். ஆயின், நோய் சிறிது தணிந்தவுடன், அவன் பள்ளிக்குச் செல்லத் தொடங்கிவிடுவான். இதிலிருந்து கல்வியில் அவனுக்கு இருந்த ஆர்வத்தை நாம் உணரலாம். தனது தந்தையார் மண்டல பூசை செய்த நாற்பது நாட்களிலும் அவன் பூசை நிகழ்ச்சிகளில் கருத்தைச் செலுத்தி இருந்தான். இதிலிருந்து அவனது கடவுட்பற்றையும் நாம் உணரலாம்.

2. ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்

1. **சிவஞான முனிவர்பால் தவசிப்பிள்ளையாக இருந்தவர் வாயிலாகப் பிள்ளையவர்கள் அறிந்துகொண்ட செய்திகள் யாவை?**

சிவஞான முனிவர்பால் தவசிப்பிள்ளையாக இருந்தவர் வாயிலாகப் பிள்ளையவர்கள் சிவஞான முனிவருடைய தோற்றம், இயல்புகள், பொழுது போக்கு முதலியவற்றையும், அவர் விரும்பியுண்ணும் உணவு பற்றியும், கச்சியப்ப முனிவரின் வரலாற்றையும் உணர்ந்துகொண்டார். மேலும், அத்தவசிப்பிள்ளையிடமிருந்து சிவஞான முனிவர் காஞ்சிபுரத்தில் வாழ்ந்த வாழ்க்கையைப் பற்றியும், செங்குந்தர்கள் அவரைப் போற்றி வந்தமையும், அவர்கட்கு முனிவர் பஞ்சாட்சர உபதேசமும், தீட்சையும் செய்வித்தமையையும் பிள்ளையவர்கள் தெரிந்துகொண்டார்.

2. **சிவஞான முனிவர் காஞ்சிபுரத்தில் இருக்கும்பொழுது இயற்றிய நூல்கள் யாவை?**

சிவஞான முனிவர் காஞ்சிபுரத்தில் இருக்கும்பொழுது காஞ்சிப் புராணம், சிவஞான போத பாஷ்யம் முதலிய நூல்களைச் செய்தார்.

3. **பிள்ளையவர்கள் இயற்றிய உறையூர்ப் புராணத்திற்கும் அம்பர்ப் புராணத்திற்கும் வேறுபாடுகள் பல காணப்படுவதற்குக் காரணம் யாது?**

பிள்ளையவர்கள் வல்லூர்த் தேவராசப் பிள்ளையவர்களுடைய ஆதரவில் கவலையற்றிருந்தபொழுது பாடப்பெற்றது உறையூர்ப் புராணம். அம்பர்ப்

புராணமோ வாழ்க்கைத்தொல்லையால் யோசித்துப் பாடப்படவில்லை. இக் காரணத்தினலேயே இவ்விரு நூல்களுக்கும் வேறுபாடுகள் பல காணப்படு கின்றன.

4. "அவரைப்போல யாரேனும் என்னைக் கவலையில்லாமல் ஆத ரித்து வைத்திருந்தால் இன்னும் எவ்வளவோ செய்வேனே!": இடஞ்சுட்டி விளக்குக.

இவ்வாறு கூறியவர் ஸ்ரீ மீனட்சி சுந்தரம்பிள்ளையவர்கள். 'அவரைப் போல' என்று சுட்டப்பெற்றவர் வல்லூர்த் தேவராசப் பிள்ளை. அவர் தம்மை ஆதரித்தவராதலாலேயே பிள்ளையவர்கள் இவ்வாறு கூறினர். உறையூர்ப் புராணத்தைப் போல அம்பர்ப் புராணம் சிறப்புற அமையா மைக்குக் காரணத்தை வித்துவான் தியாகராச செட்டியார் கேட்டபொழுது பிள்ளையவர்கள் இங்ஙனம் கூற நேரிட்டது. வல்லூர்த் தேவராசப் பிள்ளை யவர்களுடைய ஆதரவுடன் இருந்தபொழுது தாம் உறையூர்ப் புராணத்தை நன்கு யோசித்துப் பாட முடிந்தது என்பதைக் குறிப்பிடவே பிள்ளையவர் கள் இச்செய்தியை வெளியிட்டார்.

5. வல்லூர்த் தேவராசப் பிள்ளையவர்கள் எந்நூலை முதற்கண் இயற்ற விரும்பினர்? அதன் முடிவு யாது?

கன்னட மொழியில் வழங்கிவந்த குசேலோபாக்கியானத்தைத் தமிழ் மொழியில் செய்யுள் நூலாக முதற்கண் இயற்ற விரும்பினர். தொடர்ந்து பாடும் ஆற்றல் பெறாதவராதலால் அவரால அந்நூலை முடிக்க முடியவில்லை.

6. "ஐயா! நீங்கள் தெய்வப்பிறப்போ!": இடஞ்சுட்டி விளக்குக.

இவ்வாறு கூறியவர் வல்லூர்த் தேவராசப் பிள்ளை. அவர் குசேலோ பாக்கியானத்தைப் பாடி முடிக்க இயலாமல் நிறுத்திவிட்டார். அந்நூலை ஸ்ரீ மீனட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் மிக விரைவில் பாடி முடித்துவிட்டார். விரைந்து கவிபாடும் அவரது ஆற்றலைக்கண்ட தேவராசப்பிள்ளை, அவரைப் பார்த்து "ஐயா! நீங்கள் தெய்வப் பிறப்போ!" என்றுகூறி வியந் தார்.

7. "ஒரு பாட்டு எழுதுவதற்குள் நான் கிழிந்த காகிதங்கள் எவ் வளவோ இருக்கும்.": இடஞ்சுட்டி விளக்குக.

தம்மால் பாட முடியாமல் நிறுத்தப்பெற்ற குசேலோபாக்கியானத்தை ஸ்ரீ மீனட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் விரைந்து பாடி முடித்ததைக் கண்ட தேவராசப் பிள்ளை இவ்வாறு கூறினர். ஒரு பாடலைப் பாடுவதற்கு அவர் பெருமுயற்சி எடுத்துக்கொண்டார் என்பது இதிலிருந்து தெரிகிறது.

8. 'குசேலோபாக்கியானம்': சிறு குறிப்பு வரைக.

வறுமையால் வாடிய குசேலர் கண்ணனது அருளைப் பெற்ற வரலாறு குசேலோபாக்கியானத்தில் கூறப்படுகிறது. இந்நூலை வல்லூர்த் தேவராசப் பிள்ளை தொடங்கி, பாடி முடிக்க இயலாமல் நிறுத்தினர். ஸ்ரீ மீனட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் அதனை விரைவில் பாடி முடித்தார். படிப்போர் சுவைக்கத்தக்க விதத்தில் இனிய நடையில் இந்நூல் அமைந்துள்ளது.

9. வல்லூர்த் தேவராசப்பிள்ளை இரண்டாவதாகப் பாடத் தொடங் கிய நூல் எது? அதன் முடிவு யாது?

வல்லூர்த் தேவராசப்பிள்ளை இரண்டாவதாகச் சூத சங்கிதையைத் தமி ழில் பாடத் தொடங்கினர். குசேலோபாக்கியானத்தைப் போலவே இந்

நாலேயும் அவரால் முடிக்க முடியவில்லை. ஸ்ரீ மீனுட்சி சுந்தரம் பிள்ளையவர்களே இதனையும் பாடி முடித்தார்.

10. 'சூத சங்கிதை': சிறு குறிப்பு வரைக.

வடமொழியில் ஸ்காந்தபுராணம் என்றெரு நூல் உள்ளது. அதன் ஆறு சங்கிதைகளில் ஒன்று சூத சங்கிதை. சிவமான்மிய காண்டம், ஞானயோக காண்டம், முக்தி காண்டம், எக்கிய வைபவ காண்டம் என்னும் நான்கு பகுதிகளையுடையது இந்நூல். சிவபிரானுடைய பெருமையைக் கூறுமுகத்தான் இந்நூல் பல அரிய செய்திகளைக் கூறுகிறது.

11. சோடசாவதானம் என்றல் என்ன?

ஒருவர் ஒரே சமயத்தில் பதினறு வகைப்பட்ட செயல்களைப் பிழைபடாமல் செய்து காட்டுதல் சோடசாவதானம் ஆகும்.

12. தேவராசப் பிள்ளை ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்களுக்குக் காணிக்கையாகக் கொடுத்தவை யாவை?

ஐயாயிர ரூபாய் பணத்தையும், உயர்ந்த பீதாம்பரம் முதலியவைகளையும் தேவராசப் பிள்ளை ஸ்ரீ மீனுட்சி சுந்தரம் பிள்ளையவர்களுக்குக் காணிக்கையாகக் கொடுத்தார்.

13. தமக்குப் பெரும்பொருளைக் காணிக்கையாக அளித்த தேவராசப் பிள்ளையிடம் ஸ்ரீ மீனுட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் தமது நன்றியறிதலை எவ்வாறு வெளிப்படுத்தினர்?

தேவராசப் பிள்ளை தமக்குப் பெரும்பொருளைக் காணிக்கையாகக் கொடுத்தவளவில் ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பெருமகிழ்ச்சியடைந்து தாம் பாடி முடித்த குசேலோபாக்கியானம், சூதசங்கிதை ஆகிய இரு நூல்களையும் தேவராசப் பிள்ளைக்கே உரிமையாக்கினர். மேலும், அவ்விரு நூல்களையும் தேவராசப் பிள்ளையின் பெயரிலேயே வெளியிடுமாறும் செய்வித்தார்.

14. ஸ்ரீ மீனுட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பாடிய நூல்களில் இரண்டைக் கூறுக.

உறையூர்ப் புராணமும் அம்பர்ப்புராணமும் ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்களால் பாடப்பெற்றவை.

15. ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்களுடைய பங்களூர் யாத்திரையினை 20 வரிகளில் எழுதுக.

இப்பாடத்திற் கமைந்த பாடச் சுருக்கமே இவ்விஞவிற்கு விடையாகும்.

3. நட்பு

1. 'நட்பு' என்னும் கட்டுரையின் ஆசிரியர் எதனைப் பிணி என்கின்றர்?

'நட்பு' என்னும் கட்டுரையின் ஆசிரியர் இன்ப துன்பங்கள் மனத்தில் அடைபட்டுக் கிடப்பது ஒரு பிணி என்கின்றர்.

2. மனநோய்க்கு மேலான மருந்து எது?

மனத்தில் அடைந்து கிடைக்கும் இன்ப துன்பங்களை வெளியிடுவது மனநோய்க்கு மேலான மருந்து ஆகும்.

3. உள்ளத்தில் உள்ளதை உள் உண்மை நண்பரிடம் கூறினல் உளவாகும் இரண்டு நன்மைகள் யாவை?

உள்ளத்தில் உள்ளதை உண்மை நண்பரிடம் கூறினல் துன்பம் பாதியாகும்; இன்பம் இரு மடங்காகும்.

4. "உள்ளக் கவலையை ஏற்றுக் கொள்ளும் சுமைதாங்கி": விளக்குக.

ஒருவனுடைய மனத்திலுள்ள துன்பத்தைச் சமமாகப் பங்கிட்டுக் கொண்டு கவலையை ஏற்றுக் கொள்பவன் உயிர் நண்பனவான். அத்தகைய உண்மை நண்பன் அதுபற்றி ஈண்டுச் சுமைதாங்கி எனப்பட்டான்.

5. "அரசர் முதலிய பெரியோர், சிலரை மிக மேம்பட்ட பதவியில் வைத்து அவர்களைத் தம்மோடு ஒப்பக் கொண்டனர்": இதற்கு மூன்று எடுத்துக் காட்டுகள் அமைக்க.

தேர்ப்பாகன் மகனுகிய கன்னனைத் துரியோதனன் நண்பனுக்க் கொண்டான். ஒரு கம்மியனைத் தன் அமைச்சனுகக்கொண்டான் நந்தி என்னும் தொண்டைமான். கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையாரைத் தன் உயிர் போல எண்ணினுன். இவற்றிலிருந்து அரசர் முதலிய பெரியோர், சிலரை மிக மேம்பட்ட பதவியில்வைத்து அவர்களைத் தம்மோடு ஒப்பக் கொண்டனர் என்பது விளங்குகின்றது.

6. "கல்லானது தன்னளவில் கருக்கிலதே யாயினும் அதனிடத்துத் தீட்டிய கத்தி கருக்கடையு மாறுபோல": உவமையை விளக்குக.

பலவாறு சிந்தித்தும் ஒருவன் ஒரு செயலில் தெளிவடையாமல் இருந்தால் அவன் அச்செயலை வேருெருவனிடம் விளக்கிக் கூறுதல் வேண்டும். அவ்வாறு கூறுவதனல் அவனுடைய அறிவு தெளிவடையும். செய்ய நினைத்த செயலும் அவனுக்கு நன்கு விளங்கும். இதற்குவமையாக, "கல்லானது தன்னளவில் கருக்கிலதே யாயினும் அதனிடத்துத் தீட்டிய கத்தி கருக்கடைதல்" காட்டப்பட்டது. கல்லுக்குக் கருக்கு இல்லை. அதுபோல ஒருவன் மந்தனுக இருந்தாலும் கருக்கில்லாத கல் கத்தியைக் கருக்கடையுமாறு செய்வது போலவே மந்தனும் பிறனிடம் ஒன்றைச் சொல்லுங்கால் எண்ணங்கள் ஒழுங்காக உருப்பெறும்.

7. "சிப்பமாகக் கட்டிவைத்த சித்திரத் துணிகள்": எவை?

வெளியிடாத எண்ணங்களை "சிப்பமாகக் கட்டிவைத்த சித்திரத் துணிகள்" எனலாம்.

8. ஒருவனுக்கு நண்பன் உரைக்கலான சூழ்ச்சி எத்துணை வகைப்படும்? அவை யாவை?

ஒருவனுக்கு நண்பன் உரைக்கலான சூழ்ச்சி இருவகைப்படும். ஒன்று ஒழுக்கத்தை நோக்கியது. மற்றது காரிய சித்தியை நோக்கியது.

9. ஒருவன் செய்த தவறுகளை அகற்றுவதில் அதம பரிகாரம் எது? உத்தம பரிகாரம் எது?

ஒருவன் தன் தவறுகளைத்தானே குறித்தறிந்து தெரிந்து கொள்வது அதம பரிகாரமாகும். அத்தவறுகளைச் சுட்டிக்காட்டி உயிர்நண்பன் இடித்துரைக்கும் உரையே உத்தம பரிகாரமாகும்.

10. "கண்ணாடியிற் கண்ட தங்கள் உருவை உடனே மறப்பவரை யொப்பர்"? யார்?

இடித்துரைக்கும் நண்பர் இல்லாமையால் உயர்பதவியிலுள்ளோர் சிலர் பெருந்தவறு செய்து துன்பப்படுவர். அவர்கள், "கண்ணாடியிற் கண்ட தங்கள் உருவை உடனே மறப்பவரை யொப்பர்."

11. எத்தகையவன் ஒரு செயலைத் தன் நண்பனிடம் சூழ்தல் வேண்டும்?

தனக்குத் தக்கனவற்றைத் தானே ஆராய்ந்தறியும் திறமை இல்லாதவன் தன் செயல்களை உயிர் நண்பனிடத்தில் விளக்கிக் கூறி சூழ்தல் வேண்டும்.

12. "தன் காலைத் தானே கும்பிட்டுக் கொள்ளலாமா?": விளக்குக.

ஒருவன் தன் திறமையைத் தானே எடுத்துக் கூறுவது தற்புகழ்ச்சியாகும். அது, "தன் காலைத் தானே கும்பிட்டுக் கொள்வதைப்" போன்றது. அவ்வாறு தன்னைத்தானே புகழ்ந்து கொள்ளக்கூடாது என்பது ஆசிரியர் கருத்து.

13. நட்பிற்கு வீற்றிருக்கை யாது?

நட்பிற்கு வீற்றிருக்கை (அரசிருக்கை) எது எனின், அஃது எக்காலத்திலும் மாறுபடுதலின்றி இயலும் வரையில் அறம் பொருள்களிலிருந்து தளராமல் தாங்கி நிற்கும் வலிமையாகும்.

14. நட்பைக் கெடுத்தற்கான காரணங்கள் யாவை?

சத்தியம் தவறுதல், ஐயத்திற்கிடமான செயல்புரிதல், தன்னலம் பாராட்டுதல், நயவஞ்சகம், முரட்டாட்டம், நம்பிக்கை மோசம் முதலியன நட்பைக் கெடுத்தற்கான காரணங்கள் ஆகும்.

15. உண்மை நண்பனால் உண்டாகும் நன்மைகளை 20 வரிக்குள் ஒரு கட்டுரையாக வரைக.(அல்லது)உண்மை நண்பரின் இலக்கணம் என்னும் பொருள் பற்றி ஒரு கட்டுரை 20 வரிகளுக்குள் வரைக.

இப்பாடத்திற்கு அமைந்த சுருக்கமே இதற்கு விடையாகும்.

16. 'நட்பு' என்னும் பாடத்தில் வந்துள்ள பழமொழிகளைத் தொகுத்தெழுதுக.

'மனக்கவலை பலக்குறைவு'; 'மனநோய்க்கு மருந்தேது'; 'ஒன்றிரண்டாம் வாணிகம் இல்'; 'நல்லினத்தினும் நட்பு வலிது'; 'உற்ற சிநேகம் உயிருக்கு அமிர்தம்'; 'கணக்கன் கணக்கறிவான், தன் கணக்கைத் தான் அறியான்'; 'கண்ணின் குற்றம் கண்ணுக்குத் தெரியுமா?'; 'தீவட்டிக்காரனுக்குக் கண் தெரியாது!'; 'தன் காலைத் தானே கும்பிட்டுக் கொள்ளலாமா?'

4. இசையின்பம்

1. இசையின் இயல்பு யாது?

அறிவுடைய மக்களையும் குழந்தைகளையும், அறிவு குறைந்த விலங்கு முதலியவற்றையும் இன்புறுத்தும் இயல்பு இசைக்கு உள்ளது.

2. 'முத்தமிழ்' என்பன யாவை? அவை தமக்குள் அமைந்த தொடர்பினை வரைக.

இயல், இசை, கூத்து ஆகிய மூன்றும் 'முத்தமிழ்' எனப்படும். இயல் இசையிலும், இசை இயலிலும் கலக்கும். ஆயின், இவ்விரண்டும் கூத்தில் கலக்கும்.

3. இசையின் இரு வகைகள் யாவை? விளக்குக.

ஒலியளவில் சுரவரிசைகளோடு அமைதல், பொருள் வெளிப்பட விளங்கத்தக்க பாடல்களோடு அமைதல் என்று இசை இரண்டு வகைப்படும். முதல் வகையினை இசையிலக்கணம் நன்கு அறிந்த புலவர்களே நன்கு உணர்ந்து சுவைப்பர். இரண்டாவது வகையை இசையிலக்கணம் உணர்ந்தோரும் பிறரும் கேட்டுச் சுவைப்பர்.

4. சங்ககாலத்தில் தமிழ் இசை உயர்நிலையில் இருந்தது என்பதனை நமக்குத் தெளிவாக அறிவிக்கும் நூல் எது?

சங்க காலத்தில் தமிழிசை உயர்நிலையில் இருந்தது என்பதனைச் சிலப்பதிகாரம் நமக்குத் தெளிவாகக் கூறுகின்றது. அந்நூலில் உள்ள அரங்கேற்று காதைப் பகுதிக்கு அடியார்க்கு நல்லார் எழுதிய உரையில் தமிழிசையின் இயல்பினைப் பரக்கக் காணலாம்.

5. பாணர் : சிறு குறிப்பு வரைக.

பண்டைக் காலத்தில் பாணர் என்னும் மரபினர் வாழ்ந்து வந்தனர். இசைப் பாடல்களைப் பாடி ஊர்கள் தோறும் செல்வதே அவர்கள் தொழில். பாண்பெண்டிர் விறலியர் எனப்பட்டனர். அவர்கள் திறம்பட ஆடும் ஆற்றல் பெற்றிருந்தனர். பாணர்களையும் விறலியர்களையும் பண்டைத் தமிழரசர்கள் ஆதரித்து வந்தனர்.

6. இராக வகைகளைத் தமிழ் நூலார் எவ்வாறு முறைப்படுத்தினர்? அவற்றை வட நூலார் எவ்வாறு குறிப்பிட்டனர்?

பண், பண்ணியல், திறம், திறத்திறம் என்று இராக வகைகளைத் தமிழ் நூலார் முறைப்படுத்தினர். இவற்றை வட நூலார் முறையே சம்பூர்ணம், சடாவம், ஔடவம், சதுர்த்தம் என்று குறிப்பிட்டனர்.

7. இசை எத்தகையதாக இருக்க வேண்டும் என்று பொதுமக்கள் விரும்புவர்?

இன்பத் தோற்றத்தின் அடிப்படைபற்றியே இசை அமைய வேண்டுமென்று பொதுமக்கள் விரும்புவர்.

8. இசையானது கேட்போர்க்கு எப்பொழுது இன்பம் ஊட்டும்?

இனிய இலக்கியப் பாடல்களில் கலந்திருக்கும்பொழுது இசையானது கேட்போர்க்கு இன்பம் ஊட்டும்.

9. அவிநயம் என்றால் என்ன?

இனிய இசையுடன் கலந்து பாடப்படும் பாடல்களின் கருத்துக்களை வாயினால் கூறாமல் கண், கை முதலிய உறுப்புக்களால் வெளிப்படுத்துவதே அவிநயம் ஆகும்.

10. நாட்டியக் கலையின் நோக்கம் என்ன ?

உயர்ந்த கருத்துக்களை, இன்சுவையோடு கூடிய இசையின் வாயிலாகப் புலப்படுத்துவதே நாட்டியக் கலையின் நோக்கம் ஆகும்.

11. இசைப் புலவர்கள் ஓர் அடியைப் பலமுறை பாடுதற்குக் காரணம் என்ன ?

பாடலில் அமைந்த பலவகைச் சுவை நுட்பங்களை (ரசபாவம்) வெவ்வேறு விதமாகப் புலப்படுத்தி, கேட்போர்க்கு இன்பத்தை அளிப்பதற்காகவே இசைப்புலவர்கள் ஓர் அடியைப் பலமுறை பாடுகின்றனர்.

12. வரிப்பாடல் என்றால் என்ன ?

இசைக்கு இயையுமாறு இயற்றப்பெற்ற தமிழ்ப் பாடல்கள் வரிப் பாடல் எனப்படும்.

13. நெடுங்காலத்திற்கு முன்னதாகவே தமிழர் இசை நுட்பத்தினை உணர்ந்திருந்தனர் என்பதை நாம் எவ்வாறு உணரலாம் ?

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகிய பரிபாடல் பழந்தமிழ்' நூலாகும். அந்நூலிலுள்ள பாடல்களுக்குப் பழந்தமிழர் பண் வகுத்துள்ளனர். சிலப்பதிகாரம் 'கானல் வரி', வேட்டுவ வரி' முதலிய பாடல்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய சைவப் பெரியார்கள் பாடிய தேவாரப் பாடல்கள் இசைத்தமிழ்ப் பாடல்களாக அமைந்துள்ளன. எனவே, நெடுங்காலத்திற்கு முன்னதாகவே தமிழர் இசை நுட்பத்தினை உணர்ந்திருந்தனர் என்பதை நாம் உணரலாம்.

14. சம்பந்தர் முதலிய பெரியார்கள் உயர்ந்த உண்மைகளை ஏன் இசைப் பாடல்களில் அமைத்துப் பாடினர் ? அதற்குப் 'பண்டிதமணி' அவர்கள் காட்டும் உவமை யாது ?

உயர்ந்த உண்மைகளை உரைநடையிலோ இசை கலவாத பாடலிலோ வெளிப்படுத்தினால், அவை கேட்போரின் மனத்தில் நன்கு இடம் பெறா. மருத்துவர் கசப்புள்ள நன்மருந்தினை வெல்லம் முதலிய பொருள்களிற் கலந்து கொடுத்தல் போலவே சம்பந்தர் முதலிய பெரியார்கள் உயர்ந்த உண்மைகளை இசைப் பாடல்களில் அமைத்துப் பாடினரென்று 'பண்டிதமணி' அவர்கள் உவமை காட்டியுள்ளார்.

15. தாய்மொழிச் செய்யுளில் இசையைக் கலந்து பாடுதல் சிறந்தது. ஏன் ?

பொருளை உணரார் ஆதலால், வேற்றுமொழிப் பாடலை மக்கள் சுவைக்க மாட்டார்கள். சுவைக் கருத்துக்களைத் தெளிவாக உணர்த்தி மக்கள் இன்புறுமாறு செய்யும் தன்மை தாய்மொழிப் பாடலுக்கு உண்டு. எனவே, தாய்மொழிச் செய்யுளில் இசையைக் கலந்து பாடுதல் சிறந்தது.

16. "இக்கடும்போர்க் கிடையே என்னைப் போன்ற முதியவர்கள் சிக்கிக் கொண்டால் எங்ஙனம் மீள முடியும் ?": இடஞ் சுட்டி விளக்குக.

பண்டிதமணியவர்கள் ஒருமுறை ஒரு இசையரங்கிற்குச் சென்றிருந்தார். இசைப் புலவர் அன்று பல்லவி சுரம் பாடினார். சுர வேகம் அதிகரிக்கவே மிருதங்கக்காரர் தம் முழுவன்மையையும் காட்டத் தொடங்கினார். அவ்விருவரும் மற்போர் புரிகின்றார்களோ என்று நினைக்குமாறு அப்பொழுது இருந்

தது. அதுகாலையில் ஆங்கிருந்த தமிழ்ப் புலவர் ஒருவர் பண்டிதமணியவர்களிடம், "இக்கடும்போர்க் கிடையே என்னைப் போன்ற முதியவர்கள் சிக்கிக் கொண்டால் எங்ஙனம் மீள முடியும்" என்று நகைச்சுவைபடக் கூறினர்.

17. அண்மைக் காலம் வரையில் தமிழிசை ஒடுங்கியிருந்தமைக்குக் காரணம் யாது?

இசைப் புலவர்களில் பலர் தமிழறிவு பெறுதவர்களாக இருந்தனர். புதிய இசைப் பாடல்களை இயற்றும் புலவர்களும் இல்லாமல் இருந்தனர். தேவாரம் முதலிய தமிழிசைப் பாடல்களைப் பாடுவோர் குறைவாக இருந்தனர். இதே சமயத்தில் கருநாடக இசை தமிழ்நாட்டில் வளர்ந்து பரவத் தொடங்கியது. ஹிந்தி இசையும் இடையில் புகுந்தது. இக்காரணங்களால் அண்மைக் காலம் வரையில் தமிழிசை ஒடுங்கியிருந்தது.

18. தற்காலத்தில் தமிழிசையை நன்கு வளர்க்கும் நிலையம் எது?

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தற்காலத்தில் தமிழிசையை நன்கு வளர்க்கின்றது.

19. அண்மைக் காலத்தில் தமிழிசைக்குப் பேராதரவு தந்தவர் யார்?

ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியாரவர்கள் அண்மைக் காலத்தில் தமிழிசைக்குப் பேராதரவு தந்தார்கள்.

20. தமிழிசை பரவ நாம் செய்ய வேண்டுபவை யாவை?

இசைப் புலவர்கள் தேவாரம், நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலிய பாடல்களைப் பாடுமாறு நாம் தூண்ட வேண்டும். தமிழறிவும், இசையறிவும் நன்கமைந்தோர் இன்னிசைப் பாடல்களை இயற்றுதல் வேண்டும். இசை நிகழ்ச்சிகளில் பிறமொழிப் பாடல்கள் மிகுதியாகப் பாடப்பெறுதலை மாற்றித் தமிழ்ப் பாடல்களையே மிகுதியாகப் பாடுமாறு நாம் செய்ய வேண்டும். பழந்தமிழர் கண்ட இசை நுட்பங்களையெல்லாம் ஆராய்ந்து தமிழ் நூல்கள் பல எழுமாறு செய்யவேண்டும். இவ்வாறெல்லாம் செய்தால் தமிழிசை நன்கு பரவும்.

21. இசையின்பம் என்னும் பொருள் பற்றி 'பண்டிதமணி' அவர்கள் கொண்டிருந்த கருத்தினைத் தொகுத்து 20 வரிகளில் ஒரு கட்டுரை வரைக.

இப்பாடத்திற்கமைந்த பாடச் சுருக்கமே இவ்வினவிற்குரிய விடையாகும்.

5. கம்பரும் நாடகப் பண்பும்

1. நாடகத்தில் அனுபவிக்கும் இரண்டு செய்திகள் யாவை?

ஒரு மனத்தின் உணர்ச்சியை மற்றொரு மன உணர்ச்சி தாக்கும்பொழுது எழும் சொல்லும், செயலும் நாடகத்தில் அனுபவிக்கும் இரண்டு செய்திகள்.

2. கும்பகர்ணன் போர்செய்ய வந்தமைக்குக் காரணம் யாது?

தனது அண்ணனாகிய இராவணன் செய்த செயல்கள் யாவும் தவறானவை என்பதனைக் கும்பகர்ணன் உணர்வான். ஆயின், அவன் பொருட்டு உயிரைக் கொடுப்பது தன் கடமை என்று எண்ணியே அவன் போர் செய்ய வந்தான்.

3. போர்செய்ய வந்த கும்பகர்ணனுக்கு எக்காரணத்தினல் மகிழ்ச்சி ஒன்று இருந்தது என்று கட்டுரையாசிரியர் குறிப்பிடுகின்ருர் ?

போரில் இராவணன் இறப்பான் என்று கும்பகர்ணன் உணர்வான். அவன் பொருட்டு உயிரை விடுதல் தன் கடமை என்று எண்ணியே அவன் போர் செய்ய வந்தான். அறத்தின் உருவமான தன் தம்பியாகிய வீடணன் உயிர் வாழ்ந்து, அரக்கர் குலத்தை வாழ்விப்பான் என்னும் எண்ணத்தினலேயே அவனுக்கு அப்பொழுது மகிழ்ச்சி உண்டாயிற்று.

4. போர்செய்ய வந்த இலக்குவனது உள்ளத்தில் இருந்த எண்ணங்கள் யாவை ?

சீதையை மீட்க வேண்டும் என்னும் எண்ணமும், அதற்கு எத்தகைய துன்பமும் வருதல் கூடாது என்னும் எண்ணமும் போர்செய்ய வந்த இலக்குவனது உள்ளத்தில் இருந்தன.

5. போர் தொடங்குதற்கு முன்பு கும்பகர்ணன் இலக்குவனை நோக்கி யாது கூறினன் ?

இப்பாடத்தின் 47-ஆம் பக்கத்திற்கு உரிய அருஞ்சொல் விளக்கத்தில் “பெய்தவத்தின்.........என்ருன்” என்பதற்குரிய பொருளே இவ்வினவிற்கு விடையாகும்.

6. கும்பகர்ணன் இலக்குவனைக் குறிப்பினல் எவ்வாறு இகழ்ந்தான்?

கும்பகர்ணன் இலக்குவனை நோக்கி, ‘நாசி வெஞ்சினத்தால் கொய்த கொற்றவ’ என்ருன். ஈண்டுக் கும்பகர்ணன் இலக்குவனைக் குறிப்பினல் இகழ்ந்தான். ‘கொற்றவ’ என்ருல் ‘வெற்றியை உடையவனே’ என்பது பொருள். ஒரு பெண்ணின் மூக்கை அறுத்தல் வெற்றியாகுமோ? கும்பகர்ணன் இலக்குவனைக் குறிப்பினல் இகழ எண்ணியே, ‘பெண்ணின் மூக்கை அறுத்த வெற்றியை உடையவனே’ என்று விளித்தான்.

7. கும்பகர்ணனுக்கு இலக்குவன் கூறிய மறுமொழி யாது ?

இப்பாடத்தின் 48-ஆம் பக்கத்திற்கு உரிய அருஞ்சொல் விளக்கத்தில், “அல்வினற்.........சொன்னன்” என்னும் பாடலுக்கு அமைந்த பொருளே இவ்வினவிற்கு விடையாகும்.

8. இராமன் வந்துவிட்டான் என்பதனை உணர்ந்த பரதனது மகிழ்ச்சியைக் கம்பர் எவ்வாறு விளக்குகின்ருர் ?

இப்பாடத்தின் 50-ஆம் பக்கத்திற்கு உரிய அருஞ்சொல் விளக்கத்தில், “வேதியர்...........தோற்றிற்றே” என்னும் பாடலின் பொருளே இவ்வினவிற்கு விடையாகும்.

9. கம்ப ராமாயணத்தைக் கம்ப நாடகம் என்று கூறுதல் எங்ஙனம் பொருந்தும் ?

இப்பாடத்திற்கு அமைந்த சுருக்கமே இவ்வினவிற்கு விடையாகும்.

6. பள்ளரும் பள்ளியரும்

1. பள்ளரின் வாழ்க்கையை நன்கு விளக்கும் நூல் ஒன்றின் பெயரைக் குறிப்பிடுக.

முக்கூடற் பள்ளு என்னும் நூல் பள்ளரின் வாழ்க்கையை நன்கு விளக்குகின்றது.

2. மழைக் குறிகள் யாவை ?

மேல் திசையிலும், தென் திசையிலும் மின்னல் மின்னுதல், சுழல் காற்று வீசுதல், தவளை கத்துதல், நண்டு வளை தோண்டுதல், வானம்பாடி ஆடுதல் முதலியவை மழை பொழியும் என்பதனை அறிவிக்கும் குறிகள்.

3. 'முக்கூடல்' எங்குள்ளது? அவ்வாறு பெயர்வரக் காரணம் என்ன ?

பொருனையாறும், சித்திரா நதியும், செண்பகக் கோதையாறும் கலக்கும் இடத்தில் முக்கூடல் உள்ளது. மூன்று ஆறுகள் ஒன்று கூடுகின்ற இடமாதலால் அவ்வூர் அப்பெயரைப் பெற்றது.

4. முக்கூடற் பள்ளில் குறிப்பிடப்பெறும் மீன்வகைகள் யாவை ?

பறவை என்னும் பறக்கும் மீன், குறவை, வாளை, கோளை, தேளி, மயிந்தி, உழுவை, அயிந்தி, மணலி, ஆரால், அயிரை, கெண்டை, கெளிறு, வரால் என்னும் மீன் வகைகள் முக்கூடற்பள்ளில் குறிப்பிடப்பெற்றுள்ளன.

5. முளை கிளம்பியமை கண்ட பள்ளன் செய்தவை யாவை ?

விதைக்கப்பெற்ற விதைகள் முளைத்தன. அக்காட்சியைக்கண்ட பள்ளன் முளைகட்குத் தண்ணீர் பாய்ச்சிக் கட்டினான். நீர் நெடுநேரம் கட்டப் பெற்றிருந்தால் முளைகள் அழுகிவிடுமன்றோ ? எனவே, அவன் நீரை வெட்டி வடித்தான். வளர்ந்துவரும் முளைகளை விலங்குகள் அழியாதவாறு, வயலின் நாற்புறத்திலும் வேலியடைத்தான்; பின்பு நாள்தோறும் எருவிட்டான்.

6. நாற்று நடுதல் என்றால் என்ன ?

முதற்கண் நெல்விதைகள் ஒரு சிறு நிலப்பகுதியில் விதைக்கப்படும். விதைகள் முளைத்து நாற்றுக்கள் தோன்றும். அவை நெருக்கமாக முளைத்திருக்கும். எனவே, அவற்றைப் பறித்துச்சென்று விலக விலக பெரிய நிலத்தில் நடுவார்கள். அந்நிலத்தில் எருவும் போடப்பெற்றிருக்கும். இவ்வாறு நாற்றுக்களைப் பெயர்த்தெடுத்து வேறு நிலத்தில் நடுதல் 'நாற்று நடுதல்' எனப்படும்.

7. நாற்றுக்களை நடும் பள்ளியர் எவற்றைப் பாடுவர் ?

முக்கூடலில் நாற்றுக்களை நடும்பள்ளியர் திருமாலின் திருவிளையாடல்களையெல்லாம் அமைத்துப்பாடுவர். கரன், திரிசிரன்என்னும் அரக்கர்கள் இருவரை இராமன் அம்பு தொடுத்துக் கொன்ற வரலாற்றையும், கங்கையில் ஓடம் ஓட்டிய வேடனுக்கு இராமன் நட்புரிமை ஈந்து, உடன் பிறந்தவனாகக் கொண்ட வரலாற்றையும், சினங்கொண்ட இந்திரன் பெருமழை பொழியுமாறு செய்தகாலையில் கண்ணன் கோவர்த்தனகிரியைக் குடையாகத் தூக்கிப் பிடித்துப் பசுக்களைக் காத்த வரலாற்றையும் புகழும் முறையில் அவர்களுடைய பாடல்கள் அமைந்திருக்கும்.

8. முக்கூடற் பள்ளில் வரும் வடிவழகக் குடும்பனுடைய இரு மனைவியரைப்பற்றிச் சிறு குறிப்பு வரைக.

முக்கூடற் பள்ளில் வரும் வடிவழகக் குடும்பனுக்கு மனைவியர் இருவர் இருந்தனர். அவர்களுள் மூத்தவள் முக்கூடற் பகுதியைச் சேர்ந்தவள். இளையவள் மருதூரைச் சேர்ந்தவள். மூத்தவள் வைணவ சமயத்தைப் பின்பற்றியவள் ; இளையவள் சைவ சமயத்தைப் பின்பற்றியவள். தன் மாமன் மகள் என்னும் முறைபற்றிக் குடும்பன் மூத்த பள்ளியை மணந்தான். இளையவளோ குடும்பனால் ஒட்டுத் தாலி கட்டப்பெற்றவள்.

9. மூத்த பள்ளியும், இளைய பள்ளியும் ஒருவரை ஒருவர் எவ்வாறு ஏசினார்கள்?

மாமன் மகள் என்னும் முறைபற்றி வடிவழகக் குடும்பன் தன்னை வலிய மணந்தான் என்று பெருமை பேசி, ஒட்டுத் தாலி கட்டி மணக்கப்பெற்றவள் என்று இளைய பள்ளியை மூத்த பள்ளி ஏசினாள். இளையவளோ 'உழக்கில் கிழக்கு மேற்குப் பார்க்கின்றாயே! என்னைக் கண்டவுடன் குடும்பன் என்னாருக்கு வலிய வந்து என்னை மணந்தான்' என்று பெருமை பேசி, மூத்தபள்ளி அழகிற் குறைந்தவள் என்று குறிப்பிட்டு ஏசினாள். பிறகு இளையவள் வழிபடும் சிவபிரானை மூத்தவள் ஏசினாள். இளையவளோ மூத்தவள் வழிபடும் திருமாலை ஏசினாள்.

10. மூத்த பள்ளியும், இளைய பள்ளியும் கடவுளரை எவ்வாறு ஏசினர்? விடையை 20 வரிகளில் ஒரு கட்டுரையாக வரைக.

மூத்த பள்ளி வைணவ சமயத்தினள்; திருமாலை வணங்குபவள். இளைய பள்ளியோ சைவ சமயத்தினள்; சிவபிரானை வணங்குபவள். இவ்விருவருக்கும் பூசல் உண்டாகவே, மூத்தவள் சிவபிரானை இகழலானாள்; இளையவள் திருமாலை இகழலானாள். மூத்தவள் இளையவளைப் பார்த்து, 'நாட்டில் வசித்த சிவபிரானுக்கு உணவு கிடைக்கவில்லை. அதனால் அவர் கடலில் தோன்றிய விடத்தை எல்லாம் உண்டார். இத்தகையவர் அல்லரோ உங்கள் சிவபிரான்?' என்று சிவனைப் பழித்தாள். அதற்கு இளையவள், மூத்தவளைப் பார்த்து, 'உங்கள் கடவுளாகிய திருமால்மட்டும் என்ன செய்தார்? மாட்டின் பின் திரிந்தார்; பசியால் வாடினார்; உணவு கிடைக்காமையால் மண்ணை 'வாரி உண்டார்' என்று திருமாலை இகழ்ந்தாள்.

அவ்வளவில் மூத்த பள்ளி இளையவளைப் பார்த்து, 'உங்கள் கடவுளாகிய சிவபிரானுக்கு வேறு வாகனம் கிடைக்கவில்லை. எனவே, அவர் மாட்டில் ஏறித் திரிந்தார்' என்று சிவபிரானைப் பழித்தாள். அது கேட்ட இளையவள் மூத்த பள்ளியைப் பார்த்து, 'அடி! உனக்கேது பெருமை? நீ வழிபடுங் கடவுளாகிய திருமாலுக்கு மாடுகூடக் கிடைக்கவில்லையே. அவர் ஒரு பறவையின் மீது அல்லவா ஏறிப் பறக்கிறார்' என்று திருமாலைப் பழித்தாள். இவ்விதமாகப் பள்ளியர் இருவரும் மாற்றி மாற்றி ஏசிக்கொண்டனர். தான் வழிபடும் திருமாலே உயர்ந்தவர் என்னுங் கருத்தினால் மூத்தபள்ளி சிவபிரானை இகழ்ந்தாள். தான் வழிபடும் சிவபிரானே உயர்ந்தவர் என்னுங் கருத்தால் இளைய பள்ளி திருமாலை இகழ்ந்தாள்.

11. பள்ளர் பள்ளியருடைய வாழ்க்கையை 20 வரிகளில் ஒரு கட்டுரையாக வரைக.

இப்பாடப் பகுதிக்கு அமைந்த சுருக்கமே இவ்வினாவிற்கு விடையாகும்.

7. மார்க்கோ போலோவும் தமிழ் நாடும்

1. கீழ் நாடுகளைக் காணவேண்டும் என்னும் அவாவினை மேனாடுகளில் தூண்டியவர் யார்?

கீழ்நாடுகளைக் காணவேண்டும் என்னும் அவாவினை மேனாடுகளில் தூண்டியவர் மார்க்கோ போலோ.

2. 'ருஸ்தி செல்லோ' என்பவர் யார்?

மார்க்கோ போலோ கூறிய கதைகளையெல்லாம் எழுதிவைத்தவர் ருஸ்தி செல்லோ ஆவார்.

3. பெர்ல் பக் என்னும் அம்மையார் மார்க்கோ போலோவை எவ்வாறு குறிப்பிட்டுள்ளார் ?

பெர்ல் பக் என்னும் அம்மையார் மார்க்கோ போலோவை முந்த முதல் தோன்றிய உலகக் குடி மகன் என்று குறிப்பிட்டுள்ளார்.

4. மார்க்கோ போலோவின் நூல் இன்றும் நின்று நிலவக் காரண மென்ன ?

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்னும் கொள்கையினைக் கடைப்பிடித் தவர் மார்க்கோ போலோ. நாடெல்லாம்சுற்றி அறிந்த உண்மைகளை எல்லோருக்கும் சொல்லவேண்டும் என்னும் அன்பினால் நூலை எழுதினாராதலால் அவரது நூல் இன்றும் நின்று நிலவுகிறது.

5. எக்காலத்தில் மார்க்கோ போலோ இந்தியாவுக்கு வந்தார் ?

இற்றைக்கு ஏறக்குறைய 700 ஆண்டுகட்கு முன்பு, அஃதாவது சோழப் பேரரசு வீழத்தொடங்கித் தமிழ்நாடு கட்டற்றுக்கிடந்தபொழுது, மார்க்கோ போலோ இந்தியாவுக்கு வந்தார்.

6. அரேபியக் கப்பலோட்டிகள் தமிழ் நாட்டை எப்பெயரால் குறிப் பிட்டனர் ?

அரேபியக் கப்பலோட்டிகள் தமிழ் நாட்டை மாபர் என்று குறிப்பிட்ட னர்.

7. மார்க்கோ போலோ சுந்தர பாண்டியரையும் இலங்கையையும் எவ்வாறு பெயரிட்டழைத்தார் ?

மார்க்கோ போலோ சுந்தர பாண்டியனை, 'செந்தர் பண்டி' என்றும், இலங்கையை 'ஜைலன்' (சிலோன்) என்றும் பெயரிட்டழைத்தார்.

8. முத்துக் குளிக்கும் தொழில் எவ்வாறு நடைபெறுகின்றது என்று மார்க்கோ போலோ கூறுகின்றார் ?

'முத்துக் குளிப்போர் பலகப்பல்களையும் படகுகளையும் வைத்திருப்பர். முத்துச் சிப்பிகளைக் குளித்தெடுக்கும் கலையில் வல்லவர்களே அக்கப்பல் வேலைக்கு இருப்பர். வலைப் பையின் வழியாக முத்துச் சங்குகள் மேலே கொண்டு வரப்பெறும். அந்தப்பை முத்துக் குளிப்போரின் உடலில் கட்டப் பட்டிருக்கும். முத்துக் குளிப்போர் பலமுறை மூழ்கி எழுவர். ஈண்டுக் கிடைக்கும் முத்துக்கள் பெரும்பாலும் உருண்டையாகவும் நல்ல ஒளியுடை யனவாகவும் இருக்கும். தமிழ்நாட்டில் முத்துச் சங்கு எடுக்கும் இடம் பெதெலா எனப்படும்' என்று மார்க்கோ போலோ முத்துக் குளிக்கும் தொழில் நடைபெறுதலைப்பற்றிக் கூறுகின்றார்.

9. முத்துக் குளிக்கும் வணிகர் மந்திரக்காரர்களைத் தங்களுடன் ஏன் அழைத்துச் சென்றார்கள் ?

மந்திரக்காரர்கள் தங்களுடைய மந்திரத்தின் வலிமையால் முத்துக் குளிக்கும் இடத்திலுள்ள மீன்கள் அங்குமிங்கும் திரியாதபடி கட்டி விடுவார் கள். இவ்வாறு செய்தால் தாங்கள் எளிதில் கடலில் முழுகி முத்துக் குளிக்கலாம் என்னும் எண்ணத்தினாலேயே முத்துக் குளிப்பவர் மந்திரக் காரர்களைத் தங்களுடன் அழைத்துச் சென்றார்கள்.

10. முத்துக் குளிக்கும் தொழிலின் உயர்வினையறிந்த மார்க்கோ போலோ யாது கூறியுள்ளார் ?

முத்துக் குளிக்கும் தொழில் பெரிய ஊதியம் தரும் தொழிலென்றும், அத்தொழிலில் ஈடுபடும் உரிமையைத் தமிழ்நாட்டு அரசரிடமிருந்து விலைக்கு வாங்கிக் கொள்ள வேண்டுமென்றும் மார்க்கோ போலோ அவர்கள் கூறியுள்ளார்.

11. தாம் கண்ட தமிழ்நாட்டு மக்களின் உடைகளைப் பற்றி மார்க்கோ போலோ கூறியுள்ளவை யாவை ?

முத்துக் குளிக்கும் தொழிலில் ஈடுபட்டோர் அதிக உடைகளை உடுப்பதில்லையென்றும், அவர்கள் பெரும்பாலும் நிர்வாணமாகவே இருந்தனர் என்றும், அரசன் விலையுயர்ந்த துணிகளை உடுத்திக் கொண்டிருப்பான் என்றும், ஆயினும், அவன் அதிகப்படியான துணிகளை உடுப்பதில்லை என்றும் மார்க்கோ போலோ அவர்கள் தாம் கண்ட தமிழ் நாட்டு மக்களின் உடைகளைப்பற்றிக் கூறியுள்ளார்.

12. தமிழ்நாட்டு மன்னன் அணியும் அணிகலன்களைப் பற்றி மார்க்கோ போலோ கூறியுள்ளவை யாவை ?

'பலவகை மணிகள் நிறைந்த கழுத்துப் பட்டையை அரசன் அணிவான். முத்தும் செம்பும் கோத்துச் செய்த மாலையினை அவன் அணிந்திருப்பான். அம்மாலையில் 104 மணிகள் இருக்கும். அரசன் தனது சமய முறைப்படி ஒவ்வொரு நாளும் தன் கடவுளை நினைத்து 104 முறைகள் வந்தனம் செய்வான். முத்தும் மணியும் இழைத்துப் பொன்னில் செய்யப்பட்ட தோள் வளைகள் மும்மூன்றினை அரசன் அணிந்திருப்பான். கழல், சிலம்பு முதலிய பொன்பட்டைகளை அவன் காலில் அணிந்திருப்பான். அவன் கைவிரல்களிலும் கால் விரல்களிலும் மோதிரங்கள் பலவற்றை அணிந்திருப்பான்' என்று மார்க்கோ போலோ தமிழ்நாட்டு மன்னன் அணியும் அணிகலன்களைப் பற்றிக் கூறியுள்ளார்.

13. அரசனுடைய உடனுறை சுற்றத்தைப் பற்றி மார்க்கோ போலோ கூறியுள்ளவை யாவை ?

'அரசனுடைய உடனுறை சுற்றத்தினர் எப்பொழுதும் அரசனுடனேயே இருப்பர் ; அரசன் உலாப்போகும்போது பக்கத்தில் குதிரையேறிச் செல்வர் ; எல்லாத் துறைகளிலும் அவர்களுக்கு அதிகாரம் உண்டு. அரசன் இறந்தபின் அவனது உடல் கொளுத்தப்படுங்கால் உடனுறை சுற்றத்தவரும் அத்தீயில் மூழ்கி இறந்துபடுவர். மறுபிறப்பிலும் அவ்வரசனுடைய உடனுறை சுற்றமாக இருக்க வேண்டும் என்னும் எண்ணத்தினாலேயே அவர்கள் இவ்வாறு செய்தனர்' என்று அரசனுடைய உடனுறை சுற்றத்தைப் பற்றி மார்க்கோ போலோ கூறியுள்ளார்.

14. தமிழ்நாட்டு அரசரிடம் பெருஞ்செல்வம் சேர்ந்திருந்தமைக்கு மார்க்கோ போலோ கூறும் காரணம் யாது ?

ஒரு அரசன் இறந்தால் அவனது மகன் தன் தந்தையின் பொக்கிஷத்தைத் தொடுவதே இல்லையென்றும், தன் தந்தை சேர்த்ததைப் போலவே தானும் பெருஞ்செல்வத்தைச் சேர்க்க வேண்டும் என்று அவ்விளவரசன் நினைப்பான் என்றும், இவ்வாறு பலரால் தனித்தனியே போட்டி போட்டுக் கொண்டு சேர்க்கப்பட்டு வந்தமையால் தமிழ் நாட்டரசரிடம் பெருஞ்செல்வம் இருந்தது என்றும் மார்க்கோ போலோ காரணம் கூறுகின்றார்.

15. தமிழ்நாட்டுக் குதிரைகளைப் பற்றி மார்க்கோ போலோ கூறியிருப்பவை யாவை ?

'தமிழ்நாட்டில் குதிரைகள் பிறந்து வளர்ந்து பெருகுதல் இல்லை; ஆதன் (Aden) முதலிய இடங்களிலிருந்து அவர்கள் குதிரைகளை இறக்குமதி செய்து கொள்கின்றனர்; ஒவ்வொரு குதிரைக்கும் 500 பொன் விலை கொடுக்கின்றனர்; குதிரைகளைப் பேணும் முறையினைத் தமிழ் மக்கள் அறியார்களாதலால் குதிரைகளில் பெரும்பாலன விரைவில் இறந்து விடுகின்றன. எனவே, ஆண்டுதோறும் அரசர்கள் ஆயிரக் கணக்கான குதிரைகள் வாங்குவர். குதிரைகளுக்கு வேண்டிய தானியங்கள் தமிழ்நாட்டில் விளைவதில்லை. அது பற்றிச் சோறு தீற்றிய இறைச்சியைக் குதிரைகளுக்கு உணவாகக் கொடுத்து வருவர்' என்று தமிழ்நாட்டுக் குதிரைகளைப்பற்றி மார்க்கோ போலோ கூறியிருக்கிறார்.

16. தமிழ்நாட்டில் உள்ள வியப்பான வழக்கம் என்று மார்க்கோ போலோ எதனைக் குறிப்பிடுகின்றார்? சுருக்கி வரைக. அல்லது கொலைத் தண்டனை பெற்ற குற்றவாளி யொருவன் இறக்கும் முறையைப்பற்றி மார்க்கோ போலோ எழுதியுள்ளவை யாவை ?

'கொலைத் தண்டனை பெற்ற குற்றவாளி குறிப்பிட்ட ஒரு தெய்வத்திற்குத் தன்னைப் பலியிட்டுக்கொள்ள விரும்புவான். அரசனைச் சேர்ந்தோர் அவனை ஒரு நாற்காலியில் இருத்தி, கையில் 12 கத்திகளைக் கொடுத்து நகர் வலம் செய்விப்பர். கொலைக்களத்தில் குற்றவாளி தன் வழிபடு தெய்வத்திற்குத் தன்னைப் பலியிட்டுக் கொள்ளப் போவதாகக் கூறுவான். பிறகு அவன் 11 கத்திகளைத் தன் உடலின் பல உறுப்புக்களில் குத்திக் கொள்வான். முடிவில் அவன் எஞ்சிய கத்தியைத் தன் நெஞ்சில் குத்திக் கொண்டு இறப்பான். பின்பு அவனது உடல் எரிக்கப்படும். அவனுடைய மனைவியும் அவனுடன் தீயில் புகுவாள்' என்பதனை மார்க்கோ போலோ தமிழ் நாட்டிலுள்ள வியப்பான வழக்கம் என்று குறிப்பிடுகின்றார்.

17. மார்க்கோ போலோ தமிழ்நாட்டைப் பற்றி எழுதி வைத்துள்ள செய்திகளை 20 வரிகளில் ஒரு கட்டுரையாக வரைக.

இப்பாடத்திற்கமைந்த பாடச் சுருக்கமே இதற்கமைந்த விடையாகும்.

8. பொன் பூக்கும் கடல்

1. கடலில் பொன் பூத்தமை பற்றிய புராணக்கதை யாது ?

'ஒருமுறை துருவாசர் பெருமாளை வணங்கிவிட்டு வந்தார். அவர் தாம் பெற்ற மாலையை இந்திரனிடம் கொடுத்தார். இந்திரனோ அம்மாலையைத் தன் செருக்கால் யானையின் மீது வீசி எறிந்து விட்டான். அதுகண்ட துருவாசர் இந்திரனுக்குச் சாபம் கொடுக்கவே, அவனுடைய பொன்னும் பொருளும் கடலில் புகுந்து விட்டன. கடலைக் கடைந்த காலத்தில் அப்பொருள்கள் கடலில் திரும்பத் தோன்றின' என்று கடலில் பொன் பூத்தமை பற்றிப் புராணக் கதை அமைந்துள்ளது.

2. தரையில் கிடைப்பவை தண்ணீரிலும் கிடைக்க வேண்டும் என்பதை எவ்வாறு உணரலாம் ?

தரை கரைந்தால் கடலாகும். கடல் உலர்ந்தால் தரை ஆகும். இதிலிருந்து தரையில் கிடைப்பவை தண்ணீரிலும் கிடைக்க வேண்டும் என்பதை நாம் உணரலாம்.

3. கடல் உப்புக் கரிப்பதற்குக் காரணம் யாது?

மழை நீர் தரையில் பெய்து ஓடுங்கால், தரையில் உள்ள உப்புப் பொருள்கள் அடித்துச் செல்லப்படுகின்றன. அவை யாவும் கடலில் சேர்வதால்தான் கடல் உப்புக் கரிக்கின்றது.

4. கடல்நீரைக் கட்டியாக்கினால் அதன்கண் என்ன என்ன பொருள்கள் கலந்திருக்கும்?

கடல் நீரைக் கட்டியாக்கினால் அதன்கண் கறியுப்பு, மக்னீஷியம், அலுமினியம், பொன், புரோமின், ஹைட்ரஜன், ஆக்ஸிஜன் ஆகியவை கிடைக்கும்.

5. பெட்ரோலியத்தில் கலந்துள்ளவை யாவை?

ஹைட்ரஜனும், கரியும் பெட்ரோலியத்தில் கலந்துள்ளன.

6. உலகத்தில் உப்பு மிகுந்த கடல் எது? அதில் ஏன் உப்பு மிகுதியாக உள்ளது?

ஐரோப்பாவில் உள்ள கருங்கடலே உலகத்தில் உப்பு மிகுந்த கடல் ஆகும். ஏரி போல் இருப்பதாலும், பிற கடல்களுக்கு நீரோட்டம் இருப்பது போன்ற நீரோட்டம் இல்லையாதலாலும் அக்கடல்நீரில் உப்பு மிகுதியாக உள்ளது.

7. கடலில் உள்ள முக்கியமான அடிப்பொருள் யாது?

கடலில் உள்ள முக்கியமான அடிப்பொருள் மக்னீஷியம் ஆகும்.

8. மக்னீஷியம் எப்பொழுது ஏன் அதிகமாக வேண்டியிருந்தது?

கொளுத்தியவுடன் பேரொளியுடன் எரியும் தன்மை மக்னீஷியத்தின் தன்மை. போர் நடைபெற்ற காலத்தில் மக்னீஷியம் வைத்த குண்டுகள் தேவையாக இருந்தது. எனவே, போர்க் காலத்தில் மக்னீஷியம் மிகுதியாக வேண்டியிருந்தது.

9. 1942-ல் விஞ்ஞானிகள் கடலிலிருந்து எடுத்தது யாது?

1940-ல் விஞ்ஞானிகள் கடலிலிருந்து புரோமின் முதலியவற்றைப் பிரிக்கத் தொடங்கினர். 1942-ல் அவர்கள் கடலிலிருந்து ஒரு கோடி இராத்தல் மக்னீஷியத்தை எடுத்தனர்.

10. உலகத்துப் பொருள்கள் எத்துணை வகைப்படும்? அவை யாவை?

உலகத்துப் பொருள்களை இருவகையாகப் பிரிக்கலாம். அவை காடிப் பொருள், காரப் பொருள் என்பன.

11. மெருகிடும் முறை யாது?

ஒரு கலவைப் பொருளில் மின்சாரத்தை ஓடவிட்டால், அக்கலவை இரு வேறு பொருள்களாகப் பிரியும். மின்கல அடுக்கின் துணைகொண்டு பொருள்களுக்கும் மெருகிடலாம். மின்கல அடுக்கில் உள்ள கரைசலில் மின்சாரக் கம்பிகளின் இரண்டு முனைகள் தொங்கும். அம்முனைகளுள் ஒன்று நேர் மின் முனை; மற்றொன்று எதிர் மின் முனை. ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைக்குக் கரைசலின் வழியே மின்சாரம் பாயும். அவ்வாறு பாயுங்கால் கரையவிட்ட பொன் அணு அணுவாய் எதிர்மின் முனைக்குப் போய்ச் சேரும். இம்முனையில் மெருகு பூசவேண்டிய பொருளை இணைத்துவிட்டால், அப்பொருள் மெருகிடப்பட்டுவிடும்.

12. கடலிலிருந்து மக்னிஷியத்தை எம்முறையில் பிரிக்கலாம் ?

கடல்நீர் மக்னீஷியம் குளோரைட் கலந்த கரைசலே ஆகும். பொருள்களுக்கு மின்கல அடுக்கின் துணைகொண்டு மெருகிடும் முறையைப் பின்பற்றி, கடலிலிருந்து மக்னீஷியத்தைப் பிரிக்கலாம்.

13. மின்வழிப்பிரி முறை எதற்குப் பயன்படும்? எதற்குப் பயன்படாது ?

ஒருவகைப் பொருளை இரண்டு பொருள்களாகப் பிரிக்க மின்வழிப் பிரிமுறை பயன்படுமே யன்றி, பல பொருள்களை ஒரே முறையில் வேறு பிரித்தற்கு அப்பிரிமுறை பயன்படாது.

14. தண்ணீரில் கரையாத உப்பு எது ?

மக்னிஷியம் ஹைட்ராக்ஸைட் என்னும் உப்பு தண்ணீரில் கரையாது.

15. சுண்ணும்புக் குழம்பில் கலந்துள்ள பொருள்கள் யாவை ?

கால்ஷியம் என்னும் சுண்ணும்புச் சத்தும், ஹைட்ரஜன், ஆக்ஸிஜன் என்பவை சேர்ந்த ஹைட்ராக்ஸைடும் சுண்ணும்புக் குழம்பில் கலந்துள்ளன.

16. கடல் நீரிலிருந்து மக்னிஷியத்தைத் துன்பமின்றிப் பிரித்தெடுக்கும் முறை யாது ?

கடல் நீருடன் சுண்ணும்புக் குழம்பைக் கலக்கவேண்டும். அவ்வாறு கலந்தால் மக்னிஷிய உப்பிலுள்ள மக்னிஷியமும், சுண்ணும்புக் குழம்பில் உள்ள ஹைட்ராக்ஸைடும் சேர்ந்துவிடும். அவ்வாறு சேர்ந்த கலவை மக்னிஷியம் ஹைட்ராக்ஸைட் எனப்படும். அக்கலவை நீரில் கரையாது. அதனோடு ஹைட்ரோக்ளோரிக் ஆஸிட் என்னும் காடியைச் சேர்த்தால் மக்னிஷியம் க்ளோரைட் என்னும் உப்பானது தனியே வரும். அதன்பின் மின்வழிப் பிரிமுறையால் மக்னிஷியத்தைத் துன்பமின்றிப் பிரிக்கலாம்.

17. கடலிலிருந்து பெரிய அளவில் மக்னிஷியத்தை எடுத்தலில் உள்ள தொல்லைகள் யாவை ?

கடலிலிருந்து பெரிய அளவில் மக்னிஷியத்தை எடுப்பதற்குப் பெரிய இயந்திரம்வேண்டும். கடல் ஆழமாக உள்ள இடத்தில் முயன்ருல்தான் பயன் கிடைக்கும். ஆழமான இடத்தில் இயந்திரத்தை எப்படி அமைப்பது? ஆழத்தில் உள்ள நீரையெல்லாம் உறிஞ்சி, பொறியால் மேலேகொண்டு வர வேண்டும். இனி, பொருளைப் பிரித்த பிறகு, எஞ்சிய நீரை எங்கே பாய்ச்சுவது? கடலில்தான் பாய்ச்சவேண்டும். அவ்வாறு பாய்ச்சினல் மக்னிஷியத்தைப்பெற முடியாது. எனவே, பொருள் பிரிக்கப்பட்ட நீர் நெடுந்தொலைவில் பாயுமாறு செய்யவேண்டும். மேலும் சுண்ணும்பு, நிலக்கரி முதலியனவும் பெரிய அளவில் வேண்டும். இவ்வாறு கடலிலிருந்து பெரிய அளவில் மக்னிஷியத்தைப் பிரிக்குங்கால் பல தொல்லைகள் உண்டாகும்.

18. டெக்ஸாஸ் என்னும் இடத்தில் உள்ள ஃபிரீபோர்ட் என்னும் துறைமுகத்தில் மக்னிஷியம் எவ்வாறு பெரிய அளவில் பிரித்தெடுக்கப்படுகிறது என்பதனை 20 வரிகளில் ஒரு கட்டுரையாக வரைக.

டெக்ஸாஸ் என்னும் இடத்தில் ஃப்ரீபோர்ட் என்பது ஒரு துறைமுகம். அங்கு முப்பது அடி ஆழத்திலிருந்து கடல் நீர் உறிஞ்சு பொறியால் வெளியே கொண்டு வரப்படுகிறது. அத்தண்ணீர் முதலில் வடிகட்டப்படும். அவ்வாறு

வடிகட்டுங்கால் கசடுகள் அகன்றுவிடும். பின்பு வடிகட்டப்பெற்ற கடல்நீர் கால்வாயின் வழியாகப் பாய்ந்து செல்கிறது.

மக்னீஷியத்தைப் பிரித்தெடுக்கச் சுண்ணும்பு வேண்டுமன்றே? அதற்கு வேண்டிய கிளிஞ்சல் தோணிகளில் கொண்டு வரப்படுகின்றது. அக்கிளிஞ்சல் பெரிய காளவாயில் இட்டுச் சுடப்படும். அவ்வாறு சுட்ட அளவில் சுண்ணும்பும், உயிரியமும் சேர்ந்த பொருள் தனியாக மாறிவிடுகிறது. அப்பொருளில் கடல் நீர் பிறகு சேர்க்கப்படும். அதன் பயனுகச் சுண்ணும்புக் குழம்பு கிடைக்கிறது.

பிறகு, உறிஞ்சி எடுக்கப்பட்ட கடல் நீரில் சுண்ணும்புக் குழம்பும் கலக்கப்படும். அவ்வளவில் அவ்விரண்டும் மக்னீஷியம் ஹைட்ராக்ஸைடாக மாறிவிடும். இது தண்ணீரில் கரையாது. இதை உலர்த்தினுல் வெண்மையான பொடிகள் எஞ்சும்.

மேற்கண்டவாறுபெற்ற வெண்பொடியை ரப்பர் பூசிய எஃகுத் தொட்டியில் இட்டு, ஹைட்ரோக்ளோரிக் ஆஸிடை அதனுடன் கலக்க வேண்டும். அவ்வாறு கலந்தால் மக்னீஷியம் குளோரைட் என்னும் உப்பு வெளிப்படும். பின்பு மின்வழிப் பிரிமுறையால் அவ்வுப்பிலிருந்து மக்னீஷியத்தைப் பிரித்துவிடலாம். இம்முறையில்தான் பெரிய அளவில் ஃப்ரீபோர்ட் என்னும் துறைமுகத்தில் மக்னீஷியம் எடுக்கப்படுகிறது.

19. மக்னீஷியம் நமக்கு எவ்விதத்தில் பயன்படும்?

மக்னீஷியம் இலேசானது. அலுமினியத்தைக் காட்டிலும் மக்னீஷியம் இலேசானதாகும். பிற உலோகங்களுடன் மக்னீஷியத்தைக் கலந்துவிட்டால், அது துரு ஏறப்பெருமல் உறுதியாக இருக்கும். ஆகாய விமானம் இலேசான பொருள்களால் அமைதல் வேண்டுமன்றே? எனவே மக்னீஷியம் ஆகாய விமானத்தைக் கட்டப் பெரிதும் பயன்படும் என்பதை நாம் உணரலாம்.

9. நாடும் நகரமும்

1. சங்க இலக்கியம் என்று சிறப்பாகக் கூறப்படுபவை யாவை?

பத்துப் பாட்டு, எட்டுத்தொகை, சிலப்பதிகாரம் முதலியவை சங்க இலக்கியம் என்று சிறப்பாகக் கூறப்படுவன.

2. பண்டைத் தமிழரசர்களுடைய தலைநகரங்களாக இருந்தவை யாவை?

சேரர்க்கு வஞ்சியும், சோழர்க்குக் காவிரிபுகும்பட்டினமும், பாண்டியர்க்கு மதுரையும் தலைநகரங்களாக இருந்தன.

3. காவிரிபுகும்பட்டினம் எவ்விடத்தே அமைந்திருந்தது?

காவிரிபுகும்பட்டினம் காவிரியாறு கடலுடன் கலக்குமிடத்தில் அமைந்திருந்தது.

4. ஐம்பெருங் குழுவினர் யாவர்?

அமைச்சர், புரோகிதர், சேனபதியர், தூதுவர், சாரணர் ஆகியோர் ஐம்பெருங் குழுவினர் ஆவர்.

5. எண்பேராயத்தார் என்போர் யாவர்?

கரணத்தியலவர், கருமகாரர், கனகச்சுற்றம், கடைகாப்பாளர், நகர மாந்தர், படைத் தலைவர், யானை வீரர், குதிரை வீரர் ஆகியோர் எண்பேரா யத்தார் ஆவர்.

6. பட்டினப்பாலை என்னும் நூலைப்பற்றிச் சிறு குறிப்பு வரைக.

பட்டினப்பாலை என்பது 301 வரிகளைக் கொண்டதொரு நெடும்பாட்டு. அது பத்துப்பாட்டில் ஒரு பாட்டாகும். கடியலூர் உருத்திரங்கண்ணனர் என்னும் புலவரால் கரிகாற் பெருவளத்தானைச் சிறப்பித்துப் பாடிய பாடல் அது.

7. பட்டினப்பாலை காவிரிபுகும்பட்டினத்துக் கடல் வாணிகம் பற்றிக் கூறுவன யாவை?

'காவிரிப்பூம்பட்டினத்தின் கடற்கரையில் பல பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டன. அவ்வாறு செய்யப்பெற்ற பொருள்களுக்குச் சுங்கம் வசூலிக்கப்பட்டது. சுங்கம் வசூலிக்கப்பட்ட பொருள்களின்மீது சோழனுக்குரிய அடையாளமாகிய புலி முத்திரை பொறிக்கப்படும். அவ்வாறு பொறிக்கப்பெற்றவை போராக அடுக்கப்பெறும். குதிரைகள், மிளகு, மாணிக்கம், சந்தனம், முத்து, பவளம், பனைவெல்லம், மணப் பொருள்கள், கர்ப்பூரம், குங்குமம் முதலிய பொருள்கள் அங்கு இறக்குமதி செய்யப்பட்டன' என்று பட்டினப்பாலை காவிரிபுகும்பட்டினத்தின் கடல் வாணிகம் பற்றிக் கூறுகிறது.

8. சுங்கம் என்றால் என்ன?

வேறிடங்களிலிருந்து ஒரு நாட்டு எல்லைக்குள் வரும் பண்டங்கட்கு விதிக்கப்படும் வரியே சுங்கம் ஆகும்.

9. காவிரிபுகும்பட்டினத்தில் எவ்வெவ்விடங்களிலிருந்து எவ்வெப் பொருள்கள் வந்து சேரும்?

அரேபியாவிலிருந்து குதிரைகளும், மேற்குக் கடற்கரைப் பகுதியிலிருந்து மிளகுப் பொதிகளும், மேருவிலிருந்து மாணிக்கமும், பொதியின் மலையிலிருந்து சந்தனமும், பாண்டி நாட்டிலிருந்து முத்துக்களும், கீழ்க் கடற் பகுதியிலிருந்து பவளங்களும், ஈழநாட்டிலிருந்து பனைவெல்லம் முதலிய உணவுப் பொருள்களும், பர்மாவிலிருந்து மணப் பொருள்களும், சீன தேசத்திலிருந்து கர்ப்பூரம், குங்குமம் முதலிய பொருள்களும் வந்து சேரும்.

10. காவிரிபுகும்பட்டினத்து மக்கள் தம் ஓய்வு நேரத்தை எவ்வாறு கழித்தனர் என்று உருத்திரங் கண்ணனர் கூறுகின்றார்.

காவிரிபுகும்பட்டினத்து மக்கள் நன்றாக உண்டு உடுத்தினர் என்றும், ஆட்டுக்கிடாய், சேவல் முதலியவற்றைச் சண்டையிடச்செய்து பார்த்து மகிழ்ந்தனர் என்றும், குத்துச் சண்டை, வெட்டுச்சண்டை, கவண்கல் எறிதல் முதலியவற்றில் ஈடுபடுவர் என்றும், கடலில் முழுகியும், நண்டுகளைப் பிடித்து ஆட்டியும், அலைகளோடு போட்டியிட்டும் பொழுது போக்கினர் என்றும் உருத்திரங் கண்ணனர் கூறியுள்ளார்.

11. காவிரிபுகும்பட்டினத்து மக்கள் எவ்வெப்பொருள்களை விற்பனை செய்தனர்?

பூவும் புகையும், பட்டு நூலாலும் எலி மயிராலும் நெய்த ஆடைகளையும், அவரை துவரைமுதலிய தானியங்களையும், பிட்டும் அப்பமும், மீனும் உப்பும் காவிரிபுகும்பட்டினத்து மக்கள் விற்பனைசெய்து வந்தனர்.

12. காவிரிபுகும்பட்டினத்தில் அமைந்திருந்த இருவகைப் பிரிவுகள் யாவை ?

கடற்கரைப் பக்கமாகிய மருவூர்ப்பாக்கமும், உட்பக்கமாகிய பட்டினப் பாக்கமும் ஆகிய இருவகைப் பிரிவுகள் காவிரிபுகும்பட்டினத்தில் அமைந்திருந்தன.

13. காவிரிபுகும்பட்டினத்தைப் பற்றி நீங்கள் அறிந்துள்ள செய்திகளை 20 வரிகளில் ஒரு கட்டுரையாக வரைக.

காவிரிபுகும்பட்டினம் இருபிரிவுகளாக அமைந்திருந்தது. கடற்கரைப் பக்கம் மருவூர்ப்பாக்கம் என்றும், உட்பக்கம் பட்டினப்பாக்கம் என்றும் பெயர் பெற்றிருந்தன. அந்நகரம் சோழர்கட்குத் தலைநகரமாக இருந்தது. சோழ மன்னர்க்கு ஐம்பெருங் குழுவினரும், எண்பேராயத்தாரும் அரசியலில் துணைசெய்வர். தன் நகருக்கு வந்து சேரும் வாணிகப் பொருள்கட்கு அரசன் சுங்கம் வசூலித்தான். அப்பொருள்களில் புலி முத்திரை இடப்படும். குதிரைகள், மிளகு, மாணிக்கம், சந்தனம், முத்து, பவளம், பனைவெல்லம், மணப் பொருள்கள், கர்ப்பூரம், குங்குமம் முதலிய பொருள்கள் அந்நகரத்திற்குக் கொண்டு வரப்பெற்றன.

காவிரிபுகும்பட்டினத்து மக்கள் பகலில் பல வேலைகளில் ஈடுபட்டிருப்பர். பூ, புகை, ஆடை, தானியங்கள், பிட்டு, அப்பம், மீன், உப்பு முதலிய பொருள்களைப் பகலில் விற்பர். தச்சர், கொல்லர், தட்டார், தையற்காரர், பிற கைத்தொழில் வல்லுநர் ஆகியோர் பகலில் கடுமையான வேலை செய்வர். அவர்கள் மாலையில் தம் பொழுதை இன்பமாகக் கழிப்பர். அவர்கள் நன்கு உண்டு உடுத்தி, ஆட்டுக்கிடாய், சிவல் முதலியவற்றின் சண்டைகளைக் கண்டு களித்து, கடலில் மூழ்கி, இரவில் நாடகம் பார்த்து, ஆடல்கள் கண்டு களிப்பர். அவர்கள் பெருஞ்செல்வர்களாக விளங்கினர்.

மருவூர்ப்பாக்கத்தில் தொழிலாளரும், பட்டினப்பாக்கத்தில் அரசரும் செல்வரும் வாழ்ந்தனர்.

14. மதுரைக் காஞ்சியைப் பாடியவர் யார் ?

மதுரைக் காஞ்சியைப் பாடியவர் மாங்குடி மருதனார்.

15. அல்லங்காடி, நாளங்காடி : விளக்குக.

அந்தி அல்லது மாலைக்கடை அல்லங்காடி ஆகும். பகற்கடை நாளங்காடி ஆகும்.

16. வஞ்சி நகரம் நானிலத்தன்மையும் கொண்டிருந்தது என்பதை நாம் எவ்வாறு உணரலாம் ?

சேரன் செங்குட்டுவனது மனைவி, குறத்தியர் பாடிய குறிஞ்சிப்பாட்டையும், உழவர் பாடிய ஓதைப்பாணியையும், இடையர் இசைத்த குழலின் பாணியையும், நுளைச்சியர் (வலைப்பெண்டிர்) பாடிய நெய்தற்பாணியையும் கேட்டவாறு படுக்கையில் இருந்தாள் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. அவை முறையே (குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் ஆகிய நிலங்களுக்கு உரிய இசைகள்.) எனவே, வஞ்சி நகரம் நானிலத் தன்மையும் கொண்டிருந்தது என்பதனை நாம் உணரலாம்.

17. பண்டைக் காலத்துத் தமிழரசர்களுடைய தலைநகரங்களில் பிற நாட்டு ஒற்றர்கள் வாழ்ந்து வந்தனர் என்பதனை நாம் எவ்வாறு உணரலாம் ?

சேரன் செங்குட்டுவன் பத்தினிக் கடவுளின் உருவத்தைச் சமைப்பதற்குரிய கல்லை இமயமலையிலிருந்து எடுக்க வேண்டும் என்று முடிவு செய்தான்.

அதனை வடநாட்டரசர்க்கு உணர்த்துதல் வேண்டும் என்று அவன் விரும்பிய காலையில், அழும்பில் வேள் என்னும் அமைச்சன் எழுந்து, அரசனது வட நாட்டு யாத்திரையைப் பற்றி வஞ்சி நகரில் பறை யறைந்து அறிவித்தல் போது மென்றும், வஞ்சி நகரில் வாழும் பிறநாட்டு ஒற்றர்கள் அச்செய்தியைத் தத் தம் நாட்டு மன்னர்கட்கு அறிவித்து விடுவர் என்றும் கூறினன். இதிலி ருந்து வஞ்சி நகரில் பிறநாட்டு ஒற்றர்கள் வாழ்ந்தனர் என நாம் உணரலாம்.

18. அக்காலத்தில் உப்பு வணிகரின் வாழ்க்கையைச் சுருக்கி எழுதுக.

அக்காலத்தில் உப்பு வணிகரின் வாழ்க்கையைப் பற்றி ஓரளவு பெரும் பாணாற்றுப் படையிலிருந்து நாம் அறியலாம். உப்பு வணிகர் வேறு ஊர்கட்கு உப்பு மூட்டைகளை வண்டிகளில் கொண்டு செல்வர் என்றும், வண்டியினைச் சேர்ந்தாற்போல் ஓட்டிச் செல்லும் பொருட்டு அவர்கள் வேறு எருதுகளை உடன் கொண்டு போவர் என்றும், வண்டிகளை உப்பு வணிகரின் பெண்டிர் ஓட்டிச் செல்வர் என்றும், ஆடவர்கள் நடந்து செல்வர் என்றும் அந் நூலிலிருந்து தெரிகிறது.

19. நம் பாடப்பகுதியில் நாட்டுப்புற வாழ்க்கையை நடத்தி வந்த இடைக்குலமக்கள் ஒருத்தியின் செய்தியைப் பற்றிக் கூறப்பட் டுள்ளன யாவை ?

'இடைக் குலமகள் விடியற்காலையில் எழுவாள்; தயிர் கடைவாள்; வெண்ணெயை எடுப்பாள்; மோரையும், வெண்ணெயையும் சுமந்து சென்று விற்று நெல்லைப்பெறுவாள். அந்நெல்லினைக் கொண்டு அவளும் அவ ளுடைய சுற்றத்தாரும் வாழ்க்கை நடத்துவர். அவள் நெய்யை விற்று நல்ல பால் எருமைகளையும், பசுக்களையும் வாங்குவாள்' என்று நாட்டுப் புற வாழ்க்கையை நடத்தி வந்த ஓர் இடைக்குலமகளைப் பற்றி எம் பாடப் பகுதியில் கூறப்பட்டுள்ளன.

20. பழங்காலத்து நாட்டுப்புற மறையவர் வீட்டினைப் பற்றி நம் பாடப்பகுதியிலிருந்து நீவிர் அறிவன யாவை ?

பழங்காலத்து நாட்டுப்புற மறையவர் வீட்டினைப் பற்றி, 'வீட்டின் வாயிலில் பந்தல் போடப்பட்டிருக்கும். பந்தர்க்காலில் பசுங்கன்று கட்டப் பெற்றிருக் கும். வீடு மெழுகப் பட்டிருக்கும். நாயோ, கோழியோ ஆங்குக் காணப் படா. கிளி ஒரு கூண்டில் காணப்படும். அவ்வீட்டில் ஒரு பெண் நல்ல வெண்ணெயில் மாதுளங்காயைப் பொரித்து மிளகுப் பொடி யைத் தூவித் தாளிப்பாள். அவ்வீட்டிற்குச் சென்றால் பருப்புச் சோறும், பொரியலும், மாவடு ஊறுகாயும் கிடைக்கும்' என்று அறிகிறோம்.

21. பழங்காலத்து வேளாளர் வீட்டு வாழ்க்கையைப் பற்றி நம் பாடப் பகுதியிலிருந்து நீவிர் அறிவன யாவை ?

பழங்காலத்து வேளாளர் வீட்டு வாழ்க்கையைப் பற்றி, 'அவ் வீடு வைக் கோலால் வேயப்பட்டது. வீட்டின் முன்னிடத்தில் பசுங்கன்றுகள் பல கட் டப் பட்டிருக்கும். நெற்குதிர்களும் இருக்கும். நெற்குதிர்கள் மிக உயரமா னவை. வீட்டுச் சிறுவர்கள் சிறு தேர் உருட்டி விளையாடுவர். அவ்வீட்டிற் குச் செல்வோர் வெண்ணெல் அரிசிச் சோற்றைப் பெட்டைக் கோழிப் பொரியலுடன் பெறுவர்' என்று எம்பாடப் பகுதியிலிருந்து அறியலாம்.

" பொருள்தனைப் போற்றி வாழ்." — ஔவை.

10. வயிற்றுக் கவலை

1. சங்க காலத்தில் தொழிலில் ஈடுபட்டிருந்த புலவர்களுள் நால்வரைக் கூறுக.

தங்காற் பொற்கொல்லன் வெண்ணாகனார், மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார், மதுரைக் கொல்லன் புல்லனார், மதுரைக் கொல்லன் வெண்ணாகனார் என்னும் நால்வர் சங்க காலத்தில் தொழிலில் ஈடுபட்டிருந்தனர்.

2. எத்தகைய நல்லாட்சியில் நல்லமைப்பு நிலவும்?

வறுமை இல்லாமையால் கொடைத்தன்மை இல்லை என்றும், வாங்கிக் கொள்பவர் இல்லாமையால் கொடுப்போர் இல்லை என்றும் சொல்லப்படும் நாட்டின் நல்லாட்சியில்தான் நல்லமைப்பு நிலவும்.

3. நாட்டுக்கு உழைத்து நலம் செய்வோர் யாவர்?

தாள்கொண்டு உழைப்பவர், தோள்கொண்டு காப்பவர், அறிவுகொண்டு ஆராய்ந்து எழுதுபவர், உணர்வுகொண்டு உயரப் பறப்பவர் ஆகியோர் யாவரும் நாட்டுக்கு உழைத்து நலம் செய்வோர் ஆவர்.

4. பழங்காலத்தில் புலவரது வாழ்வு செல்வ வாழ்வு என்று கருதப்பட்டதை நாம் எதனால் உணரலாம்?

சுடச்சுட உணவை உண்டலால் உண்டாகும் வியர்ப்பை யல்லாமல் செய்கின்ற தொழிலால் வியர்ப்பினை அறியேன் என்று புலவர் ஒருவர் பாடிய பாடல் புறநானூற்றில் காணப்படுகிறது. இதிலிருந்து பழங்காலத்தில் புலவர்கள் செல்வ வாழ்க்கை வாழ்ந்தனர் என்பதை உணரலாம்.

5. பழந்தமிழ் அரசர்களுட் சிலர் எதனை வறுமையாகக் கருதினர்?

புலவரால் பாடப்பெறாமல் தமது நாடு ஒழிதலை வறுமையென்று பழந்தமிழரசர்களில் சிலர் கருதினர்.

6. எத்தகைய உலகில் வறுமை நீங்காது?

இயற்கை யளிக்கும் செல்வம் உலகில் வாழ்வார் யாவர்க்கும் பொது என்னும் உண்மையை உணராத உலகில் வறுமை நீங்காது.

7. "விளக்கு உள்ள இடமெல்லாம் அவ்விளக்கின் அடியே இருளிருத்தல்": இவ்வுவமை எதனை விளக்கும் பொருட்டுக் காட்டப் பட்டது?

செல்வம் மிக்க இடமெல்லாம் வறுமையும் உடனுறையும் என்பதனை விளக்க, "விளக்கு உள்ள இடமெல்லாம் அவ்விளக்கின் அடியே இருளிருத்தல்" என்னும் உவமை காட்டப்பட்டது.

8. நக்கீரனாரின் நெஞ்சத்தில் எத்தகைய நாகரிகம் மலர்ந்தது?

நக்கீரனார், "இவ்வுலகை ஒரு குடைக்கீழ் ஆளும் மன்னனுக்கும், இரவும் பகலும் விலங்கினை வேட்டையாடுவதில் மனத்தைச் செலுத்தியிருக்கும் வேடனுக்கும் உடலும், உடையும், பிறவும் ஒக்கும். எனவே, செல்வத்தின் பயன் ஈதலேயாகும். யாமே உண்போம் என்று எண்ணினால் தவறுபவை பல" என்னும் கருத்துப்படுமாறு பாடியுள்ளார். செல்வத்துப் பயன் ஈதலே என்பது அப்புலவரின் கருத்தில் மலர்ந்த நாகரிகம் ஆகும்.

9. பரிசில்கள் பலவற்றைப் பெற்றவாறு இருந்தும் பழங்காலத்துப் புலவர்களிடம் வறுமை நிலைபெற்றிருந்ததற்குக் காரணமென்ன?

அக்காலத்துப் புலவர்கள், பெருமிதவாழ்வு வாழ்ந்தமையாலும் செல்வத்துப் பயனே 'ஈதல்' என்னும் குறிக்கோளினைக்கொண்டு, தாம்பெற்ற

பரிசிலைத் தமக்கென்று வைத்துப் போற்றாமல் பலர்க்கும் பகிர்ந்து அளித்தமையாலும் அவர்களிடம் வறுமை நிலைபெற்றிருந்தது.

10. குமணனைப் பாடிப் பெரும்பரிசில் பெற்று மீண்ட பெருஞ்சித்திரனார் தம் மனைவியிடம் கூறியவை யாவை?

81-ஆம் பக்கத்திற்கமைந்த அருஞ்சொல் விளக்கத்தில் 'நின்னயந்து' என்னும் பாடலுக்கமைந்த உரையே இவ்வினாவிற்குரிய விடையாகும்.

11. நும் கட்டுரையாசிரியர் வயிற்றுக் கவலைக்கு உரிய இரண்டாம் காரணமாகக் கூறிய செய்தியை 20 வரிகளில் ஒரு கட்டுரையாக வரைக.

பழந்தமிழ்ப் புலவர்களுள் பலர் தமக்கு வள்ளல்கள் அளித்த பரிசிலைத் தமக்கென வைத்துப் போற்றாமல் உற்றார் உறவினர்க்குப் பகிர்ந்தளித்து மகிழ்ந்தனர். தமது நாடு புலவர்களால் பாடப்பெறாவிடில் தமக்கு இழிவு வந்ததாகக் கருதிய அரசர்கள் அக்காலத்தில் இருந்தனர். உயர்ந்த அரசனுக்கும் இழிந்த வேட்டுவனுக்கும் உணவும், உடையும், பிறவும் ஒக்கும் என்றும், அதனால் செல்வத்தின் பயன் ஈதலே யென்றும், யாமே உண்போம் என்று எண்ணினால் தவறுபவை பல என்றும் நக்கீரனார் பாடியுள்ளார். 'செல்வத்துப் பயனே ஈதல்' என்னும் நக்கீரனாரின் குறிக்கோளைப் புலவர்கள் பலர் கொண்டமையே அவர்களுடைய வயிற்றுக் கவலைக்குரிய இரண்டாம் காரணம் ஆகும்.

எடுத்துக் காட்டாக, நக்கீரனாரது குறிக்கோளினைப் பெருஞ்சித்திரனார் என்னும் புலவர் கைக்கொண்டிருந்தார். அவர் குமணனைப் பாடிப் பெரும் பரிசில் பெற்று மீண்டார். ஆயின், அவர் அதனைப் போற்றினாரல்லர். அவர் தம் மனைவியாரைப் பார்த்து, "நின் சார்பான மகளிர்க்கும், நீ அன்பு காட்டி ஒழுகப்பட்ட மகளிர்க்கும், மூத்த மகளிர்க்கும், உறவினருள் உனக்கு நெடு நாட்படக் குறித்த கடனைத் தந்தோர்க்கும் இப்பொருளைக் கொடு. இன்ன தன்மையோரென்று நீ யாரையும் ஆராய வேண்டாம். நீ என்னையும் கேட்க வேண்டாம். இப்பொருளைக் கொண்டு நீ நெடுநாள் வாழலாம் என்று எண்ணாதே; எல்லோருக்கும் நீயும் கொடு; நானும் கொடுக்கின்றேன்" என்று கூறினார். இவ்வாறு தமக்கு எத்துணை செல்வம் கிடைப்பினும் அச் செல்வத்தை யெல்லாம் புலவர்கள் பிறர்க்கு ஈந்தனர் ஆதலால் அவர்களை விடுத்து வறுமை நீங்கவில்லை.

12. புலவரது வறுமைக்குரிய மூன்று காரணங்கள் என்று சுட்டப்பட்டுள்ளவை யாவை?

புலவர் உழைத்துப் பொருள் தேடுவதில் காலம் கழியாமல் புலமையைத் தேடி வாழ்ந்தமை அவர்களுடைய வறுமைக்கு முதற் காரணமாகும். தமக்கு வள்ளல்கள் எத்துணைப் பொருள் கொடுப்பினும் அப்பொருள்களைத் தமக்கென்று வைத்துப் போற்றாமல் பலர்க்கும் பகிர்ந்து அளித்தமை அவர்களுடைய வறுமைக்கு இரண்டாவது காரணமாகும். புலவர்களால் தமக்கு உண்டாகும் நன்மையை உணராமல் அவர்களைப் பொதுமக்கள் புறக்கணித்துத் தம் வயிற்றுக் கவலையில் ஆழ்ந்திருந்தமை மூன்றாவது காரணமாகும்.

துணைப்பாட நூல்கள்

இன்றியமையாத அறிவுரை

துணைப்பாட நூல்கள் ஏன் பாடமாக வைக்கப் பெற்றுள்ளன? சிந்தித்துப் பாருங்கள்: உங்களுடைய பொது அறிவும், மொழி அறிவும் வளரவே என்னும் உண்மை உங்களுக்குப் புலப்படும். அவற்றைப் படிப்பதால் உங்களுடைய சொற்களஞ்சியம் வளமுறும்; கருத்துக்கள் செம்மையுறும்; நடை அழகு பெறும்; முறை தெளிவு பெறும். இக்காரணங்கள்பற்றியே அரசியல் கல்வித் துறையினர் இவற்றைத் துணைப்பாட நூல்களாக அமைத்துள்ளனர். எனவே, **துணைப்பாட நூல்கள் எல்லாவற்றையும் வாங்குங்கள்**; உரை நூல் போதுமே என்று எண்ணுதீர்கள்; **துணைப் பாட நூல்களைப் பன்முறை படியுங்கள்**; மொழி நடையை நோக்குங்கள்; பொருட்செறிவை நினைவிற்கொள்ளுங்கள்; முடிவில் இவ்வுரை நூலைப் படியுங்கள்.

ஒவ்வொரு துணைப்பாட நூல் கட்டுரைத் தொகுதியின் இறுதியிலும் '**படித்துப் பயன் பெறுக**' என்றொரு தலைப்பினை யாங்கள் சேர்த்துள்ளோம். அத்தலைப்பில் துணைப்பாட நூலில் நீங்கள் ஆழ்ந்து படித்துச் சுவைத்துக் கருத்தில் இருத்த வேண்டிய நூற் பகுதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றை நூலிலிருந்து பன்முறை படித்துப் பயன் அடையுங்கள்.

"Any pupil can do without a guide,
but no one can do without the Text-book."

"ஆதிபகவன் முதற்றே உலகு."—வள்ளுவர்.

N. D.-1

ES8S : OLVW

துணைப்பாட நூல்கள்

1. இமய வெற்றி

பொருள் சுருக்கம்

உலகத்தில் உயர்ந்த மலை இமயம். அது இந்தியாவின் வடக்கில் கிழக்கு மேற்காக 1,500 மைல் நீளமும், வடக்குத் தெற்காக 200 மைல் அகலமும், 5 மைல் உயரமும் உள்ளது. இது நம் நாட்டின் வடக்கில் பகைவர் படையெடுத்து வராதபடி மலையரணாக உள்ளது. இதன் உயர்ந்த சிகரங்களில் எப்போதும் பனி மூடியிருக்கும். 20,000 அடி உயரத்திற்குமேல் தாவரங்களோ பிராணிகளோ காணப்படுவதில்லை.

இமயத்தில் பல சிகரங்கள் உள்ளன. உயர்ந்த சிகரம் **எவரெஸ்டு.** இதன் உயரம் 29,002 அடி. இச்சிகரத்தை அடையப் பலர் முயன்றனர். பலர் உயிரைப் பலி கொடுத்தனர்; பதினொரு முறை படையெடுத்தனர். 1953-ஆம் ஆண்டில் படையெடுத்த பதினோராவது குழுவைச் சேர்ந்த நியூஜிலாந்து வீரர் **ஹில்லரி**யும், நம் நாட்டு வீரர் **தென்சிங்கும்** எவரெஸ்டின் உச்சியை அடைந்து வெற்றி பெற்றனர். வெற்றி வீரரை உலகம் போற்றியது. இவ்வெற்றிக்கு விஞ்ஞானம் பல வகையில் துணை செய்தது. முக்கியமானது பிராணவாயுக் கருவியின் உதவி.

உலகத்தில் காணப்படாத புதுமைகள் பல இமயமலையில் காணப்படுகின்றன. எவரெஸ்டு வெற்றிக்குப்பின், மலையேறுவார் சிலர் மேலும் பல சிகரங்களில் ஏறி வெற்றி பெற்றனர். இவ்வெற்றியினால் பல நன்மைகள் உண்டாயின. பனியை உருக்கிப் பாலையில் நீர் பாய்ச்சிப் பயிர் செய்தல், 'காஸ்மிக்' கிரணங்களை ஆராய்ந்து பயன்படுத்துதல் போன்ற முயற்சியில் விஞ்ஞானிகள் ஈடுபட இவ்வெற்றி துணை செய்கின்றது. மனிதனுடைய ஆற்றல் இயற்கையின் ஆற்றலை வென்று விட்டது. இதனால் உலகத்துக்கு மேன்மேலும் பல நலங்கள் உண்டாகும் என்று நம்புகின்றனர்.

இதில் வரும் சில பெயர்கள், இடங்கள், பொருள்கள் பற்றிய குறிப்புக்கள்

பெயர்கள்

சர் ஜார்ஜ் எவரெஸ்டு: 1841-ஆம் ஆண்டில் எவரெஸ்டு சிகரத்தின் உயரம் கண்டு பிடித்தவர்; இந்திய நிலஇலாகாத் தலைவர்.

இர்வின், மலாரி: 1924-ல் மூன்றாவது பிரிட்டிஷ் குழுவில் 28,130 அடி உயரம் ஏறிப் பலியானவர்கள்.

ஹோவர்டு பெரி: 1921-ல் நிகழ்ந்த முதல் படையெடுப்பின் தலைவர்.

கெல்லாஸ்: முதல் படையெடுப்பில் பலியானவர்.

ஜார்ஜ் லீ, லாங்ஸ்டாப், மீட் : முதல் படையெடுப்பில் உடன்சென்றவர்கள்.

புரூஸ், மலாரி, பின்சு : 1922-ல் இரண்டாம் படையெடுப்பில் 27,300 அடி வரை ஏறியவர்கள்.

நார்ட்டன் : 3-ஆவது பிரிட்டிஷ் குழுத் தலைவர் ; 28,126 அடிவரை ஏறியவர்.

சாமர்வெல் : 3-ஆவது குழுவுடன் சென்ற விஞ்ஞானி.

ரட்லெஜ் : "எவரெஸ்ட் 1933" என்னும் நூலை எழுதியவர் ; பல முறை இமயத்தில் ஏறி ஆராய்ச்சி செய்தவர்.

ரெடுவார்டு விஸ்டூனண்ட் : 1952-ல் மலை ஏறிய சுவிஸ் குழுவின் தலைவர்.

லாம்பெர்ட் : 1952-ல் தென்சிங்குடன் மலை ஏறியவர்.

கேப்ரியல் சலாஸ்லி : இரண்டாம் சுவிஸ் குழுத் தலைவர்.

கர்னல்-ஜான் ஹண்ட் : 1953-ல் எவரெஸ்டை வென்ற குழுவின் தலைவர் ; இக்குழுவில் 13 உறுப்பினர் இருந்தனர்.

இவான்ஸ், கிரி கரி : 1953-ல் 11-ஆவது பிரிட்டிஷ் குழுவில் கலந்து, எவரெஸ்டில் முதல் முறை ஏறும் முயற்சியில் தோல்வியுற்றவர்கள்.

இடங்கள்

மகாலு :
தவளகிரி :
பஞ்ச்சூலி : } இமயத்தின் சிகரங்கள்

எவரெஸ்டு : இமயத்தின் 29,002 அடி உயரமுள்ள சிகரம்.

காட்வின் ஆஸ்டென் : 28,250 அடி உயரமுள்ள சிகரம்.

காஞ்சன சிருங்கம் : 28,146 அடி உயரமுள்ள சிகரம்.

நங்கா பர்வதம் : 26,629 அடி உயரமுள்ள சிகரம்.

தியாங் பூச்சி : இறுதிப் படையெடுப்பில் முதல் பாசறை அமைத்த இடம்.

டூங்சூங் : தென்சிங்கின் ஊர்.

சோலோகும்பு : தென்சிங்கு பிறந்த ஊர்.

லோட்ஸே, ராங்க் பக் : பனியாறுகள்.

எபரான்-டி-ஜெனிவாய் : எவரெஸ்டின் அடிவாரத்தில் உள்ள சரிவு.

தென் முனை : எவரெஸ்டின் அருகில் தென் சிகரம் உள்ள இடம்.

பொருள்கள்

பனி மனிதன் : இமயத்தின் உயரமான இடங்களில் காணப்படும் ஒரு வகைப் பிராணி.

மாயக் கதிர்கள் : காஸ்மிக் கிரணங்கள் ; பனிமலையின் உயர்ந்த பகுதியில் உள்ளவை.

ஜார்ஜ் பதக்கம் : தென்சிங்குக்கு அளிக்கப்பட்ட பதக்கம்.

மலைவாணர்

ஷெர்ப்பாக்கள் : இமயமலை அடிவாரத்தில் வாழும் மலைவாணர் ; இவர்கள் மலை ஏறுவதில் தேர்ந்தவர்கள் ; மலையேறுவோர்க்கு வழிகாட்டிகளாகவும், மூட்டை தூக்குபவராகவும் உதவுபவர்.

கட்டுரைகள்

(1) இமயத்தின் அமைப்பும் கொடுமுடிகளும்

முன்னுரை—இமயமலையின் பிறப்பு—இமயச் சிறப்பு—இமயத்தின் சிகரங்கள்—அபாயங்கள் (பனிப்பாறை, பனியாறு)—பனி வீழ்ச்சியிடங்கள்—குளிர்காற்று, குளிர்—முடிவுரை.

இமயமலையின் பிறப்பு : மண்ணுலகத்தில் மிக உயர்ந்த கொடுமுடிகளை உடையது பனிமலை. மலை வகைகளில் இது மடிப்பு மலை. பூமிக்குள் அடிக்கடி தோன்றும் குமுறல்களின் காரணமாக மடிப்புமலை தோன்றும். பூமிக்குள்ளே நூறு மைல் ஆழத்திலும், அதிக ஆழத்திலும் உலோகம், பாறை, மண் ஆகியவை உருகிப் பல இடங்களில் குழம்பு போல் கொதித்துக் கொண்டிருக்கின்றன. இவை மிகும் போது பூமியில் எரிமலைத் தோற்றம், பூகம்பம் போன்றவை உண்டாகும். பூமியின் மேற்பரப்பு மேடு பள்ளமாகும். மேடாகும் பகுதியே மலை எனப்படும். அடுத்தடுத்து மேடுகள் உண்டாவது மடிப்பு மலை. இவ்வாறு உண்டானதே இமயமலை. இஃது ஒரு தனி மலையன்று. பல மலைகளின் அடுக்குகள் பல தொடராய் அமைந்துள்ள மலைத் தொடராகும். இம் மலைப்பகுதி நெடுங்காலத்துக்கு முன் கடலுள் இருந்தது என்பதற்குப் பல சான்றுகள் கிடைப்பதாக ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

இமயச் சிறப்பு : இமயமலை கிழக்கு மேற்காக 1500 மைல் நீளமும், வடக்குத் தெற்காக 200 மைல் அகலமும், ஏறக்குறைய 5 மைல் உயரமும் உள்ளது. இந்தியாவின் வடக்கில் மலையரணாகவுள்ள இம்மலையைக் கடந்து வருதல் எவர்க்கும் அரிதாகும். ஒன்றிரண்டு கணவாய்களின் வழியே கடந்து வருதல் கூடும். அதற்கும் பனி, பனிக்கட்டி, பனி ஆறு, பாறைகள், சரிவுகள், குளிர் காற்று முதலியவை பெருந் தடைகளாயுள்ளன.

இதன் மேல் எப்பொழுதும், எங்கும் பனி மூடிக் கொண்டிருக்கும். இதனால் தான் இமாலயம் எனப் பெயரிட்டனர். (ஹிமம்-பனி). பனியாறுகள் உருகியோடிக் கொண்டும், பனிக்கட்டிப் பாறைகள் சரிந்து உருண்டு கொண்டும் இருக்கும். இம் மலையில் 16,000 அல்லது 20,000 அடி உயரத்திற்கு மேல் மரஞ் செடி கொடிகளோ, பிராணிகளோ காணப்படுவதில்லை. அக்கடும்பனிக் குளிரில் எவ்வுயிரும் வாழ இயலாது. இமய மலை கடவுளர்க்கும், முனிவர்கட்கும் இருப்பிடமென்று நம் நாட்டுப் புராணங்கள் கூறுகின்றன. கடவுள் ஆற்றலால்தான் இமயத்தை வெல்ல முடியுமேயன்றி மனித ஆற்றலால் வெல்ல முடியாதென்பதே அதன் கருத்து. ஊக்கம் உடைய மனிதன் பின்னுளில் இமயத்தை வெல்ல முடியும் என்பதை யாரும் அறிந்திலர்.

இமயத்தின் சிகரங்கள் : உலகிலேயே மிக உயர்ந்த சிகரங்களான **எவரெஸ்டும் (29002 அடி), காட்வின் ஆஸ்டெனும் (28250 அடி)** இமய மலையில்

உள்ளன. மற்றும் பொன் சிகரம் எனப் பொருள்படும் **காஞ்சன சிருங்கம்** (கஞ்சன் ஜிங்கா-28146 அடி), வெள்ளை மலை எனப் பொருள் படும் **தவளகிரி** (26826 அடி), **நங்கா பர்வதம்** ஆகியவையும் இம் மலையின் உயர்ந்த கொடு முடிகளாகும். **எவரெஸ்டு** என்பவரும், **ஆஸ்டின்** என்பவரும் உயரம் கண்டதால் அவர்கள் பெயரால் முதலிரண்டு சிகரங்களும் குறிப்பிடப்படுகின்றன. எவரெஸ்டின் வேறு பெயர்கள் **கௌரி சங்கர், சோமா லூங்மா** (மலைத்தாய்) என்பன. சிவ பெருமான் உறைவிடமான **கைலாய கிரியும்** இம்மலைச் சிகரங்களில் ஒன்றே.

அபாயங்கள் (பனிப்பாறை, பனியாறு) : இமயத்தின் கொடு முடிகளில் எப்போதும் பனி மூடிக்கொண்டிருக்கும் என்பதை முன்னமே அறிந்தோம். அப் பனிக்கட்டிப் பாறைகள் அடிக்கடி சரிந்து கீழ் நோக்கி உருண்டு கொண்டேயிருக்கும். பனி உருகிப் பெரு வெள்ளமாகிப் புரண்டோடி வரும். பனிப் பாறைகள் மிதந்து வரும். பனியாறுகள் ஒரே திசையிற் செல்லாமல் அடிக்கடி மலையிலும், சம வெளியிலும் திசை மாறுவதுண்டு. இத்தகைய பேராபத்துக்களிடையேதான் இமய மலையில் ஏற வேண்டும்.

பனி வீழ்ச்சியிடங்கள் : எதிரிலுள்ளவற்றை அறிய முடியாதபடி மூடு பனி மறைத்திருக்கும். 20000 அடிக்கு மேல் செல்லும் போது, எங்கும் ஒரே பனிக் காடாக இருக்கும். பனி மிகுதியாகப் பெய்து கொண்டேயிருக்கும். அவை **பனி வீழ்ச்சி யிடங்கள்** எனப்படும். இவ்விடங்களில் வழி தவறிப் போவது இயல்பே. 26000 அடிக்குமேல் செங்குத்தான பாறைகளும், அபாயம் நிறைந்த சரிவுகளும் மிகுதி. அங்கு வழி கண்டு ஏறுதல் எளிதன்று. இதற்கு மேல் மனிதன் ஆற்றலால் ஏற முடியாதென்று முடிவு செய்திருந்தனர்.

குளிர் காற்று, குளிர் : அங்கு வீசும் குளிர் காற்று ஆளை அடித்துக் கொண்டு போய் விடும் போலிருக்கும். அக் காற்றால் இரத்தம் உறைந்து விடும்; மூளை கலங்கும் ; பலக்குறைவு மிகும் ; உயிர் அகத்ததோ, புறத்ததோ என்றாகி விடும். அவ்வுயரத்தில் போதிய பிராண வாயு இல்லாமையால் மூச்சு விட முடியாது. சிறிது தூரம் நடக்கினும் களைப்பு மிகும். ஓய்வு எடுத்துக் கொண்டுதான் நடக்க இயலும். பசி தோன்றாது. தலை வலிக்கும். வாந்திவரும். உடல் மெலியும். இளைப்பு உண்டாகும். இம் மலையில் ஏறுவோர் இந்த ஆபத்துக்களுக்கெல்லாம் தளராத உடல் வலிமையும், மன வலிமையும் உடையவராயிருத்தல் வேண்டும்.

(2) எவரெஸ்டை அடைய நிகழ்ந்த முதல் மூன்று முயற்சிகள்

முன்னுரை — எவரெஸ்டு – 1-ஆவது படையெடுப்பு — 2-ஆம் முயற்சி–3-ஆம் படையெடுப்பு—மலாரி, இர்வின் பலி—ஒன்பதாண்டு ஓய்வு—முடிவுரை

எவரெஸ்டு : உலகத்தில் உயர்ந்த கொடுமுடியாய் உள்ளது இச்சிகரமே. இதன் உயரத்தைக் கண்டு பிடித்தவர் சர் ஜார்ஜ் எவரெஸ்டு. அவர் பெயரே இச் சிகரத்திற்கு வழங்கி வருகிறது. இச்சிகரத்தைக் கண்டு பிடித்தால் இதனினும் குறைந்த உயரம் உள்ள மற்றச் சிகரங்களைக் காணுதல் எளிதாதலின், மலையேறுவோர்க்கு எவரெஸ்டைக் காண்பதில் ஊக்கம் உண்டாயிற்று. இதை அடைவதற்குப் பல ஆராய்ச்சிகள் நடந்தன. வானவூர்தியில் சிலர் பல முறை

கள் சென்று எவரெஸ்டைப் படம் பிடித்தனர்; மலையேறிகளின் உதவியால் வழிகளைக் கண்டனர் ; பருவ நிலைகளை அறிந்தனர்.

1-ஆவது படை எடுப்பு : ஆங்கிலேயப் படைத்தலைவர் **கர்னல் ஹோவார்டு பெரி** என்பவர் 1921-இல் இம்முதல் படையெடுப்பைத் தலைமை தாங்கி நடத்தினார். இமயத்தின் வடபுறத்தில் உள்ள திபேத்து நாட்டின் வழியாக, கிழக்கு நோக்கி ஓடும் **ராங்பக்** என்னும் பனியாற்றின் கிழக்குக்கரை வழியே சென்று எவரெஸ்டு சிகரத்தை அடைய முடியுமென்றும், இந்த ஆறு உண்டாகும் இடம் எவரெஸ்டின் அருகில் இருக்குமென்றும் இக் குழுவினர் எண்ணினர்.

இப் பனியாற்றின் கரை வழிச் செல்வதில் மற்றொரு பெரிய ஆபத்திருக்கின்றது. பனியாற்றில் அடிக்கடி பெரு வெள்ளம் வரும். பனிப் பாறைகள் மிதந்து வரும். அவற்றால் வழிச் செல்வோர் உயிரிழக்கவும் நேரும். இவ் வழியே செல்லும் போது, முதற் குழுவினருள் ஒருவரான **கெல்லாஸ்** குளிர் தாங்காமல் இருதய நோயினால் இறந்துபோனார். எனினும் இக்குழுவினர் வடக்கு, கிழக்குப் பக்கமிருந்து எவரெஸ்டுக்குச் செல்லும் வழிகளை ஆராய்ந்து, பனிமலையின் வடகிழக்குப் பகுதியை அடையக்கூடிய ஒரு வழியைக் கண்டனர், இக் குழுவினருள் **ஜார்ஜ் லீ, மலாரி** என்னும் இருவரும் இவ் வழியே 23,000 அடிவரை எவரெஸ்டின்மேல் ஏறிவிட்டனர். உடன் சென்ற **லாங் ஸ்டாப், மீட்** என்னும் இருவருக்கும் பனிக்காற்றின் கொடுமையால் மூச்சுத் திணறல் ஏற்பட்டது. அதனால் மறுமுறை வந்து முயற்சி செய்யும் நோக்கத்துடன் அவர்கள் கீழ் இறங்கி வந்து விட்டனர்.

2-ஆம் முயற்சி : 1922-ல் புரூஸ் என்பவர் தலைமையில் ஒரு பிரிட்டிஷ் குழுவினர் எவரெஸ்டைக் காண முயன்றனர். **புரூஸ், மலாரி, பின்சு** என்னும் மூவரும் முதற் குழுவினரின் குறிப்புக்களையும், அனுபவங்களையும் பின்பற்றி, அவர்கள் சென்ற வழியே சென்று 27,300 அடி உயரம் ஏறினர். அதற்குமேல் ஏற முயன்றபோது பனிக்காற்றும், பருவக்காற்றும், பனிமழையும் கடுமையாக வீசின. பெரிய பனிமலை சரிந்து வந்து மூட்டை தூக்கும் ஷெர்ப்பாக்கள் எழுவரின் உயிரைப் பலிகொண்டது. மலையேறிகளுக்கு உணவு, உடை முதலிய பொருள்களைச் சுமந்து செல்லுபவர்கள் ஷெர்ப்பாக்கள். மலையேறுவதில் நன்கு பயிற்சி பெற்ற இவர்கள் இதையே தொழிலாகக் கொண்டிருப்பவர்கள். இவர்கள் துணையின்றி மலையேற முடியாது. ஷெர்ப்பாக்கள் இறந்ததால் இரண்டாம் குழு திரும்ப வேண்டியதாயிற்று. முதல் குழுவில் சென்ற **மலாரி** என்பவர் இரண்டாங் குழுவிலும் சென்றமையால், அவர் துணைகொண்டு இவர்கள் முன்னைவிட அதிக தூரம் ஏறினர். உலகம் அவர்களைப் பாராட்டியது.

3-ஆம் படையெடுப்பு : 1924-ஆம் ஆண்டில் கர்னல் **நார்ட்டன்** என்பவர் தலைமையில், **சாமர் வெல்** என்னும் விஞ்ஞானியின் துணையுடன் பிரிட்டிஷ் குழுவினர் **மூன்றும் படையெடுப்பை** நடத்தினர். இயற்கையை வெல்ல மனித ஆற்றலால் முடியாதெனக் கண்டு, விஞ்ஞானியின் துணை வேண்டப்பட்டது. இப்படையெடுப்பின் போது பருவக் கோளாறின் சின்னம் ஏற்பட்டது. இவர்களுடன் சென்ற ஒரு கூர்க்கர் மூளையிலுள்ள இரத்தம் உறைந்து பிணமானார். மற்றொரு ஷெர்ப்பா பனிக் கொடுமை தாங்க முடியாமல் மடிந்தார். இத் துன்பங்களைப் பொருட்படுத்தாத **நார்ட்டன்** மட்டும் துணிந்து முன்னேறி, பருவநிலை உதவியாக இருந்த சமயம் அறிந்து 28,126 அடி வரை ஏறிவிட்டார். மேலே செல்லக் கருதியபோது பனிப் பாறையின் பேரொளிபட்டு அவர் கண்கள் குருடாய்விட்டன.

மலாரி, இர்வின் பலி : ஜூன் மாதம் முதலில் பருவநிலை சாதகமாயிருப்பதை அறிந்த **மலாரியும், இர்வி**னும் மனத் துணிவுடன் 28,130 அடி வரை ஏறினர். கீழிருப்போர் பூதக்கண்ணாடிமூலம் பார்த்தபோது அவ்விருவரும் இரண்டு சிற்றெறும்புகள் செல்வதுபோல் காணப்பட்டனர். திடீரென்று, ஒரு கரிய திரை அவர்களை மறைத்துக்கொண்டது, அவ்விருவரும் எங்கே சென்றனர் என்பதைப் பின்னர் அறியவே முடியவில்லை. துணைவர்கள் இருவரைப் பலிகொடுத்து, தம் கண்ணொளியையும் இழந்த நார்ட்டன் உள்ளம் உடைந்து திரும்பினார். பின்னர் மருத்துவ உதவியால் இழந்த பார்வையை அவர் மீண்டும் பெற்றார்.

ஒன்பதாண்டு ஓய்வு : மூன்றாம் குழுவினர் கீழே இறங்கி வந்து சில நாள் ஓய்வு பெற்று, மீண்டும் மலையேற விரும்பி, திபேத் அரசரிடம் அனுமதி வேண்டினர். அந் நாட்டின் வழியாகத்தான் இமயமலையின்மீது ஏறவேண்டியிருந்தது. அவ்வரசர், மலையரசன் சீற்றத்தால் மலையேறிகளில் சிலர் மடிந்தனரென்று கருதி, மீண்டும் இசைவுதர மறுத்துவிட்டார். நார்ட்டன் குழுவினர் மனம் வருந்தித் தாய்நாட்டுக்குத் திரும்பினர். அதன்பின் ஒன்பது ஆண்டுகள் வரை யாரும் இமயத்தின்மீது ஏறத் துணியவில்லை.

(3) நான்காம் படையெடுப்புக் குழுவினர் எவரெஸ்டு சிகரத்தைக் கீழிருந்து காணுதல்

முன்னுரை-நான்காம் படையெடுப்புக் குழு-பிரயாண ஏற்பாடுகள்-புறப்பாடு, ஐந்து பாசறைகள்-எவரெஸ்டு காட்சி-பனிக் கோடரி-முடிவுரை.

நான்காம் படையெடுப்புக் குழு : 1932-ஆம் ஆண்டில் நன்கு பயிற்சி பெற்ற பல வீரர்களடங்கிய ஒரு பிரிட்டிஷ் குழு **ஹ்யூ ரட்லெஜ்** என்பவர் தலைமையில் இமயப்படையெடுப்பிற்கு வந்தது. **நார்ட்டன், ப்ராங்க், ஸ்மைத், ஹாரிஸ், வேஜர், எரிக் ஷிப்டன்** போன்ற சிறந்த வீரர்கள் இக்குழுவின் உறுப்பினராயிருந்தனர்.

பிரயாண ஏற்பாடுகள் : மலைமீதேறுவோர் அதிக பளுவை எடுத்துச் செல்லலாகாது என்பதை முன்னை அனுபவங்களால் அறிந்தனராதலின் வேண்டியவற்றைக் கனக்குறைவாகவே எடுத்துக்செல்லத் திட்டமிட்டனர். பிராணவாயுவைச் சேமித்து வைக்க இலேசான கருவிகள், குளிரும் பனியும் பனிக்காற்றும் தாக்காதபடி காக்கும் கவசம், காற்றடைத்த மெத்தைகள் போர்வைகள், அடுப்புக்கள், உணவு வகைகள் முதலியவற்றையும் தயார் செய்துகொண்டனர்.

புறப்பாடு, ஐந்து பாசறைகள் : நம் இந்திய நாட்டிலுள்ள டார்ஜிலிங்கை விட்டு 1933-ஆம் ஆண்டு, மார்ச்சு மாதத்தில் புறப்பட்டு, கணவாய்களின் மூலம் திபேத்தை அடைந்து, இமயமலை அடிவாரத்தில் ஒரு பாசறை ஏற்படுத்தி, அதில் தங்கிக் களைப்பாறிக் கருவிகளைச் சரி செய்துகொண்டு மேல் ஏறினர். இவ்வாறு ஐந்து பாசறைகளை அமைத்துச் சாமான்களைச் சேர்த்து வைத்துக்கொண்டும், இளைப்பாறியும் முன்னேறி 25,700 அடி கடந்தபின் பெரும் பனிமழை பெய்தது. பனி மலைகளும் சரிந்துவந்தன. இப் பெரிய ஆபத்திற்கு அஞ்சி, அங்கு ஓரிரவு கழித்தனர்.

எவரெஸ்டு காட்சி: காலநிலை தகுதியின்றியிருந்தும், மறுநாள் அவர்கள் முன்னேறிச் சென்றனர். பனி, கண்ணை மறைத்தது. கண்களி

அணிந்திருந்த கண்ணாடிகளின் மேலும் பனி மூடி, அவர்களது பார்வையை மறைத்தது. பனிக் கவசம் பயன்படவில்லை. மேலே செல்ல இயலவில்லை. எனவே, அவர்கள் தம் பாசறைக்கே மீண்டனர். மறுநாளும் ஊக்கம் குன்றுமல், பனிக்கட்டிகளின்மேல் கால் ஊன்றிவைக்க இயலாமையால், **பனிக் கோடரி**யால் வெட்டி வழியுண்டாக்கிக் கொண்டே மேலும் 1000 அடி சென்றனர். இறுதியில் தாம் காண விரும்பிய **எவரெஸ்டு** சிகரத்தை, அதன் அடிவாரத்தில் நின்றவாறே கண்ணாரக்கண்டு பெருமகிழ்ச்சியுற்றனர். தங்கட்குக் கிடைத்த அப்பெரும்பேற்றை எண்ணி, நெடுநேரம் அவ்வியற்கைக் காட்சியைக் கண்டு, மெய்மறந்து பரவசமாய் நின்றனர்.

பின்னர் அம் மகிழ்ச்சியினுல் ஊக்கம் கொண்டு முன்னேற முயன்றனர். பனிப் புயல் அவர்களை மேலேற விடவில்லை. இரத்தம் உறைந்துவிடும் போலிருந்தது. உதடுகள் வெடித்தன. இருதயமும் வேலை செய்ய முடியாதென்று தோன்றியது. ஆதலின் அவர்கள் தம் பாசறைக்குத் திரும்பி வந்தனர். அங்கும் பனியின் கொடுமையும், குளிர் நடுக்கமும் இருந்தன. விடிந்த பிறகும் அவை குறைந்தபாடில்லை. வெப்பங் காக்கும் குப்பியில் இருந்த தண்ணீர், காபி முதலியவைகளும் உறைந்துபோயின. தீயால் பனியை உருக்கி நீர் பருக நேர்ந்தது. மேலும் 400 அடி ஏறிச் சென்று, 6-ஆம் பாசறையை அமைத்து, அங்கே இரவில் தங்கினர். விடியற்காலத்தில் **வஜர், ஹாரிஸ்** ஆகிய இருவரும் எழுந்து மேலேறத் தொடங்கினர். குளிரும், பனியும் முன்னேறவொட்டாமல் தடை செய்தன. வழி இன்னல் நிறைந்ததாக இருந்தது. சரிவான பாறையில் நடந்து செல்லவேண்டியிருந்தது. கால் வழுக்கினும் பல்லாயிரம் அடிக்குக்கீழ் விழ வேண்டியதுதான்! இவ்வாபத்து நிறைந்த வழியில் அவ்விருவரும் முயற்சி குன்றுமல் சென்று, 28100 அடி ஏறிவிட்டனர்! அன்று பொழுது மறைந்துவிட்டது. அங்குப் பாசறை அமைக்க முடியாததால் மீண்டும் ஆறும் பாசறைக்கே திரும்பினர்.

பனிக் கோடரி : 28,100 அடி உயரத்தில் ஒரு **'பனிக் கோடரி'** அவர்கட்குக் கிடைத்தது. ஒன்பது ஆண்டுகட்கு முன் அவ்வுயரத்தில் ஏறி மறைந்த **மல்லாரி, இர்வின்** ஆகிய இருவரும் எடுத்துச் சென்ற கோடரியுள் ஒன்றே இது என அவர்கள் முடிவு செய்தனர். அவர்களுடைய உடல்களும், வேறு கருவிகளும் பனிமழை, காற்று முதலியவற்றுல் தொலைவில் அடித்துக்கொண்டு போயிருக்கக்கூடும்.

மறுநாள் காலை **ஸ்மைத், ஷிப்டன்** ஆகிய இருவரும் மலைமேல் ஏறத் திட்டமிட்டிருந்தனர். **ஷிப்டனுக்கு** வயிற்றுவலி உண்டானதால் **ஸ்மைத்** மட்டும் தனித்து மேலேறினுர். வழியில் பனிச் சேற்றில் அவரது கால் புதைந்துவிட்டது. தம் காலை எடுக்க அவர் பெருமுயற்சி செய்தார். பல மணி நேரங்களில் சில அடிகள்கூட மேலே செல்ல முடியவில்லை; கீழே படுத்து ஊர்ந்துசென்றுர். பெருங்காற்று அவரை அடித்துச் சென்று விடுவதுபோல் வீசியது. எனவே, அவர் திரும்பிவிட்டார். இவ்வாறு பிரிட்டிஷ் குழுவினரின் இந்த நான்காவது முயற்சியும் தோல்வியுற்றது.

(4) ஆராய்ச்சிப் படையெடுப்புக்கள்

முன்னுரை — "எவரெஸ்டு—1933" — ஐந்தாம் படையெடுப்பு, ...க் ஷிப்டன்—ஆறும் படையெடுப்பு. ரட்லெஜ் மறு முயற்சி—ஏழாம்

முயற்சி, டில்மன்—மாரிஸ் வில்ஸன் புது முயற்சி—தென் பக்க வழி—மாற்று வழி—முடிவுரை.

"எவரெஸ்டு-1933": நான்காம் குழுவின் தலைவரான ரட்லெஜ், "எவரெஸ்டு-1933" என்னும் ஒரு புத்தகத்தை எழுதினர். அதில் யாரும் கண்டறியாத பல உண்மைகள் கூறப்பட்டன. அதில் எவரெஸ்டின் மேல் ஏறக்கூடிய கால நிலையைப் பற்றிக் கூறியிருக்கும் பகுதி மிக முக்கியமானதாகும். "ஜூனிலிருந்து 3 மாதம் தென் கிழக்குப் பருவக்காற்றும், அக்டோபரிலிருந்து 3 மாதம் வட மேற்குப் பருவக் காற்றும் இமய மலையில் வீசும். காற்று உயரத்தில் வரும் போது அதிலுள்ள நீராவி குளிர்ந்து பனியாக உறைந்து, காற்றுடன் பனிக்கட்டி மழை பொழியும். அதனுல் மலைச் சிகரங்களில் பனிக்கட்டி மூடிக் கொள்ளும். அங்கு எவ்வுயிரும் வாழ இயலாது. பனி மழை மேன்மேலும் பெய்து கொண்டே யிருப்பதால் பனிப் பாறைகள் சரிந்து கொண்டே யிருக்கும். பருவக்காற்று வீசும் காலங்களில் மலைமேல் ஏறினல் உயிரிழக்க நேரும். பருவக் காற்று தொடங்கு முன்னர், அல்லது வீசிய பின்னர் மலை ஏற வேண்டும். மே 7 முதல் ஜூன் 15 வரை அல்லது செப்டம்பர் ஆரம்ப முதல் அக்டோபர் ஆரம்பம் வரை மலை ஏறுவதற்கு ஏற்ற காலம்" என்று ரட்லெஜ் தம் நூலில் கூறியுள்ளார். இச்செய்திகளும் சரியாக இருத்தல் இல்லை. சற்று முன் பின்னகை வருதலும், நல்ல பருவ நிலை தோன்றுமலே போதலும் உண்டு. 1953-ல் ஏற்பட்டது போன்ற நல்ல பருவ நிலை அதற்கு முன் இருபது ஆண்டுகளில் தோன்றியதே இல்லை. ரட்லெஜ் கூறியதே பெரும்பாலும் ஏற்படும் நிலைதான். இவர் கூறியதைப் பின்பற்றி ஐந்தாம் பிரிட்டிஷ் குழுவினர் 1935-ல் படையெடுத்தனர்.

ஐந்தாம் படையெடுப்பு, எரிக் ஷிப்டன்: முதலில், இவர் விமானத்தில் சென்று எவரெஸ்டை ஆராய்ந்தார். உச்சியிலுள்ள பனியின் நிலை, செல்லும் வழி, இடையூறுகள், சரிவுகள் முதலியவற்றை அறியப் பல தடவைகள் எவரெஸ்டைச் சுற்றிச் சுற்றிப் பறந்து படமெடுத்தார். பிறகு இவர் தலைமையில் சென்ற ஐந்தாம் பிரிட்டிஷ் குழுவினர் 23,000 அடிவரை ஏறி, மலை ஏறுபவர்க்கு உண்டாகும் துன்பங்களைச் சோதித்தறிந்தனர். அப்போது எவரெஸ்டு சிகரத்தின் அடிப் பக்கத்தில் ஒரு மனித உடல், கூடாரத்தின் கிழிந்த கந்தைகள், ஒரு நாட் குறிப்புப் புத்தகம் முதலியவற்றைக் கண்டனர். இவை ஓர் ஆங்கிலேயனுடைய பொருள்கள் என்பது தவிர, வேறென்றும் தெரிந்து கொள்ள முடியவில்லை.

ஆரும் படையெடுப்பு, ரட்லெஜ் மறு முயற்சி: ஷிப்டன் ஆராய்ச்சியின் முடிவை யுணர்ந்து 1936-ல் ரட்லெஜ் தலைமையில் ஒரு குழுவினர் புறப்பட்டனர். ஸ்மைத், ஷிப்டன், ஹாரிஸ், ஆலிவர் முதலியவர்கள் இக் குழுவிலிருந்தனர். ஏப்ரல் முதலில் அடிவாரத்திலிருந்து புறப்பட்டு, ஆங்காங்குத் தங்கித் தங்கி, பருவ காலம் ஆரம்பிப்பதற்கு முன்னரே 23000 அடி உயரம் ஏறிச் சென்று விட்டனர். எவரெஸ்டை அடைய இன்னமும் ஒரு பகுதிதான் இடையிலிருந்தது. திடீரென்று உரிய காலத்துக்கு முன்பே பருவக்காற்று தொடங்கி விட்டதாலும், எவரெஸ்டின் வட பகுதி பனியால் வழுக்கியதாலும் ஆரும் படையெடுப்புக் குழுவினர் வெற்றி பெருமல், திரும்ப வேண்டியதாயிற்று.

ஏழாம் முயற்சி, டில்மன் : 1938-ல் ஒரு பிரிட்டிஷ் குழுவினர், டில்மன் என்பவர் தலைமையில் ஏழாவது முறை முயற்சி செய்து, 27,300 அடி உயரம் ஏறினர். பருவக் காற்று வீசுவதற்கு முன் இருக்கும் அமைதியின்றிக் காற்று அடித்துக் கொண்டே இருந்தமையால் திரும்பி விட்டனர். இரண்டாம் உலகப் பெரும் போர் 1939-ல் தொடங்கியதால் யாரும் மலையேற முயலவில்லை. 1951-ல் தான் மலையேறும் முயற்சி மீண்டும் தொடங்கியது.

மாரிஸ் வில்ஸன் புது முயற்சி : இந் நிலையில் கடவுளின் அருள் கொண்டு தான் எவரெஸ்டின் உச்சியை அடையலாம் என்று எண்ணினர் ஒருவர். அவர் **மாரிஸ் வில்ஸன்** என்பவர் ஆவார். துணைவர் இன்றி, விஞ்ஞானக் கருவிகள் இன்றி, கடவுளை நினைந்தவாறே அவர் மலையேற முயன்றார். அந்தோ! அம் முயற்சியில் அவர் தம் உயிரையே இழக்க நேர்ந்தது. எனினும், அவரது கடவுள் பக்தியையும், புது முயற்சியையும் உலகம் பாராட்டியது.

தென் பக்க வழி : இதுவரையில் யாவரும் எவரெஸ்டின் உச்சியிடத்தை அடைய திபேத்தின் வழியாகவே முயன்றனர். அவ்விடத்தை அடையத் தென் புறத்திலும், மேற்குப் புறத்திலும் வேறு இரண்டு சரிவுகள் இருந்தன. அவ் வழிகளில் ஏறுதல் இயலாது என்றே யாவரும் எண்ணியிருந்தனர். ஆனால் வடபுறத்து வழியாக ஏறுவதைக் காட்டிலும் தென்புறத்து வழியாக ஏறுதல் எளிது என்று கண்டார் ஷிப்டன். எனவே அவர் ஒரு குழுவுடன் 1951-ல் அவ்வழியாகவே ஏறத் தொடங்கினர். அப்பயணத்தில் அவர் ஒரு பெரும் பள்ளத்தாக்கைக் கண்டார். அப்பள்ளத்தாக்கில், லோட்சே என்னும் சிகரத்திலிருந்து இறங்கும் பனியாறு பாய்ந்து கொண்டிருந்தது. அவ்வாற்றின் வழியே மேல் நோக்கிச் சென்றால் எவரெஸ்டின் உச்சியை அடைந்து விடலாம் என்று ஷிப்டன் முடிவு செய்து உலகுக்கு அறிவித்தார். இம்முயற்சி **எட்டாம் முயற்சி** ஆகும்.

திபேத் நாட்டின் தலைவரும், நேபாள நாட்டின் அரசரும் தம் நாடுகளின் வழியாக எவரெஸ்டை அடைய முயல்வதற்கு இசைவு தர மறுத்து வந்தனர். இரண்டாம் உலகப் பெரும் போர் முடிந்தபிறகு, நேபாள நாட்டின் வழியே யாவரும் செல்வது எளிதாயிற்று. எனவே பல நாட்டினர் எவரெஸ்டின் உச்சியை அடைய முயலலாயினர். எனினும், தென் புறச் சரிவும், மேற்குப் புறப் பள்ளத்தாக்கும் படையெடுப்பாளர்கட்கு அளித்த தொல்லைகட்கு எல்லையில்லை.

மாற்று வழி : பின்பு நடைபெற்ற படையெடுப்புக்கள் யாவும் எரிக் ஷிப்டன் கண்ட புது வழியிலேயே நடைபெற்றன. படையெடுப்பாளர்கள் முதலில் நேபாளத்தின் வழியே நடந்தனர் ; மேற்கு நோக்கிச் சென்றனர் ; இமய மலையின் மேற்குப் பள்ளத்தாக்கில் உள்ள லோட்சே பனியாற்றின் வழியே தென் சரிவில் ஏறினர். இவ்வாறு ஏறலாம் என்று வழி கண்டுபிடித்த ஷிப்டனுக்கு வெற்றி கிடைக்கவில்லை எனினும், அவருக்கு உலகம் பெரிதும் கடமைப் பட்டுள்ளது.

இவ்வாறு ரட்லெஜ் எழுதிய நூலிற் கண்ட செய்திகள், ஷிப்டனின் ஐந்தாம் படையெடுப்பு, ரட்லெஜ் செய்த மறு முயற்சி, டில்மனின் ஏழாம் முயற்சி, ஷிப்டன் கண்டு பிடித்த தென் பக்க வழி முதலியவை, இறுதியில் வெற்றி பெற்ற குழுவினர்க்குப் பேருதவியாக இருந்தன.

(5) 9, 10-ஆம் முயற்சிகள்

முன்னுரை—இரு சுவிஸ் குழுக்கள்—தென்சிங்கு, லாம்பெர்ட் முயற்சி—தோல்வி—தோல்விக்குக் காரணம்—10-ஆம் முயற்சி—முடிவுரை.

இரு சுவிஸ் குழுக்கள் : 1952-ல் முதல் சுவிஸ் குழுவினர் **ரெடுவார்டு விஸ்டுனண்ட்** தலைமையில் 9-ஆம் படையெடுப்பை நிகழ்த்த வந்தனர். இக்குழுவில் தேர்ந்த மலையேறிகளான **தென் சிங்கு, லாம் பெர்ட்** என்னும் இருவரும் இருந்தனர்.

தென்சிங்கு நேபாள நாட்டில் பிறந்தவர். **டார்ஜிலிங்கில்** குடியேறினவர். 11 இமயப் படையெடுப்புக்களுள் 7 தடவைகளில் இவர் கலந்து கொண்டார். இவர் இல்லாமல் இமய வெற்றி இயலாதென்று அனைவருக்கும் தோன்றியது. 'தென் சிங்கு' என்னும் பட்டம் நேபாள அரசரால் அளிக்கப்பட்டது. '**மலைப்புலி**' என்பது இதன் பொருள். பிற நாட்டார் இவரைப் '**பனிப் புலி**' எனப் பாராட்டினர். இமய மலையில் சாதனங்கள் ஏதுமின்றி எளிதில் இவர் ஏறுவதைக் கண்டு அயல் நாட்டினர் வியந்து, இவரைத் துணைவராகவும், ஆலோசகராகவும் ஏற்றுக் கொண்டனர்.

லாம்பெர்ட் சுவிட்ஸர்லாந்தில் **ஆல்ப்ஸ்** மலையில் பல தடவைகள் ஏறிப் பயிற்சி பெற்றவர். ஆல்ப்ஸிலும் இமய மலையிலிருப்பது போன்ற பனியாறு, பனி மூடிய சிகரங்கள், பனிக் காற்று, பனிக் குன்றுகள் முதலியவை உண்டு. அங்குப் பழகியதால் இமய மலை ஏற்றத்தில் அவருக்கு முக்கியமான பங்கு கிடைத்தது.

தென் சிங்கு, லாம்பெர்ட் முயற்சி : 9-ஆம் படையெடுப்புக் குழுவினர் நேபாள நாட்டின் மேற்கேயுள்ள பள்ளத்தாக்கு வழியாய் ஏறிச் சென்று, 21,150 அடி உயரத்தில் ஓர் **உறைவிடம்** ஏற்படுத்திக் கொண்டனர். இது அவர்களது **நான்காம் படை வீடு** ஆகும். இங்குதான் குழுவினர்க்கு வேண்டிய உணவு, உடை, துணைக் கருவிகள் யாவும் சேகரித்து வைக்கப்பட்டன. அவர்கள் **லோட்சே** பனியாற்றைப் பின் பற்றிச் சென்று, **நப்ட்சே** என்னும் கொடுமுடியின் மேற்கில் 22,630 அடி உயரத்தில் **ஐந்தாம்** உறையுளை அமைத்தனர். அங்கே தங்கி எவரெஸ்டின் அடிவாரமாகிய **எபரான் டி ஜெனிவாய்** எனப்படும் சரிவைக் கடந்து, **லோட்சே** சிகரத்தின் பக்கம் சென்று, தெற்குச் சரிவில் 25,840 அடி உயரத்தில் **ஆறும்** உறையுளை ஏற்படுத்தினர். அங்கிருந்து எவரெஸ்டின் தென் சரிவில் ஏறி 27,550 அடி உயரத்தில் **ஏழாம்** உறையுளை அமைத்தனர். எவரெஸ்டின் தென் முனைப் பகுதியை அடைந்த பிறகே அதன் உச்சியை அடைய முடியும். தென் முனை 28,740 அடி உயரம் உடையது.

தோல்வி: தென்சிங்கும் லாம்பெர்ட்டும் மே 28-ல், 28,210 அடிக்குமேலே செல்ல முடியவில்லை. மேலும் 792 அடி உயரம் சென்றால் உச்சியை அடையலாம். அப் பகுதியில் வழி தெரியவில்லை. வழி செங்குத்தாகவும் இருந்தது. பிராணவாயுக் கருவியும் வேலை செய்யவில்லை. திரும்புவதைத் தவிர வேறு வழியில்லை. பாசறைக்கு வந்தபின் நாள் முழுதும் **தென்சிங்கு** நினைவிழந்திருந்தார்; வலிந்து உணவு செலுத்தவேண்டியிருந்தது.

தோல்விக்குக் காரணம் : இவர்கள் நேபாளத் தலைநகரான காட்மண்டு விற்கு வந்து சேர்ந்தவுடன், மலையேறுதற்கு ஏற்றபடி உடலைத் தயார் செய்து கொள்ளவில்லை. நல்ல பயிற்சியும் இல்லை. உணவு, பிராணவாயு முதலியவை சரியாக எடுத்துச் செல்லவில்லை. காலதாமதமான பின்னரே மலையேறத் தொடங்கினர். இக்காரணங்களாலேயே இம்முறை தோல்வி ஏற்பட்டது.

10-ஆம் முயற்சி : கேப்ரியல் சலாஸ்லி தலைமையில் இரண்டாம் சுவிஸ் குழுவினர் 1952, செப்டம்பரில் எவரெஸ்டின்மேல் ஏறத் தொடங்கினர். ஆங்காங்குப் பாசறை அமைத்துக்கொண்டே 26,575 அடி உயரம் ஏறியபோது, அக்டோபர் பிறந்ததனல் பருவக்காற்று வீச ஆரம்பித்துவிட்டது. கோடைப் பருவக்காற்றைவிடக் குளிர்காலத்துக் காற்று கொடுமையாய் இருந்ததால் குழுவினர் கீழே இறங்கிவர வேண்டியதாயிற்று. கால தாமதம் செய்து முயன் றதனல் இத்தோல்வி உண்டாயிற்று. இத்தோல்வியிலும் நன்மையே உண்டா னது. அடுத்துச் சென்ற பிரிட்டிஷ் குழுவினர் இவர்கள் சென்ற வழியில் தான் சென்று வெற்றி பெற்றனர். அனுபவத்தால் இவர்களிடம் உண்டான தவறுகளைத் திருத்திக்கொண்டதால், பின் சென்றவர்கட்கு வெற்றிகிடைத்தது.

(6) பதினேராவது குழுவினரின் தகுதிகள்

முன்னுரை-பிரிட்டிஷ் குழுவினர்-தலைவர் கர்னல் ஜான் ஹண்ட்-ஹில்லரி-தலைவர் நம்பிக்கை-குழுவினரின் கடமைகள்-முடிவுரை.

பிரிட்டிஷ் குழுவின் தலைவர் கர்னல் ஜான் ஹண்ட்: இவர் இங்கிலாந் திலும் இந்தியாவிலும் அரசரின் துப்பாக்கிப் படையில் ஓர் உயர்ந்த உத்தி யோகத்தில் இருந்தவர். இமய வெற்றிக்குப் பின் மேலும் உயர்பதவி பெற்ருர். இவரது சிறந்த தலைமையினல்தான் வெற்றி கிட்டியதென்று பலர் கருதினர். உறுப்பினர் தேர்ந்தெடுப்பதிலும் இவர் தம் திறமையைக் காட் டினுர். இவர் குழுவில், இரண்டு நியூஜிலாந்துக்காரர் தவிர, மற்றைப் பதினெருவரும் பிரிட்டிஷ் தரைப்படை வீரரே. இவருள் பெரும்பாலோர் இமயமலை ஏறி நல்ல பயிற்சி பெற்றவர்கள். 1922-ல் இமயமலை ஏறிய **டாக்டர் பின்சு** என்பவர் **கர்னல் ஹண்டின்** திறமையைப் பாராட்டிக் கூறியுள்ளார்,

ஹில்லரி; நியூஜிலாந்தைச் சேர்ந்தவரான **எட்மண்டு ஹில்லரி** ஆக் லண்டு என்னுமிடத்தில் 1919-ல் பிறந்தவர். எவரெஸ்ட் மீது ஏறுவதையே வாழ்க்கையின் நோக்கமாகக் கொண்டிருந்தவர். இளைஞராய் இருந்தபோதே தாயாரிடம் இதைக் கூறினுர். இவர் தொழில் தேனீ வளர்த்தல்; மலையேறும் பயிற்சியும் பெற்றுவந்தார். 1950 முதல் 1953வரை இமயத்தில் ஏற நிகழ்ந்த நான்கு படையெடுப்புக்களில் இவர் கலந்துகொண்டார். உலகப் பெரும் போரில் விமானப் படையில் சேர்ந்து, இமயம் போல் பனி மூடிய **கைகூரா** மலைமீது அடிக்கடி ஏறிப் பழகி வந்தார். 1951-ல் புதுப் பாதை காணச் சென்ற **ஷிப்டன்** குழுவில் இவர் இருந்தார். 1952-லும் **லோவி** என்னும் தோழருடன் இமயக் குழுவில் சென்று நன்கு ஆராய்ச்சி செய்தார். அப்போது இவர் **எவரெஸ்டின்** அடிவாரமுள்ள முதற் பாசறையிலிருந்து மேலைப் பள்ளத்தாக்கில் உள்ள இரண்டாம் பாசறைக்குக் குறுக்கு வழி கண்டுபிடித் தார். கடைசியில் வெற்றி பெற்ற குழுவினர்க்கு உணவு முதலியன எடுத்துச் செல்ல இக்குறுக்குவழி பயன்பட்டது. இதற்காக **கர்னல் ஜான் ஹண்ட்** இவரைப் பாராட்டினுர்.

தலைவர் நம்பிக்கை : குழுவினரில் முதல் முறை எவரெஸ்டைக்கண்டு பிடிக்கச் செல்வதற்குப் **போர்டில்லான், இவான்ஸ்** ஆகிய இருவரும் தலைவரால் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். இவர்கள் வெற்றி பெருவிடின், இரண்டாம் முறை **தென்சிங்கும், ஹில்லரியும்** செல்ல ஏற்பாடு செய்திருந்தார். இரண்டாம் முறை வெற்றி கிட்டுவது திண்ணம் என்று தலைவர் கருதியிருந்தார். அக் கருத்துப்படியே நடந்தது. **தென்சிங்கு, ஹில்லரி** இவ்விருவர் மேலும் தலைவர் வைத்திருந்த நம்பிக்கை வீண் போகவில்லை. இவ்வெற்றியால் இவ்விருவரும் உலகம் போற்றும் புகழ் பெற்றனர். 1953 பிப்ரவரி, 28-ல் இக்குழுவினர் விமானமூலம் பம்பாய் வந்தனர். தலைவர் **கர்னல் ஹண்டும், போர்டில்லானும்** மார்ச்சு 2-ல் டில்லிக்கு வந்தனர். **இவான்ஸ், கிரிகரி**யுடன் முன்னணிப்படை **காட்மண்டு**வை அடைந்தது. அங்கிருந்து மார்ச்சு 10-ஆந் தேதி புறப்பட ஏற்பாடு செய்திருந்தனர்.

குழுவினர் கடமைகள் : இப்படையெடுப்பின் அமைப்புச் செயலாளர் **வைலீ** என்பவர். புகைப்படம் எடுப்பவர் **ஸ்டோபார்ட்டு**. உடற்கூறு நூல் வல்ல**பக்** என்பவர் மலையேறும்போது உடலில் உள்ள குறைகளை நீக்குபவர். பண்டங்களைப் புகைவண்டி மூலமாகவும் தலைச்சுமையாகவும் எடுத்துச்செல்லும் பொறுப்பு வேறு சிலருடையது. தலைச்சுமையை மலைமேல் எடுத்துச் செல்பவர் **ஷெர்ப்பாக்கள்**. கூடாரங்களில் பொருள்களைச் சேமித்துப் பாதுகாத்திருப்பது வேறு சிலர் பொறுப்பு. இவ்வாறு உறுப்பினர்கட்குத் தனித்தனிப் பொறுப்புக்கள் தந்தபின், வழியின் இயல்பு முதலியவற்றை நன்கறிந்து, அதற்கேற்றபடி பிரயாணம் செய்யத் தலைவர் தக்க ஏற்பாடுகள் செய்தார். இம்முறை வெற்றி நிச்சயம் கிட்டும் என்று நிருபர்களிடமும் கூறினர்.

(7) 11-ஆம் முயற்சி - தென்சிகர வெற்றி

முன்னுரை-பிரயாணத் திட்டமும், புறப்பாடும்-தியாங்பூச்சி-வழியுண்டாக்குதல்-தெற்குச் சரிவு-ஏழாம் பாசறை-பழைய கூடாரம்-தென்முனை சேர்தல்-முடிவுரை.

பிரயாணத் திட்டமும், புறப்பாடும் : பதினோராம் படையெடுப்புக் குழுவினர், இதற்குமுன் எடுத்துச் சென்றவைகளைவிடப் பலவகையிலும் சிறந்த சாதனங்களை உடன்கொண்டு சென்றனர். முட்கள் பதித்த புதுவகையான பூட்சுகள், காற்றுப் புகாதபடி அழுத்தம் ஏற்றப்பட்ட ஆடைகள், இருவகைப் பிராணவாயுச் சாதனங்கள், காற்றடைத்த மெத்தைகள், மண்ணெண்ணெய் அடுப்புக்கள், சமையற் கருவிகள் முதலியவற்றை எடுத்துச் சென்றனர். இமயக் கழகத்தினர் அனுப்பிய **தென்சிங்கும்,** மற்ற ஷெர்ப்பாக்களும் உரியகாலத்தில் வந்து சேர்ந்தனர்.

சோலோகும்புவிலிருந்தும் சில ஷெர்ப்பாக்களும், அவர்களுடன் சுமை தூக்கிச் செல்லச் சில பெண்களும் வந்தனர். சுமார் 700 மணங்கு எடையுள்ள பொருள்கள் சேகரிக்கப்பட்டிருந்தன. **பாகான்** என்னுமிடத்தில் அவற்றைச் சிறு பொதிகளாகக் கட்டிக் கூலிப் படைகளை இரண்டாகப் பிரித்து மேலே எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டது. முதல் படையுடன் **தென்சிங்கு** சென்றார். அனைவரும் காட்மண்டுவிலிருந்து 170 மைல் கடந்து **நாம்சி பஜார்** என்னுமிடத்தை அடைய 15 நாட்கள் கழிந்தன. பெண் கூலிகளை அங்கு நிறுத்திவிட்டு, மற்றவர்கள் **தியாங்பூச்சி** என்னுமிடத்தை அடைந்தனர்.

தியாங்பூச்சி : மலை அடிவாரத்தில் உள்ள **தியாங்பூச்சி**யில் முதல் பாசறை அமைத்துத் தங்கிப் பிராணவாயுக் கருவிகளைக் கையாளுவதிலும், மலையேறுவதிலும் பயிற்சி செய்தனர். அங்கிருந்து புறப்பட்டு 21,150 அடி உயரத்தில் உள்ள ஓர் இடத்தை அடைய 1½ மாதம் சென்றது. அங்கு நான்காம் பாசறை அமைத்தனர். மேலைப் பள்ளத்தாக்கில் அமைந்த தக்க பாதுகாவல் உள்ள முதற் பாசறை அது. அங்கிருந்துகொண்டுதான் எவரெஸ்டை அடைய எல்லா முயற்சிகளும் செய்யப்பட்டன. அதற்குமேல் செல்லின், பருவக் காற்றினால் திடீரென்று தீமை உண்டாகும்.

வழியுண்டாக்குதல் : அங்கிருந்து **லோட்சே** பனியாற்றைத் தொடர்ந்து மேலே செல்லும் சரிவான பகுதிகளில் கடினமான பாறைகளில் **பனிக்கோடரி**யால் வெட்டிப் படியுண்டாக்க வேண்டியிருந்தது. சில சரிவிடங்களில் கயிறு கட்டித் தொங்கவிட வேண்டியதாயிற்று. இப்படிக் கடுந்தொல்லைக்கு உட்பட்டு 22,630 அடி உயரம் சென்று **ஐந்தாம் உறையுள்** அமைத்தனர். அங்கிருந்து முக்கால் மைல் சென்று, எவரெஸ்டின் தென் சரிவில் 25,840 அடி உயரத்தில் **ஆறும் உறையுள்** அமைத்தனர். இங்கு வழியமைப்பது மிகவும் கடினம். பல தொல்லைகளை வென்றபின் தென்சரிவின்மேல் 27,550 அடி உயரத்தில் **ஏழாம் பாசறை** அமைக்கப்பட்டது.

தெற்குச் சரிவு: இதற்குள், அவர்கள் **எவரெஸ்டை** அடையக் குறிப்பிட்ட காலம் சற்றுக் கடந்துவிட்டது. எனினும் பனியும், காற்றும் குறைந்திருந்தன. இனியும் தாமதியாமல் 7-ஆம் பாசறையில் அவசியமான எல்லாப் பொருள்களையும் கொண்டுபோய்ச் சேர்த்தனர் **நாய்ஸ°ம்**, ஷெர்ப்பா **அன்னுல்லூவும்** தென்தோள்பட்டைமேல் நெடுந்தூரம் சென்று வழிகண்டு, படிவெட்டியும், கயிறுகள் கட்டியும் மீண்டனர். அடுத்துப் பிராணவாயுக் கருவி, சமையல் கருவிகள் முதலியவற்றைத் தென் சரிவின் உச்சிக்கு எடுத்துச் செல்லும் பொறுப்பைத் **தென்சிங்கும், ஹில்லரியும்** ஏற்றுக்கொண்டனர். மே 22-ஆம் தேதி காலை அவ்விருவரும் சில கூலிகளின் உதவியோடு சுமைகளைக்கொண்டு சென்று, மாலையில் மற்றொரு உறையுளை அமைத்து, அங்குப் பொருள்களை வைத்துவிட்டு, இரவு **ஐந்தாம் பாசறைக்கு** மீண்டனர்.

ஏழாம் பாசறை : 1953, மே 23-ஆம் தேதி காலை புறப்பட்டு மேலேறி ஏழாம் பாசறையை அடைந்தனர். அன்றிரவு குளிரில் கழித்து, மறு நாட் காலை தென் சிகரத்தை நோக்கி நடந்தனர். இடையில் உள்ள சரிவைக் கடப்பதற்குக் கயிறு கட்டப்பட்டிருந்தது. அதைப் பற்றிக் கொண்டு மேலேறினர். இதைப் போன்ற பல சரிவுகளைக் கடந்து களைப்புற்றுத் தடுமாறிச் சென்று மாலையில் **எபரான் டி ஜெனிவாய்** என்னும் சரிவின் உச்சியை அடைந்தனர். அங்கிருந்து எவரெஸ்டின் அழகுமிக்க கோபுர வடிவான முழுத் தோற்றத்தையும் கண்டு மகிழ்ந்தனர். அதனடியில் பனி மூடிய உயர்ந்த மற்றொரு சிகரம் காணப்பட்டது. அதுவே **தென் சிகரம்** எனப்படும். அதைத் தளமாகக் கொண்டு தான் எவரெஸ்டை அடைய முன்னேற்பாடு செய்திருந்தனர். எங்கும் தாவரம் ஏதும் இல்லாத எவரெஸ்டும், தென் சிகரமும் காணத் தெவிட்டாத இன்பக் காட்சி அளித்தன. அவ்விடம் பனிப் பாலையாகத் தோன்றியது.

பழைய கூடாரம் : பின் அவர்கள் கீழ் நோக்கி இறங்கித் தென் முனைக்குச் செல்ல வேண்டி யிருந்தது. அங்கு ஓரிடத்தில் பழைய கூடாரத்தின் கந்தல்கள் காற்றில் பறந்து கொண்டிருந்தன. ஓராண்டிற்கு முன் சென்ற சுவிஸ் குழு

வினர் அவ்விடத்தில் அமைத்திருந்த கூடாரத்தின் சிதறல்களே அவை. அங்கு வீசிய பெருங்காற்றால் துன்புற்று மேலேறித் தென்முனையின் உச்சி சேர்ந்த போது மாலைக் காலம் வந்து விட்டது. அங்கு எட்டாம் பாசறை அமைத்துக் கொண்டு இரவு தங்கி இளைப்பாறினர் மே 27-ஆம் தேதி விடியற் காலையில் பிராண வாயுக் கருவிகளைப் பழுது பார்த்துக் கொண்டு, **இவான்சும், போர்டில் லானும்** முதல் தாக்குதலுக்குப் புறப்பட்டனர்.

தென்முனை சேர்தல்: தென் முனையை நோக்கி இருவரும் பனியில் படி வெட்டியும், பூட்சு முட்களால் பனியை அழுத்தி மிதித்தும் மாறி மாறி முன்னும் பின்னும் மேலேறிச் சென்றனர். பெருந் தொல்லைக்குட்பட்டு தென் முனையை அடைந்து விட்டனர். அங்குச் சிறிது தங்கி எவரெஸ்டை அடைய முயன்றனர். **உயிர் வளிக்** கருவிகள் வேலை செய்யவில்லை. கால நிலையும் சரியாயில்லை. எதிரில் இருந்த ஒரு சரிவு அவர்கட்கு அச்சத்தை ஊட்டியது. அதைக் கடந்து மேற் செல்லின் துன்பமுண்டாகுமென்று கருதிய அவர்கள் எவரெஸ்டை அடையும் முயற்சியைக் கைவிட்டு, ஏழாம் பாசறைக்கு மீண்டு, இச் செய்தியைக் குழுவினர்க்கு அறிவித்தனர். இத் தோல்வி, வெற்றிக்கு ஊக்க மளித்தது. மே 28-ஆம் நாள் காலையில் **தென் சிங்கும், ஹில்லரியும்** சிலருடன் தென் கிழக்குச் சரிவின் மேல்சென்று ஓராண்டிற்கு முன் **லாம்பெர்ட்** பாசறை அமைத்த இடத்தினருகில் கூடாரம் அடித்து, அதில் தாம் கொணர்ந்த பொருள்களை வைத்தனர் பிறகு **தென்சிங்கும், ஹில்லரியும்** தவிர மற்றவர்கள் ஏழாம் உறையுளுக்குத் திரும்பிவிட்டனர். இவ்விருவரும் அங்கு இரவைக் கழித்து, மறுநாட் காலை இறுதிப் படையெடுப்புக்கு ஆயத்தமாயிருந்தனர்.

(8) எவரெஸ்டு வெற்றி

முன்னுரை—இறுதி முயற்சி—கன்னிச் சரிவில் படி வெட்டி ஏறுதல்—எவரெஸ்டின் உச்சியை அடைதல்—தென்சிங்கின் கடவுள் வழிபாடு—கண்கொள்ளாக் காட்சி—மீண்டு வருதல்— முடிவுரை.

இறுதி முயற்சி : தென்சிங்கும், ஹில்லரியும் மே மாதம் 29-ஆம் தேதி விடியற்காலை $4\frac{1}{2}$ மணிக்கு வெளியில் பார்த்தபோது வானம் பனியின்றி நிர்மலமாயிருந்தது. தொலைவிலுள்ள **தியாங் பூச்சி** மட்டும் தெளிவாய்த் தெரிந்தது. அன்றிரவு வெப்பம் $27^{o}c$ அளவில் இருந்தது. இருவரும் உடம்பை அடுப்பில் காய்ச்சி சூடு ஏற்றிக் கொண்டு, காலை 6-30 மணிக்கு உயிர்வளிக் குப்பிகளை முதுகில் பொருத்திக் கொண்டு, ஊக்கத்துடன் புறப்பட்டனர். வழியில் ஒரு பனிச்சரிவு கடத்தற்கரிதாக-ஆனால் குறுகலாக-இருந்தது. அதன் மேல் ஏறும் போது கால் வழுக்கியது. இதைப் போன்ற பல சரிவுகளை மன உறுதியுடன் கடந்து சென்று, இருவரும் காலை 9 மணிக்குத் தென் சிகரத்தை அடைந்தனர். மேலும் சிறிது தூரம் நடந்தனர்.

கன்னிச் சரிவில் படி வெட்டி ஏறுதல் : வழியில் உள்ள **கன்னிச் சரிவு** அவர்கள் பார்வையை மறைத்தது. அதைக் கண்டுதான் முதல் நாள் சென்ற **இவான்ஸ், போர்டில்லான்** ஆகிய இருவரும் திகைத்துத் திரும்பி விட்டனர். அச்சரிவினின்று பனி மூடிய பனிப் பாறைகள் நீண்டிருந்தன. அவற்றின் மேல் படி வெட்டிக் கொண்டு, காலை ஊன்றி நடப்பது எளிதாயிருந்தது. சரிவில்

விழாதிருக்கக் கயிறுகளைக் கட்டிக் கொண்டனர். இவ்வாறு பல சரிவுகளைக் கடந்து செல்லும் போது பிராணவாயுக் குப்பி வேலை செய்யவில்லை. அதைப் பழுது பார்த்துக் கொண்டே முன்னேறினர். மற்றொரு செங்குத்தான பாறை இடையில் தடையாயிருந்தது. இதன் மேல் ஏறுவதைப் பொறுத்ததே வெற்றி அல்லது தோல்வி. அச்சரிவிலிருந்த ஒரு பிளவில் காலடியை யூன்றி மேலேறி விட்டனர்.

எவரெஸ்டின் உச்சியை யடைதல் : மேலும் பற்பல சரிவுகளும், உயர்ந்த பாறைகளும், பனிமூடிய படலங்களும் முன்னின்று எவரெஸ்டை மறைத்தன. அவற்றையெல்லாம் படி வெட்டிக் கடந்த போது, ஒரு சரிவு எவரெஸ்டு சிகரம் வரை நீண்டிருந்ததைக் கண்டு பெரிதும் மகிழ்ச்சியுற்றனர். அதன் மீது படிகளை வெட்டி ஏறிச் சென்று, 11-30 மணிக்கு **எவரெஸ்டின் உச்சியை** அடைந்து விட்டனர்.

அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையும் உண்டோ? உலகம் முழுவதும் அவர்கள் காலடியின் கீழிருந்தது. இருவரும் கைகுலுக்கிப் பாராட்டினர். ஹில்லரி புகைப்படக் கருவியால் தென்சிங்கு வைத்திருந்த இந்தியா, நேபாளம், இங்கிலாந்து, ஐக்கிய நாடுகள் ஆகிய நாடுகளின் நான்கு கொடிகளுடன் அவரைப் படமெடுத்தார். பின் **எவரெஸ்டின்** பல காட்சிகளையும், பல சரிவுகளையும் படமெடுத்தார். இப் படங்கள் எவரெஸ்டு உச்சியை அவர்கள் அடைந்ததற்குச் சான்றுகளாகும்.

தென்சிங்கின் கடவுள் வழிபாடு : உலகத்தின் உச்சியில் நின்ற **தென் சிங்கு** தம் வழிபடு கடவுளாகிய **புத்தரை** அங்கு வழிபட்டார். கடவுளின் அருளாலேயே இவ்வெற்றி கிட்டியதென அவர் எண்ணினர். பன்முறை இதை அவர் கூறியுள்ளார். ரொட்டி முதலியவற்றை உண்டபின் எவரெஸ்டின் பல்வகைக் காட்சிகளைக் கண்டு வியந்தனர். உச்சியிலேயே இருப்பின் காற்று தங்களைக் கீழே தள்ளிவிடுமென்றும், பிராணவாயு குறைந்துவிடுமென்றும் அஞ்சி, எவரெஸ்டின் உச்சியிலிருந்து சில கற்களை எடுத்துக்கொண்டு கீழே இறங்க ஆரம்பித்தனர். தென்சிங்கு இக்கற்களில் ஒன்றை இந்திய ஜனாதிபதிக்கு அளித்தார். ஹில்லரி குழுத்தலைவருக்கு அளித்தார்.

கண்கொள்ளாக் காட்சி : எவரெஸ்டின் உச்சியில் வடக்கு, மேற்கு, தென்மேற்கு ஆகிய மூன்று திசைகளிலிருந்து மூன்று சரிவுகள் வந்து சேர்கின்றன. எவரெஸ்டு உச்சி மஞ்சள்நிறக் கற்களால் ஆனது; கூர் உருவை வடிவானது. மேலிருந்து பார்க்கும்போது மிகவும் அழகாகத் தோன்றுகிறது. அன்று வானம் தெளிவாயிருந்தது. சூரியன் பொன்னிறக் கதிர்களை அள்ளி வீசினன்; காற்றின் கடுமை யில்லை. மேகத்தின் மறைப்பும் இல்லை. நேபாள திபேத்து நிலப்பகுதிகளை அங்கிருந்து காண முடிந்தது. கஞ்சன்ஜிங்காவும், திபேத்திலுள்ள போம்பக் மடமும் கம்பீரமாய்க் கண்கொள்ளாக் காட்சி அளித்தன.

மீண்டு வருதல் : எவரெஸ்டின் மேல் 15 நிமிடம் தங்கி மகிழ்ந்த இருவரும், காலை 11-45 மணிக்குக் கீழே இறங்கினர். உயிர்வளி குறைந்துவிட்டதால் எட்டாம் பாசறைக்குப் போகாமல் நேரே ஏழாம் பாசறைக்கு வரும் வழியில் நாய்ஸ், லோவி இருவரையும் சந்தித்தனர். நால்வரும் மாலை ஏழாம் பாசறை அடைந்து, அங்கே இரவினைக் கழித்து, மே 30-ஆம் தேதி **லோட்சே** பக்கமாக இறங்கிவரும்போது, மேற்குப் பள்ளத்தாக்கில் குழுத் தலைவர் **கர்னல்**

ஹண்டைக் கண்டனர். கண்டவுடன் கை உயர்த்தி ஆரவாரம் செய்து வெற்றிச் செய்தியை விளம்பினர். களிப்புக் கடலில் மூழ்கிய தலைவர், கம்பியில்லாத் தந்திமூலம் காட்மாண்டுவிலுள்ள பிரிட்டிஷ் தூதருக்கு அறிவித்தார். பிரிட்டிஷ் அரசியார் முடிசூட்டுவிழா நிகழ்ந்த ஜூன் 2-ஆம் தேதிவரை, இச்செய்தி இரகசியமாகவே வைக்கப்பட்டது. அன்றுதான் இவ்வெற்றிச் செய்தி உலகத்துக்கு அறிவிக்கப்பட்டது. இந்திய விமானப்படை விமானிகள் எவரெஸ்டுமீது பறந்து சென்று, அதன் பல தோற்றங்களையும், குழுவினர் சென்ற வழிகளையும், பாசறைகளையும் படம் பிடித்தனர். மேலைப் பள்ளத்தாக்கிலிருந்து குழுவினர் அடிவாரத்திற்குவரும் காட்சிகளும் படம் பிடிக்கப்பட்டன. பின்னர் இவை திரைப்படமாயின. ஜூன் மூன்றும் வாரத்தில் வெற்றிக் குழுவினர் **காட்மாண்டுவை** அடைந்தனர்.

(9) உலகம் போற்றல்

முன்னுரை–பிரிட்டன் - அமெரிக்கா - பழைய வீரர்கள் - இந்தியப் பதக்கம், பாராட்டிதழ், விருந்து - ஜார்ஜ் பதக்கம் - பத்திரிகைப் பாராட்டு - முடிவுரை.

பிரிட்டன் : எலிசபெத் அரசியாரின் முடிசூட்டு விழாப் பரிசுச் செய்தியாக எவரெஸ்டு வெற்றிச் செய்தி உலகத்திற்கு அறிவிக்கப்பட்டது. அரசியாரும் சர்ச்சிலும் பாராட்டுச் செய்திகளை அனுப்பினர். முடிசூட்டு விழாவிற்கு வந்திருந்தோர் அனைவரும் இது கேட்டுப் பேருவகை அடைந்தனர். அரசியின் கணவனுராகிய **எடின்பரோ கோமகனார்,** "இந்த வியத்தகும் வெற்றி கேட்டு யாவரும் மகிழ்ந்தோம். பாராட்டத்தக்க செயல்புரிந்தீர்" எனப் பாராட்டு அனுப்பினார். நியூஜிலாந்து நாட்டு வீரரான **ஹில்லரியின்** வெற்றியைக் கேட்ட அந்நாட்டுத் துணை முதலமைச்சர் **கெய்த் ஹோலியோக்,** அச்செய்தியைப் பார்லிமெண்டில் அறிவித்தார்; 'நியூஜிலாந்து வீரர் **ஹில்லரி** எவரெஸ்டை வென்றார். அதனால் நம் நாட்டை உலகம் போற்றச் செய்தார் ; அரசியாருக்கு ராஜ விஸ்வாசமுள்ள நியூஜிலாந்தின், முடிசூட்டு விழாப் பரிசு இது," என்றார்.

அமெரிக்கா : உலகச் செய்தித் தாள்கள் யாவும் இச் செய்திக்கு முதல் இடம் கொடுத்து வெளியிட்டன. அமெரிக்கப் பத்திரிகை "இது ஒரு புதிய சகாப்தத்திற்கு அஸ்திவாரம் ஆகும். பிரிட்டிஷார் மேலும் பல வீரச்செயல் புரிவர்" எனத் தெரிவித்தது. முன்னர் இமயம் ஏறிய **வில்லியம் டக்ளஸ்** "இது அரசியாருக்குச் சிறந்த பரிசாகும். இமயத்தினை அறிந்தவரே இதை நன்கு உணர முடியும்" என்றார்.

பழைய வீரர்கள் : மும்முறை எவரெஸ்டில் படையெடுத்த குழுவின் தலைவர் **எரிக் ஷிப்டன்,** 1952-ல் **தென்சிங்குடன்** மலையேறிய **ரேமண்ட் லாம்பெர்ட்,** 1922-ல் பிரிட்டிஷ் குழுவில் சென்ற **டாக்டர் பின்ச்** ஆகியோரும் இவ்வெற்றி வீரர்களைப் பாராட்டிப் பேசினர்.

இந்தியப் பதக்கம், பாராட்டிதழ், விருந்து : இந்தியக் குடியரசின் தலைவரான டாக்டர் ராஜேந்திரப் பிரசாத் அவர்கள், வெற்றி வீரர் இருவர், குழுத்தலைவர் ஆகிய மூவருக்கும் சிறப்புப் பதக்கங்கள் அணிவித்தார். அப்பதக்கங்கள் ஆறு தோலா எடை தங்கத்தாலானவை. அவற்றில் ஒருபுறம் 'எவ

" உலகம் வன் சொலால் என்றும் மகிழாது."—சிவப்பிரகாசர்.

ரெஸ்டும், மறுபுறம் அசோக ஸ்தூபியும் பதிக்கப்பெற்று, **'வீரமே புகழ்'** என்ற சொற்களும் பொறிக்கப் பெற்றிருந்தன.

இந்திய அரசாங்கத்தால் மூவருக்கும் நன்மதிப்புப் பாராட்டிதழ்கள் அளிக்கப்பட்டன. அவற்றில், மூவரின் நன்முயற்சிகளையும், இமய வெற்றிக்கு இடைவிடா ஊக்கத்துடனும் உறுதியுடனும் அவர்கள் உழைத்ததையும், வெற்றி வீரர் இருவரும் பன்முறை இமயமலை ஏற்றத்தில் கலந்துகொண்டதையும், அதனால் வெற்றி கிடைத்ததையும் அரசாங்கம் பாராட்டி இருந்தது.

இந்திய முதலமைச்சர் ஜவஹர்லால் நேரு அவர்கள் இக்குழுவினர்க்கு ஒரு வரவேற்பு விருந்தளித்தார். **டில்லி** நகரசபை ஒரு வரவேற்பும் பரிசுகளும் அளித்தது. வெள்ளியால் செய்த **எவரெஸ்டும்** அசோக ஸ்தூபியும் வழங்கப்பட்டன. **தென்சிங்கின்** பிறப்பிடமான நேபாளத்தின் தலைநகராகிய **காட்மாண்டு**விலும் அவ்வரசாங்கத்தினர் இவ்வீரர்கட்கு வரவேற்பளித்தனர். புத்தர் உருவச் சிலை தென்சிங்குக்குப் பரிசளிக்கப்பட்டது. **தென்சிங்கு** வங்காளக் கவர்னரின் விருந்தினராகக் கல்கத்தாவில் 3 நாட்கள் தங்கியிருந்தார். அப்போது பொது மக்கள் அவர்க்குச் சிறந்த வரவேற்பளித்தனர்.

ஜார்ஜ் பதக்கம்: எவரெஸ்டு வெற்றிக் குழுவினர் ஜூன் முதல் தேதி விமானம் ஏறி, 3-ஆம் தேதி இங்கிலாந்தை அடைந்தனர். லண்டன் விமான நிலையத்தில் பெருந்தொகையினரான பொதுமக்கள் கூடி அவர்களை வரவேற்றனர். லண்டன் பத்திரிகைகள் **தென்சிங்கின்** படத்தை முதல் பக்கத்தில் வெளியிட்டு வரவேற்றன. எலிஜபெத் அரசியார் **கர்னல்ஹண்ட், ஹில்லரி** ஆகிய இருவர்க்கும் **ஸர்** என்னும் பட்டம் அளித்தார். பிரிட்டிஷ் பிரஜை அல்லாத ஒருவருக்கு வழங்கும் சிறப்பாகிய **ஜார்ஜ் பதக்கம் தென்சிங்கிற்கு** அளிக்கப் பட்டது. 1940-ல் ஆறும் ஜார்ஜ் அரசரால் "மிக ஆபத்தான சமயத்தில் வீரத்துடன் செய்யப்படும் அருஞ்செயல்களுக்காக" அளிக்கப்பட்டு வந்தது இப் பரிசு. இவ்வெள்ளிப் பதக்கத்தின் ஒரு புறம் இங்கிலாந்தின் காவல் தெய்வமான **செயின்ட் ஜார்ஜ்** நூறு தலைப் பாம்பைக் கொல்வது போலவும், மறு பக்கம் ஆறும் ஜார்ஜின் உருவமும் பதிக்கப் பெற்றிருக்கும். இதைப் பெற்றவர்கள் தம் பெயருக்குப் பின் (G.M.) என்னும் எழுத்துக்களைச் சேர்த்துக் கொள்ளலாம்.

பத்திரிகைப் பாராட்டு: இங்கிலாந்தின் சிறந்த பத்திரிகைகள் யாவும் வெற்றி வீரரைப் புகழ்ந்து வரவேற்றன. **டெய்லி மிர்ரர்** என்னும் செய்தித்தாள் தென்சிங்கைப் பற்றி "தம் நாட்டிற்கும் ஆசியாவுக்கும் பெருமை தரும் **தென்சிங்கிற்கு** நல்வரவு கூறுகின்றோம். அவரைப் பற்றிப் பிரிட்டன் பெருமை அடைகிறது" என்றெழுதிப் பாராட்டியது. **நியூஸ் கிரானிகிள்** என்னும் பத்திரிகை "தென்சிங்கின் சரித்திரம் பெருமையுடையது. அதில் அவர் காலத்தின் அரிய நிகழ்ச்சிகள், சமூக மாறுதல்கள், எல்லாவற்றிற்கும் மேலாக மனிதன் உயர்வின் உறுதி ஆகியவை காணப்படுகின்றன" என்று போற்றி எழுதியது.

(10) இமயத்தில் கண்ட புதுமைகளும், விஞ்ஞானத்தின் துணையும்

முன்னுரை--வெற்றியின் விளைவு—நங்கா பர்வதம், பஞ்ச்சூலி—காட்வின் ஆஸ்டென்—காஞ்சன சிருங்கம்—புதிய பிராணிகள்—பனி

மனிதன்—பறப்பவை, ஆவிக் குரல்-பனிக்கட்டியைப் பயன்படுத்துதல்-மாயக் கதிர்கள் - விஞ்ஞானத்தின் துணை : பிராண வாயு—தமிழரும், இமயமும் - முடிவுரை.

வெற்றியின் விளைவு : எவரெஸ்டு வெற்றிக்கு 25,000 பவுன்கள் செல வழிந்தன. மனித ஆற்றலுக்கு அறைகூவலாயிருந்த இவ்வெற்றி இது போன்ற பல வெற்றிகளுக்கு ஊக்கம் தரும். மலையேறுபவர் தம் விடா முயற்சியையும், வீரத்தையும் மேன்மேலும் நிலை நாட்ட முடியும். இதைத் தொடர்ந்து உலகத்தில் பல உயர்ந்த சிகரங்களில் பலர் ஏறத் தொடங்கி விட்டனர். அவற்றில் வெற்றியும் பெற்றனர்.

நங்கா பர்வதம், பஞ்ச்சூலி : பாகிஸ்தான் பகுதியிலுள்ள **நங்கா பர்வதம்** என்னும் சிகரம் 1953 ஜூலையில் வெல்லப்பட்டது. இது சிந்து நதி இமயத்தில் செல்லும் இடத்திற்கு மேல் 23,000 அடி உயரத்தில் காட்சி யளிக்கின்றது. இதன் மொத்த உயரம் 26,629 அடி. மற்றச் சிகரங்கள் இதைவிட 10,000 அடி தாழ்வாக உள்ளன. ஆஸ்திரியரும், ஜெர்மானியரும் அடங்கிய ஒரு குழுவினர் இதை வென்றனர். அதற்கு முன் எட்டு மலையேற்றக் குழுவினர் இம்முயற்சியில் தோற்றனர். இறுதி வெற்றி யடைந்த குழுவின் தலைவர் **ஆஷன் பிரன்னர்** என்பவர். 22,650 அடி உயரமுள்ள **பஞ்ச்சூலி** சிகரத்தை ஒரு இந்தியக் குழுவினர் வென்றனர். இவ்வெற்றிகள் எவரெஸ்டு வெற்றியின் பயனே.

காட்வின் ஆஸ்டென் : எவரெஸ்டிற்கு அடுத்த பெரிய சிகரம் **காட்வின் ஆஸ்டென்** ஆகும். அமெரிக்கர் 1953 ஆகஸ்டில் இரண்டு முறை அதன் மீது ஏற முயன்றனர். 26,000 அடி உயரம் ஏறிப் பருவக் காற்றின் கடுமையால் தோல்வியுற்றுத் திரும்பும்போது குழுவினர் 100 அடி ஆழமுள்ள குழியில் விழுந்ததில் ஒருவர் பலியானார். ஜூலையில் சுவிஸ் குழு **தவளகிரிமீதும்**, ஜப்பானியக் குழு **மனஸ்லு** என்னும் சிகரத்தின் மீதும் படையெடுத்துத் தோல்வியுற்றன. 22,530 அடி உயர முள்ள **நந்தகோட்** என்னும் சிகரத்தின் மீது இந்திய மாணவர் சிலர் படையெடுத்துத் தோற்றனர்.

காஞ்சன சிருங்கம் : இதன் உயரம் 26,156 அடி. இதை 1955-ல் வெல்வதற்கு எவரெஸ்டை வென்ற பிரிட்டிஷ் குழுவினர் திட்டமிட்டிருக்கின்றனர். இலங்கையிலுள்ள **ஆடம்ஸ்** சிகரத்தையும், அதில் புத்தர் தங்கிய 'ஞானக்குகையை'யும் காண அந்நாட்டு மக்கள் முனைந்துள்ளனர். இந்திய இமயக் குழுவினர் மீண்டும் எவரெஸ்டு மீதும், **பூமோரி** மீதும் ஏறத் திட்டம் போட்டுள்ளனர். இவை யாவும் எவரெஸ்டு வெற்றியின் விளைவுகளாகும்.

புதிய பிராணிகள் : இம்மலையிலுள்ள சில புதுப் பிராணிகள் நாம் முன் கண்டறியாதவை. உலகத்தில் எங்குமில்லாத சில தாவரங்கள், மிருகங்கள், பிராணிகள் முதலியவை இங்கு உள்ளன என்று மலையேற்றக் குழுவினருடன் சென்ற விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். அவற்றின் புகைப்படங்களையும் அவர்கள் கொண்டு வந்துள்ளனர்.

பனி மனிதன் : இமயத்தின்மீது 1952-ல் படையெடுத்த சுவிஸ் குழுவினர் அங்கு வாழும் **பனி மனிதன்** என்னும் ஓர் அபூர்வப் பிராணியின் காலடிச் சுவடுகளைப் படமெடுத்து வந்தனர். அவ்வடிச் சுவடுகளைப் பின்பற்றிச் சென்றால் அவை எங்காவது மறைந்து விடுகின்றன. அவை வாழும் இடம் தெரிவ

தில்லை, மனிதனைவிடப் பன் மடங்கு அவை பெரியவையாய் இருக்கலாம். அவை மனிதர் போன்றவையா, விலங்கு போன்றவையா என்று தெரிய வில்லை. திபேத்தியர் அவற்றைக் கண்டிருப்பதாகக் கூறுகின்றனர். **தென்சிங்கு** தியாங்பூச்சி மடத்தருகில் இப்பனிமனிதனைக் கண்டதாகவும், அது நடுத்தர உயரமும், நான்கு மனிதர் பலமும் கொண்டதென்றும் **ஷிப்டனிடம்** கூறினர். **கர்னல் ஹண்டும்** அதை ஒரு முறை பார்த்ததாகவும், அதன் குரலைக் கேட்ட தாகவும் கூறினர். அது இனப்பெருக்கமற்ற ஒரு வகைக் **குரங்கினம்** என்பர் சிலர். இவ்வினம் இமயத்தின் அடிவாரத்திலிருந்து மற்றப் பிராணிகளால் வெருட்டப்பட்டதால், மேற்பாகத்தில் தனித்து வாழ்கின்றது என்று கருது கின்றனர்.

பறப்பவை: இமய மலையில் அதிக உயரமான இடங்களில் ஆறடி நீளம் உள்ளவையும், மூன்றடி அகலம் சிறகுகள் உள்ளவையுமான பெரும் பறவை கள் இருக்கின்றனவாம். 28,000 அடி உயரத்தில் காக்கை போன்ற ஒரு பறவை பறந்து சென்றதைப் பார்த்ததாக ஒருவர் கூறுகிறார்.

ஆவிக் குரல்: இமய மலையில் நங்கா பர்வதத்தை வென்ற வீரர்கள் அங்கு ஒருவகை ஆவிக் குரல் கேட்டதாகவும், அது யாருடையதென்று தெரியவில்லை யென்றும், அக் குரல் வரும் திசையை நோக்கி இறங்கி வந்தால் தங்களுக்கு அதிகத் துன்பம் உண்டாகவில்லை என்றும் கூறுகின்றனர். இக் குரல் பற்றிய உண்மை இனி ஆராய்ச்சினல் கண்டு பிடிக்கப்பட வேண்டும்.

பனிக்கட்டியைப் பயன்படுத்துதல்: ஆப்பிள்டன் என்னும் விஞ்ஞானி இமயப் பனிக்கட்டிகளை, விஞ்ஞான ஆராய்ச்சியின் பயனுக, பாலைவனங்களையும் செழிக்கச் செய்யும் பணிக்குப் பயன்படுத்தக் கூடும் என்கிறார். பனிக்கட்டிகளை அணுவாற்றலால் உருக்கிப் பாலைவனத்தில் பாய்ச்சினல் பயிர்த் தொழில் செழிக்கவும், அந்நீர் வீழ்ச்சியால் மின்சாரத்தைப் பெருக்கவும் பயன் படலாம் அன்றோ?

மாயக் கதிர்கள்: இமய மலையின் உயர்ந்த கொடுமுடிகளின் உச்சிகளில் **விண்ணியல் கதிர்கள்** எனப்படும் ஒருவகை மாயக் கதிர்கள் அதிகமாகப் பரவி யிருக்கின்றன. அக்கதிர்களின் இயல்பு முழுவதையும் இன்னும் யாரும் அறிய வில்லை. அதை ஆராய்ந்து அறிந்தால் பல நல்ல காரியங்களுக்குப் பயன் படுத்தக் கூடும். இவ்வாறு இமய மலையில் காணப்படும் புதுமைகள் இயற்கையின் இரகசியத்தை அறியத் திறவுகோல் போன்று உதவும் என்பதில் ஐயமில்லை.

விஞ்ஞானத்தின் துணை: பிராண வாயு: இமயத்தில் 20,000 அடிக்குமேல், நமக்கு வேண்டிய பிராண வாயு இல்லை. 26,000 அடி உயரத்தில் பிராண வாயு வின் அழுத்தம், கடல் மட்டத்தில் உள்ளதை விடப் பாதியளவே உள்ளது. மனிதன் உயிர் வாழ வேண்டிய பிராண வாயுவை உடன் எடுத்துச் சென்றதால் தான் எவரெஸ்டை வெல்ல முடிந்தது. மலை ஏறுபவர் பிராண வாயுவைக் கருவிகளில் அடைத்துவைத்துக் கொண்டு செல்வர். அதை வேண்டும்போது குழாய்களின் மூலம் மூக்கில் செலுத்துவர். முதலில் **பின்சு** என்பவரே இக் கருவியைக் கண்டுபிடித்தார். இது விஞ்ஞான ஆராய்ச்சியின் பெரிய வெற்றி யாகும். இக்கருவி "திறந்த சுற்றுக் கருவி" எனவும் "மூடிய சுற்றுக் கருவி" எனவும் இருவகைப்படும். வெளிக் காற்றிலிருந்து வேண்டிய அளவு பிராண வாயுவைச் சேர்த்து வைக்க 'திறந்த சுற்றுக் கருவியும்', அழுத்தக் குறைவுள்ள சேமிப்புக் கருவியிலிருந்து வரும் கலப்பற்ற பிராண வாயுவை உட்கொள்ள 'மூடிய சுற்றுக் கருவி'யும் பயன்படும். நாம்

" நண்பனைப் பலர் எதிரில் திட்டாதே. "—ஸைரஸ்.

விடும் மூச்சுக் காற்றும் இக் கருவிக்கே வந்து சேரும். இக்கருவிக்கு எவரெஸ்டு வெற்றியில் முதல் பங்கு உண்டு. விஞ்ஞானிகள் இக் கருவியைப் பல வகையில் செப்பனிட்டு உதவினர்.

மலை ஏறுவோர்க்கு வேண்டிய கருவிகளாகிய பனியிலும் குளிரிலும் நிற்காத கடியாரம், அணையாத அடுப்பு, குளிரிலும் அழுத்தக் குறைவிலும் துன்புறாத உடைகள் முதலியவை விஞ்ஞானிகளின் உதவியால் கிடைத்ததால் வெற்றி கிட்டியது. இவ்வெற்றி விஞ்ஞானத்திற்கு இனி உதவி செய்யக் கூடும். உயர்ந்த மலை உச்சி மேல் இருக்கும் நிலையை ஆராய்ச்சி செய்யலாம். உயரத்தி லிருந்தே **காஸ்மிக்** கதிர்களை ஆராய முடியும் என விஞ்ஞானிகள் எண்ணுகின் றனர். இமயத்தின் மேல் இவ்வாராய்ச்சி சில காலமாக நடந்து வருகிறது. ஆப்பிரிக்காவிலும் **கிளி மஞ்சாரோ** மலையில் இந்த ஆராய்ச்சி நடக்கின்றது.

தமிழரும், இமயமும்: இந்திய நாட்டின் தென் முனையிலுள்ள தமிழர்கள் இமய மலையை நன்கு உணர்ந்திருந்தனர். இமய மலையைப் பற்றிக் கூறாத தமிழ் நூல் இல்லை. தமிழரசர் மூவரும் இமயம் சென்று தம் அடையாளங்களாகிய புலி, வில், மீன் என்னும் இலச்சினைகளைப் பொறித்து வந்ததாகத் தமிழ் நூல் கள் கூறும். 'இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்' என ஒரு சேர அரசன் இருந்தான். இமயமலை வரை தன் வெற்றியை நாட்டினவன் என்பது இதன் பொருள். சேரன் செங்குட்டுவனும் இமயம் வரை சென்று வெற்றி பெற்று, கண்ணகியின் சிலைக்குக் கல் கொண்டு வந்ததாகவும், கரிகாலன், புலியை இமய மலையிற் பொறித்ததாகவும், மூவேந்தரும் இமயத்தில் தம் இலச்சினைகளைப் பொறித்ததாகவும் சிலப்பதிகாரம் கூறுகின்றது. இமய மலையில் சில பகுதி கட்குச் சோமா மலைத் தொடர், 'சோமா கணவாய்' என்ற தமிழ்ப் பெயர்களும் வழங்குகின்றன. இமய மலை மேலுள்ள புண்ணியத் தலங்கட்குத் தமிழ் நாட்டி லிருந்தும் பலர் ஆண்டு தோறும் சென்று வருகின்றனர். உலகிற் பெரிய இமய மலை இந்தியாவில் உள்ள தென்பதும், இமயத்தை ஒரு இந்தியர் வென்றார் என் பதும் இந்தியாவுக்குப் பெருமை தருவன.

(11) தென்சிங்கின் வாழ்க்கை வரலாறும், நற்பண்புகளும்

முன்னுரை—டூங்சூங்—"விளையும் பயிர் முளையிலேயே தெரியும்" —குண நலன்கள்—நாட்டுப் பற்று—தாயன்பு—தன்னம்பிக்கை—பரிசு முடிவுரை.

டூங்சூங்: இமயமலைச்சாரலில் உள்ள **டார்ஜிலிங்** பக்கத்தில் ஷெர்ப் பாக்கள் எனப்படும் ஒரு வகை மலை ஜாதியினர் வாழ்கின்றனர். **டார்ஜிலிங்கில்** மிக உயர்ந்த இடத்திலுள்ள **ஜலபஹாரி**லிருந்து கீழே வளைந்து செல்லும் பாதை வழியாகச் சென்றால் **டூங்சூங்** என்னும் ஒரு சிறிய ஊரை அடையலாம். **தென்சிங்கு நார்ச்கே** இவ்வூரைச் சேர்ந்தவரேயாவார்.

நேபாளத்தில் எவரெஸ்டின் அடிவாரத்திலுள்ள **சோலோ கும்பு** என்னு மிடத்தில் 1914-ஆம் ஆண்டில் இவர் தோன்றினார். **டூங்சூங்** சௌராஸ்தா என்னும் ஊருக்கருகில் இருந்தாலும், சௌராஸ்தாவில் வாழும் பெருஞ் செல்வர்கள் இவ்வூருக்கு வந்ததேயில்லை. **எவரெஸ்டு** வெற்றியைக் கேள்விப் பட்டதும் **டூங்சூங்கின்** பெயர் உலக முழுவதற்கும் தெரிந்து விட்டது. **தென்சிங்கின்** வெற்றியை அவர் மனைவியிடம் தெரிவிக்க, வங்கக் கவர்னரின்

தூதுவர் அங்கு வந்த போது, அவ்வூர் முழுவதும் ஆச்சரியத்தில் மூழ்கியது. அவர் தென்சிங்கின் சிறு குடிசைக்கு வந்து, **தென்சிங்**கின் மனைவியையும், குழந்தைகளிருவரையும் கவர்னரின் விருந்தினராக அழைத்துச் சென்றார். தென்சிங்கினால் இச் சிற்றூருக்குப் பெரும் பெயர் கிடைத்தது.

"விளையும் பயிர் முளையிலேயே தெரியும்" : தென்சிங்கு சிறுவராய் இருந்த பொழுது முதியவர்கள் கூறும் மலையேற்றக் கதைகளையும், அனுபவங்களையும் விருப்பத்துடன் கேட்டதால் இவருக்கு மலையேறுவதில் பேரார்வம் உண்டாகியது. அடிக்கடி பயிற்சியும் பெற்று வந்தார்; இருபது வயதான போது யாருக்கும் சொல்லாமல் **எரிக் ஷிப்டனின்** மலையேற்றக் குழுவுடன் சேர்ந்து மலை யேறினார். இவரது மலையேற்றத்தின் திறமையைக் கண்டு நேபாள அரசாங்கத்தார் **தென்சிங்கு** என்னும் பட்டத்தைக் கொடுத்தனர். "மலை யேறுவதில் தேர்ந்தவர்" (மலைப்புலி) என்பது இதன் பொருள். அயல் நாட்டினர் இமயமலை ஏறவரும் பொழுதெல்லாம் இவரைத் துணையாக அழைத்துச் செல்வதோடு சிறந்த ஆலோசகராகவும் கொள்வர். பதினோராம் பிரிட்டிஷ் குழுவினரும் இவர் துணையால் தான் எவரெஸ்டை வென்றனர்.

1935-ல் எரிக்ஷிப்டனுடன் தென்சிங்கு இமயமலைமேல் சென்றபிறகு, ஒவ்வொரு ஆண்டிலும் அதன் சிகரங்களையும் பிடிக்க முயன்று வந்துள்ளார். சில ஆண்டுகளில் இரண்டு மூன்று முறைகள் மலையேறியுள்ளார். 1952-ஆம் ஆண்டில் பிராண வாயுவின் உதவியின்றியே 28,100 அடி உயரம் **லாம் பெர்ட்டுடன்** ஏறினார். அப்பொழுது 27,500 அடி உயரத்தில் ஒரு கூடாரத்தில் வெப்பம் இன்றிச் சூடான பானம் இன்றிக் கடும் குளிர்காற்றில் ஓரிரவு கழித்தார். இதுவரை ஒருவரும் ஏறாத இமயக் கொடுமுடி பலவற்றில் இவர் ஏறி இருக்கிறார். இவரை விட அதிக சிகரங்களைக் கண்டவர் யாரும் இல்லை. பனிச் சறுக்கு விளையாட்டிலும், பனியில் நீண்ட நாட்கள் வாழ்வதிலும் இவருடைய வன்மையைக் கண்டவர் இவரைப் **பனிப் புலி** என்பர். காஷ்மீரத்திலிருந்த இந்தியப் படையினருக்குப் பனிச்சறுக்கு விளையாட்டைக் கற்பிக்கும் ஆசிரியராக இந்திய அரசாங்கத்தார் இவரை நியமித்தனர். 1948, 50-ஆம் ஆண்டுகளில் இவர் அவ்வேலையில் இருந்தார்.

குண நலன்கள் : தெய்வபக்தி, தாயன்பு, வீரம், விடா முயற்சி, பரந்த உள்ளம், தேசாபிமானம், தன்னம்பிக்கை, நன்றியறிவு, மன உறுதி, துணிவு முதலிய குணங்கள் தென்சிங்கிடம் நிறைந்து இருந்தன. தெய்வத்திரு வருளால் தான் எவரெஸ்டு வெற்றி கிட்டியதென்று பன்முறை இவர் கூறி யிருக்கின்றார். எவரெஸ்டிற்குப் புறப்படு முன், தம் குடும்பத்தில் கடவுள் பூசை செய்தார்; எவரெஸ்டு உச்சியிலும் கடவுளை வணங்கினார். இச்செய்தியிலிருந்து இவரது **தெய்வ பக்தியை** உணரலாகும்.

நாட்டுப் பற்று : தெய்வபக்திக்கு அடுத்தபடி நாட்டுப்பற்று இவரிடம்குடி கொண்டிருந்தது. எவரெஸ்டின் உச்சி மேல் இந்தியக்கொடியையும், நேபாளக் கொடியையும் நாட்டியதே இதற்குச் சான்றாகும். தம் தாயகமாகிய நேபாளத்தை அவர் பெருமையாக எண்ணினார். நேபாள வரவேற்பில் தம் எலும்பிலும், சதையிலும், இரத்தத்திலும் நேபாளத்தின் மணம் வீசுகின்றது எனப் பெருமையாகக் கூறினார். தாம் ஒரு இந்தியராக இருப்பதிலும் இவருக்கு மிக்க பெருமையுண்டு.

தாயன்பு : எவரெஸ்டு வெற்றி பெற்றுத் திரும்பி வரும் பொழுது **சோலோ கும்புவில்** தம் தாயைக் கண்டு வணங்கி அவருடைய வாழ்த்தையும், பாராட்டையும் பெற்ருர். மைந்தனது வெற்றியால் மனம் மகிழ்ந்த தாயார், "நீ எவரெஸ்டை வென்று விட்டாய்; இனி இமயமலைக்குச் செல்ல வேண்டாம்" என்று மகனை வேண்டிக் கொண்டார். அவருடைய மனைவியாரும் அவ்வாறே வேண்டினர். **தென்சிங்கு** எழுதப் படிக்கத் தெரியாதவராய் இருந்தாலும் பரந்த உள்ளமும், இனிய இயல்பும் படைத்தவர். தமது வெற்றியை 'இது மனித குலத்தின் வெற்றியே' என்று இவர் கூறியுள்ளார். **ஹில்லரி,** குழுத் தலைவர் முதலியவர்களுடைய கூட்டுறவால் தான் தமக்கு வெற்றி கிடைத்த தென்று பன்முறை அவர்களுக்குக் கடமை உணர்ச்சியுடன் நன்றி கூறியுள்ளார்.

தன்னம்பிக்கை : இவரிடம் இருந்த குணங்களுள் தன்னம்பிக்கை தலை சிறந்ததாகும். நான் அறியாமையால் எத்தகைய ஆசையும், நம்பிக்கையும் கொள்வதில்லை. ஆயினும், எவரெஸ்டை வெல்லக் கூடும் என்ற நம்பிக்கை எனக்கு எப்போதும் இருந்து வந்தது' என்று இவர் கூறியுள்ளார். 11-ஆம் பிரிட்டிஷ் குழுவின் தலைவரிடம் தம்மை எவரெஸ்டைக் காணச் செல்லும் படையில் சேர்த்துக் கொண்டால் தான் வர முடியும் என்று கூறினர். இது வெற்றியில் அவருக்கு இருந்த நம்பிக்கையைத் தெரிவிக்கிறது. இம்முறை வெற்றி பெற முடியும் என்னும் எண்ணம் அவருக்கு உறுதியாக இருந்தது. எவரெஸ்டிற்குப் புறப்படும் போதே 'நல்ல செய்தி கொண்டு வர முடியும்' என்று அவர் கூறிச் சென்ருர்.

பரிசு : எவரெஸ்டு வெற்றி கேட்ட பொது மக்கள் 30,000 ரூபாய்க்கு மேல் பரிசுத் தொகை திரட்டி அனுப்பினர். **அபிஸீனியாவிலுள்ள எதியோப் பியாவில்** வாழும் இந்தியரும் 1,000 ரூபாய் பரிசளித்தனர். சிறு குழந்தைகளும் பண முடிப்பு அளித்தனர். அவரை ஒரு திரைப் படத்தில் நடிக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளனர். அவருக்கு உயிருள்ளளவும் சுகமாக வாழ்வதற்கு வேண்டிய ஊதியம் அளிக்க நேபாள அரசரும் தீர்மானித்துள்ளார். இந்திய அரசாங்கம் **டார்ஜிலிங்குக்கு** அருகில் மலையேற்றக் கல்லூரி ஒன்றை நிறுவி, அதற்குத் தலைமையாசிரியராகத் **தென்சிங்கை** நியமித்திருக்கிறது. தம் முயற்சியால் உலகம் போற்றும் சிறப்புப் பெற்ற **தென்சிங்கு** இந்திய இளைஞர் களுக்கு ஒரு சிறந்த முன் மாதிரியாய் விளங்குகின்ருர்.

கட்டுரைத் தலைப்பும், குறிப்பும்

[*இக்குறியிட்டவை தேர்விற்கு முக்கியமானவை]

---

(1) இமயத்தின் அமைப்பும், கொடுமுடிகளும் :

முன்னுரை—இமயமலையின் பிறப்பு—இமயச்சிறப்பு—இமயத்தின் சிகரங் கள்—அபாயங்கள் (பனிப்பாறை, பனியாறு)—பனி வீழ்ச்சியிடங்கள்—குளிர் காற்று, குளிர்—முடிவுரை.

(2) எவரெஸ்டை அடைய நிகழ்ந்த முதல் மூன்று முயற்சிகள்:

முன்னுரை — எவரெஸ்டு — 1-ஆவது படையெடுப்பு — 2-ஆம் முயற்சி—3-ஆம் படையெடுப்பு—மலாரி, இர்வின் பலி—ஒன்பதாண்டு ஓய்வு—முடிவுரை.

*(3) நான்காம் படையெடுப்புக் குழுவினர் எவரெஸ்டைக் கீழிருந்து காணுதல் :

முன்னுரை—நான்காம் படையெடுப்புக் குழு—பிரயாண ஏற்பாடுகள்—புறப்பாடு, ஐந்து பாசறைகள்—எவரெஸ்டுக் காட்சி—பனிக் கோடரி—முடிவுரை.

*(4) ஆராய்ச்சிப் படையெடுப்புக்கள் :

முன்னுரை—"எவரெஸ்டு 1933"—5-ஆவது படையெடுப்பு, எரிக் ஷிப்டன்—6-ஆவது படையெடுப்பு, ரட்லெஜ் மறு முயற்சி—7-ஆவது முயற்சி, டில்மன்—மாரிஸ் வில்ஸன் புது முயற்சி—தென்பக்க வழி—மாற்று வழி—முடிவுரை.

*(5) 9, 10-ஆம் முயற்சிகள் :

முன்னுரை—இரு சுவிஸ் குழுக்கள்—தென்சிங், லாம்பெர்ட் முயற்சி—தோல்வி—தோல்விக்குக் காரணம்—10-ஆம் முயற்சி—முடிவுரை.

*(6) பதினோராவது குழுவினரின் தகுதிகள் :

முன்னுரை—பிரிட்டிஷ் குழுவினர் தலைவர் கர்னல் ஜான் ஹண்ட்—ஹில்லரி—தலைவர் நம்பிக்கை—குழுவினர் கடமைகள்—முடிவுரை.

*(7) 11-ஆம் முயற்சி—தென்சிகர வெற்றி:

முன்னுரை—பிரயாணத் திட்டமும், புறப்பாடும்—தியாங் பூச்சி—வழியுண்டாக்குதல்—தெற்குச் சரிவு—ஏழாம் பாசறை—பழைய கூடாரம்—தென் முனை சேர்தல்—முடிவுரை.

*(8) எவரெஸ்டு வெற்றி :

முன்னுரை—இறுதி முயற்சி—கன்னிச் சரிவில் படி வெட்டி ஏறுதல்—எவரெஸ்டின் உச்சியை அடைதல்—தென்சிங்கின் கடவுள் வழிபாடு—கண் கொள்ளாக் காட்சி—மீண்டு வருதல்—முடிவுரை.

*(9) உலகம் போற்றல் :

முன்னுரை — பிரிட்டன் — அமெரிக்கா—பழைய வீரர்கள்—இந்தியப் பதக்கம், பாராட்டு இதழ், விருந்து—ஜார்ஜ் பதக்கம்—பத்திரிகைப் பாராட்டு—முடிவுரை.

*(10) இமயத்தில் கண்ட புதுமைகளும், விஞ்ஞானத்தின் துணையும் :

முன்னுரை—வெற்றியின் விளைவு—நங்கா பர்வதம்—காஞ்சன சிருங்கம்—புதிய பிராணிகள் — பனி மனிதன்—பறப்பவை—ஆவிக் குரல்—பனிக்கட்டியைப் பயன்படுத்துதல்—மாயக் கதிர்கள்—விஞ்ஞானத் துணை, பிராண வாயு—தமிழரும், இமயமும்—முடிவுரை.

*(11) தென்சிங்கின் வாழ்க்கை வரலாறும், நற்பண்புகளும் :

முன்னுரை—டுங்சுங்—"விளையும் பயிர் முளையிலே தெரியும்"—குண நலன்கள்—நாட்டுப் பற்று — தாயன்பு — தன்னம்பிக்கை — பரிசு—முடிவுரை.

கட்டுரை எண்ணும், பலவகையாக மாற்றிக் கேட்கக்கூடிய வினாக்களும்

கட்டுரை எண்

1. (1) இமயமலையின் சிறப்புகள்.
   (2) இமயச் சிகரங்கள்.
   (3) இமயத்தில் ஏறுவோர்க்கு நேரும் துன்பங்கள்.
2. (1) இமயத்தில் முதல் மூன்று படையெடுப்புக்கள்.
   (2) முதல் மூன்று படையெடுப்பில் இமயத்தில் ஏறியவர்களின் அனுபவங்கள்.
3. (1) கொடுமுடிக் காட்சி.
   (2) ரட்லெஜ் குழுவின் மலையேற்ற முயற்சி.
   (3) நான்காம் படையெடுப்புக் குழுவின் அனுபவங்கள்.
4. (1) இமயமலையில் ஆராய்ச்சிப் படையெடுப்புக்கள்.
   (2) ரட்லெஜ் அனுபவங்கள்.
   (3) புது வழி காணுதல்,
5. (1) சுவிஸ் படையெடுப்புக்கள்.
   (2) தென்சிங், லாம்பெர்ட் முயற்சி தோற்றதற்குக் காரணங்கள்.
6. (1) பதினோராம் பிரிட்டிஷ் குழு.
   (2) 11-ஆம் பிரிட்டிஷ் குழுவின் தகுதிகள்.
   (3) 11-ஆம் பிரிட்டிஷ் குழு உறுப்பினரின், கடமைகள்,
7. (1) இறுதிப் படையெடுப்பு.
   (2) 11-ஆம் பிரிட்டிஷ் குழுவின் ஆயத்தமும் புறப்பாடும்.
   (3) தென் சிகர வெற்றி.
8. (1) இறுதி வெற்றி - எவரெஸ்டின் காட்சிகள்.
   (2) எவரெஸ்டு வெற்றி.
   (3) தென்சிங்கும், ஹில்லரியும் எவரெஸ்டு உச்சியை அடைதல்.
9. (1) உலகப் பாராட்டும், சிறப்புகளும்.
   (2) வெற்றி வீரர் பெற்ற பெருமை,
10. (1) இமயத்தில் கண்ட புதுமைகள்.
    (2) இமய வெற்றிக்கு விஞ்ஞானத்தின் துணை.
    (3) இமய வெற்றியின் விளைவுகள்.
11. (1) தென்சிங்கின் நற்பண்புகள்.
    (2) தென்சிங்கின் வாழ்க்கை வரலாறு.

நல்லொழுக்கப் பயிற்சி

(இமய வெற்றி)

இயற்கையன்னை இன்னுருவங்கள் கொண்டு எழில் நடம் புரியும் இடங்கள் எண்ணில. அத்தகைய இடங்களுள் ஒன்று இமயமலைப் பகுதி. அம்மலையின் உயர்ந்த சிகரமாகிய எவரெஸ் டின் உச்சியை அடைந்து, இயற்கைத் தாய் கொண்டுள்ள கோலத்தைக் காணுதல் அரிது. அவ்வருஞ் செயலைச் செய்து முடித்தார் தென்சிங்கு. பிறர் செயற்கரிய செயலை அவர் செய் தார்; 'பெரியவர்' என்று பாராட்டப் பெற்றார். "உள்ளுவதெல் லாம் உயர்வுள்ளல்" என்பது வள்ளுவர் வாய்மொழி. அவ்வாறே தென்சிங்கு உயர்ந்ததொரு செயலை எண்ணினார்; வகைபடச் சூழ்ந்தார்; இடைவிடாது பாடுபட்டார்; தோல்விகளைக் கண்டு தளராமல் பின்னும் பின்னும் முயன்றார்; இறுதியில் வெற்றி பெற்றார். இச்செய்தியிலிருந்து தெரிவது யாது?

மாணவர்களே! நல்லதொரு செயல் புரிதலில் நாட்டங் கொள்ளுங்கள். அது செய்தற்கு அரியதுபோல் தோன்றுதல் கூடும். அதனைச் செய்தல் அரியது என்று எண்ணித் தளரா தீர்கள்.

> *"அருமை உடைத்தென்(று) அசாவாமை வேண்டும்*
> *பெருமை முயற்சி தரும்"*

என்பது பொய்யில் புலவரது பொருளுரை. ஆகவே, நீங்கள் ஒரு பெருஞ் செயலில் ஈடுபடும்பொழுது அயர்ப்பும் அயிர்ப்பும் கொள்ள வேண்டாம்; அச்சமும் கூச்சமும் கொள்ள வேண்டாம். உங்களுக்குத் தெரியாமலேயே உங்களிடம் அரியதொரு திறமை அமைந்திருக்கும். எனவே, கள்ளமற்ற உள்ளத்துடன் செய லாற்ற முற்படுங்கள்; உண்மையாக உழையுங்கள். வெற்றி உங்களைத் தேடி வருதல் திண்ணம்.

பன்முறை படித்துப் பயன் பெறுக

'இமய வெற்றி' என்னும் துணைப்பாட நூல்

பக்கம் **1** ; பத்தி **1** :

" மலையரையன் மணிமுடியை மனிதன் . . . . இறங்கினர்."

பக்கம் **9** ; பத்தி முழுவதும் :

" இமயத்தின் கொடு முடிகளில்..... எனப்பட்டது."

பக்கம் **26** ; பத்தி **2** :

" பாசறைக்குத் திரும்பிய........முடிந்தது."

பக்கங்கள் **31 & 32** :

" இதற்கு இடையில்........என்ன என்றுரைப்பது,"

பக்கம் **53** :

எவரெஸ்டுக்குச் சென்ற வழி — படம்.

பக்கம் **63** :

" எவரெஸ்டு உச்சியில் " என்னும் தலைப்பு.

பக்கம் **64** :

" தென்சிங்கின் தெய்வ பக்தி " என்னும் தலைப்பு.

பக்கம் **66** :

" கண்ட காட்சிகள் " என்னும் தலைப்பு.

பக்கங்கள் **72 & 73** :

" இந்தியாவில்......கொள்கிறது."

பக்கம் **80** :

" தன் தாயினிடத்திலும்......தெரிவித்தார்."

பக்கம் **95** :

" இமயமும் தமிழரும் " என்னும் தலைப்பு.

பக்கம் **97** :

" இந்தியாவின் பெருமை" என்னும் தலைப்பு.

2. சங்ககாலப் பாண்டியர்

நூற் சுருக்கம்

செந்தமிழ் வளர்த்த பெருமை பாண்டியர்க்கு உரியது. பண்டைப் பாண்டியர்கள் **தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம்** என்னும் மூன்று சங்கங்களை வெவ்வேறு காலங்களில் நிறுவியிருந்தனர். பாண்டி நாட்டின் பெரும் பகுதியைக் கடல் கொண்டு விட்டது. தலைச்சங்க காலத்தில் தென் மதுரையும், இடைச்சங்க காலத்தில் கவாடபுரமும், கடைச்சங்க காலத்தில் தற்பொழுதைய மதுரையும் தலை நகரங்களாக இருந்தன. சங்கங்களை நிறுவி, புலவர்களை வருவித்து, தமிழ் மொழியை வளர்த்தனர் பண்டைப் பாண்டியர்கள்.

நிலந்தரு திருவிற் பாண்டியன், பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி, பாண்டியன் மதிவாணன், பொற்கைப் பாண்டியன், அறிவுடை நம்பி, பூதப் பாண்டியன், இளம்பெருவழுதி, ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், தலையாலங் கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன், உக்கிரப் பெருவழுதி முதலிய பாண்டியர்கள் சங்க காலத்து மன்னர்கள் ஆவர். அவர்களுள் பலர் பெரும் புலவர்களாகவும் விளங்கினர். பாண்டியர்கள் செங்கோல் செலுத்துவதில் கண்ணுங் கருத்துமாக இருந்து வந்தனர். பலர் பெரு வீரர்களாக விளங்கினர்.

பண்டைப் பாண்டியர் தம் நாட்டை நன்கு ஆண்டனர். அரசியல் அலுவல்களில் அவர்கட்கு அறிவுரை கூற அறிஞர்கள் பலர் இருந்தனர். பண்டைப் பாண்டியர் வாணிகத் துறையை வளப்படுத்தினர்; கைத் தொழில்களை வளர்த்தனர்; கலை வளர்ச்சிக்கும், கல்வி வளர்ச்சிக்கும் பேருதவி செய்தனர்.

பண்டைப் பாண்டியர்களைப் பாடிய புலவர்கள்

காரிகிழார்
நெட்டிமையார்
நெடும்பல்லியத்தனார் } பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் பாடியவர்கள்.

பிசிராந்தையார் : பாண்டியன் அறிவுடை நம்பியைப் பாடியவர்.

மதுரைக் கூல வாணிகன் சாத்தனார் : சித்திர மாடத்துத் துஞ்சிய நன்மாறனைப் பாடியவர்.

மாங்குடி மருதனார்
இடைக்குன்றூர் கிழார்
குடபுல வியனார்
கல்லாடனார் } தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனைப் பாடியவர்கள்.

ஐயூர் மூலங்கிழார் : கானப் பேரெயில் தந்த உக்கிரப் பெரு வழுதியைப் பாடியவர்.

இரும்பிடர்த் தலையார் : பாண்டியன் கருங்கை ஒள்வாள் பெரும் பெயர் வழுதியைப் பாடியவர்.

"மக்கட்கு ருசிகள் பலவிதம்." – இராமகிருஷ்ணர்.

நக்கீரர் : இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனைப் பாடியவர்.

ஐயூர் முடவனார்
மருதன் இளநாகனார் } கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதியைப் பாடியவர்கள்.

நூலில் வரும் சில இடங்கள்

தென் மதுரை : தலைச்சங்க காலத்தில் பாண்டியர்களுடைய தலைநகரம்; கடலால் கவரப் பெற்றது.

கவாடபுரம் : இடைச்சங்க காலத்தில் பாண்டியர்களுடைய தலைநகரம்; கடலால் கவரப் பெற்றது.

மதுரை அல்லது வடமதுரை : தற்பொழுது உள்ள மதுரை; கடைச் சங்கம் இருந்த இடம்.

லெமூரியா : கன்னியா குமரிக்குத் தெற்கே பரந்து விளங்கிய பெருங் கண்டம்; கடலால் கவரப் பெற்றது.

கொற்கை : பாண்டி நாட்டுக் கடற்கரை நகரம்; முத்துக் குளிக்கும் தொழில் நடைபெறும் இடம்.

நூலில் வரும் சில நூற் பெயர்கள்

இறையனார் அகப்பொருள் உரை : நக்கீரர் இயற்றியது என்பர் சிலர். அதனை மறுப்பர் பலர்.

பரிபாடல் : எட்டுத் தொகை நூல்களுள் ஒன்று.

அகத்தியம் : அகத்தியரால் இயற்றப் பெற்றதாகக் கருதப்படும் இலக்கண நூல்.

தொல்காப்பியம் : தலைசிறந்த பழைய இலக்கண நூல்; தொல்காப்பியரால் இயற்றப்பட்டது.

மகாவம்சம் : இலங்கையின் வரலாற்று நூல்.

அர்த்த சாத்திரம் : சாணக்கியர் இயற்றிய நூல்.

பத்துப்பாட்டு
எட்டுத்தொகை
பதினெண் கீழ்க்கணக்கு } பழந்தமிழ்ச் செய்யுள் நூல்கள்.

மதுரைக் காஞ்சி : பத்துப் பாட்டில் ஒரு பாடல்; மாங்குடி மருதனார் பாடியது.

கட்டுரைகள்

(1) சங்க காலத்தைப் பற்றி நாம் அறிபவை

சங்கம் நிறுவியவர்கள் பாண்டியர்கள்—இறையனார் அகப்பொருள் உரை கூறும் செய்திகள் (தலைச்சங்கம் — இடைச்சங்கம்—கடைச்சங்கம்) —ஐயமும், தெளிவும்—வால்மீகி முனிவர் கூற்று—அர்த்த சாத்திரம் கூறுவது—கடல்கோள்—கடைச்சங்க காலம்.

சங்கம் நிறுவியவர்கள் பாண்டியர்கள் : சங்கம் வளர்த்த பெருமை பாண்டியர்க்கு உரியது. பழந்தமிழ்ப் பெரு நூல்கள் சங்கம் நிறுவித் தமிழ் வளர்த்த பாண்டிய மன்னர்களைப் பாராட்டுகின்றன. தலைச்சங்கம், இடைச் சங்கம், கடைச்சங்கம் என்று சங்கங்கள் மூன்று வெவ்வேறு காலங்களில் நடைபெற்றன என்று தெரிகிறது.

" கற்றோர் கனம் அறிவர் கற்றோரே."— நீதி வெண்பா.

இறையனார் அகப்பொருள் உரை கூறும் செய்திகள் : இறையனார் அகப்பொருள் உரை நூல் முச்சங்கங்களைப் பற்றி விளங்கக் கூறுகின்றது. அந்நூல், 'தலைச்சங்க காலத்தில் அகத்தியர் முதலிய ஐந்நூற்று நாற்பத்தொன்பது புலவர்கள் இருந்தனர். அவர்கள் கணக்கற்ற பரிபாடல் முதலிய பாடல்களைப் பாடினர். நாலாயிரத்து நானூற்று நாற்பது ஆண்டுகள் அச்சங்கம் நடை பெற்றது. காய்சின வழுதி முதலிய எண்பத்தொன்பது பாண்டிய மன்னர்கள் சங்கத்தை வளர்த்தனர். அச்சங்கம் மதுரையில் நடந்து வந்தது. அம் மதுரையைக் கடல் கவர்ந்து விட்டது. தலைச்சங்க காலத்தில் இலக்கண நூல் அகத்தியம்' என்று தலைச்சங்கத்தைப் பற்றிக் கூறுகின்றது.

அவ்வுரை நூல் இடைச்சங்கத்தைப் பற்றி, 'இடைச் சங்கத்தில் அகத்தியர், தொல்காப்பியர் முதலிய புலவர்கள் இருந்தனர். அவர்கள் கலி, குருகு முதலிய பல பாடல்களைப் பாடினர். அவர்கட்கு அகத்தியம், தொல்காப்பியம், இசை நுணுக்கம் முதலியவை இலக்கண நூல்கள். அச்சங்கம் இருந்த இடம் கவாட புரம். இடைச்சங்க காலத்தில்தான் தமிழ்நாட்டைக் கடல் கவர்ந்தது' என்று கூறுகின்றது.

கடைச்சங்கத்தைப் பற்றி அவ்வுரை நூல், 'பெருங்குன்றூர் கிழார், நக்கீரனார் முதலியவர்கள் கடைச்சங்கப் புலவர்கள். நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு முதலிய நூல்களை அவர்கள் இயற்றினர். அகத்தியமும் தொல்காப்பியமும் அவர்கட்கு இலக்கண நூல்கள். முடத்திருமாறன் முதலான பாண்டியர்கள் கடைச்சங்கத்தை வளர்த்தனர். உத்தர மதுரை என்னும் இடத்தில் கடைச் சங்கம் நிறுவப்பட்டிருந்தது' என்று கூறுகின்றது.

ஐயமும், தெளிவும் : இறையனார் அகப்பொருள் உரை நக்கீரனாரால் எழுதப் பெற்றது என்பர் சிலர். அதனை மறுப்பர் பலர். அவ்வுரை நூலுள் கூறப் பெற்றவை உண்மையல்ல என்பர் வேறு சிலர். ஆயின், தமிழ்ச் சங்கத்தை வளர்த்தவர் பாண்டியர் என்பது தெளிவு. தமிழ் நாட்டைக் கடல் கொண்ட செய்திக்குச் சான்றுகள் உள்ளன. பஃறுளியாற்றையும், குமரிக் கோட்டையும் கடல் கவர்ந்தது என்று சிலப்பதிகாரம் தெளிய உரைக்கின்றது. தலைச்சங்கம் தென் மதுரையிலும், இடைச்சங்கம் கவாடபுரத்திலும், கடைச்சங்கம் தற்பொழுதைய மதுரையிலும் நிறுவப் பெற்றிருந்தன என்று ஆராய்ச்சியாளர் ஒருமுகமாகக் கூறுகின்றனர்.

வால்மீகி முனிவர் கூற்று : வடமொழியில் இராமாயணத்தை எழுதியவர் வால்மீகி முனிவர். இராமன் சீதையைத் தேடும்பொருட்டு வானரர்களை அனுப்புங்கால் அவர்களை நோக்கி, 'வழியில் பாண்டியர்கட்கு உரிய கவாடத்தைக் காண்பீர்கள்' என்று உரைத்தான் என அம்முனிவர் கூறுகின்றார். ஈண்டுக் குறிப்பிடப்பெற்ற 'கவாடம்' என்பது கவாடபுரமேயாகும் என்று அறிஞர்கள் கூறுகின்றனர். இராமாயணம் கி. மு. எழுநூறுக்கு முற்பட்டது என்று பண்டார்க்கர் என்னும் சரித்திர ஆசிரியர் கூறுகின்றார். எனவே, இடைச்சங்கம் இற்றைக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகட்கு முன் நடந்து வந்தது என்று நாம் அறியலாம்.

" எதிர் காலத்தை நம்பாதே."—லாங்பெலோ.

அர்த்த சாத்திரம் கூறுவது : சந்திர குப்த மௌரியருடன் வாழ்ந்த சாணக்கியர் என்பவர் எழுதிய நூல் அர்த்த சாத்திரம். அந்நூலின்கண் சிறந்த முத்துக்களின் பெயர் 'பாண்டிய கவாடகம்' எனக் குறிப்பிடப் பெற்றுள்ளது. எனவே, சாணக்கியர் காலத்தில் கவாடபுரம் அமைந்திருத்தல் வேண்டும். அவரது காலம் கி. மு. முந்நூறுக்கு முற்பட்டது.

கடல் கோள் : கடல் கோள்கள் இரண்டு நிகழ்ந்தன என்று தெரிகிறது. கி. மு. இரண்டு அல்லது மூன்றாம் நூற்றாண்டில் இலங்கைக்கு அண்மையில் கடல் கோள் ஒன்று நிகழ்ந்தது என்று மகா வம்சம் என்னும் நூல் கூறுகின்றது. அந்நூல் இலங்கையின் வரலாற்று நூல் ஆகும். இறையனார் அகப்பொருள் உரையில் குறிக்கப்படும் இரண்டாவது கடல் கோளையே மகாவம்சம் சுட்டுதல் வேண்டும்.

கடைச்சங்க காலம் : கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் தமிழ் நாட்டைக் களப்பிரர் என்னும் மரபினர் ஆளத் தொடங்கி விட்டனர். அவர்களது ஆட்சி பாண்டி நாட்டில் கி. பி. ஆறாம் நூற்றாண்டு முடிவு வரையில் இருந்தது என்பது ஆராய்ச்சியாளர் துணிவு. கடைச்சங்க காலப் பாண்டியர் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு முடிவு வரையில்தான் ஆண்டிருத்தல் இயலும். எனவே கி. மு. இரண்டாம் நூற்றாண்டு முதல் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு முடிய உள்ள காலத்தைக் கடைச்சங்க காலம் என்று சுட்டுதல் பொருந்தும்.

(2) பாண்டியர்களுடைய நாடும், குடியும் பற்றி நீவிர் அறிவன யாவை?

[தமிழ் நாட்டின் தென் பகுதியே பாண்டிய நாடு—பாண்டிய நாடு இருந்த இடம்—குமரி என்பது ஒரு மலையா, ஆறா?—பாண்டி நாடே செந்தமிழ் நாடு—பாண்டியர் பழைமை—பாண்டியரது குலம்.]

தமிழ் நாட்டின் தென் பகுதியே பாண்டிய நாடு : இன்று உள்ள தமிழ் நூல்களுள் தொன்மை வாய்ந்தது தொல்காப்பியம். வடக்கே வேங்கடமும், தெற்கே குமரி முனையும், கிழக்கிலும் மேற்கிலும் கடல்களும் தமிழ் நாட்டின் எல்லைகள் என்றும், தமிழ் நாடு மூவேந்தர்கட்கு உரியது என்றும் அவ்விலக்கண நூல் கூறுகின்றது. தமிழ் நாட்டின் தென்பகுதி பாண்டியர்க்கு உரியது என்று சிறுபாணாற்றுப்படை உரைக்கின்றது. பாண்டியர்க்குத் தென்னவர் என்றும் ஒரு பெயர் உண்டு.

பாண்டிய நாடு இருந்த இடம் : பரந்திருந்த பாண்டிய நாடு கடல் கோளினால் சுருங்கியிருத்தல் வேண்டும். குமரி முனைக்குத் தெற்கில் தமிழ் நாடு நெடுந்தூரம் பரவி யிருந்தது என்றும், ப∴றுளியாறு என்ற ஆறு அப்பகுதியில் ஓடியது என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர். ப∴றுளியாற்றை வெட்டிய அரசன் நிலந்தரு திருவிற் பாண்டியன் என்று தமிழ் நூல்கள் கூறுகின்றன. இந்தியாவின் தென் பகுதி ஆப்பிரிக்காவை அடுத்த மடகாஸ்கர் தீவு வரையில் பரவியிருந்தது என்றும், அப்பகுதி லெமூரியா என்று பெயர் பெற்றிருந்தது

என்றும், கடல் கோளினால் குமரி முனை வரையில் இருந்த பகுதி மறைந்து விட்டது என்றும் கடல் ஆராய்ச்சியாளர் கூறுவர். ஆகவே லெமூரியா கண்டத்தின் ஒரு பகுதி பாண்டி நாட்டைச் சேர்ந்திருந்தது என்று கருதல் தகும். எனவே, கடல் கோள்கள் இரண்டு நிகழ்ந்தன என்றும், இரண்டாம் கடல் கோளினால் கவாடபுரத்தைத் தலைநகராகக் கொண்டிருந்த பாண்டி நாட்டுப் பகுதி மறைந்தது என்றும் நாம் கொள்ளலாம்.

குமரி என்பது ஒரு மலையா, ஆறா?: குமரி என்பது ஒரு மலையின் பெயர் என்பர் சிலர். தொல்காப்பியத்திற்குப் பாயிரம் கூறிய பனம்பாரனார், "வடவேங்கடம் தென்குமரி" என்று பொதுவாகக் கூறிவிட்டார். வேங்கடம் என்பது ஒரு மலையாதலால் குமரியும் மலையேயாதல் கூடும். இனி மறைந்து போன லெமூரியா கண்டத்தில் குமரியாறு ஓடியது என்பர் ஆராய்ச்சியாளர். இளங்கோவடிகள் "குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள" என்று கூறியுள்ளார். 'கோடு' என்னும் சொல் மலையுச்சி, கரை என்னும் இரு பொருள்களைத் தரும். எனவே குமரி என்றொரு மலையும், குமரி என்றொரு ஆறும் இருந்தன என்று சொல்லுதல் தகும்.

பாண்டி நாடே செந்தமிழ் நாடு: பழந்தமிழ்ப் புலவர்கள் பாண்டி நாட்டைச் செந்தமிழ் நாடு என்று பாராட்டியுள்ளனர். கொடுந்தமிழ் நாடு பன்னிரண்டு இருந்தன என்பர் சிலர். முடி மன்னர் மூவருள் சங்கம் நிறுவித் தமிழ் வளர்த்தவர் பாண்டியரேயாதலாலும், பாண்டியருடைய அவைக்களத்தில் தமிழ் நூல்கள் பல அரங்கேற்றப்பட்டன என்று தெரிவதாலும், பாண்டி நாட்டைச் சேர்ந்த மலையிலேயே அகத்தியர் வாழ்ந்தார் எனப்படுதலாலும் செந்தமிழ் நாடு என்பது பாண்டி நாடே எனப்படும்.

பாண்டியர் பழைமை: சேரர், சோழர், பாண்டியர் ஆகிய முடி மன்னருடைய குடிகள், "கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே" தோன்றின என்று தமிழ் இலக்கியம் கூறுகிறது. வால்மீகி இராமாயணத்தில் பாண்டி நாடு குறிப்பிடப்படுகின்றது. பாண்டவர்களுள் ஒருவனாகிய அருச்சுனன் பாண்டியன் ஒருவனது மகளை மணந்தான் என்றும், பாரதப் போரில் இரு படைகளுக்கும் சேர மன்னன் ஒருவன் சோறளித்தான் என்றும் மகாபாரதம் கூறுகிறது. காத்தியாயனர் என்பவர் 'பாண்டிய' என்னும் சொல்லுக்கு இலக்கணம் வகுத்துள்ளார். அவரோ கி. மு. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அசோகரது கல்வெட்டுக்களில் பாண்டிய நாடு பேசப்படுகிறது. இலங்கை நாட்டின் வரலாற்று நூலாகிய மகாவம்சம் பாண்டியரைப் பற்றிச் செப்புகிறது. கிரேக்க நாட்டுத் தூதுவராய், கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் நம் நாட்டிற்கு வந்த மெகஸ்தனிஸ் என்பவர் பாண்டி நாட்டைப் பற்றிய செய்தியைக் குறிப்பிட்டுள்ளார். கி. பி. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த பிளினி என்னும் மேனாட்டாசிரியரும் மெகஸ்தனிஸ் கூறிய செய்தியையே கூறுகின்றார். எனவே பாண்டியரது தொன்மை நன்கு விளங்கும்.

பாண்டியரது குலம்: பாண்டியர் சந்திர குலத்தவர் ஆவர். சிலப்பதிகாரம், சூளாமணி முதலிய நூல்கள் பாண்டியரைச் சந்திர குலத்தவர் என்றே குறிக்கின்றன.

3. பாண்டி நாட்டுத் தலைநகரங்களின் சிறப்பியல்புகள்

தென் மதுரை-கவாடபுரம்-வடமதுரை (தற்பொழுதுள்ள மதுரை) வட மதுரையின் வேறு பெயர்கள் : கூடலும், ஆலவாயும்-கோயிலும் மடமும்-சோலைகளும் மதில் வாயிலும்-தெருக்கள்-கொற்கையில் முத்துக் குளித்தல்.

தென் மதுரை : தற்பொழுதைய தமிழ் நாட்டிற்குத் தென்பால் இந்தியப் பெருங்கடலில் லெமூரியா என்னும் பெயர்கொண்ட பெருநிலப்பகுதி இருந்தது என்றும், அதன்கண் பாண்டி நாட்டின் பெரும்பகுதி அமைந்திருந்தது என்றும், லெமூரியாக் கண்டம் கடல் கோளினால் மறைந்தது என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுவர். இருமுறை கடல் கோள்கள் நிகழ்ந்தன என்று கூறப்படுவதால், பாண்டி நாட்டின் தலைநகரங்கள் பல ஆயின. அவற்றுள் ஒன்று தென் மதுரை. இது மதுரை என்றும் அழைக்கப்பட்டது. தற்பொழுதுள்ள மதுரைக்குத் தெற்கே நெடுந்தொலைவில் அந்நகர் அமைந்திருந்தது. தென் புறத்தே அமைந்திருந்ததாகையால் அந்நகர் தென்மதுரை எனப்பட்டது. முதற் சங்க காலத்தில் இத்தென்மதுரையே பாண்டி நாட்டின் தலை நகரமாக இருந்தது என்னலாம்.

கவாடபுரம் : இடைச் சங்க காலத்தில் பாண்டியரது தலை நகரமாக விளங்கியது கவாடபுரம். முதன் முறை நேர்ந்த கடல்கோளுக்குப் பிறகு இத்தலைநகரம் அமைந்திருக்க வேண்டும். கன்னியாகுமரிக்குத் தெற்கில் இந்நகரம் இருந்தது. இராமன் வானரர்கட்கு வழி கூறுங்கால் 'கவாடம்' என்று குறிப்பிட்டது இந்நகரையே யாகும். பாரதப் போரில் பாண்டவர் கட்குத் துணையாய் நின்று போர் செய்த பாண்டியன், கவாடபுரத்தைத் தலை நகராகக் கொண்டு ஆண்ட பாண்டியனேயாவான் என்று கொள்ளலாம். சாணக்கியர் தம் அர்த்த சாத்திரத்தில் குறிப்பிடும் 'பாண்டிய கவாடகம்' என்னும் சொற்றொடர், கவாடபுரத்திற்கு அருகில் எடுக்கப்பட்டு வந்த முத்துக்களையே சுட்டும். கவாடபுரம் கடலால் கொள்ளப்பட்ட காலத்தில் அரசாண்ட பாண்டியன் முடத்திருமாறனேயாவான் என்பது ஆராய்ச்சி யாளர் கருத்து.

வட மதுரை : தற்பொழுதுள்ள மதுரையே வட மதுரை ஆகும். கடல் கோள்கட்கு முன்பிருந்த பாண்டி நாட்டுப் பகுதியின் வடபால் அமைந்திருந்த தாதலால் இந்நகர் வடமதுரை என்று குறிப்பிடப்பட்டது. கூடல், ஆலவாய் என்பன இம்மதுரைக்கு வேறு பெயர்கள்.

கூடல் : தற்பொழுதைய மதுரையின் வேறு பெயர்களுள் ஒன்று கூடல். நான்மாடக் கூடல் என்றும் இது வழங்கப்பட்டது. பாண்டியனிடம் கொண்ட பகைமை காரணமாக மதுரையை அழிக்குமாறு இந்திரன் ஏழு மேகங்களை ஏவினன் என்றும், சிவபிரானுர் தம்மிடமிருந்த நான்கு மேகங்களை நான்கு மாடங்களாக மதுரையைச் சுற்றிலும் நிறுத்தி, அந்நகரைக் காத்தார் என்றும் கதை வழங்குகிறது. இது பற்றியே நான் மாடக் கூடல் என்னும் பெயர் வந்தது.

ஆலவாய் : இந்நாளில் உள்ள மதுரையின் வேறு பெயர்களுள் மற்றொன்று ஆலவாய். கடல்கோளினால் மதுரை ஒருமுறை மறைந்து விட்டது என்றும், அதுபற்றிப் பாண்டியன் அம்மதுரையின் எல்லையினை

அறியாமல் திகைத்தான் என்றும், சிவபிரானர் தாம் அணிந்திருந்த பாம்பு களுள் ஒன்றை ஏவி, பாண்டியனுக்கு எல்லையைக் காட்டுமாறு பணித்தார் என்றும், அப்பாம்பு மதுரையை வளைத்து நின்று எல்லையைக் குறித்துக் காட்டியது என்றும் கதை வழங்குகிறது. இக்காரணம் பற்றி ஆலவாய் என்று பெயர் வந்தது என்று சொல்லப்படுகிறது.

கோயிலும் மடமும் : மதுரையில் கலைமகளுக்குரிய கோயில் இருந்தது. பௌத்தர்கள் அக்கோயிலுக்குச் சென்று வந்தனர். கோவலன், கண்ணகி ஆகிய இருவருடன் மதுரைக்கு வந்த கவுந்தியடிகள், மதுரையை அடுத்த புறஞ்சேரியில் தங்கினர் என்றும், அங்கேதான் கண்ணகியை மாதரிக்கு அடைக்கலமாக அளித்தார் என்றும் சிலப்பதிகாரம் கூறுகிறது. அந்தப் புறஞ்சேரி துறவிகள் தங்கும் இடமாகும்.

சோலைகளும் மதில் வாயிலும் : மதுரையைச் சார்ந்த இடங்களில் சோலை கள் இருந்தன என்று மதுரைக் காஞ்சி என்னும் நூல் கூறுகிறது. வையை யாற்றில் புது நீர் விழாவினை மதுரை மக்கள் கொண்டாடினர். மதுரையைச் சூழ்ந்திருந்த மதில் வானளாவி உயர்ந்திருந்தது. மதில் வாயில்களில் அமைக் கப்பட்டிருந்த தெய்வ உருவங்கட்குப் பூசைகள் நிகழ்ந்து வந்தன

தெருக்கள் : மதுரை நகரின் தெருக்கள் பெரியவை. அவற்றில் எழும் ஒலி கடல் ஒலி போன்று இருக்கும் பகலில் வாணிகம் நடைபெறும் கடைத் தெரு நாளங்காடி எனப்பட்டது. மாலையிலும், இரவிலும் வாணிகம் நடை பெறும் கடைத்தெரு அல்லங்காடி எனப்பட்டது. மதுரைநகரத் தெருக்களில் விழாக்கள் நடைபெற்றவாறு இருக்கும்; கொடிகள் பல அசைந்து கொண்டி ருக்கும். யானைகளும், குதிரைகளும், தேர்களும், படை வீரர்களும் மதுரை நகர விதிகளில் செல்லும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

கொற்கை : 'கொற்கை வேந்தன்' என்று பாண்டியர் குறிப்பிடப் படுகின்றனர். கொற்கை ஒரு துறைமுகப் பட்டினம் பாண்டி நாட்டு இளவரசர் கொற்கையில் இருந்தே தமக்குரிய பகுதியை அரசாண்டார். கொற்கைப் பட்டினத்தில் முத்துக் குளிக்கும் தொழில் நடைபெற்றது. கடைச்சங்க காலத்தில் கொற்கைத்துறை முத்தே பெயர்பெற்று விளங்கியது.

4. நிலந்தரு திருவிற் பாண்டியன் செய்த செயல்கள்

பாண்டியர் பழைமை-தொல்காப்பிய அரங்கேற்றம்-நிலந்தரு திருவிற் பாண்டியன் செய்தவை-திரு. ரா இராகவையங்கார் அவர்களுடைய கருத் துக்கள்-இம்மன்னன் கடல் கடந்து பெற்ற வெற்றி.

பாண்டியர் பழைமை : கல் தோன்றி மண் தோன்றாத காலத்திலேயே தமிழ் நாட்டு முடி மன்னர் மூவர் குடிகளும் தோன்றின என்று பழந்தமிழ் நூல்கள் கூறுகின்றன. மூன்று மன்னர்கட்கும் உரிய அடையாளப் பூக்களைத் தொல்காப்பியனர் குறிப்பிடுகின்றார். இடைச்சங்கத்தின் இறுதியில் இருந்தவனும், கடைச் சங்கத்தை நிறுவியவனும் முடத் திருமாறன் என்று இறையனர் அகப்பொருள் உரை கூறுகிறது. அம் முடத்திருமாறனே நிலந்தரு திருவிற் பாண்டியன் என்பது சிலர் கருத்து.

தொல்காப்பிய அரங்கேற்றம்: தொல்காப்பியம் என்பது இன்றுள்ள தமிழ் நூல்களுள் தொன்மை வாய்ந்தது. அ∴து ஓர் இலக்கண நூல். அதனை

இயற்றியவர் தொல்காப்பியர். அவர் தம் நூலை நிலந்தரு திருவிற் பாண்டியனது அவைக்களத்தில் அரங்கேற்றினார். அதுகாலையில் உடன் இருந்தவர் அதங்கோட்டாசான் என்னும் புலவர்.

அப்பாண்டியன் செய்த செயல்கள்: சேர சோழரையும், வேளிரையும் வென்றவன் என்றும், மலை நாட்டில் வழிகளை அமைத்தவன் என்றும் நிலந்தரு திருவிற் பாண்டியனைப் பற்றி மதுரைக் காஞ்சி என்னும் நூல் கூறுகிறது. இம் மன்னனே **ப∴றுளியாற்றை** வெட்டினான் என்பது நெட்டிமையார் என்னும் புலவரது கருத்தாகும். இவன் வட நாட்டரசரை வென்றவன் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. கடல் வற்றுமாறு வேலை எறிந்தவன் இவன் என்று முல்லைக்கலி கூறுகிறது. கடல் வற்றிய பொழுது, அக்கடல் இவனுடைய அடிகளைக் கழுவி வணங்கியது. அக் காரணம் பற்றி, 'கடல் வடிம்பு அலம்ப நின்ற பாண்டியன்' என்று இவனுக்குப் பெயர் வந்திருத்தல் கூடும். கடலினிடத்தே மரக்கலங்களை ஓட்டிச் சென்று, பிற நாடுகளை வென்ற காலத்தில் இவன் தன் காலடிச் சுவட்டினை அங்கிருந்ததொரு பாறையில் பொறித்தான் என்றும், அந்த அடிச்சுவட்டினையே கடல் நீர் கழுவியிருத்தல் கூடும் என்றும் அறிஞர் ஒருவர் கூறுகின்றார். கடல் தெய்வத்திற்கு இம் மன்னன் விழாக் கொண்டாடினான் என்று தெரிகிறது. இம்மன்னன் பெரும் புலவனாகவும் விளங்கினான்.

திரு. ரா. இராகவையங்கார் அவர்களுடைய கருத்துக்கள்: "நிலந்தரு திருவிற் பாண்டியன் 'சயமாகீர்த்தி' என்றும் களவியல் உரையில் குறிப்பிடப் படுகின்றான். ஜாவாத் தீவில் பெற்ற வெற்றியால் இவனுக்கு இப்பெயர் வந்திருத்தல் கூடும். அத்தீவில் இவன் காலடிச் சுவட்டைப் பொறித்தான். அதைக் கடல் நீர் கழுவியது. 'சய' என்னும் சொல் 'யவத்தீவு' எனப்படும் ஜாவாத் தீவைக் குறிக்கும். முடத்திருமாறனும், நிலந்தரு திருவிற் பாண்டியனும் வேறல்லர். கடல்கோள் காலத்தில் தப்பி வரும்பொழுது இவனது கால் முடமாகியிருத்தல் கூடும். அது பற்றியே முடத் திருமாறன் என்னும் பெயர் இவனுக்கு வந்திருத்தல் வேண்டும்" என்று இப்பாண்டியனைப் பற்றி திரு. ரா. இராகவையங்காரவர்கள் கருத்துக் கொண்டிருந்தார்.

கடல் கடந்து பெற்ற வெற்றி: இம் மன்னன் ஜாவாத் தீவையும், அதனை அடுத்திருந்த ஏனைத் தீவுகளையும் வென்றவன் என்று தெரிகிறது. பழந் தமிழ்ப் பாண்டியர்களின் ஆதிக்கம் அத் தீவுகளில் இருந்தது. அத் தீவுகளுள் ஒன்று 'மதுரை' என்றும், மற்றொரு தீவு 'மலயம்' என்றும் பெயர் பெற்றுள்ளது. பொருனை என்ற பெயருடைய ஓர் ஆறு போர்னியோ தீவில் ஓடுகிறது. இப் பாண்டியன், பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதிக்கு முன்பு வாழ்ந்தவன்.

5. பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி

பெயர்க் காரணம்—பாடிய புலவர்கள்—காரி கிழார் கூறுவன—நெட்டிமையார் கூறுவன—(பழந்தமிழரின் அறப்போர்)—நெடும் பல்லியத்தனார் கூறுவன—யாகமும் போரும்—(யாகங்கள் பலவற்றைச் செய்தவன் இவன்)

பெயர்க் காரணம் : பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்னும் பாண்டியன் நிலந்தரு திருவிற் பாண்டியனுக்குப் பிற்காலத்தவன். பல யாகங்களைச் செய்த காரணத்தாலும், யாக தீக்ஷையாகிய குடுமியுடன் இருந்த காரணத்தாலும் இவன் இப்பெயரைப் பெற்றான். இராசசூயம், அசுவமேதம் முதலிய யாகங்களை இவன் செய்திருத்தல் கூடும். மறக்கள வேள்வி செய்தவன் இவன் என்பது சிலர் கருத்து.

பாடிய புலவர்கள் : இவ்வரசனைப் பாடிய புலவர்கள் மூவர் ஆவர். அவர்கள் **காரி கிழார், நெட்டிமையார், நெடும் பல்லியத்தனார்** ஆகியோர்.

காரி கிழார் கூறுவன : காரி கிழார் என்னும் புலவர் இவ்வரசனைப் பலபடப் புகழ்ந்துள்ளார். இப்புலவர் காரி என்னும் ஊரைச் சேர்ந்தவர்; இமய மலைக்கு வடக்கிலும், குமரிக்குத் தெற்கிலும், கடல்கட்கு அப்பாலும், நிலத்திற்குக் கீழும், மேலுலகத்திலும் இவ்வரசனது புகழ் மேம்படுமாறு வாழ்த்தியுள்ளார். குமரியாறு பாண்டிய நாட்டின் தெற்கெல்லையாக இருந்த காலத்தில் இவ்வரசன் வாழ்ந்தவனாதல் வேண்டும் என்று இப்புலவரது பாடலிலிருந்து தெரிகிறது. மேலும், இவ்வரசன் கடல் கடந்து சென்று நாடுகள் பலவற்றை வென்றான் என்றும், சைவ சமயப் பற்றுடையவன் என்றும், இப்புலவருடைய பாடலிலிருந்து தெரிகிறது. இவ்வரசன் காலத்தில் வைதிக சமயக் கொள்கை பரவி யிருந்தது என்றும் இப்புலவர் குறிப்பிடுகின்றார்.

நெட்டிமையார் கூறுவன : இவ்வரசனை நெட்டிமையார் என்னும் புலவர் மூன்று பாடல்களுள் புகழ்ந்துள்ளார். நீண்ட இமைகளை உடையவராதலால் இப்புலவர் இப்பெயரைப் பெற்றார். ஒரு பாட்டுள் இப்புலவர் பழந்தமிழ் மக்களது **அறப்போர்** உணர்ச்சியைக் குறிப்பிட்டுள்ளார். ஓர் அரசன் பகைவர் நாட்டின்மீது படையெடுக்குங்கால், பகைவர் நாட்டில் போர் செய்யத் தகுதியில்லாதோர்க்குத் தீங்கு விளைவியாமல் இருப்பதே அறப்போர் ஆகும். அறப்போர் உணர்ச்சியுடைய மன்னன், படையெடுப்பதற்கு முன்பு, பகைவர் நாட்டில் பறையறைவிக்கச் செய்வான். படையெடுக்கும் நாள் அப்பொழுது யாவருக்கும் அறிவிக்கப்படும். பசுக்கள், பார்ப்பனர், பெண்டிர், நோயாளிகள், புதல்வரைப் பெறாதோர் ஆகியோர் போர்செய்யத் தகுதி யற்றவர்களாவர். பாதுகாவலான இடத்திற்குச் செல்லுமாறு அவர்கட்குப் பறையடிப்போர் தெரிவிப்பர். இதுவே பழந்தமிழரின் போர்முறை. இத்தகைய அறப்போர் முறையை நெட்டிமையார் ஒரு பாடலுள் குறிப்பிட்டிருக்கிறார்.

நெட்டிமையார் பாடியுள்ள பாடல்களிலிருந்து பண்டைத் தமிழரசர்கள் கொடுங்கோல் ஆட்சி செய்வதில்லை என்றும், மிகுதியான வரி வாங்குவதில்லை என்றும், பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி பகைவர் பலரை வென்றவன் என்றும், அவன் கொடைப் பண்பு மிக்கவன் என்றும், பகைவரை வெல்வதில் அவன் பெரு விருப்பம் கொண்டிருந்தான் என்றும், தெரிகின்றன. இம்மன்னன் போரில் எத்துணை விருப்பம் கொண்டிருந்தானோ அத்துணை விருப்பம் யாகங்கள் செய்வதிலும் கொண்டிருந்தான் என்றும் நெட்டிமையாருடைய பாடல்களிலிருந்து தெரிகிறது.

நெடும்பல்லியத்தனார் கூறுவன : நெடும்பல்லியத்தனார் என்னும் புலவர் இசையில் வல்லவராக விளங்கியிருந்தார் என்று தெரிகிறது. பல்யாகசாலை

முதுகுடுமிப் பெருவழுதி போர் செய்வதில் பெரு விருப்பம் கொண்டிருந்தான் என்றும், இசையைக் கேட்டு மகிழும் இயல்புடையவன் என்றும் இப் புலவரது பாட்டிலிருந்து தெரிகின்றன.

யாகமும் போரும் : 'பல்யாகசாலை' என்னும் அடைமொழிகளிலிருந்து இப்பாண்டியன் யாகங்கள் பலவற்றைச் செய்தவன் என்று தெரிகிறது. இவனைப் பாடிய புலவர்களோ, இவன் போர் புரிவதில் பேரின்பம் கண்டான் என்று கூறியுள்ளனர். அரசன் ஒருவன் யாகத்திலும், போரிலும் ஈடுபட முடியுமோ என்று சிலர் ஐயுறுவர். அந்த ஐயத்தை எளிதில் அகற்றிவிடலாம். யாகங்களுள் அசுவமேதம், இராசசூயம் என்பவை அரசர்கட்கு உரியன. பிற அரசர்களை வென்ற ஓர் அரசனே அத்தகைய யாகங்களைச் செய்தல் வேண்டும். எனவே, இவ்வரசன் இவ்விரு செயல்களிலும் ஈடுபட்டிருந்தான் என்று கொள்வதில் தவறில்லை. சின்னமனூர்ச் செப்பேடுகளும், வேள்விக்குடிச் செப்பேடுகளும் இம்மன்னன் பல யாகங்களைச் செய்த செயலைக் குறிப்பிடுகின்றன. இவனைப்போல் யாகங்கள் செய்த வேறு அரசர்கள் இலர்.

6. பொற்கைப் பாண்டியனைப் பற்றி வழங்கும் வரலாறு

சிலப்பதிகாரச் செய்தி—இரவில் அரசன் நகர் சோதனை—கீரந்தை என்னும் அந்தணனது தலயாத்திரை—அந்தணர்கட்கு அரிசி கொடுத்தமை—அந்தணன் வீட்டுக் கதவை அரசன் தட்டுதல்—அந்தணர்கள் முறையீடு—அரசன் தன் கையை வெட்டிக் கொள்ளுதல் (பொற்கை அமைந்தமை).

சிலப்பதிகாரச் செய்தி : பொற்கைப் பாண்டியனுடைய இயற்பெயர் தெரிந்திலது. இவன் வாழ்ந்த காலமும் இன்னது என்று தெரியவில்லை. சிலப்பதிகாரம் இப்பாண்டியனைப் பற்றிச் சிறிது குறிப்பிடுகிறது. மதுரையை எரிக்கப் புகுந்த கண்ணகியின் எதிரில் தோன்றிய மதுராபதித் தெய்வம், பாண்டியர்களுடைய செங்கோற் சிறப்பை எடுத்துக் கூறும் முகத்தான் இவ்வரசனது செய்தி குறிப்பிடப்படுகிறது.

நகர் சோதனை : பொற்கைப் பாண்டியன் செங்கோலன். இரவு தோறும் அவன் மாற்றுருவம் கொண்டு, தனது நகரைச் சுற்றி வருவான். குடிகளுடைய குறைகளை உணர்ந்து, அவற்றைப் போக்க வேண்டும் என்று கருதியே அவன் அங்ஙனம் செய்து வந்தான்.

கீரந்தையின் தல யாத்திரை : மதுரை நகரில் கீரந்தை என்னும் பெயர் கொண்ட அந்தணன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் வறுமையால் வாடியவன். அவன் ஒரு முறை தலயாத்திரை செல்ல விரும்பினன். ஒரு நாள் இரவில் அவன் தன் மனைவியினிடம் தனது விருப்பத்தைக் கூறினன். அது கேட்ட அம்மனையாள் அவ்வீட்டில் தனித்திருக்க அஞ்சினள். அந்நிலையில் அந்தணன், 'பெண்ணே! அரசனது செங்கோலே உன்னைக் காக்கும். கவலைப் படாதே' என்றான். இவ்வாறு அவ்வந்தணன் கூறிய சொற்கள், அப்பொழுது நகர் சோதனைக்கு வந்திருந்த பொற்கைப் பாண்டியனுடைய செவிகளில் விழுந்தன. அவ்வளவில், மறுநாள் முதல் அப்பார்ப்பனியைக் காத்தல் தன் கடமை என்று உறுதி பூண்டான் அம்மன்னன்.

அந்தணர்கட்கு அரிசி கொடுத்தமை: கீரந்தை தல யாத்திரை சென்று விட்டான். அவனது மனையாளைக் காக்க மன்னன் உறுதி பூண்டிருந்தானன்றோ? அவளுக்கு மட்டும் அரிசி முதலியன கொடுத்தல் தகுமோ? ஊரார் பலவாறு பழிப்பார்கள் அல்லவா? பார்ப்பனியின் ஒழுக்கத்திற்கு மாசு கூறுவார்கள் அன்றோ? எனவே, அரசன் அன்று முதல், அந்தப் பார்ப்பனி வாழ்ந்த தெருவில் உள்ள அந்தணர்கட்கெல்லாம் படியரிசி முதலியன கொடுத்தான்; இரவு தோறும் அந்தணர் தெருவைக் காவல் செய்து வரலானான்.

அந்தணன் வீட்டுக் கதவை அரசன் தட்டுதல்: இங்ஙனம் இருக்கையில், ஒருநாள் கீரந்தை தல யாத்திரையிலிருந்து திரும்பி வந்து விட்டான். அச்செய்தியை அரசன் அறியான். திரும்பி வந்த அந்தணன் தனது பயணத்தைப் பற்றியெல்லாம் தன் மனைவியினிடம் கூறிக் கொண்டிருந்தான். அப்பொழுது நகர் சோதனைக்கு வந்த அரசன், அந்தணன் இல்லாத வீட்டில் பேச்சொலி கேட்கின்றதே என்று ஐயுற்று, அவ்வீட்டின் கதவைத் தட்டினான். கதவு தட்டும் ஒலியைக் கேட்ட அந்தணன் தன் மனைவியின் மீது ஐயங் கொண்டான். தான் இல்லாத பொழுது தன் வீட்டிற்கு யாரேனும் வருதல் வழக்கமோ என்பதே அவனது ஐயம். அவ்வளவில் அவனது மனைவி, 'ஐய! மன்னன் செங்கோல் என்னைக் காக்கும் என்று அன்று கூறினீர்களே. அச்செங்கோல் என்னை இன்று காவாதோ?' என்றாள். இதைக் கேட்ட அரசன் காரணமின்றி அந்தணனுக்கு ஐயத்தை உண்டாக்கியமைக்கு வருந்தி, விரைந்து சென்றான்; அந்தத் தெருவில் இருந்த ஏனைய வீடுகளின் கதவுகளையும் தட்டினான்; அரண்மனையை அடைந்து விட்டான்.

அந்தணர்கள் முறையீடு: தங்களுடைய வீட்டுக் கதவுகளைத் திருடன் ஒருவன் தட்டிச் சென்றான் என்று அந்தத் தெருவில் வாழ்ந்த அந்தணர்கள் கருதினர். எனவே, அவர்கள் மறுநாள் அரசனிடம் சென்று, 'அரசே நேற்றிரவு எங்களுடைய தூக்கத்தைச் சோதிக்கும் பொருட்டுத் திருடன் ஒருவன் எங்கள் வீட்டுக் கதவுகளைத் தட்டிச் சென்றான்' என்று முறையிட்டனர். அது கேட்ட அரசன் தன் அவையிலிருந்த பெரியோர்களைப் பார்த்து, 'ஐயன்மீர்! அந்தத் திருடன் அகப்பட்டால், அவனுக்கு அளிக்கத்தக்க தண்டனை யாது?' என்று வினவினான். அதற்குப் பெரியவர்கள், அத்திருடனது கையை வெட்டிவிடுதலே தக்க தண்டனை என்று கூறினர். அவ்வளவில் யாது செய்தான் மன்னன்? தன் உடைவாளை உருவினான்; கதவைத் தட்டிய தன் கையையே வெட்டி வீழ்த்தி விட்டான்! பின்னரே யாவரும் நிகழ்ந்த செய்திகளை உணர்ந்தனர்; அரசனது செங்கோலை வியந்தனர்; அரசனைப் புகழ்ந்தனர். பின்பு அம்மன்னன் பொன்னினால் கையொன்று செய்து வைத்துக் கொண்டான். பொற்கை பெற்ற பாண்டியனைப் **பொற்கைப் பாண்டியன்** என்றே யாவரும் அன்று முதல் அழைக்கலாயினர்.

7. பிசிராந்தையாரும் அறிவுடை நம்பியும்.

கடைச்சங்க காலத்துப் பாண்டியன்---பிசிராந்தையார்—கோப்பெருஞ் சோழன் வடக்கிருந்தமை—பிசிராந்தையாரும் வடக்கிருந்தமை—பிசிராந்தையார் நரை பெறாமல் இருந்தமைக்குக் காரணம்—அறிவுடை

நம்பியின் செங்கோன்மை—அவனுக்குப் பிசிராந்தையார் கூறிய அறிவுரை —பாண்டியனது பாநலம்.

காலம்: அறிவுடை நம்பி என்னும் பாண்டிய மன்னன் கடைச்சங்க காலத்தில் வாழ்ந்தவன். இவனைப் பிசிராந்தையார் என்னும் புலவர் பாடிய பாடல் புறநானூற்றில் காணப்படுகின்றது. இவன் காலத்தில் வாழ்ந்த சோழ மன்னன் **கோப்பெருஞ் சோழன்.**

பிசிராந்தையார்: பிசிர் என்ற ஊரைச் சேர்ந்தவர் பிசிராந்தையார். அவ்வூர் பாண்டிய நாட்டைச் சேர்ந்தது. பிசிராந்தையார் கோப்பெருஞ் சோழன் என்னும் மன்னனைப்பற்றிக் கேள்வியுற்று, அவனிடம் பேரன்பு வைத்திருந்தார். அவனைப் பாராதிருக்கும் பொழுதே அவரது நட்பு ஓங்கியது. அவ்வாறே அச்சோழனும் புலவருடைய கல்வியறிவாற்றல்களைக் கேள்வியுற்று, அவரைத் தன் உயிரென நினைத்திருந்தான். இருவரும் ஒருவரை ஒருவர் பாராதிருந்த பொழுதே அவர்களது நட்பு வளர்ந்தது. 'நண்பர் இருவர் சேர்ந்து வாழ வேண்டுவதில்லை. இருவரது உணர்ச்சி ஒத்திருத்தல் ஒன்றே நட்பை வளர்க்கும்' என்னும் திருவள்ளுவரது கருத்திற்கு இவர்களது நட்பு எடுத்துக்காட்டாகும்.

கோப்பெருஞ் சோழன் வடக்கிருந்தமை: சோழ நாட்டை ஆண்டு வந்த கோப்பெருஞ் சோழனுடன், அவனுடைய மக்கள் பகை கொண்டிருந்தனர். தன் மக்களே தன்னுடன் பகை கொண்டமை கண்ட அம்மன்னன் இவ்வுலக வாழ்க்கையில் வெறுப்புக்கொண்டான்; தன் நாட்டை மக்களிடமே விடுத்தான்; உண்ணு நோன்பு இருந்து உயிர் துறக்க முடிவு செய்து, வடக்கிருந்தான். இவ்வுலக வாழ்க்கையில் வெறுப்பு வைத்து, இறக்கத் துணிந்தோர் உண்ணு நோன்பு கொண்டு, வடக்கிருந்து உயிர் துறக்கும் முறை, '**வடக்கிருத்தல்**' எனப்படும்.

பிசிராந்தையாரும் வடக்கிருந்தமை: வடக்கிருந்த கோப்பெருஞ் சோழன் தன் பக்கத்தில் பிசிராந்தையார்க்கும் இடம் ஒழித்து வைக்குமாறு செய்தான். அது கண்ட ஏனைப் புலவர்கள், பிசிராந்தையாரது வருகையில் ஐயங் கொண்டு, அதனை அரசனுக்கு உணர்த்தினர். அவ்வளவில் அம் மன்னன் 'புலவர் பெரு மக்களே! யான் பிசிராந்தையாரைப் பார்த்ததில்லை என்பது உண்மை. ஆயின், அவர் என் உயிர் நண்பர். யான் செல்வத்துடன் வாழ்ந்த காலத்தில் அவர் வந்திலர். யான் துன்பப்படுங் காலத்தில் கூட அவர் வராமல் இருப்பாரோ? அவர் தவருமல் வருவார். அவரும் என்னுடன் வடக்கிருப்பார்' என்று கூறினன். அந்நிலையில் எங்ஙனமோ பிசிராந்தையார் அங்கு வந்து சேர்ந்தார்; வடக்கிருந்து உயிர் நீத்தார்.

நரையின்மைக்குக் காரணம்: பிசிராந்தையார் வடக்கிருக்கச் சென்ற காலையில், அவரது தோற்றத்தைக் கண்டு வியந்த புலவர்கள், 'ஐய! நீங்கள் வயது முதிர்ந்தவர் என்பதை யாங்கள் அறிவோம். ஆயின், உங்களுக்கு நரை வந்திலதே! அதற்குக் காரணம் யாது?' என்று வினவினர். அதற்குப் பிசிராந்தையார், நரைக்குக் காரணம் கவலையே என்றும், தமக்குக் கவலையே வந்திலது என்றும், தம்முடைய மனைவியும், மக்களும் அறிவுடையவர்கள் என்றும், ஏவலர் தம்சொற்படியே நடப்பவர் என்றும், தம் நாட்டு மன்னன் செங்கோலன் என்றும், தம் ஊரில் சான்றோர் பலர் வாழ்கின்றன

என்றும், எனவே, தமக்குக் கவலை உண்டாகவில்லை என்றும் விடை கூறினர்.

அறிவுடை நம்பியின் செங்கோன்மை: தமக்குக் கவலையின்மைக்கு உரிய காரணங்களுள் ஒன்ருகப் பிசிராந்தையார் தம் நாட்டு மன்னன் செங்கோலன் என்று குறிப்பிட்டார். எனவே, அவர் காலத்தில் பாண்டி நாட்டை ஆண்டு வந்த பாண்டியன் அறிவுடை நம்பி என்பவன் செங்கோல் செலுத்தி யிருத்தல் வேண்டும்.

அறிவுடை நம்பிக்குப் பிசிராந்தையார் கூறிய அறிவுரை: பாண்டியன் அறிவுடை நம்பிக்குப் பிசிராந்தையார் கூறிய அறிவுரைகளைக் கொண்ட ஒரு பாடல் புறநானூற்றில் இடம்பெற்றுள்ளது. பிசிராந்தையார் அம் மன்னனைப் பார்த்து, 'மன்னவ! ஒரு மா அளவினும் சிறிய நிலத்தில் நெல்லை விளைவித்து, அறுவடை செய்து நெல்லைப் பெற்ருல், அந்நெல்லினைக் கொண்டு ஒரு யானைக்குப் பல நாட்கள் உணவு கொடுக்கலாம். ஆயின், அந்த யானை தானுகவே விளைநிலத்திற் புகுந்து நெல்லினை உண்ணத் தொடங்கினுல் யாதாகும்? எவ்வளவு வயல்கள் இருந்தாலும் என்ன? அந்த யானையின் வாயிற் புகுவதைக் காட்டிலும், அதன் கால்களால் மிதியுண்டு அழியும் நெல் மிகுதியாக இருக்கும் அல்லவா? மேலும், யானை புகுந்த நிலங்களும் கெட்டுவிடும். அரசன் வரி வாங்கும் முறையும் இத்தகையதே. தன் குடிகளிடம் அருள் காட்டி, முறைப்படி வரி வாங்கினுல் அரசன் மிகுதியான வரியைப் பெற்று நன்கு வாழ்வான். குடிகளை அவன் துன்புறுத்தி வாங்குவானுயின், யானை புகுந்த நிலத்தைப் போல, அவனும் உண்ண மாட்டான்; அவனது நாடும் கெட்டுவிடும். எனவே, முறைப்படி வரிகளை வாங்குவாயாக' என்று அறிவுரை கூறினர்.

பாண்டியனது பா நலம்: 'அறிவுடை நம்பி' என்னும் பெயரே அம் மன்னன் அறிவுடையவன் என்பதைப் புலப்படுத்தும். அவன் பாடிய பாடல்கள் எட்டுத்தொகை நூல்கள் நான்கனுள் இடம் பெற்றுள்ளன. 'குழந்தையின்பம் பற்றி அவன் பாடிய பாட்டு புறநானூற்றில் உள்ளது. அவன் அப் பாடலின்கண், 'குழந்தை யின்பமே பேரின்பம். குழந்தைகள் குறுகுறு என்று நடந்து வரும்; கைகளை நீட்டும்; உணவினைச் சிதறும்; வாயால் கௌவும்; சோற்றை உடலில் பூசிக்கொள்ளும். இவ்வாறெல்லாம் செய்து நம் குழந்தைகள் நம்மை மயக்கும். இத்தகைய மக்களைப் பெருதோருடைய வாழ்க்கை பயனற்ற வாழ்க்கையாகும்' என்று நயம்பட உரைத்துள்ளான்.

8. பூதப் பாண்டியனும் பெருங்கோப்பெண்டும்

அடைமொழி—பூதப் பாண்டியனது தேவியார் பெருங்கோப்பெண்டு—அவன் செய்த வஞ்சினம்—வஞ்சினம் விளக்கும் செய்திகள்—பெருங்கோப்பெண்டின் பாடலும் பெருங்குணங்களும்.

அடைமொழி: பூதப் பாண்டியன் வீரமும், கல்வியும் வாய்ந்தவன். இவனுடைய பாடல்கள் கடைச் சங்க நூல்கள் இரண்டில் இடம் பெற்றுள்ளன. 'ஒல்லையூர் தந்த' என்னும் அடை மொழிகளால் இவன் ஒல்லையூர் என்னும் இடத்தை வென்றவன் என்று தெரிகிறது.

"கேட்டால் ஒழிய அறிவுரை கூருதே."—ஜெர்மன் பழமொழி.

அவனது மனைவி: பூதப் பாண்டியனது மனைவி **பெருங்கோப் பெண்டு** என்று சுட்டப்படுகின்றாள். அவ்வம்மை புலமையும் கற்பும் அமைந்தவள். அவள் பாடிய பாடல் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது. அவள் தனது கணவனாகிய பூதப் பாண்டியன் இறந்தபொழுது உடன்கட்டை ஏறத் தொடங்கினாள். அது கண்ட புலவர்கள் அவளைத் தடுத்தனர். அவ்வாறு தடுத்தவர்களுள் **பேராலவாயார்** என்பவரும் ஒருவர். ஆயின், புலவர் உரையைக் கேளாமல் அவள் உயிர் துறந்தாள்.

பூதப் பாண்டியனது வஞ்சினம்: பூதப் பாண்டியனைப் பகைவர் பலர் எதிர்த்தனர். அவர்களுடன் போர் செய்யச் செல்லுங்கால் அம் மன்னன் வஞ்சினம் ஒன்று செய்தான். அவ் வஞ்சினம் பாடல் உருவில் உள்ளது; புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது. அவன் தன் பாடலில், 'என்னைப் பகைவர் பலர் எதிர்த்துள்ளனர். அவர்கள் யாவரும் முதுகு காட்டி ஓடுமாறு செய்வேன். அவ்வாறு செய்யவில்லையேல், யான் என் மனைவியிடமிருந்து பிரிவேனாக; அறங் கூறும் சபையில் அறவழி நடவாத ஒருவனை வைத்து ஆளும் கொடுங்கோலன் ஆவேனாக; **மாவன் ஆந்தை, அந்துவஞ் சாத்தன், ஆதனழிசி, இயக்கன்** முதலிய நட்பினரைக் கூடிப் பெறும் இன்பத்தை இழப்பேனாக; பாண்டியர் குடியிற் பிறவாமல் வேறு குடியிற் பிறப்பேனாக' என்கின்றான்.

வஞ்சினம் விளக்கும் செய்திகள்: பூதப் பாண்டியன் செய்த வஞ்சினத்திலிருந்து நமக்குப் பல செய்திகள் தெரிகின்றன. அவன் தனது மனைவியினிடம் பேரன்பு வைத்திருந்தான் என்பதும், பெரியோர்களைப் பொன்னேபோல் போற்றினான் என்பதும், கொடுங்கோலை வெறுத்தான் என்பதும், நட்பினருடன் உரையாடி மகிழ்தலில் விருப்பம் கொண்டிருந்தான் என்பதும், பாண்டியர் குடியிற் பிறத்தலைப் பெரும்பேறாகக் கருதினான் என்பதும் அவனது வஞ்சினப் பாடலிலிருந்து தெரிகின்றன.

பெருங்கோப் பெண்டின் பாடலும், பெருங்குணங்களும்: தனது கணவனிடம் பெருங்கோப்பெண்டு பேரன்பு வைத்திருந்தாள். அவன் இறந்த காலையில் அவ்வம்மை உடன்கட்டை ஏறிய செய்தி இவ்வுண்மையைப் புலப்படுத்தும். அவ்வம்மையின் பாடல் அவளது புலமைத் தன்மையை நன்கு வெளிப்படுத்தும். அப்பாடலிலிருந்து அவளுடைய கற்பு நெறி, வீரத் தன்மை, பெரியோர்கட்கும் அறிவுரை கூறும் பான்மை, விதவை நோன்பினை மேற்கொள்ளுதலின் தாழ்வு, பண்டைக் காலத்துச் சில வழக்கங்கள் முதலியன நன்கு தெரிகின்றன. அவள் தன் பாடலில், 'பெரியவர்களே! நெய்யில்லாமல், வெறுஞ் சோற்றை வேளைக் கீரையுடன் உண்டு, வெறுந் தரையில் படுக்கும் விதவையரின் வாழ்வு எனக்கு வேண்டாம். கணவன் இறந்த பின்னரும் யான் உயிர்வாழ மாட்டேன். எரியும் பிணப்படுக்கை கொடியதாக உங்களுக்குத் தோன்றலாம். கணவனை இழந்த எனக்கு ஈமத் தீயும், குளிர்ந்த தாமரைப் பொய்கையும் ஒரே தன்மையன' என்று கூறுகின்றாள். இவ்வாறு கூறித் தீயிற் பாய்ந்த பெருங்கோப்பெண்டின் பெருங்குணங்களை மதுரைப் பேராலவாயார் என்னும் புலவர் பாராட்டிப் பாடியுள்ளார்.

"அறத்தான் வருவதே இன்பம்."—வள்ளுவர்.

9. மதிவாணனும், இளம்பெரு வழுதியும்

இருவரும் பெரும் புலவர்கள்—பாண்டியன் மதிவாணன்—இளம் பெரு வழுதிக்கு அமைந்த அடைமொழி—இளம்பெரு வழுதி பாடிய பாடல்கள் கூறுபவை—அவர் கூறும் அறவுரைகள்.

இருவரும் பெரும் புலவர்கள்: பாண்டியன் மதிவாணனும், இளம் பெருவழுதியும் பெரும் புலவர்கள் ஆவர். முன்னவர் தனி நூல் ஒன்று செய்துள்ளார். பின்னவர் பாடிய பாடல்கள் தொகை நூல்களில் இடம் பெற்றுள்ளன.

பாண்டியன் மதிவாணன்: சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதியுள்ள அடியார்க்கு நல்லார், பாண்டியன் மதிவாணனைக் கவியரங்கேறிய பாண்டியர் என்கின்றார். இவர் பாடிய நூல் **மதிவாணர் நாடகத் தமிழ் நூல்** ஆகும். முன் காலத்தில் ஐவகை இசை நாடக நூல்கள் இருந்தன என்றும், அவற்றுள் ஒன்று இந்நாடகத் தமிழ் நூல் என்றும், இஃது இசைக் கூத்தின் இலக்கணத்தைக் கூறும் நூல் என்றும் **அடியார்க்கு நல்லார்** கூறுகின்றார்.

இளம்பெரு வழுதிக்கு அமைந்த அடை மொழி: 'கடலுள் மாய்ந்த என்னும் அடைமொழி இளம்பெரு வழுதிக்கு அமைந்துள்ளது. கடற் படையெடுப்பின் பொழுது, இவர் கடலுள் முழுகி இறந்திருத்தல் வேண்டும் என்று அவ்வடைமொழியிலிருந்து தெரிகிறது. இளமையிலேயே பெருங் கல்வியறிவு பெற்றவராதலால் இப்பாண்டியர் 'இளம் பெரு வழுதி' என்று அழைக்கப் பெற்றிருத்தல் கூடும். இவர் பாடிய பாடல்கள் பரிபாடலிலும், புறநானூற்றிலும் இடம்பெற்றுள்ளன.

இளம்பெரு வழுதி பாடிய பாடல்கள் கூறுபவை: இவர் பாடிய பரிபாடற் செய்யுள் திருமாலிருஞ் சோலை மலையையும், அம்மலை சிலம்பாற்றினால் அழகு செய்யப்படுதலையும், அம்மலையிடத்தே எழுந்தருளியுள்ள கண்ணன், பலதேவன் ஆகியோருடைய பெருமைகளையும், அம் மலையை யாவரும் வழிபடுதல் வேண்டும் என்பதையும் கூறுகின்றது. எனவே, இப்பாண்டியர் வைணவராக இருத்தல் கூடும். இவர் பாடிய புறநானூற்றுப் பாடல் இவருடைய அறிவு நுட்பத்திற்கும், உயர்ந்த ஒழுக்கத்திற்கும் சான்றாக அமைந்துள்ளது. அப்பாடல் உலகத்து மக்களுக்கு எக்காலத்திலும் தேவையான உறுதிப் பொருள்களைக் கூறுகின்றது.

இளம்பெரு வழுதி கூறும் அறவுரை: இவர் தம் புறநானூற்றுப் பாடலின்கண் சிறந்த அறிவுரைகளைக் கூறியுள்ளார். இவர், 'இவ்வுலகம் உள்ளது. ஏன்? இந்திரர்க்கு உரிய அமிழ்து கிடைத்தாலும் தனித்து உண்ணாத் தன்மை வாய்ந்த சிலர் இவ்வுலகில் உள்ளனர். அவர்கள் தம் கோபத்தை அகற்றியவர்கள்; சோம்பலை வெருட்டியவர்கள்; நல்லார் அஞ்சுவனவற்றுக்கு அஞ்சுபவர்கள்; புகழ்கிடைக்கும் என்றால் தம் உயிரைக் கொடுத்தேனும் பெறும் இயல்புடையவர்கள்; உலகமே கிடைப்பதாயினும் பழி தருவனவற்றைச் செய்யாதவர்கள். இவற்றுக்கெல்லாம் மேலாக அவர்கள் தமக்கென வாழாமல் பிறர்க்கென்றே பாடுபடும் தன்மை உடையவர்கள். இத்தகையோர் சிலர் இருக்கின்ற காரணத்தால் உலகம் நிலைத்துள்ளது' என்று அப்பாடலின்கண் கூறியுள்ளார். இப்பாடல் எத்தகைய அறிவுரையைக் கூறுகிறது! பிறர்க்கு ஈதல், சினத்தை அகற்றுதல், பழிக்கு அஞ்சுதல், புகழை விரும்புதல், பிறர்க்

கெனப் பாடுபடுதல் என்பவை எத்துணை அரிய அறவுரைகள்! பண்டைக் கால மக்களின் பண்பாட்டிற்கு ஓர் எடுத்துக் காட்டாக விளங்குகின்றது இப் பாடல்.

10. கோவலனைக் கொல்வித்த பாண்டியன் யாவன்? அவனைப் பற்றி அறிவன யாவை?

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் பெற்ற வெற்றி—கோவலனைக் கொல்வித்தமை—(கோவலன் வரலாறு - கண்ணகி வழக்குரைத்தமை) – நெடுஞ்செழியன் இறந்தமை—அவனது செங்கோன்மை—கோவலனது பழவினை—நெடுஞ்செழியன் ஒரு புலவன்—அவன் கூறியுள்ள அறிவுரை.

பெற்ற வெற்றி: கோவலனைக் கொல்வித்த பாண்டியனாகிய நெடுஞ்செழியன் 'ஆரியப் படை கடந்த' என்னும் அடைமொழிகளைப் பெற்றுள்ளான். எனவே, அவன் வட நாட்டு ஆரிய அரசரை வென்றவன் என்பதை உணரலாம்.

கோவலனைக் கொல்வித்தமை: சோழ நாட்டைச் சேர்ந்த காவிரிப்பூம் பட்டினத்தில் வாழ்ந்தவன் கோவலன். அவன் மாதவி என்னும் நாடக மகளிடம் அன்பு கொண்டு, தன் மனைவியாகிய கண்ணகியைப் பிரிந்தான். பின்பு அவன் மாதவியைப் பிரிந்து கண்ணகியை அடைந்தான். அப்பொழுது அவன் மதுரைக்குச் சென்று, தன் மனைவியின் சிலம்பு ஒன்றை விற்று வாணிகம் செய்து பொருளீட்ட விரும்பினான். எனவே, அவன் கண்ணகியுடன் மதுரையை அடைந்தான். அதுகாலையில் மதுரையை ஆண்ட மன்னன் இந் நெடுஞ்செழியனே ஆவான்.

நெடுஞ்செழியனது அரண்மனையில் அரசியின் சிலம்பு ஒன்றினைத் திருடியிருந்தான் பொற்கொல்லன் ஒருவன். கோவலன் கையில் இருந்த சிலம்பினை அப்பொற்கொல்லன் கண்ட அளவில், அவனுக்கு ஒரு நினைவு உண்டாயிற்று. சிலம்பு திருடிய கள்வன் கோவலனே என்று அரசனிடம் காட்டிக் கொடுத்து விடுதலே அந்நினைவு. அங்ஙனமே பொற்கொல்லன் நெடுஞ்செழியனிடம் சென்று, சிலம்பு திருடிய கள்வன் கோவலனே என்று கூறினான். அரசன் ஆராய்ந்து பார்க்கவில்லை. 'கோவலனைக் **கொல்ல**' என்று சொல்ல எண்ணியவன், வினைப்பயனால் 'கோவலனைக் **கொன்று** அச்சிலம்பினைக் கொணர்க' என்று ஏவலர்க்குக் கட்டளையிட்டு விட்டான். ஏவலர்களுள் ஒருவன், கோவலனது கையில் சிலம்பு இருத்தலைக் கண்டு, அவனைக் கொன்று விட்டான். கோவலனது சிலம்பும் அரசனைச் சேர்ந்து விட்டது.

நெடுஞ்செழியன் இறந்தமை: தன் கணவன் கள்வன் என்று குற்றம் சுமத்தப் பெற்றுக் கொலையுண்ட செய்தியை உணர்ந்தாள் கண்ணகி; குமுறி எழுந்தாள்; பாண்டியன் நெடுஞ்செழியனைக் கண்டாள்; தன் சிலம்பின் உட்பரல் மாணிக்கம் என்பதைக் கூறினாள்; கோவலனிடமிருந்து கொண்டு வரப் பெற்ற சிலம்பினை வாங்கி உடைத்தாள். அதனுள்ளிருந்த மாணிக்கப் பரல்கள் தெறித்து விழுந்தன. முத்துப் பரல்களே பாண்டியனது சிலம்பிற்குள் இடப் பெற்றிருந்தன. கோவலனை ஆராயாமல் கொன்றமையை உணர்ந்தான் நெடுஞ்செழியன்; தன் செங்கோல் கோடியமைக்கு வருந்திக் கீழே விழுந்து

இறந்தான். அவனது மனைவியாகிய கோப்பெருந் தேவியும் மயங்கி வீழ்ந்து இறந்தாள்.

நெடுஞ்செழியனது செங்கோன்மை: கண்ணகி பின்பு மதுரையை எரித்துச் சேர நாடு சென்றாள். ஆங்குத் தேவர்கள் கோவலனுடன் வந்து, அவளை விண்ணுலகிற்கு அழைத்துச் சென்றனர். அச்செய்தியைக் குறவர்களின் வாயிலாக உணர்ந்தான், அக் காலத்தில் சேரநாட்டை ஆண்டு வந்தவனாகிய சேரன் - செங்குட்டுவன். மதுரையில் வாழ்ந்து வந்த புலவராகிய **சீத்தலைச் சாத்தனார்** கண்ணகியின் வரலாற்றையும், வினை வயத்தால் நெடுஞ்செழியன் கோவலனைக் கொன்ற செய்தியையும், அது பொருது அம்மன்னன் மயங்கி வீழ்ந்து இறந்து, வளைந்த செங்கோலை நிமிர்த்திய செய்தியையும் செங்குட்டுவனிடம் உரைத்தார். அவற்றைக் கேட்ட சேரன்-செங்குட்டுவன், நெடுஞ்செழியனது செங்கோலைப் பெரிதும் பாராட்டினான். கொடுங்கோல் நிகழ்ந்தமையைப் பொருது, பாண்டியன் நெடுஞ்செழியன் இறந்த செய்தியைச் செங்குட்டுவன் பாராட்டினான் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

கோவலனது பழவினை: கோவலனைப் பாண்டியன் நெடுஞ்செழியன் கொல்வித்தான் என்பது உண்மையே. ஆயின், கோவலனது பழவினையே அவன் அங்ஙனம் இறக்குமாறு செய்தது. முற்பிறப்பில் அவன் காரணம் இன்றிச் சங்கமன் என்னும் வணிகனைக் கொல்வித்தான். அவ்வினையின் பயனாலேயே இப்பிறப்பில் அவன் கொலையுண்டிறக்குமாறு நேரிட்டது. எனவே, தீவினையே பாண்டியனது செங்கோல் கோடுமாறு செய்தது. ஆயின், பாண்டியன் தனது உயிரைக் கொடுத்து, வளைந்த கோலை நிமிர்த்தினான். இச்செய்தியைச் சிலப்பதிகார ஆசிரியராகிய இளங்கோவடிகள் நன்கு விளக்கியுள்ளார்.

நெடுஞ்செழியன் ஒரு புலவன்: பாண்டியன் நெடுஞ்செழியன் ஒரு புலவன் என்பது, அவன் பாடிய பாடலிலிருந்து தெரிகிறது. அவன் பாடிய பாடல் புறநானூற்றின்கண் இடம் பெற்றுள்ளது. கல்வி கற்றலின் உயர்வை அவன் தன் பாடலில் விளங்கக் கூறியுள்ளான்.

நெடுஞ்செழியன் கூறியுள்ள அறிவுரை: நெடுஞ்செழியன் எக்காலத்து மக்களுக்கும் உறுதிதரும் அறிவுரையைத் தன் பாடலின் வாயிலாகக் கூறியுள்ளான். அவன் அப்பாடலின்கண், 'எங்ஙனமேனும் கல்வி கற்றல் நன்று. மாணவன் ஆசிரியர்க்கு உதவி செய்து அவரை வழிபட்டுக் கல்வியைக் கற்க வேண்டும். கல்வி கற்ற மகனையே தாயும் விரும்புவாள். கற்றோனுக்கே அரசனும் பெருமை தருவான். தாழ்ந்த குலத்தில் பிறந்தவனையும் கல்வி உயர்ந்தவனுக்கும்' என்று கூறியுள்ளான். எனவே, இவனுடைய புலமையையும், கல்வியைப் பரப்புவதில் இவன் காட்டிய ஆர்வத்தையும் நாம் உணரலாம்.

11. மதுரைக் காஞ்சி கொண்ட நெடுஞ்செழியனைப் பற்றி விளக்கி வரைக.

(தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்.)

வெற்றியும் வீரமும்-வஞ்சினப்பாடல் விளக்கும் செய்திகள்-இவனைப் பாடிய புலவர்கள்-இடைக்குன்றூர் கிழார்-குடபுலவியனார்-கல்லாடனார்-மாங்குடி மருதனார்-முடிவுரை.

வெற்றியும் வீரமும் : கோவலனைக் கொல்வித்த பாண்டியனது தம்பி வெற்றிவேற் செழியன் என்பவனாவான். வெற்றிவேற் செழியனே சித்திர மாடத்துத் துஞ்சிய நன்மாறன் ஆவான் என்றும், அவனது மகனே மதுரைக் காஞ்சி கொண்ட நெடுஞ்செழியன் என்றும் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இந்நெடுஞ்செழியன் இளமையிலேயே பலருடன் போர் செய்ய நேரிட்டது. சேரன், சோழன், வேளிர் ஐவர் ஆகியோர் ஒன்றுகூடி இவனுடன் தலையாலங்கானம் என்னுமிடத்தில் போர் செய்தனர். அப்போரில் எல்லோரையும் இந்நெடுஞ்செழியன் வென்றான். எனவே, இவனுக்கு 'தலையாலங்கானத்துச் செரு வென்ற' என்னும் அடைமொழிகள் அமைந்தன. இவன் தன் பகைவர்களுடன் போர் செய்யச் செல்வதற்கு முன்பு வஞ்சினம் ஒன்று செய்தான். அதிலிருந்தும் இவனது வீரத்தை நாம் உணரலாம்.

வஞ்சினப் பாடல் விளக்கும் செய்திகள் : நெடுஞ்செழியன் செய்த வஞ்சினம் பாடல் உருவில் உள்ளது. அப்பாடல் புறநானூற்றின்கண் இடம் பெற்றுள்ளது. எனவே, இவன் ஒரு புலவன் என்பதனை உணரலாம். அப்பாடலின்கண் இவன், 'யான் இளையவன் என்று இகழ்ந்து பகைவர் பலர் என்னுடன் போர் செய்ய வந்துள்ளனர். அவர்களை யான் வெல்வேன். அவ்வாறு செய்யேனாயின் யான் கொடுங்கோலன் என்று இகழப்படுவேனாக; **மாங்குடி மருதனார்** முதலிய புலவர்கள் என் நாட்டைப் பாடாது ஒழிவராக; இரப்போர்க்கு இல்லை என்று உரைக்கும் இழிவினைப் பெறுவேனாக' என்று கூறியுள்ளான். எனவே, இவன் செங்கோல் செலுத்துவதில் விருப்பமும், கொடுங்கோன்மையில் வெறுப்பும் கொண்டிருந்தான் என்பதும், தன்னைப் புலவர்கள் பாடுவதில் விருப்பங் கொண்டிருந்தான் என்பதும், இரப்போர்க்கு இல்லையென்றுரைப்பதை இழிவாகக் கருதினான் என்பதும் நன்கு விளங்குகின்றன.

இவனைப் பாடிய புலவர்கள் : மாங்குடி மருதனார், இடைக்குன்றூர் கிழார், குடபுல வியனார், கல்லாடனார் என்னும் புலவர்கள் இந்நெடுஞ் செழியனைப் பாடியுள்ளனர்.

இடைக்குன்றூர் கிழார் : இப்புலவர் நெடுஞ்செழியனைப் பாடிய பாடல்களிலிருந்து, 'நெடுஞ்செழியனை இளமையில் பலர் எதிர்த்தனர். யாவரையும் இவன் வென்றான். மிகமிக இளமைப் பருவத்தில் இவன் பெற்ற பெரு வெற்றி, கண்டோர்க்கும் கேட்டோர்க்கும் வியப்பைத் தந்தது. அச்சம் என்பதையே இவன் அறியாதவன்' என்னும் செய்திகள் தெரிகின்றன.

குடபுலவியனார் : இப்புலவர் நெடுஞ்செழியனது வீரத்தைப் பாராட்டினார். எனினும், அவன் போரில் பெரு விருப்பம் கொண்டிருந்தமையை இவர் விரும்பவில்லை. எனவே, அவர் அரசனுடைய கடமைகளை இம்மன்னனுக்கு உரைத்து நீர்நிலைகளைப் பெருக்கி உணவுப் பொருள்களை விளைவிப்பதில் இவன் நாட்டங் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தினார்.

கல்லாடனார் : நெடுஞ்செழியன் பகைவர்கள் நாட்டைப் பாழ்படுத்துவதில் விருப்பம் கொண்டிருந்தான் என்றும், சேரனையும் சோழனையும் வென்றான் என்றும், அவன் போர் செய்த களத்தில் அச்சந் தரும் காட்சிகளைக் காணலாம் என்றும் கல்லாடனார் உரையிலிருந்து தெரிகின்றன.

" சிற்றுணர்வோர் என்றும் சிலுசிலுப்பர்."—நீதிவெண்பா.

மாங்குடி மருதனார் : மாங்குடி மருதனார் நெடுஞ்செழியனுக்கு அறிவுரை கூறும்பொருட்டு **மதுரைக் காஞ்சி** என்னும் நூலைப் பாடினார். அந்நூல் பத்துப்பாட்டில் ஒரு பாட்டாக இடம் பெற்றுள்ளது. இப்புலவர் உரையிலிருந்து நெடுஞ்செழியன் அறக்கள வேள்வியும், மறக்கள வேள்வியும் செய்தான் என்றும், போரில் பெரு விருப்பம் கொண்டிருந்தான் என்றும், இவர் கூறிய அறிவுரையால் நல்வழிப் பட்டான் என்றும், இவ்வுலகத்தின் நிலையாமையை நன்குணர்ந்தான் என்றும் தெரிகின்றன. எனவே, புலவர்கள் பலரால் பாடப் பெற்று, அவர்கள் கூறிய அறவுரைகளைக் கேட்டு, வீரமும், கொடையும் ஒருங்கே அமையப் பெற்று, நிலைபேறில்லாத இவ்வுலகில் தன் பெயரை நிலை நாட்டியவன் இந்நெடுஞ்செழியன் என்று கூறுவதில் தவறில்லை.

12. உக்கிரப் பெருவழுதி

பெற்ற வெற்றி-இவன் வாழ்ந்த காலம்-புலமை-இவனுடைய நண்பர்கள்-ஔவையார் கூற்று-இவன் வாழ்ந்த காலத்தைப் பற்றிய ஓர் ஐயம்.

பெற்ற வெற்றி : 'கானப் பேர் எயில் தந்த' என்னும் அடைமொழிகளைப் பெற்றுள்ளான் உக்கிரப் பெருவழுதி. எனவே, இவன் கானப்பேர் என்னும் ஊரை வென்று கைப்பற்றியவன் என்று தெரிகிறது. கானப்பேர் என்னும் ஊர் காளையார் கோயில் என்று இன்று வழங்கப்படுகிறது. அவ்வூரில் பெரு மதில் ஒன்று இருந்தது. அதனை ஆண்டு வந்தவன் **வேங்கை மார்பன்** என்னும் சிற்றரசனாவான். அவன் அமைத்திருந்த மதில் பலவகைச் சிறப்புக்களைப் பெற்றிருந்தது. பெரு வலிமையுடன், பகைவர்கள் பற்றுதற்கு அரியதாய் விளங்கிய அம்மதிலை உக்கிரப் பெருவழுதி கைப்பற்றினான் என்று ஐயூர் மூலங்கிழார் என்னும் புலவர் பாடிய பாடலிலிருந்து தெரிகிறது.

வாழ்ந்த காலம் : இறையனார் அகப்பொருள் உரையிலிருந்து, இம்மன்னன் கடைச்சங்க காலத்து அரசர்களுள் கடைசியானவன் என்று தெரிகிறது. இவனுக்குப் பிறகு தமிழ் நாட்டில் **களப்பிரர்** என்னும் மரபினரது ஆதிக்கம் பரவியிருத்தல் வேண்டும், இவனது காலத்தில் தான் **திருக்குறள் அரங்கேற்றம்** நடை பெற்றது என்பது சிலர் கருத்து. அதனை மறுப்பர் சிலர். உண்மை எதுவாயினும், இவன் கடைச்சங்க காலத்தின் இறுதியில் வாழ்ந்தவன் என்று கொள்வதில் தவறில்லை.

புலமை : உக்கிரப் பெருவழுதி ஒரு புலவனாகவும் இருந்தான். இவன் பாடிய பாடல்கள் இரண்டு, தொகை நூல்கள் இரண்டனுள் இடம் பெற்றுள்ளன.

இவனுடைய நண்பர்கள் : சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, சேரமான் மாரி வெண்கோ என்னும் பேரரசர்கள் இருவரும் உக்கிரப் பெரு வழுதியின் நண்பர்களாக இருந்தனர். இம்மன்னன் தன்னுடைய நண்பர்கள் இருவருடன் ஒருங்கிருந்தமையைக் கண்ட **ஔவையார்,** அக்காட்சியைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

ஔவையார் கூற்று : பழங்காலத்தில் தமிழ் நாட்டு முடி மன்னர் மூவரும் ஒருவர்க்கொருவர் பகை கொண்டிருந்தனர். அவர்கள் மூவரும் ஒற்றுமையுடன் வாழ்ந்தார்களல்லர் உக்கிரப் பெருவழுதி, சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, சேரமான் மாரிவெண்கோ ஆகிய மூவரும், நட்புரிமை

பூண்டு, ஒரு முறை ஒருங்கிருந்த காட்சி ஔவையாருடைய உள்ளத்தைக் கவர்ந்தது. இவ்வாறு தமிழ் நாட்டுப் பேரரசர்கள் ஒற்றுமையுடன் வாழ்ந்தால், தமிழ்நாடு தனிப்பெருமை பெற்று விளங்கும் என்று அவர் கருதினர். இங்ஙனம் ஒருங்கிருந்த மூவரையும் இவர் உள்ளங் கனிந்து வாழ்த்திய பாடல் ஒன்று புறநானூற்றின்கண் இடம் பெற்றுள்ளது.

இவன் வாழ்ந்த காலத்தைப் பற்றி ஓர் ஐயம் : சோழன் இராசசூயம் வேட்ட பெருநற் கிள்ளி இம்மன்னனுடன் நட்புக் கொண்டிருந்தான் என்று ஔவையார் பாடலிலிருந்து தெரிகிறது. எல்லா மன்னர்களையும் வென்று அடக்கிய பின்னரே 'இராசசூயம்' என்னும் யாகத்தைச் செய்ய வேண்டும். சேரன் செங்குட்டுவனது உதவியைப் பெற்றுச் சிலரை இச்சோழன் வென்றுன் என்று நூல்களிலிருந்து தெரிகிறது. உக்கிரப் பெருவழுதியோ பெரு வீரன் என்பது, 'கானப் பேரெயில் தந்த' என்னும் அவனது அடைமொழிகளிலிருந்து நாம் நன்கு உணரலாம். இத்தகைய வீரனுகிய வழுதியையும் அச்சோழன் வென்றுன் என்று திட்டமாகத் தெரியவில்லை. இந்நிலையில், எதனையும் அறுதியிட்டு முடிவு கூறுதல் இயலாது.

13. சங்க காலப் பாண்டியருடைய அரசியல் நெறி

அரசனுக்கு அறவுரை கூறுவோர்-அரசர்க்கு உரிய அடையாளக் குறிகள்-அரசர்க்கு உரிய ஆறு அங்கங்கள்-பாண்டியருடைய செங்கோன்மை-நாட்டை ஆண்ட முறை-வாணிகமும் தொழிலும்-கல்வி வளர்ச்சியும் தமிழ்த் தொண்டும்.

அரசனுக்கு அறிவுரை கூறுவோர் : பண்டைப் பாண்டியர்கள் தம் நாட்டைக் கண்ணுங் கருத்துமாகக் காத்தனர். அவர்கள் தம் மனம்போன போக்கில் அரசியல் செலுத்துவதில்லை. **ஐம்பெருங் குழுவினர், எண்பேராயத்தார்** என்போர் பாண்டிய மன்னர்கட்கு அரசியல் துறையில் அறிவுரை கூறி வந்தனர். பாண்டியர்கள் தம் அரசியல் துறைகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு தலைவரிடம் ஒப்படைத்திருந்தனர். நாட்டின் அரசிறை வருவாய்களை மேற்பார்வையிடுதல், அறங்களைப் பாதுகாத்தல் முதலியவற்றிற்குத் தனித்தனித் தலைவர்கள் இருந்தனர். எல்லாத் தலைவர்களையும் ஒன்று கூட்டி, ஆராய்ச்சி நடத்திய பின்னரே பாண்டிய அரசர்கள் பெருஞ்செயல்களைச் செய்ய முற்பட்டனர்.

அரசர்க்குரிய அடையாளக் குறிகள் : பண்டைப் பாண்டிய மன்னர்கள் பலவகை அடையாளக் குறிகளை வைத்திருந்தனர். அந்தக் குறிகளுக்கு எத்தகைய இழிவும் வாராமல் அம்மன்னர்கள் போற்றி வந்தனர். குடையும் கொடியும், முடியும் செங்கோலும், முரசும் காவன் மரமும் அடையாளக் குறிகளில் சிலவாக விளங்கின.

அரசர்க்குரிய ஆறு அங்கங்கள் : தெய்வப் புலமைத் திருவள்ளுவனர் **"படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும் உடையான் அரசருள் ஏறு"** என்று கூறியுள்ளார். படையும், குடியும், விளைவும், அமைச்சும், நட்பும், அரணும் அரசர்க்கு உரிய ஆறு அங்கங்கள் என்பதனை இக்குறட்பாவிலிருந்து நாம் உணரலாம். படை என்பது அரசனுடைய படை வீரர்களையும், படைக்கலங்களையும் குறிக்கும். குடி என்பது அரசனுக்கு உயிர் போன்ற குடி மக்களைக் குறிக்கும். கூழ் என்பது குடி மக்கள் உயிர் வாழ்க்கைக்கு

"முற்றுணர்வோர் ஒன்றும் மொழியார்."—நீதிவெண்பா.

இன்றியமையாத உணவுப் பொருள்களின் விளைவைக் குறிக்கும். அமைச்சு என்பது அரசனுக்கு உறுதி கூறி, அரசியல் நடத்தப் பேருதவி செய்யும் அமைச்சரைக் குறிக்கும். நட்பு என்பது அரசனுடைய நட்பினரைக் குறிக்கும். அரண் என்பது அரசனது நாட்டிற்கு அமைந்த காவல்களைக் குறிக்கும். பாண்டிய மன்னர்கள் இந்த ஆறு அங்கங்களையும் குறைவின்றிப் பெற்றிருந்தனர் என்று சங்க நூல்களிலிருந்து ஒருவாறு தெரிகிறது.

பாண்டியருடைய செங்கோன்மை : பாண்டிய மன்னர்கள் செங்கோலாட்சி புரிதலையே பெரிதும் விரும்பினர். கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி என்னும் பாண்டிய மன்னன், தமக்கென வாழாமல் பிறர்க்கென முயல்வோர் இருத்தலால்தான் உலகம் நிலை பெற்றுள்ளது என்று பாடியுள்ளான். பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், தன் ஊழ்வினை வயத்தால் ஆராயாமல் கோவலனைக் கொல்வித்தான். தனது பிழையை உணர்ந்த அளவில் அவன் தன் உயிரை விடுத்தான். தீவினை வளைத்த கோலை அவனது செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோலாக்கி விட்டது. தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனே, 'பகைவரை யான் வெல்லவில்லையேல் குடி பழி தூற்றும் கொடுங்கோலனுவேன்' என்று வஞ்சினம் செய்தான். இவற்றிலிருந்து பாண்டியர்கள் செங்கோலரசர்களாக வாழ்தலையே விரும்பினர் என்பதை நாம் உணரலாம். மேலும், அவர்கள் அறப்போர் புரிவதில் நாட்டங் கொண்டிருந்தனர் என்று தெரிகிறது.

நாட்டை ஆண்ட முறை : பாண்டியர் காலத்தில் பாண்டி மண்டலப் பகுதி நாடு என்றும், கூற்றம் என்றும் சில பிரிவுகளாக அமைந்திருந்தது. நிலவரி, சுங்கவரி முதலிய வரிகளும், பகைவரிடமிருந்து அரசன் பெற்ற பொருள்களும் அரசனுடைய வருவாய்கள். பழங்காலத்து மன்னர்கள் தம்முடைய அலுவலாளர்கட்கு ஏனுதி, காவிதி போன்ற பட்டங்களைத் கொடுத்திருந்தனர். பிற்காலப் பாண்டியர் காலத்தே வழக்கத்தில் இருந்த தேர்தல் முறை, நில அளவு, இறையிலி நிலங்கள் வழங்குதல், அளவைகள், நாணயங்கள் முதலியன பண்டைப் பாண்டியர் காலத்தில் அமைந்திருத்தல் கூடும்.

வாணிகமும் தொழிலும் : பண்டைப் பாண்டியர் காலத்தில் உள் நாட்டு வாணிகமும், அயல் நாட்டு வாணிகமும் நன்கு நடைபெற்று வந்தன. பாண்டி நாட்டின் சில பகுதிகளில் பழங் காலத்து உரோமாபுரி நாணயங்கள் காணப்படுகின்றன. எனவே, பண்டைப் பாண்டியர் கடல் வாணிகத்தில் கருத்தினைச் செலுத்தியிருந்தனர் என்பதனை உணரலாம். பாண்டி நாட்டைச் சேர்ந்த கொற்கையில் முத்துக் குளிக்குந் தொழில் நன்கு நடைபெற்றது. ஆடை நெய்தல், உப்பு விளைவித்தல், மீன் பிடித்தல் போன்ற தொழில்களும், அக்காலத்தே நடைபெற்று வந்தன.

கல்வி வளர்ச்சியும் தமிழ்த்தொண்டும் : பண்டைப் பாண்டிய மன்னர்களுள் பலர் கவிஞர்களாக வாழ்ந்தனர்; புலவர்களைப் போற்றினர்; நூல்களை இயற்றுவித்தனர்; கல்வி வளர்ச்சியில் நாட்டங் கொண்டிருந்தனர். செந்தமிழ் வளர்த்த பெருமை பண்டைப் பாண்டியருக்கு உரியது. செந்தமிழ் நாடு என்பது பாண்டி நாடே என்று குறிக்கப்பட்டுள்ளது. எனவே, பண்டைப் பாண்டியர் பிறநாட்டு அரசர்கட்கு வழி காட்டிகளாகத் திகழ்ந்து, அரசியல் நடத்தினர் என்பதை நாம் உணரலாம்.

" அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்."—வள்ளுவர்.

14. பண்டைத் தமிழர் போர் முறை

போர்க்குக் காரணம்-போரின் தொடக்கம்-அடையாளப் பூக்கள் (புறப்பொருள் வெண்பாமாலை கூறும் செய்தி)போர்-வீரம்-நடுகல்.

போர்க்குக் காரணம் : பழந்தமிழ் அரசர்கள் நாடுகளைச் சேர்த்தலில் "போதுமென்ற மனம்" பெறுதவர்களாய் இருந்தனர். தானே பேரரசனாக விளங்க வேண்டும் என்று ஒவ்வொரு அரசனும் நினைத்தான். இவை பற்றிப் போர்கள் தொடங்கின. பேரரசர் சிலருடைய ஆதிக்க வெறியைப் பொறுமல் சிற்றரசர்கள் சிலரும் போர்க்கு எழுந்தனர்.

போரின் தொடக்கம் ; பொருளிலக்கணத்தின் ஒரு பகுதி புறப்பொருள் ஆகும். புறப்பொருள் இலக்கணம் பழந்தமிழரின் போர் முறையை விரிவாகக் கூறுகிறது. பழந்தமிழ் மன்னர்கள் அறப்போர் புரிவதில் விருப்பம் கொண்டிருந்தனர். படையெடுக்கும் அரசன், பகைவர் நாட்டில் வாழும் பசு, அந்தணர், பெண்டிர், பிணியாளர், புதல்வரைப் பெறுதோர் ஆகியோர்க்குத் தீங்கு செய்யமாட்டான். அதுபற்றிப் படையெடுப்பவன் தனது படையெடுப்பை முன்னதாக முரசறைந்து பகைவர் நாட்டில் அறிவித்து விடுவான். அவ்வளவில் அவர்கள் யாவரும் பாதுகாவலான இடத்தை அடைந்து விடுவர். ஆயின், பசுக்கள் எவ்வாறு செல்லும்? அதன்பொருட்டுப் படையெடுக்கும் அரசன் முதற்கண் பகைவருடைய பசு நிரைகளைக் கவர்வான். இவ்வாறு பசு நிரைகளைக் கவர்தல் '**வெட்சி**' என்றும், தம் பசு நிரைகளைப் பகைவர் மீட்டல் '**கரந்தை**' என்றும் புறப்பொருள் இலக்கணம் கூறும்.

அடையாளப் பூக்கள் : பழங்காலத்தில் கைகலந்து செய்யும் போர் முறையே வழக்கத்தில் இருந்தது. இவ்வாறு இருபடை வீரர்கள் கலந்து போர் செய்யுங்கால், ஒரு வீரன் தனது பகைவனைச் சார்ந்த வீரர்கள் யாவர் என்று உணர வேண்டுமன்றோ? இல்லையேல் சோழநாட்டு வீரன், சோழநாட்டு வீரன் ஒருவனுடனேயே போர் செய்யுமாறு நேரிடுதல் கூடுமன்றோ? இதன் பொருட்டு அக்கால மன்னர்கள் அடையாளப் பூக்களையும் மாலைகளையும் சூடினர்; தம் படை வீரர்களையும் சூடுமாறு செய்தனர். பசுக்களைக் கவர்வோர் **வெட்சி** மாலையினையும், பசுக்களை மீட்போர் **கரந்தை** மாலையினையும், பகைவரது நிலத்தைக் கவரப் போர் செய்வோர் **வஞ்சி** மாலையினையும், எதிர்த்து நிற்போர் **காஞ்சி** மாலையினையும், பகைவரது மதிலை முற்றுகையிடுவோர் **உழிஞை** மாலையினையும், தம் மதிலைக் காப்போர் **நொச்சி** மாலையினையும், இருபடையினரும் போர் செய்யுங்கால் **தும்பை** மாலையினையும், வெற்றி பெற்றோர் **வாகை** மாலையினையும் சூடுதல் வழக்கம் என்று **புறப்பொருள் வெண்பாமாலை** என்னும் இலக்கண நூல் கூறுகின்றது.

போர் : யானை, தேர், குதிரை முதலியவை அக்காலத்துப் போரில் பெரும் பங்கு கொண்டன. போரில் வாள், வேல் முதலிய படைக்கலங்களைக் கொண்டு பழந்தமிழ் மன்னர்கள் போர் செய்தனர். சோதிடன் குறிப்பிட்ட நன்னாளிலேயே அவர்கள் போர் செய்யக் கிளம்புவர். போரில் பகைவர்களுடைய ஊர்களைக் கொளுத்தும் வழக்கம் அக்காலத்தில் இருந்தது. அக்காலத்து மதிற்போர் அச்சம் தருவதாகும். மதில்களில் அமைக்கப்பட்ட பொறிகள் படைக் கலங்களை வீசுதல், பகைவர் மதில்களில் ஏற ஏணிகளை நிறுவுதல்,

யானைகளைக் கொண்டு மதிற் கதவுகளை இடித்தல், முதலிய காட்சிகளை மனக் கண்ணில் கொண்டுவந்து பார்த்தாலும் அச்சம் உண்டாகும். போரில் வெற்றி கொண்ட அரசன் மறக்கள வேள்வி செய்வான்.

வீரம் : பழந்தமிழரசர்கள் அறப்போர் செய்வதில் பெரு விருப்பம் காட்டினர் என்பது முன்பு குறிப்பிடப்பட்டது. தோற்று ஓடியவருடன் போர் செய்தல் இழிவு என்று அக்கால மன்னர்கள் கருதினர். அவ்வாறு போர் செய்யாமை பெரு வீரமாகக் கருதப்பட்டது. பகைவர் விடுத்த வேலைக் கண்டு கண்ணிமைத்தலும் வீரத்திற்கு இழுக்கு என்று அக்காலத்தில் கருதப் பட்டது. பழந்தமிழ்ப் பெண்டிரில் சிலர் பெரு வீரம் கொண்டு வீரத் தாய் மார்களாக விளங்கினர் என்று நூல்கள் கூறுகின்றன.

நடுகல் : போரில் வீரம் காட்டி இறந்தோருடைய நினைவுக்கு அறி குறியாகக் கல் நாட்டும் வழக்கம் அக்காலத்தில் இருந்தது. அவ்வாறு நாட்டப்படும் கல்லுக்கு '**நடுகல்**' என்பது பெயர். இறந்த வீரருடைய பெயர், புகழ் முதலானவை அக்கல்லின்கண் பொறிக்கப்படுதல் வழக்கம். நடுகல்லைப் பூசிக்கும் வழக்கமும் அக்காலத்தில் இருந்தது.

கட்டுரைக் குறிப்புக்கள்

*இக்குறியிட்டவை தேர்வுக்கு முக்கியமானவை

***1.** சங்ககாலம் பற்றி நாம் அறிபவை :

தமிழ்ச் சங்கம் நிறுவியவர்கள் பாண்டியர்களே. தலைச்சங்கம், இடைச் சங்கம், கடைச்சங்கம் என்று மூன்று சங்கங்கள் இருந்தன என்று இறையனார் அகப்பொருள் உரை கூறுகிறது. ஒவ்வொரு சங்கத்திலும் இருந்த புலவர்கள், பாண்டிய மன்னர்கள், சங்கம் இருந்த இடம், சங்கச் சான்றோர் இயற்றிய நூல் கள் முதலியவை அவ்வுரை நூலுள் குறிப்பிடப்பட்டுள்ளன. தலைச்சங்கம் தென்மதுரையிலும், இடைச்சங்கம் கவாடபுரத்திலும், கடைச்சங்கம் தற் பொழுதைய மதுரையிலும் நிறுவப் பெற்றிருந்தன. கவாடபுரத்தைப் பற்றிய குறிப்பு வால்மீகி ராமாயணத்திலும், அர்த்த சாத்திரத்திலும் உள்ளது. கடல் கோளைப் பற்றி இலங்கை மகாவம்சம் குறிப்பிடுகிறது. கி. மு. 2 முதல் கி. பி. 2 முடிய கடைச்சங்க காலம்.

2. பாண்டியர்களுடைய நாடும் குடியும் பற்றி நீவிர் அறிவன யாவை?

தமிழ் நாட்டின் தென் பகுதியே பாண்டிநாடு. கன்னியா குமரிக்குத் தெற்கே லெமூரியா என்னும் பெயர்கொண்ட பெரு நிலப்பகுதி இருந்தது. குமரி எனப் பெயர் கொண்டு ஒரு மலையும், ஓர் ஆறும் இருந்தன. செந்தமிழ் நாடு பாண்டி நாடே. பாண்டியரைப் பற்றிய செய்திகள் பழைய வடமொழி நூல்களிலும், மேனாட்டறிஞர் குறிப்புக்களிலும் காணப்படுகின்றன. எனவே, பாண்டியர் தொன்மை வாய்ந்தவர். பாண்டியர் சந்திரமரபினர்.

***3.** பாண்டிய நாட்டுத் தலைநகரங்களின் சிறப்பியல்புகள் :

கடல் கோள்களால் தலைநகரங்கள் பல ஆயின. முதற் சங்க காலத்தில் தலைநகரம் தென்மதுரை; இடைச்சங்க காலத்தில் கவாடபுரம் ; கடைச்சங்க காலத்தில் தற்பொழுதைய மதுரை; கூடல், ஆலவாய் என்னும் பெயர்கள்

தற்பொழுதைய மதுரையின் வேறு பெயர்கள். மதுரையில் கோயில், மடம், சோலைகள், மதில், பெருந்தெருக்கள் முதலியன இருந்தன. கடைச்சங்க காலத்தில் கொற்கையில் முத்துக் குளிக்கும் தொழில் நடைபெற்றது.

***4.** நிலந்தரு திருவிற் பாண்டியன் செய்த செயல்கள் :

இடைச் சங்கத்தின் இறுதியிலும், கடைச் சங்கத்தின் தொடக்கத்திலும் வாழ்ந்த முடத் திருமாறனே நிலந்தரு திருவிற் பாண்டியன்—இவன் காலத்தில்தான் தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்டது—பஃறுளி யாற்றை வெட்டியவனும், கடல் வடிம்பலம்ப நின்ற பாண்டியன் என்று சுட்டப்படுகின்றவனும் இவனே—கடல் கடந்து படையெடுத்து வெற்றி கொண்டவன் இவன்.

***5.** பாண்டியன் பல் யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி :

பல யாகங்களைச் செய்தவன்—காரி கிழார், நெட்டிமையார், நெடும் பல்லியத்தனார் ஆகிய மூன்று புலவர்கள் இவனைப் பாடியுள்ளனர்—பண்டைத் தமிழர் அறப்போர் முறைபற்றி நெட்டிமையார் குறிப்பிட்டுள்ளார்—அசுவமேதம், இராச சூயம் போன்ற யாகங்களையே இவன் செய்திருத்தல் வேண்டும்.

6. பொற்கைப் பாண்டியனைப் பற்றி வழங்கும் வரலாறு :

சிலப்பதிகாரச் செய்தி - இரவில் நகர் சோதனை—கீரந்தை என்னும் அந்தணனது தல யாத்திரை—அந்தணர்கட்கு அரிசி கொடுத்தமை—அந்தணன் வீட்டுக் கதவை அரசன் தட்டுதல்—அந்தணர்கள் முறையீடு—அரசன் தன் கையை வெட்டிக் கொள்ளுதல்—பொற்கை அமைந்தமை.

***7.** பிசிராந்தையாரும் அறிவுடை நம்பியும் :

அறிவுடைநம்பி கடைச் சங்க காலத்தவன் - பிசிராந்தையாரும் கோப்பெருஞ் சோழனும் ஒருவரை ஒருவர் காணுமல் இருந்த பொழுதே நட்புடன் இருந்தமை - சோழன் வடக்கிருந்தமை - பிசிராந்தையாரும் வடக்கிருந்தமை - பிசிராந்தையாருக்கு நரையில்லை - காரணம் - அறிவுடை நம்பியின் செங்கோன்மை - அறிவுடை நம்பிக்குப் பிசிராந்தையார் கூறிய அறிவுரை - அறிவுடை நம்பி ஒரு புலவன் - குழந்தையின்பத்தைப் பற்றிப் பாடியுள்ளான்.

***8.** பூதப் பாண்டியனும் பெருங் கோப்பெண்டும் :

பூதப்பாண்டியன் ஒல்லையூரை வென்றவன் - இவன் ஒரு புலவன் - வஞ்சினப் பாடல் - வஞ்சினம் விளக்கும் செய்திகள் - பெருங்கோப்பெண்டின் புலமை—பாடல்—பெருங்குணங்கள்—கற்பும், அறிவுரையும் - கணவனுடன் உயிர் துறந்தமை.

9. மதிவாணனும் இளம்பெரு வழுதியும் :

இருவரும் புலவர்கள்—பாண்டியன் மதிவாணனைப்பற்றி அடியார்க்கு நல்லார் எழுதிய குறிப்பு—மதிவாணனார் நாடகத் தமிழ் நூல் - இளம்பெரு

வழுதி கடலுள் மாய்ந்தவன்—இளம்பெருவழுதி பாடிய பாடல்கள் பரிபாடலிலும், புறநானூற்றிலும் உள்ளன – அவன் கூறும் அறிவுரைகள் – தனக்கென முயலாமல் பிறர்க்கெனப் பாடுபடுதல்.

***10.** கோவலனைக் கொல்வித்த பாண்டியன் யாவன்? அவனைப்பற்றித் தெரிவன யாவை?

ஆரியப் படை கடந்தவன்—நெடுஞ் செழியன்—ஆராயாமல் கோவலனைக் கொல்வித்தான் – கோவலன் வரலாறு, கண்ணகி வழக்குரைத்தமை—நெடுஞ் செழியன் இறந்தமை—அவனது செங்கோன்மை—கோவலனது பழவினை – பாண்டியனது மனைவி கோப்பெருந்தேவி இறந்தமை—நெடுஞ்செழியன் ஒரு புலவன்—கல்வி கற்றலின் சிறப்பை அவன் பாடியுள்ளான்.

***11.** மதுரைக் காஞ்சி கொண்ட நெடுஞ்செழியனைப் பற்றி விளக்கி வரைக :

தலையாலங் கானத்தை வென்றவன்—இளமையில் பெரு வீரம் காட்டினுன் – ஒரு புலவன் – வஞ்சினப் பாடல் விளக்கும் செய்திகள் – புலவர்களிடம் பெரு மதிப்பு—மதுரைக் காஞ்சி கொண்டவன் – மாங்குடி மருதனார், இடைக் குன்றூர் கிழார், குடபுலவியனார், கல்லாடனார் என்போரால் பாடப் பெற்றவன் – மாங்குடி மருதனார் இவ்வுலக நிலையாமையை இவனுக்கு உரைத்தார்.

12. உக்கிரப் பெரு வழுதி :

'கானப்பேர்' என்னும் கானையார் கோவிலைக் கைப்பற்றி, வேங்கை மார்பனை வென்றவன் – கடைச் சங்க காலத்துக் கடைசி அரசன் – ஒரு புலவன் – சோழன் இராசசூயம் வேட்ட பெருநற் கிள்ளியும், சேரமான் மாரி வெண் கோவும் இவனுடைய நண்பர்கள் – அம் மூவரும் ஒருங்கிருக்குங்கால் ஔவையார் பாடினார் – காலத்தைப் பற்றிய ஐயம்.

***13.** சங்க காலப் பாண்டியருடைய அரசியல் நெறி :

அரசனுக்கு அறவுரை கூறுவோர் – ஐம்பெருங்குழுவினர், எண்பேராயத்தார் – அரசர்க்கு அடையாளக் குறிகள் – படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்னும் ஆறு அங்கங்கள் அரசர்க்கு உரியன – பாண்டியர் செங்கோன்மை – பொற்கைப் பாண்டியன் கை குறைத்தமை, பாண்டியன் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் மயங்கி வீழ்ந்து இறந்தமை – பாண்டியர்கள் நாட்டை ஆண்ட முறை – வாணிகமும் தொழிலும் – கலை வளர்ச்சியும், கல்வித் தொண்டும்.

***14.** பண்டைத் தமிழர் போர் முறை :

போர்க்குக் காரணம் – போரின் தொடக்கம் – பறை அறைந்து மெலியோரை அப்புறப்படுத்துதல் – பசு நிரைகளைக் கவர்தல் – வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை, வாகை ஆகிய அடையாளப் பூக்கள் – போர்ப் படைக்கலங்கள் – மதிற்போர் – மறக்கள வேள்வி – பழந் தமிழர் வீரம் – நடுகல் – இறந்த வீரர்க்கு வழிபாடு.

"கேடில் விழுச்செல்வம் கல்வி."—வள்ளுவர்.

நல்லொழுக்கப் பயிற்சி

சங்ககாலப் பாண்டியர்

தமிழை வளர்த்த பெருமை பாண்டியர்க்கு உரியது என்பதனை இந் நூலிலிருந்து நீங்கள் உணர்ந்தீர்கள். பாண்டியர்கள் சங்கங்களை நிறுவினர்; புலவர்களைப் பொன்னேபோல் போற்றினர்; பாடல்களைப் பாடுவித்தனர்; தமிழ் நூல்களை இயற்றுவித்தனர்; தமிழ்க் கல்வியைச் சந்து பொந்துகளிலும், பட்டி தொட்டிகளிலும் பரப்ப முயன்றனர். பாண்டியன் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியனைப் பற்றி நினைத்துப் பாருங்கள். கோவலனைக் கொல்வித்தவன் அவன் என்பதனை மறந்து, அவன் பாடிய பாடலை நினைத்துப் பாருங்கள். அவன்,

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்

பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே"

என்று பாடியுள்ளான்.

எவ்வாறு கல்வி கற்க வேண்டும் என்பதைப் பற்றிப் பேரரசன் ஒருவன் பாடிய பாடலின் அடிகள் அவை. கற்றல் நன்று என்கின்றான் அவன். எவ்வாறு கற்றல் வேண்டும்? தேவையுள்ள பொழுது ஆசிரியர்க்கு உதவ வேண்டும்; மிக்க பொருள் கொடுக்க வேண்டும்; வெறுப்பின்றி அவரை வழிபட வேண்டும்; அவர் மனமுவந்து கற்பிக்கும் கல்வியைப் பெற வேண்டும்.

மாணவச் செல்வர்களே! பாண்டியனது அறவுரையை நீங்கள் பின்பற்றுங்கள்; ஆசிரியர்கட்கு மதிப்புக் கொடுங்கள்; ஆசிரியரைக் கடவுளாகக் கருதுங்கள். "எழுத்தறி வித்தவன் இறைவன் ஆகும்" என்பதை நீங்கள் உணர்வீர்கள். ஆசிரியரை வழிபட்டு நீங்கள் பெறும் கல்விச் செல்வம் அழிவில்லாததாகும். அத்தகைய செல்வத்தைப் பெற்றால் நீங்கள் உயர்வீர்கள்; நாடு உயரும்; மொழி செழிக்கும். அப்பொழுது உலகோர் நம்மையும், நம் நாட்டையும், நம் மொழியையும் போற்றுவர்.

"வாழிய செந்தமிழ் வாழ்கநற் றமிழர்

வாழிய பாரத மணித்திரு நாடு"

பன்முறை படித்துப் பயன் பெறுக

(சங்ககாலப் பாண்டியர்)

பக்கம் 3 :
வரி 3 முதல் 7 முடிய.

பக்கம் 5 :
இரண்டாம் பத்தி முழுவதும்; இறுதிப் பத்தியில் இரண்டு வரிகள்.

பக்கம் 6 :
பக்கம் முழுவதும்.

பக்கம் 7 :
முதற்பத்தி முழுவதும்.
இறுதிப் பத்தியில், "அழிந்தன போக......ஆகியவைகளாம்."

பக்கம் 11 :
இரண்டாம் பத்தி முழுவதும்.

பக்கம் 13 :
பக்கம் முழுவதும்.

பக்கம் 14 :
பக்கம் முழுவதும்.

பக்கங்கள் 22, 23,
'கொற்கை' என்னும் தலைப்பில் காண்பவை முழுவதும்.

பக்கம் 29 :
இரண்டாம் பத்தி முழுவதும்.

பக்கம் 30 :
இரண்டாம் பத்தி முழுவதும்.

பக்கம் 41 :
பத்திகள் இரண்டும், நான்கும்.

பக்கம் 42 :
முதற் பத்தி முழுவதும்.

பக்கம் 43 :
இரண்டாம் பத்தி முழுவதும்.

பக்கம் 49 :
இறுதிப் பத்தியின் தொடக்கம்.

பக்கம் 50 :
முதற் பத்தியின் எஞ்சிய பகுதி.

பக்கம் 55 :
முதற் பத்தி முழுவதும்.

பக்கங்கள் 74, 75
'உறுதிச் சுற்றம்' என்னும் தலைப்பில் காணப்படுபவை.

பக்கம் 83 :
முதற் பத்தி முழுவதும்.

பக்கம் 89 :
இறுதிப் பத்தி முழுவதும்.

" பயவாக் களர்அனையர் கல்லா தவர்."—வள்ளுவர்.

3. ஏழை பங்காளன்

கதைச் சுருக்கம்

ஜான் வல் ஜான் ஒரு ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவன். இளமையிலேயே பெற்றோர்களை இழந்து, தமக்கையால் வளர்க்கப்பட்டான். தமக்கையின் கணவன் இறக்க, வறுமையால் பட்டினி கிடந்த அவளுடைய குழந்தைகளுக்காக, ஜான் ஒரு ரொட்டிக் கடையில் திருடினன். அதற்காக ஐந்து ஆண்டுகள் அவனுக்குச் சிறைத் தண்டனை கிடைத்தது. உடன்பிறந்தவளின் ஏக்கமாகவே பலமுறை சிறையிலிருந்து ஜான் தப்ப முயன்றான். எனவே, தண்டனை அதிகரிக்கப்பட்டுப் பத்தொன்பது ஆண்டுகள் சிறையிலேயே அவ வாடினன்.

விடுதலை அடைந்ததும் சமூகம் அவனைப் பழங் குற்றவாளி எனப் புறக்கணித்தது. ஒரு பாதிரியார் மட்டும் அவனுக்கு இடமும் உணவும் கொடுத்தார். அன்றிரவே அவருடைய வெள்ளிச் சாமான்களை ஜான் திருடினன். ஆனல், அவர் ஜானைப் போலீஸுக்குக் காட்டிக் கொடுக்காமல் காத்தார். அவர் உபதேசப்படி, ஜான் **மோந்த்ரேல்** என்ற ஊரில் ஒரு கண்ணடித் தொழிற்சாலையை அமைத்தான். விரைவில் **மாடலின்** என்ற புதுப்பெயருடன் இருந்த ஜான் பெரிய பணக்காரனகி, ஏழைகளுக்கு மிகவும் உதவி செய்தான். மக்கள் மதிப்பைப் பெற்ற மாடலின் பிரெஞ்சு மன்னரால் மேயராக்கப் பட்டான். மேயர் மாடலின், ஒரு சமயம் வண்டிக்கடியிலகப்பட்ட ஒரு கிழவனைக் காத்தார். காமுகனல் துன்புறுத்தப்பட்டுத் தண்டனையடைந்த அநாதையான **பாந்தேன்** என்பவளை மேயர் என்ற முறையில் விடுதலை செய்தார். அவளது மகளைக் காப்பதாகவும் உறுதிமொழி கொடுத்தார்.

இன்ஸ்பெக்டர் **ஜேவர்ட்** மட்டும் மாடலினைச் சந்தேகித்தான். யாரோ ஒரு நிரபராதி குற்றவாளியாக அகப்பட்டுக் கொண்டான். ஜான் வல் ஜானே அவன் என்றும், அவனை இன்று விசாரிக்கப் போவதாகவும் மாடலின் கேள்விப்பட்டார். நிரபராதி தண்டிக்கப்படுவதை ஜான் விரும்பவில்லை. அவர் கோர்ட்டுக்கு விரைந்தார்; தாமே குற்றவாளி என நிரூபித்தார். ஆனல், அச்சமயம் யாரும் அவரைக் கைது செய்ய முன்வரவில்லை. **பாந்தேன்** மரணப் படுக்கையில் இருந்தாள். அவ்விடத்தில் ஜானைக் கைது செய்ய ஜேவர்ட் வந்தான். அந்த அதிர்ச்சியால், **பாந்தேன்** இறந்தாள்.

ஜான் மறுபடியும் டூலோன் துறைமுகத்தில் கடலில் விழுவதுபோல் நடித்துத் தப்பித்தான். நேராகத் தெனடியரிடம் சென்று, **பாந்தேனின்** மகள் **கோஸெத்தைப்** பணம் கொடுத்து மீட்டான். தானும் கன்னிமடத்தில் வேலையாளாக அமர்ந்து, கோஸெத்தைப் பள்ளிக்கனுப்பிப் படிக்க வைத்தான். பாரிஸில் **ஜில் நார்மன்** பெரிய பணக்காரன். அவன் பேரன் **மாரியஸ்**. அவன் குடியரசுக் கட்சியில் சேர்ந்து புரட்சி செய்தான். கோஸெத்தும் மாரியஸும் காதலுற்றனர். அரசாங்கப் படை சூழ்ந்து கொண்டபோது, மாரியஸை ஜான் காத்துப் பாதாளச் சாக்கடை வழியாகக் கொண்டு வந்து ஜில் நார்மனிடம் சேர்த்தான். பிறகு மாரியஸ், கோஸெத் இருவருக்கும் திருமணம் நடந்தது. ஜான் சேர்த்து வைத்த ஆறு லட்சம் பிராங்கை அவளுக்குச் சீதனமாகக் கொடுத்துச் சில நாளில் இறந்துபோனன். ஜானின் உள்ளத்தை உணர்ந்து, அந்தத் தியாகியைக் கைது செய்ய விரும்பாமல், ஜேவர்ட் தற்கொலை செய்துகொண்டான்.

கதையில் வருபவர்களும் இடங்களும்

தெனடியர்: மோந்த்ரேல் நகரில் ஒரு ஹோட்டல் முதலாளி; ஒல்லியான தோற்றம் உடையவன்; திருட்டுத் தொழில் நடத்தி வந்தான்; அவன் மனைவியும் அவனுக்கு உடந்தையாக இருந்தாள்; போமர்ஸி வீரனின் பணப்பையையும், கடிகாரத்தையும் அவன் திருடினன். கோஸெத்தை வளர்ப்பதாகச் சொல்லி பாந்த்தேனை ஏமாற்றினன்; ஜானைச் சித்ரவதை செய்து பொருள்தேடத் திட்ட மிட்டான்; மாரியஸ் உதவியால், போலீஸ் வசம் அகப்பட்டுக் கொண்டான்.

போஷல்வான்: வண்டிக்கடியில் அகப்பட்டு இறக்கும் தறுவாயில் மேயர் மாடலினல் காப்பாற்றப்பட்ட கிழவன்; கன்னிமடத்தில் தோட்டவேலை செய்து வந்தான். ஜான் போலீஸில் சிக்காமல், இடம் தந்து காத்தான்; செய்ந் நன்றி மறவாதவன்.

போமர்ஸி: ஜில் நார்மன் என்ற பணக்காரனின் மருமகன்; அரசியல் கருத்து வேற்றுமையால் வீட்டைத் துறந்தான். குடியரசுப் படையில் வீரனக நெப்போலியனின் கீழ் பணியாற்றினன்; மக்களுக்காக உழைத்த தியாகி; வாடர்லூப் போரில் காயமுற்றுப் பின் குணமடைந்தான்; மாரியஸின் தந்தை; திருடனயினும் உதவி செய்ததாக எண்ணியதால், அவன் இறக்கும் போதும் தெனடியருக்கு உதவும்படி மகனுக்குக் கடிதம் எழுதி வைத்தான்.

மாரியஸ்: போமர்ஸியின் மகன்; தீவிர குடியரசு வாதி; அதற்காகப் பணத்தையும் மாளிகையையும் துறந்து, ஏழைகள் வசிக்குமிடத்தில் வாழ்ந் தான்; சட்டப் பரீட்சையில் தேறினன்; கட்சிக்குத் தலைமை வகித்துப் போரிட் டான். எனினும், மயங்கி விழுந்த அவனை ஜான் காத்தான். கோஸெத்தைக் காதலித்து மணந்தான்; கடமை தவருதவன்; கடன் வாங்க மாட்டான்; சிறு தொகை இருந்தாலும் ஏழைகளுக்கு உதவுவான்.

பாந்த்தேன்: அழகான அநாதைப் பெண்; காமுகனல் துன்புறுத்தப் பட்டுத் தண்டனை அடைந்தபொழுது மாடலினல் காப்பாற்றப்பட்டவள். அவளுக்குக் கோஸெத் என்ற மகளுண்டு. பாந்த்தேன் கணவனல் ஏமாற்றப் பட்டு அனதையானள்; தெனடியரிடம் மகளை ஒப்புவித்து, வேலை செய்து, மகளைக் காத்து வந்தாள்; தன் கூந்தலையும் விற்ற தியாக குணமுடையவள்; தன்னைக் காத்த ஜான் கைது செய்யப்படுவதைக் காணச் சகியாமல் மன அதிர்ச்சியால் இறந்தாள்.

கோஸெத்: மிக்க அழகி; பாந்த்தேனின் மகள். ஜான் அவளைக் காத்துத் தெனடியரிடமிருந்து மீட்டான். அவளுக்காகவே ஜான் கன்னிமடத் தொழிலில் அமர்ந்து, அவளைப் படிக்க வைத்தான். கோஸெத்தின் காதலில் குறுக்கிட ஜான் விரும்ப வில்லை. உயிரையும் மதியாமல், பாதாளச் சாக்கடை வழியாக, கோஸெத்தின் காதலனன மாரியஸைக் காத்தான். கோஸெத் முடிவில் மாரியஸை மணந்தாள். ஜான் அவளுக்கு ஆறு லட்சம் பிராங்க் சீதனம் அளித்தான்.

மோந்த்ரேல்: ஜான் கண்ணடித் தொழிற்சாலை வைத்த நகர்.

மொம்பர்மேல்: தெனடியர் ஹோட்டல் இருந்த சிறு நகரம்.

"செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்."—வள்ளுவர்.

டிங்க்: மிரியல்சாமியார் வாழ்ந்த இடம்; விடுதலை யடைந்ததும் ஜான் அடைந்த இடம்.

டூலோன்: ஒரு துறைமுகப் பட்டினம். அங்கேதான் ஜான் பத்தொன்பது வருஷம் சிறையில் இருந்தான்.

பாரிஸ். பிரான்சு தேசத் தலைநகர்; பெரிய வியாபார நகரம்.

கட்டுரைகள்

---

(1) புறக்கணிக்கப்பட்ட சிறைக் கைதி

முன்னுரை - ஜான்வல் ஜானின் நிலைமை - தங்க இடந்தேடி அலைதல் - ஹோட்டலில் அடைந்த துன்பம் - தேநீர் விடுதி, மற்றொரு ஹோட்டல், ஒரு வீடு, நாய்க்குடிசை - எல்லா இடங்களிலும் ஜான் துரத்தப்பட்டமை - மாதா கோவிலை அடைதல் - முடிவுரை.

ஜான்வல் ஜானின் நிலைமை: ஜான்வல் ஜான் நெடுநாள் சிறையிலிருந்து வந்த கைதி. வேலை செய்து செய்து, அவன் உடல் நல்ல உரம் பெற்றிருந்தது. நடுத்தர உயரமுள்ளவன். அவனுக்கு நல்ல உடை கிடையாது; ஒரு குல்லாய் மட்டும் போட்டுக்கொண்டிருந்தான்; 1815-ஆம் ஆண்டு ஒருநாள் மாலை சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டான். நெடுநாட்கள் சிறைப்பட்டதால், உலகமே அவனுக்குப் புதியதாகத் தோன்றியது.

தங்க இடந்தேடி அலைதல், ஹோட்டலில் அடைந்த துன்பம்: ஜான்வல் ஜான் மனம்போன திசையில் நடந்துபோக ஆரம்பித்தான். நெடுந்தூரம் நடந்து, வியர்வை ஒழுக, மிகவும் களைப்புடன் ஒரு ஊரை அடைந்தான். அது **டிங்க்** என்னும் சிறிய நகரம். ஜானுக்கு மிக்க பசி; ஒரு ஹோட்டலை அடைந்து, இரவு தங்குவதற்கு இடமும் சாப்பாடும் கேட்டான். ஜானின் அழுக்கான உடையைப் பார்த்து, ஹோட்டல் முதலாளி ஜானிடம் பணம் இருக்குமோ என்று சந்தேகப்பட்டான். ஜான் தன் சட்டையிலிருந்து பணப்பையை எடுத்துக் காட்டியும் முதலாளிக்குச் சந்தேகம் தீரவில்லை. கதவருகில் ஜானை உட்காரச் சொல்லிவிட்டு, விசாரித்துக் கொண்டு வரும்படி, வேலைக்காரன் ஒருவனைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அனுப்பினான். அவன் சந்தேகத்திற்கேற்ப, ஜான் ஒரு பெரிய குற்றவாளி என்றும், நெடுநாள் சிறையிலிருந்து இப்போதுதான் விடுதலை செய்யப்பட்ட கைதி என்றும் தகவல் கிடைத்தது. உடனே, முதலாளி ஜானை வெளியேறும்படி கூறினான். ஜானுக்கு ஒன்றும் தோன்றவில்லை. குதிரை லாயத்திலாவது இடங் கொடுக்குமாறு வேண்டினான். அதுவும் மறுக்கப்படவே, ஜான் சாப்பாடாவது கொடுக்குமாறு கேட்டான். ஜான் பிடிவாதமாக இருப்பதைப் பார்த்த ஹோட்டல் முதலாளி தனக்குப் போலீஸ் அனுப்பிய குறிப்பையும் அவனிடம் கொடுத்துப் படிக்கச் சொன்னான். முதலாளி மிகவும் தாழ்மையாய்க்கேட்டுக்கொள்ள, வேறு வழியின்றி ஜான் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டான்.

தேநீர்விடுதி : நேரம் ஆக ஆக நன்கு இருட்டிவிட்டது. பசி அதிகரிக்க உணவு கிடைக்காதா என்ற ஏக்கத்துடன் தெருத்தெருவாக அலைந்தான். கடைசியில் ஜான் ஒரு தேநீர்க் கடையைப் பார்த்தான்; உணவும்த ங்க இடமும் கேட்டான்; கடைக்குச் சொந்தக்காரன் ஜானை உள்ளே அழைத்துப்போனான்; சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்களில் ஒருவன் முதலாளியிடம் சென்று, ஜானைப்பற்றிச் சொல்லிவிட்டான். மிக்க பசியினால் ஜான் சாப்பாட்டையே நோக்கிக்கொண்டிருந்தான். ஜானை உடனே வெளியேறும்படி முதலாளி கூறினான். கோபமான பேச்சுக்களைக் கேட்டுக்கொண்டு, ஒன்றுந் தோன்றாதவனாய் ஜான் வெளியே வந்தான்.

ஒரு வீடு : குளிரோ அதிகமாக இருந்தது ; பசியோ தாங்கமுடியாததாயிருந்தது; நடந்து நடந்து மிகவும் இளைத்திருந்தான் ஜான். பின்பு அவன் மற்றொரு ஹோட்டலுக்குப்போனான். அங்கிருந்தும் ஜான் துரத்தப்பட்டான். ஒரு வீட்டில் சென்று குடிக்கத் தண்ணீராகிலும் கொடுக்கும்படி அவன் கெஞ்சினான். வீட்டுக்காரன் துப்பாக்கியைக் காட்டி ஜானைத் துரத்திவிட்டான்.

நாய்க்குடிசை : எல்லோராலும் வெறுக்கப்பட்ட ஜானின் மனம் மிகவும் வேதனையடைந்தது. சிறுவர்கள் அவன்மீது கற்களை எறிந்தார்கள். குளிரும் பசியும் ஜானை வாட்டின. சிறிது தூரத்தில் ஒரு சிறு குடிசையைப் பார்த்தான். அதனுள் சென்றபோது, அது காலியாய் இருக்கக்கண்டு, அங்கேயே இரவைக் கழிக்கத் தீர்மானித்தான். ஒரு பெரிய நாய் குரைப்பது கேட்டது. அது நாய் உறங்கும் குடிசை என்று ஜான் தெரிந்துகொண்டு, நாயினிடமிருந்து மெதுவாகத் தப்பித்து, வெளியேறினான் ; நாயினும் கேடான தன்னை நினைந்து மிகவும் வருந்தினான்.

மாதாகோவிலை அடைதல் : சிறிது நடந்ததும், மாதாகோவில் மணி கேட்டது. அப்போது இரவு மணி எட்டு. ஜான் கோவில் அருகே இருந்த ஒரு கல் மேடைமீது படுத்துக்கொண்டான். அந்த வழியே வந்த ஒரு கிழவி குளிரில் கல்லின் மீது படுத்திருந்த ஜான்மீது பரிதாபப்பட்டாள். வேறு வழியில்லை என்பதைச் சொல்லி ஜான் வருத்தப்பட்டான். கிழவி, அருகில் இருந்த ஒரு வீட்டைக் காட்டி, அங்கு இடம் கிடைக்குமென்று சொல்லிவிட்டுப் போனாள். ஜான் அங்குச் செல்லப் புறப்பட்டான்.

(2) மாதாகோவில் திருட்டும் மிரியல்சாமியார் உபதேசங்களும்

முன்னுரை : மிரியல்சாமியார் வரலாறு - ஜானுக்கு உபசாரம் - மிரியல்சாமி உபதேசம் - பழைய கதையும் பாதிரியிடம் திருட்டும் - திருட்டு வெளிப்படல் - மிரியல்சாமியின் அன்புகனிந்த உபதேசம்-முடிவுரை.

மிரியல்சாமியார் வரலாறு : மாதாகோவில் அருகாமையில் இருந்த அந்தச் சிறிய வீடு பாதிரியார் குடியிருக்கும் இடம். அவர் பெயர் **மிரியல்சாமி.** எழுபத்தைந்து வயது நிரம்பிய அவருக்குப் **பாப்டீஸ்டீன்** என்ற ஒரு வயதான தங்கையும், பணிவிடை செய்ய ஒரு கிழ வேலைக்காரியும் உண்டு. பாதிரியார் மிகவும் நல்லவர்; ஏசுநாதர் உபதேசங்களை அப்படியே கடைப்பிடிப்பவர். எல்லாரிடமும் அன்பு காட்டி வந்ததால், மக்கள் அவரைப் பெருமதிப்புடன் நேசித்

தனர். முதலில் சாமியார் தங்குவதற்கும் பெரிய மாளிகை கட்டிக்கொடுத்தார்கள். பாதிரி தம் வீட்டிற்கு அருகில் இருந்த மருத்துவச் சாலைக்கு ஒரு நாள் சென்றபோது, நோயாளிகளுக்குப் போதிய இடவசதி இல்லாமல் இருப்பதைக் கண்டார். தமக்கும், மற்ற இருவர்க்கும் இவ்வளவு பெரிய மாளிகை வேண்டாம் என்று கூறித் தம் மாளிகையை மருத்துவச்சாலையாக்கி விட்டார். அன்றுமுதல் பாதிரியார் அந்தச் சிறு வீட்டிலேயே வசித்து வந்தார். பாதிரியாருக்குப் பதினைந்தாயிரம் பிராங்க் சம்பளம். ஆனால், அவர் தம் சொந்தச் செலவிற்கு ஆயிரம் பிராங்க்தான் எடுத்துக்கொண்டார். மீதியை ஏழைகளுக்குச்செலவிட்டார். அடிக்கடி பணத்துடன் ஏழைகளின் வீடுகள் தோறும் போய், அதைக் கொடுத்துவிட்டு வருவார். பாதிரியார் தம் கையில் பணம் இல்லாமல் இருந்தால்தான், பிரபுக்கள் வீட்டிற்குப் போவார். பொருள்கள் மீது பாதிரிக்கு அவ்வளவு பற்று கிடையாது. தங்கை பாப்டீஸ்டீனுக்கு அவர் செய்கைகளில் சில பிடிக்காவிட்டாலும், பதில் பேசாமல் கடமையைச் செய்து வந்தாள். சாமியார் ஒரு அறையைத் தொழுகையறையாக உபயோகித்தார். மற்றொன்றில் படுப்பது வழக்கம். மேல் மாடியில் தங்கையும் வேலைக்காரியும் படுத்துக்கொள்வர். யாராவது விருந்தினர் வந்தால், தொழுகை யறையில் தான் படுக்கவேண்டும். சாமியாருக்குரிய சாமான்கள் அதிகம் இல்லை. சில வெள்ளிப் பாத்திரங்களும், இரண்டு வெள்ளி விளக்குகளுமே விலையுயர்ந்தவை. அவற்றை இரவில் படுக்கையறையில் உள்ள அலமாரியில் வைப்பது வழக்கம்.

ஜானுக்கு உபசாரம்: இந்தப் பாதிரியின் வீட்டிற்குத்தான் ஜான்வல் ஜான் வந்து சேர்ந்தான். பாதிரியார் ஏதோ எழுதிக்கொண்டிருந்தார். நகரில் யாரோ திருடன் வந்திருப்பதாய் மக்கள் பேசிக் கொள்வதாக, பாப்டீஸ்டீன் சாமியாரிடம் சொன்னாள். சொல்லியும் வாசற் கதவைத் தாள்போடச் சாமியார் இணங்கவில்லை. அச்சமயம் ஜான்வல் ஜான் கதவைத் தட்டினான். உள்ளே வரும்படி சாமியார் கூற, ஜான் அவர் எதிரில் சென்று நின்றான். தங்கை பாப்டீஸ்டீனும் வேலைக்காரியும் ஜானைப் பார்த்துப் பயந்தனர். ஆனால், மிரியல்சாமி மட்டும் மிகவும் அன்பாக ஜானை வரவேற்றார். அவர் கேட்பதற்கு முன்னமே ஜான் தன் கதையைச் சொல்லி, யாரோ ஒரு கிழவி வழிகாட்ட அவரிடம் வந்ததையும் சொன்னான். பாதிரியார், மேலும் எந்தப் பதிலும் பேசாமல், சாப்பிடுவதற்கு மற்றொரு தட்டு எடுத்து மேசை மீது வைக்குமாறு வேலைக்காரியிடம் கூறினார். இதைக்கண்டு, ஜான், சாமியார் தன்னைச் சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை என்றும், தான் சிறையில் பத்தொன்பது ஆண்டுகள் கழித்த கைதி என்றும் கூறினான். அப்போதும் மிரியல்சாமி ஒன்றும் சொல்லவில்லை. தன் அடையாளச் சீட்டைக் காட்டி, அதில் தன்னை ஒரு பயங்கர மனிதன் என்று எழுதியிருப்பதையும் ஜான் படித்துக்காட்டினான். பல இடங்களில் ஜான் பட்ட துன்பங்களால், சாமியாரின் நடக்கை சந்தேகமாகவே இருந்தது. மீண்டும் தங்குவதற்குக் குதிரைலாயத்திலாவது இடங்கொடுக்குமாறு வேண்டினான். வீட்டிலேயே படுக்கைபோட ஏற்பாடு செய்து, இருவரும் சாப்பிட உட்கார்ந்தனர். ஜான் சாமியாரை ஹோட்டல் முதலாளியா என்று கேட்டுவிட்டுத் தன்னிடம் பணம் இருப்பதாகவும் கூறினான். சாமியார் என்று தெரிந்ததும், அவர் பணம் கேட்கமாட்டார் என்று ஜான் நினைத்தான். சாப்பிடும்போது வெளிச்சம் மங்கலாக இருந்ததால், வெள்ளி விளக்கை ஏற்றி வைக்கும்படி சாமியார் கூறினார். இந்த எதிர்பாராத உபசாரங்களைக் கண்டதும், உண்மை

யை மறைக்காதவனுய்த் தான் ஒரு பழங் குற்றவாளி என்று மறுபடியும் கூறினன்.

மிரியல்சாமி உபதேசம் : ஜான் யார் என்பதை அறிந்துகொள்ள வேண்டிய அவசியமே இல்லை என்றார் மிரியல்சாமியார். மேலும், "இந்த வீடு ஆண்டவனுக்குச் சொந்தம். கஷ்டப்படுகிறவர் எல்லோரும் இங்குத் தங்கலாம். பசியாலும் தங்க இடமில்லாமையாலும் கஷ்டப்படும் தங்களுக்கு இது சொந்த வீடு தான்" என்று பாதிரியார் அன்பாகப் பேசினர்.

பசியை ஒருவாறு போக்கியதும், பாதிரியார் பத்தொன்பது ஆண்டுகள் ஜான் அடைந்த கஷ்டங்களைப்பற்றிக் கேட்டார்.

பழைய கதையும் பாதிரியிடம் திருட்டும் : சிறையில் அடியும் உதையும் பட்டதாகவும், நோயால் கஷ்டப்பட்டாலும் கால் விலங்கு எடுக்கப்படுவதில்லை என்றும், படுக்க ஒரு பலகைதான் தரப்பட்டது என்றும் ஜான் வருத்தத்துடன் கூறினன். சாப்பாடு முடிந்த பிறகு ஜான் தொழுகையறையில் இருந்த படுக்கையில் படுத்துக்கொண்டான். போகும்போதே அலமாரியில் வைக்கப்பட்டிருந்த வெள்ளிச்சாமான்கள் அவன் கண்ணில் பட்டுவிட்டன. சாமியார் மறுநாள் காலை ஒரு கோப்பை பால் சாப்பிட்டுவிட்டுப் போகலாம் என்று ஜானிடம் சொல்லிவிட்டுப் படுக்கப்போனர். முன்பின் அறியாத தன்னை இவ்வளவு உபசரிக்கும் சாமியாரைப் பார்த்துத் தனக்கு இடங்கொடுப்பதைப்பற்றி யோசித்தீர்களா என்றும், தான் ஒரு கொலையாளியாகவும் இருக்கலாமே என்றும் கேட்டான். சாமியார் அதைப்பற்றித் தமக்குக் கவலை இல்லை என்றும், ஆண்டவன் இருக்கிறன் என்றும் சொல்லிவிட்டுப் படுக்கச் சென்றார்.

ஜானுக்கு இரவெல்லாம் தூக்கம் வரவில்லை; பலவித எண்ணங்கள் உண்டாயின. சமூகமும் உலகமுமே தன்னை இந்தவிதமாக்கின என்று நினைத்தான். தன் பழைய நினைவுகள் அவனை வருத்தின. ஜான் ஒரு ஏழை. சிறு வயதிலேயே பெற்றோர்களை இழந்தவன்; தமக்கை அவனை அன்பாக வளர்த்துப் பெரியவனுக்கிவிட்டாள். அப்போது அவள் கணவன் இறக்க, ஜான் அவர்களைக் காப்பாற்றவேண்டியதாயிற்று. ஜான் ஒரு நாள் எங்கும் வேலை கிடைக்காமையால், பணம் இல்லாமல் வீடு திரும்பினன். குழந்தைகள் பசியால் கஷ்டப்படுவதைச் சகிக்க முடியாமல் ஒரு ரொட்டிக் கடையில் திருடினன். ஆனல், அகப்பட்டுக்கொண்டான். இதற்காக அவனுக்கு ஐந்து ஆண்டு தண்டனை கிடைத்தது. பலமுறை தப்பிக்க முயன்றதால், தண்டனை அதிகரிக்கப்பட்டுப் பத்தொன்பது ஆண்டுகள் சிறையிலேயே கிடந்தான். இந்நிலையில் அவன் மனம் மாறி, முரடனுகி விட்டான்.

இப்படி நினைத்துக் கொண்டிருக்கையில், சாமியாருடைய வெள்ளிச் சாமான்களை விற்றல், தான் பத்தொன்பது ஆண்டுகள் சேர்த்த பணத்தைப் போல் இரு மடங்கு கிடைக்குமே என்று ஏங்கினன். மணி மூன்றரை இருக்கும். ஜான் மெதுவாக எழுந்து அந்தச் சாமான்களை எடுத்துக்கொண்டு, ஜன்னல் வழியாக ஓடிவிட்டான். நிலவு வெளிச்சத்தில் அமைதியாக இருந்த சாமியாரின் முகம் மட்டும் அவனை இழுத்தது.

திருட்டு வெளிப்படல் : மறுநாள் வேலைக்காரி திருட்டைப் பற்றிச் சாமியாரிடம் கூறினள். அவரோ "அவை ஏழைகளுக்குச் சொந்தம். இவ்வளவு நாள் நம்மிடம் இருந்ததே தவறு" என்றார். தட்டு இல்லாமல்,

மரத்தட்டில் கையால் ரொட்டியைச் சாப்பிடச் சாமியார் உட்கார்ந்தார். அந்த வேளையில் ஜானைப் பிடித்துக்கொண்டு மூன்று போலீஸ்காரர் வந்தனர். சாமியார் ஒன்றும் நடக்காததுபோல் எதிரில் வந்து, "நேற்று வைத்துவிட்டுப் போன இந்த விளக்குகளையும் பெற்றுக் கொள்ளுங்கள்" என்று ஜானிடம் கொடுத்தார். ஜானைத் திருடன் என்று சொன்னதற்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, போலீஸ்காரர்கள் போய்விட்டனர்.

மிரியல்சாமியின் அன்புகனிந்த உபதேசம்: ஜானுக்கு ஒன்றும் கூற நா எழவில்லை; வெட்கத்தால் தலைகுனிந்து கொண்டிருந்தான். வெள்ளி விளக்குகளையும் கொடுத்து அவைகளை விற்று, அந்தப் பணத்தைக்கொண்டு, ஏதாவது ஒரு தொழில் செய்து பிழைத்துக்கொள்ளுமாறு பாதிரியார் சொன்னார். அன்புடன் அவன் தோள்களைப் பிடித்துக்கொண்டு, சாமியார் "உங்கள் களங்கமடைந்த ஆன்மாவை இன்றுமுதல் ஆண்டவனிடம் சேர்த்துவிட்டேன். நீங்கள் நல்லவராகிவிட்டீர்கள்," என்று கூறி, வழியனுப்பினார்.

ஜானும் அவ்வூரைவிட்டுப் புறப்பட்டான்.

(3) ஜான்வல் ஜானின் மனமாற்றம்.

முன்னுரை - சிறுவனின் நாணயம் - பாதிரியைச் சந்தித்தல் - ஜானின் மாறிய நிலை - முடிவுரை.

மிரியல்சாமியாரின் செய்கையும் உபதேசங்களும் ஜான்வல் ஜானின் மனத்தில் ஒரு பெரும் போராட்டத்தையே உண்டாக்கின. அவன் போகுமிடம் இன்னது என்று அறியாமல், கால்போன திசையில் வெகுதூரம் நடந்தான். நடக்கும்போதுகூட ஜான் மிகுந்த யோசனையில் ஆழ்ந்திருந்தான். பகலெல்லாம் நடந்தான்; சூரியன் மறையப்போகும் நேரத்தில், ஒரு புதர் அருகே சற்று உட்கார்ந்தான்.

சிறுவனின் நாணயம்: அச்சமயம் ஒரு நாடோடிச் சிறுவன் பாடிக்கொண்டே அந்த வழியாக வந்தான். அவன் தன்னிடமிருந்த நாணயங்களை விளையாட்டாக மேலே வீசுவதும், பிறகு புறங்கையில் பிடிப்பதுமாக இருந்தான். ஜான்வல் ஜானின் அருகில் வரும்போது, ஒரு நாணயம் தவறி, அவன் காலடியில் விழுந்துவிட்டது. யோசனையில் ஈடுபட்டிருந்த ஜான் இதைக் கவனிக்கவே இல்லை. தற்செயலாக ஜான் தன் காலை அந்த நாணயத்தின்மீது வைத்து விட்டான். அந்தச் சிறுவன் பெயர் **சின்ன ஜெர்வஸ்.** அவன் நாணயத்தைத் தந்துவிடுமாறு ஜானிடம் கேட்டான். அந்த இடத்தைவிட்டு ஓடிப் போகும்படி ஜான் சிறுவனை அதட்டினான். காலை அப்பால் எடுத்துக் கொண்டால், தன் காசை எடுத்துக்கொள்வதாகச் சிறுவன் கூறினான். ஜான் ஒன்றும் பேசாமல் யோசித்துக்கொண்டே இருந்தான். சிறுவன் அழத் தொடங்கினான். ஆத்திரத்துடன் சிறுவன் "காலை எடுக்கிறீரா இல்லையா" எனக் கேட்டான். ஜான் கோபமாக எழுந்திருக்க, அப்போதுதான் சின்ன ஜெர்வஸ் ஜானை நன்றாகப் பார்த்தான்; உடனே பயந்துவிட்டான். திரும்பிக் கூட பார்க்காமல் வேகமாக ஓடிவிட்டான்.

இதற்குள் நன்றாக இருட்டிவிட்டது. நடந்த களைப்பாலும் பசியாலும் ஜானுக்கு உடம்பெல்லாம் கொதிப்பதுபோல் தோன்றியது. தடியை எடுக்கக் குனிந்தான். காலடியிலிருந்த நாணயத்தைப் பார்த்த ஜான் திடுக்கிட்டான்.

" கற்பனை என்பது ஆத்மாவின் கண்."—ஜௌபர்ட்

நாணயத்தை எடுத்துக்கொண்டு சுற்றிலும் பார்த்தான். பையன் போன இடமே தெரியவில்லை. பெயரையிட்டு உரக்கக் கூப்பிட்டான்; பதிலே கிடைக்கவில்லை.

பாதிரியைச் சந்தித்தல் : சிறுவன் சென்ற பாதை வழியே விரைவாக நடந்தான். வழியில் ஒரு சாமியார் குதிரைமீது வந்துகொண்டிருந்தார். ஜான் அவரை விசாரித்தான். பையனைப் பார்க்கவில்லை என்றார் அவர். தன்னைக் கைதி என்றும், ஒரு கொள்ளைக்காரன் என்றும் உணர்ச்சி வேகத்தில் ஜான் நொந்துகொண்டான். இதைக் கேட்டதும் சாமியார் நிற்காமல், குதிரையைத் தட்டி விட்டார்.

ஜானின் மாறிய நிலை : சிறுவனைக் காணுமல் அலைந்துகொண்டே ஜான் நடந்தான், பாதைகள் கூடும் ஒரு முச்சந்தியில் ஒரு பாறைமீது சிறிது நேரம் உட்கார்ந்தான் ; தலை மயிரைப் பிய்த்துக்கொண்டு, தான் செய்துவிட்ட காரியத்தை நினைத்துக் கண்ணீர் விட்டான். பத்தொன்பது ஆண்டுகளில் அவன் ஒருபோதும் கண்ணீர் விட்டதில்லை. மிரியல்சாமியின் உபதேசங்கள் அவன் உள்ளத்தை மாற்றிவிட்டன. பாதிரி அளித்த தெய்வீக மன்னிப்பு அவன் இரும்பு மனத்தையும் கரையச் செய்தது. சமூகத்தையே வெறுத்த அவன் நல்லவனுகிவிட்டான். பழைய உணர்ச்சி மேலிட, நாணயத்தை மறைத்தான். மனக் குழப்பம் நீங்கியதும் பையனைத் தேடிக்கொண்டு ஓடினுன். வருத்தமும் அழுகையும் அவன் உள்ளத் தெளிவைக் காட்டின. அப்படியே நடந்து ஜான் ஒரு ஊரை அடைந்தான்.

(4) ஸ்ரீமான் மாடலினுக வாழ்ந்த ஜான்வல் ஜானின் அருட்பண்பு

முன்னுரை - மாடலின் - மேயராதல் - வண்டியிலகப்பட்ட கிழவனைக் காத்தல் - பாந்த்தேன் என்ற அநாதைப் பெண்ணுக்கு உதவுதல் - முடிவுரை.

மாடலின் : மாடலின் என்பவர் **மோந்த்ரேல்** என்ற சிறு நகரத்தில் வாழ்ந்து வந்தார். ஆனுல், அது அவருக்குச் சொந்த ஊர் அல்ல. மோந்த்ரேல் கண்ணுடி உற்பத்திக்குப் பெயர் பெற்ற இடம். அங்கிருந்து கண்ணுடிச் சாமான்கள் வெளி தேசங்களுக்கு ஏற்றுமதியாகி வந்தன. மாடலின் ஒரு ஏழைத் தொழிலாளியாக அந்த ஊருக்கு வந்து சேர்ந்தார். அரக்கையும் கோந்தையும் சேர்த்து, ஒரு புது மாதிரியான கண்ணுடி வளையல்களைச் செய்ய ஆரம்பித்தார். ஆரம்பத்தில் அவரிடம் அதிகப் பணம் இல்லை. வெளியூர்களில் அதிக கிராக்கி உண்டானதால், மூன்று ஆண்டுகளுக்குள் மாடலின் ஒரு பெரும் பணக்காரர் ஆகிவிட்டார். மாடலின் தம் புத்தி கூர்மையால் பெரிய தொழிற்சாலை அமைத்துப் பலருக்கும் வேலை கொடுத்தார். அவர் மிகவும் நல்லவர். வேலையின்றி யார் வந்தாலும், அவரது தொழிற்சாலையில் உடனே வேலை கிடைக்கும். அவர் அந்த ஊரில் ஏழைகளே இல்லாமல் செய்துவிட்டார்.

மேயராதல் : ஏழைகளும், தொழிலாளிகளும் அவரைப் போற்ற, அவரது புகழ் எங்கும் பரவியது. உயர்குலத்துச் செல்வர்களும் மாடலினை மதித்து, அவரைக் கும்பிட்டார்கள். ஐந்து ஆண்டுகளாக மாடலின் செய்த அரிய தொண்டுகளையும், மக்கள் அவர்மீது வைத்திருக்கும் அன்பையும் கருதிப் பிரஞ்சு மன்னர் அவரை மேயராக நியமித்தார். முதலில் மாடலின் பதவியை மறுத்தார்.

மக்கள் வற்புறுத்தவே அதை ஏற்றுக்கொண்டார். ஆனால் மேயராக அவர் ஒருபோதும் காட்டிக்கொண்டதில்லை; முன்போலவே ஏழைகளோடு கலந்து வாழ்ந்து வந்தார். அவர் அதிகமாகப் பேசுவது கிடையாது. எப்போதும் புத்தகங்களைப் படிப்பார். உலாவப் போகும்போது துப்பாக்கியுடன் போனாலும், ஒருபொழுதும் சுட்டதே இல்லை. கையில் நிறையப் பணம் எடுத்துக்கொண்டு போவார். ஏழைகளுக்குக் கொடுத்து வெறுங்கையாகவே திரும்புவது அவருடைய வழக்கம். இரவில் ஏழைகளின் வீடுகளுக்குப்போய்ப் பணத்தை இரகசியமாய் வைத்துவிட்டு வருவார். காலையில், தங்கள் அதிருஷ்டத்தைக் கண்டு, ஏழைகள் மகிழ்வார்கள். சுருங்கக் கூறின், மக்கள் மனத்தில் மாடலின் நிலையாகக் குடிகொண்டுவிட்டார்.

ஆனால், அந்த ஊர் போலீஸ் இன்ஸ்பெக்டர் மட்டும் ஸ்ரீமான் மாடலினைச் சந்தேகத்துடனேயே பார்த்துவந்தான். அவன் பெயர் **ஜேவர்ட்.** அவன் நல்ல உயரமாக இருப்பான். எப்பொழுதும் அவன் தன் கையில் சிறு தடியுடன் இருப்பான். மாடலின் தெருவழியாகப் போகும்போதெல்லாம் ஒதுங்கி நின்று கவனிப்பது அவன் வழக்கம். அவரை வேறு எங்கேயோ பார்த்தது போன்ற எண்ணம் அடிக்கடி ஜேவர்ட்டுக்குத் தோன்றுவது உண்டு.

வண்டியிலகப்பட்ட கிழவனைக் காத்தல்: ஒரு நாள் ஸ்ரீமான் மாடலின் தெருவழியாகப் போய்க்கொண்டிருக்கையில் ஒரு பேரொலி கேட்டது. கூட்டம் கூடி விட்டது. ஒரு கிழவன் வண்டிக்கடியில் அகப்பட்டுக் கொண்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தான். வண்டி முறிந்து, பாரம் முழுவதும் அவன் மீது இருந்தது. கூட்டத்திலிருந்தவர்கள் எவ்வளவோ முயன்றும் அவனை வெளியே இழுக்க முடியவில்லை. மழை பெய்து சேறாக இருந்ததால், வண்டி புதைந்து கொண்டே வந்தது. சிறிது நேரம் தாமதித்தால் கிழவன் இறந்து விடுவான். ஸ்ரீமான் மாடலின் 20 லூயிகள் (பிரஞ்சு நாணயம்) கொடுக்கிறேன் என்று கூறியும் யாரும் வண்டியின் கீழ்ப் படுத்துத் தூக்க முன் வரவில்லை. அப்பொழுது இன்ஸ்பெக்டர் ஜேவர்ட் அந்த மாதிரி தூக்கக்கூடிய ஒரு கைதி டூலோன் சிறையில் இருந்தான் என்று சொன்னான். மாடலின் இதைக் கேட்டுத் திடுக்கிட்டார். இருந்தாலும் மெல்லச் சமாளித்துக் கொண்டு, கூட்டத்தை எதிர்பார்த்துப் பயனில்லை என்று முடிவு செய்து கொண்டு, தாமே வண்டிக்கடியில் படுத்து, முதுகால் வண்டியைத் தூக்கினார். கிழவனை வெளியே இழுத்து விட்டார்கள். அவன் பெயர் **போஷல்வான்.** மாடலின் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அன்றிரவு ஜேவர்ட் கூறியதை எண்ணி எண்ணி, மாடலினுக்குத் தூக்கமே வரவில்லை.

பாந்தேன் என்ற அநாதைப் பெண்ணுக்கு உதவுதல்: பாந்தேன் என்பவள் இருபது வயதுள்ள ஒரு ஏழைப் பெண். அவளை ஏமாற்றி விட்டு அவள் காதலன் ஓடி விட்டான். அவளுக்கு ஒரு பெண் குழந்தை உண்டு. அவள் பிழைப்புக்கு வழியில்லாமல், வேலை தேடி அலைந்தாள். குழந்தையுடன் இருப்பவர்களுக்கு வேலை கிடைப்பது கஷ்டம். ஆகையால் பாரிஸுக்கு அருகாமையில் இருந்த **மோம்பர்மேல்** என்ற ஊரில் ஒரு ஹோட்டல் முதலாளியான **தெனடியரிடம்** குழந்தையை ஒப்படைத்தாள். வாரத்திற்கு ஒருமுறை சிறிது பணம் அனுப்புவதாயும் பாந்தேன் ஒப்புக்கொண்டாள். பிறகு வேலைக்கு அலைந்து, கடைசியில் மாடலின் அவர்களது தொழிற்சாலையிலேயே வேலைக்கு அமர்ந்தாள். பாந்தேன் மிகவும் அழகானவள். நீண்ட கருமையான கூந்தல் இருந்தது. மற்றப் பெண்கள் அவள் மீது பொறாமையால், வேலைகளைச் சரியாகச்

செய்வதில்லை என்று அதிகாரிகளிடம் குறை கூறினர்கள். அதனல், பாந்த்தேன் வேலையிலிருந்து நீக்கப்பட்டாள். பிறகு, துணி தைத்துப் பிழைக்கத் தொடங்கினள். அதில் போதிய வருவாய் கிடைக்கவில்லை. தெனடியருக்குப் பணம் அனுப்புவதும் தடைபட்டது. இந்தச் சமயத்தில் குழந்தை குளிரால் கஷ்டப் படுகிருள் என்றும், கம்பளி வாங்கப் பணம் அனுப்ப வேண்டும் என்றும் கடிதம் கிடைத்தது. கையிலோ ஒரு காசு கூட இல்லை. பாந்த்தேன் தன் அழகிய கூந்தலை பத்துப் பிராங்க்குக்கு விற்ருள். இவ்வளவு கஷ்டப்பட்டுக் கம்பளிச் சட்டை அனுப்பியும் அது பாந்த்தேன் குழந்தைக்கு உபயோகப்பட வில்லை. அதைத் தெனடியர் தன் குழந்தைக்குப் போட்டு விட்டான்.

பாந்த்தேன் கஷ்டம் இதனுடன் முடியவில்லை. ஒரு நாள் தெரு வழியாகப் போய்க் கொண்டிருந்தபோது, ஒரு காமுகன் அவளைப் பின்பற்றி வந்து, ஏளனம் செய்தான். பாந்த்தேன் பேசாமல் நடக்கவே, பனிக்கட்டியால் அடித்தான். வலிதாங்காமல் துடித்த அவளைப் பார்த்துக் காமுகன் சிரித்தான். பாந்த்தேன் தைரியத்துடன் அவனைப் பிடித்துத் தள்ளி, அவன் தொப்பியையும் தட்டிவிட்டாள். ஜேவர்ட் இந்த நேரத்தில் பார்த்து விட்டான்; அவள் குற்றவாளி என்று நினைத்து, அவளுக்கு ஆறு மாதம் சிறை தண்டனை கொடுத்து விட்டான்.

அச்சமயம் எதிர்பாராதபடி ஸ்ரீமான் மாடலின் அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார். அவளை விடுதலை செய்யுமாறு ஜேவர்டுக்கு உத்தரவிட்டார். பிரஞ்சு சட்டப்படி மேயருக்குக் கீழ்ப்படிந்தவன் ஜேவர்ட். வேறு வழியின்றி ஜேவர்ட் பாந்த்தேனை விடுதலை செய்தான்.

இவ்வாறு பல சமயங்களில், மேயராக இருந்த மாடலின் மக்களுக்கு உதவி செய்து வந்தார். பழங் கைதியாகிய ஜான் வல் ஜானே ஸ்ரீமான் மாடலினுக வாழ்ந்தவன். இதனை யாரும் அறிந்திலர்.

(5) மேயராக இருந்த ஜான்வல் ஜான் தன் உண்மை உருவை வெளிப்படுத்தியமை

முன்னுரை-பழியோரிடம் பாவமோரிடம்-தன்னையே காட்டிக் கொடுத்தல்-பாந்த்தேன் மரணம்-முடிவுரை.

பழியோரிடம் பாவமோரிடம் : மேயர் மாடலின் ஒரு நாள் அருகே இருந்த ஒரு பட்டணத்தில் நடக்க விருக்கும் ஒரு வழக்கைப் பற்றிக் கேள்விப் பட்டார். சிறையிலிருந்து விடுதலையான ஜான்வல் ஜான் என்ற பழங் கைதி வேறு பெயர்கள் வைத்துக்கொண்டு பல குற்றங்கள் புரிந்து வந்தானும். பல நாட்கள் கஷ்டப்பட்டுப் போலீஸ் அவனைக் கைது செய்திருப்பதாகவும், விசாரணை மறு நாள் என்றும் விவரம் தெரிந்தது. மாடலினுக்கு அன்றிரவெல்லாம் தூக்கம் வரவில்லை. அகப்பட்டுக் கொண்ட நிரபராதியின் மீது மாடலின் மிகவும் இரக்கப் பட்டார். மறுநாள் மிகவிரைவாக அந்தப் பட்டணத்துக்குப் போனர். போவதற்குள் விசாரணை முடிந்து, நீதிபதி தீர்ப்புச் சொல்லும் நேரம், மேயர் மாடலின் நீதிபதி அருகில் ஒரு ஆசனத்தில் உட்கார்ந்தார். மக்களுக்கு மேயரை நன்கு தெரியும்.

தன்னையே காட்டிக் கொடுத்தல் : குற்றவாளி மெதுவாகப் பேசியதை யாரும் பொருட்படுத்தவில்லை, குற்றவாளி ஜான்வல் ஜான் என்பதை நிரூபிக்க

மூன்று சாட்சிகளைக் கொண்டு வந்தார்கள். அவர்கள் மூவரும் சந்தேகம் இல்லாமல், குற்றவாளியாக நிற்பவன்தான் ஜான்வல் ஜான் என்று கூறிவிட்டார்கள். நீதி மன்றமே பரப்பரப்பாக இருந்தது. "குருட்டுச் சாட்சிகளே! என்னைப் பாருங்கள்....." என்ற சத்தம் திடீரென்று வந்தது. எல்லோரும் மாடலின் பக்கம் திரும்பினார்கள். "என்னை அடையாளம் தெரிகிறதா?" என்று மாடலின் சாட்சிகளைக் கேட்டார். யாரும் 'இல்லை' என்றனர். பிறகு மாடலின் நீதிபதியையும், ஜூரிகளையும் பார்த்து, தாமே ஜான்வல் ஜான் என்றும், தம்மைக் கைது செய்யுமாறும் கேட்டுக் கொண்டார். நீதிபதிக்கு ஒன்றும் தோன்றவில்லை. மாடலினது மனம் பித்துப் பிடித்து விட்டதோ என்று எண்ணி நீதிபதி மருத்துவரை அழைக்க உத்தரவிட்டார். இதைத் தடுத்து மாடலின், தாம் வேறு பெயரால் வியாபாரஞ் செய்ததையும் பணக்காரனாகி மேயரானதையும் விளக்கமாகக் கூறினார். குற்றவாளியைக் காப்பதற்காக மாடலின் இவ்வாறு நடிக்கிறார் என்று எல்லோரும் நம்பினர்.

பிறகு மாடலின் கைதிகளில் ஒருவன் பெயரைச் சொல்லி, வலக்கையில் தேதி பொறிக்கப்பட்ட அடையாளத்தையும் நீதி மன்றத்திற்குக் காட்டச் சொன்னார். இதைக் கண்டதும் நெருங்கிப் பழகாதவர் இப்படிக் கைதிகளைப் பற்றிச் சொல்ல முடியாது என்ற அச்சம் நீதிபதிக்கு உண்டாயிற்று. அரசாங்க வக்கீலைக் கேட்டார். யாரும் மாடலினைக் கைது செய்ய முன்வரவில்லை. குற்றவாளி விடுதலை செய்யப்பட்டான்.

பாந்த்தேன் மரணம் : எப்பொழுது வேண்டுமானாலும் தம்மைக் கைது செய்யலாம் என்று சொல்லிவிட்டு, மாடலின் வீடு திரும்பினார். நோயுற்றிருக்கும் பாந்த்தேனைப் பார்க்க மாடலின் சென்றார். அவளுடைய மகள் **கோஸெத்தை** அவளிடம் சேர்ப்பதாக அவர் வாக்குக் கொடுத்திருந்தார். அதற்குள் இந்த வழக்கு வரவே, அது தடைப்பட்டது. ஜானை ஜேவர்ட் கைது செய்ய அவ்விடம் வந்தான். பாந்த்தேன் இறக்கும் தருவாயில் இருந்தாள். ஜான்வல் ஜான் மூன்று நாள் பொறுக்குமாறு ஜேவர்ட்டை வேண்டினான். ஜேவர்ட் கடமை தவறாத அதிகாரி. அவன் அதற்குச் சம்மதிக்கவே இல்லை. இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த பாந்த்தேன் மன அதிர்ச்சியுற்று இறந்தாள். ஜான்வல் ஜான் பின்னர் டுலோன் சிறைக்கு அனுப்பப்பட்டார். **கோஸெத்** அநாதை ஆனாள்.

6. கன்னி மடப் பள்ளியில் ஜான்வல் ஜான்

முன்னுரை-ஜான் தப்பினமை - கோஸெத்தை விடுவிப்பது-போலீஸ் ஆபத்து - போஷல்வானைச் சந்தித்தல் - சவப்பெட்டி வழியாக வெளியேறுதல் - ஜான் கன்னிமடத்தில் அமர்தல் - முடிவுரை.

ஜான் தப்பினமை : ஒரு சமயம் பிரான்சுக்கும் ஸ்பெயினுக்கும் நடந்த போரில் பழுதடைந்த ஒரு பெரிய கப்பல் டுலோன் துறைமுகத்தில் தங்கியது. கப்பல் மரத்தில் ஏறிய ஒரு மாலுமி கால் இடறி, ஒரு கயிற்றில் தொங்கினான். அவ்வளவு உயரம் போய், அவனைக் காக்க யாரும் முன்வரவில்லை. படகுக் கைதி ஒருவன் தான் காப்பாற்றுவதாக அதிகாரியின் உத்தரவைக் கேட்டு, ஒரு நொடியில் மரத்தில் ஏறி, மாலுமியைக் கீழே இறக்கி விட்டான். அதற்குள் நன்றாக இருட்டிவிட்டது. கைதி இறங்குகையில்

"முடியாமை முட்டாளின் அகராதியில் உண்டு."—நெப்போலியன்.

இடறிக் கடலில் விழுந்து விட்டான். மாலுமிகள் தேடினுர்கள். ஆனல் கைதி அகப்படவில்லை. அவன்தான் ஜான்வல் ஜான். கடலில் மூழ்கி இறந்துவிட்டதாகப் போலீஸார் பத்திரிகைகளில் விளம்பரம் செய்துவிட்டனர்.

கோஸெத்தை விடுவிப்பது : ஜான் தப்பியவுடன், பாந்தேனுக்கு அளித்த வாக்கைக் காக்கவேண்டி, நேராக மோம்பர்மேலுக்கு விரைந்தான். **கோஸெத்** அனதையாகிவிட்டதால், தெனடியர் இன்னும் அதிகமாக அவளைக் கொடுமைப் படுத்தினுன்; ஓயாமல் அவளுக்கு வேலை கொடுத்தான் சிறுமியாய் இருந்தாலும், விளையாடவிடுவதே இல்லை. ஒருநாள் இரவு, படுக்கப்போகும் சமயம், வழிப்போக்கர் நால்வர் தெனடியர் ஓட்டலுக்கு வந்தனர். அவர்களுடைய குதிரைக்குத் தண்ணீர் வேண்டியதாய் இருந்தது. தண்ணீர் கொண்டுவர, அருகில் உள்ள காட்டிற்குப் போய்வருமாறு வாளியுடன் கோஸெத் அனுப்பப்பட்டாள். அந்த இரவில் பெரியவர்களே காட்டுக்குப்போகப் பயப்படுவார்கள். கோஸெத் தண்ணீர் எடுத்துக்கொண்டு திரும்புகையில், மிகவும் கஷ்டப்பட்டாள். வாளி மிகவும் பெரியதாக இருந்தது. ஜான் அந்த இரவில் அச் சிறுமியைச் சந்தித்தான் ; அவளுக்கு உதவியாக வாளியைத் தூக்கிக்கொண்டு வந்தான். ஸ்ரீமதி தெனடியர் கோஸெத்தை அதட்டினுள். ஜான் அவள் யார் என்று தெரிந்துகொண்டான். இரவெல்லாம் எப்படிக் கோஸெத்தைக் காப்பது என்று யோசித்துக் கொண்டிருந்தான்; மறுநாள் மெதுவாகப் பேசத்தொடங்கி, 1500 பிராங்க் கொடுத்துக் கோஸெத்தை விடுவித்து, நேராகப் பாரிஸுக்கு அழைத்துக்கொண்டு போனுன். நடமாட்டமில்லாத பகுதியில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக்கொண்டு, ஜான்வல்ஜான் கோஸெத்துடன் தங்கினுன். அவள் பேச்சிலும் விளையாட்டிலும் ஈடுபட்டுச் சந்தோஷமாகக் காலங்கழித்து வந்தான்.

போலீஸ் ஆபத்து : ஒரு நாள் இரவு 8 மணிக்கு இன்ஸ்பெக்டர், ஜான் இருந்த மாடிக்கு ஏறிவந்தான். உடனே, ஜான் விளக்கை அணைத்துவிட்டு அவனையே பார்த்துக்கொண்டிருந்தான். சிறிது நேரம் நின்றுவிட்டு இன்ஸ்பெக்டர் போய்விட்டான். அவன்தான் ஜேவர்ட். இப்பொழுது மோம்பர்மேலிலிருந்து மாற்றப்பட்டுப் பாரிஸுக்கு வந்துள்ளான். இனி அந்த வீட்டில் தங்குவது ஆபத்து என்று ஜான் உணர்ந்தான். உடனே, சாமான்களை எல்லாம் விட்டுவிட்டுக் கோஸெத்தை மட்டும் அழைத்துக்கொண்டு பல தெருக்களைக் கடந்து போனுன். எங்குப் பார்த்தாலும் போலீஸார் எதிர்ப்பட்டார்கள். கடைசியில் பாலத்தைக்கடந்து ஒரு தோட்ட மதிலின் ஓரம் போய்க்கொண்டிருந்தான். எதிரில் நான்கு போலீஸார் வருவதைப் பார்த்தான். திரும்பினுலும் பின்னல் வருபவர்களிடம் அகப்பட்டுக்கொள்வான். எனவே, மதில்மேல் ஏறித் தோட்டத்துக்குள் மறைந்துகொள்வது என்று ஜான் முடிவு செய்தான். ஒரு நிமிஷமும் தாமதிக்கக்கூடாது. மதிலோ மிகவும் உயரமாக இருந்தது. கோஸெத்தைத் தூக்கிக்கொண்டு எப்படி ஏறுவது ? அருகில் விளக்குத் தொங்கவிட்டிருந்த கயிற்றைக் கத்தியால் அறுத்து, ஒரு நுனியைக் கோஸெத்தின் இடுப்பில் கட்டினுன். மற்ற நுனியை வாயில் கவ்விக்கொண்டு மதில் உச்சியை அடைந்தான். பிறகு கயிற்றை மெதுவாக இழுத்துக் கோஸெத்தை மறுபுறம் விட்டுத் தானும் உள்ளே குதித்துவிட்டான். இவ்வளவையும் வெகு விரைவில் ஜான் செய்து முடித்தான்.

போஷல்வானைச் சந்தித்தல் : தோட்டத்தில் ஒரு ஆள் எதிரே வருவது தெரிந்தது. குளிர் மிகவும் அதிகமாக இருந்ததால், கோஸெத் தாங்க முடியா

மல் நடுங்கினாள். அந்த ஆள் அருகில் வந்ததும் 100 பிராங்க் தருவதாகச் சொல்லித் தங்க இடம் கேட்டான் ஜான். நிலா வெளிச்சத்தில் அவன் மாடலினைத் தெரிந்துகொண்டு, அங்கு வந்த காரணத்தை அவன் கேட்டான். முன்னர் மாடலின் வண்டிக்கடியிலிருந்து காத்த கிழவன்தான் தோட்டக் காவலாளி. அது கன்னிமடத் தோட்டம். ஆடவர் யாரும் உள்ளே போகக்கூடாது. என்ன இருந்தாலும் தன் உயிரைக் காப்பாற்றிய மாடலினுக்கு எந்த உதவியும் செய்யக் கிழவன் முன்வந்தான். இன்றிரவு முழுவதும் அவன் குடிசையிலேயே ஜான்வல் ஜான் மறைந்திருந்தான். மறுநாள் அங்கிருந்து தப்புவது எப்படி என்று இருவரும் யோசித்தனர். பழக்கூடையில் மறைத்துக் கோஸெத்தை வெளியேற்றிவிடலாம். ஆனால், ஜான் எப்படி வெளியே போவது? இது மிகவும் சங்கடமான காரியம்.

அந்த நேரத்தில் மணியோசை கேட்டது. கிழவன் கன்னிமடத் தலைவியிடம் சென்றான். தனக்கு வயதாகிவிட்டதால், உதவிக்காகத் தன் தம்பியை வைத்துக்கொள்ள அனுமதி கேட்டான். பிறகு பார்க்கலாம் என்று சொல்லிவிட்டுக் கன்னிமடத்தலைவி இறந்துபோன அன்னையை அடக்கஞ் செய்யக் கிழவனைப் பதினோரு மணிக்கு வருமாறு கூறினாள். யாராவது மடத்தில் இறந்தால் அரசாங்கச் சவப்பெட்டி வரும். அதற்கு மாறாக யாரையும் மடத்துக்குள்ளேயே அடக்கஞ் செய்ய அனுமதிக்கமாட்டார்கள். இறந்த அன்னையை மூலஸ்தானத்துக்கு அடியில் அடக்கஞ் செய்துவிட்டு, அரசாங்கம் அனுப்பும் சவப்பெட்டிக்குள் எதையாவது போட்டுக் கல்லறைத் தோட்டத்தில் புதைத்துவிடவேண்டும் என்பது கன்னிமடத்தலைவி கூறிய திட்டம்.

ஜான் சவப்பெட்டியில் வெளியேறுதல்: போஷல்வான் திரும்பியதும் ஜான் சவப்பெட்டிக்குள் புகுந்துகொள்ள வேண்டுமென்றும் கல்லறைத் தோட்டத்திற்குப் போனபிறகு வெளியேற்றிவிடவேண்டும் என்றும் முடிவு செய்தார்கள். இரவு பன்னிரண்டு மணிக்கு யாருக்கும் தெரியாமல் ஜான்வல் ஜான் சவப்பெட்டிக்குள் புகுந்துகொண்டான். பெட்டியில் காற்று நுழையச் சில துளைகள் செய்யப்பட்டன. சவப்பெட்டி ஊர்வலம் பலதெருக்கள் வழியாகப் போய்க் கல்லறைத் தோட்டத்தை அடைந்தது. போஷல்வான் திடுக்கிட்டான். அங்கே இருந்த தோட்டி புதியவன். சடங்குகளெல்லாம் முடிந்தபின், எல்லோரும் போய்விட்டனர். தோட்டியை அனுப்பிவிடப் போஷல்வான் ஒரு யோசனை செய்தான். போஷல்வான் அவன் சட்டைப்பையிலிருந்து அனுமதிச் சீட்டை மறைத்து வைத்துக்கொண்டு, அதைப்பற்றி அவனிடம் கேட்டான்; அனுமதிச்சீட்டு இல்லாவிட்டால், அபராதம் 15 பிராங்க் கிடைக்கும். தோட்டி அதனை எடுத்துவர வீட்டிற்கு ஓடினான். அதற்குள் சவப்பெட்டியை உளியால் திறந்தான் போஷல்வான். ஜான் அதற்குள் மூர்ச்சையாகிக் கிடந்தான். மெதுவாகத் தெளிந்து எழுந்த பிறகு, காலிப்பெட்டியைப் புதைத்துவிட்டு, ஜானும் போஷல்வானும் வெளியே வந்துவிட்டார்கள். தோட்டி இன்னும் திரும்பவில்லை. போஷல்வான் அவன் வீட்டிற்குச் சென்று, கல்லறைத் தோட்டத்தில் கிடந்ததாகச் சொல்லி அனுமதிச் சீட்டை அவனிடம் கொடுத்தான். அவனும் மகிழ்ச்சியுடன் வந்தனம் தெரிவித்தான்.

ஜான் கன்னிமடத்தில் அமர்தல்: மறுநாள் ஜானும் கோஸெத்தும் மடத்தலைவி முன்பாகச் சென்றனர். போஷல்வான் செய்த உதவிக்கு மகிழ்ந்து, மடத்தலைவி ஜானை வேலைக்கு அமர்த்திக்கொண்டாள். கோஸெத்தும் கன்னிமடப் பள்ளியில் சேர்ந்தாள். பல ஆண்டுகள் நிம்மதியாக ஜான் காலங்கழித்தான். கோஸத் பெரியவளாக வளர்ந்துவிட்டாள்.

"ஒழுக்கம் உயர்குலத்தின் நன்று."—ஔவை.

7. தெனுடியரிடம் ஜான் அகப்பட்டமையும் தப்பிச்சென்றமையும்

முன்னுரை - மாரியஸ் வரலாறு - கோஸெத்தைச் சந்தித்தல் - தெனுடியர் மகளைத் தெரிந்துகொள்ளுதல் - ஜாண்ட்ரெட் வீட்டில் ஜான்வல் ஜான் - ஜான் அகப்பட்டமை - தப்பினமை - முடிவுரை.

மாரியஸ் வரலாறு : பிரான்சு தேசத்தில் இந்தச் சமயத்தில் ஒரு பெரிய புரட்சி ஆரம்பமாயிற்று. முடியரசை ஒழிக்க, மக்கள் செய்த பெரும் புரட்சி அது. குடியரசுக் கட்சித் தலைவன் நெபோலியன். அவன் சேனையில் ஒரு சிறந்த வீரனுக விளங்கினுன் **போமர்ஸி** என்பவன். சண்டையில் போமர்ஸி படுகாயம் உற்றுன். களத்தில் விழுந்துகிடக்கும்போது, அந்த வழியாக வந்த திருடன் ஒருவன் போமர்ஸியைப் பார்த்தான். பெரிய அதிகாரி என்று எண்ணித் திருடன் அவனுடைய சட்டைப்பைகளைச் சோதனையிட்டு அதிலிருந்த கடிகாரத்தையும் பணப்பையையும் எடுத்துக்கொண்டான். அந்தச் சமயத்தில் போமர்ஸி மூர்ச்சை தெளிந்தான். அந்தத் திருடன்தான் தன்னைக் காப்பாற்றினுன் என்று நினைத்து அவனுக்கு வணக்கம் தெரிவித்தான். போமர்ஸி அவன் பெயரைக் கேட்டுத் தெரிந்துகொண்டான். சிறிது காலத்தில் குணமடைந்த பின் போமர்ஸி தன் ஊருக்குச் சென்றுன்.

போமர்ஸிக்கு ஒரு மகன் உண்டு. அவன் பெயர் **மாரியஸ்.** மாரியஸ் தன் தாத்தா **ஜில் நார்மனி**டமே வளர்ந்து வந்தான். ஜில் நார்மன் பெரிய பணக்காரன். முடியரசை ஆதரித்தவன். ஆகவே, மருமகனை போமர்ஸிக்கும் அவனுக்கும் சச்சரவு ஏற்பட்டுப் போமர்ஸி வீட்டைவிட்டு, வெளியேறி விட்டான். மாரியஸ் தன் தகப்பனுரைப் பார்த்ததே கிடையாது. போரிலிருந்து திரும்பிய போமர்ஸி உடல் நலம் குறைந்து சாகக்கிடந்தான். அதற்குள் தன் மகனை ஒரு முறையாவது பார்க்கவேண்டுமென்ற ஆசை அவனுக்கிருந்தது. ஒரு கடிதம் எழுதி, ஜில் நார்மனுக்கு அனுப்பினுன். அவனும் மனம் இளகித் தந்தையைப் பார்த்துவிட்டுவர, மாரியஸை அனுமதித்தான். மாரியஸ் போய்ச் சேருவதற்குள், போமர்ஸி இறந்துவிட்டான். அவன் எழுதி வைத்திருந்த கடிதம் மட்டும் மாரியஸ் கைக்குக் கிடைத்தது. வாடர்லூப் போரில் தன்னைக் காப்பாற்றிய தெனுடியர் என்ற வீரனை எப்பொழுதாவது சந்தித்தால், அவனுக்கு வேண்டிய உதவி செய்யுமாறு கடிதத்தில் எழுதியிருந்தது.

பிறகு நாட்கள் சென்றன. மாரியஸ் தந்தையின் கட்டளையை மறந்து விட்டான். ஆனுல், மக்கள் போமர்ஸியின் தியாகத்தையும் வீரத்தையும்பற்றி அடிக்கடி பேசுவதைக் கேட்டான். நாளடைவில் மாரியஸ் பழுத்த குடியரசு வாதி ஆகிவிட்டான். ஒரு நாள் ஜில் நார்மன் போமர்ஸியையும் குடியரசுக் கட்சியையும் கேவலமாகப் பேசியதை மாரியஸ் கேட்டான். இனித் தாத்தாவுடன் வாழ்வது முடியாது என்று தீர்மானித்து மாரியஸ் வீட்டைவிட்டு வெளியேறி, ஏழைகள் வசிக்கும் பகுதியில் ஒரு சிறு அறையை வாடகைக்கு எடுத்துக்கொண்டு வசித்துவந்தான். மாரியஸ் ஆடம்பரத்தை வெறுத்தான்; பசியாய் இருந்தாலும் கடன் வாங்காமல் காலங்கழித்தான்; முயன்று படித்துச் சட்டப் பரீட்சையில் தேறினுன். போதிய வருவாய் கிடைக்காவிட்டாலும் ஏழைகளுக்கு உதவி செய்வதை அவன் நிறுத்தவில்லை.

கோஸெத்தைச் சந்தித்தல் : மாரியஸ் தெனுடியரைத் தேடினன். அவனைப்பற்றி மக்கள் எங்கும் புகார் செய்தனர். எனவே, தேடும் எண்ணத்தை மாரியஸ் கைவிட்டான். மாலை வேளைகளில் சோலைக்கு உலாவப்போவான். ஒரு கிழவனும் ஒரு அழகிய பெண்ணும் ஒரு மூலையில் இருந்ததை அவன் ஒரு நாள் பார்த்தான். அவள்தான் கோஸெத். அவள் மிகவும் அழகிய பருவ மங்கையாய் விளங்கினுள்; அன்று முதல் அவளைப் பார்க்கவே மாரியஸ் சோலைக்கு வந்தான். கோஸெத்தும் அவனை நேசித்தாள். மாரியஸ் ஒரு போலீஸ்காரனுக இருக்கக்கூடும் என்று ஜான்வல் ஜான் சந்தேகித்தான். எனவே, சோலைக்குப் போவதை நிறுத்திக்கொண்டான். மாரியஸ் காதலியைக் காணுமல் ஏங்கினுன்.

தெனுடியர் மகளைத் தெரிந்து கொள்ளுதல் : ஒரு நாள் மாரியஸ் தன் அறையில் படித்துக்கொண்டிருக்கும்போது, ஒரு பெண் உள்ளே வந்தாள். அவள் அழகாக இருந்தாலும் வறுமையால் வாடிக் கிழிந்ததுணிகளை உடுத்திக் கொண்டிருந்தாள். அவளிடம் அடக்கம் நாணம் எதுவும் இல்லை. அவள் ஒரு கடிதத்தை மாரியஸிடம் கொடுத்தாள். அதில் பணம் கடன் கேட்டு எழுதி யிருந்தது. மாரியஸ் பணம் எடுத்து வருவதற்குள் அவள் அவனது புத்தகங் களைப் புரட்டிக்கொண்டிருந்தாள். மாரியஸ் அவளை எழுதப் படிக்கத் தெரியுமா என்று கேட்டான். அவள் ஒரு காகிதத்தில் ஏதோ எழுதிக்காட்டிவிட்டு, ஓடி விட்டாள். அவள் பக்கத்து அறையில் வசித்த ஜாண்ட்ரெட்டின் மகள். மாரியஸ் பிறர் விஷயங்களில் தலையிடுவதே கிடையாது. எனவே, ஜாண்ட் ரெட்டைப்பற்றி அவனுக்கு ஒன்றும் தெரியாது.

ஜாண்ட்ரெட் வீட்டில் ஜான்வல்ஜான் : இப்போது மாரியஸுக்கு மேலும் அவளைப்பற்றித் தெரிந்துகொள்ள ஆவலாய் இருந்தது. அறைச் சுவ ரின் உயரத்தில் இருந்த துளை வழியாக அவன் கவனித்தான். பக்கத்து அறை ஒரே குப்பையாக இருந்தது. சாமான்களெல்லாம் உடைந்திருந்தன. பழைய மேஜையும் ஒரு நாற்காலியும், சில கந்தைத் துணிகளும் காணப்பட்டன. ஜாண்ட்ரெட்டுக்கு அறுபது வயது இருக்கும். மேசையருகில் உட்கார்ந்து கொண்டிருந்தான். அவன் மனைவி பருமனுக இருந்தாள். கிழவன் பணம் வரும் என்று ஆவலாய் இருந்தான். அச்சமயத்தில் யாரோ வரும் சத்தம் கேட்டது. உடனே, நோயாளியைப்போல் ஜாண்ட்ரெட் மனைவி படுத்துக் கொண்டு பாசாங்கு செய்தாள். ஜான்வல் ஜானும் கோஸெத்தும் உள்ளே வந்தார்கள். மாரியஸ் மிகவும் ஆச்சரியமும் சந்தோஷமும் அடைந்தான். வாடகைகூடக் கொடுக்கப் பணமில்லை என்று ஜாண்ட்ரெட் ஜானிடம் கூறி னுன். தன்னிடமிருந்த கொஞ்சம் பணத்தைக் கொடுத்துவிட்டு. ஜான் மீதியை மாலை ஆறு மணிக்குக் கொண்டுவருவதாகச் சொன்னுன். கோஸெத்தின் வீட்டைக் கண்டுபிடித்துவிடவேண்டும் என்பது மாரியஸின் ஆவல். ஜான் சென்ற வண்டியைப் பின்தொடர முயன்ருன். ஆனுல் முடியவில்லை. வேறு வண்டியில் பின் தொடரவும் கையில் பணம் இல்லை. எனவே, மன வருத்தத் துடன், மாரியஸ் தன் அறைக்குத் திரும்பினுன்.

ஜான் வல் ஜான் அகப்பட்டமை : மாரியஸ் பக்கத்து அறையில் நடக்கும் உரையாடலை ஒற்றுக் கேட்டான். அன்றிரவு கோஸெத்துக்கும் அவள் தந்தைக் கும் பெரிய ஆபத்து ஏற்படும் என்று தெரிந்து கொண்டான். உடனே போலீ ஸுக்குத் தகவல் கொடுத்தான். மாரியஸிடம் இரண்டு கைத் துப்பாக்கிகளைக் கொடுத்து, ஆபத்து ஏற்படும் சமயத்தில் துளை வழியாகச் சுடும்படி, போலீஸார்

திட்டம் கூறினார்கள். அந்தச் சத்தம் கேட்டவுடன் தாங்கள் வந்து எல்லோரையும் வளைத்துக் கொள்வதாகவும் தெரிவித்தார்கள். மணி ஆறு ஆகிவிட்டது. மாரியஸ் துளைவழியாகச் சுடத் தயாராக இருந்தான். அப்பொழுது ஜான்வல் ஜான் மட்டும் வந்து சேர்ந்தான். வந்ததும், மீதிப் பணத்தைக் கொடுத்தான். உண்மையாகப் பேசுவது போல், தன்னிடமிருக்கும் படத்தை வாங்கிக் கொள்ளுமாறு ஜாண்ட்ரெட் அவனிடம் கூறினான். இதற்குள் உள்ளே மறைந்து கொண்டிருந்தஇருவர் வெளியே வந்து ஒரு மூலையில் உட்கார்ந்தார்கள். ஜாண்ட்ரெட் அவர்களைத் தன் பக்கத்து வீட்டுக்காரர்கள் என்று சாக்குச் சொன்னான். இன்னும் மூவர் வந்தனர். அவர்கள் எல்லோரும் கரியவர்களாகவும், முரடர்களாகவும் தென்பட்டனர். ஜான்வல் ஜான் ஏதோ சதி நடப்பதாகச் சந்தேகப் பட்டான். படத்திற்காக ஆயிரம் கிரௌன் கொடுக்குமாறு ஜாண்ட்ரெட் கேட்டான். அது ஒரு கிரௌன் கூடப் பெருது என்று ஜான் கூறிவிட்டான். இதற்கிடையில் ஜாண்ட்ரெட் வெளிப்படையாக வெருட்ட ஆரம்பித்தான். எல்லோரும் ஜானைச் சூழ்ந்து கொண்டார்கள். தன்னைத் தெரியவில்லையா என்று ஜாண்ட்ரெட் உரக்கக் கேட்டான்; 'தெனுடியர்' என்று தானே பதில் சொல்லி விட்டுச் சிரித்தான்.

ஜான் தப்பினமை: மாரியஸுக்கு ஒன்றும் தோன்றவில்லை. தன் தந்தையாரின் கடிதத்தில் எழுதப்பட்டிருந்தவன் தெனுடியர். அவனைச் சுடுவதா அல்லது காதலியின் தந்தையைச் சித்தரவதைக்குள்ளாக்குவதா என்று குழம்பினன். திடீரென்று சப்தம் கேட்டது. ஜான் ஓடப் பார்த்தான். ஆனல் அந்த முரடர்கள் அவனைப் பிடித்துக் கட்டிலில் கட்டிவிட்டார்கள். ஒரு கடிதத்தில் ஏதோ எழுதச் சொல்லி வற்புறுத்தினர்கள். 'உடனே கடிதங் கொண்டு வருபவருடன் புறப்பட்டு வா' என்று தன் மகளுக்கு எழுதச் சொன்னர்கள். ஆனல், ஜான் விலாசம் மட்டும் தப்பாக எழுதி ஏமாற்றி விட்டான். பயனில்லாமல் அலைந்து விட்டுத் தெனுடியரின் மனைவி திரும்பினள். தெனுடியர் மிகவும் ஆத்திரப் பட்டான். மாரியஸ் இனித் தாமதிக்க முடியாது. ஆனல், தற்செயலாகத் தெனுடியரின் மகள் எழுதிய காகிதத் துண்டு கிடந்தது. அதில் அவள் "போலீஸ் வருகிறர்கள்" என்று எழுதியிருந்தாள். இதை அந்த அறையில் போட்டு விடுதல் நலம் என்று மாரியஸ் நினைத்துத் துளை வழியாக அக் காகிதத் துண்டை எறிந்தான். அதில் உள்ள செய்தியைக் கண்ட எல்லோரும் மூலைக்கு ஒருவராக மறைந்தார்கள். அதற்குள் ஜான்வல் ஜான் ஜன்னல் வழியாகக் குதித்து ஓடிவிட்டான்.

அதே சமயத்தில் ஜேவர்ட்டும் சில போலீஸ்காரர்களும் வந்தனர். தெனுடியர் முதலிய எல்லாத் திருடர்களும் அகப்பட்டுக் கொண்டார்கள். ஆனல், ஜான் மட்டும் தப்பித்துக் கொண்டான்.

8. பாரிஸில் நடந்த புரட்சி

முன்னுரை-மாரியஸ் காதல்—புரட்சி-நள்ளிரவில் கோஸெத்துக்குச் செய்தி அனுப்புதல்-ஜான் ஜேவர்ட்டை மன்னித்தல்-முடிவுரை.

மாரியஸ் காதல்: கோஸெத்தின் படிப்பு முடிந்து விட்டது. ஜான் கன்னிமடத் தொழிலை விட்டு விட்டான். பாரிஸ் நகரின் வெளியில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டு அங்கு கோஸெத்துடன் வாழ்ந்தான்

இந்நாளில் மாரியஸ் கோஸெத்தை அவள் வீட்டுத் தோட்டத்தில் சந்தித்தான். இருவரும் தத்தம் காதலை வெளியிட்டனர். ஜான்வல் ஜான் சிறிது காலமாகவே அவளிடம் ஏற்பட்டுள்ள மாறுதலைக் கவனித்து வந்தான். இருந்தாலும் இவ்வளவு நாட்களாக அன்பாக வளர்த்து வந்த அவளது காதல் பாதையில் ஜான் குறுக்கிட விரும்ப வில்லை. தவிர, போலீஸுக்குப் பயந்து வாழ்வதைக் காட்டிலும், இங்கிலாந்துக்குப் போய் நிம்மதியாக வாழலாம் என்று ஜான் முடிவு செய்தான். இதை மாரியஸிடம் கோஸெத் வெளியிட்டாள். அவளைப் பிரிய அவனுக்கு மனமில்லை. ஆனாலும் அவளுடன் போகவும் பணம் இல்லை. இந்நிலையில் மாரியஸ் தன் கருத்தை மறுநாள் தெரிவிப்பதாகச் சொல்லி விட்டுக் கோஸெத்தைப் பிரிந்து சென்றான்.

நேராக மாரியஸ் தன் பாட்டனாரிடம் போனான். ஜில் நார்மன் மிகவும் கிழவராகி, மறுபடியும் மாரியஸைப் பார்க்க முடியுமோ என்று ஏங்கிக் கொண்டிருந்தார். அவரிடம் சென்று தயங்கிக் கொண்டே கோஸெத்தை மணம் செய்விக்குமாறு கேட்டான். ஏழையைக் கல்யாணம் செய்து வைக்க அவர் மறுத்து விட்டார். மனம் உடைந்து மாரியஸ் வீடு திரும்பினான்.

புரட்சி: 1832-ஆம் ஆண்டு ஜூன் 5-ஆம் நாள் பாரிஸில் புரட்சி ஆரம்பமாயிற்று. மக்கள் முடியாட்சியை வெறுத்தனர். இந்தப் புரட்சியை ஒடுக்கி விட அரசாங்கமும் எங்கும் இராணுவங்களை நிறுத்தி வைத்தது. குடியரசுக் கட்சிக்கு ஆயுத பலம் அதிகம் கிடையாது. ஆனால் கட்சியை சேர்ந்த ஒவ்வொருவரும் உண்மையாக உயிரையும் விடத் தயாராக இருந்தனர். ஒரு குறிப்பிட்ட தெருவில் இரும்புத் துண்டுகள், மரங்கள் முதலியவைகளைக் கொண்டு அரண் அமைத்துக் கொண்டார்கள்; அருகாமையில் இருந்த மதுக்கடையில் வெடி மருந்துகளும் தோட்டாக்களும், பதுக்கி வைத்திருந்தனர். குடியரசுக் கட்சியில் ஐம்பது பேர்கள்தாம் இருந்தனர். தலைவனாக **என்ஜோல்ரஸ்** என்ற இளைஞன் இருந்து, உணர்ச்சியுடன் போராட்டத்தை நடத்தினான். புரட்சியை ஆரம்பித்து விட்டால், பிறகு மக்கள் சேர்ந்து கொள்வார்கள் என்பது அவர்களது பூரண நம்பிக்கை. அரசாங்கப்படை புறப்பட்டு விட்டது. குடியரசு வீரர்களும் ஆளுக்கு ஒரு துப்பாக்கியும் முப்பது தோட்டாக்களும் எடுத்துக்கொண்டு ஆயத்தமாய் இருந்தார்கள்.

இந்நிலையில் இன்ஸ்பெக்டர் ஜேவர்ட் அவ்விடம் ஒற்றனாக வந்தான். ஆனால், வீரர்கள் அவனைப் பிடித்து மதுக் கடையிலிருந்த தூணில் கட்டி விட்டார்கள். முடிவுகாலம் நெருங்கி விட்டது என்று ஜேவர்டுக்கு நன்றாகத் தெரியும். இதற்குள் அரசாங்கப்படை நெருங்கவே, அரணைப் பாதுகாக்க எல்லோரும் விரைந்தனர். தாக்குதல் ஆரம்பமாயிற்று. இருதரப்பிலும் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. ஆயுத பலம் அதிகமாக இருந்த அரசாங்கப் படையின் கையே ஓங்கி நின்றது. ஆபத்து விரைவில் வந்து விட்டது என்று எண்ணி, மாரியஸ் மதுக்கடையிலிருந்த வெடி மருந்துப் பீப்பாயைக் கொண்டுவந்து விட்டான்; வெடி மருந்திற்குத் தீ வைக்கப் போவதாக எச்சரிக்கை செய்தான். உடனே அரசாங்கப் படைகள் நிலைகுலைந்து ஓடின. குடியரசுப் படைக்கு வெற்றி கிடைத்துவிட்டது.

நள்ளிரவில் கோஸெத்துக்கு செய்தியனுப்புதல்: என்ன இருந்தாலும் குடியரசுப் படை கடைசியில் அழிந்துவிடும் என்பது மாரியஸுக்குத் தெரியும். எதிர் பார்த்தபடி, மக்கள் புரட்சியில் சேரவில்லை. தவிர, முதற் போரிலேயே

பலர் மடிந்து விட்டனர். எனினும் கட்சி வீரர் யாரும் சோர்வடையவில்லை. யாவரும் இறந்தாலும், பின்னராவது மக்கள் உணர்வார்கள் என்பது அவர்கள் எண்ணம்.

மாரியஸ் ஒரு வீரனிடம் கடிதங் கொடுத்து, 17-ஆம் எண் உள்ள வீட்டில் அதைக் கொடுத்து வருமாறு அனுப்பினான். அதை ஜான்வல் ஜான் கோஸெத்திடம் சேர்ப்பதாகச் சொல்லி வாங்கிக் கொண்டான். தாத்தா அனுமதிக்காததால் திருமணம் தடைப்பட்டது என்றும், தான் அவளை உண்மையாகக் காதலிப்பதாகவும், இன்று போரில் சாகப் போவதாகவும் கடிதத்தில் கண்டிருந்தது. ஜான் பலவிதமாக எண்ணினான். மறு விநாடியே இவ்வளவு பாடுபட்டுக் காத்த அவளை, அவள் விருப்பப்படி வாழ வைப்பதே கடமை என்ற முடிவுக்கு வந்தான்.

ஜேவர்ட்டை மன்னித்தல் : உடனே போர்க்கோலம் கொண்டு, ஜான் குடியரசுக் கட்சியில் சேர்ந்தான் ; எல்லோரையும் உற்சாக மூட்டினான். தற்சமயம் அவர்கள் படையின் எண்ணிக்கை ஜானுடன் முப்பத்தேழுதான். அடிபட்டவர்களை மதுக்கடையில் சிகிச்சைக்கு அனுப்பி விட்டார்கள். இறந்தவர் சடலங்களையும் இரகசியமாக அடக்கம் செய்து விட்டனர். பிறகு எல்லோரும் உறுதியுடன் அரணை இரட்டிப்பாக உயர்த்தி, தக்க இடங்களில் நின்று கொண்டனர். அரசாங்கப் படையும் வந்து சூழ்ந்து கொண்டது. சண்டை ஆரம்பித்த சிறிது நேரத்திற்குள் அரணின் ஒரு மூலை சேதமாகிவிட்டது. எதிர் மாடியில் தொங்கிக் கொண்டு இருந்த ஒரு பலகையைச் சுட்டு விழச் செய்தார்கள். எங்கும் குண்டு மழை. யார் சென்று பலகையை எடுத்து வருவது என்று தயங்கினர். ஜான்வல் ஜான் தைரியமாய் ஒரு விநாடியில் சென்று பலகையுடன் திரும்பினான். அரண் மறுபடியும் புதுப்பிக்கப்பட்டது. மாரியஸ் ஜானைப் புகழ்ந்து, அவனுக்கு என்ன உபகாரம் செய்வது என்று கேட்டான். ஜான் உள்ளே கட்டுண்டிருக்கும் ஜேவர்ட்டைத் தானே கொல்ல அனுமதிக்க வேண்டும் என்று கேட்டு, இசைவு பெற்றான். போர் நடந்து கொண்டே இருந்தது. ஜான், ஜேவர்டின் கட்டுகளை அவிழ்த்து ஒரு சந்துக்கு அழைத்துச் சென்றான். அங்கு ஜேவர்ட் தனக்கு முடிவு நெருங்கி விட்டது என்று எண்ணினான். அதற்கு மாறாக, ஜான் கத்தியை எடுத்து அவன் கைக்கட்டுகளை அறுத்துப் போய்விடுமாறு கூறினான். ஒரு பழங் கைதி, அதுவும் எப்போதும் ஜேவர்டால் துரத்தப் பட்டவன், பழி வாங்கச் சந்தர்ப்பம் வாய்த்த போதும் மன்னிப்பது பெரிய செயல். ஜேவர்ட் மனம் உடைந்து அந்த இடத்தை விட்டு அகன்றான்.

9. இரண்டாம் நாள் புரட்சியும் ஜானின் முடிவும்.

முன்னுரை-மாரியஸைக் காத்தல்-தாத்தாவிடம் சேர்க்கப் பட்டமை-ஜேவர்டின் முடிவு-மாரியஸ் கோஸெத் திருமணம்-ஜானின் முடிவு

மாரியஸைக் காத்தல் : குடியரசுப் படை மிக மோசமான நிலைக்கு வந்துவிட்டது. மாரியஸ் தோளில் ஒரு தோட்டா பாய்ந்தது. மயக்கமாக வீழ்ந்தான். மறு விநாடியே ஜான் அவனைத் தோளில் தூக்கிக் கொண்டு ஓடினான். நான்கு புறமும் அரசாங்கப் படை சூழ்ந்து கொண்டது. எந்த வழியாகவும் தப்ப

“அஞ்சுவது அஞ்சாமை பேதைமை.”—வள்ளுவர்.

முடியாது. அருகில் காணப்பட்ட சாக்கடைக் கதவு வழியாக ஜான் உள்ளே இறங்கினான். அதுதான் பாரிஸ் நகரத்துப் பாதாளச் சாக்கடை. அதில் சேறும், கற்களும், விஷப் பூச்சிகளும் தாம் இருந்தன. உள்ளே போனவர் யாரும் சாதாரணமாக உயிருடன் திரும்ப முடியாது. தோளில் மாரியஸைச் சுமந்து கொண்டு, சாக்கடை வழியே நடந்தான் ஜான். எதிரில் போலீஸார் அங்கும் காணப்பட்டனர். குடியரசு வீரர் யாராவது அங்கு ஒளிந்து கொண்டு இருப்பர் என்று அவர்கள் தேடினர். ஆனால் சிறிது நேரத்தில் அவர்கள் மேலேறிப் போய்விட்டனர். ஜான் அப்படியே நடந்து நகருக்கு வெளியில் ஒரு ஆற்றங் கரையை அடைந்து, மாரியஸைக் கீழே இறக்கினான். அவனுக்கு இன்னமும் மூர்ச்சை தெளியவே இல்லை.

மாரியஸ் அவன் தாத்தாவிடம் சேர்க்கப்பட்டமை: ஜான் சிறிது தண்ணீர் குடிக்கப்போனான். பின்னால் யாரோ வரும் சப்தம் கேட்டது. அவன் தான் இன்ஸ்பெக்டர் ஜேவர்ட். இங்குமா ஜானுக்கு ஆபத்துவரவேண்டும்? ஜான் அப்படியே கல்போல் நின்றுவிட்டான். உடம்பு முழுவதும் சேறாக இருந்ததால், அவனால் ஜானை உடனே அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. தெளிந்தபிறகு, அவனை அங்கு வந்த காரணத்தைக் கேட்டான். ஜான் எதையும் ஒளிக்காமல் கூறினான். மாரியஸை அவன் குறிப்புப் புத்தகத்தில் கண்டவாறு கல்வேர் தெரு விலாசத்தில் சேர்க்கவேண்டும். ஜேவர்ட் ஒரு வண்டியைப் பேசி, மூவருமாக ஜில் நார்மனின் வீட்டையடைந்தனர். மாரியஸை அங்கு விட்டபின்பு, ஜான் செய்யவேண்டிய வேலை ஒன்று எஞ்சி இருந்தது. கோஸெத்திடம் விவரம் கூறிவிட்டு, அவளைப்பிரியவேண்டும். ஜானின் தியாகவுணர்ச்சியை ஜேவர்ட் கவனித்தான். எனவே, ஜானின் கோரிக்கையை மறுக்கவில்லை. வீட்டு வாசலில் இருப்பதாக ஜேவர்ட் சொல்ல, ஜான் உள்ளே சென்றான். இந்த முறை சிறையிலிருந்து உயிருடன் வெளிவர முடியாது என்றும், கோஸெத்தை அநாதையாக விடவேண்டுமே என்றும் எண்ணி, மனங் கலங்கினான். மெதுவாக மாடிக்குச் சென்றான். மனக்குழப்பத்துடன் ஜேவர்ட் அந்த இடத்தைவிட்டுப் போய்விட்டான்.

ஜேவர்ட்டின் முடிவு: ஜானின் செய்கைகளை இதுவரையில் ஜேவர்ட் உணரவில்லை. எப்போதும் கடமை தவறாத அதிகாரியாக அவன் நடந்துவந்தான். உயிரையும் பொருட்படுத்தாமல் கடமைக்காகப் பாடுபட்டான்; நெப்போலியனைப்போலவே நிமிர்ந்து நடந்தான். இப்போது அவன் மனத்தில் போராட்டம் ஆரம்பித்துவிட்டது. ஜானைக் கைது செய்வதா கூடாதா என்று அவன் ஏங்கினான். "சட்டப்படி ஜான் தப்பியோடிய பழங்குற்றவாளி. ஆனால், அவன் குற்றமும் செய்தறியான், மக்கள் நன்மைக்காகவே உழைத்தான்; எதிரியாகிய தன்னை மன்னித்து விடுவித்தான்; தன் உயிரையும் பொருட்படுத்தாமல் ஒரு வீரனைச் சாக்கடை வழியாகக் காத்தான். அத்தகைய தியாகியைக் கைது செய்வதா!" என்பதே ஜேவர்ட்டின் மனக்குழப்பம். சட்டத்தை மீறவும் அவன் விரும்பவில்லை. இரவு மணி இரண்டு. வேலையை ராஜினாமா செய்து, ஒரு கடிதத்தை அவன் ஆபீஸில் சேர்த்துவிட்டான்; நேராக ஆற்றங் கரையை அடைந்தான். மறு விநாடி ஆற்று வெள்ளம் அவன் மனத்துக்கு நிம்மதியைத் தந்துவிட்டது. கடமைக்காகவே உயிர்நீத்த உத்தமன் ஜேவர்ட்.

மாரியஸ்-கோஸெத் திருமணம்: காயங்கள் குணமடைந்து மாரியஸ் முன்போல் ஆக, ஆறு மாதங்கள் ஆயின. ஜில் நார்மன் இம்முறை திருமண முடிவை மறுக்க முடியவில்லை. ஜான் சேர்த்துவைத்திருந்த ஆறு லட்சம்

"குற்றமற்றவன் பிறரை ஐயுறான்." – பென் ஜான்ஸன்.

பிராங்கையும் கோஸெத்துக்குச் சீதனமாகக்கொடுத்தான். மிக்க விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது. ஜான் மிக்க மகிழ்ச்சியடைந்தான். ஆனால், தன் வீட்டிற்குத் திரும்பியதும் பல எண்ணங்கள் உண்டாயின. கோஸெத்தின் பிரிவு அவனுக்கு வேதனையைத்தந்தது. குற்றமுள்ள நெஞ்சுடன் ஜில் நார்மன் வீட்டில் சரிசமானமாக வாழவும் அவன் விரும்பவில்லை. மாரியஸ் ஜானைத் தன் வீட்டிலேயே தங்கியிருக்குமாறு வேண்டினான். ஜான் தான் சிறை சென்ற பழங்கைதி என்றும், தன்னால் அவன் குடும்ப மதிப்பு குறைதல் கூடாது என்றும் கூறிக் கோஸெத்தை வளர்த்த விவரத்தையும் கூறினான். தினமும் மாலையில் ஜான் அவளை வந்து பார்த்துவிட்டுப் போவது வழக்கம்.

ஜான் அமரனானான் : மாரியஸுக்கு ஜான் வருவது பிடிக்கவில்லை. கோஸெத் மூலம் அவன் அதைத் தெரிவித்தான். அது முதல் ஜானும் அங்குச் செல்வதை நிறுத்திவிட்டான். ஒரு நாள் தெனடியர் மாரியஸிடம் வந்தான். மாடலின் வைத்துப்போன பாங்கித் தொகையை ஜான் பொய்க் கையெழுத்திட்டு வாங்கிக்கொண்டதாகக் கூறுவதற்குள் மாரியஸே கேட்டுவிட்டான். 'புரட்சியின்போது ஓர் இளைஞன்சவத்தைத் தோளில் சுமந்துகொண்டு, சாக்கடை வழியாக ஜான் ஓடினான். பணத்திற்காக அவனை ஜான் கொன்றிருக்க வேண்டும் என்று தெனடியர் சொன்னான். அப்பொழுது அந்த இளைஞன் போட்டிருந்த துணியின் ஒரு கிழிசலையும் தெனடியர் காட்டினான். தன்னைக் காத்தவன் ஜானே என்பதை மாரியஸ் உணர்ந்தான்; அவமானத்தால் வருந்தினான். உடனே, கோஸெத்தை அழைத்துக்கொண்டு, மாரியஸ் ஜானிடம் விரைந்தான்; தன்னை மன்னித்துவிடுமாறு வேண்டினான். கடைசியில் அவர்கள் இருவரையும் பார்க்க முடிந்ததே பெரும்பேறு என்றான் ஜான்; உள்ளங் குளிர்ந்து அவர்களை நோக்கினான்; சில விநாடிகளில் ஜானின் ஆவி பிரிந்தது. ஜான்வல் ஜான் அமரனானான்.

10. ஜான்வல்ஜானின் நற்பண்புகள்

முன்னுரை - பொறுப்புணர்ச்சி - மனமாற்றம் - குற்றம் புரிந்ததற்கு வருந்துதல் - ஏழைக்கிரங்கல் - தண்டனை ஏற்றல் - சொன்ன சொல் காத்தல் - தஞ்சம் அடைத்தவரைக் காப்பாற்றுதல் - பகைவனுக்கு அருளல் - தியாகம் - நற்குணங்கள் - முடிவுரை.

பொறுப்புணர்ச்சி : ஜான்வல்ஜான் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவன். இளமையிலேயே பெற்றோர்களை இழந்த அவன் தன் தமக்கையால் வளர்க்கப்பட்டான். பெரியவனானபின்பு கணவனை இழந்த தமக்கையைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் கடமையும் அவனுடையதாயின. குழந்தைகள் பசியால் துடிப்பதைக்காணச் சகிக்க முடியாமையால், ரொட்டிக்கிடங்கில் அவன் திருடினான்; பல முறையும் தமக்கையின் நினைவாலேயே சிறையிலிருந்து தப்ப முயன்றான். சிறைத்தண்டனை முடிவில் பத்தொன்பது ஆண்டுகளாயின. எனவே, ஜான் பிறப்பிலேயே எளியோரைக் கண்டு இரங்கும் நெஞ்சம் படைத்தவனாய் இருந்தான். சூழ்நிலையும் சமூகமும் அவனைக் கல் நெஞ்சனாக்கி முரடனாக்கின.

மனமாற்றம் : சிறையிலிருந்து மீண்டபின் மிரியல் சாமியை அடைந்தான் ஜான். பசியும் களைப்பும் தீர்ந்தபின், பல ஆண்டுகளின் உழைப்பும் கஷ்டமும்

அவன் நினைவுக்கு வந்தன. எனவே, பத்தொன்பது ஆண்டுகள் சேர்த்த பணத்தைக் காட்டிலும் இரண்டு மடங்கு எளிதாக ஓர் இரவில் வருவதை எண்ணிச் சாமியாரின் வெள்ளிச் சாமான்களைத் திருடினுன். திருடியவனுக்குத் தண்டனை அளிக்காமல், வெள்ளி விளக்குகளையும் கொடுத்துப் போலீஸிடமிருந்து சாமியார் மீட்டபோது அவனது உள்ளத்திலே இருந்த பழைய நற்குணம் வெளிப்பட்டது. சுவாமியின் உபதேசங்கள் அவன் உள்ளத்தைத் தூய்மையாக்கின. தொழில் செய்யச்சொல்லி அவர் காட்டிய வழி மேலும் ஜானை நல்வழிப்படுத்தியது.

குற்றம் புரிந்ததற்கு வருந்துதல் : ஜானின் மனப்போராட்டம் அடங்கவில்லை. சிறுவனது நாணயத்தை மறைத்ததை எண்ணி அவன் வருந்தினுன். குற்றத்தை எண்ணி வருந்தினுல், அதுவே அதற்குப் பரிகாரம் என்ற உண்மையை ஜானினிடம் காணலாம்.

ஏழைக்கு இரங்கல் : மாடலினுகத் தொழில் செய்தபொழுதும், ஏழைகளை அவன் மறக்கவில்லை. எல்லோருக்கும் வேலை கொடுத்து, ஏழைகளை வாழச்செய்தான் அவன். வீடுதோறும் சென்று யாருக்கும் தெரியாமல் ஏழைகளுக்குப் பணம் வைத்துவிட்டுத் திரும்பியது ஜானின் கருணை உள்ளத்திற்குச் சான்ருகும். மேயராகப் பதவி வகித்தாலும், அந்தஸ்தால் அவன் பண்பு மாறிவிட்டதா ? போஷல்வானின் உயிர் வண்டிக்கடியில் ஊசலாடுவதைக் கண்டு அவன் கழிபேரிரக்கம் கொண்டான். அவன் தன் உயர்ந்த ஆடைகளையும் அந்தஸ்தையும் பார்க்கவில்லை; சேற்றில் வண்டிக்கடியில் படுத்தான்; கிழவனைக் காத்தான். தன்னுயிரைப்போல் பிறவுயிரைக் கருதுந் தூய உள்ளம் ஜானின் பிறவிக் குணம். சிறையில் சிறிது காலம் சூழ்நிலையால் மறைக்கப்பட்டிருந்த உயர்ந்த பண்புகள் பிறகு ஒளிவிட்டுப் பிரகாசிக்கத் தொடங்கின.

பாந்த்தேன் அநாதைப் பெண். குற்றமற்றவள் சிறையில் அடைபடுதலை அவன் விரும்பவில்லை. ஆனுல் ஜான் நேராக உதவி செய்ய முடியாது. இன்ஸ்பெக்டர் ஜேவர்ட் ஒரு அதிகாரி. எனவே, ஜான் மேயர் என்ற செல்வாக்கை உபயோகிக்கவேண்டியதாயிற்று. இருந்தாலும் ஏழைக்கு நன்மை செய்யும் நோக்கமே அதிலும் உள்ளடங்கி இருந்தது. பிரெஞ்சு மன்னர் மேயர் பதவி கொடுத்தபோது பணிவுடன் மறுத்த ஜான்வல் ஜான் தானுகப் பதவி வெறிகொண்டு, கடமையை மறப்பானு ?

தண்டனை ஏற்றல் : குற்றஞ் செய்த தானிருக்க, நிரபராதி தண்டிக்கப்படுவதை ஜான் பொறுக்கவில்லை. செய்தி கேட்டு இரவெல்லாம் தூங்காமல் அவன் தன் உள்ளம் துடித்துக்கொண்டிருந்தான். விசாரணை நடக்குமிடத்திற்கு ஜான் ஓடோடியும் வந்தான் ; தன்னைத்தானே வெளிப்படுத்திக்கொண்டான் ; நம்பாத நீதிபதிக்குச் சாட்சிகளை அடையாளம் காட்டித் தானே பழங்கைதி ஜான்வல் ஜான் என்று நிரூபித்து, தண்டனை கொடுக்குமாறு வேண்டினுன். குற்றத்தை ஒப்புக்கொள்ளும் தன்மை, தானே தண்டனையை ஏற்க முன் வருதல், நிரபராதியைக் காத்தல் ஆகிய பண்புகள் இதிலிருந்து தெள்ளத் தெளிவாகும்.

சொன்ன சொல் காத்தல் : கொடுத்த வாக்கைக் காக்க ஜான் பட்டபாடு கொஞ்சம் அன்று. உயிரையும் மதியாது கப்பல் மரத்திலிருந்து தப்பி, தெனுடியருக்கு நிறையப் பணம் கொடுத்துக் கோஸெத்தைக் காத்தான். பாந்த்தேன் மரணப்படுக்கையில் இருந்தபோது, ஜேவர்ட் தாமதியாததால்தான் அவள்

உயிர் போயிற்று என்று ஜான் இரங்கிக்கூறிய மொழி ஒன்றே அவன் ஏழை பங்காளன் என்பதை வலியுறுத்தும்.

தஞ்சம் அடைந்தவரைக் காப்பாற்றுதல் : கோஸெத்துக்காகவே உயிர் வாழ்ந்தான் ஜான் ; வேறு பெயர்களில் போலீஸை ஏமாற்றினன். உள்ளம் உறுதி படைத்தவனுக்குக் கன்னிமடத் தோட்ட மதில் உயரமா ? கயிற்றினல் கோஸெத்தைக் கட்டி, மறு நுனியை வாயில் கௌவிக்கொண்டு, மதிலின் உச்சியை அடைந்தான். மறு விநாடி தோட்டத்தினுள்ளே ஜான் மறைந்தான். போஷல்வான் உயிரைக்காத்த நண்பனுக்கு உதவி செய்தான். கோஸெத்துக்காகச் சவப்பெட்டிக்குள் புகுந்தான் ஜான். தைரியம், ஏழைக்கிரங்கி உயிரை மதிக்காமை ஆகிய குணங்கள் ஜானிடம் மிக்கிருந்தன.

கோஸெத் வாழ்வே தன் வாழ்வு என்ற முடிவுக்கு ஜான் அந்திய காலத்தில் வந்தான் ; குடியரசுப் படையில் சேர்ந்தான் ; குண்டுமாரிக் கிடையில் புகுந்து அரணைப் புதுப்பித்தான் ; மயங்கி வீழ்ந்த மாரியஸைச் சாக்கடை வழியாகக் காத்து, ஜில் நார்மனிடம் சேர்த்தான். மாரியஸ் கடைசி வேண்டுகோளாக எழுதி வைத்த குறிப்பை நிறைவேற்றவே ஜான் பகைவரும் அஞ்சும் பயங்கரப் பாதாளச் சாக்கடைச் சேற்றிலே இறங்கினன். கடைசியாகக் கோஸெத்தைப் பார்க்க அனுமதி கோரி, ஜேவர்ட்டை வேண்டினன்.

பகைவனுக்கு அருளல் : குடியரசுப் படையால் கட்டப்பட்ட ஜேவர்ட்டைக் கொல்லாமல் இரகசியமாக ஜான் விடுவித்து உயிர்ப் பிச்சை தந்தான். எதிரிக்கு, அதிகாரியாக இருந்து தன்னைத் தன் வாழ்நாள் முழுவதிலும் வெருட்டியவனுக்கு, சந்தர்ப்பவசத்தால் தன்னிடமே சிக்கிக் கொண்டவனுக்குக் கருணை காட்டினன் ஜான். ஞானிக்கும் எட்டாத இத்தகைய உயர்ந்த பண்பு ஜானிடம் இருந்தது வியக்கத் தக்கதாகும்.

> "இன்னு செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
> நன்னயம் செய்து விடல்"

என்ற ஆன்றோர் மொழிக்குச் சான்று ஜான்வல் ஜான். எனவே, ஜேவர்ட் புது உணர்வு பெற்றான். ஜானைக் கைது செய்வதைக் காட்டிலும் இறப்பது மேல் என்ற முடிவுக்கு ஜேவர்ட் வந்தான்.

தியாகம் : மாரியஸுக்கும் கோஸெத்துக்கும் திருமணம் நடந்தது. தன் நிலைமையால் மாரியஸ் குடும்பத்துக்குக் கெட்டபெயரை ஏற்படுத்த ஜான் விரும்பவில்லை. எனவே, அவன் தனியாகவே வீட்டில் இருந்தான். துரதிருஷ்டவசமாக மாரியஸ் ஜானைப் புரிந்து கொள்ளவில்லை. ஆறு லட்சம் பிராங்கை ஜான் திருடி இருக்கக் கூடும் என்று மாரியஸ் எண்ணினன். உண்மையை உணர்ந்து, தன்னைக் காத்தவனே ஜான் என்பது வெளிப்பட்டதும் மாரியஸ் ஓடினன். ஆனல் ஜானின் இறுதிக் காலம் நெருங்கி விட்டது. ஜானின் மனம் அமைதி யடைந்தது. தான் குற்றம் செய்யாமையை மாரியஸ் உணர்ந்து விட்டான் என்பதை எண்ணி, ஜான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

நற் குணங்கள் : ஜானின் வாழ்க்கை மக்களுக்கு ஒரு சீரிய எடுத்துக்காட்டாகும் உண்மை, எளியோர்க்கு இரங்குதல், உயிரையும் மதியாமல் கடமையைச் செய்தல், உள்ளத்தை ஒளிக்காமல் தண்டனையை ஏற்றல், பதவி வெறியால் இன்னு செய்யாமை, வாக்கை நிறைவேற்றத் துன்பத்தைப் பொறுத்தல், காதல் உணர்ச்சியைத் தடுக்காதிருத்தல், செய்த நன்றியை மறவாமை,

குற்றம் செய்ததை எண்ணி இரங்குதல், எதிரியையும் மன்னிக்கும் பண்பு, நல்வழியில் பொருள்தேடி ஏழைகளுக்கே உதவுதல், தன்னுயிர் போல் பிறவுயிரைக் கருதுதல் ஆகிய எல்லாம் ஜானிடம் குடிகொண்டிருந்தன. எனவே, அவனை **ஏழை பங்காளன்** எனல் மிகையாகாது.

11. ஜேவர்டின் கடமை உணர்ச்சியும், ஏனைக் குணச் சிறப்புகளும்

முன்னுரை–தோற்றம்-நினைவாற்றல்-கடமை யுணர்ச்சி,-நற்பணி-சாவிலும் துணிவு-நன்றி யறிதல்-முடிவுரை.

தோற்றம் : ஜேவர்ட் தன் வேலைக் கேற்ற கம்பீரமான தோற்றம் உடையவன். எதற்கும் எவர்க்கும் பயப்படுவது என்பது அவனிடம் எள்ளளவும் இல்லை. கையில் எப்போதும் அவன் ஒரு தடி வைத்துக் கொண்டிருப்பான். அவன் தன் தலையைக் குனிந்து கொண்டு நடப்பதே கிடையாது. அவனது உள்ளம் தூய்மையானது. எனவே, நிமிர்ந்து, என்றும் பீடு நடையுடன் அவன் விளங்கினான். மல்யுத்த வீரனைப் போன்று அவன் உடல் உரம் பெற்றிருந்தான். அவனது முகத்தில் புன்னகையைக் காண்பதே அரிது. கடுகடுத்த முகத்துடனேயே இருந்தான் அவன்.

நினைவாற்றல் : தோற்றம் பலவாயினும் அவனிடமும் மனிதப் பண்புகள் இருந்தன. சிறையில் இருந்த கைதியின் நினைவு அவன் மனத்தில் நிலைபெற்றிருந்தது. வண்டிக்கடியில் அகப்பட்ட போஷல்வானைக் காக்க, யாரும் முன்வராதிருக்க, டூலோன் சிறையில் இருந்த ஒரு கைதிக்குத்தான் இவ்வளவு வலிவு இருப்பதாக ஜேவர்ட் கூறினான். இதிலிருந்து தொழிலிலிருந்தாலும் தனிப்பட்ட கைதிகளின் போக்கை அறிந்து கொண்டிருந்தான் என்பதை நாம் உணரலாம். மேலும் பல ஆண்டுகள் கழிந்த பின்னரும் வேறு ஊரில் இருக்கும் பொழுதும், அந்தக் கைதியின் நினைவு அவனுக்கு இருந்தது.

இன்ஸ்பெக்டர் தொழிலுக்குத் தேவையான குணம் அவனிடம் இருந்தது. ஆட்களைக் கூர்ந்து கவனிப்பது அவன் வழக்கம். மாடலின் ஊருக்குப் புதியவன். எனவே, அவனது வரலாற்றை யறிய, எப்பொழுது சந்திக்க நேர்ந்தாலும் சந்தேகக்கண் கொண்டே மாடலினை ஜேவர்ட் கவனித்து வந்தான்.

கடமையுணர்ச்சி: தான் தவறு என்று கண்டதைத் தண்டிக்காமல் விடமாட்டான் ஜேவர்ட். குற்றத்திற் கேற்ற தண்டனை தருதல் அதிகாரியின் கடமையாகும். அவன் பாந்தேனுக்கு ஆறு மாதம் தண்டனை விதித்தான். ஆனால் மனிதப் பண்பால் மன்னித்த ஜானின் நிலைமை வேறு. மேயர் என்ற முறையில், கட்டளைக்குக் கீழ்ப் படிந்து, ஜேவர்ட் அவளை விடுதலை செய்தான். நியாயத்தை நிலை நாட்டுதலும், உயர்ந்த அதிகாரிகளிடம் பணிந்து நடப்பதும் ஜேவர்ட்டின் சிறந்த குணங்களாகும்.

நற்பணி : பாரிஸ் நகரத் தெருவில்இரவில் சுற்றி வந்து, குற்றவாளிகளைப் பிடிப்பது போன்ற நற் செயல்களை ஜேவர்ட் செய்தான். ஒரு வீட்டிற்

குப் புதிதாக யாராவது குடி வந்தால், அவர்களைப் பற்றி அறிந்து கொள்வது இன்ஸ்பெக்டர் கடமை. இரவில் அவன் ஜானின் வீட்டு மாடிவரை வந்து, நின்றுவிட்டுத் திரும்பினன்; பல இடங்களிலும் போலீஸாரை நிறுத்தி, ஜானைப் பிடிக்க முயன்றான். கன்னி மடத் தோட்டத்தில் புகாவிடில், ஜான் அகப்பட்டிருப்பான்.

சாவிலும் துணிவு : புரட்சியில் ஒற்றனாகப் பணி புரிந்தான் ஜேவர்ட். குடியரசுப் படை வீரரால் பிடிபட்ட பின்னும், உயிர் விடவும் துணிந்து உண்மையைக் கூறினன் அவன். ஜான் கட்டுக்களை அறுக்கக் கத்தியெடுத்ததும், கொல்ல வருவதாக எண்ணினனெனினும், தைரியமாகவே ஜேவர்ட் நின்றான்; விடுதலை ஆனதும் குற்றத்திற்கு மன்னிப்பு வேண்டுவது போல் எண்ணித் தலை குனிந்தான்.

நன்றி யறிதல் : 'கடமை பெரிதா? அல்லது செய்த நன்றியை மறவா திருத்தல் பெரிதா?' என்ற மனப் போராட்டம் ஜேவர்ட்டை தொடர்ந்தது. கடமை உள்ளத்திலும் மனிதப் பண்பு மாறவில்லை. ஆற்றங் கரையில் ஜான் அகப்பட்டுக் கொண்டாலும், ஜேவர்ட் அவனது இறுதிக் கோரிக்கைகளுக்குச் சம்மதித்தான். எளியோர்க்கு இரங்கும் தியாகியைக் கைது செய்ய அவன் விரும்பவில்லை. சட்டத்தை மீறவும் அவனுக்கு மனம் வரவில்லை, அவனிடம் மனித வுணர்ச்சி ஓங்கி நின்றது. எனவே, அவன் மானம் பெரிதென மதித்து, உயிரைப் போக்கிக் கொண்டான். ஜேவர்டைப் போன்ற கடமை யுணர்ச்சி மிக்க அதிகாரி உலகுக்குக் கிடைத்தல் அரிது.

கட்டுரைக் குறிப்புக்கள்

(* இக்குறியிட்டவை தேர்வுக்கு முக்கியமானவை)

1. புறக்கணிக்கப்பட்ட சிறைக் கைதி.

முன்னுரை-ஜான்வல் ஜானின் நிலைமை-தங்க இடந் தேடி அலைதல்-ஹோட்டலில் அடைந்த துன்பம்-தேநீர் விடுதி, மற்றொரு ஹோட்டல், ஒரு வீடு, நாய்க் குடிசை-எல்லா இடங்களிலும் ஜான் துரத்தப் பட்டமை-மாதா கோவிலை அடைதல்-முடிவுரை.

2. *மாதா கோயில் திருட்டும் மிரியல் சாமியார் உபதேசங்களும்.

முன்னுரை-மிரியல் சாமியார் வரலாறு-ஜானுக்கு உபசாரம்-மிரியல் சாமி உபதேசம்-பழைய கதையும் பாதிரியிடம் திருட்டும்-திருட்டு வெளிப்படல்-மிரியல் சாமியின் அன்பு கனிந்த உபதேசம்-முடிவுரை.

3. ஜான்வல் ஜானின் மன மாற்றம்.

முன்னுரை-சிறுவனின் நாணயம்-பாதிரியைச் சந்தித்தல்-ஜானின் மாறிய நிலை-முடிவுரை.

4. *ஸ்ரீமான் மாடலினுக வாழ்ந்த ஜான் வல் ஜானின் அருட் பண்பு.

முன்னுரை-மாடலின் மேயராதல்-வண்டியிலகப்பட்ட கிழவனைக் காத்தல்-பாந்த்தேன் என்ற அநாதைப் பெண்ணுக்கு உதவுதல்-ஜான்வல் ஜானே மேயர்-முடிவுரை.

5. *மேயராக இருந்த ஜான்வல் ஜான் தன் உண்மை உருவை வெளிப் படுத்தியமை.

முன்னுரை-பழியோரிடம் பாவமோரிடம்-தன்னையே காட்டிக் கொடுத்தல்-பாந்த்தேன் மரணம்-முடிவுரை.

6. கன்னி மடப்பள்ளியில்-ஜான்வல் ஜான்.

முன்னுரை-ஜான் தப்பியமை-கோஸெத்தை விடுவிப்பது-போலீஸ் ஆபத்து-போஷல் வானைச் சந்தித்தல்-சவப் பெட்டி வழியாக வெளியேறுதல்-ஜான் கன்னி மடத்தில் அமர்தல்-முடிவுரை.

7. *தெனுடியரிடம் ஜான் அகப்பட்டமையும் தப்பிச் சென்றமையும்.

முன்னுரை-மாரியஸ் வரலாறு-கோஸெத்தைச் சந்தித்தல்-தெனுடியர் மகளைத் தெரிந்து கொள்ளுதல்-ஜாண்ட்ரெட் வீட்டில் ஜான்வல் ஜான்-ஜான் அகப்பட்டமை-தப்பினமை-முடிவுரை.

8. *பாரிஸில் நடந்த புரட்சி.

முன்னுரை-மாரியஸ் காதல்-புரட்சி-நள்ளிரவில் கோஸெத்துக்குச் செய்தி அனுப்புதல்-ஜான் ஜேவர்டை மன்னித்தல்-முடிவுரை.

9. *இரண்டாம் நாள் புரட்சியும் ஜானின் முடிவும்.

முன்னுரை-மாரியஸைக் காத்தல்-தாத்தாவிடம் சேர்க்கப் பட்டமை-ஜேவர்டின் முடிவு-மாரியஸ் கோஸெத் திருமணம்-ஜானின் முடிவு.

10. *ஜான்வல் ஜானின் நற்பண்புகள்.

முன்னுரை-பொறுப் புணர்ச்சி-மன மாற்றம்-குற்றம் புரிந்ததற்கு வருந்துதல்-ஏழைக்கு இரங்கல்-தண்டனை ஏற்றல்-சொன்ன சொல் காத்தல்-தஞ்சம் அடைந்தவரைக் காப்பாற்றுதல்-பகைவனுக்கு அருளல்-தியாகம்-நற்குணங்கள்-முடிவுரை.

11. *ஜேவர்டின் கடமை உணர்ச்சியும் ஏனைக் குணச் சிறப்புகளும்.

முன்னுரை-தோற்றம்-நினைவாற்றல்-கடமை யுணர்ச்சி-நற்பணி-சாவிலும் துணிவு-நன்றி யறிதல்-முடிவுரை.

மாதிரி வினாக்கள்

1. (a) விடுதலை அடைந்த ஜான் அடைந்த துன்பங்கள் யாவை?
(b) ஜான் பழங்குற்றவாளி எனப் புறங்கணிக்கப்பட்ட விதத்தை எழுதுக.
(c) "குற்றம் செய்தவன் திருந்துவதற்குச் சமூகம் சந்தர்ப்பம் அளிப்பதில்லை." விளக்குக. (இம்மூன்றுக்கும் விடை கட்டுரை 1)

2. (a) ஜான் மாதா கோவிலில் செய்த திருட்டு என்ன? அவன் எவ்வாறு மிரியல்சாமியால் காப்பாற்றப்பட்டான்?
(b) ஜானுக்குக் கிடைத்த எதிர்பாராத உபசாரம் செய்தது என்ன? ஜான் உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்தது என்ன?
(c) "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண, நன்னயஞ் செய்து விடல்" என்ற குறளுக்குச் சான்று மிரியல்சாமி என்பதை விளக்குக.
(d) மிரியல்சாமியின் வாழ்க்கையைப் பற்றிச் சுருக்கமாக எழுதுக.

விடை: a, b—கட்டுரை 2.
c— ,, 2: பின் மூன்று தலைப்புகள்.
d— ,, 2: முதல் இரண்டு தலைப்புகள்.

3. (a) மிரியல்சாமியின் உபதேசங்கள் என்ன? ஜான் எவ்வாறு மாறினான்?
(b) உத்தமர் செய்த உபதேசங்களால் அரக்கன் அமரனான விதத்தை எழுதுக.

விடை: a, b—கட்டுரை 3.

4. (a) ஸ்ரீமான் மாடலினாக வாழ்ந்த ஜானின் அருட்பண்புகள் யாவை?
(b) 'மாடலின் ஏழைக்கிரங்கும் நெஞ்சினன்' சான்று கூறி, விளக்குக.
(c) பாந்த்தேன் வரலாற்றைச் சுருக்கித் தருக.
(d) 'முயற்சி திருவினை யாக்கும்' என்ற உண்மை மேயர் மாடலின் வரலாற்றிலிருந்து எவ்வாறு புலப்படுகின்றது?

விடை: a, d—கட்டுரை 4ல் முதல் இரண்டு தலைப்புகள்.
b— ,, 4ல் பின் இரண்டு தலைப்புகள்.
c— ,, 4ல் கடைசி தலைப்பு.

5. (a) மாடலினின் மாயவேடம் மறைந்தது எவ்வாறு?
(b) 'மாடலின் தான் செய்த குற்றத்தைப் பிறர்மேல் சுமத்த மனம் துணியவில்லை' விளக்குக.

விடை: a, b—கட்டுரை 5.

"குற்றமே அற்றம் தரூஉம் பகை." – வள்ளுவர்.

6. (a) ஜான் கோஸெத்தைக் காத்தவிதம் பற்றி எழுதுக.
(b) 'ஜான் சொன்ன சொல் தவருதவன்': சான்று காட்டி விளக்குக.
(c) படகுக் கைதியாக இருந்த ஜான் கன்னிமடத் தொழிலில் அமர்ந்தது எவ்வாறு?

விடை: a—கட்டுரை 6ல் முதல் இரண்டு தலைப்புகள்.
b— ,, 6ல் முதல் மூன்று தலைப்புகள்.
c— ,, 6ல் முழுமையும்.

7. (a) ஜான் தெனடியாரிடம் அகப்பட்டமையும் தப்பிச் சென்றமையும் பற்றி எழுதுக.
(b) தெனடியரைப் பற்றிச் சுருக்கி வரைக.
(c) மாரியஸ் வரலாறு என்ன?

விடை: a—கட்டுரை 7ல் கடைசி 3 தலைப்புகள்.
b— ,, 7ல் முதல் 4 தலைப்புகள்.
c— ,, 7ல் முதல் 2 தலைப்புகள்.

8. (a) பிரஞ்சுப் புரட்சியைப் பற்றி எழுதுக.
(b) மாரியஸ்-கோஸெத் காதலுற்றமை எவ்வாறு?
(c) 'எதிரியை மன்னிக்கும் சீரிய பண்புடையவன் ஜான்': விளக்குக.

விடை: a—கட்டுரை 8–கட்டுரை. 9
b— ,, 8ல் முதல் 3 தலைப்புகள்.
c— ,, 8ல் 4, 5 தலைப்புகள்.

9. (a) ஜான் மாரியஸைக் காத்தவிதம் பற்றி வரைக.
(b) 'பெண்ணின் பெருமையை விளக்க வந்தவன் ஜான்' என்பதைக் கோஸெத் வரலாற்றிலிருந்து விளக்குக.
(c) ஜானின் முடிவைப் பற்றிச் சுருக்கி எழுதுக.

விடை: a—கட்டுரை 9ல் முதல் இரண்டு தலைப்புகள்.
b— ,, 9 முழுமையும்.
c— ,, 9ல் கடைசி இரண்டு தலைப்புகள்.

10. (a) ஜான்வல் ஜானின் நற்பண்புகள் எவை?
(b) ஜான்வல் ஜானுக்கு 'ஏழை பங்காளன்' என்னும் சிறப்புப் பெயர் பொருந்துமா? சான்றுகள் காட்டி நிறுவுக.
(c) ஜான்வல் ஜானின் வாழ்க்கை வரலாறு யாது?

விடை: a, b, c.—கட்டுரை 10 முழுமையும்.

11. ஜேவர்ட்டின் கடமையுணர்ச்சியும், ஏனைக்குணச் சிறப்புக்களும் பற்றி எழுதுக.

விடை: கட்டுரை 11.

"கடவுளின் கலைத்திறமே இயற்கை."—யங்.

நல்லொழுக்கப் பயிற்சி

—

ஏழை பங்காளன்

ஜான்வல் ஜான் என்பவனது வாழ்க்கையை நீங்கள் இந்நூலில் படித்தீர்கள். அவனுடைய நற்பண்புகள் ஆங்காங்கு உங்களுக்குப் புலனாகியிருக்கும். அவன் பல ஆண்டுகள் சிறையில் இருந்தான். ரொட்டி ஒன்றைத் திருடியதால் அவன் சிறைப்பட்டான். சிறையிலிருந்து வெளிப்பட முயன்றமையால் அவனது தண்டனை அதிகரித்தது. இவ்வாறு திருடுமாறு அவனைத் தூண்டியது எது? அவனது வறுமையேயாகும். சிறையிலிருந்து தப்பிவந்தபின் அவன் ஸ்ரீமான் மாடலினை வாழ்ந்தான்; மேயர் ஆனான்; செல்வம் பெற்றான். ஆயின், செல்வம் வந்த காலத்திலும் அவன் ஏழைகட்கு இரங்கினான்; உதவி செய்தான்; 'ஏழை பங்காளன்' என்று புகழப்பட்டான். இவற்றுக்கெல்லாம் மேலாக, பகைவனிடமும் அருள் காட்டும் பண்பு அவனிடம் இருந்தது. தனக்கு பெரும் பகையாக இருந்து, தன் வாழ்க்கையையே பாழ்படுத்திய ஜேவர்டினிடம் அவன் அருள் காட்டினான்.

> "இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
> நன்னயஞ் செய்து விடல்"

என்றார் வள்ளுவர். இக்குறட்பாவிற்கு ஜான்வல் ஜான் இலக்கியமாக விளங்கினான்.

நீங்களும் ஏழைகட்கு இரங்குங்கள்; பகைவனிடமும் அருள் காட்டுங்கள்; பகைவனுக்கு நன்மை செய்து, அவன் செய்த தீங்கையும், நீங்கள் செய்த நன்மையையும் மறந்துவிடுங்கள். பகைவரை வெல்லுதற்குரிய வழி அதுவேயாகும். அதுவே தமிழ் நெறியாகும். அதுவே உலகம் போற்றும் பண்பாடாகும்.

பன்முறை படித்துப் பயன்பெறுக

பக்கம்	பத்தி	முதல்............	வரையில்
5	3	இருட்டி.........	தப்பித்துகொண்டான்.
7	இறுதி	அவருக்கு	....
8	1	....	போவார்
	2	யாரும்............	வந்தது
15	2	—திருடர்களாகவோ....	காப்பாற்றினன்.
21	3	சுவாமி..............	விடுகிறேன்
25	1	மிரியல்..............	உண்டாயின.
27	2	உலாவப்...............	படுவார்கள்.
36	1	ஸ்ரீமான்...............	என்ருர்.
57	4	பிரெஞ்சுப்...........	அளித்தான்.
61	இறுதி	அவன்...................	....
62	1	....	கைவிட்டான்.
76	2	ஒரு குறிப்பிட்ட.......	ஏங்கினள்.
82	1	அரசாங்கம்	பூண்டது.
	2	குடியரசு...............	விளங்கியது.
86	2	கோஸெத்தும்.........	கருதினன்.
90	1-7	அதுதான் சரி.........	அகன்ருன்.
97	2	சட்டப்படி..........	புருஷன்.
103, 104, 105, 106		பக்கங்கள் முழுவதும்.	

“ மனம் உடம்பிற்கு அடங்குதல் கூடாது.”—கோதே.

4. "உழைப்பால் உயர்ந்த ஒருவர்"

கதைச் சுருக்கம்

புக்கர் 1858-ஆம் ஆண்டில் ஒரு நீகிரோ அடிமைப் பெண்ணின் புதல்வராய்ப் பிறந்தார். அவர் பிறந்த நான்கு ஆண்டுகளில் ஆபிரகாம் லிங்கனின் பெரு முயற்சியால் அடிமைகளுக்கு விடுதலை கிடைத்தது. பிறகு, புக்கரும் அவருடைய தாயும் அங்கிருந்து நானூறு கல் தொலைவிலிருந்த **மால்டன்** நகருக்கு நடந்தே சென்றனர். அங்குப் புக்கர் உப்பு உலைக்களத்திலும், நிலக்கரிச் சுரங்கத்திலும் வேலை செய்தார். ஓய்வு நேரங்களில் அவர் தம் விடாமுயற்சியால் தாமே எழுத்துக் கூட்டிப் படிக்கத் தெரிந்துகொண்டார்.

பிறகு புக்கர் ஹேம்புடன் நகரிலிருந்த பள்ளியில் சேர்ந்து படித்தார். அங்கு அவருக்கு **ஆர்ம்ஸ்டிராங்கு** என்ற பெரியாரின் நட்புக் கிடைத்தது. புக்கர் இராப்பகலாக உழைத்துப் பட்டம் பெற்றார்; பிறகு மால்டனில் நீகிரோப் பள்ளியில் ஆசிரியராக அமர்ந்தார்; அங்கே இரவுப் பள்ளிக்கூடம் ஒன்றையும் ஏற்படுத்தினர்.

வாஷிங்குடன் நகரில் புக்கர் ஓராண்டு பயின்றார். தம் பேச்சு வன்மையால் **சார்லஸ்டனே** மேற்கு வர்ஜீனியாவின் தலைநகராக இருக்கவேண்டுமென்ற கொள்கைக்கு ஆதரவு தேடினர். ஆர்ம்ஸ்டிராங்கின் வேண்டுகோளின்படி **ஹேம்புடனில்** பட்டமளிப்பு விழாவில் அவர் சொற்பொழிவு ஆற்றினர்.

பிறகு ஹேம்புடனில் அவர் ஆசிரியரானர்; அங்கு இரவுப் பள்ளிக்கூடம் நடத்தியும், சிவப்பிந்தியருக்குக் கல்வியும் நாகரிகமும் கற்பித்தும் வந்தார்; நூற் கல்வியோடு தொழிற் கல்வியும் கற்பித்தார். **அலபாமா** மண்டலத்தில் டஸ்கிகி என்ற ஊரில் புக்கர் தம் உழைப்பினாலும் விடா முயற்சியாலும், ஒரு சிறு பள்ளிக்கூடம் ஏற்படுத்தினர். **ஒலிவியா** அம்மையாரின் ஒத்துழைப்பும் மக்களின் பொருளுதவியும் கொண்டு அப்பள்ளியை ஒரு கலாசாலையாக்கினர். இப்பொழுது அங்கு ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்களும், நூற்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்களும் உள்ளனர்.

பாஸ்டன் நகர மக்கள் பணந்திரட்டி, தளர்ச்சியுற்றிருந்த புக்கரை ஐரோப்பாவுக்கு அனுப்பினர். அவரும், அவர் மனைவியாரும் பெல்ஜியம், ஹாலண்டு தேசங்களுக்கும், பாரிஸ், லண்டன் முதலிய நகரங்களுக்கும் சென்றனர். எங்கும் அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. லண்டனில் விக்டோரியா மகாராணியார் புக்கர் தம்பதிகளுக்குத் தம் அரண்மனையில் விருந்தளித்து உபசரித்தார்.

புக்கர் நாடு திரும்பியபின் அவருக்கு நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் வரவேற்பளிக்கப்பட்டது. ஹார்வார்டு பல்கலைக் கழகம் புக்கருக்கு எம். ஏ. பட்டம் அளித்துக் கௌரவித்தது. புக்கர் 1915-ஆம் ஆண்டின் இறுதியில் மறைந்தார். அவருடைய உருவச்சிலை டஸ்கிகிக் கலாசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

நூலில்வரும் பெயர்கள் முதலியன

1. **ஆர்ம்ஸ்டிராங்கு :** புக்கர் ஹேம்புடனில் படிக்கும்பொழுது அவருக்குச் சம்பளம் கட்ட ஏற்பாடு செய்தவர்; சிவப்பிந்தியருக்குக் கல்விபுகட்ட

எண்ணி எழுபத்தைவரைப் புக்கர் மேற்பார்வையில் விட்டவர்; ஹேம்புடனில் பட்டதாரிகளுக்கு நல்லுரை கூறவும், பிறகு அவ்வூர்ப் பள்ளியில் புக்கரை ஆசிரியராகச் செய்யவும் காரணமானவர்; ஹேம்புடனில் இரவுப் பள்ளிக்கூடம் ஏற்படுத்தியவர்; டஸ்கிகி என்ற ஊருக்குப் புக்கரை அனுப்பியதோடு, அவ்வூர்ப் பள்ளிக்கூடம் கட்டத் தாமும் பொருளுதவி செய்து மற்றவரையும் உதவி செய்யத் தூண்டியவர். சுருங்கக் கூறின், இவரே புக்கரை உலகமறியும்படி செய்தவர் என்னலாம்.

2. **ஒலிவியா டேவிட்ஸன்:** சிறந்த பண்பு நலன்கள் அமையப்பெற்ற அம்மையார்; ஓகியோவில் பிறந்து ஹேம்புடனில் பட்டம் பெற்றவர்; ஆசிரியத் தொழிலைத் திறம்பட நடத்தியவர்; மாணவர் தொற்று நோய்களால் அவதியுற்ற பொழுது உடனிருந்து தக்க உதவிகள் செய்தவர்; டஸ்கிகேப் பள்ளியின் முன்னேற்றத்தில் உழைத்தவருள் புக்கருக்கு அடுத்தபடி இருந்தவர்; வீடுதோறும் சென்று பள்ளிக்காகப் பொருள் திரட்டியவர்; புக்கரின் இரண்டாவது மனைவியாராக நான்காண்டுகள் வாழ்ந்து இரு மக்களைப் பெற்றுக் காலமானவர்.

3. **பேனிஸ்மித்து:** புக்கர் 1882-ஆம் ஆண்டில் தம் முதல் மனைவியாக இவரை மணந்தார் - இவரும் ஹேம்புடனில் பட்டம் பெற்றவர்; எல்லாவகைகளிலும் புக்கருக்கு உதவியாயிருந்தார்; ஒருபெண் மகவைப் பெற்றபின் 1884-ஆம் ஆண்டில் மறைந்தார்.

4. **மார்கரெட்டு ஜேம்ஸ்:** புக்கரின் மூன்றும் மனைவி; 1893-ஆம் ஆண்டில் இவரைப் புக்கர் மணந்தார். இவர் புக்கருக்குப் பள்ளி வேலைகளில் பெரிதும் உதவியாயிருந்தார்; டஸ்கிகேப் பள்ளியிலேயே ஆசிரியத் தொழிலில் இருந்தார்.

5. **மேரிமேக்கி:** ஹேம்புடனில் புக்கருக்குத் துடைப்பத் தேர்வு வைத்து, அதில் அவர் தேர்ச்சி பெற்றபின் பள்ளியில் சேர்த்துக் கொண்டவர்; பிறகு டஸ்கிகியில் புக்கரின் அரிய பணியைப் பார்வையிட்டுப் போற்றியவர்.

6. **வாரன்லோகன்:** ஹேம்புடனிலிருந்து டஸ்கிகி வந்து, அப்பள்ளியின் பண்டாரத் தலைவராகப் பணியாற்றியவர்—புக்கர் இல்லாத வேளைகளில் பள்ளித் தலைவராக இருந்து வந்தவர்.

7. **கார்னிஜி:** இருபதினாயிரம் டாலர் செலவில் டஸ்கிகிக் கலாசாலைக்குப் பெரியதொரு புத்தக நிலையம் கட்டித் தந்தவர்.

8. **வில்லியம் மெக்கின்லி:** ஐக்கிய மாகாணத் தலைவர்; தம் அமைச்சர்களுடன் டஸ்கிகிக் கலாசாலையில் ஒருநாள் தங்கிப் புக்கரின் பணியைப் பாராட்டியவர்.

9. **ரப்னர் அம்மையார்:** புக்கரின் இளமைக் காலத்தில் எசமானியாக இருந்தவர். அவரது உழைப்பையும் ஒழுக்கத்தையும் பாராட்டி, அவர் படிப்பதற்கு ஒருசிறு நூல்நிலையம் ஏற்படுத்தி, ஆசிரியரையும் ஏற்பாடு செய்து தந்தார்.

10. **ஜான்:** புக்கருடன் பிறந்தவர்; ஹேம்புடன் பள்ளியில் புக்கர் சேர்வதற்குப் பொருளுதவிபுரிந்தவர்.

கட்டுரைகள்

1. புக்கர் இளமையில் எய்திய இன்னல்கள்

முன்னுரை-அடிமைகள் என்போர் யார்? புக்கர் வாஷிங்குடனின் பிறப்பு ஐந்துவயது முடியுமுன் அவருக்கு இடப்பட்டவேலைகள்-உணவும், உடையும்-விடுதலை-மால்டன் நகரில் புக்கர்-முடிவுரை.

அடிமைகள் என்போர் யார்? அமெரிக்க நாட்டில் குடியேறியவருள் ஆப்பிரிக்கரும் உண்டு. அவர்களே நீகிரோக்கள் என்றழைக்கப் பெறுபவர். அவர்கள் அமெரிக்காவில் அடிமைகளாய் வாழ்ந்தனர்; உடல் வருந்த உழைத்தனர்; அடியும் உதையும் பட்டனர். வாழ்க்கையில் ஓரின்பமும் இல்லாமல் இருந்தனர். கி. பி. 1863-ம் ஆண்டில் ஆபிரகாம்லிங்கனின் ஆட்சியில்தான் அவ்வடிமைகள் சுதந்திரம் பெற்றனர்.

புக்கர் வாஷிங்குடனின் பிறப்பு : புக்கர் தி. வாஷிங்குடன் வர்ஜீனியாவில் ஒரு தோட்டத்தில் சமையல் வேலை செய்து பிழைத்துவந்த ஓர் அடிமைப் பெண்ணின் மகனுராய் 1858 அல்லது 1859-ம் ஆண்டில் பிறந்தார். அவருடைய தந்தையார் யாரென்பதை அவர் அறியார். புக்கருடன் பிறந்தவர் இருவர். அவர்கள் அனைவரும் ஒரு தோட்டத்தில் மண்தரையுள்ள ஒரு சிறு அறையில் வசித்து வந்தனர். மழையிலும் வெயிலிலும் அவர்கள் அங்கே பெரிதும் வருந்தினர்.

ஐந்து வயது முடியுமுன் அவருக்கிடப்பட்ட வேலைகள் : புக்கர் இளைஞராயிருந்த பொழுதே நிலத்தைப் பண்படுத்தவும், நிலத்தில் உழைப்போர்க்கு நீர் கொண்டு வரவும் ஏவப்படுவார். அவர் மூன்று கல் தூரத்திலிருந்த, தானியங்களையரைக்கும் பொறி நிலையத்துக்குப் போய் வருவார். குதிரையின் மீதிருக்கும் மூட்டை நழுவிய பொழுதெல்லாம், அக்காட்டு வழியில் போவோர் வருவோரின் துணையை அவர் நாட வேண்டியிருந்தது. இரவில் காலந் தாழ்த்து வந்தால் அவர் தண்டிக்கப்படுவார். சில நாட்களில் அவர் தம் எசமானியின் புத்தகங்களைப் பள்ளிக்குச் சுமந்து செல்ல நேரிட்டது. சாப்பிடும் வேளைகளில் விசிறி போடும் வேலையும் அவரைச் சேர்ந்ததே.

உணவும் உடையும்: புக்கருடைய தாய் பெரிய வீட்டில் (எஜமானின் வீடு) வேலை செய்து விட்டு இரவில் தம் அறைக்குத் திரும்புவாள்; பசியால் மெலிந்து உறங்கும் குழந்தைகளுக்காகச் சமையல் செய்வாள்; பிறகு அவர்களை எழுப்பி உண்பிப்பாள். ஒருநாள் அவள் சிறிது வெல்லப் பாகைப் புக்கரின் தட்டில் ஊற்றினாள். புக்கர் அதைத் தம் தட்டு முழுவதும் பரப்பி நெடுநேரம் சுவைத்தாராம். புக்கரும் தம் இனத்தவர் போலவே சணலாடைதான் அணிந்தார். புதுச் சணலாடை யணிந்தால் உடலில் ஊசிகளால் துளைப்பது போல இருக்கும். உணவுக்கே பணமில்லாதவர் உடைக்கு என்ன செய்வார்?

விடுதலை: 1863-ம் ஆண்டில் ஆபிரகாம் லிங்கனின் பெரு முயற்சியால் நீகிரோக்களின் அடிமைத்தளை அகன்றது. அவர்கள் அந்நாளைப் பொன்னாளாகப் போற்றினர்; ஆடிப் பாடிக் களித்தனர்; ஆனால், தம் எதிர் கால வாழ்வைப் பற்றிச் சிந்தித்தபொழுது வழி தெரியாது வருந்தினர். புக்கருடைய

சிற்றப்பனுர் மால்டன் நகரில் தொழிலாளியாய் வாழ்ந்து வந்தார். அவருடைய அழைப்புக் கிணங்க கால் நடையாகவே புக்கரும், அவருடைய தாயார் முதலியோரும் எழுநூறு கல் தொலேவிலுள்ள **மால்டன்** நகரை யடைந்தனர்.

மால்டன் நகரில் புக்கர்: மால்டனில் புக்கர் உப்பு உலேக்களத்தில் வேலேக்கு அமர்ந்தார். விடியற் காலம் நான்கு மணி முதல் அவர் வேலே செய்தார். ஓய்வு நேரத்தில் புக்கர் முதற் பாடப் புத்தகம் வாங்கித் தாமே எழுத்துக் கூட்டிப் படிக்கக் கற்றுக் கொண்டார். அவ்வமயம் **ஓகியோ**விலிருந்து வந்த ஓர் ஆசிரியரைக் கொண்டு அவ்வூரில் நீகிரோக்களுக்கென்று ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்தப்பட்டது. பிறகு, இரவுப் பள்ளிகளும் முதியோர் பள்ளிகளும் தொடங்கப் பெற்றன. புக்கர் பள்ளியில் சேர்வதற்கு அவருடைய சிறிய தந்தையார் தடையாயிருந்தார். தாயின் ஆதரவு பெற்ற புக்கர், இரவில் ஓர் ஆசிரியரை அடுத்துப் படிக்கத் தொடங்கினுர்.

2. புக்கரின் பள்ளிப் படிப்பு

முன்னுரை-பள்ளியில் தொல்லேகள்-பள்ளிப் படிப்புக்குத் தடை-நிலக்கரிச் சுரங்கத்தில் உழைத்தல்-ஹேம்புடன் பள்ளியைப் பற்றி அறிதல்—உழைப்பின் பரிசு-முடிவுரை.

பள்ளியில் தொல்லேகள்: புக்கர் காலே 9 மணிக்கு முன்னும், மாலே 4-மணிக்குப் பின்னும் வேலே செய்துகொண்டே, இடை வேளேயில் பள்ளி செல்வதென ஏற்பாடு செய்துகொண்டார். புக்கரால் நேரத்தில் பள்ளி செல்ல இயலவில்லே. ஏனெனில், பள்ளி, உலேக்களத்துக்கு அண்மையில் இல்லே. கடியாரத்தின் முள்ளேத் திருப்பி வைத்தார் புக்கர். கடிகாரம் பூட்டி வைக்கப் பட்டது. என் செய்வார் புக்கர்?

பள்ளியில் தொப்பியோ தலேப்பாகையோ அணிந்திருக்க வேண்டும். ஆகவே வறுமையில் உழன்ற அவர் தாய், துணியால் தொப்பியொன்று தைத்துக் கொடுத்தாள். மாணவர்கள் அவரை எள்ளி நகையாடினர். அக்காலத்தில் மாணுக்கர் அனேவரும் இரு பெயருடையராய் இருந்தனர். ஆகவே புக்கர் தாமே தமக்கு "புக்கர்-தி-வாஷிங்குடன்" என்ற பெயரைச் சூட்டிக் கொண்டார்.

பள்ளிப் படிப்புக்குத் தடை: சில திங்கள் கழிந்த பின், அவர் பகல் முழுவதும் உப்புலேக் களத்தில் வேலே செய்யவேண்டுமென்று அறிவிக்கப்பட்டது. ஆகவே பள்ளிப் படிப்பு அவருக்குத் தடைப்பட்டது. ஆனல் புக்கரோ மனந் தளரவில்லே; இரவில் பல மைல் தொலேவிலிருந்த ஆசிரியரிடம் சென்று கற்று வந்தார்.

நிலக்கரிச் சுரங்கத்தில் உழைத்தல்: சுரங்க வேலே மிகவும் அபாயகரமானது. சில சமயங்களில் சுரங்கத்தில் இருட்டில் ஒருமைல் தொலேவு செல்ல வேண்டியிருந்தது. உடல் அழுக்கைப் போக்குவது மிகக் கடினம். புக்கரைப் போன்ற பல சிறுவர்கள் அங்கு வேலே செய்தனர். அவர்கள் கல்வி அறிவே இல்லாமல், உடலும் மனமும் குறுகிக் கெட்டுப்போயிருந்தனர். அவர்களின் நிலேயை எண்ணிப் புக்கர் பெரிதும் வருந்தினுர். தம்மினம் "வெள்ளேயரைப் போல் எல்லா வகைகளிலும் முன்னேறும் நாள் எந்நாளோ?" என்று அவர் ஏங்கினுர்.

ஹேம்புடன் பள்ளியைப் பற்றி அறிதல் : நிலக்கரிச் சுரங்கத்தில் புக்கர் வேலை செய்து கொண்டிருக்கும்பொழுது ஹேம்புடன் நகரில் நீகிரோக்களுக் கென்று ஒரு பள்ளி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை அறிந்தார். மேலும், ஏழை மாணவர்களாயிருந்தால், அவர்கள் அங்குத் தம் உடல் உழைப்பினுல் சாப் பாட்டுக்கு வேண்டிய பணத்தைச் சம்பாதித்துக்கொள்ளலாம் என்றும் அவர் கேள்விப்பட்டார். அன்றிலிருந்து புக்கர் ஹேம்புடன் பள்ளியைப்பற்றியே எண்ணமிடலானர். அப்பள்ளியில் எப்பாடு பட்டாவது சேர்ந்துவிட வேண் டும் என்று நினைத்தார்.

உழைப்பின் பரிசு : சுரங்க வேலைக்குப் பின்பு புக்கர் **ரப்னர்** என்னும் அம்மையாரிடம் வேலைக்கு அமர்ந்தார். அவரிடம் வேலைசெய்து நற்பெயர் வாங்குதல் என்பது முடியாது என்று மற்றவர் கூறினர். ஆனல், புக்கரோ அவ் வம்மையார் போற்றும் வண்ணம் தம் கடமையைச் செய்தார். தூய்மை, நேரந் தவருமை, ஒழுக்கம் முதலியவற்ருல் அவர் அவ்வம்மையாரிடம் நல்ல பெய ரெடுத்தார். அவருடைய இசைவு பெற்று நாளொன்றுக்கு இரண்டுமணி நேரம் பள்ளியில் பயின்ருர் ; ஒருசிறு புத்தகசாலையை வைத்துக்கொண்டார் ; இரவில் கற்றுத்தர ஓர் ஆசிரியரையும் ஏற்பாடு செய்துகொண்டார்.

3 புக்கர் ஹேம்புடன் பள்ளியில் பயிலுதல்

முன்னுரை-ஹேம்புடன் பள்ளி-புறப்பாடும் வழியில்பட்ட இன்னல் களும்-தேர்வில் வெற்றி-பள்ளியிலும் உழைப்பு—ஊர் திரும்புதல்-உழைப் பும் உயர்வும்—ஹேம்புடனில் அவர் கற்ற பாடங்கள்-முடிவுரை.

ஹேம்புடன் பள்ளி : நிலக்கரிச் சுரங்கத்தில் வேலைசெய்து கொண்டிருந்த பொழுதே புக்கர் **ஹேம்புடன்** நகரில் நீகிரோக்களுக்கென்று பள்ளியொன்று இருப்பதையும், அங்கே ஏழை மாணவர் ஏதாவது தொழில் செய்தே உணவுக் கும், பள்ளிப் படிப்புக்கும் தேவையான பணத்தைப் பெறக்கூடுமென்பதையும் அறிந்திருந்தார். தாம் அங்குச்சென்று பயிலும் பேறு எய்துவது எந்நாளோ என்று அவர் ஏங்கியிருந்தார்.

புறப்பாடும் வழியில்பட்ட இன்னல்களும்: புக்கர், தம் பதினுன்காம் வயதில் தம்மிடமிருந்த சிறு தொகையுடன் ஐந்நூறு மைல் தொலைவிலிருந்த ஹேம்பு டன் நகரப் பள்ளியில் பயிலப் புறப்பட்டார். நீகிரோக்கள் புக்கரின் குறிக் கோளையறிந்து வியப்பும் மகிழ்ச்சியும் எய்தினர். அவர்கள் தம்மாலியன்ற உதவி களை அவருக்குச் செய்தனர். ஏழைகள் நிக்கல் நாணயங்களும், கைக்குட்டைக ளும் கூட அவருக்கு அளித்தனர்.

புக்கர் கையில் பணமிருந்தவரையில் குதிரை வண்டியில் சென்ருர். பிறகு கால் நடையாகவே சென்ருர். இவ்வாறு நடந்து ஹேம்புடன் நகருக்கு 82மைல் தொலைவிலிருக்கும் **ரிச்மண்டு** நகரை அவர் அடைந்தார்; அங்கே உணவோ, தங்குவதற்கு இடமோ இன்றி இடர்ப்பட்டார்; காலையில் கப்பல் தலைவன் ஒரு வனை அணுகினர். கப்பலிலிருந்த பொருள்களை இறக்கும் வேலைசெய்து அவர்

கூலி பெற்றார்; பிறகே உணவு கொண்டார். சிலநாள் அவ்வேலைசெய்து சிறிது பணம்பெற்ற பின், ஹேம்புடன் நகரை அவர் அடைந்தார்.

தேர்வில் வெற்றி : ஹேம்புடன் பள்ளித் தலைமையாசிரியையாக இருந்த **மேரிமேக்கி** என்னும் அம்மையார் புக்கருடைய அழுக்கு ஆடையையும், வற்றிய உடலையும் கண்டு பள்ளியில் சேர்த்துக்கொள்ள முதலில் தயங்கினர். பிறகு, ஓர் அறையைத் தூய்மை செய்யும் தேர்வு ஒன்றில் புக்கர் வெற்றி பெற்றார். அவ்வறையின் எந்த இடத்திலும் ஒரு சிறு புழுதியும் காணப்படவில்லை. பிறகே அவ்வம்மையார் புக்கரைப் பள்ளியில் சேர்த்துக் கொண்டார்.

பள்ளியிலும் உழைப்பு : பள்ளிப் படிப்புடன் புக்கர் பள்ளி வேலையாளாகவும் அமர்த்தப்பட்டார். புக்கர் பள்ளிப் படிப்புக்காக ஆண்டொன்றுக்கு எழுபது டாலர் செலுத்த வேண்டியிருந்தது. **ஆர்ம்ஸ்ட்ராங்கு** என்ற பெரியாரின் வேண்டுகோளுக்கிணங்க, **மார்கன்** என்பவர் அச்சம்பளத்தைக் கட்ட ஒப்புக் கொண்டார். புக்கர் பள்ளியில் சேர்ந்து ஓராண்டு கழிந்தது. கோடை விடுமுறையில் தம் ஊர் செல்லப் பணம் இன்மையால் அவர் ஹேம்புடனிலேயே இருந்து உழைத்துப் பணம் சேர்க்க விரும்பினர். உண்டிச்சாலை யொன்றில் உணவும் கூலியும் அவருக்குக் கிடைத்தன. அக்கூலியைக்கொண்டு அவர் பள்ளியில் இருந்த கடனில் ஒரு பகுதியை அடைத்தார்.

ஊர் திரும்புதல் : இரண்டாம் ஆண்டின் முடிவில் புக்கர் தம் குடும்பம் வாழ்ந்த **மால்டன்** என்ற ஊரைச் சேர்ந்தார். ஆங்கு வாழ்ந்திருந்த நீகிரோக்கள் புக்கரைப் புகழ்ந்து, விருந்தும் அளித்தனர். விடுமுறையில் வீண்காலம் கழிக்க விரும்பாத புக்கர் வேலைதேடி யலைந்தார். அச்சமயம் அவருடைய தாயார் காலமானர். அன்னையின் மறைவு அவருக்குப் பெரிதும் வருத்தத்தை யளித்தது.

உழைப்பும் உயர்வும் : இங்கிலையில் புக்கருக்குக் கல்லூரிதிறக்கும் நாள் நெருங்கிற்று. கல்லூரிப் படிப்பிற்குப் பணம் வேண்டுமல்லவா? அதனல் மறுபடியும் நிலக்கரிச் சுரங்கத்திலும், ரப்னர் அம்மையாரிடமும் வேலைசெய்து அவர் சிறிது பொருள் ஈட்டினர். விடுமுறை முடியுமுன் அவர் ஹேம்புடன் சென்று கல்லூரிக் கட்டிடத்தைத் தூய்மை செய்தார். உடலுழைப்போடு புக்கர் இரவும் பகலும் கல்வியில் மனத்தைச் செலுத்திப் படித்தார். 1875-ஆம் ஆண்டு, ஜூன் மாதத்தில் அவர் சிறப்போடு தேர்ந்து, பட்டமும் பெற்றார்.

ஹேம்புடனில் அவர் கற்ற பாடங்கள் : ஹேம்புடனில் புக்கர் படித்த பொழுது குச்சியால் பல் துலக்குவதன் நலனையும், தினந்தோறும் குளிப்பதால் உண்டாகும் நன்மையையும், குறித்த நேரத்தில் உண்பதால் ஏற்படும் வலிமையையும் அறிந்து கொண்டார். தன்னலம் பெரிதல்ல ; பொது நலமே சிறந்தது என்பதையும், ஆசிரியர்களின் தன்னலமற்ற சேவையையும் அவர் உணர்ந்தார். சொற்போர்ச் சங்கங்களில் அவர் சொற்பொழிவு நிகழ்த்திப் பழகிக்கொண்டார்; தொழிலின் மேன்மையை யுணர்த்தும் பள்ளிகளே சிறந்தவை என்பதறிந்தார். மேலும், உயர் பண்புகள் அமைந்த ஆர்ம்ஸ்ட்ராங்கு என்பாரின் நட்பும் அவருக்குக் கிடைத்திருந்தது.

"மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டா."—உலகநீதி.

4. பட்டம் பெற்றபின் புக்கர் செய்தபணிகள்

முன்னுரை—சிற்றுண்டிச் சாலையுள் ஏவலாள்-மால்டனில் ஆசிரியர் -வாஷிங்குடனில் புக்கரின் படிப்பு-பேச்சு வன்மை-அரிய வாய்ப்பு-பட்ட தாரிகளுக்கு நல்லுரை வழங்குதல்-தாம் பயின்ற பள்ளியிலேயே ஆசிரிய ராதல்-முடிவுரை.

சிற்றுண்டிச் சாலையுள் ஏவலாள்: 1875-ஆம் ஆண்டு புக்கர் பட்டம் பெற்றபின் ஒரு சிற்றுண்டிச் சாலையில் ஏவலாளாக இருந்தார். முதலில் அங்குத் தம் கடமையைச் செய்யத் தெரியாமலிருந்தமையால், அவர் அங்கு வந்திருந்த செல்வர்களின் சினத்துக்கு ஆளானுர். ஆனுல், சிலநாள் கழிந்தபின் அவர் ஏவலாட்களுள் சிறந்தவராகக் கருதப்பட்டார்.

மால்டனில் ஆசிரியர்: பிறகு சில தினங்கள் கழித்துப் புக்கர் மால்டனை அடைந்தார்; அங்கு நீகிரோக்களின் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினுர்; மாணவர்களுக்குப் புத்தகப் படிப்புடன் தலைவாரிக் கொள்ளுதல், குச்சியால் பல் துலக்குதலின் மேம்பாடு, நாள்தோறும் குளிப்பதால் உண்டாகும் நன்மைகள், தொழிலின் மேன்மை முதலியவற்றையும் கற்பித்தார்; முதியோர்களுக்காக ஓர் இரவுப் பள்ளிக்கூடத்தை ஏற்படுத்தினுர். மேலும் வாசகசாலையும், விவாத அரங்கங்களும் அவரால் தொடங்கப் பெற்றன. வேறு இரு ஊர்களில் ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும் கற்க விரும்பியவர்கட்கு அவர் கல்வி புகட்டினுர்; ஹேம்புடன் நகரில் படிப்பதற்காகச் சில மாணவர்களைத் தாமே தேர்ந்தெடுத்து அனுப்பினுர். தம் உடன் பிறந்தாராகிய ஜான், ஜேம்ஸ் ஆகிய இருவரையும் அவர் ஹேம்புடன் நகரப் பள்ளிக்கு அனுப்பினுர்.

வாஷிங்குடனில் புக்கரின் படிப்பு: புக்கர் 1878-ஆம் ஆண்டில் வாஷிங்குடன் நகர் சென்று, அங்கே எட்டு மாதங்கள் பயின்றுர்; அங்குப் பயின்ற மாணவர்களை ஹேம்புடன் மாணவர்களோடு ஒப்பிட்டுப் பார்த்தார். ஹேம்புடன் மாணவர் தன்னம்பிக்கை உடையராய், உழைப்பின் மேன்மையை உணர்ந்தவராய் வெளியேறினர். வாஷிங்குடன் மாணவர்களோ பணத்துக்குப் பெற்றோரை எதிர்பார்த்துச் சோம்பேறிகளாய், உழைப்பது கேவலம் என்ற மனப்பான்மை உடையவராய் இருந்தனர். நாட்டு மக்கள் முன்னேற்றத்தில் சிறிதும் நாட்டமில்லாமல் நகர வாழ்க்கையை மேற்கொள்ளும் எண்ணமுடையவராய் அவர்கள் இருந்தனர். இவற்றை எல்லாம் உணர்ந்த புக்கர் மனம் வருந்தினுர்.

பேச்சு வன்மை: சார்லஸ்டன் என்ற நகரில் வாழ்ந்த வெள்ளையர் மேற்கு வர்ஜீனியாவின் தலைநகராகத் தம் ஊரே இருக்கவேண்டும் என்று நினைத்தனர். அவர்கள் சொல்லின் செல்வராகிய புக்கரை அணுகித் தம் கருத்தை வெளியிட்டனர். புக்கரும் தம் சொற்பொழிவுகள் மூலம் தம் கொள்கைக்கு ஆதரவு தேடினுர். முடிவில் சார்லஸ்டன் நகரே மேற்கு வர்ஜீனியாவின் தலைநகராக இருக்கவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. மேற்கு வர்ஜீனியாவின் தலைநகரப் பிரச்சினையில் புக்கரின் சொல்வன்மையை உணர்ந்த பலர், அவரை அரசியலில் புகுமாறு வேண்டினர். புக்கரோ அதனை விரும்பவில்லை.

அரிய வாய்ப்பு—பட்டதாரிகளுக்கு நல்லுரை வழங்குதல்: ஆர்ம்ஸ்டிராங்கிடமிருந்து புக்கருக்கு ஒரு அழைப்பு வந்தது. ஹேம்புடன் பட்டதாரி

களுக்கு நல்லுரை கூறும்படி அவர் அழைக்கப்பட்டிருந்தார். புக்கர் **"வெற்றி பெறுகிறஆற்றல்"** என்னும் பொருள்பற்றி விரிவுரை ஒன்றினை அரிதில் முயன்று தயாரித்தார். ஹேம்புடனில் பெரியதொரு வரவேற்பு அவருக்கு அளிக்கப்பட்டது. அவருடைய சொற்பொழிவை அனைவரும் கேட்டுப் பாராட்டினர்.

தாம் பயின்ற பள்ளியிலே ஆசிரியராதல் : சின்னாள் கழித்து, ஆர்ம்ஸ்டிராங்கிடமிருந்து மற்றொரு அழைப்பு அவருக்கு வந்தது. அதன்படி புக்கர் தாம் பயின்ற ஹேம்புடன் நகர்ப் பள்ளியிலேயே ஆசிரியரானார். அவர் மேலும் படிக்க ஆங்கு வசதிகள் செய்துதரப்பட்டன. வெள்ளையரினும் தாம் உயர்ந்தவர் என்ற எண்ணம் கொண்ட சிவப்பிந்தியருக்கும் புக்கர், நாகரிகம், கல்வி, கைத்தொழில் முதலியவற்றைக் கற்பித்தார். பகலில் படிக்க வாய்ப்பில்லாதாருக்கு இரவுப் பள்ளிக்கூடம் ஏற்படுத்தினார்.

5. டஸ்கிகீயில் பள்ளி தொடங்குதல்

முன்னுரை—டஸ்கிகீ செல்லுதல்—ஏமாற்றம்—வெள்ளையர் வருத்தம்—மாணவர்கள் கற்ற பாடங்கள்—ஓலிவியா அம்மையார்—தோட்டம் வாங்குதல்—முடிவுரை.

டஸ்கிகீ செல்லுதல் : **அலபாமா** மண்டலத்தில், டஸ்கிகீ என்ற ஊரில், நீகிரோக்களுக்காகப் பள்ளிக்கூடம் ஏற்படுத்தினால் அரசாங்கத்தார் வருஷமொன்றுக்கு இரண்டாயிரம் டாலர் தருவதாக வாக்களித்தனர். அவ்வூரிலிருந்த சிலர், தகுந்த நீகிரோ ஆசிரியர் கிடைக்கமாட்டார் என்ற துணிவில், ஆர்ம்ஸ்டிராங்குக்கு வெள்ளையர் ஒருவரை அனுப்பும்படி எழுதிக் கேட்டனர். ஆர்ம்ஸ்டிராங்கு புக்கரின் சிறப்பையும் தகுதியையும் குறிப்பிட்டு, அவரை அனுப்பினார். அவ்வூராரும் அவரைச் சிறப்புடன் வரவேற்றனர்.

ஏமாற்றம் : புக்கர், டஸ்கிகீ அடைந்து, பள்ளிக்கூடக் கட்டடம் இல்லாமையைக்கண்டு ஏமாற்றம் அடைந்தார். ஆனால், படிக்கவேண்டுமென்ற எண்ணமுடைய பலர் ஆங்கு இருந்தனர். அரசாங்கம் அளிக்கும் இரண்டாயிரம் டாலர், ஆசிரியர்களுக்காகச் செலவிடப்படுதல் வேண்டுமே தவிரக் கட்டடம் கட்ட அல்ல. என் செய்வார் புக்கர்? பள்ளிக் கட்டடத்திற்காக ஒரு தகுந்த இடம் வேண்டுமேயென்று அவர் தேடிப் பார்த்தார். பிறகு பாழடைந்த மாதா கோவில் அருகே இருந்த, இடிந்துபோன சந்தைக் கூடத்தை, பள்ளிக்கூடக் கட்டடம் கட்டத் தேர்ந்தெடுத்தார்.

வெள்ளையர் வருத்தம் : புக்கர் ஒருமாத காலம் **அலபாமா** மண்டலம் முழுவதும் சுற்றி, டஸ்கிகீப் பள்ளியை விளம்பரப்படுத்தினார். வெள்ளையரில் பலர், நீகிரோவர் படித்துவிட்டால் தம் நிலங்களில் பயிர் செய்வதைவிட்டு, தங்களுக்கு உதவாமல் நகர் நோக்கிச் சென்று விடுவார்களே என்று நினைத்தனர். மேலும், தம்மை மதிக்கமாட்டார்களே என்றும் அவர்கள் அஞ்சினர். நீகிரோக்கள் கற்றறி மாந்தர்களானால், நாட்டுக்கும் தமக்கும் பயன் விளையும் என்பதை அவர்கள் உணரவில்லை.

மாணவர்கள் கற்ற பாடங்கள் : புக்கர் தம் சுற்றுப் பிரயாணத்தில் மக்கள் வறுமை நிலையை நன்கு உணர்ந்தார். எனவே புத்தகப் படிப்போடு வாழ்க்கைக்குத் தேவையான சிலவற்றையும், அவர் கற்றுக் கொடுத்தார்.

குளிக்கும் விதம், பற்களையும், உடையையும், அறையையும் தூய்மைப் படுத்துதல், உணவைச் சாப்பிடும் முறை முதலியவற்றையும் மாணவர்களுக்கு அவர் கற்பித்தார். அவற்றோடு, மாணவர் விரும்பும் கைத்தொழில் ஒன்றையும் அவர் கற்பித்தார்; உழைப்பின் மேம்பாட்டினை உணர்த்தினர்; சிக்கனமாக வாழ்வதெப்படி என்பதையும் அறிவுறுத்தினர். முதலில் முப்பது மாணவர் சேர்ந்தனர். ஒரு மாதத்திற்குள் மாணவர் தொகை ஐம்பதாயிற்று.

ஒலிவியா அம்மையார்: புக்கருடைய உழைப்பில் பங்கு கொள்ள **ஒலிவியா டேவிட்சன்** என்னும் அம்மையார் ஆசிரியராக அமர்ந்தார். அவரும் ஹேம்புடனில் பட்டம் பெற்றவர்; உயர்ந்த பண்பு நலன்கள் உடையவர்; ஆசிரியத் தொழிலில் அனுபவம் வாய்ந்தவர்; மாணவர்களுக்கு அம்மை, தொற்றுக் காய்ச்சல் முதலியன வந்தபொழுது அவர்களுடன் இருந்து தேவையான உதவிகளைச் செய்தவர். அத்தகையவர் டஸ்கிகேப் பள்ளிக்குப் பொருள் சேர்க்க, வீடுதோறும் சென்று கிடைத்தவற்றை வாங்கி வந்தார்; வடக்கிருக்கும் நாடுகளிலும் சுற்றிப் பள்ளியை விளம்பரப்படுத்தி, பள்ளிக்குப் பொருள் சேர்த்து வந்தார். புக்கர் ஊரில் இல்லாத சமயங்களில் இவ்வம்மையாரே தலைவர் வேலையையும் பார்த்து வந்தார்.

தோட்டம் வாங்குதல்: கைத்தொழில் கற்பிக்கப் புக்கர் பழைய தோட்டம் ஒன்றை ஐந்நூறு டாலருக்கு வாங்கினர். அதிலிருந்த குதிரை நிலையமும், கோழியறையும் வகுப்பறைகளாயின. எஞ்சிய இடத்தில் மாணவர்கள் பயிர்த்தொழில் செய்ய வேண்டும் என்று கூறினர் புக்கர். ஆனல் அவர்கள் தயங்கினர். "பயிர்த்தொழில் செய்யவோ இங்கு வந்தோம்? அஃது இழிவான தொழில் அல்லவோ?" என்று அவர்கள் கூறினர். புக்கர் தாமே மண்வெட்டியைக் கையில் எடுத்து நாள்தோறும் வேலை செய்தார். பிறகே மாணவர்கள் உழைப்பதால் தம் மேன்மை குறைந்து விடாது என்பதை உணர்ந்தனர்.

பொருள் சேர்த்தல்: ஒலிவியா அம்மையார் வீடுதோறும் சென்று கிடைத்த பொருள்களை வாங்கி வந்தார். ரொட்டி, கோழிக்குஞ்சு, முட்டைகள் முதலியனவும் எளியோரால் அளிக்கப்பட்டன. இவற்றையெல்லாம் சேர்த்த அவர் குறிப்பிட்ட ஒரு நாளில் விழாக் கொண்டாடி, அப்பொருள்களை விற்றுப் பணம் சேர்த்தார். இவ்வாறு கிடைத்த பணத்தைக் கொண்டே தோட்டத்தை வாங்கி, அதில் எஞ்சியிருந்த இருநூற்றைம்பது டாலரைப் புக்கரிடம் அவர் கொடுத்தார். சுமார் நூறு ஏகராப் பரப்புள்ள தோட்டம் பள்ளிக்கூடத்திற்குச் சொந்தமாயிற்று. புக்கர், மாணவர்களுக்குப் புதுமுறைப் பயிர்த்தொழிலைக் கற்றுக் கொடுத்தார்.

6. புக்கரின் அரிய செயல்கள்

முன்னுரை—போர்ட்டர் மண்டபம் கட்டுதல்—விடா முயற்சி—உண்டி நிலையம் அமைத்தல்—மாணவர்களுக்கு மேலும் சில வழிகள்—மாணவர் நிலை-முடிவுரை.

போர்ட்டர் மண்டபம் கட்டுதல்: டஸ்கிகேப் பள்ளியில் மாணவர் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வந்தது. ஆகவே புக்கர்

அறுநூறு டாலர் செலவில் ஒரு புதிய கட்டடம் கட்டத் திட்டமிட்டார். இதனையறிந்த ஒருவர், முன்பணமின்றி மரச்சாமான்கள் தர ஒப்பினர். ஒலிவியா அம்மையாரின் முயற்சியால் வடக்கேயிருந்து பலர் பணம் உதவினர். **போர்ட்டர்** என்பார் அதிக அளவில் பணம் கொடுத்தமையால் அவர் பெயரால் ஒரு மண்டபம் கட்டப்பெற்றது. இதனைக் கட்டி முடிக்க ஆர்ம்ஸ்டிராங்கும், பெண்மணிகள் இருவரும் பெரிதும் உதவினர்.

விடா முயற்சி : கட்டடத்திற்காகப் புக்கரும், பிற ஆசிரியரும், மாணக்கரும் உழைத்துச் செங்கல் சூளை யொன்று போட்டனர். போதிய முன் அனுபவம் இன்மையால் அவர்கள் போட்ட சூளை பயன் தரவில்லை. பிறகு இரு முறை முயன்றனர். உழைப்பு வீணாயிற்றே தவிர வேறு பலன் ஏதும் ஏற்படவில்லை. கையிலிருந்த பணமும் செலவழிந்துவிட்டது. மாணவர்கள் மேன் மேலும் உழைக்க விரும்பவில்லை. மனந் தளராத புக்கர் எஞ்சியிருந்த தம் கைக் கடியாரத்தை அடகு வைத்ததனால் கிடைத்த பதினைந்து டாலர் தொகையுடன், நான்காம் முறை காளவாய் போட்டார். இம்முறை அவர் வெற்றி கண்டார். பிறகு போட்ட சூளைக் கற்களை வெள்ளையரும் விரும்பி வாங்கினர். சூளைகளைப் போட்டுச் செங்கற்களை விற்பதோடு, மாணவர்கள் தம் கைத்தொழிலால் வண்டிகள் செய்தும் விற்றனர். இவற்றால் பயனடைந்த வெள்ளையர், நீகிரோக்கள் படிப்பதால் தமக்குப் பயனடையமாட்டார்கள் என்ற எண்ணத்தைக் கைவிட்டனர்.

உண்டி நிலையம் அமைத்தல் : போர்ட்டர் மண்டபம் கட்டி முடிந்த பின், பசியால் துன்புறும் வெளியூர் மாணவர்களுக்காகப் புக்கர் ஓர் உண்டி நிலையம் அமைக்க முடிவு செய்தார். அவர் தம் மாணவருடன் கட்டடத்தின் கீழே தோண்டி, அடித்தள அறையொன்று கட்டினர். சமையல் செய்யவும் மாணவர் சாப்பிடவும் அது போதுமானதாக இருந்தது. வியாபாரிகள் சிலர் உண்டி நிலையத்திற்கு உணவுப்பொருள்களைக் கடனாகக் கொடுத்து உதவினர். முதலில் உண்டி நிலையத்தில் நேரந் தவறி உணவு அளிக்கப்பெறுதலும் குடிநீர் பற்றிய குழப்பமும் இருந்தன. சில நாட்களுக்குப் பின் குறைகள் நீக்கப்பட்டன. இப்பொழுது அது மிகவும் சிறந்த உண்டி நிலையமாகத் திகழ்கின்றது.

மாணவர்க்கு மேலும் சில வழிகள் : உறங்குவதற்குப் படுக்கையோ போர்வையோ இன்றி மாணவர்கள் குளிரில் வருந்தினர். புக்கர் பல நாள் இரவுகளில் ஆங்குச் சென்று, அவர்களுக்கு ஆறுதல் கூறிவந்தார். பிறகு போர்வைகளும், மெத்தைகளும், பலகைகளும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டன. தச்சுவேலை தெரிந்த மாணவர்களால் முதலில் செய்யப்பட்ட கட்டில்கள் சில நாட்களில் ஒடிந்து வீழ்ந்தன. பிறகு அரிதின் முயன்று நல்ல கட்டில்களும், நாற்காலிகளும் பிறவும் மாணவர்க்குக் கொடுக்கப்பட்டன.

மாணவர் நிலை : "முயற்சி திருவினையாக்கும்" என்ற வள்ளுவர் வாய்மொழிக்கு நிலையான சான்றாக உள்ளது டஸ்கிகீப் பள்ளி. இன்று அது சிறந்த கல்வி நிலையங்களுள் ஒன்றாக உள்ளது. அங்குப் பயிலும் மாணவர்கள் உள்ளும் புறமும் தூய்மையுடையவர்களாய் இருக்கக் கற்பிக்கப்படுகிறார்கள். சிறந்த முறையில் உண்ணவும் உறங்கவும் அவர்கள் அறிகிறார்கள்; அழுக்கில்லா ஆடைகளையே அணிகிறார்கள். தூய்மைக்கே ஆங்கு முதலிடம் அளிக்கப்படுகிறது. பிறகே மாணவர்கள் பாடமும் கைத்தொழிலும் கற்கிறார்கள்.

7. டஸ்கிகீப் பள்ளியின் முன்னேற்றம்

முன்னுரை—அலபாமா ஹால்—பொருள் சேர்த்தல்—புக்கரின் உயர் பண்பு—நூல் நிலையமும் இரவுப் பள்ளிக்கூடமும்—புக்கரின் மணவாழ்வு—முடிவுரை.

அலபாமா ஹால் : டஸ்கிகிப் பள்ளியில் மாணவியரும் மாணவரும் மேலும் மேலும் விரும்பிச்சேர ஆரம்பித்தனர். அதனால் ஆங்குஇடம் போதவில்லை. கையில் பணமில்லாமலே பெரியதொருகட்டடம் கட்டத் தீர்மானித்து, அதற்கு "அலபாமா ஹால்" என்ற பெயரையும் சூட்டி விட்டார் புக்கர். கலாசாலை தம்முடையதோ வேறு சிலருடையதோ என்ற எண்ணம் யாருக்கும் ஏற்படக் கூடாதென்ற காரணத்தினால் அவர் மண்டலத்தின் பெயரையே அந்தக் கட்டடத்திற்கு இட்டார். மாணவர்கள் அடித்தள வேலையைத் தொடங்கினர்.

பொருள் சேர்த்தல் : ஒலிவியா அம்மையார் மறுபடியும் பல இடங்களில் சுற்றிப் பொருள் சேர்த்தும் அது பற்றவில்லை. தேவையானது பதினாலாயிரம் டாலர். ஆர்ம்ஸ்டிராங்கு புக்கரை ஹேம்புடனுக்கு வரவழைத்தார். பிறகு இருவரும் வடக்குள்ள நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்து டஸ்கிகிக் கலாசாலையைப்பற்றிச் சொல்லி ஆதரவு பெற்றனர். சுற்றுப் பிரயாணச் செலவை ஹேம்புடன் பள்ளி ஏற்றுக் கொண்டது. நியூயார்க்கு, புரூக்லின் போன்ற நகரங்களிலும் ஆதரவு கிடைத்தது. கருமமே கண்ணுயிருந்த புக்கர் பலனைக் குறித்துக் கவலைப்பட வில்லை.

புக்கரின் உயர் பண்பு : புக்கர் பொருள் தராதவரை வெறுத்துப் பேச வில்லை; செல்வரிடம் சென்று இரக்கவும் இல்லை. தாம் டஸ்கிகியில் செய்து வரும் தொண்டினை அவர் விளக்கமாக எடுத்துரைத்து வந்தார். புக்கருடைய இவ்வுயர் பண்புகளால் முதலில் ஒரு சிறிதும் கொடாதவரும், கடிந்து பேசியவரும் பிறகு ஆயிரக் கணக்கில் கொடுத்து உதவினர். பணக் காரர் பலர் பொருள் நிரம்பக் கொடுக்கவில்லையே என்று குறை கூறுபவருக்குப் புக்கர், செல்வருக்குள்ள பல தொல்லைகளையும் கடமைகளையும் கூறினர்.

நூல் நிலையமும், இரவுப் பள்ளிக்கூடமும் :

கார்னிஜி என்ற பெரியார் இருபதினாயிரம் டாலர் செலவில் ஒரு நூல் நிலையம் கட்டித் தந்தார். அதில் ஒரு பெரிய புத்தகசாலை வைக்கப்பட்டது. நாட்டில் பல பாகங்களிலிருந்தும் மாதா கோவில்களிலிருந்தும், கிறித்துவச் சங்கங்களிலிருந்தும் வந்த சிறு தொகைகள் பெருந்தொகைகளாயின. அலபாமா மண்டலத்து அரசியலார் பிறகு ஆண்டொன்றுக்கு மூவாயிரம் டாலராகக் கொடுத்தனர். ஜான்ஸ்லேட்டர், பீபாடி ஆகியோர் நிதியிலிருந்து ஆயிரக்கணக் கான டாலர் தரப்பட்டது. பிறகு ஓர் இரவுப் பள்ளிக்கூடம் தொடங்கப் பெற்றது. ஆர்வமுடைய ஏழைகள் அதில் சேர்ந்து கற்கத் தொடங்கினர். ஆண்கள் செங்கல் சூளையிலும், பெண்கள் சலவை நிலையத்திலும் உழைத்தனர்.

புக்கரின் மண வாழ்வு : புக்கர்1882-ஆம் ஆண்டில் **பேனிஸ்மித்து** என்ற மாதை மணந்தார். அம்மாதும் கலாசாலையில் பயின்று பட்டம் பெற்றவர்; புக்கருடைய அலுவல்களில் பெரிதும் உதவினர்; ஒரு பெண் மகவைப் பெற்ற பின் 1884-ஆம் ஆண்டில் அவ்வம்மையார் இவ்வுலக வாழ்வை நீத்தார். பிறகு 1885-ஆம் ஆண்டில் புக்கர் தம்முடன் ஆசிரியையாக இருந்த ஒலிவியா அம்மை யாரை மணந்தார். அவர் பள்ளியிலும் வீட்டிலுமாக உழைத்துப் புக்கருக்குப் பேருதவி செய்தார். இரு மக்களைப் பெற்றெடுத்த பின் அவ்வம்மையாரும்

" அறிவு அற்றம் காக்கும் கருவி."—வள்ளுவர்.

1889-ஆம் ஆண்டில் காலமானர். புக்கர் மூன்றும் மனைவியாராக **மார்கரட்டு** அம்மையாரை மணந்தார். அவரும் பட்டம் பெற்றவர். டஸ்கிகீயில் ஆசிரியையாக இருந்தவர்; மகளிர் சங்கம் ஏற்படுத்தி நல்ல விஷயங்களைப் பற்றி விவாதிக்க அவர் ஏற்பாடு செய்தார்.

8. புக்கரின் பேச்சுத்திறன்

முன்னுரை—தலை நகரப் பிரச்சினை—மேடிசனில் விரிவுரை—அட்லாண்டாவில் புக்கர்—பாஸ்டன் நகரக் கூட்டம்—சிக்காகோவில் சொற்பொழிவு—முடிவுரை.

தலை நகரப் பிரச்சினை : மேற்கு வர்ஜீனியாச் சமஸ்தானத்தின் தலை நகராகச் **சார்லஸ்டன்** என்ற நகரை மாற்ற வேண்டுமென்று ஆங்கு வசித்த வெள்ளையர் விரும்பினர். உடனே அவர்கள் ஒன்று கூடிப் புக்கரைத் தம் சார்பில் பேசி ஆதரவு தேடித்தர வேண்டினர். புக்கரும் அவர்களது வேண்டுகோளின்படி நாடெங்கும் சுற்றித் தக்க காரணங்கள் காட்டி, **"சார்லஸ்டன்** நகரே மேல் வர்ஜீனியாவின் தலைநகராக இருப்பதற்குத் தகுதி வாய்ந்தது" என்று சொற்பொழிவுகள் செய்தார். "கேட்டார்ப் பிணிக்கும்" தம் பேச்சால் அவர் வெற்றியும் கண்டார். முடிவில் சார்லஸ்டனே தலைநகராயிருக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

மேடிசனில் விரிவுரை : கல்விச் சபையின் ஆதரவில் பேசுமாறு **மேடிசன்** என்ற ஊரிலிருந்த புக்கருக்கு அழைப்பு வந்தது. பல்வேறிடங்களிலிருந்து பெருந்திரளான மக்கள் அவர் பேச்சைக் கேட்க வந்திருந்தனர். வெள்ளையரும் ஆங்குக் குழுமியிருந்தனர். புக்கர் அங்கே யாரையும் தூற்றுமல், எவர் மனத்தையும் புண்படுத்தாமல், எல்லோரும் வியக்கும்படி பேசினர். நீகிரோவரும் வெள்ளையரும் பகைமை இன்றி வாழவேண்டு மென்பதே அவர் பேச்சின் கருத்தாம்.

அட்லாண்டாவில் புக்கர் : அட்லாண்டாவில் கிறித்துவத் தொண்டர் கூட்ட மொன்றில் பேசுமாறு புக்கர் அழைக்கப்பட்டார். அங்கே ஐந்து நிமிடங்களில் மிக அரிய சொற்பொழிவு ஒன்றைப் புக்கர் நிகழ்த்தினர். பிறகு அட்லாண்டா எல்லையில் வசித்த பெருங்குடி மக்கள், புக்கரை உடனழைத்துக் கொண்டு, காங்கிரசின் முன் தம் குறைகள் சிலவற்றைத் தெரிவித்துக் கொண்டனர். புக்கர் அப்பொழுது பதினைந்து நிமிடம் பேசி, அங்கிருந்தவர் போற்றும் நிலையை அடைந்தார். அவர் சென்ற காரியம் பயனுற்றது.

அட்லாண்டாவில் அமைக்கப்பட்ட பெரிய பொருட்காட்சியில் புக்கர் ஒரு சொற்பொழிவாற்றினர். அங்கும் நீகிரோவரும் வெள்ளையரும் ஒத்து வாழ வேண்டுவதன் அவசியத்தைப் பற்றிப் பேசினர். வெள்ளையரும் அவரைப் பாராட்டினர். அவர் அங்குப் பேசும் பொருள் பற்றிப் பலநாள் சிந்தித்து மனைவியாரையும், ஆசிரியர்களையும் கலந்து எழுதி வைத்தார். பல்லாயிரக் கணக்கான மக்கள் அங்குக் குழுமியிருந்தனர். அவர் பேசி முடிந்ததும் கவர்னர் அவரைக் கை குலுக்கினர். பத்திரிகைகளும் அவரைப் போற்றின. ஐக்கிய மாகாணத் தலைவரான **கிளீவ் லண்ட்** என்பாரும் புக்கரின் சொற்பொழிவைப் படித்து மகிழ்ந்தார். புக்கருக்கு அத்தலைவர் நட்புக் கிடைத்தது.

பாஸ்டன் நகர்க் கூட்டம் : ராபர்ட்டு கோல்டுஷா என்பவர் தம் நாட்டு விடுதலைப் போராட்டத்தில் உயிர் துறந்தார். அவர் நினைவுச் சின்னமாக பாஸ்டனில் ஒரு தூண் நாட்டப் பெற்றது. அவ்வமயம் சொற்பொழிவாற்றப் புக்கர் அழைக்கப்பட்டார். புக்கர் அதுகாலையில் மிக உருக்கமாகப் பேசினார். அதைக் கேட்ட மக்கள் மெய்ம்மறந்தனர். தலைமை தாங்கிய கவர்னரும் புக்கரின் பேச்சு வன்மையைப் போற்றினர்.

சிக்காகோவில் சொற்பொழிவு : ஸ்பானியருக்கும் அமெரிக்கருக்கும் நடந்த போர் முடிந்த பிறகு, நிகழ்ந்த சமாதான விழாவில் பேசுமாறு சிக்காகோ நகர மக்கள் புக்கரை வேண்டினர். ஐக்கிய மாகாணத் தலைவர் **மெக்கின்லி** என்பவரும் புக்கருடைய பேச்சைக் கேட்டார். அவரும் ஆங்குக் குழுமியிருந்த முப்பதினாயிரத்துக்கு மேற்பட்ட மக்களும் புக்கருடைய பேச்சைப் புகழ்ந்து போற்றினர்.

புக்கருடைய பேச்சை அனைவரும் விரும்பியதற்குக் காரணம், அவருடைய சொற்பொழிவு, கேட்கும் மக்களுக்குத் தக்கவாறு அமைந்தமையாகும். மேலும் அவர் கதைகள் கூறியும், பொருள் விளக்கங்கள் தந்தும் பேசினார். தவறியும் பொய்யானவற்றை அவர் உரைத்தாரல்லர். உண்மையை உள்ளவாறே அவர் உரைத்தார்.

9. புக்கரின் பிற்காலமும் அவருக்கு அளிக்கப்பட்ட சிறப்புக்களும்

முன்னுரை—டஸ்கிகீக் கலாசாலை—கலாசாலை நடைமுறை—ஐரோப்பா செல்லுதல்—ஐரோப்பாவில் அவருக்களிக்கப்பட்ட சிறப்புக்கள்—லண்டன் பயணம்—நாடு திரும்புதலும் அடைந்த சிறப்புக்களும்—புக்கரின் மறைவு—முடிவுரை.

டஸ்கிகீக் கலாசாலை : புக்கர் வாஷிங்குடனின் பெரு முயற்சியால் டஸ்கிகியில் ஆரம்பிக்கப்பட்ட ஒரு சிறுபள்ளி இப்பொழுது நாற்பது கட்டடங்களும், இரண்டாயிரத்து ஐந்நூறு ஏக்கர் நிலப்பரப்பும், ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவ மாணவிகளும், நூற்றுக் கணக்கான ஆசிரியர்களும் உடைய கலாசாலையாகத் திகழ்கிறது. அங்கே நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலத்தில் பயிர் நிற்கிறது. முப்பது வகைக் கைத்தொழில்கள் ஆங்குக் கற்பிக்கப்படுகின்றன. அதற்கு இருநூறாயிரம் டாலர் வைப்பு நிதியுள்ளது. இருபத்தேழு மண்டலங்களிலிருந்து மாணவர்கள் அங்கு வந்து படிக்கின்றனர்.

கலாசாலை நடைமுறை : புக்கர் கலாசாலைப் பணியுடன், பல இடங்களில் சென்று சொற்பொழிவுகள் செய்துவந்தார். அவர் "பிறரும் உன்னைப்போல் செய்யக் கூடியதை நீ செய்யாதே" என்ற கருத்துடையவர். புக்கர் இருந்தாலும் இல்லாவிட்டாலும் கலாசாலை ஒழுங்காக நடக்கும். புக்கர் இல்லாத வேளைகளில் **வாரன் லோகன்** என்பவர் தலைவராக இருந்து பணியாற்றினார். புக்கரின் மனைவியாரும், ஆசிரியையுமான **மார்கரெட்டு** ஜேம்ஸ், வாரன்லோகனுக்கு உதவி புரிந்தார்.

ஐரோப்பா செல்லுதல் : பாஸ்டன் நகரப் பெண்மணிகள் சிலரும், **காரிசன்** என்பவரும் பணம் சேர்த்துக் கொடுத்து, மிகவும் தளர்ச்சியுற்றிருந்த புக்கரை ஐரோப்பா சென்று ஓய்வெடுத்துத் திரும்புமாறு கேட்டுக் கொண்டனர்;

புக்கருக்குக் கப்பலில் இடமும் திட்டம் செய்துவிட்டனர்; டஸ்கிகீயைப் பற்றிய கவலை புக்கருக்கு இருக்கக் கூடாது என்பதற்காக அக்கலாசாலையை நிருவகிக்கத் தேவையான பணத்தையளித்தனர். புக்கர் அவர்களுடைய அன்பின் ஆணையை மறுக்க முடியவில்லை. புக்கர் தம் ஐரோப்பியப் பயணம் வெறுங் கனவோ என்று கருதினார் ஓய்வே இன்னதென்று அறியாத புக்கர் கப்பல் பிரயாணத்தின் பொழுது நாளொன்றுக்குப் பதினைந்து மணிநேரம் உறங்கினார். புக்கருடைய மனைவியாரும் அவருடன் சென்றார்.

ஐரோப்பாவில் அவருக்கு அளிக்கப்பட்ட சிறப்புக்கள் : பெல்ஜியத்திலும் ஹாலண்டிலும் சில ஊர்களைச் சுற்றிப் பார்த்து அம்மக்களின் பயிர்த்தொழில் முறையையும் கால்நடைச் செல்வத்தையும் கண்டு புக்கர் மகிழ்ந்தார். அவர் சென்ற இடமெல்லாம் மக்கள் குதூகலத்துடன் அவரை வரவேற்றனர். பிறகு அவர் பாரிஸ் மாநகரம் சென்றார். பாரிஸ் பல்கலைக் கழகத்தில் ஒரு அரிய சொற்பொழிவினை அவர் ஆற்றினார். பல்வேறு கழகங்களிலிருந்து அவருக்கு அழைப்பு வந்தது. ஒரு சில அழைப்புக்களை மட்டும் ஏற்று எல்லோரும் புகழுமாறு பேசினார்.

லண்டன் பயணம் : பின்பு, புக்கர் பாரிஸிலிருந்து லண்டன் நகருக்குச் சென்றார். அங்கே பலர் விருந்துக்கு அழைத்தனர். பல்வேறிடங்களிலிருந்து சொற்பொழிவாற்றும்படி அழைப்புக்கள் அவருக்கு வந்தவண்ணமிருந்தன. அங்கும் அவர் ஒருசில சொற்பொழிவுகளே செய்தார். ஓய்வுபெற வந்தவராதலால் எல்லா இடங்களுக்கும் அவர் செல்லவில்லை அவர் எசக்ஸ் மண்டலத்தில் செய்த சொற்பொழிவு எல்லோராலும் பாராட்டப்பெற்றது. புலவர்களின் விருந்தினராகச் சிலநாள் புக்கர் இருந்தார். பிரிஸ்டல் மகளிர் சங்கத்தில் புக்கரும், அவருடைய மனைவியாரும் பேசினர். அரண்மனையில் விக்டோரியா மகாராணியுடன் அவர்கள் ஒருநாள் விருந்துண்டார்கள். புக்கர் சட்டசபை அங்கத்தினரைக் கண்டு பேசினார். இங்கிலாந்து மக்கள் சட்டத்திற்குப் பயந்து நடப்பதில் விருப்பமுடையவர்களாய் வேறுசில நல்ல பழக்க வழக்கங்கள் கொண்டிருந்தனர் என்பதை உணர்ந்து, புக்கர் அவர்களைப் பெரிதும் பாராட்டினார்.

நாடு திரும்புதலும் அடைந்த சிறப்புக்களும் : புக்கர் பிறகு நாடு திரும்பினார். சார்லஸ்டன் குடிமக்களும், மேற்கு வர்ஜீனியா மண்டலத்தாரும் அவரை வரவேற்றுச் சிறப்பு செய்தனர். புக்கரின் எசமானர்களும் வரவேற்பு விழாவில் கலந்து புக்கரைப் பாராட்டினர். அட்லாண்டாவிலும், நியூஆர்லியன்ஸிலும் அவ்வாறே அவர் சிறப்பிக்கப்பட்டார்.

1896-ஆம் ஆண்டில் ஹார்வார்டு பல்கலைக் கழகத்தார், அவர் தொண்டினைப் பாராட்டி, அவருக்கு எம். ஏ. பட்டம் அளித்தனர். 1898-ஆம் ஆண்டில் ஐக்கிய மாகாணத் தலைவர் **மெக்கின்லி** தம் அமைச்சர்களுடன் டஸ்கிகீப் பள்ளியில் ஒருநாள் தங்கினார். வெள்ளையரும் பிறரும் அன்றைய விழாவில் கலந்து கொண்டனர். மெக்கின்லி புக்கரின் தொண்டினையும் விடாமுயற்சியையும் பாராட்டி, அப்பள்ளியின் புகழ் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் பரவியிருந்தலைக் குறிப்பிட்டார்.

புக்கரின் மறைவு : புக்கர் 1915-ஆம் ஆண்டின் இறுதியில் டஸ்கிகீயில் காலமானார். அவருடைய உருவச்சிலையொன்று டஸ்கிகீக் கலாசாலையில் அமைக்கப் பெற்றுள்ளது. "முயற்சி திருவினையாக்கும்" என்பதற்குப் புக்கர் ஒரு சான்றாக அமைந்தார். வாழ்க அவர் செய்த தொண்டு! வளர்க அவர் புகழ்!

" சிந்தனை சிந்தனையை வளர்க்கும்."—ஸிட்னி.

10. புக்கரின் பண்பு நலன்கள்

முன்னுரை-உழைப்பு உணர்ச்சி-சொல்வன்மை-விடாமுயற்சி-அன்றாட அலுவல்கள்-ஓய்வுநேரம்-முடிவுரை.

உழைப்பு உணர்ச்சி : வறுமையில் உழலும் ஒரு குடும்பத்தில் பிறந்து தம் முயற்சியால் முன்னுக்கு வந்தவர்களுள் சிறந்தவர் புக்கர் டி-வாஷிங்குடன் ஆவார். இளமை முதற்கொண்டே தமக்கு அளிக்கப்பட்ட வேலை எதுவாயினும் அதை அவர் செவ்வனே செய்து முடித்தார்; **ரப்னர்** என்ற அம்மையாரிடம் தம் கடின உழைப்பால் நற்பெயர் சம்பாதித்ததோடு, படிப்பதற்கு வேண்டிய வசதிகளையும் பெற்றார்; உடல் வருந்த உழைத்துச் சம்பாதித்துக் கொண்டே **ஹேம்புடனில்** கல்வி பயின்றார். தொழிலைக் கற்பிக்காத பள்ளியை அவர் விரும்பினாரில்லை. நூற்கல்வியையும் தொழிற் கல்வியையும் அவர் தம் இரு கண்களாகக் கருதியிருந்தார்.

சொல்வன்மை : "கேட்டார் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும், வேட்ப மொழியும்" சொல்வன்மையுடையவர் புக்கர். **சார்லஸ்டன்** மேற்கு வர்ஜீனியாவின் தலைநகர் ஆகியதற்கு அவருடைய பேச்சுத்திறனே காரணமாகும். அவருடைய பேச்சை வெள்ளையரும் விரும்பிக் கேட்டனர். எவர் மனத்தையும் புண்படுத்தாத வகையில் அவர் பேசினார்; அவசியமான சமயங்களில் கதைகளைக் கூறியும் பொருள் விளக்கம் கூறியும் வந்தார். அவர் பேச்சில் உயிர் இருந்தது. உண்மையையே அவர் உரைத்தார்; தவறியும் பொய் சொல்லமாட்டார்; பேச வேண்டிய விஷயத்தைச் சிந்தித்து அறிவார்.

விடாமுயற்சி : தம் படிப்பிற்கு எவ்வளவு இடையூறுகள் வந்தபொழுதிலும் அவர் மனந்தளரவில்லை. எப்பாடு பட்டாவது படித்து முன்னேற வேண்டும் என்ற குறிக்கோளோடு அவர் படித்தார். டஸ்கிகியில் ஆசிரியராக இருந்தபோது பள்ளிக் கட்டடத்திற்காகச் செங்கல் சூளை போட்டனர். மாணவர்களும் ஆசிரியர்களும் உடன் உழைத்தனர்; போதிய அனுபவமின்மையால் மும்முறை தோல்வி கண்டனர். எல்லோரும் மனந்தளர்ந்தனர். ஆனால், புக்கர் தளர்ச்சியடையாமல் நான்காம் முறை சூளைபோட்டு வெற்றி கண்டார்.

இனப்பற்று : புக்கர் நீகிரோ இனத்தவர். அவரது இளமைக் காலத்தில் நீகிரோவர் அடிமைகளாக இருந்தனர். அவர்களது வாழ்க்கை கீழ்ப்பட்டதாக இருந்தது. உணவு, உடை, இடம் முதலியவற்றைச் சுத்தமாக வைத்துக் கொள்வதன் இன்றியமையாமையை அவர்கள் உணர்ந்திலர். அவர்களது நிலை புக்கரின் மனத்தை வருத்தியது. தம் இனத்தவரை உயர்த்தி, அவர்களும் பண்பாடு உடையவர்கள் என்பதையும், வாய்ப்பு இருப்பின் அவர்களும் உயர் நிலை அடைவர் என்பதையும் புக்கர் உலகுக்கு எடுத்துக் காட்டினார். நீகிரோவர்க்கெல்லாம் புக்கர் எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தார். இத்தகைய இனப்பற்று இருப்பினும், அவர் பிற இனத்தவரைச் சிறிதும் வெறுத்தவரல்லர். வெள்ளையரும், நீகிரோவரும் ஒற்றுமையுடன் வாழவேண்டும் என்பதையே அவர் எடுத்துரைத்தார்.

அன்றாட அலுவல்கள் : புக்கர் நாள்தோறும் செய்ய வேண்டியவற்றைச் செய்து முடித்துவிட்டுத்தான் பிறவற்றைக் கவனிப்பார். அவர் வேலைக்கு அடிமையல்லர்; வேலையைத் தமக்கு அடிமையாக்கினார். "பிறரும் உன்னைப் போல் செய்யக் கூடியதை நீ செய்யாதே" என்ற கொள்கையுடையவர் அவர்.

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும் கல்லார் அறிவிலா தார்." — வள்ளுவர்.

ஓய்வு நேரம்: எவ்வளவு துன்பம் வந்தாலும் அதனை இயற்கையென் எண்ணிவிடுவார். புத்தகம் படிப்பதில் அவருக்குப் பெருவிருப்புண்டு. தோட் வேலையில் தம் ஓய்வு நேரத்தின் பெரும்பகுதியைச் செலவிட்டார். சீட்டா டம் போன்றவற்றை அவர் அறிய மாட்டார். புக்கர் **உழைப்பால் உயர்ந்த** **களுள் ஒப்பற்றவர்** என்பது பொருந்தும்.

* இக்குறியிட்டவை தேர்வுக்கு முக்கியமானவை.

* 1. **புக்கர் இளமையில் பட்ட இன்னல்கள்:** முன்னுரை—அடிமை என்போர் யாவர்? புக்கர் வாஷிங்குடனின் பிறப்பு—ஐந்து வயது முடி முன் அவருக்கு இடப்பட்ட வேலைகள்—உணவும் உடையும்—விடுதலை—ம டன் நகரில் புக்கர்.

* 2. **புக்கரின் பள்ளிப் படிப்பு:** முன்னுரை—பள்ளியில் தொல்லைகள் பள்ளிப் படிப்புக்குத் தடை—நிலக்கரிச் சுரங்கத்தில் உழைத்தல்—ஹேம்புட பள்ளியைப்பற்றி அறிதல்—உழைப்பின் பரிசு.

* 3. **புக்கர் ஹேம்புடன் பள்ளியில் பயிலுதல்:** முன்னுரை—ஹேம டன் பள்ளி—புறப்பாடும் வழியில் பட்ட இன்னல்களும்—தேர்வில் வெற்றி பள்ளியிலும் உழைப்பு—ஊர்திரும்புதல்—உழைப்பும் உயர்வும்—ஹேம்ட னில் கற்ற பாடங்கள்.

4. **பட்டம் பெற்றபின் புக்கர் செய்த பணிகள்:** முன்னுரை—சிற்று டிச் சாலையுள் வேலையாள்—மால்டனில் ஆசிரியர்—வாஷிங்குடனில் புக்கா படிப்பு—பேச்சு வன்மை—அரிய வாய்ப்பு—பட்டதாரிகளுக்கு நல்லுரை வ குதல்—தாம் பயின்ற பள்ளியிலேயே ஆசிரியராதல்.

5. **டஸ்கிகீயில் பள்ளி தொடங்குதல்:** முன்னுரை—டஸ்கிகீ செல் தல்—ஏமாற்றம்—வெள்ளையர் வருத்தம்—மாணவர்கள் கற்ற பாடங்கள்—ஒ வியா அம்மையார்—தோட்டம் வாங்குதல்—பொருள் சேர்த்தல்.

* 6. **புக்கரின் அரிய செயல்கள்:** முன்னுரை—போர்ட்டர் மண்ட கட்டுதல்—விடாமுயற்சி—உண்டி நிலையம் அமைத்தல்—மாணவர்கட மேலும் சில வழிகள்—மாணவர் நிலை.

* 7. **டஸ்கிகீப் பள்ளியின் முன்னேற்றம்:** முன்னுரை—அலபாமா ஹா பொருள் சேர்த்தல்—புக்கரின் உயர்பண்பு—நூல் நிலையமும் இரவுப் பள் கூடமும்—புக்கரின் மண வாழ்வு.

* 8. **புக்கரின் பேச்சுத் திறன்:** முன்னுரை—தலைநகரப்பிரச்சினை மேடிசனில் விரிவுரை—அட்லாண்டாவில் புக்கர்—பாஸ்டன் நகர்க்கூட்ட சிகாகோவில் சொற்பொழிவு—முடிவுரை.

9. **புக்கரின் பிற்காலமும், அவருக்கு அளிக்கப் பட்ட சிறப்புகளு** முன்னுரை—டஸ்கிகீக் கலாசாலை—கலாசாலை நடைமுறை—ஐரோப்பா செ தல்—ஐரோப்பாவில் அவருக்கு அளிக்கப்பட்ட சிறப்புக்கள்—லண்டன் ணம்—நாடு திரும்புதலும் அடைந்த சிறப்புக்களும்—புக்கரின் மறைவு.

* 10. **புக்கரின் பண்பு நலன்கள்:** முன்னுரை—உழைப்பு உணர்ச் சொல் வன்மை—விடா முயற்சி—அன்றாட அலுவல்கள்—ஓய்வு நேரம்.

" மாற்றானை உறவென்று நம்ப வேண்டா."—உலகநீதி.

நல்லொழுக்கப் பயிற்சி

(உழைப்பால் உயர்ந்த ஒருவர்)

புக்கர் தி. வாஷிங்குடனுடைய வரலாற்றைப் படித்தீர்கள். அவர் "உழைப்பால் உயர்ந்த ஒருவர்" என்று போற்றப்படுகின்ருர். எத்தகைய சூழ்நிலையில் இருந்து, அவர் முயன்ருர்? முயன்ருலும் வெற்றி கிடைக்குமோ என்று ஐயுறத்தக்க சூழ்நிலையில் அவர் முயன்ருர். அவருடைய இனத்தவர் அடிமைகளாகக் கருதப்பட்டிருந்தனர். அவரோ உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் இன்றித் தவித்தார். இந்நிலையில் ஒருவரால் எவ்வாறு கல்வி கற்க இயலும்? அந்தச் சூழ்நிலையிலும் அவர் முயன்று கற்ருர்; துன்பத்தை இன்பமாகக் கருதினுர்; "இடும்பைக்கு இடும்பைப் படுப்பர்" என்பதற்கு ஏற்றவாறு துன்பத்திற்குத் துன்பத்தைக் கொடுத்தார்; "இடுக்கண் வருங்கால் நகுக" என்னும் விதியைப் பின்பற்றினுர்; அல்லும் பகலும் இடைவிடாது உழைத்தார்; முன்னேறினுர்; பெருஞ்செயல் செய்தார்; நிலைபேறில்லாத இவ்வுலகில் தம் புகழை நிலை நாட்டினுர்; மக்களுக்குக் கண்போன்ற கல்வியை உதவும் பெருங் கல்வி நிலையத்தை நிறுவி ஓங்குமாறு செய்தார்; ஊழை வென்றுவிட்டார்.

மாணவத் தோழர்களே! "முயற்சி திருவினை ஆக்கும்" என்னும் பொய்யாமொழியை மறவாதீர்கள்; "முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்" என்பதனைக் கருத்தில் இருத்துங்கள்; எத்துணை வறுமை வாட்டினுலும், "உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ" என்பதனை நினைந்தவாறு கல்வியிற் கருத்தைச் செலுத்துங்கள். அவ்வாறு செய்தால் நீங்கள் உயர்வீர்கள்; உங்களுடைய குடி உயரும்; இனம் உயரும்; மக்கட் சமுதாயம் உங்களைப் போற்றிப் புகழும்.

"நடத்தல் எளிது; நினைத்தல் அரிது."—கோதே,

பன்முறை படித்துப் பயன்பெறுக

(உழைப்பால் உயர்ந்த ஒருவர்)

பக்கம்	பத்தி	முதல்..........	வரையில்
9	2	" புக்கர்...........	....
10	1	"..................	உண்டு."
11	2	" உண்பதற்கே...	சொல்வது."
15	பக்கம்	" முழுவதும்.	
16	1	"	வருந்தினர்."
19	2	" அவரைப்.......	....
20	1	"	தோன்றிற்று."
32	2	" அதுவரையில்...	....
33	1	"	இருந்திலன்."
36	1	" ஹேம்புடனில்	......கொள்வார்."
56	2	" அடுத்தபடியாக	பழக்கினர்."
62	4	" கைத்தொழில்...	....
63	1	"	ஆவோம்."
71	2	" பொருள்..........	கூறியுள்ளார்."
87	2	" புக்கர்...........	போற்றப்பட்டது"
89	3	" புக்கர்...........	......அன்பே."
91	2	" அவருக்கு..........	............நேரமே."
93	2	" ஆ ! அடிமையில்	....
94	பக்கம்	முழுவதும்.	
99	2	" டஸ்கிகீக்	....
100	1	"	.........பெறுதல்."
102	பக்கம்	முழுவதும்	

மாணவர்கள், துணைப்பாடக் கட்டுரை எழுதுவதற்கு உரிய குறிப்புக்கள்

1. ஒவ்வொரு துணைப்பாட நூலிலும் மும்மூன்று வினாக்கள் ாடுத்து **ஒவ்வொன்றை இரண்டு பக்கங்களில்** எழுதுமாறு தேர்வில் ட்கப்படும். எதை நன்கு எழுத முடியும் என்பதை நன்கு கவனித்துத் ர்ந்தெடுக்க வேண்டும். எழுத எடுத்துக்கொள்ளும் **தலைப்பை** மறவாமல் தலில் குறிப்பிட வேண்டும். சிலர் **தலைப்பை** எழுதாமல் விடுவதால், எதை ழுதுகிறார்கள் என்பதை, முழுவதும் படித்தபின்தான் தேர்வாளர் அறிய டியும். கேள்வியின் உட்பிரிவு எண்ணைக் குறித்தால் மட்டும் போதாது.

2. எடுத்துக்கொண்ட கட்டுரையின் கருத்துக்களுக்கு ஏற்றபடி,) உள் தலைப்புக்கள் குறித்து, அவற்றை ஒவ்வொரு பத்தியாக எழுதுதல் ண்டும். பத்தி பிரிக்காமல் ஒரே மொத்தமாக எழுதுதல் கூடாது. முன் ரை முடிவுரைகளும் அமைந்தெழுதுதல் வேண்டும். குறிப்பிட்ட 2 பக்க ளவை மீறக் கூடாது. மீறி எழுதுவதற்கு மதிப்பெண் இல்லை.

3. எழுத்து தெளிவாயிருக்க வேண்டும். நல்ல கையெழுத்துக்கும், நடை tyle)க்கும், பழமொழி, மரபுச் சொற்றொடர்கட்கும்(Idiom) 4, பொருளுக்கு ıbject Matter) 9, நிறுத்தப்புள்ளி, பத்திப் பிரிவுகட்கு 2 வீதம் மதிப்பெண் ர்ந்தளிக்கப்படும். கருத்துக்களைக் கணக்கிட்டே மதிப்பெண் அளிக்கப் வெதால், நன்கு சிந்தித்து முக்கியமான கருத்துக்களைத் தொடர்ச்சியாக ழுதல் வேண்டும். தலைப்புக்குப் பொருத்தமில்லாதவற்றை எழுதிப் பக்கத்தை ப்பக்கூடாது.

4. எழுத்துப் பிழை, சந்திப் பிழை, இலக்கணப் பிழைகட்கு கால் (¼) ப்பெண் வீதம் குறைக்கப்படும். மாணவர் இதை மனத்திற் கொண்டு, ப்பிழைகள் நேராவண்ணம் கவனித்து எழுத வேண்டும் எழுதியதை பபடி தவறாமல் படித்துப் பார்த்துப் பிழைகளைத் திருத்த வேண்டும். வ்வாறு திருத்தினால் பிழை இராது. மொழிபெயர்ப்புக்கும் மேற்சொன்ன கெள் பொருந்தும். தெரிந்த அளவு மொழி பெயர்த்தெழுதினாலும், எழுதிய ரையில் மதிப்பெண் உண்டு. ஒரு வாக்கியத்தை மொழிபெயர்த்தெழுதினாலும் ற்குரிய மதிப்பெண்ணைப் பெறமுடியும். சிந்தித்துப் பார்த்துப் பொருள் ிந்து எழுதுதல் வேண்டும். பலமுறை படித்தால் பொருள் விளங்கும்.

மொழிபெயர்ப்பு

மாணவர் தம் தாய்மொழியில் தேர்ச்சியுற, மொழிபெயர்ப்பில் தேர்ச்சி பெறுதல் இன்றியமையாததாம். வேற்று மொழியில்—இன்றைய உலகப் பொது மொழியாம் ஆங்கிலத்தில்—உள்ள கருத்துக்களைத் தமிழில் பெயர்க்க இயன்றாலன்றி, நம் கலைகள் வளர்ச்சியுரு. உலக:நாகரிகத்தின் உயர்ந்த படியில் நாமும் நிற்றல் இயலாதாம்.

மாணவர் தமிழ்ப் பாடத்தில் அதிக மதிப்பெண்கள் பெறுவதற்கு மொழி பெயர்ப்பைக் கருத்துடன் பயின்று தேர்ச்சி பெறல் வேண்டும். இத்திறமை எளிதில் வாய்க்கக் கூடியதன்று. ஆங்கிலத்திலும் தமிழிலும் போதிய தேர்ச்சி பெற்றால் மட்டுமே இத்துறையில் சிறந்து விளங்குதல் கூடும். ஆங்கிலத்தில் புதிய புதிய சொற்கள், சொற்றொடர்கள், மரபுத் தொடர்கள், பழமொழிகள், பொன்மொழிகள் முதலியவற்றைக் கற்கும் பொழுதெல்லாம் அவற்றிற்குச் சரியான தமிழ்ச் சொற்கள், சொற்றொடர்கள் ஆகியன யாவை என்பதை ஆராய்ந்து, கற்றோர் வாயிலாகக் கேட்டுக் குறித்து வைத்துக் கொள்ளுதல் வேண்டும். பலமுறை எழுதிப் பழகினாலன்றி மொழிபெயர்ப்பில் புலமை எய்துதல் முடியாதாம். எனவே, கீழ்க்கண்ட குறிப்புக்களை மனத்தில் பதித்து நன்கு பயிற்சி பெற்றால் மிகமிகச் சிறந்து விளங்குதல் கூடும்.

1. மொழிபெயர்க்க வேண்டிய ஆங்கிலப் பகுதியைக் கண்டதும் மொழி பெயர்க்கத் தொடங்குதல் கூடாது. அதனை மும்முறையேனும் படித்துப் பார்த்து, அதில் கூறப்பட்ட செய்தி யாதென மனத்தில் ஆராய வேண்டும். **அவசரப்பட்டு ஒரு சொல்லை மற்றொரு சொல்லாக எண்ணி மொழி பெயர்த்தல் கூடாது.**

ஆங்கிலத்தில் ஒரு சிறு வேறுபாடே உள்ள பல சொற்கள் உள்ளன. மற்றும் மாணவர் அவசரத்தில் சொற்களை நம்பத்தகாதவாறு திரித்துப் பொருள் கொள்கின்றனர். எனவே, ஊன்றிக் கவனித்துப் படிக்க வேண்டும்.

(உ-ம்.) hard-hardy-hardly; practice-practise; advice-advise; pocket-packet; picture-pitcher; sent-scent; quite-quiet; whether-weather.

2. ஆங்கிலத்தில் ஒரே சொல்லுக்குச் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு வெவ்வேறு பொருள் வரும். ஆகவே, எப்பொருளில் அச்சொல் வழங்கப்பட்டுள்ளதென்பதை ஆராய்ந்து எழுத வேண்டும்.

(உ-ம்.) He was first in the **race**: அவன் ஓட்டப் பந்தயத்தில் முதன்மையாக வந்தான்.

The Rajputs belong to a warlike **race**: இராஜபுத்திரர்கள் வீரமிக்க இனத்தைச் (வம்சத்தை) சார்ந்தவர்கள்.

The cooly carries the **trunk**: கூலியாள் பெட்டியைத் தூக்கிச் செல்கிறான்.

The elephant drinks water with its **trunk**: யானை தன்னுடைய துதிக்கையால் தண்ணீர் குடிக்கிறது.

3. ஆங்கில வாக்கிய அமைப்புக்கும் தமிழ் வாக்கிய அமைப்புக்கும் மிக்க வேறுபாடு காணப்படுகிறது. இதை மாணவர் ஊன்றிக் கவனித்தாலன்றி அவர் மொழிபெயர்ப்பில் சிறந்து விளங்க முடியாது. ஆங்கில வாக்கியத்தில் பெரும்பாலும் முதலில் எழுவாயும், அதையடுத்துப் பயனிலையும், அதற்கப்பால் செயப்படுபொருளும் வரும். எழுவாயையும் செயப்படுபொருளையும் விளக்கும் சொற்கள் முன்னும் பின்னும் வழக்கிற்கு ஏற்றவாறு மாறி மாறி வரும். மொழிபெயர்க்கும்பொழுது சொற்களையும் தொடர்களையும் எவ்வரிசையில் மொழிபெயர்க்கவேண்டும் என்று ஆராய்ந்த பின்னரே, ஒவ்வொரு வாக்கியத்தையும் மொழிபெயர்த்தல் வேண்டும். ஆங்கிலத்தில் எச்ச வாக்கியங்கள், அவை அணையும் சொற்களுக்குப் பின்னரே வழங்கப்படும். தமிழிலோ அவற்றை முன்னர் மொழிபெயர்த்தல் அவசியம். இவற்றை ஈண்டு தரப்பட்டுள்ள எளிய பயிற்சிகளில் ஆங்காங்குக் கண்டறிக.

4. ஆங்கிலத்திலுள்ள மரபுத் தொடர்களின் பொருள்களைக் கூர்ந்து அறிந்து அவற்றிற்கு ஏற்றவாறு தமிழில் பொருள் தருதல் வேண்டும். அத் தொடர்களில் உள்ள தனித்தனிச் சொற்களுக்குப் பொருள் தரல் தவறாகும். The president took the chair: இதற்குத் 'தலைவர் தலைமை தாங்கினர்' என்றே மொழிபெயர்க்க வேண்டுமேயன்றி, 'தலைவர் நாற்காலியை எடுத்தார்' என்று கூறுதல் கூடாது.

5. ஆங்கிலப் பகுதியிலுள்ளது போன்றே தொகுதிப் பிரிவுகளும் தலைப்பும், மொழிபெயர்த்தெழுதப்பெறும் தமிழ்ப் பகுதியின்கண்ணும் அமைதல் வேண்டும்.

6. ஆங்கில வாக்கியம் நீண்டதாயிருப்பின் அதனைத் தமிழில் சிறுசிறு வாக்கியங்களாக்கி எழுதலாம். சில சிறு வாக்கியங்களை ஒன்ருக்கியும் எழுதலாம்.

7. ஆங்கிலப் பகுதியில் உள்ள எக்கருத்தையும் விடாமலும், இல்லாத கருத்தைச் சேர்க்காமலும் விடை தருக. மொழிபெயர்ப்புக்கு மதிப்பெண் ஆங்கிலப் பகுதியில் உள்ள ஒவ்வொரு வாக்கியத்துக்கும் வழங்கப்படும். ஆதலால் ஒன்றையும் விடாமல் எழுதினுல் மட்டுமே அதிக மதிப்பெண்கள் பெறக்கூடும்.

8. பகுதியிலுள்ள அருஞ்சொற்கள், மரபுத் தொடர்கள் ஆகியவற்றிற்குத் தனி மதிப்பெண்கள் தரப்படுமாதலால், அவற்றை முதலிலேயே ஊகித்துக் குறித்துக்கொண்டு ஏற்ற விடை தருக.

9. கையெழுத்து, பத்திப் பிரிவு, நடை ஆகியவற்றிற்கும் தனி மதிப்பெண் தரப்படுவதால் இவற்றை அசட்டை செய்யலாகாது.

10. கடினமான சொல்லொன்று பகுதியில் காணப்பட்டால் அதற்குப் பொருத்தமான தமிழ்ச் சொல்லை இடம் நோக்கி ஊகித்து அறிய வேண்டும்.

11. ஆங்கிலத்திலுள்ள சொற்களையும், தொடர்களையும் அப்படியே ஆங்கிலத்திலோ தமிழிலோ எழுதுதல் கூடாது.

12. தேர்வில் எழுத்துப் பிழைகளுக்கும், சந்திப் பிழைகளுக்கும் தக்கவாறு மதிப்பெண்கள் குறைக்கப்படுவதால் மாணவர் தங்கள் விடையில் இவற்றை அறவே நீக்கப் பெரிதும் முயலுதல் வேண்டும்

13. மொழிபெயர்க்கையில் அவ்வப்போது படித்துப் பார்த்தலும், எழுதி முடித்தபின் முழுவதையும் படித்துப்பார்த்துப் பிழைகளைத் திருத்துதலும் சிறந்த பழக்கங்களாம்.

14. மொழிபெயர்த்த பகுதி தமிழிலேயே முதலில் எழுதப்பட்டது போன்று இனிய நடையுடையதாய் இருத்தல் வேண்டும். தமிழுக்கே சிறப்பான எதுகை மோனை முதலியவற்றை ஏற்றவாறு அமைத்து எழுதினால் விடை மிகவும் சிறப்புடையதாம்.

15. எல்லாவற்றிற்கும் மேலாகச் சிறந்தவாறு பயிற்சி பெறுவதில் பேரார்வமும், பொறுப்புணர்ச்சியும், ஊக்கமும் மாணவர்க்கு மிகவும் இன்றியமையாதனவாம்.

குறிப்பு : கீழ்க்கண்ட பயிற்சிகளில் ஆங்கில வாக்கியத்தின் அமைப்புக்கும், தமிழ் வாக்கியத்தின் அமைப்புக்கும் உள்ள வேற்றுமைகளைக் கவனிக்கவும். எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்கள் அமைந்துள்ள முறையை ஆராய்ந்து அறிக. தடித்த எழுத்துக்களில் உள்ள தொடர்களின் மொழிபெயர்ப்பையும், அவை தமிழ் வாக்கியத்தில் வழங்கப்பெற்றுள்ள வகையையும் கூர்ந்து நோக்குக.

பயிற்சி 1

1. The boy,**anxious to learn**, works hard.
2. **But for your timely help,** I would not have succeeded.
3. He speaks **too fast to be understood.**
4. The dog, **seizing the man by his coat,** dragged him out.
5. The Eskimoes make houses **of snow and ice.**

மொழிபெயர்ப்பு

1. **கற்பதற்கு ஆர்வமுடைய** சிறுவன் வருந்தி உழைக்கிறான்.
2. **காலத்தினால் செய்த தங்களுடைய உதவியின்றேல்** நான் வெற்றி பெற்றிருக்கமுடியாது.
3. **விளங்காதவாறு மிகவும் விரைவாக அவன்** பேசுகிறான்.
4. **அந்த நாய், அம்மனிதனின் மேற்சட்டையைப்பற்றிக் கொண்டு,** அவனை வெளியே இழுத்து வந்தது.
5. எஸ்கிமோக்கள் **உறை பனியாலும் பனிக்கட்டியாலும்** வீடுகளை அமைக்கின்றனர்.

பயிற்சி 2

1. A man dressed in silk, came to my house **yesterday morning at 7 o'clock.**
2. He enjoys reading Scott's novels **all the day**
3. The electric train from Poona to Bombay runs **at sixty miles an hour.**

4. Many boys and girls learn their lessons **without thinking.**

5. The people here are **quiet, industrious and intelligent.**

மொழிபெயர்ப்பு

1. பட்டாடை தரித்த (அணிந்த) மனிதன் **நேற்றுக் காலை 7 மணிக்கு என் வீட்டுக்கு வந்தான்.**

2. ஸ்காட் என்பாரின் நவீனங்களை **நாள் முழுவதும்** படிப்பதில் அவன் பெருமகிழ்ச்சி அடைகிறான்.

3. பூனாவிலிருந்து பம்பாய்க்குச் செல்லும் மின்சார ரயில்வண்டி **மணிக்கு அறுபது மைல் வேகத்தில்** செல்லுகிறது.

4. **சிந்தித்துப் பார்க்காமலே** சிறுவர் சிறுமியர்களில் பலர் பாடங்களைப் படிக்கின்றனர்.

5. இங்குள்ள மக்கள் அமைதியுள்ளவர்களாயும், உழைப்பாளிகளாயும், அறிவாளிகளாயும் இருக்கின்றனர்.

பயிற்சி 3

1. The rain was **so heavy that I could not go out.**

2. He has written a better essay **than his brother.**

3. **Had I but known that,** I should have acted **otherwise.**

4. I cannot tell you that **because it is a secret.**

5. Take this tonic **lest your health should suffer.**

மொழிபெயர்ப்பு

1. நான் வெளியிற் செல்ல முடியாதபடி மழை அவ்வளவு அதிகமாயிருந்தது.

2. அவன் தன்சகோதரனைவிடச் சிறந்த கட்டுரை எழுதியுள்ளான்.

3. நான் மட்டும் அதனை அறிந்திருந்தால், வேறு வகையாக நடந்து கொண்டிருப்பேன்.

4. அது இரகசியமாதலால் அதனை உன்னிடம் கூற இயலாது.

5. தங்களுடைய ஆரோக்கியம் கெடாதிருக்கும்பொருட்டு இம்மருந்தை உட்கொள்ளுங்கள்.

பயிற்சி 4

1. That, he is God-fearing, is known to us all.

2. The fact, that **Gopal goes to England for higher studies,** is known to me.

3. Give me the mangoes **which you have bought.**

4. This is the boy **who got the first prize.**

5. **As I was purchasing a ticket, a** man took away my purse from my pocket.

மொழிபெயர்ப்பு

1. அவன் கடவுட் பக்தியுடையவன் என்பது நாம் அனைவரும் அறிந்தது.

2. கோபாலன் மேற்படிப்புக்காக இங்கிலாந்துக்குச் செல்கிறான் என்ற செய்தி எனக்குத் தெரியும்.

3. நீ வாங்கியுள்ள மாம்பழங்களை எனக்குக் கொடு.

4. முதற் பரிசு பெற்ற சிறுவன் இவன்தான்.

5. நான் பிரயாணச் சீட்டை வாங்குகையில், ஒருவன் என் சட்டைப் பையிலிருந்து பணப்பையைத் தூக்கிச் சென்றுவிட்டான்.

பயிற்சி 5

1. Many children **like** the teacher to do all the thinking, to work out the difficult sums, **while they write down what the teacher tells them.**

2. In the **Pacific Ocean** there are many islands **which were formerly inhabited by savages who used to kill and eat one another.**

3. Some said that the noise of the **engines would** stop the cows **from grazing** and the hens **from laying eggs** and the air would be poisoned by the gases from the engines.

4. If some lesson has to be learned, or some work to be done today, **do not say,** "I will do it tomorrow or the next day, or next week," but set to work at once and finish it, for tomorrow may never come. If we **procrastinate** we shall surely suffer loss.

மொழிபெயர்ப்பு

1. இளைஞரில் பலர், சிந்திக்கும் வேலை முழுவதையும் ஆசிரியரே புரியவும், கடினமான கணக்குகளை அவரே செய்யவும் விரும்புகின்றனர்; அவர் சொல்வதை மட்டுமே எழுதுகின்றனர்.

2. பசிபிக் பெருங்கடலில் பல தீவுகள் உள்ளன. அவற்றில் முற்காலத்தில் ஒருவரையொருவர் கொன்று தின்னும் இயல்புடைய நாகரிகம் அற்ற மக்கள் குடியிருந்தனர்.

3. ரயில் இயந்திரங்களின் ஒலி பசுக்கள் மேய்வதையும், கோழிகள் முட்டையிடுவதையும் தடுக்கும் என்றும், இயந்திரங்களிலிருந்து வரும் புகையினால் காற்று விஷமுடையதாகும் என்றும் சிலர் கூறினர்.

4. ஏதேனும் பாடத்தைக் கற்க வேண்டுமாயினும், ஏதேனும் வேலையை இன்று செய்யவேண்டுமாயினும், "நாளையோ, மறுநாளோ, அடுத்த வாரமோ" என்று கூறுதே; உடனே வேலையைத் தொடங்கி முடித்துவிடு. ஏனெனில் நாளை வராமலே இருக்கக்கூடும். கால தாமதம் செய்தால் நாம் நஷ்டத்தால் வருந்துவது திண்ணம்.

பயிற்சி 6

(மரபுத் தொடர்கள் : Idioms)

1. **I backed up** my friend's case.
2. My father has **disposed of** his horse for Rs. 500.

3. The doctors have **given him up**
4. The strikers are not likely to **give in.**
5. He promised **to go into** the matter.
6. The thief tried **to get at** me.
7. I cannot **make out** the meaning of this word.
8. While travelling we have **to put with** many difficulties.
9. In these days many people find it difficult **to make both ends meet.**
10. This is the **most up to date** book on psychology.

மொழிபெயர்ப்பு

1. என்னுடைய நண்பனின் வழக்குக்கு நான் **ஆதரவளித்தேன்.**
2. என் தகப்பனுர் தம்முடைய குதிரையை ஐந்நூறு ரூபாய்க்கு **விற்று விட்டார்.**
3. அவன் பிழைப்பான் என்ற **நம்பிக்கையை** மருத்துவர்கள் **இழந்து விட்டனர்.**
4. வேலை நிறுத்தம் செய்வோர் **விட்டுக்கொடுப்பதாகத் தோற்றவில்லை.**
5. அவர் **அவ்விஷயத்தைப் பரிசீலனை செய்வதாய்** உறுதி கூறினர்.
6. திருடன் என்னைத் **தாக்குவதற்கு** முயன்றன்.
7. இச்சொல்லின் பொருளைக் **கண்டறிய** என்னுல் இயலவில்லை.
8. பிரயாணம் செய்கையில் நாம் பல இன்னல்களைப் **பொறுத்துக் கொள்ளவேண்டி**யுள்ளது.
9. இக்காலத்தில் மக்கள் தங்கள் வருவாய்க்குத் தக்கவாறு **வாழ்க்கை நடத்த** முடியாமல் துன்பமடைகின்றனர்.
10. உளநூல் துறைபற்றி **அண்மையில் வெளிவந்த நூல்** இது.

பயிற்சி 7

1. A bird in the hand is worth two in the bush.
2. No smoke without fire.
3. Look before you leap
4. Birds of the same feather flock together.
5. Make hay while the sun shines.

மொழிபெயர்ப்பு

1. நாளை வரும் பலாக்காயினும் இன்று கிடைத்த களாக்காயே சிறந்தது.
2. இல்லாது பிறவாது; அள்ளாது குறையாது.
3. எண்ணித் துணிக கருமம்.
4. இனம் இனத்தோடு சேரும்.
5. காற்றுள்ள பொழுதே தூற்றிக் கொள்.

பயிற்சி 8

Social service is that service rendered to our less fortunate brethren to improve their lot. It has to be rendered without any selfish motive Every effort should be taken to better their lives.

Society cannot progress merely by political reform. It has to be thoroughly reformed for wholesome progress. To-day India is very badly in need of social reform. Her old customs, manners and superstitions which impede progress, have to be changed in order that she may march forward in the path of progress.

The majority of Indians are afflicted with poverty and distress. They live in rural parts and find it difficult to make both ends meet. A very large proportion of the population of India is illiterate. So they are unable to take an intelligent part in the movements that work for the progress of the country.

மொழிபெயர்ப்பு

நம்மைப்போல் அத்துணைப் பேறு பெறாத நம்முடைய உடன் பிறந்தவர்களின் வாழ்க்கையை உயர்த்தும் பொருட்டுச் செய்யப்படும் சேவையே சமூகத் தொண்டாகும். அது யாதொரு சுயநலக்கொள்கையுமின்றி ஆற்றப்படல் வேண்டும். அவரது வாழ்க்கையைச் சீர்திருத்துவதில் எல்லா வகைகளிலும் நாம் முயற்சி கொள்ள வேண்டும்.

அரசியல் சீர்திருத்தத்தால் மட்டும் சமூகம் சீர்திருந்தாது. அது சீரியவகையில் முன்னேற வேண்டுமாயின், முற்றிலும் சீர்திருத்தப்பட வேண்டும் இன்று இந்திய நாட்டுக்குச் சமூகச் சீர்திருத்தம் மிகவும் இன்றியமையாததாக உள்ளது. நம் நாட்டின் மிகப் பழைய பழக்க வழக்கங்களும் மூட நம்பிக்கைகளும் நமது முன்னேற்றத்தைப் பெரிதும் தடைபுரிந்து வருகின்றன. முன்னேற்றப் பாதையில் நம் நாடு கடுகிச் செல்வதற்கு இம்மூட நம்பிக்கைகளும், பழங் காலத்திய வழக்கங்களும் மாற்றியமைக்கப்படல் அவசியம்.

இந்தியரில் பெரும்பாலோர் வறுமையாலும், துன்பங்களாலும் அல்லலுறுகின்றனர். அவர்கள் நாட்டுப்புறங்களில் வசிக்கின்றனர் தங்கள் வாழ்க்கையை நடத்தவும் இயலாமல் இருக்கின்றனர். இந்தியாவின் ஜனத்தொகையில் மிகவும் அதிகமான விகிதத்தினர் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள். ஆதலால், நாட்டின் முன்னேற்றத்துக்காக உழைக்கும் இயக்கங்களில் அவர்கள் அறிவுடன் பங்கெடுத்துக் கொள்வதற்கு இயலாதவர்களாக உள்ளனர்.

பயிற்சி 9

The exemption from exercise was of course obtained, as my father wrote himself to the Headmaster saying that he wanted me at home after school. But though I was none the worse for having neglected exercise, I am still paying the penalty of another neglect. I do not know whence I got the notion that good handwriting was not a necessary part of education. But I retained it until I saw the beautiful handwriting of young educated men I was ashamed of myself and repented of my neglect. I saw that bad handwriting should be regarded as a sign of imperfect education. I tried later to improve mine. But it was too late. I could never repair the neglect of my youth. Let every young man and woman be warned of my example

and understand that good handwriting is a necessary part of education.

I am now of opinion that children should first be taught the art of drawing before learning how to write. Let the child learn his letters by observation as he does different objects such as flowers, birds etc., and let him learn handwriting only after he has learnt to draw objects. He will then write a beautifully formed hand.

மொழிபெயர்ப்பு

பாடசாலை முடிந்தவுடன் நான் வீட்டிலிருக்குமாறு தாம் விரும்புவதாக என் தந்தையார் தலைமையாசிரியருக்கு ஒரு கடிதம் எழுதினார். அதனால் தேகப் பயிற்சியினின்று விடுதலை யாதொரு தடையுமின்றி எனக்குக் கிடைத்தது. ஆனால், நான் தேகப்பயிற்சியை அசட்டை செய்ததற்காக யாதொரு கேடும் அடையாவிடினும், மற்றொன்றை அசட்டை செய்ததற்காக இன்னும் அல்லலுற்றுக் கொண்டிருக்கிறேன். சிறந்த கையெழுத்து கல்விப் பயிற்சியின் இன்றியமையாத பகுதி அன்று என்ற எண்ணம் எங்கிருந்து எனக்கு வந்ததோ என்பதை யான் அறியேன். ஆனால் இளமையும், கல்வியறிவுமுடைய மக்களுடைய அழகிய கையெழுத்தைக் காணும் வரையில் அக்கருத்தையே நான்கொண்டிருந்தேன். கண்டதும் என்னைக் குறித்து நானே பேரவமானப்பட்டு, அங்ஙனம் அசட்டை செய்தமைக்காக மிகவும் வருந்தினேன்; அழகற்ற கையெழுத்து முற்றுப் பெறாத கல்விப் பயிற்சியின் அறிகுறி என்பதை உணர்ந்தேன். பிற்காலத்தில் எனது கையெழுத்தைச் சீர்திருத்த முயன்றேன். ஆனால் பல நாட்கள் தாமதித்துவிட்டமையால் முடியவில்லை. என்னுடைய இளமையில் அசட்டை செய்த இதனை என்னால் சீர்திருத்த இயலவில்லை. ஒவ்வொரு சிறுவனும் சிறுமியும், எனதுவாழ்க்கையை எடுத்துக்காட்டாகக் கொண்டு, சிறந்தகையெழுத்து கல்விப் பயிற்சியின் இன்றியமையாத பகுதி என்பதை உணர்வார்களாக.

இளைஞர்கள் எழுத்துக்களை எழுதக் கற்குமுன், அவர்களுக்கு முதலில் சித்திரம் வரைதலாகிய கலையைக் கற்பிக்க வேண்டும் என்று தற்பொழுது நான் கருதுகிறேன். மலர்கள், பறவைகள் ஆகிய வெவ்வேறு பொருள்களைக் கூர்ந்து நோக்கி இளைஞன் அறிவதுபோல் எழுத்துக்களையும் அறிவானாக; பொருள்களை வரையக் கற்றுக் கொண்டபின் கையெழுத்தைக் கற்றுக் கொள்வானாக. அங்ஙனம் செய்தால் அவன் மிகவும் அழகாக அமைந்த கையெழுத்தை எழுதுவான்.

பயிற்சி 10

We end today a peroid of ill-fortune and India discovers herself again. The achievement we celebrate today is but a step, an opening of opportunity, to the greater triumphs and achievements that await us.

Freedom and power bring responsibility. The responsibility rests upon this Assembly, a sovereign body respresenting the sovereign people of India. We have suffered much in the past. Nevertheless the past is over and it is the future that beckons to us now.

" குற்றமே அற்றம் தரூஉம் பகை."—வள்ளுவர்.

That future is not one of case and resting but of incessant striving so that we might fulfil the pledges we have so often taken and the one we shall take today. The service of India means the service of the millions who suffer. It means the ending of poverty and ignorance and disease and inequality of opportunity. The ambition of the greatest man of our generation has been to wipe every tear from every eye. That may be beyond us but so long as there are tears and suffering, so long our work will not be over. May we all join with faith and confidence in building the noble mansion of free India !

நமது கெட்ட காலம் இன்று முடிகிறது. இந்தியத் தாய் தன் ஆற்றல்களை மீண்டும் உணர்ந்துள்ளாள். இன்று நாம் கொண்டாடும் வெற்றி நமக்கு நேரவிருக்கும் பெருமை வாய்ந்த சாதனைகளுக்கும் வெற்றிகளுக்கும் முதற்படியாகிய வாய்ப்பின் துவக்கமேயாகும்.

சுதந்தரமும், அதிகாரமும் பொறுப்பையே மிகுவிக்கின்றன. அத்தகைய பொறுப்பு, அதிகாரம் வாய்ந்த இந்திய மக்களின் பிரதிநிதிகள் அடங்கிய, அதிகாரம் வாய்ந்த தொகுதியாகிய இம்மக்கள் சபையின் கண் உள்ளது. பழங்காலத்தில் நாம் கணக்கற்ற துன்பங்களுக்கு ஆளாயிருக்கிறோம். ஆயினும் அப்பழங்காலம் முடிவடைந்துவிட்டது. தற்போது நம்மை எதிர்காலமே கைகாட்டி அழைக்கின்றது.

அவ்வெதிர்காலம் ஓய்வும் இன்பமும் உடையதன்று; ஆனால் அது நாம் பல முறைகளில் மேற்கொண்ட உறுதி மொழிகளையும், இன்று மேற்கொள்வதையும் நிறைவேற்றுமாறு ஓயா உழைப்பு நிறைந்தது. இந்தியாவுக்குத் தொண்டு புரிவதாவது துன்புறுகின்ற நூறாயிரக்கணக்கான மக்களுக்குத் தொண்டு புரிவதேயாகும். வறுமை, அறியாமை, நோய், வாய்ப்பில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் ஆகியவற்றிற்கு முடிவுகட்டுவதே அத்தொண்டின் பொருளாம். நம் தலைமுறையில் மிகச்சிறந்த பெரியாரின் குறிக்கோளாவது, ஒவ்வொருவருடைய கண்ணினின்றும் ஒவ்வொரு துளி கண்ணீரையும் துடைப்பதேயாகும். அது நமது ஆற்றலுக்கு அப்பாற்பட்டதாயிருக்கலாம். ஆனால் நாட்டில் கண்ணீரும் துன்பமும் உள்ள வரையில் நமது பணி முற்றுப் பெற்றதாகாது. நம்பிக்கையும் மன உறுதியும்கொண்டு, சுதந்தர இந்தியக் கோயிலைக் கட்டுவதில் நாம் அனைவரும் ஒன்றுபடுவோமாக.

—

மரபுத் தொடர்கள்

a bosom friend : உயிர் நண்பன்
after all : முடிவில்
a glaring evil : உலகறிந்த தீமை
all in all : முழு அதிகாரங் கொண்ட
a man of fertile genius : சிறந்த அறிவாளி
arm in arm : நெருங்கித் தோளோடு தோள்
at one's beck and call : ஒருவர் கருத்துப்படி நடத்தல்
back up : போற்றுதல், ஆதரித்தல்
bear with : பொறுத்துக் கொள்
bent upon mischief : தீமை செய்ய நினைத்தல்
better off : சீரிய நிலையில் இரு
birds of a feather : ஒரே இனத்தைச் சார்ந்த
breath one's last : மரணம் அடை
bring forth : பிறப்பி, உண்டாக்கு
bring out : எடுத்துக்காட்டு
bring to light : வெளியாக்கு
build castles in the air : ஆகாய (மனக்) கோட்டை கட்டு
burst into tears : கண்ணீர் விடு
by all means : எல்லா வகைகளிலும்
by and by : நாளடைவில்
by degrees : படிப்படியாய்
by fits and starts : வேளைக்கொரு விதமாய்
by hook or crook : எவ்விதத்திலேனும்
call at : போய்க் காண்
carry on : தொடர்ந்து செய்
carry out : நிறைவேற்று
chalk out : திட்டம் செய், வரையறு
come to blows : சண்டை செய்
come out in one's true colours : உண்மையான தோற்றத்தை (தன்மையை) வெளிப்படுத்து
do away with : ஒழித்து விடு
draw a deep breath : பெருமூச்சுவிடு
drop out : மறந்து விடு
fair play : நியாயமாய் நடத்தல்
from the bottom of one's heart : மனமார
from the cradle : பிறந்தநாள் முதல்
give ear : செவி சாய்த்துக் கேள்
give way : இடங்கொடு
go out of date : வழக்கொழிதல்
go through fire and water : அபாயங்கள் அனைத்தையும் எதிர்த்து நில்
go to dogs : அழிந்து போதல்
go to the extremes : அளவுக்கு மீறு
in any case : எவ்வாறாயினும்
ins and outs : உண்மைகள்
in the long run ; நாளடைவில்
laugh at : பரிகாசம் செய்
lend a hand : உதவி செய்
make both ends meet : வரவுக்குள் வாழ்க்கை நடத்து
make up one's mind : தீர்மானஞ் செய்
nip in the bud : முளையிலே கிள்ளி எறி
nook and corner : மூலை முடுக்குகள்
of his own accord : தானாகவே
on account of : அதன் காரணமாக
once for all : முடிவாக
out and out : முற்றிலும்.
pay one in his own coin : ஏட்டிக்குப் போட்டி செய்
presence of mind : சமயத்துக்குத் தக்கவாறு நடத்தல்
read between the lines : மறைந்த உண்மையைக் கண்டுகொள்
render an account : கணக்குக் கொடு
set aside : தள்ளி வை
set out : புறப்படு
to amass wealth : திரவியம் சேர்க்க
to be amazed : திகைக்க
to be dispirited : மனந்தளர
to bid adieu : வழி விட்டனுப்ப
to commit to memory : மனப் பாடம் செய்ய
to eye with favour : அருளொடு நோக்க
to gain a firm footing : உறுதியாக நிலைக்க
to go astray : வழி தவறிப் போக
to raise a hue and cry : கூச்ச லிட
well to do : செல்வமுள்ள

தேர்வுக் காய்ச்சலா?

அஞ்சற்க; துடைக்க துயர்; நிமிர்க; எழுக; படிக்க.

இப்பொழுது படிக்கவேண்டா.

தேர்வுக்கு முதல் நாள் படி.

மாணவச் செல்வங்களே! தேர்வுக்கு முதல் நாள் இரவு உங்களுள் பலர்க்குத் **தேர்வுக் காய்ச்சல்** வரும். தெள்ளத் தெளிய ஆண்டு முழுவதும் படித்திருந்தாலும் இக்காய்ச்சல் வரக்கூடும். அன்று இரவும், தேர்வு நடைபெறும் நாளன்று காலையிலும் எவற்றைப் படிப்பதென்றும், எவற்றை விடுவது என்றும் உங்களுடைய மனத்தில் போராட்டம் எழும்.

போராட்டத்தை விடுக; இப்பகுதியைப் படிக்க. அஞ்ச வேண்டா என்று அடைக்கலம் தரும் இப்பகுதி. **தேர்வுக்கு முதல் நாள் மாலை வரையில் இப்பகுதியைப் படிக்க வேண்டா.**

இப்பகுதியை 2, 3 முறை விரைந்து படியுங்கள். ஈண்டுக் குறிப்பிடப் பெற்றுள்ள வினாக்களுக்கு மட்டும் விடைகளைப் படியுங்கள்; படிக்குமாறு கூறிய பகுதிகளை மட்டும் படியுங்கள். தேர்வில் உங்களுக்கு வெற்றி கிட்டும்; பெரு வெற்றி கிடைக்கும்.

ஆண்டு முழுவதும் ஆசிரியர் கூறியனவற்றை ஐயமறப் படித்துணர்ந்தோர்க்கு இப்பகுதி 80% வாங்கித் தரும்.

'இதுவரையில் ஒன்றும் படிக்கவில்லையே! ஐயகோ! தேர்வில் எங்ஙனம் விடை யெழுதுவோம்?' என்று ஏங்குவோர்க்குக் குறைந்தது 40% இப்பகுதி வாங்கித் தரும்.

குறிப்பு: தேர்வுக்கு முதல் மாலை வரையில் இப்பகுதியைப் படிக்க வேண்டா; ஏனைப்பகுதிகளைப் படியுங்கள்.

முதல் தாள்

I. செய்யுட் பகுதி

ஆசிரியர் குறிப்புச் சட்டகம்

நூல்	நூலாசிரியர்	ஊர்	பெற்றோர்	மரபு, சமயம்	காலம்	இயற்றிய நூல்கள்
தாயுமான வர் பாடல்	தாயுமான வர்	திருமறைக் காடு (வேதா ரணியம்)	கேடிலியப்ப பிள்ளை	சைவ, வேளாளர்	18-ஆம் நூற்றாண்டு	—
தமிழ் மொழி வாழ்த்து	சி. சுப்பிரம ணிய பாரதி யார்	எட்டயபுரம்	சின்னசாமி ஐயர் இலக்குமி அம்மாள்	அந்தணர்	1882-1921	பாரத நாடு, செந்தமிழ் நாடு முதலியவை.
திருக்குறள்	திருவள்ளு வர்	மயிலை	ஆதி, பகவன்	—	கி.பி. முதல் அல்லது 2-ம் நூற்றாண்டு	—
நாலடியார்	சமண முனிவர்கள்	—	—	சைனம்	கி.பி. 5 அல்லது 6-ம் நூற்றாண்டு	—
பழமொழி	முன்றுறை அரையனார்	முன்றுறை	—	சைனம்	கி.பி. 6 அல்லது 7-ம் நூற்றாண்டு	—
சிலப்பதி காரம்	இளங்கோ வடிகள்	வஞ்சி	நெடுஞ்சேரலாதன்	—	கி.பி. 2-ம் நூற் றாண்டு	—

கம்பராமாயணம்	கம்பர்	திருவழுந்தூர்	—	உவச்சர் அல்லது வேளாண் மரபு, வைணவம்	கி.பி. 9 அல்லது 12-ம் நூற்றாண்டு	சடகோபர் அந்தாதி, சரசுவதி யந்தாதி முதலியன என்பர்.
திருத்தொண்டர் புராணம்	சேக்கிழார் (அருண்மொழித் தேவர்)	குன்றத்தூர்	—	சைவ வேளாளர்	கி.பி. 11-ம் நூற்றாண்டு	—
மனோன்மணீயம்	ராய்பகதூர் பெ. சுந்தரம் பிள்ளை	ஆலப்புழை	பெருமாள் பிள்ளை மாடத்தி அம்மையார்	சைவ வேளாளர்	1855-1897	நூற்றொகை விளக்கம்
புறநானூறு	சங்கப் புலவர்கள்	—	—	—	கி.பி. 2-ம் நூற்றாண்டு வரை	—
கலிங்கத்துப் பரணி	சயங்கொண்டார்	தீபங்குடி	—	சைனர்	கி.பி. 12-ம் நூற்றாண்டு	—
கச்சிக் கலம்பகம்	பூண்டி அரங்கநாத முதலியார்	பூண்டி	—	சைவ வேளாளர்	கி.பி. 19-ம் நூற்றாண்டின் இறுதி 20-ம் நூற்றாண்டின் தொடக்கம்	—
அழகின் சிரிப்பு	பாரதிதாசன்	புதுச்சேரி	கனகசபை முதலியார்	பொது நோக்கு	இப்பொழுது வாழ்பவர்	குடும்ப விளக்கு, இருண்ட வீடு முதலியவை.
அரசப்பன் அலங்காரம்	முத்தமிழ்க் கவி, விதத்துவான் அரசப்பனார்	கொண்டையம் பாளையம்	இராமசாமி அரங்கம்மாள்	சைவ வேளாளர்	இப்பொழுது வாழ்பவர்	சந்திரகாந்தன், ரோஜாப் புஷ்பம் முதலிய நூல்கள்.

மனப்பாடப் பகுதி

(1) முன்னுரைப் பகுதியில் அமைந்துள்ள மனப் பாடப் பகுதிச் செய்யுட்களை ஐந்தாறு முறைகள் படியுங்கள். ஆறு மதிப்பெண்கள் எளிதில் கிடைக்கும்.

விடைகளைப் படித்துப் பார்

(2) கீழ்வரும் செய்யுட்களுக்குப் பொழிப்புரை படித்துணர்க :—

திருக்குறள் : (புகழ்) 1, 3, 4, 5; (நாடு) 1, 2, 7, 9.

நாலடியார் : 6, 7.

பழமொழி : 6, 7.

சிலப்பதிகாரம் : வரிகள் 9—18.

கம்ப ராமாயணம் : 1, 8, 17, 20, 21.

திருத்தொண்டர் புராணம் : 15, 21.

பல்சுவை : புறநானூற்றுப் பாடல்; கலிங்கத்துப் பரணி 2 பாடல்கள்.

(3) கீழ்வரும் வினக்களுக்குரிய விடைகளைச் செய்யுட் பகுதியின் வின விடைப் பகுதியில் படித்துணர்க :—

பகுதி	பக்கம்	வின எண்
வாழ்த்து	140	2, 3
	141	2
அறவுரை	141	6
	142	9
	143	14, 16, 18
	144	20, 22
	145	3.
	146	8, 10
	147	13, 14, 15
	149	8, 11
கதை	152	14, 17
	153	21
	155	34, 35
	156	36
	157	5,6
	158	13, 18

பகுதி	பக்கம்	வின எண்
கதை	160	30
	161	34
	162	47, 48, 50
	164	16,
	165	21, 25
	167	7
	168	14, 19
	169	28
	170	4, 6
பல்சுவை	172	7
	174	5, 7, 2
	175	4, 4

II. உரைநடைப் பகுதி

கீழ்வரும் வினக்களுக்குரிய விடைகளை உரைநடைக்குரிய வின விடைப் பகுதியில் படித்துணர்க

பக்கம்	வின எண்	பக்கம்	வின எண்
210	4	215	12, 15
211	6	216	3, 9
212	6. 7	217	12, 13
213	10. 15	218	19, 20, 21, 1
214	3, 4, 8	219	5, 6, 8, 9

பக்கம்	வினா எண்	பக்கம்	வினா எண்
220	2, 8	226	13, 16, 18
221	10, 11	227	19, 4
222	6, 7, 8	228	7, 9, 10
223	11, 13, 14	229	12, 13, 15
224	15, 17	231	1, 7
225	6, 7, 10, 11	232	10, 11

III. பயன்தரும் இலக்கண விளக்கம்

(எண்கள் இந்நூலின் பக்க எண்களைக் குறிக்கும்)

உறுப்பிலக்கணம் இவ்வுரை நூலின் 193, 194, 195, 196 பக்கங்களில் உள்ளன. அப்பக்கங்களைப் படித்துப் பார்.

1. அருந்தொடர்களைப் பிரித்துக் காட்டுதல்.

உன்னதருளே : உன்னது + அருளே.
சச்சிதானந்தம் : சத்து + சித்து + ஆனந்தம்.
தோன்றலிற் றோன்றுமை : தோன்றலின் + தோன்றுமை.
தந்நோவார் : தம் + நோவார்.
வேந்தலைக்கும் : வேந்து + அலைக்கும்.
உட்பகை : உள் + பகை.
நாட்டிற்றலை : நாட்டின் + தலை.
எனதெனதென்று: எனது + எனது + என்று.
யானுமதனையது : யானும் + அதனை + அது.
வைப்புழிக்கோட்படா : வைப்பு + உழி + கோள் + படா.
பொறுத்தாற்றிச்சேறல்: பொறுத்து + ஆற்றி + செல் + தல்.
தகவன்றென்பது : தகவு + அன்று + என்பது.
பசுந்துணி : பசுமை + துணி.
வேற்றடக்கை: வேல் + தடம் + கை.
பேருரம் : பெருமை + உரம்.
பொற்றொழில் : பொன் + தொழில்.
மற்றவட்டருக : மற்று + அவள் + தருக
கோயில் : கோ + இல்.
எள்ளறு : எள் + அறு.
கோறல் : கொல் + தல்.
கடுங்கோல் : கடுமை + கோல்.
நற்றிறம் : நன்மை + திறம்.
தேமொழி : தேன் + மொழி.
தருகென : தருக + என.
முதற்றெறித்தது : முதல் + தெறித்தது.
குலைந்தனணடுங்கி : குலைந்தனள் + நடுங்கி.
பொருவிறுணையான் : பொரு + இல் + துணையான்.
நாடொரீஇ : நாடு + ஒரீஇ.
முரட்சேனை : முரண் + சேனை.
கண்கடீநாற : கண்கள் + தீ + நாற.
விழிக்கட்டீயினன் : விழி + கண் + தீயினன்.
கிட்டியதமரென : கிட்டியது + அமர் + என, கிட்டிய + தமர் + என.
ஆருயிர் : அருமை + உயிர்.
செஞ்சரம் : செம்மை + சரம்.
நறுந்தண்டார் : நறுமை + தண் + தார்.
அற்காணிற்கண்டனைய : அல் + காணில் + கண்டு + அனைய.
நிற்காணும் : நின் + காணும்.
அவற்காண்பென் : அவன் + காண்பென்.
நற்கலையின்மதி : நல் + கலை + இல் மதி.
அயனின்றுன் : அயல் + நின்றுன்.
காமின்கணெறி : காமின்கள் + நெறி.
தண்டுறையோர் : தண் + துறை + ஓர்.
செங்கண் : செம்மை + கண்.
நீட்டரு : நீட்டு + அரு.

சேவடி : செம்மை + அடி.
முகத்திற்றேக்கி : முகத்தில் + தேக்கி.
அம்பொனீடிய : அம் + பொன் + நீடிய.
ஈரமென்மதுரப்பதம் : ஈரம் + மென்மை + மதுரம் + பதம்.
எண்டோளினர் : எட்டு + தோளினர்
மல்லனீடிய : மல்லல் + நீடிய
நற்றவத்தவர் : நன்மை + தவத்தவர்
வெந்தழல் : வெம்மை + தழல்.
இன்பமார்ந்திருக்க : இன்பம் + ஆர்ந்து + இருக்க.
முதுநகர் : முதுமை + நகர்.
அறியிலரியதென் : அறியில் + அரியது + ஏன்.
அருகுளதெட்டி : அருகு + உளது + எட்டி.
மன்னவை : மன் + அவை,
தந்நயம் : தம் + நயம்.
ஆயிரவாரத்தாழியான் : ஆயிரம் + ஆரத்து + ஆழியான்.
நெடுந்துயர் : நெடுமை + துயர்.
பாடிமிழ் பனிக்கடற் சேர்ப்பன் : பாடு + இமிழ் + பனி + கடல் + சேர்ப்பன்.
புள்ளொருங்கெழுமே : புள் + ஒருங்கு + எழுமே.
சிறப்பெய்த விச்சையுடன் : சிறப்பு + எய்த + இச்சையுடன்.
சொல்லூன்றியதேன் : சொல் + ஊன்றியது + ஏன்.
பெட்டக்கது : பெள் + தக்கது.
ஏனுலகம் : ஏனை + உலகம்.

2. வினையாலணையும் பெயர்

வினைமுற்று பெயர்ப்பொருளைத்தரின் வினையாலணையும் பெயர் ஆகும். வினைமுற்று வேற்றுமை உருபை ஏற்று நிற்கின்றதா என்று பாருங்கள். ஏற்று நின்றால் அது வினையாலணையும் பெயர். பெயர்ச் சொல்தான் வேற்றுமை உருபை ஏற்கும் என அறிக. வினைமுற்று எழுவாயாக நின்றாலும் அது வினையாலணையும் பெயர்தான்.

உரைப்பார் 12
ஒல்வ 26
எனது 27
செய்தாரை 36
அறிந்தார் 37
அறியாதார் 37
அளித்தார் 40
இழந்தாள் 45
செற்றனள் 48
செயிர்த்தனள் 48
தீர்தோன் 52
மடித்தோன் 52
தந்தான் 69
நின்றவனே 73
நின்றான் 75
பிறந்தார் 75
தொழுதானை 78
ஆடுவார் 86
சூடுவார் 86
வந்தவர் 88
மன்னினர் 90
தருவார் 95
மிக்கார் 100
மயங்குவர் 104
மிக்கான் 104
நாட்டார் 113
இலார் 117
செய்பவன் 122
செய்தோர் 126

3. ஆகுபெயர்

ஒன்றன் பெயர் அதனோடு தொடர்புடைய மற்றொன்றுக்குப் பெயராக வருவது ஆகுபெயர். எடுத்துக்காட்டாக, 'உலகு' என்னும் இடப்பெயர், ஆங்கு வாழும் மக்களைக் குறித்தது. எனவே, அஃது இடவாகுபெயர்.

உலகு : இடவாகு பெயர் 14
புகழ் : காரியவாகு பெயர் 15
விளையுள் : தொழிலாகு பெயர் 18
நாழி : முகத்தலளவை ஆகுபெயர் 35
வரை : இருமடியாகு பெயர் 36
வாயில் : இடவாகு பெயர் 48
தோழமை : பண்பாகு பெயர் 68
வேலை : உவமையாகு பெயர் 71
தாமரை : முதலாகு பெயர் 78
ஞாலம் : இடவாகு பெயர் 93
கொடி : உவமையாகு பெயர் 94
மதுரை : நெல்லை : } இடவாகு பெயர்கள் 110
உலகம் : இடவாகு பெயர் 116
ஞாயிறு : உவமையாகு பெயர் 124

4. உயிரளபெடை

செய்யுளில் ஓசை குறைந்தால், குறைந்த ஓசையை நிறைக்கும் பொருட்டு நெட்டெழுத்துக்கள் அளபெடுத்து (நீண்டு) ஒலிக்கும். அவ்வாறு நீண்டு ஒலித்தற்கு அறிகுறியாக, அளபெடுத்த எழுத்தை அடுத்து, அவ்வெழுத்திற்கு இனமான குற்றெழுத்து எழுதப்படும்.

செய்யுளில் தளை கெடாமல் இருக்கும்பொருட்டு அளபெடுப்பது செய்யுளிசை நிறைக்கவகத அளபெடை.

செய்யுளில் தளைகெடாமல் இருந்தாலும், இனிய ஓசை தருதற்பொருட்டு அளபெடுப்பது இன்னிசையளபெடை. குறில் நெடிலாக நீண்டுதான் பெரும்பாலும் இவ்வளபெடை வரும். செய்யுளில் தளைகெடாமல் இருந்தாலும், வினையெச்சப் பொருள்படும் பொருட்டு அளபெடுப்பது சொல்லிசை அளபெடை. சொல் விகாரப்பட்டு அளபெடுப்பதும் சொல்லிசையளபெடையே.

பெருஅ : செய்யுளிசை அளபெடை 16
கொடாஅ : " 26
படாஅ : 26
பயந்தாஅங்கு : " 28
விளக்குறூஉம் : இன்னிசை யளபெடை 29
குழீஇ : சொல்லிசை யளபெடை 30
பெறூஉம் : இன்னிசையளபெடை 33
இனிதரூஉம் : சொல்லிசை யளபெடை 33
ஓரீஇ : " 63
தழீஇ : " 73

5. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

பெயரெச்சம் என்பது வினைச்சொல் ஆகும். வினைச்சொல் ஒன்று பெயர் ஒன்றை எதிர்பார்த்து நிற்பது பெயரெச்சமாகும். (பெயரெச்சம் : பெயர் எஞ்சி நிற்பது.) ஈற்றெழுத்து மறைந்து, எதிர்மறைப் பொருளில் வருவது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சமாகும். (ஈறு - கடைசி எழுத்து.)

இலா 16, 18, 89
தள்ளா 18
குன்றா 21
அடங்கா 48
தேறா 52
படரா 54
காணா 72
ஒண்ணா 102
இரவா 126

6. முற்றெச்சம்

வினைச்சொல்லில் ஒரு பிரிவு வினைமுற்று. வினைமுற்றில் பொருள் முடிந்து நிற்கும். அவ்வினைமுற்று, பொருள் முடிவு பெறாமல் மற்றொன்றைக் கொண்டு முடிந்து எச்சப்பொருள்பட நின்றால் அது முற்றெச்சம் ஆகும்.

குடையன் 57
செங்கோலன் 57
குலைந்தனள் 58
நோக்குவான் 64
நோக்கினான் 73
உணர்ந்தான் 73
கேட்டனன் 79
வீழ்ந்தான் 79
விம்மினான் 79
ஒருப்பட்டனர் 96

7. அடுக்குத் தொடர்

பொருள் தரும் இரண்டு சொற்கள் அடுக்கி நிற்பது அடுக்குத் தொடர். அடுக்குத் தொடரைப் பிரித்துப் பார்த்தால் ஒவ்வொரு சொல்லுக்கும் பொருள் இருக்கும். மும்முறையும் சொற்கள் அடுக்கிவருவது உண்டு. எடுத்துக் காட்டாக ஆசியஜோதிப் பகுதியில் 'பொறு பொறு பொறு' என்று மும்முறை அடுக்கி வந்துள்ளது காண்க.

வரிசை வரிசையா 31 — பாச்சி பாச்சி 117 — பூச்சி பூச்சி 117

8. வியங்கோள் வினைமுற்று

க, இய, இயர் என்னும் விகுதிகளைக் கொண்டு, ஏவலைக் கொள்ளும் பொருளில் வருவது வியங்கோள் வினைமுற்று ஆகும். அது வாழ்த்தல், வைதல் முதலிய பொருள்களில் ஐம்பால் மூவிடங்களிலும் வரும். சில சமயங்களில் 'தல்' என்னும் விகுதியும் வியங்கோள் பொருளில் வருதல் உண்டு.

ஈதல், வாழ்தல் 12
தோன்றுக 15
அருள்க 103
இருக்க 104
வாழ்க 119

9. வினைத்தொகை

ஒரு வினைப்பகுதியும், ஒரு பெயர்ச்சொல்லும் இணைந்து நிற்கும் தொடர் வினைத்தொகை ஆகும். வினைப்பகுதி ஈண்டுக் காலங்காட்டாமல் நிற்கும். வினைப்பகுதி பெயரெச்சமாகத்தான் இருக்கும். "காலம் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை" என்பது நன்னூல் சூத்திரம்.

வினைத்தொகையை மூன்று காலமாகவும் விரிக்கலாம். எடுத்துக்காட்டாக, 'நீள்புகழ்' என்பது 'நீண்டபுகழ், நீள்கின்றபுகழ், நீளும் புகழ்' என்று விரியும்.

நீள்புகழ் 14	வார்கண் 49	சுற்றுநீர் 96
கொல்குறும்பு 20	உகுநீர் 2	பெருகுவானம் 97
வருபுனல் 22	செய்கொல்லன் 57	வார்கழல் 104
அகல்வானம் 30	ஆடுகொடி 70	படர்கொடி 111
ஊர்மதியம் 31	குளிர்கங்கை 73	அறுமாலை 119
எறிதிரை 35	புகழ்பெருமை 82	அடுபாத்திரம் 122
அறியடம் 40	செய்தவம் 86	இமிழ்கடல் 131
எழுகுருதி 48	நெருங்குசெல்வம் 90	இறங்குகதிர் 131

10. பண்புத் தொகை

ஒரு பண்புச் சொல்லும், பெயர்ச்சொல்லும் இணைந்துவரும் தொடர் பண்புத்தொகை. இதனை விரித்துப் பார்த்தால், இடையில் ஆகிய என்னும் உருபு விரியும்.

வல்லரண் 22	செஞ்சரம் 66	செந்நெல் 95
புன்சொல் 34	நெடும்படை 68	வெந்தழல் 99
நன்சொல் 34	வெங்கரி 71	இன்னடிசில் 100
வன்சொல் 34	தண்டார் 71	குறும்பயிர் 101
இன்சொல் 34	நெடுந்தோள் 72	முதுநகர் 109
பசுந்துணி 48	நறுங்குஞ்சி 73	வெறுமொழி 117
இணையடி 58	சேவடி 79	பருமணல் 122
பட்டமொழி 58	மதுரப்பதம் 88	ஒண்மலர் 126
ஆருயிர் 66, 69	இன்னமுது 94	நெடுந்துயர் 126

11. உவமத்தொகை

உவமையும் பொருளும் இணைந்து வருங்கால் இடையில் உவம உருபு (போல் முதலியவை) மறைந்து வருவது உவமத்தொகை. "உவம உருபு இலது உவமத் தொகையே" என்பது நன்னூல் சூத்திரம்.

அஞ்சன வண்ணன் 66 மையிருள் 97
உயிர்நாயகன் 66 பதுமமுகம் 133

12. உம்மைத் தொகை

இரண்டு சொற்கள் இணைந்து வருங்கால் இடையில் 'உம்' என்பது மறைந்து வருதல் உம்மைத் தொகை.

தாவரசங்கமம் 63 ஆரமென்பு 88 அருகு நாப்பண் 97

13. அன்மொழித்தொகை

இரண்டு சொற்கள் இணைந்து நின்று, அவ்விரண்டும் அல்லாத வேறொரு சொல்லைக் குறிப்பது அன்மொழித்தொகை ஆகும். (அல்லாத மொழி தொக்கு வருவது அன்மொழித்தொகை.) எடுத்துக்காட்டாக, 'ஒள்ளிழை' என்பது ஒளியையும், அணியையும் குறியாமல், அவ்விரண்டுமல்லாத பெண்ணைக் குறித்தது காண்க. இவ்வாறு குறிக்கப்படும் வேறொரு சொல், ஆங்குள்ள இரண்டு சொற்களுடன் ஏதேனும் தொடர்பு கொண்டிருக்கும்.

வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமத்தொகை, உம்மைத்தொகை ஆகிய ஐந்தின் அடியாக அன்மொழித்தொகை பிறக்கும்.

ஒள்ளிழை .... என : பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த......" 54
தேமொழி உரைத்தது : உவமத்தொகைப் புறத்துப்பிறந்த.... ." 55
மடமொழி வீழ்ந்தனள் : பண்புத்தொகை ,, 58

14. அணிகள்

அணி - அழகு. செய்யுளுக்கு அழகு தருவது அணியாகும். ஈண்டுள்ள அணிகளின் விளக்கத்தை அவ்வப்பக்கங்களிற் காண்க.

"எச்சம் பெறுஅ விடின் வசையென்ப" — தன்மையணி 16
"இசையென்னும் எச்சம்" — உருவகம் 16,124

பொருள்பின் வருநிலை 26
கடைநிலைத்தீவகம் 26
உவமையணி 28
,, 29
வேற்றுமையணி 30
உண்மையுவமை 48
உவமையணி 65
உயர்வு நவிற்சி 73
இல்பொருளுவமை 73
,, 74
உவமையணி 82
முறைநிரல் நிறையணி 93
பிறிதுமொழிதல் 111
இயைபுருவகம் 126
உவமை 126
,, 133
,, 134
சிலேடை 136

வெற்றி வேண்டுமா ?

தேர்வில் சிறப்புற வெற்றி பெற வேண்டும் என்று நீங்கள் யாவரும் நினைத்தல் இயல்பு. ஆண்டு முழுவதும் ஐயமறப்படித்து, ஆசிரியர் கூறிய வற்றை அமைவுறக் கேட்டோர்க்கே வெற்றி கிட்டும் என்பதில் ஐயமில்லை. ஆயின், தேர்வில் நல்ல வகையில் விடையெழுதும் முறையினை உணர்ந் தோர்க்கே பெரு வெற்றி கிடைக்கும். எனவே, எவ்விதத்தில் விடையெழு தினல், விடைத்தாளைத் திருத்துகின்ற ஆசிரியரது உள்ளத்தைக் கவரலாம் என்பதனை நீங்கள் உணர்தல் வேண்டும்.

நினைவிற் கொள்க

1. தெரியாத வினக்கள் வந்து விடுமோ என்று கவலைப்படாதே.

2. தேர்வுக் காய்ச்சல் வரின் 'தேர்வுக் காய்ச்சலா ?' என்னும் தலைப் புள்ள பகுதியைப் படிக்கத் தொடங்கி விடு.

3. அத்தலைப்பில் குறிப்பிடப் பெற்றுள்ள பகுதியை மட்டும் படி.

4. தேர்வுக்கு முதல் நாள் இரவு விரைவில் தூங்காதே ; நெடு நேரமும் விழித்திராதே.

5. எப்பொழுது படுக்க வேண்டும் என்பதனை உன் உடல் அறியும்; உன் நரம்புகள் அறியும். அவை படுத்துக் கொள்ளுமாறு தூண்டும் வரை யில் படி. உன் உள்ளம் சொல்வதைக் கேளாதே.

6. தேர்வு அன்று காலையில் வழக்கத்தினும் சற்று முன்னதாக எழு.

7. விளங்காத பகுதிகளை விடுதது மேலே படி. மனத்திற் பதிய வில்லையே என்று கவலைப்படாதே.

8. தேர்வு தொடங்குதற்கு அரைமணி முன்னதாகவே தேர்வு எழுதும் இடத்தை அடைந்து விடு.

9. பிற மாணவர்களுடன் ஆங்கு உரையாடாதே.

10. பிற மாணவர்கள், 'இதைப் படித்தாயா ? அது தெரியுமா ?' என் றெல்லாம் கேட்பர். அவற்றிற்கு விடை கொடாமல் தனித்துச் செல். 'தேர்வுக் காய்ச்சலா ?' என்னும் தலைப்பில் உள்ள பகுதியை மிக விரைந்து படி. தேர்வு அறையில் வினத்தாள் கொடுக்கப்படும் வரையில் படி.

தேர்வு அறையில் ஒழுகலாறு

1. வினத்தாளை வாங்குவதற்கு முன்னரே உன்னுடைய பதிவெண்ணை யும், வினத்தாளின் பெயரையும் விடைத்தாளில் அவற்றுக்குரிய இடங்களில் குறிப்பிடுக. பதிவெண்ணைத் தெளிவாய் எழுது. பெயரை விடைத்தாளில் எழுதாதே.

2. எழுத்தில் தெளிவு வேண்டும்.

3. விடைகள் சுருக்கமாக இருத்தல் வேண்டும்.

4. தொடக்கத்தில் வினக்கள் முழுவதையும் படிப்பதில் காலம் போக்கு தல் தக்கதன்று. சுருங்கிய காலமே இருப்பதால், விரைந்து விடைகளை எழுதிச் செல்லுதல் வேண்டும்.

5. விடை தெரியாத வினக்களையும், ஐயமுள்ள வினக்களையும் விடுத்து, தெரிந்த வினக்களுக்கு விடைகளை எழுதிச் செல்.

6. தெரிந்த வினக்களுக்கு விடைகளை எழுதியபிறகு, ஐயமுள்ள வினக் களுக்கு விடை எழுதவும். அதன்பின், தெரியாத வினக்களை ஆராய்ந்து பார்க்கவும். அவற்றுக்கு விடைகள் ஓரளவு தெரிந்தால் எழுதுக.

7. விடைக்கென்று வரிகளின் எல்லை குறிப்பிடப்பட்டிருந்தால், அவ் வெல்லையைத் தாண்டாதே.

8. ஒரு வினாவிற்கு விடையெழுதுங்கால், உனக்கு அது பற்றித் தெரிந்த வற்றையெல்லாம் எழுதுதல் வேண்டும் என்று எண்ணுதல் கூடாது. கேட்கப் பட்ட செய்தியையே எழுதுதல் வேண்டும்.

9. ஒரு வினாவிற்கு விடையெழுதுங்கால், அவ்வினாவிற்குரிய மதிப் பெண்ணையும் கருத்தில் இருத்திக் கொள். எடுத்துக்காட்டாக 1 மதிப் பெண்ணே கொண்ட வினாவிற்கு ஒரு பக்க அளவில் விடை யெழுதுதல் கூடாது. அத்தகைய சிறு வினாவிற்கு நெடுநேரம் விடை எழுதுவது தவறு.

10. அதிகமான மதிப்பெண்ணைக் கொண்ட வினாவை நன்கு ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். பிறகு விடை எழுது.

11. வினாவின் எண், கிளை எண், உட்கிளை எண் ஆகியவற்றைத் தெளி வாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

12. விடைகளையெல்லாம் எழுதி முடித்தபிறகு ஒரு முறை படி.

13. விடைகளைப் பார்க்குங்கால், கண்ணிற்படும் பிழைகளைத் திருத்து.

14. தனிச் சேர்க்கைத் தாள்களை (additional sheets) விடைப் புத்தகத் துடன் (answer book) நன்கு இணைத்துக் கட்டு. ஒவ்வொரு தனிச் சேர்க் கைத் தாளிலும், உன் பதிவெண்ணைக் குறிப்பிடு.

15. விடை எழுதிய எல்லாத் தாள்களுக்கும் பக்க எண்களைக் குறிப்பிடு.

16. வினாத்தாளுக்கென்று குறிப்பிடப்பட்ட காலத்திற்கு முன் விடைத் தாளைக் கொடுத்து விடாதே. விடைகளை எழுதியபின் நேரம் இருந்தால், அவற்றைப் படித்துப் பார். தெரியாத வினாக்களுக்குரிய விடைகளை ஆராய்ந்து பார். மேற்பார்வையாளர் விடைத்தாளை வலிதில் வாங்கிக் கொள்ளும் வரையில் கொடுக்காதே.

மாதிரி வினாத்தாள்கள்

குறிப்பு :—இதுவரையில் செய்யுட்பகுதிக்கு உரையும், உரைநடைப் பகுதிக்கு விளக்கமும், அவற்றில் கேட்கக்கூடிய வினாக்களும் விடைகளும், துணைப்பாடநூல்களில் கட்டுரைகளும், மொழிபெயர்ப்புப்பயிற்சிகளும் தரப் பெற்றன. 'தேர்வுக் காய்ச்சலா ?' என்னும் பகுதியைத் தேர்வுக்கு முதல் நாள் இரவு படிக்கலாம். முன்பு தரப்பெற்ற வினாக்களும் விடைகளும் அரசியலார் நடத்தும் பள்ளி இறுதித் தேர்வுக்குப் பெருந்துணை செய்யும்.

தேர்வு அறையில் எவ்வாறு ஒழுகவேண்டும் என்பதும் முன்பு குறிப்பிடப் பெற்றது. தேர்வு அறையில் வினாத்தாளைப் பார்த்தவுடன் சிலர்க்கு ஒரு வேளை தயக்கமும், மயக்கமும் உண்டாகலாம். அவற்றை அகற்றும் பொருட்டு மாதிரி வினாத்தாள்கள் இரண்டிரண்டு ஈண்டுச் சேர்க்கப் பட்டுள்ளன. அவற்றிற் குறிக்கப்பட்டுள்ள கால அளவில், தேர்வில் விடையளிப்பது போல் நினைத்து, விடைகளை நீங்கள் எழுதிப் பார்த் தல் வேண்டும். மார்ச்சுமாதத் தொடக்கத்தில் எழுதிப் பாருங்கள். தேர்வுக்குச் செல்லும் மாணவ நண்பர்கள் ஒன்று கூடி, மாதிரி வினாத்தாள் கட்கு விடை எழுதலாம். ஐயம் நேரினும், விடை தெரியாவிடினும் உடனே நூலைப் பார்க்கவேண்டாம். எழுதி முடித்த பிறகு நீங்களே விருப்பு வெறுப்பு இன்றித் திருத்தி, மதிப் பெண்களைப் போட்டுப் பார்த்து, உங்கள் படிப்பின் தரத்தை உள்ளவாறு உணர்ந்து கொள்ளுங்கள். ஒருவர் எழுதிய விடைத் தாளை மற்றொருவர் திருத்துமாறு செய்வது நல்லதாகும். ஈண்டுள்ள வினாத் தாள்கள் அரசியலார் தேர்வு வினாத்தாள் முறையிலேயே அமைந்துள்ளன.

FIRST LANGUAGE—PART I—PAPER I—TEXT AND GRAMMAR—TAMIL.

மாதிரி வினாத்தாள் I

Time—Two hours and a half.

(Maximum marks : 60.)

[குறிப்பு :—(1) கையெழுத்துத் தெளிவாக இருத்தல் வேண்டும்.
(2) விடைகள் தெளிவாகவும், சுருக்கமாகவும், குறிப்பிட்ட அளவினை விஞ்சாதனவாகவும் இருத்தல் வேண்டும்.
(3) விடைகள் நும் சொற்களிலேயே இருத்தல் வேண்டும்.
(4) II (*a*) வினாவுக்குச் செய்யுளிலேயே விடை எழுதுக.]

Marks.

I. (*a*) கீழ்வரும் குறட்பாக்களின் பொழிப்புரை தருக :— 2

(1) ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு.

(2) பெரும்பொருளால் பெட்டக்கதாகி யருங்கேட்டால்
ஆற்ற விளைவது நாடு.

(*b*) (1) படாஅவாம் பண்புடையார்கண் : எவை? 1

(2) அறிமடமும் சான்றோர்க்கு அணி : இப் பழமொழி எதனை விளக்க வந்தது? புலப்படுத்துக. 1

(*c*) (1) வாயிற் காவலன் கண்ணகியின் தோற்றத்தைப் பற்றி மன்னனிடம் கூறியவை யாவை? 2

(2) குகன் பரதனை எவ்வாறு புகழ்ந்தான்? 3

(*d*) குடிலனது வஞ்ச நெஞ்சினைத் தெளிவாக எழுதுக. (விடை 20 வரிகளில் அமைதல் வேண்டும்.) 6

II. (*a*) "எள்ளறு சிறப்பின்"......என்பது முதல் "கோவலன் மனைவி" என்பது வரையுள்ள சிலப்பதிகார அடிகளை அடி பிறழாது எழுதுக. 6

(*b*) கீழ்க்காணும் உவமைகளுள் ஒன்றன் பொருத்தத்தை விளக்குக. 2

(1) "நற்கலையில் மதியென்ன நகையிழந்த முகத்தான்"

(2) "விருந்தினரும் வறியவரும் நெருங்கி யுண்ண,
மேன்மேலும் முகமலரும் மேலோர்போல"

(*c*) பின்வருவனவற்றுள் இரண்டினுக்கு இடஞ் சுட்டிப் பொருள் விளக்கம் தருக. 3

(1) "புலவரைப் போற்றுது புத்தேள் உலகு"

(2) "வேரித்தாரான் வருநதெதிர் கொண்டனன்"

(3) "யாங்கனம் மொழிகோ ஓங்குவாள் கோதையை"

(*d*) புத்த தேவராகிய குழந்தை ஒரு பூவாக எவ்வாறு உருவகம் செய்யப்பட்டுள்ளது? 2

III. (*a*) கீழ்க்கண்டவற்றிற்கு உறுப்பிலக்கணம் கூறுக :— 4
எனது, தருக, ஆளாமே, கொணர்வான் (என்றுன்)

(*b*) நற்றிறம், சச்சிதானந்தம், சேவடி, பெட்டக்கது : இத் தொடர்களில் உள்ள சொற்களைப் பிரித்தெழுதுக. 2

Marks

(c) கீழ்க் கோடிட்டவற்றிற்கு இலக்கணக் குறிப்பு எழுதுக:— 6

(1) புகமொடு தோன்றுக.

(2) வந்தெதிரே தொழுதானை.

(3) நாழி கொடுப்பவர்க்கு.

(4) முல்லைப் படர்கொடி படரும்.

(5) வாயில் வந்து கோயில் காட்ட.

(6) விளக்குறூஉம் திங்கள் போல்.

IV. (a) "ஆண்டவன் எந்நேரமும் என்னைச் சோதித்த வண்ணமாய் இருக்கிறான்": இவ்வாறு திரு. வி. க. அவர்கள் எழுதியிருக்கக் காரணம் என்ன? 2

(b) (1) வல்லூராத் தேவராசப் பிள்ளைக்கு மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் முடித்துக் கொடுத்த நூல்கள் யாவை? 1

(2) மனத்திலுள்ளதை உண்மை நண்பனிடம் கூறுவதால் உண்டாகும் இரண்டு நன்மைகள் யாவை? 2

(c) (1) வரிப்பாடல் என்றால் என்ன? 2

(2) மழை வரும் என்பதனை அறிவிக்கும் குறிகள் யாவை? 2

(d) முத்துக் குளிக்கும் தொழிலைப் பற்றி மார்க்கோ போலோ குறிப்பிட்டுள்ளவை யாவை? சுருக்கி வரைக? 3

(e) மக்னீஷியத்தினால் உண்டாகும் நன்மைகளில் இரண்டைக் கூறுக? 2

(f) காவிரிப்பூம் பட்டினத்தின் மக்கள் வாழ்க்கையைத் தெளிவாக வரைக. (விடை இருபது வரிகளில் அமைதல் வேண்டும். 6

மாதிரி வினாத்தாள் II — (முதல் தாள்)

I. (a) கீழ்வரும் குறட்பாக்களின் பொழிப்புரை தருக:— 6

(1) வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம்.

(2) நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரும் நாடு.

(b) (1) குடிப் பிறந்தாருடைய தன்மை யாது? 1

(2) "நிறைகுடம் நீர்தளும்பல் இல்"—இஃது எதனை விளக்கவந்தது? 1

(c) (1) நாட்டிற்கு அணியாவன யாவை? 2

(2) கம்பரது தமிழ்நாட்டுப் பற்றினை விளக்க வரைக. 2

(d) கண்ணகி வழக்குரைத்த திறத்தினைத் தெளிவாக வரைக. 6
(விடை 20 வரிகளில் அமைதல் வேண்டும்.)

Marks

II. (a) (1) "கங்கையிரு" என்று தொடங்கும் இராமாயணப் பாடலை அடிபிறழாது எழுதுக. 3

(2) "நாடன் என்கோ" என்று தொடங்கும் புறநானூற்றுப் பாடலை அடிபிறழாது எழுதுக. 3

(b) கீழ்க்காணும் உவமைகளுள் ஒன்றன் பொருத்தத்தை விளக்குக :— 2

"பாசப் பழிமுதல் பறிப்பார் போல"

"பாச்சி பாச்சி என்றழும் பாலர்க்குப்
பூச்சி பூச்சி என்பது போலாம்"

(c) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினுக்கு இடஞ் சுட்டிப் பொருள் விளக்கம் எழுதுக. 3

(1) "வாயில் வந்து கோயில் காட்ட"

(2) "எம்பெருமான் பின்பிறந்தார் இழைப்பரோ பிழைப்பு"

(3) "இம்மா மகனை ஈன்றவர் போல
மாதவஞ் செய்தோர் மாநிலத்துண்டோ?"

(d) 'சிந்து' என்னும் உறுப்பின் இலக்கணம் யாது? அவ்வுறுப்பினைக் கலம்பகத்தின் ஆசிரியர் எவ்வாறு அமைத்துப் பாடியுள்ளார்? 2

III. (a) கீழ்க்கண்டவற்றிற்கு உறுப்பிலக்கணம் எழுதுக :— 2

எச்சம், காமின்கள், மயங்குவோர், மாண்டான் (இறந்தான்)

(b) தங்கோவார், பொற்றேழில், கிட்டியதமரென, எண்டோளினர் இத்தொடர்களில் உள்ள சொற்களைப் பிரித்தெழுதுக. 2

(c) கீழ்க்கோடிட்டவற்றிற்கு இலக்கணக் குறிப்பு எழுதுக. 5

(1) <u>நீள்புகழ்</u> ஆற்றின்.

(2) நற்றிறம் <u>படரா</u>க் கொற்கை வேந்தே.

(3) தோழமை <u>தந்தான்</u> மேல்.

(4) எச்சம் பெறூஅ விடின்.

(5) கோப்பெருந்தேவி <u>குலைந்தனள்</u> நடுங்கி

(6) இமக்குலக் கோடி பாகர்.

IV. (a) 'சூத சங்கிதை': சிறு குறிப்பு வரைக. 2

(b) நட்பைக் கெடுத்தற்கான காரணங்களுள் நான்கைக் குறிப்பிடுக. 2

(c) நாடகத்தில் அனுபவிக்கக் கூடிய இரண்டு செய்திகள் யாவை? 2

(d) பள்ளர், பள்ளியரின் வாழ்க்கையைச் சுருக்கி வரைக. (விடை இருபது வரிகளில் அமைதல் வேண்டும்.) 6

e) மாபர், ஜைலன், பெதெலா : ஒவ்வொன்றைப் பற்றியும் ஒவ்வொரு வரி வரைக? 3

(f) கடல் நீரில் கலந்துள்ள பொருள்கள் யாவை? 2

(g) (1) மதுரையில் பகற்கடைக்கு அமைந்திருந்த பெயர் யாது? 1

(2) புலவர் வறுமைக்குரிய மூன்று காரணங்கள் யாவை? 2

FIRST LANGUAGE—PART I—PAPER II—NON-DETAILED TEXTS AND TRANSLATION—TAMIL

மாதிரி வினாத்தாள் I

Time—Two hours.

(Maximum marks : 40.)

Marks

I. கீழ்வரும் இரு பிரிவுகளில் அமைந்த பொருள்களில் ஏதேனும் ஒன்றைப்பற்றி இரண்டு பக்கத்திற்கு மிகாமல் ஒரு கட்டுரை வரைக:— 15

முதற் பிரிவு.

(இமய வெற்றி)

1. தென்சிங்கின் நற்பண்புகள்.
2. இறுதி வெற்றியும், எவரெஸ்டின் காட்சிகளும்.
3. இமய வெற்றிக்கு விஞ்ஞானத்தின் துணை.

அல்லது

இரண்டாம் பிரிவு.

(ஏழை பங்காளன்)

1. ஜேவர்டின் கடமையுணர்ச்சி.
2. ஸ்ரீமான் மாடலின் தன் உண்மை உருவை வெளிப்படுத்தியமை.
3. ஜான்வல் ஜானின் நற்பண்புகள்.

II. பின்வரும் இரு பிரிவுகளில் அமைந்த பொருள்களில் ஏதேனும் ஒன்றைப்பற்றி இரண்டு பக்கத்திற்கு மிகாமல் ஒரு கட்டுரை வரைக. 15

முதற் பிரிவு.

(சங்ககாலப் பாண்டியர்)

1. பாண்டிய நாட்டுத் தலைநகரங்கள்.
2. பாண்டியன் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன்.
3. சங்ககாலப் பாண்டியருடைய அரசியல் நெறி.

அல்லது

இரண்டாம் பிரிவு.

(உழைப்பால் உயர்ந்த ஒருவர்)

1. புக்கர் வாஷிங்குடனுடைய நற்பண்புகள்.
2. புக்கர் வாஷிங்குடனுடைய சொல் வன்மை.
3. புக்கர் வாஷிங்குடன் செய்த தொண்டுகள்.

III. தமிழில் மொழி பெயர்க்க :— (110-ஆம் பக்கத்தில் 9-ஆம் பயிற்சிக்கு மொழிபெயர்ப்பு வரைக.)

மாதிரி வினாத்தாள் II.—(இரண்டாந்தாள்)

Marks.

I. கீழ்வரும் இரு பிரிவுகளில் அமைந்த பொருள்களில் ஏதேனும் ஒன்றைப்பற்றி இரண்டு பக்கத்திற்கு மிகாமல் ஒரு கட்டுரை வரைக:— 15

முதற் பிரிவு.

(இமய வெற்றி)

1. இமய மலையில் ஆராய்ச்சிப் படையெடுப்புக்கள்.
2. பதினோராம் பிரிட்டிஷ் குழுவினரின் தகுதிகள்.
3. தென்சிங்குக்குக் கிடைத்த உலகப் பாராட்டுக்களும், சிறப்புக்களும்.

அல்லது

இரண்டாம் பிரிவு.

(ஏழை பங்காளன்)

1. மாதாகோவில் திருட்டும், மிரியல் சாமியாரின் உபதேசங்களும்.
2. மேயராக வாழ்ந்த ஜான்வல் ஜானின் அருட்பண்பு.
3. தெனடியரிடம் ஜான் அகப்பட்டமையும், தப்பிச் சென்றமையும்.

II. பின்வரும் இரு பிரிவுகளில் அமைந்த பொருள்களில் ஏதேனும் ஒன்றைப்பற்றி இரண்டு பக்கத்திற்கு மிகாமல் ஒரு கட்டுரை வரைக:— 15

முதற் பிரிவு.

(சங்ககாலப் பாண்டியர்)

1. பாண்டியர்களுடைய நாடும், குடியும்.
2. பாண்டியன் அறிவுடை நம்பி.
3. பாண்டியன் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன்.

அல்லது

இரண்டாம் பிரிவு.

(உழைப்பால் உயர்ந்த ஒருவர்)

1. புக்கர் வாஷிங்குடன் இளமையில் அடைந்த இன்னல்கள்.
2. பட்டம் பெற்ற புக்கர் வாஷிங்குடன்.
3. டஸ்கிகி கல்விச் சாலையின் வளர்ச்சி.

III. தமிழில் மொழி பெயர்க்க:— (பின்பகுதியின் 111-ஆம் பக்கத்தில் 10-ஆம் பயிற்சிக்கு மொழிபெயர்ப்பு எழுதுக.) 10

———

ஸ்ரீ ராஜா பவர் பிரஸ், ராயப்பேட்டை ஐரோட், மதராஸ் 1.

பள்ளியிறுதித் தேர்வு (எஸ். எஸ். எல். ஸி.) 1956

லிப்கோ

தமிழ் உரை விளக்கமும் வினுவிடையும்

சிறப்புப் பகுதி (பகுதி II)

மாணவர்களுடன் நெடுங்காலத் தொடர்பு கொண்ட

மூவர்

தமிழாசிரியர்களால் இயற்றப்பெற்றது :

வித்துவான் வே. ஐயா நாயக்கர்,
தலைமைத் தமிழாசிரியர்,
போர்டு உயர்நிலைப்பள்ளி, ஆரணி,

வித்துவான் V. P. குழந்தைவேற் சோழகர்,
தமிழாசிரியர், அர்ச். சூசையப்பர் உயர்நிலைப்பள்ளி,
தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி,

முத்தமிழ்க்கவி வித்துவான் கே. ஆர். அரசப்பன்,
தலைமைத் தமிழ்ப் பண்டிதர், நகராண்மை உயர்நிலைப்பள்ளி,
இராமநாதபுரம், கோவை.

பதிப்பகத்தார் ;

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி

தியாகராயநகர் :: சென்னை-17

சென்னையில் லிப்கோ ஏஜெண்டுகள் :

எம். தாமோதரம் & கம்பெனி,
அப்பா பில்டிங்ஸ், 9/286, எஸ்பிளனேட், சென்னை-1.

 1955 [விலை ரூ. 1-4-0

S. S. L. C. 1956

THE LIFCO GOLDEN GUIDE TO

THE TAMIL TEXTS : PART II

BY

THREE EXPERIENCED PANDITS :

V. A. NAICKER, V. P. K. SHOLAGAR &
K. R. ARASAPPAN

PUBLISHERS :

THE LITTLE FLOWER CO.,
["BETTER BOOKS FOR A BRIGHTER FUTURE"]
"BHURANGAM BLDGS.", 8, RANGANATHAN RD.,
THYAGARAYANAGAR, MADRAS-17.

SOLE AGENTS IN THE CITY :

Messrs. M. DAMODARAM & CO.,
Appah Buildings,
9/286, ESPLANADE, G. T., MADRAS-1.

பொருளடக்கம்

முன்னுரை

தமிழ்த் தாயின் தண்ணருளால் இந்த லிப்கோ உரை நூல் வெளி வருகின்றது. இதனை ஒரு முறை விரைந்து புரட்டிப் பாருங்கள். அவ்வாறு பார்த்தால், மாணவர்கட்கு வேண்டிய பதவுரை, கருத்துரை, விளக்கவுரை, வினு விடைகள்; உரைநடை விளக்கம், வினு விடைகள்; இலக்கணப் பகுதி; செய்யுள் நலம் பாராட்டுப் பகுதி; பொதுக் கட்டுரைப் பகுதி; மாதிரி வினுத்தாள்கள் முதலியன இந்நூலின்கண் இடம் பெற்றுள்ளன என்பதனை நீங்கள் உணரலாம்.

ஈண்டுச் சேர்க்கப்பெற்றுள்ள நல்லொழுக்கப் பயிற்சிகள் மாணவர்கள் உண்மையிலேயே நல்ல ஒழுக்கங்களைப் பெறுமாறு செய்யும். பாடத் திட்டத்தின் ஒரு பகுதியும், அதைப் பற்றிய விளக்கமும், மதிப்பெண்கள் பகுத்து அளிக்கப்படும் முறையும் தனியே ஈண்டுத் தரப்பெற்றுள்ளன. இந்நூலின் இறுதியில் அமைந்துள்ள மாதிரி வினுத்தாள்கள் உண்மையிலேயே மாதிரி வினுத்தாள்களாக இருக்கும் என்பது திண்ணம். அவை மாணவர்கட்கு எழும் எல்லா வகையான ஐயங்களையும் அகற்றும் என்பது எம் உட்கிடை. அரசியலார் வெளியிட்டுள்ள புதிய இலக்கணப் பாடத் திட்டத்தைப் பின்பற்றி, இலக்கணப் பகுதி ஈண்டுத் தரப்பெற்றுள்ளது. பாடப் பகுதியில் வந்துள்ள செய்யுள் அடிகள் சில அலகூட்டி, தளைகள் காட்டி அமைக்கப்பட்டுள்ளன. செய்யுள் நலம் பாராட்டும் பகுதி மாணவர்க்குச் சிறந்த வழிகாட்டியாக இருக்கும் என்பது எங்கள் நினைவு. அன்பர்கள் அனைவரும் ஆதரவு அளித்தருள்க.

—ஆசிரியர்கள்.

மெட்ரிக்குலேஷன் தேர்வு

சென்னை, ஆந்திரா ஆகிய பல்கலைக் கழகத்தார் நடத்தும் மெட்ரிக்குலேஷன் தேர்வுக்கு (March 1956) பொது, சிறப்பு ஆகிய இரு பகுதிகளும் பாடங்களாக உள. எனவே, மாணவர்கள் இரு பகுதிகளையும் சேர்த்துப் படிக்க வேண்டும். இவர்கட்குத் துணைப் பாடங்கள் வேறு.

லிப்கோ

தமிழ் உரை விளக்கமும் வினு விடையும்

சிறப்புப் பகுதி

செய்யுட் பகுதி

I. பழஞ் செய்யுள்

புறநானூறு

இஃது ஒரு தொகை நூல் :

உள்ளத்தைத் தொடுங் காட்சிகளைக் கண்டபொழுதெல்லாம் சங்க காலத்துப் புலவர்கள் அவற்றை அமைத்துப் பாடல்களைப் பாடினர். காலையிற் கதிரவன் கடலிடத்தே கவின்பெறத் தோன்றுங் காட்சி, மாலையில் செக்கர் வானக் காட்சி, மக்கள் மனத்திலே மகிழ்ச்சியூட்டி மதியம் தோன்றித் தண்ணிலவு பொழியுங் காட்சி, மலையினின்று அருவி வீழுங் காட்சி, பன்னிற மலர்கள் பூத்திருக்குங் காட்சி, பச்சைக் கம்பளம் விரித்தாற்போல் பசும் புற்கள் வளர்ந்துள்ள காட்சி முதலியவைகளைக் கண்டபொழுதெல்லாம் புலவர்கள் பாடலைப் பாடினர். அரசர்களிடத்தே அவ்வப்பொழுது காணப் படும் வீரத்தன்மை, கொடைப்பண்பு, அருட்பண்பு முதலியவைகளையும், அவர்களது சீரிய செங்கோல் ஆட்சியையும், வள்ளல்களுடைய வளம்பெற்ற கொடை மாண்பையும், மக்கள் வாழ்க்கையிலே நிகழும் காதல் நிகழ்ச்சிகளை யும், இல்லற முறைகளையும் புலவர்கள் சிறப்பித்துக் கவிகளை இயற்றினர். இவ்வாறு புலவர்கள் பலர் வாய்ப்புக் கிடைத்த பொழுதெல்லாம் பாடல்கள் பலவற்றைப் பாடினர். அத்தகைய பாடல்கள் பிறகு தொகுக்கப்பெற்றன. புலவர்கள் பலரால் பாடப்பெற்று, பின்பு, ஒருவரால் தொகுக்கப்பட்ட நூல் தொகை நூல் ஆகும்.

சங்ககாலத்துத் தொகை நூல்கள் எட்டு ஆவன. அவை நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பனவாம். அவற்றை,

“ நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூ(று)
ஒத்த பதிற்றுப்பத்(து) ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தோர் ஏத்துங் கலியோ(டு) அகம்புறமென்(று)
இத்திறத்த எட்டுத் தொகை.”

என்னும் வெண்பாவால் உணரலாம்.

புறநானூறு—பெயர்க் காரணமும், இலக்கணமும் :

சங்க காலத்துப் புலவர்கள் பாடிய பாடல்கள் பொருள், அளவு, தன்மை, பாட்டு முதலியவைபற்றித் தொகுக்கப்பெற்றன. அவற்றுள் புறப்பொருள்பற்றியும், நானூறு என்னும் அளவுபற்றியும் தொகுக்கப்பட்ட நூல் புறநானூறு ஆகும். 'புறநானூறு' என்னுஞ் சொற்றொடர் 'புறப்பொருள்பற்றிய நானூறு செய்யுட்களைக்கொண்ட நூல்' என்று விரிதலால் இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை ஆகும்.

'புறப்பொருள்' என்பதன் விளக்கம் :

தமிழிலக்கணம் ஐவகைப்படும். அவை எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பன. அவற்றுள் பொருள் இலக்கணம் அகப்பொருள், புறப்பொருள் என இருவகைப்படும். மனம் ஒருமித்த தலைவனும் தலைவியும் நுகரும் இன்பம் இத்தகையதென்று பிறர்க்குச் சொல்லக்கூடாததாய், மனத்து உணர்விலேயே நுகரப்படும் அல்லவா? இவ்வாறு அகத்தில் (மனத்தில்) நிகழும் ஒழுக்கம் அகப்பொருள் ஆகும். அவ்வாறின்றி, எல்லோராலும் நுகர்ந்து உணரப்பட்டு, பிறர்க்கும் கூறப்படும் பொருள் புறப்பொருள் ஆகும். அறம், பொருள் ஆகியவைபற்றிப் புறத்தே நிகழும் ஒழுக்கமே புறப்பொருள்.

நூலின் காலம் :

கடைச்சங்க காலத்துப் புலவர்கள் பலர் பாடிய பாடல்கள் இந்நூலின்கண் இடம் பெற்றுள்ளன. எனவே, இதன் காலம் கடைச்சங்க காலம் என்னலாம், அஃதாவது கி. பி. முதல், இரண்டாம் நூற்றாண்டுகள்.

நூலினுல் அறியப்படும் செய்திகள் :

இற்றைக்குச் சற்றேறக்குறைய ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன்னர் நம் தமிழ் நாட்டை ஆண்ட முடி மன்னர் மூவர், சிற்றரசர்கள், குறுநில மன்னர்கள், வேளிர் முதலியோர்களுடைய வரலாறுகளும், அவர்களுடைய ஆட்சி முறைகளும் இந்நூலிலிருந்து நன்கு வெளிப்படுகின்றன. மேலும், கடைச் சங்க காலத்துப் புலவர்களுடைய வாழ்க்கை வரலாறுகளும், புலவர்களுடைய நற்பண்புகளும், புலவர்களை ஆதரித்த வள்ளல்களின் வரலாறுகளும், தமிழ் மக்களின் நடையுடைகளும், பழக்க வழக்கங்களும் இந்நூலிலிருந்து அறியக் கிடக்கின்றன. அன்றியும், இந்நூலால் பண்டைக்காலத்து அணிகலன்கள், படைகள், உடைகள், உணவுகள், ஊர்திகள், தானியங்கள், பழங்கள், விலங்குகள், பறவைகள், தாவரங்கள், இன்னிசைக் கருவிகள் முதலியவற்றை நாம் அறியலாம். பொதுவாகக் கூறுமிடத்துக் கடைச்சங்க காலத்துத் தமிழ் மக்களின் வரலாற்றுக் களஞ்சியமாகப் புறநானூறு விளங்குகின்றது என்று கூறுவது பொருந்தும்.

பாடமாக வந்துள்ள பாடல்கள் : புறநானூற்றில் 4, 124, 140 ஆகிய எண்களைக் கொண்டுளள பாடல்கள் மூன்றும் ஈண்டுப் பாடமாக வந்துள்ளன. "எருமையன்ன" என்று தொடங்கும் பாடலைப் பாடியவர் நரிவெரூஉத் தலையார். அவரால் ஈண்டுப் பாடப் பெற்றவன் சேரமான் கருவூர் ஏறிய ஒள்வாள் கோப்பெருஞ் சேரல் இரும்பொறை ஆவான்.

"நாளன்று" என்று தொடங்கும் பாடலைப் பாடியவர் கபிலர். அவரால் ஈண்டுப் பாடப்பெற்றவன் மலையமான் திருமுடிக்காரி ஆவான்.

"தடவுநிலே" என்று தொடங்கும் பாடலைப் பாடியவர் **ஔவையார்.** அவரால் ஈண்டுப் பாடப் பெற்றவன் **நாஞ்சில் வள்ளுவன்** ஆவான்.

புலவர் நரிவெரூஉத் தலையார் : எக்காரணத்தாலோ இப்புலவர் தம் உடல் வேறுபட்டிருந்தார். நரியையும் நடுங்கச் செய்யும் தலையை இவர் உடையவராக இருந்தார் போலும்! இவரது பெயர் அத்தகைய பொருள் கொள்ளுமாறு அமைந்துள்ளது. சேரமான் கருவூர் ஏறிய ஒள்வாள் கோப் பெருஞ்சேரல் இரும்பொறை என்னும் சேர மன்னனைக் கண்ட அளவில் இப் புலவரது உடல் வேறுபாடு நீங்கி நல்லுடல் பெற்றார் என்று சொல்லப்படு கிறது. தாம் பாடிய பாடலில் இவர் சேரமன்னனது தோற்றப் பொலிவை வியந்து பாடியுள்ளார். இவர் பாடிய பாடல்கள் குறுந்தொகையிலும், திரு வள்ளுவமாலையிலும் இடம் பெற்றுள்ளன.

சேரமான் கருவூர் ஏறிய ஒள்வாள் கோப்பெருஞ் சேரல் இரும் பொறை : இவனைப் பாடிய புலவர் நரிவெரூஉத் தலையாரே ஆவார். இவ னைக் கண்ட அளவில் அப்புலவர் தமது பழைய நல்லுருவம் பெற்றார். சேரர் மரபைச் சேர்ந்தவனாதலாலும், 'இரும்பொறை' என்னும் குடியிற் பிறந்தவனாதலாலும் இவன் பெயருடன் அவை இணைக்கப் பெற்றுள்ளன. 'கோப்பெருஞ்சேரல்' என்பது இம்மன்னனின் இயற் பெயராகும். இவன் கருவூர் என்னும் நகரில் அரியணை ஏறினானாதலால் 'கருவூர் ஏறிய' என்றும், ஒளி பொருந்திய வாளையுடையவனாதலால் 'ஒள்வாள்' என்றும் அடை மொழிகளைப் பெற்றான். இவன் நல்ல தோற்றப் பொலிவு அமைந்தவன் என்று தெரிகிறது.

புலவர் கபிலர் : கடையெழு வள்ளல்களுள் ஒருவனாகிய பாரியின் உயிர் நண்பர் கபிலர். அவன் இறந்த பின்னர், அவனுடைய மகளிரை மணஞ்செய்து தருதலை இவர் தம் தலைக்கடமையாகக் கொண்டார். இவர் பாண்டி நாட்டில் உள்ள திருவாதவூரில், அந்தணர் குலத்தில் பிறந்தவர். பத்துப்பாட்டில் ஒன்றாகிய குறிஞ்சிப்பாட்டை இயற்றியவர் இவர். இப்புலவர் பெருந்தகையார் பாடிய பாடல்கள் சங்க நூல்களிலெல்லாம் இடம் பெற் றுள்ளன.

மலையமான் திருமுடிக்காரி : மலாடு என்று வழங்கப்படும் மலைய மான் நாட்டை ஆண்டவன் காரி. இவனது தலைநகரம் திருக்கோவலூர். முடிமன்னர்கட்கு இவன் பலமுறை உதவிபுரிந்துள்ளான். இவன் கடை யெழு வள்ளல்களுள் ஒருவன். இவனுக்கு உரியது முள்ளூர்மலை. இவனது குதிரை காரியென்றே பெயர் பெற்றிருந்தது. ஓரி யென்னும் வள்ளலுடன் இவன் போர் புரிந்தவன். கபிலர், மாறோக்கத்து நப்பசலையார் என்னும் புலவர்கள் இவனைப் பாடியுள்ளனர்.

ஔவையார் : இப்பெயருடைய பெண்பாற் புலவர்கள் இருவர் அல் லது மூவர் வாழ்ந்திருத்தல் கூடும். நல்லிசைப் புலமை மெல்லியலாராய் கடைச்சங்க காலத்தில் வாழ்ந்த ஔவையாரே ஈண்டுச் சுட்டப்படுபவர். அதியமான் நெடுமானஞ்சி என்னும் வள்ளல் இவருக்கு அமிழ்தின் தன்மை யைக் கொண்ட நெல்லிக்கனியை அளித்தான். அவன் பொருட்டு இவர் தொண்டைமான் என்னும் மன்னனிடம் தூது சென்று, பெரும்போர் ஒன்று நடைபெறுதலைத் தடுத்தார். தூதுரைக்குந் திறன் இவரிடம் நன்கு அமைந்தி ருந்தது. இவர் பாடிய பாடல்கள் சங்க நூல்கள் பலவற்றில் இடம் பெற்றுள் ளன. நாஞ்சில் வள்ளுவன், அதியமான் நெடுமானஞ்சி, பொகுட்டெழினி,

தொண்டைமான், சேரமான் மாரிவெண்கோ, பாண்டியன் கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி, சோழன் இராச சூயம் வேட்ட பெருநற்கிள்ளி ஆகியவர்களை இவர் பாடியுள்ளார்.

நாஞ்சில் வள்ளுவன் : நாஞ்சில் என்னும் மலைக்கு உரியவன் இவன். சேரனுக்குப் படைத் துணையாக நின்ற இவன் வள்ளலாகவும் விளங்கினன். ஔவையார், மருதன் இளநாகனார் முதலிய புலவர்கள் இவனைப் பாடியுள்ளனர்.

1

[சேரமான் கருவூர் ஏறிய ஒள்வாள் கோப்பெருஞ்சேரல் இரும்பொறையைக் கண்ட அளவில் நரிவெரூஉத்தலையார் தம் உடல் வேறுபாடு நீங்கப் பெற்றார்; நல்லுடல் அடைந்தார்; அவ்வளவில் அவனைப் பார்த்து, 'கானக நாட! யான் கூறுவதைக் கேள். அருளும், அன்பும் கொள்ளாமல் வாழ்வார் சிலர் உளர். அவர்களை நீ பொருந்தாதே. குழந்தையைப் பாதுகாப்பதுபோல் உனது நாட்டைக் காப்பாயாக. அது பெறுதற்கு அரியது' என்று கூறினார்.]

திணை : பாடாண் திணை.

துறை : செவியறிவுறூஉ.
பொருள்மொழிக் காஞ்சியும் ஆம்.

பாடாண் திணை : ஒருவனுடைய புகழ், வலி, கொடை, அருள் ஆகியவற்றைத் தெரிந்து சொல்லுதல்.

செவியறிவுறூஉ : இஃதொரு புறப்பொருள் துறை. அரசன் செய்ய வேண்டிய உலகு காவல் முறையை அவனிடம் சொல்லி, அவன் செவியிற் புகுத்தி அறிவித்தல்; பெரியோர்கள் பெரிய எண்ணத்தை அரசனுக்குச் சொல்லுதல். தொல்காப்பியர்,

> "செவியுறை தானே..............................
> பொங்குதல் இன்றிப் புரையோர் நாப்பண்
> அவிதல் கடன்எனச் செவியுறுத் தற்றே"

என்று இத்துறைக்கு இலக்கணம் கூறியுள்ளார். 'சினம் இன்றி, பெரியோர் நடுவில் பணிவுடன் நடத்தல் கடமையென்று செவியிற் புகுத்தி அறிவித்தலே செவியறிவுறூஉ' என்பது அச்சூத்திரத்தின் பொருளாகும்.

பொருள்மொழிக் காஞ்சி : இதுவும் ஒரு புறப்பொருள் துறையாகும். பெரியோர் தாம் தெளிந்த பொருளைப் பிறர்க்குக் கூறுதல் என்பது இத்துறையின் இலக்கணம். இனி, உயிர்க்கு இம்மையிலும் மறுமையிலும் உறுதி தருகின்ற பொருளைப் பெரியார் ஒருவர் ஒருவனுக்குக் கூறுவது என்றும் இத்துறைக்கு இலக்கணம் கூறப்படும். 'காஞ்சி' என்னும் சொல் 'நிலையாமை' என்னும் பொருளில் சங்ககாலத்தே வழங்கப்பட்டு வந்தது.

கானக நாட! குழந்தையைப்போல் நாட்டை ஓம்புக

எருமை அன்ன - எருமை போலும்
கருங்கல் - கரிய கல் பொருந்திய
இடைதோறு - இடந்தோறும்
ஆனில் - பசுக்கூட்டம் போல
பரக்கும் - பரந்து சென்று மேய்கின்ற
யானைய - யானையை உடையவாய்,
முன்பின் - வலிமையை உடைய
கான் அக - காட்டிற்குள்ளாகிய
நாடனை நீ - நாட்டினை உடையாய் நீ
பெரும - தலைவ!
நீ ஆகலின் - நீ (இவ்வாறு பகைவர் நெருங்க முடியாத, இயல்பாகிய பெருஞ்செல்வத்தை உடையவன்) ஆதலால்
நின் - உனக்கு

ஒன்று - ஒரு காரியம்
மொழிவல் - சொல்வேன்
(அதனைக் கேட்பாயாக)
அருளும் - அருளையும்
அன்பும் - அன்பையும்
நீக்கி ——,
நீங்கா - (பாவம் செய்தாரை) நீங்காத
நிரயம் - நரகத்தை
கொள்பவரொடு - கொள்பவரோடு
ஒன்றாது - பொருந்தாமல்,
காவல் - நீ காத்தற்குரிய தேயத்தை
குழவி கொள்பவரின் - குழந்தையை வளர்ப்பாரைப் போல
ஓம்புமதி - பாதுகாப்பாயாக.
அளிது அது - அக்காவல் அளிக்கத் தக்கது. (அருளை உடையது.)
பெறல் அருங்குரைத்து - (அது) பெறுதற்கு அரியது.

கருத்துரை: சேரமான் கருவூர் ஏறிய ஒள்வாள் கோப்பெருஞ்சேரல் இரும்பொறையை நரிவெரூஉத்தலையார் பார்த்து, 'காட்டிற்குள்ளாகிய நாட்டினை உடையாய் நீ. பெரும! அருளும் அன்பும் நீங்கி ஒழுகுபவரைப் பொருந்தாதே. நீ காவல் செய்ய வேண்டிய தேயத்தை, குழந்தையை வளர்ப்பாரைப் போல நீ காப்பாயாக. அதுவே அருட்செயல். அது பெறுதற்கு அரியது.' என்றார்.

விளக்கவுரை: இடைதோறு - இடந்தோறும். ஆன் - பசு. பரக்கும் - பரந்து சென்று மேயும். மூன்பு - வலிமை. கான் அக நாடு - காட்டின் அகத்ததாகிய நாடு. நின் - உனக்கு. மொழிவல் - சொல்வேன். நிரயம் - நரகம். ஒன்றாது - பொருந்தாமல். காவல் - காக்கப்படும் தேயம். குழவி - குழந்தை. கொள்பவரின் - வளர்ப்பாரைப் போல. ஓம்புமதி - பாதுகாப்பாயாக. அளிது - அருள் உடையது, இரங்கத்தக்கது. அருங்குரைத்து - அருமைத்து. **எருமையன்ன கருங்கல் இடைதோறு ஆனிற் பரக்கும் யானைய:** கருங்கற்பாறைகட்கு இடையே யானைக் கூட்டம் கலந்து நிற்கின்றது. அக்காட்சி, பல எருமைகட்கு இடையே நின்று மேயும் பசுக்கூட்டம் போல் தோற்றம் அளிக்கின்றது. கருங்கற்பாறைகட்கு எருமைகளும், யானைக் கூட்டத்திற்குப் பசுக்கூட்டமும் உவமைகள். 'எருமை போலும் வடிவையுடைய கரிய கல் பொருந்திய இடந்தோறும், பசுக்கூட்டம் போலப் பரந்து சென்று மேயும் யானையை உடையவாய்' என்பது இவ்வடிகளின் பொழிப்புரையாகும். **கானக நாடனை நீயோ:** காட்டின் அகத்ததாகிய நாட்டினை உடையவன் நீ. ஈண்டு 'ஓ' என்பது அசையாகும். இவ்வடிக்கு மற்றொரு பொருள்: 'காட்டின் அகத்ததாகிய நாட்டினை உடையவன் நீதானோ?' என்றும் இவ்வடிக்குப் பொருள் கொள்ளலாம். அவ்வாறு பொருள் கொள்ளின், ஓகாரம் வினப் பொருள் கொள்ளும். 'நீ கானக நாடனையோ' என்று இயைக்க வேண்டும். "சேரமான் கோப்பெருஞ் சேரல் இரும்பொறையைக் கண்டால் நல்லுடம்பு பெறலாம் என்று சான்றோர்கள் நரிவெரூஉத்தலையார்க்குக் கூறினர். அதுகேட்ட அப்புலவர் இரும்பொறையைக் கண்டார். கண்ட அளவில் அவரது மெய் வேறுபாடு நீங்கியது. அவர் தமது பழைய நல்லுருவைப் பெற்றார். அவ்வாறு பெற்ற வியப்பினால் அவர், 'சான்றோர் எனக்குக் குறிப்பிட்டுக் கூறிய கானக நாடன் நீதானோ' என்றார்" என்னும் வரலாற்றுக்கு இயையுமாறு இவ்விரண்டாம் பொருள் கூறப் பெற்றுள்ளது. **அருளும் அன்பும்:** அருள் - 'ஒன்றினது துயரைக் கண்டால் காரணம் இன்றித் தோன்றும் இரக்கமே அருள்' என்பர் நச்சினார்க்கினியர். 'தொடர்பு பற்றாது இயல்பாக எல்லா உயிர்கள் மேலும் செல்வதாகிய கருணையே அருள்' என்பர் பரிமேலழகர். அன்பு - 'தன்னால் புரக்கப்படுவார் மேல் உளதாகிய காதலே அன்பு' என்பர் நச்சினார்க்கினியர்

'வாழ்க்கைத் துணையும், புதல்வரும் முதலிய தொடர்புடையவர்களிடம் காதல் உடையனதலே அன்புடைமை' என்பர் பரிமேலழகர். சுருங்கக் கூறின், தொடர்பு பற்றி உண்டாவது அன்பு என்றும், தொடர்பு பற்ருது உண்டாவது அருள் என்றும் கொள்ளலாம். அன்பினைத் தாயாகவும், அருளைக் குழந்தையாகவும் உருவகப்படுத்துவர் வள்ளுவர். அன்பின் முதிர்ச்சியே அருள் என்பது அவர் கருத்தாகும். **காவல் குழவி கொள்பவரின் ஓம்புமதி:** 'காவல்' என்னும் சொல் அரசனால் காக்கப்படுதற்குரிய தேயத்தைக் குறிக்கும். குழந்தையைப் போற்றி வளர்த்தல் போலத் தேயத்தைப் பாதுகாக்குமாறு நரிவெரூஉத்தலையார் கூறுகின்ருர். நோய் கொடி வராமல் குழந்தையைப் போற்றி வளர்த்தல் போலத் தேயத்து மக்களைப் பாதுகாப்பது அரசன் கடமையாகும்.

இச்செய்யுள் செவியறிவுறூஉ ஆயினவாறு: 'குழந்தையை வளர்ப்பாரைப் போலத் தேயத்தைப் பாதுகாப்பாயாக' என்று புலவர் மன்னனது செவியில் புகுத்தி அறிவிக்கின்ருராதலால் இச்செய்யுள் செவியறிவுறூஉ ஆகும். **இச்செய்யுள் பொருள்மொழிக்காஞ்சி ஆயினவாறு:** 'அருளையும் அன்பையும் நீக்கி, பாவஞ் செய்தாரை நீங்காத நரகத்தைத் தமக்கு இடமாகக் கொள்பவரோடு பொருந்தாது அரசு செலுத்துக' என்று புலவர் கூறுகின்ருராதலால் இச்செய்யுள் பொருள்மொழிக்காஞ்சி ஆயிற்று.

வேம்பும் கடுவும் போல் வெய்யதாகக் கூறிப் புலவர் அரசனுக்கு உறுதி கூறுகின்ருராதலால் இச் செய்யுள் **வாயுறை வாழ்த்து** என்னும் துறையாகும் என்பர் நச்சினர்க்கினியர்.

இலக்கணக் குறிப்பு: அன்ன: உவம உருபு. கருங்கல்: பண்புத் தொகை. நாடனை: 'ஐ' என்பது முன்னிலைக்கண் வந்தது. ஓ, ஓர் அசை நிலைகள்: 'நீயோ' என்பதற்கு 'நீ தானே' என்று பொருள் கொண்டால் ஓகாரம் வினுவாகும். முதல் இரண்டடிகளில் உள்ள உவமம் வடிவு உவமம் ஆகும். மொழிவல்: தன்மை ஒருமை வினைமுற்று. நீங்கா: ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். காவல்: ஈண்டு, காவல் என்னும் தொழில், காக்கப்படும் தேயத்துக்கு ஆகி வந்தமையால் இது தொழிலாகு பெயர். கொள்பவரின்: 'இன்' ஈண்டு உவமப் பொருளில் வந்துள்ளது. குரை: அசைநிலை யிடைச் சொல்; இசைநிறையாகவும் கொள்ளலாம்.

2

['மலையமான் திருமுடிக்காரியைக் காணச் செல்வோர் நல்ல சகுனம் பார்த்துச் செல்ல வேண்டுவதில்லை. அவனைப் பார்ப்பதற்குரிய சமயம், அவனைப் பாடுதற்குரிய புகழ் முதலியவற்றை ஆராய்ந்து பார்க்க வேண்டுவதில்லை. அவனைப் பாடிச் சென்ருேர் வெறுங்கையுடன் திரும்ப மாட்டார்கள்' என்று கபிலர் இப்பாடலில் பாடியுள்ளார்.]

திணை: **பாடாண் திணை.** துறை: **இயன்மொழி.**

பாடாண் திணை: இதைப்பற்றி முன் பாடலிலேயே கூறப்பட்டது.

இயன்மொழி: இயல்பைக் கூறுதல்; ஒரு தலைவனுக்கு எதிரே சென்று, அவனது செய்தியையும், அவனுடைய குலத்தோர் செய்தியையும் அவன்மேல் ஏற்றிப் புகழ்வது.

மலையனைப் பாடியோர் வெறுங்கையுடன் திரும்பார்

நாள் அன்று - நல்ல நாள் அன்றாக
போகி - சென்று,
புள் - புள் நிமித்தம் (பறவைச் சகுனம்)
இடை தட்ப - இடையே நின்று தடுப்ப,
பதன் அன்று - ஏற்ற காலம் அன்றாக
புக்கு - சென்று கூடி,
திறன் அன்று - கூறுபாடு அன்றாக
மொழியினும் - (வெறுக்குஞ் சொற்களை) சொல்லினும்
நெறிகொள - ஒழுங்குபட
பாடு ஆன்று - ஓசை நிறைந்து
இரங்கும் - ஒலிக்கின்ற
அருவி - அருவியை உடைய
பீடுகெழு - பெருமை பொருந்திய
மலையன் பாடியோர் - மலையை உடைய திருமுடிக்காரியைப் பாடியவர்கள்
வறிது - வறிதாக (வீணாக, வெறுங்கையுடன்)
பெயர்குவர் அல்லர் - மீள்வார் அல்லர்.

கருத்துரை : கபிலர், 'மலையமான் திருமுடிக்காரியைக் காணச் செல்வோர் நல்ல நாள் பார்க்கவேண்டாம்; சகுனம் பார்க்கவேண்டாம்; தம் வருகையை முன்கூட்டி அவனுக்கு அறிவிக்கவேண்டாம்; எவற்றை அவனிடம் கூறவேண்டும் என்று சிந்திக்கவேண்டாம். எதனைக் கூறினாலும் அவன் பரிசில் தருவான். அவனைப் பாடியவர்கள் வெறுங்கையுடன் திரும்பமாட்டார்கள்' என்று ஈண்டுப் பாடியுள்ளார்.

விளக்கவுரை : போகி - சென்று. புள் - புள் நிமித்தம், பறவைச் சகுனம். தட்ப - தடுக்க. பதன் - சென்று காண்பதற்கு ஏற்ற காலம். திறன் - கூறுபாடு. வறிது - வீணே, பயனின்றி, பரிசில்பெறாமல். நெறி - ஒழுங்கு. பாடு - ஓசை. ஆன்று - நிறைந்து. இரங்கும் - ஒலிக்கும். பீடு - பெருமை. கெழு - பொருந்திய. மலையன் : மலையமான் திருமுடிக்காரி. **நாள்அன்று போகி :** நல்ல நாள் அன்றாகச் சென்று. "நாள் செய்வது நல்லோர் செய்யார்" என்பது பழமொழி. செல்வரைக் காணச் செல்லும் இரவலர் நல்ல நாள் நோக்குவது இயல்பு. நல்ல நாள் பாராது சென்றாலும் மலையமான் பரிசில் தருதல் திண்ணம் என்னும் கருத்து ஈண்டுக் குறிப்பிடப்பட்டது. **புள் இடைதட்ப :** பறவை நிமித்தம் (சகுனம்) இடையே நின்று தடுக்க. பறவைகளின் நிலையைப்பார்த்து நிமித்தம் கொள்ளுதல் பழங்கால வழக்கம். கருடனைக் காணுதல் நல்ல நிமித்தம் என்றும், கரிக்குருவி அழுதல் தீய நிமித்தம் என்றும் சொல்லப்படும். பறவைச் சகுனம் நன்கு அமையப் பெறாமல் சென்றவர்களும் மலையனிடம் பரிசில் பெறுதல் தவறாது என்னும் கருத்து ஈண்டுக் குறிப்பிடப்பட்டது. **பதன் அன்று புக்குத் திறன் அன்று மொழியினும் :** அரசனையும், செல்வரையும் காண்பதற்குரிய காலம் தக்கவாறு இருக்கவேண்டும் என்பர் அறிஞர். அவர்கள் மகிழ்ச்சியுடன் இருக்கும்பொழுது சென்றால்தான் பரிசில் கிடைக்கும் என்பர் சிலர். மேலும், வெறுக்குஞ் சொற்களைக் கூறும் இரவலர்க்கு அவர்கள் பரிசில் கொடுக்க மாட்டார்கள் என்பர். ஆயின், மலையமான் அத்தகையவன் அல்லன். தன்னிடம் வந்தோர், கூறத்தகாதனவற்றைக் கூறினாலும், மலையமான் அவற்றைப் பொருட்படுத்தாமல், அவர்கள் வேண்டியவற்றையெல்லாம் தருவான்என்பது ஈண்டுக் குறிப்பிடப்பட்டது. **பாடான்று இரங்கும் அருவி :** ஓசை நிறைந்து ஒலிக்கும் அருவி. மலையமானுக்குரிய மலையில், அருவி இழியும் ஓசை எங்கும் நிறைந்திருக்கும் என்பது இதன் கருத்து.

இலக்கணக் குறிப்பு : அன்று : செய்யுளில், 'அன்றி' என்னும் எதிர்மறைக் குறிப்பு வினையெச்சம், 'அன்று' எனத்திரிந்து வரும். வறிது : குறிப்பு வினையெச்சம். மலையன் பாடியோர் : இரண்டாம் வேற்றுமைத் தொகை. பாடியோர் : வினையாலணையும் பெயர்.

3

[ஔவையார் நாஞ்சில் வள்ளுவன் என்னும் வள்ளலின் கொடைப் பண்பினை இப்பாடலில் விளக்கியுள்ளார். அவர் அவ்வள்ளலிடம் சென்று, துவரம் பருப்பு வேண்டினர். அவ்வளவில் அவன் மலை போன்றதொரு யானையைக் கொடுத்தான். அச்செய்தியை ஔவையார் ஈண்டுக் குறிப்பிட்டு, அவனது கொடை மடத்தினை வியக்கின்றார்.]

திணை : பாடாண் திணை. **துறை :** பரிசில் விடை.

பாடாண் திணை : இத்திணை முன்னரே விளக்கப்பட்டுள்ளது.

பரிசில் விடை : புறப்பொருள் துறைகளுள் இதுவும் ஒன்றாகும். பரிசில் பெற ஒருவனிடம் வந்தவர், பரிசிலைப் பெற்றாயினும், பெறாமலாயினும் பரிசில் அளிப்பவனை நோக்கிக் கூறும் விடையே பரிசில் விடை ஆகும். அரசன் தன் புகழைக் கூறினோர்க்குப் பரிசில் அளித்து, இன்பம் மிகுமாறு அவர்கட்கு விடையளித்தலே இத்துறையின் இலக்கணம் என்பர் புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர்.

நாஞ்சில் வள்ளுவனது கொடை மடம்

செந்நா - செவ்விய நாவினை உடைய
புலவிர் - புலவர்களே !
தடவு நிலை - பெரிய நிலைமையை உடைய
பலவின் - பலா மரத்தை உடைய
நாஞ்சில் - நாஞ்சில் மலைக்கு
பொருநன் - அரசனாகியவள்ளுவன்
மன்ற - நிச்சயமாக
மடவன் - அறியாமை உடையவன் ஆவான்.
(ஏனெனில்)
வளைக்கை - வளையணிந்த கையினை உடைய
விறலியர் - (வெற்றி பொருந்த ஆடும்) பாண்மகளிர்
படப்பை - மனைப்பக்கத்தின்கண்
கொய்த - பறித்த
அடகின் - இலைக்கறிக்கு
கண்ணுறையாக - மேல் தூவுவதற்கென்று
யாம் சில அரிசி - யாம் சிறிது துவரை அரிசியினை (துவரம் பருப்பை)
வேண்டினேமாக - கேட்டேமாக, (அவன்)
தான் ——,
வரிசை அறிதலின் - பரிசிலர்க்கு உதவும் வரிசையை அறிதலால்,
தன்னும் தூக்கி - (எமது வறுமையையேயன்றி) தனது மேம்பாட்டையும் சீர்தூக்கி,
இருங்கடறு - பெரிய பாலை நிலம்
வளைஇய - சூழ்ந்த
குன்றத்து அன்னது ஓர் - மலை போல்வது ஒரு
பெருங் களிறு - பெரிய யானையை
நல்கியோன் - கொடுத்தான்.
(அதனால்)
அன்னது ஓர் - அத்தகையதொரு
தேற்றா - (ஒருவனுக்கு ஒன்றைக் கொடுக்குங்கால்) தெளியாத
ஈகையும் - கொடையும்
உளதுகொல் - உளதோ ?
பெரியோர் - பெரியவர்கள்
தம்கடன் - தாங்கள் செய்யவேண்டிய கடமையை
போற்றார் - தெரிந்து பாதுகாத்துச் செய்யார் போலும் !

கருத்துரை : ஔவையார் சான்றோர்கள் சிலரை நோக்கி, 'புலவர்களே! நாஞ்சில் வள்ளுவன் மடவன் என்பது நிச்சயமாகும். ஒரு முறை எங்களுடைய இலைக் கறியின் மேல் தூவுவதற்கென்று யாம் அவனிடம் சிறிது துவரம் பருப்பு வேண்டினேம். அவ்வளவில் அவன், யானையொன்று தூக்கக் கூடிய அளவு துவரம் பருப்பையும், மலை போன்றதொரு யானையையும் எமக்குப் பரிசிலாகத் தந்தான். இத்தகைய கொடை மடமும் உண்டோ? பெரியோர் தம் கடமையை முன்பின் ஆராயாமல் செய்வார் போலும்!' என்று கூறினர்.

விளக்கவுரை : தடவு - பெரிய. நாஞ்சில்: ஒரு மலை; நாஞ்சில் என்னும் பெயர் கொண்டதொரு நாடும் உண்டு. பொருநன் - வேந்தன். மடவன் அறிவில்லாதவன். மன்ற - நிச்சயமாக. செந்நா - செவ்விய நாக்கு சொன்ன சொல் தவறாத நாக்கு, பொய் சொல்லாத நாக்கு. விறலியர் பாணர்களின் பெண்டிர்; வெற்றி பொருந்த ஆடும் மகளிர். படப்பை மனைப் பக்கம்; கொல்லைப்புறம். அடகு - இலைக் கறி, கீரை. கண்ணுறை மேலீடு, மேல் தூவுவது. அரிசி - துவரையரிசி; துவரம் பருப்பு. சில சிறிது. வரிசை - பரிசிலர்க்குக் கொடுக்கும் முறை. தூக்கி - சீர் தூக்கி. இருங் கடறு - பெரிய பாலை நிலம். வளைஇய - சூழ்ந்த. களிறு - ஆண் யானை தேற்றா - தெளியாத. போற்றார் - பாதுகாத்துச் செய்யார். **படப்பைக்கொய்த அடகின் கண்ணுறை யாக யாஞ்சில அரிசி வேண்டினேம்:** ஔவையார் விறலியர் சிலருடன் நாஞ்சில் வள்ளுவனது நாட்டை அடைந்திருந்தார். அந்த காலையில், விறலியர் தாம் தங்கியிருந்த வீட்டின் பக்கத்தே முளைத்திருந்த கீரைகளைப் பறித்துச் சமைக்கலாயினர்; அப்பொழுது அவ்விலைக்கறியின்மீது தூவுவதற்குத் துவரம்பருப்பு வேண்டியிருந்தது. எனவே, ஔவையார் நாஞ்சில் வள்ளுவனிடம் சென்று, சிறிது துவரம்பருப்பு வேண்டினர். அச்செய்தியே ஈண்டுக் குறிப்பிடப்பெற்றது. 'அடகு' என்பது இலைக்கறியாகிய கீரையைக் குறிக்கும். 'கண்ணுறை' என்பது இலைக்கறியின்மேல் தூவுவதற்குரிய துவரம்பருப்பைக் குறிக்கும். 'அரிசி' என்னுஞ் சொல் துவரம் பருப்பினைக் குறிக்கும். துவரம் பருப்பினைத் துவரையரிசி என்று கூறுவது வழக்கமாகும்.

வரிசை அறிதலின் : தான் பரிசிலர்க்கு உதவும் வரிசையை அறிதலால். நாஞ்சில் வள்ளுவன் தன்னிடம் வந்த புலவர்களுடைய தகுதிக்கும், தன் தகுதிக்கும் ஏற்றவாறு பரிசில் அளிப்பவன். அதுபற்றியே இவ்வாறு கூறப்பட்டுள்ளது. **தன்னுந் தூக்கி :** நாஞ்சில் வள்ளுவன் இரவலரது வறுமையை மட்டுமின்றி, தனது பெருமையையும் சீர் தூக்கிப் பார்த்தே பரிசில் அளிப்பான். குறைவாகக் கொடுத்தல் தனது தகுதிக்கு இழுக்காகும் என்று அவன் கருதினன் என்பது கருத்து. **இருங்கடறு வளைஇய குன்றத் தன்னதோர் பெருங்களிறு நல்கியோன் :** 'பெரிய பாலை நிலம் சூழ்ந்த மலைபோல்வதொரு யானையை அளித்தான்' என்பது இவ்வடிகளின் பொருளாகும். 'பெரிய யானையை அளித்தான்' என்னுஞ் சொற்றொடர், அவ்யானை சுமக்கக்கூடிய அளவுள்ள துவரம் பருப்பினையும் அளித்தான் என்னும் செய்தியைக் குறிப்பினால் புலப்படுத்தும். பருப்பினை வேண்டியவர்க்கு யானையை மட்டும் அளித்தால் பயனில்லையன்றோ? எனவே, மலைபோன்றதொரு யானை சுமக்கும் அளவுள்ள துவரம்பருப்பையும், யானையையும் பரிசிலாகக் கொடுத்தான் என்றும், அந்த யானையின்மீது ஔவையாரை அவன் ஏற்றி விடுத்தான் என்றும் நாம் கொள்ளுதல்வேண்டும். **தேற்றா ஈகை :** தெளியாத கொடை; கொடை மடம். இரவலர்க்குப் போதுமானது எது என்று அறியாமல், அளவுக்கு அதிகமாகக் கொடுத்தல் கொடை

மடம் ஆகும். போற்ருர் அம்ம பெரியோர் தம் கடன்: பெரியோர் தாங்கள் செய்தற்குரிய கடமையை முன்பின் ஆராய்ந்து பார்த்துச் செய்யார் போலும்! எது தேவையோ அதனை மட்டும் செய்யாமல், பலவற்றையும் செய்தலை, 'போற்ருர்' என்னுஞ் சொல் குறிக்கும். 'பெரியோர் தம் கடமையைப் பாதுகாத்துச் செய்யாரோ?' என்று கூறியமை, பெரியோர்களின் பெருங்கடமை யுணர்ச்சியையும், நாஞ்சில் வள்ளுவனது பெருங்கொடைப் பண்பையும் குறிப்பினுல் வெளிப்படுத்தும்.

இலக்கணக் குறிப்பு: தட: 'பெருமை' என்று பொருள் தரும் உரிச் சொல். ஈண்டு அச்சொல் உகரச்சாரியை பெற்றுவந்தது. செங்கா: பண்புத் தொகை. புலவீர்: 'புலவர்' என்னுஞ்சொல் விளியேற்று நின்றது. பிற: அசைநிலை. பெருங்களிறு: பண்புத்தொகை. தேற்ரு: இஃது ஈண்டுத் தன் வினைப்பொருளில் வந்தது. கொல்: ஐயப் பொருளில் வந்த இடைச் சொல். அம்ம: உரையசைச் சொல்.

நல்லொழுக்கப் பயிற்சி

நாஞ்சில் வள்ளுவனிடம் ஒளவையார் சிறிது துவரையரிசி கேட்டார். ஆயின் அவன், யானையொன்று தூக்கக் கூடிய அளவு துவரையரிசியையும், யானையையும் பரிசிலாக அளித்தான் அவன் தன் தகுதியையும், பரிசில் பெறும் புலவரது தகுதியையும் நோக்கியே அவ்வாறு அளித்தான். அச் செயல், தமிழ்ப் புலவர்களிடம் அவன் வைத்திருந்த பற்றையும், தமிழ் மொழியினிடம் அவன் கொண்டிருந்த ஆர்வத்தையும் புலப்படுத்தும். இவ்வாறெல்லாம் தமிழ் முன் காலத்தில் வளர்க்கப்பட்டது. தமிழுக்கு நீங்கள் யாது செய்யப்போகின்றீர்கள்? தமிழைப் படியுங்கள்; தமிழ் மொழியின் மணம் சந்து பொந்துகளிலும், பட்டி தொட்டிகளிலும், நாடு நகரங்களிலும் கமழுமாறு செய்யுங்கள். தமிழ்மொழி தழைத்தோங்கச் செய்தல் உங்களுடைய முதற் கடமையாகும்.

II. இடைக்காலச் செய்யுள்

1. முற்பகுதி: மணிமேகலை

ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று மணிமேகலை: பல்வகைச் சுவைகளைக் கொண்டு கதையொன்றைத் தழுவிய தொடர்நிலைச் செய்யுள் நூல் 'காப்பியம்' எனப்படும். தமிழில் இத்தகைய பெருங்காப்பியங்கள் ஐந்துள்ளன. அவை சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்பனவாம்.

பெயர்க் காரணம்: மணிமேகலை என்ற தவ மகளின் வரலாற்றைக் கூறுவது இந்நூல். கதைத் தலைவியாகிய மணிமேகலையின் பெயரே இந்நாலுக்கும் பெயராக அமைந்துள்ளது. மணிமேகலையின் துறவைக் கூறுகின்ற நூலாதலால் இதற்கு "மணிமேகலையின் துறவு" என்றும் ஒரு

பெயர் உண்டு. இந்நூலின் பதிகத்தில் இதன் பெயர் 'மணிமேகலை துறவு' என்றே காணப்படுகிறது.

மணிமேகலையோடு தொடர்புடைய நூல் சிலப்பதிகாரம்: மணிமேகலையும், சிலப்பதிகாரமும் கதைத் தொடர்புடைய நூல்கள் ஆவன. சிலப்பதிகாரக் கதைத் தலைவனாகிய கோவலனுக்கும், அவனது காதற் கிழத்தியாகிய மாதவிக்கும் பிறந்த மகளே மணிமேகலை ஆவாள். மணிமேகலையையும், சிலப்பதிகாரத்தையும் ஒன்று சேர்த்து "இரட்டைக் காப்பியங்கள்" (Twin Epics) என்றும் வழங்குவதுண்டு.

நூலின் உட்கோள்: இந்நூல் பௌத்தமதக் கொள்கையைப் பரப்பும் பொருட்டுத் தோன்றிய நூலாகும். பௌத்தமதக் கொள்கைகளை எங்கும் பரப்புவதே இந்நூலின் உட்கோள். இதனை அங்கதப் பாட்டு (Satire) என்று குறிப்பிடுதல் தகும். கதைத் தலைவியாகிய மணிமேகலை பௌத்த பிக்குணியாகி, ஊர்தோறும் சென்று, ஆங்காங்கு இருந்த மதப் பெரியார்களுடன் சமயவாதம் செய்து, பௌத்த மதத்தின் தத்துவங்களைப் பரப்புவதாக இந்நூல் அமைந்துள்ளமையால் அவ்வுண்மை புலப்படும்.

நூலாசிரியர்: மணிமேகலையின் ஆசிரியர் **மதுரைக் கூலவாணிகன் சாத்தனார்** என்பவர் ஆவார். இவர் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர். இவர் மதுரையில் நெல் முதலிய தானியங்களை விற்று வந்தவராதலால் இப்பெயரைப் பெற்றார். இவருக்குச் **சீத்தலைச் சாத்தனார்** என்றும் ஒரு பெயர் வழங்கப்படுகிறது. 'சீத்தலை' என்னும் ஊர் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின்கண் உள்ளது. அவ்வூரில் பிறந்தவராதலால் '**சீத்தலை**' என்னும் அடைமொழி இவர்க்கு அமைந்தது என்பர். '**சீத்தலை**' **என்னும் அடைமொழி வந்தமைக்குச் சிலர் கூறும் காரணம்:** 'சீத்தலை' என்னுஞ் சொற்றொடர் 'சீழ் பொருந்திய தலை' என்று பொருள்படும். அரங்கேற்றத்தின் பொருட்டு வரும் நூல்களில் பிழை காணுந்தோறும், இவர் மனம் பொறாமல், தம் கையில் உள்ள எழுத்தாணியால் தலையில் குத்திக் கொள்வார். அதுபற்றி இவர் தலையில் எப்பொழுதும் சீழ் பிடித்திருந்தது. இவர் எப்பொழுதும் அவ்வாறு சீழ் பிடித்த தலையை உடையவராக இருந்த காரணத்தால் 'சீத்தலை' என்னும் அடைமொழி இவருக்கு வந்தது. மேலும், தொல்காப்பிய உரையாசிரியர்கள் அடையடுத்த சினைமுதற் பெயருக்கு எடுத்துக்காட்டாகச் 'சீத்தலை' என்னும் சொற்றொடரையே காட்டியுள்ளனர். இவ்வாறு அடிக்கடி தலையில் குத்திக் கொண்டதால் சாத்தனார்க்கு இடைவிடாத தலைக் குத்து இருந்து வந்தது. வள்ளுவனாரின் திருக்குறளைக் கேட்டதும் அவரது தலைக்குத்து நீங்கியது. இதற்கு,

> "சீந்திநீர்க் கண்டம் தெறிசுக்குத் தேனளாய்
> மோந்தபின் யார்க்கும் தலைக்குத்தில்—சாந்தி
> மலைக்குத்து மால்யானை வள்ளுவர்முப் பாலால்
> தலைக்குத்து தீர்வுசாத் தற்கு"

என்னும் திருவள்ளுவமாலைச் செய்யுள் சான்றாகும்.

மேலே காட்டப்பட்ட சாத்தனாரின் வரலாற்றுக்கு வேறு சான்றுகள் காணப்படாமையானும், அவ்வரலாறு இயற்கையில் நிகழக்கூடியதொன்று இன்மையானும் 'சீத்தலை' என்பதை ஓர் ஊரின் பெயராகக் கொள்வதே பொருத்தமுடையதாகும்.

ஆசிரியரது மரபு: இவர் பெரும் புலவராக விளங்கிய காலத்திலும், வணிகத் தொழிலை விடாது நடத்தினராதலால் இவர் வணிக மரபினர் என்று கொள்ளுதல் பொருந்தும்.

ஆசிரியரது சமயம்: பௌத்தம்.

சிலப்பதிகாரக் கதையுடன் இவர்க்குள்ள தொடர்பும், நூல் இயற்றிய காரணமும்: பாண்டியன் நெடுஞ்செழியன் ஆராய்ந்து பாராது கோவலனைக் கொல்வித்தான். அஃதறிந்த கண்ணகி சினந்து, பாண்டியன்முன் சென்று வழக்குரைத்து, சிலம்பினை உடைத்துக் காட்டிக் கோவலன் குற்றமற்றவன் என்பதை வெளிப்படுத்தினள். தனது பிழையை உணர்ந்த பாண்டியன் இறந்தான். கண்ணகி தனது சினம் நீங்கப் பெருதவளாய் மதுரையை எரியூட்டினள். மதுரை நகரத்தை எரியுண்ட பொழுது, அந்நகரில் உள்ள வெள்ளியம்பலம் என்ற இடத்தில் தூங்கிக்கொண்டிருந்தவர் சாத்தனராவார். இச்செய்தி சிலப்பதிகாரப் பதிகத்தால் அறியக் கிடக்கின்றது. மதுரை தீப்பற்றியதை அறிந்த சாத்தனர் அந்நகரை விடுத்துச் சேரநாடு சென்று, அந்நாட்டு அரசனகிய சேரன்-செங்குட்டுவனுடன் தங்கியிருந்தார். அப்பொழுது மலைவாணர் சிலர் செங்குட்டுவனிடம் வந்து, கண்ணகி என்பவள் தேவருலகு சென்றதைத் தாங்கள் கண்டதாகக் கூறினர். அதுகாலையில் செங்குட்டுவன் பக்கத்தில் இருந்த சாத்தனர், கண்ணகியின் வரலாற்றைச் செங்குட்டுவனுக்கு உரைத்தார். அவ்வரலாற்றை உடனிருந்து கேட்ட இளங்கோவடிகளைப் பார்த்துச் சாத்தனர், கண்ணகியின் வரலாற்றைக் காப்பியமாகப் பாடியருளுமாறு வேண்டிக் கொண்டார். இளங்கோவடிகளும் அதற்கு ஒருப்பட்டுச் சிலப்பதிகாரத்தைப் பாடினர். சிலப்பதிகாரக் கதைத் தலைவனகிய கோவலனுக்கு மாதவியினிடம் பிறந்த மணிமேகலை பௌத்த பிக்குணியாகி, பௌத்த மதத்தைப் பரவச் செய்த வரலாறு சாத்தனரின் மனத்தைக் கவர்ந்தது. பௌத்த மதத்தில் ஆழ்ந்த பற்றுடையவராதலால் சாத்தனர் மணிமேகலையின் வரலாற்றைப் பாடினர்.

ஆசிரியரின் காலம்: சாத்தனர் சேரன்-செங்குட்டுவனுடன் வாழ்ந்தவர் என்பது முன்னரே குறிப்பிடப்பட்டது. சேரன்-செங்குட்டுவன் பத்தினிக் கடவுளாகிய கண்ணகிக்குக் கோயில் கட்டி வழிபட்ட காலத்தில் வந்திருந்த அரசர்களுள் ஒருவன் இலங்கை அரசனகிய **கயவாகு** என்பவன் ஆவான். கயவாகு என்பவன் கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவன் என்று **மகாவம்சம்** என்னும் வரலாற்று நூல் கூறுகின்றது. எனவே, சாத்தனர் **கி. பி. இரண்டாம் நூற்றாண்டில்** வாழ்ந்தவர் என்று கருதலாம். மேலும், இவர் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர் என்று தெரிவதால் அக்கருத்து வலியுறும். சிலர் இவரது காலம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டு என்றும் கூறுகின்றனர்.

நமது பாடப் பகுதி: மணிமேகலை நூலுள் பதினேழாம் காதையாகிய **உலகவறவி புக்க காதை** நமக்குப் பாடமாக வந்துள்ள பகுதியாகும்.

முன் கதைப் பகுதி: கோவலனுக்கு மாதவியிடம் பிறந்தவள் மணிமேகலை. மாதவியைப் பிரிந்து கண்ணகியுடன் கோவலன் மதுரை சென்று கொலையுண்டான். அச்செய்தியை உணர்ந்து வருந்திய மாதவி, தன் மகள் தனது குலவொழுக்கத்தை மேற்கொள்வதை விரும்பவில்லை; அவளைப் பௌத்த மதத்தில் சேர்க்க விரும்பினள். ஒருநாள் மணிமேகலை தனது

தோழியாகிய சுதமதியுடன் பூக்கொய்வதற்கு அவ்வூரில் உள்ள உவவனத்திற்குச் சென்றாள். அவளை விரும்பிய அவ்வூர் அரசிளங்குமரனாகிய உதயகுமரன் அங்கு வரவே, மணிமேகலை அஞ்சி ஆண்டிருந்த பளிங்கு மண்டபத்தில் புகுந்து உள்ளே தாழிட்டுக் கொண்டாள். அதுகாலையில் அவளுக்கு எதிரே மணிமேகலா தெய்வம் தோன்றி, அவளுக்கு அறவுரைகளைக் கூறி மயக்கி, அவளை மணிபல்லவம் என்னும் தீவுக்கு எடுத்துச் சென்று விடுத்து மறைந்தது. மணிபல்லவத்தில் விழித்தெழுந்த மணிமேகலை அங்குமிங்கும் சுற்றி ஆண்டிருந்த புத்த பீடிகையைக் கண்டு வணங்கினாள்; அதனால் தனது பழம் பிறப்பைப் பற்றிய உண்மைகளை உணர்ந்தாள். அதுபொழுது அங்கு மறுபடியும் மணிமேகலா தெய்வம் தோன்றி, வேற்று வடிவம் கொள்ளவும், வான் வழியே செல்லவும், பசியைப் போக்கிக்கொள்ளவும் உதவும் மூன்று மந்திரங்களை அவளுக்கு அருளிச் சென்றுவிட்டது. அதன் பின் மணிமேகலை அத்தீவில் உலவுங்கால், ஆங்குத் தீவதிலகை என்னும் தவப் பெண் ஒருத்தியைக் கண்டாள். தீவதிலகை ஆங்கிருந்த கோமுகி என்னும் பொய்கையைக் காட்டி, அப்பொய்கையிலிருந்து ஆண்டுதோறும் வைசாக சுத்த பூர்ணிமையன்று அமுத சுரபி தோன்றும் என்று கூறினாள். ஆபுத்திரனால் அப்பொய்கையில் இடப்பெற்றிருந்த அமுதசுரபி, அதுகாலையில் வெளிக் கிளம்பி, மணிமேகலையின் கையை அடைந்தது. அமுத சுரபியைப் பெற்ற மணிமேகலை ஆங்கிருந்து வான் வழியே காவிரிப்பூம் பட்டினத்தை அடைந்தாள்.

காவிரிப்பூம் பட்டினத்தில் இருந்த பௌத்த மதத்துறவியாகிய அறவண வடிகள் மணிமேகலைக்கு ஆபுத்திரன் என்பவனது வரலாற்றையும், அவன் சிந்தாதேவி என்னும் தெய்வத்தின் அருளால் அமுத சுரபியைப் பெற்ற வரலாற்றையும் விளங்கக் கூறி, அமுதசுரபியின் உதவியால் மக்களுக்கு உணவு கொடுத்துப் பஞ்சத்தைப் போக்குமாறும் கூறினார். மணிமேகலையும் பிக்குணிக் கோலங்கொண்டு, அமுதசுரபியுடன் வீதியை அடைந்தாள். அப்பொழுது காயசண்டிகை என்னும் வித்தியாதரப் பெண், மணிமேகலையைப் பார்த்து, "இந்நகரில் உள்ள ஆதிரை என்னும் கற்புடைய மங்கை உனது அமுத சுரபியில் பிச்சையிட்டால், பிறகு இப்பாத்திரத்திலிருந்து உணவு எடுக்க எடுக்கக் குறையாமல் வந்துகொண்டேயிருக்கும்" என்று கூறி, ஆதிரையின் வரலாற்றை விளங்கக் கூறினாள். அதுகேட்ட மணிமேகலை, ஆதிரையின் வீட்டை அடைந்து அமுத சுரபியுடன் வாய்பேசாது நின்றாள். அவ்வளவில் ஆதிரை அமுத சுரபியின் உள்ளிடம் நிறையுமாறு பிச்சையிட்டாள்.

உலக அறவி புக்க காதையின் சுருக்கம்

ஆதிரை பிச்சை யிட்ட பிறகு அமுத சுரபியிலிருந்து சோற்றுத் திரள் வளர்ந்தவாறு இருந்தது. அறவழியில் சேர்த்த பொருள் கொடுக்கக் கொடுக்கக் குறையாமல் வளருமன்றோ? அவ்வாறே அமுதசுரபியினின்று சோற்றினை எடுத்துப் பிறர்க்குக் கொடுக்கக் கொடுக்க உணவு வளர்ந்து கொண்டே இருந்தது. மணிமேகலை அச்சோற்றினைக் கொண்டு பலரது பசியைப் போக்கினாள்.

அப்பொழுது காயசண்டிகை மணிமேகலையைப் பார்த்து, "அன்னாய்! யான் யானைத்தீ என்னும் கடும்பசி நோயினால் துன்புறுகின்றேன். எனது தீய பசியையும் தீர்த்தருளவேண்டும்" என்று வேண்டினாள். அவ்வளவில் மணிமேகலை, அமுதசுரபியிலிருந்து ஒரு பிடி சோற்றை எடுத்து, அவளுக்குக் கொடுத்தாள். அதனையுண்ட உடனே, காயசண்டிகையின் பெரும்பசி நோய்

நீங்கியது. அதனால் மட்டற்ற மகிழ்ச்சிகொண்ட காயசண்டிகை, தான் பன்னிரண்டு ஆண்டுகட்குப் பசி எடாமல் தடுக்கும் தன்மை வாய்ந்த நாவற் பழம் ஒன்றைச் சிதைத்தமையையும், அதுபற்றி விருச்சிகன் என்னும் முனிவனது சாபத்திற்கு ஆளாகி, யானைத்தீ என்னும் கொடும்பசி நோயினைப் பெற்ற செய்தியையும், அதனால் தனது கணவனாகிய காஞ்சனன் தன்னைக் காவிரிப்பூம்பட்டினத்தில் விடுத்து அகன்ற உண்மையையும், ஆண்டுதோறும் அவன் தன்னைக் கண்டு வருந்திச் செல்லும் செய்தியையும் மணிமேகலையி னிடம் கூறினாள். பின்பு அவள் மணிமேகலையைப் பார்த்து, 'தாயே! இந்நகரில் உள்ள சக்கரவாளக் கோட்டத்தில் உலக அறவி என்னும் பெயர் பெற்ற ஓர் அம்பலம் உள்ளது. பசியால் வாடி வருந்தும் பலர் ஆங்கு உள்ளனர். ஆகவே, நீ அங்கே சென்று தங்கி, அவர்களுடைய பசியினைப் போக்குவாயாக' என்று கூறிவிட்டு, தன்னூர் நோக்கிச் சென்றுவிட்டாள்.

காயசண்டிகையின் உரைப்படியே மணிமேகலை உலக அறவியை அடைந்தாள்; ஆங்குக் கோயில் கொண்டிருந்த சம்பாபதித் தெய்வத்தையும், கந்திற்பாவைத் தெய்வத்தையும் வணங்கினாள்; வெயிலால் வாடிய காட்டில் மேகம் தோன்றுதல்போல், பசியால் வாடிய மக்களுக்கு அமுதசுரபியுடன் தோன்றினாள்; யாவருக்கும் உணவு கொடுக்கத் தொடங்கினாள். அந்த அம்ப லத்தில் அதுமுதல் பலர் உணவு உண்ணும் ஒலி மிகுந்தது.

உலக அறவி புக்க காதை

அமுத சுரபியிலிருந்து உணவு வளர்ந்த பான்மை (1—6)

பத்தினிப்பெண்டிர் - கற்புடை நங்கையாகிய ஆதிரையால்
பாத்து ஊண் - பகுத்து உண்ணும் உணவினை
ஏற்ற - பெற்ற
பிச்சைப் பாத்திரம் - பிச்சைப் பாத் திரமாகிய அமுத சுரபியில் உள்ள
பெருஞ் சோற்று அமலை - பெரிய சோற்றுத் திரளை
அறத்தின் - அற வழியினால்
ஈட்டிய - சேர்க்கப் பெற்ற
ஒண் பொருள் - ஒள்ளிய பொருள்
அறவோன் - அறம் செய்வோனது
திறத்து வழிப்படூஉம் செய்கை போல - கருத்தின் வழியே சென்று பயன்படுமாறு போல
வாங்கு கை - வாங்கிக் கொள்ளும் கைகள்
வருந்த - வருந்துமாறு
மன் உயிர்க்கு - நிலை பெற்ற உயிர் கட்கு
அளித்து - கொடுத்தும்
தான் தொலைவு இல்லா - தான் குறைவு படாத
தகைமை நோக்கி - தன்மையைக் (காயசண்டிகை) கண்டு,

கருத்துரை: அமுத சுரபியிலிருந்து சோற்றுத்திரளை மணிமேகலை எடுத்துக் கொடுத்துக் கொண்டேயிருந்தாள். கொடுக்கக் கொடுக்கச் சோற் றுத்திரள் குறைபடாமல் வளர்ந்தது. ஆதிரை அளித்த உணவின் தகுதியும், அவளுடைய இல்லற மாண்பும் நன்கு புலப்படுமாறு அப்பாத்திரம் குறைவு படாததாக இருந்தது.

விளக்கவுரை: பத்தினிப் பெண்டிர் - கற்பிற் சிறந்தவள்; ஈண்டு ஆதிரை. பாத்து ஊண் - பகுத்துண்ணும் உணவு. ஏற்ற - பெற்ற. பிச்சைப் பாத்திரம் - அமுத சுரபி. அமலை - கட்டி. ஈட்டிய - சேர்க்கப்பெற்ற. அற வோன் - அறஞ் செய்வோன். திறம் - கருத்து. தொலைவு - குறைபடுதல். பத்தினிப் பெண்டிர் : ஆதிரை.

“அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் ?”

ஆதிரையின் வரலாறு : ஆதிரையினது கணவனாகிய சாதுவன் என்பவன், தன் பொருள்களை யெல்லாம் தீய வழியில் செலவழித்து, இழந்த பொருளை ஈட்டும் பொருட்டு மரக்கலம் ஏறி வாணிகம் செய்யச் சென்றான். அவன் ஏறிச் சென்ற மரக்கலம் பெருங் காற்றால் உடைந்தது. அவன் ஒருவாறு நீந்திச் சென்று, நாகரிகம் அற்ற நாகர் என்னும் இனத்தவர் வாழ்ந்து வந்த தீவை அடைந்தான்; நாகர்களைத் தன் வசப்படுத்தினான்; அவர்களுடன் சின்னாட்கள் வாழ்ந்தான். இதற்கிடையில் ஆதிரை, தனது கணவன் கடலில் மரக்கலம் உடைந்தமையால் இறந்துபட்டனன் என்று எண்ணி, தீமூட்டி அதன்கண் புகுவாளாயினள். ஆயின், தீ அவளைச் சுடவில்லை. 'தீயும் கொல்லாத தீவினையை யான் செய்துள்ளேனோ?' என்று அவள் ஏங்கியகாலையில், 'கற்புடைக் காரிகையே! நின் கணவன் இறக்கவில்லை. நாகர் தீவில் அவன் வாழ்கின்றான். சின்னாட்களில் அவன் வருவான். நீ வருந்தாதே' என்று வானத்தில் அசரீரி உரை எழுந்தது. அவளும் கவலையின்றித் தன் வீட்டை அடைந்தாள். சின்னாட்கள் கழிந்த பிறகு சாதுவன் திரும்பவே, ஆதிரை பெருமகிழ்ச்சியுடன் வாழ்ந்தாள். இத்தகைய கற்புடையவள் ஆதலாலேயே அவள் 'பத்தினிப் பெண்டிர்' என்று சுட்டப்பட்டாள். **பாத்தூண் :** பகுத்துண்ணும் உணவு. பிரம்மசரியம், வானப்பிரத்தம், சந்நியாசம் ஆகிய மூன்று நிலையினர்க்கும், தென்புலத்தார்க்கும் பகுத்துக் கொடுத்து உண்ணுதற்குரிய உணவு 'பாத்தூண்' எனப்பட்டது. பாத்தல் - பகுத்தல். இதனால் ஆதிரை பிச்சையிட்ட உணவின் தகுதியும், அவளுடைய இல்வாழ்க்கையின் உயர்வும் கூறப்பட்டன.

> "பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
> வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்"

என்னும் குறட்பா ஈண்டு நினைத்தற்கு உரியது. **பாத்தூண் ஏற்ற பிச்சைப் பாத்திரம் :** பகுத்து உண்ணும் உணவைப் பெற்ற அமுத சுரபி. பகுத்துக் கொடுத்து உண்ணும் உணவை ஆதிரை அமுதசுரபியில் இட்டாள். அமுத சுரபி என்பது எடுக்க எடுக்கக் குறைபடாமல் உணவு வளரும் இயல்பினையுடையதொரு பிச்சைப் பாத்திரம் ஆகும். அதனை ஆபுத்திரன் என்பவன் சிந்தாதேவி என்னும் தெய்வத்தினிடமிருந்து பெற்றான். அவன் அதனை மணிபல்லவத் தீவில் இருந்த குளத்தில் இட்டு, உயிர் துறந்தான். அப்பாத்திரமே மணிமேகலையின் கையை அடைந்தது. கற்புடைய நங்கை ஒருத்தி அதன்கண் பிச்சையிட்டால்தான், அதிலிருந்து உணவு வளரும். அதன் பொருட்டு மணிமேகலை ஆதிரையினிடம் பிச்சை வாங்கினாள். (இதன் விளக்கத்தை இப்பகுதியின் முன்னுரையில் 'முன்கதைப் பகுதி' என்னும் தலைப்பில் காண்க.) இவ்வரலாறு பற்றியே இங்ஙனம் கூறப்பட்டது. **அறத்தின் ஈட்டிய ஒண்பொருள் அறவோன் திறத்து வழிப்படூஉம் செய்கை போல:** அற வழியினால் ஈட்டப்பட்ட ஒள்ளிய பொருள், அறஞ் செய்வோனுடைய கருத்தின் வழியேசென்று பயன்படுதல்போல, இல்வாழ்க்கை நெறியில் நின்ற ஆதிரையினிடம் உணவு பெற்றமைக்கு அறவழியினால் பொருள் ஈட்டப்படுதல் உவமை. தான் நினைத்தவாறு மணிமேகலை உயிர்கட்கு உணவளிக்க அது பயன்படுதற்கு, அறஞ் செய்வோன் கருத்தின் வழியே சென்று அப்பொருள் பயன்படுதல் உவமை. இவ்வடிகட்கு மற்றொரு பொருள் :— அறத்தின் ஈட்டிய - நல்வழியே சம்பாதித்த, ஒண்பொருள - ஒள்ளிய பொருள், அறவோன் திறத்து - அறவோனிடத்து, வழிப்படூஉம் - பெருகுதல்உறும், செய்கைபோல - செய்கையைப்போல. ஈண்டு 'அறவோன்' என்னுஞ்

சொல் சற்பாத்திரத்தைக் குறிக்கும். தானப் பொருள், பாத்திரத்தின் பெருமைக்குத் தக்கபடி பெருகுதல் உறும் என்னும் கருத்தினலேயே இங்ஙனம் உரை கூறப்பட்டுள்ளது. **வாங்கு கை வருந்த:** ஏற்கும் கைகள் வருந்த. மணிமேகலை தன்னிடமிருந்த பிச்சைப் பாத்திரத்திலிருந்து வளர்ந்த உணவை மக்களுக்கும், விலங்குகட்கும், பறவைகட்கும் அளித்தாள். எனினும், சோற்றை உண்ணும் இயல்புடையோர் மக்களேயாதலின் 'வாங்கு கை' எனப்பட்டது.

இலக்கணக் குறிப்பு: பாத்து: 'பகுத்து' என்பது 'பாத்து' என்று வந்தது மரூஉ. **அறத்தின் ஈட்டிய:** இத்தொடர் 'அறத்தினல் ஈட்டிய' என்று பொருள்படுதலால் உருபு மயக்கம். **ஒண்பொருள்:** பண்புத் தொகை. **வழிப்படூஉம்:** இன்னேசை தருதற் பொருட்டுக் குறில் நெடிலாகி அளபெடுத்ததாதலால் இஃது இன்னிசையளபெடை. **வாங்குகை:** வினைத் தொகை. **இல்லா:** ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

தனது பசி நோயைப் போக்குமாறு காயசண்டிகை வேண்டல்

(7—16)

யானைத்தீ நோய் - யானைத்தீ என்னும் பெரும் பசி நோயை
அக வயிற்று - தன் வயிற்றினிடத்தே
அடக்கிய - கொண்ட
காயசண்டிகை எனும் - காயசண்டிகை என்கின்ற
காரிகை - பெண்
வணங்கி - (மணிமேகலையை) வணங்கி,
நெடியோன் - திருமால்
மயங்கி - மயக்கமுற்று
நிலமிசைத் தோன்றி - நிலவுலகில் இராமனகத் தோன்றி
அடல் அரு - வெல்லுதற்கு அரிய
ஆழ்ந்நீர் - கடலை
அடைத்த ஞான்று - (அணையிட்டு) அடைத்த காலத்தில்
குரங்கு கொணர்ந்து - குரங்குகள் கொண்டு வந்து
எறிந்த - வீசிய
நெடுமலை எல்லாம் - பெரிய மலைகள் எல்லாம்
அணங்கு உடை - வருத்தம் தருகின்ற
அளக்கர் - கடலின்
வயிறு புக்காங்கு - வயிற்றினுள் புகுந்தாற் போல
இட்டது - இட்ட உணவுகளால்
ஆற்ரு - தணியாத
கட்டழல் - மிக்க நெருப்புப்போன்ற
கடும் பசி - கொடிய பசியை
என் தன் - என்னுடைய
பழவினைப் பயத்தால் - முன்னை வினைப் பயனல்
பட்டேன் - அடைந்தேன்.
அன்னை - தாயே!
கேள் நீ - நீ கேட்பாயாக
ஆருயிர் மருத்துவி - அரிய உயிரைப் பாதுகாக்கவல்ல மருந்தினை உடையவளே!
துன்னிய - நெருங்கிய
என் நோய் - எனது பசி நோயை
துடைப்பாய் - போக்கி அருள்வாய்
என்றலும் - என்று (காயசண்டிகை) சொல்லலும்,

கருத்துரை: யானைத்தீ என்னும் பெயர் வாய்ந்த கடும்பசி நோயினல் துன்புற்ற காயசண்டிகை என்பவள் மணிமேகலையை வணங்கி, 'அன்னாய்! எவ்வளவு உணவினை உண்டாலும் தணியாத பசிநோயினை யான் என் தீவினைப் பயனல் அடைந்தேன். நீ எனது பசி நோயைப் போக்கி அருளுக' என்று வேண்டினள்.

விளக்கவுரை : யானைத் தீ: பெரும் பசியைத் தரும் நோய்; ப
மக வியாதி என்று இது வழங்கப்படும்.

காயசண்டிகையின் வரலாறு : காயசண்டிகை என்பவள் காஞ்சன
என்னும் வித்தியாதரன் ஒருவனது மனைவியாவாள். அவள் காஞ்சனனுட
ஒருமுறை பொதியின் மலையினது வளத்தைக் காணச் சென்றாள். அவ்வா
சென்றவள் ஆங்கொரு நாவற் கனி ஒன்று, தேக்கிலையின் மீது வைக்கப்
டிருந்ததைக் கண்டாள். அக்கனியை உண்டவர் பன்னிரண்டாண்டுக
பசித் துன்பம் இன்றி இருப்பர். அக்கனியை ஆங்கு வைத்துச் சென்றிரு
விருச்சிகன் என்னும் முனிவர் உண்ணும்பொருட்டு ஆங்கு வந்தார். அ
பொழுது காயசண்டிகை அக்கனியின் தன்மையை உணராமல் அதனை
காலாற் சிதைத்து விட்டாள். அது கண்ட விருச்சிக முனிவர் சினங்கொண்
'நீ வான்வழியே செல்லும் மந்திரத்தை மறந்து பன்னிரண்டாண்டுக
யானைத் தீ என்னும் பெரும்பசி நோயினால் வருந்துவாயாக' என்று சாப
கொடுத்தார். அஃதுணர்ந்த காயசண்டிகை அஞ்சி, முனிவரை வணங்
அவர், காவிரிப்பூம்பட்டினத்தில் மணிமேகலை தன் அமுத சுரபியிலிருந்
தரும் உணவை உட்கொண்டால் உன் நோய் நீங்கும்' என்று சாப வி
அருளினர். பின்பு காயசண்டிகை காவிரிப்பூம்பட்டினத்திற்கு வந்தா
அங்கு மணிமேகலை தனது அமுதசுரபியிலிருந்து எடுத்துக் கொடுத்த உ
வினால் அவளது நோய் தீர்ந்தது. நோய் தீர்ந்த காலையில் காயசண்டிகை த
வரலாற்றை மணிமேகலையினிடம் விளங்க உரைத்து, அவளிடம் வி
பெற்றுச் சென்றாள்.

காரிகை - பெண். நெடியோன் - நீண்ட உருவம் (திருவிக்கிரமாவதார
எடுத்த திருமால். **நெடியோன்மயங்கி நிலமிசைத்தோன்றி :** திருமா
மயக்கமுற்று நிலவுலகில் இராமனாகத்தோன்றி. அவிச்சை என்னும் இருளா
மயங்கியே திருமால் இராமனாகப் பிறந்தான். பருவத முனிவர், நார
முனிவர் ஆகிய இருவரும் அம்பரீடன் என்பவனுக்கு இருள் (அவிச்சை
அந்தகாரம்) வருமாறு சாபம் கொடுத்தனர். அந்தச் சாபத்தைத் திருமா
இராமாவதாரக் காலத்தில் ஏற்றுக்கொண்டார். அதனாலேயே இராம
மயக்க முற்றிருந்தான் என்று சொல்லப்பட்டது. சிலர் 'சீதையைப் பி
தமையால் மயங்கி' என்றும் கூறுவர். அடல்-வெல்லுதல். **முந்நீர் :** கட
(மூன்று+நீர்=முந்நீர்) ஆற்றுநீர், ஊற்றுநீர், வேற்றுநீர் ஆகிய மூவ
நீர்களைத் தன்னகத்தே கொண்டமையால் கடலுக்கு இப்பெயர் வந்த
என்பர் சிலர். இனி, 'நீர்' என்னும் சொல்லுக்கு, 'தன்மை' என்று பொரு
கொண்டு, படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்று தன்மைகளை
கொண்ட காரணத்தால் கடலுக்கு இப்பெயர் வந்தது என்பர் வேறு சில
**குரங்கு கொணர்ந்து எறிந்த நெடுமலையெல்லாம், அணங்குடைஅள
கர் வயிறு புக்காங்கு இட்டதாற்றுக் கட்டழற் கடும்பசி :** காயசண்டி
தனது பசியின் கொடுமைக்குக் கூறிய இவ்வுவமை ஈண்டு அமைந்துள்ள
இராமன் இலங்கைக்குச் செல்ல விரும்பிக் கடலை அடைக்கத் தொடங்
காலத்தில், குரங்குகள் கொண்டுவந்து வீசிய பெரிய மலைகளெல்லா
கடலின் வயிற்றினுள்ளே புகுந்து அடங்கின. அம்மலைகளால் கடலின் வயி
நிரம்பவில்லை. அஃதாவது கடலை அணைபோட்டு அடைப்பது அரித
இருந்தது. அதுபோலவே, எவ்வளவு உணவினை உண்டாலும் தன் வயி
நிரம்பவில்லை என்றாள் காயசண்டிகை. மலைகளால் கடலின் வயிறு நி
பாமை, உணவுகளினால் காயசண்டிகையின் வயிறு நிரம்பாமைக்கு உவ

ாகும். அணங்கு - வருத்தம். அளக்கர் - கடல். புக்காங்கு - புகுந்தாற் போல. இட்டது - இட்டபொருளால். ஆற்று - தணியாத. கட்டழல் - பெரு நெருப்புப்போன்ற. பழவினைப்பயத்தால்-முன்னை வினைப்பயனால். பட்டேன்-அடைந்தேன். ஆருயிர் மருந்துவி : அரிய உயிரைப் பாதுகாக்கும் மருந்தை உடைய மணிமேகலையே! 'ஆருயிர் மருந்து' என்பது அரிய உயிர்க்கு இன்றியமையாத மருந்தாகிய சோற்றினைக் குறிக்கும். துன்னிய - நெருங்கிய. ன் நோய் - எனது பசிப்பிணி.

இலக்கணக் குறிப்பு : நெடுமலை : பண்புத்தொகை. ஆங்கு : உவம ருபு. இட்டது : ஈண்டு வினையாலணையும் பெயர். கடும்பசி : பண்புத் தாகை. அன்னை : அண்மைவிளி. கேள் + நீ = கேணீ. அருமை + யிர் = ஆருயிர் : பண்புத்தொகை.

மணிமேகலை அளித்த உணவினை உண்ட காயசண்டிகையின் நோய் நீங்கியமை (17—20)

டுத்த - மணிமேகலை தான் கையில் கொண்ட

ாத்திரத்து ஏந்திய - அமுதசுரபி யில் உள்ள

முதம் - அன்னத்தை

டித்து - பிடியாக எடுத்து

வள்கையில் - காயசண்டிகையின் கையில்

பணினள் - விரும்பியவளாய்

பெய்தலும் - இட்ட அளவில் (அதனை உண்டு)

வயிறு காய் - வயிற்றில் எரிக்கின்ற

பெரும்பசி நீங்கி - கொடியபசி நீங்க

அவள் - அக்காயசண்டிகை

துயரம் நீங்கி - தன் துயரமும் நீங்கி

தொழுதனள் - மணிமேகலையைத் தொழுது

உரைக்கும் - உரைப்பாளாயினள்.

கருத்துரை : மணிமேகலை அமுத சுரபியிலிருந்து அன்னத்தைப் பிடி ாக எடுத்துக் காயசண்டிகைக்குக் கொடுத்தாள். அதனையுண்ட காயசண்டி கயின் கொடிய பசி நோயும், துயரமும் நீங்கின. அவ்வளவில் காயசண் கை மணிமேகலையைத் தொழுது உரைப்பாளாயினள்.

விளக்கவுரை : அமுதம் - அன்னம். அவள் : காயசண்டிகை. பேணி ள் - விரும்பியவளாய். காய் - எரிக்கும். மணிமேகலை அளித்த உணவினை ண்ட காயசண்டிகையின் பெரும்பசி நோயும், துயரமும் நீங்கின.

இலக்கணக் குறிப்பு : பேணினள், தொழுதனள் : ஈண்டு இவை ற்றெச்சங்கள். காய்பசி : வினைத்தொகை. பெரும்பசி : பண்புத் தாகை. பசிநீங்கி : ஈண்டு, 'பசி நீங்க' என்று பொருள் உரைக்கப் ட்டது. 'நீங்கி' என்னும் எச்சம் திரிந்தது எச்சத்திரிபு.

காயசண்டிகையின் வரலாறு (21-74)

(தனது பெரும்பசி நோய் நீங்கப்பெற்ற காயசண்டிகை தன் வரலாற்றை விரிவாக மணிமேகலையினிடம் கூறுகின்றாள்.)

காயசண்டிகை பொதியின் மலையில் தன் கணவனுடன் தங்கியமை (21—26)

வடதிசை - வடதிசையில் உள்ள
மாசு இல் - குற்றம் இல்லாத
வால் - வெண்மையான
ஒளி - ஒளியினையுடைய
சேடி - வித்தியாதரர் உலகில்
காசு இல் - குற்றம் அற்ற
காஞ்சனபுரம் - காஞ்சனபுரம் என்னும்
கடிநகர் - காவல் பொருந்திய நகரத்தில்
உள்ளேன் - உள்ள யான்
என் - என்னுடைய
வெவ்வினை - கொடிய தீவினையானது
உருப்ப - தோன்ற (முதிர, அழல)
விஞ்சையன் தன்னொடு - என் கணவனாகிய காஞ்சனன் என்னும் வித்தியாதரனுடன்
தென்திசை - தென்திசையில் உள்ள
பொதியில் - பொதியின் மலையின் வளங்களை
காணிய - காணும் பொருட்டு
வந்தேன் —,
கடுவரல் - விரைந்து வருதலையுடை
அருவி - அருவியினது
கடும்புனல் - வேகமுள்ள நீர்
கொழித்த - தெள்ளி ஒதுக்கிய
இடுமணல் - இடுமணலையுடைய
கான்யாறு - காட்டாற்றில்
இயைந்து - என் கணவனுடன் கூ
இருந்தேன் - ஒருங்கு இருந்தேன்

கருத்துரை: 'எனது ஊர் வித்தியாதரர் உலகில் உள்ள காஞ்சனபு ஆகும். என் தீவினையினால் யான் எனது கணவனாகிய காஞ்சனனுட பொதியின் மலையின் வளத்தினைக் காணச்சென்று, ஆங்குள்ள காட்டாற்றி மணலில் தங்கியிருந்தேன்' என்று கூறினாள் காயசண்டிகை.

விளக்கவுரை: மாசு - குற்றம். வால் - வெண்மை. சேடி - வித்தி தரர் உலகு. காசு - குற்றம். காஞ்சனபுரம் - வெள்ளிமலையில் உள்ளதொ வித்தியாதர நகரம். கடி - காவல். விஞ்சையன் - வித்தியாதரன்; காஞ்சன காயசண்டிகையின் கணவன். வெவ்வினை - கொடுவினை; தீவினை. உருப் தோன்ற, அழல, முதிர. பொதியில் - பொதியின்மலை. காணிய - காணு பொருட்டு. கடுவரல் - விரைந்து வருதல். கடும்புனல் - வேகமுள்ள கான்யாறு - காட்டாறு. இயைந்து - கூடி. வால்ஒளி வடதிசைச் சே வடதிசையில் உள்ள வெண்மையான ஒளியையுடைய வித்தியாதரர் உல அவ்வுலகு வெள்ளிமலைக்கண் உள்ளதாகலின் வெண்மையான ஒளி கூ பட்டது. வெவ்வினை உருப்ப: காயசண்டிகை பொதியின் மலைக் சென்று, முனிவர் ஒருவர் சாபத்தால் யானைத் தீ நோயைப் பெற்றாள். என அவள் 'கொடுவினை தோன்ற' என்று கூறினாள். காணிய வந்தே காண்பதற்காக வந்தேன். 'காண்பதற்காக வந்து' என்றும் இதற்குப் பொ கூறி, 'இருந்தேன்' என்பதனுடன் முடிக்கலாம். இடுமணல் கான்யா காட்டாறு தெள்ளி அமைத்த மணல் மேடு. காட்டாறு இட்டமணல் மே தலால் இங்ஙனம் கூறப்பட்டது.

இலக்கணக் குறிப்பு: கடிநகர்: உரிச்சொல் தொடர். உள்ளேன் ஈண்டு வினையாலணையும் பெயர். வெம்மை + வினை = வெவ்வினை: பண்

தாகை. காணிய : 'செய்யிய்' என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம்.
டுமணல் : வினைத்தொகை.

விருச்சிக முனிவன் நாவற்பழம் ஒன்றைவைத்து நீராடச் சென்றமை (27—32)

ுப்பொழுது)	கனி - கனிந்த
ி நூல் -முறுக்கிய பூணூல் அணிந்த	நாவற்பழம் ஒன்று - நாவற் பழம் ஒன்றை
ார்பில் - மார்பும்	ஏந்தி - கையில் ஏந்தி வந்து (அதனை)
ிபுரி - திரித்து முறுக்கிய	தேக்கு இலை-ஒருதேக்கின் இலையில்
ார்சடை - நீண்டசடையும்	வைத்து - வைத்துவிட்டு,
ரவுரி உடையன் - மரவுரி ஆடையும் உடைய	சேண் நாறு - நெடுந்தூரம் மணம் வீசும் இயல்புடைய
ருச்சிகன் என்போன்-விருச்சிகன் என்னும் முனிவன்,	பூ - பூக்களின் மணம்
ருங்குலை - பெரியகுலையை உடைய	கமழ் - நிறைந்த
ண்ணை – பனையினது	பரப்பில் - பரப்பினை உடைய
ுங்கனி - கரிய கனியை	பொய்கை - நீர் நிலையில்
்த்து - ஒத்ததாகிய	ஆடச்சென்றோன் - நீராடச் சென்றனன்,
ு - பெருமை பொருந்திய	

கருத்துரை : பொதியின் மலையில் விருச்சிகன் என்னும் முனிவர் ுவர் வாழ்ந்து வந்தார். அவர் பனம் பழத்தையொத்ததொரு நாவற் ்த்தை ஏந்திவந்து, அதனைத்தேக்கிலையில் வைத்து விட்டு நீராடச் சென்றார்.

விளக்கவுரை : புரி - முறுக்கு. நூல் - பூணூல். திரி - திரித்து. வார்- ாட. உடையன் - ஆடையாக உடையவன். பெண்ணை - பனை. இருங்கனி- ருமை பொருந்திய கனி. சேண் - நெடுந்தூரம். நாறு - மணம் வீசு ்ற. கமழ் - மணம் நிறைதல். பொய்கை - நீர்நிலை. ஆட - நீராட. ண்ணைக் கருங்கனி அனையதோர் இருங்கனி நாவற்பழம் : பனையி ு கரிய கனியை ஒத்ததாகிய பெருமை பொருந்திய கனிந்த நாவற்பழம். மன்பற்றிப் பனங்கனி உவமை காட்டப்பட்டது. பனங்கனி போல் பெரிய ் இருந்தது அந்நாவற்கனி என்பது கருத்து.

இலக்கணக் குறிப்பு : கருங்கனி : பண்புத்தொகை. ஓர் : அசை.

காயசண்டிகை நாவற்கனியைச் சிதைத்தமை (33, 34)

னை - தீவினையானது	அந்தக்கருங்கனி - அந்தக் கரிய நாவற்பழத்தை
்த்தலில் - (பயன் கொடுப்ப) தோன்றுதலின்	காலால் - எனது காலால்
ுக்கோடு - (ஆங்கு)கர்வத்தோடு	சிதைத்தேன் - உதைத்துக் கெடுத்தேன்.
ன்றேன் - சென்று	

கருத்துரை : தனது தீவினைப் பயனால், விருச்சிக முனிவர் வைத்துச் ்றிருந்த நாவற் பழத்தைக் காலால் சிதைத்த செய்தியைக் காயசண் ் ஈண்டுக் குறிப்பிடுகின்றாள்.

விளக்கவுரை : உருத்தலின் - தோற்றுதலின். செருக்கு - கர்வம், ்பு. சிதைத்தல் - கெடுத்தல்.

இலக்கணக் குறிப்பு: தீவினை: பண்புத்தொகை. சென்றேன் முற்றெச்சம்.

விருச்சிக முனிவர் சினங் கொள்ளுதல் (35—42)

உண்டல் வேட்கையின் - உண்ணும் விருப்பத்துடன்
வரூஉம் - (நீராடி) வந்த
விருச்சிகன் - விருச்சிக முனிவன்,
கருங்கனிச் சிதைவுடன் - கரிய அந்நாவற்பழத்தினைச் சிதைத்த திறத்துடன்
கண்டனன் என்னை - என்னைக் கண்ணுற்றான்.
(அவன் என்னைச் சினந்து நோக்கி)
சீர் திகழ் - 'சிறப்பு விளங்கும்
நாவலில் - நாவல் மரத்தில்
திப்பியமானது - தெய்வத் தன்மை உடையது ஒன்று
ஈராறு ஆண்டில் - பன்னிரண்டு ஆண்டுகட்கு
ஒரு கனி தருவது - ஒரு பழம் கொடுப்பது.
அக்கனி - அப்பழத்தினை
உண்டோர் - உண்டவர்
ஆறிரண்டு - பன்னிரண்டு ஆண்டுகள்
மக்கள் யாக்கையின் - மக்கள் உடலில்
வரும் - உண்டாகின்ற
பசி நீங்குவர் - பசி நீங்கப் பெறுவர்
பன்னிராண்டில் - பன்னிரண்டாண்டுகளில்
ஒருநாள் அல்லது - ஒரு நாள் உண்பதல்லாமல்
உண்ணா - பிறநாட்களில் உண்ணா
நோன்பினேன் - விரதத்தை உடையவன் யான்.
(அத்தகைய இயல்புடைய)
உண்கனி - யான் இன்று உண்டற்குரிய அக்கனியை
சிதைத்தாய் - நீ கெடுத்தாய்.

கருத்துரை: நீராடி வந்த விருச்சிக முனிவர் தாம் உண்ணுதற்கு வைத்திருந்த நாவற்பழத்தைக் காயசண்டிகை சிதைத்தமையைக் கண்டு விட்டார். அவ்வளவில் அவர் சினந்து, 'சிறப்பு விளங்கும் நாவல் மரம் ஒன்று தெய்வத் தன்மை உடைய ஒரு கனியைப் பன்னிரண்டாண்டுகட்கு ஒருமுறை கொடுக்கும். அதனை உண்டோர் பன்னிரண்டு ஆண்டுகள் பசியின்றி இருப்பர். யானே பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒருமுறையே உண்ணும் விரதத்தை உடையவன். அத்தகைய இயல்புடைய நாவற்கனியை நீ கெடுத்து விட்டாய்' என்று சினந்து கூறினர்.

விளக்கவுரை: வேட்கை - விருப்பம். விருச்சிகன் - ஒரு முனிவன். சிதைத்தல் - கெடுத்தல், தூய்மையை அகற்றுதல். சீர் - சிறப்பு. திகழ் - விளங்கும். திப்பியம் - தெய்வத் தன்மை உடையது. ஈராறு - பன்னிரண்டு. ஆறிரண்டாண்டு - பன்னிரண்டு ஆண்டுகள். யாக்கை - உடம்பு. ஒருநாள் அல்லது - ஒருநாளேயல்லாமல். உண்ணா நோன்பினேன் - உண்ணாத விரதத்தை உடையவன். உண்கனி - உண்ணுதற்கு உரிய கனி. சிதைத்தாய் - கெடுத்தாய்; அழித்தாய். கண்டனன் என்னைக் கருங்கனிச் சிதைவுடன்: 'அப்பழத்தைச் சிதைத்த திறத்தினோடு என்னைக் கண்ணுற்றான் விருச்சிகன்' என்று கூறினாள் காயசண்டிகை. 'சிதைந்த கனியோடு என்னைக் கண்ணுற்றான்' என்றும் பொருள் கூறலாம். திப்பியமான: தெய்வத் தன்மை உடைய. 'தெய்வலோகத்திலிருந்து உண்டாகிய' என்று இதற்குப் பொருள் கூறலாம். திவ் - தெய்வலோகம். உண்கனி: யான் உண்டற்கு உரிய கனி. பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை உண்ணும் இயல்புடைய விருச்சிக முனிவர் உண்ணுதற்கு உரியது அக்கனி.

இலக்கணக் குறிப்பு: வரூஉம் : செய்யுளிசை நிறைக்க வந்த அளபெடை. திகழ்நாவல் : வினைத்தொகை. திப்பியம் : 'திவ்யம்' என்னும் வடசொல்லின் சிதைவு. உண்டோர் - ஈண்டு வினையாலணையும் பெயர். உண்ணு : ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

விருச்சிக முனிவர் இட்ட சாபமும், அதனை மணிமேகலை கெடுத்தமையும் (43—48)

('யான் உண்ணுங்கனியைக் கெடுத்தாயாதலால்)
அந்தரம் செல்லும் - ஆகாயத்தில் செல்லும்
மந்திரம் இழந்து - மந்திரத்தை இழந்து,
தந்தித் தீயால் - யானைத்தீ என்னும் பசி நோயால்
தனித்துயர் - ஒப்பற்ற துன்பத்தை அடைந்து
உழந்து - வருந்தி,
முந்நாலாண்டில் - (இனிவரும்) பன்னிரண்டாவது ஆண்டில்
முதிர்கனி - முதிர்கின்ற நாவற் கனியினை
நான் ——,
ஈங்கு - இங்கு
உண்ணும் நாள் - உண்ணுகின்ற நாளில்
உன் உறு பசி - உனது மிக்க பசியை
களைக - போக்குவாய்'
என - என்று
அந்நாள் - (யான் கனியினைச் சிதைத்த) அந்நாள்
ஆங்கு - அப்பொதியின் மலையில்
அவன் இட்ட - அந்த விருச்சிக முனிவன் இட்ட
சாபம் - சாபத்தை
இளங்கொடி - இளங்கொடிபோன்ற நீ (மணிமேகலை)
இந்நாள் கெடுத்தனை - இன்று கெடுத்தாய் (என்று காயசண்டிகை கூறி, மேலும் சொல்லத்தொடங்கி)

கருத்துரை : சினங்கொண்ட விருச்சிக முனிவர் காயசண்டிகையைப் பார்த்து, 'யான் உண்ணும் கனியை நீ கெடுத்து விட்டாய். எனவே நீ வானத்தே செல்லும் மந்திரத்தை இழப்பாயாக; யானைத் தீ என்னும் பெரும் பசி நோயினால் துன்பமடைவாயாக. இனிவரும் பன்னிரண்டாவது ஆண்டில் பழுக்கும் நாவற் கனியினை யான் இங்கு உண்கின்ற நாளில் உன் பசி நோய் நீங்கப் பெறுவாய்' என்று சாபம் கொடுத்தார். அச்சாபத்தை மணிமேகலை கெடுத்த செய்தியைக் காயசண்டிகை ஈண்டுக் குறிப்பிட்டு, மணிமேகலையை நோக்கி மேலும் சொல்வாளாயினள்.

விளக்கவுரை : அந்தரம் - வானம். தந்தித்தீ - யானைத் தீ என்னும் பெரும்பசி நோய்; பஸ்மக வியாதி. உழந்து - வருந்தி. முந்நாலாண்டு - பன்னிரண்டாவது ஆண்டு. முதிர் - முதிர்கின்ற; பழுக்கின்ற. உறு - மிக்க. இளங்கொடி : இளங்கொடி போன்ற மணிமேகலை. **அந்தரம் செல்லும் மந்திரம் இழந்து :** வித்தியாதரர் வானத்தே செல்லும் மந்திரத்தை உணர்ந்தவர்கள். தாம் உண்ணுதற்குரிய பழத்தைக் காயசண்டிகை சிதைத்து விட்டாளாதலால், அவள் வானத்தே செல்லும் மந்திரத்தை இழக்குமாறு சாபமிட்டார் விருச்சிக முனிவர். **தந்தித் தீயால் தனித்துயர் உழந்து :** யானைத் தீ என்னும் பஸ்மக வியாதியால் ஒப்பற்ற துன்பம் அடைந்து வருந்தி. அந்நோய் தணியாப் பசியை விளைவிக்குமாதலால், அதனால் ஒப்பற்ற துன்பம் வரும் எனப்பட்டது. **உண்ணும் நாள் உறு பசி களைக:** இனிவரும் பன்னிரண்டாவது ஆண்டில் பழுக்கும் நாவற்கனியினைத் தாம் உண்கின்ற அன்று வரை, காயசண்டிகை பசி நோயினால் துன்புறுமாறு சாபமிட்டார் விருச்சிக முனிவர். தாம் பன்னிரண்டு ஆண்டுகள் பசித்திருக்குமாறு செய்து

விட்டாளாதலால் அதே வகையில் அவள் துன்பம் அடையுமாறு சாபம் கொ
தார் அம்முனிவர். இளங்கொடி கெடுத்தனை : இளங்கொடி போல்
மணிமேகலை, அமுதசுரபியிலிருந்து வளர்ந்த அன்னத்தினைச் கொடுத்து
காயசண்டிகையின் சாபத்தினைக் கெடுத்தாள். அதுபற்றியே காயசண்டி
மணிமேகலையைப் பார்த்து இவ்வாறு கூறினாள்.

இலக்கணக் குறிப்பு : மூன்று+நான்கு+ஆண்டு=முந்நாலாண்
முதிர் கனி : வினைத்தொகை. உறுபசி : உரிச்சொல் தொடர். 'உ
என்பது 'மிகுதி' என்னும் பொருள் தரும் உரிச்சொல் ஆகும். களை
வியங்கோள் வினைமுற்று. களைக+என=களைகென : அகரம் மறைந்
தொகுத்தல் விகாரம். போலும் : ஒப்பில் போலி. 'உவமிக்க உத
'போல்' என்னும் உருபு அல்லாத சொல் இது' என்பது இதன் பொரு
கும். கொடி : உவமை ஆகு பெயர்.

சாபம் பெற்ற காயசண்டிகையைக் காஞ்சனன் அழைத்தமை (49—55)

வாடு பசி - வாடுதற்குக் காரணமாகிய பசியால்
உழந்து - துன்புற்று
மா முனி - பெருமை பொருந்திய விருச்சிக முனிவன்
போய பின் - சென்ற பிறகு,
பாடு இமிழ் - ஒலி முழங்குகின்ற
அருவி - அருவிகளையுடைய
பயமலை - பயனை உடைய பொதியின் மலையை அடைதலை
ஒழிந்து - விடுத்து,
என் - என்னுடைய
அலவலைச் செய்திக்கு - மனத்தில் தோன்றியதை ஆராயாது செய்த செய்திக்கு
அஞ்சினன் - அஞ்சினவனாய்
அகன்ற - நீங்கிய
இலகு ஒளி - விளங்கும் ஒளி உடைய
விஞ்சையன் - வித்தியாதரன் காஞ்சனன் (என் கணவன்)
விழுமமொடு - துன்பத்தோடு
எய்தி - அடைந்து,
ஆர் அணங்கு ஆகிய - அ தெய்வத் தன்மையை உடைய
அருந்தவன் தன்னால் - செய்த அரிய தவத்தினைக் கொண்ட வி சிகனால்
காரணம் இன்றியும் - காரண இல்லாமலும்
கடு நோய் உழந்தனை - கொ நோயினால் வருந்துகின்றாய்;
வான் ஊடு - ஆகாயத்தின் மீது
எழுக என - எழுவாயாக என் (காஞ்சனன்) கூற.

கருத்துரை : "விருச்சிக முனிவர் பசியால் துன்புற்றுச் சென்றபின்
நாங்கள் பொதியின் மலையை அடைதலை விடுத்தோம். ஆராயாமல் செ
என் செய்கைக்கு அஞ்சி நீங்கிய காஞ்சனன், துன்பத்துடன் எவ்
அடைந்து, 'காரணமில்லாமல் கொடு நோயால் துன்புறுகின்றனை. ஆ
வழியே என்னுடன் எழுக' என்று கூறினன்" என்னும் செய்தியைக்
சண்டிகை மணிமேகலையினிடம் கூறினாள்.

விளக்கவுரை : உழந்து - வருந்தி. பாடு - ஒலி. இமிழ் - முழ
கின்ற. பயமலை - அருவியால் உண்டாக்கிய பயனையுடைய பொதியின்
அலவலைச் செய்தி : மனத்தில் தோன்றியதை ஆராயாமல் செய்த செ
'அலமருதலைச் செய்யும் செய்தி' என்றும் இத்தொடர்க்குப் பொ
கூறலாம். (அலமருதல் - சுழலுதல், மயங்குதல்.) இலகு - விளங்கு

ஞ்சையன் - வித்தியாதரன்; காஞ்சனன். விழுமம் - துன்பம். அணங்கு; தய்வத் தன்மை. அருந்தவன் - செய்தற்கு அரிய தவத்தைச் செய்தவன்; ருச்சிகன். வான் ஊடு - வானத்தின் மீது, வானிடத்து. எழுக-எழுவா ாக. என - என்று காஞ்சனன் சொல்ல. அஞ்சினன் அகன்ற வில காளி விஞ்சையன்: அஞ்சியவனைப் நீங்கிய விளங்குகின்ற ஒளியை டைய வித்தியாதரனாகிய காஞ்சனன். இனி, 'விலகொளி' என்று பிரித்து, ட்டு விளங்குகின்ற ஒளி' என்றும் பொருள் கொள்ளலாம். காரணம் ன்றியும் கடுநோய் உழந்தனை: காரணமில்லாமல் காய சண்டிகை வற் கனியைக் காலால் உதைத்துச் சிதைத்தாள். அதனால் அவள் கொடிய ானைத் தீ நோயினால் துன்பம் அடைவாளாயினள். இக்காரணத்தாலேயே ஞ்சனன் இவ்வாறு காயசண்டிகையை நோக்கிக் கூறினன்,

இலக்கணக் குறிப்பு: வாடு பசி: வினைத்தொகை. மாமுனி: உரிச் சாற்றொடர். அஞ்சினன்: ஈண்டு முற்றெச்சம். கடுநோய்: பண்புத் தாகை. எழுக: வியங்கோள் வினைமுற்று. எழுக+என=எழுகென: கரம் மறைந்தது தொகுத்தல் விகாரம்.

காயசண்டிகையின் பசி நோயைக் காஞ்சனன் தீர்க்க மாட்டாமை (55—61)

ந்திரம் - '(வான் வழியே செல்லும்) மந்திரத்தை
றந்தேன் - மறந்துவிட்டேன்.
ன் - உடம்பிலிருந்து
பிர் நீங்கும் - உயிர் நீங்குதற்குக் காரணமாகிய
நப்பொடு - வெப்பத்துடன்
தான்றி—,
பிறுகாய் - வயிற்றினை எரிக்கின்ற
ரும்பசி - பெரிய பசியானது
நத்தும் - என்னை மிகுதியாக வருத்துகின்றது'
ன்றேற்கு - என்று சொல்லிய என் பொருட்டு
ங்கு - அங்கே
வன் - என் கணவனாகிய காஞ்சனன்
நல்லன - நல்லனவாகிய
தீங்கனி - இனிய பழங்களுள்,
கிழங்கு - கிழங்குகள்,
செழுங்காய் - செழியகாய்கள் (முதலியவற்றை)
கொணரவும் - கொணர்ந்து தரவும்
ஆற்றேனாக - எனது பசி தணியேனாக,
நீங்கல் - என்னை விடுத்துப் பிரிதலை
ஆற்றான் - ஆற்றாதவனாகிய
அவன் - என் கணவன் (காஞ்சனன்)
நெடுந்துயர் - மிக்க துயரத்தை
எய்தி - அடைந்து,
ஆங்கு - அவ்விடத்தில்
எனக்கு அருளொடும் - என்னிடம் அருளோடும்
உரைப்போன் - கூறுகின்றவன்,

கருத்துரை: வான் வழியே தன்னுடன் எழுமாறு காஞ்சனன் கூறிய ாவில், காயசண்டிகை தான் வான்வழிச் செல்லும் மந்திரத்தை மறந்த யையும், பெரும் பசி நோய் தன்னை வருத்துதலையும் கூறினள். அது ட்ட காஞ்சனன் நல்ல பழங்களையும், கிழங்குகளையும், காய்களையும் ாணர்ந்து அவளுக்குக் கொடுத்தான். அவற்றையெல்லாம் உண்ட பின்ன அவளது பசிநோய் தணியவில்லை. அது கண்டு வருந்திய காஞ்சனன் மனைவியினிடம் அருளுடன் கூறுவானாயினன்.

விளக்கவுரை: ஊன் - உடம்பு. உருப்பு - வெப்பம். என்றேற்கு - ாறு சொல்லிய என் பொருட்டு. அவன்: காஞ்சனன். தீங்கனி - இனிய

பழங்கள். ஆற்றேஞகை-பசி தணியேஞக. நீங்கல் ஆற்ருன்: தனது மனைவியை விடுத்துப் பிரிந்திருத்தலைப் பொருதவஞகிய காஞ்சனன். தன்மீது தன் கணவன் வைத்திருந்த அன்பினைக் காயசண்டிகை ஈண்டுக் குறிப்பிட்டாள்.

இலக்கணக் குறிப்பு: காய் பசி: வினைத்தொகை. பெரும்பசி, தீங்கனி, செழுங்காய்: பண்புத் தொகைகள். கொணரவும்: 'கொணு' என்பது பகுதி.

தான் காவிரிப்பூம்பட்டினத்தை அடைந்தமைக்குக் காயசண்டிகை காரணம் கூறுதல் (62—68)

சம்புத்தீவினுள்-'நாவலந்தீவு' எனப் படும் தேசத்தில்
தமிழக மருங்கில் - தமிழகத்தில்,
கம்பம் இல்லா - நடுங்குதல் இல்லாத
கழிபெருஞ் செல்வர் - மிகப் பெரிய செல்வத்தை உடையோர்
ஆற்ரு மாக்கட்கு - வறியவர்கட்கு
ஆற்றும் - வேண்டியவற்றைக் கொடுக்கின்ற
துணையாகி - துணைவராகி,
நோற்ருேர் - (முற்பிறப்பில்) தவம் செய்தோர்
உறைவது - வாழ்கின்ற
ஒரு நோன் நகர் - பெருமையை உடைய ஒரு நகரம் (காவிரிப்பூம் பட்டினம்)
உண்டு - உள்ளது.
பல நாளாயினும் - (ஆகாய வழியே செல்லக்கூடாமையால்) பல நாட்கள் ஆகுமாயினும்
நிலனெடு போகி - பூமியில் நடந்து சென்று
அப்பதிப் புகுக - அந்நகரைச் சேர்வாய்
என்று ——,
அவன் - என் கணவஞகிய காஞ்சனன்
அருள் செய்ய - கூறியருள,
இப்பதிப் புகுந்து - (அவ்வுரையின் படியே) இக்காவிரிப்பூம் பட்டினத்தை அடைந்து
ஈங்கு - இங்கே
யான் உறைகின்றேன் - யான் வசிக்கின்றேன்
(என்று மணிமேகலையினிடம் கூறிஞள் காயசண்டிகை)

கருத்துரை: விருச்சிகன் என்னும் முனிவரது சாபத்திற்கு ஆளாகி, வான்வழிச் செல்லும் மந்திரத்தை மறந்து, யானைத் தீ நோயை அடைந்து வருந்தி நின்ற காயசண்டிகையைப் பார்த்துக் காஞ்சனன், 'இந்நிலவுலகில், தமிழகத்தே, வறியவர்கட்கு ஈயும் செல்வர்கள் நிறைந்த காவிரிப்பூம்பட்டினம் என்றொரு நகரம் உள்ளது. அவ்விடத்திற்கு நடந்து செல். நாட்கள் பல ஆயினும் அவ்விடத்திற்கு நடந்து செல்' என்று கூறிஞன். அதுகேட்ட காயசண்டிகை அவ்வாறே காவிரிப்பூம்பட்டினத்தை அடைந்து, அங்கேயே தங்குவாளாயிஞள். இச்செய்தியை மணிமேகலையினிடம் கூறிஞள் காயசண்டிகை.

விளக்கவுரை: சம்பு - நாவல். சம்புத்தீவு: நாவலந்தீவு. நம் தேசத்திற்கு நாவலந்தீவு என்றொரு பெயர் உண்டு. கம்பம் - நடுக்கம். கழி - மிகுதி. ஆற்ருமாக்கள் - வறியவர். ஆற்றும் - கொடுக்கின்ற. நோற்ருேர் - தவஞ் செய்தோர். நோன் - வலிமை; ஈண்டுப் பெருமையைக் குறிக்கும். நிலனெடு போகி - பூமியில் காலால் நடந்துசென்று. நோற்ருேர் உறைவது: முற்பிறப்பில் தவஞ்செய்தோர் தங்குவது. முற்பிறப்பில் தவஞ் செய்தவர்களே காவிரிப்பூம்பட்டினத்தில் வாழும் பேறு பெறுவர். காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பு ஈண்டுக் குறிப்பிடப்பட்டது.

இலக்கணக் குறிப்பு: கழி: உரிச்சொல். புகுக: வியங்கோள் வினைமுற்று. புகுக + என்று = புகுகென்று: அகரம் மறைந்தது தொகுத்தல் விகாரம்.

காயசண்டிகை மணிமேகலையை வணங்குதல் (69 – 74)

இந்திர கோடணை விழவு அணி - இந்திரகோடணையாகிய அழகிய விழா
வருநாள் - நடைபெறும் நாளில்
இம்மாநகர் மருங்கு - இப்பெரிய நகரினிடத்தே
வந்து தோன்றி - (என் கணவனாகிய காஞ்சனன்) வந்து தோன்றி
என் - என்னுடைய
உறு - வருத்துகின்ற
பெரும் பசி - பெரும் பசியினை
கண்டனன் - கண்டு
இரங்கி - வருந்தி,
பின்வரும் யாண்டு - பின்பு எனது சாபம் கழிகின்ற ஆண்டுகளை
எண்ணினன் - எண்ணிக்கொண்டு
அவன் கழியும் - அவன் நீங்குவான்.
தணிவு இல் - (என்னுடைய) தணிதல் இல்லாத
வெம்பசி - கொடும் பசியை
தவிர்த்தனை - நீ நீக்கினாய்.
மணிமேகலை - மணிமேகலையே!
வணங்கினேன் - நின்னை யான் வணங்கினேன்.
என் - என்னுடைய
வான்பதி - சிறந்த ஊராகிய காஞ்சனபுரத்திற்கு
படர்கேன் - யான் செல்வேன். (என்று மேலும் சொல்வாளாயினாள் காயசண்டிகை)

கருத்துரை: தனது வரலாற்றைச் சொல்லி வந்த காயசண்டிகை மணிமேகலையைப் பார்த்து, 'அன்னாய்! ஆண்டுதோறும் இந்திர விழா நடைபெறும் நாளன்று என் கணவனாகிய காஞ்சனன் இங்கு வருவான்; என்னை வருத்துகின்ற பசிநோயினைக் கண்டு வருந்தி, எனது சாபம் கழிகின்ற ஆண்டுகளை எண்ணிக்கொண்டே நீங்குவான். மணிமேகலையே! நீ எனது தணியாத பெரும்பசி நோயைப் போக்கினாய். நின்னை யான் வணங்குகின்றேன். இனி யான் எனது ஊராகிய காஞ்சனபுரத்திற்குச் செல்வேன்' என்று கூறினாள்.

விளக்கவுரை: விழவு - திருவிழா. தணிவு இல் - தணிதல் இல்லாத. வெம்பசி - கொடிய பசி. வான் - சிறந்த. பதி: காஞ்சனபுரம். படர்கேன் - செல்வேன். **இந்திர கோடணை விழவணி:** 'கோடணை' என்னுஞ் சொல் 'முழக்கம்' என்று பொருள்படும். பல்வகை முழக்கங்கள் உடைமைபற்றியே விழா 'கோடணை' எனப்பட்டது. பலவகை முழக்கங்களைஉடைய இந்திர விழா என்பது இதன் பொருள். ஆண்டுதோறும் இந்திர விழா நடக்கும் நாளில் காஞ்சனன் வந்தானாதலால் இங்ஙனம் கூறப்பட்டது. **பின்வரும் யாண்டு அவன் எண்ணினன் கழியும்:** காயசண்டிகைக்குச் சாபம் நிற்கும் பன்னிரண்டு ஆண்டுகளில், எஞ்சிய ஆண்டுகளைக் காஞ்சனன் எண்ணிக்கொண்டு நீங்குவான். தனது மனைவி நோய் நீங்கித் தன்னுடன் வருதலில் காஞ்சனன் பெருவிருப்பம் கொண்டிருந்தானாதலால் இங்ஙனம் கூறப்பட்டது.

இலக்கணக் குறிப்பு: மாநகர்: உரிச்சொல் தொடர். உறு: உரிச்சொல். பெரும் பசி: பண்புத்தொகை. கண்டனன்: ஈண்டு முற்றெச்சம். வெம்மை+பசி=வெம்பசி: பண்புத்தொகை. மணிமேகலை: ஈண்டு அண்மை விளி.

உலக அறவிக்குச் செல்லுமாறு மணிமேகலைக்குக் கூறிக் காயசண்டிகை விடைபெற்றுச் செல்லுதல் (75–83)

துக்கம் - பிறவித் துன்பத்தை
துடைக்கும் - போக்குகின்ற
துகள் அறு - குற்றம் அற்ற
மாதவர் - பெரிய தவத்தோர்கள் வசிக்கின்ற
சக்கரவாளக் கோட்டம் - சக்கர வாளக்கோட்டம் என்பது ஒன்று
உண்டு - இந்நகரில் உள்ளது.
ஆங்கு அதில் - அவ்விடத்தில்
பலர் புக - பலரும் செல்லுமாறு
திறந்த - திறக்கப்பட்டிருக்கின்ற
பகுவாய் - பிளந்த வாய்போன்ற
வாயில் - வாயிலை உடைய
உலக அறவி - உலக அறவி என்னும் ஊர் அம்பலம்
ஒன்று உண்டு - ஒன்று உள்ளது.
அதனிடை - அதனிடம்
ஊர் ஊர் ஆங்கண் - ஊர்தோறும்
உறுபசி - மிக்க பசியால்
உழந்தோர் - வருந்தினோரும்
ஆரும் இன்மையின் - பாதுகாப்பார் யாரும் இன்மையால்
அரும்பசி - அரிய பசி நோயை
உற்றோர் - அடைந்து துன்புற்றோருமாய்,
இடுவோர் - தமக்கு அன்னம் இடுவோரை
தேர்ந்து - ஆராய்ந்து
இருப்போர் - இருக்கின்றவர்
பலர் - பலராவர்.
வடுவாழ் - வகிர் பொருந்திய
கூந்தல் - கூந்தலையுடைய மணிமேகலையே!
அதன் பால் - அந்த உலக அறவியினிடத்தே
போகென்று - செல்வாயாக என்று கூறி,
அவள் - அக்காயசண்டிகை
போகிய பின்னர் - சென்ற பின்பு.

கருத்துரை : காயசண்டிகை மணிமேகலையை வணங்கி, அவளைப் பார்த்து, 'அன்னாய்! இந்நகரில் சக்கரவாளக்கோட்டம் என்று ஒரு பகுதி உள்ளது. அவ்விடத்தில் உலக அறவி எனப்படும் ஊரம்பலம் ஒன்று அமைந்திருக்கின்றது. அந்த அம்பலத்தில் பசிநோய் உற்றோர் பலர் வாழ்கின்றனர். அவர்கள் தமது பசியைப் போக்குவார் வருவரோ என்று ஏங்குகின்றனர். எனவே, நீ அங்கே செல்வாயாக' என்று கூறி, மணிமேகலையினிடம் விடைபெற்றுச் சென்றாள்.

விளக்கவுரை : துக்கம் - ஈண்டுப் பிறவித் துன்பம். துகள் - குற்றம். பகு - பிளவுபட்ட. **உலக அறவி :** ஊர் அம்பலமே உலகஅறவியாகும். இது காவிரிப்பூம்பட்டினத்தைச் சார்ந்த சக்கரவாளக் கோட்டத்தில் இருந்தது. சம்பாபதி என்னும் தெய்வத்தின் கோயிலுக்கு எதிரில் இவ்வம்பலம் அமைந்திருந்தது. பலரும் தங்குதற்கு உரிய தருமசாலையே அவ்வம்பலம் ஆகும். உலக அறவியின்கண் கந்திற்பாவை என்னும் தெய்வமும் உறைந்தது. ஊரூர் ஆங்கண் - பல ஊர்களிலும். உறுபசி - மிக்க பசி. உழந்தோர் - வருந்தினோர். ஆரும் இன்மையின் - பாதுகாப்போர் ஒருவரும் இல்லாமையினால். தேர்ந்து - ஆராய்ந்து. வடு - வகிர், (வகிடு). கூந்தல் - கூந்தலையுடைய மணிமேகலை. போகியபின்னர் - சென்ற பின்பு.

இலக்கணக் குறிப்பு : வாயில் : 'இல்வாய்' என்பது 'வாயில்' என்று மாறி அமைந்தது இலக்கணப்போலி. உறுபசி : உரிச்சொற்றொடர். (ஈண்டு 'உறு' என்னும் சொல் 'மிகுதி' என்னும் பொருளைத் தரும் உரிச்சொல் ஆகும்). உழந்தோர் : ஈண்டு வினையாலணையும் பெயர். கூந்தல் : ஈண்டு அண்மை விளி.

“முகந்திரிந்து நோக்கக் குழையும் விருந்து”

மணிமேகலை உலக அறவியை அடைந்தமை (83-90)

ஆயிழை - ஆராய்ந்தெடுக்கப் பெற்ற அணிகலனை அணிதற்குரிய மணிமேகலை
ஓங்கிய - மாடங்கள் உயர்ந்த
வீதியின் - தெருவின்கண்
ஒருபுடை - ஒரு புறமாக
ஒதுங்கி - ஒதுங்கிச் சென்று,
வலமுறை - வலமுறையாக
மும்முறை - மூன்று முறைகள்வந்து
வந்தனை செய்து - பணிந்து
அவ்வுலகஅறவியின் - அந்த உலக அறவியின்கண்
ஒரு தனி - தான் தனியே
ஏறி - சென்று
பதியோர் தம்மொடு - நகரில் உள்ளாருடன்
பலர் - பலரும்
தொழுது ஏத்தும் - துதித்து வணங்கும்
முதியோள் - முதியவளாகிய சம்பாபதியின்
கோட்டம் - கோயிலை
மும்மையின் - மனம், மொழி, மெய் ஆகிய மூன்றினாலும்
வணங்கி - வணக்கஞ் செய்து,
நெடுநிலை உடை - நீண்ட நிலையினை உடைய
கந்து - தூணின்கண் இருந்து
காரணம் காட்டிய - பழவினையாகிய காரணத்தைக் காட்டும் பொருட்டு எழுதப்பட்ட
தம்துணை - தம் துணையாகிய
பாவையை - கந்திற்பாவையை
தான்தொழுது - (மணிமேகலை) தான் வணங்கி,
ஏத்தி - துதித்து.

கருத்துரை : காயசண்டிகை கூறிய உரையின்படியே மணிமேகலை உலக அறவியை அடைந்து, சம்பாபதியைத் தன் மனமொழி மெய்களால் வணங்கி, கந்திற்பாவையைப் பின்பு வணங்கித் துதித்தாள்.

விளக்கவுரை : ஆய் - ஆராய்ந்தெடுக்கப்பெற்ற. இழை - அணிகலன். ஆயிழை: ஈண்டு மணிமேகலை. புடை - புறம். வந்தனை செய்து - பணிந்து. பதியோர் - நகரில் உள்ளோர். முதியோள் : முதியவளாகிய சம்பாபதித் தெய்வம். இத்தெய்வத்தின் கோயிலுக்கு எதிரில்தான் உலக அறவி இருந்தது. கோட்டம் - கோயில். மும்மை : மனம், மொழி, மெய் ; மூன்று முறை என்றும் பொருள் கொள்ளலாம். கந்து - தூண். காட்டிய - காட்டும் பொருட்டு. பாவை : கந்திற்பாவைத் தெய்வம். இத்தெய்வத்தின் உரு ஒரு தூணில் நிருமிக்கப்பட்டிருந்தது. தூணில் இருத்தல் பற்றி ஈண்டுள்ள தெய்வம் கந்திற்பாவைத் தெய்வம் என்று பெயர் பெற்றது. ஏத்தி - துதித்து. **கந்துடை நெடுநிலைக் காரணங் காட்டிய தந்துணைப் பாவை :** நெடிய நிலையினையுடைய தூணிலிருந்து, பழவினையாகிய காரணம் காட்டும் பொருட்டு எழுதப்பெற்ற தம் துணையாகிய தெய்வம் : கந்திற் பாவைத் தெய்வம். பழவினையாகிய காரணத்தைக் காட்டும் பொருட்டு மயனால் எழுதப்பட்டது அது. மணிமேகலையோடு மற்றையோரையும் சேர்த்து ஈண்டு 'தம்துணைப் பாவை' எனப்பட்டது.

இலக்கணக் குறிப்பு : நெடுநிலை : பண்புத்தொகை. காட்டிய : செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

மணிமேகலை உலக அறவியில் யாவர்க்கும் உணவளித்தலும், ஆங்கெழுந்த பேரொலியும் (91-98)

வெயில்சுட வெம்பிய - சூரியனின் கதிரால் சுடப்பெற்று வெம்பிய
வேய் - மூங்கில்
கரி - கரிந்த
கானத்து - காட்டினிடத்தே
கருவி - தொகுதியாகிய
மாமழை - பெரு மேகங்கள்
தோன்றியது என்ன - தோன்றி னாற் போல,
பசி - பசியானது
தின - உடலைத் தின்ன
வருந்திய - வருத்தமடைந்த
பைதல் - துன்பத்தினை உடைய
மாக்கட்கு - மக்களுக்கு
ஆயிழை - மணிமேகலை
அமுதசுரபியோடு - அமுதசுரபியுடன்
தோன்றி —, (ஆங்கிருந்தவர்களைப் பார்த்து)
ஆபுத்திரன் கை - (ஆபுத்திரனது கையில் இருந்த
அமுதசுரபி இஃது - அமுதசுரபி யாகும் இது
ஏற்போர் யாவரும் - பிச்சை வாங்க விரும்புவோர் யாவரும்
வருக - வருவீர்களாக
என - என்றுகூற, (அவ்வளவில்)
யாணர் - புதுவருவாயினை உடைய
பேர் ஊர் - பெரிய ஊராகிய காவிரிப்பூம்பட்டினத்தைச் சார்ந்த
அம்பலம் மருங்கு - உலக அறவி என்னும் ஊர் அம்பலத்தின்கண்
ஊண் ஒலி - உணவு உண்ணும் ஆரவாரமாகிய
அரவத்து ஒலி - முழக்கம்
எழுந்தன்று - எழுந்தது.

கருத்துரை : சூரியனது வெம்மையால் கரிந்த காட்டில் பெருமேகங்கள் தோன்றினாற்போல மணிமேகலை அமுதசுரபியுடன் உலக அறவியை அடைந்தாள். அவ்வாறு அடைந்தவள் எல்லோரையும் பார்த்து, 'ஆபுத்திரன் கையில் இருந்த அமுதசுரபி இது. பிச்சை வாங்க விரும்புவோர் யாவரும் வருக' என்று கூறினாள். அவ்வளவில் யாவரும் வந்து உணவினை வாங்கி உண்ணலாயினர். அதனால் அம்வம்பலத்தில் உணவு உண்ணும் பேரொலி எழுந்தது.

விளக்கவுரை : வேய் - மூங்கில். கரி - கரிந்த. கானம் - காடு. கருவி - தொகுதி, கூட்டம். மழை - மேகம். பைதல் - துன்பம். ஆயிழை : மணிமேகலை. ஏற்போர் - பிச்சை வாங்குவோர். ஊண் - உணவு உண்ணும். அரவம் - முழக்கம். யாணர் - புது வருவாய். மருங்கு - இடம். **வெயில் சுட வெம்பிய வேய்கரி கானத்துக் கருவி மாமழை தோன்றியது என்ன :** சூரியனின் கதிரால் சுடப்பட்டு வெம்பிய மூங்கில் கரிந்த காட்டில், கூட்டமான மேகங்கள் தோன்றி மழை பொழிந்தாற்போல, மணிமேகலை உலக அறவியில் தோன்றிப் பசியால் வாடிய மக்களுக்கு உணவு கொடுத்தாள். **உவமைப் பொருத்தம் :** உலக அறவியில் பசியுடன் வருந்திய மக்கட்குச் சூரியனது கதிரால் சுடப்பட்டு வெம்பிய காடு உவமை. மணிமேகலை அமுதசுரபியுடன் ஆங்குத் தோன்றியமைக்குக் கூட்டமான மேகங்கள் ஆங்கு வருதல் உவமை. பசியால் வருந்தியோர்க்கெல்லாம் மணிமேகலை உணவு கொடுத்தமைக்குக் கூட்டமான மேகங்கள் மழைபொழிதல் உவமை.

"ஆபுத்திரன் கை அமுதசுரபி" என்பதன்கண் உள்ள வரலாறு : வாரணாசி என்னும் ஊரில், அபஞ்சிகன் என்னும் அந்தணனுக்குச் சாலி என்பவள் மனைவியாக இருந்தாள். அவள் தனது தீயவொழுக்கத்தால் வந்த பாவத்தைப் போக்கிக் கொள்ளும் பொருட்டுக் கன்னியா குமரிக்கு நீராடச்

செல்வாளாயினள். அவள் அதுகாலையில் கருவுற்றிருந்தாள். இடைவழியில் அவளுக்கு ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. அக்குழந்தையை அவ்விடத்திலேயே விடுத்து, அவள் சென்று விட்டாள். அக்குழந்தையை ஆங்கிருந்த பசுவொன்று பாலூட்டி வளர்த்து வந்தது. அதுபொழுது அவ்வழியே வந்த பூதியென்னும் அந்தணன் அக்குழந்தையை வளர்த்து வந்தான். அக்குழந்தை சின்னாட்கள் பசுவினால் வளர்க்கப்பட்டு வந்ததாதலால் அதற்கு 'ஆபுத்திரன்' என்னும் பெயர் வழங்கலாயிற்று. ஆபுத்திரன் பிறகு வறுமையுற்றுப் பிச்சையெடுத்து ஏழை எளியவர்களைக் காத்து வந்தான். அந்நிலையில்தான் அவனுக்குச் சிந்தாதேவியின் அருளால் அமுதசுரபி கிடைத்தது. அமுதசுரபியுடன் அவன் மணிபல்லவம் என்ற தீவில் இறங்கியிருந்தமையை அறியாமல் அவனை ஏற்றி வந்த மரக்கலம் சென்றுவிட்டது. அமுதசுரபியுடன் தனியே அங்கிருக்க விரும்பாத ஆபுத்திரன், அப்பாத்திரத்தை ஆங்கிருந்த பொய்கையில் இட்டு உண்ணாநோன்பிருந்து உயிர் துறந்தான். அந்த அமுதசுரபியே மணிமேகலைக்குக் கிடைத்தது.

இலக்கணக் குறிப்பு: கரிகானம்; வினைத்தொகை. தின: ஒரு பொருளுக்கு உரிய இலக்கணம் மற்றொரு பொருளுக்கு ஏற்றி உரைக்கப்பட்டமையால் இஃது இலக்கணை வழக்கு. வருக: வியங்கோள் வினைமுற்று. ஒலி அரவம்: ஒரு பொருள் இருசொல். பேரூர்: பண்புத்தொகை. ஈற்றில் உள்ள 'என்' என்பது அசைநிலை.

நல்லொழுக்கப் பயிற்சி

மணிமேகலைக்கு அமுதசுரபி கிடைத்தது. அதிலிருந்து எடுக்க எடுக்க உணவு வளர்ந்தது. அவ்வுணவினைக் கொண்டு அவள் காயசண்டிகையின் பெரும்பசி நோயினைப் போக்கினாள்; பசியால் வாடிய உயிர்கட்கெல்லாம் உணவளித்தாள். எல்லா அறங்களினும், உணவு கொடுக்கும் அறமே உயர்ந்தது. பசிப்பிணி என்னும் பாவி மனிதனுடைய மனிதத் தன்மையை அகற்றி விடும். எனவே, உலகில் பசியும் பட்டினியும், பஞ்சமும் நோயும் நீங்குமாறு செய்யப்பாடுபடுதல் நம் தலைக் கடமையாகும்.

---

2. கம்ப ராமாயணம்

பெயர்க் காரணம்: கம்பராமாயணம் என்னும் சொற்றொடர் கம்பர் + ராம + அயநம் என்னும் மூன்று சொற்களால் ஆயது. ராம + அயநம் = ராமாயணம்: வடமொழித் தீர்க்கசந்தி. வடமொழி இலக்கண விதிப்படி இச்சொற்றொடர் புணர்ந்துள்ளது. இச்சொற்றொடர்க்கு 'இராமனை அறிவிப்பது', 'இராமனை அறிதற்கு இடமாக உள்ளது', 'இராமனது கதை', 'இராமனைப் பொருளாகக் கொண்ட நூல்' முதலியன பொருளாகும். கம்பர் + ராமாயணம் = கம்ப ராமாயணம். 'சில விகாரமாம் உயர்திணை' என்னும் நன்னூல் விதிப்படி 'கம்பர்' என்னும் சொல்லில் உள்ள ரகரம் கெட்டு இவ்வாறு புணர்ந்தது. இச்சொற்றொடரை, 'கம்பரால் பாடப்பெற்ற இராமாயணம்' என்று விரித்தால் மூன்றும் வேற்றுமை உருபும்

பயனும் உடன் தொக்க தொகை ஆகும். 'கம்பரது இராமாயணம்' என்று விரித்தால் ஆறும் வேற்றுமைத் தொகை ஆகும்.

முதல் நூல்: வடமொழியில் ஆதிகாவியம் என்று வழங்கப்படுவது இராமாயணம் ஆகும். அதனை எழுதியவர் வால்மீகி முனிவர் ஆவார். அந்நூலே கம்ப ராமாயணத்திற்கு முதல் நூல் ஆகும். வால்மீகி ராமாயணம் கம்ப ராமாயணத்திற்கு முதல் நூலாகக் கருதப்பட்டாலும், கம்பர் அதனையே பின்பற்றினர் அல்லர். தமிழ்நாட்டில் இராமாயணக் கதை பெரு வழக்கில் இருந்து வந்தது. எனவே அக்கதையைக் கம்பர் ஒரு காவியமாகப் பாடினர். கம்பர் தமிழ்ப் புலவர் ஆதலாலும், தமிழ் இலக்கிய நூல்கள் பலவற்றைப் படித்தவர் ஆதலாலும், தமிழ் மக்களின் பழக்க வழக்கங்களை நன்கு உணர்ந்தவர் ஆதலாலும் அவற்றின் துணைகொண்டு இராமாயணத்தைப் பாடினர். எனவே கம்ப ராமாயணத்தில் இராமன் சிறந்த தமிழ் வீரனாகவும், சீதை தமிழ்நாட்டுச் சிறந்த பெண்ணாகவும் அமைக்கப்பட்டுள்ளனர். இக்கதை தமிழ்நாட்டுக் கதைபோலவே அமைந்துள்ளது. சிந்தாமணி, திருக்குறள் முதலாகிய நூல்களிற் காணப்படும் கருத்துக்கள் பல இந்நூலில் அமைந்துள்ளன.

நூலின் வேறுபெயர்: கம்பர் தமது இராமாயணத்திற்கு 'இராமாவதாரம்' என்று பெயர் வைத்தார்.

பிரிவுகள்: இந்நூல் பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தர காண்டம, யுத்த காண்டம் என்னும் ஆறு காண்டங்களைக் கொண்டது. இந்நூலில் 10,500 பாடல்கள் உள்ளன. ஏழாவது காண்டமாகிய உத்தர காண்டத்தைப் பாடியவர் ஒட்டக்கூத்தர் என்று சிலரும், வாணியன் தாதன் என்று சிலரும் கூறுகின்றனர்.

ஆசிரியர் வரலாறு

கம்பர் சோழ மண்டலத்தில் திருவழுந்தூரில் பிறந்தவர். அவ்வூர் இப்பொழுது தேரழுந்தூர் என்று வழங்கப்படுகிறது. அது மாயவரத்திற்கு அண்மையில் உள்ளது. இவர் உவச்சர் குலத்தில் பிறந்தவர் என்பர்; வேளாளர் குலத்தைச் சேர்ந்தவர் என்றும் சிலர் கூறுகின்றனர். இவரது தந்தையார் ஆதித்தன் என்பவர் ஆவார். கம்பர் வைணவ மதத்தைச் சேர்ந்தவர் என்பர். இவரை ஆதரித்தவர் திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளல் என்பவர் ஆவார். கம்பரைப்பற்றி வழங்கும் வரலாறுகள் பல.

பெயர்க் காரணம்: காஞ்சிபுரத்தில் கோயில் கொண்டிருக்கும் சிவபிரானுக்கு ஏகம்பர் என்பது பெயராகும். அதன் முதற்குறையாகிய 'கம்பர்' என்னும் பெயர் இவருக்கு அமைந்தது என்று சிலரும், கம்பங் கொல்லையைக் காத்தமையால் இப்பெயர் வந்தது என்று வேறு சிலரும், 'கம்பநாடுடைய வள்ளல்' என்பதால் நாட்டின் பெயர் இவருக்கு அமைந்ததென்று மற்றும் சிலரும் கூறுவர். இவ்வாறன்றி, கம்பர் என்னும் பெயர் இயற் பெயர் என்றே சிலர் கூறுகின்றனர்.

புகழுரைகள்: 'புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாடு', 'கல்வியிற் பெரியன் கம்பன்', 'கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்', 'கம்பநாடன் கவிதையைப் போல் கற்றோர்க்கு இதயம் களியாதே', 'கவிச் சக்கரவர்த்தி கம்பன்', 'விருத்தம் என்னும் ஒண்பாவில் உயர் கம்பன்' முதலியன கம்பரது புகழை விளக்க எழுந்த உரைகளாம்.

நூல் இயற்றக் காரணம்: 'ஆசை பற்றி அறையலுற்றேன்' என்று கம்பரே கூறியிருத்தலால் ஆசை பற்றியே இந்நூலைக் கம்பர் பாடினர் என்று சொல்வது பொருந்தும். குலோத்துங்க சோழனும், சடையப்ப வள்ளலும் கேட்டுக் கொண்டதற்கு இணங்கக் கம்பர் இந்நூலைப் பாடினர் என்றும் கொள்ளலாம். இந்நூலைக் கம்பர் திருவரங்கத்தில் அரங்கேற்றினர் என்பர்.

நன்றியறிதற் பண்பு: கம்பரை ஆதரித்தவர் சடையப்ப வள்ளல். அவ்வள்ளலின் நன்றியை நினைவு கூர்தற் பொருட்டுக் கம்பர் இராமாயணத்தில் பத்து இடங்களில் அவரது வள்ளன்மையைப் பாராட்டியுள்ளார்.

இயற்றிய வேறு நூல்கள்: ஏரெழுபது, சடகோபர் அந்தாதி, சரசுவதி அந்தாதி, சிலை யெழுபது, திருக்கை வழக்கம் முதலிய நூல்களைக் கம்பர் பாடினர் என்று சொல்லப்படுகிறது.

காலம்: கம்பர் 12-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர் என்று ஒரு சாராரும், 9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்று மற்றொரு சாராரும் கூறுகின்றனர். ஔவை, புகழேந்தி, ஒட்டக்கூத்தர், பேராசிரியர் முதலியோர் இவருடன் ஒரே காலத்தில் வாழ்ந்த புலவர்கள் என்று சொல்லப் படுவதால் இவருடைய காலத்தை 12-ஆம் நூற்றாண்டு என்று கொள்வது பொருந்தும்.

நமது பாடப் பகுதி: நமது பாடப் பகுதியாகிய காட்சிப் படலம் கம்ப ராமாயணத்தில் ஐந்தாவது காண்டமாகிய சுந்தர காண்டத்தில் உள்ளது.

சுந்தர காண்டம் என்று பெயர்வந்த காரணம்: சுந்தரம் என்ற சொல் 'அழகு' என்று பொருள்படும். ஒரு கதை நிகழ்ச்சியில் தலைவன், தலைவி ஆகிய இருவரும் நெடுங்காலம் பிரிந்திருந்து மறுபடியும் ஒன்று கூடுகின்ற பகுதியே சுவைமிக்க பகுதியாகக் கருதப்படும். இக்காண்டத்தில் இராமனும் சீதையும் நேரில் பார்த்துக் கொள்ளவில்லை யென்றாலும், இராமன் அனுப்பிய கணையாழியைச் சீதையும், சீதை அனுப்பிய சூளாமணியை இராமனும் கண்டார்கள் ஆதலாலும், ஒருவரையொருவர் நேரில் கண்டாற் போன்ற மகிழ்ச்சியை அடைந்தார்கள் ஆதலாலும் இப்பகுதி அழகுமிக்க பகுதியாகக் கருதப்படுகின்றது. இக்காரணத்தினாலேயே சுந்தர காண்டம் என்ற பெயர் இதற்கு அமைந்தது என்பர் ஒருசிலர். கம்பராமாயணச் செய்யுட்களுள் சொற்சுவையும், பொருட்சுவையும் நிறைந்து அழகுபட அமைந்திருக்கும் பகுதி இது ஆதலால் இப்பெயரைப் பெற்றது என்பர் வேறு சிலர். அநுமனுக்குச் சுந்தரன் என்ற ஒரு பெயர் உண்டு ஆதலாலும், இக்காண்டத்தில் வரும் கதை நிகழ்ச்சியில் அநுமனே பெரும்பங்கு எடுத்துக் கொள்கின்றான் ஆதலாலும் அநுமனுடைய பெயரை இக்காண்டத்திற்குக் கம்பர் அமைத்தார் என்று மற்றும் சிலர் கூறுகின்றனர். காரணம் எதுவாயினும், இக்காண்டத்தில் உள்ள செய்யுட்கள் யாவும் சுவைமிக்க பாடல்கள் என்பதில் ஐயமில்லை.

காட்சிப் படலம்: காட்சி—காண்டல். அஃதாவது இராமனால் சீதையைத் தேடுமாறு அனுப்பப்பெற்ற அநுமன் இலங்கையில் அசோக வனத்தின்கண்ணே சீதையைக் கண்டு களிக்கும் நிகழ்ச்சி இப்படலத்தில் கூறப்பட்டுள்ளது. சீதை இராமனை எண்ணிப் பலவாறு வருந்தும் செய்தியும், அவள் திரிசடையினிடம் தனக்குத் தோன்றிய நன்னிமித்தங்களைக் கூறும் செய்தியும் நம்பாடப் பகுதியில் வந்துள்ளன.

அசோகவனத்தே சீதைமெலிந்து வருந்துதல் (1-15)

1. சீதையின் வாடிய நிலை

வல் மருங்குல் - வலிய இடையினை உடைய
வாள் அரக்கியர் - வாட்படை கொண்ட அரக்கியர்
அங்கு இருந்தார் நெருக்க - சீதையைச் சுற்றி இருந்தவர்களாய் அச்சுறுத்த (அதனால்)
கல் மருங்கு எழுந்து - மலையினிடத்தே தோன்றி
என்றும் ஓர் துளிவரக் காணா - எக்காலத்தினும் சிறுமழைத் துளியையும் பெறாத
நல்மருந்து போல் - நல்ல சஞ்சீவிக் கொடியைப்போல
நலன் அற - அழகுகெட
உணங்கிய நங்கை - வாடிய சீதை
மென் மருங்குல் போல - தனது மெல்லிய இடையைப் போல
வேறு உள அங்கமும் - ஏனைய உறுப்புக்களும்
மெலிந்தாள் - மெலியப் பெற்றாள்.

கருத்துரை: சீதையைச் சுற்றிலும் அரக்கியர் இருந்து அச்சுறுத்தினர். மழைபெறாது வாடிய சஞ்சீவிக் கொடியைப் போல் சீதையும் வாடினாள். அவளுடைய இடையைப்போலவே ஏனை அங்கங்களும் மெலிந்தன.

விளக்கவுரை: மருங்குல் - இடை. நெருக்க - அச்சுறுத்த. கல் - கற்கள், மலை. துளி - நீர்த்துளி. மருந்து - சஞ்சீவிக் கொடி. நலன் - அழகு. உணங்கிய - வாடிய. **கல்மருங்கு எழுந்து என்றும் ஓர் துளிவரக்காணா நன் மருந்துபோல்:** மலையில் தோன்றி மழை நீரைப் பெறாத சஞ்சீவிக் கொடி வாட்டமடைந்திருப்பது போல இராமனது வருகையைக் காணாமல் சீதை வாட்டமுற்றிருந்தாள். சஞ்சீவிக் கொடி சீதைக்கு உவமை. அக்கொடி மழை பெறாமல் வாடுதல் சீதை இராமனைக் காணாமல் வாடுதலுக்கு உவமை. மழை இராமனுக்கு உவமை. **மென்மருங்குல் போல்:** அவளது இடை மெலிந்திருந்தது போல ஏனை உறுப்புக்களும் மெலிந்தன.

இலக்கணக் குறிப்பு: காணா: ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். இப்பாடலில் வாட்டமடைந்த சீதைக்கு உவமையாக மழைபெறாத சஞ்சீவிக்கொடி காட்டப்பட்டிருத்தலால் உவமை அணி உள்ளது.

2. அரக்கியர் நடுவில் ஒளியிழந்து அஞ்சியிருந்த சீதையின் நிலை

மயில் இயல் - மயில் போன்ற சாயலையும்
குயில் மழலையாள் - குயில்போன்ற இனிய சொற்களையும் உடைய சீதை
துயில் என - தூங்குவதற்கு என்று
கண்கள் இமைத்தலும் - கண் இமைத்தலையும்
முகிழ்த்தலும் - மூடுவதையும்
துறந்தாள் - விடுத்தாள்.
வெயில் இடை தந்த - வெயிலினிடத்தில் வைத்த
விளக்கு என - விளக்குப் போல
ஒளி இலா மெய்யாள் - ஒளி இல்லாத உடம்பை உடையவளாய் இருந்தாள்.
அயில் எயிற்று - கூரிய பற்களையுடைய
வெம்புலிக் குழாத்து - கொடிய புலிக் கூட்டத்தின் நடுவில்
மான் இளம்பேடை - இளமை வாய்ந்த பெண்மான் ஒன்று
அகப்பட்டது அன்னாள் - அகப்பட்டது போன்ற நிலையில் இருந்தாள் சீதை.

"நெஞ்சத்துக் கோடாமை சான்றோர்க்கு அணி"

கருத்துரை : மயில்போன்ற மென்மையை உடைய சீதை தூங்கினா ளல்லள். வெயிலினிடத்தே வைக்கப்பெற்றிருந்த விளக்கைப் போலவும், புலிக்கூட்டத்தின் நடுவில் அகப்பட்ட மான்போலவும் அவள் இருந்தாள்.

விளக்கவுரை : முகிழ்த்தல் - மூடுதல். இயல் - சாயல். மழலை - குதலைச் சொல். அயில் - கூர்மை. எயிறு - பல். குழாம் - கூட்டம். **கண்கள் இமைத்தலும் முகிழ்த்தலும் துறந்தாள் :** சீதை அசோகவனத்தில் தூக்கம் இன்றி இராமனை நினைத்து நினைத்து உருகியிருந்தாள் ஆதலால் இவ்வாறு கூறப்பட்டது. **வெயிலிடைத் தந்த விளக்கு :** வெயிலில் வைக்கப்பட்ட விளக்கு ஒளி மழுங்கிக் காணப்படுவதுபோல இராமனைப் பிரிந்ததால் அழகும் ஒளியும் இழந்து சீதை காணப்பட்டாள். **மானிளம் பேடை அயில் எயிற்று வெம் புலிக்குழாத்து அகப்பட்டது அன்னாள் :** புலிக்கூட்டத்தின் நடுவில் அகப்பட்ட பெண்மானைப் போன்ற நிலையில் சீதை இருந்தாள். சீதையைச் சுற்றியிருந்த அரக்கியர்க்குப் புலிக்கூட்டமும், அரக்கியர் நடுவே இருந்த சீதைக்குப் பெண்மானும் உவமைகள். புலிக்கூட்டத்தின் நடுவே அகப்பட்ட மான் எவ்வாறு அஞ்சி நிற்குமோ அதைப்போல் சீதை நடுக்கத்துடன் இருந்தாள்.

இலக்கணக் குறிப்பு : இலா: ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். மயில் இயல்: உவமத் தொகை. இமைத்தல், முகிழ்த்தல்: தொழிற் பெயர்கள். வெம்புலி: பண்புத் தொகை.

3. இராமனது பிரிவால் வருந்திய சீதையின் நிலை

விழுதல் - கீழே விழுதலையும்
விம்முதல் - விம்மி அழுதலையும்
மெய்யுற வெதும்புதல் - உடம்பு மிக வெப்பத்தை அடைதலையும்
வெருவல் - அஞ்சுதலையும்,
எழுதல் ஏங்குதல் இரங்குதல் - எழுதலையும், மனம் கலங்குதலையும், பரிதவித்தலையும்,
இராமனை எண்ணி - இராமனை நினைத்து
தொழுதல் - வணங்குதலையும்
சோருதல் துளங்குதல் - தளர்தலையும் நடுங்குதலையும்,
துயர் உழந்து உயிர்த்தல் - துன்பத்தால் வருந்திப் பெருமூச்சு விடுதலையும்
அழுதல் அன்றி - அழுதலையும் அல்லாமல்
அயல் ஒன்றும் - வேறு எதனையும்
செய்குவது அறியாள் - செய்ய அறியாதவளாய் இருந்தாள்.

கருத்துரை : விழுதல், விம்முதல், உடல் வெதும்புதல், அஞ்சுதல், எழுதல், ஏங்குதல், இரங்குதல், தொழுதல், தளர்தல், நடுங்குதல், பெருமூச்சு விடுதல், அழுதல் முதலியவற்றையே சீதை செய்துகொண்டிருந்தாள்.

விளக்கவுரை : மெய் - உடல். வெருவல் - அஞ்சுதல். சோருதல் - தளர்தல். துளங்குதல் - நடுங்குதல். உழந்து - துன்புற்று. உயிர்த்தல் - பெருமூச்சு விடுதல். இராமனைப் பிரிந்த சீதையின் மனம் பொறுக்க மாட்டாமல் ஒரு நிலையில் இன்றித் தவித்தது. அந்நிலையில் அவளிடம் வருத்தத்தை அறிவிக்கும் நிகழ்ச்சிகள் பல தோன்றின. அந்நிகழ்ச்சிகளே விழுதல் முதலாகச் சொல்லப்பட்ட செயல்கள் ஆகும்.

இலக்கணக் குறிப்பு : விழுதல், விம்முதல், வெதும்புதல் முதலியவை தொழிற் பெயர்கள்.

4. கரிய பொருள்களைக் காணுந்தோறும் சீதை கலங்கினமை

அரிய மஞ்சினோடு - அருமையான மேகத்தோடு
அஞ்சனம் முதல் - மை முதலான
இவை அதிகம் கரிய - இத்தகைய மிகக் கரிய பொருள்களை
காண்டலும் - கண்டவுடன்
கண்ணின் நீர் - கண்ணீர்
கடல் புக - கடலில் பாயும் அளவில்
கலுழ்வாள் - நீரை வெளிப்படுத்தி அழுவாள் (சீதை).
காதலின் உரிய ஒருவரோடு ஒருவரை - காதல் உரிமையைப்பெற்ற ஒருவரிடமிருந்து மற்றொருவரை
உலகில் - உலகத்தில்
பிரிவு எனும் துயர் - பிரிந்திருத்தல் என்கின்ற ஒரு துயரமானது
உருவுகொண்டால் அன - ஓர் உருவத்தைக் கொண்டது போன்ற
பிணியாள் - துன்பத்தை உடையவளாக (சீதை) இருந்தாள்.

கருத்துரை : மேகம், மை முதலிய கரிய பொருள்களைக் கண்டவுடன் சீதைக்கு இராமனது நினைவு உண்டாயிற்று. அவ்வாறு உண்டான அளவில் அவள் அழுதாள். பிரிவு என்னும் துயரம் ஓர் உருவம்கொண்டால் போன்ற துன்பத்தை அவள் அடைந்தாள்.

விளக்கவுரை : மஞ்சு - மேகம். அஞ்சனம் - மை. கலுழ்தல் - அழுதல். பிணி - துன்பம். **அரிய மஞ்சு :** இராமனது கரிய திருவுருவத்திற்கு உவமையாக இருக்கும் அருமைபற்றியும், இலங்கையில் நுழைவதற்குச் சூரியனும், வாயுவும் இராவணனது இசைவைப் பெற்றே வரவேண்டுமாதலால் மேகத்தின் வரவு அரியது ஆதலாலும் இவ்வாறு கூறப்பட்டது. **அதிகம் கரிய காண்டலும் கண்ணின் நீர் கடல்புகக் கலுழ்வாள் :** கருநிறம் உடைய பொருள்களைக் கண்டவுடன், அத்தகைய நிறத்தைக்கொண்ட இராமனின் நினைவு சீதைக்கு வருகின்றதாதலால், இராமனது பிரிவைப் பொறுத அவள் கண்களிலிருந்து நீர் வெளிப்படுகின்றது. ஒரு பொருளைக் காணுங்கால் அப்பொருளின் உருவம், தோற்றம், அமைப்பு, நிறம் முதலியவை அவற்றைத் தன்னிடத்தேகொண்ட மற்றொரு பொருளை நினைவூட்டுவது இயற்கை ஆகும். இதனை ஆங்கிலத்தில் Association of Ideas என்பார்கள். **பிரிவு எனும் துயர் உருவுகொண்டால் அன :** பிரிதல் என்கின்ற துயரம் ஓர் உருவத்தைக் கொண்டாற் போல. துயரத்திற்கு உருவம் இல்லை. சீதையின் துயரக் காட்சியைக் கண்டோர் 'துயரமே சீதையின் உருவாக அமைந்துள்ளது போலும்' என்று கருதுவர்.

இலக்கணக் குறிப்பு : 'அன்ன' என்னும் சொல் இங்கு 'அன' என்று வந்தது இடைக் குறை விகாரம்.

5. சீதையின் பொலிவிழந்த நிலை

ஆவி அம் துகில் - புகைபோன்ற மெல்லிய ஓர் ஆடையையே
புனைவது ஒன்று அன்றி - உடுத்துவது அல்லாமல்
வேறு அறியாள் - வேறு ஆடையை அறியாதவளாய்
தூவி அன்னம் - சிறகுகளை உடைய அன்னப் பறவைகள் தங்குகின்ற
மென்புனல் இடை - மென்மையைத் தருகின்ற தண்ணீரில்
தோய்கிலா மெய்யாள் - முழுகாத உடலை உடையவளாய்
தேவு - தெய்வத்தன்மை வாய்ந்த
தெண் கடல் - தெளிந்த கடலிடத்துத் தோன்றிய

அமிழ்து கொண்டு - அமிழ்தத்தைக் கொண்டு
அனங்க வேள் செய்த - மன்மதனால் தீட்டப் பெற்ற
ஓவியம் - சித்திரம் ஒன்று
புகை உண்டதே ஒக்கின்ற - புகையால் மூடப்பட்டால் போன்ற
உருவாள் - (பொலிவிழந்த) உருவுடன் (சீதை) இருந்தாள்.

கருத்துரை: சீதை மெல்லிய ஒரேயாடையை உடுத்தியிருந்தாள். அவள் நீரில் முழுகினளல்லள். கடலிடத்தே தோன்றிய அமிழ்தத்தைக் கொண்டு மன்மதன் தீட்டிய சித்திரம் ஒன்று புகை படிந்து காணப்பட்டால் போல் அவள் தோன்றினள்.

விளக்கவுரை: ஆவி - புகை. துகில் - ஆடை. தூவி - அன்னத்தின் இறகு. தோய்தல் - முழுகுதல். தேவு - தெய்வத்தன்மை. அனங்கவேள் - மன்மதன். ஓவியம் - சித்திரம். சீதையினது உருவத்தின் பொலிவிழந்த நிலை: சீதையின் உருவம் அமிழ்தம் போன்ற இனிய தன்மையை உடையது. அழகுக் கடவுளாகிய மன்மதன் அமிழ்தத்தைக் கொண்டு ஓர் உருவத்தைத் தீட்டினால் அஃது எத்துணை அழகுடன் அமையுமோ அத்துணை அழகு வாய்ந்தது சீதையின் உருவம். அவ்வுருவம் இப்பொழுது இராமனின் பிரிவுத் துயரத்தால் பொலிவு இழந்து காணப்படுகின்றது. எனவே, மன்மதன் தீட்டிய சித்திரம் புகையினால் மூடப் பெற்றுப் பொலிவிழந்து இருப்பது போன்ற நிலையில் சீதை பொலிவிழந்து இருந்தாள் என்று ஆசிரியர் கூறுகின்றார். ஆவி அம் துகில்: புகைபோல் மெல்லிய ஆடை. ஆடையின் மென்மைக்குப் புகையை உவமையாகக் காட்டுவது வழக்கம். மென் புனல்: தன்னிடம் முழுகுகின்றவர்கட்கு மென்மைத் தன்மையைத் தருகின்ற நீர்.

இலக்கணக் குறிப்பு: தெண்கடல் - பண்புத் தொகை. இப் பாடலின் பின் இரண்டடிகளில் தற்குறிப்பேற்ற உவமை அணி அமைந்துள்ளது.

6. இராமன் வாராமைக்குக் காரணத்தை ஊகித்தல்

இளவலும் - தம்பியாகிய இலக்குவனும்
கண்டிலன் கொலாம் - இராமனைப் பார்த்திரான் போலும்!
கனைகடல் - ஒலிக்கின்ற கடலின்
நடுவண் - நடுவே
இலங்கை உண்டு என்று - இலங்கை இருக்கின்றது என்பதை
உணர்ந்திலர் - அவ்விருவரும் அறிந்திலர் போலும்!
உலகு எலாம் - உலகில் உள்ள உயிர்களையெல்லாம்
ஒறுப்பான் - துன்புறுத்துகின்ற இராவணன்
கொண்டு இருந்தமை - என்னைத் தூக்கி வந்து இங்குச் சிறை வைத்ததை
அறிகிலராம் - அவர்கள் அறிந்திலர் போலும்!
என குழையா - என்று எண்ணி வருந்தி
புண் திறந்ததின் - ஆழமான துளையை உடைய புண்ணில்
எரி நுழைந்தால் என - கொள்ளிக் கட்டை நுழைந்தால் போன்ற துன்பத்தால்
புகைவாள் - (சீதை) வருந்துவாள்.

கருத்துரை: 'தேடிச் சென்ற இலக்குவன் இராமனைக் கண்டிலனோ? கடலின் நடுவில் இலங்கை அமைந்துள்ளது என்பதனை அவர்கள் அறிந்திலரோ? இராவணன் என்னை ஈண்டுக் கொணர்ந்து சிறை வைத்தமையை

அவர்கள் அறியார்களோ? இக்காரணங்களால் அவர்கள் வந்திலர் போலும் என்று நினைத்துச் சீதை பெருந்துயரம் உற்றாள்.

விளக்கவுரை : இளவல் - இராமனது தம்பியாகிய இலக்குவன். கனை ஒலிக்கின்ற. நடுவண் - நடுவில். ஒறுப்பான் - துன்புறுத்தும் இராவணன் குழையா - உருகி வருந்தி. எரி - நெருப்பு. புகைவாள் - வருந்துவாள் **கண்டிலன் கொலாம் இளவலும் :** இராமன் மாயமான் உருவில் வந் மாரீசனைத் துரத்திச் சென்ற காலையில் சீதையைக் காத்து நின்றவன் இல குவன். இராமனது அம்பினால் கீழே விழும் மாரீசன் 'ஆ சீதே! இலக்குவா என்று பெருங் குரலில் அழைத்தான். அக்குரலை இராமனின் குரலாக கருதிய சீதை, இராமனது உதவிக்கு உடனே செல்லுமாறு இலக்குவனை அனுப்பினாள். அவ்வாறு அனுப்பப்பெற்ற இலக்குவன் இராமனைக் கண் லனோ என்று சீதை நினைக்கின்றாள். 'இலக்குவன் இராமனைக் கண்டிரு பானேயானால் இராமன் உடனே வந்திருப்பான்; அவன் காணாததாலேயே இராமன் வரவில்லை' என்ற கருத்துடனேயே சீதை இவ்வாறு சிந்தித்தாள் **இராமன் வராமல் இருப்பதற்குரிய பல காரணங்கள் :** இலக்குவன் இராமனைக் காணத் தவறியிருக்கவேண்டும். அவ்வாறு கண்டிருந்தாலும் இராவணன் சீதையைத் தூக்கிச்சென்று இலங்கையில் சிறைவைத்த செ தியை அவர்கள் அறியாமல் இருக்கவேண்டும். அவ்வாறு ஒருவேளை அறி திருந்தாலும் இலங்கை இருக்கும் இடத்தை அவர்கள் உணராமல் இருக் வேண்டும். இக்காரணங்களாலேயே இராமன் வந்தானல்லன் என்று சீ நினைக்கின்றாள். **புண் திறந்ததின் எரி நுழைந்தால் எனப் புகைவாள்** சீதை மிக வருந்தினாள். திறந்த புண்ணினால் ஒருவருக்குத் துன்பம் மிகுதியா உண்டாகும். அப்புண்ணில் கொள்ளிக் கட்டை நுழைந்தால் எத்துணை துன்பமும் வருத்தமும் உண்டாகுமோ அத்துணைத் துன்பத்தையும் வரு தத்தையும் அடைந்தாள் சீதை. சீதை அடைந்த வருத்தத்திற்கு உவமை யாகத் திறந்த புண்ணில் தீ நுழைந்தால் உண்டாகும் வருத்தம் காட்ட பட்டது.

இலக்கணக் குறிப்பு : கொல்: ஐயப் பொருளில் வந்த இடை சொல். கனை கடல் - உரிச்சொல் தொடர் என்றும் கூறலாம். ஒறுப்பான் ஈண்டு வினையாலணையும் பெயர். குழையா : 'செய்யா' என்ற வா பாட்டு வினையெச்சம். என : உவம உருபு. ஈற்றடியில் உவமையண அமைந்துள்ளது.

7. சடாயு இறந்திருப்பானோ என்று சீதை நினைத்தல்

எருவைகட்கு அரசன் - (என்னை இராவணனிடமிருந்து காக்க முன் வந்த) கழுகு அரசனாகிய சடாயு
மாண்டு போயினன் - இறந்துபட் டான் போல் உள்ளது
மற்றோர் - இனி, மற்றவர்கள்
யாண்டை - எப்படி
என் நிலை - எனது நிலையை
அறிவுறுப்பார்கள் - இராமனுக்குக் கூறுவர்? (எனவே)
இப்பிறப்பில் - இந்தப்பிறப்பில்
காண்டலோ அரிது - இராமனை காணுதல் அரிதாகும்
என்று என்று - என்று எண் எண்ணி
விம்முறும் - (சீதை) விம்மியவளாய்
கலங்கும் - கலங்குபவளாய்
மீண்டு மீண்டு - திரும்பத் திரும்ப
எரிபுக்கு நுழைந்தால் என - (புண் ணில்) நெருப்பு நுழைந்தா போன்ற துன்பத்தால்
மெலிவாள் - வருந்துவாள்.

கருத்துரை : தன்னை இராவணன் தூக்கி வந்தமையைச் சடாயு ஒருவனே அறிவான் என்றும், அவனும் இறந்துபட்டிருந்தால் தன்னை இராவணன் தூக்கி வந்தமையை இராமனுக்கு அறிவிப்பவர் இலர் என்றும், அதனால் இப்பிறப்பில் இராமனைக் காண்டல் இயலாது என்றும் நினைந்து வருந்திச் சீதை பெருந்துன்பம் அடைந்தாள்.

விளக்கவுரை : எருவை - கழுகு. எருவைகட்கு அரசன் - கழுகுகட்கு அரசனாகிய சடாயு. யாண்டை - எப்படி. **மாண்டு போயினன் எருவை கட்கு அரசன் மன் :** இராவணன் சீதையைக் கவர்ந்து செல்லுங்கால் கழுகுகட்கு அரசனாகிய சடாயு பார்த்துவிட்டான். அவன் அருணனது மகன்; சம்பாதியின் தம்பி ; தசரதனுக்கு உயிர் நண்பன். சீதையை இராவணனிடமிருந்து காப்பாற்ற எண்ணிய அவன் இராவணனுடன் போர் தொடுத்தான். இராவணன் சடாயுவின் சிறகுகளை அறுத்தெறிந்து விடவே, சடாயு கீழே விழுந்துவிட்டான். சடாயு உயிருடன் பிழைத்திருந்தால் இராமனிடம் சீதையின் நிலையைப்பற்றிக் கூறியிருப்பான்; இராமனும் தவறாமல் வந்திருப்பான். இராமன் இதுவரை வராமல் இருப்பதால் சடாயு இறந்திருக்கக் கூடும் என்று சீதை நினைக்கின்றாள். **இப்பிறப்பில் காண்டலோ அரிது :** இராவணன் தன்னைத் தூக்கி வந்ததைச் சடாயு ஒருவனே அறிவான் ஆதலாலும், அவன் இறந்து பட்டிருந்தால் தனது நிலையை இராமனுக்குக் கூறுபவர்கள் இலர் ஆதலாலும், தனது இருப்பிடம் தெரியாத காரணத்தால் இராமன் வரமாட்டானாதலாலும் இராமனை இப்பிறப்பில் காண்டல் அரிது என்று சீதை நினைத்தாள். **மீண்டு மீண்டு புக்கு எரி நுழைந்தால் என :** புண் துன்பத்தைத் தரும். அதில் கொள்ளி புகுந்தால் துன்பம் மிகும். திரும்பத் திரும்பக் கொள்ளிக் கட்டையைப் புண்ணில் நுழைத்துக் கொண்டிருந்தால் மேலும் மேலும் துன்பம் வந்துகொண்டே இருக்கும். இராமனைப்பற்றி நினைக்க நினைக்கப் பிரிவுத் துன்பம் மிகுந்து கொண்டிருந்ததால் சீதையின் வருத்தத்திற்கு இவ்வுவமை காட்டப்பட்டுள்ளது.

இலக்கணக் குறிப்பு : மன் : இடைச் சொல். இச்செய்யுளின் இறுதியடியில் உவமை அணி உள்ளது.

8. இராமன் வாராமை குறித்துச் சீதை பலபட நினைத்தல்

எண்ணலா - நினைக்க முடியாத
வினையேன் - தீவினையைச் செய்த யான்
இளவலை - இலக்குவனை
சொன்ன வார்த்தை கேட்டு - திட்டிய சொற்களைக் கேட்டு
அறிவிலள் என - அறிவில்லாதவள் என்று
என்னை நாயகன் - என்னை இராமன்
துறந்தானே - வெறுத்துவிட்டானே?
முன்னை ஊழ்வினை - முற்பிறப்பில் செய்த ஊழ்வினை
முடிந்ததோ - இப்பொழுது தன் பயனைத் தருகின்றதோ?
என்று என்று முறையால் பன்ன - என்று முறைப்படி சொல்வதனால்
வாய் புலர்ந்து - வாய் உலர்ந்து
உணர்வு தேய்ந்து - அறிவு சோர்ந்து
ஆர் உயிர் பதைப்பாள் - அரிய உயிர் துடிப்பாள் (சீதை).

கருத்துரை : இராமனுக்கு எத்தகைய துன்பமும் வராது என்று கூறி அவனைத் தேடிச் செல்ல மறுத்த இலக்குவனை முன்பு சீதை திட்டினாள். அதனை உணர்ந்த இராமன், அறிவில்லாதவள் என்று கருதித் தன்னை

வெறுத்து விட்டானே என்றும், ஊழ்வினை தன் பயனைத் தருகின்றதோ என்றும் கூறித் தன் உயிர் பதைத்தாள் சீதை.

விளக்கவுரை: எண்ணலா - நினைக்க முடியாத. துறத்தல் - வெறுத்தல், தள்ளுதல். முன்னை - முற்பிறப்பு. பன்ன - சொல்ல. உணர்வு - அறிவு தேய்ந்து - சோர்ந்து. அறிவிலள் எனத் துறந்தானே: மான் உருவில் மாயஞ் செய்து வந்த மாரீசன் இராமனது குரலில் கூவி அழைத்தமை கேட்ட சீதை, உடனே இராமனது துணைக்குச் செல்லுமாறு இலக்குவனைத் தூண்டினள். இராமனைக் கொல்லவோ, துன்பம் செய்யவோ யாராலும் முடியாது என்றும், அஃது அரக்கர்களின் மாயமாக இருத்தல் வேண்டும் என்றும் இலக்குவன் எவ்வளவோ எடுத்துக் கூறினன். ஆனல் சீதை அவற்றை ஏற்றுக்கொள்ளாமல், அவனைப் பலவாறு இகழ்ந்து கூறி, உடனே துணைக்குச் செல்லுமாறு தூண்டி அனுப்பினள். இவ்வாறு சீதை இலக்குவனை இகழ்ந்தமை கேட்டு இராமன், 'சீதை அறிவற்றவள்; நமக்கு ஏற்ற மனைவி அல்லள்' என எண்ணித் தன்னை வெறுத்துத் தள்ளிவிட்டானே என்று சீதை நினைத்து வருந்தினள். முன்னை ஊழ்வினை முடிந்ததோ: முற் பிறப்பில் செய்த வினையின் பயனை இப் பிறப்பில் மக்கள் நுகர்ந்தே தீர்தல் வேண்டும். முற்பிறப்பில் செய்த தீவினையே இவ்வாறு தன்னை இராமனிடமிருந்து பிரித்து விட்டதென்றும், அவ்வினையின் பயனையே இப்பொழுது தான் நுகர்வதாகவும் சீதை கருதினள் ஆதலால் இவ்வாறு கூறப்பட்டது.

இலக்கணக் குறிப்பு: வினையேன்: ஈண்டு வினையாலணையும் பெயர். அருமை+உயிர்=ஆருயிர்: பண்புத்தொகை.

9. விருந்து கண்டால் இராமன் என்செய்வான் என்று சீதை ஏங்குதல்

அருந்தும் மெல் அடகு - உண்கின்ற மெல்லிய இலையுணவை

ஆர் இட அருந்தும் - யார் இட இராமன் உண்பான்

என்று அழுங்கும் - என்று (சீதை) வருந்துவாள்

விருந்து கண்ட போது - விருந்தினரைக் கண்டபொழுது

என் உறுமோ என்று - இராமனது மனம் என்ன பாடுபடுமோ என்று

விம்மும் - அழுவாள்

யான் கொண்ட நோய்க்கு - யான் அடைந்த இத் துன்ப நோயைப் போக்க

மருந்தும் உண்டு கொல் என்று - மருந்து உண்டோ என்று எண்ணி

இருந்த - தான் தங்கியிருந்த

மாநிலம் - பெரிய இடத்தை

செல் அரித்திடவும் - கறையான் அரிக்கவும்

ஆண்டு எழாதாள் - அவ்விடத்திலிருந்து நகராதவளாகிய சீதை

மயங்கும் - மயங்குவாள்.

கருத்துரை: உண்ணுதற்குரிய இலையுணவை இராமனுக்கு யார் இடுவார் என்றும், விருந்தினரைக் கண்டால் அவரை இராமன் எவ்வாறு உபசரிப்பான் என்றும், தான் கொண்ட நோய்க்கு மருந்து இல்லைபோலும் என்றும் வருந்தி, இருந்த இடத்தினை விடுத்து எழாதவளாய் இருந்தாள் சீதை.

விளக்கவுரை: அடகு - இலை; கனி, காய், கிழங்கும் ஆம். அழுங்கும் - வருந்துவாள். அருந்தும் மெல்லடகு ஆர் இட அருந்தும்: காட்டுப் பகுதியில் இலை யுணவு முதலியனவே கிடைக்கும். சீதை உணவை இட்டால் தான் இராமன் கூச்சம் இல்லாது உண்பான். தான் இல்லாததால் அத் தகைய இராமனுக்கு இலை யுணவை இடுபவர் யார் என்று சீதை நினைத்து

வருந்தினள். **விருந்து கண்டபோது என் உறுமோ:** விருந்தினர் வரின், அவர்களைக் கணவனும் மனைவியுமாகச் சேர்ந்தே உபசரித்தல் வேண்டும். அதுவே இல்வாழ்வார்க்கு உரிய அறமாகும். தான் இன்றி இராமன் தனித்திருக்குங்கால் விருந்தினர் வரின் இராமன் என்ன பாடுபடுவான் என்று எண்ணிச் சீதை வருந்துகின்றாள். இல்வாழ்க்கை நடாத்தும் கற்புடை மகளிர்க்கு இன்றியமையாத விருந்தோம்பும் பண்பினைக் கம்பர் ஈண்டுச் சீதைக்கு ஏற்றிக் கூறுகின்றார். **மருந்தும் உண்டுகொல் யான் கொண்ட நோய்க்கு:** சீதை அடைந்த நோய் இராமனைப் பிரிந்ததனால் உண்டாகியதாகும். இராமன் வந்தால் தான் அந்நோய் நீங்கும். இராமன் வருவதற்குரிய அறிகுறிகள் காணப்படாமையால் தான் கொண்ட நோய்க்கு மருந்தும் உண்டோ என்று வருந்தினள் சீதை. **இருந்த மாநிலம் செல் அரித்திடவும் ஆண்டு எழாதாள்;** சீதை தங்கியிருந்த இடத்தைச் செல் அரித்தும் கூட அவள் அவ்விடத்தை விடுத்து நகர்ந்தாளல்லள். இருந்த இடத்திலேயே அவள் இருந்தாள். காட்டில் இலக்குவனால் அமைக்கப்பட்ட பன்னசாலையிலேயே சீதை தங்கியிருந்தாள். அத்தகைய தூய்மை வாய்ந்த இடத்திலேயே சீதை இருந்தாளாதலால் 'மாநிலம்' எனப்பட்டது. இப்பாடலில் இல்லறத்தில் ஈடுபட்டிருந்து, கற்பினின்று வழுவாத பெண்களுக்குரிய பண்புகள் சீதைக்கு உள்ளனவாகக் கம்பர் காட்டியிருக்கின்றார்.

இலக்கணக் குறிப்பு: 'அடகு' என்னும் சொல் 'இலை' எனப் பொருள்படினும், அதனோடு தொடர்புடைய கனி, காய் முதலியவற்றையும் குறிப்பதால் அது **'உபலட்சணம்'** எனப்படும். **மெல்லடகு:** பண்புத்தொகை. **கொல்:** இடைச்சொல்.

10. இராமன் அயோத்தி சென்றுவிட்டானோ, அன்றி அவனுக்குத் துன்பம் வந்துவிட்டதோ என்று சீதை வருந்துதல்

பெற்ற தாயரும் - பெற்ற தாய்மார்களும்
தம்பியும் - பரதனும்
பெயர்த்தும் வந்து எய்தி - மீட்டும் வந்து சேர்ந்து
கொற்ற மா நகர் - வெற்றியுடன் விளங்கும் அயோத்திக்கு
கொண்டு இறந்தார்களோ - அழைத்துச் சென்று விட்டனரோ?
குறித்துச் சொற்ற - (கைகேயி) குறிப்பிட்டுச் சொல்லிய
ஆண்டெலாம் - பதினான்கு ஆண்டுகளும்
உறைந்தன்றி - காட்டில் தங்கினால் அல்லாமல்
அந்நகர் துன்னான் - அயோத்தியை (இராமன்) அடையமாட்டான் (எனவே)
உற்றது உண்டு என - இராமனுக்கு ஓர் ஆபத்து வந்திருக்க வேண்டும் என்று
படர் உழந்து - துன்பத்தால் வருந்தி
உறாத நோய் - (யாரும் அதுவரை) அடையாத துன்பத்தை
உறுவாள் - அடைவாள்.

கருத்துரை: தாய்மார்களும், பரதனும் வந்து ஒரு வேளை இராமனை அயோத்திக்கு அழைத்துச் சென்றிருப்பார்களோ என்றும், கைகேயி குறிப்பிட்டுக் கூறிய பதினான்கு ஆண்டுகள் காட்டில் தங்கியே இராமன் அயோத்திக்குச் செல்வான் என்றும், எனவே, இராமனுக்குத் துன்பம் ஒன்று உண்டாகியிருத்தல் கூடும் என்றும் எண்ணிய சீதை, யாரும் அடையாத துன்பத்தை அடைந்தாள்.

"தீயினாற் சுட்ட புண் உள்ளாறும்"

விளக்கவுரை : தாயர் - தாய்மார்கள்; கோசலை, சுமித்திரை, கைகே
ஆகிய தாய்மார்கள் மூவர். தம்பி: தம்பியாகிய பரதன். பெயர்த்தும்
மறுபடியும். கொற்றம் - வெற்றி. இறத்தல் - செல்லுதல். சொற்ற
சொல்லிய. துன்னான் - சேரமாட்டான். உற்றது - நிகழ்ந்த ஓர் ஆபத்
படர் - துன்பம். பெற்ற தாயர் : இராமனைப்பெற்ற தாய் கோசலை
யானாலும், இராமன் ஏனை இருவரையும் பெற்ற தாய்மார்போலவே கரு
ஒழுகி வந்தவன் ஆதலால் மற்றவர்களும் 'பெற்ற தாயர்' என்று இங்கு
குறிப்பிடப்பட்டனர். பெயர்த்தும் வந்து: மறுபடியும் வந்து. இராம
காட்டிற்கு வந்து சித்திர கூடத்தில் தங்கியிருந்தபொழுது தாய்மார்களு
பரதனும் வந்து, அயோத்திக்கு வருமாறு இராமனை அழைத்தனர். இராம
அதற்கு மறுத்துவிட்டான். அவர்கள் ஒருவேளை மீட்டும் வந்து வற்புறுத்
அழைத்துச் சென்றனரோ என்று சீதை நினைத்தாள். குறித்துச் சொற்
ஆண்டு: கைகேயி குறிப்பிட்டுச் சொல்லிய பதினான்கு ஆண்டுகள். பதினான்
ஆண்டுகள் காட்டில் தங்குதல்வேண்டும் எனக் கைகேயி குறிப்பிட்டு
சொல்லியிருந்தாள். உருத நோய்: எவரும் அடையாத துன்பம். கணவனை
பிரிந்த மகளிரின் துன்பம் பெரிதாதலாலும், அத்தகைய துன்பத்
அடைவோர் அரியர் ஆதலாலும் இவ்வாறு கூறப்பட்டது.

11. இராமனது பொலிவுபெற்ற முகத்தை நினைந்து சீதை வருந்துதல்

கைகயர் தம்மடந்தை - கைகேயி
தெவ் மடங்கிய - பகைவர்கள் தோற்று ஓடச்செய்த
சேண் நிலம் - அகன்ற இடமாகிய கோசல நாடு
உன் தம்பியது ஆம் என - உன்னுடைய தம்பியாகிய பரதனைச் சேர்ந்தது என்று சொல்ல
மும்மடங்கு - முன்பு இருக்ததினு (அது கேட்டு) மும்மடங்கு
பொலிந்த - பொலிவுடன் விளங்கி
முகத்தினன் - முகத்தை உடைய னாகிய
வெம்மடங்கலை - கொடிய ஆ சிங்கம்போன்ற இராமனை
உன்னி - நினைத்து
வெதும்புவாள் - வருந்துவாள்.

கருத்துரை : கோசலநாடு பரதனுக்கே உரியது என்று கைகே
கூறிய அன்று, இராமன் மிகுதியான முகப் பொலிவுடன் விளங்கின
அத்தகைய இராமனை நினைத்துச் சீதை வருந்தினாள்.

விள்க்கவுரை : தெவ் - பகை. மடங்கிய - ஓடுதற்குக் காரணமா
சேண் நிலம் - அகன்ற இடத்தையுடைய கோசல நாடு. கைகயர் தம் மட
தை - கேகய தேசத்து அரசனது மகளாகிய கைகேயி. பொலிந்த - பொ
வுடன் விளங்கிய. மடங்கல் - ஆண் சிங்கம். சேணிலம் கைகயர் த
மடந்தை உன் தம்பியதாம் என : கோசல நாடு பரதனுக்கே உரி
என்று கைகேயி கூறினாள். மும்மடங்கு பொலிந்த முகத்தினன்
கைகேயி கோசல நாட்டு அரச பதவி இராமனுக்கு இல்லை என்றும், ப
னுக்கே உரியது என்றும் கூறியவுடன் இராமன் பெருமகிழ்ச்சியடைந்தா
தனது தம்பிக்குக் கிடைக்கும் அரசசெல்வத்தைத் தனக்குக் கிடைப்பதாக
அவன் கருதியதனாலும், அரசு புரியும் பெரும் பாரம் தனக்கு இல்லை என்
காரணத்தினாலும் அவனது முகம் இயற்கையில் இருந்த பொலிவைக் காட
லும் மும்மடங்கு அதிகமாகப் பொலிந்தது.

இலக்கணக் குறிப்பு : தெவ்+மடங்கிய=தெம்மடங்கிய. மடங்க
இருமடி ஆகுபெயர்.

"ஆறுதே நாவினாற் சுட்ட வடு"

12. இராமனது மலர்ந்த முகத்தை நினைத்தல்

மெய் - உண்மையாக
திருப்பதம் - அரசபதவியை
மேவு என்ற போதினும் - நீ அடைக என்ற சமயத்திலும்
இ திரு - இவ்வரச செல்வத்தை
துறந்து - விடுத்து
ஏகு என்ற போதினும் - காட்டுக்குச் செல் என்ற சமயத்திலும்
சித்திரத்தின் அலர்ந்த - சித்திரத்திலே பூத்திருக்கின்ற
செந்தாமரை ஒத்திருக்கும் - செந்தாமரை மலர் போன்று இருக்க
முகத்தினை - (இராமனது) முகத்தை
உன்னுவாள் - நினைப்பாள் (சீதை).

கருத்துரை : 'அரச பதவியை அடைக' என்பதனைக் கேட்ட சமயத்திலும், 'அரச பதவியை விடுத்துக் காட்டுக்குச் செல்' என்பதைக் கேட்ட சமயத்திலும் நிலையான புன்னகை பூத்த முகத்தினனாய் விளங்கினன் இராமன். அத்தகைய இராமனது முகத்தினை நினைப்பாள் சீதை.

விளக்கவுரை : திருப்பதம் - செல்வம் நிறைந்த அரச பதவி. உன்னுவாள் - நினைப்பாள். சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை ஒத்திருக்கும் முகம்: கோசல நாட்டு அரசனாக முடிசூட்டிக் கொள்ளும்படி தசரதன் கூறிய காலத்திலும், அரச பதவியை இழந்து காட்டுக்குச் செல் என்று சொல்லிய காலத்திலும் இராமனது முகம் மலர்ந்திருந்தது. தந்தையின் கட்டளைப்படி நடக்கப் போகின்றோம் என்ற எண்ணத்தினால் முதலில் அவனுக்கு முகம் மலர்ந்தது. அரசாட்சி செய்யும் பொறுப்பு தன்னைவிட்டு நீங்கியதே என்ற மகிழ்ச்சி பின்பு உண்டாயிற்று. இயற்கையாகப் பூத்திருக்கின்ற தாமரை மலரைப் போன்றது இராமனது முகம். மேலே கண்ட இரு நிகழ்ச்சிகளிலும் அவனது முகம் மிகவும் பொலிவுடன் விளங்கியது ஆதலால் சித்திரத்தில் தீட்டப்பெற்ற மலர்ந்த செந்தாமரையைக் கம்பர் உவமை காட்டினர். செந்தாமரைப் பூவிற்கு வாடுதல் உண்டு. சித்திரத்தில் எழுதப் பெற்ற செந்தாமரைக்கு வாடுதல் இல்லை.

இலக்கணக் குறிப்பு : செந்தாமரை : பண்புத்தொகை.

13. இராமனது தோள் வலியை நினைத்து மெலிதல்

கங்கை தேங்கு - கங்கை தங்கிய
திருமுடி - திருமுடியையும்
செங்கணன் - சிவந்த கண்களை உடையவனுமாகிய சிவபிரானது
வாங்கு - வளைந்த
கோலம் - அழகிய
வடவரை - மேருமலையாகிய
மார்சிலை - நீண்ட வில்லானது
ஏங்கும் மாத்திரத்து-(இவன் வளைப்பானே என்று சனகன்) ஏங்கிய பொழுதில்
இற்று இரண்டாய் வீழ - இரண்டாய் உடைந்து விழுவதற்குக் காரணமான
வீங்கு தோளை - பருத்த தோளை
நினைந்து - நினைத்து
மெலிந்துளாள் - மெலிந்திருந்தாள்.

கருத்துரை : சிவபிரான் வளைத்த மேரு மலையாகிய வில்லை முன்பு இராமன் வளைக்க எடுத்தான். அவனால் அவ்வில்லை வளைக்க முடியுமோ என்று சனகன் ஏங்கினன். அவ்வளவில் இராமன் வளைக்கத் தொடங்கியதில் இரண்டாய் ஒடிந்து விழுந்தது. இவ்வாறு அஃது உடைந்து விழுந்த

தற்குக் காரணமாக இருந்தது இராமனது தோள். அத்தோளை நினைந்து, இராமனைக் காணுதல் இயலுமோ என்று கருதி வருந்தினாள் சீதை.

விளக்கவுரை : வாங்கு - வளைந்த. கோலம் - அழகு. வடவரை - வடக்கில் உள்ள மேருமலை. வார் - நீண்ட. இற்று - உடைந்து. வார்சிலை **இற்று இரண்டாய் விழ :** வில் இரண்டாய் ஒடிந்து விழ. இராமனால் ஒடிக்கப்பட்ட வில் சிவபிரானது வில்லாகும். மேருமலையே சிவபிரானுக்கு வில்லாக அமைந்தது என்பர். **ஏங்கு மாத்திரத்து :** சனகனிடம் இருந்த சிவனது வில்லை வளைத்துச் சீதையை மணக்கும் பொருட்டுப் பலர் வந்து முயன்றனர். அவர்களுடைய முயற்சி பயனின்றிப் போயிற்று. வில்லை வளைக்கும் வீரனுக்கே தனது மகளை மணம் செய்து தருவேன் என்று சனகன் உறுதிமொழி கூறியிருந்தான். இராவணன் போன்றவர்களாலும் வில்லை வளைக்க முடியாமற் போயிற்று. இராமன் வில்லை வளைக்க முன் வந்தவுடன்; அவன் எங்ஙனமேனும் அவ்வில்லை வளைக்க வேண்டுமென்று விரும்பிய 'சனகன்' சிறுவனாகிய இராமனால் அவ்வில்லை வளைக்க இயலாமல் போய்விடுமோ என ஏங்கியிருந்தான். **வீங்கு தோளை நினைந்து மெலிந்து உளாள் :** சிவபெருமானது வில் உடைந்து விழுவதற்குக் காரணமாக இருந்தது இராமனது பருத்த தோளாகும். அத்தோள் வலிமையை நினைத்து வருந்தினாள் சீதை. இவ்வடியில் வீங்கிய தோளை நினைத்து மெலிந்தாள் என்று கம்பர் நயம்பட எதிர்மறையான இரண்டு சொற்களை அமைத்திருக்கும் அழகு நோக்குதற்கு உரியது.

இலக்கணக் குறிப்பு : வீங்கு தோளை நினைந்து மெலிந்துளாள் இவ்வடியில் முதற் சீரிலும் இறுதிச் சீரிலும் ஒன்றுக்கொன்று முரணான இரண்டு சொற்கள் அமைந்திருப்பதால் முரண்தொடை உள்ளது.

14. இராமனது நட்பின் திட்பத்தை நினைத்தல்

ஆழ நீர் - ஆழமான நீரை உடைய
கங்கை - கங்கையில்
அம்பி கடாவிய - படகைச் செலுத்திய
ஏழை வேடனுக்கு - அறிவில்லாத வேடனாகிய குகனிடம்
எம்பி நின் தம்பி - என் தம்பி உனது தம்பி
நீ தோழன் - நீ எனக்கு நண்பன்
மங்கை கொழுந்தி - சீதை உனக்குக் கொழுந்தி
எனச் சொன்ன - எனச் சொல்லிய
நண்பினை - இராமனது நட்பின் சிறப்பை
உன்னி - நினைத்து
மயங்குவாள் - வருந்துவாள்.

கருத்துரை : கங்கையில் ஓடம் ஓட்டிய வேடனாகிய குகனை இராமன் தன் உயிர் நண்பனைக் கொண்டான். இலக்குவன் அவனுக்குத் தம்பி என்றும், அவன் தனக்குத் தோழன் என்றும், சீதை அவனுக்குக் கொழுந்தி என்றும் முறை காட்டிய நட்பினை நினைந்து, அத்தகைய இராமனைக் காண்போமோ என்று வருந்தினாள் சீதை.

விளக்கவுரை : அம்பி - படகு, தோணி. கடாவிய - செலுத்திய. ஏழை - அறிவில்லாத. எம்பி - என் தம்பி. கொழுந்தி - அண்ணன் மனைவி. **எம்பி நின் தம்பி நீ தோழன் மங்கை கொழுந்தி :** இராமனது நட்பின் சிறப்பு ஈண்டு விளங்குகின்றது. தன்னிடம் பேரன்பு காட்டிய குகனைத் தன் உடன் பிறந்தவன் என்று குறிப்பிட்டான் இராமன். உடன் பிறந்தவன் என்று நினைக்கும் தன் எண்ணத்தைக் குகனுக்குக் காட்டுவதற்காக இராமன்

'என் தம்பியாகிய சீதை உனது கொழுந்தி' என்று முறைகளைக்கூடக் குறிப்பிட்டான். பிறப்பினால் இழிந்த குகனை இராமன் தன் உடன் பிறந்தவனாகக் கருதியமை அவனது நட்பின் திட்பத்திற்கு ஒரு சான்றாகும். **உன்னி மயங்குவாள் :** இத்தகைய அருள் உள்ளம் படைத்தவன் தன்னிடம் அருள் காட்டவில்லையே என்று எண்ணி வருந்தினாள் சீதை.

15. விராதனுக்கு இராமன் அருளியதை நினைத்தல்

வெம் விராதனை - கொடிய விராதனுடைய	அ இராமனை - அந்த இராமனை
மேல் வரும் தீவினை - முன்செய்த தீவினையை	உன்னி - நினைத்து
வவ்வி - நீக்கி,	தன் ஆர் உயிர் - தனது அரிய உயிர்
மாற்றரும் - மாற்ற முடியாத அவனது	செவ்விராது - ஒரு நிலையில் நிற்கப் பெறாமல்
சாபமும் மாற்றிய - சாபத்தையும் நீக்கிய	உணர்வு ஓய்ந்து - அறிவு ஒடுங்கப் பெற்று
	உடல் தேம்புவாள் - உடல் வருந்துவாள் (சீதை).

கருத்துரை : விராதனுடைய தீவினையையும், சாபத்தையும் நீக்கி அருள் செய்த இராமனை நினைத்தாள் சீதை. அவ்வளவில் அவள் மயங்கி வருந்தினாள்.

விளக்கவுரை : வவ்வி - போக்கி. செவ்விராது - ஒரு நிலையில் நிற்கப் பெறாமல். உணர்வு - அறிவு. ஓய்ந்து - ஒடுங்கி. தேம்புவாள் - வருந்துவாள். **விராதனது தீவினை மாற்றிச் சாபமும் மாற்றிய வரலாறு:** விராதன் என்பவன் ஓர் அரக்கன். அவன் தும்புரு என்னும் கந்தருவனே; குபேரனது சாபத்தால் விராதன் என்னும் அரக்கனாக மாறினான். விராதன் பல தீச்செயல்களைச் செய்து வந்தான். அவன் இராமனை எதிர்த்து, இராமனையும் இலக்குவனையும் தன் தோளில் தூக்கிக்கொண்டுவிட்டான். இராமன் அவனுடைய கைகளை வெட்டி வீழ்த்தினான். இராமனது திருவடி தன்மேல் பட்ட காரணத்தால் அவன் செய்த பாவங்கள் நீங்கிச் சாபமும் நீங்கப் பெற்றான். **ஆருயிர் செவ்விராது உணர்வு ஓய்ந்து உடல் தேம்புவாள் :** இராமன் கொடிய விராதனுக்கும் அருள் செய்தவன். செய்யத்தகாத செயல்களைச் செய்தவர்கட்கும் இவ்வாறு அருள் காட்டிய இராமன் தன்னிடம் அருள் காட்டவில்லையே என்ற எண்ணத்தால் அவளது உயிர் உடம்பின்கண் ஒரு நிலையில் நில்லாமல் தவித்தது. அவளது அறிவு தேய்ந்தது. அவள் உடல் வருந்தப் பெற்றாள்.

இலக்கணக் குறிப்பு: தீவினை: பண்புத் தொகை, அருமை + உயிர்=ஆருயிர்: பண்புத் தொகை.

16. இடப் புருவமும் இடக்கண்ணும் சீதைக்குத் துடித்தமை

பொலம் துடி - பொன்னாலாகிய உடுக்குப்போன்ற	புருவம் கண் முதல் - புருவம், கண் முதலியவை (இப்பொழுது)
மருங்குலாய் - இடையினை உடையவளே (திரிசடையே)	வலம் துடிக்கின்றில - வலப்புறம் துடிக்கவில்லை (இடப் புருவமும், இடக் கண்ணுமே துடிக்கின்றன)

"இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும்"

நலம் துடிக்கின்றதோ - (இவற்ருல்) நன்மைதான் விரைந்து வரப்போகின்றதோ? (அன்றி)	இன்னமும் - இனியும்
நான் செய் - நான் செய்த,	தருவது - கொடுப்பது
தீவினை துடித்து - தீவினை மிகுந்து	உண்மையோ——,
சலம் - கொடுமையை	வருவது - நடக்கப்போவதை
	ஓர்கிலேன் - அறிந்தேனல்லேன்.

கருத்துரை: சீதை அசோகவனத்தில் தனக்குத் தோழியாக அமைந்த திரிசடையைப் பார்த்து 'தோழி! என்னுடைய இடப் புருவமும், இடக்கண்ணும் இப்பொழுது துடிக்கின்றன. இவற்ருல் நன்மை வருமோ? எது நடக்கப் போகின்றது?' என்று கூறினுள்.

விளக்கவுரை: சலம் - கொடுமை. துடித்து - மிகுந்து. பொலம் - பொன். துடி - உடுக்கு. மருங்குல் - இடை. ஓர்கிலேன் - அறியமாட்டாதவளாக உள்ளேன். பொலம்துடி மருங்குலாய்: பொன்ஞல் ஆகிய உடுக்குப் போன்ற இடையினை உடைய திரிசடையே! பெண்டிரின் மெலிந்த இடைக்கு உவமையாகக் கூறப்படுவது உடுக்கு ஆகும். திரிசடை பொன்னிறம் உடையவளாதலால் இவ்வாறு விளிக்கப்பட்டாள். திரிசடை என்பவள் வீடணனின் மகள்; நல்லொழுக்கங்களும், இன்சொல்லும் உடையவள். அவள் சீதையினிடம் பேரன்பு கொண்டிருந்தாள். வருவது ஓர்கிலேன்: இனி வரப்போகும் செய்தியை அறியமாட்டாதவளாக இருக்கின்றேன். பெண்டிர்க்கு இடப் பக்கத்துக் கண், புருவம் முதலியன துடித்தலும், ஆடவர்க்கு வலக்கண், வலப்புருவம் முதலியன துடித்தலும் நன்மை வருதலைக் காட்டும் அறிகுறிகள் என்பர். சீதைக்கு இப்பொழுது புருவம், கண் முதலியவை இடமாகத் துடித்தன- இவ்வறிகுறி நன்மை வரும் என்பதைக் காட்டுகின்றது. ஆனல் எத்தகைய நன்மை வரும் என்று அவளால் ஊகித்துப் பார்க்கமுடியவில்லை. அதனலேயே இவ்வாறு கூறினுள் சீதை.

இலக்கணக் குறிப்பு: துடிக்கின்றதோ, உண்மையோ: ஈண்டுள்ள ஓகாரங்கள் வினப்பொருளைத் தந்தன. துடி மருங்குல்: உவமத் தொகை.

17. இராமன் மிதிலைக்கு வந்த காலத்தில் சீதைக்கு உறுப்புக்கள் இடமாகத் துடித்தமை

மிதிலையின் - மிதிலை நகரத்திற்கு	வரப்போவதை அறிவிக்கும் குறியாக) இடப்புறம் துடித்தன.
முனியொடு - விசுவாமித்திரருடன்	ஈண்டும் - இங்கும்
முதல்வன் - முதல்வனகிய இராமன்	ஆண்டு என - அப்பொழுது துடித்தமை போல
முந்தும் நாள் - வந்த காலையில்	நனி துடிக்கின்றன - மிகுதியாக (இடப்புறம்) துடிக்கின்றன
துனி அறு - குற்றம் அற்ற	(எனவே இதன் பயனை)
புருவமும் தோளும் நாட்டமும் - (என்னுடைய) புருவமும், தோளும், கண்களும்	ஆய்ந்து - ஆராய்ந்து பார்த்து
இனியன துடித்தன - (இன்பம்	நல்குவாய் - சொல்வாயாக.

கருந்துரை: சீதை திரிசடையைப் பார்த்து, 'தோழி! விசுவாமித்திர முனிவனுடன் இராமன் மிதிலைக்கு வந்த அன்று என்னுடைய புருவமும் தோளும் இடப்புறம் துடித்தன. நல்லது வரும் என்பதனை அவை அறிவி

தன. அவ்வறிகுறிக்கு ஏற்ப இராமன் என்னை மணந்தான். இப்பொழுதும் என்னுடைய இடக்கண்ணும் இடப்புறமும் துடிக்கின்றன. எனவே இதன் பயனை ஆராய்ந்து சொல்' என்று கூறினள்.

விளக்கவுரை : முனி : விசுவாமித்திரர். முதல்வன் - யாவருக்கும் முதல்வனாகிய இராமன். துனி - குற்றம். நாட்டம் - கண். நனி - மிகுதி. ஆய்ந்து - ஆராய்ந்து பார்த்து. **இனியன துடித்தன :** சனகனிடம் இருந்த வில்லை வளைக்கச் செய்து, சீதையை மணம் புரிவிக்கும் கருத்துடன் விசுவாமித்திரர் இராமனை அழைத்துக் கொண்டு மிதிலைக்கு வந்தார். அவ்வாறு இராமன் வந்த காலத்தில், சீதைக்குத் திருமணம் நடக்கப் போகும் இன்ப நிகழ்ச்சியைக் காட்டும் அறிகுறிகளாக அவளுடைய இடப்புறத்துப் புருவம், தோள், கண் முதலியவை துடித்தன. அந்த நல்ல நிமித்தத்திற்கு ஏற்பச் சீதையை இராமன் மணந்தான். **ஆய்ந்து நல்குவாய் :** ஆராய்ந்து சொல்வாயாக. இராமன் மிதிலைக்கு வந்த நாளில் கண் முதலியவை இடப்புறம் துடித்தமைபோல இலங்கையில் இருந்த இப்பொழுதும் துடித்தன. தனக்கு எத்தகைய நன்மை வரும் என்பதை ஆராய்ந்து கூறுமாறு சீதை திரிசடையை வேண்டினள்.

இலக்கணக் குறிப்பு : நனி : 'மிகுதி' எனப் பொருள்படும் உரிச்சொல்.

18. இராமன் காடு புகுந்த நாளில் சீதைக்குக் கண் முதலியவை வலப்புறம் துடித்தமை

மறந்தனன் - (யான் சொல்ல) மறந்து விட்டேன்
இதுவும் ஓர் மாற்றம் - இந்த ஒரு சொல்லையும்
கேட்டியால் - கேட்பாயாக
அறம் தரு - அறப் பண்பு தங்கிய
சிந்தை - மனத்தை உடைய
என் ஆவி நாயகன் - எனது உயிர் போன்றவனாகிய இராமன்
பார் முழுவதும் - பூமி முழுவதையும்
பிறந்த தம்பியே - தன் பின் பிறந்த தம்பியாகிய பரதனே
பெற - அடையுமாறு விடுத்து
துறந்து - அரச பதவியை இழந்து
கான் புகுந்த நாள் - காட்டிற் புகுந்த நாளில்
வலம் துடித்தது - (கண் முதலியன) வலப்பக்கமாகத் துடித்தன.

கருத்துரை : சீதை திரிசடையைப் பார்த்து, 'தோழி! ஒன்று சொல்ல மறந்தேன். இராமன் அரச பதவியைத் தன் தம்பியாகிய பரதனுக்குக் கொடுத்துக் காட்டிற் புகுந்தநாளில் என்னுடைய கண் முதலியன வலப்புறமாகத் துடித்தன' என்றாள்.

விளக்கவுரை : மாற்றம் - சொல். அறம் தரு - அறம் தங்கிய. துறந்து - இழந்து. **கான் புகுந்த நாள் வலம் துடித்தது :** அரச பதவி பரதனுக்கு உரியதென்றும், இராமன் காட்டில் பதினான்கு ஆண்டுகள் வசிக்க வேண்டுமென்றும் கைகேயி கட்டளையிடவே, இராமன் காட்டிற்குச் செல்லத் தொடங்கினன். அதுபொழுது துன்பம் வருவதை அறிவிக்கும் தீ நிமித்தமாகச் சீதையின் வலக்கண் முதலியவை துடித்தன. அந்நிமித்தத்திற்கு ஏற்பச் சீதைக்குப் பிறகு துன்பம் வந்தது.

19. இப்பொழுது இடம் துடித்தலால் எத்தகைய நலன் வரும் என்று சீதை கேட்டல்

நஞ்சு அனையான் - விடம்போன்ற கொடுந்தன்மை வாய்ந்தராவணன்
வனத்து - காட்டின்கண்
வஞ்சனையால் - வஞ்சனையினால்
இழைத்த நாளிடை - (துன்பம்) உண்டாக்கிய நாளில்
வலம் துடித்த - வலப்புற உறுப்புகள் துடித்தன.
வாய்மையால் - (அவ்வறிகுறிகள்) உண்மையாகவே (பயனை அறிவிப்பதில்),
எஞ்சல - தவறில்லாதனவாய் இருந்தன.
ஈண்டு தாம் - இங்கு அவை
இடம் துடித்ததால் - இடப்புறமாகத் துடித்ததால்
அஞ்சல் என்று - அஞ்சாதே என்று
இரங்குதற்கு - என் பொருட்டாக இரக்கம் கொள்வதற்கு
அடுப்பது யாது - வரக்கூடிய நன்மை யாது
என்றாள் - என்று சீதை திரிசடையை நோக்கிக் கேட்டாள்.

கருத்துரை : சீதை திரிசடையைப் பார்த்து, 'தோழி! இராவணன் எங்கட்கு வஞ்சனை இழைத்த நாளில் என்னுடைய வலக்கண் முதலியவை துடித்தன. ஆயின் அவ்வுறுப்புக்கள் இப்பொழுது இடப்புறமாகத் துடிக்கின்றன. எனவே, எனக்கு வரக்கூடிய நன்மை யாது ?' என்று கேட்டாள்.

விளக்கவுரை : நஞ்சு - விடம். இழைத்த - உண்டாக்கிய. வாய்மை - உண்மை. எஞ்சல - தவறில்லாதனவாய். அஞ்சல் - அஞ்சாதே. அடுப்பது - நிகழ்வது. **நஞ்சு அனையான் வனத்து இழைத்த நாளிடை வஞ்சனையால் வலம் துடித்த :** விடம் போன்ற கொடுந்தன்மை வாய்ந்த இராவணன் தண்டகாரணியத்தில் வஞ்சனையால் சீதையைக் கவர்ந்து சென்றான். அது காலையில் சீதைக்கு வலப்புற உறுப்புக்கள் துடித்தன. எனவே கண், புருவம், தோள் முதலியவற்றின் துடிப்புக்கள் தவறாமல் பின்னால் நிகழப் போகின்றவற்றை அறிவிக்கும் நிமித்தங்கள் ஆகும். **அஞ்சல் என்று இரங்குதற்கு அடுப்பது யாது :** இலங்கையில் அரக்கியரிடையே கடுங்காவலில் இருக்கும் தனக்கு எத்தகைய நன்மை வரலாம் என்று நினைத்தே சீதை இவ்வாறு கேட்டாள்.

இலக்கணக் குறிப்பு : 'அஞ்சல்' என்பதில் 'அல்' என்னும் விகுதி எதிர்மறைப் பொருளைத் தந்தது. அடுப்பது + யாது = : அடுப்பதியாது குற்றியலுகரம் குற்றியலிகரமாகத் திரிந்தது.

நல்லொழுக்கப் பயிற்சி

அசோக வனத்தில் தனித்திருந்த சீதை இராமனது வருகையை எதிர் நோக்கியிருந்தாள். ஏங்கியிருந்த அவள், 'விருந்து கண்ட போது இராமன் என்ன துயரத்தை அடைவானோ ?' என்று நினைத்து வருந்துகின்றாள். விருந்தினரைப் போற்றுதல் இல்லறத்தார்க்கு இருக்க வேண்டிய பண்பு என்பதைக் கம்பர் ஆண்டு வெளிப்படுத்துகின்றார். இல்வாழ்வார்க்கு இன்றியமையாத பண்புகளுள் விருந்தோம்புதலையும் வள்ளுவனார் சேர்த்துள்ளார். இச்செய்தியை நீங்கள் நினைவிற் கொள்ளுங்கள் ; விருந்தினரை முகமலர்ச்சியுடன் நோக்குங்கள் ; பிறகு விருந்தளித்துப் போற்றுங்கள்.

3. வில்லிபுத்தூரார் பாரதம்

பெயர்க்காரணம் : பாரதருடைய வரலாற்றைக் கூறுகின்ற நூல் பாரதம் எனப்பட்டது. சந்திர வம்சத்தைச் சேர்ந்த பரதன் என்னும் அரசனது பெயரே அவனது மரபுக்கும் பெயராயிற்று. பரதனுடைய மரபினர் பாரதர் எனப்பட்டனர். பரதன் என்பவன் துஷ்யந்தனுடைய மகன்; கல்வி கேள்வி, அறிவு, ஒழுக்கம், ஆண்மை, கொடை முதலியவற்றிற்குப் பெயர் பெற்றவனாதலால் அவனது பெயரே அவன் தோன்றிய வம்சத்திற்கும் பெயராக அமைந்தது. தமிழில் பாரதக் கதையைப் பாடும் நூல்கள் பலவாதலால், அவற்றுள் வில்லிபுத்தூராழ்வார் பாடிய பாரதத்திற்கு வில்லிபுத்தூரார் பாரதம், வில்லி பாரதம் என்னும் பெயர்கள் அமைந்தன.

முதல் நூல் : இந்தப் பாரதத்திற்கு முதல் நூல் வியாச முனிவரால் வடமொழியில் எழுதப்பெற்ற மகாபாரதம் ஆகும். வியாச முனிவர் மகா பாரதத்தைப் பாட, பிள்ளையார் அதனை எழுதினார் என்பது வரலாறு. இவ்வடமொழி நூல் வில்லி பாரதத்திற்கு முதல் நூலாகக் கருதப்பட்டாலும், பாரதக்கதை தமிழ்நாட்டில் நெடுங்காலமாக வழக்கில் இருந்து வந்துள்ளதாதலால் அக்கதையையே வில்லிபுத்தூரார் பாடினார் என்று சொல்லுதல் தகும்.

ஏனைப் பாரத நூல்கள் : பாரதத்தைத் தமிழில் பலர் பாடியுள்ளனர். முதன் முதல் இதனைத் தமிழில் பாடியவர் **பெருந்தேவனார்** ஆவார். இவர் கடைச் சங்கப் புலவர்களுள் ஒருவர். இவர் பாரதத்தைப் பாடிய காரணத்தால் பாரதம் பாடிய பெருந்தேவனார் என்றே அழைக்கப்பட்டார். ஆனால் அவர் எழுதிய பாரத நூல் இன்று கிடைக்கவில்லை. உரையாசிரியர்களால் மேற்கோள்களாகக் காட்டப்பட்ட சில பாடல்களே இன்று கிடைக்கின்றன. கி. பி. எட்டாம் நூற்றாண்டில் மற்றொரு பெருந்தேவனார் பாரதத்தைத் தமிழில் பாடினார். அவரும் பாரதம் பாடிய பெருந்தேவனார் என்றே அழைக்கப்படுகின்றார். அவர் பாடிய நூலின் பாடல்கள் வெண்பாக்களாக உள்ளன; இடையிடையே உரை நடையிலும் கதை அமைந்துள்ளது. பெரும்பாலும் வெண்பாக்களால் அமைந்தமைபற்றி அந்நூல் **பாரத வெண்பா** என்று பெயர் பெற்றுள்ளது. இந்நூலில் சில பகுதிகளே இன்று கிடைத்துள்ளன. இவற்றைத் தவிர **நல்லாப் பிள்ளை பாரதம்** என்றும் ஒரு பாரத நூல் தமிழில் உள்ளது. நல்லாப் பிள்ளை என்பவர் வில்லிபுத்தூரார் பாடாமல் விடுத்த பகுதிகளையெல்லாம் பாடி, பாடிய பகுதிகளில் சிலவற்றை விரித்து, அவர் பாடியுள்ள பாடல்களை இடையிடையே பெய்து பாரத நூலாக அமைத்துள்ளார். இவர்களைத் தவிர **அரங்கநாதக் கவிராயர்** என்பவரும் பாரதத்தின் பிற்பகுதியைப் பாடியுள்ளார். எனவே பாரதக் கதை தமிழ் நாட்டில் பலரால் விரும்பிப் படிக்கப்பட்டுவந்ததென்றும், அது புலவர்கள் பலருடைய கருத்தைக் கவர்ந்திருந்தது என்றும் நாம் அறியலாம்.

ஆசிரியர் வில்லிபுத்தூர் ஆழ்வார் : ஈண்டு நமக்குப் பாடமாக வைக்கப்பட்டிருக்கும் பகுதி வில்லிபுத்தூரார் பாரதத்திலிருந்து எடுக்கப்பட்டது. வில்லிபுத்தூரார் என்னும் பெயர் பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவராகிய பெரியாழ்வாருக்கு அமைந்த வேறு பெயர் என்றும், ஸ்ரீவில்லிபுத்தூரில் கோயில் கொண்டிருக்கும் திருமாலுக்குப் பெயர் என்றும் கூறுவர். இந்நூலாசிரியர்

வெறுத்து விட்டானோ என்றும், ஊழ்வினை தன் பயனைத் தருகின்றதோ என்றும் கூறித் தன் உயிர் பதைத்தாள் சீதை.

விளக்கவுரை : எண்ணலா - நினைக்க முடியாத. துறத்தல் - வெறுத்தல், தள்ளுதல். முன்னை - முற்பிறப்பு. பன்ன - சொல்ல. உணர்வு - அறிவு தேய்ந்து - சோர்ந்து. **அறிவிலள் எனத் துறந்தானோ :** மான் உருவில் மாயஞ் செய்து வந்த மாரீசன் இராமனது குரலில் கூவி அழைத்தமை கேட்ட சீதை, உடனே இராமனது துணைக்குச் செல்லுமாறு இலக்குவனைத் தூண்டினாள். இராமனைக் கொல்லவோ, துன்பம் செய்யவோ யாராலும் முடியாது என்றும், அஃது அரக்கர்களின் மாயமாக இருத்தல் வேண்டும் என்றும் இலக்குவன் எவ்வளவோ எடுத்துக் கூறினான். ஆனால் சீதை அவற்றை ஏற்றுக்கொள்ளாமல், அவனைப் பலவாறு இகழ்ந்து கூறி, உடனே துணைக்குச் செல்லுமாறு தூண்டி அனுப்பினாள். இவ்வாறு சீதை இலக்குவனை இகழ்ந்தமை கேட்டு இராமன், 'சீதை அறிவற்றவள் ; நமக்கு ஏற்ற மனைவி அல்லள்' என எண்ணித் தன்னை வெறுத்துத் தள்ளிவிட்டானோ என்று சீதை நினைத்து வருந்தினாள். **முன்னை ஊழ்வினை முடிந்ததோ :** முற் பிறப்பில் செய்த வினையின் பயனை இப் பிறப்பில் மக்கள் நுகர்ந்தே தீர்தல் வேண்டும். முற்பிறப்பில் செய்த தீவினையே இவ்வாறு தன்னை இராமனிடமிருந்து பிரித்து விட்டதென்றும், அவ்வினையின் பயனையே இப்பொழுது தான் நுகர்வதாகவும் சீதை கருதினாள் ஆதலால் இவ்வாறு கூறப்பட்டது.

இலக்கணக் குறிப்பு : வினையேன் : ஈண்டு வினையாலணையும் பெயர். அருமை + உயிர் = அருயிர் : பண்புத்தொகை.

9. விருந்து கண்டால் இராமன் என்செய்வான் என்று சீதை ஏங்குதல்

அருந்தும் மெல் அடகு - உண்கின்ற மெல்லிய இலையுணவை
ஆர் இட அருந்தும் - யார் இட இராமன் உண்பான்
என்று அழுங்கும் - என்று (சீதை) வருந்துவாள்
விருந்து கண்ட போது - விருந்தினரைக் கண்டபொழுது
என் உறுமோ என்று - இராமனது மனம் என்ன பாடுபடுமோ என்று
விம்மும் - அழுவாள்
யான் கொண்ட நோய்க்கு - யான் அடைந்த இத் துன்ப நோயைப் போக்க
மருந்தும் உண்டு கொல் என்று - மருந்து உண்டோ என்று எண்ணி
இருந்த - தான் தங்கியிருந்த
மாநிலம் - பெரிய இடத்தை
செல் அரித்திடவும் - கரையான் அரிக்கவும்
ஆண்டு எழாதாள் - அவ்விடத்திலிருந்து நகராதவளாகிய சீதை
மயங்கும் - மயங்குவாள்.

கருத்துரை : உண்ணுதற்குரிய இலையுணவை இராமனுக்கு யார் இடுவார் என்றும், விருந்தினரைக் கண்டால் அவரை இராமன் எவ்வாறு உபசரிப்பான் என்றும், தான் கொண்ட நோய்க்கு மருந்து இல்லைபோலும் என்றும் வருந்தி, இருந்த இடத்தினை விடுத்து எழாதவளாய் இருந்தாள் சீதை.

விளக்கவுரை : அடகு - இலை; கனி, காய், கிழங்கும் ஆம். அழுங்கும் - வருந்துவாள். **அருந்தும் மெல்லடகு ஆர் இட அருந்தும் :** காட்டுப் பகுதியில் இலை யுணவு முதலியனவே கிடைக்கும். சீதை உணவை இட்டால் தான் இராமன் கூச்சம் இல்லாது உண்பான். தான் இல்லாததால் அத்தகைய இராமனுக்கு இலை யுணவை இடுபவர் யார் என்று சீதை நினைத்

இவர் வல்லவர். வடநூற் கதையை இவர் பாடியிருந்தாலும், தமிழ் நாட்டிற்கும் தமிழ் மக்களுக்கும் ஏற்பக் கதைகளைப் பாடிச் செல்கின்றார். இவருடைய பாடல்களில் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் அழகு நன்கு அமைந்துள்ளது.

நூலின் பிரிவு: வில்லிபுத்தூரார் பாரதத்தில் (1) ஆதிபருவம், (2) சபா பருவம், (3) ஆரணிய பருவம், (4) விராடபருவம், (5) உத்தியோக பருவம், (6) வீட்டும பருவம், (7) துரோண பருவம், (8) கன்ன பருவம், (9) சல்லிய பருவம், (10) சௌப்திக பருவம் என்று பத்துப்பருவங்கள் உள்ளன.

நம் பாடப்பகுதி: வில்லிபுத்தூரார் பாரதத்தில் ஐந்தாவது பருவமாகிய உத்தியோக பருவத்தில் உள்ள கிருட்டினன் தூதுச்சருக்கம் என்னும் பகுதியிலிருந்து பத்துப் பாடல்கள் நமக்குப் பாடமாக அமைந்துள்ளன.

முன்கதைச் சுருக்கம்

தருமபுத்திரன், வீமன், அருச்சுனன், நகுலன், சகதேவன் ஆகிய ஐவரும் 'பாண்டவர்' எனப்படுவர். துரியோதனனும், அவனுடைய தம்பிமார்களும் சேர்ந்த நூற்றுவர் கௌரவர் எனப்படுவர். பாண்டவர்களுள் மூத்தவனாகிய தருமனுடன் துரியோதனன் சூதாடி வென்று, பாண்டவர்களைக் காட்டுக்கு ஓட்டினான். பாண்டவர்கள் காட்டில் பன்னிரண்டு ஆண்டுகள் உறைந்தும், ஓராண்டு யாரும் அறியாமல் மறைந்து வாழ்ந்தும் துரியோதனன் விதித்தவாறு பதின்மூன்று ஆண்டுகளைக் கழித்து முடித்தனர். ஆயின், தனது உரைப்படி துரியோதனன் பாண்டவர்கட்கு உரிய நாட்டினைக் கொடுக்க மறுத்துவிட்டான். போர் செய்து தமக்குரிய நாட்டினைப் பெறுவதற்குத் தருமபுத்திரன் விரும்பவில்லை. எனவே, அவன் கண்ணனைத் துரியோதனனிடம் தூது அனுப்பினான். கண்ணன் கூறிய உரையைத் துரியோதனன் ஏற்றுக் கொண்டானல்லன். பின்பு கண்ணன் பாண்டவர்களுடைய தாயாகிய குந்தியைக் கன்னனிடம் (கர்ணனிடம்) அனுப்பினான். குந்தியும் கன்னனும் உரையாடும் பகுதி ஈண்டுப் பாடமாக அமைந்துள்ளது.

குந்தியும் கன்னனும்

குந்திபோசர் என்னும் அரசமரபைச் சார்ந்த சூரன் என்னும் அரசனுடைய மகள் குந்தி. அவளுக்குப் பிரதை என்றும் ஒரு பெயர் உண்டு. ஒரு முறை கோபத்திற்குப் பெயர் பெற்ற துருவாசர் என்னும் முனிவர் சூரனுடைய அரண்மனைக்கு வந்திருந்தார். தனது அரண்மனையில் விருந்தினராக வந்த துருவாசரைக் குந்தி நன்கு பேணிப் போற்றிப் பணிவிடை புரிந்தாள். அதனால் மகிழ்ச்சியடைந்த துருவாசர் குந்திதேவிக்கு மந்திரம் ஒன்றை உரைத்துச் சென்றார். அம்மந்திரமொழியைக் கருத்தில் வைத்து, எந்தத் தேவரை அழைத்தாலும், அத்தேவர் அவளிடம் வந்து, தம்மைப்போன்ற குழந்தை யொன்றை அளித்துச் செல்வார். கன்னியாக இருந்த குந்திதேவி, அம்மந்திரத்தைச் சோதிக்க எண்ணி, அதனை ஓதிச் சூரிய தேவனை நினைத்தாள். அவ்வளவில் சூரிய தேவனும் அங்குத் தோன்றி, அவளுக்கு ஓர் ஆண் குழந்தையை அளித்துச் சென்று விட்டான். அக்குழந்தையே கன்னன் (கர்ணன்) ஆவான்.

...னியாக இருந்த தனக்கு ஒரு குழந்தை கிடைத்தமையை உலகோர் ...தன்னைப் பழிப்பர் என்று கருதிய குந்தி, அக் குழந்தையை ஒரு ...வைத்துக் கங்கையாற்றில் விட்டாள். கங்கையில் மிதந்து வந்த ...திருதராட்டிரனது தேர்ப்பாகர் தலைவன் கண்டான்; எடுத்தான்;

குழந்தையைக் கண்டான்; மகிழ்ச்சியோடு போற்றி வளர்த்தான். கன்னனும் பரசுராமரிடம் படைக்கலங்களைப் பயிற்சி பெற்று, துரியோதனனுக்கு உயிர்த்தோழனாக அமைந்தான். கன்னன் தனது பிறப்பு வரலாற்றை அறியமாட்டான்.

துரியோதனனிடம் தூதுபேச வந்த கண்ணன், குந்தியைக் கன்னனிடம் அனுப்பினான். கன்னனும் குந்தியும் உரையாடும் பகுதியே ஈண்டுப்பாடமாக அமைந்துள்ளது. கன்னிப்பருவத்திலேயே குந்தி ஓர் மகனை அடைந்த செய்தியைப் பிறர் அறியமாட்டார்கள்; கண்ணன் ஒருவனே அறிவான். பின்பு குந்தி பாண்டுவை மணந்தாள்: தருமன், வீமன், அருச்சுனன் என்னும் மைந்தர்களை முறையே இயமன், காற்று, இந்திரன் ஆகிய கடவுளர்களின் அருளால் பெற்றாள். பாண்டுவின் இரண்டாம் மனைவியாகிய மாத்திரை அசுவினி தேவர்களின் அருளால் நகுலனையும், சகதேவனையும் பெற்றாள். தருமன், வீமன், அருச்சுனன், நகுலன், சகதேவன் ஆகிய பாண்டவர் ஐவர்க்கும் கன்னன் அண்ணனாவான். கன்னனோ துரியோதனனுடைய உயிர் நண்பனாக இருந்தான். பாண்டவர்கள் தன்னுடைய தம்பிமார்கள் என்பதையும், தனது பிறப்பின் வரலாற்றையும் கன்னன் உணருமாறு செய்ய விரும்பியே கண்ணன் குந்தியைக் கன்னனிடம் ஏவினான். குந்தி தனது மூத்த மகனாகிய கன்னனிடம் சில வரங்களைப் பெறுமாறு செய்விப்பதே கண்ணனின் கருத்தாகும்.

நம் பாடப் பகுதிச் சுருக்கம்

குந்தி கன்னனைக் காணுதல், தான் அவனது தாயே என்பதை விளக்குதல், பாண்டவர்களுடன் சேருமாறு கன்னனை வேண்டுதல், கன்னன் அதற்கு இசையாதிருத்தல், குந்தி கன்னனிடம் வரங்கள் வேண்டுதல், கன்னன் வரங்களைக் கொடுத்தல் ஆகிய நிகழ்ச்சிகள் ஈண்டு வந்துள்ள பாடல்களின்கண் அமைந்துள்ளன.

1. குந்தி கன்னனிடம் சென்று "நான் உனக்குத் தாய்?" எனல்

(தன்னிடம் வந்த குந்தியை நோக்கிக் கன்னன்)
அன்னை - 'தாயே!
வந்தது - (தாங்கள் என்னிடம்) வந்தது
என் - என்னுடைய
அருந்தவப் பயன் - அரிய தவத்தின் பயனேயாகும்'
என - என்று கூறி.
அன்பினால் - அன்பு மிகுதியால்
இன்புஉற - மகிழ்ச்சி பொருந்த
வணங்கி - அவளை வணங்கி,
வந்தவாறு - 'தாங்கள் (இங்கே) வந்த காரியம்
என்னை - 'யாது ?'
என்ன - என்று கேட்க,
மற்று - பின்பு
அவளும் - அக் குந்திதேவியும்,
'யான் உனக்கு——,
ஈன்றதாய் - பெற்றதாய் ஆவேன்
என்று - என்று (முதற்கண்) கூறி (பின்பு)
முன்னை-(தான் கன்னியாக இருந்த) முன்னாளில்
தவமுனி - தவத்திற் சிறந்த துருவாச முனிவர்
வந்து - தன் அரண்மனைக்கு வந்து
ஒரு மந்திரம் - ஒரு மந்திரத்தை
மொழிந்ததும் - தனக்குக் கூறியருளிய செய்தியையும்,
கதிரவன் அருளால் - சூரியனது அருளினால்
பின்னை - பின்பு
வந்ததும் -(கன்னன்) பிறந்த செய்தியையும் (அக்குழந்தையைத் தான்)
பேழையில் - ஒரு பெட்டியில் (வைத்து)

விடுத்ததும் - (கங்கையாற்றில்) விடுத்த செய்தியையும் (ஆகிய வற்றை)
பிழை இலாது – தவறு இல்லாமல்
உரைத்திட - சொல்ல
கேட்டு-(குந்தி கூறிய வரலாற்றைக் கன்னன்) கேட்டு,

கருத்துரை : கண்ணனது தூண்டுதலால் கன்னனிடம் குந்தி வந்தாள். குந்தியைக் கண்ட கன்னன் வரவேற்று அவள் வந்த காரியத்தை வினவினன். குந்தியும் தான் அவனுக்குத் தாய் என்னும் உண்மையைக் கூறி, தான் கன்னியாக இருந்த காலையில் சூரியனது அருளால் அவன் பிறந்த செய்தியையும், பிறகு அவனைத்தான் ஒரு பெட்டியில் வைத்துக் கங்கையாற்றில் விடுத்த செய்தியையும் தவறில்லாமல் கூறினள்.

விளக்கவுரை : என்னை - என்ன? வந்தவாறு - வந்த காரியம். ஈன்ற - பெற்ற. தவமுனி : துருவாசர்; சாபத்தாலும், சாபத்தால் வளரும் தவத்தாலும், கோபத்தாலும் பேர் படைத்தவர் இம் முனிவர். கதிரவன் - சூரியன். பேழை - பெட்டி. பிழை - தவறு. **முன்னை வந்து ஒரு மந்திரம் தவமுனி மொழிந்ததும்** ; குந்திதேவி கன்னியாக இருந்த காலத்தில், துருவாச முனிவர் அவளது தந்தையின் விருந்தினராக வந்திருந்தார். அம் முனிவருக்குக் குந்தி அன்புடன் பணிவிடைகள் செய்தாள். அதனால் அம் முனிவர் மகிழ்ந்து, ஒரு மந்திரத்தைக் குந்திக்கு உரைத்துச் சென்றார். அம் மந்திரத்தை ஓதி, ஒரு தேவனை நினைத்தால், அத்தேவன் காட்சி யளித்து, ஓர் ஆண் குழந்தையை அளிப்பான். தனக்குத் துருவாச முனிவர் உரைத்தருளிய மந்திரத்தைக் கன்னனிடம் உரைத்தாள் குந்தி. **கதிரவன் அருளால் பின்னை வந்ததும் :** தனக்குத் துருவாசர் கூறியருளிய மந்திரத்தைக் குந்திதேவி சோதித்துப் பார்க்க விரும்பினள். அவள் கன்னியாக இருந்தபொழுது, அம்மந்திரத்தை ஓதிச் சூரியனை நினைந்தாள். சூரியனும் அவளுக்குக் காட்சி கொடுத்து, தன் அமிசமாக ஓர் ஆண் குழந்தையை அளித்தான். அக்குழந்தையே கன்னன் ஆவான். சூரியனின் அருளால் தனது கன்னிப்பருவத்தில் கன்னன் பிறந்த செய்தியைக் குந்தி அவனிடம் கூறினள். **பேழையில் விடுத்ததும் :** குந்தி, தனது கன்னிப்பருவத்தில் சூரியனின் அருளால் பிறந்த மகனாகிய கன்னனைத் தன்னிடமே வைத்துக் கொண்டிருக்க விரும்பவில்லை. கன்னிப்பருவத்தில் பிள்ளையைப் பெற்றாள் என்று ஊரார் பழி கூறுவரே என்று அவள் அஞ்சினள். எனவே, அவள் அக்குழந்தையை ஒரு பெட்டியில் வைத்து, கங்கையாற்றில் விடுத்தாள். குழந்தையாக இருந்த கன்னனைப் பெட்டியில் வைத்துக் கங்கையில் விடுத்த செய்தியைக் குந்தி இச் சொற்றொடரால் கன்னனுக்குக் கூறினள். (இவ்வாறு குந்தியால் பெட்டியில் வைத்து விடப்பெற்ற குழந்தையைத் தேர்ப்பாகர் தலைவன் எடுத்து வளர்த்தான் என்றும், அக்குழந்தையே கன்னன் என்றும் அறிக.)

இலக்கணக் குறிப்பு : அன்னை : அண்மை விளி. இச்சொல்லிற்கு 'அன்னையாகிய நீ' என்று பொருள் கொண்டு, முன்னிலைப் படர்க்கையாகவும் கொள்ளலாம். அருந்தவம் : பண்புத் தொகை.

2. கன்னன் கூற்று

(கன்னன் குந்தியை ஐயுறுதல்)

உவந்து - (தன்னை அடைந்தவர்கள் கேட்கும் பொருள்களை) மகிழ்ச்சியுடன்
அளித்திடும் - கொடுக்கும்
வள்ளல் - கொடைப்பண்பு வாய்ந்தவனாகிய கன்னன்,

இது - (குந்தி கூறுகின்ற) இச்செய்தி
மாயனர் - கண்ணபிரானது
விரகு - வஞ்சனையாக இருத்தல் கூடும்
என - என்று
மனத்தினில் மதித்து - மனத்தில் நினைத்து,
(குந்தியைப் பார்த்து)
நீ ——,
அ நாள் - கன்னியாக இருந்த நாளில்
எனை - என்னை
பயந்தவள் என்னினும் - பெற்றவள் என்று கூறினும்
நின்மொழி - உன் சொல்லினை
நெஞ்சுஉற - மனத்தில் பொருந்த
தேறேன் - நம்பமாட்டேன்

பேய் அனர் சிலர் - பேய் போன்ற மகளிர் சிலர்
பேர் அறிவு - சிறந்த அறிவு
இன்மையால் - இல்லாமையால்,
எனக்கு ——,
பெற்ற தாய் - ஈன்ற தாய்
என வந்து - என்று (உறவு) கூறி வந்து
தூய - குற்றமற்ற
நாகரின் அமைந்தது - தேவர்கள் கொடுத்ததாகிய
ஓர் - ஒரு
துகிலால் - ஆடையால்
துன்பம் உற்று - இறப்புத் துன்பம் அடைந்து
என்புஉரு - எலும்பு மட்டும் எஞ்சிய உருவம்
ஆனர் - ஆனர்கள் (இறந்தார்கள்).

கருத்துரை : குந்தி கூறிய வரலாற்றினைக் கேட்டதும் கன்னனுக்கு, கண்ணபிரானின் வஞ்சனையால் அவள் அவ்வாறு கூறுகின்றாளோ என்றொரு ஐயம் உண்டாயிற்று. எனவே அவன் அவளை நோக்கி, 'நின் சொல்லினை யான் நம்பமாட்டேன். பேய் போன்ற பெண்டிர் சிலர் எனக்குத் தாய் என்று கூறிக்கொண்டு வந்தனர். அவர்கள் யாவரும், தேவர்கள் எனக்குக் கொடுத்த ஆடையினை உடுத்து இறந்தனர்.' என்று கூறினன்.

விளக்கவுரை : மாயனர் : மாயம் செய்வதில் வல்ல கண்ணபிரான்; கருநிறமுடைமை பற்றிக் கண்ணபிரானுக்கு அப்பெயர் வந்தது என்றும் கொள்ளலாம். விரகு - வஞ்சனை, தந்திரம். மதித்து - நினைத்து. உவந்து - மகிழ்ந்து வள்ளல் - வரையாது கொடுக்கும் கொடைப்பண்பு வாய்ந்தவன். பயந்தவள் - பெற்றவள். தேறேன் - நம்பமாட்டேன், தெளிய மாட்டேன். தூய - குற்றம் அற்ற, பரிசுத்தமான. நாகர் - தேவர். துகில் - ஆடை. என்பு - எலும்பு. **உவந்து அளித்திடும் வள்ளல் :** தன்னிடம் வந்தவர்கள் யாவரேயாயினும், அவர்கள் எவற்றைக் கேட்டாலும் அவற்றை மகிழ்ச்சியுடன் அளிக்கும் வள்ளலாதலால் கன்னன் இவ்வாறு சுட்டப்பட்டான். **பேயனர் சிலர்:** பேய் போன்ற மகளிர் சிலர், 'கண்ணபிரானிடம் வஞ்சனையாகப் பேயுருவுடன் வந்த பூதகிபோன்ற மகளிர் சிலர்' என்றும் இதற்குப் பொருள் கொள்ளலாம். **தூயநாகரின் அமைந்ததோர் துகிலால் துன்பமுற்று என்புருவானர் :** கன்னன் தன்னைப் பெற்ற தாய் யாவள் என்பதை உணராமல் இருந்தான். அதனை மகளிர் சிலர், அவனிடம் வந்து, தாமே அவனைப் பெற்ற தாய் என்று கூறினர். கன்னன் யாது செய்வான்? அவ்வாறு மகளிர் சிலர் கூறித் தன்னிடம் பணம் பறிக்க முயன்றமை அவனுக்குப் பெருந்தொல்லையாக இருந்தது. எனவே, அவன் தேவர்களை வேண்டினன். தேவர்களும் அவனுக்கு ஓர் ஆடையை அளித்தனர். அந்த ஆடையை அவனது தாயைத் தவிர ஏனையோர் உடுத்தினல் இறந்துபடுவர். தன்னிடம் தாய் முறை கூறிவந்தவர்களிடம கன்னன் அவ்வாடையை அளித்து உடுக்கச் செய்தான். பொய் கூறி வந்த பலர் அவ்வாடையை உடுக்க அஞ்சி

ஓடிவிட்டனர். சிலர் அதனை உடுத்து எண்புருவம் அடைந்தனர்; அஃதாவது அவர்கள் எரிக்கப்பட்டு இறந்தனர்.

இலக்கணக் குறிப்பு: அநாள்: 'அந்நாள்' என்பது 'அநாள்' என வந்தது தொகுத்தல் விகாரம். எதுகை நோக்கி ஈண்டு இவ்வாறு வந்தது. பேரறிவு: பண்புத் தொகை.

3. குந்தி ஆடையைத் தரித்து அழியாதிருத்தல்

அடாது - தகாத செயலை
செய்தவர் - செய்தவர்கள்
படாது - படுதற்கு அரிய பாட்டினை
பட்டனர் - அடைந்து ஒழிந்தார்கள்
எனும் - என்று கூறிய
அங்கர்கோன் - அங்க நாட்டுக்கு அரசனாகிய கன்னனது
அருள்மொழி - அருளுடன் கூடிய சொல்லை
கேட்டு ——,
தடாத - தடுக்கப்படாத
அன்புஉடை - அன்பினை உடையவளும்,
கெடாத - குற்றமற்ற
தூமொழி - தூயமொழிகளை
பகர் - சொல்லுகின்றவளுமாகிய
தையலும் - அந்தக் குந்தியும்
மையலின் நவிர்ந்து - மயக்கத்திலிருந்து நீங்கி
படாம் அது - (தேவர்கள் உனக்குக் கொடுத்த) அந்த ஆடையை
என்கையில் - எனது கையில்
தருக - கொடுப்பாயாக
என - என்று சொல்லி
வருதலும் - (அவ்வாடையைக் கன்னன் கொடுக்க அது) தன் கையில் வந்தவுடன்,
பயந்திலேன் எனில் - 'யான் இவனைப் பெற்றவள் அல்லளானால்
எனை முனி - என்னைச் சினந்து அழிப்பாய்'
என்று - என்று அந்த ஆடையை நோக்கிக்கூறி
எடா அந்த ஆடையை எடுத்து
விரித்து - பிரித்து
அலைத்து - உதறி
உடல்பட - தன் உடலில் படுமாறு
போர்த்து - போர்த்திக் கொண்டு
எதிர் - அக்கன்னனுக்கு எதிரில்
ஈன்றதாய் ஆம் என - பெற்றதாய் இவளே ஆவாள் என்னும்படி
இருந்தாள் - அமர்ந்திருந்தாள்.

கருத்துரை: தகாத செயலைச் செய்தவர்கள் படாத பாட்டினைப் பெற்றார்கள் என்று கன்னன் கூறிய சொல்லினைக்கேட்டு, குந்தி அந்தத் தெய்வ ஆடையை அவனிடமிருந்து வாங்கி, அந்தக் கன்னனைத் தான் பெறவில்லையென்றால் தன்னை எரிக்குமாறு அவ்வாடைக்குக் கூறி, அதனை விரித்து உடுத்திக்கொண்டாள். இதிலிருந்து தன்னைப் பெற்றதாய் குந்தியே என்பதனைக் கன்னன் உணர்ந்தான்.

விளக்கவுரை: அடாது - செய்யத்தகாதது. படாது - அடையத்தகாதது. அங்கர்கோன் - அங்கநாட்டரசனாகிய கன்னன். தடாத - தடுக்கப்படாத. தையல் - பெண்: ஈண்டுக் குந்தி. மையல் - மயக்கம். படாம் - ஆடை. பயத்தல் - பெறுதல். எடா - எடுத்து. அடாது செய்தவர் படாது பட்டனர்: இஃது ஒரு பழமொழி. கன்னனிடம் பொருள் பறிக்கும் பொருட்டு அவனைப் பெற்றதாய் தாங்களே என்று பொய்கூறி வந்த மகளிர் சிலர், தேவர்கள் கன்னனுக்குக் கொடுத்த ஆடையை உடுத்தி இறந்துபட்டனர். அப்பெண்டிர் தகாத செயலாகிய பொய் கூறினமையால் இறந்துபட்டனர். இவ்வாறு அவர்கள் பொய்கூறித் துன்பமுற்றனர் என்பதனை விளக்குவதற்காக இப்பழமொழி அவன் கூற்றாக அமைந்துள்ளது. அருள்மொழி: பிறர் பொய் கூறி இறந்தமை போலக் குந்தியும் இறத்தலைக்

கன்னன் விரும்பினனல்லன். அதனாலேயே அவ்வாறு பிறபெண்டிர் பொய் கூறி, இறந்தமையைக் கூறி 'அடாது செய்தவர் படாது பட்டனர்' என்று கூறினன். குந்தி இறத்தல்கூடாது என்னும் அருள் உள்ளத்தினால் அவன் கூறினனாதலின் 'அருள் மொழி' எனப்பட்டது.

இலக்கணக் குறிப்பு: அடாது, படாது: எதிர்மறை ஒன்றன்பால் வினையாலணையும் பெயர்கள். தையல்: அழகென்னும் பண்பின் பெயர் அப்பண்பினை உடைய பெண்ணுக்கு ஆகி வந்தமையால் பண்பாகு பெயர். தூமொழி: பண்புத் தொகை. பகர் தையல்: வினைத்தொகை. தருக வியங்கோள் வினைமுற்று. எடா - செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

4. குந்தியின் அன்பு கனிந்த உரை

(குந்தி கன்னனைப் பார்த்து)

என் மதலாய் - எனது மகனே
வருக - என்னுடன் வருவாயாக
இளைஞர் ஐவரும் - உன் தம்பிமார் களாகிய பாண்டவர் ஐவரும்
நின் - உன்னுடைய
மலரடி - தாமரை மலர் போன்ற அடிகளை
அன்பினால் வணங்கி - அன்போடு வணங்கி
உரிமையால் - அரச மரபிற்குரிய முறைப்படியே
மனம் ஒத்து - மனம் ஒன்று பட்டவர்களாய்
ஏவலே புரிய - நீ ஏவிய பணிகளைச் செய்ய (நீ)
ஒரு தனி - ஒப்பற்ற தனியானவனாய்
செய்ய கோல் - செங்கோலை
ஓச்சி - நடத்தி
அரசு எலாம் - அரசர்கள் எல்லோரும்
வந்து ———,
உன் கடைத்தலை - உனது வாயிற் புறத்தில்
வணங்க - வணங்கவும்
ஆண்மையும் - வீரமும்
செல்வமும் ———,
விளங்க - விளங்கவும்
குருகுல அதிபர்க்கும் - குரு குலத்து அரசர்கட்கெல்லாம்
குரிசிலாய் - அரசனாய்
வாழ்வு கூர்வதே - வாழ்க்கை மிகுதியாக விரும்புவதே
கடன் - உனது கடமை
என - என்று
குறித்தாள் - குறிப்பிட்டுக் கூறினாள்

கருத்துரை: குந்தி கன்னனை யழைத்து, 'எனது மகனே, உன் தம்பிமார்களாகிய பாண்டவர்கள வணங்கி ஏவல் புரிய, நீ செங்கோல் செலுத்த அரசர்கள் யாவரும் உன்னை வணங்க, வீரத்துடனும் செல்வத்துடனும் குரு குலத்தரசர்கட்கெல்லாம் அரசனாய் வாழ்வதே உனது கடமை' என்று கூறினாள்.

விளக்கவுரை: மதலை - பிள்ளை. இளைஞர் - தம்பிமார். ஐவர் - பாண்டவர். செய்ய கோல் - செங்கோல். ஓச்சி - செலுத்தி. கடைத் தலை - வாயிற்புறம். ஆண்மை - வீரம். குரிசில் - ஆடவர்களில் சிறந்தவன். கூர்தல் - மிகுதல்.

இலக்கணக் குறிப்பு: மதலாய்: 'மதலை' என்னும் சொல் ஈறு திரிந்து விளியேற்றது. மலரடி - உவமத்தொகை. கடைத்தலை - 'தலை கடை' என்பது கடைத்தலை என வந்தது இலக்கணப் போலி. குருகுல அதிபர் = குருகுலாதிபர்: வடமொழித் தீர்க்க சந்தி.

"ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம்"

5. துரியோதனன் தனக்கு ஏற்றமும் தோற்றமும் அளித்தான் என்று கன்னன் கூறுதல்

(கன்னன் குந்தியை நோக்கி)
பெற்ற நீர் - என்னைப் பெற்ற நீர்
மகவு அன்பு - குழந்தையினிடம் விருப்பம
இலாமையோ - இல்லாமையினுலோ
அன்றி - அல்லது
பெரும் பழி - பெரிய பழி வருதலுக்கு
நாணியோ - வெட்கம் கொண்டோ
விடுத்தீர் - (என்னைப் பெட்டியில் வைத்துக் கங்கையாற்றில்)விடுத்தீர்
அற்றை நாள் தொடங்கி - அந்நாள் முதல்
இன்றளவும் - இன்று வரையில்
என்னை ——,
ஆர் உயிர் - (தனது) அருமையான உயிர் போன்ற
துணை எனக் கருதி - நண்பனுகை நினைத்து (துரியோதனன்)
கொற்றம் - வெற்றி பொருந்திய
மா - சிறந்த
மகுடம் புனைந்து - முடியை எனக்குச் சூட்டி
அரசு அளித்து - அங்க நாட்டு அரச பதவியையும் கொடுத்து
கூட உண்டு - உடனிருந்து சாப்பிட்டு
உரிய - தனக்கு உரிய
தம்பியரும் - தம்பிமார்கள் தொண்ணூற்றொன்பது பெயர்களும்
சுற்றம் ஆனவரும் - உறவினர்களும்
என் அடி வணங்க - எனது அடியை வணங்குமாறு செய்து
தோற்றமும் - நற்பெயரும்
ஏற்றமும் - உயர்வும்
அளித்தான் - எனக்குக் கொடுத்தருளினன்.

கருத்துரை: கன்னன் குந்தியை நோக்கி, 'தாயே, என்னைப்பெற்ற நீங்கள் குழந்தையன்பு இல்லாமையாலோ பழிக்கு நாணியோ பெட்டியில் வைத்துக் கங்கையாற்றில் விடுத்தீர். அன்று முதல் இன்றுவரையில் துரியோதனன் என்னை உயிர் போன்ற நண்பனுகக் கருதினன்; எனக்கு முடியளித்தான்; அங்கநாட்டு அரச பதவியை அளித்தான்; என்னேடு உடனிருந்து உண்டான்: தன்னுடைய தம்பிமார்களும் உறவினரும் என்னை வணங்குமாறு நற்பெயரும் உயர்வும் எனக்கு அளித்தான்' என்று கூறினன்.

விளக்கவுரை: மகவு - குழந்தை. அற்றை நாள் - அந்நாள். கொற்றம் - வெற்றி. அரசு - அங்க நாட்டு அரச பதவி. ஏற்றம் - உயர்வு. பெரும் பழி நாணியோ விடுத்தீர்: கன்னியாக இருப்பவள் ஒரு குழந்தையைப் பெற்ருள் என்று உலகம் கூறும் பழிச் சொல்லுக்கு வெட்கப்பட்டுத் தன்னைப் பெட்டியில் வைத்துக் கங்கையில் விடுத்தீரோ என்று கன்னன் குந்தியைக் கேட்டான். குந்தி கன்னனைப் பெற்ற அளவில் பெட்டியில் வைத்துக் கங்கையாற்றில் விடுத்தது பெரும் பழிக்கு நாணியே ஆதலின் இவ்வாறு அவன் கேட்டான்.

இலக்கணக் குறிப்பு: அன்று + நாள் = அற்றை நாள். அருமை + உயிர் = ஆருயிர்: பண்புத் தொகை.

6. உயிர் நண்பன் பொருட்டு உயிர் விடுதலே தக்கது என்று கன்னன் கூறுதல்

(துரியோதனன் தன்னை உயிர் நண்பனுகக் கருதினன் என்பதற்குச் சான்ருக முன்பு நடந்ததொரு இரகசியமான செய்தியைக் கன்னன் ஈண்டு எடுத்துக் கூறுகின்ருன்.)

மாசு அற - 'குற்றம் இல்லாமல்
திகழும் - விளங்குகின்ற
ஏகாந்தம் - தனியான
இடந்தனில் - இடத்தில்
நான் ——,
மடந்தை - துரியோதனனது மனைவியான பானுமதியினது
பொன் - பொன்னாலாகிய
திரு - அழகிய
மேகலை - மேகலை என்னும் அணியின்
மணி உக - மணிகள் சிதறுமாறு
புரிந்து - செய்து
அயர்ந்து இருப்ப - செய்வதறியாமல் சோர்ந்து நிற்க (அதுகாலையில் துரியோதனன் அங்கு வந்து சிந்திய மணிகளை நோக்கி)
எடுக்கவோ ——,
கோக்கவோ ——,
என்றான் - என்று கேட்டான் (அத்தகைய)
வேல் - வேற்படையினை உடைய
இராசராசனுக்கு - அரசர்க்கு அரசனாகிய துரியோதனனுக்கு
திடம் படுத்திட - உறுதியை உண்டாக்குவதற்காக (யான்)
செரு முனை சென்று - போர்முனைக்குப் போய்
செஞ்சோற்றுக் கடன் - செவ்வையாக எனக்குக் கொடுத்து வந்த சோற்றுக்குரிய கடனை
கழிப்பதுவே - தீர்ப்பதுவே
எனக்கு ——,
இனி - இனிமேல்
புகழும் - புகழ் தருவதும்,
கருமமும் - செய்யத்தக்க தொழிலும்,
தருமமும் - தருமமும் ஆகும்'
என்றான் - என்று கன்னன் குந்தியினிடம் கூறினான்.

கருத்துரை: கன்னன் குந்தியினிடம் துரியோதனனுடைய உயிர் நட்பிற்குச் சான்று ஒன்று கூறத் தொடங்கி அவளைப் பார்த்து, "அன்னையே, முன்பு ஒரு நாள் நானும் துரியோதனனது மனைவியாகிய பானுமதி என்பவளும் தனியான ஓரிடத்தில் சூதாடிக்கொண்டிருந்தோம். அப்பொழுது அவளுடைய மேகலை அணியின் மணிகள் விழுமாறு யான் செய்து பதறி விட்டேன். அதுகாலையில் ஆங்கு வந்த துரியோதனன் என்னைத் தேற்றுவதற்காக, 'இம்மணிகளை எடுக்கவோ? கோக்கவோ?' என்றான். எனது அச்சம் நீக்குவதற்காக அவ்வாறு கூறிய துரியோதனன் எனக்கு அளித்த சோற்றுக் கடனை நான் தீர்க்க வேண்டும். போர்க்களத்தில் அவன் பொருட்டு உயிரைக் கொடுப்பதே அக்கடனைத் தீர்க்கும் முறையாகும். அவ்வாறு செய்வதுதான் எனக்குப் புகழும் அறமும் தரும். அதுவே யான் செய்யத்தக்க தொழில்" என்று கூறினான். இப்பாடலால் துரியோதனனை விடுத்துப் பாண்டவர்களுடன் சேர மறுத்தான் கன்னன் என்பதனை நாம் உணரலாம்.

விளக்கவுரை; மடந்தை - பெண்: ஈண்டுத் துரியோதனனது மனைவியாகிய பானுமதி. மேகலை - பெண்டிர் அணியும் ஒருவகை அணி. எட்டுக் கோவையை உடையது இது. உக - சிதற. மாசு - குற்றம். ஏகாந்தம் - தனி. அயர்தல் - செயலற்று நிற்றல். இராசராசன் - அரசர்க்கு அரசனாகிய துரியோதனன். "எடுக்கவோ? கோக்கவோ?" என்பதன்கண் உள்ள வரலாறு: ஒருமுறை துரியோதனனது மனைவியாகிய பானுமதியுடன் கன்னன் சூதாடிக்கொண்டிருந்தான். அதுபொழுது தொலைவில் துரியோதனன் வந்தான். அதனைக் கன்னன் உணர்ந்திலன். ஆயின், பானுமதி கண்டுவிட்டாள். எனவே, அவள் தனது கணவனுக்கு மரியாதை கொடுக்கும் பொருட்டு எழுந்திருந்தாள். ஆட்டத்தின் நடுவில் அவள் எழுந்து போகிறாளே என்று எண்ணிய கன்னன் அவளது மடியைப்பிடித்து இழுத்தான். அதனால்

அவள் அணிந்திருந்த மேகலை அணி அறுந்தது. அதனுடைய மணிகள் உதிர்ந்து சிதறின. இந்நிலையில்தான், துரியோதனன் அங்கு வந்தமையைக் கன்னன் உணர்ந்தான். தனது செயலைத் துரியோதனன் தவறாகக் கருதி விடுவானோ என்று கன்னனுக்கு அச்சமும் வெட்கமும் உண்டாயின. எனவே அவன் செய்வகை அறியாமல் திகைத்தவாறு இருந்தான். அதுகண்ட துரியோதனன், தனது நண்பனின் செயலில் தான் ஐயம் கொள்ளவில்லை என்பதை வெளிப்படுத்தி, அவனது அச்சத்தை அகற்றும் பொருட்டு அவனை நோக்கி, "இம்மணிகளை யான் எடுத்துக் கோத்துக் கொடுக்கட்டுமா?" என்று கேட்டான். இவ்வரலாறு துரியோதனன் கன்னனைத் தன் உயிர் நண்பனாகக் கருதியிருந்தான் என்பதற்குச் சான்றாகும். **செஞ் சோற்றுக் கடன் கழிப்பது:** செஞ்சோறாவது சிறந்த அன்னமாகும். பெருமை குறையாதவாறு இடப்பெறும் உணவு செஞ்சோறாகும். துரியோதனன் நெடு நாட்களாக உணவு கொடுத்துவந்த கடனைக் கழிக்க விரும்பினான் கன்னன். போரில் அவன் பொருட்டு உயிர் துறப்பதே கடனைக் கழிக்கும் வழி என்பது அவனது கருத்து.

7. குந்தியின் துயரம்

மைந்தனும் - மகனாகிய கன்னனும்
பின்னையும் - பிறகும்
பற்பல் - பலவற்றை
மொழிந்த பின் - சொன்ன பிறகு (குந்தியை மேலும் பார்த்து)
பலவும் பேசி என் - "பலவற்றைப் பேசி பயன் என்ன?
பூசலோ விளைந்தது - போரோ உண்டாய் விட்டது.
நீர் ———,
இங்கு இங்கு என்னிடத்தில்
உன்னி வந்தது - நினைத்து வந்த காரியம்
என் - என்ன
கரவாது - ஒளியாமல்
உண்மையாய் - உண்மையாக
உள்ளவாறு - உள்ளபடி
உரைமின் - சொல்லுங்கள்"
என்ன - என்று
இப்பரிசினால் உரைப்ப - இவ்விதமாகச் சொல்ல
அன்னை - தாயாகிய குந்தி
ஈன்று - அம்மகனைப் பெற்று
அறத் துறந்த - முற்றிலும் தன்னை விடுத்து மிதக்கும்படி பெட்டியிலிட்டுக் கங்கையாற்றில இட்ட
அன்றையினும் - அந்நாளைக்காட்டிலும் அதிகமாக
நெஞ்சு அழிந்து - மனம் வருந்தி
இருகண் - தன் இரண்டு கண்களிலிருந்து
நீர்சொரிய - நீர் பெருக
அலறி - கதறி
வாய்குழறி - சொற்கள் தடுமாறி
நொந்து - வருந்தி
அழுதாள் - ———,

கருத்துரை: துரியோதனனுடைய உயிர் நட்பிற்குச் சான்றென்று காட்டி, அவனுக்குப் போரில் உயிரைக் கொடுப்பதே தனது கடமை என்று கூறிய கன்னன் குந்தியைப் பார்த்து, "பலவற்றைப் பேசிப் பயனென்ன? போர் வந்து விட்டது. தாங்கள் இங்கு என்னைத் தேடி வந்த காரணம் என்ன? அதனை உள்ளது உள்ளவாறு உரையுங்கள்" என்று கூறினான். அதனைக் கேட்ட குந்தி அவனைப் பெற்றுப் பெட்டியில் வைத்துக் கங்கை யாற்றில் விடுத்த நாளில் அடைந்த துன்பத்தைக் காட்டிலும் அதிகமான துன்பமடைந்து மிக வருந்தி அழுதாள்.

விளக்கவுரை: பூசல் - போர். உன்னி - நினைத்து. கரவாது - ஒளியாமல். பரிசு - தன்மை. ஈன்று - பெற்று. அற - முழுவதும். **ஈன்று அறத் துறந்த அன்றையினும்:** கன்னிப்பருவ தில் குந்தி கன்னனைப் பெற்று

பழிக்கு அஞ்சி, குழந்தையைப் பெட்டியில் வைத்துக் கங்கை யாற்றில் விடு
தாள். அவ்வாறு குழந்தையை முழுவதும் துறந்த அன்று அவள் மிக வரு
தினள். அன்று அடைந்த துன்பத்தைக் காட்டிலும் மிக அதிகமான து
பத்தை இன்று அடைந்தாள் குந்தி. பாரதப்போர் நடைபெற்றால் கண்ண
னின் துணைகொண்டு அருச்சுனன் கன்னனைக் கொன்றுவிடுவான் என்பதை
நன்கு உணர்ந்தவளாதலாலேயே, அவள் அதிகமான வருத்தம் அடைந்தா
என்று சொல்லப்பட்டது.

இலக்கணக் குறிப்பு: விளைந்தது: துணிவு பற்றி வந்த காலவ
வமைதி.

8. தாயைத் தனயன் தேற்றல்

ஆண்டு - அப்பொழுது
மாமகனும் - பெருமை பொருந்திய மூத்த மகனாகிய கன்னனும்
இருகண் நீர் - தனது தாயின் இரு கண்களிலிருந்து பெருகுகின்ற நீரினை
துடைத்து ——,
அவ்வன்னையை - அவ்வாறு அழுகின்ற தாயை
பன்முறை தேற்றி - பலமுறை தேற்றி
(அவளை நோக்கி)
மூண்ட - 'பயன் தருவதற்கு நின்ற
வல்வினையின் - முற்பிறப்பில் செய்த வலிய வினையின்
பயன் அலாது - பயனே அல்லாமல்
யார்க்கும் - எல்லோருக்கும்
முயற்சியால் - தம் முயற்சியினால்
வருவது ஒன்று - விளைவதொரு பயன்
உண்டோ - உள்ளதோ? (இல்லை
எனவே,)
வேண்டும் யாவையும் இனி - த
கள் விரும்பிக் கேட்கும் எல்ல
வற்றையுமே
தருகுவேன் - கொடுப்பேன்.
நீரும் - நீங்களும்
வேண்டிய - உங்களுக்கு வேண்டி
வற்றையெல்லாம்
வேண்டுக - கேட்பீராக'
என்ன - என்று சொல்ல
பாண்டுவின் - பாண்டுவினது
திரு - அழகிய
மா - பெருமை பொருந்திய (மூத்த
மனைவியும் - மனைவியாகிய கு
யும்
அதற்கு - அக்கன்னன் சொ
களுக்கு
பண்பினால் - இனிமையாக
இன்னன - இத்தகைய சொற்க
பகர்வாள் - சொல்வாளாயினள்.

கருத்துரை: பலவாறு வருந்தி அழுத குந்தியின் கண்ணீரினைக் க
னன் துடைத்துத் தேற்றி, இவ்வுலகில் யாவும் பழவினையின் பயனாலே
நடைபெறுமென்றும், அவள் வேண்டிய வரங்களையெல்லாம் தருவே
என்றும் கூறினன். குந்தியும் பின் கண்டவாறு சொல்லத் தொடங்கின

விளக்கவுரை: மாமகன் - மூத்த மகன். மூண்ட - (பயன் தர) எழு
வல்வினை - வலிய பழவினை. பாண்டு: குந்தியின் கணவன். திரு - அ
மா - பெரிய, மூத்த. மனைவி: ஈண்டுக் குந்தி. பண்பு - இனிமை. பகர்வா
சொல்வாள்.

இலக்கணக் குறிப்பு: வல்வினை - பண்புத்தொகை. வேண்
வியங்கோள் வினைமுற்று.

9. குந்தி கன்னனைக் கேட்ட வரங்கள்

பார்த்தன் - 'அருச்சுனன்
வெம் சமரில் - கொடிய போரில்
நின்னுடன் மலைந்தால் - உன்னுடன் போர்செய்தால் (அதுகாலையில் நீ)
பகை - அருச்சுனனுக்குப் பகையாகிய
பெரு - பெரிய
பாந்தள் அம் பகழி - சிறந்த பாம்புக் கணையை (நாகாஸ்திரத்தை)
தொடுத்தலும் - அவன்மீது ஒருமுறை தொடுத்த அளவில்
பிழைத்தால் - அதற்கு அவன் தப்பிப் பிழைப் பானேயானால்
மறித்தும் - மறுபடியும்
விடுத்து - நீ அந்தப் பாம்புக் கணையை விடுத்து
கோறல் - அவனைக் கொல்லாதே
என்று ஒரு வரம் குறித்தாள் - என்று ஒருவரத்தைக் (குந்தி, குறிப்பிட்டு வேண்டினாள்.
வாய்த்த - பொருந்திய'
மற்றவர்கள் - அருச்சுனனையொழிந்த ஏனை நால்வர்
இளைஞர் என்று - தம்பிமார்கள் என்று கொண்டு
அவரை மலையல் - அவர்களைக் கொல்லாதே
என்று ஒருவரம் குறித்தாள் - என்று ஒரு வரத்தினை வேண்டினாள்.
மூத்தவன் - பாண்டவர்கட்கு அண்ணனாகிய கன்னன்
காதல் - அன்புக்குரிய
இளைஞர் தம் பொருட்டு - தம் தம்பிமார்களுக்காக
மொழிந்தமை - குந்தி சொன்னவற்றை
கேட்டு ———,
இவை மொழிவான் - பின்வரும் சொற்களைக் கூறுவானாயினான்.

கருத்துரை: குந்தி கன்னனை நோக்கி, "அருச்சுனன் போரில் உன்னுடன் போர் செய்தால் அவன் மீது நீ பகையாகிய நாகாஸ்திரத்தை ஏவுவாய். அவ்வாறு ஏவ பட்ட அவ்வம்பு ஒரு முறை தவறினால், அவன் மீது மறுமுறை அதனை ஏவுதல் கூடாது. அருச்சுனன் அல்லாத ஏனை நால்வரையும் நீ கொல்லுதல் கூடாது" என்று இரண்டு வரங்களைக் கேட்டாள். தாய் வேண்டிய இரண்டு வரங்களையும் கேட்டுக் கன்னன் சொல்வானாயினான்.

விளக்கவுரை: பார்த்தன் - அருச்சுனன். சமர் - போர். மலைந்தால் - பொரிட்டால். பாந்தள் - பாம்பு. பகழி - அம்பு. பாந்தளம் பகழி : நாகாஸ்திரம். மறித்தும் - மீட்டும். கோறல் - கொல்லாதே. இளைஞர் - தம்பிமார்கள். அவர்களை - அருச்சுனனொழிந்த ஏனை நால்வரை. மலைபல் - கொல்லாதே. "பகைப் பெரும் பாந்தளம் பகழி" என்பதன்கண் உள்ள வரலாறு: கன்னனும் அருச்சுனனும் கோடைக் காலத்தில் ஒரு நாள் உரையாடிக் கொண்டிருந்தனர். அப்பொழுது அக்கினி தேவன் அந்தணர் உருவுடன் வந்து, தனக்கு உணவு அளிக்குமாறு அருச்சுனனை வேண்டினான். அருச்சுனனும் அவனுக்கு உணவு அளிப்பதாக உறுதி கூறினான். அவ்வளவில் அக்கினிதேவன் தன் உண்மை உருவத்தைக் கொண்டு அருச்சுனனை நோக்கி, "எனக்கு வேண்டிய உணவு காண்டவ வனமாகும். அஃது இந்திரனுக்கு உரியது. நான் அதனை எரிக்க இந்திரன் இடம் கொடுக்கமாட்டான். அதில் உயிர்கள் பல வாழ்கின்றன. அவற்றையெல்லாம் எரித்து உண்ணவே விரும்புகின்றேன். அவ்வாறு உண்ணுங்கால் இந்திரன் தடுக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். மழை பொழிந்து தீயினை அவித்து விடாமல் நீதான் காக்க வேண்டும்" என்றான். சொன்ன சொல்லைத் தட்ட விரும்பாத அருச்சுனனும் அதற்கு இசைந்தான்.

பின்பு அக்கினி தேவன் காண்டவ வனத்தை எரிக்கலாயினன். அ தெரிந்து இந்திரன் நெருப்பினை அணைக்க முற்பட்டகாலையில், அருச்சுனன் அம்பினாலேயே கூடம் ஒன்று கட்டி, நெருப்பு அணையாமல் செய் விட்டான். அருச்சுனன் அக்காட்டிலிருந்து எத்தகைய உயிரும் தப்பி போகாதவாறு கண்ணும் கருத்துமாகக் காத்து வந்தான். அப்பொழு தட்சகன் என்னும் பாம்பினுடைய மனைவி தன் குட்டியை வாயில் பற்றி வாறு அங்கிருந்து தப்பி ஓட முயன்றது. அருச்சுனன் அப்பாம்பின் த யைத் துண்டித்து நெருப்பில் வீழ்த்தினன். ஆனால் தட்சகனின் மகனு அசுவசேனன் என்னும் பாம்புக் குட்டி எவ்வாறோ தப்பிவிட்டது. அ அருச்சுனனிடம் பெரும் பகை கொண்டு, அம்பு உருவத்துடன் கன்னனி சென்று, அருச்சுனன் மீது போர்க் காலத்தில் தன்னை ஏவுமாறு வேண்டிய அவனும் அந்தப் பாம்புக் கணையை (நாகாஸ்திரத்தை) தன்னிடம் வைத்திரு தான். மறித்து நீ விடுத்துக் கோறல்: நாகாஸ்திரத்தை இரண்டா முறை விடுத்துக் கொல்லாதே. அக்கணை அருச்சுனன் மீது பட்டா அவனைக் கொன்று விடும் என்று கண்ணன் அறிவான். அவ்வம்பினை கன்னன் ஏவும்பொழுது ஒரு தந்திரம் செய்து அருச்சுனன் மீது அவ்வம் படாமல் செய்துவிடலாம் என்பது கண்ணனது நினைவு. அதுபற்றியே நாகாஸ்திரத்தைக் கன்னன் இரண்டாம்முறை ஏவாமலிருக்குமாறு வர பெற்று வரும்படி குந்தியைக் கன்னனிடம் கண்ணன் அனுப்பினன் (குந்தி கேட்ட வரத்தைக் கன்னன் கொடுத்தான். பின்பு போர் நடைபெற் காலையில் கன்னன் நாகாஸ்திரத்தை ஏவிய பொழுது, அருச்சுனனுக்கு தேரோட்டிய கண்ணன் அத்தேரினைப் பூமியில் சிறிது அழுந்துமாறு செய் விட்டான். அதனால் அருச்சுனனது கழுத்திற்குக் குறி வைத்து ஏவப் பெற் நாகாஸ்திரம் அவனது கழுத்தில் படாமல் தலைக்கு மேலாகச்சென்றுவிட்டது குந்திக்குக் கொடுத்த வரத்தைக் காக்கும் பொருட்டுக் கன்னன் நாகா திரத்தை இரண்டாம் முறை ஏவவில்லை. இவ்வாறு பின்பு செய்யத் திட் மிட்டே கண்ணன் இத்தகைய வரம்பெறுமாறு குந்தியைத் தூண்டினன்.)

இலக்கணக் குறிப்பு: வெஞ்சமர்: பண்புத் தொகை. பாந்தள பகழி: 'அம்' என்பது சாரியை. கோறல், மலையல்: எதிர்மறை ஒருமை ஏவல்கள்.

10. கன்னன் வரமளித்தல்

தறுகணர் அலர்க்கும் - கொடியவர் அல்லாத நல்லவர்களுக்கும்
தறுகண் ஆனவர்க்கும் - கொடுமை உடையவர்களுக்கும் (வேறுபாடில்லாமல்)
தண் - குளிர்ந்த
அளிநிறைந்த - நிறைந்த அருளைப் பொழிகின்ற
செங்கண்ணன் - சிவந்த கண்களை யுடைய கன்னன்
தெறுகணை - கொல்லவல்ல அம்பினை
ஒன்று - ஒரு முறை
தொடுக்கவும் - தொடுத்த காலையில்
முனைந்து - எதிர்த்து
செருச் செய்வோன் - போர் செ யும் பகைவன்
சென்னியோடு இருந்தால் - (வெ டுப்படாமல்) தலையோடிருந்தால்
மறுகணை - அவன் மேல் (அ கணையினை) இரண்டாம் முறை
தொடுப்பது - விடுப்பது
மன்னவர்க்கு - அரசர்களுக்கு
ஆண்மையோ - வீரமாகுமோ
வலியோ - வலிமையாகுமோ
மானமோ - பெருமையாகுமோ
அறமோ - தருமமாகுமோ (ஆகா
உறுகணை - யான் அடைந்த நாகா திரத்தை

"விறல் சனும் வேண்டாமை என்னும் செருக்கு"

ன்றே - ஒரு முறையே
ர்த்தன் மேல் - அருச்சுனன்மீது
தொடுப்பன் - நான் ஏவுவேன்
ழிந்துளோர் - அருச்சுனன் ஒழிந்த
வனை நால்வரும்
உய்வர் - (என்னால் கொல்லப்படா மல்) பிழைத்திருப்பார்கள்
என்று உரைத்தான் - என்று கூறினன்.

கருத்துரை : கொடை வள்ளலாகிய கன்னன் குந்தியைப் பார்த்து, கைவனை அழிக்கவல்ல அம்பினை ஒருவன் ஏவுங்காலையில் அது முதல்முறை கவனைக் கொல்லத் தவறினல், அதனையே இரண்டாவது முறை ஏவுதல் டாது. அவ்வாறு ஏவுதல் வீரமும் வலிமையும் மானமும் அறமும் ஆகாது. எனவே, யான் அருச்சுனன்மீது நாகாஸ்திரத்தை ஒரே முறை தொடுப்பேன். வனொழிந்த ஏனை நால்வரும் என்னால் கொல்லப்படாமல் பிழைப்பார்கள்'' ன்று கூறி அவள் கேட்ட இரு வரங்களையும் அளித்தான்.

விளக்கவுரை : தெறுதல் - அழித்தல். கணை - அம்பு. முனைந்து - திர்த்து. செரு - போர். சென்னி - தலை. ஆண்மை - வீரம். மானம் - பருமை. உறு - உற்ற, அடைந்த. பார்த்தன் - அருச்சுனன். தறுகணர் - காடியவர். தண் அளி - குளிர்ந்த அருள். தறுகண ரலர்க்கும் தறுகணு ாவர்க்கும் தண்ணளி நிறைந்த செங்கண்ணுன் : கன்னன் பெருங் காடை வள்ளல். தன்னிடம் யார் எதைக் கேட்டாலும் இல்லை என்னமல் காடுப்பவன். தன்னிடம் வந்தவர் கொடியவரேயாயினும், நல்லவரேயாயி ம் அவன் வேறுபாடின்றிக் கொடுப்பான். யாவரையும் அவன் அருள் றைந்த கண்ணுடன் நோக்கி வேண்டுவன கொடுப்பான் என்பது இவ்வடியி ல் கூறப்பட்டது. இவ்வடி கன்னனுடைய வரையா வள்ளன்மையை ளக்குகின்றது.

இலக்கணக் குறிப்பு : தெறுகணை : வினைத்தொகை. செய்வோன் - வினையாலணையும் பெயர். ஒகாரங்கள் எதிர்மறைப் பொருளில் வந்தன. றுகணை : வினைத்தொகை. (உறுதல் - அடைதல்) தறுகணர் அலர்க் ம் தறுகண் ஆனவர்க்கும் தண்ணளி நிறைந்த செங்கண்ணுன் : ன்னனுடைய வள்ளல் தன்மையை விளக்குதற்கு அடைமொழிகள் ஈண்டு மைந்துள்ளன. அவை யாவும் தக்க கருத்துக்களை மொழிகின்றன; தலால் இவ்வடி கருத்துடை யடைமொழியணி ஆகும்.

நல்லொழுக்கப் பயிற்சி

இப்பகுதியில் கன்னனைப் பற்றிச் சிறிது உணர்ந்தீர்கள். இல்லை என்று இரந்தோர்க்கு இல்லை என்று இயம்பாத இதயம் படைத்தவன் அவன். அது மட்டுமோ ? தனக்குப் பாண்டவர்கள் தம்பிமார்கள் ஆவர் என்று தெரிந்த பிறகும், அவன் அவர்களுடன் சேர விரும்பினனல்லன். தன்னை உயிர் நண்பனுக் கருதி, ஏற்றமும் தோற்றமும் அளித்த துரியோதனன் பொருட்டு அவன் தன் உயிரைக் கொடுக்க விரும்பினன். அவ் வாறே போரில் உயிரையும் கொடுத்தான். இதிலிருந்து, செய்ந் நன்றியறிதற் பண்பு அவனிடம் நன்கு அமைந்திருந்தது என் பதனை நீங்கள் உணரலாம். செய்ந்நன்றி கொல்லுதல் பெரும் பாதகச் செயல் என்று வள்ளுவனரும் கூறியுள்ளார். எனவே ஒருவர் செய்த நன்றியை மறவாதீர்கள் ; பல தீமைகளை ஒருவர் செய்திருந்தாலும், அவர் ஒரு நன்மையேனும் செய்திருந்தால், அவர் செய்த தீமைகளையெல்லாம் மறந்து விட்டு, நன்மை ஒன்றையே போற்றுங்கள்.

III. இக்காலச் செய்யுள்

1. பாஞ்சாலி சபதம்

பெயர்க் காரணம்: இது பாஞ்சால தேசத்து அரசன் மகளும் பாண்டவரின் மனைவியுமான பாஞ்சாலி (திரௌபதி) துரியோதனனுதியரால், அரசவைக்கு இழுத்துச் செல்லப்பட்டு, துச்சாதனனால் துகிலுரியப்பட்ட போது சினந்து கூறிய சபதத்தினை விளக்கும் ஒரு காப்பியமாகும். மகா பாரதத்தில் வரும் இக்கதைப் பகுதி மட்டும் ஒரு காப்பியமாகப் பாடப் பட்டுள்ளது.

ஆசிரியரைப்பற்றிய செய்திகள்

பெயர்: சுப்பிரமணிய பாரதியார்.

பிறப்பிடம்: எட்டயபுரம்.

தந்தை: சின்னசாமி ஐயர்.

தாய்: இலக்குமி அம்மாள்.

குலம்: அந்தணர்.

காலம்: 1882-ஆம் ஆண்டில் பிறந்தார். 1921-ஆம் ஆண்டு செப்டம்பர் 11-ஆம் நாள் இயற்கை எய்தினர்.

கல்வி: தம் தந்தையார் சமஸ்தான வித்துவானக இருந்த எட்டய புரத்தில் பாரதியார் இளமையில் சில காலம் கல்வி பயின்றார்; பின்னர், திருநெல்வேலியில் ஆங்கிலக் கல்வி கற்றார். ஆயினும் இவரது மனம் ஆங்கிலக் கல்வியில் ஈடுபடவில்லை. திடீரென்று இவர் தந்தையார் காலமாயினமையால், காசியிலிருந்த தம் உறவினரோடிருந்து, வடமொழியையும் பயின்று, முதல்வராகத் தேறினர். அங்கு நீண்ட காலம் தங்காமல் இவர் மீண்டும் எட்டயபுரம் திரும்பினர்.

ஆசிரியரது பெயர்க் காரணம்: இவர் பன்னிரண்டாம் வயதிலேயே கவிபாடும் திறமையுற்றிருந்தார். புலவர் ஒருவர் இவரது திறமையை வியந்து, "நீ சாதாரணமானவன் அல்லன்! நீ ஒரு பாரதியே" என்று புகழ்ந்தமையால் அன்று முதல் இவர் இப்பெயர் பெற்றார்.

ஆசிரியரது வாழ்க்கை: இவர் சில காலம் 'சுதேசமித்திரன்' உதவி ஆசிரியராக இருந்தார். பின்னர், 'இந்தியா,' 'பால பாரதம்' முதலிய பத்திரிகைகளையும் இவர் தாமே நடத்தினர். சுதந்திரக் கிளர்ச்சியில் இவர் ஈடுபட்டமையால், அரசாங்கத்தார் கோபத்துக்கு ஆளாகிப் புதுச்சேரியில் வசிக்கவும், சில காலம் சிறையில் வசிக்கவும் நேர்ந்தன.

இவர் பெருமை: இவர் தமிழ்ப்பற்றும், நாட்டுப் பற்றும் வாய்ந்தவர். மக்களிடையே சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய உணர்ச்சிகளைப் பரவச் செய்தவர் இவரே. கேட்போர் மனத்தைப் பரவசப்படுத்தி வீராவேசம் ஊட்டும் பாடல்களை இயற்றுவதில் இவர் இணையற்றவர்.

இயற்றிய வேறு நூல்கள்: செய்யுள்: பாரதநாடு, செந்தமிழ்நாடு, தமிழ்த் தாய், முருகன் பாட்டு, கண்ணன் பாட்டு, பாப்பாப் பாட்டு, குயில் பாட்டு முதலியன. **உரைநடை:** ஞானரதம், சந்திரிகையின் கதை, தராசு முதலியன.

"ஒருவன் புறங்கூறுன் என்றல் இனிது"

நூலின் பெருமைகள்: புரட்சிக் கவிஞராகிய பாரதியார் இயற்றிய காப்பியம் இஃது ஒன்றேயாம். பெண்ணின் பெருமை, அவர்கள் விடுதலை ஆகியவைகளில் நாட்டங்கொண்ட பாரதியார் பெண்ணின் ஆற்றல் எத்தகையது என்பதை விளக்கவே இக்காப்பியத்தை எழுதினர் போலும்! இந்நூல் எளிய இனிய உணர்ச்சி வாய்ந்த நடையில், ஒப்பற்ற காப்பிய அழகுகளோடு விரிவாக அமைந்துள்ளது. பாரதியாரின் சிறந்த தமிழ்ப் புலமை, கற்பனை சக்தி, உவமைத்திறம், கவியியற்றும் வன்மை முதலியவைகளை நன்கு விளக்கும் நூல் பாஞ்சாலி சபதம் என்று சுருங்கக் கூறலாம். 'பாரதியார் வெறும் ஆவேசக் கவிஞர் மட்டுமல்லர்; கம்பனைப்போல், இளங்கோவைப்போல் ஒப்பற்ற காப்பியக் கவிஞரும் ஆவார்' என்பதற்கு இந்நூல் தக்க எடுத்துக்காட்டாம்.

முன் கதைச் சுருக்கம்: பாண்டவர்கள் சீருஞ்சிறப்பும் பெற்று விளங்குதலைக் கண்ட துரியோதனன் பொறாமை கொண்டு, பாண்டவர்களை அழிப்பதற்குரிய வழிவகைகளைத் தன் மாமனாகிய சகுனியுடன் ஆராய்ந்தான். அழகியதொரு மண்டபங் கட்டுவித்து, அம்மண்டபத்தைக் காண அழைப்பது போல் தருமனை அழைத்து அவனுடன் தன்னைச் சூதாடுமாறு செய்தால், சூதாட்டத்தில் தருமனை வென்று, அவனுடைய நாடு நகரம் முதலியவற்றையெல்லாம் கைப்பற்றித் தருவதாகச் சகுனி கூறினன். சகுனியினது சூழ்ச்சியைக் கேட்ட துரியோதனன் மகிழ்ந்தான். பின்பு சகுனி திருதராட்டிரனிடம் தன் வஞ்சனையைக் கூறினன். திருதராட்டிரனே அதற்கு இசைந்திலன். அஃதுணர்ந்த துரியோதனன் தன் தந்தையினிடம் சினங்கொண்டு, தீமொழிகள் பல பேசி, தன கருத்துக்குத் திருதராட்டிரன் இசையாவிடின் தான் தன் உயிரைப் போக்கிக் கொள்வேன் என்று கூறினன். திருதராட்டிரன் யாது செய்வான்? மகனது சதிச் செயலுக்கு அவனும் இசையுமாறு நேரிட்டது. அவன் அழகியதொரு மண்டபம் கட்டச் செய்தான்; தம்பி முறை பெற்ற விதுரனைப் பாண்டவர்கள்பால் தூது விடுத்து, மண்டபங்காண அவர்கட்கு அழைப்பு விடுத்தான். விதுரனும் வேறு வழியின்றிப் பாண்டவர்களிடம் தூது சென்றான்.

பாண்டவர்கள் விதுரனை வரவேற்றனர். விதுரன், பாண்டவர்களிடம் தான் வந்தமைக்குக் காரணத்தைக் கூறி, சகுனியும் துரியோதனனும் சூதாடி அவர்களை அடியோடு அழிக்கச் சூழ்ச்சி செய்துள்ளமையையும் கூறினன். தனது பெரிய தந்தையாகிய திருதராட்டிரனது அழைப்பினைத் தருமன் எவ்வாறு ஏற்றுக்கொள்ளாமல் இருக்க முடியும்? துரியோதனன் சதியொன்றினைக் கருத்தில் கொண்டுள்ளான் என்று தெரிந்தும், தருமன் தன் தம்பிமார்களுடன் அவனிடம் செல்ல முடிவு செய்தான். தருமனது முடிவினை அறிந்த வீமன் சினந்து படையோடு சென்று, துரியோதனனுடன் போர் செய்துகொல்வதே தக்கது என்று அருச்சுனனிடம் வீரவுரை கூறினன். வீமன் உரைத்தமை தக்கதே என்று அருச்சுனனும், நகுலனும், சகாதேவனும் கூறினர். தம்பிமார்களுடைய உரையைக்கேட்ட தருமன், 'தம்பிமார்களே! துரியோதனனது சூழ்ச்சியை நான் நன்கு அறிவேன். என்னைப் பித்தன் என்று நீங்கள் எண்ணுகின்றீர்கள். இவ்வுலகத்தில் யாவும் ஒன்றக்கு ஒன்று தொடர்பு இல்லாதனபோல் தோன்றும். எனினும், ஆழ்ந்து நோக்கினல் அவை காரண காரியத்தொடர் என்னும் விதியால் கட்டுண்டிருக்கும்' என்று கூறினன். இதன் பின் தருமன் தொடர்ந்து தன் தம்பிமார்களுக்குக் கூறும் அறிவுரைகள், அவனது முடிவுரை ஆகியவை அடங்கிய பகுதியே நமக்குப் பாடமாக வந்துள்ளது.

நம் பா! ச் சுருக்கம் : தருமன் தன் தம்பிமார்களை நோக்கி 'யாவு இவ்வுலகில் ட தியினலே நடக்கும். உலக வாழ்க்கை அழியும் தன்மைை உடையது. துன்பம்வரினும், இன்பம்வரினும் நாம் மகிழ்ச்சியுடன் ஏற்ற வேண்டும். விதியின்படியே யாவும் நடைபெறும். புழுவிற்கும், அரசர்கட கும், ஏழைகட்கும், ஏனை உயிர்கட்கும் கடமைகள் உள்ளன. எனவே, கடமை தவறுதல்கூடாது. தந்தைசொல்லைத் தட்டி நடத்தல் தகுதியன்று. திருதரா டிரன் நம்மை அழைத்திருக்கும்பொழுது நாம் மறுத்தல்கூடாது. தந்ை சொல்லை மந்திரமாகக் கொண்டல்லவா இராமன் காட்டிற்குச் சென்றான் இதை நினைவிற் கொள்ளுங்கள். நீங்கள் உங்களுடைய கடமையிலிருந் தவறுதல் கூடாது' என்று கூறினன்.

தருமபுத்திரன் முடிவுரை

1. விதிப்படியே யாவும் நடைபெறும்

இங்கு - இங்கே
இவை யாவும் - துரியோதனன் செய்தமை முதலியவை
தவறு இலா - தவறுதல் இல்லாத
விதி - ஊழ்வினைப் பயனை
ஏற்று - அடைந்து
நடக்கும் - நடக்கின்ற
செயல்களாம் - செயல்கள் ஆவன.
விதி - விதியானது,
எங்கணும் - எவ்விடத்திலும்
முடிவு இன்றி - முடிவு இல்லாமல்,
எவற்றினும் - எல்லாப் பொருள்களிலும்
என்றும் - எக்காலத்திலும்
ஏறி - கலந்து
இடையின்றி - இடை வெளியின்றி
செல்வதாம் - செல்வதாகிய
ஒரு சங்கிலி ஒக்கும் - ஒரு சங்கிலி யைப் போன்றது. (நான் கூறுதல்
வெறும்சாத்திரம் அன்று - வெறு நீதி நூல் உரை அன்று
இது சத்தியம் - இஃது உண்மை யாகும்.
நின்று - சில நாட்கள் இருந்து,
மங்கி - குறைந்து
ஓர் நாளில் - ஒரு நாளில்
அழிவதாம் - அழிவதாகிய
நங்கள் வாழ்க்கை - நம்முடைய வாழ்க்கை
இதனை - இவ்விதியின் ஆதிக்கத்ை
கடந்ததோ-தாண்டியதோ? (இல்லை

கருத்துரை : தருமன் தன் தம்பிமார்களைப் பார்த்து, 'துரியோதன சூழ்ச்சி முதலியவை ஊழ்வினைப்படியே நடக்கின்றன. விதி ஒரு சங்கிலியை போன்றது. அஃது இடைவிடாமல் எங்கும் எப்பொழுதும் செல்லும். இ நீதி நூல் உரை மட்டுமன்று; உண்மையுமாகும். அழியும் தன்மை வாய்ந் நம் வாழ்க்கை இவ்விதிக்கு விலக்கானதன்று' என்று கூறினன்.

விளக்கவுரை : எங்கணும் - எவ்விடத்திலும். இடையின்றி - இை வெளியின்றி. சாத்திரம் - நீதிநூல். சத்தியம் - உண்மை. சங்கி ஒக்கும் விதி : விதி ஒரு சங்கிலியைப் போன்றது. இவ்வுலகத்தில் நிகழ்வ யாவும் ஒன்ருேடு ஒன்று தொடர்பு கொண்டுள்ளன. யாவும் காரண காரிய தொடர்புடன் நடக்கின்றன. இக்காரணம் பற்றியே சங்கிலியைப் போ றது விதி எனப்பட்டது.

இலக்கணக் குறிப்பு : இலா : ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெ சம். கடந்ததோ : ஒகார வினு எதிர்மறைப் பொருளில் வந்தது.

"பயனில்சொல் பாராட்டுவானை மகனெனல்"

2. எதுவரினும் ஏற்று, கடமை தவருது ஒழுகுதலே தக்கது

வாழ்க்கைதான் - வாழ்க்கையானது
தோன்றி - விளங்கித் தோன்றி
அழிவது - அழியும் தன்மையை உடையது.
இங்கு - இவ்வுலகில்
துன்பத்தோடு - துன்பத்துடன்
இன்பமும் - இன்பமும்,
வெறுமையாம் - (துன்பமும் இன்பமும் இல்லாத) வெறுமையுமாகிய
இவை மூன்றில் - இம்மூன்றில்
எது வருமாயினும், எதுவரினும்
களிமூழ்கி - மகிழ்ச்சியில் ஆழ்ந்து
நடத்தல் - நடத்தலே
முறை - முறையாகும்.
துன்பம் உற்றிடும் - துன்பம் வரும்
என்பது ஓர் - என்னும் ஒரு
அச்சத்தால் - அச்சத்தினுல்
நெஞ்சில் ஊன்றிய - மனத்தில் நிலைபெற்ற
கொள்கை - கொள்கையை
தழைப்பரோ - நழுவவிடுவார்களோ?
விதிபோன்று - விதிப்பயனுக்குஏற்ப
உலகு நடக்கும் - உலகச் செயல்கள் நடைபெறும்
என்றே - என்று கருதி
கடன் போற்றி - தம் கடமை தவருமல்
சான்றவர் - சான்றோர்
ஒழுகுவர் - நடப்பர்.

கருத்துரை: தருமன் தன் தம்பிமார்களைப் பார்த்து, 'இவ்வுலகில் அழியும் தன்மையை உடையது வாழ்க்கை. துன்பம், இன்பம், வெறுமை ஆகிய இம்மூன்றில் எதுவரினும் அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளுதலே முறை. துன்பம் வரும் என்ற அச்சத்தால் கொள்கை தவறுதல் கூடாது. யாவும் விதி வசப்படி நடக்கும் என்பதனை உணர்ந்து, பெரியவர்கள் தம் கடமையைத் தவருமல் செய்து முடிப்பர்' என்று கூறினன்.

விளக்கவுரை: வெறுமை - துன்பமும் இன்பமும் இல்லாத தன்மை. களி - மகிழ்ச்சி. உற்றிடும் - வரும். போற்றி - தவருமல் மேற்கொண்டு. சான்றவர் - சான்றோர்; நற்குணங்கள் யாவும் அமைந்த பெரியோர். துன்பம்வரினும் கொள்கையிலிருந்து வழுவுதலோ, கடமை தவறுதலோ கூடா என்று தருமன் தன் தம்பிமார்களுக்கு அறிவுரை கூறினன்.

3. கணத்துக்குக் கணம் புதியனவாக வருகின்ற கடமைகளைச் செய்யத் தவறுதல் கூடாது

சேற்றில் - சேற்றினிடத்தே கிடந்து
உழலும் - துன்புறுகின்ற
புழுவிற்கும்———,
புவி - பூமியை ஆளும்
செல்வம் உடைய - செல்வத்தை உடைய
அரசர்க்கும்———,
பிச்சை ஏற்று - பிச்சை வாங்கி
உடல் காத்திடும் - உடம்பைக் காக்கின்ற
ஏழைக்கும் - ஏழைகட்கும்,
(இன்னும்)
உயிர் எத்தனை உண்டு அவை - இவ்வுலகில் எவ்வளவு உயிர்கள் உண்டோ அவை
யாவிற்கும் - எல்லாவற்றிற்கும்
நித்தம் - நாள்தோறும்
ஆற்றுதற்கு - செய்து முடித்தற்கு
உள்ள———,
கடமை தான் - கடமை
முன் வந்து - எதிரில் வந்து
அவ்வக் கணந்தொறும் - ஒவ்வொரு கணந்தோறும்
நிற்கும் - தோன்றும்.
அது - அக்கடமை
தோற்றும் பொழுதில் - தோன்றும் பொழுதில்
புரிகுவார் - அதனைச் செய்ய முற்படுபவர்
பல சூழ்ந்து - பலவற்றை ஆராய்ந்து
கடமை அழிப்பரோ - தம் கடமை தவறுவார்களோ? (தவற மாட்டார்கள்.)

கருத்துரை : தருமன் தன் தம்பிமார்களைப் பார்த்து, 'புழுவுக்கும் அரசருக்கும், ஏழைக்கும், ஏனை உயிர்கட்கும் செய்தற்குரிய கடமை கண தோறும் தோன்றும். அக்கடமை தோன்றும் பொழுது, பலவற்றை ஆராய்ந்து, கடமை தவறுதல் கூடாது. எதுவரினும் கடமையைச் செய்தே தீர்தல் வேண்டும்' என்று கூறினன்.

விளக்கவுரை : உழலும் - துன்புறும். புவி - பூமி. செல்வம் : ஈண்டு அரசாளும் செல்வம். ஏற்று - வாங்கி. நித்தம் - நாள்தோறும். புரிதல் செய்தல். சூழ்ந்து - ஆராய்ந்து, யோசித்து, பிறரைக் கேட்டு. கடமை அழி பரோ - கடமை தவறுவார்களோ ? (தவறார்)

4. தந்தை சொல்லைத் தனயர் தட்டுதல் தருமோ ?

முன்னோர்தமை - தம் முன்னோரை
உயர் தேவரை ஒப்ப - உயர்ந்த தேவர்களைப் போல
தங்கள் சிந்தையில் கொண்டு - தங்கள் மனத்தில் நினைத்துக்கொண்டு
பணிகுதல் - வணங்குதல்
யாவருக்கும் - எல்லோருக்கும்
பொது ஆயினும் - பொது என்றாலும்
அரசர் குலத்திற்கே – அரச மரபினர்க்கு
சிறப்பு என்பர் - சிறப்பாக உரியது என்பர் அறிஞர்.
தந்தை - தந்தையிட்ட
ஏவலை - பணியை
மைந்தர் - புதல்வர்
புரிதற்கே - (தவறாமல்) செய்ய வேண்டும் என்பதற்காகவே
வில் இராமன் - வில்லில் வல்ல இராமனது
கதையையும் காட்டினேன் - கதையையும் உதாரணமாக (முன்பு) காட்டினேன்
புவிக்காவலர் தம்மில் - பூமியில் உள்ள அரசர்களுக்குள்
சிறந்த நீர் - சிறப்புடைய நீங்கள்
இன்று - ———,
கர்மம் - செய்யவேண்டிய செயலை
பிழைத்திடுவீர்கொலோ - செய்யாமல் தவறுவீர்களோ ? (தவறுதல் கூடாது என்று முடிவு கூறினன் தருமன்).

கருத்துரை : தருமன் தன் தம்பிமார்களை நோக்கி, 'தம் முன்னோரை தேவரைப் போல் கருதிப் பணிதல் யாவர்க்கும் பொதுவான கடமையாகும் எனினும் அக்கடமை அரசர்க்கே சிறந்தது. தந்தை சொல்லைத் தட்டி நடக்க விரும்பாமல் அன்றோ இராமன் காடு சென்றான் ? தந்தையிட்ட கட்டளைப்படி தனயர் தவறாமல் நடக்க வேண்டும் என்பதற்காகத்தான் இராமனது கதையை முன்பு நான் கூறினேன். அரசர்கட்குள் சிறந்த நீர் இன்று உங்களுடைய கடமை தவறுதல் தருமோ ? எனவே, நம் பெரிய தந்தையாகிய திருதராட்டிரன் சொல்லுக்கு இணங்க நாம் துரியோதனனைக் காணச் செல்லுதல் வேண்டும்' என்று முடிவுரை கூறினன்.

விளக்கவுரை : பணிகுதல் - வணங்குதல். புவி - பூமி. காவலர் - அரசர். கர்மம் - செயல், கடமை. பிழைத்தல் - தவறுதல். **தந்தை ஏவலை மைந்தர்புரிதற்கே வில்லிராமன் கதையையும் கர்ட்டினேன் :** இராமன் காட்டிற்குச் சென்று பதினன்கு ஆண்டுகள் உறைய வேண்டும் என்று தசரதன் கைகேயியிடம் கூறி இறந்துபட்டான். தான் கைகேயிக்கு அளித்த உறுதியுரையிலிருந்து வழுவ விரும்பாமலேயே தசரதன் தன் விருப்பத்திற்கு எதிராக இங்ஙனம் உரைத்தான். எனினும், 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்னும் அறிவுரையை மனத்தில் கொண்டு, இராமன் காடு சென்று பதினன்கு ஆண்டுகள் தங்கினன். யார் தடுத்தும் அவன் கேட்டானல்லன். தந்தை ஏவலைத் தனயர் செய்தல் வேண்டும் என்பது இக்கதையிலிருந்து

வெளிப்படும் நீதியாகும். அந்த நீதியை எடுத்துக் காட்டும் பொருட்டே தருமன் இராமனது கதையை முன்பு குறிப்பிட்டான். முன்பு அவன், 'முக்தையச் சிலேரா மன் - செய்த முடிவினை நம்மவர் மறுப்பதுவோ?" என்று கூறியுள்ளான். அவ்வாறு தான் கூறிய செய்தியையே தருமன் இங்கே குறிப்பிட்டான்.

நல்லொழுக்கப் பயிற்சி

வஞ்ச நெஞ்சுடன் தம்மைத் திருதராட்டிரன் அழைக்கின்றான் என்பதைத் தருமன் உணர்வான். எனினும், அவன் திருதராட்டிரன் அழைப்பை ஏற்றுக்கொண்டான்; தம்பிமார்களையும் இணங்குமாறு செய்தான். அவர்கட்கு இராமனுடைய கதையையும் கூறினான். ஏன்? இராமன் 'தந்தை சொல்மிக்க மந்திரமில்லை' என்னும் அறவுரையைப் பின்பற்றினான். அவ்வாறே, தந்தை முறைகொண்ட திருதராட்டிரன் கட்டளைப்படியே தருமன் நடக்க முற்பட்டான். எனவே, தந்தை சொல்லைத் தட்டி நடவாதீர்கள். தந்தையும் தாயும் கண்கண்ட தெய்வங்கள் என்பர் அறிஞர். ஆகவே, பெற்றோர் சொற்களின்படி நடத்தலைக் கடமையாகக் கொள்ளுங்கள்.

---

2. குசேலோபாக்கியானம்

பெயர்க் காரணம்: குசேல + உபாக்கியானம். குசேலோபாக்கியானம். குசேலருடைய சரித்திரத்தைக் கூறும் நூல் என்பது இதன் பொருள். குசேலன், கிழிந்த ஆடையை அணிந்தவன். உபாக்கியானம்: கிளைக் கதை. பாகவதம் என்ற கண்ணபிரானின் வரலாற்றைக் கூறும் நூலில் இது கிளைக் கதையாகக் கூறப்பட்டிருக்கிறது. அக்கதை விரிவாக எழுதப்பட்ட நூலாதலின் இந்நூல் இப்பெயர் பெற்றது.

ஆசிரியரைப் பற்றிய செய்திகள்

பெயர்: வல்லூர்த் தேவராசப் பிள்ளை.

தந்தையார்: வீராசாமிப் பிள்ளை.

ஊர்: தொண்டை நாட்டில் உள்ள வல்லூர்.

மரபு: கருணீகர் மரபு (கணக்காயர்).

காலம்: சுமார் நூறு வருடங்களுக்கு முன் வாழ்ந்தவர்.

நூலின் பெருமை: இந்நூலாசிரியர் பாகவதத்தில் உள்ள குசேலர் சரித்திரத்தையும், தெலுங்கு மொழியில் வரகவி என்பவர் இயற்றிய குசேலோபாக்கியானத்தையும் தழுவித் தமிழில் ஒன்பான் சுவையும் அமைய இந்நூலைப் பாடியுள்ளார். வல்லூர்த் தேவராசப் பிள்ளையவர்கள் இந்நூலைப் பாடத் தொடங்கினர். மகா வித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் முடித்துக் கொடுத்தார். இந்நூல் சொற்சுவை, பொருட் சுவைகளுடன் கற்பவர்க்கு எளிமையும் இனிமையும் அமைந்தது. இந்நூல், 'மனைவி கணவனை, எத்தகைய நிலையிலும் வெறுத்தல் கூடாது. பயனை விரும்பாது இறைவனிடம் பக்தி செலுத்த வேண்டும்; பெருஞ்செல்வராய் இருந்தாலும்

மக்கள் தம்முடைய இயல்பிலிருந்து மாறக்கூடாது.' என்பன போன்ற உண்மைகளைச் சுசீலை, குசேலர், கண்ணபிரான் ஆகியவர்களைக் கொண்டு முறையே விளக்கிக் காட்டும் அரிய நூலாம்.

இது (1) குசேலர் மேல் கடலடைந்த அத்தியாயம், (2) குசேலர் தம் நகர்ப்புறமடைந்த அத்தியாயம் (3) குசேலர் வைகுந்தமடைந்த அத்தியாயம் என்ற மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது. நம் பாடப்பகுதி இரண்டாம் பிரிவில் வந்துள்ளது.

முன்கதைச் சுருக்கம்

குசேலர் என்பவர் கண்ணபிரானிடம் மாறாத அன்புடையவர். இருபத்தேழு குழந்தைகட்குத் தந்தையாக விளங்கிய அவர் வறுமையால் வாடினார் எனினும் அவர் செம்மையிலிருந்து வழுவினாரல்லர். அவரது மனைவியாகிய சுசீலை மனைத்தக்க மாண்புடையவளாகத் திகழ்ந்தாள். தம்முடன் இளமையில் சாந்தீப முனிவரிடம் ஒருங்கு கற்ற கண்ணனைக் காணும் விருப்பம் குசேலருக்கு உண்டாயிற்று. எனவே, அவர் கண்ணனைக் காணத் துவாரகைக்குச் சென்றார். கண்ணபிரான் குசேலரை வரவேற்றுக் கூறும் சொற்களில் ஒரு பகுதி ஈண்டுப் பாடமாக அமைந்துள்ளது.

நட்பின் சிறப்பு

நம் பாடச் சுருக்கம்: கண்ணன் குசேலரைப் பார்த்து, "நட்பினை மறந்தவர் நாயினும் கீழ்ப்பட்டவர் ஆவர். நல்லாரைக் காண்பதும், புகழ்வதும், நல்லார்க்கு உதவுவதும் நன்று. அவருடன் நட்புக் கொள்வதும் நன்று. பெரியோர் நட்பு இல்லாதவனுக்கு எத்தகைய செல்வமிருந்தும் பயனில்லை. எத்தகைய பொருளும் இல்லானாயினும் பெரியோர் நட்பினைக் கொண்டவன் எல்லாம் உடையவனாகக் கருதப்படுவான். பேயொடு பழகினாலும் பிரிதல் அரிது. பெரியோர் நட்பு தவப்பயனால்தான் ஒருவர்க்குக் கிடைக்கும். அத்தகைய அரிய நட்பு எளிமையிற் கிடைத்தால் அதனை நழுவவிடுதல் கூடாது. பெரியவர் நட்பினால் உண்டாகும் பயன்கள் எண்ணில. இடித்துரைத்து நல்வழியிற் செலுத்துகின்ற பண்பு நல்லோர்க்கு உண்டு. இத்தகைய நட்பானது கிடைத்தல் அரிதாகும்" என்று கூறினான்.

1. நட்பினை மறந்தவர் நாயினும் கீழானவர்

ஆயின் - ஆராய்ந்தால்
மறை முதல் - வேதம் முதலான
கலைகள் அனைத்தும் - எல்லாக் கலைகளையும்
உணர்ந்து - அறிந்து
அறம் மறம் - புண்ணியத்தையும் பாவத்தையும்
பாத்து - பிரித்துணர்ந்து
இது இனிது நன்று தீது - இனியது இது, நல்லது இது, தீயது இது என்று
உணர்த்துமவர் - அறிவுறுத்துகின்றவர்களுடைய
நட்பை - நட்பினை
மேதையோர் - அறிவுடையோர்
வீயினும் மறப்பர்களோ - இறந்தாலும் மறப்பார்களோ?
மறப்பரேல் - மறப்பார்களேயானால்
இந் நானிலத்து - இந்தப்பூமியில்
அவர் - அவர்கள்
நாயினும் - நாயைக் காட்டிலும்
கீழ்ப்பட்டவர்கள் - கீழ்ப்பட்டவர்கள் ஆவார்கள்.

கருத்துரை: கலைகளையுணர்ந்து, புண்ணிய பாவங்களை யுணர்ந்து நன்மை தீமைகளை யறிந்து உணர்த்தவல்ல பெரியோர்களின் நட்பை அ

என்னுள்ளான் ஆவன் - எதனை உடையவனுவான்.
(ஒன்றும் இல்லாதவனுகக் கருதப் படுவான்)
பொன்னில்லான் - பொன் இல்லாதவனுய்
பூமியில்லான் - பூமி இல்லாதவனுய்
புந்தி இல்லான் - அறிவு இல்லாதவனுய்
ஆயிடினும் - இருந்தாலும்
இருந்தவர் நட்பு - பெரிய முனிவ களுடைய நட்பு
உள்ளானேல் - உள்ளவனுகை இரு தால் (அவன்)
என்னில்லான் ஆவன் - என்ன இ தாதவனுகக் கருதப்படுவான்?
(எல்லாம் உள்ளவனுகக் கருத படுவான்.)

கருத்துரை: பொன்னும், பூமியும், அறிவும் இருந்தாலும் பெரியோ நட்பு இல்லையேல் ஒருவன் ஒன்றும் இல்லாதவனுகக் கருதப்படுவான். பொ னும், பூமியும், அறிவும் இல்லாவிடினும் பெரியோர் நட்பு இருந்தால் அவ எல்லாம் உள்ளவனுகக் கருதப்படுவான்.

விளக்கவுரை: பொன்: பொன், மணி முதலிய செல்வங்கள். பூமி நிலம், வீடு, தோட்டம் முதலிய செல்வங்கள். புந்தி - அறிவு. இருந்தவ பெரிய முனிவர். பெரியோர் நட்பு இல்லாதவன் எத்துணைச் செல்வமுடை னுயினும் அவற்றைத் தீய வழியில் செலவு செய்து விடுவானுதலாலும், எ தகைய செல்வமும் இல்லாதவன் அவற்றினும் மேலான நிலையைப் பெரியவ நட்பினுல் அடைவானுதலாலும் இவ்வாறு கூறப்பட்டது.

4. பெரியோர் நட்பை இகழ்தல் கூடாது

பேயோடு —,
பழகுறினும் - பழகினுலும் (அத் தொடர்பால்)
பிரிவது அரிது அரிது - பிரிதல் மிகவும் அரியது.
என்று —,
தூயோர்கள் - குற்றமற்றவர்கள்
மொழிவர் - கூறுவர்.
தூயோரும் - குற்றமற்றவரும்
புகழ் - புகழ்கின்ற
தூயோர் ஆயோர்கள் - தூய்மை வாய்ந்தவர்களுடைய
பெரு நட்பை - பெரிய நட்பை
அருந்தவத்தால் - அரிய தவத்தினு
பெறல் அன்றி - பெறுதலே அல்ல மல்
ஏயோ - ஆ, ஆ!
எண்மையில் - எளிதில்
கிடைப்பின் - கிடைத்தால்
இகழ்வு இல்லார் - எதனையும் இக தல் இல்லாத இயல்பினையுடை வர்கள்
இகழ்வரோ - பழிப்பார்களோ.
(பழிக்கமாட்டார்கள்.)

கருத்துரை: பேயுடன் பழகினுலும் பிரிதல் அரிது என் அறிஞர். தூயோர்களுடைய நட்பை அரிய தவத்தினுலேயே பெற முடியு அத்தகைய நட்பு எளிதில் கிடைத்தால் அதனை இகழ்தல் கூடாது.

விளக்கவுரை: தூயோர் - குற்றமற்றவர். எண்மையில் - எளிதில்.

5. நல்லோர் நட்பினுல் கிடைக்கும் நன்மைக்கு அளவில்லை

சமயம் வரின் - தேவையானுல்
இடித்துரைப்பார் - வற்புறுத்திச் சொல்லுவார்
தக்க வழி - தகுந்த வழியில்
செலச் செய்வார் - செல்லுமாறு செய்வார்
இமையவர் தம் உலகு - தே உலகம்
உறவும் - உறவாகவும்
இருளுலகம் - நரகம்
பகையுமாய் - பகையாகவும்
அமைய - ஆகுமாறு

...றிவுறுத்துவார் - தெளியக் கூறு ...வர்.	நட்பு - நட்பானது
...ல் கற்று - நூல்களைக் கற்று	எவர்க்குக் கிடைக்கும் - யாருக்குக் கிடைக்கும் ?
...ணர்ந்த - அறிய வேண்டுவன ...வற்றை அறிந்த	அரிது அரிது - (இத்தகைய பெரியோர் நட்பினை அடைதல்) மிகவும் அரியது.
...மை உடையார் - பொறுமையை உடையவர்களின்	

கருத்துரை : தம் நண்பர்கள் தீய வழியில் சென்றால் நல்லவர்கள் ...டித்துரைப்பர் ; தக்க வழியில் செலுத்துவர் ; தேவர் உலகை நண்பர்க்கு ...றவு ஆக்குவர் ; நரகத்தைப் பகையாக்குவர். அந்நல்லோர் கல்வியும், அறி...ம், பொறுமையும் கொண்டு திகழ்வர். இவர்களுடைய நட்பினைப் பெறு...் மிகவும் அரிது.

விளக்கவுரை : இடித்துரைத்தல் - வற்புறுத்திச் சொல்லுதல். இமைய... - தேவர். உறவு - சுற்றம். இருள் உலகம் - நரகம். கமை - பொறுமை. ...மயம்வரின் இடித்துரைப்பர் : நல்லோர் தம் நண்பர் தீயனவற்றைச் ...ெய்யத் தொடங்கும்பொழுது வற்புறுத்திக் கூறித் தடுப்பாராதலால் இவ் ...று கூறப்பட்டது.

"நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு"

...ன்னும் குறட்பா ஈண்டு நினைத்தற்குரியது.

இமையவர் தம் உலகு உறவும் : நல்லோர் தம் நண்பர்கட்கு அற...ரை கூறி, நன்னெறி காட்டி, தேவர் உலகை அடையுமாறு செய்வாராத...ல் இங்ஙனம் கூறப்பட்டது. குசேலர் எல்லா நல்லியல்புகளும் வாய்ந்த ...ரியோராதலால் அவரது நட்பின் சிறப்பினைக் கண்ணபிரான் இவ்வாறு ...றினர் என்று ஆசிரியர் பாடியுள்ளார்.

இலக்கணக் குறிப்பு : அந்தோ, காண் : அசைகள்.

நல்லொழுக்கப் பயிற்சி

நட்பின் சிறப்பினை இப்பாடப் பகுதி உங்களுக்குத் தெற்றென விளக்கும். "பேயொடு பழகினும் பிரிதல் அரிது" என்று படித்தீர்கள். அங்ஙனம் இருக்கும்பொழுது, நல்லோர்களின் நட்பினை விடுதல் தகுமோ? ஒருவனிடம் நட்புக் கொள்...தற்கு முன்பு, அவன் நல்லவனா என்று ஆராய்ந்து அறியுங்கள். நல்லவனாயின் நட்புக்கொள்ளுங்கள். நட்புக் கொண்டபிறகு அவனை ஐயுறுதல் கூடாது. பின்பு அந்நண்பனிடம் தீயொழுக்...ங்கள் தோன்றினால் திருத்த முயலுங்கள் ; திருந்தாவிடின், அவனுடைய குற்றங்களைத் தூற்றாமல் விலகி விடுங்கள். நல்லோருடைய நட்பினைப் பெறுதல் அரிது. அது பெற்றால், எக்காலத்திலும் அவர் நட்பினை நழுவ விடாதீர்கள்.

விஞக்களும் விடைகளும்
(செய்யுட் பகுதி)

I. பழஞ் செய்யுள்

புறநானூறு

1. தொகை நூல் என்ருல் என்ன ?

புலவர்கள் பலரால் பாடப்பெற்ற பாடல்கள் ஒன்ருகத் தொகுக்கப் பெற்று அமைந்த நூல் தொகை நூல் ஆகும்.

2. தமிழில் உள்ள தொகை நூல்கள் யாவை?

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகிய எட்டும் தொகை நூல்கள் எனப்படும். இவை எட்டும் 'எட்டுத் தொகை' என்று வழங்கப்படுகின்றன.

3. புறப்பொருள் என்ருல் என்ன ?

விடையைப் புறநானூற்றுப் பகுதியின் முன்னுரையில் இதே தலைப்பில் காண்க.

4. நரிவெரூஉத் தலையார் : இவரைப் பற்றிக் குறிப்பு வரைக.

விடையைப் புறநானூற்றின் முன்னுரைப் பகுதியில் இதே தலைப்பில் காண்க.

5. பாடாண் திணை, செவியறிவுறூஉ, பொருள் மொழிக் காஞ்சி: குறிப்புக்கள் வரைக.

குறிப்புக்களைப் புறநானூற்றின் முதற் பாடலுக்கு அமைந்த முன்னுரையில் காண்க.

6. "நீயோராகலின் நின்னொன்று மொழிவல்" : இடஞ்சுட்டி விளக்குக (அல்லது) புலவர் கூறிய அறிவுரை யாது ?

புலவர் நரிவெரூஉத்தலையார் சேரமான் கருவூர் ஏறிய ஒள்வாள் கோப் பெருஞ்சேரல் இரும்பொறையைப் பார்த்து அறிவுரை கூறுங்கால், 'நின் ஞொன்று மொழிவல்' என்ருர். அவர் அவனைப் பார்த்து, 'காவலனே! அருளையும் அன்பையும் நீக்கி, பாவஞ் செய்தாரை நீங்காத நரகத்தைக் கொள்பவரோடு நீ பொருந்தாதே. நீ காத்தற்கு உரிய தேயத்தைக் குழந்தை வளர்ப்பாரைப் போலப் பாதுகாப்பாயாக. அக்காவல் பெறுதற்கு அரியது' என்று கூறினர்.

7 அருள், அன்பு: இவற்றின் இலக்கணத்தை வரைக.

விடையை முதற் பாடலுக்கு அமைந்த விளக்கவுரையிற் காண்க.

8. நரிவெரூஉத்தலையார் கோப்பெருஞ் சேரல் இரும் பொறையைப் பார்த்து யாது கூறினர் ?

புறநானூற்றுப் பகுதியின் முதற் பாடலுக்கு அமைந்த கருத்துரையே இவ்விஞவிற்கு விடையாகும்.

---

9. "எருமையன்ன கருங்கல் இடைதோறு ஆனிற் பரக்கும் யானைய" : விளக்குக.

10. "கானக நாடனை நீயோ" : இரு பொருள் எழுதுக.

11. "குழவி கொள்பவரின் ஓம்புமதி" : விளக்குக.

9, 10, 11 ஆகிய மூன்று வினக்களுக்கும் உரிய விடைகளைப் புறநானூற்றின் முதற் பாடலுக்கு அமைந்த விளக்கவுரையின்கண் தனித்தனி காண்க.

12. நரிவெரூஉத்தலையார் பாடிய பாடல் செவியறிவுறூஉ என்னும் துறையாயினவாறு எங்ஙனம்?

13. நரிவெரூஉத்தலையார் பாடிய பாடல் பொருண்மொழிக் காஞ்சி ஆயினவாறு எங்ஙனம்?

12, 13 ஆகிய இரு வினக்களுக்கும் உரிய விடைகளைப் புறநானூற்றின் முதற் பாடலுக்கு அமைந்த விளக்கவுரையின் ஈற்றில் காண்க.

14. இயன் மொழி : விளக்குக.

விளக்கத்தைப் புறநானூற்றின் இரண்டாவது பாடலுக்கு அமைந்த முன்னுரையில் காண்க.

15. கபிலர் மலையமானது கொடைப் பண்பை எவ்வாறு பாராட்டியுள்ளார்?

புறநானூற்றின் இரண்டாவது பாடலுக்கு அமைந்த கருத்துரையே இவ்வினவிற்கு விடையாகும்.

16. நாளன்று போகிப்புள்ளிடை தட்ப; பதனன்றுபுக்குத் திறனன்று மொழியினும் : விளக்குக.

விளக்கங்களைப் புறநானூற்றின் இரண்டாவது பாடலுக்கு உரிய விளக்கவுரையின்கண் தனித்தனி காண்க.

17. பரிசில் விடை : இத்துறையை விளக்குக.

புறநானூற்றின் மூன்ருவது பாடலினது முன்னுரையில் விளக்கத்தைக் காண்க.

18. ஔவையார் நாஞ்சில் வள்ளுவனது கொடையை எவ்வாறு புகழ்ந்துள்ளார்?

புறநானூற்றின் மூன்ருவது பாட்லுக்கு அமைந்த கருத்துரையே இவ்வினவிற்கு விடையாகும்.

19. "மடவன்மன்ற" : மடவன் யாவன்? விளக்குக.

மடவன் என்று ஈண்டுச் சுட்டப்பட்டவன் நாஞ்சில் வள்ளுவன் ஆவான். ஒரு முறை ஔவையார் அவனிடம் சென்று, இலைக் கறியின் மேல் தூவுவதற்குத் துவரையரிசி சிறிது கேட்டார். அவனோ யானை யொன்று தூக்கக் கூடிய அளவு துவரம்பருப்பையும், யானையையும் பரிசிலாக அளித்தான். இவ்வாறு அவனிடம் கொடைமடம் அமைந்திருந்ததாகையால், அவன் 'மடவன் மன்ற' என்று குறிப்பிடப்பட்டான்.

20. "படப்பைக் கொய்த அடகின் கண்ணுறையாக யாஞ்சில அரிசி வேண்டினேம்"; "இருங்கடறு வளைஇய குன்றத்தன்னதோர்

பெருங்களிறு நல்கியோனே" ; "தேற்ருஈகை" ; "போற்ருர் அம்ம பெரியோர் தம் கடன்" : விளக்குக.

விளக்கங்களைப் புறநானூற்றின் மூன்றும் பாடலுக்கு அமைந்த விளக்கவுரையின்கண் தனித்தனி காண்க.

21. நாஞ்சில் வள்ளுவனை ஔவையார் எதனைக் கேட்டார்? அவன் கொடுத்தது யாது? ஏன்?

இலைக்கறியின் மேல் தூவுவதற்குச் சிறிது துவரையரிசி தருமாறு ஔவையார் நாஞ்சில் வள்ளுவனைக் கேட்டார். அவனே யானையொன்று தூக்கக் கூடிய அளவு துவரையரிசியும், யானையும் கொடுத்தான். அவன் தான் புலவர்க்கு அளிக்கும் வரிசையையும், புலவரது வறுமையையும், தனது பெருமையையும் சீர்தூக்கிப் பார்த்தான். குறைவாகக் கொடுத்தல் தனது தகுதிக்கு இழுக்காகும் என்று கருதியே அவன் பெரும் பரிசில் தந்தான்.

II. இடைக் காலச் செய்யுள்

1. முற்பகுதி : மணிமேகலை

1. ஐம்பெருங் காப்பியங்கள் யாவை?

சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகிய ஐந்தும் ஐம்பெருங்காப்பியங்கள்.

2. மணிமேகலையின் நூலாசிரியரைப் பற்றிக் குறிப்பெழுதுக?

மணிமேகலைப் பகுதியின் முன்னுரைப் பகுதியில் 'நூலாசிரியர்' என்ற தலைப்பின் கீழ் விடையைக் காண்க.

3. மணிமேகலை ஆசிரியரின் காலத்தினை விளங்க வரைக.

விடையை மணிமேகலைப் பகுதியின் முன்னுரையிற் காண்க.

4. "பத்தினிப் பெண்டிர் பாத்தூண் ஏற்ற": ஈண்டுப் பத்தினிப் பெண்டிர் என்று சுட்டப் பெற்றவள் யாவள்? அவ்வாறு சுட்டப்பட்டமைக்குக் காரணம் என்ன?

விடையை மணிமேகலையின் 1—6 அடிகட்கு அமைந்த விளக்கவுரையில் 'பத்தினிப் பெண்டிர்' என்ற தலைப்பிற் காண்க.

5. ஆதிரை அமுதசுரபியில் இட்ட உணவு வளர்ந்தமைக்குக் காட்டப்பட்ட உவமை யாது? உவமையை விளக்கி வரைக.

ஆதிரை அமுதசுரபியில் இட்ட உணவினை மணிமேகலை எடுத்து வழங்க வழங்க அது வளர்ந்து கொண்டே இருந்தது. அவ்வாறு வளர்ந்தது, அறவழியினுல் ஈட்டப்பட்ட ஒள்ளிய பொருள் அறம் செய்வோனின் கருத்து வழியே சென்று பயன்படுதல் போல் இருந்தது. இல்வாழ்க்கை நெறியில் நின்ற ஆதிரையினிடம் உணவு பெற்றமைக்கு அறவழியினுல் பொருள் ஈட்டப்படுதல் உவமை. தான் நினைத்தவாறு மணிமேகலை உயிர்களுக்கு உணவளிக்க அது பயன்படுதற்கு அறஞ்செய்வோன் கருத்து வழியே சென்று அப்பொருள் பயன்படுதல் உவமை.

15. விருச்சிகன் உண்ண முற்பட்ட கனி எத்தகையது ?

விருச்சிகன் உண்ணமுற்பட்ட கனி நாவற்கனியாகும். அக்கனி பனம் பழம் அளவு பெரியது. அது தெய்வத்தன்மையை உடைய நாவல் மரத்தில் 12 ஆண்டுகட்கொருமுறை பழுப்பது. அக்கனியினை உண்டோர் 12 ஆண்டுகள் பசியின்றி இருப்பர்.

16. "தீவினை உருத்தலில் செருக்கொடு சென்றேன்": இடஞ்சுட்டி விளக்குக.

காயசண்டிகை தனது கணவனாகிய காஞ்சனனுடன் பொதியின் மலையின் வளத்தைக் காணச் சென்றாள்; அங்குப் பன்னிரண்டு ஆண்டுகள் பசியினைப் போக்குகின்ற தன்மை வாய்ந்த நாவற்பழம் ஒன்றினைக் கண்டாள். விருச்சிகன் என்னும் முனிவனே அதனை உண்ணும்பொருட்டு அங்கு வைத்துவிட்டு நீராடச் சென்றிருந்தான். அக்கனியினைக் காயசண்டிகை காலால் உதைத்துச் சிதைத்துவிட்டாள். அதனால் அவள் அம்முனிவனது சாபத்திற்கு ஆளாயினாள். இச்செய்தியைக் காயசண்டிகை மணிமேகலைக்குக் கூறும்பொழுது இவ்வாறு கூறிக்கொண்டாள். தனது தீவினைப் பயனாலேயே அவள் சாபத்தை அடைந்தாளாதலின் அவள் இவ்வாறு கூறிக்கொண்டாள்.

17. விருச்சிக முனிவன் சினங்கொண்டமைக்குக் காரணம் யாது? சினங்கொண்டு காயசண்டிகையினிடம் கூறியவை யாவை ?

பன்னிரண்டாண்டுகள் பசி வராமல் தடுக்கக்கூடிய அரிய நாவற்கனியினைக் காயசண்டிகை காலினால் சிதைத்தனள் ஆதலால் விருச்சிகன் அவள் மீது சினங்கொண்டான். அவன் அவளைப் பார்த்து, "தெய்வத்தன்மை பொருந்திய நாவல் மரத்தில் 12 ஆண்டுகட்கொருமுறை பழுப்பது இப்பழம். அப்பழத்தினை உண்டவர் பன்னிரண்டு ஆண்டுகள் பசியின்றி இருப்பர். யானோ பன்னிரண்டு ஆண்டுகட் கொருமுறையே உண்ணும் விரதமுடையவன். அத்தகைய இயல்புடைய யான் உண்ணுதற்கென்று வைத்திருந்த நாவற்கனியினை நீ கெடுத்துவிட்டாயே" என்று கூறிச் சாபம் கொடுத்தான்.

18. "உண்ணா நோன்பினேன் உண்கனி சிதைத்தாய்": இடஞ்சுட்டி விளக்குக.

உண்ணா நோன்பினை உடையவன் விருச்சிக முனிவன். பன்னிரண்டு ஆண்டுகட்கொரு முறையே உண்பவன் அவன். பன்னிரண்டு ஆண்டுகள் பசிவராமல் தடுக்கவல்ல நாவற் கனியினை அவன் உண்ணும் பொருட்டு வைத்து நீராடச் சென்றிருந்தான். அதுகாலையில் காயசண்டிகை அதைக் காலால் சிதைத்துவிட்டாள். அதனால் சினங்கொண்ட விருச்சிக முனிவன், "உண்ணா நோன்பினேன் உண்கனி சிதைத்தாய்" என்று கூறினான்.

19. விருச்சிக முனிவன் காயசண்டிகைக்கு இட்ட சாபம் யாது? ஏன் ?

தான் உண்ணுதற்கென்று வைத்திருந்த நாவற் கனியினைக் காயசண்டிகை சிதைத்துவிட்டாளாதலால் விருச்சிக முனிவன் அவளுக்குச் சாபம் இட்டான். அதனால் வானத்தே பறந்து செல்லும் மந்திரத்தை மறக்குமாறும், யானைத்தீ என்னும் நோயினால் 12 ஆண்டுகள் துன்பமுறுமாறும் அவன் சாபம் கொடுத்தான்.

26. உலக அறவியில் எத்தகையோர் தங்கி இருந்தனர் ?

ஊர்தோறும் மிக்க பசியால் வருந்தினேரும், பாதுகாப்பார் யாருமின்மையால் அரிய பசி நோயை அடைந்து துன்புற்றோரும் உலக அறவியில்கூடி இருந்தனர். தமக்கு அன்னமிடுவோர் வருவரோ என்று அவர்கள் ஏங்கி இருந்தனர்.

27. "பலர் தொழுதேத்தும் முதியோள்": யாவள் ? விளக்குக.

பலரும் துதித்து வணங்கும் முதியவள் சம்பாபதி என்னும் தெய்வம் ஆகும். அத்தெய்வத்தின் கோயிலுக்கு எதிரில்தான் உலக அறவி அமைந்திருந்தது.

28. "கந்துடை நெடுநிலைக் காரணங் காட்டிய
தந்துணைப் பாவை": விளக்குக.

மணிமேகலையின் 83—90 அடிகட்கமைந்த விளக்கவுரையில் இதே தலைப்பிலும், பாவை என்னும் தலைப்பிலும் விடையைக் காண்க.

29. மணிமேகலை உலக அறவியில் அமுதசுரபியுடன் புகுந்தமைக்குக் காட்டப்பட்ட உவமை யாது ? உவமையை விளங்க வரைக. அல்லது "வெயில் சுட வெம்பிய வேய்கரி கானத்துக் கருவி மாமழை தோன்றியது என்ன": உவமையை விளக்குக.

30. "ஆபுத்திரன் கை அமுத சுரபி": ஈண்டு அமைந்துள்ள வரலாற்றை வரைக.

29, 30 ஆகிய வினாக்களுக்குரிய விடைகளை மணிமேகலையின் 91-98 வரிகட்கமைந்த விளக்கவுரையில் தனித்தனி காண்க.

பிற்பகுதி: 2. கம்ப ராமாயணம்

1. கம்ப ராமாயணம்: பெயர்க் காரணமும், இலக்கணக் குறிப்பும் கூறுக.

விடையைக் கம்ப ராமாயண முன்னுரைப் பகுதியில் காண்க.

2. சுந்தர காண்டமென்று பெயர் வரக் காரணமென்ன ?

விடையைக் கம்ப ராமாயண முன்னுரைப் பகுதியில் இதே தலைப்பில் காண்க.

3. சீதை வாடியிருந்த நிலைக்குக் காட்டப்பெற்ற உவமை யாது ? உவமையைப் பொருத்திக் காட்டுக.

மலையில் தோன்றி மழை நீரைப் பெருத சஞ்சீவிக்கொடி வாட்டமடைந்திருப்பதுபோல இராமனது வருகையைக் காணுத சீதை வாட்டமுற்றிருந்தாள். சஞ்சீவிக்கொடி சீதைக்கு உவமை. அக்கொடி மழைபெருமல் வாடுதல் சீதை இராமனைக் காணுமல் வாடுதலுக்கு உவமை.

4. சீதை ஒளியிழந்திருந்த நிலைக்குக் காட்டப்பட்ட உவமை உயாது?

வெயிலினிடத்தே வைக்கப்பட்ட விளக்கு ஒளி இழந்து காணுதல் போலச் சீதை ஒளியிழந்திருந்தாள்.

5. "மானிளம் பேடை அயிலெயிற்று வெம்புலிக் குழாத்து அகப்பட்ட தன்னுள்": விளக்குக.

விளக்கத்தைக் கம்ப ராமாயணப் பகுதியின் 3-ஆம் பாடலுக்கமைந்த விளக்கவுரையிற் காண்க.

6. தனித்திருந்த சீதை செய்தன யாவை ?

கம்ப ராமாயணப் பகுதியில் 3-ஆம் பாடலுக்கமைந்த கருத்துரையே இதற்கு விடையாகும்.

7. "அஞ்சனம் கரிய காண்டலும் கண்ணினீர் கடல் புகக் கலுழ்வாள்": விளக்குக.

விளக்கத்தைக் கம்ப ராமாயணப் பகுதியின் 4-ஆம் பாடலுக் கமைந்த விளக்கவுரையிற் காண்க.

8. சீதை எப்பொழுது கண்ணினீர் கடல் புகக் கலுழ்வாள்? ஏன்?

மேகம், மை முதலிய கரிய பொருள்களைக் கண்டவுடன் சீதை கண்ணீர் கடல் புகுமளவில் அழுவாள். ஒரு பொருளைக் காணுங்கால் அப்பொருளின் உருவம், தோற்றம், அமைப்பு, நிறம் முதலியவை அவற்றைத் தன்னிடத்தே கொண்ட மற்றொரு பொருளை நினைவூட்டுவது இயற்கை ஆகும். கருநிறமுடைய பொருளைக் கண்டவுடன் அதே நிறமுடைய இராமனுடைய நினைவு அவளுக்கு வந்தது. அவ்வாறு வரவே அவள் அழுதாள்.

9. சீதையினது உருவத்தின் பொலிவிழந்த நிலையினைச் சுருக்கி வரைக.

விடையைக் கம்ப ராமாயணத்து 5-ஆம் பாடலின் விளக்கவுரையில் இதே தலைப்பில் காண்க.

10. "கண்டிலன் கொலாம் இளவலும்": இவ்வாறு சீதை கருதக் காரணம் என்ன?

11. இராமன் வாராமல் இருப்பதற்குரிய காரணங்களாகச் சீதை எவற்றை நினைத்தாள்?

12. "புண் திறந்ததின் எரி நுழைந்தாலெனப் புகைவாள்" விளக்குக.

10, 11, 12 ஆகிய வினைக்களுக்குரிய விடையினைக் கம்ப ராமாயணத்து 6-ஆம் பாடலுக்கமைந்த விளக்க உரையின்கண் காண்க.

13. "இப்பிறப்பில் காண்டலோ அரிது": இவ்வாறு சீதை நினைக்கக் காரணம் என்ன?

கம்ப ராமாயணப் பகுதியின் 7-ஆம் பாடலுக்கமைந்த கருத்துரையே இவ்வினாவிற்குரிய விடையாகும்.

14. "மாண்டு போயினன் எருவைகட் கரசன்மன்": இவ்வாறு சீதை நினைக்கக் காரணம் என்ன?

15. "மீண்டு மீண்டு புக்கு எரிநுழைந்தாலென": உவமையை விளக்கி எழுதுக.

14, 15 ஆகிய வினாக்களுக்குரிய விடைகளை 7-ஆம் பாடலுக்கமைந்த விளக்கவுரையிற் காண்க.

16. "அறிவிலள் எனத் துறந்தானே?": இடஞ்சுட்டிவிளக்குக.

17. "முன்னை ஊழ்வினை முடிந்ததோ?": விளக்குக.

16, 17 ஆகிய வினாக்களுக்குரிய விடைகளைக் கம்ப ராமாயணப் பகு யின் 8-ஆம் பாடலுக்குரிய விளக்கவுரையின்கண் தனித்தனி காண்க.

18. "அருந்தும் மெல்லடகு ஆரிட அருந்தும்";
"விருந்து கண்டபோ தென்னுறுமோ?";
"மருந்தும் உண்டுகொல் யான்கொண்ட நோய்க்கு";
"இருந்த மாநிலம் செல்லரித்திடவும் ஆண்டு எழாதாள்"
—விளக்குக.

விளக்கங்களை 9-ஆம் பாடலுக்கு அமைந்த விளக்கவுரையின் கண் தனித்தனி காண்க.

19. சீதைக்கு விருந்தோம்பும் பண்பு உண்டு என்பதனை எவ்வாறு உணரலாம்?

அசோக வனத்தில் தனித்திருந்த சீதை இராமனைப் பற்றிப் பலவாறு வருந்துங்கால், 'விருந்தினர் வரின் இராமன் யாது செய்வான்?' என்று கூறு ளுள். விருந்தினர் வரின் அவர்களைக் கணவனும் மனைவியுமாகச் சேர்ந்தே உபசரித்தல் வேண்டும். அதுவே இல்வாழ்வார்க்கு உரிய அறமாகும்.

தனித்திருக்கும் இராமன் விருந்தினர் வரின் என்ன பாடுபடுவான் என்று எண்ணிச் சீதை வருந்துகின்றாள். இதிலிருந்து சீதைக்கு விருந்தோம்பும் பண்பு உண்டு என்பதனை நாம் உணரலாம்.

20. இராமனுக்கு ஒரு துன்பம் வந்திருக்க வேண்டும் என்று சீதை நினைக்கக் காரணம் என்ன?

இராமனை ஒரு வேளை தம்பிமார்களும், பரதனும் வந்து அயோத்திக்கு அழைத்துச் சென்றிருப்பார்களோ என்று சீதை முதலில் கருதினாள். ஆயின் கைகேயி குறிப்பிட்டுக் கூறிய பதினான்கு ஆண்டுகள் இராமன் காட்டில் தங் காமல் இருக்க மாட்டான் என்பது அவளது நினைவுக்கு வந்தது. இராம னுக்கு ஒரு துன்பமும் நேராமல் இருந்தால் அவன் தவறாமல் வருவான் என் றும், அவன் வராமல் இருப்பதனால் அவனுக்கு ஒரு துன்பம் உண்டாகி யிருக்க வேண்டும் என்றும் சீதை நினைத்தாள்.

21. "மும்மடங்கு பொலிந்த முகத்தினன்": விளக்குக.

விளக்கத்தைக் கம்ப ராமாயணப் பகுதியின் 11-ஆம் பாடலுக்கு அமைந்த விளக்கவுரையின்கண் காண்க.

22. "சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை ஒத்திருக்கும் முகம்": விளக் குக.

விளக்கத்தை 12-ஆவது பாடலின் விளக்கவுரையில் காண்க.

23. "வார்சிலை ஏங்கு மாத்திரத்து இற்று இரண்டாய் விழ": விளக்குக.

24. "வீங்கு தோளை நினைந்து மெலிந்துளாள்": இவ்வடியின்கண் அமைந்துள்ள நயத்தினைப் புலப்படுத்துக.

23, 24 வினாக்களுக்குரிய விடைகளை 13-ஆம் பாடலுக்கு அமைந்த விளக்கவுரையில் தனித்தனி காண்க.

"அற்றார் அழிபசி தீர்த்தல்"

. வருந்திய சீதை இராமனது தோள்வலியை எவ்வாறு நினைத்தாள்?

13-ஆம் பாடலுக்கு அமைந்த கருத்துரையே இவ்வினாவிற்குரிய விடை கும்.

. வருந்திய சீதை இராமனது நட்பின் திட்பத்தை எவ்வாறு நினைத்தாள்?

14-ஆம் பாடலுக்கு அமைந்த கருத்துரையே இவ்வினாவிற்குரிய விடை கும்.

. "எம்பிநின் தம்பி; நீ தோழன், மங்கை கொழுந்தி": விளக்குக. (அல்லது) இராமன் கொண்ட நட்பின் சிறப்பைக் கம்பர் எவ்வாறு விளக்குகின்றார்? ஒரு சான்று காட்டுக.

14-ஆம் பாடலுக்கு அடியில் அமைந்த விளக்கவுரையில், இவ்வினாவிற் ரிய விடையைக் காண்க

. விராதனது தீவினையை மாற்றிச் சாபமும் மாற்றிய வரலாற்றைச் சுருக்கி வரைக.

15-ஆம் பாடலுக்கமைந்த விளக்கவுரையில் இவ்வினாவிற்குரிய விடை யக் காண்க.

. "வருவது ஓர்கிலேன்": இடஞ்சுட்டி விளக்குக.

விடையை 16-ஆம் பாடலுக்கு அமைந்த விளக்கவுரையில் இதே தலைப் ல் காண்க.

. சீதைக்கு எப்பொழுது கண் முதலிய உறுப்புக்கள் இடமாகத் துடித்தன.

இராமன் விசுவாமித்திர முனிவருடன் மிதிலைக்கு வந்த அன்று சீதைக்குக் ண் முதலிய உறுப்புக்கள் இடமாகத் துடித்தன.

. "இனியன துடித்தன": விளக்குக.

விளக்கத்தை 17-ஆம் பாடலுக்கு அமைந்த விளக்கவுரையில் இதே தலைப் ற் காண்க.

. சீதைக்குக் கண் முதலிய உறுப்புக்கள் எவ்வெப்பொழுது வலமாகத் துடித்தன?

இராமன் தனக்குரிய அரச பதவியைத் தன் தம்பியாகிய பரதனுக்குக் காடுத்துக் காட்டில் புகுந்த நாளிலும், இராவணன் காட்டில் வஞ்சனையினால் ன்பம் உண்டாக்கிய நாளிலும் சீதைக்குக் கண் முதலிய உறுப்புக்கள் வல கத் துடித்தன.

. "நஞ்சனையான் வனத்திழைத்த நாளிடை வஞ்சனையால் வலந்துடித்த": விளக்குக.

19-ஆம் பாடலுக்கு அமைந்த விளக்கவுரையில் விடையைக் காண்க.

. சீதை அசோக வனத்தில் வாடியிருந்து வருந்திய நிலையை 20 வரிகளில் வரைக.

அசோக வனத்தில் சீதையைச் சுற்றிலும் அரக்கியர் இருந்து அச்சுறுத் னர். மழையின்றி வாடிய சஞ்சீவிக் கொடியைப் போல் அவள் வாடினாள். அவளது இடையைப் போலவே ஏனைய அங்கங்களும் மெலிந்தன. அவள் ங்கினாள் அல்லள். வெயிலில் வைக்கப் பெற்ற விளக்கினைப் போல, அவளது உடல் பொலிவிழந்திருந்தது. புலிக் கூட்டத்தின் நடுவில் மான்

அகப்பட்டதைப் போல் அவள் நடுங்கியவாறு இருந்தாள். விழுதல், விம்முதல், வெம்புதல், அஞ்சுதல், தளர்தல், நடுங்குதல், அழுதல் முதலியவற்றையே அவள் செய்தாள்.

மேகம், மை முதலிய கரிய பொருள்களைக் கண்டவுடன் அவளுக்கு இராமனது நினைவு வந்துவிடும். அவ்வளவில் அவள் கலங்கி அழுவாள். அமுதத்தைக் கொண்டு, மன்மதன் தீட்டிய சித்திரம் ஒன்று ஒளியிழந்து காணப்பட்டது போல் அவள் காணப்பட்டாள். ஒரே ஆடையை உடுத்தி நீரில் முழுகாமல் இருந்தமையால் அவளது உடல் அழுக்காக இருந்தது.

இராமன் வராமலிருத்தற்குரிய காரணங்களைச் சீதை ஒவ்வொன்றும் நினைத்துப் பார்த்தாள். பிறகு இராமனுடைய வீரம், பொலிவு மிக்க முகம், நட்பின் திட்பம், அருட்பண்பு முதலிய குணங்கள் அவளது நினைவிற்கு வந்தன. ஒவ்வொன்றையும் நினைத்துப் பார்த்துப் பார்த்து அவள் ஏங்கினாள்.

35. இராமனுடைய எவ்வெப் பண்புகளை நினைந்து சீதைவருந்தினாள் விளக்கி வரைக. (விடை 20 வரிகளில் அமைதல் வேண்டும்.)

கோசல நாடு பரதனுக்கே உரியதென்று கைகேயி கூறிய அன்று இராமன் மிகுதியான முகப்பொலிவுடன் விளங்கினான். இத்தகைய அவனது பற்றற்ற நிலை சீதையின் நினைவுக்கு வந்தது. 'அரசபதவியை அடைக' என்பதனைக் கேட்ட சமயத்திலும், 'அரச பதவியை விடுத்துக் காட்டுக்குச் செல்' என்பதனைக் கேட்ட சமயத்திலும் நிலையான புன்னகை பூத்த முகத்தினனாய் விளங்கினான் இராமன். அத்தகைய இராமனது முகத்தினை நினைப்பாள் சீதை.

சிவபிரான் வளைத்த மேரு மலையாகிய வில்லை முன்பு இராமன் வளைக்க எடுத்தான். அவனால் அவ்வில்லை வளைக்க முடியுமோ என்று சனகன் ஏங்கினான். அவ்வளவில் இராமன் வளைக்கத் தொடங்கிய வில் இரண்டாய் ஒடிந்து விழுந்தது. இவ்வாறு அஃது உடைந்து விழுந்ததற்குக் காரணமாக இருந்தது இராமனது தோள். அத்தோளின் நினைவு அவளுக்கு வந்தது.

கங்கையில் ஓடம் ஓட்டிய வேடனாகிய குகனை இராமன் தன் உயிர் நண்பனாகக் கொண்டான்; இலக்குவன் அவனுக்குத் தம்பி என்றும், அவன் தனக்குத் தோழன் என்றும், சீதை அவனுக்குக் கொழுந்தி என்றும் முறை காட்டிக் கூறினான். அவ்வாறு இராமன் காட்டிய நட்பின் திட்பம் சீதையின் நினைவுக்கு வந்தது. விராதனுடைய தீவினையையும், சாபத்தையும் நீக்கி இராமன் அருள் செய்தமையையும் நினைத்து, அத்தகைய அருட்கடலாகிய இராமன் தனக்கு அருள் செய்ய வில்லையே என்று எண்ணி மயங்கினாள் சீதை.

3. வில்லிபுத்தூரார் பாரதம்

1. பாரதம்: பெயர்க் காரணம் எழுதுக.

விடையைப் பாரதப் பகுதியின் முன்னுரையிற் காண்க.

2. தமிழிலுள்ள பாரத நூல்கள் யாவை ?

சங்ககாலப் பெருந்தேவனார் பாடிய பாரதம், இடைக் காலத்தில் வாழ்ந்த பெருந்தேவனார் என்பவர் பாடிய பாரத வெண்பா, நல்லாப் பிள்ளை பாரதம், வில்லிபுத்தூரார் பாரதம் என்பன தமிழிலுள்ள பாரத நூல்கள்.

வில்லிபுத்தூரார், பாரத நூலைப் பாடுதற்குக் காரணம் என்ன ?

விடையை முன்னுரைப் பகுதியில் நூலியற்றிய காரணம் என்னும்)ப்பில் காண்க.

"முன்னே வந்தொரு மந்திரம் தவமுனி மொழிந்தது"; "கதிரவன் அருளால் பின்னே வந்தது"; "பேழையில் விடுத்தது"; ஈண்டு அமைந்துள்ள கதைகளைக் குறிப்பிடுக.

கதைகளைப் பாரதப் பகுதியின் முதற் பாடலுக்கமைந்த விளக்கவுரை) தனித்தனி காண்க.

குந்தி கன்னனிடம் முதன்முதல் கூறியது யாது ?

பாரதப் பகுதியின் முதற் பாடலுக்கமைந்த கருத்துரையே இதற்கு டையாகும்.

குந்தி சொல்லிய சொல்லில் கன்னன் ஏன் ஐயம் கொண்டான் ? ஐயம் கொண்டு கூறியது யாது ?

கண்ணனது தூண்டுதலால் குந்தி இவ்வாறு கூறுகின்ருள் போலும் று எண்ணியே கன்னன் குந்தியை ஐயுற்ருன். எனவே, அவன் அவளை ாக்கி, 'நின் சொல்லினை யான் நம்பமாட்டேன். பேய் போன்ற பெண்டிர் பலர், தேவர்கள் எனக்குக் கொடுத்த ஆடையினை உடுத்து இறந்தனர்' று கூறினன்.

"தூய நாகரின் அமைந்ததோர் துகிலால் துன்பமுற்று என்புரு வானு்": கதையை விளங்க வரைக.

கதையைப் பாரதப் பகுதியின் 2-ஆம் பாடலுக்கமைந்த விளக்கவுரை ் இதே தலைப்பில் காண்க.

பேயனர் சிலர் செய்கையிலிருந்து அறியப்படும் பழமொழி யாது ?

பேயனர் சிலர் செய்கையிலிருந்து அறியப்படும் பழமொழியாவது, டாது செய்தவர் படாது படுவர்" என்பதாகும்.

"அடாது செய்தவர் படாது பட்டனர்": இடஞ்சுட்டி விளக்கம் தருக.

விடையை 3-ஆம் பாடலுக்கு அமைந்துள்ள விளக்கவுரையில் காண்க.

குந்தி கன்னனிடம் அன்பு கனிந்து கூறியவை யாவை ?

4-ஆம் பாடலுக்கு அமைந்த கருத்துரையே இவ்வினவிற்கு விடை கும்.

துரியோதனன் கன்னனுக்கு எவ்வாறு ஏற்றமும் தோற்றமும் அளித்தான் ?

துரியோதனன் கன்னனைத் தன் உயிர் நண்பனுகக் கருதினன்; முடி ட்டினன்; அங்க நாட்டிற்கு அரசனுக்கினன்; உடனிருந்து உண்டான்; ம்பிமார்களும் உறவினர்களும் அவனை வணங்குமாறு செய்தான். இவ்வா கத் துரியோதனன் கன்னனுக்கு ஏற்றமும் தோற்றமும் அளித்தான்.

"பெரும்பழி நாணியோ விடுத்தீர்": ஈண்டு அமைந்துள்ள கதைக் குறிப்பினைப் புலப்படுத்துக.

விடையை 5-ஆம் பாடலுக்கு அமைந்த விளக்கவுரையில் இதே தலைப் ல் காண்க.

13. துரியோதனன் தன்னை உயிர் நண்பனாகக் கருதினான் என்பதற்கு கன்னன் காட்டிய சான்று யாது?

6-ஆம் பாடலுக்கு அமைந்த கருத்துரையே இதற்கு விடையாகும்.

14. "எடுக்கவோ? கோக்கவோ? என்றான்": இடஞ்சுட்டி விளக்கு

இவ்வாறு கூறியவன் துரியோதனன். கன்னன் துரியோதனன் மனைவியாகிய பானுமதியுடன் ஒருமுறை சூதாடுங்கால், அவள் இடையே எழுந்தாள். அதனால் கன்னன் பானுமதியினது மேகலையைப் பிடித்து இழுத்தான். அவ்வளவில் அவ்வணியின் மணிகள் சிதறின. அந்நிலையில் ஆங்கு வந்த துரியோதனன் கன்னனது அச்சத்தைத் தவிர்க்கும் பொருட்டு, 'இம்மணிகளை எடுக்கவோ? கோக்கவோ?' என்றான். இந்நிகழ்ச்சியிலிருந்து துரியோதனன் கன்னனைத் தன் உயிர் நண்பனாகக் கருதி இருந்தான் என்பதை உணரலாம்.

15. "எடுக்கவோ, கோக்கவோ? என்றான்": ஈண்டு அமைந்துள்ள கதைக் குறிப்பினை 20 வரிகளில் வரைக. (அல்லது) துரியோதனனும் கன்னனும் பெரு நண்பர்கள் என்பதனைப் புலப்படுத்தும் கதையினை 20 வரிகளில் வரைக.

விடையை 6-ஆம் பாடலுக்கு அமைந்த விளக்கவுரையில் இதே தலைப்பில் காண்க.

16. "செஞ்சோற்றுக்கடன் கழிப்பது": விளக்குக.

விடையினை 6-ஆம் பாடலுக்கு அமைந்த விளக்கவுரையில் இதே தலைப்பில் காண்க.

17. "ஈன்று அறத் துறந்த அன்றையினும்": ஈண்டு அமைந்துள்ள கதையினைப் புலப்படுத்துக.

விடையினை 7-ஆம் பாடலுக்கு அமைந்த விளக்கவுரையில் காண்க.

18. வருந்திய குந்தியைக் கன்னன் எவ்வாறு தேற்றினான்?

8-ஆம் பாடலுக்கு அமைந்த கருத்துரையே இவ்வினாவிற்கு விடையாகும்.

19. "பகைப்பெரும் பாந்தளம் பகழி": ஈண்டு அமைந்துள்ள கதையினை 20 வரியளவில் வரைக.

விடையினை 9-ஆம் பாடலுக்கு அமைந்த விளக்கவுரையில் காண்க.

20. குந்தி கன்னனிடம் கேட்ட வரங்கள் யாவை?

அருச்சுனன் உயிருடன் இருந்தால் அவன் மீது நாகாஸ்திரத்தை இரண்டாம் முறை ஏவுதல் கூடாது என்றும், பாண்டவருள் அருச்சுனன் ஒழிந்த ஏனை நால்வரையும் கொல்லுதல் கூடாது என்றும் குந்தி கன்னனிடம் வரம் கேட்டாள்.

21. "மறித்து நீ விடுத்துக் கோறல்": விளக்குக. இவ்வாறு கேட்குமாறு கண்ணன் தூண்டிவிடக் காரணம் என்ன?

விடையை 9-ஆம் பாடலுக்கு அமைந்த விளக்கவுரையில், இதே தலைப்பில் காண்க.

22. வரங்கேட்ட குந்தியை நோக்கிக் கன்னன் கூறியவை யாவை?

10-ஆம் பாடலுக்கு அமைந்த கருத்துரையே இவ்வினாவிற்குரிய விடையாகும்.

3. "தறுகணர் அலர்க்கும் தறுகண் ஆனவர்க்கும் தண்ணளி நிறைந்தசெங் கண்ணன்"; இவ்வடியினை விளக்கி ஈண்டு அமைந்துள்ள அணியையும் புலப்படுத்துக.

விடையை 10-ஆம் பாடலுக்கு அமைந்த விளக்கவுரையிலும் இலக்கணக் குறிப்பிலும் காண்க.

III. இக்காலச் செய்யுள்

1. பாஞ்சாலி சபதம்

1. பாரதியாருடைய தந்தை, தாய் யாவர்?

பாஞ்சாலி சபதப் பகுதியின் முன்னுரையில் விடையைக் காண்க.

2. விதி எத்தகையது என்று தருமன் கூறினன்?

விதி தனது பயனை ஊட்டும் தன்மையை உடையது என்றும், அஃது எக்காலத்திலும் எல்லாப் பொருளிலும் கலந்து இருக்கும் என்றும், அஃது ஒரு சங்கிலியைப் போன்றதென்றும் தருமன் கூறினன்.

3. "இவை மூன்றில் எது வருமாயினும்": மூன்று எனப்பட்டவை யாவை?

துன்பம், இன்பம், வெறுமை ஆகியவை ஈண்டு மூன்று எனப்பட்டன.

4. வில்லிராமன் கதையைச் சான்றுகத் தருமன் ஏன் காட்டினன்?

விடையைப் பாஞ்சாலி சபதப் பகுதியின் 4-ஆம் பாட்டிற்கு அமைந்த விளக்கவுரையில் இதே தலைப்பில் காண்க.

5. தருமன் தன் தம்பிமார்களுக்குக் கூறிய அறிவுரைகளைத் தொகுத்து 20 வரிகளில் வரைக.

தருமன் தன் தம்பிமார்களுக்கு அறிவுரைகள் பல கூறினன். அவன் அவர்களைப் பார்த்து, "துரியோதனன் சூழ்ச்சி முதலியவை ஊழ்வினைப்படியே நடக்கின்றன. விதி ஒரு சங்கிலியைப் போன்றது. அஃது இடைவிடாமல் எங்கும் எப்பொழுதும் செல்லும். இது நீதி நூல் உரை மட்டுமன்று; உண்மையும் ஆகும். அழியும் தன்மை வாய்ந்த நம் வாழ்க்கை இவ்விதிக்கு விலக்கானதன்று. இவ்வுலகில் அழியும் தன்மையையுடையது வாழ்க்கை. துன்பம், இன்பம், வெறுமை ஆகிய மூன்றில் எதுவரினும் அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்ளுதலே முறை. துன்பம் வரும் என்னும் அச்சத்தால் கொள்கை தவறுதல் கூடாது. யாவும் விதி வசப்படி நடக்கும் என்பதனை உணர்ந்து, பெரியவர்கள் தம் கடமையைத் தவறாமல் செய்து முடிப்பர்.

"புழுவுக்கும், அரசருக்கும், ஏழைக்கும், ஏனை உயிர்கட்கும் செய்தற்குரிய கடமை கணந்தோறும் தோன்றும். அக்கடமை தோன்றும் பொழுது, பலவற்றை ஆராய்ந்து, கடமை தவறுதல் கூடாது. எதுவரினும் கடமையைச் செய்தே தீர்தல் வேண்டும். தம் முன்னோரைத் தேவரைப் போல் கருதிப் பணிதல் யாவருக்கும் பொதுவான கடமையாகும். எனினும், அக்கடமை அரசர்க்கே சிறந்தது. தந்தை சொல்லைத் தட்டி நடக்க விரும்பாமல் அன்றோ இராமன் காடு சென்றான்? தந்தை இட்ட கட்டளைப்படி தனயர் தவறாமல் நடக்க வேண்டும் என்பதற்காகத்தான் இராமனது கதையை முன்பு நான் கூறினேன். அரசர்கட்குள் சிறந்த நீர் இன்று உங்களுடைய கடமை

தவறுதல் தகுமோ ? எனவே, நம் பெரிய தந்தையாகிய திருதராட்டிர சொல்லுக்கு இணங்க நாம் துரியோதனனைக்காணச் செல்லுதல் வேண்டு என்று கூறினன்.

2. குசேலோபாக்கியானம்

1. குசேலோபாக்கியானம் : பெயர்க் காரணம் வரைக.

2. குசேலோபாக்கியானத்தின் ஆசிரியருடைய பெயர், தந்தை யார், மரபு, காலம் ஆகியவற்றைக் குறிப்பிடுக.

1, 2 வினாக்களுக்குரிய விடையைக் குசேலோபாக்கியானத்தி முன்னுரையிற் காண்க.

3. மேதையோர் நாயினும் கீழ்ப்பட்டவர்களாக எப்பொழுது கரு படுவார்கள் ?

பெரியோர்களது நட்பை மறந்தவர்கள் நாயைக் காட்டிலும் கீழ்ப்பட வர்களாகக் கருதப்படுவார்கள்.

4. "நன்றிது தீதென் றுணர்த்துமவர்": விளக்குக.

விளக்கத்தை முதற் பாடலுக்கு அமைந்த விளக்கவுரையில் காண்க.

5. பெரியோர் நட்பினுல் கிடைக்கும் பயன் யாது ?

பொன்னும், பூமியும், அறிவும் இல்லாவிடினும் பெரியோர் நட்பு ஒரு னுக்கு இருப்பின், அவன் எல்லாம் உள்ளவனுகக் கருதப்படுவான்.

6. நல்லவர்கள் நட்பினுல் கிடைக்கும் நன்மைகள் யாவை ?

5-ஆம் பாடலுக்கு அமைந்த கருத்துரையே இவ்வினவிற்கு விடையாகு

7. நட்பின் சிறப்பினைப்பற்றி 20 வரிகளில் கட்டுரை ஒன்று வரைக.

கலைகளை யுணர்ந்து, புண்ணிய பாவங்களை உணர்ந்து, நன்மை தீல களை அறிந்து உணர்த்தவல்ல பெரியோர்களின் நட்பை அறிஞர்கள் இ தாலும் மறவார்கள். அவ்வாறு மறந்தால் அவர்கள் நாயினும் கீழ்ப்பட வர்கள் ஆவார்கள். நல்லார் சொல்லை விரும்புதல், நல்லாரைக் காணுத நல்லார்க்கு ஒன்று உதவுதல், நல்லாரைப் புகழ்தல் ஆகியவை நல்லன என் நல்லோர். ஆயின், அந்நல்லன யாவும் நல்லோர் நட்பு ஒன்றினுலேயே கிடை கும். எனவே, நல்லோர் நட்பினைக் கொள்ளுதல் நன்று.

பொன்னும், பூமியும், அறிவும் இருந்தாலும் பெரியோர் நட்பு இல் யேல் ஒருவன் ஒன்றும் இல்லாதவனுகக் கருதப்படுவான். பொன்னும், பூ யும், அறிவும் இல்லாவிடினும், பெரியோர் நட்பு இருக்குமாயின் அவ எல்லாம் உள்ளவனுகக் கருதப்படுவான். பேயுடன் பழகினுலும் பிரித அரிது என்பர் அறிஞர். தூயோர்களுடைய நட்பை அரிய தவத்தினலே பெறமுடியும். அத்தகைய நட்பு எளிதில் கிடைத்தால் அதனை இகழ்த கூடாது. நல்லவர்கள் தம் நண்பர்கள் தீய வழியில் சென்ருல் இடித்துரை பர்; தக்க வழியில் செலுத்துவர்; தேவர் உலகை நண்பர்க்கு உறவு ஆக் வர்; நரகத்தைப் பகையாக்குவர்; அந்நல்லோர் கல்வியும், அறிவு பொறுமையும் கொண்டு திகழ்வர். இவர்களுடைய நட்பானது கிடைத்த மிகவும் அரிது.

இலக்கணப் பகுதி

பாடத் திட்டம்

7-1-1954 தேதியிட்ட போர்ட் செயிண்ட் ஜார்ஜ் கெஜட்டில் வெளியான பாடத் திட்டம்)

றிப்பு:—பள்ளியிறுதித் தேர்வில், இலக்கணப் பகுதிக்கு **100**-க்குச் சுமார் **25** மதிப்பெண்கள் உண்டு. எனவே, மாணவர்கள் இலக்கணத்தில் மிகுந்த கவனம் செலுத்தவேண்டும்.

பகுதி II (சிறப்புப் பகுதி)

படிவம் 6

I. எழுத்து:

(1) ஐகார, ஔகார, மகர, ஆய்தக் குறுக்கங்கள்.

(2) பிறப்பு—எழுத்துக்களின் முயற்சிப் பிறப்பு.

(3) மெய்ம் மயக்கம் (விரிவாக).

II. சொல்:

(1) ஓரெழுத் தொருமொழி.

(2) இலக்கணை.

(3) பெயர்ச்சொல்:

(*i*) விளிவேற்றுமையில் அமையும் விகாரங்களின் விரிவு.

(*ii*) ஐம்பாற் பெயர்களுக்குரிய விகுதிகள்.

(4) வினைச் சொல்:

(*i*) ஐம்பால் வினைமுற்று.

(*ii*) சினைவினை—முதல் வினை.

(*iii*) ஆக்கவினை.

(5) இடைச்சொல்:

அந்தில், ஆங்கு, மா, முன்னிலை அசைச்சொற்கள்.

III. பொது:

(1) இடைப் பிற வரல்.

(2) வினவகை.

(3) விடை வகை.

(4) அடைமொழி.

(5) பொருள்கோள்.

IV. புணர்ச்சி:

(1) மெய்யீற்றில் இயல்பு புணர்ச்சி.

(2) வினு சுட்டுக்களின் புணர்ச்சி.

(3) செய்யுளுக்கேற்ற சிறப்பு விதிகள் சில.

(4) இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சி வேறுபாடு.

V. யாப்பு :

(1) சீர்பிரித்துத் தளை கூறுதல்.

(2) எதுகை மோனை வகைகள்.

(3) கட்டளைக் கலித்துறை, தாழிசைகளின் இலக்கணம்.

(4) பாவினங்களின் பொது இலக்கணம்.

VI. அணி :

(1) பிறிது மொழிதல்.

(2) கருத்துடையடைமொழி.

VII. பொருளிலக்கணம் :

(1) அகப்பொருள் : முதல், கரு, உரிப்பொருள் இவை எனல்.

(2) புறப்பொருள் திணைகள், (சுருக்கமாக).

I. எழுத்து

(1) ஐகார, ஔகார, மகர, ஆய்தக் குறுக்கங்கள்

ஐகாரக் குறுக்கம் : 'ஐ' என்ற நெட்டெழுத்துக்குரிய மாத்திரைகள் இரண்டு. அது சொல்லுக்கு முதலிலும், இடையிலும், கடையிலும் வரும் பொழுது ஒன்றரை மாத்திரையாகக் குறுகும். **அதுவே ஐகாரக் குறுக்கம்.**

(உ-ம்) ஐம்பது, சடையன், குவளை. - உச்சரித்துப் பார்த்து மாத்திரை குறைந்து வருதலை உணர்க.

ஔகாரக் குறுக்கம் : 'ஔ' என்ற நெட்டெழுத்துக்குரிய மாத்திரைகள் இரண்டு. அது சொல்லுக்கு முதலில் வரும்பொழுது ஒன்றரை மாத்திரையாகக் குறுகும். **அதுவே ஔகாரக் குறுக்கம்.**

(உ-ம்.) ஔவையார்—உச்சரித்துப் பார்த்து மாத்திரை குறைந்து வருதலை உணர்க.

மகரக் குறுக்கம் : 'ம்' என்னும் மெய்யெழுத்துக்குரிய மாத்திரை அரை ஆகும். அது ணகரத்திற்கும், னகரத்திற்கும் பின்னே வருங்கால் தனக்குரிய அரை மாத்திரையிற் குறுகிக் கால் மாத்திரையாகும். அதுவே **மகரக் குறுக்கம்.**

(உ-ம்.) மருண்ம், போன்ம். 'மருளும்' என்பது 'மருண்ம்' என்றும், 'போலும்' என்பது 'போன்ம்' என்றும் வந்தன. - மாத்திரை குறைதலை உச்சரித்துக் காண்க.

ஆய்தக் குறுக்கம் : குற்றெழுத்தை அடுத்து வந்த லகர ளகரங்கள் தகர முதல் மொழியுடன் புணருங்கால் ஆய்தமாகத் திரியும். அவ்வாறு திரியும் ஆய்தம் தனக்குரிய அரை மாத்திரையிற் குறுகும். அதுவே **ஆய்தக் குறுக்கம்.**

(உ-ம்) கல்+தீது=கஃறீது. முள்+தீது=முஃடீது. - ஆய்தம் தன் மாத்திரையிற் குறுகி வருதலை உச்சரித்து உணர்க.

(2) பிறப்பு—எழுத்துக்களின் முயற்சிப் பிறப்பு

அ, ஆ : வாயைத் திறத்தலால் பிறக்கும்.

இ, ஈ, எ, ஏ, ஐ : வாயைத் திறத்தலுடன், மேல்வாய்ப்பல்லை நாக்கடியினது ஓரம் பொருந்தப் பிறக்கும்.

உ, ஊ, ஒ, ஓ, ஔ : உதடுகள் குவிதலாற் பிறக்கும்.

க், ங் : நாக்கின் அடி, மேல்வாயடியைப் பொருந்துதலால் பிறக்கும்.

ச், ஞ் : நாக்கின் நடு மேல்வாய் நடுவைப் பொருந்துதலால் பிறக்கும்.

ட், ண் : நாக்கின் கடை மேல்வாய்க் கடையைப் பொருந்துதலால் பிறக்கும்.

த், ந் : மேல்வாய்ப் பல்லினது அடியை நாக்கு நுனி பொருந்தப் பிறக்கும்.

ப், ம் : மேலுதடும், கீழுதடும் பொருந்தப் பிறக்கும்.

ய் : நாக்கின் அடி மேல்வாயடியைப் பொருந்தப் பிறக்கும்.

ர், ழ் : மேல்வாயை நாக்கு நுனி தடவப் பிறக்கும்.

ல் : மேல்வாய்ப்பல்லடியை நாவின் ஓரம் தடித்து நெருங்கப் பிறக்கும்.

ள் : மேல்வாயை நாவோரம் தடித்துத் தடவப் பிறக்கும்.

வ் : மேல்வாய்ப்பல்லைக் கீழுதடு பொருந்தப் பிறக்கும்.

ற், ன் : மேல்வாயை நாக்கின் நுனி மிகப்பொருந்தின் பிறக்கும்.

ஃ : இது பிறக்கும் இடம் தலை; வாயைத்திறத்தலாற் பிறக்கும்.

(3) மெய்ம் மயக்கம்

வேற்றுநிலை மெய்ம்மயக்கம், உடனிலை மெய்ம்மயக்கம் என்று மெய்ம்மயக்கம் இருவகைப்படும்.

ங், ஞ், ட், ண், ந், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் என்னும் பதினான்கு மெய்களும் பிற மெய்களோடு கூடுங் கூட்டம் வேற்றுநிலை மெய்ம்மயக்கம் ஆகும்.

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ல், வ், ள், ற், ன் என்னும் பதினாறு மெய்களும் தம்மோடு கூடுங் கூட்டம் உடனிலை மெய்ம்மயக்கம் ஆகும்.

வேற்றுநிலை மெய்ம்மயக்கத்திற்குச் சிறப்பு விதி :

ஙகரத்தின்முன் ககரம் மயங்கும். (உ-ம்.) தங்கம்.

வகரத்தின்முன் யகரம் மயங்கும். (உ-ம்.) தெவ்யாது.

ஞகரத்தின்முன் சகரம் மயங்கும். (உ-ம்.) பஞ்சம்.

நகரத்தின்முன் தகரம் மயங்கும். (உ-ம்.) வந்த.

டகரத்தின்முன் ககரமும், சகரமும், பகரமும் மயங்கும். (உ-ம்.) வெட்கம், சாட்சி, தட்பம்.

றகரத்தின்முன் ககரமும், சகரமும், பகரமும் மயங்கும். (உ-ம்.) நிற்க, கற்சிறை, நிற்ப.

ணகரத்தின்முன் டகரமும், க், ச், ஞ், ப், ம், ய், வ் என்னும் மெய்களும் மயங்கும். (உ-ம்.) நண்டு, வெண்கலம், வெண்சோறு, வெண்ஞமலி, வெண்பல், வெண்மணி, மண்யாது, மண் வலம்.

னகரத்தின்முன் றகரமும், க், ச், ஞ், ப், ம், ய், வ் என்னும் மெய்களும் மயங்கும். (உ-ம்.) புன்றலை, புன்கண், புன்செய், புன்ஞமலி, புன்பயிர், புன்மலர், பொன்யாது, பொன்வலிமை.

மகரத்தின்முன் ப், ய், வ் என்பன மயங்கும். (உ-ம்.) கம்பன், நிலப் யாது, கலம் வலிது.

ய், ர், ழ், என்பனவற்றிற்குமுன் க், ச், த், ந், ப், ம், வ், ய், ஞ், ங் என்பன மயங்கும். (உ-ம்.) வேய்கடிது, வேர்கடிது, வீழ்கடிது. (ஏனைய உதாரணங் கள் வந்த வழிக் காண்க.)

ல், ள் என்பனவற்றிற்குமுன் க், ச், ப், வ், ய் என்பன வரும். (உ-ம்.) வேல் கடிது, வேல் சிறிது, வேல் பெரிது, வேல் வலிது, வேல் யாது, வாள் கடிது, வாள் சிறிது, வாள் பெரிது, வாள் வலிது, வாள் யாது.

மேலே கூறப்பெற்ற விதிகட்கு விலக்காகச் சில மெய்கள் மயங்குதலும் உண்டு.

II. சொல்

(1) ஓரெழுத் தொரு மொழி

ஒரே எழுத்து நின்று ஒரு சொல்லாக இருத்தலும் உண்டு. அஃது ஓரெழுத் தொரு மொழி எனப்படும்.

(உ-ம்.) ஆ - பசு ; ஈ - ஒரு சிறு பூச்சி ; ஊ - இறைச்சி ; ஏ - அம்பு ; ஐ - தலைமை ; ஓ - மதகுநீர் தாங்கும் பலகை ; மா - பெரிய ; மை - கரிய ; தா - தருக ; தீ - நெருப்பு ; பூ - மலர் ; நோ - துன்பப்படு ; கா - சோலை ; கை - உடல் உறுப்பு ; கோ - அரசன் ; வா - வருக ; வீ - பூ ; வை - கூர்மை ; சா - இற ; சோ - மதில். இவ்வாறு ஓரெழுத் தொரு மொழியாக நிற்கும் சொற்களை அறிக. ஏதேனும் ஒரு பொருளைக் கொண்டதுதான் சொல்.

(2) இலக்கணை

ஒரு பொருளுக்குரிய இலக்கணத்தை மற்றொரு பொருளுக்குத் தந்து (ஏற்றி) உரைப்பது இலக்கணையாகும். அது விட்ட இலக்கணை, விடாத இலக்கணை, விட்டும் விடாத இலக்கணை என மூவகைப்படும்.

(உ-ம்.) (1) சென்றது கொல் நேர்மருங்கில் கையூன்றி மாறற்கு உழந்து பின் சென்ற என் நெஞ்சு—என்ற இடத்து நெஞ்சைக் குறிக்கும் போது இடுப்பில் கையூன்றி வருந்திய நெஞ்சம் என்று குறிக்கப்பட்டுள்ளது. நெஞ்சத்திற்கு இடையும், கையும், ஊன்றுதலும் ஆகியன இல்லை. இல்லாதவை அதற்குத் தந்துரைக்கப்பட்டுள்ளன. ஆதலின் இது விட்ட இலக்கணையாம்.

(2) கங்கையின் கண் இடைச்சேரி—கங்கைக் கரையில் இடைச்சேரி உள்ளது. அங்ஙனம் இருக்கும் அதனைக் கங்கையின்கண் இடைச்சேரி என்று கூறியது விடாத இலக்கணை.

(3) இருள் பருகிப் பகல் கான்று எழுதரும் பரிதி—என்றவிடத்து பருகுதலும், கக்குதலுமாகிய தொழில்கள் சூரியனுக்கு இல்லை ; இருளைப் போக்குதலும், பகலைத் தருதலுமாகிய தொழில்கள் பரிதிக்கு உண்டு. இங்ஙனம் உள்ளதும் இல்லாததுமாகிய இயல்புகளைச் சூரியனுக்கு ஏற்றிக் கூறியமையால் இது விட்டும் விடாத இலக்கணை.

(3) பெயர்ச் சொல்

(*i*) விளிவேற்றுமையில் அமையும் விகாரங்களின் விரிவு

எட்டாம் வேற்றுமைக்கு விளிவேற்றுமை என்று பெயர். பெயர்ச் சொல் விளியினை ஏற்குங்கால் பல விகாரங்களை அடையும்.

(உ-ம்.) நங்கை - நங்காய்! (ஈறு திரிதல்: 'ஐ' என்பது 'ஆய்' எனத் திரிந்தது.) மன்னன் - மன்ன! (ஈறு கெடுதல்: 'ன்' கெட்டது.) மகன்-மகனே! (ஈறு மிகுதல்: 'ஏ' மிக்கது.) வள்ளி - வள்ளி! (இயல்பு.) மக்கள் - மக்காள்! (ஈற்றயல் திரிதல்: ஈற்றயல் எழுத்தானது திரிந்தது.)

(ii) ஐம்பாற் பெயர்கட்குரிய விகுதிகள்

குழையன்	—	'அன்'	விகுதி.
வானத்தான்	—	'ஆன்'	,,
குழையள்	—	'அள்'	,,
வானத்தாள்	—	'ஆள்'	,,
குழையர்	—	'அர்'	,,
வானத்தார்	—	'ஆர்'	,,
தேவிமார்	—	'மார்'	,,
குழையன	—	'அ'	,,
யாது	—	'து'	,,
பொன்னி	—	'இ'	,,

மேலே காட்டப்பெற்ற பெயர் விகுதிகளுடன் மன், மான், கள், வை, தை, கை, பி, முன், அல், ன், ள், ர், வ் என்னும் பதின்மூன்றும் பெயர் விகுதிகளாக வரும்.

(4) வினைச்சொல்

(i) ஐம்பால் வினைமுற்று

படர்க்கை வினைமுற்று :

நடந்தனன், நடந்தான் :	ஆண்பாற்	படர்க்கை	வினைமுற்று.
நடந்தனள், நடந்தாள் :	பெண்பாற்	,,	,,
நடந்தனர், நடந்தார் :	பலர்பாற்	,,	,,
நடந்தது, கூயிற்று :	ஒன்றன்பாற்	,,	,,
நடந்தன, நடந்த :	பலவின்பாற்	,,	,,

தன்மை வினைமுற்று :

உண்டேன், உண்பேன் : தன்மை ஒருமை வினைமுற்று.
உண்டேம், உண்பேம் : தன்மைப் பன்மை வினைமுற்று.

முன்னிலை வினைமுற்று :

உண்ணாய், உண்ணுதி : முன்னிலை ஒருமை வினைமுற்று.
உண்டனிர், உண்டீர் : முன்னிலைப் பன்மை வினைமுற்று.
வாழ்க, வாழிய, வாழியர் : வியங்கோள் வினைமுற்று.

(ii) சினை வினை—முதல் வினை

'மனிதன்' என்பது முதல். 'கால்' என்பது சினை.

சினைவினை சினையுடனும் முதலுடனும் முடியும்.

(உ-ம்.) காலொடிந்து வீழ்ந்தான். ஈண்டு ஒடிதல், வீழ்தல் என்று இரண்டு வினைகள் உள்ளன. 'கால்' என்பது சினை. 'காலொடிந்து' என்றவிடத்து 'ஒடிதல்' என்னும் சினைவினை சினையுடன் முடிந்தது. 'காலொடிந்து வீழ்ந்தான்' என்றவிடத்து 'வீழ்தல்' என்னும் முதல் வினை சினையுடன் முடிந்தது.

(iii) ஆக்க வினை

ஆக்கத்தால் வரும் வினைக்குறிப்புச் சொற்கள் விரிந்தாயினும், தொக்கா யினும் வரும்; ஆக்கச் சொல் இன்றி வாரா.

(உ-ம்.) இராமன் நல்லனாயினான். (ஆக்கச்சொல் விரிந்து வந்தது.)

இராமன் நல்லன். (ஆக்கச்சொல் தொக்கு வந்தது.)

(5) இடைச்சொல்

அந்தில், ஆங்கு, மா, முன்னிலை அசைச்சொற்கள்:

அந்திற்கழலினன் கச்சினன்: 'அந்தில்' என்னும் இடைச்சொல் அசைநிலையாக வந்தது.

வருமே சேயிழை அந்திற்கொழுநற் காணிய: ஈண்டு 'அந்தில்' என்பது இடப்பொருளில் வந்தது.

ஆங்கத் திறனல்ல யாம் கழற: ஈண்டு 'ஆங்கு' என்னும் இடைச்சொல் அசைநிலையாக வந்தது.

ஆங்காங்காயினுமாக: ஈண்டு 'ஆங்கு' என்னும் இடைச்சொல் இடப்பொருளில் வந்தது.

புற்கை உண்கமா கொற்கையோனே: ஈண்டு 'மா' என்னும் இடைச்சொல் அசைநிலையாக வந்தது.

முன்னிலை அசைச்சொற்கள்:

சென் மியா: 'மியா' என்னும் முன்னிலை அசை வந்தது.

'காணிக எனவே: 'இக' என்னும் முன்னிலை அசை வந்தது.

கண்டது மொழிமோ: 'மோ' என்னும் முன்னிலை அசை வந்தது.

சென்மதி பெரும: 'மதி' என்னும் முன்னிலை அசை வந்தது.

சொல்லியர் அத்தைநின் வெருளி: 'அத்தை' என்னும் முன்னிலை அசை வந்தது.

நீயொன்று பாடித்தை: 'இத்தை' என்னும் முன்னிலை அசை வந்தது.

காணிய வா வாழிய மலைச்சாரல்: 'வாழிய' என்னும் முன்னிலை அசை வந்தது.

தவிர்ந்தீக மாளநின் பரிசிலர் உய்ம்மார்: 'மாள' என்னும் முன்னிலை அசை வந்தது.

சென்றீ பெரும: 'ஈ' என்னும் முன்னிலை அசை வந்தது.

செல்வினை மருங்கிற் செலவயர்ந்தியாழ: 'யாழ' என்னும் முன்னிலை அசை வந்தது.

III. பொது

(1) இடைப் பிற வரல்

இராமன் (வயிறார) உண்டான்.

அறத்தை (அழகு பெறச்) செய்தான்.

வேலால் (மாயக்) குத்தினான்.

தெய்வத்திற்கு (அருள் வேண்டிக்) கோயில் எழுப்பினார்.

மலையினின்று (உருண்டு) விழுந்தான்.

இராமா (விரைந்து ஓடி) வா.

பெயர்க்கும் வினைக்கும் இடையே ஏற்ற பிற சொற்கள் வந்தன காண்க.

(2) வினவகை

'இச்சொல்லுக்குப் பொருள் யாது?" என்று ஆசிரியர் கேட்டல்	அறி வினா.
'இச்சொல்லுக்குப் பொருள் யாது?' என்று மாணவன் கேட்டல்	அறியா வினா.
பாம்போ பழுதையோ இது?	... ஐய வினா.
வணிகரே, பருப்புளதோ?	... கொளல் வினா.
'நான்கு நாட்களாக நீ உண்ணவில்லையா?' என்று வள்ளல் கேட்டல்	கொடை வினா.
முருகா, உண்டாயா?	... ஏவல் வினா.

எனவே அறி வினா, அறியா வினா, ஐய வினா, கொளல் வினா, கொடை வினா, ஏவல் வினா என்று வினாக்கள் அறுவகைப்படும்.

(3) விடை வகை

மதுரைக்கு வழியாது என்னும் வினாவிற்கு 'இது' எனல்	சுட்டு விடை.
இராமா இப்படிச் செய்வாயா என்னும் வினாவிற்கு 'செய்யேன்' என்று விடை கூறுதல்	மறை விடை.
முன் வினாவிற்கு, 'செய்வேன்' என்று விடை கூறுதல்	நேர் விடை.
முன் வினாவிற்கு, 'நீ செய்' என்று விடை கூறுதல்	ஏவல் விடை.
முன் வினாவிற்கு, 'செய்வேனோ' என்று விடை கூறுதல்	வினா விடை.
முன் வினாவிற்கு, 'உடம்பு வலிக்கின்றது' என்று விடை கூறுதல்	உற்றது உரைத்தல் விடை.
முன் வினாவிற்கு, 'உடம்பு வலிக்கும்' என்று விடை கூறுதல்	உறுவது கூறல் விடை.
முன் வினாவிற்கு, 'மற்றொன்றைச் செய்வேன்' என்று விடை கூறுதல்.	இனமொழி விடை.

எனவே சுட்டு விடை, மறை விடை, நேர் விடை, ஏவல் விடை, வினா விடை, உற்றதுரைத்தல் விடை, உறுவது கூறல் விடை, இனமொழி விடை என்று விடைகள் எட்டு வகைப்படும்.

(4) அடை மொழி

நெய்க் குடம் : பொருள் அடைமொழி.

குளநெல் : இட அடைமொழி.

கார்த்திகை விளக்கு : கால அடைமொழி.

பூ மரம் : சினை அடைமொழி.

செந்தாமரை : குண அடைமொழி.

ஆடு பாம்பு : தொழில் அடைமொழி.

எனவே அடைமொழிகள் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறும்பற்றி வரும்.

(5) பொருள்கோள்

செய்யுளிற் பொருள் கொள்ளும் விதம் பொருள்கோள் ஆகும். யாற்று நீர்ப் பொருள்கோள், மொழிமாற்றுப் பொருள்கோள், நிரனிறைப் பொருள்கோள், பூட்டுவிற் பொருள்கோள், தாப்பிசைப் பொருள்கோள், அளைமறிபாப்புப் பொருள்கோள், கொண்டுகூட்டுப் பொருள்கோள், அடிமறிமாற்றுப் பொருள்கோள் என்று பொருள்கோள் எட்டு வகைப் படும்.

யாற்றுநீர்ப் பொருள்கோள் :

"சொல்லருஞ் சூர்ப்பசும் பாம்பின் தோற்றம் போல்
மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்
செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்த நூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே."

இச்செய்யுளில் சொல் (நெல்) என்பது எழுவாய்; ஈற்றில் உள்ள 'காய்த்த' என்பது பயனிலை. தொடக்கத்தில் எழுவாயும், முடிவில் பயனிலையும் கொண்டு, இடையிலே ஏற்ற எச்சங்களைக் கொண்டு, ஆற்று நீர் ஒழுக்கைப்போற் காணப்படுதலால் இப்பாட்டில் யாற்றுநீர்ப் பொருள் கோள் உள்ளது.

மொழிமாற்றுப் பொருள்கோள் :

"சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை."

இச்செய்யுளுக்குப் பொருள் கொள்ளுங்கால், 'கானக நாடன் சுனை சுரைமிதப்ப அம்மியாழ, வரையனைய யானைக்கு நிலை முயற்கு நீத்து என்ப' என்று சொற்களை மாற்றுதல் வேண்டும். இவ்வாறு மொழிகள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளதாதலால் இப்பாடலின்கண் மொழிமாற்றுப் பொருள் கோள் அமைந்துள்ளது.

நிரனிறைப் பொருள்கோள் :

(i) முறை நிரனிறைப் பொருள்கோள் :

"மதிபவள முத்தம் முகம்வாய் முறுவல்."
(மதி—சந்திரன். முத்தம்—முத்து. முறுவல்—பல்வரிசை.)

இவ்வடிக்குப் பொருள் கொள்ளுங்கால் மதி முகம், பவள வாய், முத்த முறுவல் என்று முறையே வரிசையாக நிறுத்திப் பொருள் கொள்கின்றோம். எனவே, இவ்வடியின்கண் முறை நிரனிறைப் பொருள்கோள் உள்ளது.

(*ii*) எதிர் நிரல் நிறைப் பொருள்கோள் :

"வான்முகிலும் மின்னும்
வறுநிலத்து வீழ்ந்ததுபோல்
தானும் குழலும் தனிவீழ்ந்தாள்"

என்னும் அடிகளின் பொருளைப் பாருங்கள். வானில் உள்ள மேகம் போலக் கூந்தலும், மின்னல் போலத் தானும் வீழ்ந்தாள்' என்று எதிராக நிறுத்தித் தான் பொருள் சொல்ல வேண்டியுள்ளது. எனவே, இவ்வடிகளின்கண் எதிர் நிரல் நிறைப் பொருள்கோள் உள்ளது.

பூட்டுவிற் பொருள்கோள் :

"திறந்திடுமின் தீயவை பிற்காண்டும் மாதர்
இறந்து படிற்பெரிதாம் ஏதம்—உறந்தையர்கோன்
தண்ணார மார்பில் தமிழர் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு".

இப்பாடலில் முதலிலும் ஈற்றிலும் நிற்கும் சொற்கள் தம்முள்ளே பொருளை நோக்குகின்றன. 'திறந்திடுமின் கதவு' என்று நோக்குதல் காண்க. எனவே, ஈண்டுப் பூட்டுவிற் பொருள்கோள் உள்ளது.

தாப்பிசைப் பொருள்கோள் :

"உண்ணாமை உள்ள துயிர்நிலை ஊன்உண்ண
அண்ணாத்தல் செய்யா(து) அளறு."

இக்குறட்பாவின்கண், இடையில் அமைந்துள்ள 'ஊன்' என்னுஞ் சொல் ஊஞ்சலைப்போல முதலிலும், ஈற்றிலும் சென்று பொருளைக் கூடுகின்றது. (தாம்பு-ஊசல். இசை-சொல்.) எனவே, இப்பாடலின்கண் தாப்பிசைப் பொருள்கோள் உள்ளது.

அளைமறிபாப்புப் பொருள்கோள் :

"தாழ்ந்த உணர்வினராய்த் தாளுடைந்து
தண்டூன்றித் தளர்வார் தாமும்
சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து
நாற்கதியிற் சுழல்வார் தாமும்
மூழ்ந்தபிணி நலிய முன்செய்த
வினையென்றே முனிவார் தாமும்
வாழ்ந்த பொழுதினே வானெய்து
நெறிமுன்னி முயலா தாரே."

இப்பாடலுக்கு நான்காம் அடியை முதலிலும், மூன்றும் அடியை இரண்டாவதாகவும், இரண்டாம் அடியை மூன்றாவதாகவும், முதலடியை நான்காவதாகவும் கொண்டுதான் பொருள் சொல்லுதல் வேண்டும். இப்பாடலின் பொருள் புற்றிலே தலைவைத்து மடங்கும் பாம்புபோல் உள்ளதாதலால் ஈண்டு அளைமறிபாப்புப்பொருள் கோள் உள்ளது. (அளை - புற்று. மறிபாப்பு - மடங்கியுள்ள பாம்பு.)

கொண்டுகூட்டுப் பொருள்கோள் :

"தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட பைங்கூந்தல்
வெண்கோழி முட்டை உடைத்தன்ன மாமேனி
அஞ்சனத் தன்ன பசலை தணிவாமே
வங்கத்துச் சென்றார் வரின்."

இப்பாடலுக்குப் பொருள் கூறுங்கால், 'வங்கத்துச் சென்றார்வரின், அஞ்சனத்தன்ன பைங்கூந்தலை உடையாளது மாமேனிமேல் தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட கோழி வெண்முட்டை உடைத்தன்ன பசலை தணிவாம்' என்று சொற்களைப் பல இடங்களிற்கொண்டு கூட்டிக் கொள்ளுதல்வேண்டும். எனவே, ஈண்டுக் கொண்டுகூட்டுப் பொருள்கோள்உள்ளது.

அடிமறிமாற்றுப் பொருள்கோள் :

"மாறாக் காதலர் மலைமறந் தனரே
ஆறாக் கட்பனி வரலா னாவே
வேறா மென்றோள் வளைநெகி ழும்மே
கூறாய் தோழியான் வாழு மாறே."

இப்பாடலில் உள்ள எந்த எந்த அடியை எங்கே கூட்டினாலும் பொருளும் ஓசையும் வேறுபடா. எனவே, அடிமறிமாற்றுப் பொருள்கோள் ஈண்டு உள்ளது.

IV. புணர்ச்சி

(1) மெய்யீற்றில் இயல்பு புணர்ச்சி

மரம் + ஏறு = மரமேறு
கடல் + அலை = கடலலை
உயிர் + உள்ள = உயிருள்ள

இவ்வாறு நிலைமொழி ஈற்றில் நிற்கும் மெய்யெழுத்தின்மீது உயிர் இணைந்து நிற்பது இயல்பு புணர்ச்சியாகும்.

மண் + மாட்சி = மண்மாட்சி
எயின் + குடி = எயின்குடி
தேன் + யாது = தேன்யாது
எகின் + கால் = எகின்கால்
பாய் + களிறு = பாய்களிறு
வேர் + சிறிது = வேர்சிறிது
யாழ் + பெரிது = யாழ்பெரிது

இவ்வாறு, சொற்கள் புணருங்கால் எத்தகைய விகாரத்தையும் அடையாமல் புணரும் புணர்ச்சியும், இயல்பு புணர்ச்சி ஆகும்.

(2) வினா, சுட்டுக்களின் புணர்ச்சி

எ, என்னும் வினா இடைச்சொல், அ, இ, உ என்னும் சுட்டிடைச் சொற்கள் ஆகியவற்றின்முன், உயிரெழுத்துக்களையும், யகர மெய்யையும் முதலாக உடைய சொல் வந்தால் 'வ்' என்ற எழுத்து இடையில் தோன்றும் ; ஏனைய மெய்யெழுத்துக்கள் வந்தால் வந்த மெய் எழுத்தே இடையில் மிகும்.

(உ-ம்.) எ + அணி = எவ்வணி ; எ + யானை = எவ் யானை ; எ + குதிரை = எக்குதிரை.

அவ்வணில், அவ்யாண்டு, அப்பையன்.

(3) செய்யுளுக்கேற்ற சிறப்பு விதிகள் சில

அ + இடை = ஆயிடை. "ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்" என்
ந் செய்யுளடியில் சுட்டு நீண்டவிடத்து யகரம் தோன்றியது காண்க.

"நிலவிரி கானல்வாய் நின்று": ஈண்டு 'நிலாவிரி' என்பது 'நிலவிரி'
ன்று குறுகியது.

"மருவின் என் செய்யுமோ நிலவு": ஈண்டு 'நிலா' என்னுஞ் சொல்
லவு' என்று குறுகலோடு உகரம் ஏற்றது.

இனி, 'நிலா வணங்கு' என்று இயல்பாக நிற்றலும் உண்டு.

"வாளன்று பிடியா வன்கண் ஆடவர்": ஈண்டு 'அன்றி' என்னுஞ்
ால் 'அன்று' எனத் திரிந்து இயல்பாயிற்று.

"விண்ணின்று பொய்ப்பின்": ஈண்டு 'இன்றி' என்னுஞ் சொல்
ன்று' எனத் திரிந்து இயல்பாயிற்று.

அது + அன்று = அதான்று: இவ்வாறு 'அது' என்னும் சுட்டுப் பெய
ர்முன் வரும் 'அன்று' என்னும் வினைக்குறிப்பு முற்று, செய்யுளின்கண்
தல் நீளும். இவ்வாறு செய்யுட்களிலேயே வரும்.

(4) இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சி வேறுபாடு

ர் + புறம் = நிற்புறம்
ள் + கொடுத்தான் = மகட்கொடுத்தான்
} இரண்டாம் வேற்றுமையில் இயல்பாக வேண்டிய இடத்து விகாரமாயின.

ி + தின்றான் = கனி தின்றான்
ண் + சுமந்தான் = மண் சுமந்தான்
ய் + தின்றான் = காய் தின்றான்
ாள் + பிடித்தான் = வாள் பிடித்தான்
} விகாரமாக வேண்டிய இடத்து இயல்பாயின.

ள + குறைத்தான் = விளக்குறைத்தான். (மெல்லெழுத்து மிக
வண்டிய இடத்து வல்லெழுத்து மிக்கது.)

இவ்வாறாகப் பொது விதிகட்கு உட்படாமல் இரண்டாம் வேற்றுமைப்
ணர்ச்சியில் வேறுபாடுகள் பல வரும். அவற்றை இடம் நோக்கி அறிந்து
காள்க.

V. யாப்பு

(1) சீர்பிரித்துத் தளை கூறல்

ர்:

ஓரசைச் சீர், ஈரசைச் சீர், மூவசைச் சீர், நாலசைச் சீர் எனச் சீர்
ன்கு வகைப்படும்.

நேரசைச் சீர், நிரையசைச் சீர் என ஓரசைச் சீர் இரண்டு வகைப்படும்.
நேர்—நாள். நிரை—மலர்.)

மாச்சீர், விளச்சீர் என ஈரசைச் சீர் இருவகைப்படும். (மாச்சீர்—தேமா,
ளிமா. விளச்சீர்—கருவிளம், கூவிளம்.)

காய்ச்சீர், கனிச்சீர் என மூவசைச் சீர் இருவகைப்படும். (காய்ச்சீர்—
தமாங்காய், புளிமாங்காய், கருவிளங்காய், கூவிளங்காய். கனிச்சீர்—
தமாங்கனி, புளிமாங்கனி, கருவிளங்கனி, கூவிளங்கனி.)

நாலசைச்சீர் செய்யுட்களில் சிறுபான்மையே வரும். (தேமாந்தண்பூ,
தமாந்தண்ணிழல் முதலியன.)

தளை :

1. மா முன் நேர் (நேர் முன் நேர்) வருவது நேரொன்றாசிரியத்தளை

2. விள முன் நிரை (நிரை முன் நிரை) வருவது நிரையொன்றாசிரியத் தளை.

3. மாமுன் நிரையும் (நேர் முன் நிரையும்), விள முன் நேரும் (நிரை முன் நேரும்) வருவன இயற்சீர் வெண்டளையாம்.

4. காய் முன் நேர் (மூவசைச்சீரில் நேர் முன் நேர்) வருவது வெண்சீர் வெண்டளையாம்.

5. காய் முன் நிரை (மூவசைச் சீரில் நேர் முன் நிரை) வருவது கலித் தளை.

6. கனி முன் நிரை (மூவசைச் சீரில் நிரைமுன் நிரை) வருவது ஒன்றிய வஞ்சித்தளையாம்.

7. கனிமுன் நேர் (மூவசைச் சீரில் நிரைமுன் நேர்) வருவது ஒன்றா வஞ்சித்தளையாம்.

உங்களுடைய செய்யுட் பாடப்பகுதியில் சீர்கள் எவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளன என்பதை நன்கு கருத்தில் இருத்திக் கொள்ளுங்கள்.

தளைகூறுதல் :

" ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்கம்
உயிரினு மோம்பப் படும்."

ஒழுக்கம்	விழுப்பந்	தரலா	னொழுக்கம்
புளிமா	புளிமா	புளிமா	புளிமா
(நிரைநேர்)	(நிரைநேர்)	(நிரைநேர்)	(நிரைநேர்)
உயிரினு	மோம்பப்	படும்.	
கருவிளம்	தேமா	மலர்.	
(நிரை நிரை)	(நேர் நேர்)	(நிரை)	

ஒழுக்கம் விழுப்பம் :	மாமுன் நிரை வந்தது ;	இயற்சீர் வெண்டளை
விழுப்பந் தரலான் :	,,	,,
தரலா னொழுக்கம் :	,,	,,
னொழுக்கம் உயிரினும் :	,,	,,
உயிரினு மோம்பப் :	விளமுன் நேர் வந்தது :	,,
மோம்பப் படும் :	மாமுன் நிரைவந்தது :	,,

" அற்றைத்	திங்கள்
தேமா	தேமா
(நேர் நேர்)	(நேர் நேர்)
வென்றெறி	முரசின்
கூவிளம்	புளிமா
(நேர் நிரை)	(நிரை நேர்)

அற்றைத் திங்கள் : மாமுன் நேர் : நேரொன்றாசிரியத்தளை.

வென்றெறி முரசின் : விளமுன் நிரை : நிரையொன்றாசிரியத்தளை

ழக்கத்தி ரி மாங்காய் ரை நேர் நேர்)	னெய்துவர் கூவிளம் (நேர் நிரை)	காய்முன் நேர் வந்தது ; வெண்சீர் வெண்டளை.
ண்டேய்த்த மாங்காய் ர் நேர் நேர்)	புகழினான் கருவிளம் (நிரை நிரை)	காய்முன் நிரைவந்தது ; கலித்தளை
னைக்கம்பலை ரிமாங்கனி ரை நேர் நிரை)	மனைச்சிலம்பவும் கருவிளங்கனி (நிரை நிரை நிரை)	கனிமுன் நிரை வந்தது ; ஒன்றிய வஞ்சித்தளை.
ந்தாநிலம் மாங்கனி ர் நேர் நிரை)	வந்தசைதர கூவிளங்கனி (நேர் நிரை நிரை)	கனிமுன் நேர் வந்தது ; ஒன்றா வஞ்சித்தளை.

அலகூட்டல்

முதல் சீர்	இரண்டாம் சீர்	மூன்றும் சீர்	நான்காம் சீர்
ஈ த	லிசை பட	வாழ் த	லது வல் ல
நேர் நேர்	நிரை நிரை	நேர் நேர்	நிரை நேர் நேர்
தே மா	**கரு விளம்**	**தே மா**	**புளிமாங்காய்**
தூ திய	மில் லை	யுயிர்க்கு.	
நேர் நிரை	நேர் நேர்	நிரைபு.	
கூ விளம்	**தே மா**	**பிறப்பு.**	[கொன்
உரைப் பா	ருரைப் பவை	யெல் லா	மிரப் பார்க்
நிரை நேர்	நிரை நிரை	நேர் நேர்	நிரை நேர் நேர்
புளி மா	**கரு விளம்**	**தே மா**	**புளி மாங்காய்**
றீ வார் மே	னிற் கும்	புகழ்.	
நேர் நேர் நேர்	நேர் நேர்	நிரை.	
தே மாங் காய்	**தே மா**	**மலர்.**	
ஒன் றா	வுல கத்	துயர்ந் த	புக ழல் லாற்
நேர் நேர்	நிரை நேர்	நிரை நேர்	நிரை நேர் நேர்
தே மா	**புளி மா**	**புளி மா**	**புளி மாங்காய்**
பொன் றா து	நிற்பதொன்	றில்.	
நேர் நேர் நேர்	நேர் நிரை	நேர்.	
தே மாங் காய்	**கூ விளம்**	**நாள்.**	
நில வரை	நீள் புக	ழாற் றிற்	புல வரைப்
நிரை நிரை	நேர் நிரை	நேர் நேர்	நிரை நிரை
கரு விளம்	**கூ விளம்**	**தேமா**	**கரு விளம்**
போற் றா து	புத் தே	ளுலகு.	
நேர் நேர் நேர்	நேர் நேர்	நிரை.	
தே மாங் காய்	**தே மா**	**பிறப்பு.**	
நத் தம் போற்	கேடு	முள தா குஞ்	சாக் கா டும்
நேர் நேர் நேர்	நேர் நேர்	நிரை நேர் நேர்	நேர் நேர் நேர்
தே மாங் காய்	**தே மா**	**புளி மாங்காய்**	**தே மாங் காய்**
வித் தகர்க்	கல் லா	லரிது.	
நேர் நிரை	நேர் நேர்	நிரைபு.	
கூ விளம்	**தே மா**	**பிறப்பு.**	

தளை கூறுதல்

சிறப்புப் பகுதியில் உள்ள புறநானூற்றுப் பகுதியில் இரண்டாம் பாடலின் முதல் மூன்று வரிகள்

முதல் சீர்		இரண்டாம் சீர்	மூன்றும் சீர்	நான்க
வெ. வெ. த.		நே. ஆ. த.	இ. வெ. த.	
நா என் று	போ	கிப் புள்	ளிடை தட்	பப்
நேர் நேர் நேர்	நேர்	நேர் நேர்	நிரை நேர்	நே
தே மாங் காய்	தே	மா கூ	விளம் தே	மா
வெ. வெ. த.		இ. வெ. த.	க. த.	
பத னன் று	புக்	குத் திற	னன் று மொழி	யினு
நிரை நேர் நேர்	நேர்	நேர் நிரை	நேர் நேர் நிரை	நிரை
புளி மாங்காய்	தே	மா புளி	மாங் காய் கரு	விள
இ. வெ. த.		இ. வெ. த.	இ. வெ. த.	
வறி து	பெயர்	குந ரல்	லர் நெறி	கொ
நிரை நேர்	நிரை	நிரை நேர்	நேர் நிரை	நிரை
புளி மா	கரு	விளம் தே	மா கரு	விள

இரண்டாவது அடியின் ஈற்றில் உள்ள 'மொழியினும்' எ சீரையும், 'வறிது' என்னும் சீரையும் இணைத்துப் பார்ப்போம்.

நி. ஆ. த.		
மொழி யினும்	வறி	து
நிரை நிரை	நிரை	நேர்
கரு விளம்	புளி	மா

குறிப்பு விளக்கம்

வெ. வெ. த.	:	வெண்சீர் வெண்தளை
இ. வெ. த.	:	இயற்சீர் வெண்தளை
நே. ஆ. த.	:	நேரொன்று ஆசிரியத் தளை
நி. ஆ. த.	:	நிரையொன்று ஆசிரியத் தளை
க. த.	:	கலித்தளை

குறிப்பு: ஒன்றிய வஞ்சித்தளையும், ஒன்றாத வஞ்சித்தளையும் நிலைப் பள்ளிப்பாடல்களில் பெரும்பாலும் பயின்று வாரா.

(2) எதுகை மோனை வகைகள்

மோனை எதுகை வகைகள் யாவும் நாற்சீர்களைக்கொண்ட அடி உடைய பாக்களுக்கே கூறப்படும்.

(*i*) 1, 2 சீர்களில் மோனை, எதுகைகள் வந்தால்முறையே இணைமே இணை எதுகை எனப்படும்.

"ஊன் உண்ண அண்ணாத்தல் செய்யாது அளறு"

(ii) 1, 3 சீர்களில் மோனை, எதுகைகள் வந்தால் முறையே பொழிப்பு
னை, பொழிப்பெதுகை எனப்படும்.

(iii) 1, 2, 3 சீர்களில் மோனை, எதுகைகள் வந்தால் முறையே கூழை
னை, கூழை எதுகை எனப்படும்.

(iv) 1, 4 சீர்களில் மோனை, எதுகைகள் வந்தால் முறையே ஒரூஉ
னை, ஒரூஉ எதுகை எனப்படும்.

(v) 1, 3, 4 சீர்களில் மோனை, எதுகைகள் வந்தால் முறையே மேற்கது
ப் மோனை, மேற்கதுவாய் எதுகை எனப்படும்.

(vi) 1, 2, 4 சீர்களில் மோனை, எதுகைகள் வந்தால் முறையே கீழ்க்கது
ப் மோனை, கீழ்க்கதுவாய் எதுகை எனப்படும்.

(vii) 1, 2, 3, 4, சீர்களில் மோனை, எதுகைகள்வந்தால் முறையே முற்று
னை, முற்றெதுகை எனப்படும்.

(உ-ம்.) அணிபூண் அணிந்த யானை இயல்தேர் - இணைமோனை. வருத்த
ண்டா வாழ்கவன் றுளே - பொழிப்பு மோனை. பலநாள் பயின்று பல
டு செல்லினும் - கூழை மோனை.

கோட்டம் வழிபாடு கொண்டிருப்பாள் வாட்டருஞ்சீர். ஒரூஉ எதுகை,
ழிப்பு மோனை.

இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ - கீழ்க்கதுவாய்
னை.

காதலி கண்ட கனவு கருநெடுங்கண் — முற்று மோனை.

குறிப்பு : இவ்வாறே பிறவும் காண்க.

(3) கட்டளைக் கலித்துறை, தாழிசைகளின் இலக்கணம்.

டளைக் கலித்துறை :

கட்டளைக் கலித்துறை ஐந்து சீர்களைக்கொண்ட நான்கு அடிகளைப்
ற்று வரும். அடிதோறும் முதற்சீர் நான்கும் இயற்சீர் வெண்டளையாக
னும், வெண்சீர் வெண்டளையாகவேனும் வரும். இறுதிச் சீர் விளங்காய்ச்
களில் ஒன்றாக வரும். நேரசையில் தொடங்கும் அடி மெய்யெழுத்துக்களை
கிப் பதினாறு எழுத்துக்களைக் கொண்டிருத்தல் வேண்டும். நிரையசையில்
டங்கும் அடி மெய்யெழுத்துக்களை நீக்கிப் பதினேழு எழுத்துக்களை
டையதாக இருக்கும். 1, 3, 5-ஆம் சீர்களில் மோனை வருவது சிறந்ததாம்.

"பாரணங் கோதிருப் பாற்கட லீன்றபங் கேருகத்தின்
ஓரணங் கோவெற் புறையணங் கோவுயர் பாவலர்க்கு
வாரணங் கோடி தருந்தஞ்சை வாணன்தென் மாறைவையை
நீரணங் கோநெஞ்ச மேதனி யேயிங்கு நின்றவரே."

இந்தக் கட்டளைக் கலித்துறைப் பாடல் நேரசையில் தொடங்குகிறது.
னவே, ஒவ்வோர் அடியிலும் பதினாறு எழுத்துக்கள் அமைந்துள்ளன.
ண்ணிப் பார்த்து அறிக.)

"புயலே சுமந்து பிறையே அணிந்து பொருவிலுடன்
கயலே மணந்த கமல மலர்ந்தொரு கற்பகத்தின்
அயலே பசும்பொற் கொடிநின்ற தால்வெள்ளை யன்னஞ்செந்நெல்
வயலே தடம்பொய்கை சூழ்தஞ்சை வாணன் மலையத்திலே."

இந்தக் கட்டளைக் கலித்துறைப்பாடல் நிரையசையில் தொடங்குகி எனவே, ஒவ்வோர் அடியிலும் பதினேழு எழுத்துக்கள் அமைந்துள் (எண்ணிப் பார்த்து அறிக.)

தாழம்பட்ட இசையுடன் அமைவது **தாழிசை** ஆகும். கலிப்பா உறுப்புக்களுள் இதுவும் ஒன்று. உங்களுடைய பொதுப் பகுதியில் உ கலிங்கத்துப் பரணிப் பாடலாகிய “விருந்தினரும் வறியவரும் நெ யுண்ண மேன்மேலும் முகமலரும் மேலோர் போலப், பருந்தினமும் கழு மும் தாமே யுண்ணப் பதுமமுகம் மலர்ந்தாரைப் பார்மின் பார்மி என்பது தாழிசையாகும்.

(4) பாவினங்களின் பொது இலக்கணம்

வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா எனப் பாக்கள் நா வகைப்படும். ஒவ்வொரு பாவிற்கும் உரிய இலக்கணங்கள் வரையறு பட்டுள்ளன. அவ்விலக்கணங்களினின்றும் சிறிது வழுவி, அவ்வப் பாக் ஒத்துவருஞ் செய்யுட்கள் பலவுள. அவற்றைப் **‘பாவினம்’** என யாப்பிலக்கண ஆசிரியர்கள். பாவினம் மூவகைப்படும். அவை **தாழி துறை, விருத்தம்** என்பன. நால்வகைப் பாக்களுள் ஒவ்வொன்றி இம்மூன்று இனங்களும் உள்ளன. அவற்றுள் சில செய்யுட் உங்கட்குப் பாடமாக வந்துள்ளன. உதாரணமாக உங்களுடைய வி புத்தூரார் பாரதப் பாடல்கள் யாவும் ஆசிரிய விருத்தங்கள்.

VI. அணி

(1) பிறிது மொழிதல் அணி

கவி தான் சொல்லக் கருதிய பொருளை நேரே கூறாமல் அதனோடு வேறொன்றைக் கூறித் தான் சொல்லக் கருதியதை நிலை நிறுத்தல் **பி மொழிதல் அணி** ஆகும். அஃதாவது உவமானத்தைக் கூறி உவமேயத் பெற வைத்தல்.

(உ-ம்.) பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்.

எளிய மயிலிறகே பலவாகச் சேர்ந்தால் வண்டியின் அச்சினை மு கும் என்று கூறி, அதன் மூலமாக எளியவர் பலர் சேர்ந்தால் வலியவ வெல்லலாம் என்பதைப் பெற வைத்தமை காண்க.

(2) கருத்துடை அடைமொழியணி

கவி தான் சொல்லக்கருதும் பொருளைக் குறிப்பாக விளக்கத்தக்க மொழிகளைப் பொருளுடன் சேர்த்துக் கூறுவது **கருத்துடை அ மொழி அணி** ஆகும்.

உங்களுடைய வில்லிபாரதப் பகுதியின் இறுதிப் பாடலின் ஈற்றடி பாருங்கள்.

“தறுகணர் அலர்க்கும் தறுகண னவர்க்கும்
தண்ணளி நிறைந்தசெங் கண்ணன்”

என்பது அந்த இறுதியடி. இத்தொடர் கண்ணனைக் குறிக்கும். ஈவ் கண்ணனைக் குறிக்க அமைந்த தொடர் கருத்தோடு கூடிய சிறப்பி

கூறுகின்றது. வலியவர்க்கும், மெலியவர்க்கும் அவன் அருள் காட்டுபவன். அவ்வாறே குந்திதேவிக்கும், பாண்டவர்கட்கும் அருள் காட்டுகின்றான் என்னும் கருத்தினை இச்சொற்றொடர் கொண்டுள்ளது. இவ்வாறு கவி, தான் சொல்லக் கருதும் பொருளைக் குறிப்பாக விளக்கத்தக்க அடைமொழிகளைப் பொருளுடன் சேர்த்திருப்பதால் இது கருத்துடை அடைமொழி அணி ஆயிற்று.

VII. பொருளிலக்கணம்

(1) அகப்பொருள் : முதல், கரு, உரிப்பொருள் இவை எனல்

அகம்—மனம். மனத்தால் உணரத்தக்கதும், புறத்தார்க்கு இன்ன தன்மையை உடையதென்று கூற இயலாததுமாகிய இன்பத்தைப் பற்றிக் கூறுவது அகப்பொருள் ஆகும். இது தலைவன் தலைவியிடையே தோன்றுவதாகும்.

முதற்பொருள் :

நிலமும் பொழுதும் முதற்பொருள் எனப்படும். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என நிலம் ஐவகைப்படும். மலையும், மலைசார்ந்த இடமும் குறிஞ்சி. காடும் காடுசார்ந்த இடமும் முல்லை. வயலும், வயல்சார்ந்த இடமும் மருதம். கடலும், கடல்சார்ந்த இடமும் நெய்தல். முல்லையும் குறிஞ்சியும் சூரியனுடைய வெப்பத்தால் தம் நிலைமாறி, வாழும் உயிர்கட்குத் துன்பம் தரின் பாலை எனப்படும்.

பொழுது இருவகைப்படும். அவை பெரும்பொழுதும், சிறுபொழுதும் ஆம். இளவேனில், முதுவேனில், கார், கூதிர், முன்பனி, பின்பனி என்பன பெரும்பொழுதுகள். வைகறை, காலை, நண்பகல், மாலை, யாமம் என்பன சிறுபொழுதுகள். ஒவ்வொரு நிலத்திற்கும் சிறப்பாகப் பெரும்பொழுதும், சிறுபொழுதும் உள.

கருப்பொருள் :

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய நிலங்களில் உள்ள பொருள்களும், அவற்றோடு தொடர்புடைய செய்திகளும் கருப்பொருள் எனப்படும். தெய்வம், உணவு, மக்கள், தொழில், யாழ், விலங்கு, பறவை முதலியன ஒவ்வொரு நிலத்திற்கும் தனித்தனியாகக் கூறப்படும். எடுத்துக்காட்டாக, குறிஞ்சிக்கு முருகனும், முல்லைக்குத் திருமாலும், மருதத்திற்கு இந்திரனும், நெய்தலுக்கு வருணனும், பாலைக்குக் காடுகிழாளும் தெய்வங்கள் எனப்படும். இவை யாவும் கருப்பொருள்களாம்.

உரிப்பொருள் :

ஐவகை நிலங்களுக்கும் தனித்தனியே ஒழுக்கங்கள் கூறப்படும். அவை உரிப்பொருள் எனப்படும்.

குறிஞ்சி : தலைவனும் தலைவியும் ஒன்றுபடும் ஒழுக்கம்.
முல்லை : தலைவனைப் பிரிந்த தலைவி ஆற்றியிருக்கும் ஒழுக்கம்.
மருதம் : தலைவனுடன் தலைவி பிணங்கும் ஒழுக்கம்.
நெய்தல் : தலைவனைப் பிரிந்த தலைவி இரங்கும் ஒழுக்கம்.
பாலை : தலைவியைத் தலைவன் பிரியும் ஒழுக்கம்.

முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியவைபற்றிய செய்திகளையும், அகப்பொருள் இலக்கணத்தையும் நாற்கவி ராச நம்பியகப்பொருள், இறையனரகப் பொருள், தொல்காப்பியப் பொருளதிகாரம் ஆகிய இலக்கண நூல்களில் காண்க.

(2) புறப்பொருள்: திணைகள்

புறத்தார்க்குப் புலனுவதோர் தன்மையை உடைய பொருள்களைப்பற்றிக் கூறும் இலக்கணமே புறப்பொருள். அறம்பற்றியும், பொருள்பற்றியும் கூறுவனவற்றைப் புறம் என்னலாம்.

புறப்பொருள் வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை தும்பை, வாகை, பாடாண், பொதுவியல் முதலிய திணைகளை (பிரிவுகளை) உடையது.

வெட்சி: பகைவருடைய பசுக் கூட்டங்களைக் கவர்தல்.

கரந்தை: பகைவர் கைப்பற்றிய பசுக் கூட்டங்களை மீட்டல்.

வஞ்சி: பகைவரது நாட்டைக் கவர எண்ணிப் படையெடுத்தல்.

காஞ்சி: தன் நாட்டைக் கவர எண்ணிப் படையெடுத்து வந்த பகைவனை எதிர்த்து நிற்றல். பல்வேறு நிலையாமைகளை உலக மக்களுக்கு உயர்ந்தோர் அறிவுறுத்தல் என்று காஞ்சித் திணைக்குத் தொல்காப்பியர் இலக்கணம் கூறியுள்ளார்.

நொச்சி: பகைவரால் முற்றுகையிடப்பட்ட மதிலின் உட்புறத்தார் போர் செய்தல்.

உழிஞை: பகைவரது மதிலை முற்றுகையிட்டுப் போர் செய்தல்.

தும்பை: பரந்த போர்க்களத்தில் இருவர் படைகளும் நேர் நின்று போர் செய்தல்.

வாகை: வெற்றி பெறுதல்.

பாடாண்: பாடப்படும் ஆண்மகனுடைய ஆண்மை, வீரம் முதலியவற்றைப் புகழ்ந்து பாடுதல்.

பொதுவியல்: ஏனைய திணைகளிற் கூறப்படாதனவும், பொதுவாகவும் உள்ளவற்றைக் கூறுதல்.

வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை என்பவை பூக்களைக் குறிக்கும். அவை அவ்வந் நிகழ்ச்சிக்குரிய அடையாளப் பூக்களாக இருந்தன. எனவே, பூக்களின் பெயர்களாலேயே அந்நிகழ்ச்சிகள் குறிப்பிடப்படுகின்றன.

உரைநடைப் பகுதி

1. இறையனுர் அகப்பொருள் உரை

முச்சங்க வரலாறு

முன்னுரை

(இறையனுர் என்னும் சொல் சிவபிரானைக் குறிக்கும். இறையனுர் அகப் பொருள் என்பது அகப்பொருள் இலக்கண நூல் ஆகும். இந்நூல் 60 சூத்திரங்களைக் கொண்டது. இதனைச் சிவபிரான் பாடினுர் என்றும், இந்நூலுக்கு நக்கீரர் எழுதிய உரையே சிறந்ததாக விளங்கியது என்றும் சொல்லப் படுகிறது. இந்நூல் எழுந்த வரலாறு பற்றியும், உரையமைந்த வரலாறு பற்றியும் ஐயங்கள் பல உள்ளன.)

பாடச் சுருக்கம்

பாண்டியர்கள் தமிழை வளர்த்தனர். வெவ்வேறு காலங்களில் மூன்று சங்கங்கள் நடைபெற்றன. சங்கப் புலவர்களை ஆதரித்தவர்கள் பாண்டியர் கள். தலைச்சங்கம் மதுரையிலும், இடைச்சங்கம் கவாடபுரத்திலும் நடை பெற்றன. அவ்விரு நகரங்களும் கடலால் கவரப் பெற்றன. வடமதுரை எனப்படும் தற்கால மதுரையில் கடைச்சங்கம் நடந்து வந்தது. அகத்தியர் தலைச்சங்க காலத்திலும் இடைச்சங்க காலத்திலும் இருந்தார் என்றும், தொல்காப்பியர் இடைச்சங்க காலத்தில் இருந்தார் என்றும் தெரிகிறது. தலைச்சங்க நூல் அகத்தியம். இடைச்சங்க நூல் தொல்காப்பியம். கடைச் சங்க நூல் எட்டுத்தொகை முதலிய நூல்கள். ஒவ்வொரு சங்கத்திலும் புலவர்கள் பலர் இருந்தனர் என்றும், நூல்கள் பல இயற்றினர் என்றும் சொல்லப்படுகிறது.

அருஞ்சொல் விளக்கம்

பக்கம் 15. இரீஇயினுர் - இருத்தியவர். **திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் :** பகைவர்களுடைய மூன்று கோட்டைகளை எரித்த, விரித்த சடை யினையுடைய கடவுளாகிய சிவபிரான்; இஃது ஒரு புலவரின் பெயராக இருத்தலும் கூடும். **குன்று :** கிரவுஞ்சம் என்னும் மலை. **எறிந்த** - அழித்த. **முருகவேள் :** முருகக்கடவுள்; இதுவும் ஒரு புலவரின் பெயராக இருத்தல் கூடும். **நிதி** - செல்வம். **கிழவன்** - உரியவன். **நிதியின் கிழவன்** - செல்வத்திற்கு உரிய குபேரன் ; இஃது ஒரு புலவரது பெயராக இருத்தல் கூடும். **எத்துணையோ** - எவ்வளவோ. **பரிபாடல்** - ஒருவகைப்பாடல்; இப்பெயருடைய நூல் ஒன்று உள்ளது ; அஃது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. **கவியரங்கேறினுர் :** புலவர்களாக இருந்து பாடல்களைப்பாடியவர் கள். **மதுரை :** கடலால் கொள்ளப்பட்ட தென்மதுரை. **அகத்தியம் :** அகத்தியனுரால் இயற்றப்பெற்ற இலக்கண நூல். **கலி :** ஒருவகைப் பாடல்; கலிப்பாடல்களால் அமைந்த நூலே கலித்தொகை ஆகும். **தொல்காப்பியம் :** தொல்காப்பியனுரால் இயற்றப்பெற்ற இலக்கண நூல் ; இன்று உள்ள நூல் களில் மிகத் தொன்மைவாய்ந்தது இந்நூல். **கபாடபுரம் :** இடைச்சங்கம் நடந்துவந்த இடம். இதுவும் கடலால் கொள்ளப்பட்டது. தற்காலத் தமிழகத்

திற்குத் தெற்கே கடலில் இந்நகரம் அமைந்திருந்தது என்பர். அவர் உள்ளிட்டு - அவரையும் சேர்த்து.

பக்கம் 16. நெடுந்தொகை நானூறு: அகநானூறு. பதிற்றுப்பத்து: (பத்து+பத்து=பதிற்றுப்பத்து) சேர மன்னர்களுடைய வரலாற்றைப் பற்றிக் கூறும் நூல் இது. புறநானூறு: புறப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்ட நூல். அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை, ஐங்குறுநூறு, கலித்தொகை ஆகிய நூல்கள் அகப் பொருள்பற்றிய நூல்கள். பரிபாடல்: முருகன், திருமால் ஆகிய கடவுளரைப்பற்றியும், வையையாற்றைப் பற்றியும் பாடப்பெற்ற பாடல்கள் இந்நூலின்கண் உள்ளன. ஈண்டுக் குறிப்பிடப் பெற்ற எட்டு நூல்களும் எட்டுத்தொகை நூல்கள் எனப் படும். போந்திருந்த - வந்திருந்த. உத்தர மதுரை: வடமதுரை; தற்பொழுது உள்ள மதுரை இம்மதுரை. கடல் கொள்ளப்பட்ட தமிழ் நாட்டிற்கு வடக்கே இருந்தமையால் இப்பெயரைப் பெற்றது.

நல்லொழுக்கப் பயிற்சி

பாண்டியர்கள் முச்சங்கங்களை நிறுவினர்; தமிழ்ப் புலவர்களை ஆதரித்தனர்; தமிழ் நூல்களை அவர்கள் இயற்றுமாறு செய்தனர்; தமிழுக்கு ஆக்கம் தேடித் தந்தனர். தமிழ் நாட்டு மாணவச் செல்வர்களே! நீங்கள் யாது செய்யப் போகின்றீர்கள்? தமிழ் மொழிக்கு ஆக்கம் தேடுதல் வேண்டாமா? தமிழன் பெருமையைப் பிறநாடுகள் அறியுமாறு செய்ய முற்படவேண்டாமா? இன்றே முற்படுங்கள்; முதற்கண் தமிழ் மொழியைப் பிழையறப் பயிலுங்கள்; தமிழ் இலக்கிய நூல்களைச் சுவைத்துப் படியுங்கள்; தமிழ்ச் சுவையைப் பிறர்க்கு உணர்த்துங்கள்; தமிழரின் பண்பாடுகளையும், பழக்க வழக்கங்களையும் உலகுக்கு எடுத்து உணர்த்துங்கள்; தற்காலத்தே உலகின்கண் நிலவும் சிக்கல்களைத் தமிழ்ப் பண்பாட்டினுல் தீர்க்கமுடியும் என்பதனைச் செயல் முறையில் காட்டுங்கள்.

2. ஞானியார் சுவாமிகள்

பாடச் சுருக்கம்

சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் என்பது ஞானியாரின் முழுப்பெயராகும். திருக்கோவலூர் ஆதீனஞானியார் மடத்தின் தலைவராக இவர் இருந்தார். திருப்பாதிரிப்புலியூரிலேயே அவர் வாழ்ந்திருந்தார்.

ஞானியாருடைய கலையொளி திரு. வி. க. அவர்களையும், ஏனைய புலவர்களையும் கவர்ந்தது. திரு. வி. க. அவர்கள் ஞானியாரைப் பெரிதும் புகழ்ந்துள்ளார்.

ஞானியார் முருகனை வழிபட்டவர்; வெண்ணீறு பூசிய நெற்றியினையுடையவர்; சண்முகா, சண்முகா என்று சொல்லிக் கொண்டிருப்பவர். மாணவருக்கு அவர் ஒரு நூலைப் பாடஞ்சொல்லுங்கால் அந்நூலினை இயற்றிய ஆசிரியரே எதிரில் வந்து பாடஞ்சொல்லுகின்றாரோ என்று நினைக்குமாறு இருக்கும். அவரிடம் பாடங்கேட்டும், அவருடைய சொற்பொழிவுகளைக் கேட்டும் பயனடைந்தவர் பலர்.

ஞானியார் இலௌகிகத்தில் வல்லவர். பல்லக்கினை ஊர்கின்ற வழக்கம் இவரிடம் இருந்தது. சைவசமயத்தில் இவருக்குப் பெரும்பற்று இருந்தது. தமிழ் நூல்களைக் கற்பிப்பதில் இவர் பேரார்வம் கொண்டிருந்தார். சங்க நூல்களையும், சைவசமய நூல்களையும் கற்பிப்பதில் இவர் இணையற்றவர். தென்னாப்பிரிக்காவிலிருந்து தமக்கு அழைப்பு வந்தபொழுது, இவர் அதனை ஏற்றுக்கொண்டாரல்லர். இதிலிருந்து இவர், தம் கொள்கையை நழுவ விடாமல் இருக்க விரும்பினர் என்று தெரிகிறது.

அருஞ்சொல் விளக்கம்

பக்கம் 17. **அறப்பள்ளி** - தருமசாலை. **உறைவிடம்** - தங்குமிடம். **ஈர்த்தனவா** - இழுத்தனவா. **பின்னை** - பிறகு. **தென்மொழி** - தமிழ். **புலமை** - அறிவு. **நாவன்மை** - பேச்சுத்திறன். **நாவலர்** - பேச்சிலே வல்லவர். **கிளாட்ஸ்டன், சுரேந்திரர்** : பேச்சில் வல்ல பெரியோர்கள். **பொன்விழா** - நிலையம் தொடங்கிய ஐம்பதாவது ஆண்டு கொண்டாடப்படும் விழா. **அகழ்ந்து** - தோண்டி எடுத்து. **சேவடி** - சிவந்த அடி. **வருடி** - தடவி. **ஈரம்** - அன்பு. **தண்மை** - குளிர்ச்சி. **செவ்விய** - நேரான. **வெண்ணீறு** - வெண்மையான விபூதி. **துதைதல்** - பூசப்பெற்று விளங்குதல். **குழை** - குண்டலம். **பிறங்கும்** - விளங்குகின்ற.

பக்கம் 18. **கச்சியப்பர்** : கந்தபுராண ஆசிரியர். **சேக்கிழார்** : திருத்தொண்டர்புராண ஆசிரியர். **வியாசர்** : வடமொழியில் பாரதத்தை இயற்றியவர். **நீலகண்டர்** : சங்கரர் அருளிய மகா பாஷ்யத்திற்குவிளக்கம் எழுதியவர். **சிவஞான முனிவர்**: சைவ சமய நூல்களை இயற்றியவர்; சிறந்த இலக்கண அறிஞர். **அரசுவா** - அரசு உவா: பட்டத்து யானை. **கோவல் அடிகள்**- ஞானியார் சுவாமிகள். **இடையீடு** - இடைவிடுதல்; தடைபடுதல். **இழிந்து** - இறங்கி. **போந்த** - வந்த. **அணி** - அழகு. **இலௌகிகம்** - உலகியல்.

பக்கம் 19. **ஆணவம்** - கர்வம், ஒருமலம். **சிவிகை** - பல்லக்கு. **இன்ன** - இத்தகைய. **தகைத்து** - தடுத்து. **விழைந்தன** - விரும்பின.

நல்லொழுக்கப் பயிற்சி

ஞானியார் சுவாமிகளுடைய நாவன்மை திரு. வி. க. அவர்களைக் கவர்ந்தது. பகைவரும் விரும்புமாறு பேசுதலே நாவன்மை என்று வள்ளுவர் கூறியுள்ளார். அத்தகைய பேச்சுவன்மையை நீங்கள் பெறுதல் வேண்டும். பேசிப் பேசிப் பழகினுல்தான் பேச்சுவன்மை அமையும். உங்கள் பள்ளிக் கழகக் கூட்டங்களில் வாய்ப்புக் கிடைக்கும் பொழுதெல்லாம் நீங்கள் பேசுதல்வேண்டும். பேச்சிற்கு உரிய தலைப்புக்களையும், செய்திகளையும் ஆசிரியரை அடுத்துக் கேட்டறியுங்கள். பேச்சுப் பயிற்சி பெறுவதற்கு ஏற்ற சமயம் மாணவப் பருவமேயாகும். மாணவ நிலையைக் கடந்துவிட்டால், பேச்சுப் பயிற்சி பெறுவதற்கு வாய்ப்புக்கள் கிடைத்தல் அரிது. எனவே, 'காற்றுள்ளபொழுதே தூற்றிக் கொள்க' என்னும் பழமொழிக்கு இணங்க, இப்பொழுதே பேசிப் பழகுங்கள்.

3. சிவ வழிபாட்டின் தொன்மை

பாடச் சுருக்கம்

சிவ வழிபாடும், சக்தி வழிபாடும் இந்து சமய வாழ்க்கையில் விளங்கி யிருந்தன. ஹாரப்பா, மொஹொஞ்சதாரோ என்னும் இடங்களில் நிகழ்ந்த புதைபொருள் ஆராய்ச்சிகளிலிருந்து அவ்விடங்களில் வாழ்ந்த மக்கள் சிவ பிரானையே வழிபட்டனர் என்று ஒருவாறு கூறலாம்.

சிவம் என்னும் சொல்லில் உள்ள சகரமெய் தமிழ் ஓசையே ஆகும். கடல் கவர்ந்த பழந்தமிழகத்தில் வாழ்ந்த மக்கள் தம் நெற்றியில் தசைத் திரள் உள்ளவர்களாயிருந்தனர். முன்னோரை வழிபடும் முறை தமிழ் மக்க ளிடம் அமைந்திருந்தது. அதுவே மூன்று கண்களையுடைய சிவபிரானை வழி படும் வழக்கமாக மாறியிருத்தல் கூடும். மொஹொஞ்சதாரோ முதலிய புதை பட்ட நகரங்களில் கண்டுபிடிக்கப் பெற்ற சிலைகள் சில முக்கண்ணும், மூன்று முகமுமுடைய சிவ வடிவமும் பெற்றுள்ளன; சில காளை வடிவமாக உள்ளன. காளை சிவபிரானது ஊர்தியாகும்.

சிவம் என்னும் சொல் தமிழ்ச்சொல்லே என்பர் டாக்டர் கிரையர்ஸன். அச்சொல் செந்நிறம், நேர்மை, நன்மை, மங்களம் ஆகிய பண்புகளைக் குறிக் கும். நான்கு வேதங்களும் சிவபிரானே முழுமுதற் கடவுள் என்று கூறு கின்றன. வால்மீகி ராமாயணமும், வியாச பாரதமும் சிவபிரானது பெருமை யையும், உயர்வையும் கூறுகின்றன. தமிழ் நாட்டுத் தமிழ்ப் பெருங் காப்பி யங்களும் சிவபிரானது உயர்வைக் குறிப்பிடுகின்றன. எனவே, சிவ வழி பாடு மிகத்தொன்மை வாய்ந்தது என்பதனை நாம் உணரலாம்.

அருஞ்சொல் விளக்கம்

பக்கம் 20. **தொன்மை** - பழைமை. **ஆற்றல்** - வலிமை, திறமை. **பிண்டம்** - முழுப்பொருள். **டாக்டர். ஜி. யூ. போப்:** இவர் தமிழ் கற்ற ஆங்கில அறிஞர். தமிழின் பெருமை வெளி நாடுகளில் பரவுவதற்குக் காரண மாக இருந்தவர். **நிலவியது** - விளங்கியது.

பக்கம் 21. **செப்பினர்** - கூறினர். **பரவை, புணரி, ஆர்கலி, முந்நீர்:** இவை கடலுக்கு அமைந்த வேறு பெயர்கள். **கடற்செலவு** - கடலிற் செல்லு தல். **தேற்றம்** - தெளிவு. **கன்னிமுனை** - கன்னியாகுமரிமுனை. **இவண்** - இவ்விடத்தில். **பண்டை** - பழைய.

பக்கம் 22. **முக்கண் செல்வர்** - மூன்று கண்களையுடைய சிவபிரான். **நகர்** - ஈண்டுக் கோயில். **பயின்று** - கலந்து. **ஊர்தி** - வாகனம். **உருத் திரன்** - செந்நிறம் உடைய சிவன்.

பக்கம் 23. **நஞ்சு** - விடம். **சங்காரம்** - அழித்தல். **பகர்தல்** - சொல்லுதல். **பாசுபதம்** - சிவபிரானது மந்திரத்தை ஏற்ற அம்பு.

நல்லொழுக்கப் பயிற்சி

சிவ வழிபாடு மிகவும் தொன்மை வாய்ந்தது என்று படித்தீர்கள். சிவனைக் குறிக்கும் 'உருத்திரன்' என்னுஞ் சொல்லுக்கு 'எல்லா உயிர்களுக் கும் இரங்குபவன்' எனபது பொருளாகும். மேலும், 'அன்பே சிவம்' என்பர் அறிஞர். எனவே, பழந்தமிழர் அன்பையும், அருளையும் பரப்புவதே வழி பாடாகக் கொண்டனர் என்பதை நாம் உணரலாம். தொடர்பு உடையவர் களிடத்தில் உண்டாகும் காதல் அன்பாகும். தொடர்பு இல்லாதவர்களிடத் தில் உண்டாகும் கருணை அருளாகும். ஆகவே, அன்பு கொள்ளுங்கள்; அருள் காட்டுங்கள். அத்தகைய பண்புகளாலேயே தற்காலப் பூசல்களை அகற்ற முடியும்.

4. தமிழ் வேந்தரின் இமயப் படையெடுப்பு

பாரத நாட்டின் தென்பகுதி தமிழகம் என்று பழங்காலத்திலேயே வழங்கப்பட்டது. அசோகர் முதலிய பேரரசர்களும் பெருமதிப்புத் தரத் தக்க வகையில் தமிழ் நாடு சிறப்புற்று இருந்தது.

வடநாட்டு ஆரிய மன்னரை வென்று இமய நெற்றியில் வில்லினைப் பொறித்து, இமயம் முதல் குமரி வரையில் தனது ஆணையைப் பரப்பியவன் இமய வரம்பன் நெடுஞ் சேரலாதன் ஆவான். கரிகாலனின் இமயப் படையெடுப்பைப் பற்றியும், பாண்டிய மன்னரின் இமயப் படையெடுப்பைப் பற்றியும் முறையே கலிங்கத்துப் பரணியும், புராணங்களும் புகழ்கின்றன. தமிழ் நாட்டு வேந்தரின் இமயப் படையெடுப்புக்கு ஏற்ற சரித்திரச் சான்றுகள் இல்லையென்று கூறி, இச் செய்தியைச் சரித்திர அறிஞர்கள் சிலர் மறுப்பர். ஆயின், அச் செய்தி உண்மையென்று கொள்வதற்கு உரிய சான்றுகள் பல உள்ளன. பத்தினிக் கடவுளின் படிமத்தைச் சமைப்பதற்குரிய கல்லினை இமயத்திலிருந்து கொண்டுவரச் செங்குட்டுவன் வட நாடு சென்ற செய்தியையும், திருமாவளவன் வட நாட்டு யாத்திரை செய்து வச்சிரமன்னனையும், மகத மன்னனையும் வென்று, திறைப் பொருள்கள் பல பெற்றுத் திரும்பிய செய்தியையும் இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் விளங்கக் கூறியுள்ளார்.

இமய மலையில் 'சோழர் மலைத்தொடர்', 'சோழர் கணவாய்' என்ற பெயர்களுடன் மலைத்தொடர் ஒன்றும், கணவாய் ஒன்றும் காணப்படுதலாலும், சிக்கிம், தீபெத்து மொழிகளில் 'சோல' என்னும் சொல் மலைக்கு உரிய பெயராக வழங்கி வருதலாலும் திருமாவளவன் இமயமலை வரையில் படையெடுத்திருத்தல் கூடும் என்பதனை நாம் உணரலாம். முதலாம் இராசேந்திரன் போன்ற மன்னர்கள் வடநாட்டில் தம் வெற்றியைப் பரப்பிய செய்தியை மறுப்பார் இலர். எனவே, தமிழ் வேந்தர்களின் இமயப் படையெடுப்பு நிகழ்ந்திருத்தல் இயல்வதே.

அருஞ்சொல் விளக்கம்

பக்கம் 24. மூவர் : சேரர், சோழர், பாண்டியர். **தண்** - குளிர்ந்த. **பொழில்** - சோலை. **வரைப்பு** - நிலவுலகம். **இமிழ்** - ஒலிக்கின்ற. **கூற்றுக்கள்** - சொற்கள். **இமயவரம்பன்** - இமயமலையை எல்லையாகக் கொண்டவன். **விடர்** - இச்சொல் ஆகுபெயராய் ஈண்டு மலையைக் குறிக்கும். **சிலை** - விற்பொறி. **பொறித்தல்** - எழுதுதல். **கிரி**-மலை. **இலாஞ்சனை**-பொறி. **"ஆரியர்.............கடந்தே". இதன்பொருள் :** பெரும் புகழையுடைய இமயம் முதல் தெற்கே உள்ள கன்னியாகுமரிவரை அமைந்த நாட்டினிடத்தே, ஒன்று கூடியிருந்த ஆரிய அரசர்களுள் செருக்குடையவர்களின் வலிமை கெடுமாறு வென்ற. **"ஆரியர் அலற..........பிடித்தான்" இதன்பொருள் :** ஆரியர்கள் அலறுமாறு தாக்கி, பெரும்புகழோடு விளங்கி, நெடுங்காலமாக முதிர்ந்திருக்கின்ற வடமலையாகிய இமயமலையில் வளைந்த விற்பொறியை நாட்டி, வெம்மையான சினத்தீயினையுடைய அரசர்களைச் சிறைப்படுத்தியவன். **நயன்** - இன்சொல். **யவனர் :** கிரீஸ், உரோமாபுரி, எகிப்து ஆகிய இடங்களிலிருந்து தமிழ் நாட்டுக்கு வந்த மக்களைப் பழந்தமிழர் யவனர் என்னும் பெயரினால் குறிப்பிட்டனர். **திருமாவளவன் :** கரிகாற் சோழனை இப்பெயர் குறிப்பிடும்.

பக்கம் 25. திறல் - வலிமை. **"சென்டு...........பொழுதே" : இதன்பொருள் :** கரிகாற்சோழன் வடதிசையை நோக்கிச் சென்ற ஒரு

காலத்தில் சிகரங்களையுடைய இமயமாகிய பெரிய மலையைச் செண்டினால் திருப்பி, மறுபடியும் அம்மலையை முன்பு நின்றதுபோலவே நிற்குமாறு செய்து வென்று, பாய்கின்ற புலியின் வடிவம் எழுதிய தன் கொடியை, அம் மலையின் நடுவில் பொறித்து, அம்மலையை முன்போல் திருப்பி நிலை நிறுத்திய காலத்தில். சயங்கொண்டார்: கலிங்கத்துப் பரணியைப் பாடிய ஆசிரியர். சின்னம் - அடையாளம். பருப்பதம் - மலை, ஈண்டு இமயமலை. கயல் - மீன். நவீன - புதிய. பிரமாணம் - சான்று. பொது அற - தனக்கே சிறப்பாக.

பக்கம் 26. பத்தினி - கற்புடைக் காரிகையாகிய கண்ணகிக் கடவுள். இளவல் - தம்பி. "வட ஆரிய......,.....அறிவுறுத்த": இதன் பொருள்: வட நாட்டு ஆரிய மன்னர்கள் அவ் வடநாட்டிலே ஒரு பெண்ணினை மணமுடித்துச் சேர்ந்து ஓரிடத்தில் தங்கினர். அதுகாலையில் அவர்கள் தமக்குள் ஒத்த சொல்லுடனே, இகழ்ச்சி தங்கிய சிரிப்பினை உடையராய், 'தென் திசையில் உள்ளதாகிய தமிழ் நாட்டினை ஆளும் அரசர் போரினை விரும்பிச் செருக்குற்று எழுந்து வந்து, மின்னற்கொடி படியும் இமயமலையின் உச்சியில், சிறப்புற்ற வில்லும், புலியும், மீனுமாகிய இவற்றை எழுதிய காலத்து, எம்மை ஒத்த முடியுடைப் பேரரசர் இந் நாட்டில் இருந்திலர் போலும்" என்று கூறினர். அம் மொழியை அந் நாட்டு வாழும் முனிவர் சிலர் வந்து செங்குட்டுவனுக்கு அறிவுறுத்திய காலையில்.

பக்கம் 27. அசதி ஆடி - பரிகாசம் செய்து. இலச்சினை - அடையாள முத்திரை. செரு - போர். வேட்டு - விரும்பி. புகன்று - விரும்பி.

பக்கம் 28. பண்டை - பழைய. "கொடுவரி.....கெழுநாடே"; இதன்பொருள்: வளைந்து வரியையுடைய புலி வடிவாகச் செய்யப்பட்ட நெடுந்தூரத்தில் விளங்குகின்ற, தோண்டிய இலாஞ்சனையைப் பெரிய நீரில் வாழும் மீனுடன் பொறித்த சிகரங்களையுடையன ஆகுக பிறருடைய குன்றையுடைய நாடுகள். இணை - ஒப்பு. "செருவெங்.........வாயிலம்": இதன்பொருள்: கரிகால் பெருவளவன் போரில் மிக விருப்பமுடையவனதலின் புண்ணியத் திசையாகிய வட திசையிடத்தே சென்ற அந் நாளில் 'சோம்பலில்லாத மன எழுச்சியினால் மேலும் செல்லவிரும்பும் என் விருப்பம் பின்னிட்டு ஒழியும்படி, இம்மலை பகையாகக் குறுக்கிட்டுத் தடுத்தது' என்று சினந்து, தேவர்கள் தங்கும்படியான அம் மலையின் பிடரில் தன் புலியைப் பொறித்து அப்பாற் செல்லும் கொள்கையைக் கைவிட்டு மீண்டான். அவ்வாறு திரும்பிய கரிகாலனுக்குக் கடலை அரணாக உடைய நல்ல வச்சிர நாட்டு அரசன் முத்தின் பந்தரைத் திரையாகக் கொடுத்தான். வாட் போரில் வாய்ப்புடையவனாகிய நல்ல மகத நாட்டரசன் பகைப்புறத்தில் பட்டி மண்டபம் (வித்தியா மண்டபம்) கொடுத்தான். அவந்தி நாட்டு மன்னன் மிக உயர்ந்த தொழில் முறையையுடைய வாயில் தோரணத்தினை மகிழ்ந்து கொடுத்தான். இம் மூன்று பொருள்களுடன் கரிகாலன் தன் நகரத்தை அடைந்தான். பொருத - போர் செய்த.

பக்கம் 29. வளவன் - சோழன். "இப்பால்......எனவே": இதன் பொருள்: இவ்விடத்தினின்றும் இமயமலையில் இருத்திய புலியானது அதன் மேலிடத்திலேயே நிற்பதாக. எப்பக்கத்தும் தன் போர் மேம்பட்ட கிளரும் பொருந்திய வேலையுடைய சோழன், ஒப்பில்லாத தன் சக்கரத்தை உருட்டுவோனாக என்று சொல்லி". உய்த்து - நுணுகி. உன்னதம் - உயர்வு.

பக்கம் 30. நாமம் - பெயர். நிறுவிய - நிலைநாட்டிய.

நல்லொழுக்கப் பயிற்சி

கரிகாலனும், செங்குட்டுவனும் இமயமலைவரை படையெடுத்துச் சென்று வென்றனர். இராசேந்திரன் கங்கையாறு வரையிற் சென்று வென்றான். அவர்கள் யாவரும் தமிழர் ஆற்றலை ஏனை நாடுகளில் பரப்பினர். இன்று உங்களுடைய கடமை யாது? சிந்தித்துப் பாருங்கள். தமிழ்ப் பண்பாட்டை உலகில் பரப்புவதற்கு முன்பு, தமிழ் நூல்களை நன்கு படிக்கவேண்டும். எனவே, முதற்கண் தமிழ் நூல்களையெல்லாம் ஐயந்திரிபறப் படித்தறியுங்கள்; தமிழ்ப்பண்பாட்டினை உணருங்கள்; பிறகு ஊருக்கும், நாட்டுக்கும், அயல் நாடுகளுக்கும், உலகுக்கும் உணர்த்துங்கள். அப்பொழுது தமிழ் நாடு உயரும்; தமிழ் மொழி உயரும்; தமிழ் மக்கள் உயர்வர்.

5. இளங்கோவடிகளும் இயற்கைப் புனைவும்

பாடச்சுருக்கம்

கடவுளால் இயற்றப் பெற்றனவும், தாமே அமைந்தனவும் இயற்கைப்
பாருள் எனப்படும். இயற்கைப் பொருள்களை வருணித்துக் கூறுவது
பருங்காப்பியத்தின் இலக்கணத்தில் ஒன்று. இளங்கோவடிகளார் இயற்கை
னைப் பல விடங்களில் புனைந்து அழகுபடக் கூறியுள்ளார். நாடுகாண் காதை
ல் சோலைவழியின் இயல்பையும், வயல் வழியின் இயல்பையும் கவுந்தி
டிகள் கோவலனுக்கும் கண்ணகிக்கும் கூறுமுகத்தானும், கண்ணகி கண்ட
வையை யாற்றின் அழகினைக் கூறுமுகத்தானும், காட்சிக் காதையில்
றவர்கள் செங்குட்டுவனைக் காணவந்தபொழுது கொண்டுவந்த காணிக்
கப் பொருள்களை வருணிப்பதன் வாயிலாகவும் இளங்கோவடிகள் இயற்
கக் காட்சிகளைப் புனைந்து பாடியுள்ளார்.

அருஞ்சொல் விளக்கம்

பக்கம் 31. **பாகுபாடு** - பிரிவு. **ஐம்பூதங்கள்** : நிலம், நீர், நெருப்பு,
ற்று, ஆகாயம். **வளி** - காற்று. **விசும்பு** - ஆகாயம். **நுண்ணிதின்** - நுட்
மாக. **நவீன** - புதிய. **சடம்** : உயிரற்ற பொருள். **கலன்** - ஆபரணம்.
ணை வகுப்புக்கள் : அகப்பொருள், புறப்பொருள் திணைகள். **பழனம்** -
யல்.

பக்கம் 32. **சுரம்** - பாலை நிலம். **உறையும்** - வசிக்கும். **ஓவியம்** - சித்
ரம். **காட்டுதும்** - காட்டுவோம். **தட்டை** - கிளியை ஓட்டும் கருவி : மூங்
லைக் கண்ணுக்குக் கண் உள்ளாக நறுக்கிப் பலவாகப் பிளந்து ஓசை உண்
ாக ஒன்றில் தட்டுவதொரு கருவி. **ஞாயிறு** - சூரியன். **நண்பகல்** - நடுப்
கல். **இழியும்** - இறங்கும். **குடைதல்** - முழுகுதல். **புலர்த்துதல்** - உலர்த்
தல். **புனைந்து** - அழகு செய்து. **ஐந்திணை** : குறிஞ்சி, முல்லை, மருதம்,
நய்தல், பாலை என்னும் ஐந்து திணைகள். **வனப்பு** - அழகு. **போதரும்** -
வளிப்படும். **இருசுடர்** : சூரியனும் சந்திரனும்.

பக்கம் 33. **உவப்பு** - மகிழ்ச்சி. **குடதிசை** - மேற்குத்திசை. **என்ப** -
ன்று சொல்லப்படுபவை. **நாடா** - தேடாமல் விளைவு தருகின்ற. **நாட** -

தேடினால் விளைவு தருகின்ற. தெய்வப்புலவர்: வள்ளுவர். மருங்கு பக்கம். ஒருப்பட்டு - இசைந்து.

பக்கம் 34. தண்டலை - சோலை. மலங்கு: ஒருவகை மீன். செறு வயல். கழனி - வயல். "கம்புள்....புதாவும்": இதன் பொருள் 'சம்பங் கோழியும், ஒலிக்கும் குரலையுடைய நாரையும், சிவந்த காலினையுடைய அன்னமும், பசிய காலினையுடைய கொக்கும் காட்டுக் கோழியும், நீரில் நீந்தக் கூடிய நீர்க்காக்கையும், உள்ளான், ஊரல், புள், பெருநாரை முதலிய பறவைகளும்.' நிரை - வரிசை. புரி - முறுக்கு. கவரி - சாமரம். வினைஞர் - பள்ளர் முதலியோர். களமர் - உழுகுடி வேளாளர். ஆர்க்கும் - முழங்கும். கடைசியர் - உழத்தியர். வீறு - பெருமிதம். மேழி - ஏர். அரிந்து - அறுத்து. முகவைப் பாட்டு - நெல்முகந்து கொடுக்கும்பொழுது பாடும் பாட்டு. இது பொலிபாடுதல் என்று வழங்கப் படும். கழிபேருவகை - மிகப் பெருமகிழ்ச்சி.

பக்கம் 35. மருங்குல் - இடை. கரந்து - மறைந்து. நுகர்ந்த - சுவைத்த. படிமம் - உருவம். மஞ்சு - மேகத்தின் வெள்ளிய பகுதி. தானை - சேனை. இணர் - கொத்து. தூங்குதல் - தொங்குதல். புனல் - தண்ணீர். எக்கர் - மணற் குன்று. குரவை - கைகோத்தாடும் கூத்து. கொடிச்சியர் - மலைவாழ்மகளிர். செவ்வேள் - முருகன். வள்ளைப் பாட்டு - உலக்கைப் பாட்டு.

பக்கம் 36. இறல் - தேன் அடை. ஓதை - ஓசை. கடிந்து - வெருட்டி. குப்பை - குவியல். கவரி - வெண்சாமரை. மது - தேன். சந்தனக் குறை - சந்தனக் கட்டை. அஞ்சனம் - நீலக்கல். அரிதாரம் - கஸ்தூரி. வல்லி - கொடி. இருங்கறி - கரியமிளகு. நூறு - பொடி. தேமா - இனிய மாமரம். பைங்கொடிப் படலை - பச்சிலை மாலை. காயம் - வெள் உள்ளி. கமுகு - பாக்கு. இருங்கனி - பெரிய பழம். அணங்கு, குருளை, பறழ், களபம், குட்டி, உளியம், மறி, கரு, பிள்ளை ஆகியவை இளமை மரபுப் பெயர்கள். கரி - யானை. குடாவடி - கரடி. வரையாடு வருடை - மலையில் துள்ளி விளையாடும் வருடைமான். மடமை - இளமை. காசறை - கஸ்தூரி. ஆசு - குற்றம். நகுலம் - கீரி. பீலி - மயில் தோகை. பீலிமஞ்ஞை - ஆண் மயில். நாவி - புனுகுப் பூனை. கிள்ளை - கிளி. கொற்றம் - வெற்றி. ஐம்புலன் - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்.

நல்லொழுக்கப் பயிற்சி

இயற்கையழகு இப்பகுதியில் சுவைபட வர்ணிக்கப்பட்டுள்ளது. இயற்கையில் ஈடுபாடு கொள்ளுதல் ஒரு கலையாகும். இயற்கையழகைச் சுவைக்கப் பழகுதல் எளிதன்று. "நமக்குக் கண்கள் உள்ளன; ஆயின், கண்டோமல்லோம். நமக்குக் காதுகள் உள்ளன; ஆயின் கேட்டோமல்லோம்" என்றார் ஆங்கிலப் பெரியார் ஒருவர். நாம் இயற்கையழகை நுகர்ந்தோமல்லோம் என்னுங் கருத்துடனேயே அப் பெரியார் அங்ஙனம் கூறியுள்ளார். எனவே, இயற்கையன்னையின் எழிலுருவங்களைக் காணுந்தோறும் அவ்வுருவங்களை உற்று நோக்குங்கள்; அழகைக் காணுங்கள்; பிறர்க்கும் காட்டுங்கள்.

6. இலக்கிய ஓவியம்—முத்தொள்ளாயிரம்

பாடச்சுருக்கம்

முத்தொள்ளாயிரமென்பது இலக்கியச் சுவையமைந்த ஒரு நூல். ாண்டியனுடைய ஆண்மையையும், அருளையும் ஆசிரியர் அழகிய சொல்லோ யமாக அமைத்துள்ளார். பாண்டியன் தன்னுடைய பகைவர்களது ஊவிமார்கள் எரிமூழ்குதலைக் காணப் பொறுமல் கண்ணை மூடிக் கொண் ான். அவனது யானையும் பகைவர்களுடைய இறந்து பட்ட ஆண்யானை ளுக்குரிய பெண்யானைகள் வருந்துதல் கண்டு தன் கண்ணை மூடிக்கொண் ன. சோழனது யானை பகைவர் மதிலைக் குத்தி ஒடிந்த கொம்புகளுடனும், கைவர் முடியை இடறித் தேய்ந்த நகங்களுடனும் தனக்குரிய பெண் ானைக்குமுன் செல்ல நாணி வெளிப்புறத்திலேயே நின்று விட்டது. சிவந்த ம்பற்பூக்கள் குளத்தில் பூத்திருக்கும் காட்சிகண்டு,வெள்ளத்தில் தீப்பிடித்து ிட்டதோ என்று அஞ்சி, பறவைகள் தம் குஞ்சுகளை அணைத்துக் காள்ளும். இக்காட்சிகளை யெல்லாம் முத்தொள்ளாயிரம் படம் பிடித்துக் ாட்டுகிறது. 'ஈங்கோய் எழுபது' என்னும் நூலிலும் இத்தகைய அழகிய ாட்சிகள் உள்ளன.

அருஞ்சொல் விளக்கம்

பக்கம் 37. சூல் - கருப்பம். உளைந்து - வருந்தி. இப்பி - சிப்பி. திர் - ஒளி. நித்திலம் - முத்து. மாற்றார் - பகைவர். மாய்த்த - கொன்ற. குருதி - இரத்தம். மதுகை - வலிமை. மாறன் . பாண்டியன். ந்து - சந்தனம். அகலம் - மார்பு. பொருதது - போர் செய்தது. பொன்றினர் - இறந்தனர். தார் - மாலை. களிறு - ஆண் யானை.

பக்கம் 38. புதைத்தல் - மூடுதல். எரி - நெருப்பு. தானை - ஆடை. வழுதி - பாண்டியன். பிடி - பெண் யானை. "ஏனை..........களத்து" இதன் பொருள் :—'இறந்துபட்ட பகையரசர்களுடைய மனைவிமார் முதலா ிய பெண்டிர் ஆற்றாது நெருப்பில் வீழ்ந்து உயிர் துறத்தலைக் கண்டு, வேப்பம் ் மாலையினை அணிந்த பாண்டியன் பொறுக்காமல், தனது ஆடையால் னது கண்ணை மறைத்துக் கொண்டான். பாண்டியனது யானையும், பகை ர்களுடைய பல ஆண் யானைகள் இறந்த போர்க் களத்தில், அவை இறந் மை பொருது பெண் யானைகள் வருந்த, அதனைக் காணப் பொறுமல் தனது ண்ணைத் தனது தும்பிக்கையால் மறைத்துக்கொண்டது.' யானை மறம் : ானையினது வீரத்தினைச் சிறப்பித்துக்கூறும் ஒரு துறை. கிள்ளி : சோழன். றங்கடை - வாயிற்புறம்.

பக்கம் 39. தகர்த்தல் - பெயர்த்தல். கோடு - கொம்பு. தற்குறிப் பேற்ற அணி: புலவர் தமது குறிப்பினை அக்குறிப்பில்லாத மற்றொரு பொருளுக்கு ஏற்றி வைத்துக் கூறுதல். "கொடி........களிறு" : இதன் பொருள் :—'மலையின் திண்மை நிறைந்த தோளினை உடைய சோழனது ஆண் யானையானது பகைவரது கொடி கட்டப்பெற்ற மதிலின்மீது பாய்ந்த தனால் ஒடிந்த தன் கொம்புகளும், பகையரசர்களுடைய முடிகளை இடறிய தால் தேய்ந்த நகங்களும் அழகு அழிந்தமையால் பெண் யானையின் முன்பு நிற்க வெட்கங்கொண்டு, பெண் யானை நிற்கும் அந்தப்புரத்திற்குச் செல்லா மல் வெளிப்புறத்திலேயே நின்றுவிட்டது.' செம்பியன் - சோழன். நச்சு- விடம். குழவி - குழந்தை.

பக்கம் 40. பகுத்தறிவு: நல்லனவற்றையும் தீயனவற்றையும் பகுத்து அறியும் அறிவு. கவ்வை: ஒலி. ஒழித்துக்காட்டணி: ஓரிடத்தில் ஒரு பொருளை இல்லையென்று ஒழித்துக் காட்டுதல். " செஞ்ஞாயிற்று .... அறியார் ": இதன்பொருள் :—'நின்குடை நிழற்கீழ் வாழ்பவர் சிவந்த சூரியனது வெம்மையே அல்லாமல் வேறு வெம்மையை அறியமாட்டார்; இந்திரவில் அல்லாமல் பகைவரது கொலைவில்லை அறியமாட்டார்; கலப்பையை அல்லது வேறு படைக்கலங்களையும் அறியார்.' சேய்: குழந்தை. " அள்ளற் .... நாடு ": இதன் பொருள் :— 'நஞ்சு பூசப்பெற்ற இலைவடிவாகவுள்ள வேலினைக் கொண்ட தலைமை வாய்ந்த சேரனது நாடு, சேறு மிக்க நீர்ப் பொய்கைகளில் சிவந்த ஆம்பற்பூக்கள் இதழ் விரிய, அதனைக் கண்டு வெள்ளத்தில் தீப்பிடித்து விட்டது என்று கருதி அன்னச்சிப் பறவைக் கூட்டம் தம்முடைய கைகளாகிய சிறகுகளால் தம் குஞ்சுகளை யொடுக்கிக் கொள்ளுகின்ற ஒலியினை உடையது.' " வழுகிதழ் .... குன்று ": இதன்பொருள் :—'செவ்விய இதழையுடைய காந்தட்பூவின் மேல் வண்டிருக்க, ஒளி பொருந்திய தீயில் மூழ்கியது என்று அஞ்சி, கிழப்பெண் குரங்கு ஒன்று எழுந்து எழுந்து கையை நெரிக்கின்ற ஈங்கோயே இளம்பிறைச் சந்திரன் தங்கிய சிவந்த சடையினையுடைய சிவபெருமான் வாழும் குன்றாகும்.'

நல்லொழுக்கப் பயிற்சி

உலகில் இன்பம் எனக்கருதப்படுபவை பல உள. ஆனால் எல்லாவற்றையும் இன்பம் எனக் கருதுதல் கூடாது. ஒருவருக்கு இன்பமாகத் தோன்றுவது மற்றொருவருக்குத் துன்பமாகத் தோன்றலாம். சிலவகை இன்பங்கள் நிலைத்து நிற்பன அல்ல. முதலில் இன்பமாகத் தோன்றிய ஒன்று பிறகு துன்பமாகத் தோன்றலாம். ஆனால் நிலைபெற்ற இன்பம் என்று உலக அறிஞர்களால் ஒருமுகமாகக் கூறப்பெறுவது இலக்கிய இன்பமேயாகும். நம் பழந்தமிழ்ப் புலவர்கள் சுவைபடப் பாடிய பாடல்களைப் படிக்கப்படிக்க, ஆராய ஆராய, நினைக்க நினைக்கப் புதிய இன்பம் கிடைக்கும்; நிலைபெற்ற பேரின்பம் கிடைக்கும். இலக்கிய இன்பத்தினை நுகர்தல் மக்களுக்குச் சிறந்ததொரு பொழுதுபோக்காகும். எனவே, தமிழ்நாட்டு இளைஞர்காள்! உங்கட்குப் பாடமாக வந்துள்ள பாடல்களை ஆழ்ந்து படித்துப் பாருங்கள்; தேர்வினைமட்டும் கருத்திற்கொண்டு படியாதீர்கள்; அவற்றின்கண் அமைந்துள்ள சுவைகளை நுகரப் பழகுங்கள். அச்சுவைகளைப் பிறர்க்கும் எடுத்து உணர்த்துங்கள். பிற்காலத்தில், இலக்கியச் சுவை காணும் வழக்கம் உங்கட்குச் சிறந்ததொரு நற்பொழுதுபோக்காக அமையும்.

வினாக்களும் விடைகளும்

(உரைநடைப் பகுதி)

1. இறையனார் அகப்பொருள் உரை

1. முச்சங்கங்களும் நடைபெற்ற இடங்கள் யாவை ?

தலைச்சங்கம் கடல் கொள்ளப்பட்ட மதுரையிலும், இடைச்சங்கம் கடல் கொள்ளப்பட்ட கபாடபுரத்திலும், கடைச்சங்கம் உத்தர மதுரை எனப்படும் தற்கால மதுரையிலும் நடைபெற்றன.

2. தலைச்சங்கப்புலவர்களுள் இருவரைக்குறிப்பிடுக.

அகத்தியனாரும், முரஞ்சியூர் முடிநாகராயரும் தலைச்சங்கப்புலவர்கள் ஆவர்.

3. தலைச்சங்கப் புலவர்கள் பாடிய பாடல்களுள் இருவகைகளைக் கூறுக.

பரிபாடலும், முதுநாரையும் தலைச்சங்கப் புலவர்களால் பாடப்பட்ட இருவகைப் பாடல்களாகும்.

4. தலைச்சங்ககாலப் பாண்டியர்களுள் இருவரைக் குறிப்பிடுக.

காய்சின வழுதி, கடுங்கோன் ஆகிய இருவர் தலைச்சங்ககாலப் பாண்டியர்கள் ஆவர்.

5. தலைச்சங்க காலத்துப் புலவர்கட்கு நூல் எது ?

தலைச்சங்ககாலத்துப் புலவர்கட்கு அகத்தியம் நூலாக இருந்தது.

6. இடைச்சங்கப் புலவர்களுள் மூவரைக் குறிப்பிடுக.

அகத்தியனார், தொல்காப்பியனார், சிறு பாண்டரங்கனார் என்போர் இடைச்சங்கப் புலவர்களுள் மூவராவர்.

7. இடைச்சங்க காலப் புலவர்களால் பாடப்பட்டன யாவை ?

கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலை அகவல் முதலியன இடைச்சங்கப் புலவர்களால் பாடப்பட்டவை.

8. இடைச்சங்க காலத்துப் புலவர்கட்கு நூல்களாக இருந்தவை யாவை ?

அகத்தியம், தொல்காப்பியம், மாபுராணம், இசைநுணுக்கம், பூத புராணம் என்பவை இடைச்சங்ககாலப் புலவர்கட்கு நூல்களாக இருந்தன.

9. இடைச்சங்க காலத்துப் பாண்டியர்களில் இருவரைக் குறிப்பிடுக.

வெண்டேர்ச் செழியன், முடத்திருமாறன் ஆகிய இருவரும் இடைச்சங்க காலத்துப் பாண்டியர்களுள் இருவராவர்.

10. கடைச்சங்க காலத்துப் புலவர்களுள் நால்வரைக் குறிப்பிடுக.

பெருங்குன்றூர் கிழார், மதுரை யாசிரியர் நல்லந்துவனார், மதுரை மருதன் இளநாகனார், கணக்காயனார் மகனார் நக்கீரனார் ஆகிய நால்வரும் கடைச்சங்க காலத்துப் புலவர்களாவர்.

---

11. கடைச்சங்க காலத்துப்புலவர்களால் பாடப்பெற்ற நூல்களுள் எட்டினைக் குறிப்பிடுக. (அல்லது) எட்டுத்தொகை நூல்கள் யாவை?

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகிய எட்டு நூல்களும் எட்டுத் தொகை நூல்கள் எனப்படும். இவற்றைப் பாடியவர்கள் கடைச்சங்கப் புலவர்கள் ஆவர்.

12. கடைச்சங்ககாலப் புலவர்கட்கு நூல்களாக இருந்தவை யாவை?

அகத்தியமும் தொல்காப்பியமும் கடைச்சங்க காலப் புலவர்கட்கு நூல்களாக இருந்தன.

13. கடைச்சங்க காலத்தில் இருந்த பாண்டியர்களுள் இருவரைக் குறிப்பிடுக.

கடல் கொள்ளப்பட்டு வந்த முடத்திருமாறனும், உக்கிரப் பெருவழுதியும் கடைச்சங்க காலத்தில் இருந்த பாண்டியர்கள் ஆவர்.

14. அகநானூறுக்குரிய வேறு பெயர் என்ன?

நெடுந்தொகை நானூறு என்பது அகநானூறுக்கு வேறு பெயர் ஆகும்.

15. முச்சங்கங்களைப்பற்றி அறியலாவனவற்றைச் சுருக்கிவரைக.

இப்பாடப் பகுதிக்கு அமைந்த சுருக்கமே இவ்வினாவிற்கு விடையாகும்.

2. ஞானியார் சுவாமிகள்

1. ஞானியார் சுவாமிகளின் முழுப்பெயரென்ன?

சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் என்பது ஞானியார் சுவாமிகளது முழுப்பெயராகும்.

2. சுவாமிகள் உறைவிடம் யாது?

திருக்கோவலூர் ஆதீனத்தின் கிளையாய் உள்ள திருப்பாதிரிப்புலியூர் அறப்பள்ளி ஞானியார் சுவாமிகளின் உறைவிடமாய் இருந்தது.

3. திரு. வி. க. அவர்களைக் கவர்ந்தது எது?

ஞானியார் சுவாமிகளின் பரந்த கலையொளி திரு. வி. க. அவர்களைக் கவர்ந்தது.

4. திரு. வி. க. அவர்கள் இளமையில் கண்ட நாவலர் யார்?

திரு. வி. க. அவர்கள் இளமையில் கண்ட நாவலர் கதிர்வேற்பிள்ளை யாவார்.

5. "தமிழ் நாட்டிலும் கிளாட்ஸ்தன்கள், சுரேந்திரர்கள் இருக்கிறார்கள் என்று என் நெஞ்சம் எண்ணியது": இடஞ்சுட்டி விளக்குக.

திரு. வி. க. அவர்கள் ஞானியார் சுவாமிகளைப்பற்றி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் கிளாட்ஸ்தன், சுரேந்திரர் ஆகிய இருவருடைய நாவன்மையைப்பற்றி அறிந்திருந்தார். ஞானியார் சுவாமிகளுடைய நாவன்மையை உணர்ந்த அளவில், திரு. வி. க. அவர்கள் "தமிழ் நாட்டிலும் கிளாட்ஸ்தன்கள், சுரேந்திரர்கள் இருக்கிறார்கள் என்று என் நெஞ்சம் எண்ணியது" என்று குறிப்பிட்டுள்ளார்.

6. ஞானியார் சுவாமிகளைப்பற்றி அறப்பள்ளிப் பொன்விழாவில் திரு. வி. க. அவர்கள் கூறியவற்றைச் சுருக்கி வரைக.

திரு. வி. க. அவர்கள், "ஞானியார் அவர்கள் முருகனை எப்பொழுதும் னைப்பவர்; முருகன் புகழைப்பேசுபவர்; வெண்ணீறு பூசிய நெற்றியை டையவர்; குண்டலம் தொங்கும் காதுடையவர்; கரியதிருமேனியை டையவர்; 'சண்முகா சண்முகா' என்று கூறித் திருநீறு அளிப்பவர். அவரது உருவம் எவரையும் கவரும்; ஒவ்வொரு நூலையும் அவர் பாடஞ் சொல்லும்பொழுது, அந்தந்த நூல்களை இயற்றிய ஆசிரியர்களே நேரில் வந்து பாடஞ்சொல்வதுபோல் இருக்கும். அவரிடம் கல்விகற்றுப் புலவராயி னோர் பலர். பேச்சுத்திறமை அவரிடம் நன்கு அமைந்திருந்தது" என்று ஞானியார் சுவாமிகளைப்பற்றி அறப்பள்ளிப் பொன்விழாவில் கூறியுள்ளார்.

7. ஞானியார் சுவாமிகளின் பேச்சுத்திறனுக்கு எவற்றை ஒப்பிட லாம்?

கடல்மடை திறத்தலையும், வெண்கலக்கோட்டையில் பட்டத்து யானை புகுதலையும், பெரும்புயல் வீசுதலையும், ஓயாமழையையும் ஞானியார் சுவாமி களின் பேச்சுத்திறனுக்கு ஒப்பிடலாம்.

8. ஞானியார் சுவாமிகளின் பேச்சுத்திறனல் பலரும் பயன் அடைந் தமையை திரு. வி. க. அவர்கள் எவ்வாறு உருவகப்படுத்திக் காட்டியுள்ளார்?

'ஞானியார் ஒருமலை; அவரது மூளையாகிய உச்சியில் கலைமேகங்கள் அருவி நீர்பொழியும்; அந்தக் கலையருவிநீர் அவரது வாயின்வழியே சொற் றொடர் அருவியாய் இறங்கும்; அந்த அருவியில் சுவை நுட்பப்பொருள்கள் மிதக்கும்; அந்நீரினல் அன்புவெள்ளம் பெருக்கெடுத்துப்பரவும்; அவ்வெள் ளத்தில் அருள் அலைகள் எழும்; பகைஞரும் அவ்வருளால் தம்பகைமை நீங் கப் பெறுவர்; அந்த அன்பு வெள்ளத்தில் மூழ்குவோர் நோய் நீங்கப்பெறுவர்' [அஃதாவது ஞானியார் பேச்சினைக்கேட்டவர் தம் அறியாமை நீங்கப்பெறு வர்] என்று திரு. வி. க. அவர்கள் சுவாமிகளின் பேச்சுத் திறனை உருவகப் படுத்திக் காட்டியுள்ளார்.

9. "நீங்கள் என் செல்வரை அருவருக்கிறீர்கள்" என்று ஞானியார் சுவாமிகள் கேட்டமைக்குத் திரு. வி. க. அவர்கள் கூறிய விடை யாது?

"நீங்கள் என்செல்வரை அருவருக்கிறீர்கள்" என்று ஞானியார் சுவாமி கள் கேட்டமைக்கு திரு. வி. க. அவர்கள் தாம் செல்வரை அருவருப்பதில்லை என்றும், ஒரே இடத்தில் செல்வம் திரள்வதையே அருவருப்பதாகவும், செல் வரிடம் பொருளின் பொருட்டுச் செல்வதைத் தாம் வெறுப்பதாகவும் விடை கூறினர்.

10. "யான் ஒருவரை வணங்கிவந்தேன். அவரும் மறைந்தார்": இடஞ் சுட்டி விளக்குக.

இவ்வாறு கூறியவர் திரு. வி. க. அவர்களாவார். ஞானியார் சுவாமி களின் முதலாண்டுவிழா 1942-ஆம் ஆண்டு தைப்பூசத்தில் நடைபெற்றது. முதல் நாள் படத்திறப்பு விழாவில் திரு. வி. க. அவர்கள் ஞானியாரைப் பற்றி இவ்வாறு குறிப்பிட்டார்.

11. ஞானியார் சுவாமிகளை வெளியூர் செல்லாமல் தடுத்தவை யாவை?

அறப்பள்ளியின் தலைமையும், பல்லக்கு ஊர்தல் முதலியனவும் ஞானி யார் சுவாமிகளை வெளியூர் செல்லாமல் தடுத்தன.

12. ஞானியார் சுவாமிகளின் குண நலன்களை 20 வரிகளில்ஒருகட்டு யாக வரைக.

இப்பாடத்திற்கு அமைந்த சுருக்கமே இவ்வினாவிற்குரிய விடையாகும்

3. சிவ வழிபாட்டின் தொன்மை

1. புதையுண்ட நகரங்கள் எவ்வெவ்விடங்களில் கண்டுபிடிக்க பட்டன?

பஞ்சாபிலும், சிந்துவிலும் உள்ள ஹாரப்பா, மொஹொஞ்சதாரே என்னுமிடங்களில் புதையுண்ட நகரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

2. புதையுண்ட நகரங்களில் வாழ்ந்துவந்த மக்களின் சமயத்தை பற்றி அறியலாவன யாவை?

'அவ்விடங்களில் வாழ்ந்த மக்களின் சமயம் இந்து மதத்திலிருந்து பிரித்து அறியமுடியாதது. ஆவி வணக்கம், சிவவழிபாடு, அன்னைத் தெய்வத்தி வழிபாடு ஆகியவற்றிலிருந்து அவர்களது சமயத்தைப் பிரித்து அறியமு யாது. சிவவழிபாடும், அன்னை வழிபாடும் அவர்களிடம் அமைந்திருந்த என்று புதைபட்ட நகரங்களில் வாழ்ந்துவந்த மக்களின் சமயத்தைப்பற் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள்.

3. 'இருக்குவேத இந்தியா' என்ற நூலை எழுதியவர் யார்? அதி கூறப்பட்டுள்ள கருத்துக்கள் யாவை?

அபினஸ் சந்திரதாஸ் என்பவர் 'இருக்குவேத இந்தியா' என்ற நூ எழுதியுள்ளார். அந்நூலில் அவர் விந்தியத்திற்குத் தெற்கில் தமிழர்க தோன்றி வாழ்ந்தனர் என்றும், ஆரியர் பஞ்சாப் மாகாணத்தில் தோன் வாழ்ந்தனர் என்றும், ஆரியர்கள் வாழ்ந்த இடத்திற்கும், தமிழர்கள் வாழ் இடத்திற்கும் நடுவே கடல் இருந்ததென்றும், பணியர் என்னும் வியாபாரிக அங்குமிங்கும் போய்வந்தனர் என்றும் கூறியுள்ளார். இப்பணியர் ஆ யரே என்பது அவரது கருத்து.

4. வரலாற்றாசிரியராகிய டி. ஆர். சேஷஐயங்கார் என்பவர் தமி மக்களின் கடற்செலவைப்பற்றிக் கூறியுள்ளவை யாவை?

டி. ஆர். சேஷஐயங்கார் அவர்கள் தமது திராவிட இந்தியா என்னு நூலில், தமிழ்மொழியில் கடலைக்குறிக்கும் சொற்களெல்லாம் தமிழ்ச் சொற் ளாகவே உள்ளன என்றும், கப்பலைக் குறிக்கும் சொற்களெல்லாம் தமிழ் சொற்களாகவே உள்ளன என்றும், எனவே, தமிழர்கள் கடற்செலவி சிறந்து விளங்கினர் என்பதற்கு ஐயமில்லை என்றும் கூறியுள்ளார்.

5. கடலைக்குறிக்கும் நான்கு தமிழ்ச் சொற்கள் கூறுக.

பரவை, புணரி, ஆர்கலி, முந்நீர் ஆகிய நான்கு சொற்களும் கடலைக்குறி கும் தமிழ்ச் சொற்கள்.

6. தமிழில் வழங்கும் கப்பலைக்குறிக்கும் மூன்று தமிழ்ச் சொற்க வரைக.

கலம், மரக்கலம், மிதவை ஆகிய மூன்றும் கப்பலைக்குறிக்கும் தமிழ் சொற்களாகும்.

'பணியர்' என்னும் சொல்லை ஆராய்க.

பணியர் என்னும் சொல் வணிகர் என்னும் தமிழ்ச்சொல்லின் திரிபு ம். அச்சொல்லில் உள்ள ணகரம் தமிழ் ஒலியே ஆகும். இவ்வொலியை டைய எழுத்து பாரசீகம், கிரீக் முதலிய மொழிகளில் இல்லாமையால், து ஆரியத்தைச் சேர்ந்தது அன்று என்பதனை உணரலாம். தென்னாட்டு ாழிகளில் அவ்வொலி காணப்படுகின்றது. எனவே, வணிகர் என்ற ழ்ச் சொல்லின் திரிபே 'பணியர்' ஆகும்.

கன்னி முனைக்குத் தெற்கே இருந்த தமிழ் நாட்டில் வாழ்ந்த தமிழர் சிவபிரானை வணங்கினர் என்பதற்குச் சான்றுகள் காட்டுக.

ஸ்காட் எலியட் என்பவர் கடல்கொண்ட தமிழ் நாட்டினைப்பற்றி துங்கால், அங்கு வாழ்ந்த மக்கள் தலையின் முதற் பாகத்தில் நெற்றிக் போன்ற தசைத் திரளைக் கொண்டிருந்தனர் என்று எழுதியுள்ளார். ன்னோர்களை வழிபட முற்பட்டனர் தமிழர். அவ்வழிபாட்டிலிருந்து ற்றிக் கண்ணினையுடைய சிவபிரானின் உருவமும், வழிபாடும் தோன்றி ந்தல்வேண்டும். பண்டைப் பாண்டிய மன்னன் ஒருவன் 'முக்கட் ல்வர்' எனப்படும் சிவபிரானை வணங்கி வந்தான் என்று புறநானூற்றில் பாடல் கூறுகிறது. மொஹொஞ்சதாரோ என்னுமிடத்தில் நிகழ்ந்த த பொருள் ஆராய்ச்சியிலிருந்தும் அக்காலத்தில் முக்கண்ணும், மூன்று மும் உடைய சிவவடிவம் வழிபடப்பெற்று வந்தது என்று தெரிகிறது. ற்றிலிருந்து மூன்று கண்களையுடைய சிவபெருமானை வணங்கும் வழக் மிகப் பழங்காலத்திலேயே இருந்து வந்தது என்பதனை நாம் அறியலாம்.

. சிவம் என்ற சொல்லினை ஆராய்க.

சிவம் என்ற சொல் தமிழ்ச்சொல் என்பர் டாக்டர் கிரையர்ஸன். அது ம்மை என்னும் பண்புச் சொல்லின் அடியாகப் பிறந்தது. செந்நிறம் ர்மை, நன்மை, மங்களம் என்னும் பண்புகளைக் குறிக்கும். அச்சொல் மொழியிற் புகுந்து சைவம் என்னும் சொல்லுக்கு அடிப்படை ஆயிற்று.

. "நான்கு வேதங்களும் சிவபிரானே முதற்கடவுள் என்று கூறு கின்றன": இக்கருத்தினை விளக்குக.

உருத்திரனே முதற் கடவுள் என்றும், அவன் பொன்னிறம் உடைய ன் என்றும், எவ்வுயிர்க்கும் இரங்குபவன் என்றும் இருக்கு வேதம் கூறு ன்றது. மேலும், அக்கடவுளே உலகிற்குத் தந்தை என்றும், அவன் ஞ்சினை உண்டவன் என்றும் அது கூறுகிறது. யசுர் வேதம் உருத்திரனது பருமையை விளங்க உரைக்கின்றது. சாமவேதம் உருத்திரனை 'அந்தணன் ன்று கூறுகிறது. அதர்வ வேதம் சிவப்பிழம்பின் வழிபாட்டையும், ரிபுர சங்காரத்தையும் பேசுகின்றது. இவற்றிலிருந்து நான்கு வேதங் ளும் சிவபிரானே முழுமுதற் கடவுள் என்று கூறுகிறது என்பதனை நாம் ணரலாம்.

. "நம் நாட்டுக் காப்பியங்கள் சிவபிரானே முழுமுதற் கடவுள் என்று கூறுகின்றன" என்னும் கருத்தினை ஆராய்க.

தேவர்கள் சிவபிரானை வழிபட்டு, முருகனைப் படைத்தலைவனாகப் பெற்ற சய்தியும், பகீரதன் சிவபிரானை வழிபட்டுக்கங்கையைக்கொண்டுவர முயன்ற சய்தியும் வால்மீகி ராமாயணத்தில் காணப்படுகின்றன. மேலும், அக்காப்பி ம் சிவபிரான் நஞ்சுண்ட செய்தியையும், தக்கன் வேள்வியை அழித்த

செய்தியையும் கூறுகின்றது. சிவபிரானிடம் பாசுபதம் பெறுமாறு கண்ணன் அருச்சுனனுக்கு உரைத்தான் என்று மாபாரதம் கூறுகிறது மச்சபுராணம், வாயுபுராணம் முதலியவைகளும், சிலப்பதிகாரம், மணிமேகலை சிந்தாமணி முதலிய நூல்களும் சிவபிரானது உயர்வை ஆங்காங்குக் குறிப் பிடுகின்றன. இவற்றிலிருந்து நம் நாட்டுக் காப்பியங்கள் சிவபிரானே முழு முதற் கடவுள் என்று கூறுகின்றன என்று உணரலாம்.

12. சிவ வழிபாட்டின் தொன்மைபற்றி 20 வரிகளுக்குள் ஒரு கட்டுரை வரைக.

இப்பாடத்திற்கு அமைந்த சுருக்கமே இவ் வினவிற்குரிய விடையாகும்.

4. தமிழ் வேந்தரின் இமயப் படையெடுப்பு

1. நெடுஞ்சேரலாதனைப் பற்றிக் குறிப்பு வரைக.

இவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்று அழைக்கப்பட்டான். இமயமலை வரையில் தனது ஆதிக்கம் பரவுமாறு இவன் செய்தவனுதலால் இத்தகைய அடைமொழி இவனுக்கு அமைந்தது. இவன் தனது இலாஞ்சனை யாகிய வில்லை இமயத்தின் நெற்றியில் பொறித்தவன் ஆவான். இமயமலை முதல் குமரிமுனை வரையில் இவன் தன் ஆற்றலைப் பரப்பியவன் என்றும், ஆரிய மன்னரை வென்றவனென்றும், யவனரைச் சிறைப்படுத்தியவன் என்றும் பதிற்றுப்பத்து, அகநானூறு என்னும் நூல்களிலிருந்து நாம் அறிய லாம்.

2. கரிகாலனை கலிங்கத்துப் பரணி எவ்வாறு பாராட்டுகிறது?

கரிகாலன் ஒருமுறை வட நாட்டில் படையெடுத்துச் சென்று செண்டி னைக் கொண்டு இமயமலையை அடக்கி, அதனைத் திருப்பி அதன் முதுகில் தனது புலிப் பொறியை நட்டு, மறுபடியும் அம்மலையினைப் பழைய நிலையில் இருத்தித் தனது நாட்டுக்குத் திரும்பினன் என்று கலிங்கத்துப் பரணி கரி காலனைப் பாராட்டுகின்றது.

3. இமயமலைவரை சென்ற பாண்டிய மன்னனைப் பற்றி நீவிர் அறிந் தன யாவை?

மலையத்துவசன் என்னும் பாண்டியனும், உக்கிரகுமாரன் என்னும் பாண்டியனும் இமயமலைக்குச் சென்று தம் மீன் பொறியை நட்டனர் என்று புராணம் கூறுகின்றது. பெரியாழ்வாரும் இவ்வாறே கூறுகின்றார். எவனே ஒரு பாண்டியன் இச்செயலைச் செய்தான் என்று சாசனங்கள் கூறுகின்ற னவே யொழிய அப்பாண்டியன் யாவன் என்று அவை குறிப்பிடவில்லை.

4. தமிழ் வேந்தரின் இமயப் படையெடுப்பை நவீன சரித்திர அறி ஞர்கள் ஏன் ஐயுறுகின்றனர்?

கிறித்துவயுகம் தோன்றுவதற்கு முன்னும் பின்னும் பல நூற்றுண்டுகள் வரை வட நாட்டை ஆண்ட மன்னர்கள் வலிமை பெற்றவர்களாக இருந்தார் கள் ஆதலாலும், தமிழ் மன்னர்களின் வடநாட்டு வெற்றியைக் குறிப்பிடத் தக்க சான்று அகப்படாமையாலும் தமிழ் வேந்தர்களின் இமயப் படை யெடுப்பை நவீன சரித்திர அறிஞர்கள் ஐயுறுகின்றனர்.

5. தமிழ் வேந்தரின் இமயப் படையெடுப்பு உண்மையேயாகும் என்பதை எவ்வாறு அறியலாம்? விடையை 20 வரிகளில் வரைக.

தமிழ் வேந்தரின் இமயப் படையெடுப்பை உண்மை என்று கொள்வதற்கு ஏற்ற சரித்திரச் சான்று இல்லையென்று சரித்திர அறிஞர்கள் கூறுவர். எனினும், தமிழ்வேந்தர் இமயம் வரையில் படையெடுத்தனர் என்று சங்கநூல்கள் கூறுகின்றன. அத்தகைய சங்கச் சான்றோர் உரைகளை நாம் புறக்கணித்தல் கூடாது. பாரத நாடு முழுவதையும் வென்று தனியாட்சி புரிய விருப்பம் கொண்ட அசோகன், ஏன் தமிழ் நாட்டினைக் கைப்பற்றினானல்லன் என்பது கேள்வி. தமிழ் மன்னர் அசோகனாலும் வெல்லமுடியாத அளவு வலிமை வாய்ந்திருத்தலும் கூடும். அப்பெருமன்னன் தமிழ்நாட்டின்மீது படையெடுக்க முயலாமல் இருந்தமையே தமிழ் மன்னர்களின் வலிமைக்குச் சான்றாகும். மேலும், அம்மன்னன் தமிழ் நாட்டுக்குத் தன் தூதுவர்களை அனுப்பியுள்ளான். தமிழ் மன்னர்களுடைய பெருமையையும் வீரத்தையும் உணர்ந்தே அம்மன்னன் அவ்வாறு மதிப்பளித்திருத்தல் வேண்டும். அன்றியும், அப்பெரு மன்னனும் அஞ்சும்படியான வீரச் செயலைத் தமிழ் மன்னர்கள் செய்திருக்க வேண்டும். அவ்வீரச் செயல் தமிழ் மன்னரின் இமயப் படையெடுப்பாக இருத்தல் இயல்வதே. எனவே, தமிழ் வேந்தரின் இமயப் படையெடுப்பு உண்மையே என்பதனை நாம் உணரலாம்.

6. செங்குட்டுவனது வடநாட்டு யாத்திரைக்கு இளங்கோவடிகள் கூறியுள்ள காரணம் யாது?

'வடநாட்டில் நடந்த அரச கன்னி யொருத்தியின் திருமணத்தில் விருந்தினராக ஆரிய அரசர்கள் பலர் கூடியிருந்தனர். அதற்கு முன்பு தமிழ் நாட்டரசர்கள் வடநாட்டின்மீது படையெடுத்துச் சென்று இமயமலையில் தம்முடைய வில், கயல், புலிப் பொறிகளை நாட்டியிருந்தனர். விருந்திற்கு வந்திருந்த ஆரிய மன்னர்கள் தமிழ் மன்னர்களின் படையெடுப்பினைப்பற்றி உரையாடிக் கொண்டிருந்தனர். அப்பொழுது கனகவிசயர், 'தமிழ் மன்னர் இமயமலையில் தம் இலாஞ்சனைகளைப் பொறித்தபொழுது எம்போன்ற வீரசூரர்கள் இருந்திலர் போலும்' என்று கூறி நகையாடினர். இச்செய்தியைத் தமிழ்நாடு வந்திருந்த சில முனிவர்கள் செங்குட்டுவனிடம் கூறினர். தமிழ் மன்னர்களைப் பொதுவாக இகழ்ந்து நகையாடிய அக்கனகவிசயரை வென்று, அவர் தலையில் பத்தினிக் கடவுளின் படிமம் சமைத்தற்குரிய கல்லினையேற்றி வரவேண்டும் என்னும் எண்ணத்துடன் செங்குட்டுவன் வடநாட்டு யாத்திரை சென்றான். இச்செய்தியை இளங்கோவடிகள் விளங்கக் கூறுகின்றார்.

7. பிற்காலத்தில் வேறு நாடுகளைவென்ற மன்னர்களைப்பற்றிக் கட்டுரை ஆசிரியர் கூறுவன யாவை?

'சேர நாட்டை அடுத்த பகுதியை ஆண்ட கங்க வமிசத்தவர்கள் இமயச் சாரலில் உள்ள நேபாளத்தை வென்று ஆண்டனர். கலிங்க மன்னனை காரவேலன் மகத நாட்டையும், அங்க நாட்டையும் வென்று பெருமை பெற்றான். முதலாம் இராசேந்திர சோழன் கங்கைக்கரை வரையிலுள்ள நாடுகளையும், கடாரம் முதலிய தீவுகளையும் வென்றான்' என்று பிற்காலத்தில் வேறு நாடுகளை வென்ற மன்னர்களைப்பற்றிக் கட்டுரை ஆசிரியர் கூறுகின்றார்.

8. திருமாவளவனின் வடநாட்டு யாத்திரைபற்றிச் சிலப்பதிகா கூறுவன யாவை? (விடையை 20 வரிகளில் வரைக.)

'திருமாவளவன் எனப் பெயர்பெற்ற கரிகாற் பெருவளத்தான் போ செய்தலில் பெரு விருப்புடையவன். அத்தகைய விருப்பத்தால் அவன் திசையை நோக்கிச் சென்றான். ஆயின், அவனது நோக்கம் கைகூட வாறு இமயமலை தடுத்தது. அதனால் சோழன் சினம் கொண்டான்; புலிப்பொறியை ஆண்டுப் பொறித்தான்; தன் ஆணையை அங்கு நிறுவின இத்தகைய வீரச் செயலைச் செய்து ஒருவாறு சினம் அடங்கப் பெற்ற காலன் திரும்பினான்.

'இமயத்திலிருந்து திரும்பிய கரிகாலனை வச்சிரநாட்டு மன்னனும், ம நாட்டு மன்னனும் எதிர்த்துப் போரிட்டுத் தோற்றனர். வச்சிர நாடு என்ப சோணை நதி சூழ்ந்த பகுதியாகும். மகத நாடு கங்கையை யடுத்த பகுதி கும். கரிகாலனுக்கு வச்சிர நாட்டு மன்னன் கொற்றப் பந்தர் ஒன்றினை கொடுத்தான்; மகதநாட்டு மன்னன் பட்டி மண்டபம் ஒன்றைக் கொடு தான்; அவந்தி மன்னன் நட்பு முறையில் தோரணவாயில் ஒன்றினை கொடுத்தான்; கரிகாலன் இமயத்துக்கு அப்பாலும் சென்று தன் ஆதிக்க தைப் பரப்ப விரும்பினான்.'

இத்தகைய செய்தியை இளங்கோவடிகள் விளக்கமாகச் சிலப்பதிகா தில் கூறியுள்ளார்.

9. கரிகாலன் இமயமலையின்மீது அமைந்துள்ள நாடுகளையு வென்றான் என்பதற்குச் சான்றுகள் காட்டுக.

கரிகாலன் இமயமலையின் மீது அமைந்துள்ள நாடுகளை வென்றா என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. சிக்கிம் ராஜ்யத்திற்குக் கிழக்கே அதற்கும் திபெத்துக்கும் இடையில் உள்ள எல்லையை வரையறுக்கு மலைத்தொடருக்கும் ஆங்குள்ள கணவாய்க்கும் 'சோழ மலைத்தொடர்' 'சோழர் கணவாய்' என்னும் பெயர்கள் இன்றும் வழங்கி வருகின்றன மேலும் 'சோல' என்னும் சொல்லுக்கு சிக்கிம், திபெத்து மொழிகளி மலை என்பது பொருள். எனவே, கரிகாலன் இமயத்தின் மீது படையெடுத் செய்தி உண்மையாய் இருத்தல் கூடும்.

10. கரிகாலனை இமயமலை தடுத்தது": இதற்குக் கட்டுரை ஆசிரிய கூறும் விளக்கம் யாது?

கரிகாலன் படையெடுத்துச் சென்ற காலத்தே அவன் கடந்த இம மலைக் கணவாய் பனியால் அடைக்கப்பட்டிருக்கும் என்றும், அதனை கருதியே சிலப்பதிகார ஆசிரியர் கரிகாலனை இமயமலை தடுத்தது என்று கூறியிருப்பார் என்று கட்டுரை ஆசிரியர் விளக்கம் கூறுகின்றார்.

11. திருமாவளவன் படையெடுத்துச் சென்ற பகுதி இமயமலையி எவ்விடமாக இருத்தல் கூடும்?

இப்பொழுது சிக்கிம், புட்டான், என்று வழங்கும் இராச்சியங்களுக் இடையிலுள்ள மலைப் பகுதியே திருமாவளவன் படையெடுத்துச் சென் பகுதியாக இருத்தல் கூடும்.

12. தமிழ் வேந்தரின் இமயப் படையெடுப்பைப் பற்றிக் கட்டுரை ஆசிரியர் கொண்டுள்ள கருத்தினை 20 வரிகளில் வரைக.

இப்பாடத்திற்கு அமைந்த பாடச்சுருக்கமே இவ்வினாவிற்குரிய விடை யாகும்.

5. இளங்கோவடிகளும் இயற்கை புனைவும்

ஐம்பெரும் பூதங்கள் யாவை ?

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்தும் ஐம்பெரும் பூதங்கள் ...ும்.

இயற்கைப் பொருள்கள் என்றால் என்ன ?

மக்களால் இயற்றப்படாது கடவுளால் இயற்றப் பட்டனவும், இயற்கை அமைந்திருப்பனவும், ஆகிய மலை, கடல், நாடு, காடு முதலியவை ...ற்கைப் பொருள்கள் எனப்படும்.

செயற்கைப் பொருள்கள் என்றால் என்ன ?

மக்களால் இயற்றப்படும் உணவு, உடை, உறையுள் முதலியன செயற் ...ப் பொருள்கள்.

ஐவகை நிலங்களைப் பற்றிச் சிறு குறிப்பு வரைக.

மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி; காடும் புதரும் நிறைந்த இடம் ...லை; வயலும் ஊரும் மருதம்; கடற்கரையும் கடலும் நெய்தல்; வளம் ...தும் இல்லாத வறண்ட பகுதி பாலை.

கருப்பொருள் என்றால் என்ன ?

ஒவ்வொரு நிலத்திலும் உறையும் மக்கள், அவர்கள் வழிபடும் தெய்வம், ...ர்கட்குரிய உணவு தொழில், அங்கு வாழும் விலங்கு பறவை முதலியன ...வும் கருப்பொருள் எனப்படும்.

நாட்டார் அவர்கள் இயற்கை ஓவியத்திற்கு எடுத்துக் காட்டாக எதனை அமைத்துள்ளார்? விளக்குக. (அல்லது) கபிலர் பாடியுள்ள இயற்கைப் புனைவுக்கு எடுத்துக் காட்டு ஒன்று தந்து விளக்குக.

'குறிஞ்சி நிலத்தில் ஒரு தலைவியும், ஒரு தோழியும், தினைப் புனத்தில் கிளி ...டுவர் ; நடுப்பகலில் வெள்ளிய அருவியில் நீராடுவர் ; தெளிந்த சுனைகளில் ...டிக் கொண்டே முழுகுவர் ; பின்பு, தம் கூந்தலை உலர்த்திக் கொண்டு, ...வகைப் பூக்களைப் பறித்து, அவற்றைத் தழையுடை செய்து உடுப்பர். ...வில் அசோக மரத்தின் நிழலில் தங்குவர்' என்னும் காட்சிகளை இளங்கோ ...கள் இயற்கை ஓவியத்திற்கு எடுத்துக் காட்டாக அமைத்துள்ளார் என்று ...ட்டார் அவர்கள் காட்டியுள்ளார்கள்.

பெருங்காப்பியத்தின் இலக்கணம் யாது ?

மலை, கடல், நாடு, வளநகர், பருவம், சூரிய சந்திரர் தோற்றம் முதலிய ...ற்றைப் புனைந்து, கதையொன்றனைத் தழுவி எழுகின்ற தொடர்நிலைச் ...ய்யுள் நூல் பெருங்காப்பியமாகும்.

நாடுகாண் காதையில் இளங்கோவடிகளார் அமைத்துள்ள இயற்கைப் புனைவினை 20 வரிகளில் ஒரு கட்டுரையாக வரைக.

கோவலன் கண்ணகியுடன் புகாரைக் கடந்து, காவிரியின் வடகரை ...யாக நடந்து உறையூரை அடைந்தான். ஆங்குத் தவமுதியோளாகிய ...ந்தியடிகளின் நட்பு அவர்கட்குக் கிடைத்தது. மதுரைக்குச் செல்லுதற் ...ய வழியின் இயல்புகளைக் கவுந்தியடிகள் கூறுமுகத்தான் இளங்கோவடி ...ார் நாடுகாண் காதையில் புனைந்து கூறியுள்ளார்.

கவுந்தியடிகள் கோவலனைப் பார்த்து, 'மெல்லிய இயல்பு வாய்ந் கண்ணகி வெயிலின் வெம்மையைப் பொறுக்கமாட்டாள் என்று அவ சோலை வழியில் அழைத்துச் செல்லலாம். ஆயின், ஆங்குக் கிழங்குக தோண்டி யெடுத்த குழிகளைச் சண்பகத்தின் பூம்பொடிகள் மூடியிருக் அக்குழிகளில் காலை வைப்போர்க்குத் துன்பம் உண்டாகும். அன்றி பலாப்பழங்கள் தலையில் முட்டும். மஞ்சளும், இஞ்சியும் நடப்போ தடுக்கும். எனவே, சோலை வழியில் செல்லுதல் தகாது. இனி, வ வழியே செல்லலாம். ஆனால் அங்குள்ள குளங்களில் வாளைகள் து தலைக்கண்டு கண்ணகி நடுங்குதல் கூடும்' என்று கூறினாள்.

மூவரும் வழி நடந்து செல்லுங்கால் பலவகைப்பட்ட ஒலிகளை அவர் கேட்டனர் என்று இளங்கோவடிகள் பாடியுள்ளார். நீர் இறைக்கும் ஒ பறவைகளின் ஒலி முதலியனவற்றை அவர்கள் கேட்டனர் என்றும், நா நடுதல், சூட்டு அடித்தல் முதலிய காட்சிகளைக் கண்டனர் என்றும், முகவை பாடல் முதலிய பாடல்களைக் கேட்டனர் என்றும் ஆண்டுக் கூறப்பெற் ளன. ஈண்டுக் குறிப்பிடப்பெற்றுள்ள காட்சிகள் இளங்கோவடிகளின் ந காண் காதையில் அமைந்துள்ள இயற்கைப் புனைவுகள் ஆகும்.

9. இளங்கோவடிகள் வையை யாற்றை ஒரு நங்கையாக எவ்வா உருவகப் படுத்தியுள்ளார் ?

'புலவர் நாவில் பொருந்திய பூங்கொடியே வையையென்றும், அ வையையாகிய பெண் தன் இரு கரைகளிலும் அமைந்த மரங்களிலுள் பூக்களைப் பூவாடையாகக் கொண்டுள்ளாள் என்றும், அந்த ஆற்றின் வாயிலில் பலவகைப் பூக்களும், கொடிகளும் பின்னிக் கிடத்தல் அவளு மேகலையாகுமென்றும் இளங்கோவடிகளார் கூறி வையை யாற்றை ஒ நங்கையாக உருவகப்படுத்துகிறார்.

10. வையையாறு முழுவதும் மலர்கள் மூடியிருந்த காட்சியினை இள கோவடிகளார் எவ்வாறு தற்குறிப்பு ஏற்றுகின்றார் ?

'வையையாறு முழுவதும் பூக்கள் நிரம்பி நீர் வெளியே தோன்றாதவா மறைத்திருந்தன. கண்ணகிக்கு இனி வரப்போகின்ற துன்பத்தையறிந் நறுமலர் ஆடையைப்போர்த்து வையையாகிய நங்கை தனது கண்ண வெளிப்படாமல் மூடிக்கொள்வது போல் இருந்தது அக்காட்சி' என் இளங்கோவடிகள் வையையாறு முழுவதும் மலர்கள் மூடியிருந்த காட்சியை தற்குறிப்பேற்றியுள்ளார்.

11. இளங்கோவடிகள் காட்சிக்காதையில் அமைத்துள்ள இயற் கைப் புனைவினை 20 வரிகளில் வரைக.

செங்குட்டுவன் தனது மனைவியாகிய வேண்மாளுடன் மலைவளம் காணு தற் பொருட்டுப் பேராற்றங்கரைக்கு வந்திருந்தான். அவர்கள் ஆங்கு கண்ட காட்சிகளைக் கூறுமுகத்தான் இளங்கோவடிகள் இயற்கையைப் புனைந்துள்ளார்.

பலவகைப் பூக்களைக் கொண்டு பேரியாறு மலையைக் குறுக்கிட்டுச் செ லும் காட்சி, திருமால் மார்பில் விளங்கிய முத்தாரம்போல் விளங்கியது அவர்கள் கொடிச்சியரின் குரவைப் பாடல்களையும், உலக்கைப் பாடலையு இன்னும் பலவகை யொலிகளையும் கேட்டு இன்புற்றனர். அதுகாலை கோவலனுடன் வந்த வானவூர்தியில் கண்ணகி ஏறி விண்ணுலகு செல்லு

ட்சியைக் கண்ட குறவர்கள் அச்செய்தியைச் செங்குட்டுவனிடம் கூற வந்த ர். அவர்கள் பலவகைப் பொருள்களை அரசனுக்குக் காணிக்கையாகக் ாண்டு வந்தனர். காணிக்கைப் பொருள்களை உணர்த்துமுகத்தான் ாங்கோவடிகள் அழகியதொரு காட்சியினை நமக்குக் காட்டுகின்றார். ணங்கு, குருளை, பறழ், களபம், குட்டி, உளியம், வருடை, மறி, ், கிள்ளை முதலிய இளமை மரபுப் பெயர்களை அவர் அமைத்திருக்கும் ழகு படித்துச் சுவைத்தற்குரியது. மலைபடு பொருள்கள் எல்லாவற்றை ் தொகுத்து ஒரு காட்சி மன்றத்தில் வைத்தமை போல அடிகளார் அப் ந்தியை அமைத்துள்ளார்.

6. இலக்கிய ஓவியம்—முத்தொள்ளாயிரம்

. பாண்டியனது தோற்றப் பொலிவை புலவர் எவ்வாறு சொல்லோ வியமாக அமைத்துள்ளார்? விளக்குக.

பாண்டியனது தோற்றப் பொலிவை புலவர், "கொற்கைக் குருதிவேல் றன் குளிர்சாந் தகலம்" என்று சொல்லோவியமாக அமைத்துள்ளார். தாற்கை என்பது பாண்டியர்க்குரிய கடற்கரை ஊராகும். பாண்டிய க்கு உரிய வேல் இரத்தக்கறை படிந்திருந்தமையின் குருதிவேல் எனப் ட்டது. மாறன் என்பது பாண்டியனுக்குரிய பெயர். குளிர்ந்த சந்தனம் சிய மார்பாதலால் பாண்டியனது மார்பு 'குளிர் சாந்தகலம்' எனப்பட்டது. ப்பாண்டியனது ஆண்மை, அருள் முதலியவற்றைச் சொல்லோவியம் றிப்பிடும்.

. முத்தொள்ளாயிர நூலாசிரியர் பாண்டியரது போர்க்களத்தின் சிறப்பினை எவ்வாறு படம் பிடித்துக் காட்டியுள்ளார்?

பாண்டியனுடைய படைகள் போர்க்களத்தில் பகைவருடன் போர்செய் ன. பகைவர்களில் பலர் இறந்தனர். அதனால் பகைவருடைய மனைவி ார்கள் போர்க்களத்தில் தீ வளர்த்து அதில் புகுந்தனர். இக்காட்சியினைக் ண்டான் பாண்டியன். அக்காட்சி அவனது மனத்தை உருக்கியது. அதனைக் ாணப் பொறுக்கமாட்டாமல் அவன் தனது கண்களை ஆடையால் மூடிக் காண்டான். அஃறிணைப் பொருளாகிய யானையினிடத்திலும் இத்தகைய ண்பு காணப்பட்டது. போரில் பகைவர்களுடைய ஆண்யானைகள் இறந் ன. அதனைப் பொருத அவற்றின் பெண் யானைகள் புலம்பின. அக்காட்சி யக் காணப் பொறுக்காத பாண்டியனது யானையும் தன் கண்ணைத் தும் க்கையால் மூடிக்கொண்டது' என்று முத்தொள்ளாயிர ஆசிரியர் பாண்டிய து போர்க்களத்தின் சிறப்பினைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

3. சோழனது யானையின் மறத்தினை ஆசிரியர் எவ்வாறு படம் பிடித்துக் காட்டியுள்ளார்?

'சோழன் வலிமை வாய்ந்தவன். அவனது ஆண் யானை போர்க்களத்தி ருந்து திரும்பியது. போர்க்களத்தில் வெற்றிகொண்டு திரும்பிய வீரரை ரவேற்க அவர்களுடைய மனைவிமார்கள் காத்திருப்பது போலவே, இந்த ண் யானைக்குரிய பெண் யானையும் இதனை வரவேற்கக் காத்துக்கொண்டி ந்தது. ஆனால் வெற்றிகொண்ட ஆண் யானை தனது பெண் யானையின் கத்தில் விழிக்க விரும்பவில்லை. விரும்பாமல் வெளிப்புறத்திலேயே ன்றுவிட்டது. பகைவர் கோட்டைகளைக் குத்தியதால் ஒடிந்த காம்புகளும், பகைவர்களுடைய முடியை இடறியதால் தேய்ந்த நகங்களும்

அதனுடைய அழகினைக் குறைத்தன. இக்காரணத்தால் அந்த ஆண் யானை தனக்குரிய பெண் யானைக்கு முன்பு செல்ல நாணியது' என்று ஆசிரிய சோழனது யானையின் மறத்தினைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

4. சோழனுடைய யானை அழகிழந்து காணப்படக் காரண என்ன?

பகைவர்களுடைய கோட்டையைக் குத்தியதனால் சோழனது யானை யின் கொம்புகள் முறிந்தன. பகைவர்களுடைய முடிகளை இடறியதால் அ னுடைய நகங்கள் தேய்ந்தன. இவற்றால் சோழனது யானை அழகிழந் காணப்பட்டது.

5. "வெள்ளம் தீப்பட்டது எனவெருவியது": எது? ஏன்? விளக்கு

செந்நிறம் வாய்ந்த ஆம்பற் பூக்கள் குளத்தில் மிகுதியாகப் பூத்து ளன. அவ்வாறு பூத்துள்ள காட்சி நெருப்பு எரிதலைப்போல் காணப்ப கிறது. நீரின்மீது தோன்றிய இச்செந்நிறம் வெள்ளம் தீப்பட்டதோ என் நினைக்குமாறு காட்சியளிக்கிறது. பறவைக் கூட்டங்கள் இவ்வாறு நினைத் மயங்கின.

6. 'பறவைக் கூட்டங்கள் எதனால் அஞ்சின? அஞ்சி யாது செய் தன?

குளங்களில் சிவந்த ஆம்பற் பூக்கள் பூத்திருக்கும். செந்நிறமுடைய காரணத்தால் அது நெருப்புப்போல் தோன்றும். இக்காட்சியினைக் கண்ட பறவைகள் வெள்ளம் தீப்பட்டுவிட்டதோ என்று அஞ்சித் தம் குஞ்சுகளை அணைத்துக்கொண்டு கத்தும்.

7. ஒழித்துக் காட்டணி என்றால் என்ன? உதாரணம் காட்டி விளக்குக.

ஓரிடத்தில் ஒரு பொருளை இல்லையென்று ஒழித்துக் காட்டுதல் ஒழித்துக் காட்டணியாகும். 'நின் குடைநிழற் கீழ் வாழ்பவர் சிவந்த சூரியனது வெம்மையே அல்லாமல் வேறு வெம்மையை அறியமாட்டார்கள்; இந்தி வில் அல்லாமல் பகைவரது கொலைவில்லை அறியமாட்டார்கள்; கலப்பையை அல்லது வேறு படைக்கலங்களையும் அறியார்' என்னும் கருத்துடைய பு நானூற்று அடிகளில் இவ்வணி அமைந்துள்ளது.

8. ஈங்கோய் எழுபது என்னும் நூலிலிருந்து சொல்லோவியத்துக்கு உதாரணமாகக் காட்டப்பட்ட காட்சி யாது? விளக்குக.

'செவ்விய இதழை உடைய காந்தட்பூவின்மேல் வண்டிருக்க, ஒளி பொருந்திய தீயில் மூழ்கியது என்று அஞ்சி, கிழப் பெண் குரங்கு ஒன்று எழுந்து எழுந்து கையை நெரிக்கின்ற ஈங்கோயே, சிவபெருமான் வாழும் குன்றாகும்' என்னும் காட்சியினை ஆசிரியர் சொல்லோவியத்துக்கு உதாரண மாக ஈங்கோய் எழுபதிலிருந்து காட்டியுள்ளார்.

செய்யுள் நலம் பாராட்டல்

(Literary Appreciation)

[பள்ளியிறுதித் தேர்வில் இப்பகுதிக்குரிய மதிப்பெண்கள் 10. எனவே, இதன் கண் மாணவர்கள் சிந்தையைச் செலுத்த வேண்டும்.]

செய்யுள் என்பது யாது?

நிலைபெற்ற உண்மையை அழகுபடக் கூறுவது செய்யுள். இனிமையும், எளிமையும், செம்மையும் வாய்ந்த நடையில், படிப்போருடைய உள்ளத்து உணர்ச்சியைத் தட்டி எழுப்பக்கூடிய விதத்தில் நல்லசெய்யுள் அமைந்திருக்கும். பிறர்க்குத் தெற்றெனப் புலப்படாமல், மக்கள் வாழ்க்கையிலும், இயற்கையமைப்பிலும் உறைந்து கிடக்கும் அழகினைச் சுவைபட எடுத்துக் காட்டுவது செய்யுள். ஆழ்ந்த கருத்துக்களைச் செவ்விய முறையில், கற்போர் உள்ளம் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் நல்ல சொற்கட்டுக்களின் வாயிலாக வெளிப்படுத்தும் வன்மை செய்யுளுக்கு உண்டு. கவிப் பேரரசராகிய கம்பர்,

> "புவியினுக்(கு) அணியாய் ஆன்ற
> பொருள்தந்து புலத்திற் ருகி
> அவியகத் துறைகள் தாங்கி
> ஐந்திணை நெறிய ளாவிச்
> சவியுறத் தெளிந்து தண்ணென்(று)
> ஒழுக்கமும் தழுவிச் சான்றோர்
> கவியெனக் கிடந்த கோதாவரி."

என்று சான்றோர் செய்யுளின் ஒழுக்கினைப் பேராற்றின் ஒழுக்கிற்கு உவமையாகக் காட்டுகின்றார். எனவே, பேராற்றின் செவ்விய ஒழுக்கைப் போன்றது நல்ல செய்யுள் என்பதனை நாம் உணரலாம்.

செய்யுள் எப்பொழுது வெளிப்படும்?

"உளங்கனிந்த போதெலாம் உவந்துவந்து பாடுவேன்" என்றார் தமிழிசை வளர்த்த பெரியார் ஒருவர். மனம் பண்பட்டபொழுதெல்லாம் செய்யுள் வெளிப்படும் என்னும் உண்மையை இவ்வடியினின்றும் நாம் உணரலாம். உள்ளம் எப்பொழுது பண்படும்? காலையிற் கடலிடையே கவின்பெறக் கதிரவன் எழுங் காட்சியைக் காணுங்காலும், மாலையிற் செக்கர் வானத்தைக் காணுங்காலும், இரவில் நிலவொளியைக் காணுங்காலும், முழு நிலவொளி நீலக்கடலின் மேற்பரப்பை வெள்ளித் தகடாக வேதிக்குங் காட்சியைக் காணும்பொழுதும், மலையினின்று இழியும் அருவியைப் பார்க்கும்பொழுதும், ஆற்று நீர் ஒழுக்கைக் காணுங்காலும், பச்சைக் கம்பளம் விரித்தாற்போல் விளங்கும் பசும்புற்றரையைப் பார்க்கும்பொழுதும், பன்னிற மலர்கள் பூத்திருக்கும் காட்சியைப் பார்க்கும்பொழுதும், தென்றல் வீசுதலை நுகரும்பொழுதும், வள்ளல்களின் வள்ளன்மையை உணரும் பொழுதும், அரசர்களுடைய வீரம், அரசியல், அருள் முதலியவற்றை உணரும்பொழுதும், காதலர் இருவர் கருத்து ஒருமித்து இல்லறத்தை நல்லறமாக நடத்துதலை நோக்கும்பொழுதும் புலவர்களுடைய உள்ளம் பண்படும். அவ்வாறு பண்பட்ட நிலையில் புலவன் தன்னையும், தன்னைச் சூழ்ந்திருக்கும் பொருள்

களையும் மறப்பான்; கண்ட காட்சியில் கருத்தை இருத்துவான். பண்ப அவனது உள்ளத்திலிருக்கும் கருத்துக்கள் அப்பொழுது பாடல்கள வாயிலாகத் தட்டுத்தடையின்றி வெளிப்படும். உள்ளம் பண்பட்ட நிலை தானாக வெளிப்படுவதுதான் உண்மைக் கவியாகும்.

செய்யுளைச் சுவைக்கும் பான்மை

மணமிக்க மலரைச் செய்யுளுக்கு உவமை காட்டலாம். மலருக்கு உ உருவம், தோற்றம், மென்மை, நிறம், மணம், அழகு, அமைப்பு ஆகியவ செய்யுளின்கண் உள்ளன. அழகிய ரோஜா மலர் ஒன்றைக் கையில் எடு வுடன் சிலர் அதனைப் பன்முறை முகர்ந்து பார்ப்பர். முடிவில் அம்ம கசங்கிவிடும். சிலர் அம்மலரை முகர்ந்து பார்ப்பதுடன் அமையாம அதன் இதழ்களைக் கிள்ளிக் கிள்ளி வாயில் போட்டு மென்று தின் அத்தகையோரை அழகுணர்ச்சி (Aesthetic sense) அற்றவர் என்னலா புலவன் ஒருவன் அம்மலரைக் கண்டால் யாது செய்வான்? அவன் அத காம்பினைப் பிடிப்பான்; மெல்லத் தூக்கிப் பிடித்து எதிரில் நிறுத்துவா அதன் அழகினைச் சுவைப்பான். அவன் அம்மலரின் அழகில் ஈடுபட்டு, ' எத்துணை அழகிய மலர்! என்னே இதன் தோற்றம்! என்னே இத அமைப்பு! இதன் இதழ்களை இத்துணை அழகுபட அடுக்கியவர் யா ஆ ஆ! இதன் இதழ்கள் எவ்வாறு சூழ்ந்துள்ளன! வெண்மையும், செம்ம யும் கொண்ட மெல்லிய கோடுகளை இதன்கண் வரைந்த ஓவியன் யாவன் இதன் மணம் என் மனத்தை மயக்குகின்றதே! என்னே! என்னே! எ குழந்தையின் கன்னத்தைப்போல் அழகுடன் இது விளங்குகிறதே!' எ றெல்லாம் நினைப்பான். அவனது கற்பனைக் குதிரை கட்டுக் கடங்காம ஓடிக்கொண்டிருக்கும். புலவன் மலரைச் சுவைப்பது போலவே நாமும் செ யுளைச் சுவைக்கவேண்டும். செய்யுளைப் பார்த்தவுடன், அச்செய்யுளுக்கு பதவுரை, பொழிப்புரை, கருத்துரை முதலியவற்றையும், அதன்கண் அமை திருக்கும், இலக்கணக் குறிப்பு, அணிகள் முதலியவற்றையும் அப்பாட லிருந்து எத்தகைய வினாவினைத் தேர்வில் கேட்பர் என்பதையும் ஆராய் தால் செய்யுளைச் சுவைக்கமுடியாது. செய்யுளின் பொருளை ஓரளவு உணர் தால்தான் செய்யுளை நன்கு சுவைக்கமுடியும் என்பது உண்மையே. ஆன அதனை அணு அணுவாகச் சிதைத்து நோக்கினால் அதன் அழகைச் சுவைக் முடியாது.

செய்யுளுக்கும் உரைநடைக்கும் உள்ள வேறுபாடு

புலவர்கள் தம் உள்ளம் பண்பட்ட நிலையில் பாடல்களைப் பாடினர் அவர்கள் ஏன் தம் உள்ளக் கருத்துக்களைச் செய்யுள் உருவில் வெளிப்படு தினர்? உரைநடையில் வெளிப்படுத்தக் கூடாதா? உரைநடையில் வெளி படுத்தும் வன்மை அவர்களிடம் அமைந்திருக்கவில்லையோ? அற்றன்று உரைநடையாகக் கூறும் ஒரு கருத்தினைப் படிப்போரின் மனத்தி பதிய வைப்பது அரிதாகும். செய்யுளுருவில் அக்கருத்தினை வெளிப்படுத் ல் அது கற்போர் மனத்தில் நன்கு இடம்பெறும். இசையுடன் இயைப்பத குச் செய்யுள் நடையே ஏற்றது. இத்தகைய காரணங்கள் பற்றியே புலவ கள் தம் கருத்துக்களைச் செய்யுள் உருவில் வெளிப்படுத்தினர் என்னலாம் மேலும், புலவர் ஒருவருடைய உள்ளத்திலிருக்கும் கருத்தானது தட்டுத் தட கலின்றிச் செய்யுளுருவில்தான் வெளிப்படும் என்பர் அறிஞர். இயற்கை யாக எழுவது செய்யுள். உணர்ச்சியின் உருவமே செய்யுள். எனவே

யுளுக்கும் உரைநடைக்கும் அடிப்படையிலேயே வேறுபாடு உள்ளது பதனை நாம் உணரலாம்.

செய்யுள் நலம் பாராட்டற்குரிய வழிகள்

1. முதற்கண் செய்யுளைப் பன்முறை படித்துப் பார்த்தல் • இயன்றால் னும் ஓர் இசையில் அமைத்துப் படித்தல்.
2. புலவனது வரலாற்றை ஓரளவு உணர்தல்.
3. புலவன் செய்யுளைப் பாடிய சூழ்நிலையை உணர்தல்.
4. செய்யுளின் உயிர்நிலைக் கருத்தை உணர்தல்.
5. புலவனது உணர்ச்சியை உணர முயலல்.
6. புலவன் அச்செய்யுளின் வாயிலாக உணர்த்த முற்படும் உண் மை அறிய முயலல்.
7. சொற்கள் எவ்வாறு நயம்பட அமைக்கப்பட்டுள்ளன என்று ய்ந்து பார்த்தல்.
8. கருத்தினைப் புலவன் எம்முறையில் வெளிப்படுத்தியுள்ளான் என் ஏன் அந்த முறையில் வெளிப்படுத்தியுள்ளான் என்றும் ஆராய்தல்.
9. செய்யுளிற் காணப்படும் கற்பனை நயத்தை உணர்தல்.
10. செய்யுளில் அமைந்திருக்கும் அணியினைக் காணுதல்.

தேர்வில் செய்யுள் நலம் பாராட்டி எழுதுதல்

1. செய்யுள் எந்நூலிலிருந்து எடுத்துத் தரப்பெற்றுள்ளது என்று ஒரு று ஊகித்தறியுங்கள். செய்யுளின் கதைப் பகுதியிலிருந்தும், செய்யுளில் ம் பெயர்களிலிருந்தும் அதனை ஒருவாறு உணரலாம்.

2. செய்யுளை 5, 6 முறைகள் ஆழ்ந்து படித்துப் பாருங்கள். அவ்வாறு த்தால் செய்யுளைப் பற்றிய பொதுவான கருத்து ஒன்று உங்களுக்குத் ன்றும்.

3. இயன்றவரையில் செய்யுளின் பொருளை உணர முயலுங்கள். ஞ்சொற்கட்குப் பொருள் தெரியவில்லையே என்று கலங்க வேண்டாம்; ம் பாராட்டி எழுதத் தயங்க வேண்டாம். இடம் அறிந்து, பொருத்தம் ந்து ஒருவாறு பொருளை ஊகித்துக் கொள்ளுங்கள்.

4. செய்யுளின் உயிர்நிலைக் கருத்தை ஒருவாறு உணர முயலுங்கள்.

5. பிறகு, செய்யுள் நலத்தைப் பாராட்டி எழுதத் தொடங்குங்கள். அவ் று எழுதுங்கால், ஆசிரியர் செய்யுளின் உயிர்நிலைக் கருத்தை எவ்வாறு ளிப்படுத்தியுள்ளார் என்பதையும், வெளிப்படுத்தும் முறையையும், ற்களின் முறை வைப்பில் உள்ள அழகையும், சொற்களில் அமைந்து க்கும் நயத்தையும் குறிப்பிடுங்கள். புலவர் ஏதேனும் அணியையோ, கிய தொடையையோ ஆங்கு அமைத்திருந்தால் அதனைக் குறிப்பிட மற ர்கள்.

6. புலவர் அப்பாடலின் வாயிலாக வெளிப்படுத்தும் உண்மையை வில் எழுதுங்கள்.

7. மேற்கண்டவாறு எழுதப்பெற்ற பகுதி, அடித்தல்களுடனும், த்தங்களுடனும் இருக்குமேல், அப்படியைத் திருத்தமில்லாப் படி (Rough py) யாக வைத்துக்கொண்டு, திருத்தமான படி (Fair copy) ஒன்றை

எழுதுங்கள். அப்பகுதியின் தலைப்பில் 'திருத்தமான படி' என்றெழுத மற[ந்]தீர்கள்.

8. மேற்கூறியவாறு எழுத இயலாவிடில், கொடுக்கப்பட்டிருக்[கு]ம் செய்யுட்பகுதிக்குப் பொழிப்புரையையேனும் எழுதுங்கள்.

காட்டுகள்

காட்டு I

"காமர் கயல்புரளக் காவி முகைநெகிழத்
தாமரையின் செந்தேன் தளையவிழப்—பூமடந்தை
தன்னுட்டம் போலுந் தகைமைத்தே சாகரஞ்சூழ்
நன்னாட்டின் முன்னாட்டும் நாடு."

—நளவெண்[பா]

"வெண்பாவிற் புகழேந்தி" என்று புலவர்களால் பாராட்டப்பெ[ற்ற] புகழேந்திப் புலவர் நளனுக்குரிய நிடத நாட்டை ஈண்டு வர்ணிக்கின்[றார்]. ஒரு நாட்டில் வாழும் மக்கள் இன்பமுடன் இருந்தால் அந்நாட்டின் அழ[கை] வருணிப்பது எளிது. மக்கள் எப்பொழுது இன்பமுடன் இருப்பர்? நாட்[டில்] வளப்பம் மிகுந்து, பசியும் பிணியும் இன்றி இருந்தால் மக்கள் இன்பம[ாக] வாழ்வர் என்பதனைச் சொல்லவும் வேண்டுமோ? எனவே, நிடத நாட்[டு] மக்கள் பசியின்றி வாழ்ந்தனர் என்று சொல்ல விழைந்தார் புலவர் புகழே[ந்தி]யார். அதனை நேர் முகமாகக் கூறிவிட்டால் சுவை மிகுதியாக இரா[து]. ஆராய்ந்து பார்ப்போர்க்குக் குறிப்பினால் புலப்படக் கூடியவாறு பாடினா[ல்]தான் சுவை இருக்கும். அதனைக் கருத்திற்கொண்ட புகழேந்தியார் நிட[த] நாட்டின் வளத்தைக் குறிப்பினாற் புலப்படுத்துகின்றார்.

கடல்சூழ்ந்த இவ்வுலகில் நிடத நாடு எல்லா நாடுகட்கும் முன்னதாக[க்] கருதப்பட்டது என்கின்றார் புலவர். அவ்வாறு கருதப்பட்டது ஏன்? அ[ந்]நாடு பூமிதேவியின் கண்போல் விளங்கியது. பூமியை ஒரு பெண் என்று[ம்] பெண்ணின் முகத்திற்குக் கண் அழகைத் தருவதுபோல, பூமியாகிய பெ[ண்]ணின் முகத்திற்கு நிடத நாடு கண்போல் இருந்து அழகு தந்தது என்று புலவர் ஈண்டுக் கூறியுள்ளார்.

நிடத நாடு பூமிதேவியின் கண்போல் விளங்கியது. இவ்வுவமை பொரு[ந்]துமாறு புலவர் பாடியுள்ளார். நிடத நாட்டில் மீன்களும், நீல மலர்களும் தாமரை மலர்களும் விளங்கின. மீனும், நீல மலரும் தாமரை மலரும் பெண்ணின் கண்களுக்கு உவமையாகக் கூறப்படுத[ல்] உண்டு. நிடத நாட்டில் மீன்கள் புரளுங் காட்சியும், நீலமலர் பூத்திருக்கு[ங்] காட்சியும், தாமரை பூத்து, அதனிடமிருந்து தேன் துளிக்குங் காட்சியும் பு[ல]வருடைய மனக்கண் முன் தோன்றின. அவை பூமிதேவியின் கண்களை[ப்] போல் தோன்றுவதாகப் புலவர்க்குக் கற்பனை உண்டாயிற்று. எனவே பூமிதேவியின் கண்ணைப்போல் விளங்கியது நிடத நாடு என்று புலவர் பாடி[னா]ர். உவமை எத்துணைப் பொருத்தமாக உள்ளது!

இனி, இப்பாடலை ஆராய்ந்து பார்த்தால் அந்நாட்டின் வளம் நமக்கு நன்கு புலப்படும். புது நீரில் கயல்கள் புரளும். நீல மலரும், தாமரையும் நீர் மிகுந்த இடத்தில் பூக்கும் தன்மை உடையன. எனவே, மீன்கள் புரளு[]தல், நீல மலர் பூத்தல், தாமரை பூத்துத் தேன் சொரிதல் ஆகியவை அந்நாடு நீர்வளம் மிக்க நாடு என்பதனைக் குறிப்பினால் வெளிப்படுத்து[ம்]. நீர்வளம்

நாட்டில் பயிர்கள் செழித்து வளரும் என்பதையும், அந்நாட்டு மக்கள் ன்றி இன்பமாக வாழ்வர் என்பதையும் வெளிப்படையாகக் கூறவும் டுமோ ?

"நாடென்ப நாடா வளத்தன" என்றார் திருவள்ளுவனார். நாடென் பல்வகைச் செல்வங்களைத் தன்னகத்தே கொண்டிருக்க வேண்டும். எல் செல்வங்கட்கும் அடிப்படையானது நீர்வளம் ஆகும். அதுபற்றித் புகழேந்தியார் நிடத நாட்டின் நீர்வளத்தைக் குறிப்பிட்டார். அந் டின் மக்கள் கவலையற்று வாழ்ந்தனர் என்பதே அவரது உட்கிடை ம். பாடலை ஆராய்ந்து பார்ப்போர்க்கே இவ்வுண்மை புலப்படும். ழந்தியார் எத்துணைச் சுவையும், அழகும் அமையுமாறு, நிடத டைச் சிறப்பித்துள்ளார்! இத்தகைய சுவை மிக்க பாடல்களைப் பாடிப் ழ ஏந்திய காரணத்தினால்தான் அவருக்குப் புகழேந்தியார் என்னும் ர் வந்ததுபோலும்!

காட்டு II

"அருந்தும் மெல்லட(கு) ஆரிட
அருந்துமென்(று) அழுங்கும்
விருந்து கண்டபோ(து) என்னுறு
மோவென்று விம்மும்
மருந்தும் உண்டுகொல் யான்கொண்ட
நோய்க்கென்று மயங்கும்
இருந்த மாநிலம் செல்லரித்
திடவுமாண்(டு) எழாதாள்."

— கம்ப ராமாயணம்.

காப்பிய அழகுகள் யாவும் நன்கு அமையப்பெற்ற நூல் கம்பராமா ணம். கம்பர் தமிழ் நூல்கள் பலவற்றைக் கற்றவர்; தமிழ் நாட்டில் வாழ்ந் ர்; தமிழ் மக்களோடு பழகியவர்; தமிழ்ப் பண்பாடுகளை நன்கு அறிந் ர். வடநாட்டுக் கதையை அவர் தமிழிற் பாடினார் என்பது உண்மையே. ன், அவர் சீதையைத் தமிழ்நாட்டுக் கற்புடைப் பெண்ணாக அமைத்துள் ர். கணவனைப் பிரிந்த கற்புடைத் தமிழ்க் காரிகையின் நிலையைச் சங்கப் வர்கள் பாடியுள்ளனர். அவற்றையெல்லாம் நன்கு உணர்ந்த கம்பர் தயினிடம் அந்நிலையை அமைத்துள்ளார்.

அசோகவனத்தில் தனித்திருந்த சீதை பலவற்றை எண்ணி வருந்தினாள். ட்டில் இராமன் உண்ணுதற்கேற்ற இலையுணவை அவனுக்கு யார் இடு ர் என்று நினைத்த அளவில் அவளுக்கு ஏக்கம் உண்டாயிற்று. அன்புடை ல்லாள் அண்மையில் அமர்ந்து இனிது ஊட்டினால் கணவன் வயிறார உண் ன். இராமனும் அத்தகைய பண்புடையவனாக இருந்தான். தான் இல் மையால் இராமன் எவ்வாறு இலையுணவை உட்கொள்வான் என்று த நினைத்தமை கற்புடைப் பெண்டிருக்கு இருக்கவேண்டியதொரு பண் கும். கம்பர் ஈண்டு 'மெல்லடகு' என்றார். கணவனுடைய விருப்பத்தை ிந்து சுவையை அறிந்து, மெல்லிய இலைத் தளிர்களைப் பொறுக்கி எடுத்துக் ாடுக்கும் தன்மை அன்புடைய மனைவியினிடம்தான் அமைந்திருக்கும். மல்லடகு' என்னும் சொற்றொடர் இராமனிடம் சீதைக்கு அமைந்திருந்த ழ்ந்த அன்பினைக் குறிப்பினால் சுட்டிக் காட்டும்.

"துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை"

என்றார் வள்ளுவனார். கணவனும் மனைவியும் கருத்தொருமித்திருந்து விருந்தினரை உபசரிக்க வேண்டும் என்றும், அவ்வாறு உபசரித்தல் இல்வாழ்க்கைக்குரிய கடமையாகும் என்றும் தமிழர்கள் கருதினர். விருந்தினர் வந்தால், ஊடல் கொண்டிருந்த மனைவியும் தன் ஊடல் நீங்கப்பெற்று, கணவனுடன் சேர்ந்து, வந்த விருந்தினரை உபசரிக்க வேண்டும் என்று அகப்பொருள் இலக்கணம் கூறுகின்றது. இவற்றை நினைவிற்கொண்ட கம்பர், "விருந்து கண்டபோது என்னுறுமோ என்று விம்மும்" என்று அமைத்தார். இல்லறத்தில் ஈடுபட்டிருக்கும் மகளிர்க்கு இன்றியமையாமல் வேண்டிய பண்பினைக் கம்பர் சீதைக்கு ஈண்டு அமைத்துள்ளார்.

சீதைக்குப் பெருந் துன்பநோய் வந்திருந்தது. இராமன் பிரிவு அத்தகைய நோயைத் தந்திருந்தது. அந்நோய்க்கு மருந்து வேறில்லை. இராமனைச் சேர்தலே அந்நோய் நீங்குதற்கு வழியாகும். இராமன் வருதற்குரிய குறிகள் காணப்பட்டிலவாதலால் சீதை, "மருந்தும் உண்டுகொல்" என்று நினைத்தாள். மருந்து இல்லை என்ற எண்ணம் வந்தவுடன் அவள் மயங்கியமை இயல்பேயாகும்.

சீதை தான் அமர்ந்திருந்த இடத்தை விடுத்துச் சிறிதும் நகர்ந்திலள். அவள் இருந்த இடத்தைச் செல் அரித்தது. ஆயின், அவள் அதனை உணர்ந்திலள்; அதனால் வரும் துன்பத்தை நினைந்திலள். அவளுடைய உயிரும் உணர்வும் இராமனிடம் இருந்தன. எனவே, அவள் செல் அரித்ததை அறியாமல், அவ்விடத்தை விடுத்து அகலாமல் இருந்தாள்.

சீதைக்கு இராமனிடம் அமைந்திருந்த ஆழ்ந்த அன்பு, அவளிடம் இருந்த இல்லறப் பண்பு. அவளது ஒருமைப்பாடு முதலியவற்றைக் கம்பர் ஈண்டுச் சுவைபட அமைத்துள்ளார். கணவனைப் பிரிந்த கற்புடைக் காரிகையாரின் நிலைக்குச் சீதையை ஓர் எடுத்துக்காட்டாகக் கம்பர் அமைத்துள்ளார் என்று கூறுதல் பொருந்தும்.

காட்டு III

" உடைப்பெருஞ் செல்வர் மனைப்புகு மளவும்
இடைக்குல மடந்தைக்(கு) அடைக்கலம் தந்தேன்
மங்கல மடந்தையை நன்னீ ராட்டிச்
செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் தீட்டித்
தேமென் கூந்தற் சின்மலர் பெய்து
தூமடி உடீஇத் தொல்லோர் சிறப்பின்
ஆயமும் காவலும் ஆயிழை தனக்குத்
தாயும் நீயே யாகித் தாங்கு."

—சிலப்பதிகாரம்

தமிழ் மொழியிற் பெருங்காப்பியத்திற்கு வழிகாட்டிய பெருமை இளங்கோவடிகட்கு உரியது. அவருடைய செய்யுள் அடிகள் சொற்சுவையும், பொருட் சுவையும் கொண்டு விளங்கும் என்று சொல்லவும் வேண்டுமோ?

கோவலனுக்கும் கண்ணகிக்கும் வழித்துணையாக வந்தார் கவுந்தியடிகள். அகப்பற்றையும் புறப்பற்றையும் அறவே துறந்த அவ்வடிகள் தம்மை அண்டிய கண்ணகியைக் காவலான ஓர் இடத்தில் இருத்த எண்ணினர். கண்ணகியை யாரிடம் அடைக்கலமாக அளிக்கலாம் என்ற நினைவு அவருக்

கது. அந்நிலையில் மாதரி என்னும் இடைக்குல மகள் ஆங்கு வந்தாள். க்களைப் போற்றியும், பசுவின் பயனைப் பிறர்க்கு அளித்தும் வாழ்க் யை நடத்துகின்ற கோவலர் வாழ்க்கையின் தூய்மை கவுந்தியடிகளின் னவுக்கு வந்தது. எனவே, கவுந்தியடிகள் கற்புடைக் காரிகையாகிய ண்ணகியை மாதரியினிடம் அடைக்கலமாக அளிப்பதில் தீங்கில்லை என்று டிவு செய்தார்.

அவ்வாறு அடைக்கலமாகத் தருங்கால் கவுந்தியடிகள், 'மாதரியே! கல மடந்தையாகிய கண்ணகியை நான் உன்னிடம் அடைக்கலமாக ரித்தேன். நீ அவளை நன்னீராட்டு; அவளுடைய கண்களில் மை தீட்டு; ந்தலில் மலர் சூட்டு; அவளுக்குத் தூய ஆடையை உடுத்து; அவளுக்குத் ாழியாகவும், செவிலித் தாயாகவும், நற்றாயாகவும் இருந்து தாங்கு' ன்று கூறினர். இவ்வாறு கவுந்தியடிகள் கூறுவதாகக் கூறும் இளங்கோ டிகள் கண்ணகியினுடைய ஏற்றம், தோற்றம், அழகு, மென்மை, மடம், ாமை, பெண்மை ஆகியவற்றை நன்கு வெளிப்படுத்தியுள்ளார். கண்ண யை அடிகள் ஈண்டு 'மங்கல மடந்தை' என்கின்றார். 'மங்கலம்' என்னுஞ் ால் அழகிய தோற்றத்தைக் குறிக்கும். 'நன்னீராட்டி,' 'அஞ்சனம் டி,' 'மலர் பெய்து.' 'மடி உடீஇ' என்பன எவற்றைக் குறிக்கின்றன ? வை, கண்ணகி தானகவே நீராடற்கும், அஞ்சனம் தீட்டிக் கொள்ளுதற் ம், மலரைச் சூட்டிக் கொள்ளுதற்கும், ஆடையை உடுத்திக் கொள்ளுதற் ம் அறியமாட்டாள் என்பதையும், அவள் அத்துணை இளமையும், மடமை ம் வாய்ந்தவள் என்பதையும், செல்வச் செழுமையில் அவள் வாழ்ந்தவள் ன்பதையும் விளக்குகின்றன.

கண்கள் அழகுற அமையப்பெற்றவள் கண்ணகி. அக்காரணம்பற்றியே வட்கு அப்பெயர் அமைந்ததோ என்றும் கருத இடமுண்டு. அக்கருத் னைச் 'செங்கயல் நெடுங்கண்' என்னும் சொற்றொடர்கள் வலியுறுத்துகின் ன. செவ்வரி பரந்து, மீன்போல் பிறழும் தன்மை கொண்டு, நீண்டு ளங்குதல் அழகிய கண்ணுக்கு இலக்கணமாகும். அத்தகைய அழகிய ண்ணினை உடையவள் கண்ணகி என்பதை இளங்கோவடிகள் ஈண்டுக் றிப்பிட்டுள்ளார்.

பெண்டிர்க்கு அழகு தருவனவற்றுள் கூந்தலும் ஒன்று. கண்ணகியின் ந்தல் இனிமையும், மென்மையும் வாய்ந்திருந்தது. அவளும் மெல்லிய யல்பினை உடையவளாக இருந்தாள். அவளுடைய கூந்தலில் பன்மலர் ளைச் சூட்டினல், அவற்றின் சுமையைத் தாங்கமாட்டாமல் அவள் துன்புறு ாள். அதுபற்றியே, அடிகள் ஈண்டு, "தேமென் கூந்தல் சின்மலர் பய்து'' என்றார்.

கண்ணகிக்குத் தோழியர்போலவும், செவிலித் தாய்போலவும், நற்றாய் பாலவும் இருந்து தாங்குமாறு கவுந்தியடிகள் மாதரியினிடம் கூறினர். கண் ணகி தன் காதலனுடன் கல்லிலும் முள்ளிலும் கால்கள் கடுக்கக் கடுகி டந்து வந்தாள் என்பது உண்மை. கற்பின் திட்பம் இருந்தமையாலேயே வளால் அவ்வாறு வரமுடிந்தது. எனினும், அவள் இளமை மாறாதவளா லால் தோழியருடன் விளையாட விரும்புவாள். தாய்மாரின் அன்புரைகளை ிரும்புவாள். இவற்றைக் கருத்தில் இருத்தியே இளங்கோவடிகள் ஆயமும் காவலும் ஆயிழை தனக்குத் தாயும் நீயே யாகித் தாங்கு'' என்று வுந்தியடிகள் கூறியதாகப் பாடினர்.

பெண்மையின் பண்புகளை நுட்பமாக உணர்ந்த இளங்கோவ அப்பண்புகளையெல்லாம் கண்ணகியினிடம் நன்கு அமைத்துள்ளார் என உண்மையை இவ்வடிகளிலிருந்து நாம் நன்கு உணரலாம்.

காட்டு IV

" கொடிமதில் பாய்ந்திற்ற கோடும் அரசர்
முடியிடறித் தேய்ந்த நகமும்—பிடிமுன்பு
பொல்லாமை நாணிப் புறங்கடை நின்றதே
கல்லார்தோட் கிள்ளி களிறு."

—முத்தொள்ளாயி

சோழனது யானையின் வீரத்தைப் பாராட்டுகின்றது இப்பா சோழனது யானையின் வீரத்தைக் கூறுவதுபோல் அவனது வீரத் பாராட்டுவதே புலவரின் உட்கிடை. சோழனது யானை ஒடிந்த கொ களுடனும், தேய்ந்த நகங்களுடனும் நின்றது. ஏன்? பகைவர்களுடை மதில்களை மோதிப் பெயர்த்த காரணத்தால் அதனுடைய கொம்ப உடைந்தன. 'கொடிமதில்' என்பதனால் பகைவர்கள் பேரரசர்கள் என விளங்கும். மதில்களைப் பெயர்த்த செய்தி, பகைவர்களுடன் போர் பு பகைவர் நாட்டினுள் நுழைந்த செய்தியைக் குறிக்கும். அரசர்களுடை தலைகளை இடறிய காரணத்தால் யானையின் நகங்கள் தேய்ந்தன. இதிலி பகையாளர்கள் முடிவேந்தர் என்றும், அவர்கள் யாவரும் போர்க்கள இறந்துவிட்டனர் என்றும் அறியலாம். யானையினுடைய வீரச்செயல் ஈ நன்கு விளக்கப்பட்டுள்ளது. ஒடிந்த கொம்புகளுடனும், தேய்ந்த நகங்க னும் இருந்த யானை தனக்குரிய பெண் யானையைக் காணநாணியது. என் அதன் பெருமிதம்! என்னே அதன் காதல் உணர்ச்சி! நாணமடைந்த ய வெளியிலேயே நின்றது என்கின்றார் புலவர். யானைக்கு எத்துணை பெருமிதப் பண்பை ஏற்றிக் கூறியுள்ளார் புலவர்! விலங்காகிய யானை அத்துணை உணர்ச்சியிருக்குமேல், மக்களுக்கு எத்துணை உணர்ச்சி இ கும்! ஒடிந்த கொம்புகளும், தேய்ந்த நகங்களும் பொல்லாதன என்று யானை எண்ணியது. உண்மையில் அவை பொல்லாதனவோ? அவை வ திற்கு அறிகுறிகள் அல்லவோ? வீரர்கள் புண்ணினைத் தம் கண்ணெ கருதுவரன்றே! வெற்றித் திருமகள் விருப்புடன் அளித்த முத்தி யன்றோ போரில் கிடைக்கும் புண்! அப்புண்ணின் சிறப்பினை முகமாகக் கூறிவிட்டால் அத்துணைச் சிறப்பு இராது என எண்ணியே புல இங்ஙனம் கூறினர். நாமாக ஆராய்ந்து பார்த்து, சீர்தூக்கிப் பார்த் முடிவுக்கு வந்து அவ்வுண்மையை உணரவேண்டும் என்னும் கருத்தினாலே புலவர் இங்ஙனம் கூறியுள்ளார். யானையின் பெருமிதத்தினை இதனி அழகாக எங்ஙனம் கூறமுடியும்?

பொதுக் கட்டுரைகள்

[பள்ளியிறுதித் தேர்வில் இப்பகுதிக்கு 15 மதிப்பெண்கள். ஆண்டு டக்கத்திலிருந்தே கட்டுரைகள் எழுதிப்பழகுவதால், மாணவர் ன் பெறுவர்.] மாணவர்கள் கட்டுரை எழுதுங்கால் இடையிடையே க்குறள் அடிகளை மேற்கோள்களாகக் காட்டுதல்தக்கது. அதற் துணையாக இருக்கும்பொருட்டே இவ்வுரை நூலின்கண், திருக்குறள் கள், அடிக் குறிப்புக்களாக அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் இயன் வற்றைத் தொகுத்துக் கருத்தில் இருத்துங்கள்.

1. பொதுக் குறிப்புகள்

கட்டுரை இரண்டு பக்க அளவில் இருத்தல்வேண்டும்.

பள்ளிகளில் தமிழ்க் கல்வி ஒரு பாடமாக அமைக்கப்பட்டிருப்பது ஏன்? னை மாணவர்கள் நன்கு சிந்தித்துப் பார்த்தல்வேண்டும். மாணவர்கள் தாய் மொழியாகிய தமிழ் மொழியில் சிறந்ததோர் அறிவினைப் பெற்றி தல்வேண்டும் என்பதும், தம் மனத்தில் தோன்றும் கருத்துக்களைத் ளிவாக எழுதவும், பேசவும், பிறர்க்கு உணர்த்தவும் திறம் பெற்றிருக்க ண்டும் என்பதும், பிழையின்றி அவற்றை வெளிப்படுத்தும் ஆற்றல் ற்றிருக்கவேண்டும் என்பதும் அதற்குரிய நோக்கங்களாம். இத்தகைய க்கங்கள் நல்ல முறையில் நிறைவேறினல் மாணவர்கள் பெருந் தகுதி ற்று விளங்குவர் என்பது ஒருதலை. அந்நோக்கங்களை மாணவர்கள் தம் த்தில் இருத்துதல் வேண்டும்.

) கட்டுரைக்குரிய செய்திகளைச் சேகரித்தல்

1. நூல் நிலைய நூல்களைப் படிக்குங்கால் கட்டுரை யெழுதுவதற்கு ற செய்திகள் ஆங்காங்குக் காணப்படும். இன்றியமையாப் புள்ளி விவரங் , புதிய செய்திகள், கருத்துக்கள் முதலியவற்றைக் காண நேரிடின் அவற் க் குறிப்புப் புத்தகம் ஒன்றில் குறித்து வைத்துக் கொள்ளுதல்வேண்டும். சிறந்த எழுத்தாளர்கள் எழுதிய நூல்களைப் படிங்குங்கால் அவற்றுட் ணப்படும் அழகிய சொல்லாட்சிகள், பழமொழிகள், பொன் மொழிகள், புத் தொடர்கள், மேற்கோள்கள், உவமைகள் முதலியவற்றைக் குறித்து த்துக் கொள்ளுதல் வேண்டும்.

2. நாட்செய்தித் தாள்களைத் தவறுமல் நாள்தோறும் மாணவர்கள் த்தல்வேண்டும். கட்டுரை எழுதுவதற்குவேண்டிய செய்திகள் பலவற்றை வற்றிலிருந்துபெற இயலும். வார வெளியீடுகள், பிறை வெளியீடுகள், கள் வெளியீடுகள், ஆண்டு மலர்கள் முதலியவற்றைப் படிக்கும் பொழுது ிய பெரிய கருத்துக்கள் பலவற்றை அறிந்து கொள்ளலாம். அவற்றை ல்லாம் குறிப்புப் புத்தகத்தில் குறித்து வைத்துக் கொள்ளுதல்வேண்டும்.

3. பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள மாணவர் கழகங்களில் சொற்பொ வுகள் பல நிகழும் அன்றே? பல துறைகளில் வல்லுநர்கள் வந்து சொற் ாழிவுகள் ஆற்றுங்கால், அவ்வறிஞர்கள் கூறும் சிறந்த கருத்துக்களைக் த்து வைத்துக் கொள்ளுதல் வேண்டும். பள்ளிகளில் சேராமல் வீட்டி யே பயின்று தேர்வு எழுதும் மாணவர்கள், சொற்பொழிவுகள் கேட்ப கு வாய்ப்புக்கள் கிடைக்கும் பொழுதெல்லாம் இவ்வாறு குறிப்புக்கள்

சேகரித்து வைத்துக் கொள்ளுதல் வேண்டும். எனவே, நூல் நிலைய நூ களைப் படிப்பதனாலும் செய்தித் தாள்கள் முதலியவற்றைப் படிப்பதனாலு சொற்பொழிவுகளைக் கேட்பதனாலும் பொதுக் கட்டுரைகள் எழுதுவதற் உதவும் குறிப்புக்கள் பலவற்றை மாணவர்கள் சேகரிக்கலாம்.

(ஆ) கட்டுரையைத் திறம்பட அமைத்தல்

1. பள்ளியில் கட்டுரை வகுப்புக்கள் நடைபெறுகின்றன. அத்தகைய வகுப்புக்களை மாணவர்கள் நன்கு பயன்படுத்துதல் வேண்டும். உண மையை உரைப்பின் மாணவர்கள் பலர் கட்டுரைக்கென்று தரப்பெறு நேரம் முழுவதையும் பயன்படுத்துவதில்லையென்பதை வருத்தத்துடன் குறி பிடாமல் இருக்க இயலவில்லை. நேரம் முழுவதையும் மாணவர்கள் நன் பயன்படுத்துதல் இன்றியமையாதது. வகுப்புக்களை நடத்தும் தமிழ் ஆசி யர்களைக் கேட்டு, அரிய கருத்துக்கள் பலவற்றை மாணவர்கள் அறிந் கொள்ளுதல் வேண்டும்.

2. திருத்தப்பெற்ற கட்டுரைகளை மாணவர்கள் ஊன்றிப் பார்த் திருத்தப் பெற்றுள்ளவாறு திருத்துதல் வேண்டும். கட்டுரையைத் திருத்தி ஆசிரியர் குறிப்பிட்டுள்ள பிழைகள் மறுபடியும் கட்டுரையில் வருதல் கூடா இவ்வாறு மாணவர்கள் எச்சரிக்கையாக இருந்து, பிழைகளை அகற்றி கொண்டு வந்தால் நாளடைவில் கட்டுரையில் பிழைகள் இடம் பெரு.

3. கருத்துப் பிழைகள் எனச் சிலவிடங்களில் கட்டுரை திருத்திய ஆ ரியர் குறிப்பிட்டிருந்தால், அவற்றைப்பற்றி ஆசிரியருடன் உரையாடி, அவ றைத் திருத்தமாக அறிந்து கொள்ளுதல் வேண்டும். இதற்குக் கட்டுரை வகுப்பில் நேரம் கிடைத்தல் அரிது. ஆசிரியர்கட்கு ஓய்வு கிடைக்கும்பொழு அவற்றைப்பற்றி உரையாடி, உண்மைகளை உணர்தல் வேண்டும்.

4. வகுப்பில் எழுதும் கட்டுரைகட்கு மதிப்பெண்கள் தரப்பெறுகின் றன அல்லவா? குறைவான மதிப்பெண்கள் கிடைக்கப்பெற்ற மாணவர் கள், அவ்வாறு குறைவாகக் கிடைத்தற்குரிய காரணங்களை ஆசிரியர்களி டமே கேட்டு உணர்தல் வேண்டும். எவ்வெவ்வழிகளில் கட்டுரைகளின் தரத்தை உயர்த்தலாம் என்பதனை ஆசிரியர்களைக் கேட்டு அறிந்து கொள்ளு தல் தக்கதாகும்.

(இ) வகுப்பில் கட்டுரையை எழுதுதல்

1. பொதுக் கட்டுரையை எழுதுவதற்குரிய பொருள் முதல் வாரத்தி லேயே அறிவிக்கப்படுதல் வழக்கம். அவ்வாறு அறிவிக்கப் பெற்ற பொரு ளைப்பற்றி மாணவர்கள் நன்கு சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். அப்பொருள் மாணவர்களின் நினைவில் எப்பொழுதும் இடம் பெற்றிருத்தல் வேண்டும். புத்தகங்களைப் படிக்கும் பொழுதும் செய்தித் தாள்களைப் படிக்கும் பொழு தும், சொற்பொழிவுகளைக் கேட்கும்பொழுதும் கட்டுரைத் தலைப்பிற்குரிய செய்திகள் எவையேனும் கிடைப்பின் அவற்றைக் கருத்தில் இருத்திக் கொள் ளுதல் வேண்டும்.

2. கட்டுரை வகுப்பின் தொடக்கத்திலோ, முதல் வாரக் கட்டுரை வகுப் பின் இறுதியிலோ ஆசிரியர் வரைய வேண்டிய கட்டுரையைப் பற்றிய குறிப் புக்களைக் கூறுதல் உண்டு. அவ்வாறு கூறப் பெறின், அவற்றை மாணவர் கள் பயன்படுத்துதல் வேண்டும்.

3. கட்டுரையை எழுதத் தொடங்குதற்குமுன்பு, கட்டுரையில் குறிப்பி டற்குரிய கருத்துக்களைச் சுருங்கிய முறையில் கொண்ட குறிப்புச் சட்டகம் ஒன்றினை எழுதி வைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

“ ஒன்றாக நல்லது கொல்லாமை ”

4. கட்டுரையில் அமைக்க வேண்டிய பத்திகள் எவ்வளவு என்பதனை மாணவர்கள் நினைவிற் கொள்ளுதல் வேண்டும்.

5. ஒவ்வொரு பெருங் கருத்துக்கும் ஒவ்வொரு பத்தியினை அமைத்தல் தக்கது. ஒரே கருத்திற்கு இரண்டு பத்திகளோ, இரண்டு பெருங் கருத்துக்களுக்கு ஒரே பத்தியோ அமைத்தல் தக்கதன்று.

6. கருத்தினைத் தெளிவாக விளக்குதல் வேண்டும். குன்றக்கூறல், கூறியது கூறல் முதலிய குற்றங்கள் இருத்தல் கூடாது.

7. தொடக்கத்தில் கட்டுரைத் தலைப்பின் பொருளைத் தெளிவாக வரைதல் வேண்டும். தலைப்பின் உயிர்நிலையான கருத்தை நேரான முறையில் நீங்கள் விளங்கிக் கொண்டீர்கள் என்பதற்குரிய அறிகுறிகள் அவ்விளக்கத்திற் காணப்படுதல் வேண்டும்.

8. ஒரு பத்தியிற் குறிப்பிட்ட கருத்துக்கு முரணான கருத்தினை மற்றொரு பத்தியிற் கூறுதல் கூடாது. ஆனால், ஒரு செய்தியைப் பற்றிய மாறுபட்ட பல கருத்துக்கள் இருப்பின், அவற்றைத் தெளிவாகக் கூறி, முடிவில் உங்களுடைய கருத்தினை எழுதுதல் வேண்டும். உங்கள் கருத்தே சிறந்ததென்பதற்குரிய சான்றுகளை வரைதல் தக்கது.

9. கட்டுரை எழுதுங்கால் கருத்துக்களை விளக்குதற்கேற்ற பொன்மொழிகள், பழமொழிகள், மேற்கோள்கள் முதலியவற்றை இடமறிந்து எடுத்தாளுதல் வேண்டும்.

10. கட்டுரையின் இறுதியில், அதுவரையிற் கூறப்பட்ட செய்திகளின் சுருக்கத்தினைக் கூறி, உங்கள் முடிவையும் எழுதுதல் வேண்டும்.

11. கட்டுரைக்கென்று விதிக்கப்பட்டிருக்கும் பக்கங்களின் அளவை (அஃதாவது இரண்டு பக்க எல்லையை) எக்காரணங் கொண்டும் தாண்டுதல் கூடாது. 10 அல்லது 15 வரிகள் மிகின் இழுக்கில்லை.

12. எழுதி முடித்தபிறகு கட்டுரையை ஒரு முறை படித்துப் பார்த்து, பிழைகள் இருப்பின் திருத்துதல் வேண்டும். இடையிடையே நிறுத்தக் குறிகள் தக்க இடங்களில் ஏற்றவாறு அமைக்கப்பட்டுள்ளனவா என்று பார்த்தல் வேண்டும்.

13. திருத்தப்பெற்ற கட்டுரையை மறு வகுப்பில் கூர்ந்து நோக்கி, பிழைகள் யாவை என நன்கு உணர்ந்து, அத்தகைய பிழைகள் பின்பு வாராவண்ணம் எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும்.

14. கட்டுரைக்கு அளிக்கப்பெற்ற மதிப்பெண் குறைவாக இருக்குமேல் அதற்குரிய காரணத்தையும், அதிக மதிப்பெண் பெறுவதற்குரிய வழிகளையும் ஆசிரியரிடம் கேட்டு அறிதல் வேண்டும்.

15. நல்ல கையெழுத்து, திருத்துவோரின் கருத்தினைப் பெரிதும் கவரும். எனவே, எழுத்துக்கள் தெளிவாகவும், அழகாகவும் இருத்தல் இன்றியமையாதது.

16. கடினமான நடையில் கட்டுரையை எழுதினால் நல்ல மதிப்பெண் கிடைக்கும் என்று மாணவர்கள் சிலர் கருதுகின்றனர். அது பிழைபட்ட கருத்தாகும். எளிய நடையில் கட்டுரையை எழுதப் பழகுதலே தக்கதாகும். திரிசொற்களை வலிந்து கட்டுரையிற் புகுத்துதல் கூடாது. அழகிய இனிய எளிய செந்தமிழ் நடையில் பிழையின்றி அமைந்திருக்கும் கட்டுரையே சிறந்ததாகும்.

2. மாதிரிக் கட்டுரைகள்

(அ) காடுகளின் காப்பு

குறிப்புச் சட்டகம்: முன்னுரை - காடு நம் உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாதது - நம் உடலுக்கு உரம் தருபவை காடுகளே - காடுகளால் நமக்கு உண்டாகும் நன்மைகள்—வெள்ளத்தினைத் தடுத்தல், மண்ணின் வளத்தினை நிலை நிறுத்துதல், மழை பொழியுமாறு செய்தல் முதலியவை - காட்டு மரங்களால் நமக்குத் தேவையான பல பொருள்கள் கிடைக்கின்றன - காடுகளை அழித்தல் கூடாது - காடுகளைப் போற்ற வேண்டுவதன் இன்றியமையாமை - முடிவுரை.

நாம் வாழும் பாரத நாடு வளப்பம் வாய்ந்தது. தென்மேற்குப் பருவக் காற்றினாலும், வடகிழக்குப் பருவக் காற்றினாலும் நம் நாட்டில் மிகுதியாக மழை பெய்கிறது. ஆண்டின் பெரும்பகுதியில் கதிரவனின் நேர்க்கதிர்கள் தரையிற் படுகின்றன. பாரத நாடு மண் வளம் அமைந்தது. எனவே நம் நாட்டில் தாவரங்கள் செழித்து வளர்கின்றன; காடுகள் செறிந்து வளர்ந்துள்ளன. இத்தகைய காடுகளை நம் நாட்டின் இயற்கைச் செல்வங்கள் என்னலாம். அவற்றைப் போற்றிப் பயனடைதல் நம் கடமையாகும்.

மக்களின் உயிர் வாழ்க்கைக்கும், விலங்கு முதலியவற்றின் உயிர் வாழ்க்கைக்கும் இன்றியமையாதவை தாவரங்கள். நாம் வெளிவிடும் அசுத்தமான வாயுவினை உட்கொண்டு, நல்ல வாயுவினைத் தாவரங்கள் வெளிவிடுகின்றன என்பர் அறிவியல் நூலோர். உலகத்தில் மரங்கள் குறையின் மக்களின் உயிர் வாழ்நாளும் குறையும் என்று பேரறிஞர் ஒருவர் கூறியுள்ளார். ஆகவே, நாம் காடுகளைப் போற்றுதல் வேண்டும்.

நாம் வேலைகளைத் தட்டுத் தடங்கலின்றிச் செய்வதற்கு நம் உடம்பிற்கு உரம் வேண்டும். அந்த உரம் எங்கிருந்து கிடைக்கின்றது? அது சூரியனிடமிருந்தே கிடைக்கின்றது என்பர் ஆராய்ச்சி அறிஞர்கள். சூரியனிடத்தே உரத்தினை நேர்முகமாகப் பெற்றுக் கொள்ளும் ஆற்றல் நமக்கு இல்லை. அவ்வுரத்தினைச் சூரியனிடமிருந்து பெற்று நமக்கு அளிக்கும் ஆற்றல் தாவரங்கட்கே உள்ளது. சூரியனின் நேர்கதிர்களைப் பெற்ற தாவரங்கள் செழித்து வளர்ந்து நின்று, தாம் பெற்ற உரத்தினை நமக்குத் தருகின்றன. ஆகவே தாவரங்கள் நமக்கு ஊட்டம் அளிக்கின்றன என்பதனை நாம் அறியலாம்.

நம் நாட்டில் பொழியும் மழைநீர், வெள்ளமாகப் பெருக்கெடுத்து ஓடிச் சென்று கடலிற் கலந்துவிடின் பயன் யாது? அந்நீரில் பெரும் பகுதி தரையில் தங்கவேண்டுமன்றோ? அவ்வாறு தரையில் மழைநீர் தங்குமாறு செய்ய வல்லவை காடுகளேயாகும். காட்டு மரங்களின் வேர்கள் தரையை ஊடுருவிப் பல விடங்கட்குச் சென்று, தரையில் இடைவெளிகள் பலவற்றை உண்டாக்குகின்றன. அதுபற்றித் தரையின் மேற்பகுதியும் கடினத்தன்மை மாறி மென்மைத் தன்மையை அடைகின்றது. இவற்றால், பெய்யும் மழைநீர் தரையிலேயே தங்க முடிகின்றது. காடுகள் இல்லையெனில் வெள்ளப் பெருக்கெடுத்து, நீர் வீணே ஓடிவிடும். பெருக்கெடுத்து ஓடிவரும் வெள்ள நீரைத் தடுக்கும் ஆற்றல் காடுகளுக்கு அமைந்துள்ளது. காடுகள் செறிந்துள்ள இடங்களில் வெள்ளத்தினால் தீமை உண்டாவதில்லை என்று அறிஞர்கள் கூறுவர். வெள்ளநீரில் கரைந்துள்ள வண்டல் மண், இலை, தழை முதலியவற்றைத் தடுத்து நிறுத்தும் பண்பும் காடுகட்கு உண்டு. இவ்வாறு காடுகள் அவற்றைத் தடுத்து நிறுத்தவில்லையேல், ஓரிடத்திலுள்ள வளப்பமான மண் வெள்ளத்தினால் அடித்துச்

செல்லப்பெற்று, கடலிற் கலந்துவிடும். எனவே, மண்ணின் வளப்பத்தினை நிலை நிறுத்துபவை காடுகளே என்பதை உணரலாம். மேலும், வானத்தே செல்கின்ற மேகத்தை நிறுத்தி, மழை பொழியுமாறு செய்யும் தன்மையும் காடுகட்கு உண்டு. எனவே, நீர்வளம், நிலவளம் முதலியவற்றை நிலை நாட்டுதற்குரிய கருவிகளாகக் காடுகள் அமைந்துள்ளன என்பதை நாம் அறியலாம்.

காடுகளில் பலவகை மரங்கள் உள்ளன. நெடியனவும், பெரியனவுமான மரங்கள் காடுகளில் உள்ளன. அவற்றிலிருந்து நாம் வீடுகட்டுவதற்கும், வீடுகளில் வாழ்வதற்கும் உதவும் மரச் சாமான்களை அமைத்துக் கொள்ளலாம். நோய்களை அகற்றுவதற்குரிய பலவகை மருந்துப் பொருள்கள் காடுகளிலிருந்தே கிடைக்கின்றன. விலங்குகளின் உணவாக உதவும் இலை, தழை முதலியவை காடுகளிலேயே உள்ளன. மேலும் விளை நிலங்களுக்கு ஏற்ற தழை உரம் அமைப்பதற்குக் காடுகள் வேண்டுமன்றோ? காடுகளில் இருக்கும் இலை தழை முதலியவற்றால் காகிதம் செய்யப்படுகின்றது. ஆகவே, காடுகள் நமக்குப் பலவகைகளில் பயன்படுகின்றன.

காடுகளைக் காத்தல் நம் கடமையாகும். நாட்டுப்புற மக்கள் பலர் காடுகளை விறகின் பொருட்டாக அழிக்கத் தொடங்குகின்றனர். அது பெருந் தவறாகும். நன்கு முற்றி வளர்ந்த முதிர்ந்த மரங்களின் கொம்புகளையே விறகின் பொருட்டு வெட்டலாம். ஏனைய மரங்களை வெட்டுதல் கூடாது. ஆடுமாடுகளை அவற்றின் விருப்பம்போல் காடுகளில் மேயுமாறு விடுதல் கூடாது. அவை இளந்தாவரங்களையே விரும்பித் தின்னும். இதனால் காடுகளின் வளர்ச்சி நாளடைவில் பெரிதும் குன்றிவிடும்.

காடுகளைப் புரப்பதற்கென்று அரசியலார் 'காட்டிலாக்கா' என்னும் ஒரு துறையினை அமைத்துள்ளனர். அத்துறையைச் சார்ந்த அலுவலாளர்கள் காடுகளை நன்கு ஆராய்ந்து பார்த்து, காத்தற்குரிய காட்டுப் பகுதிகளை ஒதுக்கியுள்ளார்கள். அவற்றை அழிக்க முயலுதல் தவறாகும். நாட்டின் நலன் கருதி, அப்பகுதிகளைப் போற்றுதல் நம் கடமையாகும்.

இயற்கையன்னை நம் பொருட்டு அமைத்திருக்கும் செல்வங்களுள் சிறந்தவை காடுகளே. அவற்றைப் போற்றி வளர்த்து, அவற்றிலிருந்து பெரும் பயனை நாம் அடையுமாறு செய்ய அரசியலார் முயல்கின்றனர். அவர்களுடைய முயற்சிக்கு நாம் நம்மால் ஆன உதவியைச் செய்தல் வேண்டும். தனிப்பட்ட ஒருவரின் சுக வாழ்க்கைக்காக நாட்டின் பெரு நன்மையைக் குறைக்க முயலுதல் கூடாது. எனவே, காடுகளைப் பாதுகாத்துப் பயன் பெறுதல் நம் தலைசிறந்த கடமையாகும்.

(ஆ) பஞ்சத்தைப் போக்குதற்குரிய வழிகள்

குறிப்புச் சட்டகம்: முன்னுரை - பஞ்சம் நம் நாட்டில் வந்ததற்குரிய காரணங்கள் - பஞ்சத்தைப் போக்க அரசியலார் வகுத்துள்ள வழிகள் - வயல்களையெல்லாம் விளை நிலங்களாக மாற்ற வேண்டும் - பலவகைத் தானியங்களை விளைவிக்க வேண்டும். உணவு முறையில் மாறுபாடு - மக்கள் மனத்தில் உணர்ச்சியை ஊட்டுதல் - பிற நாட்டிலிருந்து உணவுப் பொருள்களை வருவித்தல் சிறந்ததன்று - முடிவுரை.

இரண்டாவது உலகப் பெரும் போர் நடைபெற்ற காலையில் நம் நாட்டிற்குப் பல துன்பங்கள் உண்டாயின. அதனைத் தொடர்ந்து நாட்டில் பஞ்சமும் உண்டாகியது. நாட்டில் பருவமழை பொய்த்தது. சில ஆண்டுகளில்

மழை மிகுதியாகப் பொழிந்து வெள்ளம் உண்டாகிப் பயிர்கள் அழிந்தன சென்ற ஆண்டில் வெள்ளத்துடன் புயலும் கலந்து கொண்டது இவற்றால் நாட்டில் விளைபொருள்கள் குன்றின. இந்நிலையில் மக்கள் தொகையும் பெருகியது. எனவே பாரத நாட்டில், குறிப்பாகத் தென்னாட்டில் பசியும் பிணியும் நிலவத் தொடங்கின. இந்த ஆண்டு தென்னாட்டில் மழை நன்றாகப் பெய்துள்ளது. எங்கும் பயிர்கள் நன்கு வளர்ந்துள்ளன என்று செய்திகள் வருகின்றன. இனிக் கவலைக்கு இடமில்லை என்பதற்குரிய அறிகுறிகள் தோன்றுகின்றன. எனினும், பஞ்சம் எந்நாளும் வாராதிருத்தற்குரிய வழிவகைகளை நாம் தேடுதல் இன்றியமையாததாகும்.

பஞ்சம் ஏன் உண்டாகிறது? போதிய மழையின்மையாலும், தக்க நீர்ப்பாசன வசதி இன்மையாலும் விளைவு குன்றிப் பஞ்சம் உண்டாகின்றது. மழை பொழியுமாறு செய்வது நம் முயற்சியில் அடங்காது. ஆனால், தக்க நீர்ப்பாசன வசதிகளை அமைத்தல் நம் கையில்தான் உள்ளது. தென்னாட்டில் நீர்த்தேக்கங்கள் சில உள்ளன. அண்மையில் கீழ்பவானி அணைக்கட்டு வேலை முடிவுற்றது. இவற்றுடன் நின்றுவிடின் போதாது. அணைகள் பல அமைக்கப்படுதல் வேண்டும்.

நீர்த் தேக்கங்கள் பலவற்றை அமைத்து, நீரினைத் தேக்குவதற்கேற்ற இடங்கள் நம் நாட்டில் பல உள்ளன. அவற்றை அமைப்பதற்குரிய திட்டங்கள் பலவற்றை பாரத அரசாங்கம் வகுத்துள்ளது. அரசியலார் வகுத்துள்ள ஐந்தாண்டுத் திட்டத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்குதல் முதலிடம் பெற்றுள்ளது. அரசாங்கம் வகுத்துள்ள திட்டங்களை முடிப்பதற்குப் பொது மக்கள் தம்மால் ஆன உதவிகளைச் செய்ய வேண்டும். நிதி மிகுந்தவர் பொருள்களைக் கடனாகக் கொடுத்துதவ வேண்டும். ஆண்மையாளர் உழைப்பினை நல்க வேண்டும். இவ்வாறு நீர்த் தேக்கங்கள் பல அமைக்கப்படின் பயிர்களுக்குத் தேவையான நீரை அவ்வப்பொழுது பாய்ச்ச முடியும்.

நம் நாட்டின் விளைவைப் பெருக்குவது பஞ்சத்தைப் போக்குவதற்குச் சிறந்த வழியாகும். நாட்டில் உள்ள வயல்கள் முழுவதிலும் பயிர்களை விளைவிக்கவில்லை. நிலங்களில் பல தரிசுகளாகக் கிடக்கின்றன. அவற்றையெல்லாம் விளை நிலங்கள் ஆக்குவதற்கு வேண்டிய முயற்சிகளை நாம் கைக்கொள்ளுதல் வேண்டும். எல்லாம் அரசியலாரின் பொறுப்பே யென்றெண்ணி நாம் வாளா இருந்து விடுதல் கூடாது. நாட்டின் விளை பொருள்களைப் பெருக்க வேண்டுவதன் இன்றியமையாமையை நாம் நிலத்திற்கு உரியவர்களிடம் எடுத்துக் கூறுதல் வேண்டும்; தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்றுமாறு செய்தல் வேண்டும். அரசியலார்க்கு உரிய தரிசு நிலங்களில் அவர்களது இசைவு பெற்றுப் பயிர்களை விளைவிக்க வேண்டும்.

நாட்டுப்புறங்களில் உள்ள நன்செய் நிலங்கள் ஓராண்டில் நான்கைந்து மாதங்கள் வீணே கிடக்கின்றன. அந்தக் காலத்தில் நாட்டுப்புற மக்களும் வீண் பொழுது போக்குகின்றனர். அவ்வாறு இராமல், குறுகிய காலத்தில் விளையக் கூடிய பயிர்களை அவர்கள் விளைவிக்குமாறு செய்ய வேண்டும். இவ்வாறு நெல்லுடன் பலவகைத் தானியங்களை விளைவித்தால் பஞ்சத்தை ஓரளவு போக்கலாம்.

மக்கள் எல்லோரும் ஒரே வகைப்பட்ட உணவை உட்கொள்ள வேண்டும் என்று இராமல், எல்லாவகைத் தானியங்களையும், உணவுகளையும், உட்கொள்ளப் பழகுதல் வேண்டும். எடுத்துக்காட்டாகத் தென்னாட்டில் அரிசி உணவை உட்கொள்ளுகின்றவர்கள், அதுதான் வேண்டும் என்று கண்டிப்

க இராமல், கேழ்வரகு, சோளம், கோதுமை முதலிய தானியங்களையும் ண்ணப் பழகிக் கொள்ளுதல் நன்று. அரிசியையே பலவகைச் சிற்றுண்டி ாகச் செய்து உண்ணும் வழக்கத்தை விடுத்து, பலவகைத் தானியங் ால் ஆன சிற்றுண்டிகளைத் தென்னாட்டு மக்கள் உண்ணத் தொடங்குதல் வண்டும்.

உணவு உற்பத்தியைப் பெருக்குவதனால் மட்டும் பஞ்சம் தவிர்ந்துவிடாது. ஞ்சத்தைப் போக்க வேண்டும் என்னும் உணர்ச்சி மக்களின் உள்ளத்தில் ன்றிய இடம் பெறுதல் வேண்டும். மனிதன் தனியாக வாழ முடியாது ன்பதையும், யாவரும் ஒற்றுமையுடன் இருந்தால்தான் தனி மனிதனால் ாழ முடியும் என்பதையும், எல்லோரும் வாழ்தல் வேண்டும் என்பதையும் றர்க்கு உதவும் எண்ணம் இருத்தல் வேண்டும் என்பதையும், மக்கள் யாவ ம் உணர்தல் வேண்டும். அத்தகைய உணர்ச்சி தோன்றினால்தான் பஞ்சத் தைத் தவிர்க்க முடியும். மக்களிடம் உணவுப் பொருள்களைப் பதுக்கி வைத் தல், திருட்டு விற்பனை, கொள்ளை இலாபம் பெறுதல் முதலான நினைவுகள் இருக்கும் வரையில் உணவுப் பொருள்களை எவ்வளவு பெருக்கினாலும் பயன் ண்டாகாது. எனவே, மாணவர்கள் மக்களின் மனத்தை மாற்றப் பெரிதும் ாடுபட வேண்டும்.

பிற நாடுகளிலிருந்து உணவுப் பொருள்களைப் பெரிய அளவில் இறக்கு தி செய்வதன் வாயிலாகப் பஞ்சத்தைப் போக்கி விடலாம் என்று சிலர் ண்ணுவர். எதிர்பாராமல் ஏற்படும் பஞ்சத்தைப் போக்குவதற்கே பிற ாட்டுப் பொருள்களை எதிர்பார்க்கலாம். நிரந்தரமாகப் பஞ்சத்தைப் பாக்குவதற்கு நாம் நம் நாட்டைத்தான் எதிர்பார்க்க வேண்டும். பிற நாட் ப் பொருள்களை வாங்குவதால் நம் நாட்டின் செல்வம் பிற நாடுகட்குப் போய்ச் சேர்ந்து விடும். இதனை நாம் நினைவிற் கொள்ள வேண்டும். நீர் வளமும், நில வளமும் நிறைந்தது நம் நாடு. கதிரவனின் நேர் கதிர்களை ம் நாடு நன்கு பெறுகின்றது. நாம் ஒன்றுபட்டு உழைத்தால் நாட்டில் பஞ் ம் தோன்றாமல் இருக்குமாறு செய்து விடலாம்.

3. பொதுக் கட்டுரைகள் பலவற்றிற்குக் குறிப்புகள்

அ) இலக்கியச் சுவை

தமிழின் தொன்மை - தமிழில் உள்ள நூல்கள் - சங்க காலத்து நூல்கள் - ஐம்பெருங் காப்பியங்கள் - இடைக்காலத்து நூல்கள் - மதத்தினை அடிப் படையாகக் கொண்டவை - அவற்றுள் இலக்கிய நயத்தையே ஆராய்ந்து பார்த்துச் சுவைத்தல் - ஏனைய பாடங்கட்கும் செய்யுட் பாடத்திற்கும் உள்ள வேறுபாடு - பிற்காலத்தில் நல்ல பொழுதுபோக்கு - வற்றிய வாழ்க்கையைத் தளிர்க்கச் செய்யும் - படிக்கப் படிக்கப் புத்தின்பம் பயக்கும் - சிறு கதை முத லியவை முதன் முறை படிக்குங்கால் இன்பமாக இருக்கும் - செய்யுட்கள் அத் தகையன அல்ல - எக்காலத்திலும் நிலைபெற்ற இன்பம் - எடுத்துக் காட்டாக ஏதேனும் ஒரு பாடல் - அதன்கண் அமைந்துள்ள சுவையை விளக்குதல் - செய்யுட்களை இசையுடன் படித்துச் சுவைத்தல் - முடிவுரை.

(ஆ) குடிமைப் பயிற்சி

நம் நாடு அந்நியரின் ஆளுகையில் இருந்தது - நமக்குச் சுதந்திரம் கிடைத் தது - நம்மவர் ஆட்சி - அனைவருக்கும் வாக்குரிமை - நம் உரிமையும் கடமை யும் - மக்களிடம் நடந்துகொள்ளும் முறை - மாணவர் வகுப்பில் நடக்கும் முறை - பயணம் செல்லுங்கால் பின்பற்ற வேண்டிய ஒழுக்கங்கள் - நாட்டின்

பொருட்டுத் தியாகம் செய்தல் - உரிமைக்காகப் பாடுபடுதல் - கடமைகளைச் செய்யத் தவறுமை - பிறர் உரிமைகளில் தலையிடாமை - கொடி வணக்கம் செய்யும் முறை - கொடியின் விளக்கம் - அரசியல் நடக்கும் முறையை உணர்ந்து கொண்டு நம் கடமைகளைச் செய்தல்.

(இ) ஆதாரக் கல்வி

தற்காலக் கல்வி முறை - கல்விக்கும் வாழ்க்கைக்கும் தொடர்பின்மை - பாடத் திட்டங்களில் மாற்றம் - தொடக்க நிலைப் பள்ளிப் பாடங்களைப் பற்றிய ஆராய்ச்சி - ஆதாரக் கல்வியின் விளக்கம் - அதன் இன்றியமையாமை - ஆதாரக் கல்வி, மாணவர்களின் பிற்கால வாழ்க்கைக்கு வழி காட்டுகிறது - காந்தியடிகள் காட்டிய கல்வியிது - வார்தா கல்வித் திட்டம் - வாழ்க்கையோடு தொடர்புடையது இக்கல்வி - உடல் உழைப்பின் பெருமையை இக்கல்வி நமக்கு விளக்குகிறது - மாணவர் தம் தேவைகளைத் தாமே தேடிக் கொள்ளுதல் - நம் நாட்டுக் கிராமங்களுக்கு ஏற்றது இக்கல்வி - தொடக்க நிலைப் பள்ளியாசிரியர்கள் யாவரும் இப்பயிற்சி பெற வேண்டுவதன் இன்றியமையாமை.

(ஈ) ஐக்கிய நாடுகளின் கழக நாள்

முதல் உலகப் பெரும் போர் - அதன் முடிவில் கூட்டப்பெற்ற சர்வதேச சங்கம் - அதன் உறுப்பினர்கள் சங்கத்தின் சட்ட திட்டங்களை மீறியமை - சங்கம் மறைந்தது - இரண்டாம் உலகப் பெரும் போர் - 1945-ஆம் ஆண்டில் அமெரிக்காவில் உள்ள சான்பிரான்ஸிஸ்கோவில் ஐக்கிய நாடுகளின் கழகம் தொடங்கப் பெற்றது - கழகத்தின் நோக்கங்கள் - அதன் உட்பிரிவுகள் - கழகம் இன்றுவரையில் செய்து முடித்த செயல்கள் - இனிச் செய்ய முயலும் செயல்கள் - கழக நாளை நாம் கொண்டாட வேண்டுவதன் இன்றியமையாமை - கொண்டாட வேண்டிய முறை - கழகத்தின் தூய நோக்கங்கள் நிறைவேறுவதற்கு நம்மால் இயன்றவற்றைச் செய்தல் - உலக அமைதியை நிலைநாட்ட நாம் பாடுபடுதல்.

(உ) சமூக ஒற்றுமையை வளர்க்கும் வழிகள்

நம் நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்தது - நம்மவரே நம்மை ஆளுதல் - நாம் ஒற்றுமையுடன் வாழ வேண்டும் - நாட்டை உருவாக்கும் வேலைகள் - மக்களிடத்தே உள்ள சாதி, சமய, இன, மொழி வேறுபாடுகள் - அவற்றைப் போக்குதல் இன்றியமையாதன - அதற்குரிய வழிகள் - தொடக்க நிலைப் பள்ளி முதல் யாவரும் சமம் என்னும் எண்ணத்தை வளர்த்தல் - தனி மனிதன் வாழ முடியாது - சமூகம் உயர்ந்தால்தான் தனி மனிதன் வாழ முடியும் - மொழிவாரி மாகாணப் பிரிவினை - இராச்சியங்களுக்குள் ஒற்றுமை - மக்கள் மனத்தில் நல்லெண்ணத்தை வளர்த்தல் - குறுகிய நாட்டுப் பற்றினால் விளையும் தீமைகள் - கலப்பு மணம்.

(ஊ) நம் நாட்டின் இயற்கைச் செல்வங்கள்

நம் நாட்டுக் கொடி - அடிப்பகுதியில் உள்ள பசுமை நிறம் நம் நாட்டின் வளப்பத்தைக் குறிக்கும் - கதிரவனின் நேர்கதிர், காற்று, மழை, மண்வளம் முதலியன நம் நாட்டில் உள்ளவை - காற்றினைக் கொண்டு காற்றாலைகளை இயக்குதல் - நீர் வீழ்ச்சிகளைக்கொண்டு மின்சார உற்பத்தி - மண்ணுக்கு அடியில் மறைந்து கிடக்கும் நிலக்கரி, இரும்பு, அபிரகம், மாங்கனீயம் முதலியவற்றை வெளிப்படுத்தல் - ஆராய்ச்சியாளர் முடிவு - பாரத மண்ணின் அடியில் பல பொருள்கள் உள்ளன - மக்களின் ஒற்றுமையும் உழைப்பும் - தொழிற்சாலைகளை அமைத்து, இறக்குமதிகளைக் குறைத்து நாமும் உழைத்தல் -

ள்ளுவர் கூற்று - வேலையில்லையென்று சோம்பலுடன் இருப்போரை நாக்கி நிலமகள் நகைப்பாள் - நம் கடமை.

() குடிசைத் தொழில்கள்

இந்தியாவில் பெரும்பகுதி கிராமங்கள் - கிராம மக்கள் பலர் வீண் பாழுது போக்குதல் - நம் நாட்டுச் செல்வம் வீணே பிற நாடுகட்குச் செல் தைத் தடுத்தல் - குடிசைத் தொழில்களின் விளக்கம் - குடிசைத் தொழில் ள் யாவை - நாட்டில் உடைப்பஞ்சம் - காந்தியடிகள் கூறிய அறிவுரை - ால் நூற்றல் - நெய்தல் - பானைகள் செய்தல் - காகிதம் செய்தல் - வெல்லம் ாய்ச்சுதல் - கயிறு திரித்தல் - கூடை, பாய் முதலியன பின்னுதல் - கிராமத் ல் கிடைக்கும் பொருள்கட்கு ஏற்ற தொழில்களை மேற்கொள்ளுதல் - ஆதாரக் கல்வி - மாணவர்கட்கு ஒவ்வொரு தொழிலைக் கற்பித்தல் - தொழி ின் உயர்வை மாணவர்கள் உணர்தல் - வாழ்க்கைக்கு உதவும் கல்வியை ாணவர்க்கு அளித்தல்.

ா) படக் காட்சிகளால் விளையும் நன்மை தீமைகள்

நாடகத்தின் வரலாறு - நாடகங்களும் படக் காட்சிகளும் - நிகழ்ச்சி களைத் தெளிவாகக் காட்ட இயலும் - பேசாப் படக் காட்சி - பேசும் படக் ாட்சி - தற்காலப் படக் காட்சிகள் - சிலரது மனத்தைப் புண்படுத்தும் ிகழ்ச்சிகள் நிறைந்துள்ளமை - நகைச்சுவை என்னும் பெயரால் ஒழுக்க ின்மையை வெளிப்படுத்துதல் - பட முதலாளிகள் மக்களுக்கு அறிவுரை கூறி, ஒழுக்கத்தைப் புகட்டுவதை நோக்கமாகக் கொள்ள வேண்டும் - படக் ாட்சிகளால் நன்மைகளை உண்டாக்க முடியும் - கல்விப் படக் காட்சிகள் - அடிக்கடி படக் காட்சி பார்ப்பதால் விளையும் தீமை - படத் தணிக்கைக் குழு - ழோர்ன ஒழுக்கங்கள் அமைந்த படங்களை மக்கள் புறக்கணித்தல்.

ஐ) மாணவர் சமூகத் தொண்டு

இந்தியாவில் பெரும் பகுதி கிராமங்கள் - கிராமங்கள் முன்னேறினால் தான் நகரங்கள் முன்னேறும் - மக்கள் அனைவரும் இன்பமுடன் வாழ்ந்தால் தான் இந்தியா முன்னேறியதாகக் கொள்ளமுடியும் - கிராம மக்களின் வாழ்க்கை - சுகாதார உணர்ச்சியின்மை-நோய்கள் வருவதற்குரிய காரணங் களை அறியாமை - கல்வியின்மை - விவசாயத்தில் பழைய முறைகளை மேற் கொள்ளுதல் - தொழில்களைச் செய்யாதிருத்தல் - மாணவர்கள் தொண்டு செய்ய முடியும் - விடுமுறை நாட்களில் கிராமங்களுக்குச் செல்லுதல் - உலக நிகழ்ச்சிகளைக் கூறுதல் - தேர்தலைப்பற்றிய செய்திகளைக் கூறுதல் - அரசியல் நடக்கும் முறைகளைக் கூறுதல் - முதியோர் கல்வி - சமூகத் தொண்டர் குழு - மக்களுக்கு உதவி செய்தல்.

(ஒ) தாய் மொழியில் பாடங்களைப் படித்தல்

தாய் மொழி தமிழ் - தாய் மொழியறிவு ஏனைப்பாடங்களுக்கு உதவும் - தாய்மொழிக்கு இன்று முதலிடம் - உயர்நிலைப்பள்ளிகளில் இன்று பாடங்கள் தாய் மொழியின் வாயிலாகக் கற்பிக்கப்படுகின்றன. அதனால் விளைந்துள்ள நன்மை தீமைகள் - நன்மைகள் மிகுதி - தீமைகளைப் போக்குவதற்குரிய வழிகள் - கல்லூரியில் எல்லாப் பாடங்களையும் தாய் மொழியில் படிக்க முடியுமா? இடையூறுகள் - தக்க பாடநூல்கள் - ஆசிரியர்கள் இன்மை - இடையூறுகளை அகற்றினால் பாடங்களைத் தாய் மொழியில் கற்க லாம் - விஞ்ஞான ஆராய்ச்சி நுட்பங்கள் ஆங்கிலத்தில் வெளியிடப்படு கின்றன - கலைச் சொற்கள் - அயல் மொழியில் அமைந்த கலைச் சொற்களை உள்ளவாறே எடுத்தாளுதல் - நன்மையும் தீமையும் - மாணவர் கருத்து.

மாதிரி வினாத்தாள்கள்

மாதிரி வினாத்தாள் I

முதன் மொழி—பகுதி II—சிறப்புப் பகுதி—தமிழ்

[N.B.—This paper is to be taken by candidates who offer t same language under Part I.]

நேரம் : 2½ மணி.

(மதிப்பெண்கள் : 100.)

[குறிப்பு :—(1) கையெழுத்தில் தெளிவு வேண்டும்.

(2) விடைகள், அவற்றிற்கென்று விதிக்கப்பட்டுள்ள வ களின் எல்லையை விஞ்சுதல் கூடாது.

(3) விடைகள் நும் சொற்களிலேயே இருத்தல் வேண்டும்.]

மதிப்பெண்க

I. (அ) நரிவெரூஉத் தலைபார் கோப்பெருஞ்சேரல் இரும்பொறைக்குக் கூறிய அறிவுரை யாது?

(ஆ) பொழிப்புரை தருக :—

பத்தினிப் பெண்டிர் பாத்தூ ணேற்ற
பிச்சைப் பாத்திரப் பெருஞ்சோற் றமலை
அறத்தி னீட்டிய வொண்பொரு ளறவோன்
திறத்து வழிப்படூஉஞ் செய்கை போல
வாங்குகை வருந்த மன்னுயிர்க் களித்துத்
தான்தொலை வில்லாத் தகைமை நோக்கி

(இ) கீழ்வருவனவற்றுள் இரண்டினுக்கு இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக :— (

(1) "உண்ணா நோன்பினேன் உண்கனி சிதைத்தாய்"

(2) "அறிவிலன் எனத்துறந்தானோ?"

(3) "அடாது செய்தவர் படாது பட்டனர்."

(ஈ) சீதை வாடியிருந்த நிலைக்குக் காட்டப்பட்ட உவமை யாது? உவமையைப் பொருத்திக் காட்டுக. 5

(உ) (1) குந்தி கன்னனிடம் கேட்ட வரங்கள் யாவை? 3

(2) வில்லிராமன் கதையைச் சான்றாகத் தருமன் ஏன் காட்டினான்? 2

II. (அ) கடைச்சங்க காலத்துப் புலவர்களுள் நால்வரைக் குறிப்பிடுக. 4

(ஆ) ஞானியார் சுவாமிகளின் பேச்சுத் திறனுக்கு எவற்றை ஒப்பிடலாம்? விளக்குக. 5

(இ) கரிகாலன் வடநாட்டு யாத்திரையிலிருந்து திரும்பும் பொழுது எவ்வெப் பொருள்களை எந்த எந்த நாட்டு மன்னர்களிடமிருந்து பெற்று வந்தான்? 6

மதிப்பெண்கள்.

(ஈ) இளங்கோவடிகள் இயற்கையைப் புனைந்துரைப்பதில் வல்லவர் என்பதற்குச் சான்று காட்டி விளக்குக. 5

(உ) சோழனது யானையின் மறத்தினை ஆசிரியர் எவ்வாறு படம் பிடித்துக் காட்டியுள்ளார்? 5

III. (அ) "முனியொடு மிதிலையின் முதல்வன் முந்துநாள்.
துனியறு புருவமும் தோளும் கண்களும்": இவ்வரிகளில் அமைந்துள்ள எதுகை மோனைகளை எடுத்துக் காட்டுக. 5

(ஆ) கீழ்வரும் வரிகளுள் கோடிட்டவற்றுள் எவையேனும் நான்கிற்கு இலக்கணக் குறிப்பு வரைக :— 4

(1) இருங்கடறு வளைஇய குன்றத் தன்னதோர்.

(2) பிடித்தனள் கையில் பேணினள் பெய்தலும்.

(3) கந்துடை நெடுநிலைக் காரணம் காட்டிய, தந்துணைப் பாவை.

(4) வறிது பெயர்குநர் அல்லர்.

(5) மலரடி அன்பினால் வணங்கி.

(இ) கீழ்க்கண்டவற்றிற்கு உறுப்பிலக்கணம் கூறுக :— 4
பாடியோர்; கொணர்ந்தான்; மாண்டன (சிறந்தன); பயந்தவள்.

(ஈ) வினா வகைகள் யாவை? 4

(உ) பிறிது மொழிதல் அணி என்றால் என்ன? விளக்குக. 4

(ஊ) "உறுபசியு மோவாப் பிணியுஞ் செறுபகையும்"; அலகூட்டித் தளையும் கூறுக. 4

IV. கீழ்வரும் செய்யுளின் நலத்தைப் பாராட்டி எழுதுக :— 10

"படைப்புப்பல படைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை யடிசின் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத் தாம்வாழு நாளே."

V. கீழ்க்காணப்படும் பொருள்களுள் எவையேனும் ஒன்றைப்பற்றி இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமல் ஒரு கட்டுரை வரைக :— 15

(1) மாணவர்க்குக் கட்டாய இராணுவப் பயிற்சி.

(2) குடிசைத் தொழில்கள்.

(3) தாய் மொழியில் எல்லாப் பாடங்களையும் படித்தல்.

மாதிரி வினத்தாள் II

முதன் மொழி—பகுதி II—சிறப்புப் பகுதி—தமிழ்

[N.B.—This paper is to be taken by candidates who offer same language under Part I.]

நேரம் $2\frac{1}{2}$ மணி.

(மதிப்பெண்கள்: 100.)

[குறிப்பு:—(1) கையெழுத்தில் தெளிவு வேண்டும்.
(2) விடைகள், அவற்றிற்கென்று விதிக்கப்பட்டுள்ள களின் எல்லையை விஞ்சுதல் கூடாது.
(3) விடைகள் நும் சொற்களிலேயே இருத்தல் வேண்டும்.

மதிப்பெண்க

I. (அ) ஆதிரை அமுதசுரபியில் இட்ட உணவு வளர்ந்தமைக்குக் காட்டப்பட்ட உவமை யாது? விளக்குக.

(ஆ) பொழிப்புரை தருக:—

"நாளன்று போகிப் புள்ளிடை தட்பப்
பதனன்று புக்குத் திறனன்று மொழியினும்
வறிது பெயர்குந ரல்லர் நெறிகொளப்
பாடான் றிரங்கு மருவிப்
பீடுகெழு மலையற் பாடி யோரே"

(இ) கீழ்வருவனவற்றுள் இரண்டினுக்கு இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக:—

(1) "அந்நாள் ஆங்கவன் இட்ட சாபம், இந்நாள் இளங் கொடி கெடுத்தனை."

(2) "மாண்டு போயினன் எருவைகட்கு அரசன்மன்"

(3) "எடுக்கவோ கோக்கவோ என்றான்."

(ஈ) சீதைக்கு எவ்வெப்பொழுது கண்ணும் தோளும் வலமாகத் துடித்தன?

(உ) (1) "இவை மூன்றில் எது வருமாயினும்": மூன்று எனப்பட்டவை யாவை?

(2) பெரியோர்களது நட்பை மறந்தவர்கள் எவ்வாறு கருதப்படுவார்கள்?

II. (அ) இடைச் சங்க காலத்து நூல்களுள் நான்கினைக் குறிப்பிடுக.

(ஆ) கடலைக் குறிக்கும் மூன்று தமிழ்ச் சொற்களையும், கப்பலைக் குறிக்கும் மூன்று தமிழ்ச் சொற்களையும் குறிப்பிடுக.

(இ) கரிகாலன் இமயமலையின்மீது அமைந்துள்ள நாடுகளையும் வென்றான் என்பதற்குச் சான்றுகள் இரண்டினைக் காட்டுக. 5

(ஈ) இளங்கோவடிகள் வையை யாற்றை ஒரு நங்கையாக எவ்வாறு உருவகப்படுத்தியுள்ளார்? 5

மதிப்பெண்கள.

(உ) "வெள்ளம் தீப்பட்டது எனவெருவியது" ; எது ? ஏன் ? விளக்குக. 5

III. (அ) "பல் குழுவும் பாழ் செய்யு முட்பகையும் வேந்தலேக்குங் கொல்குறும்பு மில்லது நாடு": இவ்வரிகளில் அமைந்துள்ள எதுகை, மோனைகளை எடுத்துக் காட்டுக. 4

(ஆ) கீழ் வரும் வரிகளுள் கோடிட்டவற்றுள் எவையேனும் நான்கினுக்கு இலக்கணக் குறிப்பு வரைக. 4

(1) திறத்து வழிப்படூஉஞ் செய்கை போல.

(2) கருவி மாமழை தோன்றிய தென்ன.

(3) எருமை யன்ன கருங்கல்.

(4) வருக என் மதலாய்.

(5) அடாது செய்தவர் படாது பட்டனர்.

(இ) கீழ்க்கண்டவற்றிற்கு உறுப்பிலக்கணம் வரைக :— 4
பெயர்குவர் ; தொடுப்பன் ; கொள்ப ; பகர்வாள்.

(ஈ) ஓரெழுத்து ஒரு மொழிகளுள் நான்கு எழுதிப் பொருளையும் எழுதுக. 2

(உ) கொண்டுகூட்டுப் பொருள்கோள் என்றால் என்ன ? விளக்குக. 4

(ஊ) கட்டளைக் கலித்துறையின் இலக்கணத்தினை வரைக. 4

(எ) கருப்பொருள் என்றால் என்ன ? 3

IV. கீழ்வரும் செய்யுளின் நலத்தைப் பாராட்டி எழுதுக :— 10

"பல்லெலாம் தெரியக் காட்டிப்
பருவரல் முகத்தில் கூட்டிச்
சொல்லெலாம் சொல்லி நாட்டித்
துணைக்கரம் விரித்து நீட்டி
மல்லெலாம் அகல ஓட்டி
மானம்என் பதனை வீட்டி
இல்லெலாம் இரத்தல் அந்தோ
இழிவிழிவு எந்த ஞான்றும்."

"இருநிலத்(து) யாவர் கண்ணும்
ஏற்பதை இகழ்ச்சி என்ன
ஒருவிய உளத்தான் காட்டில்
உதிர்ந்துகொள் வாரும் இன்றி
அருகிய நீவா ரப்புல்
தானியம் ஆராய்ந்(து) ஆராய்ந்(து)
உருவவொண் நகத்தால் கிள்ளி
எடுத்துடன் சேரக் கொண்டு."

V. கீழ்க்காணும் பொருள்களுள் எவையேனும் ஒன்றைப்பற்றி இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமல் ஒரு கட்டுரை வரைக :— 15

(1) சமூகத் தொண்டு.

(2) நாட்டு வணக்கப் பாடலின் இன்றியமையாமையும், குறிக்கோளும்.

(3) காடுகளினால் விளையும் நன்மை.